ஏசாயா - முன்னுரை

காலமும் இடமும்

ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகம் கி.மு. 792-722 ஆம் வருஷத்தில் பாலஸ்தீன தேசத்தில் எழுதப்பட்டது.

ஆசிரியர்

ஏசாயா. (ஏசா 1:1; ஏசா 2:1; ஏசா 7:3; ஏசா 13:1; ஏசா 20:2-3; ஏசா 27:3-21; ஏசா 28:1-21; ஏசா 38:3-8) இந்தப் புஸ்தகம் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஏசாயா என்னும் பெயரில் இரண்டு பேர் இருந்ததாகவும், அவர்களில் ஒருவர் முதலாவது பகுதியாகிய ஏசா 1-39 ஆகிய அதிகாரங்களை எழுதியதாகவும், இரண்டாவது நபர் இரண்டாவது பகுதியாகிய ஏசா 40-66 ஆகிய அதிகாரங்களை எழுதியதாகவும் ஒருசிலர் கூறுகிறார்கள். ஆனால் இதற்கு வலுவான ஆதாரம் எதுவுமில்லை. ஏசாயா என்பவர் ஒருவரே. அவரே இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகம் முழுவதையும் எழுதியவர்.

மையக்கருத்து

ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகம் முழு வேதாகமத்தையும் பிரதிபலிக்கிறது. வேதாகமத்தில் 66 புஸ்தகங்கள் உள்ளன. ஏசாயாவில் 66 அதிகாரங்கள் உள்ளன. ஏசாயாவின் முதலாவது பிரிவில் 39 அதிகாரங்கள் உள்ளன. இவை நியாயப் பிரமாணம், நியாயத்தீர்ப்பு ஆகியவற்றை விளக்கிக் கூறுகிறது. இந்த 39 அதிகாரங்களும் பழைய ஏற்பாட்டின் 39 புஸ்தகங்களைப் பிரதிபலிக்கிறது.

ஏசாயாவின் இரண்டாவது பகுதியில் 27 அதிகாரங்கள் உள்ளன. இவை புதிய ஏற்பாட்டின் 27 புஸ்தகங்களைப் பிரதிபலிக்கிறது. இந்தப் பிரிவில் இயேசு கிறிஸ்துவின் மூலமாக இரட்சிப்பு, ஆறுதலின் செய்தி ஆகியவை இடம் பெற்றுள்ளன.

ஏசாயாவின் முதலாவது பகுதியில் காணப்படும் முக்கியமான கருத்துக்களின் விவரம் வருமாறு:

1. இஸ்ரவேல்மீது வரப்போகும் நியாயத்தீர்ப்பு.
2. இஸ்ரவேலின் பாவத்தின் நிமித்தமாகவும், அவர்கள் கர்த்தரை விட்டு விலகிப் போனதின் நிமித்தமாகவும் அவர்களுக்கு வரப்போகும் சிறையிருப்பு.
3. புறஜாதி தேசங்களின் நியாயத்தீர்ப்பு.
4. மேசியாவின் காலத்தில் கர்த்தருடைய நாளில் இஸ்ரவேல் தேசம் மீட்கப்படுவது.

ஏசாயாவின் இரண்டாவது பிரிவில் காணப்படும் முக்கியமான கருத்துக்களின் விவரம் வருமாறு:

1. இரக்கம்
2. ஆறுதல்
3. மேசியாவின்கீழ் நித்திய மீட்பு

ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகம் எழுதப்பட்டதன் முக்கிய நோக்கம் வருமாறு:

1. தேவனுடைய செய்தியை இஸ்ரவேலருக்கு தெளிவுபடுத்துவது.
2. இஸ்ரவேலரின் தொடர்ந்த பாவத்தின் நிமித்தமாக அவர்களுக்கு வரப்போகும் நியாயத்தீர்ப்பைக் குறித்து அவர்களை எச்சரிப்பது.
3. மேசியாவின்கீழ் இஸ்ரவேலர் நித்தியமாக மீட்கப்படுவது பற்றிய வெளிப்பாட்டை அறிவிப்பது. (ஏசா 9:6-7; ஏசா 11:10-12; ஏசா 66:22-24).

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 66

வசனங்கள் - 1,292

கேள்விகள் - 190

ஏசாயா – முன்னுரை

புதிய தீர்க்கதரிசனங்கள் - 77

வரலாற்றைக் குறிக்கும் வசனங்கள் - 273

கட்டளைகள் - 308

வாக்குத்தத்தங்கள் - 120

முன்னறிவிப்புக்கள் - 1,313

ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் தேவனிடத்திலிருந்து வந்திருக்கும் விசேஷித்த செய்திகள். (ஏசா 1:2; ஏசா 2:1; ஏசா 5:1; ஏசா 6:9; ஏசா 7:1,10; ஏசா 8:1,5; ஏசா 9:8; ஏசா 10:5; ஏசா 11:1; ஏசா 13:1; ஏசா 14:28; ஏசா 15:1; ஏசா 17:1; ஏசா 18:1; ஏசா 19:1; ஏசா 20:2; ஏசா 21:1;ஏசா 22:1; ஏசா 23:1; ஏசா 24:1; ஏசா 28:1; ஏசா 29:1; ஏசா 30:1; ஏசா 31:1; ஏசா 32:1; ஏசா 33:1; ஏசா 34:1; ஏசா 35:1; ஏசா 37:6,21; ஏசா 38:1,4; ஏசா 39:5; ஏசா 40:1; ஏசா 41:1; ஏசா 42:1,5; ஏசா 43:1,13; ஏசா 44:6,24; ஏசா 45:1,14,18; ஏசா 46:1; ஏசா 47:1; ஏசா 48:1,17; ஏசா 49:1,7,8; ஏசா 50:1; ஏசா 51:1,22; ஏசா 52:1,13; ஏசா 54:1; ஏசா 55:1; ஏசா 56:1; ஏசா 57:1; ஏசா 58:1; ஏசா 59:1; ஏசா 60:1; ஏசா 61:1; ஏசா 62:1; ஏசா 63:1; ஏசா 64:1; ஏசா 65:1; ஏசா 66:1,12).

பொருளடக்கம்

பகுதி - I சிறையிருப்புக்களுக்கு முன்பான தரிசனம்

I. பிரசங்கங்கள் - தீர்க்கதரிசனங்கள் - உசியா இராஜாவின் ஆட்சியில்

1. ஆசிரியர், நூலின் பெயர், பொருள், வரலாற்று பின்னணி (1:1)

2. யூதாவுக்கு எதிராக தேவனுடைய வழக்கு

(1) யூதாவின் கலகம்

(2) யூதாவின் அறியாமை (1:2-3)

(3) யூதாவின் ஏழு பாவங்கள் (1:4)

(4) நீதிநெறி நிலைமையின் மூன்று அம்சங்கள் (1:5-6)

(5) யூதாவின் அழிவும் பலவீனமும் (1:7-8)

(6) மீதியாக இருப்பவர்கள் இரட்சிக்கப் பட்டார்கள் (1:9)

(7) மாய்மாலத்தின் பன்னிரெண்டு அம்சங்கள் (1:10-15)

(8) தேவனுடைய பத்து கோரிக்கைகள் (1:16-18)

(9) நிபந்தனையுள்ள ஆசீர்வாதங்கள் (1:19-20)

(10) இருக்கும் நிலைமையின் பத்து அம்சங்களும், காரணங்களும் (1:21-23)

3. யூதாவின் மீட்பின் பத்து அம்சங்கள் (1:24-27)

4. யூதாவின் பத்து அம்ச நியாயத்தீர்ப்பு (1:28-31)

5. கடைசி நாட்களின் தீர்க்கதரிசனங்கள்

(1) ஆயிர வருஷம் (2:1-4)

(2) ஆசீர்வாதத்திற்கு முன்பு சிட்சை

(அ) சிட்சையைத் தவிர்ப்பதற்கு வாய்ப்பு (2:5)

(ஆ) மறுப்பு - எட்டு தேசிய அளவிலான பாவங்கள் (2:6-9)

(இ) கர்த்தரின் நாள்

(i) கட்டாயமான தாழ்மை (2:10-17)

(ii) விக்கிரகாராதனையின் அழிப்பு (2:18-21)

(ஈ) சிட்சையைத் தவிர்க்கும் வாய்ப்பு (2:22)

(உ) உடனடியான நியாயத்தீர்ப்பு - பாபிலோனால் ஏற்படும் அழிவின் இருபது அம்சங்கள் (3:1-7)

(ஊ) அழிவின் நான்கு அம்ச காரணங்கள் (3:8-9)

(எ) யூதாவின் ஆறு வகுப்புக்கள்

(i) நீதிமான்கள் - ஆசீர்வாதம் (3:10)

(ii) துன்மார்க்கர் - சாபம் (3:11)

(iii) ஜனங்கள் - ஒடுக்கப்பட்டவர்கள் (3:12-13)

(iv) ஆட்சி புரிபவர்கள் - ஒடுக்குகிறவர்கள் (3:14-15)

(v) குமாரத்திகள் - நியாயம் தீர்க்கப்படுகிறவர்கள் (3:16-24)

(vi) குமாரர்கள் - யுத்தத்தில் வெட்டுண்டு போகிறவர்கள் (3:25-26)

(3) ஆயிர வருஷம்

(அ) ஒரு சில புருஷர்கள் - குமாரத்திகள் தாழ்த்தப்பட்டார்கள் (4:1)

(ஆ) மேசியா ஆளுகை செய்கிறார் (4:2)

(இ) ஜனங்களின் பரிசுத்தம் (4:3-4)

(ஈ) தேவனுடைய மகிமை (4:5-6)

6. தேவனுடைய திராட்சைத்தோட்டத்தைக் குறித்து பாட்டு

(1) ஏழு அம்ச பராமரிப்பு (5:1-2)

(2) தேவனுடைய விசாரிப்பு (5:3-4)

(3) பதிலுரை - ஒன்பது அம்ச நியாயத்தீர்ப்பு (5:5-6)

(4) யூதாவின் பாவங்கள் (5:7)

7. யூதாவின்மீது ஆறு ஐயோக்கள்

(1) பேராசைக்கு ஐயோ (5:8-10)

(2) மதுபானம் குடிப்பதற்கு ஐயோ (5:11-17)

(3) அக்கிரமத்திற்கு ஐயோ (5:18-19)

(4) தேவதூஷணத்திற்கு ஐயோ (5:20)

(5) பெருமைக்கு ஐயோ (5:21)

(6) அநீதிக்கும் மதுபானம் அருந்துவதற்கும் ஐயோ (5:22-23)

8. நியாயத்தீர்ப்பினால் யூதா அழிந்து போகிறது (5:24-25)

9. உடனடியான நியாயத்தீர்ப்பு - பாபிலோனால் ஏற்படும் அழிவின் இருபது அம்சங்கள் (5:26-30)

II. ஏசாயாவின் புதிய தரிசனமும் அழைப்பும்

1. தரிசனம் - யோதாமின் ஆட்சி (6:1-4)

2. இதன் விளைவு (6:5)

3. மாற்றம் (6:6-7)

4. தேவாலயத்திலிருந்து சப்தம் (6:8)

5. புதிய கட்டளை (6:9-13)

III. யூதாவின்மீது படையெடுப்புக்கள் - வரலாறும் தீர்க்கதரிசனமும் - ஆகாசின் ஆட்சி

1. சீரியா, இஸ்ரேல் ஆகியோரின் படையெடுப்பு

(1) யூதாவுக்கு எதிராக சீரியாவும் இஸ்ரவேலும் ஏற்படுத்திக்கொண்ட கூட்டணி (7:1-2)

ஏசாயா – முன்னுரை

(2) தெய்வீக தலையீடு

(அ) நான்கு அம்ச புத்திமதி (7:3-6)

(ஆ) நிபந்தனையுள்ள தீர்க்கதரிசனத்தின் மூன்று அம்சங்கள் (7:7-9)

(இ) ஆகாசுக்கு ஏராளமான வாய்ப்புக்கள் (7:10-11)

(ஈ) ஆகாசின் தவறான பக்தி (7:12)

(உ) தேவனுடைய தீர்க்கதரிசனக் கடிந்துரை - கன்னிகை கர்ப்பவதியாகும் அடையாளம் (7:13-16)

2. யூதாவின்மீது அசீரியப் படையெடுப்பு

(1) படையெடுப்பின் அறிவிப்பு (7:17)

(2) ஈ, தேனீ - திரளான சேனை (7:18-19)

(3) சவரகன் கத்தி - சுத்தமான அழிவு (7:20)

(4) மீதியாக இருப்பவர்கள் (7:21-22)

(5) முழுமையான நாசம் (7:23-25)

3. சீரியா, இஸ்ரேல் ஆகியோரின்மீது அசீரியரின் படையெடுப்பு (8:1-7)

4. யூதாவின்மீதும் படையெடுப்பு (8:8)

5. தெய்வீக தலையீடு

(1) தவறான சார்ந்திருத்தல் (8:9-12)

(2) உண்மையான சார்ந்திருத்தல் - இரண்டு அம்சம் (8:13-17)

(3) விசுவாசத்திற்கு அடையாளங்கள் (8:18)

(4) தவறான சார்ந்திருத்தலும் மெய்யான சார்ந்திருத்தலும் (8:19-20)

(5) தவறான சார்ந்திருத்தலின் விளைவு (8:21-22)

(6) இஸ்ரவேலின் இரண்டு அம்ச நம்பிக்கை

(அ) மேசியாவின் முதலாவது வருகையில் மீட்பு (9:1-5)

(ஆ) மேசியாவின் இரண்டாவது வருகையில் தாவீதின் இராஜ்ஜியம் புதுப்பிக்கப்படுகிறது (9:6-7)

6. நான்கு பாவங்களும் நியாயத்தீர்ப்பும்

(1) இஸ்ரவேல்மீது நியாயத்தீர்ப்பு

(அ) பாவம் - சுயநம்பிக்கை (9:8-10)

(ஆ) நியாயத்தீர்ப்பு (9:11-12)

(இ) பாவம் - இரக்கமின்மை (9:13-16)

(ஈ) நியாயத்தீர்ப்பு (9:17)

(2) யூதாவின்மீது நியாயத்தீர்ப்பு

(அ) பாவம் - பிரமாணமின்மை (9:18)

(ஆ) நியாயத்தீர்ப்பு (9:19-21)

(இ) தலைவர்களின் ஆறு பாவங்கள் (10:1-2)

(ஈ) நியாயத்தீர்ப்பு (10:3-4)

7. அசீரியா இஸ்ரவேலை சிட்சிப்பதற்கு தேவனுடைய கோல்

(1) அசீரியரின் கட்டளை (10:5-6)

(2) அசீரியரின் வரம்பு மீறுதல் (10:7-11)

(3) அசீரியரின் நியாயத்தீர்ப்பு (10:12-19)

(4) வருங்கால அசீரியன் - அந்திக்கிறிஸ்து (10:20-27)

(5) அந்திக்கிறிஸ்துவினால் ஏற்படும் அழிவு (10:28-34)

8. தெய்வீகத் தலையீடு - ஆயிர வருஷ அரசாட்சி

(1) மேசியாவின் வம்சவரலாறு (11:1)

(2) மேசியாவின் ஏழு அம்ச அபிஷேகம் (11:2)

(3) அவருடைய ஆளுகையின் ஒன்பது அம்ச பண்பு (11:3-5)

(4) அவருடைய ஆளுகையின் ஒன்பது அம்ச தகுதி (11:6-8)

(5) அவருடைய ஆளுகையின் விஸ்தாரம் (11:9)

(6) அவருடைய ஆளுகையின் ஏழு அம்ச நிறுவனம்

(அ) சமாதானமும் மார்க்கமும் (11:10)

(ஆ) இஸ்ரவேலரை மறுபடியும் கூட்டிச்சேர்த்தல் (11:11-12)

(இ) யூதாவும் இஸ்ரவேலும் ஒன்று சேருதல் (11:13)

(ஈ) வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் முழுமையாக சுதந்தரித்தல் (11:14)

(உ) இஸ்ரவேல் தெய்வீக வல்லமையினால் ஒன்று சேருதல் (11:15-16)

(7) ஆயிர வருஷ ஆராதனையின் பதினைந்து அம்சங்கள் (12:1-6)

IV. இஸ்ரவேலின் ஆசீர்வாதங்களும் பன்னிரெண்டு பாரங்களும்

1. பாபிலோனின் பாரம்

(1) மேதிய பெர்சியர்களினால் உடனடி நியாயத்தீர்ப்பு (13:1-5)

(2) கர்த்தருடைய நாளில் உண்டாகும் நியாயத்தீர்ப்பின் இருபத்தெட்டு அம்சங்கள் (13:6-16)

(3) மேதிய பெர்சியர்களினால் உடனடி நியாயத்தீர்ப்பு (13:17-18)

(4) இறுதி அழிவின் பத்து அம்சங்கள் (13:19-22)

(5) ஆயிர வருஷம் - இஸ்ரவேல் மறுபடியும் கட்டப்பட்டு உயர்த்தப் படுகிறது (14:1-3)

(6) அந்திக்கிறிஸ்துவின் மீது வருங் காலத்தில் இஸ்ரவேலர் பாடும் வெற்றியின் பாடல்

(அ) பாபிலோன் அழிந்தது (14:4)

(ஆ) அந்திக்கிறிஸ்து அழிந்தான் (14:5-6)

(இ) ஆயிர வருஷ இளைப்பாறுதல் (14:7-8)

(ஈ) அந்திக்கிறிஸ்துவுக்கு நரகத்தின் ஆறு அம்ச சாபம் (14:9-11)

(உ) லூசிபருக்கு நரகத்தின் ஒன்பது அம்ச சாபம் (14:12-15)

(ஊ) அந்திக்கிறிஸ்துவுக்கு தேசங்களின் சாபம் (14:16-20)

(எ) பாபிலோனுடைய அழிவின் பத்து அம்சம் (14:21-23)

(7) அந்திக்கிறிஸ்துவை அழிப்பதாக தேவனுடைய ஆறு அம்ச உறுதிமொழி (14:24-27)

2. பெலிஸ்தியாவின் பாரம் (14:28-32)

3. மோவாபின் பாரம்

(1) திடீரென்று அழிவு (15:1)

(2) மோவாபின் புலம்பல் (15:2-9)

(3) உபத்திரவக் காலத்தில் மோவாப் இஸ்ரவேலை பாதுகாப்பவன் (16:1-5)

(4) மோவாபுக்காக புலம்பல் (16:6-12)

(5) அசீரியரினால் திடீர் அழிவு (16:13-14)

4. தமஸ்குவின் பாரம்

(1) அழிவு (17:1-5)

(2) சீரியாவில் மீதியாக இருப்பவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் (17:6)

(3) விளைவு - தேவனிடத்தில் திரும்புவார்கள் (17:7-8)

(4) அழிவு - பஞ்சம் - காரணங்கள் (17:9-11)

(5) இஸ்ரவேலின் விரோதிகளுக்கு சாபம் (17:12-14)

5. எத்தியோப்பியாவின் பாரம்

(1) சாபம் - காரணம் (18:1-2)

(2) நியாயத்தீர்ப்பு (18:3-6)

(3) மறுபடியும் கூடுவார்கள் (18:7)

6. எகிப்தின் பாரம்

(1) உடனடி நியாயத்தீர்ப்பு

(அ) எட்டு அம்ச குழப்பம் (19:1-4)

(ஆ) பத்து அம்ச அழிவு (19:5-10)

(இ) எட்டு அம்ச காரணம் (19:11-15)

(2) கர்த்தருடைய நாளில்

(அ) பலவீனம் (19:16-17)

(ஆ) எகிப்து மாறும் (19:18)

(இ) ஆயிர வருஷம் ஆசீர்வாதங்கள் (19:19-22)

(ஈ) சமாதானத்தில் பெரும்பாதை (19:23)

(உ) பழைய விரோதிகளின் கூட்டணி (19:24-25)

7. எகிப்து, எத்தியோப்பியா ஆகியவற்றின் பாரம்

(1) ஏசாயாவின் அடையாளம் (20:1-2)

(2) ஏசாயாவின் கணிப்பு (20:3-6)

8. பாபிலோனின் பாரம்

(1) பாழாக்குகிறவர்கள் (21:1-2)

(2) காலமும் விளைவும் (21:3-5)

(3) வீழ்ச்சி (21:6-10)

9. தூமாவின் பாரம் (21:11-12)

10. அரபியாவின் பாரம்

(1) அசீரியரின் படையெடுப்பு (21:13-15)

(2) காலம் - விளைவு (21:16-17)

11. எருசலேமின் பாரம்

(1) நான்கு அம்ச நியாயத்தீர்ப்பு (22:1-3)

(2) எருசலேமிற்காக புலம்புதல் (22:4-5)

(3) படையெடுத்து வந்தவர்கள் (22:6-7)

(4) பாதுகாக்க வீணான ஆயத்தங்கள் (22:8-11)

(5) பாவம் - இரக்கமின்மை (22:12-14)

(6) செப்னா தன் வேலையிலிருந்து நீக்கப்பட்டான் (22:15-19)

(7) எலியாக்கீம் அந்த வேலைக்கு உயர்த்தப்பட்டான் (22:20-24)

(8) செப்னாவின் பாதுகாப்பு உடைந்தது (22:25)

12. தீருவின் பாரம்

(1) அலறுங்கள் - மொத்த அழிவு (23:1-5)

(2) அலறுங்கள் - பாழாக்குகிறவன் (23:6-13)

(3) அலறுங்கள் - அழிவின் காலம் (23:14-18)

V. உபத்திரவமும் ஆயிர வருஷ அரசாட்சியும்

1. உபத்திரவம்

(1) தேசம் - நான்கு அம்ச அழிவு (24:1)

(2) ஜனம் - நியாயத்தீர்ப்பின் பன்னிரெண்டு அம்சங்கள் (24:2)

(3) தேசம் - இரண்டு அம்ச நியாயத்தீர்ப்பு (24:3)

(4) ஜனம் - மூன்று அம்ச நியாயத்தீர்ப்பு (24:4)

(5) மூன்று அம்ச காரணம் - நியாயத்தீர்ப்பு (24:5)

(6) இருபது அம்ச சாபம் (24:6-12)

(7) மகிழ்ந்து களிகூருதல் - யூதர்களில் மீதியாக இருப்பவர்கள் (24:13-15)

(8) புலம்புதல் - இஸ்ரவேலில் மீதியாக இருப்பவர்கள் (24:16-18)

(9) தேசம் - எட்டு அம்ச நியாயத்தீர்ப்பு (24:19-20)

(10) அர்மகெதோன் - சாத்தானின் தோல்வி (24:21-22)

2. ஆயிர வருஷம்

(1) மேசியாவின் ஆளுகை (24:23)

(2) ஆயிர வருஷ ஆராதனையின் இருபது அம்சங்கள்

(அ) தேவனுடைய ஜனங்களுக்கு ஆசீர்வாதங்கள் (25:1)

(ஆ) விரோதிகளுக்கு நியாயத்தீர்ப்பு (25:2-3)

(இ) தேவனுடைய ஜனங்களுக்கு ஆசீர்வாதங்கள் (25:4)

(ஈ) விரோதிகளுக்கு நியாயத்தீர்ப்பு (25:5)

(உ) தேவனுடைய ஜனங்களுக்கு ஆசீர்வாதங்கள் (25:6)

(ஊ) விரோதிகளுக்கு நியாயத்தீர்ப்பு - சாத்தான் துரத்தப்படுகிறான், சாபம் நீங்கிற்று (25:7-8)

(எ) தேவனுடைய ஜனங்களுக்கு ஆசீர்வாதங்கள் (25:9)

(ஏ) விரோதிகளுக்கு நியாயத்தீர்ப்பு (25:10-12)

(3) ஆயிர வருஷ பாட்டு

(அ) நீதிமானின் இரட்சிப்பு (26:1-4)

ஏசாயா – முன்னுரை

(ஆ) துன்மார்க்கனின் தண்டனை (26:5-6)

(இ) நீதிமானின் வழி (26:7-9)

(ஈ) துன்மார்க்கனின் வழி (26:10-11)

(உ) நீதிமானின் ஜெயம் (26:12-18)

(ஊ) நீதிமானின் உயிர்த்தெழுதல் (26:19)

(எ) நீதிமான் பாதுகாக்கப்படுதல் (26:20)

(ஏ) துன்மார்க்கனின் அழிவு (26:21)

(4) அர்மகெதோன் - சாத்தானின் தோல்வி (27:1)

(5) ஆயிர வருஷ பாட்டு

(அ) ஏழு அம்ச பராமரிப்பு (27:2-6)

(ஆ) தேவனுடைய விசாரிப்பு (27:7)

(இ) பதிலுரை - ஒன்பது அம்ச நியாயத்தீர்ப்பு (27:8-11)

(ஈ) இஸ்ரவேலர் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படுகிறார்கள் (27:12-13)

VI. ஏழு ஐயோக்கள் - உபத்திரவமும் ஆயிர வருஷமும்

1. எப்பிராயீமுக்கு ஐயோ

(1) பாவங்களும் நியாயத்தீர்ப்பும் (28:1-4)

(2) மீதியாக இருப்பவர்கள் (28:5-6)

2. யூதாவுக்கு ஐயோ

(1) யூதாவின் பாவங்கள் (28:7-13)

(2) யூதாவின்மீது நியாயத்தீர்ப்பு (28:14-22)

(3) பரியாசம் பண்ணுகிறவர்கள் கடிந்து கொள்ளப்படுகிறார்கள் (28:23-29)

3. எருசலேமிற்கு ஐயோ

(1) யூதாவின்மீது நியாயத்தீர்ப்பு (29:1-6)

(2) யூதாவின் விரோதிகள்மீது நியாயத்தீர்ப்பு (29:7-8)

(3) திகைப்பும் காரணமும் (29:9-14)

4. லிபனோனுக்கு ஐயோ

(1) நியாயத்தீர்ப்பு (29:15-16)

(2) பௌதீக மீட்பின் ஆறு அம்சம் (29:17-19)

(3) ஆறு அம்ச காரணம் (29:20-21)

(4) ஆவிக்குரிய மீட்பின் ஆறு அம்சம் (29:22-24)

5. எகிப்தியருக்கு ஐயோ

(1) மூன்று அம்ச கலகம் (30:1-2)

(2) நான்கு அம்ச ஏமாற்றம் (30:3-5)

(3) யூதரின் பயனில்லாத வெகுமதிகள் (30:6-7)

(4) எட்டு அம்ச கலகம் (30:8-11)

(5) ஏழு அம்ச நியாயத்தீர்ப்பு (30:12-14)

(6) பாதுகாப்பின் வாக்குத்தத்தம் (30:15)

(7) மறுப்பு - நியாயத்தீர்ப்பு (30:16-17)

6. ஆயிர வருஷம்

(1) பத்து அம்ச ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் (30:18-22)

(2) பத்து அம்ச பௌதீக ஆசீர்வாதங்கள் (30:23-26)

(3) இஸ்ரவேலின் விரோதிகள்மீது நடைபெறும் ஐந்து அம்ச நியாயத்தீர்ப்பின் முறைகள் (30:27-28)

(4) இஸ்ரவேலின்மீது ஏற்படும் விளைவின் இரண்டு அம்சம் (30:29)

(5) அந்திக்கிறிஸ்துவின்மீது நடைபெறும் ஏழு அம்ச நியாயத்தீர்ப்பின் முறைகள் (30:30-33)

7. எகிப்தியருக்கு ஐயோ

(1) ஆறு அம்ச கலகம் (31:1)

(2) தேவனைப் பற்றிய ஐந்து சத்தியங்கள் (31:2)

(3) எகிப்தை நம்புவது வீண் (31:3)

(4) பாதுகாப்பின் வாக்குத்தத்தம் (31:4-9)

8. ஆயிர வருஷம்

(1) ஆட்சி புரிபவர்கள் (32:1)

(2) பத்து அம்ச ஆசீர்வாதம் (32:2-5)

(3) மூடனைப் பற்றிய விளக்கம் (32:6-8)

(4) யூதாவின் அழிவு (32:9-14)

(5) அதுமட்டும் - மூன்று அம்ச ஆசீர்வாதம் (32:15)

(6) அப்பொழுது - எட்டு அம்ச மீட்பு (32:16-20)

9. அந்திக்கிறிஸ்துவுக்கு ஐயோ

(1) சுபாவமும் நியாயத்தீர்ப்பும் (33:1)

(2) யூதாவின் ஜெபம் (33:2)

(3) அந்திக்கிறிஸ்து பெறும் வெற்றி (33:3-4)

(4) யூதாவின் தேவன் (33:5-6)

(5) அந்திக்கிறிஸ்துவின் வரம்புமீறுதல் (33:7-9)

(6) அந்திக்கிறிஸ்துமீது நியாயத்தீர்ப்பு (33:10-12)

10. ஆயிர வருஷம்

(1) மேசியா ஆளுகை செய்கிறார் - நீதிமானின் சுபாவம் (33:13-17)

(2) விரோதிகளைக் காணவில்லை (33:18-19)

(3) இஸ்ரவேலின் பௌதீக மீட்பு (33:20-24)

11. அர்மகெதோன்

(1) தேசங்கள் கூடிவந்தன (34:1)

(2) தேசங்கள் அழிந்தன (34:2-8)

(3) தேசம் பாழாயிற்று (34:9-17)

12. ஆயிர வருஷம்

(1) தேசத்தின் மீட்பு (35:1-2)

(2) ஜனங்கள் குணமாக்கப்பட்டார்கள் (35:3-6)

(3) தேசம் மீட்கப்பட்டது (35:7)

(4) பரிசுத்தத்தின் பெரும்பாதை (35:8-10)

VII. வரலாற்று இடைக்காட்சி

1. அசீரியப் படையெடுப்பு

(1) யூதாவின்மீது படையெடுப்பு (36:1-3)

(2) யூதாவின் அவமதிப்பு

(அ) எசேக்கியாவிற்கு செய்தி (36:4-10)

(ஆ) யூதாவின் பதில் (36:11)

(இ) ஜனங்களுக்கு செய்தி (36:12-21)

(3) எசேக்கியாவிற்கு அறிவித்தார்கள் (36:22)

(4) எசேக்கியாவிடம் காணப்பட்ட விளைவு (37:1-4)

(5) தேவன் வெற்றியை உறுதி பண்ணுகிறார் (37:5-7)

(6) தேவனுக்கும் யூதாவிற்கும் மேலும் அவமதிப்பு (37:8-13)

(7) எசேக்கியாவின் ஜெபம் (37:14-20)

(8) தேவனுடைய பதில்

(அ) சனகெரிப்பிற்கு கடிந்துரை (37:21-28)

(ஆ) சனகெரிப்பிற்கு எதிரான தீர்க்கதரிசனம் (37:29)

(இ) அடையாளம் - எசேக்கியாவிற்கு தீர்க்க தரிசனம் (37:30-35)

(9) அசீரியாவின் அழிவு (37:36-38)

2. எசேக்கியாவின் வியாதியும் அவன் குணமாவதும்

(1) வியாதியும் தீர்ப்பும் (38:1)

(2) ஜெபமும் மனந்திரும்புவதும் (38:2-3)

(3) பதிலும் உறுதியும் (38:4-8)

(4) எழுத்தும் சாட்சியும் (38:9-20)

(5) எசேக்கியாவின் அத்திப்பழத்து அடை (38:21-22)

(6) எசேக்கியாவின் மதியீனம் (39:1-2)

(7) பாபிலோனிய சிறைப்பிடிப்பு முன்னறிவிக்கப்படுகிறது (39:3-8)

பகுதி - II சிறையிருப்புகளுக்கு பின்பான தரிசனம்

VIII. சிறையிருப்பிலிருந்து திரும்பி வருவதை நினைத்து ஆறுதல்

1. மேசியாவின் முதல் இரண்டு வருகைகள்

(1) ஆறுதல் - பாவமில்லை (40:1-2)

(2) சத்தம் - முதல் இரண்டு வருகைகள் (40:3-5)

(3) சத்தம் - தேவனுடைய வார்த்தை, மனுஷனுடைய பலவீனம் (40:6-8)

(4) இரண்டாவது வருகை (40:9-11)

2. தேவனுடைய மகத்துவம்

(1) சர்வ வல்லமையின் ஐந்து அம்சம் (40:12)

(2) சர்வ ஞானத்தின் ஏழு அம்சம் (40:13-14)

(3) ஐந்து அம்ச ஒப்புமை (40:15-17)

(4) அறைகூவல் - ஒப்புமை (40:18-20)

(5) அறைகூவல் - அறிவு (40:21)

(6) ஏழு அம்ச ஒப்புமை (40:22-24)

ஏசாயா - முன்னுரை

(7) ஐந்து அம்ச சமநிலை (40:25-26)

(8) அறைகூவல் - அறிவு (40:27-28)

(9) ஆறு அம்ச சர்வ வல்லமை (40:29-31)

(10) தீவுகளுக்கு ஐந்து அம்ச அழைப்பு (41:1)

(11) கோரேசின்மீது ஒன்பது அம்ச தீர்க்கதரிசனம் (41:2-3)

(12) தேவனுடைய சர்வ ஞானம் (41:4)

(13) கோரேசிற்கு எதிராக தீவுகள் ஒன்று சேருதல் (41:5-7)

(14) இஸ்ரவேலுக்கு ஏழு அம்ச அழைப்பு (41:8-9)

(15) நான்கு கட்டளைகள் - எட்டு வாக்குத்தத்தங்கள் - இருபது கணிப்புக்கள் (41:10-19)

(16) ஆசீர்வாதங்களுக்கு காரணங்கள் (41:20)

(17) அறைகூவல் - கணிப்பு (41:21-24)

(18) கோரேசின்மீது ஐந்து அம்ச தீர்க்கதரிசனம் (41:25)

(19) கணிப்புக்கு அறைகூவல் (41:26-29)

3. முரண்பாடு - தேவனும் இஸ்ரவேலும்

(1) மேசியாவின் முதலாவது வருகை - பத்து அம்ச அறிமுகம் (42:1-4)

(2) மேசியாவிடம் எட்டு அம்ச சம்பாஷணை (42:5-7)

(3) தேவனுடைய மகிமை (42:8)

(4) பூர்வ காலத்துக் காரியங்கள் நிறைவேறிற்று (42:9)

(5) தேவனுக்கு மகிமை செலுத்தவேண்டும் (42:10-12)

(6) மேசியாவின் இரண்டாம் வருகை

(அ) பன்னிரெண்டு அம்ச நியாயத்தீர்ப்பு (42:13-15)

(ஆ) எட்டு அம்ச மீட்பு (42:16-17)

(7) எட்டு அம்ச அழிவும் பலவீனமும் (42:18-22)

(8) சிட்சிப்பதற்கு காரணங்கள் (42:23-25)

(9) பத்து அம்ச பாதுகாப்பு (43:1-4)

(10) மறுபடியும் கூட்டிச்சேர்ப்பதன் பத்து அம்சங்கள் (43:5-7)

(11) கணிப்புக்கு அறைகூவல் (43:8-9)

(12) இஸ்ரவேலின் ஊழியம் (43:10-12)

(13) தேவனுடைய பதினெட்டு அறிவிப்புக்கள் (43:13-21)

(14) இஸ்ரவேலின் எட்டு தோல்விகள் (43:22-24)

(15) ஒப்புரவாகுதலின் வாக்குத்தத்தம் (43:25-26)

(16) தற்போதுள்ள சாபத்திற்கு காரணங்கள் (43:27-28)

(17) பத்து அம்ச மீட்பு (44:1-5)

(18) தேவனும் விக்கிரகங்களும்

(அ) தேவனுடைய பன்னிரெண்டு அறிவிப்புக்கள் (44:6-8)

(ஆ) விக்கிர காராதனைக்காரரின் மதியீனம் (44:9-11)

(இ) விக்கிரகம் மாயை என்பதற்கு இருபது ஆதாரங்கள் (44:12-17)

(ஈ) விக்கிர காராதனைக்காரரின் மதியீனம் (44:19-20)

(19) ஆவிக்குரிய மீட்பு (44:21-23)

(20) பௌதீக மீட்பின் பதினாறு அம்சங்கள் (44:24-27)

(21) கோரேசின்மீது கூறப்பட்ட பதினாறு அம்ச தீர்க்கதரிசனம் (44:28-45:3)

(22) கோரேசிற்கு உதவிபுரிவதற்கு காரணங்கள் (45:4-6)

(23) தேவனுடைய சர்வ ஆளுகையின் பன்னிரெண்டு அம்சங்கள் (45:7-10)

(24) தேவனுடைய சர்வ வல்லமை (45:11-12)

(25) கோரேசின்மீது கூறப்பட்ட ஐந்து அம்ச தீர்க்கதரிசனம் (45:13)

(26) இஸ்ரவேலின் மீட்பு (45:14-17)

(27) சிருஷ்டிகரும் இரட்சகருமாகிய தேவன் (45:18-19)

(28) தேசங்கள் ஆசீர் வதிக்கப்பட்டன (45:20-22)

(29) கலகக்காரர்கள் தாழ்மைப்படுத்தப் பட்டார்கள் (45:23-25)

4. தேவனும் விக்கிரகங்களும்

(1) விக்கிரகங்களிடம் வல்லமையில்லை (46:1-2)

(2) தேவனுடைய சர்வ வல்லமை (46:3-4)

(3) ஒப்பிடுவதற்கு அறைகூவல்

(அ) விக்கிரகம் மாயை என்பதற்கு பத்து சான்றுகள் (46:5-7)

(ஆ) தேவனுடைய சர்வ வல்லமைக்கு பத்து சான்றுகள் (46:8-11)

(4) இஸ்ரவேலின் மீட்பு (46:12-15)

5. பாபிலோனின் அழிவு

(1) பதினான்கு அம்ச நியாயத்தீர்ப்பு (47:1-5)

(2) நியாயத்தீர்ப்புக்கு பதினைந்து காரணங்கள் (47:6-11)

(3) தன்னைத் தான் இரட்சித்துக் கொள்வதற்கு அறைகூவல் (47:12-17)

6. முரண்பாடு - தேவனும் இஸ்ரவேலும்

(1) இஸ்ரவேலின் மாய்மாலம் (48:1-2)

(2) தேவனுடைய பன்னிரெண்டு அம்ச சர்வ வல்லமை - இஸ்ரவேலின் பத்து அம்ச கலகம் (48:3-8)

(3) தேவனுடைய பொறுமை (48:9-11)

(4) இஸ்ரவேலுக்கு தேவனுடைய அழைப்பு (48:12-17)

(5) தேவனுடைய வருத்தம் - இஸ்ரவேலின் இழப்பு (48:18-19)

(6) பாபிலோனிலிருந்து மறுபடியும் கூட்டிச் சேர்க்கப் படுகிறார்கள் (48:20-22)

IX. மேசியாவின் முதலாவது வருகையினால் ஆறுதல்

1. மேசியாவின் அழைப்பும் ஊழியமும்

(1) அவருடைய அழைப்பும் தகுதியும் (49:1-3)

(2) மேசியாவின் தாழ்மை (49:4)

(3) அவருடைய ஆறு அம்ச ஊழியம் (49:5-6)

(4) அவருடைய தாழ்மையும் உயர்வும் (49:7)

(5) மேசியாவின் எட்டு அம்ச உதவி (49:8)

(6) அவருடைய பத்து அம்ச ஊழியம் (49:9-12)

(7) இஸ்ரவேலின் மீட்பு (49:13-21)

(8) இஸ்ரவேலின் விரோதிகள் அழிக்கப்படுகிறார்கள் (49:22-26)

(9) தேவன் இஸ்ரவேலைத் தள்ளி வைக்கிறார் (50:1)

(10) மீட்பதற்கு தேவனுடைய வல்லமை (50:2-3)

(11) அவருடைய தகுதிகள் (50:4-5)

(12) அவருடைய பாடும் உதவியும் (50:6-9)

(13) அவருடைய வரவேற்பு (50:10-11)

2. ஆறு அழைப்புகளும் ஆறுதலும்

(1) செவிகொடுங்கள் - நீதிமானாக இருக்குமாறு அழைப்பு (51:1-2)

(2) ஆறுதல் - சீயோன் மீட்கப்பட்டது (51:3)

(3) செவிகொடுங்கள் - இஸ்ரவேலுக்கு அழைப்பு (51:4)

(4) ஆறுதல் - நித்திய இரட்சிப்பு (51:5-6)

(5) செவிகொடுங்கள் - நீதிமானாக இருக்குமாறு அழைப்பு (51:7)

(6) ஆறுதல் - நித்திய நீதி (51:8)

(7) எழும்பு - தேவனுக்கு அழைப்பு (51:9-10)

(8) ஆறுதல் - மீட்பு (51:11-16)

(9) எழும்பு - எருசலேமிற்கு அழைப்பு (51:17-20)

(10) ஆறுதல் - விரோதிகள் நியாயந் தீர்க்கப்படுகிறார்கள் (51:21-23)

(11) எழும்பு - சீயோனுக்கு அழைப்பு (52:1-2)

(12) ஆறுதல் - மீட்பு (52:3-12)

3. மேசியாவின் பாவ நிவாரண கிரியை

(1) அவருடைய மூன்று அம்ச அறிமுகம் (52:13)

(2) அவருடைய இரண்டு அம்ச பாடு (52:14)

(3) அவருடைய இரண்டு அம்ச உயர்வு (52:15)

(4) அவருடைய வரவேற்பு (53:1)

(5) மேசியாவின் முப்பத்தியாறு அம்ச பாடுகள் (53:2-12)

4. ஏழு புத்திமதிகளும் காரணங்களும்

(1) பாடு - காரணங்கள் (54:1)

(2) விசாலமாக்கு - காரணம் (54:2-3)

(3) பயப்படாதே - காரணம் (54:4-10)

(4) ஆறுதலடை - காரணம் (54:11-17)

(5) வா - காரணம் (55:1-5)

(6) தேடு - காரணம் (55:6-13)

(7) நீதியைச் செய் - காரணம் (56:1-9)

5. வேறுபட்ட பிரிவுகள்

(1) துன்மார்க்கரின் பன்னிரெண்டு அம்ச விளக்கம் (56:10-12)

(2) நீதிமான் - நான்கு ஆசீர்வாதங்கள் (57:1-2)

(3) துன்மார்க்கன் - இருபது பாவங்கள் (57:3-12)

(4) நீதிமான் - பத்து ஆசீர்வாதங்கள் (57:13-19)

(5) துன்மார்க்கன் - சமாதானமில்லை (57:20-21)

X. மேசியாவின் இரண்டாவது வருகையினால் ஆறுதல்

1. இஸ்ரவேலின் தேவதூஷணம்

(1) நான்கு அம்ச சுயநீதி (58:1-2)

(2) பத்து அம்ச மாய்மாலம் (58:3-5)

(3) உபவாசத்தின் இருபத்திமூன்று அம்சம் - இருபது வெகுமதிகள் (58:6-14)

(4) இருபத்தைந்து பாவங்கள் (59:1-8)

(5) முப்பது அம்ச நிலைமையும் காரணமும் (59:9-15)

2. இஸ்ரவேலின் மீட்பு

(1) மேசியாவின் கிரியை (59:16-19)

(2) மேசியாவின் இரண்டாம் வருகை - புதிய உடன்படிக்கை (59:20-21)

(3) மீட்பின் அறுபத்திநான்கு அம்சம்

(அ) புறஜாதியார் கிட்டிச்சேருகிறார்கள் (60:1-7)

(ஆ) புறஜாதியாரின் ஊழியம் (60:8-11)

(இ) புறஜாதியாரின் கீழ்ப்படிதல் (60:12-13)

(ஈ) புறஜாதியாரின் புகழுரை (60:14-16)

(உ) தேவனுடைய ஆசீர்வாதங்கள் (60:17-22)

(4) மேசியாவின் முதலாம் வருகை - ஐந்து அம்ச ஊழியம் (61:1-2)

(5) மேசியாவின் இரண்டாம் வருகை - ஆறு அம்ச ஊழியம் (61:3)

(6) மீட்பின் ஐம்பத்தி நான்கு அம்சம்

(அ) கட்டிடம் கட்டுதல் (61:4)

(ஆ) மறுஜாதி வேலையாட்கள் (61:5)

(இ) மார்க்கத்தலைவர்கள் (61:6)

(ஈ) உயர்வும் சந்தோஷமும் (61:7-11)

(உ) ஜெயம் (62:1-7)

(ஊ) மீட்பின் வாக்குத்தத்தம் (62:8-12)

(7) மேசியாவின் இரண்டாம் வருகை (63:1-6)

(8) கடந்த கால ஆசீர்வாதங்களுக்காக துதி செலுத்துதல் (63:7-14)

ஏசாயா - முன்னுரை

(9) மீட்புக்காக ஐம்பது அம்ச ஜெபம் (63:15-64:12)

(10) தேவனுடைய தீர்க்கதரிசன பதிலுரை

(அ) இஸ்ரவேலின் இருபது அம்ச ஆய்வு (65:1-7)

(ஆ) வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஒரு வித்து (65:8-10)

(இ) இஸ்ரவேலிலிருந்து கலகக்காரர்கள் ஒழிக்கப் படுகிறார்கள் (65:11-16)

(ஈ) புதிய வானமும் புதிய பூமியும் (65:17)

(உ) ஆயிர வருஷம் (65:18-25)

(ஊ) நீதிமான் மதிக்கப்படுவான் (66:1-2)

(எ) கலகக்காரர்கள் இஸ்ரவேலிலிருந்து ஒழிக்கப் படுவார்கள் (66:3-6)

(ஏ) வித்து கொடுக்கப்படுகிறது (66:7-14)

(ஐ) கலகக்காரர்கள் இஸ்ரவேலிலிருந்து ஒழிக்கப்படுவார்கள் (66:15-17)

(ஒ) ஆயிர வருஷம் (66:18-21)

(ஓ) புதிய வானமும் புதிய பூமியும் (66:22-24)

பகுதி - I சிறையிருப்புக்களுக்கு முன்பான தரிசனம்
(அதிகாரங்கள் 1-39)

பகுதி - I சிறையிருப்புக்களுக்கு முன்பான தரிசனம்
(அதிகாரங்கள் 1-39)

1 அதிகாரம்

I. பிரசங்கங்கள் - தீர்க்கதரிசனங்கள் - உசியா இராஜாவின் ஆட்சியில் - (ஏசா 1:1-5:30; 2இராஜா 15:1-31)

1. ஆசிரியர், நூலின் பெயர், பொருள், வரலாற்று பின்னணி - (2இராஜா 15-20; 2நாளா 26-32)

ஏசா 1:1 ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா, யூதாவின் ராஜாக்களாகிய உசியா, யோதாம், ஆகாஸ், எசேக்கியா என்பவர்களின் நாட்களில், யூதாவையும் எருசலேமையும் குறித்துக் கண்டதரிசனம்.

"ஏசாயா.....கண்டதரிசனம்" - இதுவே இந்த புஸ்தகத்தின் தெய்வீகத்தலைப்பாகும். வேதாகமத்தில் இதற்கு "ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகம்" என்னும் தலைப்பு கொடுக்கப் பட்டிருக்கிறது. இது மனுஷர் கொடுத்த தலைப்பு.

"ஏசாயா" (Isaiah) - இந்தப் பெயருக்கு "கர்த்தருடைய இரட்சிப்பு" **"salvation of Jehovah"** என்று பொருள்.

தரிசனம் (vision) - חָזוֹן - khaw-zone' - 2377

ஆ.பெ.சொ. - தரிசனம், தீர்க்கதரிசனம் **(to see mentally; dream; see a vision; have a revelation; receive an oracle)** (ஏசா 1:1; ஏசா 29:7; 1சாமு 3:1; 1நாளா 17:15; 2நாளா 32:32; சங் 89:19; நீதி 29:18; எரே 14:14; எரே 23:16; புல 2:9; எசே 7:13,26; எசே 12:22-27; எசே 13:16; தானி 1:17; தானி 8 :1-2,13-17,26; தானி 9:21,24; தானி 10:14; தானி 11:14; ஓசி 12:10; ஒப 1:1; மீகா 3:6; நாகூம் 1:1; ஆப 2:2-3).

"யூதாவையும் எருசலேமையும் குறித்து" - தற்காலத்து சபை, இப்போதுள்ள விசுவாசிகள், உலகம், புறஜாதியார் ஆகியோரைக் குறித்து ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் அதிகமாக விளக்கப்படவில்லை. யூதாவையும், எருசலேமையும் குறித்தே ஏசாயா தீர்க்கதரிசனமாகக் கண்டு, இந்தப் புஸ்தகத்தை எழுதியிருக்கிறார். இந்தப் புஸ்தகம் முழுவதிலும் யூதாவும், எருசலேமும் சேர்ந்தே கூறப் பட்டிருக்கிறது. (ஏசா 1:1; ஏசா 2:1; ஏசா 3:1,8; ஏசா 5:4; ஏசா 56:7). ஏசாயாவின் காலத்தில் திருச்சபை இல்லை. ஆகையினால் இந்தப் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் செய்திகள் அனைத்தும் யூதாவிற்கும், எருசலேமிற்கும் மட்டுமே பொருந்தும். அதாவது யூதருக்கும், அவர்களுடைய பரிசுத்த நகரத்திற்கும் மட்டுமே பொருந்தும். இந்த அடிப்படையில் வியாக்கியானம் கூறுவதற்குப் பதிலாக ஒருசிலர் வேறுவிதமாகவும் ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்திற்கு வியாக்கியானம் கூறுகிறார்கள்.

ஏசாயா தீர்க்கதரிசியின் காலம்

ஏசாயா நான்கு ராஜாக்களின் காலங்களில் தீர்க்கதரிசனம் கூறியிருக்கிறார். உசியா, யோதாம், ஆகாஸ், எசேக்கியா ஆகிய நான்கு ராஜாக்கள் யூதாவில் ராஜ்யபாரம் பண்ணிய போது ஏசாயா யூதாவையும், எருசலேமையும் குறித்து தரிசனம் கண்டார். (ஏசா 1:1) இந்த ராஜாக்களின் வரலாற்றுப் பின்னணிகளையும், ஏசாயாவின் காலத்தையும் அடிப்படையாக வைத்தே இந்தப் புஸ்தகத்திற்கு வியாக்கியானம் கூற வேண்டும்.

யூதாவின் இந்த நான்கு ராஜாக்களும் சுமார் 113 வருஷங்களுக்கு ராஜ்யபாரம் பண்ணினார்கள். உசியா ராஜா மரணமடைந்த போது ஏசாயா கர்த்தரைத் தரிசனமாகக் கண்டார். (ஏசா 6) ஆகையினால் இக்காலத்திற்கு முன்பு ஏசாயா தீர்க்கதரிசன ஊழியம் செய்யவில்லை என்பது தெளிவாகிறது.

ஏசாயா - தொகுப்புரை

1 அதிகாரம்

ஏசாயாவின் ஊழியக்காலம் சுமார் 48 வருஷத்திலிருந்து 70 வருஷம் வரையிலும் இருந்திருக்கும் என்று வேதபண்டிதர்கள் கூறுகிறார்கள். தாவீதின் காலத்திலும் சாலொமோனின் காலத்திலும் இஸ்ரவேல் ராஜ்யம் வலுவாக இருந்தது. இவர்களுக்குப் பின்பு உள்நாட்டுக் கலகங்களாலும், மற்ற தேசங்களிலிருந்து வந்த பிரச்சனைகளாலும் இஸ்ரவேல் ராஜ்யம் பலவீனப்பட்டு இரண்டாகப் பிரிந்தது. ஏசாயா தன்னுடைய ஊழியத்தை ஆரம்பிப்பதற்கு 250 வருஷங்களுக்கு முன்பாக இஸ்ரவேல் தேசத்தில் இதுபோன்ற குழப்ப நிலையே காணப்பட்டது.

எசேக்கியா ராஜாவின் ஐந்தாம் வருஷ ராஜ்யபாரத்தின்போது வடக்கு ராஜ்யம் என்று அழைக்கப்படும் பத்துக்கோத்திரத்தாரின் இஸ்ரவேல் ராஜ்யம் அழிக்கப்பட்டது. அங்குள்ள ஜனங்கள் அசீரியாவிற்குச் சிறைப்பிடித்துச் செல்லப்பட்டார்கள். (2இராஜா 17; 1நாளா 5:26; ஆமோ 1:5)

வடக்கு ராஜ்யத்தைப் பற்றி ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் ஒருசில குறிப்புக்கள் மட்டுமே காணப்படுகிறது. அவர்கள் யூதாவோடும், எருசலேமோடும் யுத்தம் பண்ணிய சம்பவங்கள் மட்டுமே இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. (ஏசா 1:1; ஏசா 2:1)

இந்த ராஜாக்களின் வரலாற்றைக் குறித்தும், ஏசாயா தீர்க்கதரிசியின் காலத்தைக் குறித்தும் 2இராஜா 15-20; 2நாளா 26-32 ஆகிய வசனங்களில் அதிகமான விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

2. யூதாவுக்கு எதிராக தேவனுடைய வழக்கு - (ஏசா 1:2-23; 41:12; 42:1; 48:1; எரே 2:1; ஓசி 4:1; 6:4; ஆமோ 3:1; மீகா 6:1)

(1) யூதாவின் கலகம் - (30:1; 31:1; எரே 25; ஓசி 11; மல் 3; ரோம 10-11)

(2) யூதாவின் அறியாஷம - (ரோம 10:1)

ஏசா 1:2 வானங்களே, கேளுங்கள்; பூமியே, செவிகொடு; கர்த்தர் பேசுகிறார்; நான் பிள்ளைகளை வளர்த்து ஆதரித்தேன்; அவர்களோ எனக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினார்கள்.

ஏசா 1:3 மாடு தன் எஜமானையும், கழுதை தன் ஆண்டவனின் முன்னணையையும் அறியும்; இஸ்ரவேலோ, அறிவில்லாமலும், என் ஜனம் உணர்வில்லாமலும் இருக்கிறது என்கிறார்.

"வானங்களே, கேளுங்கள்" - மோசேயின் பாடலைப் போன்று (உபா 32:1) ஏசாயாவும் தன்னுடைய புஸ்தகத்தை ஆரம்பிக்கிறார்.

"கர்த்தர் பேசுகிறார்" - இந்தப் புஸ்தகத்தில் தான் பேசியதாகக் கூறாமல் கர்த்தர் பேசுவதாக ஏசாயா கூறுகிறார். ஆகையினால் வானங்களும், பூமியும் கர்த்தருடைய சத்தத்திற்குச் செவிகொடுக்குமாறு ஏசாயா அவற்றிற்குக் கட்டளையிடுகிறார். யூதாவின் மீதும், எருசலேமின்மீதும் கர்த்தர் கோபமாக இருக்கிறார். அவருடைய கோபம் நியாயமானது. இந்தச் சம்பவத்திற்குப் பூமியிலுள்ள சர்வ சிருஷ்டிகளும் சாட்சிகளாக உள்ளதாக ஏசாயா விளக்கிக் கூறுகிறார். (உபா 1:2-23; உபா 30:19; சங் 50:3-6; மீகா 6:1-2).

யூதாவிற்கு விரோதமான குற்றச்சாட்டுக்கள்

1. கலகம்பண்ணுதல் (ஏசா 1:2; ஏசா 30:1; ஏசா 31:1; ரோமர் 10-11)
2. அறிவில்லாமல் இருப்பது. (ஏசா 1:3; ரோமர் 10:1)
3. ஏழு பாவங்கள் (ஏசா 1:4)
4. இருதயத்தின் பலட்சயம். (ஏசா 1:5-6; ரோமர் 1)
5. அழிவும், பலவீனமும் (ஏசா1:7-8; அப் 15:16)

1 அதிகாரம்

6. மீதமுள்ளோர் மட்டுமே இரட்சிக்கப் படுவார்கள். (ஏசா 1:9; ரோமர் 11:5)

7. மாய்மாலம் (ஏசா 1:10-15; மத் 23)

8. கர்த்தருடைய கட்டளைகள் (ஏசா 1:16-18)

9. நிபந்தனைக்குட்பட்ட ஆசீர்வாதங்கள் (ஏசா 1:19-20)

10. யூதாவின் தற்போதை நிலைமையும், அதற்குக் காரணமும் (ஏசா 1:21-23)

கர்த்தர் செய்திருக்கும் காரியங்கள்

1. பிள்ளைகளை வளர்த்திருக்கிறார். (எசே 16)

2. பிள்ளைகளை ஆதரித்திருக்கிறார். (உபா 14:1; உபா 32:6,18; கலா 3:6-9; கலா 4:29)

கலகம் பண்ணுதல் **(rebelled) - פָּשַׁע - paw-shah' - 6586**

விணைச்சொல் - செய்த பாவம் , கலகம் பண்ணு, கட்டளைமீறினவர், குற்றஞ்செய், துரோகஞ்செய், இரண்டகம்பண்ணு, துரோகம், கோபங்கொள், அநியாயஞ் செய், அக்கிரமக்காரர், பாதகர், துரோகி, மீறுகிறவன், பாதகஞ்செய், கோபங்கொள் **(revolt; rebellion; sin against lawful authority)**

"மாடு தன் எஜமானையும், கழுதை தன் ஆண்டவனின் முன்னணையையும் அறியும்" - இஸ்ரவேல் விலங்குகளுக்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டிருக்கிறது. இந்த விலங்குகள் அறிவற்றவை. ஆனாலும் இவை தேவனுடைய ஜனங்களைவிட அறிவில் தேறினவையாக உள்ளன. எரேமியாவும், ஓசியாவும் இஸ்ரவேலரை மிருகங்களோடு ஒப்பிட்டுக் கூறியிருக்கிறார்கள். (எரே 8:7; ஓசி 11:4).

"இஸ்ரவேலோ, அறிவில்லாமலும், என் ஜனம் உணர்வில்லாமலும் இருக்கிறது" - மிருகங்களுக்கு மிக குறைந்த அளவே அறிவு இருந்தபோதிலும், அவை தனக்குள்ள அறிவை முழுமையாகப் பயன்படுத்துகிறது. மனுஷரிடத்தில் அறிவு மிகுதியாயிருக்கிறது. ஆனால் மனுஷர் தங்களுடைய அறிவை முழுவதுமாகப் பயன் படுத்தாமல் ஓரளவு மட்டுமே பயன் படுத்துகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் அறிவில்லாமலும், உணர்வில்லாமலும் இருக்கிறார்கள். இஸ்ரவேலரின் பல பிரச்சனைகளுக்கு இதுவே காரணம். (மத் 13:14-15; மத் 21:42-45; மத் 23:1-33; ரோமர் 10:2)

(3) யூதாவின் ஏழு பாவங்கள்

ஏசா 1:4 ஐயோ, பாவமுள்ள ஜாதியும், அக்கிரமத்தால் பாரஞ்சுமந்த ஜனமும், பொல்லாதவர்களின் சந்ததியும், கேடு உண்டாக்குகிற புத்திரருமாயிருக்கிறார்கள்; கர்த்தரை விட்டு, இஸ்ரவேலின் பரிசுத்தருக்குக் கோபமுண்டாக்கி, பின்வாங்கிப் போனார்கள்.

"இஸ்ரவேலின் பரிசுத்தர்" **(Holy One of Israel)** - இந்த வாக்கியம் ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் 25 தடவைகளும், மற்ற புஸ்தகங்களில் 7தடவைகளும் பயன் படுத்தப்பட்டுள்ளன. (2இராஜா 19:22; சங் 71:22; சங் 78:41; சங் 89:18; எரே 50:29; எரே 51:5; எசே 39:7).

இஸ்ரவேலின் பாவங்கள்

1. பாவமுள்ள ஜாதி (ஏசா 1:4; எபே 2:1-3)

2. அக்கிரமத்தால் பாரஞ்சுமந்த ஜனம்

3. பொல்லாதவர்களின் சந்ததி (ஏசா 1:4; சங் 51:5; எபே 2:1-3)

4. கேடு உண்டாக்குகிற புத்திரர் (ஏசா 1:4; உபா 32:5; சங் 14; மத் 3:8; எரே 6:25)

5. கர்த்தரை விட்டுவிட்டவர்கள்

1 அதிகாரம்

6. இஸ்ரவேலின் பரிசுத்தருக்குக் கோபமுண்டாக்கினார்கள். (ஏசா 1:4)

7. பின்வாங்கிப்போனார்கள். (ஏசா 1:4; எபி 4:4-9; எபி 10:26-29)

இஸ்ரவேல் தேசம் கர்த்தரைவிட்டுப் பின்வாங்கி இருந்தபோது அவர்களுடைய நிலைமை இதுபோன்று பரிதாபமாக இருந்தது. பல தீர்க்கதரிசிகள் அவர்கள் மத்தியில் ஊழியம் செய்தார்கள். தேவனுடைய அற்புதமான கிரியைகளும் அவர்கள் மத்தியில் நடைபெற்றன. ஆனாலும் இவற்றால் ஒரு பிரயோஜனமும் உண்டாகவில்லை. அவர்களுடைய ஆவிக்குரிய நிலைமையில் எந்த முன்னேற்றமும் காணப்படவில்லை. தங்களுடைய பாவத்திலும், துன்மார்க்கத்திலும் அவர்கள் வளர்ந்து பெருகினார்கள். தங்களுடைய பாவத்தைக் குறித்து அவர்களுக்குள் குற்ற உணர்வு ஏற்படவில்லை. ஆகையினால் கர்த்தர் அவர்களைத் தண்டிக்கச் சித்தம் கொண்டார். இஸ்ரவேல் தேசத்தை அழித்து, புறஜாதியாருடைய சிறையிருப்புக்கு அவர்களை அனுப்பிவிட்டார். (2இராஜா 24)

அக்கிரமம் **(perverseness) - עָוֹן - aw-vone' - 5771**

ஆ.பெ.சொ. - தண்டனை, அக்கிரமம், தோஷம், தப்பிதம், சாபம், பொல்லாப்பு, குற்றம்பிடித்தல், பழி, குற்றம், துர்க்குணம், ஆக்கினை, பாவம், துன்மார்க்கம், துரோகம் **(perverseness; wrung out of course; crooked)** (ஏசா 1:4; மத் 23:4)

பின்வாங்குதல் **(backslide) - עָזַב - aw-zab' - 5800**

வினைச்சொல் - விட்டுநீங்கு, விடு, கைவிடு, வைத்துப்போ, சிந்தவிடு, உயிரோடிரு, தள்ளிவிடு, மீதிவை, விட்டுவிடு, புறப்படு, விட்டுபிரி, உதவிசெய், விட்டுத்திரும்பு, ஒப்புவி, ஒப்புக்கொடு, வைத்துவிடு, விட்டுபோ, விட்டு ஓடு, தள்ளிவிடு, விட்டு விலகு, இடங்கொடு, பயப்படாதே போ, மாற்று, போக்கடி, தப்புவி, மோசம்போ, விடுதலை பெறு, விடுபடு, குடியற்று பாழாய்போ, மீதிவை **(to backslide or apostatize)** (ஏசா 1:4; ஓசி 4:16; ஓசி 11:7)

பின்வாங்கிப்போவது

1. கர்த்தரை விட்டுவிட்டார்கள் - தங்கள் மனதில் கர்த்தருக்கு முக்கியத்துவம் தராமல் ஜீவித்து கர்த்தரைவிட்டுப் பின்வாங்குவது.

2. இஸ்ரவேலின் பரிசுத்தருக்குக் கோபமுண்டாக்கினார்கள் - தங்களுடைய வார்த்தைகளினால் கர்த்தரைவிட்டுப் பின்வாங்குவது.

3. கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப் போனார்கள் - தங்களுடைய கிரியைகளினால் கர்த்தரைவிட்டுப் பின்வாங்குவது.

ஒருவன் இந்த மூன்றாம் நிலை வரைக்கும் கடந்து வந்து, கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப் போயிருந்தால் அவன் மறுபடியும் கர்த்தரிடத்தில் திரும்பி வருவது மிகவும் சிரமம். அவன் கர்த்தர்மீது வைத்திருந்த நம்பிக்கையை உதறித் தள்ளிவிட்டு அவரை விட்டுப் பின்வாங்கிப் போயிருக்கிறான். அவன் மனந்திருந்தி, கர்த்தரிடத்தில் வந்தால் அவனுக்குப் பாவ மன்னிப்பு உண்டு. (எபி 4:6-9; எபி 10:26-29) தம்மிடத்தில் வரும் பின்வாங்கிப் போனவர்களையும் கர்த்தர் புறம்பே தள்ளுவதில்லை. (மத் 2:31-32; 1யோவான் 1:9; 1யோவான் 2:1-2).

1 அதிகாரம்

(4) நீதிநெறி நிலைமையின் மூன்று அம்சங்கள் - (ஒசி 4:6; 9:8; செப் 3:1; ரோம 1:21-32)

ஏசா 1:5 இன்னும் நீங்கள் ஏன் அடிக்கப் படவேண்டும்? அதிகம் அதிகமாய் விலகிப்போகிறீர்களே; தலையெல்லாம் வியாதியும், இருதயமெல்லாம் பலட்சயமுமாய் இருக்கிறது.

ஏசா 1:6 உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைமட்டும் அதிலே சுகமேயில்லை; அது காயமும், வீக்கமும், நொதிக்கிற இரணமுமுள்ளது; அது சீழ் பிதுக்கப் படாமலும், கட்டப்படாமலும், எண்ணெயினால் ஆற்றப்படாமலும் இருக்கிறது.

"இன்னும் நீங்கள் ஏன் அடிக்கப்பட வேண்டும்?" - இந்தக் கேள்வி, எல்லா சந்ததியாருக்கும் புரியாத புதிராக உள்ளது. மனுஷர் தங்களைத்தாங்களே ஏன் அழித்துக் கொள்ள வேண்டும். தேவனுடைய கிருபையினால் சந்தோஷமும், சமாதானமும், ஆசீர்வாதமும், ஆரோக்கியமும் கிடைக்கும் போது மனுஷர் அதைப் புறக்கணித்து விட்டு ஏன் பாவத்தில் தொடர்ந்து ஜீவித்து அதன் சாபங்களை அனுபவிக்க வேண்டும். இந்த வினாக்களுக்கு மனுஷரால் இன்னும் விடை காணமுடியவில்லை. (ஏசா 1:18; ஏசா 41:17-20; ஏசா 55:1-13; ஏசா 58:1-14; யோவான் 3:16; யோவான் 7:37-39; யோவான் 10:10; யோவான் 14:12-15; அப் 1:4-8)

தீர்க்கதரிசன எண் - 1

"இன்னும் நீங்கள் ஏன் அடிக்கப்பட வேண்டும்? அதிகம் அதிகமாய் விலகிப் போகிறீர்களே; தலையெல்லாம் வியாதியும், இருதயமெல்லாம் பலட்சயமுமாய் இருக்கிறது......" (ஏசா 1:5-9) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. அதிகம் அதிகமாய் விலகிப்போகிறீர்களே (ஏசா 1:5).
2. உங்கள் தேசம் பாழாயிருக்கிறது (ஏசா 1:7)
3. உங்கள் பட்டணங்கள் அக்கினியினால் சுட்டெரிக்கப்பட்டது.
4. உங்கள் நாட்டை அந்நியர் உங்கள் கண்களுக்கு முன்பாக பட்சிக்கிறார்கள்.
5. சீயோன் குமாரத்தி திராட்சத் தோட்டத்திலுள்ள ஒரு குச்சுபோலவும், வெள்ளரித்தோட்டத்திலுள்ள ஒரு குடிசைபோலவும், முற்றிக்கை போடப்பட்ட ஒரு பட்டணம்போலவும் மீந்திருக்கிறாள். (ஏசா 1:8).
9. சேனைகளின் கர்த்தர் நமக்குக் கொஞ்சம் மீதியை வைத்திருக்கிறார். (ஏசா 1:9).

"தலையெல்லாம் வியாதியும், இருதயமெல்லாம் பலட்சயமுமாய் இருக்கிறது" - இஸ்ரவேலுடைய சரீரம் முழுவதுமே வியாதிப்பட்டிருக்கிறது. அந்த அளவிற்கு அவர்கள் பாவங்களைச் செய்து அதன் சாபங்களை அனுபவிக்கிறார்கள். (ஏசா 1:5-6) அவர்களைத் தண்டிப்பதற்கு அவர்களுடைய சரீரங்களில் இனிமேல் மீதியான அவயவங்களே இல்லை. எல்லா அவயவங்களும் தண்டனைக்குட் பட்டிருக்கிறது.

(5) யூதாவின் அழிவும் பலவீனமும் - (புல 1:12; 2:9; 5:1; அப் 15:16)

ஏசா 1:7 உங்கள் தேசம் பாழாயிருக்கிறது; உங்கள் பட்டணங்கள் அக்கினியினால் சுட்டெரிக்கப்பட்டது; உங்கள் நாட்டை அந்நியர் உங்கள் கண்களுக்கு முன்பாக பட்சிக்கிறார்கள்; அது அந்நியரால் கவிழ்க்கப்பட்ட பாழ்ந்தேசம்போல் இருக்கிறது.

1 அதிகாரம்

ஏசா 1:8 சீயோன் குமாரத்தி திராட்சத் தோட்டத்திலுள்ள ஒரு குச்சுபோலவும், வெள்ளரித் தோட்டத்திலுள்ள ஒரு குடிசைபோலவும், முற்றிக்கை போடப்பட்ட ஒரு பட்டணம்போலவும் மீந்திருக்கிறாள்.

"உங்கள் தேசம் பாழாயிருக்கிறது" - இந்தத் தீர்க்கதரிசனம் முன்னறிவிக்கப்பட்டு 175 வருஷங்களுக்குப் பின்பு நிறைவேறிற்று. யூதா, எருசலேம், ஆகியவற்றின் வரப்போகிற அழிவைக் குறிப்பிடுவதற்கு "பாழாதல்" "desolate" என்னும் வார்த்தை அதிகமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (ஏசா 1:7; ஏசா 6:11; ஏசா 62:4; எரே 4:27; எரே 6:8; எரே 7:24; எரே 9:11; எரே 10:22; எரே 12:11; எரே 18:16; எரே 19:8; எரே 25:38; எரே 26:9; எரே 32:43; எரே 33:10-12; எரே 44:6; எரே 46:9; எரே 49:20; எசே 6:14; எசே 15:8; எசே 25:3). பாபிலோன் இந்தத் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றிற்று. (எரே 25) தேவனுடைய ஜனங்களை பாபிலோன் தேசத்தார் அழித்து இஸ்ரவேல் தேசத்தைப் பாழாக்கினார்கள்.

சீயோனின் ஒப்புமைகள்

1. திராட்சத் தோட்டத்திலுள்ள ஒரு குச்சு (ஏசா 1:8).
2. வெள்ளரித்தோட்டத்திலுள்ள ஒரு குடிசை (ஆதி 33:17; லேவி 23:42; உன் 2:15; நாகூம் 8:14-17; யோபு 27:18; யோனா 4:5)
3. முற்றிக்கை போடப்பட்ட ஒரு பட்டணம் (ஏசா 1:7-8).

(6) **மீதியாக இருப்பவர்கள் இரட்சிக்கப் பட்டார்கள்** - (எரே 15:11; 23:3; எசே 6:8; 14:22; ரோம 11:5)

ஏசா 1:9 சேனைகளின் கர்த்தர் நமக்குக் கொஞ்சம் மீதியை வைக்காதிருந்தாரானால், நாம் சோதோமைப் போலாகி, கொமோராவுக்கு ஒத்திருப்போம்.

"சேனைகளின் கர்த்தர்........நாம் சோதோமைப்போலாகி, கொமோராவுக்கு ஒத்திருப்போம்" - இந்த வாக்கியம் ரோமர் 9:29 ஆவது வசனத்தில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

மீதியாக வைக்கப்பட்டிருப்பவர்கள் பற்றிய உபதேசம்

மீதியாக வைக்கப்பட்டிருக்கிறவர்கள் என்பது யூதாவையும், இஸ்ரவேலையும், மற்றக் கோத்திரத்தாரையும் குறிக்கும். இது புறஜாதியாரையோ அல்லது சபையாரையோ குறிக்கும் வார்த்தையல்ல. இஸ்ரவேலில் மீதியாக வைக்கப்பட்டிருக்கிறவர்களைக் கர்த்தர் இரட்சிப்பார். ஆபிரகாமோடும், ஈசாக்கோடும், யாக்கோபோடும், தாவீதோடும் தாம் பண்ணிய உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்காகக் கர்த்தர் இஸ்ரவேலர் அனைவரையும் அழித்துப் போடாமல் அவர்களில் சிலரை மீதியாக வைத்திருப்பார். ஆபிரகாமின் சந்ததியார் பூமியை நித்தியமாகச் சுதந்தரிப்பார்கள். (ஆதி 12:1-3,7; ஆதி 13:14-17; ஆதி 15:18-21; ஆதி 17:2-8,19; ஆதி 21:12; ஆதி 22:17-18; ஆதி 26:3-4; ஆதி 28:3-4,13-15; 2சாமு 7)

இஸ்ரவேல் புத்திரரில் மீதியாக வைக்கப்பட்டிருக்கிறவர்களைக் கர்த்தர் மீட்டுப் பாதுகாப்பார். மேசியாவின்கீழ் அவர்கள் நித்தியமாக மீட்கப்படுவார்கள். (ஏசா 1:9; ஏசா 10:20-22; ஏசா 11:10-12,16; ஏசா 38:31-32; ஏசா 46:3; எரே 23:3; எரே 31:7; எரே 39:9; எரே 40:11; எசே 6:8-10; யோவே 2:32; மீகா 2:12; மீகா 5:3-8; செப் 2:7-9; செப் 3:13; சக 8:6-12; ரோமர் 9:27; ரோமர் 11:5; வெளி 12:17).

ஏசாயா - தொகுப்புரை

1 அதிகாரம்

ஏசா 1:9 ஆவது வசனத்தின்படி கர்த்தர் கொஞ்சம்பேரை மீதியாக வைத்திருக்கிறார். யூதாவும், எருசலேமும் அழியும்போது தேவபிள்ளைகளில் ஒருசிலர் அழிக்கப்படாமல் பாதுகாக்கப்படுவார்கள். எல்லோரும் அழிந்துபோயிருந்தால் தேவனுடைய ஜனம் சோதோமைப்போலவும், கொமோராவைப் போலவும் முற்றிலுமாக அழிந்துபோயிருக்கும்.

(7) மாயமாலத்தின் பன்னிரெண்டு அம்சங்கள் - *(48:1; 58:3; ஆமோ 5:21; மத் 6; 15:7; 16:3; 22:18; 23:1-33; லூக் 12:1)*

ஏசா 1:10 சோதோமின் அதிபதிகளே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்; கொமோராவின் ஜனமே, நமது தேவனுடைய வேதத்துக்குச் செவி கொடுங்கள்.

ஏசா 1:11 உங்கள் பலிகளின் திரள் எனக்கு என்னத்துக்கு என்று கர்த்தர் சொல்லுகிறார்; ஆட்டுக்கடாக்களின் தகனபலிகளும், கொழுத்த மிருகங்களின் நிணமும் எனக்கு அரோசிகமாயிருக்கிறது; காளைகள், ஆட்டுக்குட்டிகள், கடாக்களுடைய இரத்தத்தின்மேல் எனக்குப் பிரியமில்லை.

ஏசா 1:12 நீங்கள் என் சந்நிதியில் வரும்போது, என் பிரகாரங்களை இப்படி மிதிக்கவேண்டுமென்று உங்களிடத்தில் கேட்டது யார்?

ஏசா 1:13 இனி வீண் காணிக்கைகளைக் கொண்டு வரவேண்டாம்; தூபங்காட்டுதல் எனக்கு அருவருப்பாயிருக்கிறது; நீங்கள் அக்கிரமத்தோடே ஆசரிக்கிற மாதப் பிறப்பையும், ஓய்வுநாளையும், சபைக்கூட்டத்தையும் நான் இனிச் சகிக்கமாட்டேன்.

ஏசா 1:14 உங்கள் மாதப் பிறப்புகளையும், உங்கள் பண்டிகைகளையும் என் ஆத்துமா வெறுக்கிறது; அவைகள் எனக்கு வருத்தமாயிருக்கிறது; அவைகளைச் சுமந்து இளைத்துப் போனேன்.

ஏசா 1:15 நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும், என் கண்களை உங்களை விட்டு மறைக்கிறேன்; நீங்கள் மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் கேளேன்; உங்கள் கைகள் இரத்தத்தினால் நிறைந்திருக்கிறது.

"கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்" - ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் "கேளுங்கள்" என்னும் கட்டளை 23 தடவைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. (ஏசா 1:2,10; ஏசா 6:9; ஏசா 7:13; ஏசா 18:3; ஏசா 28:14,23; ஏசா 32:9; ஏசா 33:13; ஏசா 34:1; ஏசா 39:5; ஏசா 42:18; ஏசா 43:9; ஏசா 44:1; ஏசா 47:8; ஏசா 48:1,14,16; ஏசா 51:21; ஏசா 55:3; ஏசா 66:5).

யூதாவின் பாவமான நிலைமை

யூதாவின் ஜனங்கள் பாவம் செய்து தங்களைக் கெடுத்துக் கொண்டார்கள். ஆகையினால் கர்த்தர் அவர்களுடைய ராஜாக்களைச் சோதோமின் அதிபதிகள் என்று அழைக்கிறார். யூதா ஜனங்களை கொமோராவின் ஜனம் என்றும் அழைக்கிறார். (ஏசா 1:10) இஸ்ரவேல் ஜனங்களுடைய திராட்சச்செடி சோதோமிலும், கொமோரா நிலங்களிலும் பயிரான திராட்சச்செடியிலும் தாழ்ந்த ஜாதியாயிருக்கிறது என்று மோசே அவர்களைப் பற்றி கடிந்து கூறியிருக்கிறார். இந்த வசனத்தில் சோதோமைப் பற்றி மறுபடியும் கூறப்பட்டிருக்கிறது. (உபா 32:32) சோதோமிலும், கொமோராவிலும் இருந்த ஜனங்கள் ஆண்புணர்ச்சிக்காரர்களாகவும், இலச்சையான சுபாவமுடையவர்களாகவும் இருந்தவர்களைப்போல இஸ்ரவேல் தேசத்திலும் இருந்திருக்கிறார்கள். ரெகொபெயாமின் ஆட்சிக் காலத்திலும் அவனுக்குப் பின் வந்த ராஜாக்களின் ஆட்சிக் காலத்திலும் இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் இந்தப் பாவம் காணப்பட்டது. (1இராஜா 14:24 14:24; 1இராஜா 15:12; இராஜா 22:46; 2இராஜா 23:7)

ஏசாயா - தொகுப்புரை

1 அதிகாரம்

இஸ்ரவேல் தேசத்தில் நியாயாதிபதிகளின் காலத்தில் சோதோமின் பாவம் காணப்பட்டது. அதற்காகக் கர்த்தர் பென்யமீன் கோத்திரத்தாரை அழித்தார். (நியா 19:1-21:25) தேசம் சுத்திகரிக்கப்பட்டது. அதன்பின்பு இஸ்ரவேல் தேசத்தில் மறுபடியுமாக சோதோமின் பாவம் காணப்படுகிறது. இஸ்ரவேலின் குமாரரில் ஒருவனும் ஆண்புணர்ச்சிக்காரனாய் இருக்கக்கூடாது என்று கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறார். (உபா 23:17) ஏசாயாவின் நாட்களில் யூதாவிலும், எருசலேமிலும், சோதோமின் பாவம் அதிகமாகக் காணப்பட்டது. (ஏசா 1:5-6,10; ஏசா 3:9) ஏசாயாவின் காலத்திற்குப் பின்பு மேலும் 150 வருஷங்களுக்கு யூதாவில் ஆண் புணர்ச்சிக்காரர்கள் நிரம்பியிருந்தார்கள். கர்த்தரால் அவர்களுடைய பாவத்தைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஆகையினால் கர்த்தர் இறுதியில் இந்தத் தேசத்தையே அழித்துப்போட்டார். (எரே 23:14; எரே 49:18; எரே 50:40; புல 4:6; எசே 16:46-56). எருசலேம் வெளி 11:8 ஆவது வசனத்தில் சோதோம் என்று அழைக்கப்படுகிறது. இஸ்ரவேலில் சோதோமின் பாவம் அதிகமாக இருந்தது.

"நமது தேவனுடைய வேதம்" - (ஏசா 1:10; ஏசா 2:3; ஏசா 5:24; ஏசா 8:16,20; ஏசா 24:5; ஏசா 30:9; ஏசா 42:4,21,24; ஏசா 51:4,7).

சடங்குகளின் வெறுமை

1. உங்கள் பலிகளின் திரள் எனக்கு என்னத்துக்கு என்று கர்த்தர் சொல்லுகிறார்; (ஏசா 1:11)
2. ஆட்டுக்கடாக்களின் தகனபலிகளும், கொழுத்த மிருகங்களின் நிணமும் எனக்கு அரோசிகமாயிருக்கிறது.
3. காளைகள், ஆட்டுக்குட்டிகள், கடாக்களுடைய இரத்தத்தின்மேல் எனக்குப் பிரியமில்லை.
4. மிருகங்களின் இரத்தத்தையும், மாம்சத்தையும் கர்த்தர் கேட்கவில்லை. (ஏசா 1:12).
5. இனி வீண் காணிக்கைகளைக் கொண்டு வரவேண்டாம் (ஏசா 1:13).
6. தூபங்காட்டுதல் எனக்கு அருவருப்பாயிருக்கிறது.
7. நீங்கள் அக்கிரமத்தோடே ஆசரிக்கிற மாதப்பிறப்பையும், ஓய்வுநாளையும், சபைக்கூட்டத்தையும் நான் இனிச் சகிக்கமாட்டேன்.
8. உங்கள் மாதப்பிறப்புகளையும், உங்கள் பண்டிகைகளையும் என் ஆத்துமா வெறுக்கிறது (ஏசா 1:14).
9. அவைகள் எனக்கு வருத்தமாயிருக்கிறது; அவைகளைச் சுமந்து இளைத்துப் போனேன்.
10. நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும், என் கண்களை உங்களைவிட்டு மறைக்கிறேன் (ஏசா 1:15).
11. நீங்கள் மிகுதியாய் ஜெபம்பண்ணினாலும் கேளேன்.
12. உங்கள் கைகள் இரத்தத்தினால் நிறைந்திருக்கிறது.

பலிகளைச் செலுத்துவது மட்டும் கர்த்தருக்குப் பிரியமாக இருக்கும் என்று நினைக்கக்கூடாது. பலிகளைச் செலுத்துகிறவன் அக்கிரமக்காரனாகவும், துன்மார்க்கனாகவும் இருக்கக்கூடாது. அவன் நீதிமானாக இருக்க வேண்டும். அப்போதுதான் கர்த்தர் அவனையும், அவன் பலிகளையும் அங்கிகரிப்பார்.

"நீங்கள் என் சந்நிதியில் வரும்போது" - வருஷத்திற்கு மூன்றுமுறை இஸ்ரவேல் ஜனத்தின் ஆண்மக்கள் எல்லோரும் பலிகளோடு கர்த்தருடைய சந்நிதிக்கு முன்பாக வரவேண்டும். (யாத் 23:15-17; யாத் 34:20-25).

காணிக்கை (oblations) - מִנְחָה - min-khaw' – 4503

1 அதிகாரம்

பெண்பால் பெயர்ச்சொல் - கப்பம், காணிக்கை, வெகுமதி, பலி, போஜனபலி, தகனபலி, வெகுமானம், பகுதி **(gift offering to secure favor, and could be either a blood)** (ஆதி 4:3-5) **bloodless gift** (ஆதி 32:13-21).

ஒய்வுநாள் **(sabbaths) - שַׁבָּת - shab-bawth' - 7676**

பொதுப்பெயர்ச்சொல் - ஒய்வுநாள், ஒய்ந்திருக்கும்நாள், ஒய்வு, ஒய்வு வருஷம், முறை **(intermission)** (யாத் 31:13; லேவி 19:3,30; லேவி23:15,38; 1நாளா 23:31; 2நாளா 31:3; ஏசா 56:4; எசே 20:12-24; எசே 22:8,26; எசே 23:88; எசே 44:24). மாதப் பிறப்புக்களோடு ஒய்வுநாள் என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (ஏசா 1:13; 2நாளா 2:4; 2நாளா 8:13; நெகே 10:33; எசே 45:17; எசே 46:3; ஒசி 2:11; கொலோ 2:14-17).

கர்த்தர் சகிக்காத காரியங்கள்

1. இஸ்ரவேலின் அக்கிரமங்கள். (ஏசா 1:10)
2. மாய்மாலத்தோடு செலுத்தப்படும் திரளான பலிகள். (ஏசா 1:11)
3. கொழுத்த மிருகங்களின் நிணம்.
4. காளைகள், ஆட்டுக்குட்டிகள், கடாக்களுடைய இரத்தம்.
5. கர்த்தருடைய சந்நிதியில் அசுத்தம். (ஏசா 1:12; எசே 26:11; எசே 34:18; தானி 8:7-10)
6. வீண் காணிக்கைகள். (ஏசா 1:13)
7. தூபங்காட்டுதல்
8. அக்கிரமத்தோடே ஆசரிக்கிற மாதப்பிறப்பு
9. அக்கிரமத்தோடே ஆசரிக்கிற ஒய்வுநாள்.
10. அக்கிரமத்தோடே ஆசரிக்கிற சபைக்கூட்டம். (ஏசா 1:13)
11. மாதப்பிறப்புகளும், பண்டிகைகளும் (ஏசா 1:14)
12. இரத்தத்தினால் நிறைந்திருக்கும் கைகளை விரித்து ஜெபிப்பது. (ஏசா 1:15)
13. மிருதியாய் ஜெபம்பண்ணுவது.
14. இரத்தத்தினால் நிறைந்திருக்கும் கைகள்

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு எதிராகத் தொடர்ந்து பாவம் செய்வதினால் அவர்கள் அழிவதற்கும், புறஜாதி தேசங்கள் மத்தியில் சிதறிப்போவதற்கும் கர்த்தர் அவர்களை அனுமதித்தார். இந்த சாபங்களிலிருந்து அவர்கள் இன்னும் முழுவதுமாக மீண்டு வரவில்லை. இஸ்ரவேல் ஜனத்தாருக்கு மிகப்பெரிய நியாயத்தீர்ப்பு காத்திருக்கிறது. அப்போது அவர்களில் மூன்றில் இரண்டு பங்கு ஜனத்தார் அழிந்துபோவார்கள். மூன்றாவது பங்கு ஜனத்தார் மனந்திரும்புவதற்கு முன்பாகவே பாடுகளை அனுபவிப்பார்கள். (சக 12:10-14:21).

அக்கிரமம் **(iniquity) - אָוֶן - aw'-ven - 205**

ஆ.பெ.சொ. - அக்கிரமம், துக்கங் கொள்தல், பாவம், சபித்தல், தீங்கு, பழிசாட்டுதல், துரோகஞ்செய்தல், வருத்தம், அநியாயம் பேசுதல் **(vanity)**

"உங்கள் மாதப்பிறப்புகளையும், உங்கள் பண்டிகைகளையும்" - கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் பண்டிகைகளையும், மாதப் பிறப்புக்களையும் அருவருப்பாகக் காண்கிறார். (ஏசா 1:13-14; ஒசி 2:11) நியாயப்பிரமாணத்தில் கூறப்பட்டிருக்கும் ஒய்வுநாள் கற்பனைக்கோ, அல்லது மற்றக் கற்பனைகளுக்கோ புதிய ஏற்பாட்டுக்கால விசுவாசிகள் அடிமைகளல்ல. ஏனெனில் மோசேயின் பிரமாணம் ஒழிக்கப்பட்டு விட்டது. (ரோமர் 14:5-6; கலா 4:9-10; கொலோ 2:14-17).

1 அதிகாரம்

"என் ஆத்துமா வெறுக்கிறது" - கர்த்தருக்கு ஆத்துமாவும், ஆவியும், சரீரமும் உள்ளது. மற்ற ஆள்தத்துவப் பண்புடையவர்களுக்கு உள்ளதுபோலவே கர்த்தருக்கும், உணர்வுகள், ஆவல்கள் ஆகிய அனைத்தும் உண்டு. (ஏசா 1:14; ஏசா 42:1; லேவி 26:11,30; எபி 10:38)

"அவைகளைச் சுமந்து இளைத்துப்போனேன்" - மனுஷர் பிரச்சனைகளையும், வருத்தங்களையும் சகிக்க முடியாமல் இளைத்துப் போவதுபோல கர்த்தரும் இளைத்துப்போகிறார். (ஏசா 7:13)

இளைத்துப்போதல் (grieve) - לָאָה - law-aw' - 3811

வினைச்சொல் - அலுத்துப்போ, ஆயாசப்படு, கலங்கு, அரோசி, வருத்தப்படு, இளைத்துப்போ, சலித்துப்போ, உழை, விசனப்படு, இளைக்கப்பண்ணு, வருத்தத்தை உண்டாக்கு **(to tire; be disgusted; grieve; loathe; be weary)**.

"நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும்" - இஸ்ரவேல் புத்திரரின் கைகள் இரத்தத்தினால் நிறைந்திருக்கிறது. ஆகையினால் அவர்கள் கைகளை உயர்த்தி ஜெபிக்கும்போது கர்த்தர் அவற்றைப் பரிசுத்தக் கரங்களாகக் காண்பதில்லை. (1தீமோ 2:8).

"நீங்கள் மிகுதியாய் ஜெபம்பண்ணினாலும் கேளேன்" - கர்த்தரிடத்திலிருந்து பதில் பெறும் வரையிலும் நாம் தொடர்ந்து ஜெபிக்க வேண்டும். (லூக்கா 18:1-8) ஆனாலும் கர்த்தர் நம்முடைய ஜெபவார்த்தைகளைவிட பரிசுத்தமான ஜீவியத்தையே அதிகமாகப் பார்க்கிறார். (மத் 6:5-8).

(8) **தேவனுடைய பத்து கோரிக்கைகள்** - (உபா 10:12; 11:18)

ஏசா 1:16 உங்களைக் கழுவிச் சுத்திகரியுங்கள்; உங்கள் கிரியைகளின் பொல்லாப்பை என் கண்களுக்கு மறைவாக அகற்றிவிட்டு, தீமைசெய்தலை விட்டு ஓயுங்கள்.

ஏசா 1:17 நன்மைசெய்யப் படியுங்கள்; நியாயத்தைத் தேடுங்கள்; ஒடுக்கப் பட்டவனை ஆதரித்து, திக்கற்றப் பிள்ளையின் நியாயத்தையும், விதவையின் வழக்கையும் விசாரியுங்கள்.

ஏசா 1:18 வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்.

கர்த்தர் பாவிகளிடம் கூறும் காரியங்கள்

1. உங்களைக் கழுவுங்கள். (ஏசா 1:16).
2. உங்களைச் சுத்திகரியுங்கள்.
3. உங்கள் கிரியைகளின் பொல்லாப்பை என் கண்களுக்கு மறைவாக அகற்றிவிடுங்கள்.
4. தீமைசெய்தலை விட்டு ஓயுங்கள்.
5. நன்மைசெய்யப் படியுங்கள் (ஏசா 1:17).
6. நியாயத்தைத் தேடுங்கள்.
7. ஒடுக்கப்பட்டவனை ஆதரியுங்கள்.
8. திக்கற்றப்பிள்ளையின் நியாயத்தை விசாரியுங்கள்.
9. விதவையின் வழக்கை விசாரியுங்கள்.
10. வழக்காடுவோம் வாருங்கள் (ஏசா 1:18).

1 அதிகாரம்

கர்த்தர் மனுஷரிடம் எதிர்பார்க்கும் ஒவ்வொரு காரியத்திலும் மனுஷன் செய்ய வேண்டிய காரியமும் அடங்கியிருக்கிறது. பழைய ஏற்பாட்டுக்கால இரட்சிப்பிற்கும், புதிய ஏற்பாட்டுக்கால இரட்சிப்பிற்கும் அதிக வித்தியாசம் எதுவுமில்லை. ஒவ்வொரு தனிநபரும் தன்னுடைய ஜீவியத்தைச் சுத்திகரித்து தன்னுடைய ஜீவியத்திலிருந்து பாவங்களை அகற்றிவிட்டு, கர்த்தருடைய சித்தத்தை முழு இருதயத்தோடு செய்ய வேண்டும். ஒரு மனுஷன் இதைச் செய்யும்போது அவன் இரட்சிப்பிற்காகக் கர்த்தர் நியமித்திருக்கும் மற்ற நிபந்தனைகளையும் கைக்கொள்கிறான். அவன் மனந்திருந்துவான். பாவஅறிக்கை செய்வான். தன்னுடைய இருதயத்தில் சுவிசேஷத்தை விசுவாசிப்பான். மனுஷன் தான் செய்ய வேண்டிய காரியத்தைச் செய்யும்போது கர்த்தர் தாம் செய்ய வேண்டிய பங்கை நிறைவேற்றுவார். அவனை மன்னிப்பார். அவனை கிறிஸ்துவில் புதிய சிருஷ்டியாக்குவார். (மாற்கு 1:15; மாற்கு 16:15; யோவான் 3:16; ரோமர் 10:9-10; 2கொரி 5:17-21; எபே 2:8-9; 1யோவான் 1:7-9)

மனுஷனால் தன்னைத்தானே கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவ முடியாது. விசுவாசத்தினால் பரிசுத்த ஆவியானவர் மூலமாகவே இந்தக் காரியம் நடைபெறும். (1கொரி 6:11; 1கொரி 8:1-13; கொலோ 2:11-13; வெளி 1:5; வெளி 5:8-10). தேவனுடைய வார்த்தையினால் நாம் தண்ணீரில் ஞானஸ்நானம் பெற வேண்டும். ஒவ்வொருவரும் மறுபடியும் பிறக்க வேண்டும். (யோவான் 3:3,5; யோவான் 15:3; யோவான் 17:17; எபே 5:26; யாக் 1:18; 1பேதுரு 1:23). ஒருவன் வேதவசனங்களை வாசித்து அவற்றைத் தன்னுடைய ஜீவியத்தில் சொந்தமாக்கிக் கொண்டு அதற்கேற்றபடி ஜீவிக்கும்போது அவன் தன்னைத்தானே கழுவி சுத்திகரித்துக் கொள்கிறான். ஏசா 1:16-18 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் "கழுவுதல்" என்னும் வார்த்தையானது ஒருவன் சுத்திகரிக்கப்பட்ட பின்பு நிறைவேற்ற வேண்டிய சடங்காச்சாரக் கழுவுதலைக் குறிக்கும்.

"வழக்காடுவோம் வாருங்கள்" - நமக்கு இடையிலுள்ள கருத்து வேறுபாடுகளைத் தீர்த்துக் கொள்வோம். வழக்காடும்போது இரண்டு பிரிவினரும் தங்கள் பக்கத்திலுள்ள நியாயங்களைக் கூற வேண்டும். வழக்காடும் போது பாவி தன்னுடைய தேவையை உணர்ந்து தன்னைக் கர்த்தரிடத்தில் அர்ப்பணிக்க வேண்டும். அப்போது அவனுடைய பாவங்களிலிருந்து அவனைச் சுத்திகரிப்பதற்கும், அவனைத் தம்முடைய பிள்ளையாக ஏற்றுக் கொள்வதற்கும் கர்த்தர் நீதியுள்ளவராக இருப்பார்.

பாவம் (sin) - **חֵטְא - khate - 2399**

ஆ.பெ.சொ. - குற்றம், பாவம் **(to sin; miss the mark)**

"இராத்தாம்பரச்சிவப்பு" இதற்கான எபிரெய வார்த்தை "ஷானி" **(shaniy)** என்பதாகும். இது ஷானா என்னும் எபிரெய வார்த்தையிலிருந்து வந்திருக்கிறது. ஷானா என்பதற்கு இரண்டு அல்லது இரண்டு மடங்கு என்று பொருள். ஒருவனுடைய பாவம் பல மடங்கு அதிகரித்திருக்கும். இராத்தாம்பரம் போல சாயம்போகாமல் சிவப்பாக இருக்கும். ஆனாலும் அவர்கள் தங்களுடைய பாவங்களை அறிக்கையிடும் பொழுது இரத்தாம்பரச் சிவப்பு நிறத்திலிருந்து பனியைப்போன்ற வெண்மை நிறத்திற்கு மாறுவார்கள்.

இரண்டு **(double) - שָׁנָה - shaw-naw' - 8138**

வினைச்சொல் - இரண்டு, மறுபடியும், நானாவித, மாற்று, வேறுபடுத்து, வை, புறட்டு, மூடு, கல, திரும்பு, இரட்டித்திரு, குத்து, இரண்டாந்தரம்

இராத்தாம்பரம் **(scarlet) - שָׁנִי - shaw-nee' - 8144**

ஆ.பெ.சொ. - சிவப்பு நூல், சிவப்பு, துப்பட்டி, சிவப்புக் கயிறு, சிவப்பு, இரட்டை புரை, இராத்தாம்பரம் **(duplicate)**

1 அதிகாரம்

(9) நிபந்தனையுள்ள ஆசீர்வாதங்கள் - (லேவி 26:40; உபா 7:12; 28:1; 30:1; எரே 17:24; 1யோவா 1:7)

ஏசா 1:19 நீங்கள் மனம்பொருந்திச் செவிகொடுத்தால், தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள்.

ஏசா 1:20 மாட்டோம் என்று எதிர்த்து நிற்பீர்களாகில் பட்டயத்துக்கு இரையாவீர்கள்; கர்த்தரின் வாய் இதைச் சொல்லிற்று.

ஆசீர்வாதம் பெறுவதற்கு நிபந்தனைகள்

1. மனம்பொருந்த வேண்டும்.
2. செவிகொடுக்க வேண்டும்.

சாபம் பெறுவதற்கு நிபந்தனைகள்

1. மாட்டோம் என்று மறுப்பது.
2. எதிர்த்து நிற்பது.

(10) இருக்கும் நிலைமையின் பத்து அம்சங்களும், காரணங்களும் - (3:8; 42:23; 43:27; 59:9; புல 1:8; 4:13; ரோம 11)

ஏசா 1:21 உண்மையுள்ள நகரம் எப்படி வேசியாய்ப்போயிற்று! அது நியாயத்தால் நிறைந்திருந்தது, நீதி அதில் குடி கொண்டிருந்தது; இப்பொழுதோ அதின் குடிகள் கொலைபாதகர்.

ஏசா 1:22 உன் வெள்ளி களிம்பாயிற்று; உன் திராட்சரசம் தண்ணீர்க்கலப்பானது.

ஏசா 1:23 உன் பிரபுக்கள் முரடரும் திருடரின் தோழருமாயிருக்கிறார்கள்; அவர்களில் ஒவ்வொருவனும் பரிதானத்தை விரும்பி, கைக்கூலியை நாடித்திரிகிறான்; திக்கற்ற பிள்ளையின் நியாயத்தை விசாரியார்கள்; விதவையின் வழக்கு அவர்களிடத்தில் ஏறுகிறதில்லை.

எருசலேமின் நிலைமை

1. அது வேசியாய்ப்போயிற்று (ஏசா 1:21).
2. அதின் குடிகள் கொலைபாதகர்.
3. அதன் வெள்ளி களிம்பாயிற்று (ஏசா 1:22).
4. அதின் திராட்சரசம் தண்ணீர்க் கலப்பானது. ஏசா 5:22; ஏசா 60:17; சங் 76:8; நீதி 23:30; உன் 8:2).
5. அதின் பிரபுக்கள் முரடராயிருக்கிறார்கள். (ஏசா 1:23).
6. அதின் பிரபுக்கள் திருடரின் தோழராயிருக்கிறார்கள்.
7. அவர்களில் ஒவ்வொருவனும் பரிதானத்தை விரும்புகிறான்.
8. அவர்களில் ஒவ்வொருவனும் கைக்கூலியை நாடித்திரிகிறான்.
9. அவர்கள் திக்கற்ற பிள்ளையின் நியாயத்தை விசாரியார்கள்
10. விதவையின் வழக்கு அவர்களிடத்தில் ஏறுகிறதில்லை.

3. யூதாவின் மீட்பின் பத்து அம்சங்கள் - (29:15; 29:22)

ஏசா 1:24 ஆகையால் சேனைகளின் கர்த்தரும் இஸ்ரவேலின் வல்லவருமாகிய ஆண்டவர் சொல்லுகிறதாவது: ஓகோ, நான் என் சத்துருக்களில் கோபம் ஆறி, என் பகைஞருக்குநீதியைச் சரிக்கட்டுவேன்.

ஏசா 1:25 நான் என் கையை உன்னிடமாய்த் திருப்பி, உன் களிம்பு நீங்க உன்னைச் சுத்தமாய்ப் புடமிட்டு, உன் ஈயத்தையெல்லாம் நீக்குவேன்.

ஏசாயா - தொகுப்புரை

1 அதிகாரம்

ஏசா 1:26 உன் நியாயாதிபதிகளை முன்னிருந்ததுபோலவும், உன் ஆலோசனைக்காரரை ஆதியில் இருந்தது போலவும் திரும்பக் கட்டளையிடுவேன்; பின்பு நீ நீதிபுரம் என்றும், சத்திய நகரம் என்றும் பெயர்பெறுவாய்.

ஏசா 1:27 சீயோன் நியாயத்தினாலும், அதிலே திரும்பிவருகிறவர்கள் நீதியினாலும் மீட்கப்படுவார்கள்.

"இஸ்ரவேலின் வல்லவர்" - இந்த வாக்கியம் ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் மட்டுமே காணப்படுகிறது. (ஏசா 1:24; ஏசா 30:29).இந்த வாக்கியம் தவிர இந்தப்புஸ்தகத்தில் "யாக்கோபின் வல்லவர்" என்னும் வாக்கியமும் காணப்படுகிறது. (ஏசா 49:26; ஏசா 60:16).

"ஓகோ" - கர்த்தர் தாம் செய்ய வேண்டுமென்று தீர்மானித்திருக்கிற காரியத்தில் உறுதியாய் இருக்கிறார் என்பதை வலியுறுத்தும் வார்த்தை.

தீர்க்கதரிசன எண் - 2

"நான் என் சத்துருக்களில் கோபம் ஆறி, என் பகைஞருக்கு நீதியைச் சரிக்கட்டுவேன்........" (ஏசா 1:24-31) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. ஆயிரம் வருஷ அரசாட்சியில் நிறைவேறும்.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. நான் என் சத்துருக்களில் கோபம் ஆறுவேன். (ஏசா 1:24).
2. என் பகைஞருக்கு நீதியைச் சரிக்கட்டுவேன்.
3. நான் என் கையை உன்னிடமாய்த் (யூதாவும், எருசலேமும்) திருப்புவேன். ஏசா 1:25)
4. உன் களிம்பு நீங்க உன்னைச் சுத்தமாய்ப் புடமிடுவேன்.
5. உன் ஈயத்தையெல்லாம் நீக்குவேன்.
6. உன் நியாயாதிபதிகளை முன்னிருந்தது போல (எகிப்திலிருந்து வெளியேறி வந்தபோது இருந்ததுபோல) திரும்பக் கட்டளையிடுவேன். (ஏசா 1:26).
7. உன் ஆலோசனைக்காரரை ஆதியில் இருந்தது போலவும் (மோசேயைப் போலவும், ஆரோனைப்போலவும்) திரும்பக் கட்டளையிடுவேன்.
8. நீ நீதிபுரம் என்றும், சத்திய நகரம் என்றும் பெயர்பெறுவாய்.
9. சீயோன் நியாயத்தினால் மீட்கப்படும். (ஏசா 1:1,27; ஏசா 2:1)
10. அதிலே திரும்பிவருகிறவர்கள் நீதியினால் மீட்கப்படுவார்கள்.
11. துரோகிகளும் பாவிகளுமோ ஏகமாய் நொறுங்குண்டுபோவார்கள்(ஏசா 1:28).
12. கர்த்தரை விட்டு விலகுகிறவர்கள் நிர்மூலமாவார்கள்.
13. நீங்கள் விரும்பின கர்வாலி மரங்களினிமித்தம் (மரங்களினால் செய்யப்பட்ட விக்கிரகங்களின் நிமித்தம்) வெட்கப்படுவீர்கள் (ஏசா 1:29).
14. நீங்கள் தெரிந்துகொண்ட தோப்புகளினிமித்தம்நாணமடைவீர்கள்.
15. இலையுதிர்ந்த கர்வாலிமரத்தைப் போலவும், தண்ணீரில்லாத தோப்பைப் போலவும் இருப்பீர்கள். (ஏசா 1:30).
16. பராக்கிரமசாலி சணற்கூளமும், அவன் கிரியை அக்கினிப்பொறியுமாகி, இரண்டும் அவிப்பாரில்லாமல் ஏகமாய் வெந்துபோம் (ஏசா 1:31).

"நான் என் கையை உன்னிடமாய்த் திருப்பி" - கர்த்தர் எருசலேமின்மீதும் யூதாவின்மீதும் தமது கையைத்திருப்பி அவர்களுக்கு நியாயத்தீர்ப்பை அனுப்பி அவர்களைத் தம் பக்கமாக அழைத்து வருவதற்குச் சித்தம் கொண்டிருக்கிறார். (ஏசா 1:21,26-27).

ஏசாயா - தொகுப்புரை

1 அதிகாரம்

"உன்னைச் சுத்தமாய்ப் புடமிட்டு" - நெருப்பில் உலோகத்தைப் புடமிடும்போது அதிலுள்ள அசுத்தங்களும், கழிவுகளும் வெளியேறி உலோகம் சுத்தமாயிருக்கும்.

"உன் நியாயாதிபதிகளை முன்னிருந்தது போலவும்" (யாத் 18:16-26; எண் 25:5; உபா 1:16; உபா 16:18; உபா 19:17-19; உபா 21:2).

"பின்பு.....பெயர்பெறுவாய்." - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது யூதாவும், எருசலேமும் சுத்தமாகப் புடமிடப்பட்ட பின்பு. (ஏசா 1:25-27; ஏசா 9:6-7; ஏசா 59:20-21; சக 12:10-13:1; ரோமர் 11:25-29).

எருசலேமின் வருங்காலப் பெயர்கள்

1. நீதிபுரம் **(The city of righteousness)** (ஏசா 1:26)
2. சத்திய நகரம் **(The faithful city)** (ஏசா 1:26)
3. கர்த்தருடைய நகரம் **(The city of the Lord)** (ஏசா 60:14)
4. இஸ்ரவேலுடைய பரிசுத்தரின் சீயோன் **(The Zion of the Holy One of Israel)** (ஏசா 60:14)
5. எப்சிபா - நான் அவளில் பிரியமாயிருக்கிறேன். (ஏசா 62:4)
6. தேடிக்கொள்ளப்பட்டது. (ஏசா 62:12)
7. கைவிடப்படாத நகரம் **(A city not forsaken)** (ஏசா 62:12)
8. கர்த்தருடைய சிங்காசனம் **(The throne of the Lord)** (எரே 3:17)
9. பச்சையான ஒலிவமரம் **(A green olive tree)** (எரே 11:16)
10. எங்கள் நீதியாயிருக்கிற கர்த்தர் **(The Lord our righteousness)** (எரே 33:16)
11. யேகோவா ஷம்மா - கர்த்தர் அங்கே இருக்கிறார். (எசே 48:35)
12. சத்திய நகரம் **(A city of truth)** (சக 8:3)
13. சேனைகளுடைய கர்த்தரின் பர்வதம் **(The mountain of the Lord of hosts)** (சக 8:3)
14. பரிசுத்த பர்வதம் **(The holy mountain)** (சக 8:3)

இந்தப் பெயர்களில் எதுவும் எருசலேமிற்கு இப்பொழுதோ அல்லது இதற்கு முன்போ கொடுக்கப்படவில்லை. இயேசு கிறிஸ்து எருசலேமில் நித்தியமாக ஆட்சி புரியும்போது இந்தப் பெயர்களெல்லாம் அந்த நகரத்திற்குக் கொடுக்கப்படும்.

"சத்திய நகரம்" **(the faithful city)** - ஒரு காலத்தில் எருசலேம் உண்மையுள்ள நகரமாக இருந்தது. அதன் பின்பு அது வேசியாயிற்று. (ஏசா 1:21) எருசலேம் மறுபடியும் மீட்கப்பட்ட பின்பு அது நீதிபுரம் என்றும், சத்திய நகரம் என்றும் பெயர் பெறும்.

"சீயோன் நியாயத்தினாலும்.......... மீட்கப் படுவார்கள்" - கர்த்தர் இந்தப் பூமியில் நித்தியமாக ஆளுகை செய்யும்போது அவர் சீயோனைத் தமது தலைநகரமாக்குவார். (ஏசா 1:27; ஏசா 52:9) இந்தச் சம்பவம் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது நடைபெறும். (ஏசா 59:20-21; சக 12:10-13:1; ரோமர் 11:25-29).

4. யூதாவின் பத்து அம்ச நியாயத்தீர்ப்பு - (எரே 10:17; 11:11; 20:14; எசே 6)

ஏசா 1:28 துரோகிகளும் பாவிகளுமோ ஏகமாய் நொறுங்குண்டுபோவார்கள்; கர்த்தரை விட்டு விலகுகிறவர்கள் நிர்மூலமாவார்கள்.

ஏசாயா - தொகுப்புரை

1 அதிகாரம்

ஏசா 1:29 நீங்கள் விரும்பின கர்வாலி மரங்களினிமித்தம் வெட்கப்படுவீர்கள்; நீங்கள் தெரிந்துகொண்ட தோப்புகளினிமித்தம் நாணமடைவீர்கள்.

ஏசா 1:30 இலையுதிர்ந்த கர்வாலி மரத்தைப் போலவும், தண்ணீரில்லாத தோப்பைப் போலவும் இருப்பீர்கள்.

ஏசா 1:31 பராக்கிரமசாலி சணற்கூளமும், அவன் கிரியை அக்கினிப்பொறியுமாகி, இரண்டும் அவிப்பாரில்லாமல் ஏகமாய் வெந்துபோம் என்று சொல்லுகிறார்.

மீட்கப்படுவதற்கு முன்பாக நியாயத்தீர்ப்பு

1. துரோகிகளும் பாவிகளுமோ ஏகமாய் நொறுங்குண்டுபோவார்கள்(ஏசா 1:28)
2. கர்த்தரை விட்டு விலகுகிறவர்கள் நிர்மூலமாவார்கள்.
3. விக்கிரகங்களின்மீது நியாயத்தீர்ப்பு (ஏசா 1:29)
4. விக்கிரகத்தோப்புகள்மீது நியாயத் தீர்ப்பு.
5. இலையுதிர்ந்த கர்வாலிமரத்தைப் போல அழிக்கப்படுவார்கள். (ஏசா 1:30)
6. தண்ணீரில்லாத தோப்பைப் போல அழிக்கப்படுவார்கள்.
7. பராக்கிரமசாலி சணற்கூளம்போல வெந்துபோவான். (ஏசா 1:31)
8. விக்கிரகங்களைச் செய்தவர்களின் கிரியை அக்கினிப்பொறியாகும்.
9. விக்கிரகங்களும், அதைச் செய்தவர்களும் வெந்துபோவார்கள்.
10. நியாயத்தீர்ப்பின் அக்கினியை யாராலும் அவிக்க முடியாது.

விட்டு விலகுதல் (forsake) - עָזַב - aw-zab' - 5800

வினைச்சொல் - விட்டுநீங்கு, விடு, கைவிடு, வைத்துப்போ, சிந்தவிடு, உயிரோடிரு, தள்ளிவிடு, மீதிவை, விட்டுவிடு, புறப்படு, விட்டுயிரி, உதவிசெய், விட்டுத்திரும்பு, ஒப்புவி, ஒப்புக்கொடு, வைத்துவிடு, விட்டுபோ, விட்டு ஓடு, தள்ளிவிடு, விட்டு விலகு, இடங்கொடு, பயப்படாதே போ, மாற்று, போக்கடி, தப்புவி, மோசம்போ, விடுதலை பெறு, விடுபடு, குடியற்று பாழாய்போ, மீதிவை **(to loosen; relinquish; fail; forsake; leave; refuse)** மனுஷர் கர்த்தரை மறுதலிக்கக்கூடாது. (உபா 12:19; உபா 14:27) தம்முடைய பிள்ளைகள் தம்மை மறுதலிப்பார்கள் என்றும், இதனால் அவர்களுக்கு அழிவு வரும் என்றும் கர்த்தர் முன்னறிவித்திருக்கிறார். (உபா 31:16-17; 1நாளா 28:9; 2நாளா 15:2).

"நீங்கள் விரும்பின கர்வாலி மரங்களினிமித்தம் வெட்கப்படுவீர்கள்" - கர்வாலி மரங்களை விக்கிரகங்களைச் செய்வதற்குப் பயன்படுத்தினார்கள். (ஏசா 1:29-31; ஏசா 57:5; ஏசா 65:3; ஏசா 66:17; 2இராஜா 16:4; 2இராஜா 17:10; எசே 6:13). ஏசா 1:29 ஆவது வசனத்தில் கர்வாலி மரங்கள் என்று பன்மையிலும், ஏசா 1:30 ஆவது வசனத்தில் கர்வாலி மரம் என்று ஒருமையிலும் கூறப்பட்டிருக்கிறது. ஏராளமான மரங்களாக இருந்தது ஒரே மரமாக எண்ணிக்கையில் குறையும் வரைக்கும் அவர்கள் கர்வாலி மரங்களினால் விக்கிரகங்களைச் செய்திருக்கிறார்கள். ஆகையினால் தோப்புகளாக இருந்தது தோப்பாகக் குறைந்துவிட்டது.

"அவன் கிரியை" - விக்கிரகங்களைச் செய்கிறவனுடைய கிரியை. (ஏசா 1:29)

2 அதிகாரம்

5. **கடைசி நாட்களின் தீர்க்கதரிசனங்கள்** - (2:1-4:6; ஆதி 49:1; எண் 24:14; உபா 4:30; எரே 23:20; 30:24; 48:47; 49:39; தானி 2:28; 10:14; ஓசி 3:5; மீகா 4:1; அப் 2:17; 1தீமோ4; 2தீமோ 3; யாக் 5:3; 2பேது 3:3)

(1) **ஆயிர வருஷம்** - (அதிகாரங்கள் 4; 11; 14; 32; 65; எசே 40-48; மீகா 4; சக 14; வெளி 20)

ஏசா 2:1 ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா யூதாவையும் எருசலேமையும் குறித்துக் கண்ட தரிசனம்.

ஏசா 2:2 கடைசிநாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள்.

ஏசா 2:3 திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும் யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்.

ஏசா 2:4 அவர் ஜாதிகளுக்குள் நியாயந் தீர்த்து, திரளான ஜனங்களைக் கடிந்து கொள்வார்; அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை.

தீர்க்கதரிசன எண் - 3

"கடைசிநாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் ......" (ஏசா 2:2-4) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. ஆயிரம் வருஷ அரசாட்சியின்போது இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும்.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. இது ஆயிரம் வருஷ அரசாட்சியின் போது கர்த்தருடைய நாளில் அதாவது கடைசி நாட்களில் இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும். (ஏசா 2:2; மீகா 4:1)
2. கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும் (ஏசா 2:2).
3. எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள். (ஏசா 2:2; மீகா 4:1; சக 14:16-21).
4. திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும் யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள். (ஏசா 2:3; மீகா 4:2)
5. சீயோனிலிருந்து வேதம் வெளிப்படும். (ஏசா 2:3; மீகா 4:2).
6. எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனம் வெளிப்படும். (ஏசா 2:3; ஏசா 11:9; ஏசா 52:7; ஏசா 66:19-21; மீகா 4:3).
7. கர்த்தர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்ப்பார். (ஏசா 2:4; ஏசா 11:1-10; மீகா 4:3).
8. திரளான ஜனங்களைக் கடிந்து கொள்வார். (ஏசா 2:4; ஏசா 11:4-5; சக 14:9,16-21).

2 அதிகாரம்

9. எல்லா ஜாதியாரும் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள் (ஏசா 2:4; மீகா 4:3).

10. ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை. (ஏசா 2:4; மீகா 4:3).

"பர்வதம்" - பூமியின்மீது பரலோக ராஜ்யம் பிரத்தியட்சமாக ஸ்தாபிக்கப்படும். எருசலேம் கர்த்தருடைய சிங்காசனம் என்றும், சேனைகளின் கர்த்தருடைய பர்வதம் என்றும் அழைக்கப்படுகிறது.

"கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு" - கர்த்தருடைய ஆலயம் அல்லது அவருடைய தலைநகரம் ஸ்தாபிக்கப்படும். எசே 40:4-47:12 ஆகிய வசனங்களில் விவரிக்கப்பட்டிருக்கும் ஆயிரம் வருஷத்து தேவாலயம் இதுவே ஆகும். (எசே 43:7)

"பர்வதங்களின் கொடுமுடி" - கர்த்தர் எப்போதும் பர்வதங்களில் வாசம்பண்ணுகிறார். அவருடைய பரிசுத்த நகரமாகிய புதிய எருசலேம் பர்வதத்திலுள்ள நகரமாக இருக்கும். (வெளி 21:10) ஏசா 2 அதிகாரத்தில் கர்த்தருடைய ஆலயம் என்பது "கர்த்தருடைய பர்வதம்" (ஏசா 2:2) என்றும், "யாக்கோபின் தேவனுடைய ஆலயம்" என்றும், "சீயோன்" என்றும், "எருசலேம்" என்றும் (ஏசா 2:3) அழைக்கப்படுகிறது. (சங் 24:3)

"நாம் கர்த்தரின் பர்வதத்துக்கு.......போவோம்" - ஏசா 11:16; ஏசா 19:23; ஏசா 35:8 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பரிசுத்தத்தின் பெரும் பாதை என்பது பிரதியட்சமான பாதையாகும். இது எகிப்திலிருந்து பாலஸ்தீனம் வழியாக அசீரியா தேசத்திற்குச் செல்லும். எல்லா ஜனங்களும் இந்தப் பெரும் பாதை வழியாக நடந்து கர்த்தருடைய ஆலயத்திற்குச் செல்வார்கள். இந்த ஆலயத்திலிருந்து இயேசு கிறிஸ்து பூமியிலுள்ள எல்லா தேசங்களையும் ஆளுகை செய்வார். (ஏசா 9:6-7; எசே 43:7; சக 14:1-5,9, 16-21; வெளி 5:10; வெளி 11:15; வெளி 22:4-5).

"தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள்" - உலகம் முழுவதும் சமாதானம் உண்டாயிருக்கும். யுத்தத்திற்குப் பதிலாக அமைதி திரும்பும். (யோவே 3:9-16) அர்மகெதோன் யுத்தத்திற்குப் பின்பு இது நிறைவேறும். (சக 14; வெளி 16:13-16; வெளி 19:11-21).

"ஜாதிக்கு விரோதமாய் ஜாதிபட்டயம் எடுப்பதில்லை" - ஆயிரம் வருஷ அரசாட்சியின் முடிவில் சாத்தானும், இயேசு கிறிஸ்துவிற்கு எதிரான மனுஷரும் இனிமேல் பூமியில் யுத்த ஆயுதங்களைச் செய்யமாட்டார்கள். சாத்தான் கலகக்காரர்களை வஞ்சிப்பான். தங்களிடமுள்ள ஆயுதங்களைக் கொண்டு இயேசு கிறிஸ்துவைச் சடிதியாகத் தாக்கி, ஜெயம்பெறலாம் என்று பொய்யாக வாக்குப்பண்ணுவான். ஆனால் இயேசு கிறிஸ்துவோ கலகக்காரர் அனைவரையும் அழிப்பதற்கு அக்கினியை அனுப்புவார். இத்துடன் பூமியின்மீது எல்லாக் கலகங்களும் ஒழிந்துபோகும். (வெளி 20:7-10).

(2) ஆசீர்வாதத்திற்கு முன்பு சிட்சை - (2:5-4:1; லேவி 26; உபா 4:26; 27:1-30:20; ரோம 11)

(அ) சிட்சையைத் தவிர்ப்பதற்கு வாய்ப்பு - (எரே 18:11; ஓசி 10:12; ஆமோ 5:4)

ஏசா 2:5 யாக்கோபின் வம்சத்தாரே, கர்த்தரின் வெளிச்சத்திலே நடப்போம் வாருங்கள்.

"யாக்கோபின் வம்சத்தாரே" - ஏசாயா புஸ்தகத்தில் இந்த வாக்கியம் 9 தடவைகள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (ஏசா 2:5-6; ஏசா8:17; ஏசா 10:20; ஏசா 14:1;ஏசா 29:22; ஏசா 46:3; ஏசா 48:1; ஏசா 58:1)

2 அதிகாரம்

"கர்த்தரின் வெளிச்சத்திலே நடப்போம் வாருங்கள்" - யூதாவும், எருசலேமும் கர்த்தருடைய வெளிச்சத்தில் நடக்கும்போது அவர்களுக்கு அழிவும், சிட்சையும் உண்டாகாது. ஆகையினால் அவர்களுக்கு இந்த அழைப்பு கொடுக்கப்படுகிறது. நியாயத்தீர்ப்பை எதிர்நோக்கியிருக்கும் ஜனங்களுக்குக் கர்த்தர் இதுபோன்ற அழைப்பைக் கொடுக்கிறார். கர்த்தரின் சத்தத்திற்கு ஜனங்கள் கீழ்ப்படிந்து அவரிடத்திற்குத் திரும்பி வந்தால், அவர் அவர்களை ஆதரிப்பார். அவர்கள் தங்கள் கலகக்குணத்தில் நிலைத்திருந்தால், கர்த்தர் தம்முடைய வார்த்தையின் பிரகாரமாக அவர்களை நியாயந்தீர்ப்பார். (ஏசா 1:16-18).

(ஆ) மறுப்பு - எட்டு தேசிய அளவிலான பாவங்கள் - (எரே 11:8; 23:9; ஓசி 4:1; மீகா 3:9)

ஏசா 2:6 யாக்கோபின் வம்சத்தாராகிய உம்முடைய ஜனத்தைக் கைநெகிழ்ந்தீர்; அவர்கள் கீழ்த்திசையாரின் போதகத்தால் நிறைந்து, பெலிஸ்தரைப்போல் நாள் பார்க்கிறவர்களாயிருந்து, அந்நிய புத்திரர்மேல் பிரியப்படுகிறார்களே.

ஏசா 2:7 அவர்கள் தேசம் வெள்ளியினாலும் பொன்னினாலும் நிறைந்திருக்கிறது; அவர்கள் பொக்கிஷங்களுக்கு முடிவில்லை; அவர்கள் தேசம் குதிரைகளாலும் நிறைந்திருக்கிறது; அவர்கள் இரதங்களுக்கும் முடிவில்லை.

ஏசா 2:8 அவர்கள் தேசம் விக்கிரகங்களாலும்நிறைந்திருக்கிறது; தங்கள் கைகளின் கிரியையையும், தங்கள் விரல்கள் உண்டு பண்ணினதையும் பணிந்து கொள்ளுகிறார்கள்.

ஏசா 2:9 சிறியவனும், குனிகிறான், பெரியவனும் பணிகிறான்; ஆகையால் அவர்களுக்கு மன்னியாதிருப்பீர்.

தீர்க்கதரிசன எண் - 4

"யாக்கோபின் வம்சத்தாராகிய உம்முடைய ஜனத்தைக் கைநெகிழ்ந்தீர்......." (ஏசா 2:6-21) ஏசா 2:6-9 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. ஏசா 2:10-21 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. யாக்கோபின் வம்சத்தாராகிய தம்முடைய ஜனத்தைக் கர்த்தர் கைநெகிழ்ந்தார். (ஏசா 2:6-9).

2. கீழ்த்திசையார்கள் அவர்களை சிறைப் பிடித்துச் செல்வார்கள். (ஏசா 2:6-9)

3. பாலஸ்தீன தேசத்தில் கீழ்த்திசையார்கள் நிறைந்திருப்பார்கள்.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. கர்த்தரின் பயங்கரத்திற்கும், அவருடைய மகிமைப்பிரதாபத்திற்கும் விலகி, கன்மலையில் ஒதுங்கி, மண்ணில் ஒளித்துக்கொள்வார்கள். (ஏசா 2:10,19,21; மத் 24:29-31). இது வெளி 6:12-17 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் ஆறாவது முத்திரையின்போது நடைபெறப் போகும் சம்பவமல்ல. இந்தச் சம்பவம் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு பல வருஷங்களுக்கு முன்பு நடைபெறும்.

2. நரரின் மேட்டிமையான கண்கள் தாழ்த்தப்படும் (ஏசா 2:11,17).

3. கர்த்தர் ஒருவரே அந்நாளில் உயர்ந்திருப்பார்.

4. எல்லாம் தாழ்த்தப்படும் பொருட்டு சேனைகளுடைய கர்த்தரின் நாளானது பெருமையும் மேட்டிமையுமானவை எல்லாவற்றின் மேலும் வரும். (ஏசா 2:12).

5. லீபனோனிலுள்ள உயரமும் ஓங்கலுமான எல்லாக் கேதுருக்களின் மேலும் நியாயத்தீர்ப்பு வரும். (ஏசா 2:13).

ஏசாயா - தொகுப்புரை

2 அதிகாரம்

6. உன்னதமான எல்லாப் பர்வதங்களின் மேலும், உயரமான எல்லா மலைகளின் மேலும் நியாயத்தீர்ப்பு வரும். (ஏசா 2:14).

7. உயர்ந்த எல்லாக் கோபுரத்தின் மேலும், அரணான எல்லா மதிலின் மேலும் நியாயத்தீர்ப்பு வரும். (ஏசா 2:15).

8. தர்ஷீசின் கப்பல்கள் எல்லாவற்றின்மேலும் நியாயத்தீர்ப்பு வரும். (ஏசா 2:16).

9. எல்லாச் சித்திர விநோதங்களின் மேலும் நியாயத்தீர்ப்பு வரும்.

10. விக்கிரகங்கள் கட்டோடே ஒழிந்துபோம். (ஏசா 2:18).

11. பூமியைத் தத்தளிக்கப்பண்ணக் கர்த்தர் எழும்புவார். (ஏசா 2:19-21; வெளி 16:17-21; வெளி 18:1-24).

12. பூமியைத் தத்தளிக்கப்பண்ணக் கர்த்தர் எழும்பும் அந்நாளிலே........தன் வெள்ளி விக்கிரகங்களையும், தன் பொன் விக்கிரகங்களையும், மூஞ்சூறுகளுக்கும்துரிஞ்சில்களுக்கும் எறிந்துவிடுவான். (ஏசா 2:20-21).

"யாக்கோபின் வம்சத்தாராகிய உம்முடைய ஜனத்தைக் கைநெகிழ்ந்தீர்" - இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைக் கைவிட்டுவிட்டார்கள் என்றால் கர்த்தரும் அவர்களைக் கைவிட்டு விடுவார். கர்த்தர் தம்முடைய வார்த்தையைக் காத்துக் கொள்வார். (உபா 31:17; 1நாளா 28:9; 2நாளா 15:2; 2தீமோ 2:12).

யூதா தேசத்தின் பாவங்கள்

1. அவர்கள் கீழ்த்திசையாரின் போதகத்தால் நிறைந்து, பெலிஸ்தரைப்போல் நாள் பார்க்கிறவர்களாயிருந்தார்கள். (ஏசா 2:6; லூக் 12:29)

2. அந்நிய புத்திரர்மேல் பிரியப்படுகிறார்கள். அந்நிய ஜாதியாரை விவாகம் பண்ணி, அநேகம் அந்நிய புத்திரரைப் பெற்றெடுத்தார்கள். (ஏசா 2:6; நெகே 13:23-24). செப்துவஜிந்த் பதிப்பில் "அவர்களுக்கு அநேகம் அந்நிய புத்திரர் பிறந்தார்கள்" **"many strange children were born to them"** என்று எழுதப்பட்டிருக்கிறது.

3. அவர்கள் தேசம் வெள்ளியினாலும் பொன்னினாலும் நிறைந்திருக்கிறது; அவர்கள் பொக்கிஷங்களுக்கு முடிவில்லை (ஏசா 2:7; 1இராஜா 10:26-29; 2நாளா 1:15).

4. அவர்கள் தேசம் குதிரைகளால் நிறைந்திருக்கிறது; அவர்கள் இரதங்களுக்கும் முடிவில்லை. (ஏசா 2:7; உபா 17:16-17; 2நாளா 1:16-17).

5. அவர்கள் தேசம் விக்கிரகங்களால் நிறைந்திருக்கிறது (ஏசா 2:8; 1இராஜா 21:26; 2இராஜா 17:12; 2இராஜா 21:11,21; 2இராஜா 23:24).

6. தங்கள் கைகளின் கிரியையையும், தங்கள் விரல்கள் உண்டு பண்ணினதையும் பணிந்து கொள்ளுகிறார்கள். (ஏசா 2:8).

7. சிறியவனும், குனிகிறான், பெரியவனும் பணிகிறான். எல்லோரும் விக்கிரகங்களை வழிபடுகிறார்கள். (ஏசா 2:9)

"அவர்கள் கீழ்த்திசையாரின் போதகத்தால் நிறைந்து" - கீழ்த்திசையாரிடம் அஞ்சனம் பார்ப்பது, நாள்பார்ப்பது போன்ற கிரியைகள் அதிகமாகக் காணப்பட்டது. அவர்களுடைய உபதேசங்களை யூதர்கள் பின்பற்றினார்கள். (ஏசா 2:6; லூக்கா 12:29)

கீழ்த்திசையாரின் பழக்கவழக்கங்கள்

1. மந்திரவித்தை **(Enchantments)** (யாத் 7:11,22; யாத் 8:7,18; லேவி 19:26; உபா 18:10; 2நாளா 33:6; 2இராஜா 17:17; 2இராஜா 21:6; ஏசா 47:9,12; எரே 27:9; தானி 1:20)

2 அதிகாரம்

2. சூனியம் (Witchcraft) (யாத் 22:18; உபா 18:10; 1சாமு 15:23; 2நாளா 33:6; 2இராஜா 9:22; மீகா 5:12; நாகூம் 3:4; கலா 5:19-21)

3. சூனியம் (Sorcery) (யாத் 7:11; ஏசா 47:9,12; ஏசா 57:3; எரே 27:9; தானி 2:2; மல் 3:5; அப் 8:9-11; அப் 13:6-8; வெளி 9:21; வெளி 18:23; வெளி 21:8; வெளி 22:15)

4. நாள்பார்த்தல் (Soothsaying) (ஏசா 2:6; தானி 2:27; தானி 4:7; தானி 5:7,11; மீகா 5:12)

5. குறிசொல்லுதல் (Divination) (எண் 22:7; எண் 23:23; உபா 18:10-14; 2இராஜா 17:17; 1சாமு 6:2; எரே 14:14; எரே 27:9; எரே 29:8; எசே 12:24; எசே 13:6-7,23; எசே 21:22-29; எசே 22:28; மீகா 3:7; சக 10:2; அப் 16:16)

6. சூனியம் (Wizardry) (யாத் 22:18; லேவி 19:31; லேவி 20:6,27; உபா 18:11; 1சாமு 28:3,9; 2இராஜா 21:6; 2இராஜா 23:24; 2நாளா 33:6; ஏசா 19:3)

7. செத்தவர்களிடத்தில் குறிகேட்டல் (Necromancy) (உபா 18:11; ஏசா 8:19; 1சாமு 28;1நாளா 10:13)

8. மந்திரவாதம் (Magic) (ஆதி 41:8,24; யாத் 7:11,22; யாத் 8:7, 18-19; யாத் 9:11; தானி 1:20; தானி 2:2,10,27; தானி 4:7,9; தானி 5:11; அப் 19:19)

9. சன்னதம் கூறுதல் (ஏவல் செய்தல்) (Charm) (உபா 18:11; ஏசா 19:3)

10. ஜோசியம் (Prognostication) (ஏசா 47:13)

11. ஜோசியம் (Observing times) (லேவி 19:26; லேவி 18:10; 2இராஜா 21:6; 2நாளா 33:6)

12. ஜாதகம் (Astrology and star gazing) (ஏசா 47:13; எரே 10:2; தானி 1:20; தானி 2:2,10; தானி 4:7; தானி 5:7-15)

(இ) கர்த்தரின் நாள் - (2:17-21; 34:8; எரே 46:10; எசே 13:5; 30:3; யோவே 1:15-3:14; ஆமோ 5:18; ஒப 15; செப் 1:7,8,18; 2:2-3; சக 14; மல் 4:5; 1தெச 5:2; 2தெச 2:1-12)

(i) கட்டாயமான தாழ்மை

ஏசா 2:10 கர்த்தரின் பயங்கரத்திற்கும், அவருடைய மகிமைப்பிரதாபத்திற்கும் விலகி, நீ கன்மலையில் ஒதுங்கி, மண்ணில் ஒளித்துக்கொள்.

ஏசா 2:11 நரரின் மேட்டிமையான கண்கள் தாழ்த்தப்படும், மனுஷரின் வீறாப்பும் தணியும்; கர்த்தர் ஒருவரே அந்நாளில் உயர்ந்திருப்பார்.

ஏசா 2:12 எல்லாம் தாழ்த்தப்படும் பொருட்டு சேனைகளுடைய கர்த்தரின் நாளானது பெருமையும் மேட்டிமையுமானவை எல்லாவற்றின் மேலும், உயர்ந்தவை எல்லாவற்றின் மேலும்,

ஏசா 2:13 லீபனோனிலுள்ள உயரமும் ஓங்கலுமான எல்லாக் கேதுருக்களின் மேலும், பாசானிலுள்ள எல்லாக் கர்வாலி மரங்களின்மேலும்,

ஏசா 2:14 உன்னதமான எல்லாப் பர்வதங்களின்மேலும், உயரமான எல்லா மலைகளின்மேலும்,

ஏசா 2:15 உயர்ந்த எல்லாக் கோபுரத்தின் மேலும், அரணான எல்லா மதிலின் மேலும்,

ஏசா 2:16 தர்ஷீசின் கப்பல்கள் எல்லாவற்றின்மேலும், எல்லாச் சித்திர விநோதங்களின்மேலும் வரும்.

ஏசா 2:17 அப்பொழுது நரரின் மேட்டிமை தாழ்ந்து, மனுஷரின் வீறாப்புத் தணியும், கர்த்தர் ஒருவரே அந்நாளில் உயர்ந்திருப்பார்.

2 அதிகாரம்

"மனுஷரின் வீறாப்பும் தணியும்" - ஏசா 2:6-9 ஆகிய வசனங்களில் யூதா ஜனத்தார் விக்கிரகங்களைத் தாங்களாகவே பணிந்து கொண்டார்கள் என்று கூறப் பட்டிருக்கிறது. ஏசா 2:10-21 ஆகிய வசனங்களில் அவர்கள் கர்த்தருக்கு முன்பாகப் பணிந்து கொள்ளுமாறு கட்டாயப்படுத்தப் படுவார்கள். இந்த நிகழ்ச்சி "கர்த்தருடைய நாளில்" **"day of the Lord"** (ஏசா 2:12) நடைபெறும்.

"அந்நாளில்" - ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் "அந்நாளில்" என்பது கர்த்தருடைய நாளைக் குறிக்கும். இந்தப் புஸ்தகத்தில் மட்டும் 43 தடவைகள் இந்த வார்த்தை பயன்படுத்தப் பட்டிருக்கிறது. மற்ற தீர்க்கதரிசிகளின் புஸ்தகத்தில் இந்த வார்த்தை 35 தடவைகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. ஏசாயா கூறியிருக்கும் தீர்க்கதரிசனங்களில் பல கர்த்தருடைய நாளில் நிறைவேறும். (ஏசா 2:11,12,17,20)

"கர்த்தரின் நாளானது" - தம்முடைய ராஜ்யத்தை இந்தப் பூமியில் ஸ்தாபிப்பதற்காக இயேசு கிறிஸ்து வரும் நாளே கர்த்தருடைய நாளாகும். இது ஆயிரம் வருஷ அரசாட்சியாகும். இக்காலத்தில் கர்த்தர் பூமியில் ஆளுகை செய்வார்.

"லீபனோனிலுள்ள உயரமும் ஓங்கலுமான எல்லாக் கேதுருக்களின் மேலும்" - கேதுரு மரங்கள், கர்வாலி மரங்கள், தர்ஷீசின் கப்பல்கள் ஆகியவை எல்லாமே பெரியவை. ஆனால் அவை அனைத்தும் அஸ்திபாரமற்றவை இவை அனைத்துமே உபத்திரவக்காலத்தில் அழிந்துபோகும். (வெளி 6:12-17; வெளி 8:7-11; வெளி 16:3,8,12,17-21).

"தர்ஷீசின் கப்பல்கள்" - (ஏசா 2:16; ஏசா 23:1-14; ஏசா 60:9; ஏசா 66:19; 2நாளா 9:21; 2நாளா 20:36-37; சங் 48:7; சங் 72:10; எரே 10:9; எசே 26:12,25; எசே 38:13; யோனா 1:3).

"சித்திர விநோதங்கள்" - பூமியிலுள்ள கலைப் பொக்கிஷங்கள்.

"கர்த்தர் ஒருவரே அந்நாளில் உயர்ந்திருப்பார்" - இந்தச் செய்தியை வலியுறுத்துவதற்காக இந்த வாக்கியம் இங்கு மறுபடியும் கூறப்பட்டிருக்கிறது. (ஏசா 2:11,17).

(ii) விக்கிரகாராதனையின் அழிப்பு

ஏசா 2:18 விக்கிரகங்கள் கட்டோடே ஒழிந்துபோம்.

ஏசா 2:19 பூமியைத் தத்தளிக்கப் பண்ணக் கர்த்தர் எழும்பும்போது, அவருடைய பயங்கரத்திற்கும், அவருடைய மகிமைப்பிரதாபத்திற்கும் விலகி, கன்மலைகளின் கெபிகளிலும், பூமியின் குகைகளிலும் புகுந்துகொள்வார்கள்.

ஏசா 2:20 பூமியைத் தத்தளிக்கப் பண்ணக் கர்த்தர் எழும்பும் அந்நாளிலே, அவருடைய பயங்கரத்திற்கும், அவருடைய மகிமைப் பிரதாபத்திற்கும் விலகி, கன்மலைகளின் வெடிப்புகளிலும் குன்றுகளின் சந்துகளிலும் புகுந்துகொள்ளும்படிக்கு,

ஏசா 2:21 மனுஷன் பணிந்துகொள்ளத் தனக்கு உண்டாக்கியிருந்த தன் வெள்ளி விக்கிரகங்களையும், தன் பொன் விக்கிரகங்களையும், மூஞ்சூறுகளுக்கும் துரிஞ்சில்களுக்கும் எறிந்துவிடுவான்.

"பூமியைத் தத்தளிக்கப்பண்ண" - இயேசு கிறிஸ்து தம்முடைய இரண்டாம் வருகையின் போது பூமியைத் தத்தளிக்கப்பண்ணுவார். இந்தச் செய்தி மறுபடியும் இங்கு கூறப்பட்டு வலியுறுத்தப்படுகிறது. (ஏசா 2:19,21) வேதாகமத்திலுள்ள பல வசனங்களில் பூமியின் தத்தளிப்பைப் பற்றி விவரிக்கப்பட்டிருக்கிறது. (ஏசா 2:19-21; ஏசா 24:18-20; எசே 38:17-23; சக 14:1-5; லூக்கா 21:25-28; வெளி 16:17-21). அக்கினியினால் வானமும், பூமியும் ஆயிரம் வருஷ அரசாட்சிக்குப் பின்பு புதுப்பிக்கப்படும். (எபி 1:10-12;எபி 12:25-28; 2பேதுரு 3:10-13).

2 அதிகாரம்

"கன்மலைகளின் கெபிகளிலும், பூமியின் குகைகளிலும் புகுந்துகொள்வார்கள்" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஏழு வருஷங்களுக்கு முன்பு, ஆறாம் முத்திரை உடைக்கப்படும். அப்போது ஜனங்கள் இதுபோல கன்மலைகளின் கெபிகளிலும், பூமியின் குகைகளிலும் ஒழிந்து கொள்வார்கள். (வெளி 6:12-17) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது பூமியதிர்ச்சி அதிகமாக இருக்கும். பட்டணங்கள் இடிந்து விழும். பாபிலோன் அழிக்கப்படும். எருசலேம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படும். ஒலிவ மலை அகன்றுபோகும். இவையெல்லாம் நடைபெறும் போது பூமியிலுள்ள ஜனங்கள் நிச்சயமாகவே கர்த்தருடைய பயங்கரத்திற்கும், அவருடைய மகிமைப் பிரதாபத்திற்கும் விலகி, கன்மலைகளின் கெபிகளிலும், பூமியின் குகைகளிலும் புகுந்துகொள்வார்கள். (சக 14:1-5; வெளி 11:13; வெளி 16:17-21; வெளி 18:1-24).

மனுஷர் தங்களை ஒழித்துக் கொள்வதற்குக் காரணம்

1. கர்த்தரின் பயங்கரம். (ஏசா 2:10,19)
2. கர்த்தருடைய மகிமைப்பிரதாபம் (ஏசா 2:10,19)

இயேசு கிறிஸ்து தம்முடைய பரிசுத்த தூதரோடும், வானத்தின் சேனைகளோடும் இந்தப் பூமிக்கு வரும்போது இங்கு மகா பயங்கரமான காரியங்கள் நடைபெறும். பூமி தத்தளிக்கும். (சக 14:1-5; மாற்கு 16:27; மாற்கு 24:29-31; மாற்கு 25:31-46; மாற்கு 26:64; 2தெச 1:7-10; யூதா 1:14-15; வெளி 1:7; வெளி 11:15; வெளி 19:11-21).

"அந்நாளிலே" - கர்த்தருடைய நாளிலே. (ஏசா 2:20=ஏசா 2:11,12,17)

"மனுஷன் பணிந்துகொள்ளத் தனக்கு உண்டாக்கியிருந்த தன் வெள்ளி விக்கிரகங்களை...... எறிந்துவிடுவான்" - கர்த்தருடைய வருகையின்போது ஜனங்கள் மத்தியிலே பயமும், குழப்பமும் உண்டாகும். அவர்கள் கர்த்தருக்குப் பயந்து தங்களுடைய எல்லா விக்கிரகங்களையும் எறிந்து விடுவார்கள். ஜனங்கள் கர்த்தருடைய சமுகத்திலிருந்து மறைந்து கொள்வதற்காக மறைவிடத்தைத் தேடி ஓடி ஒளிந்து கொள்வார்கள். (ஏசா 2:20-21; வெளி 16:17-21).

"மூஞ்சூறுகள்" **(moles)** - (லேவி 11:30).

"துரிஞ்சில்கள்" **(bats)** - தங்களுக்கு மிகவும் முக்கியமானவையாகத் தெரிந்த அனைத்தையும் ஜனங்கள் தூரத்தில் எறிந்துவிடுகிறார்கள். கர்த்தர் மறுபடியும் பூமிக்கு வரும்போது அவர் அக்கிரமக்காரரைத் தண்டிப்பார். விக்கிரகாராதனை கர்த்தருக்கு விரோதமான பாவம். இந்தத் துரிஞ்சில்கள் பொன்னால் செய்யப்பட்டிருந்த போதிலும் கர்த்தருடைய பார்வைக்கு இவை அருவருப்பானவை.

(ஈ) சிட்சையைத் தவிர்க்கும் வாய்ப்பு

ஏசா 2:22 நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை நம்புவதை விட்டுவிடுங்கள்; எண்ணப்படுவதற்கு அவன் எம்மாத்திரம்.

"நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை நம்புவதை விட்டுவிடுங்கள்" - கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வரும்போது அவருடைய கோபாக்கினையிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டுமென்றால் ஜனங்கள் கர்த்தரையே நம்ப வேண்டும். மனுஷரை நம்புவதை விட்டுவிட வேண்டும். அவர்கள் கர்த்தரின் வெளிச்சத்தில் நடக்க வேண்டும். (ஏசா 2:5) ஏசாயா 2 ஆவது அதிகாரத்தில் உடனடி நியாயத்தீர்ப்பைப் பற்றியும், (ஏசா 2:6-9) கர்த்தருடைய நாளில் நடைபெறும் வருங்காலத்து நியாயத்தீர்ப்பைப் பற்றியும் (ஏசா 2:10-21) ஏசாயா விவரித்துக் கூறுகிறார்.

இந்த இரண்டாவது கட்டளைக்குப் பின்பு ஏசாயா மறுபடியும் உடனடியாக நிறைவேறப் போகும் நியாயத்தீர்ப்புக்களைப் பற்றியும், (ஏசா 3:6-9) கர்த்தருடைய நாளில் வருங்காலத்தில் நிறைவேறப்போதும் நியாயத் தீர்ப்புக்களைப் பற்றியும் (ஏசா 3:16-4:6) விவரித்துக் கூறுகிறார். (ஏசா 2:5)

யூதா ஜனங்கள் மனுஷரை நம்புவதை விட்டுவிட வேண்டும். (ஏசா 2:22) அவர்கள் மனுஷரை நம்பினால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்களுக்கு வரும். (ஏசா 3:1-15).

3 அதிகாரம்

(உ) உடனடியான நியாயத்தீர்ப்பு - பாபிலோனால் ஏற்படும் அழிவின் இருபது அம்சங்கள்

ஏசா 3:1 இதோ, சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் எருசலேமிலிருந்தும் யூதாவிலிருந்தும் சகலவிதமான ஆதரவுகளாகிய அப்பமென்கிற எல்லா ஆதரவையும், தண்ணீரென்கிறஎல்லா ஆதரவையும்;

ஏசா 3:2 பராக்கிரமசாலியையும், யுத்தவீரனையும், நியாயாதிபதியையும், தீர்க்கதரிசியையும், சாஸ்திரியையும், மூப்பனையும்;

ஏசா 3:3 ஐம்பதுபேருக்கு அதிபதியையும், கனம் பொருந்தினவனையும், ஆலோசனைக் காரனையும், தொழில்களில் சமர்த்திய முள்ளவனையும், சாதுரியனையும் விலக்குவார்.

ஏசா 3:4 வாலிபரே அவர்களுக்கு அதிபதிகளாகத் தருவேன் என்றார்; பிள்ளைகள் அவர்களை ஆளுவார்கள்.

ஏசா 3:5 ஜனங்கள் ஒடுக்கப்படுவார்கள்; ஒருவருக் கொருவரும், அயலானுக்கு அயலானும் விரோதமாயிருப்பார்கள்; வாலிபன் முதிர்வயதுள்ளவனுக்கும், கீழ்மகன் மேன்மகனுக்கும் இடும்பு செய்வான்.

ஏசா 3:6 அப்பொழுது ஒருவன் தன் தகப்பன் வீட்டானாகிய தன் சகோதரனைப் பிடித்து: உனக்கு வஸ்திரம் இருக்கிறது, நீ எங்களுக்கு அதிபதியாயிரு; கேட்டுக்கு இனமான இந்தக் காரியம் உன் கையின் கீழாவதாக என்று சொல்ல;

ஏசா 3:7 அவன் அந்நாளிலே தன் கையை உயர்த்தி: நான் சீர்ப்படுத்துகிறவனாயிருக்கமாட்டேன்; என் வீட்டிலே அப்பமுமில்லை, வஸ்திரமுமில்லை; என்னை ஜனங்களுக்கு அதிபதியாக வைக்க வேண்டாம் என்பான்.

தீர்க்கதரிசன எண் - 5

"இதோ, சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் எருசலேமிலிருந்தும் யூதாவிலி ருந்தும்........" (ஏசா 3:1-4:6) ஏசா 3:1-15 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. ஏசா 3:16-4:6 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. யூதாவின்மீதும், எருசலேமின்மீதும் பஞ்சம். (ஏசா 3:1)
2. ராஜாக்களும், அதிபதிகளும் யூதாவிலிருந்து பாபிலோனுக்குச் சிறைப்பிடிக்கப் பட்டுப் போய்விட்டதினால் ஜனங்களை ஆளுகை செய்வதற்குத் தகுதியான ஆட்கள் ஒருவரும் இல்லை. (ஏசா 3:2-4,12; 2இராஜா 24:14) யோசியாவின் மரணத்திலிருந்து பாபிலோனிய சிறையிருப்பு வரையிலும் யூதாவின் தலைவர்கள் பல வீனமானவர்களாகவும், துன்மார்க்க மானவர்களாகவும் இருந்தார்கள். (2இராஜா 23:21-24:18)
3. ஜனங்கள் ஒடுக்கப்படுவார்கள் (ஏசா 3:5,12)
4. வாலிபன் முதிர்வயதுள்ளவனுக்கும், கீழ்மகன் மேன்மகனுக்கும் இடும்பு செய்வான். (ஏசா 3:5)
5. யூதா தேசம் அழிந்துபோகும். ஆகையினால் ஒருவனும் தன்னை ஜனங்களுக்கு அதிபதியாக வைக்கவேண்டாம் என்பான். (ஏசா 3:6-7)
6. எருசலேம் பாழாக்கப்பட்டது, யூதா விழுந்துபோயிற்று (ஏசா 3:8-9; 2இராஜா 21:1-24:20; எரே 23:10-11; எசே 16:20-29; எசே 18:1-32)
7. யூதா, எருசலேம் ஆகியவை அழியும்போது நீதிமான்கள் பாதுகாக்கப் படுவார்கள். ஆசீர்வதிக்கப் படுவார்கள். (ஏசா 3:10, ஏசா 1:9; எரே 29:11-18; எசே 9:1-6; தானி 1:1-21)

3 அதிகாரம்

8. யூதா, எருசலேம் ஆகியவை அழியும்போது துன்மார்க்கர் அழிந்து போவார்கள். (2இராஜா 25:7; எரே 38:2-3; எரே 39:5-8)

9. கர்த்தர் தமது ஜனத்தின் மூப்பரை நியாயம் விசாரிப்பார். (ஏசா 3:14)

10. கர்த்தர் தமது ஜனத்தின் பிரபுக்களை நியாயம் விசாரிப்பார்.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. சீயோன் குமாரத்திகளின் அகந்தையின் நிமித்தம் அவர்கள்மீது நியாயத்தீர்ப்பு. (ஏசா 3:16-17)

2. அவர்களுடைய அலங்கார வஸ்திரங்கள், ஆபரணங்கள் ஆகியவற்றின் நிமித்தம் அவர்கள்மீது நியாயத்தீர்ப்பு (ஏசா 3:18-23)

3. அவர்களுடைய ஆடம்பரங்கள் ஆசீர்வதிக்கப்படாமல் சபிக்கப்படும். (ஏசா 3:23)

4. புருஷர்கள் யுத்தத்தில் விழுவார்கள். (ஏசா 3:25)

5. யுத்தத்தின் அழிவிற்காகப் புலம்பலும், துக்கிப்பும் உண்டாகும். (ஏசா 3:26)

6. வருங்காலத்து உபத்திரஹ்க் காலத்திற்குப் பின்பு, யூதரில் மூன்றில் இரண்டு பங்கு மனுஷர் அழிக்கப்படுவார்கள். (சக 13:8-9) மனுஷர் மத்தியிலே புருஷருக்குப் பஞ்சம் உண்டாகும். அந்நாளில் ஏழு ஸ்திரீகள் ஒரே புருஷனைப் பிடித்துக் கொள்வார்கள். (ஏசா 4:1)

7. இஸ்ரவேலில் தப்பினவர்களுக்கு அந்நாளிலே கர்த்தரின் கிளை அலங்காரமும் மகிமையுமாயிருக்கும் (ஏசா 4:2; ஏசா 11:1; எரே 23:5; எரே 33:15; சக 3:8; சக 6:12).

8. பூமியின் கனி அவர்களுக்குச் சிறப்பும் அலங்காரமுமாயிருக்கும். (ஏசா 4:2; ஏசா 35:1-7; ஏசா 58:11-12; யோவே 2:21-27).

9. அர்மகெதோன் யுத்தத்திலும் வருங்காலத்து உபத்திரவக்காலத்திலும் இஸ்ரவேலில் ஒருசிலர் அழிந்து போகாமல் மீதியாயிருப்பார்கள். (ஏசா 4:2-3; சக 13:8-9; சக 14:14; மத் 24:31; மத் 25:31-46).

10. ஆண்டவர், சீயோன் குமாரத்திகளின் அழுக்கை நியாயத்தின் ஆவியினாலும், சுட்டெரிப்பின் ஆவியினாலும் கழுவுவார். (ஏசா 4:3; சக 12:10-13:1,8-9).

11. எருசலேமின் இரத்தப்பழிகளை அதின் நடுவிலிருந்து நீக்கிவிடுவார். (ஏசா 4:5; எரே 30:6-7; சக 13:8-9; மல் 3:2-3; ரோமர் 11:25-29).

12. சீயோனில் மீதியாயிருந்து, எருசலேமில் தரித்திருந்து ஜீவனுக்கென்று பேரெழுதப் பட்டவனெவனும் பரிசுத்தனென்று சொல்லப்படுவான். (ஏசா 4:4; ஏசா 59:20-21; சக 12:10-13:1; மத் 23:37-39; ரோமர் 11:25-29).

13. கர்த்தர் சீயோன் மலையிலுள்ள எல்லா வாசஸ்தலங்களிலும், பகலில் மேகத்தையும் புகையையும் இரவில் கொழுந்துவிட்டு எரியும் அக்கினிப் பிரகாசத்தை உண்டாக்குவார்; (ஏசா 4:5; சக 2:5. யாத் 13:21; யாத் 40:38).

14. எருசலேமிலுள்ள இஸ்ரவேலின் சபைகளின்மேலும் பகலில் மேகத்தையும் புகையையும் இரவில் கொழுந்துவிட்டு எரியும் அக்கினிப் பிரகாசத்தை உண்டாக்குவார் (ஏசா 4:5; சக 2:5, யாத் 13:21; யாத் 40:38).

15. பகலிலே வெயிலுக்கு நிழலாகவும், பெருங்காற்றுக்கும் மழைக்கும் அடைக்கலமாகவும், மறைவிடமாகவும், ஒரு கூடாரம் உண்டாயிருக்கும். (ஏசா 4:6).

3 அதிகாரம்

யூதாவில் நியாயந்தீர்க்கப்படுகிறவர்கள்

1. பராக்கிரமசாலி
2. யுத்தவீரன்
3. நியாயாதிபதி
4. தீர்க்கதரிசி
5. சாஸ்திரி
6. மூப்பன்
7. ஐம்பதுபேருக்கு அதிபதி
8. கனம்பொருந்தினவன்
9. ஆலோசனைக்காரன்
10. தொழில்களில் சமர்த்தியமுள்ளவன்
11. சாதுரியன்
12. பிள்ளைகள்
13. வாலிபர்
14. ஜனங்கள்

"அவன் அந்நாளிலே தன் கையை உயர்த்தி" - அந்நாளிலே என்பது பாபிலோன் மூலமாக யூதாவிற்கு நியாயத்தீர்ப்பு வரும் நாளாகும். இந்த நாளும் ஏசா 2:11,17,20 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் நாளும் ஒன்றல்ல.

"சீர்ப்படுத்துகிறவன்" (healer) - பாபிலோனால் யூதா சீரழிந்துபோகும். அதை மறுபடியும் சீர்ப்படுத்துவது மிகவும் கடினம். யூதாவைச் சீர்ப்படுத்த முடியும் என்று யாராலும் சொல்ல முடியாது. அந்த அளவிற்கு யூதா சீரழிந்திருக்கும்.

பாபிலோன் யூதாவை அழிக்கும் சம்பவம்

1. அப்பமென்கிற எல்லா ஆதரவும் விலகும். (ஏசா 3:1)
2. தண்ணீரென்கிற எல்லா ஆதரவு விலகும்.
3. ஏசா 3:2-5 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறவர்கள் அனைவரும் நியாயந்தீர்க்கப்படுவார்கள்.
4. சிறுபிள்ளைகள் தேசத்தை ஆளுகை செய்வார்கள்.
5. ஒருவருக்கொருவரும், அயலானுக்கு அயலானும் விரோதமாயிருப்பார்கள் (ஏசா 3:5)
6. வாலிபன் முதிர்வயதுள்ளவனுக்கு இடும்பு செய்வான். (ஏசா 3:5)
7. கீழ்மகன் மேன்மகனுக்கு இடும்பு செய்வான்.
8. யூதாவின் அழிவுக்கு ஒருவனும் பொறுப்பேற்கமாட்டான். (ஏசா 3:6)
9. தேசம் இரட்சிக்கக்கூடாதபடிக்கு அழிந்துபோயிருக்கும். (ஏசா 3:7)
10. மற்றவர்களுக்கு உதவி புரிய முடியாத அளவிற்கு ஜனங்கள் ஏழைகளாக இருப்பார்கள்.

(ஊ) அழிவின் நான்கு அம்ச காரணங்கள் - (1:21)

ஏசா 3:8 ஏனென்றால் எருசலேம் பாழாக்கப்பட்டது, யூதா விழுந்து போயிற்று; அவர்கள் நாவும், அவர்கள் கிரியைகளும், கர்த்தருடைய மகிமையின் கண்களுக்கு எரிச்சல் உண்டாக்கத்தக்கதாக அவருக்கு விரோதமாயிருக்கிறது.

ஏசா 3:9 அவர்கள் முகப்பார்வை அவர்களுக்கு விரோதமாய்ச் சாட்சியிடும்; அவர்கள் தங்கள் பாவத்தை மறைக்காமல், சோதோம் ஊராரைப்போல வெளிப் படுத்துகிறார்கள்; அவர்கள் ஆத்துமாவுக்கு ஐயோ! தங்களுக்கே தீமையே வருவித்துக் கொள்ளுகிறார்கள்.

3 அதிகாரம்

யூதாவின் அழிவிற்குக் காரணம்

1. அவர்கள் நாவு கர்த்தருக்கு விரோதமாக இருந்தது.
2. அவர்கள் கிரியைகள் கர்த்தருக்கு விரோதமாக இருந்தது.
3. அவர்கள் முகப்பார்வை கர்த்தருக்கு விரோதமாக இருந்தது. (ஏசா 3:9)
4. அவர்கள் தங்கள் பாவத்தை மறைக்காமல் வெளிப்படுத்தினார்கள்.

(எ) யூதாவின் ஆறு வகுப்புக்கள் - (3:10-26)

(i) நீதிமான்கள் - ஆசீர்வாதம்

ஏசா 3:10 உங்களுக்கு நன்மையுண்டாகும் என்று நீதிமான்களுக்குச் சொல்லுங்கள்; அவர்கள் தங்கள் கிரியைகளின் பலனை அநுபவிப்பார்கள்.

(ii) துன்மார்க்கர் - சாபம்

ஏசா 3:11 துன்மார்க்கனுக்கு ஐயோ! அவனுக்குக் கேடு உண்டாகும்; அவன் கைகளின் பலன் அவனுக்குக் கிடைக்கும்.

ஏசாயா புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் "ஐயோ"க்கள்

1. ஆண்புணர்ச்சிக்காரருக்கு (ஏசா 3:9)
2. துன்மார்க்கனுக்கு (ஏசா 3:11)
3. பேராசைக்காரனுக்கு (ஏசா 5:8)
4. மதுபானப்பிரியனுக்கு (ஏசா 5:11)
5. பாவத்தைச் சேமித்து வைக்கிறவருக்கு (ஏசா 5:19)
6. தீமையை நன்மை என்று சொல்லுகிறவருக்கு (ஏசா 5:20)
7. தங்கள் பார்வைக்கு ஞானிகளாக இருப்பவர்களுக்கு (ஏசா 5:21)
8. பரிதானத்திற்காகக் குற்றவாளியை நீதிமானாகத் தீர்க்கிறவனுக்கு (ஏசா 5:22-23)
9. நீதிமானின் நியாயத்தை அவனுக்கு விரோதமாகப் புரட்டுகிறவனுக்கு
10. கர்த்தருக்கும், அவருடைய ஜனங்களுக்கும் விரோதமாக யுத்தம் பண்ணுகிறவர்களுக்கு (ஏசா 17:12-14)
11. கடல்வழியாய் தண்ணீர்களின்மேல் நாணல் படவுகளிலே ஸ்தானாபதிகளை அனுப்புகிற தேசத்திற்கு. (ஏசா 18:1-7)
12. எப்பிராயீமுடைய வெறியரின் பெருமையான கிரீடத்திற்கு. (ஏசா 28:1)
13. பாவத்தின் நிமித்தம் எருசலேமிற்கு. (ஏசா 29:1)
14. வஞ்சிக்கிறவர்களுக்கு (ஏசா 29:15)
15. கலகம்பண்ணுகிற பிள்ளைகளுக்கு (ஏசா 30:1)
16. எகிப்தை நம்புகிறவர்களுக்கு (ஏசா 31:1)
17. அசீரியாவிற்கு. (ஏசா 33:1)
18. கர்த்தருக்கு எதிராக வழக்காடுகிறவர்களுக்கு (ஏசா 45:9)
19. பெற்றோரை மதிக்காதவர்களுக்கு (ஏசா 45:10)

(iii) ஜனங்கள் - ஒடுக்கப்பட்டவர்கள்

ஏசா 3:12 பிள்ளைகள் என் ஜனங்களை ஒடுக்குகிறவர் களாயிருக்கிறார்கள்; ஸ்திரீகள் அவர்களை ஆளுகிறார்கள். என் ஜனமே, உன்னை நடத்துகிறவர்கள் உன்னை மோசம்போக்கி, நீ நடக்க வேண்டிய வழியை அழித்துப் போடுகிறார்கள்.

3 அதிகாரம்

ஏசா 3:13 கர்த்தர் வழக்காட எழுந்திருந்து, ஜனங்களை நியாயந்தீர்க்க நிற்கிறார்.

"பிள்ளைகள் என் ஜனங்களை ஒடுக்குகிறவர்களாயிருக்கிறார்கள்" - யூதா தன்னுடைய பாவத்தில் நிறைந்திருக்கிறது. யூதாவின் அழிவும், பலவீனமும் மிகுதியாயிருக்கிறது. ஸ்திரீகளும், பிள்ளைகளும் பலவீனமானவர்களாகவும், திறமையற்ற ஆட்சியாளர்களாகவும் இங்கு குறிப்பிடப் பட்டிருக்கிறார்கள். ஒருவேளை ராஜாக்களுக்கு அதிகாரம் இல்லாமல் அவர்களுடைய அந்தப்புரங்களிலுள்ள ஸ்திரீகளுக்கு அதிகாரம் கிடைத்திருக்கலாம்.

"உன்னை நடத்துகிறவர்கள் உன்னை மோசம்போக்கி, நீ நடக்க வேண்டிய வழியை அழித்துப்போடுகிறார்கள்" - யூதாவிலுள்ள தீர்க்கதரிசிகளும், போதகர்களும் பாவத்தில் ஜீவிக்கிறார்கள். ஜனங்களை வஞ்சிக்கிறார்கள். ஜனங்கள் பாவம் செய்தாலும் அவர்களுக்குக் கர்த்தருடைய பாதுகாப்பு உண்டு என்று பொய்யாக உபதேசம் பண்ணுகிறார்கள். (ஏசா 9:15; ஏசா 28:7; எரே 6:10; எரே 8:10; எரே 14:18; எரே 23:11) ஆனால் கர்த்தரோ தம்முடைய ஜனம் பாவம் செய்யும்போது அவர்களையும் நியாயந்தீர்ப்பதாக வாக்குப் பண்ணியிருக்கிறார். (ஏசா 3:13-15).

(iv) ஆட்சி புரிபவர்கள் - ஒடுக்குகிறவர்கள்

ஏசா 3:14 கர்த்தர் தமது ஜனத்தின் மூப்பரையும், அதின் பிரபுக்களையும் நியாயம் விசாரிப்பார். நீங்களே இந்தத் திராட்சத்தோட்டத்தைப் பட்சித்துப் போட்டீர்கள்; சிறுமையானவனிடத்தில் கொள்ளையிட்ட பொருள் உங்கள் வீடுகளில் இருக்கிறது.

ஏசா 3:15 நீங்கள் என் ஜனத்தை நொறுக்கிச் சிறுமையானவர்களின் முகத்தை நெரிக்கிறது என்னவென்று சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.

(v) குமாரத்திகள் - நியாயம் தீர்க்கப் படுகிறவர்கள்

ஏசா 3:16 பின்னும் கர்த்தர் சொல்லுகிறதாவது: சீயோன் குமாரத்திகள் அகந்தையாயிருந்து, கழுத்து நெறித்து நடந்து, கண்களால் மருட்டிப் பார்த்து, ஒய்யாரமாய் நடந்து, தங்கள் கால்களில் சிலம்பு ஒலிக்கத் திரிகிறார்கள்.

ஏசா 3:17 ஆதலால் ஆண்டவர் சீயோன் குமாரத்திகளின் உச்சந்தலையை மொட்டையாக்குவார்; கர்த்தர் அவர்கள் மானத்தைக் குலைப்பார்.

ஏசா 3:18 அந்நாளிலே ஆண்டவர் அவர்களுடைய ஆபரணங்களாகிய சிலம்புகளையும், சுட்டிகளையும், பிறைச்சிந்தாக்குகளையும்,

ஏசா 3:19 ஆரங்களையும், அஸ்தகடகங்களையும், தலை முக்காடுகளையும்,

ஏசா 3:20 சிரபூஷணங்களையும், பாதசரங்களையும், மார்க்கச்சைகளையும், சுகந்த பரணிகளையும்,

ஏசா 3:21 தாயித்துகளையும், மோதிரங்களையும், மூக்குத்திகளையும்,

ஏசா 3:22 விநோத வஸ்திரங்களையும், சால்வைகளையும், போர்வைகளையும், குப்பிகளையும்,

ஏசா 3:23 கண்ணாடிகளையும், சல்லாக்களையும், குல்லாக்களையும், துப்பட்டாக்களையும் உரிந்துபோடுவார்.

ஏசா 3:24 அப்பொழுது, சுகந்தத்துக்குப் பதிலாகத் துர்க்கந்தமும், கச்சைக்குப் பதிலாகக் கயிறும், மயிர்ச்சுருளுக்குப் பதிலாக மொட்டையும், ஆடம்பரமான வஸ்திரங்களுக்குப் பதிலாக இரட்டுக்கச்சும், அழகுக்குப் பதிலாகக் கருகிப்போகுதலும் இருக்கும்.

3 அதிகாரம்

கர்த்தர் ஸ்திரீகளிடத்தில் வெறுக்கும் காரியங்கள்

1. அகந்தை (ஏசா 3:16; ஏசா 10:33; நீதி 6:17; நீதி 18:12; எசே 16:50; செப் 3:11).
2. கழுத்து நெறித்து நடப்பது. (ஏசா 3:16; நெகே 9:16; நீதி 75:5).
3. கண்களால் மருட்டிப் பார்த்து நடப்பது. (ஏசா 3:1)
4. ஒய்யாரமாய் நடப்பது. (ஏசா 3:16)
5. தங்கள் கால்களில் சிலம்பு ஒலிக்கத் திரிவது. (ஏசா 3:16)

மருட்டிப்பார் (to lie) - שָׁקַר - saq-ar - **8265**

வினைச்சொல் - மருட்டிப்பார் (, நீதி 6:13; நீதி 10:10, 1தீமோ 2:9)

சீயோன் குமாரத்திகள் கர்த்தருக்குப் பயந்து ஜீவிக்க வேண்டும். கர்த்தருக்கு அருவருப்பாக ஜீவிப்போருக்கு தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும். (ஏசா 3:17-24)

ஸ்திரீகள்மீது நியாயத்தீர்ப்புக்கள்

1. உச்சந்தலையை மொட்டையாக்குவார். (ஏசா 3:17)
2. அவர்கள் மானத்தைக் குலைப்பார். (ஏசா 3:17)
3. அவர்களுடைய அலங்கார ஆடை ஆபரணங்களை உரிந்துபோடுவார். (ஏசா 3:18-23)
4. சுகந்தத்துக்குப் பதிலாகத் துர்க்கந்தம் அவர்கள்மீது இருக்கும். (ஏசா 3:24)
5. அவர்களுக்கு கச்சைக்குப் பதிலாகக் கயிறு இருக்கும்.
6. அவர்களுக்கு மயிர்ச்சுருளுக்குப் பதிலாக மொட்டை இருக்கும்.
7. அவர்களுக்கு ஆடம்பரமான வஸ்திரங்களுக்குப் பதிலாக இரட்டுக்கச்சு இருக்கும்.
8. அவர்களுக்கு அழகுக்குப் பதிலாகக் கருகிப்போகுதல் இருக்கும்.

"உச்சந்தலையை மொட்டையாக்குவார்" - தலையில் பேன், பொடுகு போன்றவற்றினால் தலைமுடி கொட்டி, மொட்டையாவதை இந்த வாக்கியம் குறிக்கும். மேலும் யுத்தத்தில் தோல்வியுறும்போது இவர்களுடைய தலைகள் மொட்டையடிக்கப்படுவதையும் இந்த வாக்கியம் குறிக்கும். (ஏசா 3:25-26) இவர்களுடைய புருஷர்கள் யுத்தத்தில் மடிந்து போவதினால் இவர்களுடைய தலைகள் மொட்டையடிக்கப்பட்டு அடிமைகளாக இழுத்துச் செல்லப்படுவார்கள். ஸ்திரீகளுக்கு அவர்களுடைய தலைமுடி அழகானது. அதை மொட்டையடிப்பது என்பது அவர்களை அவமானப்படுத்துவதற்குச் சமம். (1கொரி 11:15)

"அவர்கள் மானத்தைக் குலைப்பார்" - ஸ்திரீகளுக்கு அவர்களுடைய சரீரங்களை மறைப்பதற்குப் போதுமான அளவு வஸ்திரங்கள் கொடுக்கப்படமாட்டாது. அவர்கள் அவமானப்படுத்தப்படுவார்கள். அர்மெகதோன் யுத்தத்தில் ஸ்திரீகளுக்கு இதுபோன்ற நிலைமை உண்டாகும் என்று சகரியா தீர்க்கதரிசி கூறியிருக்கிறார். (சக 14:1-5)

"அந்நாளிலே" - இது கர்த்தருடைய நாளைக் குறிக்கும். (ஏசா 4:1-6).

கர்த்தர் உரிந்துபோடும் ஆபரணங்கள்

1. சிலம்புகள் (ஏசா 3:18)
2. சுட்டிகள் (ஏசா 3:18)
3. பிறைச்சிந்தாக்குகள் (ஏசா 3:18; நியா 8:21).
4. ஆரங்கள் (ஏசா 3:18, ஆதி 41:42; யாத்28:14-22,24; யாத் 39:17-18; எண் 31:50; உன் 1:10; உன் 4:9; எசே 16:11; தானி 5:7,16,29)

3 அதிகாரம்

5. அஸ்தகடகங்கள் (ஏசா 3:19; ஆதி 24:22,30,47; ஆதி 38:19,25; யாத் 35:22; எண் 31:50; எசே 16:11; எசே 23:42).

6. தலைமுக்காடுகள் (ஏசா 3:19).

7. சிரபூஷணங்கள் (ஏசா 3:20; யாத் 28:40; யாத் 29:9; யாத் 39:28; லேவி 8:13; எசே 44:18).

8. பாதசரங்கள்

9. மார்க்கச்சைகள் (ஏசா 3:20)

10. சுகந்த பரணிகள் (ஏசா 3:20)

11. தாயித்துகள் (ஏசா 3:20)

12. மோதிரங்கள் (ஏசா 3:21; யாத் 35:22; எண் 31:50).

13. மூக்குத்திகள் (ஏசா 3:21; ஆதி 24:22,30; ஆதி 24:47; ஆதி 35:4; யாத் 32:2,3; யாத் 35:22; நியா 8:24-26; யோபு 42:11; நீதி 11:22; நீதி 25:12; எசே 16:12; ஓசி 2:13).

14. விநோத வஸ்திரங்கள் (ஏசா 3:22; சக 3:4).

15. சால்வைகள் (ஏசா 3:22).

16. போர்வைகள் (ஏசா 3:20, ரூத் 3:15)

17. குப்பிகள் (ஏசா 3:22)

18. கண்ணாடிகள் (ஏசா 3:23; யாத் 38:8; யோபு 37:18; 1கொரி 13:12; 2கொரி 3:18; யாக் 1:23)

19. சல்லாக்கள் (ஏசா 3:23; நீதி 31:24)

20. குல்லாக்கள் (ஏசா 3:23)

21. துப்பட்டாக்கள்

22. கச்சை (ஏசா 3:24).

சுட்டி (cauls) - שָׁבִיס - shaw-beece' - 7636

ஆ.பெ.சொ. - சுட்டி nets (for the hair, or other head coverings of women) (ஏசா 3:18)

காப்பு (bracelets) - שֵׁר - shay-raw' - 8285

பெயர்ச்சொல் - காப்பு, வளையல் (arm bands)

சிரபூஷணம் (bonnets) - פְּאֵר - peh-ayr' - 6287

ஆ.பெ.சொ. - அலங்காரம், சிரபூஷணம், சிங்காரம், ஆபரணம், குல்லா, பாகை (the tiara, headdress)

צְעָדָה - tseh-aw-daw' - 6807

பெண்பால் பெயர்ச்சொல் - போதல், புறப்படுதல் (stepchains)

சிரபூஷணம் (headbands) - קִשֻּׁרִים - kish-shoor' - 7196

ஆ.பெ.சொ. - சிரபூஷணம், திருமண ஆடை (girdles)

சுவாசம் (breath) - נֶפֶשׁ - neh'-fesh - 5315

பெண்பால் பெயர்ச்சொல் - ஜந்து, ஜீவன், ஆத்துமா, உயிர், ஜனம், பிராணன், சம்மதி, மனது, மனம், பேர், பிறப்பு, ஆசை, இருதயம், பிராணி, செத்தவன், இறந்து போன பிணம், மனிதன், மிருகத்துக்கு மிருகம், சவம், பிரேதம், யாதொருவர், உள்ளம், இஷ்டம், ஆவல், பசி, உட்கருத்து, ஜீவனுக்கு ஜீவன், சுவாசம், சித்தம், இச்சை, போஜனம், நெஞ்சு, மனுஷர்

மோதிரம் (rings) - טַבַּעַת - tab-bah'-ath – 2885

3 அதிகாரம்

பெ.பெ.சொ. - மோதிரம், வளையம் **(a signet ring for making a seal in wax)**

மூக்குத்தி **(nose jewels) - נֶזֶם - neh'-zem - 5141**

ஆ.பெ.சொ.- காதணி, கடுக்கண், ஆபரணம், மூக்குத்தி **(a ring for the ear or nose)**

துப்பட்டி **(fine linen) - סָדִין - saw-deen' - 5466**

ஆ.பெ.சொ. - துப்பட்டி, மெல்லியபுடவை, சல்லாக்கு **sheets** (நியா 14:12-13)

"சுகந்தத்துக்குப் பதிலாகத் துர்க்கந்தமும்" - சீயோன் குமாரத்திகளின் அழகு அழிந்துபோகும். அவர்கள் மீது நறுமணம் வீசுவதற்குப்பதிலாகத் துர்நாற்றம் வீசும். அவர்கள் அழகான கச்சைகளை அணிவதற்குப் பதிலாக சாதாரண கயிறுகளை அணிவார்கள்.

கயிறு **(rent) - נִקְפָּה - nik-paw' - 5364**

பெ.பெ.சொ. - கயிறு **(tether or rope)**

கருகிப்போதல் **(burning) - כִּי - kee - 3587**

ஆ.பெ.சொ. - கருகிப்போதல் **(a brand or scar)** (சக 14:1-5)

(vi) குமாரர்கள் - யுத்தத்தில் வெட்டுண்டு போகிறவர்கள்

ஏசா 3:25 உன் புருஷர் கட்கத்தினாலும், உன் பெலசாலிகள் யுத்தத்திலும் விழுவார்கள்.

ஏசா 3:26 அவளுடைய வாசல்கள் துக்கித்துப் புலம்பும்; அவள் வெறுமையாக்கப்பட்டுத் தரையிலே உட்காருவாள் என்கிறார்.

"உன் பெலசாலிகள் யுத்தத்திலும் விழுவார்கள்" - இயேசு கிறிஸ்து யூதா ஜனங்களை விடுவிக்க வருவதற்கு முன்பாக அந்திக்கிறிஸ்து யூதாவின்மீது யுத்தம்பண்ணி எருசலேமைச் சுற்றி வளைத்துப்போடுவான். அப்போது யூதாவின் மனுஷரில் பலர் மடிந்து போவார்கள். (ஏசா 3:25-26; சக 14:1-5,14; வெளி 19:11-21).

"தரையிலே உட்காருவாள்" - தரையில் உட்காருவது அதிகமான துக்கத்தையும், வசதியில்லாத வெறும் வாழ்க்கையையும் குறிக்கும். (யோபு 2:13; சங் 137:1; எரே 6:26; புல 2:10; புல 3:28; மீகா 1:10).

4 அதிகாரம்

(3) ஆயிர வருஷம் - *(2:1)*

(அ) ஒரு சில புருஷர்கள் - குமாரத்திகள் தாழ்த்தப் பட்டார்கள்

ஏசா 4:1 அந்நாளில் ஏழு ஸ்திரீகள் ஒரே புருஷனைப் பிடித்து: நாங்கள் எங்கள் சொந்த ஆகாரத்தைப் புசித்து, எங்கள் சொந்த வஸ்திரத்தை உடுப்போம்; எங்கள் நிந்தை நீங்கும்படிக்கு உன் பேர்மாத்திரம் எங்கள்மேல் விளங்கட்டும் என்பார்கள்.

"அந்நாளில்" - கர்த்தருடைய நாளில். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போதும், ஆயிரம் வருஷ அரசாட்சியின்போதும் இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும். *(ஏசா 4:1-6)*.

"ஏழு ஸ்திரீகள் ஒரே புருஷனைப் பிடித்து" - உபத்திரவக்காலத்திற்கு பின்பும், அர்மெகதோன் யுத்தத்திற்குப் பின்பும், புருஷருடைய எண்ணிக்கை குறைந்துபோகும். *(ஏசா 3:25-26; சக 13:8-14:5)* ஸ்திரீகளுக்குத் தகுந்த எண்ணிக்கையில் புருஷரின் எண்ணிக்கை இராது. கிறிஸ்து ஆளுகை செய்ய வரும்போது ஒரு புருஷன் பல ஸ்திரீகளை விவாகம் பண்ணுவதைக் கர்த்தர் அங்கிகரிப்பார் என்பதற்கு வேதாகமத்தில் குறிப்பு எதுவுமில்லை.

(ஆ) மேசியா ஆளுகை செய்கிறார் - *(2:1; 9:6-7; சக 14; லூக் 1:33; 1கொரி 15:24-28; வெளி 5:10; 11:15; 20:1-10)*

ஏசா 4:2 இஸ்ரவேலில் தப்பினவர்களுக்கு அந்நாளிலே கர்த்தரின் கிளை அலங்காரமும் மகிமையு மாயிருக்கும்; பூமியின் கனி அவர்களுக்குச் சிறப்பும் அலங்காரமுமாயிருக்கும்.

"இஸ்ரவேலில் தப்பினவர்களுக்கு" - உபத்திரவக்காலத்திலும், அர்மகெதோன் யுத்தத்திலும் மாண்டுபோகாமல் தப்பித்துக் கொண்ட இஸ்ரவேலர்கள். *(ஏசா 4:2-3; சக 13:8-14:14; மத் 24:31; மத் 25:31-46)*.

"அந்நாளிலே" - ஆயிரம் வருஷ அரசாட்சியின்போது. *(ஏசா 4:1-6)*

"கர்த்தரின் கிளை அலங்காரமும் மகிமையுமாயிருக்கும்" - இயேசு கிறிஸ்து கர்த்தரின் கிளையாக இருப்பார். ஆயிரம் வருஷ அரசாட்சியிலும், புதிய பூமியிலும் அவர் மகிமையாகவும், அலங்காரமாகவும் இருப்பார். *(ஏசா 9:6-7; ஏசா 11:1; எரே 23:5; எரே 33:15; சக 3:8; சக 6:12; சக 14:1-9; வெளி 11:15)*.

"பூமியின் கனி அவர்களுக்குச் சிறப்பும் அலங்காரமுமாயிருக்கும்." - இயேசு கிறிஸ்து மறுபடியும் வரும்போது பூமியிலுள்ள சாபங்களெல்லாம் நீக்கப்படும். பூமி மறுபடியும் தன்னுடைய தானிய உற்பத்தியை எந்தக் குறைவும் இல்லாமல் அதிகரிக்கும். *(ஏசா 35:1-7; ஏசா 58:11-12; யோவே 2:21-27)*.

(இ) ஜனங்களின் பரிசுத்தம் - *(சக 14:16-21)*

ஏசா 4:3 அப்பொழுது ஆண்டவர், சீயோன் குமாரத்திகளின் அழுக்கைக் கழுவி, நியாயத்தின் ஆவியினாலும், சுட்டெரிப்பின் ஆவியினாலும், எருசலேமின் இரத்தப்பழிகளை அதின் நடுவிலிருந்து நீக்கிவிடும்போது,

ஏசா 4:4 சீயோனில் மீதியாயிருந்து, எருசலேமில் தரித்திருந்து ஜீவனுக்கென்று பேரெழுதப் பட்டவனெவனும் பரிசுத்தனென்று சொல்லப்படுவான்.

"அப்பொழுது" - எருசலேமிலுள்ள எல்லா யூதர்களையும் கர்த்தர் இரட்சித்த பின்பு. *(ஏசா 4:3-4)* கர்த்தர் எருசலேமைச் சுத்திகரிப்பார். ஏசாயா 4:5-6 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் காரியங்களெல்லாம் அப்போது நிறைவேறும்.

4 அதிகாரம்

கர்த்தர் செய்யும் காரியங்கள்

1. சீயோன் குமாரத்திகளின் அழுக்கைக் கழுவுவார்.
2. எருசலேமின் இரத்தப்பழிகளை அதின் நடுவிலிருந்து நீக்கிவிடுவார்.

"சீயோன் குமாரத்திகளின் அழுக்கு" - ஏசா 3:16-24 ஆகிய வசனங்களில் பெருமை, ஆடம்பரம், அலங்காரம் ஆகியவை சீயோன் குமாரத்திகளின் அழுக்காகக் கூறப் பட்டிருக்கிறது.

பாவத்தைப் பரிகரிப்பதற்குக் கர்த்தர் பயன்படுத்தும் வழிகள்

1. நியாயத்தின் ஆவி - இந்த ஆவியினால் கர்த்தர் சீயோனின் குமாரத்திகளைத் தாழ்த்துவார். அவர்கள் கர்த்தரின் இரக்கத்திற்காகக் கெஞ்சுவார்கள். இந்த ஆவி துன்மார்க்கரை அழிக்கும். பரிசுத்தமானவர்களைப் புதுப்பிக்கும்.
2. சுட்டெரிப்பின் ஆவி - இது கர்த்தருடைய கோபத்தைக் குறிக்கும். இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகையின்போது துன்மார்க்கரை அழிக்கும்போது அவருடைய உக்கிரக்கோபம் வெளிப்படும். (ஏசா 1:25-31; ஏசா 2:10-21; சக 12:10-13:1; மல் 2:2-3; மத் 3:11-12; மத் 25:31-46).

"எருசலேமில் தரித்திருந்து ஜீவனுக்கென்று பேரெழுதப்பட்டவன்" - அர்மகெதோன் யுத்தத்திற்குப் பின்பு எருசலேமில் மீதமாக இருக்கிற யூதர்கள் அனைவரும் மாற்றமடைவார்கள். இயேசு கிறிஸ்து வரும் போது அவர்கள் பரிசுத்தவான்களாக இருப்பார்கள். (ஏசா 59:20-21; சக 12:10-13:1; மத் 23:37-39; ரோமர் 11:25-29).

(ஈ) தேவனுடைய மகிமை - (யாத் 40:34; 2நாளா 7:1; எசே 10:18; 43:1-7)

ஏசா 4:5 அப்பொழுது கர்த்தர் சீயோன் மலையிலுள்ள எல்லா வாசஸ்தலங்களிலும், அதின் சபைகளின் மேலும், பகலில் மேகத்தையும் புகையையும், இரவில் கொழுந்துவிட்டு எரியும் அக்கினிப் பிரகாசத்தையும் உண்டாக்குவார்; மகிமையானவைகளின் மேலெல்லாம் காவல் உண்டாயிருக்கும்.

ஏசா 4:6 பகலிலே வெயிலுக்கு நிழலாகவும், பெருங்காற்றுக்கும் மழைக்கும் அடைக்கலமாகவும், மறைவிடமாகவும், ஒரு கூடாரம் உண்டாயிருக்கும்.

கர்த்தர் உண்டாக்கும் காரியங்கள்

1. சீயோன் மலையிலுள்ள எல்லா வாசஸ்தலங்களிலும் பகலில் மேகத்தையும் புகையையும், இரவில் கொழுந்துவிட்டு எரியும் அக்கினிப் பிரகாசத்தையும் உண்டாக்குவார். இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து வெளியேற்றி கானான் தேசத்திற்கு அழைத்து வந்த போது நடைபெற்ற சம்பவம்போல இது இருக்கும். (ஏசா 4:5; சக 2:5; யாத் 13:21; யாத் 40:38).
2. எருசலேமிலுள்ள எல்லா சபைகளின் மேலும் பகலில் மேகத்தையும் புகையையும், இரவில் கொழுந்துவிட்டு எரியும் அக்கினிப்பிரகாசத்தையும் உண்டாக்குவார் (ஏசா 4:5; சக 2:5).
3. பகலிலே வெயிலுக்கு நிழலாகவும், பெருங்காற்றுக்கும் மழைக்கும் அடைக்கலமாகவும், மறைவிடமாகவும், ஒரு கூடாரம் உண்டாயிருக்கும். (ஏசா 4:6) சூரியனின் ஒளி ஏழு மடங்கு அதிகரிக்கும். சந்திரனின் பிரகாசம்சூரியப்பிரகாசம் போலிருக்கும். (ஏசா 30:26) அப்போது மனுஷருக்கு வெயிலுக்கு நிழலாக ஒரு கூடாரம் தேவைப்படும். ஆதாமின் காலத்திற்கு முன்பு சந்திரனும் சூரியனும், நட்சத்திரங்களும் இருந்ததுபோல மறுபடியும் புதுப்பிக்கப்படும் என்று இந்த வாக்கியத்திற்கு ஒருசிலர் வியாக்கியானம் கூறுகிறார்கள். (ஆதி 1:14-18; ஆதி 8:22; சங் 89:35-37; எரே 31:35-36).

5 அதிகாரம்

6. தேவனுடைய திராட்சைத் தோட்டத்தைக் குறித்து பாட்டு - *(5:1-7; 27:2-11; சங் 80:8-16; எரே 2:21; எசே 15:1-8)*

(1) ஏழு அம்ச பராமரிப்பு - *(27:2-6)*

ஏசா 5:1 இப்பொழுது நான் என் நேசரிடத்தில் அவருடைய திராட்சத் தோட்டத்தைக் குறித்து என் நேசருக்கேற்ற ஒரு பாட்டைப் பாடுவேன்; என் நேசருக்கு மகா செழிப்பான மேட்டிலே ஒரு திராட்சத்தோட்டம் உண்டு.

ஏசா 5:2 அவர் அதை வேலியடைத்து, அதிலுள்ள கற்களைப் பொறுக்கி, அதிலே நற்குல திராட்சச் செடிகளை நட்டு, அதின் நடுவில் ஒரு கோபுரத்தைக் கட்டி, அதில் ஆலையையும் உண்டு பண்ணி, அது நல்ல திராட்சப்பழங்களைத் தருமென்று காத்திருந்தார்; அதுவோ கசப்பான பழங்களைத் தந்தது.

தீர்க்கதரிசன எண் - 6

"இப்பொழுது நான் என் நேசரிடத்தில் அவருடைய திராட்சத் தோட்டத்தைக் குறித்து என் நேசருக்கேற்ற ஒரு பாட்டைப் பாடுவேன்......" (ஏசா 5:1-30) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

ஏசாயா 5 ஆம் அதிகாரம் முழுவதுமாகவே இந்தத் தீர்க்கதரிசனத்தைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்க்கதரிசனம் இதற்கு முந்திய அதிகாரங்களோடோ அல்லது அதற்குப் பிந்திய அதிகாரங்களோடோ தொடர்புடையதல்ல. ஏசா 1 ஆவது அதிகாரத்தில் யூதர்கள் தங்களுடைய பாவங்களுக்காகக் கடிந்து கூறப்பட்டிருக்கிறார்கள். யூதாவின்மீது பாபிலோனியரின் ஆதிக்கம் வருவது அவர்களுக்குச் சாபத்தின்மீது சாபம் வருவதுபோல இருக்கும். பாபிலோனிய படையெடுப்பு இந்தத் தீர்க்கதரிசனத்தில் கூறப்பட்டு, அது 150 வருஷங்களுக்குப் பின்பு நிறைவேறிற்று. ஏசாயா இந்தத் தீர்க்கதரிசனத்தைத் தன் நேசருக்கேற்ற ஒரு பாட்டாகப் பாடுகிறார். (ஏசா 5:1).

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. யூதா முழுவதுமாக அழிக்கப்படும். (ஏசா 5:1-7)
2. பேராசைக்காரருக்கு ஐயோ. (ஏசா 5:8)
3. திரளான வீடுகள் பாழாகும் (ஏசா 5:9)
4. குறைந்த அளவு விளைச்சல்(ஏசா 5:10)
5. மதுபானத்தை விரும்புகிறவர்களுக்கு ஐயோ (ஏசா 5:11-12)
6. யூதாவின் சிறையிருப்பு (ஏசா 5:13; ஏசா 5:5-7; 2இராஜா 17, 2இராஜா 25)
7. கனமுள்ளவர்கள் பட்டினியினால் தொய்ந்துபோகிறார்கள் (ஏசா 5:13)
8. திரளான கூட்டத்தார் தாகத்தால் நாவறண்டுபோகிறார்கள்.
9. அவர்களுக்காக பாதாளம் தன்னை விரிவாக்கி, தன் வாயை ஆவென்று மட்டில்லாமல் திறந்தது (ஏசா 5:14)
10. சிறியவன் தாழ்த்தப்படுவான் (ஏசா 5:15)
11. பெரியவனும் தாழ்ச்சியடைவான்.
12. மேட்டிமையானவர்களின் கண்கள் தாழ்ந்துபோம்.
13. சேனைகளின் கர்த்தர் நியாயத்தீர்ப்பினால் உயர்வார். (ஏசா 5:16)
14. பரிசுத்தமுள்ள தேவன் நீதியினால் பரிசுத்தராய் விளங்குவார்.
15. ஆட்டுக்குட்டிகள் கண்டவிடமெல்லாம் மேயும் (ஏசா 5:17)
16. பாழாய்ப்போனநிலங்களைப் பரதேசிகள் அநுபவிப்பார்கள். (ஏசா 5:17)

5 அதிகாரம்

17. தம்முடைய பாவங்களைப் பெருக்கும் யூதர்களுக்கு ஐயோ. (ஏசா 5:18-19)

18. தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும் சொல்லுகிறவர்களுக்கு ஐயோ. (ஏசா 5:20)

19. தங்கள் பார்வைக்கு ஞானிகளும், தங்கள் எண்ணத்துக்குப் புத்தி மான்களுமாய் இருக்கிறவர்களுக்கு ஐயோ (ஏசா 5:21)

20. சாராயத்தைக் குடித்து..... நீதிமானின் நியாயத்தை அவனுக்கு விரோதமாய்ப் புரட்டுகிறவர்களுக்கு ஐயோ (ஏசா 5:22-23)

21. கர்த்தருடைய வேதத்தை வெறுத்து அசட்டை பண்ணும் யூதா முழுவதுமாக அழிக்கப்படும். (ஏசா 5:24-25)

22. தூரத்திலுள்ள புறஜாதியார் மூலமாக யூதாவுக்கு நியாயத்தீர்ப்பு வரும். (ஏசா 5:26)

23. அவர்களுடைய சேனைகள் கெர்ச்சிக்கிற சிங்கம்போல யூதாவின்மீது பாய்ந்து வரும். (ஏசா 5:27-29)

24. அவர்கள் தேசத்தை அழிப்பார்கள். நிலத்தைப் பாழாக்குவார்கள். (ஏசா 5:30)

பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எருசலேமை அழித்து யூதாவைச் சிறைப்பிடித்துச் சென்றபோது இந்தச் சம்பவங்களெல்லாம் நிறைவேறிற்று. (2இராஜா 25; 2நாளா 36).

தேவனுடைய திராட்சத்தோட்டத்தைப் பற்றிய விளக்கம்

1. என் நேசருக்கு மகா செழிப்பான மேட்டிலே ஒரு திராட்சத்தோட்டம் உண்டு. (ஏசா 5:1).

2. அவர் அதை வேலியடைத்தார். (ஏசா 5:2).

3. அதிலுள்ள கற்களைப் பொறுக்கினார்.

4. அதிலே நற்குல திராட்சச் செடிகளை நட்டார்.

5. அதின் நடுவில் ஒரு கோபுரத்தைக் கட்டினார்.

6. அதில் ஆலையை உண்டு பண்ணினார்.

7. அது நல்ல திராட்சப்பழங்களைத் தருமென்று காத்திருந்தார்.

8. அதுவோ கசப்பான பழங்களைத் தந்தது.

(2) தேவனுடைய விசாரிப்பு - *(27:7)*

ஏசா 5:3 எருசலேமின் குடிகளே, யூதாவின் மனுஷரே, எனக்கும் என் திராட்சத் தோட்டத்துக்கும் நியாயந் தீருங்கள்.

ஏசா 5:4 நான் என் திராட்சத் தோட்டத்திற்காகச் செய்யாத எந்த வேலையை அதற்கு இனிச் செய்யலாம்? அது நல்ல திராட்சப்பழங்களைத் தருமென்று நான் காத்திருக்க, அது கசப்பான பழங்களைத் தந்ததென்ன?

கர்த்தர் யூதாவிடம் செய்யுமாறு கூறும் காரியங்கள்

1. எனக்கும் என் திராட்சத் தோட்டத்துக்கும் நியாயந்தீருங்கள். (ஏசா 5:3)

2. நான் என் திராட்சத்தோட்டத்திற்காகச் செய்யாத எந்த வேலையை அதற்கு இனிச் செய்யலாம்? என்று எனக்குக் கூறுங்கள். (ஏசா 5:4)

3. அது நல்ல திராட்சப்பழங்களைத் தருமென்று நான் காத்திருக்க, அது கசப்பான பழங்களைத் தந்ததென்ன? என்பதற்குப் பதில் கூறுங்கள். (ஏசா 5:4)

5 அதிகாரம்

(3) பதிலுரை - ஒன்பது அம்ச நியாயத் தீர்ப்பு - (27:8; எரே 4:8; 5:13; 8:10; மத் 21:43-46)

ஏசா 5:5 இப்போதும் நான் என் திராட்சத் தோட்டத்துக்குச் செய்வதை உங்களுக்கு அறிவிப்பேன்; அதின் வேலியை எடுத்துப் போடுவேன், அது மேய்ந்து போடப்படும்; அதின் அடைப்பைத் தகர்ப்பேன், அது மிதியுண்டுபோம்.

ஏசா 5:6 அதைப் பாழாக்கிவிடுவேன்; அதின்கிளைகளை நறுக்கப்படாமலும், களைகொத்தி எடுக்கப்படாமலும் போவதினால், முட்செடியும் நெரிஞ்சிலும் முளைக்கும்; அதின்மேல் மழை பெய்யாதபடிக்கு மேகங்களுக்கும் கட்டளையிடுவேன் என்கிறார்.

தேவனுடைய திராட்சத்தோட்டத்தின்மீது நியாயத்தீர்ப்பு

1. அதின் வேலியை எடுத்துப்போடுவேன் (ஏசா 5:5).
2. அது மேய்ந்துபோடப்படும்.
3. அதின் அடைப்பைத் தகர்ப்பேன்.
4. அது மிதியுண்டுபோம்.
5. அதைப் பாழாக்கிவிடுவேன். (ஏசா 5:6).
6. அதின்கிளைகளை நறுக்கப்படாமல் விட்டுவிடுவேன்.
7. களைகொத்தி எடுக்கப்படாமல் போவதினால், முட்செடியும் நெரிஞ்சிலும் முளைக்கும்.
8. அதின்மேல் மழை பெய்யாதபடிக்கு மேகங்களுக்குக் கட்டளையிடுவேன்.

(4) யூதாவின் பாவங்கள் - (ஏசா 28; எரே 2; எசே 16)

ஏசா 5:7 சேனைகளின் கர்த்தருடைய திராட்சத்தோட்டம் இஸ்ரவேலின் வம்சமே; அவருடைய மனமகிழ்ச்சியின் நாற்று யூதாவின் மனுஷரே; அவர் நியாயத்துக்குக் காத்திருந்தார், இதோ, கொடுமை; நீதிக்குக் காத்திருந்தார், இதோ, முறைப்பாடு.

"சேனைகளின் கர்த்தருடைய திராட்சத் தோட்டம் இஸ்ரவேலின் வம்சமே" - கர்த்தர் தம்முடைய உவமையை இங்கு விளக்குகிறார். இஸ்ரவேலின் வம்சமே இங்கு திராட்சத் தோட்டமாகக் கூறப்பட்டிருக்கிறது. யூதாவின் மனுஷரே இங்கு மனமகிழ்ச்சியின் நாற்று என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறார்கள். யூதாவின் மனுஷரிடத்தில் கர்த்தர் நீதியையும், நியாயத்தையும் எதிர்பார்த்தார். ஆனால் அவர்கள் கொடுமையை வெளிப்படுத்தினார்கள்.

"இஸ்ரவேலின் வம்சமே..... யூதாவின் மனுஷரே" - யூதாவின் மனுஷரையும், எருசலேமின் மனுஷரையும் குறிப்பிடுவதற்கு இவ்விரண்டு வாக்கியங்களும் பயன்படுத்தப் பட்டுள்ளன. இவர்களுக்குத் தீர்க்கதரிசனம் கூறுவதற்காகக் கர்த்தர் ஏசாயாவை அனுப்பினார். (ஏசா 1:1; ஏசா 2:1; ஏசா 3:1,8, 16,17; ஏசா 4:3-5; ஏசா 5:7). ஏசாயாவின் காலத்தில் பத்துக் கோத்திரத்தாரில் ஏராளமானோர் முழுவதுமாக அழிந்து போனார்கள். (2இராஜா 17) இஸ்ரவேல் தேசத்தில் யூதா மாத்திரமே மீதியாக இருக்கிறது.

7. யூதாவின்மீது ஆறு ஐயோக்கள் - (5:8-23; 28:1,7; 29:1,15; 31:1; 33:1; ஆமோ 5:18; 6:1; ஆப 2:9; மத் 23:13-16; லூக் 11:39-54)

(1) பேராசைக்கு ஐயோ

ஏசா 5:8 தாங்கள்மாத்திரம் தேசத்தின் நடுவில் வாசமாயிருக்கும்படி மற்றவர்களுக்கு இடமில்லாமற்போகு மட்டும், வீட்டோடே வீட்டைச் சேர்த்து, வயலோடே வயலைக் கூட்டு கிறவர்களுக்கு ஐயோ!

ஏசாயா - தொகுப்புரை

5 அதிகாரம்

ஏசா 5:9 சேனைகளின் கர்த்தர் என் செவிகேட்கச் சொன்னது: மெய்யாகவே அந்தத்திரளான வீடுகள் பாழாகும்; பெரியவைகளும் நேர்த்தியானவைகளுமாகிய வீடுகள் குடியில்லாதிருக்கும்.

ஏசா 5:10 பத்தேர் நிலமாகிய திராட்சத்தோட்டம் ஒரேபடி ரசம் தரும்; ஒருகல விதை ஒரு குறுணி விளையும்.

ஏசா 5 ஆவது அதிகாரத்தில் கூறப் பட்டிருக்கும் "ஐயோ"க்கள்

1. பேராசைக்காரருக்கு ஐயோ. (ஏசா 5:8)
2. மதுபானத்தை விரும்புகிறவர்களுக்கு ஐயோ (ஏசா 5:11-12)
3. தம்முடைய பாவங்களைப் பெருக்கும் யூதர்களுக்கு ஐயோ. (ஏசா 5:18-19)
4. தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும் சொல்லுகிறவர்களுக்கு ஐயோ. (ஏசா 5:20)
5. தங்கள் பார்வைக்கு ஞானிகளும், தங்கள் எண்ணத்துக்குப் புத்தி மான்களுமாய் இருக்கிறவர்களுக்கு ஐயோ (ஏசா 5:21)
6. சாராயத்தைக் குடித்து..... நீதிமானின் நியாயத்தை அவனுக்கு விரோதமாய்ப் புரட்டுகிறவர்களுக்கு ஐயோ (ஏசா 5:22-23)

"வீட்டோடே வீட்டைச் சேர்த்து" - ஏராளமான சொத்துக்களைப் பல சந்ததிகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டும் என்னும் பேராசைக்குணம்.

ஏசா 5:9-10 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் நியாயத்தீர்ப்புக்கள்

1. திரளான வீடுகள் பாழாகும். வீடுகள் குடியில்லாதிருக்கும். (ஏசா 5:9)
2. ஒருகல விதை ஒரு குறுணி விளையும். நிலம் சபிக்கப்பட்டிருப்பதினால் சரியான விளைச்சல் இராது. (ஏசா 5:10, எசே 45:10-11)

(2) மதுபானம் குடிப்பதற்கு ஐயோ

ஏசா 5:11 சாராயத்தை நாடி அதிகாலமே எழுந்து, மதுபானம் தங்களைக் சூடாக்கும்படி தரித்திருந்து, இருட்டிப் போகுமளவும் குடித்துக் கொண்டேயிருக்கிறவர்களுக்கு ஐயோ!

ஏசா 5:12 அவர்கள் சுர மண்டலத்தையும், தம்புருவையும், மேளத்தையும், நாகசுரத்தையும், மதுபானத்தையும் வைத்து விருந்து கொண்டாடுகிறார்கள்; ஆனாலும் கர்த்தரின் கிரியையை நோக்குகிறதுமில்லை; அவர் கரத்தின் செய்கையைச் சிந்திக்கிறதுமில்லை.

ஏசா 5:13 என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சிறைப்பட்டுப் போகிறார்கள்; அவர்களில் கனமுள்ளவர்கள் பட்டினியினால் தொய்ந்துபோகிறார்கள்; அவர்களுடைய திரளான கூட்டத்தார் தாகத்தால் நாவறண்டுபோகிறார்கள்.

ஏசா 5:14 அதினிமித்தம் பாதாளம் தன்னை விரிவாக்கி, தன் வாயை ஆவென்று மட்டில்லாமல் திறந்தது; அவர்கள் மகிமையும், அவர்கள் திரள்கூட்டமும், அவர்கள் ஆடம்பரமும், அவர்களில் களிகூருகிறவர்களும் அதற்குள் இறங்கிப்போவார்கள்.

ஏசா 5:15 சிறியவன் தாழ்த்தப்படுவான், பெரியவனும் தாழ்ச்சியடைவான்; மேட்டிலுள் ளானவர்களின் கண்கள் தாழ்ந்துபோம்.

5 அதிகாரம்

ஏசா 5:16 சேனைகளின் கர்த்தர் நியாயத் தீர்ப்பினால் உயர்ந்து, பரிசுத்தமுள்ள தேவன் நீதியினால் பரிசுத்தராய் விளங்குவார்.

ஏசா 5:17 அப்பொழுது ஆட்டுக் குட்டிகள் கண்டவிடமெல்லாம் மேயும்; கொழுத்தவர் களுடையதாயிருந்து பாழாய்ப்போன நிலங்களைப் பரதேசிகள் அநுபவிப்பார்கள்.

யூதாவின் பாவங்கள்

1. சாராயத்தை நாடி அதிகாலமே எழுந்து...... இருட்டிப்போகுமளவும் குடித்துக் கொண்டேயிருக்கிறார்கள்.
2. அவர்கள் சுரமண்டலத்தையும், தம்புருவையும், மேளத்தையும், நாகசுரத்தையும், மதுபானத்தையும் வைத்துவிருந்துகொண்டாடுகிறார்கள். (ஏசா 5:12; பிர 8:15; லூக்கா 12:19)
3. அவர்கள் கர்த்தரின் கிரியையை நோக்குகிறதில்லை. (ஏசா 5:12)
4. அவர்கள் கர்த்தருடைய கரத்தின் செய்கையைச் சிந்திக்கிறதில்லை. கர்த்தருடைய ஆசீர்வாதத்தையும், இரட்சிப்பையும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. (ஏசா 5:12; கொலோ 2:11)

"என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சிறைப்பட்டுப்போகிறார்கள்" - யூதா, எருசலேம் ஆகியவர்களின் பாவங்களின்நிமித்தமாக அவர்கள்மீது நியாயத்தீர்ப்பு வந்தது. அதனால் அவர்கள் சிறைப்பட்டுப் போனார்கள். அவர்கள் அறிவில்லாமல் இருந்தார்கள். அவர்கள்மீது நியாயத்தீர்ப்பு வருவதற்கு அவர்கள் அறிவில்லாமல் இருந்ததும் ஒரு காரணமாகும்.

"அதினிமித்தம் பாதாளம் தன்னை விரிவாக்கி" - பாதாளம் தன் வாயை விரிவாய் திறக்கிறது. பரலோகத்திற்குப் போக வேண்டிய இஸ்ரவேல் புத்திரர்கள் நரகத்திற்குத் திரளான எண்ணிக்கையில் போகிறார்கள். பாதாளம் அளவில் பெரியது. எத்தனை பேரை வேண்டுமானாலும் அது தன்னிடத்தில் வாங்கி வைத்துக் கொள்ளும். எல்லோரையும் விழுங்குவதற்காகப் பாதாளம் தன் வாயை விரிவாய் திறக்கிறது. இதிலிருந்து தப்பிக்க வேண்டுமானால் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து மனந்திருந்தி கர்த்தர் தரும் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

பாதாளத்திற்குள் இறங்கிப்போகிறவைகள்

1. பாவம் செய்யும் மனுஷருடைய மகிமை. (ஏசா 5:8-10)
2. பாவிகளுடைய திரள்கூட்டம் (ஏசா 5:13-14)
3. பாவிகளுடைய ஆடம்பரம் (ஏசா 5:11-12)
4. பாவத்தில் களிகூருகிறவர்கள்.

"இறங்கிப்போவார்கள்" - நரகம் பூமியின்கீழ் ஆழத்தில் உள்ளது. ஆகையினால் துன்மார்க்கர் பாதாளத்திற்கு இறங்கிப்போகிறார்கள். (ஏசா 5:14; எண் 16:30-33; சங் 63:9; சங் 68:18; எசே 31:14-18; எசே 32:24- 27; மத் 12:40; எபே 4:8-10).

"ஆட்டுக்குட்டிகள் கண்டவிடமெல்லாம் மேயும்" - மனுஷர் குடியிருந்த இடங்கள் பாழாயிற்று. அவற்றில் புல் முளைத்துள்ளதால், ஆட்டுக்குட்டிகள் அங்கு மேய்கின்றன.

(3) அக்கிரமத்திற்கு ஐயோ

ஏசா 5:18 மாயையின் கயிறுகளால் அக்கிரமத்தையும், வண்டியின் வடங்களால் பாவத்தையும் இழுத்துக் கொண்டு வந்து,

ஏசாயா - தொகுப்புரை

5 அதிகாரம்

ஏசா 5:19 நாம் பார்க்கும்படி அவர் தீவிரித்துத் தமது கிரியையைச் சீக்கிரமாய் நடப்பிக்கட்டுமென்றும், இஸ்ரவேலின் பரிசுத்தருடைய ஆலோசனையை நாம் அறியும்படி அது சமீபித்து வரட்டுமென்றும் சொல்லுகிறவர்களுக்கு ஐயோ!

"வண்டியின் வடங்களால் பாவத்தையும் இழுத்துக்கொண்டு வந்து" - மனுஷருடைய பாவம் அம்பாரம்போல நிறைந்திருக்கிறது. கயிறைத் திரிக்கும்போது அது நீளமாகப் போய்க்கொண்டேயிருக்கும். அதுபோல மனுஷனுடைய பாவங்களும் முடிவில்லாமல் நீண்டுகொண்டே போகிறது.

"நாம் பார்க்கும்படி அவர் தீவிரித்துத் தமது கிரியையைச் சீக்கிரமாய் நடப்பிக்கட்டுமென்று" - பாவிகள் மனமேட்டிமையோடு இருக்கிறார்கள். கர்த்தருடைய சிட்சைக்காகப் பயமில்லாமல் இருக்கிறார்கள். மனுஷனுடைய இருதயம் துணிகரம் கொள்வதினால் அவன் பாவத்திற்கு அடிமையாகிறான். தங்களுடைய மனச்சாட்சிகளில் இவர்கள் சூடுண்ட பொய்யராகுகிறார்கள். (1தீமோ 4:1-2; எபி 3:8,12-14).

(4) தேவதூஷணத்திற்கு ஐயோ

ஏசா 5:20 தீமையோ நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும் சொல்லி, இருளை வெளிச்சமும், வெளிச்சத்தை இருளுமாகப் பாவித்து, கசப்பைத் தித்திப்பும், தித்திப்பைக் கசப்புமென்று சாதிக்கிறவர்களுக்கு ஐயோ!

"சாதிக்கிறவர்களுக்கு ஐயோ" - பாவிகள் தங்களுடைய கிரியைகளை நியாயமானது என்று சாதிக்கிறார்கள். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் கிரியைகள் அவர்களுடைய வாழ்வில் சம்பவித்தால்தான் இப்பேர்ப்பட்டவர்கள் கர்த்தருக்குப் பயப்படுவார்கள்.அது வரையிலும் தங்களுடைய சாதுரிய வார்த்தைகளினால் தாங்கள் நினைத்ததைச் சாதித்துக் கொண்டிருப்பார்கள்.

(5) பெருமைக்கு ஐயோ

ஏசா 5:21 தங்கள் பார்வைக்கு ஞானிகளும், தங்கள் எண்ணத்துக்குப் புத்திமான்களுமாய் இருக்கிறவர்களுக்கு ஐயோ!

"தங்கள் பார்வைக்கு ஞானிகளும்" - இவர்கள் தங்களை ஞானிகளாகவும், புத்திமான்களாகவும் நினைத்துக் கொள்கிறார்கள். (1கொரி 8:2; கலா 6:3)

(6) அநீதிக்கும் மதுபானம் அருந்துவதற்கும் ஐயோ

ஏசா 5:22 சாராயத்தைக் குடிக்க வீரரும், மதுவைக் கலந்துவைக்கப் பராக்கிரமசாலிகளுமாயிருந்து,

ஏசா 5:23 பரிதானத்திற்காகக் குற்றவாளியை நீதிமானாகத் தீர்த்து, நீதிமானின் நியாயத்தை அவனுக்கு விரோதமாய்ப் புரட்டுகிறவர்களுக்கு ஐயோ!

"பரிதானத்திற்காகக் குற்றவாளியை நீதிமானாகத் தீர்த்து" - இவர்கள் சாராயத்தைக் குடிக்கும் குடிகாரர்கள். (ஏசா 5:22) தங்களுடைய குடிகாரப்பாவத்தோடு நீதியைப் புரட்டும் மற்றொரு பாவத்தையும் தங்களுடைய பாவங்களின் பட்டியலில் சேர்த்துக் கொள்கிறார்கள்.

8. நியாயத்தீர்ப்பினால் யூதா அழிந்து போகிறது - (28:1,14; 29:1; எரே 5:9,29; ஓசி 13:3; மீகா 2:3)

ஏசா 5:24 இதினிமித்தம் அக்கினி ஜுவாலை வைக்கோலைப் பட்சிப்பது போலவும், செத்தையானது நெருப்புக்கு இரையாகி எரிந்துபோவதுபோலவும், அவர்கள் வேர் வாடி, அவர்கள் துளிர் தூசியைப்போல பறந்துபோகும்; அவர்கள் சேனைகளின் கர்த்தருடைய வேதத்தை வெறுத்து, இஸ்ரவேலி லுள்ள பரிசுத்தருடைய வசனத்தை அசட்டை பண்ணினார்களே.

ஏசாயா - தொகுப்புரை

5 அதிகாரம்

ஏசா 5:25 ஆகையால் கர்த்தருடைய கோபம் தமது ஜனங்களுக்கு விரோதமாய் மூண்டது; அவர் தமது கையை அவர்களுக்கு விரோதமாய் நீட்டி, பர்வதங்கள் அதிரத்தக்கதாயும், அவர்கள் பிணங்கள் நடுவீதிகளில் குப்பை போலாகத்தக்கதாயும், அவர்களை அடித்தார்; இவை எல்லாவற்றிலும் அவருடைய கோபம் ஆறாமல், இன்னும் அவருடைய கை நீட்டினபடியே இருக்கிறது.

"இதினிமித்தம் அக்கினிஜுவாலை வைக்கோலைப் பட்சிப்பதுபோலவும்" - அக்கினிஜுவாலை வைக்கோலை எளிதாக எரித்துவிடும். இதுபோல யூதாவும் அழிந்துபோவார்கள்.

யூதாவின் அழிவிற்குக் காரணம்

1. அது கசப்பான பழங்களைத் தந்தது. (ஏசா 5:4)
2. ஏழைகளை ஒடுக்கிற்று. (ஏசா 5:7)
3. பேராசை (ஏசா 5:8)
4. மதுபான வெறி (ஏசா 5:11)
5. பாவத்தின் சந்தோஷம் (ஏசா 5:12)
6. கர்த்தருடைய வார்த்தையை மதிப்பதில்லை.
7. கர்த்தருடைய கிரியையை நோக்கிப் பார்ப்பதில்லை.
8. அறிவில்லாமை (ஏசா 5:13)
9. பெருமையும், ஆடம்பரமும் (ஏசா 5:14)
10. பாவங்களின் பெருக்கம். (ஏசா 5:18)
11. கர்த்தரை மறுதலிப்பது (ஏசா 5:19)
12. மங்கிய மனச்சாட்சி (ஏசா 5:20)
13. சுயபெருமையும், சுயநீதியும் (ஏசா 5:21)
14. நீதிமான்களின் நியாயத்தைப் புரட்டுவது. (ஏசா 5:22-23)
15. கர்த்தருடைய வேதத்தை வெறுப்பது. (ஏசா 5:24)
16. கர்த்தருடைய வசனத்தை அசட்டை பண்ணுவது

யூதாவின்மீது நியாயத்தீர்ப்புக்கள்

1. முழுவதுமாக அழியும் (ஏசா 5:5)
2. தேசம் பாழாகும் (ஏசா 5:6)
3. முட்செடியும் நெரிஞ்சிலும் முளைக்கும்
4. மழை பெய்யாது.
5. ஜனங்கள்மீது ஐயோக்கள் வரும். (ஏசா 5:8,11,18-23)
6. திரளான வீடுகள் பாழாகும். வீடுகள் குடியில்லாதிருக்கும். (ஏசா 5:9)
7. பஞ்சமும், கொஞ்ச விளைச்சலும் (ஏசா 5:10)
8. பாபிலோனுக்கு சிறையிருப்பு. (ஏசா 5:13,29)
9. பஞ்சமும், தாகமும் (ஏசா 5:13)
10. நரகத்தில் தண்டனை (ஏசா 5:14)
11. எல்லோரும் தாழ்த்தப்படுவது. (ஏசா 5:15-16)
12. மனுஷருடைய குடியிருப்புகள் ஆட்டுக்குட்டிகள் மேயும் இடமாகும். (ஏசா 5:17)
13. வெற்றி பெற்றவர்கள் யூதாவின் ஐசுவரியங்களைக் கொள்ளையிடுவார்கள்.
14. அக்கினியினால் அழிவு (ஏசா 5:24)
15. ஜனங்களுடைய அழிவு (ஏசா 5:25)
16. தூரதேசத்திலுள்ள ஜாதியார் யூதாவை அழிப்பது. (ஏசா 5:26-30)

5 அதிகாரம்

“பிணங்கள் நடுவீதிகளில் குப்பை போலாகத்தக்கதாயும்” - யூதா தேசத்தாரின் பிணங்கள் நடுவீதிகளில் கிடக்கும். காட்டு மிருகங்கள் அவற்றைப் பட்சிக்கும்.

“இவை எல்லாவற்றிலும் அவருடைய கோபம் ஆறாமல்” - யூதா தேசத்தார் பல பாடுகளை அனுபவிப்பார்கள். ஆனாலும் கர்த்தருடைய கோபம் அவர்களைவிட்டு ஆறாது. அவர்கள் மனந்திருந்தி கர்த்தரிடத்தில் திரும்பி வந்தால் மட்டுமே கர்த்தருடைய கோபம் ஆறும். (ஏசா 9:12,17,21; ஏசா 10:4, லேவி 26:14-46).

9. உடனடியான நியாயத்தீர்ப்பு - பாபிலோனால் ஏற்படும் அழிவின் இருபது அம்சங்கள் - (ஏசா 3:1-7)

ஏசா 5:26 அவர் தூரத்திலுள்ள ஜாதியாருக்கு ஒரு கொடியை ஏற்றி, அவர்களைப் பூமியின் கடையாந்தரங்களிலிருந்து பயில்காட்டி அழைப்பார்; அப்பொழுது அவர்கள் தீவிரமும் வேகமுமாய் வருவார்கள்.

ஏசா 5:27 அவர்களில் விடாய்த்தவனும் இடறுகிறவனும் இல்லை; தூங்குகிறவனும் உறங்குகிறவனும் இல்லை; அவர்களில் ஒருவனுடைய இடுப்பின் கச்சை அவிழ்வதும், பாதரட்சைகளின் வார் அறுந்துபோவதும் இல்லை.

ஏசா 5:28 அவர்கள் அம்புகள் கூர்மையும், அவர்கள் வில்லுகளெல்லாம் நாணேற்றினவைகளும், அவர்கள் குதிரைகளின் குளம்புகள் கற்பாறையாகவும் எண்ணப்பட்டவைகளும், அவர்கள் உருளைகள் சுழல்காற்றுக்கு ஒத்தவைகளுமாயிருக்கும்.

ஏசா 5:29 அவர்கள் கெர்ச்சிப்பு சிங்கத்தின் கெர்ச்சிப்புபோலிருக்கிறது; பாலசிங்கங்களைப்போலக் கெர்ச்சித்து, உறுமி, இரையைப் பிடித்து, தப்புவிக்கிறவன் இல்லாமல், அதை எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள்.

ஏசா 5:30 அந்நாளில், சமுத்திரம் இரைவதுபோல் அவர்களுக்கு விரோதமாய் இரைவார்கள்; அப்பொழுது தேசத்தைப்பார்த்தால், இதோ, அந்தகாரமும் வியாகுலமும் உண்டு; அதின் மேகங்களினால் வெளிச்சமும் இருண்டுபோம்.

“அவர் தூரத்திலுள்ள ஜாதியாருக்கு ஒரு கொடியை ஏற்றி” - புறஜாதி தேசத்தார் யூதாவின்மீது யுத்தம் பண்ண வருவதை ஏசா 5:26-30 ஆகிய வசனங்கள் விளக்குகின்றன. நேபுகாத்நேச்சார் யூதாவைக் கைப்பற்றினான். அப்போது யூதா தேசம் அழிக்கப்பட்டது. அதில் குடியிருந்தோர் பாபிலோன் தேசத்திற்குச் சிறைப்பிடித்துச் செல்லப்பட்டார்கள். (2இராஜா 25; 2நாளா 36; எரே 25; தானி 1).

“அவர்களைப் பூமியின் கடையாந்தரங்களிலிருந்து பயில்கட்டி அழைப்பார்” - கர்த்தர் எல்லா தேசங்களையும் ஆளுகை செய்கிறார். யூதாவைத் தண்டிக்குமாறு அந்நிய தேசத்திற்குக் கட்டளையிடுகிறார். அவர்கள் கர்த்தருடைய கட்டளையைத் தீவிரமாகவும், வேகமாகவும் நிறைவேற்றுகிறார்கள். பாலஸ்தீன தேசத்திலும், சீரிய தேசத்திலும் தேனீக்களை வளர்க்கிறவர்கள் அவற்றைப் பயில்காட்டி அழைப்பார்கள். தேனீக்கள் வயலுக்குச் சென்றுவிட்டு தங்கள் கூடுகளுக்குத் திரும்பி வரும். அதுபோல கர்த்தர் பாபிலோன் தேசத்தாரைப் பயில்காட்டி அழைப்பார். அவர்கள் கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிவார்கள். (ஏசா 7:18; 1இராஜா 9:8; யோபு 27:23; எரே 19:8; எரே 49:17; எரே 50:13; புல 2:15-16; எசே 27:36; செப் 2:15; சக 10:8).

பாபிலோனியரைப் பற்றிய விளக்கம்

1. தூரத்திலுள்ள ஜாதியார் (ஏசா 5:26).
2. அவர்கள் தீவிரமும் வேகமுமாய் வருவார்கள்.
3. அவர்களில் விடாய்த்தவன் இல்லை. (ஏசா 5:27).
4. அவர்களில் இடறுகிறவன் இல்லை.
5. அவர்களில் தூங்குகிறவனும் உறங்குகிறவனும் இல்லை.

ஏசாயா - தொகுப்புரை

5 அதிகாரம்

6. அவர்களுடைய இடுப்பின் கச்சை அவிழ்ந்துபோவதில்லை.

7. அவர்களுடைய பாதரட்சைகளின் வார் அறுந்துபோவதும் இல்லை.

8. அவர்கள் அம்புகள் கூர்மையாக இருக்கும். (ஏசா 5:28).

9. அவர்களுடைய வில்லுகளெல்லாம் நாணேற்றினவைகளாக இருக்கும்.

10. அவர்களுடைய குதிரைகளின் குளம்புகள் கற்பாறையாகவும் எண்ணப் பட்டவைகளாக இருக்கும்.

11. அவர்களுடைய உருளைகள் சுழல் காற்றுக்கு ஒத்தவைகளாயிருக்கும்.

12. அவர்களுடைய கெர்ச்சிப்பு சிங்கத்தின் கெர்ச்சிப்புபோலிருக்கிறது. (ஏசா 5:29).

13. பாலசிங்கங்களைப்போலக் கெர்ச்சித்து, உறுமி, இரையைப் பிடிப்பார்கள்.

14. அவர்களை எடுத்துக்கொண்டு போய் விடுவார்கள்.

15. அவர்களைத் தப்புவிக்கிறவன் ஒருவனும் இருக்கமாட்டான்.

16. சமுத்திரம் இரைவதுபோல் யூதா தேசத்தாருக்கு விரோதமாய் இரைவார்கள் (ஏசா 5:30).

17. தேசத்தில் அந்தகாரமும் வியாகுலமும் இருக்கும்.

18. அதின் மேகங்களினால் வெளிச்சமும் இருண்டுபோம்.

"அவர்கள் கெர்ச்சிப்பு சிங்கத்தின் கெர்ச்சிப்பு போலிருக்கிறது" - பாபிலோனியரும், அசீரியரும் பிசாசுகளைப் போல யுத்தம் பண்ணுவார்கள். அவர்கள் இடும் சத்தம் கெர்ச்சிக்கிற சிங்கம்போலவும், சமுத்திரம் இரைவதுபோலவும் இருக்கும். (ஏசா 5:29-30).

"அப்பொழுது தேசத்தைப்பார்த்தால், இதோ, அந்தகாரமும் வியாகுலமும் உண்டு" - பாபிலோனிய படையெடுப்பிற்குப் பின்பு யூதா தேசத்தின் நிலைமையை இந்த வாக்கியம் விவரிக்கிறது.

6 அதிகாரம்

II. ஏசாயாவின் புதிய தரிசனமும் அழைப்பும் - (6:1-13; யோபு 42:5; எரே 1; எசே 1; தானி 10; யாத் 32; வெளி 1)

1. தரிசனம் - யோதாமின் ஆட்சி

ஏசா 6:1 உசியா ராஜா மரணமடைந்த வருஷத்தில், ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கக் கண்டேன்; அவருடைய வஸ்திரத்தொங்கலால் தேவாலயம் நிறைந்திருந்தது.

ஏசா 6:2 சேராபீன்கள் அவருக்கு மேலாக நின்றார்கள்; அவர்களில் ஒவ்வொருவனுக்கும் அவ்வாறு செட்டைகளிருந்தன; அவனவன் இரண்டு செட்டைகளால் தன் தன் முகத்தை மூடி, இரண்டு செட்டைகளால் தன் தன் கால்களை மூடி, இரண்டு செட்டைகளால் பறந்து;

ஏசா 6:3 ஒருவரையொருவர் நோக்கி: சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்று கூப்பிட்டுச் சொன்னார்கள்.

ஏசா 6:4 கூப்பிடுகிறவர்களின் சத்தத்தால் வாசல்களின் நிலைகள் அசைந்து, ஆலயம் புகையினால் நிறைந்தது.

"உசியா ராஜா மரணமடைந்த வருஷத்தில்" - இஸ்ரவேல் ராஜ்யத்தின் பத்துக் கோத்திரத்தார் அழிக்கப்படுவதற்கு 38 வருஷங்களுக்கு முன்பு உசியா ராஜா மரணமடைந்தான். (ஏசா 6:1; 2இராஜா 17) ஏசா 1-5 ஆகிய அதிகாரங்கள் உசியா ராஜா மரணமடைவதற்கு முன்பு அல்லது உசியா ராஜாவின் ஆட்சிக் காலத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும். ஏசா 6 ஆம் அதிகாரம் யோதாமின் ஆட்சிக் காலத்திலும், ஏசா 7-12 ஆகிய அதிகாரங்கள் ஆகாசின் ஆட்சிக் காலத்திலும், ஏசா 13-66 ஆகிய அதிகாரங்கள் எசேக்கியாவின் ஆட்சிக் காலத்திலும் எழுதப்பட்டன.

'உசியா ராஜா" - இவன் ஒரு துன்மார்க்கன். குஷ்டரோகியாக மரித்தவன். (ஏசா 6:1; 2இராஜா 15:5) கர்த்தரோ மாசற்றவர். மகிமையின் நித்திய ராஜா. (ஏசா 6:1-5)

காண்பது (saw) - רָאָה - raw-aw' - 7200

வினைச்சொல் - பார், நோக்கு, காண், நோக்கிப்பார், தெரிந்துகொள், அநுபவி, அறிந்திரு, நினைத்தருள், எச்சரிக்கையாய் இரு, செவிசாய், சிந்தனை செய், ஏற்படுத்து, தரிசி, மதி, ஞான திருஷ்டிக்காரன், அகப்படு, தரிசனமாகு, தோன்று, நியமி (to see clearly) (ஏசா 6:5; ஏசா 21:6-7) கர்த்தரைப் பிரத்தியட்சமாகக் கண்டவர்களில் ஏசாயாவும் ஒருவர்.

ஆண்டவர் (Lord) - אֲדֹנָי - ad-o-noy' - 136

ஆ.பெ.சொ. - ஆண்டவர், கர்த்தர்

கர்த்தர் இராஜரீகம் பண்ணுகிறார் (ஏசா 6:1,8,11) இந்த வார்த்தை கர்த்தர் (Jehovah) எனவும் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. (ஏசா 6:3,5,12) யோவான் இதைப் பற்றிக் கூறும்போது ஏசாயா மேசியாவாகிய இயேசுகிறிஸ்துவைக் கண்டதாக எழுதியிருக்கிறார். (யோவான் 12:41) அதோனாய், யெகோவா ஆகிய இரண்டு பெயர்களுமே திரித்துவத்தின் இரண்டாவது நபராகிய இயேசு கிறிஸ்துவைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

யெகோவா (Jehovah) - יְהוָֹה, יְהוִֹה - yeh-ho-vaw' - 3068

ஆ.பெ.சொ.- கர்த்தர், ஆண்டவர், யெகோவா

கர்த்தரைப் பற்றிய விளக்கம்

1. ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறார். (ஏசா 6:1).
2. அவருடைய வஸ்திரத்தொங்கலால் தேவாலயம் நிறைந்திருக்கிறது.

6 அதிகாரம்

3. சேராபீன்கள் அவருக்கு மேலாக நிற்கிறார்கள். அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி: சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்று கூப்பிட்டுச் சொல்கிறார்கள். (ஏசா 6:3).

4. கூப்பிடுகிறவர்களின் சத்தத்தால் வாசல்களின் நிலைகள் அசைக்கிறது. (ஏசா 6:4).

5. ஆலயம் புகையினால் நிறைகிறது.

6. ஏசாயா கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டார். (ஏசா 6:8-13).

தேவனுடைய சிங்காசனம்

1. கர்த்தர் தமது சிங்காசனத்தின்மேல் அமர்ந்திருக்கிறார். (ஏசா 6:1; 1இராஜா 22:19; 2நாளா 18:18; சங் 9:4; சங் 47:8; தானி 7:9; வெளி 4:2,10; வெளி 5:1,7,13; வெளி 6:16; வெளி 19:4; வெளி 21:5).

2. இது இப்பொழுது பரலோகத்தில் இருக்கிறது. (சங் 11:4).

3. இது "உம்முடைய சிங்காசனம்" **"Thy throne"** என்று அழைக்கப்படுகிறது. (சங் 89:14; சங் 93:2; சங் 132:12).

4. இது "அவருடைய சிங்காசனம்" **"His throne"** என்று அழைக்கப்படுகிறது. (சங் 97:2; சங் 103:19; சங் 132:12; தானி 7:9; 1:4; வெளி 3:21; வெளி 12:5).

5. இது "தேவனுடைய சிங்காசனம்" **"the throne of God"** என்று அழைக்கப் படுகிறது. (மத் 23:22; எபி 12:2; வெளி 7:9-17; வெளி 21:1-3).

6. இது "கிருபாசனம்" **the throne of grace** என்று அழைக்கப்படுகிறது. (எபி 4:16).

7. இது "மகத்துவ ஆசனம்" **the throne of His majesty** என்று அழைக்கப் படுகிறது. (எபி 8:1).

வஸ்திரத்தொங்கல் **(train) - שׁוּל - shool - 7757**

ஆ.பெ.சொ. - கீழோரம், ஓரம், வஸ்திரத்தொங்கல், வஸ்திரத்து ஓரம் **(robe) train here; skirts** (எரே 13:22,26; புல 1:9; நாகூம் 3:5) **hem** (யாத் 28:33-34; யாத் 39:24-26).

"தேவாலயம்" - இங்கு கூறப்பட்டிருக்கும் தேவாலயம் எந்தத் தேவாலயம் என்று தெரியவில்லை. ஏசாயா பரலோகத்திற்குச் சென்று கர்த்தருடைய தேவாலயத்தைத் தரிசிக்கவில்லை. ஆகையினால் இது சாலொமோன் கட்டிய தேவாலயமாகவும், அதிலுள்ள மகா பரிசுத்த ஸ்தலமாகவும் இருக்க வேண்டும். யோவான் கர்த்தரைத் தரிசிப்பதற்குப் பரலோகத்திற்குச் சென்றான். (வெளி 4-5) ஏசாயாவில் பூமியைப் பற்றியும், (ஏசா 6:3) பூமியிலுள்ள ஜனங்களைப் பற்றியும் (ஏசா 6:9-12) கூறப்பட்டிருப்பதினால் இந்தத் தரிசனம் பூமியிலுள்ள தேவாலயத்தைப் பற்றியதாகவே இருக்க வேண்டும்.

"சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்" - சேராபீன்கள் இரவும் பகலும் கர்த்தரைப் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று கூறுகிறார்கள். இதை இவர்கள் ஒருவரையொருவர் நோக்கிக் கூப்பிடுகிறார்கள். வெளிப்படுத்தின விசேஷத்திலும் இதைப் போன்ற நிகழ்ச்சி கூறப்பட்டிருக்கிறது. (வெளி 4:6-8).

"ஆலயம் புகையினால் நிறைந்தது" - தேவனுடைய மகிமையின் புகையானது முதன் முறையாக இங்கு கூறப்பட்டிருக்கிறது. (வெளி 15:8)

6 அதிகாரம்

2. இதன் விளைவு

ஏசா 6:5 அப்பொழுது நான்: ஐயோ! அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன்; சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே என்றேன்.

"அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன்" - ஏசாயா தன்னுடைய ஆவிக்குரிய பரிதாபமான நிலையை வெளிப்படுத்துகிறார். தான் கர்த்தருக்காகச் செய்ததையோ, செய்யாததையோ விவரிக்காமல் தன்னைப் பற்றியே கூறுகிறார். தேவனுடைய சமுகத்தில் நம்முடைய நிலைமையை எடுத்துக் கூறுவது முக்கியமானது. கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்மீது மிகுந்த அக்கறையோடு இருக்கிறார். அவர்களுடைய ஊழியங்களைவிட கர்த்தருக்கு அவர்களே முக்கியமானவர்கள். பரிசுத்தவான்களின் ஜீவியம் அவர்களுடைய உபதேசங்களைவிட முக்கியமானது.

"சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே" - ஒருவன் கர்த்தரைக் கண்டால் அவன் மரித்துப்போவான் என்னும் தவறான எண்ணம் அக்காலத்தில் பிரபல்யமாக இருந்தது. ஒருவேளை ஏசாயாவுக்கும், அப்படிப்பட்ட பயம் வந்திருக்கலாம். ஏசாயா கர்த்தரைக் கண்டதினால் அவருடைய சமுகத்தில் தன்னுடைய அசுத்தத்தைக் காண்கிறார். ஏசாயாவிற்கு இதனால் மரணம் உண்டாகவில்லை. ஏசாயாவின் உண்மை நிலை அவருக்கு வெளிப்படுத்தப்படுகிறது. (ஆதி 32:30; நியா 6:22-23; நியா 13:22)

3. மாற்றம்

ஏசா 6:6 அப்பொழுது சேராபீன்களில் ஒருவன் பலிபீடத்திலிருந்து, தன் கையிலே பிடித்த குறட்டால் ஒரு நெருப்புத் தழலை எடுத்து, என்னிடத்தில் பறந்து வந்து,

ஏசா 6:7 அதினால் என் வாயைத் தொட்டு: இதோ, இது உன் உதடுகளைத் தொட்டதினால் உன் அக்கிரமம் நீங்கி, உன் பாவம் நிவிர்த்தியானது என்றான்.

"ஒரு நெருப்புத் தழல்" - எந்த நெருப்புத் தழலும் எந்தத் தீர்க்கதரிசியையும் பரிசுத்தப் படுத்தாது. இங்கு இது ஒரு அடையாளமாகவே கூறப்பட்டிருக்கிறது. கர்த்தர் ஏசாயாவின் அக்கிரமத்தை நீக்கி அவருடைய பாவங்களை நிவர்த்தி பண்ணியதை இது உறுதி பண்ணுகிறது. இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தில் நாம் வைக்கும் விசுவாசத்தினாலேயே நமக்கு சுத்திகரிப்பு உண்டு. (ரோமர் 3:24-25; எபி 9:22; 1பேதுரு 1:18-23; 1யோவான் 1:7-9; வெளி 1:5).

4. தேவாலயத்திலிருந்து சப்தம்

ஏசா 6:8 பின்பு: யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான்: இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன்.

"இதோ, அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும்" - ஏசாயா கர்த்தருடைய கட்டளைக்கும், அழைப்புக்கும் எவ்வித தாமதமும் இன்றி உடனடியாகக் கீழ்ப்படிகிறார்.

கர்த்தருடைய கட்டளைக்குத் தாமதமாகக் கீழ்ப்படிந்தவர்கள்

1. மோசே (யாத் 3-4)
2. பாராக் (நியா 4-5)
3. கிதியோன் (நியா 6)
4. எரேமியா (எரே 1:4-10)
5. யோனா (யோனா 1:1-17)
6. பிலேயாம் (எண் 22)
7. பேதுரு (யோவான் 21:15-24; அப் 10:9-22)

6 அதிகாரம்

5. புதிய கட்டளை - *(1:1)*

ஏசா 6:9 அப்பொழுது அவர்: நீ போய், இந்த ஜனங்களை நோக்கி, நீங்கள் காதாரக் கேட்டும் உணராமலும், கண்ணாரக்கண்டும் அறியாமலும் இருங்கள் என்று சொல்.

ஏசா 6:10 இந்த ஜனங்கள் தங்கள் கண்களினால் காணாமலும், தங்கள் காதுகளினால் கேளாமலும், தங்கள் இருதயத்தினால் உணர்ந்து குணப்படாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலுமிருக்க, நீ அவர்கள் இருதயத்தைக் கொழுத்ததாக்கி, அவர்கள் காதுகளை மந்தப்படுத்தி, அவர்கள் கண்களை மூடிப்போடு என்றார்.

ஏசா 6:11 அப்பொழுது நான்: ஆண்டவரே, எதுவரைக்கும் என்று கேட்டேன். அதற்கு அவர்: பட்டணங்கள் குடியில்லாமலும், வீடுகள் மனுஷசஞ்சாரமில்லாமலும் பாழாகி, பூமி அவாந்தரவெளியாகி,

ஏசா 6:12 கர்த்தர் மனுஷரைத் தூரமாக விலக்குவதினால், தேசத்தின் நடுமையம் முற்றிலும் வெறுமையாக்கப்படும் வரைக்குமே.

ஏசா 6:13 ஆகிலும் அதில் இன்னும் பத்தில் ஒரு பங்கிருக்கும், அதுவும் திரும்ப நிர்மூலமாக்கப்படும்; கர்வாலிமரமும் அரசமரமும் இலையற்றுப்போன பின்பு அவைகளின் அடிமரம் இருப்பதுபோல, அதின் அடிமரமும் பரிசுத்தவித்தாயிருக்கும் என்றார்.

தீர்க்கதரிசன எண் - 7

"அப்பொழுது அவர்: நீ போய், இந்த ஜனங்களை நோக்கி.............." *(ஏசா 6:9-13)* இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. யூதா காதாரக் கேட்டும் உணராமல் இருப்பார்கள். *(ஏசா 6:9; மத் 13:14-15).*

2. யூதா கண்ணாரக்கண்டும் அறியாமல் இருப்பார்கள். *(ஏசா 6:9; மத் 13:14-15).*

3. சுவிசேஷத்தைக் கேட்டு உணராமல் போகும்படியாக அவர்களுடைய அவயவங்கள் தவறாகப் பயன்படுத்தப் படும். *(ஏசா 6:10; மத் 13:14-15).*

4. அவர்கள் தங்கள் இருதயத்தைக் கொழுத்ததாக்கி, காதுகளை மந்தப்படுத்தி, தங்கள் கண்களை மூடிப் போட்டு சுவிசேஷத்தைக் கேட்க மாட்டார்கள். *(ஏசா 6:10; மத் 13:14-15; அப் 7:51).*

5. இயேசு கிறிஸ்துவையும், அவருடைய சுவிசேஷத்தையும் ஏற்றுக் கொள்ளாமல் போனதினால் யூதா குணப்படாமலும், ஆரோக்கியமடையாமலும் இருக்கும். *(ஏசா 6:10; மாற்கு 6:1-6; ரோமர் 10:1-4).*

6. யூதா தேசத்தார் முற்றிலும் அழிக்கப்படும் வரையிலும் அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணுவார்கள். *(ஏசா 6:11)* இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரையிலும் அவர்கள் முற்றிலும் வெறுமையாக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வரும்போது "கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்" என்று அறிக்கையிடுவார்கள். *(மத் 23:37-39; ரோமர் 11:25-29; சக 12:10-14:21).*

7. தேசங்கள் மத்தியிலே யூதா சிதறடிக்கப் படும் வரையிலும் கர்த்தருக்கு எதிரான அவர்களுடைய கலகம் தொடரும். *(ஏசா 6:12; மத் 23:37-39; லூக்கா 21:20-24).*

8. தேசத்தின் நடுமையம் முற்றிலும் வெறுமையாக்கப்படும்போது யூதாவின் கலகம் முடிவு பெறும். *(ஏசா 6:12; மத் 23:37-39)*

6 அதிகாரம்

9. இந்த அழிவின் மத்தியிலும் இஸ்ரவேலில் மீதமுள்ளோர் பாலஸ்தீன தேசத்திற்குத் திரும்பி வருவார்கள். (ஏசா 6:13). எஸ்றா, நெகேமியா ஆகியோரின் காலத்தில் இது நிறைவேறிற்று.

10. திரும்பி வரும் மீதமுள்ளோரும் நிர்மூலமாக்கப்படுவார்கள். (ஏசா 6:13; ஏசா 9:6-7; ஏசா 59:20-21; ஓசி 3:4-5; ஆமோ 9:9-15; சக 8:14; லூக்கா 1:32-33; ரோமர் 11:15).

"நீ போய், இந்த ஜனங்களை நோக்கி.......... சொல்" - ஏசாயாவிற்கு இந்த விசேஷித்த அழைப்பு அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் நாட்களிலும், அப்போஸ்தலரின் நாட்களிலும் இந்த வாக்கியம் ஏழு தடவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. (மத் 13:14-15; மாற்கு 4:12; லூக்கா 8:10; யோவான் 12:39-40; அப் 28:26-27; ரோமர் 11:8).

கண்களினால் சரியாகக் காண்பதினாலும், காதுகளினால் சரியாகக் கேட்பதினாலும் உண்டாகும் ஆசீர்வாதங்கள்

1. தங்கள் இருதயத்தினால் உணர்ந்து குணப்படுவார்கள். (ஏசா 6:10)

2. கர்த்தரிடத்திற்கும், சுவிசேஷத்திற்கும் திரும்புவார்கள்.

3. சரீரத்தில் ஆரோக்கியம் உண்டாகும்.

மனம் திரும்புவதும், சரீர ஆரோக்கியமும் சேர்ந்து உண்டாகிறது. (மத் 8:16-17; மத் 9:1-8; மத் 13:14-15; யோவான் 10:10; யாக் 5:14-16; 1பேதுரு 2:24).

எதுவரைக்கும் (ஏசா 6:11-12)

1. யூதாவின் பட்டணங்கள் குடியில்லாமல் போகும் வரைக்கும்.

2. யூதாவின் வீடுகள் மனுஷ சஞ்சாரமில்லாமல் பாழாகும் வரைக்கும்.

3. பூமி யூதருக்கு அவாந்தரவெளியாகும் வரைக்கும்.

4. கர்த்தர் யூதா மனுஷரைத் தூரமாக விலக்குவது வரைக்கும்.

5. யூதாவில் தேவதூஷணம் உண்டாகும் வரைக்கும்.

இந்தக் காரியங்களெல்லாம் பாபிலோனிய சிறையிருப்பின்போதும், ரோமாபுரியாரின் ஆளுகையின் போதும் இரண்டு முறை நிறைவேறிற்று. (2இராஜா 25; 2நாளா 36; எரே 25; லூக்கா 20:20-24).

"தேசத்தின் நடுமையம் முற்றிலும் வெறுமையாக்கப்படும்" - இஸ்ரவேல் புத்திரர் புறஜாதியாரால் சிறைப்பிடித்துக் கொண்டு போகப்பட்டதினால் அவர்களுடைய தேசம் வெறுமையாயிற்று. (லூக்கா 21:20-24).

"அதில் இன்னும் பத்தில் ஒரு பங்கிருக்கும், அதுவும் திரும்ப நிர்மூலமாக்கப்படும்" - யூதரில் மீதியாக இருக்கிறவர்கள் அழிந்துபோவார்கள். அவர்களுடைய பாவங்கள் நிமித்தமாக தேவனுடைய நியாயத்தீர்ப்பை அனுபவிப்பார்கள். ஆனாலும் அவர்கள் மத்தியிலிருந்து ஒரு அடிமரம் துளிர்க்கும். அது பரிசுத்த வித்தாக இருக்கும். ஆயிரம் வருஷ அரசாட்சியிலும், புதிய பூமியிலும் இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரும் உலகத்தின் எல்லா தேசங்களிலிருந்தும் ஒரு பெரிய ஜாதியாக கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். (ஏசா 6:13; ஏசா 9:6-7; ஏசா 59:20-21; ஓசி 3:4-5; ஆமோ 9:9-15; சக 8:14; லூக்கா 1:32-33; ரோமர் 11:15).

நிர்மூலமாதல் (burn) - בָּעַר - baw-ar' - 1197

வினைச்சொல் - நிர்மூலமாகு, எரி, தழல்மூட்டு, அக்கினி பொறியாகு, ஜீவாலையாக, வெந்துபோ, பற்றியெரி, கொழுத்து (to be consumed by fire or by eating; to kindle; put away; take away; burn; set on fire; waste)

7 அதிகாரம்

III. யூதாவின்மீது படையெடுப்புக்கள் - வரலாறும் தீர்க்கதரிசனமும் - ஆகாசின் ஆட்சி - (7:1-12:6; 2இராஜா 16; 2நாளா 28)

1. சீரியா, இஸ்ரேல் ஆகியோரின் படையெடுப்பு - (7:1-16)

(1) யூதாவுக்கு எதிராக சீரியாவும் இஸ்ரவேலும் ஏற்படுத்திக் கொண்ட கூட்டணி - (2இராஜா 15:37-16:6; 2நாளா 28)

ஏசா 7:1 உசியாவினுடைய குமாரனாகிய யோதாமின் குமாரன் ஆகாஸ் என்னும் யூதாதேசத்து ராஜாவின் நாட்களிலே, ரேத்சீன் என்னும் சீரியாவின் ராஜாவும், ரெமலியாவின் குமாரனாகிய பெக்கா இன்னும் இஸ்ரவேலின் ராஜாவும் எருசலேமின்மேல் யுத்தம்பண்ண வந்தார்கள், அவர்களால் அதைப் பிடிக்கக் கூடாமற்போயிற்று.

ஏசா 7:2 சீரியர் எப்பிராயீமைச் சார்ந்திருக்கிறார்களென்று தாவீதின் குடும்பத்துக்கு அறிவிக்கப்பட்டபோது, ராஜாவின் இருதயமும் அவன் ஜனத்தின் இருதயமும் மரங்கள் காற்றினால் அசைகிறதுபோல் அசைந்தது.

"ஆகாஸ் என்னும் யூதாதேசத்து ராஜாவின் நாட்களிலே" - ஏசா 7-12 ஆகிய அதிகாரங்கள் ஆகாஸ் ராஜாவின் நாட்களில் எழுதப்பட்டது. இஸ்ரவேலின் பத்துக் கோத்திரத்தார் யூதாவுக்கு விரோதமாக சீரியாவோடு உடன்படிக்கை பண்ணிக் கொண்டார்கள். இஸ்ரவேலின் இரண்டு ராஜ்யங்கள்மீதும் அசீரியர் யுத்தம் பண்ண வந்தார்கள். இவ்விரண்டு சம்பவங்களைப் பற்றிய குறிப்புகளும் ஆயிரம் வருஷத்து அரசாட்சியைப் பற்றிய தீர்க்கதரிசனங்களும் இந்த அதிகாரங்களில் எழுதப்பட்டுள்ளது. ஆகாஸ் ராஜாவின் ராஜ்யபாரமும் அதன் வரலாற்றுப் பின்னணியும் 2இராஜா 15:37-16:5 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

"பெக்கா" (Pekah) - பத்துக் கோத்திரத்தாரின் இஸ்ரவேல் தேசத்தில் ஆட்சி புரிந்த ராஜாக்களில் இவனுடைய ஆட்சிக்காலமே இறுதியாக வளம் பெற்றிருந்தது. உசியா மரிப்பதற்கு இரண்டு வருஷங்களுக்கு முன்பு பெக்கா ராஜ்யபாரம் பண்ண ஆரம்பித்தான். ஆகாசின் மூன்றாம் வருஷத்து ஆட்சி வரையிலும் பெக்கா ஆட்சி புரிந்தான். இந்த அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் ஆகாஸ் ராஜாவின் ஆரம்பகால ராஜ்யபாரத்தின் போது நிகழ்ந்தவையாகும்.

"அவர்களால் அதைப் பிடிக்கக்கூடாமற் போயிற்று" - (2இராஜா 16:5-6)

"எப்பிராயீம்" - வடக்கு இஸ்ரவேல் ராஜ்யத்திற்கு எப்பிராயீம் என்னும் மறுபெயரும் உள்ளது. பத்துக் கோத்திரத்தாரில் எப்பிராயீம் கோத்திரமே வலிமையானது. அதுபோலவே தெற்கு ராஜ்யத்தில் யூதாவின் கோத்திரம் வலிமையாக இருந்ததினால் அதற்கு யூதா ராஜ்யம் என்று பெயர்பெற்றது.

"தாவீதின் குடும்பம்" - கர்த்தர் தாவீதிற்கும், அவனுடைய குடும்பத்தாருக்கும் பாதுகாப்பை வாக்குப் பண்ணினார். (2சாமு 7).

"ராஜாவின் இருதயம்..........அசைந்தது" - ஆகாசின் இருதயமும், யூதா ஜனங்களுடைய இருதயமும் பயத்தினால் துடித்தது.

(2) தெய்வீக தலையீடு - (7:-16)

(அ) நான்கு அம்ச புத்திமதி

ஏசா 7:3 அப்பொழுது கர்த்தர் ஏசாயாவை நோக்கி: நீயும் உன் மகன் சேயார் யாசூபுமாக வண்ணார் துறைவழியிலுள்ள மேற்குளத்து மதகின் கடைசி மட்டும் ஆகாசுக்கு எதிர்கொண்டு போய்,

ஏசா 7:4 நீ அவனை நோக்கி: சீரியர் எப்பிராயீமோடும், ரெமலியாவின் மகனோடும் உனக்கு விரோதமாகத் துராலோசனை பண்ணி,

7 அதிகாரம்

ஏசா 7:5 நாம் யூதாவுக்கு விரோதமாய்ப் போய், அதை நெருக்கி, அதை நமக்குள்ளே பங்கிட்டுக் கொண்டு, அதற்குத் தபேயாலின் குமாரனை ராஜாவாக ஏற்படுத்துவோம் என்று சொன்னதினிமித்தம்;

ஏசா 7:6 நீ பயப்படாமல் அமர்ந்திருக்கப் பார்; இந்த இரண்டு புகைகிற கொள்ளிக்கட்டைகளாகிய சீரியரோடே வந்த ரேச்சீனும், ரெமலியாவின் மகனும் கொண்ட உக்கிரக்கோபத்தினிமித்தம் உன் இருதயம் துவள வேண்டாம்.

தீர்க்கதரிசன எண் - 8

"அப்பொழுது கர்த்தர் ஏசாயாவை நோக்கி:................" (ஏசா 7:3-9) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. அந்த ஆலோசனை நிலைநிற்பதில்லை, அதின்படி சம்பவிப்பதுமில்லை (ஏசா 7:3-7).
2. இன்னும் அறுபத்தைந்து வருஷங்களிலே எப்பிராயீம் ஒரு ஜனமாயிராத படிக்கு நொறுங்குண்டுபோம். (ஏசா 7:8)
3. நீங்கள் விசுவாசியாவிட்டால் நிலைபெற மாட்டீர்கள் (ஏசா 7:9).

"சேயார் யாசூப்" (Shearjashub) - இவன் ஏசாயாவின் குமாரன். இந்தப் பெயருக்கு "மீதமுள்ளோர் திரும்பி வருவார்கள்" "a remnant shall return' என்று பொருள். தன்னுடைய தீர்க்கதரிசனத்தை உறுதிபண்ணும் விதமாக ஏசாயா தன் குமாரனுக்கு இவ்வாறு பெயரிட்டிருக்கிறார். (ஏசா 10:21).

"மேற்குளம்" (upper pool) - இதற்கு கீகோன் (Gihon) குளம் என்றும் பெயர். இது இன்னோம் (Hinnom) பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது. பட்டணத்தின் மேற்கு பக்கத்தில் யோப்போ (Joppa) வாசலிலிருந்து 700 கெஜம் தூரத்தில் மேற்குளம் உள்ளது. நல்ல கற்களினால் இந்தக் குளம் கட்டப்பட்டிருக்கிறது. குளத்தின் மூலைகளில் குளத்திற்குள் இறங்குவதற்குப் படிக்கட்டுக்களும் உள்ளன. இந்தக் குளத்தின் அளவு:

கிழக்கிலிருந்து மேற்கு வரையிலுமுள்ள நீளம் - 316 அடி

மேற்குப் பகுதியின் அகலம் - 200 அடி

கிழக்குப் பகுதியின் அகலம் - 218 அடி

ஆழம் - 18 அடி

கீழ்க்குளத்தின் அளவு

குளத்தின் மத்தியின் நீளம் - 592 அடி

வடக்குப் பகுதியின் அகலம் - 245 அடி

தெற்குப் பகுதியின் அகலம் - 275 அடி

வடக்குப் பகுதியின் ஆழம் - 35 அடி

தெற்குப் பகுதியின் ஆழம் - 42 அடி

"தபேயாலின் குமாரனை ராஜாவாக ஏற்படுத்துவோம்" - இது சீரியாவின் ராஜாவாகிய ரேத்சீனைக் குறிக்கும். எப்பிராயீம் புத்திரர் யூதாவிற்கு விரோதமாகக் கலகம் பண்ணி அந்நிய ஜாதியாரிடம் அடிமையாகிறார்கள். யூதாவின் சிம்மாசனத்தில் சீரியாவின் ராஜாவை அமர வைக்க வேண்டுமென்று திட்டமிடுகிறார்கள்.

ஆகாசிற்குக் கூறப்பட்ட கட்டளைகள்

1. நீ பயப்படாமல் இரு.
2. அமர்ந்திருக்கப்பார்.
3. உன் இருதயம் துவள வேண்டாம்.

7 அதிகாரம்

பயப்படத் தேவையற்ற காரியங்கள்

1. சீரியாவின் ராஜாவாகிய ரேத்சீனுடைய கோபம். (ஏசா 7:4)
2. இஸ்ரவேலின் ராஜாவாகிய பெக்காவின் கோபம்.
3. சீரியர், எப்பிராயீமியர் ஆகியோருடைய துராலோசனை. (ஏசா 7:5-6)

"இரண்டு புகைகிற கொள்ளிக்கட்டைகள்" - இவை சீரியாவையும், எப்பிராயீமையும் குறிக்கும். எரியும் கொள்ளிக்கட்டைகள் ஆபத்தை உண்டாகும். புகைகிற கொள்ளிக் கட்டைகளினால் ஒரு ஆபத்தும் இல்லை. அதிலிருந்து புகைதான் வரும். சீரியாவும், எப்பிராயீமும் புகையை வெளிப்படுத்தும் கொள்ளிக்கட்டைகளைப் போல இருக்கிறார்கள். அசீரியர் இவ்விரு தேசத்தாரையும் இந்தத் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டு 65 வருஷங்களுக்குப் பின்பு அழித்துப்போட்டார்கள். (ஏசா 7:7-9).

(ஆ) நிபந்தனையுள்ள தீர்க்க தரிசனத்தின் மூன்று அம்சங்கள் - (2இராஜா 17:7-17:41)

ஏசா 7:7 கர்த்தராகிய ஆண்டவர்: அந்த ஆலோசனை நிலை நிற்பதில்லை, அதின்படி சம்பவிப்பதுமில்லை;

ஏசா 7:8 சீரியாவின் தலை தமஸ்கு, தமஸ்குவின் தலை ரேத்சீன்; இன்னும் அறுபத்தைந்து வருஷங்களிலே எப்பிராயீம் ஒரு ஜனமாயிராதபடிக்கு நொறுங்குண்டுபோம்.

ஏசா 7:9 எப்பிராயீமின் தலை சமாரியா, சமாரியாவின் தலை ரெமலியாவின் மகன்; நீங்கள் விசுவாசியாவிட்டால் நிலைபெற மாட்டீர்கள் என்று சொல் என்றார்.

"இன்னும் அறுபத்தைந்து வருஷங்களிலே" - இந்த 65 வருஷங்களின் விவரம்:

1. ஆகாஸ் ராஜாவின் ஆட்சியில் 13 வருஷம். (2இராஜா 15:27; 2இராஜா 16:3)
2. எசேக்கியா ராஜாவின் ஆட்சியில் 29 வருஷம் (2இராஜா 18:1-2)
3. மனாசே ராஜாவின் ஆட்சியில் 23 வருஷம் (2இராஜா 21:1)

(இ) ஆகாசுக்கு ஏராளமான வாய்ப்புக்கள்

ஏசா 7:10 பின்னும் கர்த்தர் ஆகாசை நோக்கி:

ஏசா 7:11 நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் ஒரு அடையாளத்தை வேண்டிக்கொள்; அதை ஆழத்திலிருந்தாகிலும், உன்னதத்தில் இருந்தாகிலும் உண்டாகக் கேட்டுக்கொள் என்று சொன்னார்.

தீர்க்கதரிசன எண் - 9

"பின்னும் கர்த்தர் ஆகாசை நோக்கி........." (ஏசா 7:10-25) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனை பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள். (ஏசா 7:14).
2. தீமையை வெறுத்து நன்மையைத் தெரிந்துகொள்ள அறியும் வயது மட்டும் அவர் வெண்ணெயையும் தேனையும் சாப்பிடுவார். (ஏசா 7:15).
3. அந்தப் பிள்ளை தீமையை வெறுக்கவும், நன்மையைத் தெரிந்துகொள்ளவும் அறிகிறதற்கு முன்னே, நீ அருவருக்கிற தேசம் அதின் இரண்டு ராஜாக்களால் விட்டுவிடப்படும். (ஏசா 7:16).

7 அதிகாரம்

4. எப்பிராயீம் யூதாவைவிட்டுப் பிரிந்த நாள்முதல் வராத நாட்களைக் கர்த்தர் உன்மேலும், உன் ஜனத்தின் மேலும், உன் பிதாவுடைய வம்சத்தின் மேலும், அசீரியாவின் ராஜாவினாலே வரப் பண்ணுவார். (ஏசா 7:17).

5. எகிப்து தேசத்திலிருந்தும், அசீரிய தேசத்திலிருந்தும் யுத்தம் வரும். (ஏசா 7:18).

6. அவர்கள் தேனீக்களைப்போல வந்து ஏகமாய் வனாந்தரங்களின் பள்ளத்தாக்குகளிலும், கன்மலைகளின் வெடிப்புகளிலும், எல்லா முட்காடுகளிலும், மேய்ச்சலுள்ள எல்லா இடங்களிலும் தங்குவார்கள். (ஏசா 7:19)

7. தேசம் முழுவதையும் கர்த்தர் முழுவதுமாகச் சங்கரிப்பார். (ஏசா 7:20).

8. யுத்தத்திற்குப் பின்பு ஒருசிலர் மீதியாக வைக்கப்படுவார்கள். (ஏசா 7:21-22).

9. திராட்சச்செடியிருந்த நிலமெல்லாம் முட்செடியும் நெரிஞ்சிலுமாகும். (ஏசா 7:23).

10. அந்தத் தேசத்தில் அம்புகளையும் வில்லையும் பிடித்து அங்கே போகவேண்டியதாயிருக்கும். (ஏசா 7:24).

11. விளைநிலங்கள் பாழ்நிலங்களாகும். (ஏசா 7:25).

12. விளைநிலங்கள் மாடுகளை ஓட்டி விடுவதற்கும், ஆடுகள் மிதிப்பதற்குமான இடமாயிருக்கும்.

"நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் ஒரு அடையாளத்தை வேண்டிக்கொள்" - ஆனால் ஆகாசோ நான் கேட்கமாட்டேன்; நான் கர்த்தரைப் பரீட்சை செய்யமாட்டேன் என்றான் (ஏசா 7:12). அவன் விக்கிரகாராதனையில் நிலைத்திருக்க விரும்பினான். அசீரியரிடமிருந்து உதவியைப் பெற்றுக் கொள்ள விரும்பினான். (2இராஜா 16:7-8) கர்த்தருக்கு இந்தக் காரியம் விசனமாக இருந்தது. (ஏசா 7:13).

(ஈ) ஆகாசின் தவறான பக்தி

ஏசா 7:12 ஆகாசோ: நான் கேட்கமாட்டேன்; நான் கர்த்தரைப் பரீட்சை செய்யமாட்டேன் என்றான்.

(உ) தேவனுடைய தீர்க்கதரிசனக் கடிந்துரை - கன்னிகை கர்ப்பவதியாகும் அடையாளம் - (மத் 1:18)

ஏசா 7:13 அப்பொழுது ஏசாயா: தாவீதின் வம்சத்தாரே, கேளுங்கள்; நீங்கள் மனுஷரை விசனப்படுத்துகிறது போதாதென்று என் தேவனையும் விசனப்படுத்தப் பார்க்கிறீர்களோ?

ஏசா 7:14 ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனை பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்.

ஏசா 7:15 தீமையை வெறுத்து நன்மையைத் தெரிந்துகொள்ள அறியும் வயது மட்டும் அவர் வெண்ணெயையும் தேனையும் சாப்பிடுவார்.

ஏசா 7:16 அந்தப் பிள்ளை தீமையை வெறுக்கவும், நன்மையைத் தெரிந்து கொள்ளவும் அறிகிறதற்குமுன்னே, நீ அருவருக்கிற தேசம் அதின் இரண்டு ராஜாக்களால் விட்டுவிடப்படும்.

"கன்னிகை" - இதற்கான எபிரெய வார்த்தை "அல்மா" 'almah என்பதாகும். திருமணமாகாத ஸ்திரீகளைக் குறிப்பதற்கு அல்மா என்னும் வார்த்தை வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

7 அதிகாரம்

1. ரெபெக்காள் திருமணமாகாத கன்னியாக இருந்தாள். (ஆதி 24:43)

2. திருமணமாகாத வாலிப ஸ்திரீகள் (உன் 1:3; உன் 6:8)

3. மோசேயின் திருமணமாகாத சகோதரிகள் (யாத் 2:8)

4. புருஷனோடு முதன் முறையாகப் போகும் ஸ்திரீ. (நீதி 30:19)

5. தம்புரு வாசிக்கும் ஸ்திரீகள் (சங் 68:25-26).

இந்த வாக்கியத்தில் கன்னிகை என்னும் வார்த்தை புருஷனை அறியாத ஸ்திரீயைக் குறிக்கும். இந்தக் கன்னிகை மேசியாவைப் பெற்றெடுத்தாள். (ஏசா 7:14; மத் 1:18-25; லூக்கா 8:19) மரியாள் பரிசுத்த ஆவியானவரால் கர்ப்பந்தரித்தாள். கர்த்தர் மனுஷரூபமானார். (ஏசா 7:14; ஏசா 9:6-7; மத் 1:18-25; லூக்கா 1:30-38; யோவான் 1:1-14; ரோமர் 8:3; கலா 4:4; 1தீமோ 3:16; எபி 1:5-7; எபி 2:6-18).

கன்னிகை (virgin) - עַלְמָה - al-maw' - 5959

பெ.பெ.சொ. - பெண், கன்னிகை, கன்னியர்

எபிரெய மொழியில் கன்னிகையைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் மற்றொரு வார்த்தை "பெத்தூலா" (bethuwlah) என்பதாகும்.

கன்னிகை (virgin) - בְּתוּלָה - beth-oo-law' - 1330

பெ.பெ.சொ.-கன்னிகை, கன்னி (ஆதி 24:16; யாத் 22:17; லேவி 21:3,14; உபா 22:19,23,28; உபா 32:25; நியா 21:12; 2சாமு 13:2,18; 1இராஜா 1:2; 2இராஜா 19:21; எஸ் 2:2-3,17,19; சங் 45:14; ஏசா 23:4,12; ஏசா 37:22; ஏசா 47:1; ஏசா 62:5; எரே 14:17; எரே 18:13; எரே 31:4,13,21; எரே 46:11; புல 1:4,15,18; புல 2:10,13,21; யோவே 1:8; ஆமோ 5:2; ஆமோ 8:13); maid (யாத் 22:16; யோபு 31:1; எரே 2:32; எரே 51:22; புல 5:11; எசே 9:6; சக 9:17); maiden (நியா 19:24; 2நாளா 36:17; சங் 78:63; சங் 148:12; எசே 44:22).

அல்மா என்னும் எபிரெய வார்த்தை திருமணமாகும் வயதிலுள்ள திருமணமாகாத கன்னிகையைக் குறிக்கும்.

பெத்தூலா என்னும் வார்த்தை திருமணமாகும் வயதாகாத சிறுமியைக் குறிக்கும். (ஏசா 62:5; யோவே 1:8).

கிரேக்க மொழியிலும் கன்னிகையைக் குறிப்பதற்கு இரண்டு வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றின் விவரம் வருமாறு:

கன்னிப்பிராயம் (virginity) - παρθενία - parthenia - 3932

பெண்பால் பெயர்ச்சொல் - கன்னிப்பிராயம் (லூக்கா 2:36).

கன்னிகை (maiden) - παρθένος - parthenos - 3933.

பெண்பால் பெயர்ச்சொல் - கன்னிகை, கன்னியாஸ்திரீ (மத் 1:23, லூக்கா 1:27) (a maiden; an unmarried daughter; a virgin) "virgin" an unmarried maiden (மத் 1:23; மத் 25:1,7,11; லூக்கா 1:27; அப் 21:9; 1கொரி 7:25-37; 2கொரி 11:2; வெளி 14:4).

மேலே கூறப்பட்டிருக்கும் எபிரெய வார்த்தைகளும், கிரேக்க வார்த்தைகளும் திருமணமான ஸ்திரீயைப் பொதுவாகக் குறிப்பிடாமல், புருஷனை அறியாத ஸ்திரீகளைக் குறிப்பிடும்.

"இம்மானுவேல்" (Immanuel) - இந்தப் பெயருக்கு "தேவன் நம்மோடிருக்கிறார்" "God with us" (ஏசா 7:14; ஏசா 8:8) என்று பொருள். மறுபெயர் "Emmanuel" (மத் 1:23). இந்த வசனத்தில் மேசியா கன்னிகையினிடத்தில் பிறப்பதையும், அவருடைய வருகையையும் குறித்து கூறப்பட்டிருக்கிறது.

7 அதிகாரம்

அடுத்து இரண்டு வசனங்களில் ஏசாயாவின் குமாரனைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. தன்னுடைய குமாரனை ஏசாயா ஆகாசைச் சந்திப்பதற்குத் தன்னோடு அழைத்துச் செல்ல வேண்டும். (ஏசா 7:3) போகும் வழியில் மேசியா கன்னிகையினிடத்தில் பிறக்கப் போவதைக் குறித்து ஏசாயா தீர்க்கதரிசனமாகக் கூறுகிறார். ஏசாயா மேசியாவைப் பற்றிக் கூறிய பின்பு, மறுபடியும் தன் மகனைப் பற்றிக் கூறுகிறார். தன் மகன் தீமையை வெறுத்து நன்மையைத் தெரிந்து கொள்ள அறியும் வயது மட்டும் அவர் வெண்ணெயையும் தேனையும் சாப்பிடுவார். அந்தப் பிள்ளை தீமையை வெறுக்கவும், நன்மையைத் தெரிந்துகொள்ளவும் அறிகிறதற்கு முன்னே, சீரியாவின் ராஜாவும், எப்பிராயீமின் ராஜாவும் அழிந்துபோவார்கள். (ஏசா 7:15-16)

இந்தச் சம்பவம் மூன்று வருஷங்களுக்குப் பின்பு நடைபெறுகிறது. அப்போது அசீரியர்கள் சீரியாவின்மீது யுத்தம் பண்ணுகிறார்கள். (2இராஜா 16:9) ஓசியா எப்பிராயீமின் ராஜாவாகிய பெக்காவைக் கொன்று போடுகிறான். (2இராஜா 15:30) இவ்வாறு ஏசா 7:15-16 ஆகிய வசனங்களில் கூறப் பட்டிருக்கும் தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறது. ஏசாயா ஆகாசைச் சந்திக்கப் புறப்பட்டுப் போனபோது, ஏசாயாவின் குமாரன் இன்னும் சிறுபிள்ளையாகவே இருக்கிறான்.

"வெண்ணெய்" - (யோபு 20:17)

"அவர் வெண்ணெயையும் தேனையும் சாப்பிடுவார்" - சிறுபிள்ளைகளுக்கு வெண்ணெயும், தேனும் சரியான உணவாகும். அக்காலத்தில் சிறுகுழந்தைகளுக்கு முதலில் தேனைக்கொடுத்து அதன் பின்பே பாலைக் கொடுப்பார்கள். ஏசாயாவோடு அவனுடைய குமாரன் இருக்கிறான். அவன் சிறுபிள்ளையாக இருக்கிறான். ஏசாயா ஆகாசிற்குத் தீர்க்கதரிசனம் கூறியபோது ஏசாயாவின் மகன் ஒரு சிறிய பாலகனாகவே இருக்கிறான். (ஏசா 7:3) ஏசாயாவின் குமாரன் தீமையை வெறுக்கவும், நன்மையைத் தெரிந்துகொள்ளவும் அறிகிறதற்குமுன்னே இரண்டு ராஜாக்களும் அழிந்துபோவார்கள். (ஏசா 7:15-16).

2. யூதாவின்மீது அசீரியப் படையெடுப்பு - (7:17-25)

(1) படையெடுப்பின் அறிவிப்பு

ஏசா 7:17 எப்பிராயீம் யூதாவைவிட்டுப் பிரிந்த நாள்முதல் வராத நாட்களைக் கர்த்தர் உன்மேலும், உன் ஜனத்தின் மேலும், உன் பிதாவுடைய வம்சத்தின் மேலும், அசீரியாவின் ராஜாவினாலே வரப்பண்ணுவார்.

"யூதாவைவிட்டுப் பிரிந்த நாள்முதல்" - இஸ்ரவேல் தேசம் கி.மு. 931 ஆம் வருஷத்தில் இரண்டு ராஜ்ஜியங்களாகப் பிளவுண்டது. (1இராஜா 12).

"கர்த்தர் உன்மேலும்..........அசீரியாவின் ராஜாவினாலே வரப்பண்ணுவார்" - சீரியா மூலமாகவும், எப்பிராயீம் மூலமாகவும் வரும் ஆபத்தைக் குறித்து ஏசாயா எச்சரிக்கவில்லை. அதற்குப் பதிலாக அசீரியாவின் ராஜாவின் மூலமாக வரும் ஆபத்தைக் குறித்து ஏசாயா எச்சரிக்கிறார். ஆகாசோ தனக்கு அசீரியாவிடமிருந்து உதவி கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான்.

ஆகாஸ் தொடர்ந்து பாவம் செய்தான். இதனால் ரேத்சீனும், பெக்காவும் ஆகாசை மேற்கொண்டார்கள். திரளான யூதர்கள் சீரியாவிற்கும், 2இலட்சம் யூதர்கள் எப்பிராயீமிற்கும் சிறைப்பிடித்துச் செல்லப் பட்டார்கள். இது தவிர, ஒரேநாளில் 1,20,000பேர் கொல்லப்பட்டார்கள். (2நாளா 28:1-15) ஏதோமியரும், பெலிஸ்தியரும் யூதாவின்மீது யுத்தம் பண்ணினார்கள். (2நாளா 28:16-23)

இந்த இக்கட்டான சூழ்நிலையில் தனக்கு உதவி செய்யுமாறு ஆகாஸ் அசீரியாவின் உதவியை நாடினான். ஆனால் அசீரியாவின் ராஜாவோ ஆகாசிற்குச் சத்துருவானான். (2நாளா 16:7,8; 2நாளா 28:20) இதன் பின்பு, எசேக்கியாவின் நாட்களில் அசீரியர் யூதாவிற்கு விரோதமாக வந்தார்கள். அவர்கள் எருசலேமைத் தவிர யூதாவின் எல்லாப் பட்டணங்களையும் பிடித்துக் கொண்டார்கள். (ஏசா 37:1-39:8; 2இராஜா 18-19) இஸ்ரவேலின் பத்துக் கோத்திரத்தாரையும் அசீரியர் சிறைப்பிடித்துச் சென்றார்கள். (2இராஜா 17) இவ்வாறாக இதுவரையிலும் வராத துன்பமான நாட்களைக் கர்த்தர் யூதாவின்மேலும், எப்பிராயீமின்மேலும் வரப்பண்ணினார்.

7 அதிகாரம்

"அசீரியாவின் ராஜா" - (ஏசா 10:5; ஏசா 36:1-37:38; 2இராஜா 15:19-20; 2இராஜா 16:7-17:41; 2இராஜா 18:17-19:37).

(2) ஈ, தேனீ - திரளான சேனை

ஏசா 7:18 அந்நாட்களிலே, கர்த்தர் எகிப்து நதிகளின் கடையாந்தரத்திலுள்ள ஈயையும், அசீரியா தேசத்திலிருக்கும் தேனீயையும் பயில்காட்டி அழைப்பார்.

ஏசா 7:19 அவைகள் வந்து ஏகமாய் வனாந்தரங்களின் பள்ளத்தாக்குகளிலும், கன்மலைகளின் வெடிப்புகளிலும், எல்லா முட்காடுகளிலும், மேய்ச்சலுள்ள எல்லா இடங்களிலும் தங்கும்.

"அந்நாட்களிலே" - இது ஆயிரம் வருஷ அரசாட்சியைக் குறிக்கவில்லை. அசீரியரும், எகிப்தியரும் யூதாவின்மீது யுத்தம் பண்ண வரும் நாட்களைக் குறிக்கிறது.

"பயில்காட்டி அழைப்பார்" - (ஏசா 5:26)

"ஈயையும்..........தேனீயையும்" - அசீரியரும், எகிப்தியரும் யூதாவின்மீது யுத்தம் பண்ண வருகிறார்கள். அவர்களுடைய எண்ணிக்கை ஈயையும், தேனீயையும்போல திரளாக உள்ளது. இங்கு கூறப்பட்டிருக்கும் ஈ கொடிய விஷமுள்ளது. தேனீயும், சாதாரண தேனீக்களல்ல. இவை விஷவண்டுக்கள். இவை கொட்டினால் மரணம் நிச்சயம். இவர்கள் யூதாவின்மீது திரளாக வந்து அவர்களை அழித்துப்போடுவார்கள். (ஏசா 7:18-19).

(3) சவரகன் கத்தி - சுத்தமான அழிவு

ஏசா 7:20 அக்காலத்திலே ஆண்டவர் கூலிக்குவாங்கின சவரகன் கத்தியினால், அதாவது, நதியின் அக்கரையிலுள்ள அசீரியா ராஜாவினால், தலைமயிரையும் கால்மயிரையும் சிரைப்பித்து, தாடியையும் வாங்கிப்போடுவிப்பார்.

"அக்காலத்திலே" - அசீரியரும், எகிப்தியரும் யூதாவின்மீது படையெடுத்து வரும் அந்தக் காலத்தில் யூதாவின் அழிவு பூரணமாக இருக்கும். தலைமயிரைச் சிரைத்து மொட்டையடித்ததுபோன்று யூதா துப்புரவாக அழிக்கப்படும்.

"கூலிக்குவாங்கின சவரகன் கத்தி" - அசீரியாவின்ராஜா கூலிக்குவாங்கின சவரகன் கத்தியாக ஒப்பிடப்பட்டிருக்கிறான். சீரியாவையும், எப்பிராயீமையும் அழிப்பதற்கு ஆகாஸ் அசீரியாவின் ராஜாவைக் கூலிக்கு வாங்கினான். ஆனால் அசீரியாவின் ராஜாவோ தன்னைக் கூலிக்கு வாங்கின யூதாவுக்கு எதிராக எழும்பிவிட்டான். யூதாவின் மற்ற சத்துருக்களைவிட அசீரியாவின்ராஜா யூதாவை முற்றிலுமாக அழித்துப்போட்டான். (2இராஜா 16:7-8; 2நாளா 28:21).

(4) மீதியாக இருப்பவர்கள் - (ஏசா 1:9)

ஏசா 7:21 அக்காலத்தில் ஒருவன் ஒரு இளம்பசுவையும், இரண்டு ஆடுகளையும் வளர்த்தால்,

ஏசா 7:22 அவைகள் பூரணமாய்ப் பால் கறக்கிறபடியினால் வெண்ணெயைச் சாப்பிடுவான்; தேசத்தின் நடுவில் மீதியாயிருப்பவனெவனும் வெண்ணெயையும் தேனையுமே சாப்பிடுவான்.

"ஒரு இளம்பசுவையும், இரண்டு ஆடுகளையும் வளர்த்தால்" - அசீரியர் இஸ்ரவேலரை அழித்துவிட்டார்கள். சொற்ப ஜனங்கள் மட்டுமே தேசத்தில் மீதியாக இருக்கிறார்கள். ஒரு இளம் பசுவின் பாலும், இரண்டு ஆடுகளின் பாலும் மீதியாக இருக்கும் ஜனங்களுக்குப் போதுமானதாக இருக்கும். இவற்றைப் பருகுவதற்குக்கூட தேசத்தில் போதுமான ஆட்கள் மீதியாக இருக்க மாட்டார்கள். (ஏசா 7:21-22).

(5) முழுமையான நாசம் - (32:9; எரே 14:1; 44:1,20; எரே 12:19; ஓசி 13:15; மீகா 3:12)

ஏசா 7:23 அந்நாளிலே, ஆயிரம் வெள்ளிக் காசு பெறும் ஆயிரம் திராட்சச்செடியிருந்த நிலமெல்லாம் முட்செடியும் நெரிஞ்சிலுமாகும்.

7 அதிகாரம்

ஏசா 7:24 தேசமெங்கும் முட்செடியும் நெரிஞ்சிலும் உண்டாயிருப்பதினால், அம்புகளையும் வில்லையும் பிடித்து அங்கே போகவேண்டியதாயிருக்கும்.

ஏசா 7:25 மண்வெட்டியால் கொத்தப்படுகிற மலைகள் உண்டே; முட்செடிகளுக்கும் நெரிஞ்சில்களுக்கும் பயப்படுவதினால் அவைகளில் ஒன்றிற்கும் போகக்கூடாமையினால், அவைகள் மாடுகளை ஓட்டிவிடுவதற்கும், ஆடுகள் மிதிப்பதற்குமான இடமாயிருக்கும் என்றான்.

"அந்நாளிலே" - அசீரியாவின் மூலமாக யூதாவிற்கு அழிவு வந்த நாளிலே. அந்தக் காலத்தில் திராட்சச்செடிகள் இருந்த இடங்களில் முட்செடிகளும், நெரிஞ்சில்களும் இருக்கும். இந்த இடங்களில் காட்டுமிருகங்கள் வந்து குடியிருக்கும். ஒருகாலத்தில் ஜனங்களுடைய குடியிருப்பாகவும், திராட்சத் தோட்டங்களாகவும் இருந்த இடங்கள் இப்போது காட்டுமிருகங்கள் குடியிருக்கும் இடங்களாகவும், முட்செடிகளும் நெரிஞ்சில்களும் நிறைந்திருக்கும் பாழான தேசமாகவும் ஆயிற்று. (ஏசா 7:24).

8 அதிகாரம்

3. சீரியா, இஸ்ரேல் ஆகியோரின் மீது அசீரியரின் படையெடுப்பு- (2 இராஜா16:7-17:41)

ஏசா 8:1 பின்னும் கர்த்தர் என்னை நோக்கி: நீ ஒரு பெரிய பாத்திரத்தை எடுத்து மனுஷன் எழுதுகிற பிரகாரமாய் அதில் மகேர்-சாலால்-அஷ்-பாஸ் என்று எழுது என்றார்.

ஏசா 8:2 அப்பொழுது நான் உண்மையுள்ள சாட்சிக்காரராகிய ஆசாரியனான உரியாவையும், யெபெரெகியாவின் குமாரனான சகரியாவையும் அதற்குச் சாட்சிகளாக வைத்துக்கொண்டேன்.

ஏசா 8:3 நான் தீர்க்கதரிசியானவளைச் சேர்ந்தபோது, அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்றாள்; அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி: மகேர்-சாலால்-அஷ்-பாஸ் என்னும் பேரை அவனுக்கு இடு.

ஏசா 8:4 இந்தப் பாலகன், அப்பா, அம்மா என்று கூப்பிட அறியுமுன்னே, தமஸ்குவின் ஆஸ்தியும், சமாரியாவின் கொள்ளையும், அசீரியாவின் ராஜாவுக்கு முன்பாகக் கொண்டுபோகப்படும் என்றார்.

ஏசா 8:5 பின்னும் கர்த்தர் என்னை நோக்கி:

ஏசா 8:6 இந்த ஜனம் மெதுவாய் ஓடுகிற சீலோவாவின் தண்ணீர்களை அசட்டைபண்ணி, ரேத்சீனையும் ரெமலியாவின் குமாரனையும் சார்ந்து சந்தோஷிக்கிறபடியினால்,

ஏசா 8:7 இதோ, ஆண்டவர் வல்லமையுள்ள திரளான ஆற்றுநீரைப் போன்ற அசீரியாவின் ராஜாவையும், அவனுடைய சகல ஆடம்பரத்தையும் அவர்கள்மேல் புரளப்பண்ணுவார்; அது அவர்களுடைய ஓடைகளெல்லாவற்றின் மேலும் போய், அவர்களுடைய எல்லாக் கரைகள் மேலும் புரண்டு,

தீர்க்கதரிசன எண் - 10

"பின்னும் கர்த்தர் என்னை நோக்கி.........." (ஏசா 8:1-4) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. ஏசாயாவிற்கு தீர்க்கதரிசியானவள் மூலமாக ஒரு குமாரன் பிறப்பான். அவனுக்கு மகேர்-சாலால்-அஷ்-பாஸ் என்று பெயரிடப்படும். (ஏசா 8:1-3)

2. இந்தப் பாலகன், அப்பா, அம்மா என்று கூப்பிட அறியுமுன்னே, தமஸ்குவின் ஆஸ்தியும், சமாரியாவின் கொள்ளையும், அசீரியாவின் ராஜாவுக்கு முன்பாகக் கொண்டு போகப்படும் (ஏசா 8:4)

ஏசாயாவின் இரண்டாம் குமாரன்

கர்த்தர் ஏசாயாவை நோக்கி "நீ ஒரு பெரிய பாத்திரத்தை எடுத்து மனுஷன் எழுதுகிற பிரகாரமாய் அதில் மகேர்-சாலால்-அஷ்-பாஸ் என்று எழுது" என்றார். இது ஏசாயாவினுடைய குமாரனின் பெயர். இவன் ஏசாயாவிற்கு தீர்க்கதரிசினியானவள் மூலமாகப் பிறந்தான். (ஏசா 8:1-4) ஏசாயா தீர்க்கதரிசினியானவளை அறிவதற்கு முன்பாகவே அவனுடைய குமாரனைப் பற்றி இங்கு கூறப்பட்டிருக்கிறது. ஏசாயா அவனுடைய குமாரனுக்கு இடப்படும் பெயர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஓர் அடையாளமாக இருக்கும். ஏசாயா கர்த்தர் சொன்ன பிரகாரமாகவே ஒரு பாத்திரத்தை எடுத்து அதில் தன் குமாரனுடைய பெயரை எழுதினான். இந்தச் செய்தி கர்த்தரிடத்திலிருந்து வந்தது என்பதை யூதா புத்திரரும் நம்பினார்கள். (ஏசா 8:2).

இந்தத் தீர்க்கதரிசனமும், ஏசா 7:10-25 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனமும் வெவ்வேறானவையாகும். இந்தத் தீர்க்கதரிசனத்தில் ஏசாயாவின் குமாரன் இன்னும் பிறக்கவில்லை. இது அவனுடைய இரண்டாம் குமாரன். இதற்கு முந்திய தீர்க்கதரிசனத்தில் ஏசாயாவிற்கு ஏற்கெனவே ஒரு குமாரன் பிறந்திருக்கிறான். அவனுடைய பெயர் "சேயார்-யாசூப்" **"Shear-jashub"** என்பதாகும்.

8 அதிகாரம்

இந்தப் பெயருக்கு "மீதியானவர்கள் திரும்ப வருவார்கள்" **"a remnant shall return"** என்று பொருள். (ஏசா 7:3,15-16) இதுவும் யூதா தேசத்தாருக்கு ஓர் அடையாளம். யூதா தேசம் முற்றிலுமாக அழிக்கப்படுவதில்லை.

ஏசாயாவின் முதலாவது குமாரன் நன்மை தீமையை அறியும் அளவிற்கு வளர்வதற்கு முன்பாகவே சீரியரும், எப்பிராயீமியரும் அழிந்து போவார்கள்.

ஏசா 8:1-4 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனங்களை ஏசாயா கூறும்போது ஏசாயாவின் இரண்டாம் குமாரன் இன்னும் பிறக்கவில்லை. இந்தக் குழந்தை அப்பா, அம்மா என்று கூப்பிட அறியும் முன்னே இவ்விரண்டு ராஜாக்களும் மடிந்துபோவார்கள். இந்தப் பெயருக்கு "கொள்ளையில் விரைந்தோடுதல்" **"haste to the spoil"** என்று பொருள். சீரியாவின் கொள்ளையும், எப்பிராயீமின் கொள்ளையும் அசீரியாவினால் விரைந்து எடுத்துச் செல்லப்படும். (ஏசா 8:1-4) இவ்வாறாக ஏசாயாவின் இரண்டு குமாரர்களும் இஸ்ரவேலருக்கு அற்புதங்களாகவும், அடையாளங்களாகவும் இருந்தார்கள். (ஏசா 8:18).

"மகேர்-சாலால்- அஷ்-பாஸ்" **(Mahershalalhashbaz)** - வேதாகமத்தில் காணப்படும் நீளமான பெயர். இதற்கு இணையாக சங்கீதம் 56 இல் கூறப்பட்டிருக்கும் "யோனாத் - ஏலம்-ரிக்கோகீம்" **(Jonath-elem-rechokim)** என்னும் பெயரும் நீளமான பெயராகும்.

"இந்தப் பாலகன், அப்பா, அம்மா என்று கூப்பிட அறியுமுன்னே" - இந்தத் தீர்க்கதரிசனம் கூறப்பட்டு 21 மாதங்களுக்குப் பின்பு இந்தச் சம்பவம் நிறைவேறிற்று. குழந்தை பிறப்பதற்கு 9 மாதங்களும், குழந்தை பிறந்து 12 மாதங்களும் ஆக மொத்தம் 21 மாதங்களுக்குப் பின்பு அதாவது ஆகாசின் மூன்றாம் வருஷத்து ராஜ்யபாரத்தின்போது இந்தச் சம்பவம் நடைபெற்றது. (2 இராஜா16:7-18).

"பின்னும்" - ஏசா 7:10 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனத்திற்குப் பின்பு.

தீர்க்கதரிசன எண் - 11

"பின்னும் கர்த்தர் என்னை நோக்கி........." (ஏசா 8:5-9:7) ஏசா 8:5-9:6 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. ஏசா 8:6 ஆவது வசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. யூதாவின் மீது அசீரியரின் படையெடுப்பு. (ஏசா 8:5-8)
2. அந்நிய தேசங்களோடு யூதா உடன்படிக்கை பண்ணி அவற்றைச் சார்ந்திருந்ததினால் யூதாவின்மீது நியாயத்தீர்ப்பு. (ஏசா 8:9)
3. அந்நிய தேசங்களோடு செய்த உடன்படிக்கை நிலைநிற்காது. அது அபத்தமாகும். (ஏசா 8:10-12)
4. மேசியா யூதாவின் பக்தி உள்ளவர்களுக்கு பரிசுத்தஸ்தலமாயிருப்பார் ஏசா 8:13-14
5. இஸ்ரவேலின் இரண்டு கோத்திரத்துக்கும் தடுக்கலின் கல்லும், இடறுதலின் கன்மலையும், எருசலேமின் குடிகளுக்குச் சுருக்கும் கண்ணியுமாயிருப்பார். (ஏசா 8:13-14; லூக்கா 20:17; ரோமர் 9:32-33; ரோமர் 11:11; 1பேதுரு 2:7-8) அவர்கள் கர்த்தரைப் புறக்கணித்ததினால் அழிக்கப்படுவார்கள். (ஏசா 8:15)
6. அஞ்சனம் பார்த்தவர்களும், குறிகாரரிடத்தில் விசாரித்தவர்களும் இடுக்கண் அடைந்தவர்களாயும் பட்டினியாயும் தேசத்தைக் கடந்து போவார்கள்; அவர்கள் பட்டினியாயிருக்கும்போது, மூர்க்கவெறி கொண்டு, தங்கள் ராஜாவையும் தங்கள் தேவனையும் தூஷிப்பார்கள். (ஏசா 8:21)

8 அதிகாரம்

7. அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்ப்பார்கள், பூமியையும் நோக்கிப் பார்ப்பார்கள்; ஆனாலும் இதோ, இக்கட்டும் அந்தகாரமும் இருக்கும் (ஏசா 8:22)

8. இடுக்கத்தால் இருளடைந்து, அந்தகாரத்திலே தள்ளுண்டு அலைவார்கள். (ஏசா 8:22)

9. இஸ்ரவேலின் ஆவிக்குரிய அந்தகாரமும், முந்தின காலத்தில் இருந்ததுபோல இருண்டிருப்பதில்லை. (ஏசா 9:1)

10. இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் காண்பார்கள். (ஏசா 9:2; மத் 4:14-16)

11. இஸ்ரவேல் ஜாதியைத் திரளாக்கி, அதற்கு மகிழ்ச்சியைப் பெருகப் பண்ணுவார். (ஏசா 9:3)

12. இஸ்ரவேல் புத்திரர் சுமந்த நுகத்தடியையும், அவர்கள் தோளின் மேலிருந்த மிலாற்றையும், அவர்கள் ஆளோட்டியின் கோலையும் முறித்துப் போடுவார். (ஏசா 9:4-5)

13. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த பின்பு யூதாவின்மீது படையெடுத்து வருகிறவர்களுக்கு அது வாய்க்காதே போகும். (ஏசா 9:5)

14. யூதாவில் மேசியா பிறப்பார்.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. கர்த்தத்துவம் மேசியாவின் தோளின்மேலிருக்கும் (ஏசா 9:6)

2. மேசியாவின் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும். (ஏசா 9:6)

3. அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை (ஏசா 9:7)

4. தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்துவார்.

5. அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்துவார்.

6. சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்.

"இந்த ஜனம்" - ஏசா 8:4 ஆவது வசனத்தில் வடக்கு ராஜ்யமாகிய சமாரியாவைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. இவர்கள் சீரியாவின் ராஜாவாகிய தமஸ்குவின் ரேத்சீனோடு உடன்படிக்கை பண்ணிக் கொண்டார்கள். (ஏசா 8:4,6). சமாரியா யூதாவை நம்பவில்லை. அவர்கள் சீலோவாவின் தண்ணீர்களை அசட்டைபண்ணினார்கள். அவர்கள் சீரியாவோடு சந்தோஷமாக இருந்தார்கள். இதனால் அசீரியர்கள் அவர்கள்மீது வெள்ளம்போல கரைபுரண்டு வருவார்கள். (ஏசா 8:6-7) அசீரியாவின் ராஜா யூதாவின் மீதும் படையெடுத்து வருவான். (ஏசா 8:8) சீரியாவின் ராஜாவாகிய ரேத்சீனை அசீரியாவின் ராஜா அழித்தபோது இந்தச் சம்பவம் நிறைவேறிற்று. இந்தத் தீர்க்கதரிசனம் கூறப்பட்டு 3 வருஷங்களுக்குப் பின்பு இது ஓரளவு நிறைவேறுகிறது. (2இராஜா 16:5-18; 2நாளா 28:20-25) இந்தத் தீர்க்கதரிசனம் 18 வருஷங்களுக்குப்பின்பு முழுமையாக நிறைவேறிற்று. அப்போது பத்துக் கோத்திரத்தாரும் சிறையிருப்புக்குப் பிடித்துச் செல்லப்பட்டார்கள். (2இராஜா 17) இவர்களில் மீதமானோர் மனாசேயோடு ஏசா 7:8 ஆவது வசனத்தின் 65 ஆவது வருஷத்தின் முடிவில் சிறைப்பிடித்துச் செல்லப்பட்டார்கள். (2நாளா 30:1; 2நாளா 31:1; 2நாளா 33:11).

"சீலோவின் தண்ணீர்கள்" - கீகோனிலிருந்து சீலோவாம் குளத்திற்கு சீலோவின் தண்ணீர் பாய்ந்து செல்கிறது. இந்தத் தண்ணீர் யூதாவைக் குறிக்கும். ஏசா 8:7 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் "திரளான ஆற்று நீர்" அசீரியாவைக் குறிக்கும்.

8 அதிகாரம்

4. யூதாவின்மீதும் படையெடுப்பு - (2நாளா 28:16)

ஏசா 8:8 யூதாவுக்குள் புகுந்து பிரவாகித்துக் கடந்து, கழுத்துமட்டும் வரும் என்றார். இம்மானுவேலே, அவன் செட்டைகளின் விரிவு உமது தேசத்தின் விலாசத்தை மூடும்.

"இம்மானுவேல்" - ஏசாயாவில் இரண்டாம் முறையாக இந்தப் பெயர் பயன்படுத்தப் பட்டுள்ளது. (ஏசா 7:14; ஏசா 8:8) ஏசா 8:10 ஆவது வசனத்தில் இந்தப் பெயர் "தேவன் எங்களோடே இருக்கிறார்" **"God is with us"** என்று மொழிபெயர்த்துக் கூறப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்க்கதரிசனம் மேசியாவின் தேசத்தைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது. இது அவர் பிறந்த தேசம். இங்கிருந்து மேசியா எல்லா தேசங்களையும் ஆளுகை செய்வார். (ஏசா 8:8; ஏசா 9:6-7; தானி 7:13-14; சக 14; வெளி 11:15).

"அவன் செட்டைகளின் விரிவு உமது தேசத்தின் விலாசத்தை மூடும்" - அசீரிய சேனையின் பல்வேறு பிரிவுகள் இஸ்ரவேலையும், யூதாவையும் வந்து மூடிப்போடும். சத்துருக்கள் திரளாக வருவார்கள். எல்லோரையும் அழிப்பார்கள்.

5. தெய்வீக தலையீடு - (8:9-9:7)

(1) தவறான சார்ந்திருத்தல் - (8:19,21; 31:3; எரே 17:5; எசே 17:15; ஒசி 7:8; 1கொரி 3:18)

ஏசா 8:9 ஜனங்களே, நீங்கள் கூட்டங் கூடுங்கள், முறியடிக்கப்படுவீர்கள்; தூர தேசத்தாராகிய நீங்கள் எல்லாரும் செவிகொடுங்கள்; இடைக்கட்டிக் கொள்ளுங்கள், முறிந்தோடுவீர்கள்,

ஏசா 8:10 ஆலோசனை செய்யுங்கள், அது அபத்தமாகும்; வார்த்தையை வசனியுங்கள், அது நிற்காது; தேவன் எங்களோடே இருக்கிறார்.

ஏசா 8:11 கர்த்தருடைய கரம் என்மேல் அமர்ந்து, அவர் என்னுடனே பேசி, நான் இந்த ஜனத்தின் வழியிலே நடவாதபடி எனக்குப் புத்திசொல்லி விளம்பினதாவது:

ஏசா 8:12 இந்த ஜனங்கள் கட்டுப்பாடு என்று சொல்லுகிறதையெல்லாம் நீங்கள் கட்டுப்பாடு என்று சொல்லாமலும், அவர்கள் பயப்படுகிற பயத்தின்படி நீங்கள் பயப்படாமலும், கலங்காமலும்,

"கர்த்தருடைய கரம் என்மேல் அமர்ந்து" - யூதா பயப்படக்கூடாது. ஏனெனில் கர்த்தருடைய கரம் யூதாவின்மேல் அமர்ந்திருக்கிறது. சீரியாவிற்கோ, எப்பிராயீமிற்கோ, அசீரியாவிற்கோ யூதா பயப்படக்கூடாது. (ஏசா 8:11-12)

"நீங்கள் பயப்படாமலும், கலங்காமலும்" - இந்த வாக்கியம் 1பேதுரு 3:14 ஆவது வசனத்தில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

(2) உண்மையான சார்ந்திருத்தல் - இரண்டு அம்சம் - (8:19; 58:6; எரே 17:5; எசே 11:14)

ஏசா 8:13 சேனைகளின் கர்த்தரையே பரிசுத்தம்பண்ணுங்கள்; அவரே உங்கள் பயமும், அவரே உங்கள் அச்சமுமாயிருப்பாராக.

ஏசா 8:14 அவர் உங்களுக்குப் பரிசுத்த ஸ்தலமாயிருப்பார்; ஆகிலும் இஸ்ரவேலின் இரண்டு கோத்திரத்துக்கும் தடுக்கலின் கல்லும், இடறுதலின் கன்மலையும், எருசலேமின் குடிகளுக்குச் சுருக்கும் கண்ணியுமாயிருப்பார்.

ஏசா 8:15 அவர்களில் அநேகர் இடறி விழுந்து நொறுங்கிச் சிக்குண்டு பிடிபடுவார்கள்.

ஏசா 8:16 சாட்சி ஆகமத்தைக் கட்டி, என் சீஷருக்குள்ளே வேதத்தை முத்திரையிடு என்றார்.

ஏசா 8:17 நானோ யாக்கோபின் குடும்பத்துக்குத் தமது முகத்தை மறைக்கிற கர்த்தருக்காகக் காத்திருந்து, அவருக்கு எதிர்பார்த்திருப்பேன்.

8 அதிகாரம்

“சேனைகளின் கர்த்தரையே பரிசுத்தம் பண்ணுங்கள்” - இந்த வாக்கியம் 1பேதுரு 3:15 ஆவது வசனத்தில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

“அவர் உங்களுக்குப் பரிசுத்த ஸ்தலமாயிருப்பார்” - மேசியாவின் வருகையையும், பாலஸ்தீனத்தில் அவருடைய ஊழியத்தையும் குறித்துக் கூறப்படும் நேரடியான தீர்க்கதரிசனம். *(ஏசா 8:14; ஏசா 20:17; ரோமர் 9:32-33; ரோமர் 11:11; 1பேதுரு 2:7-8).*

மேசியாவினுடைய ஊழியத்தினால் ஏற்படும் விளைவு

1. அவர் தம்மிடத்தில் பக்தியுள்ளவர்களுக்குப் பரிசுத்த ஸ்தலமாயிருப்பார் *(ஏசா 8:14)*
2. தமக்கு எதிராகக் கலகம் பண்ணுகிறவர்களுக்கு அவர் தடுக்கலின் கல்லாக இருப்பார். *(ஏசா 8:14; லூக்கா 20:17; ரோமர் 9:32; ரோமர் 11:11; 1பேதுரு 2:8).*
3. தமக்கு எதிராகக் கலகம் பண்ணுகிறவர்களுக்கு அவர் இடறுதலின் கன்மலையாக இருப்பார். *(ஏசா 8:14; ரோமர் 9:33; 1பேதுரு 2:7-8).*
4. தமக்கு எதிராகக் கலகம் பண்ணுகிறவர்களுக்கு அவர் சுருக்கும் கண்ணியுமாயிருப்பார். *(ஏசா 8:14)*

பரிசுத்தஸ்தலம் (sanctuary) - מִקְדָּשׁ - mik-dawsh' - 4720

ஆண்பால் பெயர்ச்சொல் - ஸ்தலம், பரிசுத்தபங்கு, பரிசுத்த ஆலயம், பரிசுத்தஸ்தானம், வாசஸ்தலம் **(holy place, hallowed parts once; chapel)**

“தடுக்கலின் கல்லும், இடறுதலின் கன்மலையும்” - இந்த வாக்கியம் 1பேதுரு 2:8 ஆவது வசனத்தில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

“இஸ்ரவேலின் இரண்டு கோத்திரத்துக்கும்” - இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்திற்கும் மேசியா ஊழியம் செய்வார்.

சுருக்கு (gin) - פַּח - pakh - 6341

ஆண்பால் பெயர்ச்சொல் - சுருக்கு **(a noose for catching birds and other animals) “gin”** *(ஏசா 8:14; யோபு 18:9);* **and “snare”** *(யோசு 23:13; யோபு 22:10; சங் 11:6; சங் 69:22; சங் 91:3; சங் 119:110; சங் 124:7; சங் 140:5; சங் 141:9; சங் 142:3; நீதி 7:23; நீதி 22:5; பிர 9:12; ஏசா 24:17,18; எரே 18:22; எரே 48:43,44; ஓசி 5:1; ஓசி 9:8; ஆமோ 3:5).*

“அநேகர் இடறி விழுந்து” - மேசியாவை மறுதலிப்பதினால் பலர் இடறி விழுந்து அழிந்து போவார்கள். *(மத் 21:33-45; மத் 23:37-39; லூக்கா 21:20-24).*

“சாட்சி ஆகமத்தைக் கட்டி” - இந்தத் தீர்க்கதரிசனம் இனிமேல் நிறைவேறும். ஆகையினால் இந்த வாக்கியங்கள் பாதுகாப்பாக முத்திரையிடப்பட வேண்டும். *(ஏசா 8:1-2)*

“அவருக்கு எதிர்பார்த்திருப்பேன்” - இந்த வாக்கியம் எபி 2:13 ஆவது வசனத்தில் “நான் அவரிடத்தில் நம்பிக்கையாயிருப்பேன்” என்று மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

(3) விசுவாசத்திற்கு அடையாளங்கள் - *(சக 6:14)*

ஏசா 8:18 இதோ, நானும், கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் சீயோன் பர்வதத்தில் வாசமாயிருக்கிற சேனைகளின் கர்த்தராலே இஸ்ரவேலில் அடையாளங்களாகவும் அற்புதங்களாகவும் இருக்கிறோம்.

8 அதிகாரம்

"நானும், கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும்" - இதற்கு இரண்டு விதமான வியாக்கியானம் கொடுக்கப்படுகிறது. அவையாவன:

1. ஏசாயாவும், அவருடைய பிள்ளைகளும் (ஏசா 7:3,15-16; ஏசா 8:1-4,18)

2. மேசியாவும், அவருடைய சீஷர்களும், சபையும் (எபி 2:12-13)

"இஸ்ரவேலில் அடையாளங்களாகவும் அற்புதங்களாகவும் இருக்கிறோம்" - இதற்கு இரண்டு விதமான வியாக்கியானம் கொடுக்கப்படுகிறது. அவையாவன:

1. ஏசாயாவும், அவருடைய குமாரரும் இஸ்ரவேலுக்கு அடையாளங்களாகவும், அற்புதங்களாகவும் இருந்தார்கள். (ஏசா 7:3,15-16; ஏசா 8:1-4,18; ஏசா 20:1-4)

2. மேசியாவும், அவருடைய சீஷர்களும், உலகத்திற்கு அடையாளங்களாகவும், அற்புதங்களாகவும் இருந்தார்கள். (மத் 12:39-40; மத் 16:1-4; மத் 24:30; மாற்கு 16:15-20; லூக்கா 2:12,34; யோவான் 12:32-33; யோவான் 14:12-15; யோவான் 20:30; அப் 2:22,43; அப் 4:30; அப் 5:12; அப் 8:13; அப் 14:3; ரோமர் 15:19; 1கொரி 14:22; 2கொரி 12:12; எபி 2:4)

(4) தவறான சார்ந்திருத்தலும் மெய்யான சார்ந்திருத்தலும்

ஏசா 8:19 அவர்கள் உங்களை நோக்கி: அஞ்சனம் பார்க்கிறவர்களிடத்திலும், முணுமுணென்று ஓதுகிற குறிகாரரிடத்திலும் விசாரியுங்கள் என்று சொல்லும் போது, ஜனங்கள் தன் தேவனிடத்தில் விசாரிக்க வேண்டிய அல்லவோ? உயிருள்ளவர்களுக்காகச் செத்தவர்களிடத்தில் விசாரிக்கலாமோ?

ஏசா 8:20 வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்க வேண்டும்; இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை.

"அஞ்சனம் பார்க்கிறவர்கள்" **(familiar spirits)** - அஞ்சனம் பார்க்கிறவர்களும், குறிகாரரிடத்தில் விசாரிக்கிறவர்களும் கர்த்தரைத் தேடமாட்டார்கள். கர்த்தரிடத்தில் விசாரிக்கமாட்டார்கள். அஞ்சனம் பார்க்கிறவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கேற்ற பிரகாரம் பேசமாட்டார்கள். (ஏசா 8:19-20)

ஏசாயாவின் காலத்திலும், ஆகாஸ் ராஜாவின் காலத்திலும் இஸ்ரவேல் ஜாதியார் கர்த்தரை நம்பி அவருடைய சித்தத்தைத் தேடவில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் அஞ்சனம் பார்க்கிறவர்களையும், குறிகாரர்களையும் நம்பி அவர்களைத் தேடினார்கள். (2இராஜா 16:2-4; 2இராஜா 17:3-23; 2இராஜா 21:1-9; 2நாளா 28:1-4; 2நாளா 33:1-10). சவுலும் இந்தப் பாவத்தைச் செய்தான். (1சாமு 28:7-25; 1சாமு 10:13-14)

முணுமுணென்று ஓதுதல் **(peep) - צָפַף - tsaw-faf' - 6850**

வினைச்சொல் - குசுகுசென்று, புலம்பு, முணுமுணென்று, கீச்சென்று, உரை, முணுமுணு, கீச்சென்று சத்தமிடு **(to coo or chirp as a bird; whisper) peep** (ஏசா 8:19; ஏசா 10:14); **whisper** (ஏசா 29:4); **and chatter** (ஏசா 29:4)

"அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை" - ஏசாயா தீர்க்கதரிசி யூதா ஜனத்தாரிடம் வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும் என்று கூறுகிறார். பிசாசின் ஆவிகள் வேதத்திற்கும், சாட்சி ஆகமத்திற்கும் முரணாகப் பேசும். தேவனுடைய வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அது பிசாசின் வார்த்தையாகத்தான் இருக்கும். கர்த்தருடைய வார்த்தையே வெளிச்சம். சத்தியத்தையும், வெளிச்சத்தையும் விரும்புகிறவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்குச் செவிகொடுத்து அதற்குக் கீழ்ப்படிய வேண்டும். தேவனுடைய வார்த்தைக்கு முரணான அனைத்தையும் விட்டுவிலகி வரவேண்டும்.

8 அதிகாரம்

(5) தவறான சார்ந்திருத்தலின் விளைவு

ஏசா 8:21 இடுக்கண் அடைந்தவர்களாயும் பட்டினியாயும் தேசத்தைக் கடந்து போவார்கள்; அவர்கள் பட்டினியாயிருக்கும்போது, மூர்க்கவெறி கொண்டு, தங்கள் ராஜாவையும் தங்கள் தேவனையும் தூஷிப்பார்கள்.

ஏசா 8:22 அவர்கள் அண்ணாந்து பார்ப்பார்கள், பூமியையும் நோக்கிப் பார்ப்பார்கள்; ஆனாலும் இதோ, இக்கட்டும் அந்தகாரமும் இருக்கும்; இடுக்கத்தால் இருளடைந்து, அந்தகாரத்திலே தள்ளுண்டு அலைவார்கள்.

"இடுக்கண் அடைந்தவர்களாயும் பட்டினியாயும்" - அஞ்சனக்காரர்களைப் பார்க்கிறவர்கள் தங்களுடைய வாழ்வில் செழிப்படைய மாட்டார்கள். அவர்களுக்குக் குழப்பமும், இருளுமே மிஞ்சும். அசுத்த ஆவிகளினால் அவர்கள் பல இடுக்கண்களை அடைவார்கள். வாழ்வில் செழிப்பில்லாமல் பட்டினியாய் இருப்பார்கள்.

"தேசத்தைக் கடந்து போவார்கள்" - கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்காதவர்கள் ஆவிக்குரிய இருட்டில் ஜீவித்து, அதில் நடந்து செல்வார்கள். அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்தாலும், பூமியை நோக்கிப் பார்த்தாலும் அவர்களுக்கு இக்கட்டும் அந்தகாரமும் இருக்கும். அவர்கள் இடுக்கத்தால் இருளடைந்து, அந்தகாரத்திலே தள்ளுண்டு அலைவார்கள். (ஏசா 8:22).

9 அதிகாரம்

(6) இஸ்ரவேலின் இரண்டு அம்ச நம்பிக்கை - (ஏசா 9:1-7)

(அ) மேசியாவின் முதல்வருகையில் மீட்பு - (7:14; 40:1; 42:1; 49:1; 52:13; 61:1; மீகா 5:1; சக 9:9; மல் 3:1; மத் 1; கொலோ 2:14)

ஏசா 9:1 ஆகிலும் அவர் செபுலோன் நாட்டையும், நப்தலி நாட்டையும் இடுக்கமாய் ஈனப்படுத்தின முந்தின காலத்திலிருந்தது போல அது இருண்டிருப்பதில்லை; ஏனென்றால் அவர் கடற்கரையருகிலும், யோர்தான் நதியோரத்திலுமுள்ள புறஜாதியாருடைய கலிலேயாவாகிய அத்தேசத்தைப் பிற்காலத்திலே மகிமைப்படுத்துவார்.

ஏசா 9:2 இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின்மேல் வெளிச்சம் பிரகாசித்தது.

ஏசா 9:3 அந்த ஜாதியைத் திரளாக்கி, அதற்கு மகிழ்ச்சியைப் பெருகப் பண்ணினீர்; அறுப்பில் மகிழ்கிறது போலவும், கொள்ளையைப் பங்கிட்டுக் கொள்ளுகையில் களிகூருகிறது போலவும், உமக்கு முன்பாக மகிழுகிறார்கள்.

ஏசா 9:4 மீதியானியரின் நாளில் நடந்தது போல, அவர்கள் சுமந்த நுகத்தடியையும், அவர்கள் தோளின்மேலிருந்த மிலாற்றையும், அவர்கள் ஆளோட்டியின் கோலையும் முறித்துப்போட்டீர்.

ஏசா 9:5 அமளியாய் யுத்தம்பண்ணுகிற வீரருடைய ஆயுதவர்க்கங்களும், இரத்தத்தில் புரண்ட உடுப்பும் அக்கினிக்கு இரையாகச் சுட்டெரிக்கப்படும்.

"முந்தின காலத்திலிருந்ததுபோல அது இருண்டிருப்பதில்லை" - மேசியா வரும்போது யூதா தேசத்தில் காணப்படும் ஆவிக்குரிய இருளை ஏசாயா இவ்வாறு ஒப்பிட்டுக் கூறுகிறார்.

1. பாஷாவின் காலத்தில் சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத்தால் நியாயந்தீர்க்கப் பட்டதுபோல இருக்கும். (1இராஜா 15:20)

2. இஸ்ரவேலில் ஆசகேலின் கொடுமையான படையெடுப்புபோல இருக்கும். (2இராஜா 10:32-33)

3. மேசியா வரும்போது இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் காண்பார்கள். (ஏசா 9:1-2)

"இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்" - இந்த வாக்கியம் மத் 4:14-16 ஆகிய வசனங்களில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. (லூக்கா 1:79)

"ஜாதியைத் திரளாக்கி" - கர்த்தர் ஜாதியை எண்ணிக்கையில் திரளாக்குவார். மகிழ்ச்சியை அதிகரிக்கச்செய்வார். தெய்வீகக் கிரியையினால் யூதாவிற்கு அசீரியரிடமிருந்து விடுதலை உண்டாகும். கிதியோனின் காலத்தில் உண்டானதுபோல உண்டாகும். (ஏசா 9:4-5; ஏசா 36:1-37:38; 2இராஜா 18:1-19:37).

"அதற்கு மகிழ்ச்சியைப் பெருகப்பண்ணினீர்" - இந்த வாக்கியம் ஆங்கில பாஷையில் "not increased the joy" என்று பொருள்படுமாறு எழுதப்பட்டிருக்கிறது. இதில் "not' என்னும் வார்த்தை இருக்கக்கூடாது. யூதா தேசத்தாரின் மகிழ்ச்சியைக் கர்த்தர் பெருகப்பண்ணினார். அவர்களுடைய சத்துருக்கள் முறித்துப்போடப் பட்டார்கள். ஆகையினால் அவர்களுடைய மகிழ்ச்சி பெருகிற்று. (ஏசா 9:4-5).

9 அதிகாரம்

(ஆ) மேசியாவின் இரண்டாவது வருகையில் தாவீதின் இராஜ்ஜியம் புதுப்பிக்கப் படுகிறது - (எரே 23:30; 33; தானி 2:44; 7:13-14; சக 14; லூக் 1:33; வெளி 20)

ஏசா 9:6 நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்.

ஏசா 9:7 தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும் படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை; சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்.

"நமக்கு" - இந்த வாக்கியத்தில் நமக்கு என்பது இஸ்ரவேல் கோத்திரத்தார் அனைவரையும் குறிக்கும். (ஏசா 8:14) ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு (ஆதி 12:1-3; ஆதி 17:19; ஆதி 28:14), யூதா (ஆதி 49:10; எபி 7:14; வெளி 5:5) ஈசாய் (ஏசா 11:1) தாவீது (2சாமு 7; சங் 89:3-4,35-37; மத் 1:1-16; லூக்கா 3:23-38; ரோமர் 1:3) இஸ்ரவேல் தேசம் (ரோமர் 9:4-13) ஆகியோர் மூலமாக இயேசு கிறிஸ்து வந்தார்.

பாலகன் (child) - יֶלֶד - yeh'-led - 3206

ஆ.பெ.சொ. - வாலிபன், பிள்ளை, குமாரர், இளைஞன், பிள்ளையாண்டான், குஞ்சு, குட்டி, பாலகன், புத்திரர், ஆண்குழந்தை, ஆண்பிள்ளை (a child; boy; son) - இஸ்ரவேல் தேசம் ஆவிக்குரிய இருளில் இருந்த போது ஏசாயா தீர்க்கதரிசி இந்தத் தரிசனத்தைக் காண்கிறார். (ஏசா 8:21-9:5) மனாசேயும், எப்பிராயீமும் ஒருவரையொருவர் பட்சிக்கிறார்கள். (ஏசா 9:19) சகோதரர் ஒருவரையொருவர் தப்பவிடாமல் அழிக்கிறார்கள். இவர்கள் இருவருமே யூதாவின்மீது யுத்தம் பண்ணுவார்கள். இந்த நிகழ்ச்சி எப்பிராயீமின் ராஜாவாகிய பெக்காவின் காலத்தில் நிறைவேறிற்று. இவன் ஆகாசைத் தோற்கடித்து 1,20,000 யூதா கோத்திரத்தாரை ஒரே நாளில் கொன்று 2இலட்சம் யூதா தேசத்தாரைச் சிறைப்பிடித்துச் சென்றான். (2நாளா 28:6-15).

ஏசாயாவில் "பாலகன்" என்னும் வார்த்தையின் பயன்பாடு

1. வாலிபனும், முதிர்வயது உள்ளவனும் (ஏசா 3:5)
2. ஏசாயாவின் முதலாவது குமாரன் (ஏசா 7:3,16)
3. ஏசாயாவின் இரண்டாவது குமாரன் (ஏசா 8:1-4)
4. பாலகனாகிய மேசியா (ஏசா 9:6-7)
5. எண்ணி எழுதும் சிறுபிள்ளை (ஏசா 10:19)
6. ஆயிரம் வருஷ அரசாட்சியில் சிறுபையன் (ஏசா 11:6)
7. ஆயிரம் வருஷ அரசாட்சியில் பால்குடிக்கும் குழந்தை (ஏசா 11:8)
8. ஆயிரம் வருஷ அரசாட்சியில் பால்மறந்த பிள்ளை (ஏசா 11:8)
9. ஆயிரம் வருஷ அரசாட்சியில் நூறுவயது சென்ற மரிக்கிற வாலிபன் (ஏசா 65:20)

9 அதிகாரம்

10. கர்ப்ப வேதனை வரும்முன் பிறந்த ஆண்பிள்ளை (ஏசா 66:7)

"பிறந்தார்" - இந்த வாக்கியம் லூக்கா 2:11 ஆவது வசனத்தில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. இது ஏசா 7:14; ஏசா 11:1; ஆதி 3:15 ஆகிய வசனங்களின் நிறைவேற்றமாகும்.

"குமாரன்" - கர்த்தர் ஒரு குமாரத்தியைக் கொடுக்காமல் ஒரு குமாரனைக் கொடுத்திருக்கிறார். மனுஷனுக்கு ஆளுகை செய்யும் பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஜாதியை மீட்பதற்கு ஒரு மனுஷன் தேவைப்படுகிறான். மீட்பில் மனுஷனும், ஸ்திரீயும் பங்குவகிக்கிறார்கள். மீட்பர் ஸ்திரீயின் வித்தாகப் பிறந்திருக்கிறார். தேவனுடைய தீர்க்கதரிசனத்தின் பிரகாரமாகவும், தேவனுடைய நியதியின் பிரகாரமாகவும் ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி மேசியாவைப் பெறுகிறாள். (ஏசா 9:6; ஏசா 7:14; ஆதி 3:15; கலா 4:4).

"கொடுக்கப்பட்டார்" - இந்தத் தீர்க்கதரிசனம் கூறப்படும்போது மேசியா எப்பொழுது கொடுக்கப்படுவார் என்று அறிவிக்கப்படவில்லை. ஏசாயா முன்னறிவித்த தீர்க்கதரிசனங்கள் ஒவ்வொன்றாக அதனதன் காலங்களில் நிறைவேறிற்று.

கர்த்தத்துவம் (government) - מִשְׂרָה - mis-raw' - 4951

பெண்பால் பெயர்ச்சொல் - கர்த்தத்துவம், இராஜ்ஜியம், ஆளுகை **(empire; government)** (ஏசா 9:6-7).

"அவர் தோளின்மேலிருக்கும்" - ஆளுகை செய்வது, நியாயத்தீர்ப்பு செய்வது ஆகியவை மேசியாவின் பொறுப்புக்களாகும். (ஏசா 11:1-5; தானி 7:13-14; லூக்கா 1:32-33; 1கொரி 15:24-28; வெளி 11:15; வெளி 20:4-10).

மேசியாவின் நாமங்கள்

1. அதிசயமானவர்.
2. ஆலோசனைக்கர்த்தா.
3. வல்லமையுள்ள தேவன்
4. நித்திய பிதா (எபி 1:2)
5. சமாதானப்பிரபு (ஏசா 9:6; ஏசா 2:2-4).

அதிசயமானவர் (wonderful) - פֶּלֶא - peh'-leh - 6382

ஆ.பெ.சொ. - அற்புதம், அதிசயம், ஆச்சரியம், அதிசயமானது, ஆச்சரியமானது, அதிசயமானவர் **(a miracle; a marvelous thing; wonderful) wonder** (ஏசா 29:14; யாத் 15:11; சங் 77:11-15; சங் 88:10-12; சங் 89:5; தானி 12:6); **wonderful** (ஏசா 9:6; ஏசா 25:1; சங் 119:129); **wonderfully** (புல 1:9); **marvelous things** (சங் 78:12).

ஆலோசனைக்கர்த்தா (counsellor) - יָעַץ - yeh-awf' - 3289

ஆ.பெ.சொ. - வேகம் **(advise; consult; to deliberate; guide)**

வல்லமையுள்ளவர் (mighty God) - גִּבּוֹר - ghib-bore' - 1368

பெயரடை-பலவானான், பலத்த, பராக்கிரமசாலியான, வல்லமையான, வீரரான, பலசாலியான, பிரதான, திடனான **(powerful; mighty; strong; champion; chief)**

தேவன் (mighty) - אֵל - ale - 410

ஆ. பெ. சொல் - வல்லமை **(Almighty; the Strong One) "God"** (ஏசா 9:6; யோவான் 1:1; யோவான் 20:28; ரோமர் 9:5; 1தீமோ 3:16; எபி 1:8; 1யோவான் 5:20).

9 அதிகாரம்

நித்தியமான காரியங்கள்

1. தேவகுமாரன் (ஏசா 9:6)
2. அவருடைய கர்த்தத்துவம் (ஏசா 9:7)
3. கர்த்தத்துவத்தினால் உண்டாகும் சமாதானம்
4. தாவீதின் சிங்காசனம் (ஏசா 9:7; 2சாமு 7; சங் 89:4; லூக்கா 1:32-33)
5. தாவீதின் ராஜ்யம் (ஏசா 9:7; 2சாமு 7; லூக்கா 1:32-33; வெளி 11:15)

6. நான்கு பாவங்களும் நியாயத் தீர்ப்பும் - (ஏசா 9:8-10:4; எரே 5:11; 9:8)

(1) இஸ்ரவேல்மீது நியாயத்தீர்ப்பு - (9:8-17; 2இராஜா 16-17)

(அ) பாவம் - சுய நம்பிக்கை

ஏசா 9:8 ஆண்டவர் யாக்கோபுக்கு ஒரு வார்த்தையை அனுப்பினார்; அது இஸ்ரவேலின்மேல் இறங்கிற்று.

ஏசா 9:9 செங்கல்கட்டு இடிந்துபோயிற்று, பொளிந்த கல்லாலே திரும்பக் கட்டுவோம்; காட்டத்தி மரங்கள் வெட்டிப் போடப்பட்டது, அவைகளுக்குப் பதிலாகக் கேதுரு மரங்களை வைப்போம் என்று,

ஏசா 9:10 அகந்தையும், மனப் பெருமையுமாய்ச் சொல்லுகிற எப்பிராயீமரும், சமாரியாவின் குடிகளுமாகிய எல்லா ஜனத்துக்கும் அது தெரியவரும்.

தீர்க்கதரிசன எண் - 12

"ஆண்டவர் யாக்கோபுக்கு ஒரு வார்த்தையை அனுப்பினார்; அது இஸ்ரவேலின்மேல் இறங்கிற்று......." (ஏசா 9:8-10:4) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. எப்பிராயீமருக்கும், சமாரியாவின் குடிகளுக்கும் இந்தத் தீர்க்கதரிசனம் தெரியவரும். (ஏசா 9:8-10)
2. கர்த்தர் ரேத்சீனுடைய சத்துருக்களை அவர்கள்மேல் உயர்த்துவார். (ஏசா 9:11)
3. முற்புறத்தில் சீரியரும், பிற்புறத்தில் பெலிஸ்தரும் வந்து, இஸ்ரவேலைத் திறந்த வாயால் பட்சிப்பார்கள் (ஏசா 9:12)
4. இஸ்ரவேலரைப் பாவம் செய்ய பண்ணியவர்களைக் கர்த்தர் ஒரேநாளிலே வெட்டிப்போடுவார். (ஏசா 9:13-15).
5. இந்த ஜனத்தை நடத்துகிறவர்கள் எத்தருமாய், அவர்களால் நடத்தப் படுகிறவர்கள்நாசமடைகிறவர்களுமாய் இருக்கிறார்கள். (ஏசா 9:16).
6. ஆண்டவர் அவர்கள் வாலிபர்மேல் பிரியமாயிருப்பதில்லை (ஏசா 9:17).
7. அவர்களிலிருக்கிற திக்கற்ற பிள்ளைகள் மேலும் விதவைகள்மேலும் கர்த்தர் இரங்குவதுமில்லை (ஏசா 9:17).
8. இஸ்ரவேலின் துன்மார்க்கம் அவர்களுடைய அழிவிற்குக் காரணமாகும். (ஏசா 9:18).
9. சேனைகளின் கர்த்தருடைய சினத்தால் தேசம் அந்தகாரப்படும். (ஏசா 9:19).
10. ஜனங்கள் அக்கினிக்கு இரையாவார்கள்
11. ஒருவனும் தன் சகோதரனைத் தப்பவிடான்.

ஏசாயா - தொகுப்புரை

9 அதிகாரம்

12. வலதுபுறத்தில் பட்சித்தாலும் பசித்திருப்பார்கள்; இடதுபுறத்தில் தின்றாலும் திருப்தியடையார்கள் (ஏசா 9:20).

13. அவனவன் தன் தன் புயத்தின் மாம்சத்தைத் தின்பான்.

14. இஸ்ரவேலிலே உள்நாட்டுக் குழப்பம் உண்டாகும். (ஏசா 9:21).

15. என் ஜனத்தில் சிறுமையானவர்களின் நியாயத்தைப் புரட்டவும், விதவைகளைச் சூறையாடவும், திக்கற்ற பிள்ளைகளைக் கொள்ளையிடவும் அநியாயம் செய்கிறவர்களுக்கு ஐயோ. (ஏசா 10:1).

16. அநியாயமான தீர்ப்புகளைச் செய்கிறவர்களுக்கும், கொடுமையான கட்டளைகளை எழுதுகிறவர்களுக்கும் ஐயோ (ஏசா 10:2)

17. தூரத்திலிருந்து பாழ்க்கடிப்பின் நாள் வரும். அவர்களுக்கு உதவி செய்வார் ஒருவரும் இருக்கமாட்டார்கள். (ஏசா 10:3).

18. கர்த்தர் அவர்களைக் கைவிட்டு விடுவார். அவர்கள் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்வதற்கு அவர்களை விட்டுவிடுவார். (ஏசா 10:4).

"இஸ்ரவேலின்மேல் இறங்கிற்று" - இந்தத் தீர்க்கதரிசனம் யூதாவிற்கும், எப்பிராயீமிற்கும் பொருந்தும். (ஏசா 9:8-9,11-12).

"செங்கல்கட்டு இடிந்துபோயிற்று" - தேவனுடைய நியாயத்தீர்ப்பு ஜனங்கள்மீது வந்திருக்கிறது. ஆனால் ஜனங்களோ அதை தேவனுடைய நியாயத்தீர்ப்பு என்று இன்னும் புரிந்து கொள்ளவில்லை. செங்கல் கட்டுக்களுக்குப் பதிலாகப் பொளிந்த கல்லாலே திரும்பக் கட்டுவோம் என்று ஜனங்கள் ஆணவமாகக் கூறுகிறார்கள். காட்டத்தி மரங்களுக்குப் பதிலாக கேதுருமரங்களை வைப்போம் என்று இறுமாப்பாகப்பேசுகிறார்கள். (1இராஜா 10:27; 2நாளா 1:15; 2நாளா 9:27).

(ஆ) நியாயத்தீர்ப்பு - (ஏசா 5:24)

ஏசா 9:11 ஆதலால் கர்த்தர் ரேத்சீனுடைய சத்துருக்களை அவர்கள்மேல் உயர்த்தி, அவர்களுடைய மற்றச் சத்துருக்களை அவர்களோடே கூட்டிக் கலப்பார்.

ஏசா 9:12 முற்புறத்தில் சீரியரும், பிற்புறத்தில் பெலிஸ்தரும் வந்து, இஸ்ரவேலைத் திறந்தவாயால் பட்சிப்பார்கள்; இவையெல்லாவற்றிலும் அவருடைய கோபம் ஆறாமல், இன்னும் அவருடைய கை நீட்டினபடியே இருக்கிறது.

"ரேத்சீனுடைய சத்துருக்கள்" - அசீரியர்கள் ரேத்சீனுடைய சத்துருக்களாக இருந்தார்கள். இவர்கள் ரேத்சீனை அழித்தார்கள். (2இராஜா 16:5-18).

"இஸ்ரவேலைத் திறந்த வாயால் பட்சிப்பார்கள்" - இந்த வாக்கியம் யூதாவிற்கு பொதுவாகக் கூறப்பட்டிருக்கிறது. சீரியர் எப்பிராயீமரோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறார்கள். (ஏசா 7:1-9) இவர்கள் யூதாவின்மீது யுத்தம் பண்ணினார்கள். (2நாளா 28:5-8,16-25).

"அவருடைய கோபம் ஆறாமல், இன்னும் அவருடைய கை நீட்டினபடியே இருக்கிறது" - ஏசாயாவில் இந்த வாக்கியம் ஐந்து தடவை கூறப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய கோபம் இன்னும் ஆறவில்லை. ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி இன்னும் கர்த்தரிடத்தில் மனந்திரும்தி வரவில்லை. (ஏசா 5:25; ஏசா 9:12,17,21; ஏசா 10:4). கர்த்தர் இஸ்ரவேலைத் தண்டிக்கும் போது ஒவ்வொரு முறையும் அவர்களுக்குத் தண்டனையைக் கொடுத்துவிட்டு இந்த வாக்கியத்தையும் கூறுகிறார்.

(இ) பாவம் - இரக்கமின்மை

ஏசா 9:13 ஜனங்கள் தங்களை அடிக்கிறவரிடத்தில் திரும்பாமலும், சேனைகளின் கர்த்தரைத் தேடாமலும் இருக்கிறார்கள்.

ஏசா 9:14 ஆகையால் கர்த்தர் இஸ்ரவேலிலே தலையையும், வாலையும், கிளையையும், நாணலையும், ஒரே நாளிலே வெட்டிப் போடுவார்.

9 அதிகாரம்

ஏசா 9:15 மூப்பனும் கனம் பொருந்தினவனுமே தலை, பொய்ப்போதகம் பண்ணுகிற தீர்க்கதரிசியே வால்.

ஏசா 9:16 இந்த ஜனத்தை நடத்துகிறவர்கள் எத்தருமாய், அவர்களால் நடத்தப்படுகிறவர்கள் நாசமடைகிறவர்களுமாய் இருக்கிறார்கள்.

தண்டனைக்குக் காரணம்

1. ஜனங்கள் தங்களை அடிக்கிறவரிடத்தில் திரும்பவில்லை.
2. சேனைகளின் கர்த்தரைத் தேடாமல் இருக்கிறார்கள்.

"இந்த ஜனத்தை நடத்துகிறவர்கள் எத்தர்" - இஸ்ரவேலின் தலைவர்கள் எத்தராக இருக்கிறார்கள். ஆகையினால் ஒரேநாளில் அவர்கள் அடிக்கப்பட்டார்கள். (ஏசா 9:14-15)

(ஈ) நியாயத்தீர்ப்பு - (ஏசா 5:24)

ஏசா 9:17 ஆதலால், ஆண்டவர் அவர்கள் வாலிபர் மேல் பிரியமாயிருப்பதில்லை; அவர்களிலிருக்கிற திக்கற்ற பிள்ளைகள் மேலும் விதவைகள் மேலும் இரங்குவதுமில்லை; அவர்கள் அனைவரும் மாயக்காரரும் பொல்லாதவர்களுமாயிருக்கிறார்கள்; எல்லா வாயும் ஆகாமியம் பேசும்; இவையெல்லாவற்றிலும் அவருடைய கோபம் ஆறாமல், இன்னும் அவருடைய கை நீட்டினபடியே இருக்கிறது.

கர்த்தருடைய இரக்கத்தைப் பெறாதவர்கள்

1. வாலிபர்
2. திக்கற்றபிள்ளைகள்
3. விதவைகள்

பொதுவாக இவர்கள் கர்த்தருடைய இரக்கத்தைப் பெறுவார்கள். ஆனால் தம்முடைய கோபத்தின் நிமித்தம் கர்த்தர் இவர்கள்மேல் பிரியமாயிருப்பதில்லை.

இரக்கம் காண்பிக்கப்படாத பாவங்கள்

1. மாயக்காரராக ஜீவிப்பது.
2. பொல்லாதவர்களாக ஜீவிப்பது.
3. ஆகாமியம் பேசுவது.

(2) யூதாவின்மீது நியாயத்தீர்ப்பு - (9:18-10:4; 2நாளா 36)

(அ) பாவம் - பிரமாணமின்மை

ஏசா 9:18 ஆகாமியமானது அக்கினியைப் போல எரிகிறது; அது முட்செடியையும் நெரிஞ்சலையும் பட்சிக்கும், அது நெருங்கிய காட்டைக் கொளுத்தும், புகை திரண்டு எழும்பும்.

"ஆகாமியமானது அக்கினியைப் போல எரிகிறது" - இஸ்ரவேலின் அழிவிற்கு அவர்களுடைய பாவமும், துன்மார்க்கமுமே காரணம். அக்கினியானது முட்செடியையும், நெரிஞ்சிலையும் பட்சித்து, காட்டை எரிய வைப்பதுபோல இஸ்ரவேலரின் பாவம் அவர்களுடைய தேசத்தையே அழித்துப்போட்டது.

(ஆ) நியாயத்தீர்ப்பு - (ஏசா 5:24)

ஏசா 9:19 சேனைகளின் கர்த்தருடைய சினத்தால் தேசம் அந்தகாரப்பட்டு, ஜனங்கள் அக்கினிக்கு இரையாவார்கள்; ஒருவனும் தன் சகோதரனைத் தப்பவிடான்.

ஏசா 9:20 வலதுபுறத்தில் பட்சித்தாலும் பசித்திருப்பார்கள்; இடதுபுறத்தில் தின்றாலும் திருப்தியடையார்கள்; அவனவன் தன் தன் புயத்தின் மாம்சத்தைத் தின்பான்.

9 அதிகாரம்

ஏசா 9:21 மனாசே எப்பிராயீமையும், எப்பிராயீம் மனாசேயையும் பட்சிப்பார்கள்; இவர்கள் ஏகமாய் யூதாவுக்கு விரோதமாயிருப்பார்கள்; இவையெல்லாவற்றிலும் அவருடைய கோபம் ஆறாமல், இன்னும் அவருடைய கை நீட்டினபடியே இருக்கிறது.

"சேனைகளின் கர்த்தருடைய சினம்" - கர்த்தருடைய சினம் நெருங்கிய காட்டைக் கொழுத்தும் அக்கினியைப்போல இருக்கிறது. (ஏசா 9:18) அது தேசத்தை இருளாக்கும். ஜனங்களுடைய பாவம் எரியும் அக்கினியை அதிகரிக்கச்செய்யும். இதனால் தேசத்தில் பஞ்சம் உண்டாகும். அவனவன் தன் தன் புயத்தின் மாம்சத்தைத் தின்னும் நிலைமை உண்டாகும். (ஏசா 9:20)

"மனாசே எப்பிராயீமையும், எப்பிராயீம் மனாசேயையும் பட்சிப்பார்கள்" - (ஏசா 9:19) இவர்கள் ஏகமாய் யூதாவுக்கு விரோதமாயிருப்பார்கள். எப்பிராயீமின் ராஜாவாகிய பெக்கா யூதாவின்மீது படையெடுத்து வந்தபோது இந்த வாக்கியம் நிறைவேறிற்று. (2 நாளா 28:6-15).

"அவருடைய கோபம் ஆறாமல், இன்னும் அவருடைய கை நீட்டினபடியே இருக்கிறது" - கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தை அழித்தபின்பும், அவர்கள் இன்னும் மனந்திரும்பவில்லை. ஆகையினால் கர்த்தருடைய கோபம் இன்னும் ஆறாமல் பற்றியெரிந்து கொண்டே இருக்கிறது.

10 அதிகாரம்

(இ) தலைவர்களின் ஆறு பாவங்கள்

ஏசா 10:1 ஏழைகளை வழக்கிலே தோற்கப் பண்ணவும், என் ஜனத்தில் சிறுமையானவர்களின் நியாயத்தைப் புரட்டவும், விதவைகளைச் சூறையாடவும், திக்கற்ற பிள்ளைகளைக் கொள்ளையிடவும்,

ஏசா 10:2 அநியாயமான தீர்ப்புகளைச் செய்கிறவர்களுக்கும், கொடுமையான கட்டளைகளை எழுதுகிறவர்களுக்கும் ஐயோ!

"ஐயோ"க்கள் வருவதற்குக் காரணமாயிருக்கும்

1. ஏழைகளை வழக்கிலே தோற்கப் பண்ணுதல் (ஏசா 10:1)
2. ஜனத்தில் சிறுமையானவர்களின் நியாயத்தைப் புரட்டுதல்
3. விதவைகளைச் சூறையாடுதல்
4. திக்கற்ற பிள்ளைகளைக் கொள்ளையிடுதல்
5. அநியாயமான தீர்ப்புகளைச் செய்தல். (ஏசா 10:2)
6. கொடுமையான கட்டளைகளை எழுதுதல்.

(ஈ) நியாயத்தீர்ப்பு - (ஏசா 5:24)

ஏசா 10:3 விசாரிப்பின் நாளிலும், தூரத்திலிருந்து வரும் பாழ்க்கடிப்பின் நாளிலும் நீங்கள் என்னசெய்வீர்கள்? உதவி பெறும்படி யாரிடத்தில் ஓடுவீர்கள்? உங்கள் மகிமையை எங்கே வைத்து விடுவீர்கள்?

ஏசா 10:4 கட்டுண்டவர்களின் கீழ் முடங்கினாலொழிய கொலைசெய்யப் பட்டவர்களுக்குள் விழுவார்கள்; இவையெல்லாவற்றிலும் அவருடைய கோபம் ஆறாமல், இன்னும் அவருடைய கை நீட்டினபடியே இருக்கிறது.

"விசாரிப்பின் நாள்" **(day of visitation)** - எப்பிராயீமின்மீதும், யூதாவின்மீதும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும் நாள். இந்த நியாயத்தீர்ப்பு அவர்களுடைய பாவங்களின் நிமித்தமாக வருகிறது. யூதாவின்மீது நியாயத்தீர்ப்பு சீரியர் மூலமாகவும், எப்பிராயீம் மூலமாகவும் வந்தது. (2 நாளா 28:5-15) அதன் பின்பு ஏதோமியர் மூலமாகவும், பெலிஸ்தியர் மூலமாகவும் வந்தது. (2 நாளா 28:16-19) அதன் பின்பு அசீரியர் மூலமாகவும் (ஏசா 36:1-38:38; 2 நாளா 28:19-25) யூதாவிற்கு நியாயத்தீர்ப்பு வந்தது. எப்பிராயீமிற்கு ஒருசில வருஷங்களுக்குள் அசீரியர் மூலமாக நியாயத் தீர்ப்பு வந்தது. (2 இராஜா 16:9-18; 2 இராஜா 17:1-41).

"கட்டுண்டவர்களின்கீழ்முடங்கினாலொழிய கொலை செய்யப்பட்டவர்களுக்குள் விழுவார்கள்" - இந்த வாக்கியம் மூலபாஷையில் இவ்வாறு பொருள்படுமாறு எழுதப்பட்டிருக்கிறது. "என்னையல்லாமல் அவர்கள் கட்டுண்டவர்களின் கீழ் முடங்குவார்கள். யுகாலை செய்யப்பட்டவர்களுக்குள் விழுவார்கள்" **"Without me they shall bow down under the prisoners, and they shall fall under the slain".**

"இன்னும் அவருடைய கை நீட்டினபடியே இருக்கிறது" - நியாயத்தீர்ப்பிற்குப் பின்பும் இஸ்ரவேல் புத்திரர் தொடர்ந்து பாவம் செய்து கொண்டிருக்கிறார்கள். (ஏசா 10:1-2).

10 அதிகாரம்

7. அசீரியா இஸ்ரவேலை சிட்சிப்பதற்கு தேவனுடைய கோல் - (10:5-34; ஓசி 7:12-8:3; ஆமோ 2:6-16; 3:11-15; 6:7-14; மீகா 1:6-7)

(1) அசீரியரின் கட்டளை - (2நாளா 18:13-19:37; ஏசா 36-37)

ஏசா 10:5 என் கோபத்தின் கோலாகிய அசீரியனுக்கு ஐயோ! அவன் கையிலிருக்கிறது என் சினத்தின் தண்டாயுதம்.

ஏசா 10:6 அவபக்தியான ஜனங்களுக்கு விரோதமாய் நான் அவனை அனுப்பி, எனக்குக் கோபமூட்டின ஜனத்தைக் கொள்ளையிடவும், சூறையாடவும், அதை வீதிகளின் சேற்றைப்போல் மிதித்துப் போடவும் அவனுக்குக் கட்டளை கொடுப்பேன்.

"அசீரியன்" - இந்த வார்த்தை அசீரியரின் ராஜாவிற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஏசாயாவின் நாட்களில் யூதாவையும், இஸ்ரவேலையும் சிட்சிப்பதற்குக் கர்த்தர் அசீரியரின் ராஜாவைத் தம்முடைய கோபத்தின் கோலாகவும், சினத்தின் தண்டாயுதமாகவும் பயன்படுத்தினார். (ஏசா 10:5-19; ஏசா 36:1-37:39; 2இராஜா 15:19-20; 2இராஜா 16:7-18; 2இராஜா 17:1-41; 2இராஜா 18:13-19:27) பிற்காலத்தில் அசீரியன் என்னும் வார்த்தை அந்திக்கிறிஸ்துவைக் குறிக்கும். இவன் அர்மெகதோனில் கர்த்தருக்கு எதிராகத் தேசங்களைக் கூட்டிச்சேர்ப்பான். (ஏசா 10:20-34; ஏசா 14:25; மீகா 5:3-5; வெளி 19:11-21). மோசேயின் காலத்தில் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்தில் ஒடுக்கியவர்கள் இந்த அசீரியரே. (ஏசா 52:4; யாத் 1:8) ஏசா 10 ஆவது அதிகாரத்தில் இந்த அசீரியரைப் பற்றியே கூறப்பட்டிருக்கிறது.

தீர்க்கதரிசன எண் - 13

"என் கோபத்தின் கோலாகிய அசீரியனுக்கு ஐயோ......" (ஏசா 10:5-34) ஏசா 10:5-19 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. ஏசா 10:20-34 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. அவபக்தியான ஜனங்களுக்கு விரோதமாய் நான் அசீரியனை அனுப்புவேன். (ஏசா 10:5-6).

2. எனக்குக் கோபமூட்டின ஜனத்தைக் கொள்ளையிடவும், சூறையாடவும், அதை வீதிகளின் சேற்றைப்போல் மிதித்துப் போடவும் அவனுக்குக் கட்டளை கொடுப்பேன். (ஏசா 10:6).

3. அசீரியனோ அப்படி எண்ணுகிறதுமில்லை, அவன் இருதயம் அப்படிப்பட்டதை நினைக்கிறதுமில்லை; அநேகம் ஜாதிகளை அழிக்கவும், சங்கரிக்கவுமே தன் மனதிலே நினைவு கொள்ளுகிறான் (ஏசா 10:7-11).

4. அசீரிய ராஜாவினுடைய பெருமையான நெஞ்சின் வினையையும், அவன் கண்களின் மேட்டிமையான பார்வையையும் நான் விசாரிப்பேன் (ஏசா 10:12-15).

5. அசீரியாவைச் சேர்ந்த கொழுத்தவர்களுக்குள்ளே இளைப்பை அனுப்புவார்; பட்சிக்கும் அக்கினியைப் போலும் ஒரு அக்கினியை அவன் மகிமையின் கீழ் கொளுத்துவார். (ஏசா 10:16).

6. ஒரேநாளில் அசீரியனைப் பட்சிப்பார். (ஏசா 10:17).

7. அசீரியரின் சேனை அழிக்கப்படும். (ஏசா 10:18; ஏசா 37:36-38).

8. அசீரியரில் மீதியான சேனையை ஒரு சிறுபிள்ளை எண்ணி எழுதிவிடும். (ஏசா 10:19).

10 அதிகாரம்

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. அக்காலத்திலே இஸ்ரவேலில் மீதியானவர்களும், யாக்கோபின் வம்சத்தில் தப்பினவர்களும், இஸ்ரவேலின் பரிசுத்தராகிய கர்த்தரையே உண்மையாய்ச் சார்ந்து கொள்வார்கள். (ஏசா 10:20).

2. மீதியாயிருப்பவர்கள் வல்லமையுள்ள தேவனிடத்தில் திரும்புவார்கள். (ஏசா 10:21).

3. மீதியாயிருப்பவர்களின் முடிவு நீதியாயிருக்கும். அவர்கள் இரட்சிக்கப் படுவார்கள். (ஏசா 10:22).

4. தீர்மானிக்கப்பட்ட அழிவு நிறைந்த நீதியோடே புரண்டுவரும். (ஏசா 10:22-23).

5. அசீரியன் அவர்களைக் கோலால் அடித்து, எகிப்தியரைப் போல் தன் தண்டாயுதத்தை உன்மேல் ஓங்குவான். (ஏசா 10:24).

6. இன்னும் கொஞ்சக்காலத்துக்குள்ளே என் உக்கிரம் தீர்ந்துபோம். (ஏசா 10:25).

7. அவர்களைச் சங்கரிக்கப் போகிறதினால் என் கோபம் தீர்ந்துபோம்

8. ஓரேப் கன்மலையண்டையிலே மீதியானியர் வெட்டுண்டதுபோல் சேனைகளின் கர்த்தர் அசீரியரை அழிப்பார். (ஏசா 10:26; நியா 6-7).

9. எகிப்திலே தமது கோலைக் கடலின் மேல் ஓங்கினதுபோல் அதை அசீரியர்மேல் ஓங்குவார் (ஏசா 10:26).

10. அந்நாளில் உன் தோளினின்று அவன் சுமையும், உன் கழுத்தினின்று அவன் நுகமும் நீக்கப்படும்; அபிஷேகத்தின் நுகம் முறிந்துபோம். (ஏசா 10:27).

11. அசீரியன் ஆயாத்துக்கு வந்து, மிக்ரோனைக் கடந்து, மிக்மாசிலே தன் ரஸ்துக்களை வைத்திருக்கிறான். (ஏசா 10:28-31).

12. அசீரியன் ஒருநாள் நோபிலே தங்கி, சீயோன் குமாரத்தியின் பர்வதத்துக்கும், எருசலேமின் மேட்டுக்கும் விரோதமாய்க் கைநீட்டி மிரட்டுவான். (ஏசா 10:32).

13. கர்த்தர் அசீரியனை அழிப்பார். அவனோடு தங்களை உயர்த்தியவர்களையும் அழிப்பார். (ஏசா 10:33).

14. அசீரியரின் சேனைகள் அடர்த்தியான காடு கோடாரியினாலே வெட்டிப் போடுவதுபோல அழிக்கப்படும். (ஏசா 10:34).

15. மகத்துவமானவராலே லீபனோன் விழும்.

"அவபக்தியான ஜனங்கள்" - இது எப்பிராயீம் தேசத்தைக் குறிக்கும். இதிலுள்ள பத்துக் கோத்திரத்தார் அழிக்கப்படுவார்கள். ஏசா 10:11-12 ஆகிய வசனங்களில் யூதாவைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. அசீரியர்கள் இவர்கள்மீது படையெடுத்து வருவார்கள். ஆனால் இவர்களை அழிக்கமாட்டார்கள். (2இராஜா 17).

"அவனுக்குக் கட்டளை கொடுப்பேன்" - கர்த்தர் அசீரியனுக்குக் கட்டளை கொடுக்கிறார். எப்பிராயீமைக் கொள்ளையிடவும், சூறையாடவும், அதை வீதிகளின் சேற்றைப்போல் மிதித்துப்போடவும் கர்த்தர் அசீரியனுக்குக் கட்டளை கொடுக்கிறார். 2இராஜா 17 ஆவது அதிகாரத்தில் இது நிறைவேறுகிறது. யூதாவை அழிப்பதற்குக் கர்த்தர் அசீரியனுக்குக் கட்டளை கொடுக்கவில்லை. ஆனால் அசீரியனோ மற்ற தேசங்களை அழித்ததினால் யூதாவையும் அழிப்பதற்குத் தனக்கு கட்டளை கொடுக்கப் பட்டிருப்பதாகத் தவறாக நினைத்துக் கொள்கிறான். (ஏசா 10:7-11) கர்த்தர் யூதாவைப் பாதுகாப்பதாக வாக்குப் பண்ணுகிறார். (ஏசா 10:12-19; ஏசா 37:36-38).

10 அதிகாரம்

(2) அசீரியரின் வரம்பு மீறுதல் - *(33:7; நாகூ 1:9)*

ஏசா 10:7 அவனோ அப்படி எண்ணுகிறதுமில்லை, அவன் இருதயம் அப்படிப்பட்டதை நினைக்கிறதுமில்லை; அநேகம் ஜாதிகளை அழிக்கவும், சங்கரிக்கவுமே தன் மனதிலே நினைவுகொள்ளுகிறான்.

ஏசா 10:8 அவன்: என் பிரபுக்கள் அனைவரும் ராஜாக்களல்லவோ?

ஏசா 10:9 கல்னோபட்டணம் கர்கேமிசைப் போலானதில்லையோ? ஆமாத் அர்பாத்தைப் போலனதில்லையோ? சமாரியா தமஸ்குவைப் போலானதில்லையோ?

ஏசா 10:10 எருசலேமையும் சமாரியாவையும் பார்க்கிலும் விசேஷித்த சிலைகளுள்ள விக்கிரக ராஜ்யங்களை என் கை கண்டுபிடித்திருக்க,

ஏசா 10:11 நான் சமாரியாவுக்கும், அதின் விக்கிரகங்களுக்கும் செய்ததுபோல், எருசலேமுக்கும் அதின் விக்கிரகங்களுக்கும் செய்யாமலிருப்பேனோ என்று சொல்லுகிறான்.

"தன் மனதிலே நினைவுகொள்ளுகிறான்" - கர்த்தர் அசீரியனுக்கு ஒரு கட்டளை கொடுத்தார். (ஏசா 10:6) ஆனால் அசீரியனோ தனக்குக் கொடுக்கப்பட்ட கட்டளைக்கு மிஞ்சி, தன் மனதில் அதிகமாக நினைத்துக் கொள்கிறான். (ஏசா 10:7-19).

"நான் சமாரியாவுக்கும், அதின் விக்கிரகங்களுக்கும் செய்ததுபோல்" - இது ஒரு தீர்க்கதரிசன வார்த்தை. இந்தச் சம்பவம் நிறைவேறுவதற்கு முன்பாகவே அசீரியன் இதைப் பற்றிப் பேசுகிறான். அசீரியன் இன்னும் தமஸ்குவையும், சமாரியாவையும் ஜெயிக்கவில்லை.

இந்த நிகழ்ச்சிக்கு 18 வருஷங்களுக்குப் பின்பே அசீரியர் தமஸ்குவின்மேலும், சமாரியாவின்மேலும் யுத்தம் செய்து அவர்களை மேற்கொள்கிறார்கள். (2 இராஜா 17).

(3) அசீரியரின் நியாயத்தீர்ப்பு - *(33:10; 37:36; நாகூ 2:3)*

ஏசா 10:12 ஆதலால்: ஆண்டவர் சீயோன் மலையிலும் எருசலேமிலும் தமது செயலையெல்லாம் முடித்திருக்கும் போது, அசீரிய ராஜாவினுடைய பெருமையான நெஞ்சின் வினையையும், அவன் கண்களின் மேட்டிமையான பார்வையையும் நான் விசாரிப்பேன் என்கிறார்.

ஏசா 10:13 அவன் என் கையின் பெலத்தினாலும், என் ஞானத்தினாலும் இதைச் செய்தேன்; நான் புத்திமான், நான் ஜனங்களின் எல்லைகளை மாற்றி, அவர்கள் பண்டக சாலைகளைக் கொள்ளையிட்டு வல்லவனைப்போல் குடிகளைத் தாழ்த்தினேன்.

ஏசா 10:14 ஒரு குருவிக்கூட்டைக் கண்டுபிடிக்கிறது போல் என் கை ஜனங்களின் ஆஸ்தியைக் கண்டு பிடித்தது; விட்டு விடப்பட்ட முட்டைகளை வாரிக்கொள்வதுபோல் பூமியையெல்லாம் நான் வாரிக் கொண்டேன்; ஒருவரும் செட்டையை அசைத்ததுமில்லை, வாயைத் திறந்ததுமில்லை, கீச்சென்று சத்தமிட்டதுமில்லை என்று சொல்லுகிறான்.

ஏசா 10:15 கோடாரியானது தன்னால் வெட்டுகிறவனுக்கு விரோதமாய் மேன்மை பாராட்டலாமோ? வாளானது தன்னைக் கையாடுகிறவனுக்கு விரோதமாய்ப் பெருமைபாராட்டலாமோ? பாராட்டினால், தடியானது தன்னைப் பிடித்தவனை மிரட்டினாற் போலவும், கோலானது நான் மரக்கட்டையல்லவென்று எழும்பினாற் போலவும் இருக்குமே.

ஏசாயா - தொகுப்புரை

10 அதிகாரம்

ஏசா 10:16 ஆகையால் சேனைகளின் ஆண்டவராகிய கர்த்தர், அவனைச் சேர்ந்த கொழுத்தவர்களுக்குள்ளே இளைப்பை அனுப்புவார்; பட்சிக்கும் அக்கினியைப் போலும் ஒரு அக்கினியை அவன் மகிமையின்கீழ் கொளுத்துவார்.

ஏசா 10:17 இஸ்ரவேலின் ஒளியானவர் அக்கினியும், அதின் பரிசுத்தர் அக்கினி ஜுவாலையுமாகி, ஒரே நாளிலே அவனுடைய முட்செடிகளையும், நெரிஞ்சில்களையும் தகித்துப் பட்சித்து,

ஏசா 10:18 அவனுடைய வனத்தின் மகிமையையும், அவனுடைய பயிர்நிலத்தின் மகிமையையும், உள்ளும் புறம்புமாய் அழியப் பண்ணுவார்; கொடி பிடிக்கிறவன் களைத்து விழுவது போலாகும்.

ஏசா 10:19 காட்டில் அவனுக்கு மீதியான மரங்கள் கொஞ்சமாயிருக்கும், ஒரு சிறுபிள்ளை அவைகளை எண்ணி எழுதலாம்.

"அசீரிய ராஜாவினுடைய பெருமையான நெஞ்சின் வினை" - யூதாவைச் சிட்சிப்பதற்கு கர்த்தர் அசீரியாவின் ராஜாவிற்குக் கட்டளை கொடுக்கிறார். அதன்பின்பு கர்த்தர் அசீரியாவின் ராஜாவைத் தண்டிக்கிறார். அவன் கர்த்தரை நினைக்கவில்லை. அவனுடைய கண்கள் மேட்டிமையாயிற்று. (ஏசா 10:12-19).

அசீரியா ராஜா தன் மனமேட்டிமையினால் கூறுவது

1. என் கையின் பெலத்தினால் இதைச் செய்தேன். (ஏசா 10:13).
2. நான் என் ஞானத்தினால் இதைச் செய்தேன். நான் புத்திமான்.
3. நான் ஜனங்களின் எல்லைகளை மாற்றினேன்.
4. அவர்கள் பண்டகசாலைகளைக் கொள்ளையிட்டேன்.
5. வல்லவனைப்போல் குடிகளைத் தாழ்த்தினேன்.
6. ஒரு குருவிக் கூட்டைக் கண்டுபிடிக்கிறது போல் என் கை ஜனங்களின் ஆஸ்தியைக் கண்டுபிடித்தது (ஏசா 10:14).
7. விட்டு விடப்பட்ட முட்டைகளை வாரிக்கொள்வது போல் பூமியையெல்லாம் நான் வாரிக்கொண்டேன்.
8. ஒருவரும் எனக்கு எதிராக வாயைத் திறந்ததில்லை.

"கோடாரியானது தன்னால் வெட்டுகிறவனுக்கு விரோதமாய் மேன்மை பாராட்டலாமோ?" - அசீரியன் கர்த்தரால் பயன்படுத்தப்படும் கருவி. யூதாவைத் தண்டிப்பதற்குக் கர்த்தர் அசீரியனைப் பயன்படுத்துகிறார். ஆனால் அசீரியனோ தன்னைப் பயன்படுத்தும் கர்த்தருக்கு விரோதமாகத் தன்னைத்தானே பெருமைப் படுத்திக் கொள்கிறான்.

அசீரியா ராஜாவின் அழிவு

1. அவனைச் சேர்ந்த கொழுத்தவர்களுக்குள்ளே இளைப்பை அனுப்புவார் (ஏசா 10:16).
2. பட்சிக்கும் அக்கினியைப்போலும் ஒரு அக்கினியை அவன் மகிமையின்கீழ் கொளுத்துவார்.
3. இஸ்ரவேலின் ஒளியானவர் அக்கினியும், அதின் பரிசுத்தர் அக்கினி ஜுவாலையுமாகி, ஒரேநாளிலே அவனுடைய முட்செடிகளையும், நெரிஞ்சில்களையும் தகித்துப் பட்சிப்பார். (ஏசா 10:17).
4. அவனுடைய வனத்தின் மகிமையையும், அவனுடைய பயிர்நிலத்தின் மகிமையையும், உள்ளும்புறம்புமாய் அழியப்பண்ணுவார் (ஏசா 10:18).
5. கொடிபிடிக்கிறவன் களைத்து விழுந்து போவார்கள்.

ஏசாயா - தொகுப்புரை

10 அதிகாரம்

6. அவனுக்கு மீதியான சேனையின் எண்ணிக்கை கொஞ்சமாயிருக்கும். (ஏசா 10:19). இவையெல்லாம் ஏசா 37:36-38 ஆகிய வசனங்களில் எழுதப்பட்டிருப்பது போல நிறைவேறிற்று.

"கொழுத்தவர்கள்" - அசீரியா ராஜாவின் கொள்ளையினால் கொழுத்துப்போனவர்கள்.

"ஒரு அக்கினியை அவன் மகிமையின்கீழ் கொளுத்துவார்" - அசீரியா ராஜாவின் மகிமையும், பெருமையும் அக்கினியில் ஒரு மரம் எரிவதுபோல அழிந்துபோகும்.

"உள்ளும்புறம்புமாய் அழியப்பண்ணுவார்" - கர்த்தருடைய தண்டனையினால் அசீரியருடைய ஆத்துமாவும், சரீரமும் அழிந்துபோகும்.

"காட்டில் அவனுக்கு மீதியான மரங்கள் கொஞ்சமாயிருக்கும்" - கர்த்தருடைய தூதன் ஒரேநாள் இரவில் அசீரியருடைய சேனையில் 1,85,000பேரைச் சங்காரம் பண்ணினான். ஒருசிலர் மட்டுமே மீதியாக இருந்தார்கள். (ஏசா 37:36-38; 2இராஜா 19:35).

(4) வருங்கால அசீரியன் - அந்திக் கிறிஸ்து - (14:25; யோவே 1:15-2:1; மீகா 5:4-6; சக 11:15; 12:1; 2தெச 2; வெளி 13)

ஏசா 10:20 அக்காலத்திலே இஸ்ரவேலில் மீதியானவர்களும், யாக்கோபின் வம்சத்தில் தப்பினவர்களும், பின்னொரு போதும் தங்களை அடித்தவனைச் சார்ந்துகொள்ளாமல் இஸ்ரவேலின் பரிசுத்தராகிய கர்த்தரையே உண்மையாய்ச் சார்ந்துகொள்வார்கள்.

ஏசா 10:21 மீதியாயிருப்பவர்கள், யாக்கோபில் மீதியாயிருப்பவர்களே, வல்லமையுள்ள தேவனிடத்தில் திரும்புவார்கள்.

ஏசா 10:22 இஸ்ரவேலே, உன் ஜனங்கள் சமுத்திரத்தின் மணலத்தனையாயிருந்தாலும்அவர்களில் மீதியாயிருப்பவர்கள் மாத்திரம் திரும்புவார்கள்; தீர்மானிக்கப்பட்ட அழிவு நிறைந்த நீதியோடே புரண்டுவரும்.

ஏசா 10:23 சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் தேசத்துக்குள்ளெங்கும் தீர்மானிக்கப்பட்ட அழிவை வரச் செய்வார்.

ஏசா 10:24 ஆகையால் சீயோனில் வாசமாயிருக்கிற என் ஜனமே, அசீரியனுக்குப் பயப்படாதே; அவன் உன்னைக் கோலால் அடித்து, எகிப்தியரைப் போல் தன் தண்டாயுதத்தை உன்மேல் ஓங்குவான்.

ஏசா 10:25 ஆனாலும் இன்னும் கொஞ்சக்காலத்துக்குள்ளே என் உக்கிரமும், அவர்களைச் சங்கரிக்கப் போகிறதினால் என் கோபமும் தீர்ந்துபோம் என்று சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

ஏசா 10:26 ஓரேப் கன்மலையண்டையிலே மீதியானியர் வெட்டுண்டதுபோல் சேனைகளின் கர்த்தர் அவன்மேல் ஒரு சவுக்கை எழும்பிவரப்பண்ணி, எகிப்திலே தமது கோலைக் கடலின்மேல் ஓங்கினது போல் அதை அவன்மேல் ஓங்குவார்.

ஏசா 10:27 அந்நாளில் உன் தோளினின்று அவன் சுமையும், உன் கழுத்தினின்று அவன் நுகமும் நீக்கப்படும்; அபிஷேகத்தின் நுகம் முறிந்துபோம்.

"அக்காலத்திலே" - இது கர்த்தருடைய நாளைக் குறிக்கும். இந்தத் தீர்க்கதரிசனம் இறுதியாகக் கர்த்தருடைய நாளில் நிறைவேறும். பிற்காலத்து அசீரியரின் ராஜாவாகிய அந்திக்கிறிஸ்து யூதாவையும், எருசலேமையும் அழிக்க வகைதேடுவான். ஆனால் அவனை இயேசு கிறிஸ்துவும், அவருடைய பரலோகத்தின் சேனைகளும் அழித்துப்போடுவார்கள். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது அர்மெகதோன் யுத்தத்தில் இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும். (ஏசா 10:20-34; சக 14:1-15;வெளி 19:19-21).

10 அதிகாரம்

அழிவு (destruction) - כִּלָּיוֹן - kil-law-yone' - 3631

ஆ.பெ.சொ. - சோர்ந்துபோதல், அழிவு (pining; destruction; failing) (உபா 28:65).

சர்வநாசம் (destruction) - 3617. כָּלָה - kaw-law'

பெ.பெ.சொ. - அழிவு, சர்வநாசம் (to end, cease, finish; perish; consume; destroy; accomplish) fail (சக 12:10-13:1; ரோமர் 1:25-29) consummation of this age (தானி 9:27) "full end" (எரே 4:27; எரே 5:10,18; எரே 30:11; எரே 46:28; எசே 11:13) utter end (நாகூம் 1:8-9).

"அக்காலத்தில்" நாசமாகும் காரியங்கள்

1. புறஜாதியாரின் காலங்கள். (லூக்கா 21:24)
2. இஸ்ரவேலின் இரட்சிக்கப்படாத நிலைமை (ஏசா 10:21-23; ரோமர் 11:25-29)
3. யுத்தங்கள் (ஏசா 2:2-4)
4. மனுஷனுடைய ஆளுகை (தானி 7:13-14; வெளி 11:15)
5. வியாதி (ஏசா 33:24; ஏசா 35:5-6)
6. இஸ்ரவேலின் மீறுதல் (தானி 9:24)
7. இஸ்ரவேலின் பாவம். (தானி 9:24)
8. அநீதி (தானி 9:24)
9. உபத்திரவம் (தானி 9:27; மத் 24:15-22)
10. தீர்க்கதரிசனங்களின் முன்னறிவிப்புக்கள் (தானி 9:24)

"சீயோனில் வாசமாயிருக்கிற என் ஜனமே" - இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும்போது இஸ்ரவேல் புத்திரர் சீயோனில் குடியிருப்பார்கள்.

"கோல்" - இந்த வார்த்தை வருங்காலத்து உபத்திரவத்தைக் குறிக்கலாம். அப்போது இஸ்ரவேல் கூட்டிச் சேர்க்கப்படும். அவர்களுக்கு மகா உபத்திரவம் உண்டாகும். (எசே 20:37; தானி 12:1; மத் 24:15-22; வெளி 6:1-19:21).

"எகிப்தியரைப் போல்" - மோசேயின் காலத்தில் எகிப்தியர் இஸ்ரவேலை அழிக்க முயற்சி செய்தார்கள். அதுபோல இஸ்ரவேலில் மீதியாக இருக்கிறவர்களை அழிப்பதற்கு முயற்சிகள் நடக்கும். (சக 12:1-14:21; வெளி 12:5-6,14-17).

"இன்னும் கொஞ்சக் காலத்துக்குள்ளே" - வரப்போகிற உபத்திரவக்காலம் கொஞ்சகாலமே இருக்கும். (தானி 12:1,7; மத் 24:15-22; வெளி 12:6,14).

"மீதியானியர் வெட்டுண்டது போல்" - மீதியானியரை அழிப்பதற்குக் கர்த்தர் கிதியோனைத் தமது சவுக்காகப் பயன்படுத்தினார். (ஏசா 9:4; நியா 7:25) அந்திக் கிறிஸ்துவை அழிப்பதற்கு மேசியாவைக் கர்த்தர் தமது சவுக்காகப் பயன்படுத்துவார். (2தெச 2:8; வெளி 19:11-21) அபிஷேகத்தின் நுகம் முறிந்துபோகும். (ஏசா 10:27)

"எகிப்திலே தமது கோலைக் கடலின்மேல் ஓங்கினதுபோல்" - கர்த்தர் செங்கடலில் இஸ்ரவேல் புத்திரரைப் பாதுகாத்து, பார்வோனையும், அவன் சேனையையும் அழித்தார். (யாத் 14) அதுபோல அந்திக் கிறிஸ்துவையும், அவன் சேனையையும் அழிப்பார். (எசே 28:17-21; சக 14; மத் 24:29-31; 2தெச 1:7-10; 2தெச 2:8-9; வெளி 19:11-21).

"அபிஷேகத்தின் நுகம் முறிந்துபோம்" - மூலபாஷையில் இந்த வாக்கியம் "அந்நாளில்...... அபிஷேகத்தின் நிமித்தமாக அல்லது மேசியாவின் நிமித்தமாக நுகம் முறிந்துபோகும்" என்று பொருள்படுமாறு கூறப்பட்டுள்ளது. கர்த்தருடைய நாளில் அந்திக் கிறிஸ்துவின் நுகம் முறிக்கப்படும். (நியா 14-15; எசே 38:17-21; சக 14; 2தெச 1:7-10; 2தெச 2:8; வெளி 19:11-21).

10 அதிகாரம்

அபிஷேகம் (anointing) - שֶׁמֶן - sheh'-men - 8081

பொதுப்பெயர்ச்சொல் - எண்ணெய், தைலம், ஒலிவம் (oil ; olive tree; ointment; fatness once) anointing (ஏசா 10:27). அபிஷேகம் பண்ணப்பட்ட மேசியா அந்திக் கிறிஸ்துவை அழிப்பார். (2தெச 2:8).

(5) **அந்திக்கிறிஸ்துவினால் ஏற்படும் அழிவு** - (சக 14; 2தெச 1:7-11; 2:8; வெளி 19:11-21)

ஏசா 10:28 அவன் ஆயாத்துக்கு வந்து, மிக்ரோனைக் கடந்து, மிக்மாசிலே தன் ரஸ்துக்களை வைத்திருக்கிறான்.

ஏசா 10:29 கணவாயைத் தாண்டி, கேபாவிலே பாளயமிறங்குகிறார்கள்; ராமா அதிர்கிறது; சவுலின் ஊராகிய கிபியா ஓடிப்போகிறது.

ஏசா 10:30 காலீம் குமாரத்தியே, உரத்த சத்தமாய்க் கூப்பிடு; ஏழை ஆனதோத்தே, லாயீஷ் ஊர்மட்டும் எட்ட சத்தமிட்டுக் கூப்பிடு.

ஏசா 10:31 மத்மேனா வலசை வாங்கிப்போம், கேபிமின் குடிகள் தப்பிஓடக் கூட்டங்கூடுகிறார்கள்.

ஏசா 10:32 இனி ஒருநாள் நோபிலே தங்கி, சீயோன் குமாரத்தியின் பர்வதத்துக்கும், எருசலேமின் மேட்டுக்கும் விரோதமாய்க் கைநீட்டி மிரட்டுவான்.

ஏசா 10:33 இதோ, சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் தோப்புகளைப் பயங்கரமாய் வெட்டுவார்; ஓங்கி வளர்ந்தவைகள் வெட்டுண்டு மேட்டிமையானவைகள் தாழ்த்தப்படும்.

ஏசா 10:34 அவர் காட்டின் அடர்த்தியைக் கோடாரியினாலே வெட்டிப் போடுவார்; மகத்துவமானவராலே லீபனோன் விழும்.

"அவன் ஆயாத்துக்கு வந்து" - அவன் என்பது பிற்காலத்து அசீரியாவின் ராஜாவைக் குறிக்கும். (ஏசா 10:20-27; மீகா 5:3-5) இவன் அர்மெகதோனுக்கு வருவான். (ஏசா 10:28-32; எசே 38-39; யோவே 2-3; சக 14; வெளி 19:11-21).

"நோப்" (Nob) - இது ஆசாரியரின் பட்டணம். எருசலேமிற்கு வடக்கே ஒருசில மைல்கள் தூரத்தில் உள்ளது. யூதரிடமிருந்து எருசலேமைப் பிடிப்பதற்கு அந்திக் கிறிஸ்து நோபைத் தன் தலைநகரமாகப் பயன் படுத்துவான். (சக 14:1-5,14; லூக்கா 21:20-24; வெளி 11:1-2).

"ஆண்டவர் தோப்புகளைப் பயங்கரமாய் வெட்டுவார்" - அந்திக் கிறிஸ்துவின் சேனை அடர்ந்த தோப்புகளாக இங்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டிருக்கிறது. கர்த்தர் அவர்கள் எல்லோரையும் அழித்துப்போடுவார். (யோவே 3:14; சக 14:1-5; வெளி 19:19-21).

அந்திக்கிறிஸ்துவின் சேனையில் இருக்கிறவர்கள்

1. தோப்புகள் - அசீரியன் அல்லது அந்திக் கிறிஸ்து - சேனையின் தலைவன். (ஏசா 10:33; எசே 38:2; வெளி 19:19-21)
2. ஓங்கி வளர்ந்தவர்கள் (ஏசா 10:33). அந்திக்கிறிஸ்துவின் வீழ்ந்த தூதர்கள் (ஏசா 24:21; வெளி 12:7-12)
3. மேட்டிமையானவர்கள் - அந்திக் கிறிஸ்துவின் கீழ் தங்களை உயர்த்திப் பெருமைப்படும் தலைவர்கள். (ஏசா 10:33; தானி 2:44-45; வெளி 17:12,14,16-17)
4. அடர்ந்த காடு - சேனை வீரர்கள். (ஏசா 10:34)
5. லீபனோன் - அந்திக்கிறிஸ்துவின் கீழுள்ள மேலானவர்கள். (ஏசா 9:6-7; ஏசா 63:1-5; சக 14; மத் 24:29-31; 2தெச1:7-10; 2தெச 2:8; யூதா 1:14-15; வெளி 11:15; வெளி 19:11-21).

11 அதிகாரம்

8. தெய்வீகத் தலையீடு - ஆயிர வருஷ அரசாட்சி - (11:1-12:6; 2:1)

(1) மேசியாவின் வம்சவரலாறு - (மத் 1; லூக் 3)

ஏசா 11:1 ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும்.

தீர்க்கதரிசன எண் - 14

"ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி......" (ஏசா 11:1-12:6) ஏசா 11:1-2 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. ஏசா 11:3-12:6 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றும். (ஏசா 11:1).
2. அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும்.
3. கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார். (ஏசா 11:2).
4. ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவி அவர்மேல் தங்கியிருக்கும்.
5. ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவி அவர்மேல் தங்கியிருக்கும்.
6. அறிவை அருளும் ஆவி அவர்மேல் தங்கியிருக்கும்.
7. கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தை அருளும் ஆவி அவர்மேல் தங்கியிருக்கும்.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. கர்த்தருக்குப் பயப்படுதல் அவருக்கு உகந்த வாசனையாயிருக்கும் (ஏசா 11:3).
2. அவர் தமது கண் கண்டபடி நியாயந் தீர்க்காமல் இருப்பார்.
3. தமது காது கேட்டபடி தீர்ப்புச்செய்யாமல் இருப்பார்.
4. நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரிப்பார். (ஏசா 11:4).
5. யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்குத் தீர்ப்புச் செய்வார்.
6. பூமியைத் தமது வாக்கின் கோலால் அடிப்பார்.
7. தமது வாயின் சுவாசத்தால் துன்மார்க்கரைச் சங்கரிப்பார்.
8. நீதி அவருக்கு அரைக்கட்டாக இருக்கும். (ஏசா 11:5).
9. சத்தியம் அவருக்கு இடைக்கச்சையாய் இருக்கும்.
10. ஓனாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும் (ஏசா 11:6).
11. புலி வெள்ளாட்டுக்குட்டியோடே படுத்துக் கொள்ளும்.
12. கன்றுக்குட்டியும், பாலசிங்கமும், காளையும், ஒருமித்திருக்கும்.
13. ஒரு சிறுபையன் அவைகளை நடத்துவான்.
14. பசுவும் கரடியும் கூடிமேயும் (ஏசா 11:7).
15. அவைகளின் குட்டிகள் ஒருமித்துப் படுத்துக்கொள்ளும்.
16. சிங்கம்மாட்டைப்போல் வைக்கோல் தின்னும்.
17. பால் குடிக்குங்குழந்தை விரியன் பாம்பு வளையின்மேல் விளையாடும். (ஏசா 11:8).
18. பால் மறந்த பிள்ளை கட்டுவிரியன் புற்றிலே தன் கையை வைக்கும்.
19. என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை; (ஏசா 11:9).

ஏசாயா – தொகுப்புரை

11 அதிகாரம்

20. சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்.

21. அக்காலத்திலே, ஜனங்களுக்குக் கொடியாக ஈசாயின் வேர் நிற்கும். (ஏசா 11:10).

22. புறஜாதிகள் அவரை விசாரித்துக் கேட்பார்கள்.

23. அவருடைய தாபரஸ்தலம் மகிமையாயிருக்கும்.

24. அக்காலத்திலே, ஆண்டவர் தம்முடைய ஜனத்தில் மீதியானவர்களை மீட்டுக் கொள்ளத் திரும்ப இரண்டாம்விசை தமது கரத்தை நீட்டி அவர்களைக் கூட்டிச் சேர்ப்பார். (ஏசா 11:11-12).

25. எப்பிராயீமின் பொறாமை நீங்கும் (ஏசா 11:13)

26. யூதாவின் சத்துருக்கள் சங்கரிக்கப் படுவார்கள் (ஏசா 11:13).

27. எப்பிராயீம் யூதாவின் மேல் பொறாமையாயிரான்.

28. யூதா எப்பிராயீமைத் துன்பப்படுத்தான்.

29. அவர்கள் இருவரும் (எப்பிராயீமும், யூதாவும்) ஏகமாய்க் கூடி மேற்கேயிருக்கிற பெலிஸ்தருடைய எல்லைகளின்மேல் பாய்வார்கள். (ஏசா 11:14).

30. அவர்கள் கீழ்த்திசையாரைக் கொள்ளையிடுவார்கள்.

31. அவர்கள் ஏதோமின்மேலும் மோவாபின் மேலும் கைபோடுவார்கள்.

32. அம்மோன் புத்திரர் அவர்களுக்குக் கீழ்ப்படிவார்கள்.

33. எகிப்தின் சமுத்திரமுனையைக் கர்த்தர் முற்றிலும் அழிப்பார். (ஏசா 11:15).

34. தம்முடைய காற்றின் வலுமையினால் நதியின் மேல் தமது கையை நீட்டுவார்.

35. நதியை ஏழாறுகளாகப் பிரிப்பார்.

36. ஜனங்கள் கால்நனையாமல் கடந்து போகும்படி பண்ணுவார்.

37. இஸ்ரவேலர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டநாளில் அவர்களுக்கு இருந்ததுபோல, அசீரியாவிலே அவருடைய ஜனத்தில் மீதியானவர்களுக்கு ஒரு பெரும்பாதையிருக்கும். (ஏசா 11:16).

38. அக்காலத்திலே இஸ்ரவேல் கர்த்தரைத் துதிக்கும். கர்த்தருடைய கோபம் நீங்கும். இஸ்ரவேலுக்கு ஆறுதல் உண்டாகும். (ஏசா 12:1).

39. கர்த்தராகிய யேகோவா இஸ்ரவேலுக்கு பெலனும், கீதமுமானவர்; அவரே இஸ்ரவேலுக்கு இரட்சிப்புமானவர். (ஏசா 12:2).

40. இஸ்ரவேலர்கள் இரட்சிப்பின் ஊற்றுகளிலிருந்து மகிழ்ச்சியோடே தண்ணீர் மொண்டுகொள்வார்கள். (ஏசா 12:3).

41. அக்காலத்தில் இஸ்ரவேலர்கள் கர்த்தரைத் துதிப்பார்கள். ஜனங்களுக்குள்ளே கர்த்தருடைய செய்கைகளை அறிவிப்பார்கள். (ஏசா 12:4-5).

42. இஸ்ரவேலின் பரிசுத்தர் அவர்கள் நடுவில் பெரியவராயிருப்பார். (ஏசா 12:6).

"துளிர்" (rod) - இதற்கான எபிரெய வார்த்தை "கோதேர்" (choter) என்பதாகும். இந்த வார்த்தை இந்த வசனத்திலும், நீதி 14:3 ஆவது வசனத்தில் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது துளிர்விடும் கிளையைக் குறிக்கும். இது முளைத்து பெரிய மரமாகும். எபிரெய பாஷையில் "ஷேபேத்" (shebet) என்னும் வார்த்தையும் "கோல்" (rod) என்னும் பொருளைத் தருகிறது. ஆனால் இது வளர்ந்த கிளை. இது தானியத்தை அடிப்பதற்கும், பிள்ளைகளைச் சிட்சிப்பதற்கும் பயன்படும்.

11 அதிகாரம்

துளிர் (rod) - חֹטֶר - kho'-ter - 2415

ஆ.பெசொ. - மிலாறு, துளிர் a twig; a tender branch.

கோல் (rod) - שֵׁבֶט - shay'-bet - 7626

ஆண்பால் பெயர்ச்சொல் - வம்சம், மிலாறு, வல்லயம், கோல், தடி, தண்டனை, பிரம்பு, தண்டாயுதம், கொடுங்கோல், செங்கோல், கோத்திரம், கோத்திரத்தார் (ஏசா 11:4; ஏசா 9:4; ஏசா 10:5,15,24; ஏசா 11:4; ஏசா 14:29; ஏசா 28:27; ஏசா 30:31; யாத் 21:20; லேவி 27:32; 2சாமு 7:14; சங் 2:9; சங் 23:4; நீதி 10:13; நீதி 13:24; நீதி 22:8,15; நீதி 23:13-14; நீதி 26:3; நீதி 29:15)

அடிமரம் (stern) - גֶּזַע - geh'-zah - 1503

ஆ.பெசொ. - அடிக்கட்டை, அடிமரம் stump (ஏசா 11:1; ஏசா 40:24; யோபு 14:8).

கிளை (Branch) - נֵצֶר - nay'-tser - 5342

ஆ.பெசொ. - கிளை (a green shoot) a branch (ஏசா 11:1; ஏசா 14:19; ஏசா 60:21; தானி 11:7).

கிளை (Branch) - צֶמַח - tseh'-makh - 6780

ஆண்பால் பெயர்ச்சொல் - பயிர், கிளை, விளைவித்தல், நடப்படுதல், விளைச்சல் a sprout; (ஏசா 4:2; எரே 23:5; எரே 33:15; சக 3:8; சக 6:12)

(2) மேசியாவின் ஏழு அம்ச அபிஷேகம் - (வெளி 1:4; ஏசா 61:1; மத் 3:16; யோவா 3:34; அப் 10:38)

ஏசா 11:2 ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார்.

ஆவி (spirit) - רוּחַ - roo'-akh - 7307

பொதுப்பெயர்ச்சொல் - ஆவி, குளிர்ச்சி, சுவாசம், காற்று, மனநோவு, மனம், மனமடிவு, தைரியம், சோர்ந்து போதல், கோபம், உயிர், பிரமை, மூச்சு, கடுங்கொந்தளிப்பு, முற்கோபி, உள்ளம், கீறல், திசை, பக்கம், பெருங்காற்று, சாந்தி (wind; breath; life; anger; spirit; mind; will; it refers to other personal powers also)

மேசியாவின் அபிஷேகம்

1. கர்த்தருடைய ஆவியானவர் (ஏசா 61:1; மத் 3:16; யோவான் 3:34; அப் 10:38)
2. ஞானத்தை அருளும் ஆவி (1கொரி 12:8)
3. உணர்வை அருளும் ஆவி
4. ஆலோசனையை அருளும் ஆவி
5. பெலனை அருளும் ஆவி
6. அறிவை அருளும் ஆவி (1கொரி 12:8)
7. கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தை அருளும் ஆவி

(3) அவருடைய ஆளுகையின் ஒன்பது அம்ச பண்பு - (32:1; 42:1; 61:3; 65:18; 6:18; எரே 23:3; மீகா 4; சக 14; வெளி 20)

ஏசா 11:3 கர்த்தருக்குப் பயப்படுதல் அவருக்கு உகந்த வாசனையாயிருக்கும்; அவர் தமது கண் கண்டபடி நியாயந்தீர்க்காமலும், தமது காது கேட்டபடி தீர்ப்புச்செய்யாமலும்,

11 அதிகாரம்

ஏசா 11:4 நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்து, யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமை யானவர்களுக்குத் தீர்ப்புச்செய்து, பூமியைத் தமது வாக்கின் கோலால் அடித்து, தமது வாயின் சுவாசத்தால் துன்மார்க்கரைச் சங்கரிப்பார்.

ஏசா 11:5 நீதி அவருக்கு அரைக்கட்டும், சத்தியம் அவருக்கு இடைக் கச்சையுமாயிருக்கும்.

வாசனை (spirit) - רוּחַ - roo'-akh - 7307

பொதுப்பெயர்ச்சொல் - வாசனை, ஆவி, குளிர்ச்சி, சுவாசம், காற்று, மனநோவு, மனம், மனமடிவு, தைரியம், சோர்ந்து போதல், கோபம், உயிர், பிரமை, மூச்சு, கடுங்கொந்தளிப்பு, முற்கோபி, உள்ளம், கீறல், திசை, பக்கம், பெருங்காற்று, சாந்தி (wind, breath, or spirit) (ஆதி 8:21; ஆதி 27:27; யாத் 30:38; லேவி 26:31; ஆமோ 5:21). செப்துவஜிந்த் பதிப்பில் "கர்த்தருக்குப் பயப்படுதல் அவருக்கு உகந்த வாசனையாயிருக்கும்" என்னும் வாக்கியமானது "கர்த்தருக்குப் பயப்படும் ஆவியானவர் அவரை நிரப்புவார்" "the spirit of the fear of God shall fill Him" என்று எழுதப் பட்டிருக்கிறது.

மேசியா செய்யாத காரியங்கள்

1. அவர் தமது கண் கண்டபடி நியாயந்தீர்க்க மாட்டார்.
2. தமது காது கேட்டபடி தீர்ப்புச்செய்ய மாட்டார்.

மேசியா செய்யும் காரியங்கள்

1. நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரிப்பார்.
2. யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்குத் தீர்ப்புச் செய்வார்.

மேசியாவின் நியாயத்தீர்ப்பு

1. பூமியைத் தமது வாக்கின் கோலால் அடிப்பார்.
2. தமது வாயின் சுவாசத்தால் துன்மார்க்கரைச் சங்கரிப்பார். (2தெச 2:8).

மேசியாவின் குணம்

1. நீதி (எபி 1:9)
2. சத்தியம் (எபி 2:17; வெளி 1:5)

(4) அவருடைய ஆளுகையின் ஒன்பது அம்ச தகுதி - (2:1-4; 4:1-6; 61:3; 65:18; சக 14:16-21; வெளி 20)

ஏசா 11:6 அப்பொழுது ஓனாய் ஆட்டுக் குட்டியோடே தங்கும், புலி வெள்ளாட்டுக் குட்டியோடே படுத்துக்கொள்ளும்; கன்றுக்குட்டியும், பாலசிங்கமும், காளையும், ஒருமித்திருக்கும்; ஒரு சிறுபையன் அவைகளை நடத்துவான்.

ஏசா 11:7 பசுவும் கரடியும் கூடிமேயும், அவைகளின் குட்டிகள் ஒருமித்துப் படுத்துக் கொள்ளும்; சிங்கம்மாட்டைப் போல் வைக்கோல் தின்னும்.

ஏசா 11:8 பால் குடிக்குங்குழந்தை விரியன் பாம்பு வளையின்மேல் விளையாடும், பால் மறந்த பிள்ளை கட்டுவிரியன் புற்றிலே தன் கையை வைக்கும்.

மேசியா கட்டுப்படுத்தும் மிருகஜீவன்கள்

1. ஓனாய் (ஏசா 11:6)
2. புலி
3. பாலசிங்கம்
4. கரடி (ஏசா 11:7)
5. விரியன்பாம்பு (ஏசா 11:8)
6. கட்டுவிரியன்

11 அதிகாரம்

காட்டுமிருகங்கள் கட்டுப்படுத்தப்படும் விதம்

1. ஓனாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும். (ஏசா 11:6)

2. புலி வெள்ளாட்டுக்குட்டியோடே படுத்துக் கொள்ளும்.

3. கன்றுக்குட்டியும், பாலசிங்கமும் ஒருமித்திருக்கும்.

4. காளையும் பாலசிங்கமும் ஒருமித்திருக்கும்.

5. ஒரு சிறுபையன் அவைகளை நடத்துவான்.

6. பசுவும் கரடியும் கூடிமேயும். (ஏசா 11:7)

7. அவைகளின் குட்டிகள் ஒருமித்துப் படுத்துக்கொள்ளும்.

8. சிங்கம்மாட்டைப்போல் வைக்கோல் தின்னும்.

9. பால் குடிக்குங்குழந்தை விரியன் பாம்பு வளையின்மேல் விளையாடும். (ஏசா 11:8)

10. பால் மறந்த பிள்ளை கட்டுவிரியன் புற்றிலே தன் கையை வைக்கும்.

"சிங்கம்மாட்டைப்போல் வைக்கோல் தின்னும்" - மாம்சங்களைப்புசிக்கும் மிருகங்கள் அக்காலத்தில் தங்களுடைய போஜன பழக்கவழக்கங்களை மாற்றிக் கொண்டு தாவரங்களை மட்டுமே புசிக்கும். (ஏசா 65:25).

"பால் குடிக்குங்குழந்தை .... பால் மறந்த பிள்ளை" - கிறிஸ்துவின் ஆட்சிக்காலத்தில் பால்குடிக்கும் குழந்தைகளைப் பற்றியும், பால்மறந்த பிள்ளைகளைப் பற்றியும் கூறப்பட்டிருப்பதினால் இக்காலத்தில் பிள்ளைகள் பிறக்கும் என்பது தெரியவருகிறது. (ஏசா 59:20-21; ஏசா 65:23; ஆதி 9:12; சக 8:4-5).

"விரியன்" - (மத் 3:7)

"கட்டுவிரியன்" - (ஏசா 14:29; ஏசா 59:5; எரே 8:17).

(5) அவருடைய ஆளுகையின் விஸ்தாரம் - (சங் 72:8; ஆப 2:14; மீகா 4:1; தானி 7:13-14; சக 14:9,16-21; வெளி 11:15; 20:1-10)

ஏசா 11:9 என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்.

உலகளாவிய ஆசீர்வாதங்கள்

1. விபத்தும், மரணமும் இராது.

2. கர்த்தரை அறிகிற அறிவு நிறைந்திருக்கும்.

"சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல்" - எருசலேமிலிருந்து உலகின் எல்லா தேசங்களுக்கும் யூதர்கள் தேவனுடைய வார்த்தையை எடுத்துச் செல்லும் மிஷினெரிகளாக ஊழியம் செய்வார்கள். (ஏசா 2:24; ஏசா 52:7; ஆப 2:14; சக 8:23).

(6) அவருடைய ஆளுகையின் ஏழு அம்ச நிறுவனம் - (11:10-16)

(அ) சமாதானமும் மார்க்கமும் - (2:1-4; 12:1; மீகா 4:3)

ஏசா 11:10 அக்காலத்திலே, ஜனங்களுக்குக் கொடியாக நிற்கும் ஈசாயின் வேருக்காக ஜாதிகள் விசாரித்துக் கேட்பார்கள்; அவருடைய தாபரஸ்தலம் மகிமையாயிருக்கும்.

மேசியாவின் ஆளுகை

1. அக்காலத்திலே, ஜனங்களுக்கு ஈசாயின் வேர் கொடியாக நிற்கும் (ஏசா 11:10).

2. உலகம் முழுவதும் சமாதானம் உண்டாயிருக்கும். (ஏசா 11:10; ஏசா 2:2-4)

ஏசாயா - தொகுப்புரை

11 அதிகாரம்

3. எல்லா தேசங்களிலிருந்தும் இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப் படுவார்கள். (ஏசா 11:11-12)

4. இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரும் மறுபடியுமாக முன்புபோல ஒற்றுமையாக இருப்பார்கள். (ஏசா 11:13)

5. இஸ்ரவேலின் கோத்திரத்தார் வாக்குத்தத்த தேசத்தைப் பூரணமாகச் சுதந்தரிப்பார்கள். (ஏசா 11:14)

6. மேசியாவின் காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய சொந்த தேசத்திற்குத் திரும்பி வரும்போது அவர்களுக்கு உண்டாகும் எல்லாத் தடைகளும் அற்புதமாக விலக்கப்படும். (ஏசா 11:15)

7. அசீரியாவிலிருந்து பாலஸ்தீன தேசத்திற்கு எகிப்தின் வழியாகப் போவதற்கு ஒரு பெரும்பாதை இருக்கும். (ஏசா 11:16; ஏசா 19:23-25; ஏசா 35:8)

"ஈசாயின் வேர்" - (ஏசா 11:1)

"கொடி" **(ensign)** - இந்தக் கொடியைச் சுற்றிலும் தேசத்தின் ஜனங்கள் சுற்றி வருவார்கள். மேசியாவே ஜனங்களுக்குக் கொடியாக இருப்பார். எல்லோரும் மேசியாவிடத்தில் வந்து அவரிடத்தில் தங்களுடைய பூரண நம்பிக்கையை வெளிப்படுத்துவார்கள். (ஏசா 11:10,12; ஏசா 30:17; ஏசா 31:9; ஏசா 49:22; ஏசா 59:19; ஏசா 62:10).

"ஜாதிகள் விசாரித்துக் கேட்பார்கள்" - இயேசு கிறிஸ்துவின் ஆளுகையின்போது இஸ்ரவேல் ஜாதியாரும், புறஜாதியாரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். தங்களுடைய மீட்பிற்காகவும், பாதுகாப்பிற்காகவும் அவர்கள் கிறிஸ்துவையே நோக்கிப் பார்ப்பார்கள். கிறிஸ்துவின் காலத்தில் இரண்டுவிதமான ஜாதியார் மட்டுமே பூமியில் இருப்பார்கள். ஒன்று யூதஜாதியார். மற்றொன்று புறஜாதியார். கிறிஸ்துவின் நித்திய ஆசீர்வாதங்களை இவ்விரு ஜாதியாரும் பகிர்ந்து கொள்வார்கள். யூதரைப்போலவே புறஜாதியாரும் மேசியாவை விசாரித்துக் கேட்பார்கள். அவருடைய தாபரஸ்தலம் மகிமையாயிருக்கும்.

புறஜாதியாரும், மேசியாவின் தாபரஸ்தலமும்

1. ஜாதிகள் அவருடைய தாபரஸ்தலத்தை விசாரித்துக் கேட்பார்கள். (ஏசா 11:10).

2. அவருடைய தாபரஸ்தலம் மகிமையாயிருக்கும். (ஏசா 11:10; மத் 12:21).

3. புறஜாதியாருக்கு மேசியா தமது நியாயத்தை வெளிப்படுத்துவார். (ஏசா 42:1; மத் 12:18).

4. புறஜாதியாருக்கு ஒளியாக இருப்பார். (ஏசா 42:7; ஏசா 49:6).

5. எல்லா தேசங்களிலிருந்தும் புறஜாதியார் இஸ்ரவேல் புத்திரரைக் கூட்டிச்சேர்க்க உதவி புரிவார்கள். (ஏசா 49:22).

6. இஸ்ரவேலுக்குக்கீழ் புறஜாதியார் தாழ்த்தப்படுவார்கள்.

7. இஸ்ரவேலின் சந்ததியார் புறஜாதிகளைச் சுதந்தரித்துக் கொள்வார்கள். (ஏசா 54:3).

8. ஆயிரம் வருஷ அரசாட்சியில் புறஜாதியார் இஸ்ரவேலின் ஒளியினிடத்திற்கு நடந்து வருவார்கள். (ஏசா 60:3).

9. புறஜாதியார் மனந்திரும்பி இஸ்ரவேலுக்கு வருவார்கள். (ஏசா 60:5-12).

10. புறஜாதியார் யூதருக்கு ஆசீர்வாதமாக இருப்பார்கள். (ஏசா 60:16; ஏசா 61:6).

11. இஸ்ரவேல் ஜாதியாரை புறஜாதியார் அக்காலத்தில் கர்த்தருடைய சந்ததி என்று அங்கிகரிப்பார்கள். (ஏசா 61:9).

12. புறஜாதியார் மேசியாவின் நீதியையும், இஸ்ரவேலின் நீதியையும் காண்பார்கள். (ஏசா 62:2).

13. மேசியாவினால் புறஜாதியாருக்கு சமாதானமும், மகிமையும் உண்டாகும். (ஏசா 66:12).

11 அதிகாரம்

14. ஆயிரம் வருஷ அரசாட்சியில் புறஜாதியார் மத்தியில் கர்த்தரைப் பற்றிய சுவிசேஷம் அறிவிக்கப்படும். (ஏசா 2:2-4; ஏசா 52:7; ஏசா 66:19; சக 8:23; சக 14:16-21).

இந்தத் தீர்க்கதரிசனங்கள் மிகவும் தெளிவாக உள்ளன. கிறிஸ்துவின் ராஜ்யத்தின் போது புறஜாதியாரைக் குறித்த தேவனுடைய நித்திய திட்டம் இதில் தெளிவாகக் கூறப் பட்டிருக்கிறது. அப்போஸ்தலர்கள் புறஜாதியாருக்கும் சுவிசேஷத்தை எடுத்துச் சென்றார்கள். (அப் 10:9-35; அப் 11:1-19; கலா 2:1-18).

(ஆ) இஸ்ரவேலரை மறுபடியும் கூட்டிச் சேர்த்தல் - (14:1; 27:12; 43:5; 60:9; 66:20; எரே 30:10; 31:8; 32:37; 33:7; 46:27; 50:4; எசே 16:53; 20:33-40; 34:11; 36:24; 37:11-19; 39:25; ஓசி 2:14; 3:5; ஆமோ 9:13; மீகா 4:6; 5:7; 7:11; சக 2:6; 3:18; 10:6,9; மல் 3:18; மத் 24:31)

ஏசா 11:11 அக்காலத்திலே, ஆண்டவர் அசீரியாவிலும், எகிப்திலும், பத்ரோசிலும், எத்தியோப்பியாவிலும், பெர்சியாவிலும், சிநேயாரிலும், ஆமாத்திலும், சமுத்திரத் தீவுகளிலும், தம்முடைய ஜனத்தில் மீதியானவர்களை மீட்டுக் கொள்ளத் திரும்ப இரண்டாம்விசை தமது கரத்தை நீட்டி,

ஏசா 11:12 ஜாதிகளுக்கு ஒரு கொடியை ஏற்றி, இஸ்ரவேலில் துரத்துண்டவர்களைச் சேர்த்து, யூதாவில் சிதறடிக்கப்பட்டவர்களை பூமியின் நான்கு திசைகளிலுமிருந்து கூட்டுவார்.

"அக்காலத்திலே" - எருசலேமிலிருந்து எல்லா தேசங்களையும் ஆளுகை செய்ய இயேசு கிறிஸ்து வரும் நாளிலே. இக்காலத்தில் இரண்டாம் முறையாக பூமியின் எல்லாப் பாகங்களிலிருந்தும் மேசியா இஸ்ரவேல் கோத்திரத்தாரைக் கூட்டிச்சேர்ப்பார். (ஏசா 11:11-12).

மேசியா இஸ்ரவேல் புத்திரரை இரண்டாம் விசை கூட்டிச் சேர்க்கும் சம்பவம்

பாபிலோன் சிறையிருப்பின்போது தங்கள் தேசத்திற்குத் திரும்பிப்போக வேண்டுமென்று விரும்பியவர்கள் பாலஸ்தீன தேசத்திற்குத் திரும்பிப்போனார்கள். இது முதன் முறையாகக் கூட்டிச்சேர்க்கப்பட்ட சம்பவம். எஸ்றா, நெகேமியா, ஆகாய், சகரியா, மல்கியா ஆகிய புஸ்தகங்களில் பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைக் கூட்டிச் சேர்த்த சம்பவம் விவரிக்கப் பட்டிருக்கிறது. திரளான ஜனங்கள் சிறையிருப்பிலிருந்து பாலஸ்தீன தேசத்திற்குத் திரும்பி வந்தார்கள். கிறிஸ்துவின் நாட்களில் இவர்கள் ஒரு பெரிய தேசமாக இருந்தார்கள்.

ரோமாபுரியார் யூதர்களை மேற் கொண்டார்கள். 600 வருஷங்களுக்கு முன்பு நேபுகாத்நேச்சாரின் காலத்தில் யூதருடைய பட்டணங்களும், தேவாலயமும் அழிக்கப்பட்டது போல ரோமாபுரியாரின் காலத்திலும் மறுபடியும் அழிக்கப்பட்டது. யூதர்கள் எல்லா தேசங்களிலும் சிதறிப்போனார்கள். (லூக்கா 21:20-24) அவர்கள் வீடு அவர்களுக்கு பாழாக்கி விடப்படும் என்று மத் 23:37-39 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

மேசியா இரண்டாம் விசை தமது கரத்தை நீட்டி, இஸ்ரவேலில் துரத்துண்டவர்களைச் சேர்த்து யூதாவில் சிதறடிக்கப்பட்டவர்களைப் பூமியின் நான்கு திசைகளிலுமிருந்து கூட்டுவார். பாபிலோனின் சிறையிருப்பிலிருந்து இஸ்ரவேல் புத்திரர் கூட்டிச் சேர்க்கப்பட்டது கர்த்தர் அவர்களைக் கூட்டிச்சேர்த்த முதலாவது சம்பவம். அதன் பின்பு இஸ்ரவேல் புத்திரர் கி.பி. 70 ஆம் வருஷத்தில் மறுபடியுமாக உலகம் முழுவதும் சிதறிப்போனார்கள். லூக்கா 21:20-24 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் சம்பவங்கள் நிறைவேறிற்று.

இதற்குப் பின்பு கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை மறுபடியும் கூட்டிச்சேர்க்கவில்லை. ஆனாலும் கர்த்தர் அவர்களைக் கைவிடமாட்டார். இரண்டாம் விசை கர்த்தர் அவர்களைக் கூட்டிச்சேர்ப்பார் என்று ஏசாயா தீர்க்கதரிசனமாகக் கூறுகிறார். கர்த்தருடைய நாளில் அதாவது மேசியா பூமியை நித்தியமாக ஆளுகை செய்யும் நாளில் உலகமெங்கிலும் சிதறியிருக்கும் யூதர்களைக் கர்த்தர் இரண்டாம் விசையாகக் கூட்டிச் சேர்ப்பார். (ஏசா 9:6-7; ஏசா 11:1-12:5; ஏசா 39:20-21).

11 அதிகாரம்

"இஸ்ரவேலில் துரத்துண்டவர்கள்" - இஸ்ரவேல் புத்திரர் துரத்துண்டவர்களாக இங்கு கூறப்பட்டிருக்கிறார்கள். இந்த வார்த்தை இஸ்ரவேலருக்கு மட்டுமே பயன்படுத்தப் பட்டிருக்கிறது. யூதாவின் புத்திரர் துரத்துண்டவர்கள் அல்ல. அவர்கள் சிதறடிக்கப் பட்டவர்கள். தேவன் எருசலேமைக் கட்டும்போது அவர் துரத்துண்ட இஸ்ரவேலரைக் கூட்டிச் சேர்ப்பார். (ஏசா 56:8, சங் 147:2) துரத்துண்ட இஸ்ரவேலர் பாலஸ்தீன தேசத்தில் இருப்பார்கள். இவர்கள் அந்திக் கிறிஸ்துவிடமிருந்து தப்பித்து மோவாபிற்கு ஓடிப்போவார்கள். (ஏசா 16:1-5) இஸ்ரவேலில் துரத்துண்டவர்கள் எருசலேமிற்கு ஒவ்வொருவராகக் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். (ஏசா 27:12-13).

"பூமியின் நான்கு திசைகளிலுமிருந்து கூட்டுவார்" - (வெளி 7:1, ஏசா 11:12= வெளி 20:8; மத் 24:31).

(இ) யூதாவும் இஸ்ரவேலும் ஒன்று சேருதல் - (எசே 37:15,19; சக 10:6)

ஏசா 11:13 எப்பிராயீமின் பொறாமை நீங்கும், யூதாவின் சத்துருக்கள் சங்கரிக்கப்படுவார்கள்; எப்பிராயீம் யூதாவின் மேல் பொறாமையாயிரான், யூதா எப்பிராயீமைத் துன்பப்படுத்தான்.

இஸ்ரவேலை ஒன்றுசேர்க்கும் காரியங்கள்

1. எப்பிராயீமின் பொறாமை நீங்கும் (ஏசா 11:13, நியா 8, நியா 12)
2. யூதாவின் சத்துருக்கள் சங்கரிக்கப் படுவார்கள்.
3. யூதா எப்பிராயீமைத் துன்பப்படுத்தான்.
4. அவர்கள் இருவரும் ஏகமாய்க் கூடி தங்களுடைய சத்துருக்களின்மீது கைபோடுவார்கள். (ஏசா 11:14).

(ஈ) வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் முழுமையாக சுதந்தரித்தல் - (ஆதி 15:7,18; 12:1; 13:14; எண் 34:1-12; ஏசா 60:12; எசே 47:13-48:35)

ஏசா 11:14 அவர்கள் இருவரும் ஏகமாய்க் கூடி மேற்கேயிருக்கிற பெலிஸ்தருடைய எல்லைகளின்மேல் பாய்ந்து, கீழ்த்திசையாரைக் கொள்ளையிட்டு, ஏதோமின்மேலும் மோவாபின்மேலும் கைபோடுவார்கள்; அம்மோன் புத்திரர் அவர்களுக்குக் கீழ்ப்படிவார்கள்.

(உ) இஸ்ரவேல் தெய்வீக வல்லமையினால் ஒன்று சேருதல் - (மத் 24:31; ஏசா 11:11)

ஏசா 11:15 எகிப்தின் சமுத்திரமுனையைக் கர்த்தர் முற்றிலும் அழித்து, தம்முடைய காற்றின் வலுமையினால் நதியின் மேல் தமது கையை நீட்டி, ஏழாறுகளாகப் பிரித்து, ஜனங்கள் கால்நனையாமல் கடந்துபோகும்படி பண்ணுவார்.

ஏசா 11:16 இஸ்ரவேலர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டநாளில் அவர்களுக்கு இருந்ததுபோல, அசீரியாவிலே அவருடைய ஜனத்தில் மீதியானவர்களுக்கு ஒரு பெரும்பாதையிருக்கும்.

கர்த்தருடைய அற்புதமான கிரியைகள்

1. எகிப்தின் சமுத்திரமுனையைக் கர்த்தர் முற்றிலும் அழிப்பார். (ஏசா 11:15; யாத் 14:21) இது செங்கடலைக் குறிக்கும். (ஏசா 11:16)
2. தம்முடைய காற்றின் வலுமையினால் நதியின் மேல் தமது கையை நீட்டி, ஏழாறுகளாகப் பிரிப்பார். (ஏசா 11:15). இது நைல்நதியைக் குறிக்கும்.

"ஒரு பெரும்பாதையிருக்கும்" - அசீரியாவிலிருந்து செல்லும் ஒரு பெரும்பாதையைப் பற்றி ஏசா 11:16 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஏசா 19:23, ஏசா 35:8 ஆகிய வசனங்களில் அசீரியாவிலிருந்து எகிப்துக்கு பாலஸ்தீன தேசத்தின் வழியாகச் செல்லும் பெரும்பாதையைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. இந்தப் பெரும்பாதை வழியாக ஜனங்கள் எருசலேமிற்குப் போவார்கள்.

12 அதிகாரம்

(7) **ஆயிர வருஷ ஆராதனையின் பதினைந்து அம்சங்கள்** - (14:4; 25:1; 26:1; 27:2; 63:7; எபே 45:17; சக 14:16-21)

ஏசா 12:1 அக்காலத்திலே நீ சொல்வது: கர்த்தாவே, நான் உம்மைத் துதிப்பேன்; நீர் என்மேல் கோபமாயிருந்தீர்; ஆனாலும் உம்முடைய கோபம் நீங்கிற்று; நீர் என்னைத் தேற்றுகிறீர்.

ஏசா 12:2 இதோ, தேவனே என் இரட்சிப்பு; நான் பயப்படாமல் நம்பிக்கையாயிருப்பேன்; கர்த்தராகிய யேகோவா என் பெலனும், என் கீதமுமானவர்; அவரே எனக்கு இரட்சிப்புமானவர்.

ஏசா 12:3 நீங்கள் இரட்சிப்பின் ஊற்றுகளிலிருந்து மகிழ்ச்சியோடே தண்ணீர் மொண்டுகொள்வீர்கள்.

ஏசா 12:4 அக்காலத்திலே நீங்கள் சொல்வது: கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நாமத்தைத் தொழுது கொள்ளுங்கள்; அவருடைய செய்கைகளை ஜனங்களுக்குள்ளே அறிவியுங்கள்; அவருடைய நாமம் உயர்ந்ததென்று பிரஸ்தாபம்பண்ணுங்கள்.

ஏசா 12:5 கர்த்தரைக் கீர்த்தனம் பண்ணுங்கள், அவர் மகத்துவமான கிரியைகளைச் செய்தார்; இது பூமியெங்கும் அறியப்படக்கடவது என்பீர்கள்.

ஏசா 12:6 சீயோனில் வாசமாயிருக்கிறவளே, நீ சத்தமிட்டுக் கெம்பீரி; இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் நடுவில் பெரியவராயிருக்கிறார்.

"அக்காலத்திலே" - ஆயிரம் வருஷ அரசாட்சியில் - மேசியாவின்கீழ் இஸ்ரவேலர்கள் முழுவதுமாகக் கூட்டிச் சேர்க்கப்பட்ட பின்பு. (ஏசா 11:11-16)

ஆயிரம் வருஷ அரசாட்சியின் ஆராதனை

1. நான் உம்மைத் துதிப்பேன். (ஏசா 12:1).
2. நீர் என்மேல் கோபமாயிருந்தீர்; ஆனாலும் உம்முடைய கோபம் நீங்கிற்று.
3. நீர் என்னைத் தேற்றுகிறீர்.
4. தேவனே என் இரட்சிப்பு. (ஏசா 12:2).
5. நான் பயப்படாமல் நம்பிக்கையாயிருப்பேன்.
6. கர்த்தராகிய யேகோவா என் பெலனும், என் கீதமுமானவர்.
7. அவரே எனக்கு இரட்சிப்புமானவர்.
8. கர்த்தரைத் துதியுங்கள் (ஏசா 12:4).
9. அவர் நாமத்தைத் தொழுதுகொள்ளுங்கள்.
10. அவருடைய செய்கைகளை ஜனங்களுக்குள்ளே அறிவியுங்கள்.
11. அவருடைய நாமம் உயர்ந்ததென்று பிரஸ்தாபம்பண்ணுங்கள்.
12. கர்த்தரைக் கீர்த்தனம்பண்ணுங்கள் (ஏசா 12:5).
13. அவர் மகத்துவமான கிரியைகளைச் செய்தார்.
14. சீயோனில் வாசமாயிருக்கிறவளே, நீ சத்தமிட்டுக் கெம்பீரி.
15. இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் நடுவில் பெரியவராயிருக்கிறார். (ஏசா 12:6).

"கர்த்தராகிய யேகோவா" - இந்தப் பெயருக்கு எபிரெய பாஷையில் "யஹ்" **(Yah)** என்னும் வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. இது யெகோவா **(Jehovah)** என்னும் பெயரின் சுருக்கமாகும்.

கர்த்தர் **(Lord) - יָהּ - yaw – 3050**

ஏசாயா - தொகுப்புரை

12 அதிகாரம்

ஆண்பால் பெயர்ச்சொல் - கர்த்தர், யெகோவா (ஏசா 12:2; ஏசா 26:4; ஏசா 38:11; யாத் 15:2; யாத் 17:16; சங் 68:18; சங் 77:11; சங் 89:8; சங் 94:7,12; சங் 102:18; சங் 104:35; சங் 105:45; சங் 106:1,48; சங் 111:1; சங் 112:1; சங் 113:1,9; சங் 115:17-18; சங் 116:19; சங் 117:2; சங் 118:5,14,17-19; சங் 112:4; சங் 135:1,3-4,21; சங் 146:1,10; சங் 147:1,20; சங் 148:1,14; சங் 149:1,9; சங் 150:1,6).

யெகோவா (Jehovah) - יהוה, יְהֹוָה - yeh-ho-vaw' - 3068

ஆ.பெ.சொ. - கர்த்தர், ஆண்டவர், யெகோவா

"யெகோவா" (Jehovah) - வேதாகமத்தில் நான்கு இடங்களில் "யெகோவா" என்னும் பெயர் கர்த்தருக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (ஏசா 12:2; ஏசா 26:4; யாத் 6:3; சங் 83:18).

"இரட்சிப்பின் ஊற்றுகள்" (wells of salvation) - ஊற்றுகள் என்று பன்மையில் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு தனிநபருக்கும் அவருக்குரிய இரட்சிப்பின் ஊற்று இருக்க வேண்டும். அந்தத் தனிநபர் தன்னுடைய இரட்சிப்பின் ஊற்றிலிருந்து தனக்குத் தேவையான ஜீவத்தண்ணீரை மொண்டு கொள்ள வேண்டும். (யோவான் 4:14).

அக்காலத்தில் யூதர்கள் சொல்வது

1. கர்த்தரைத் துதியுங்கள் (ஏசா 12:4).
2. அவர் நாமத்தைத் தொழுதுகொள்ளுங்கள்.
3. அவருடைய செய்கைகளை ஜனங்களுக்குள்ளே அறிவியுங்கள்.
4. அவருடைய நாமம் உயர்ந்ததென்று பிரஸ்தாபம்பண்ணுங்கள்.
5. கர்த்தரைக் கீர்த்தனம்பண்ணுங்கள். அவர் மகத்துவமான கிரியைகளைச் செய்தார் (ஏசா 12:5).
6. சீயோனில் வாசமாயிருக்கிறவளே, நீ சத்தமிட்டுக் கெம்பீரி (ஏசா 12:6)

"உன் நடுவில்" - அக்காலத்தில் கர்த்தர் ஜனங்கள் மத்தியில் இருப்பார். (ஏசா 52:7; எசே 43:7; சக 14:9).

13 அதிகாரம்

IV. இஸ்ரவேலின் ஆசீர்வாதங்களும் பன்னிரெண்டு பாரங்களும் - (ஏசா 13-23; எரே 45-51; எசே 25-32; ஆமோ 1:2; செப் 2; நாகூ 1:1-3:19)

1. பாபிலோனின் பாரம் - (13:1-14:27; 21:1; 47:1; எரே 25:12; 50:1-51:64)

(1) மேதிய பெர்சியர்களினால் உடனடி நியாயத்தீர்ப்பு - (தானி 5)

ஏசா 13:1 ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா பாபிலோன்மேல் வரக்கண்டபாரம்.

ஏசா 13:2 உயர்ந்த பர்வதத்தின்மேல் கொடியேற்றுங்கள்; உரத்த சத்தமிட்டு ஜனங்களை வரவழையுங்கள்; அவர்கள் பிரபுக்களின் வாசல்களுக்குள் பிரவேசிப்பதற்குச் சைகை காட்டுங்கள்.

ஏசா 13:3 நான் பரிசுத்தமாக்கினவர்களுக்கு கட்டளை கொடுத்தேன்; என் கோபத்தை நிறைவேற்ற என் பராக்கிரமசாலிகளை அழைத்தும் இருக்கிறேன்; அவர்கள் என் மகத்துவத்தினாலே களிகூருகிறவர்கள் என்கிறார்.

ஏசா 13:4 திரளான ஜனங்களின் சத்தத்துக்கொத்த வெகு கூட்டத்தின் இரைச்சலும், கூட்டப்பட்ட ஜாதிகளுடைய ராஜ்யங்களின் அமளியான இரைச்சலும் மலைகளில் கேட்கப்படுகிறது; சேனைகளின் கர்த்தர் யுத்தராணுவத்தை இலக்கம்பார்க்கிறார்.

ஏசா 13:5 கர்த்தர் வருகிறார்; அவருடைய கோபத்தின் ஆயுதங்களும், தேசத்தை யெல்லாம் அழிக்க, வானங்கவிழ்ந்த கடையாந்தர தேசத்திலிருந்து வருகிறது.

"பாபிலோன்மேல் வரக்கண்டபாரம்" - ஏசா 13-66 ஆகிய அதிகாரங்கள் எசேக்கியா ராஜாவின் காலத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஏசா 13-39 ஆகிய அதிகாரங்கள் சிறையிருப்பை எதிர்நோக்கிப் பார்த்து கூறப்பட்டுள்ள சம்பவங்களாகும். ஏசா 40-66 ஆகிய அதிகாரங்கள் சிறையிருப்பிலிருந்து மீட்கப் படுவதையும், மேசியாவின் காலத்தில் நித்தியமாகக் கூட்டிச் சேர்க்கப்படுவதையும் பற்றிக் கூறப்பட்டிருக்கும் சம்பவங்களாகும். ஏசா 7-12 ஆகிய அதிகாரங்களில் இஸ்ரவேலின் மீதும், யூதாவின்மீதும் அசீரியர் மூலமாக வந்த நியாயத்தீர்ப்புக்களைப் பற்றிக் கூறப் பட்டிருக்கிறது. ஏசா 13-23 ஆகிய அதிகாரங்களில் மற்ற தேசங்களின்மீது வந்த நியாயத்தீர்ப்புக்களையும், இஸ்ரவேல், யூதா ஆகியவற்றின்மீது வந்த நியாயத்தீர்ப்புக்களையும் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. இந்தப் பகுதியில் மற்ற தேசங்கள் இஸ்ரவேல் புத்திரரைப் பாரப்படுத்திய சம்பவங்கள் விவரிக்கப் பட்டுள்ளன.

1. பாபிலோனின் பாரம் (ஏசா 13:1-14:27)
2. பெலிஸ்தியாவின் பாரம் (ஏசா 14:28-32)
3. மோவாபின் பாரம் (ஏசா 15:1-16:14)
4. சீரியா-தமஸ்குவின் பாரம் (ஏசா 17:1-14)
5. எத்தியோப்பியாவின் பாரம். (ஏசா 18:1-7)
6. எகிப்தின் பாரம். (ஏசா 19:1-25)
7. எகிப்து, எத்தியோப்பியா ஆகியவற்றின் பாரம். (ஏசா 20:1-6)
8. பாபிலோனின் பாரம் (ஏசா 21:1-10)
9. தூமாவின் பாரம் (ஏசா 21:11-12)
10. அரபியாவின் பாரம். (ஏசா 21:13-17)
11. யூதாவின் பாரம் (ஏசா 22:1-25)
12. தீரு, சீதோன் ஆகியவற்றின் பாரம் (ஏசா 23:1-18)

பாரம் **(burden) - מַשָּׂא - mas-saw' - 4853**

13 அதிகாரம்

ஆண்பால் பெயர்ச்சொல் - சங்கீதம், கீதம், சுமை, சுமத்தல், பாரம், வருத்தம், எடுத்துக் கொள்தல், பொதி, விட்டு விடுதல், காணிக்கை பாடல் **(a burden as a material load)** (யாத் 23:5; எண் 4:15-49; எரே 17:21-27), **an utterance of doom, responsibility** (ஏசா 13:1; ஏசா 14:28; ஏசா 15:1; ஏசா 17:1; ஏசா 19:1; ஏசா 21:1,11,13; ஏசா 22:1,25; ஏசா 23:1; ஏசா 30:6; எரே 23:33-38; எசே 12:10; ஓசி 8:10; நாகூம் 1:1; ஆப 1:1; சக 9:1; சக 12:1; மல் 1:1). **prophecy** (நீதி 30:1; நீதி 31:1).

பாபிலோன்

இதன் மறுபெயர்கள் சேசாக்கு **(Sheshach)** (எரே 25:26; எரே 51:41), சிநேயார் **(Shinar)** (ஏசா 11:11; ஆதி 11:1-9; ஆதி 14:1-9; தானி 1:2; சக 5:11) பாபிலோன் பழங்காலத்தில் பிரசித்தி பெற்றிருந்த பட்டணங்களில் ஒன்று. நிம்ரோத் பாபிலோனைக் கட்ட ஆரம்பித்தான். (ஆதி 10:8-10) புறஜாதியாரின் ஆட்சிக் காலத்தில் இவர்கள் இஸ்ரவேலை ஒடுக்கினார்கள்.

பாபிலோனின் அடையாளங்கள்

1. பெரிய கழுகு (எசே 17)
2. பொன்னான தலை (தானி 2:37-38)
3. சிங்கம் (தானி 7:3-4)

தீர்க்கதரிசன எண் - 15

"ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா பாபிலோன்மேல் வரக்கண்டபாரம்......." (ஏசா 13:1-14:27) ஏசா 13:17-18 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. ஏசா 13:1-16, 19-14:27 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நான் அவர்களுக்கு விரோதமாய் மேதியரை எழுப்புவேன் (ஏசா 13:17).
2. அவர்கள் வெள்ளியை மதியாமலும், பொன்னின்மேல் பிரியப்படாமலும் இருப்பார்கள். (ஏசா 13:17).
3. அவர்கள் வில்லுகளால் இளைஞரைச் சிதைத்துவிடுவார்கள் (ஏசா 13:18).
4. கர்ப்பக்கனியின்மேல் அவர்கள் இரங்குவதில்லை.
5. அவர்கள் கண் பிள்ளைகளைத் தப்பவிடுவதுமில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. கர்த்தரின் நாள் சமீபமாயிருக்கிறது (ஏசா 13:1-6).
2. அது சர்வவல்லவரிடத்திலிருந்து மகா சங்காரமாய் வரும். (ஏசா 13:6)
3. எல்லாக் கைகளும் நெகிழ்ந்து, எல்லா மனுஷரின் இருதயமும் கரைந்துபோம். (ஏசா 13:7-8).
4. அவர்கள் திகிலடைவார்கள். (ஏசா 13:8).
5. வேதனைகளும் வாதைகளும் அவர்களைப் பிடிக்கும். (ஏசா 13:8).
6. கர்த்தருடைய நாள் கடூரமும், மூர்க்கமும், உக்கிரகோபமுமாய் வருகிறது. (ஏசா 13:9).
7. வானத்தின் நட்சத்திரங்களும் ராசிகளும் ஒளி கொடாதிருக்கும்; சூரியன் உதிக்கையில் இருண்டுபோம்; சந்திரன் ஒளி கொடாதிருக்கும். (ஏசா 13:10; மத் 24:29-31).
8. பாவத்தினிமித்தம் உலகம் தண்டிக்கப்படும். (ஏசா 13:11).
9. அக்கிரமத்தினிமித்தம் துன்மார்க்கர் தண்டிக்கப்படுவார்கள்.
10. அகங்காரரின் பெருமையை ஒழியும்.
11. கொடியரின் இடும்பு தாழ்த்தப்படும்.

ஏசாயா - தொகுப்புரை

13 அதிகாரம்

12. அக்காலத்தில் அழிவிலிருந்து தப்பிய புருஷன் பசும்பொன்னிலும் ஓப்பீரின் தங்கத்திலும் அபூருவமாக இருப்பான். (ஏசா 13:12).

13. பூமி தன்னிடத்தைவிட்டு நீங்கும்படி வானம் அதிரும். (ஏசா 13:13).

14. அந்திக் கிறிஸ்துவின் சேனைகள் குழப்பமடைந்து அவரவர் தங்கள் தேசத்துக்கு ஓடிப்போவார்கள். (ஏசா 13:14).

15. அகப்பட்டவனெவனும் குத்துண்டு, அவர்களைச் சேர்ந்திருந்தவனெவனும் பட்டயத்தால் விழுவான். (ஏசா 13:15).

16. அவர்கள் குழந்தைகள் அவர்கள் கண்களுக்கு முன்பாக மோதியடிக்கப்படும் (ஏசா 13:16).

17. அவர்கள் மனைவிகள் அவமானப் படுவார்கள்.

18. பாபிலோனானது தேவனால் சோதோமும் கொமோராவும் கவிழ்க்கப்பட்டதுபோல கவிழ்க்கப்படும். (ஏசா 13:19).

19. இனி ஒருபோதும் அதில் ஒருவரும் குடியேறுவதுமில்லை. (ஏசா 13:20).

20. அங்கே அரபியன் கூடாரம் போடுவதுமில்லை.

21. காட்டுமிருகங்கள் அங்கே படுத்துக் கொள்ளும் (ஏசா 13:21).

22. அவர்கள் பாழான மாளிகைகளில் ஓரிகள் ஊளையிடும் (ஏசா 13:21-22).

23. கர்த்தர் யாக்கோபுக்கு இரங்கி இஸ்ரவேலரைத் தெரிந்து கொள்வார். (ஏசா 14:1).

24. இஸ்ரவேலரை அவர்கள் தேசத்திலே தாபரிக்கப்பண்ணுவார்.

25. அந்நியரும் அவர்களோடு சேர்க்கையாகி, யாக்கோபின் வம்சத்தோடே கூடிக் கொள்வார்கள்.

26. புறஜாதி ஜனங்கள் அவர்களை அழைத்துக் கொண்டுபோய் அவர்கள் ஸ்தானத்தில் விடுவார்கள் (ஏசா 11:11-16; ஏசா 14:2; ஏசா 66:19-21).

27. இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய தேசத்திலே புறஜாதியாரை வேலைக் காரராகவும் வேலைக்காரிகளாகவும் கையாளுவார்கள். (ஏசா 14:2).

28. இஸ்ரவேல் ஜாதியார் தங்களைச் சிறையாக்கினவர்களைச் சிறையாக்கி, தங்களை ஒடுக்கினவர்களை ஆளுவார்கள்.

29. கர்த்தர் உன் துக்கத்தையும், உன் தத்தளிப்பையும் நீக்குவார் (ஏசா 14:3).

30. நீ அடிமையாக்கப்பட்டிருந்த கடினமான அடிமைத்தனத்தையும் நீக்கி, உன்னை இளைப்பாறப்பண்ணுவார் (ஏசா 14:3-23).

31. அந்திக்கிறிஸ்து ஒழிந்துபோவான். (ஏசா 11:4; ஏசா 14:4; தானி 7:11; 2தெச 2:8).

32. பாபிலோன் நகரம் ஒழிந்துபோகும். (ஏசா 14:4-6; ஏசா 19:19-22; வெளி 14:8; வெளி 16:17-21; வெளி 18:1-24).

33. பூமிமுழுதும் இளைப்பாறி அமைந்திருக்கும். (ஏசா 14:7-8).

34. கீழே இருக்கிற பாதாளம் அந்திக் கிறிஸ்துவினிமித்தம் அதிர்ந்து அவன் வருகைக்கு எதிர்கொள்ளும். (ஏசா 14:9).

35. நரகத்திலிருக்கும் துன்மார்க்கர் அந்திக் கிறிஸ்துவைப் பார்த்து "நீயும் எங்களைப்போல பலட்சயமானாயோ? எங்களுக்குச் சமானமானாயோ?" என்று சொல்வார்கள். (ஏசா 14:9-11)

36. நரகத்திலிருக்கும் துன்மார்க்கர் லூசிபரைப் பார்த்து "அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே, நீ வானத்திலிருந்து விழுந்தாயே! ஜாதிகளை ஈனப்படுத்தினவனே, நீ தரையிலே விழ வெட்டப்பட்டாயே" என்று சொல்வார்கள். (ஏசா 14:12-15).

13 அதிகாரம்

37. அந்திக்கிறிஸ்து தோல்வியுற்றதையும், அவன் நரகத்தில் தள்ளப்பட்டதையும் காண்கிறவர்கள் அவனை உற்றுப்பார்த்து ஏளனமாகப் பேசுவார்கள். (ஏசா 14:16-20).

38. அந்திக்கிறிஸ்துவின் பிள்ளைகள் அழிக்கப்படுவார்கள். (ஏசா 14:21-22).

39. பாபிலோன் முழுவதுமாக அழிக்கப்படும். (ஏசா 14:23).

40. அந்திக்கிறிஸ்துவை அழிக்க வேண்டும் என்னும் கர்த்தருடைய நோக்கம் பூரணமாய் நிறைவேறும். (ஏசா 14:24-27).

"உயர்ந்த பர்வதத்தின்மேல் கொடியேற்றுங்கள்" - யுத்தம் பண்ணும்போது உயர்ந்த பர்வதத்தில் கொடியேற்றுவது வழக்கம். அந்தத் தேசத்தின் சேனைகள் அந்தக் கொடியைப் பார்த்து அங்கு கூடிவருவார்கள். அந்திக்கிறிஸ்துவை அழிப்பதற்கு கர்த்தர் தம்முடைய ஜனங்களைக் கூடிவரச்செய்கிறார். இந்த வாக்கியம் அர்மெகதோன் யுத்தத்தில் கர்த்தர் தம்முடைய சேனையை வரவழைப்பதையும் குறிக்கும். (ஏசா 13:2-6).

"பரிசுத்தமாக்கினவர்கள்" - இந்த வாக்கியம் ஏசா 13:17 ஆவது வசனத்தில் குறிப்பிடப் பட்டிருக்கும் மேதியரைக் குறிப்பதாகச் சிலர் வியாக்கியானம் பண்ணுகிறார்கள். இந்தத் தீர்க்கதரிசனம் இயேசு கிறிஸ்து இந்தப் பூமியில் தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கும்போது நிறைவேறும். ஆகையினால் பரிசுத்தமாக்கினவர்கள் என்பது கர்த்தருடைய சேனையில் இடம்பெறும் பரிசுத்தவான்களைக் குறிக்கும். இவர்கள் வருங்கால பாபிலோனின் ராஜாவாகிய அந்திக்கிறிஸ்துவின்மீது யுத்தம் பண்ணுவதற்கு இயேசு கிறிஸ்துவோடு சேர்ந்து வருவார்கள். இயேசு கிறிஸ்துவோடு பரலோகத்தின் தூதர்களும் உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களும் வருவார்கள். (யோவே 2:1-11; சக 14:1-5; மத் 25:31; 2தெச 1:7-10; யூதா 1:14-15; வெளி 19:11-21) பரிசுத்தமாக்கினவர்கள் என்னும் வாக்கியம் இவர்களையும் சேர்த்துக் குறிக்கும்.

"பராக்கிரமசாலிகள்" - (யோவே 2:7-9; 2தெச 1:7-10)

"என் மகத்துவத்தினாலே களிகூருகிறவர்கள்" - இரட்சிக்கப்பட்டவர்களும், பரிசுத்த தூதரும் கர்த்தருடைய மகத்துவத்தினாலே களிகூருவார்கள். (சக 14:5; மத் 25:31; 2தெச 1:7-10; யூதா 1:14-15; வெளி 19:14).

"திரளான ஜனங்களின் சத்தத்துக்கொத்த வெகு கூட்டத்தின் இரைச்சல்" - யோவே 2:1-11 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் விளக்கத்தைப் போன்றிருக்கிறது.

"சேனைகளின் கர்த்தர் யுத்தராணுவத்தை இலக்கம்பார்க்கிறார்" - கர்த்தருடைய நாளில் அர்மெகதோனில் பரலோகத்தின் சேனைகளைக் கர்த்தர் மேற்பார்வையிடுவார். (ஏசா 13:4-6; தானி 7:9-22; யோவே 2:1-11; சக 14:1-5; தீத்து 2:13).

"கர்த்தர் வருகிறார்" - கர்த்தர் வானத்திலிருந்து தமது தேவசேனையோடு வருவார்.

"அவருடைய கோபத்தின் ஆயுதங்கள்" - இது கர்த்தருடைய பரிசுத்தவான்களையும், தேவதூதர்களையும் குறிக்கும். அவர்களிடத்தில் இருக்கும் ஆயுதங்கள் என்ன என்பது தெரிய வில்லை. தேவதூதர்கள் பட்டயங்களினால் சங்காரம் பண்ணுவார்கள். (யோசு 5:13; 1நாளா 21:16). அந்திக்கிறிஸ்துவின் சேனைகள் கொல்லப்படுவார்கள். (எசே 38:17-21; சக 14:12-14; 2தெச 2:8; வெளி 11:11-21).

"தேசத்தையெல்லாம்" - இது பாலஸ்தீன தேசத்தின் பெரும்பகுதியைக் குறிக்கும். இது நேபுகாத்நேச்சாரால் அழிக்கப்பட்டது. (எரே 4:20,27; எரே 12:11; எரே 25:11). அர்மெகதோன் யுத்தத்தில் இதைவிட பெரிய அழிவு உண்டாகும்.

"வானங்கவிழ்ந்த கடையாந்தரதேசம்" - வானத்தின் ஒரு முனையிலிருந்து மறுமுனை மட்டுமுள்ள பூமியின் கடையாந்தரப்பகுதி. (மத் 24:31) வானத்திலிருந்து பூமிக்குத் தேவனுடைய சேனைத்திரள் வரும் என்பதே இதன் பொதுவான பொருளாகும். (சக 14:5; மத் 24:29-30; மத் 25:31; 2தெச 1:7-10; யூதா 1:14-15; வெளி 19:11-21).

13 அதிகாரம்

(2) கர்த்தருடைய நாளில் உண்டாகும் நியாயத்தீர்ப்பின் இருபத்தெட்டு அம்சங்கள் - *(2:10)*

ஏசா 13:6 அலறுங்கள், கர்த்தரின் நாள் சமீபமாயிருக்கிறது, அது சர்வ வல்லவரிடத்திலிருந்து மகா சங்காரமாய் வரும்.

ஏசா 13:7 ஆதலால் எல்லாக் கைகளும் நெகிழ்ந்து, எல்லா மனுஷரின் இருதயமும் கரைந்துபோம்.

ஏசா 13:8 அவர்கள் திகிலடைவார்கள்; வேதனைகளும் வாதைகளும் அவர்களைப் பிடிக்கும்; பிள்ளைபெறுகிறவளைப் போல வேதனைப்படுவார்கள்; ஒருவரையொருவர் பிரமித்துப்பார்ப்பார்கள்; அவர்கள் முகங்கள் நெருப்பான முகங்களாயிருக்கும்.

ஏசா 13:9 இதோ, தேசத்தைப் பாழாக்கி, அதின் பாவிகளை அதிலிருந்து அழிப்பதற்காகக் கர்த்தருடைய நாள் கடூரமும், மூர்க்கமும், உக்கிரகோபமுமாய் வருகிறது.

ஏசா 13:10 வானத்தின் நட்சத்திரங்களும் ராசிகளும் ஒளி கொடாதிருக்கும்; சூரியன் உதிக்கையில் இருண்டுபோம்; சந்திரன் ஒளி கொடாதிருக்கும்.

ஏசா 13:11 பாவத்தினிமித்தம் உலகத்தையும், அக்கிரமத்தினிமித்தம் துன்மார்க்கரையும் நான் தண்டித்து, அகங்காரரின் பெருமையை ஒழியப்பண்ணி, கொடியரின் இடும்பைத் தாழ்த்துவேன்.

ஏசா 13:12 புருஷனைப் பசும்பொன்னிலும் மனுஷனை ஓப்பீரின் தங்கத்திலும் அபூருவமாக்குவேன்.

ஏசா 13:13 இதினிமித்தம் சேனைகளின் கர்த்தருடைய உக்கிரத்தினால் அவருடைய கடுங்கோபத்தின் நாளிலே பூமி தன்னிடத்தைவிட்டு நீங்கும்படி வானத்தை அதிரப்பண்ணுவேன்.

ஏசா 13:14 துரத்தப்பட்ட வெளிமானைப் போலும், யாரும் சேர்க்காத ஆட்டைப் போலும் இருப்பார்கள்; அவரவர் தங்கள் ஜனத்தண்டைக்குப் போகமுகத்தைத் திருப்பி, அவரவர் தங்கள் தேசத்துக்கு ஓடிப்போவார்கள்.

ஏசா 13:15 அகப்பட்டவனெவனும் குத்துண்டு, அவர்களைச் சேர்ந்திருந்தவனெவனும் பட்டயத்தால் விழுவான்.

ஏசா 13:16 அவர்கள் குழந்தைகள் அவர்கள் கண்களுக்கு முன்பாக மோதியடிக்கப்படும்; அவர்கள் வீடுகள் கொள்ளையிடப்படும்; அவர்கள் மனைவிகள் அவமானப்படுவார்கள்.

அலறுதல் **(Howl)** - **יָלַל** - **yaw-lal'** - **3213**

வினைச்சொல் - அலறு, புலம்பு, விழு **(to howl with a wailing tone)** *(ஏசா 13:6; ஏசா 14:31; ஏசா 15:2-3; ஏசா 16:7; ஏசா 23:1,6,14; ஏசா 52:5; ஏசா 65:14; எரே 4:8; எரே 25:34; எரே 47:2; எரே 48:20,31,39; எரே 49:3; எரே 51:8; எசே 21:12; எசே 30:2; ஓசி 7:14; யோவே 1:5,11,13; ஆமோ 8:3; மீகா 1:8; செப் 1:11; சக 11:2; யாக் 5:1).*

"கர்த்தரின் நாள்" **(the day of the LORD)** - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும், அவருடைய ஆயிரம் வருஷத்து அரசாட்சியும்.

"சமீபமாயிருக்கிறது" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது பாபிலோனின் அழிவு சமீபமாக இருக்கும். *(ஏசா 13:6,9; வெளி 14:8; வெளி 16:17-21; வெளி 18:1-24).*

கர்த்தரின் நாளில் அழியும் காரியங்கள்

1. பாலஸ்தீனத்தின் பெரும்பகுதி. *(ஏசா 13:5-9)*
2. பூமியின் பெரும்பகுதி. *(ஏசா 13:11; வெளி 16:17-21)*
3. பாபிலோன். *(ஏசா 13:19-22; வெளி 14:8; வெளி 16:17-21; வெளி 18:1-24)*

13 அதிகாரம்

4. அந்திக்கிறிஸ்து (ஏசா 14:9-11; தானி 7:11; தானி 8:25; 2தெச 2:8; வெளி 19:19-21)

5. அந்திக்கிறிஸ்துவின் சேனை (எசே 38:21-23; எசே 39:2-24; சக 14:12-14; வெளி 19:11-21)

6. சாத்தான், பிசாசுகள், விழுந்ததூதர்கள் ஆகியோரின் வல்லமை. (ஏசா 14:12-17; ஏசா 24:22; ஏசா 25:7)

7. மிருகத்தின் முத்திரையைத் தரித்திருக்கும் மனுஷர். (வெளி 14:9-11)

8. வெள்ளாடுகளின் தேசத்தார். (மத் 25:31-46)

9. தேசங்களின் பட்டணங்கள் (வெளி 16:17-21)

10. எருசலேம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படும். 7,000பேர் மரிப்பார்கள். (வெளி 11:13; வெளி 16:19)

கர்த்தரின் நாளில் உண்டாகும் நியாயத் தீர்ப்பு

1. கர்த்தரின் நாள் சமீபமாயிருக்கிறது (ஏசா 13:1-6).

2. அது சர்வவல்லவரிடத்திலிருந்து மகா சங்காரமாய் வரும். (ஏசா 13:6)

3. எல்லாக் கைகளும் நெகிழும்.

4. எல்லா மனுஷரின் இருதயமும் கரைந்துபோம். (ஏசா 13:7-8).

5. அவர்கள் திகிலடைவார்கள். (ஏசா 13:8).

6. வேதனைகளும் வாதைகளும் அவர்களைப் பிடிக்கும். (ஏசா 13:8).

7. ஒருவரையொருவர் பிரமித்துப் பார்ப்பார்கள் (ஏசா 13:8).

8. அவர்கள் முகங்கள் நெருப்பான முகங்களாயிருக்கும். (ஏசா 13:8).

9. கர்த்தருடைய நாள் குரூரமும், மூர்க்கமும், உக்கிரகோபமுமாய் வருகிறது. (ஏசா 13:9).

10. தேசம் பாழாகும். (ஏசா 13:10; மத் 24:29-31).

11. அதின் பாவிகள் அதிலிருந்து அழிக்கப் படுவார்கள்.

12. வானத்தின் நட்சத்திரங்களும் ராசிகளும் ஒளி கொடாதிருக்கும்.

13. சூரியன் உதிக்கையில் இருண்டுபோம்.

14. சந்திரன் ஒளி கொடாதிருக்கும். (ஏசா 13:10; மத் 24:29-31).

15. பாவத்தினிமித்தம் உலகம் தண்டிக்கப்படும். (ஏசா 13:11).

16. அக்கிரமத்தினிமித்தம் துன்மார்க்கர் தண்டிக்கப்படுவார்கள்.

17. அகங்காரரின் பெருமையை ஒழியும்.

18. கொடியரின் இடும்பு தாழ்த்தப்படும்.

19. அக்காலத்தில் அழிவிலிருந்து தப்பிய புருஷன் பசும்பொன்னிலும் ஓப்பீரின் தங்கத்திலும் அபூருவமாக இருப்பான். (ஏசா 13:12).

20. பூமி அதிரும். (ஏசா 13:13).

21. சேனைகளின் கர்த்தருடைய உக்கிரத்தினால் அவருடைய கடுங்கோபத்தின் நாளிலே பூமி தன்னிடத்தைவிட்டு நீங்கும்.

22. பூமியிலுள்ள ஜனங்கள் துரத்தப்பட்ட வெளிமானைப் போலும், யாரும் சேர்க்காத ஆட்டைப்போலும் இருப்பார்கள் (ஏசா 13:14).

23. அவரவர் தங்கள் ஜனத்தண்டைக்குப் போகமுகத்தைத் திருப்பி, அவரவர் தங்கள் தேசத்துக்கு ஓடிப்போவார்கள்.

24. அகப்பட்டவனெவனும் குத்துண்டு விழுவான். (ஏசா 13:15).

25. அவர்களைச் சேர்ந்திருந்தவனெவனும் பட்டயத்தால் விழுவான்.

13 அதிகாரம்

26. அவர்கள் குழந்தைகள் அவர்கள் கண்களுக்கு முன்பாக மோதியடிக்கப்படும் (ஏசா 13:16).

27. அவர்கள் வீடுகள் கொள்ளையிடப்படும்.

28. அவர்கள் மனைவிகள் அவமானப் படுவார்கள்.

"அவர்கள் முகங்கள் நெருப்பான முகங்களாயிருக்கும்" - கர்த்தரை எதிர்த்து நின்றதற்காக ஜனங்களுடைய முகங்கள் வெட்கப்படும்.

"வானத்தின் நட்சத்திரங்களும் ராசிகளும் ஒளி கொடாதிருக்கும்" - (ஏசா 34:4; எசே 32:7-8; யோவே 2:2,31; யோவே 3:15; ஆமோ 8:9; மத் 24:29-30.

ராசிகள் **(constellations)** - כְּסִיל - **kes-eel' - 3685**

ஆண்பால் பெயர்ச்சொல் - மூடர் **constellations** (ஏசா 13:10); **Orion** (யோபு 9:9; யோபு 38:31; ஆமோ 5:8).

"பெருமை" **(arrogancy)** - (ஏசா 13:11; 1சாமு 2:3; நீதி 8:13; எரே 48:29).

"இடும்பு" **(haughtiness)** - (ஏசா 13:11; ஏசா 2:11,17; ஏசா 16:6; எரே 48:29).

"அபூருவமாக்குவேன்" - கர்த்தருடைய நாளில் ஏராளமான மனுஷர் மரித்துப் போவார்கள். பூமியில் மனுஷரைக் காண்பது அரிதாக இருக்கும்.

"வானத்தை அதிரப்பண்ணுவேன்" - கர்த்தருடைய நாள் ஆரம்பமாகும்போது இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை இருக்கும். (ஏசா 13:6,9,10,14) வருங்கால உபத்திரவக் காலத்தில் வானங்கள் இதுபோல பலதடவை பாதிக்கப்படும். (வெளி 6:12).

"யாரும் சேர்க்காத ஆட்டைப்போலும்" - மேய்ப்பனில்லாத ஆடுகள் பாதுகாப்பற்றவை. பாபிலோனின் ஜனங்களும் பாதுகாப்பு இல்லாமல் சிதறிப்போயிருப்பார்கள். கர்த்தருடைய நாளில் மிகுந்த பயத்தோடு இருப்பார்கள். (ஏசா 13:13-16).

(3) மேதிய பெர்சியர்களினால் உடனடி நியாயத்தீர்ப்பு - (தானி 5)

ஏசா 13:17 இதோ, நான் அவர்களுக்கு விரோதமாய் மேதியரை எழுப்புவேன்; அவர்கள் வெள்ளியை மதியாமலும், பொன்னின்மேல் பிரியப்படாமலும்,

ஏசா 13:18 வில்லுகளால் இளைஞரைச் சிதைத்துவிடுவார்கள்; கர்ப்பக்கனியின் மேல் அவர்கள் இரங்குவதில்லை; அவர்கள் கண் பிள்ளைகளைத் தப்பவிடுவதுமில்லை.

"அவர்களுக்கு விரோதமாய் மேதியரை எழுப்புவேன்" - ஏசா 13:17-18 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனம் பாபிலோனைப் பொறுத்தளவில் உடனடியாக நிறைவேறும். தரியு, கோரேஸ் ஆகியோரின் நாட்களில் மேதியர் பாபிலோனைக் கைப்பற்றினார்கள். (ஏசா 21:2; ஏசா 44:28; ஏசா 45:1; எரே 51:11; தானி 5:25-31).

மேதிய தேசம் கிழக்கு அசீரியாவில் உள்ளது. யாபேத்தின் குமாரனாகிய மாதாயின் சந்ததியில் மேதியர் வந்திருக்கிறார்கள். (ஆதி 10:2) அசீரியர் மேதியரை ஏற்கெனவே கீழ்ப்படுத்தி இருந்தார்கள். 520 வருஷங்களாக மேதியர் அசீரியரின்கீழ் இருந்தார்கள். திகிலாத்பிலேசர், சல்மனாசேர் ஆகியோரின் காலத்தில் மேதியர்கள் அசீரியாவிற்கு எதிராகக் கலகம் பண்ணினார்கள். இது யூதாவின் ராஜாக்களாகிய எசேக்கியா, ஆகாஸ் ஆகியோரின் காலத்தில் நடைபெற்ற சம்பவம். எசேக்கியாவின் நாட்களில் சனகெரிப்பின் அசீரிய சேனையைக் கர்த்தருடைய தூதனானவர் அழித்தார். (ஏசா 37:38-39) அசீரியரின் இந்த அழிவினால் மேதியர் விடுதலை பெற்றார்கள். ஏசாயா இந்தத் தீர்க்கதரிசனத்தைக் கூறும்போது மேதியர் பாபிலோனைவிட வல்லவர்களாக இருந்தார்கள். (ஏசா 13:17-18; ஏசா 21:2)

அசீரியரிடமிருந்து விடுதலை பெற்ற பின்பு மேதியர் பெர்சியரையும், மேற்கு ஆசிய தேசத்தாரையும் வென்று, அவர்களுடைய தேசங்களையும் தங்களுடைய தேசத்தோடு சேர்த்துக் கொண்டார்கள். பாபிலோனியரின் உதவியினால் அவர்கள் நினிவேயையும் பிடித்தார்கள். இவ்வாறாக அசீரியா

13 அதிகாரம்

மேதியாவிற்கு உட்பட்ட தேசமாயிற்று. மேதிய-பெர்சிய பேரரசு புறஜாதியாரின் காலத்தில் இஸ்ரவேலின்மீது பாரத்தைக் கொடுத்த நான்காவது ராஜ்யமாக விளங்கிற்று. தானி 2:38-44; தானி 7:4-5; தானி 8:20-25; தானி 11:1-5 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனங்களில் இது இரண்டாவது தேசமாகும்.

மேதிய-பெர்சியரின் அடையாளங்கள்

1. வெள்ளியிலான மார்பும், புயங்களும் (தானி 2)
2. கரடி (தானி 7:5)
3. ஆட்டுக்கடா (தானி 8:3-4,20)

"வில்லுகளால் இளைஞரைச் சிதைத்து விடுவார்கள்" - ஏசா 13:16 ஆவது வசனத்தில் குழந்தைகள் மோதியடிக்கப்படும் சம்பவம் தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்டிருக்கிறது. மேதியர் பாபிலோன்மீது யுத்தம்பண்ணும் போது நடைபெறும் சம்பவமும், இங்கு தீர்க்கதரிசனமாக விவரிக்கப்பட்டிருக்கிறது.

(4) இறுதி அழிவின் பத்து அம்சங்கள் - (எரே 51:26; வெளி 14:8; 16:19; 18:2)

ஏசா 13:19 ராஜ்யங்களுக்குள் அலங்காரமும், கல்தேயருடைய பிரதான மகிமையுமாகிய பாபிலோனானது தேவனால் சோதோமும் கொமோராவும் கவிழ்க்கப்பட்டதுபோல கவிழ்க்கப்படும்.

ஏசா 13:20 இனி ஒருபோதும் அதில் ஒருவரும் குடியேறுவதுமில்லை, தலைமுறைதோறும் அதில் ஒருவரும் தங்கித் தரிப்பதுமில்லை; அங்கே அரபியன் கூடாரம் போடுவதுமில்லை; அங்கே மேய்ப்பர் மந்தையை மறிப்பதுமில்லை.

ஏசா 13:21 காட்டுமிருகங்கள் அங்கே படுத்துக்கொள்ளும்; ஊளையிடும் பிராணிகள் அவர்கள் வீடுகளை நிரப்பும், கோட்டான்கள் அங்கே குடிகொள்ளும்; காட்டாடு அங்கே துள்ளும்.

ஏசா 13:22 அவர்கள் பாழான மாளிகைகளில் ஓரிகள் ஊளையிடும்; வலுசர்ப்பங்கள் அவர்கள் செல்விக்கையான அரமனைகளில் ஏகமாய்க் கூடும்; அதின் காலம் சீக்கிரம் வரும், அதின் நாட்கள் நீடித்திராது என்கிறார்.

பாபிலோனின் அழிவு

1. பாபிலோனானது சோதோமும் கொமோராவும் கவிழ்க்கப்பட்டதுபோல தேவனால் கவிழ்க்கப்படும். (ஏசா 13:19).
2. இனி ஒருபோதும் அதில் ஒருவரும் குடியேறுவதுமில்லை. (ஏசா 13:20).
3. அங்கே அரபியன் கூடாரம் போடுவதுமில்லை.
4. அங்கே மேய்ப்பர் மந்தையை மறிப்பதுமில்லை.
5. காட்டுமிருகங்கள் அங்கே படுத்துக் கொள்ளும் (ஏசா 13:21).
6. ஊளையிடும் பிராணிகள் அவர்கள் வீடுகளை நிரப்பும்.
7. கோட்டான்கள் அங்கே குடிகொள்ளும்.
8. காட்டாடு அங்கே துள்ளும்.
9. அவர்கள் பாழான மாளிகைகளில் ஓரிகள் ஊளையிடும் (ஏசா 13:22).
10. வலுசர்ப்பங்கள் அவர்கள் செல்விக்கையான அரமனைகளில் ஏகமாய்க் கூடும்.

கர்த்தர் சோதோமையும், கொமோராவையும் முற்றிலுமாக அழித்துப்போட்டார். பாபிலோன் இன்னும் முற்றிலுமாக அழிக்கப்படவில்லை. ஆகையினால் இந்தத் தீர்க்கதரிசனம் வருங்காலத்தில் நிறைவேறும். (ஏசா 13:19; எரே 50:40). இது வருங்காலத்தில் பாபிலோன் அழியப்போவதை விளக்குகிறது. (வெளி 1:19, 14:8; வெளி 16:17-21; வெளி 18:1-24)

ஏசாயா - தொகுப்புரை

13 அதிகாரம்

பாபிலோன் - சோதோம் - கொமோரா ஆகியவற்றின் அழிவு

1. ஒரேவிதமான பாவங்களுக்காக அழிக்கப் பட்டார்கள். (ஆதி 19:5; லூக்கா 17:28-29; வெளி 18:2-5)

2. அற்புதமாக அழிக்கப்பட்டார்கள். (ஏசா 13:5-16,19; எரே 50:40; எரே 51:42,64; வெளி 16:17-21; வெளி 18:8)

3. அக்கினியினால் அழிக்கப்பட்டார்கள். (ஏசா 13:19; ஆதி 19:24; வெளி 18:8)

4. பூமி அதிர்ச்சியினால் அழிந்தார்கள். (எரே 51:64; வெளி 16:17-21).

5. அங்கு குடியிருந்தவர்கள் அனைவரும் அழிந்தார்கள். (ஏசா 13:19-22; ஆதி 19:24; எரே 51:37; லூக்கா 17:29; வெளி 16:17-21; வெளி 18:1-24)

6. கர்த்தருடைய கோபத்தினால் அழிந்தார்கள். (ஏசா 13:5-16,19-22; எரே 50:28; வெளி 18:1-24; வெளி 19:2)

7. சடிதியாக அழிந்தார்கள். (ஏசா 13:19; ஆதி 19:24; எரே 51:8; வெளி 18:8-10,17,19)

8. அழிவதற்கு முன்பு தேவனுடைய பிள்ளைகளுக்கு அவ்விடத்தைவிட்டு வெளியேறும் கட்டளை கொடுக்கப்பட்டது. (ஆதி 18:21-33; ஆதி 19:15-24; எரே 51:6,45; வெளி 18:4)

9. இவை மறுபடியும் திரும்பக் கட்டப்பட மாட்டாது. (ஏசா 13:19-22; ஆதி 19:24; எரே 50:13, 23,39-40; எரே 51:26,62; வெளி 18)

பாபிலோனின் விளக்கம்

1. ராஜ்யங்களுக்குள் அலங்காரம் (ஏசா 13:19)

2. கல்தேயருடைய பிரதான மகிமை.

3. பொன்னகரி (ஏசா 14:4)

4. ராஜ்யங்களின் நாயகி (ஏசா 47:5,7)

ஊளையிடும் பிராணிகள் **(doleful creatures) - אֹחַ - o'-akh - 255**

ஆ.பெ. - ஊளையிடும் பிராணி **(a howling animal)**

"காட்டாடு" **(satyrs)** - இது ஒரு அதிசய மிருகம். இதற்கு மனுஷனுடைய தலையும், சரீரமும் இருக்கும். ஆட்டின் கால்களும், வாலும் இருக்கும். ஏதோமியர் இவற்றின் உருவங்களை வழிபட்டார்கள். (ஏசா 13:21; ஏசா 34:14). இதன் எபிரெய பெயர் "சாயேர்" **saiyr** என்பதாகும்.

காட்டாடு **(satyrs) - שָׂעִיר - saw-eer', saw-eer' - 8163**

ஆ.பெ.சொ. - காட்டாடு, ரோமம், மிகுந்தது, ரோமமுள்ளது **hairy** (ஆதி 27:11,23); **devils** (லேவி 17:7); **goats and kid of the goat** (லேவி 16:5-27; எண் 7:16-82) **rough goat** (தானி 8:21)

"வலுசர்ப்பங்கள்" - (யாத் 7:9)

"அதின் காலம் சீக்கிரம் வரும்" - கர்த்தருடைய நாள் சமீபித்திருக்கிறது. (ஏசா 13:6,9)

14 அதிகாரம்

(5) ஆயிர வருஷம் - இஸ்ரவேல் மறுபடியும் கட்டப்பட்டு உயர்த்தப் படுகிறது - *(2:1)*

ஏசா 14:1 கர்த்தர் யாக்கோபுக்கு இரங்கி, பின்னும் இஸ்ரவேலரைத் தெரிந்து கொண்டு, அவர்களை அவர்கள் தேசத்திலே தாபரிக்கப்பண்ணுவார்; அந்நியரும் அவர்களோடு சேர்க்கையாகி, யாக்கோபின் வம்சத்தோடே கூடிக்கொள்வார்கள்.

ஏசா 14:2 ஜனங்கள் அவர்களை அழைத்துக் கொண்டுபோய் அவர்கள் ஸ்தானத்தில் விடுவார்கள்; இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய தேசத்திலே அவர்களை வேலைக்காரராகவும் வேலைக்காரிகளாகவும் கையாண்டு, தங்களைச் சிறையாக்கினவர்களைச் சிறையாக்கி, தங்களை ஒடுக்கினவர்களை ஆளுவார்கள்.

ஏசா 14:3 கர்த்தர் உன் துக்கத்தையும், உன் தத்தளிப்பையும், நீ அடிமையாக்கப் பட்டிருந்த கடினமான அடிமைத் தனத்தையும் நீக்கி, உன்னை இளைப்பாறப் பண்ணும் அக்காலத்திலே,

கர்த்தர் இஸ்ரவேலுக்காகச் செய்யும் காரியங்கள்

1. யாக்கோபுக்கு இரங்குவார்.
2. இஸ்ரவேலரைத் தெரிந்து கொள்வார்.
3. அவர்களை அவர்கள் தேசத்திலே தாபரிக்கப்பண்ணுவார்.

"அந்நியரும் அவர்களோடு சேர்க்கையாகி" - அந்நிய ஜாதியாரும் இஸ்ரவேலின் தேவனைப் பின்பற்றுவார்கள். அவர்கள் இஸ்ரவேல் புத்திரரைப் பின்பற்றி அவர்களுக்கு வேலைசெய்வார்கள்.

"தங்களைச் சிறையாக்கினவர்களைச் சிறையாக்கி, தங்களை ஒடுக்கினவர்களை ஆளுவார்கள்" - இஸ்ரவேல் கோத்திரத்தார் பாலஸ்தீன தேசத்திற்குத் திரும்பி வருவதற்குப் புறஜாதியார் உதவி புரிவார்கள். அதன்பின்பு, அவர்கள் கர்த்தருடைய தேசத்தில் இஸ்ரவேல் புத்திரருக்கு வேலைக்காரராகவும் வேலைக்காரிகளாகவும் இருப்பார்கள். ஒருகாலத்தில் தங்களைச் சிறைப்பிடித்துச் சென்றவர்களை இஸ்ரவேல் புத்திரர் இப்போது சிறைப்பிடித்து அவர்களை ஒடுக்கி ஆளுவார்கள். (ஏசா 60:8-12; ஏசா 66:19-21).

"உன்னை இளைப்பாறப்பண்ணும் அக்காலத்திலே" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் காலத்தில் - ஆயிரம் வருஷ அரசாட்சியிலும், புதிய பூமியிலும் - கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு நித்திய இளைப்பாறுதலைக் கட்டளையிடுவார். தங்களுடைய கவலைகளிலிருந்தும், பயங்களிலிருந்தும் இஸ்ரவேல் புத்திரர் விடுவிக்கப்படுவார்கள். அந்திக்கிறிஸ்துவாகிய பாபிலோனின் ராஜா ஒழிந்துபோனதினால் ஜெயகீதம் பாடுவார்கள். (ஏசா 14:3-4).

(6) அந்திக்கிறிஸ்துவின்மீது வரும் காலத்தில் இஸ்ரவேலர் பாடும் வெற்றியின் பாடல் - *(14:4-23)*

(அ) பாபிலோன் அழிந்தது - *(13:9)*

ஏசா 14:4 நீ பாபிலோன் ராஜாவின்மேல் சொல்லும் வாக்கியமாவது: ஒடுக்கினவன் ஒழிந்துபோனானே! பொன்னகரி ஒழிந்துபோயிற்றே!

வாக்கியம் (proverb) - מָשָׁל - maw-shawl' - 4912

ஆண்பால் பெயர்ச்சொல் - வாக்கியம், பழமொழி, மொழி, நீதிமொழி, சமானம், உவமைமொழி, உபமானம், ஒப்பு, உவமை - இது ஜெயகீதத்தைக் குறிக்கும். (நீதி 1:1) பாபிலோனின் ராஜா ஒழிந்து போனதினால் அவனுக்காகப் பாடப்படும் புலம்பற்பாட்டையும் இது குறிக்கலாம். (ஏசா 14:4).

14 அதிகாரம்

(ஆ) அந்திக்கிறிஸ்து அழிந்தான் - (30:30; எசே 38-39; தானி 7:11,24-27; 8:25; 9:27; 11:45; 2தெச 2; வெளி 19)

ஏசா 14:5 கர்த்தர் துஷ்டரின் தண்டாயுதத்தையும், அரசாண்டவர்களின் செங்கோலையும் முறித்துப்போட்டார்.

ஏசா 14:6 உக்கிரங்கொண்டு ஓயாத அடியாய் ஜனங்களை அடித்து, கோபமாய் ஜாதிகளை அரசாண்டவன், தடுப்பாரில்லாமல் துன்பப்படுத்தப் படுகிறான்.

"துஷ்டர்" (the wicked) - அந்திக்கிறிஸ்துவே இந்த வசனத்தில் துஷ்டன் என்றும், (ஏசா 14:5; ஏசா 11:4) அக்கிரமக்காரன் என்றும் (2தெச 2:8) விவரிக்கப்படுகிறான். இவன் கேட்டின் மகனாகிய பாவமனுஷனாவான். "அவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தேவனென்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப் படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்" (2தெச 2:3-4).

அந்திக்கிறிஸ்துவைப் பற்றிய செய்திகள்

1. பாபிலோன் ராஜா (ஏசா 14:4)
2. துஷ்டன் (ஏசா 14:5; ஏசா 11:4; 2தெச 2:8)
3. அரசாண்டவர்களின் செங்கோல் (ஏசா 14:5)
4. ஜனங்களை அழித்தவன். (ஏசா 14:6)
5. ஜாதிகளை அரசாண்டவன் (ஏசா 14:6; வெளி 17:12-17)
6. பரிசுத்தவான்களைத் துன்பப்படுத்தியவன். (ஏசா 14:6; வெளி 13)
7. பூமியைத் தத்தளிக்கப்பண்ணினவன் (ஏசா 14:16)
8. ராஜ்யங்களை அதிரப்பண்ணியவன்
9. உலகத்தை வனாந்தரமாக்கியவன் (ஏசா 14:17,20)
10. நகரங்களை அழித்தவன் (ஏசா 14:17)
11. சிறைப்பட்டவர்களைத் தங்கள் வீடுகளுக்குப் போகவிடாதிருந்தவன்.
12. தன் தேசத்தைக் கெடுத்து தன் ஜனத்தைக் கொன்றுபோட்டவன். (ஏசா 14:20)
13. அசீரியன் (ஏசா 14:25; மீகா 5:1-8)
14. இஸ்ரவேலை ஒடுக்கியவன் (ஏசா 14:25)

(இ) ஆயிர வருஷ இளைப்பாறுதல் - (2:1)

ஏசா 14:7 பூமிமுழுதும் இளைப்பாறி அமைந்திருக்கிறது; கெம்பீரமாய் முழங்குகிறார்கள்.

ஏசா 14:8 தேவதாரு விருட்சங்களும், லீபனோனின் கேதுருக்களும், உன்னிமித்தம் சந்தோஷப்பட்டு, நீ விழுந்து கிடந்தது முதற்கொண்டு எங்களை வெட்டவருவார் ஒருவரும் இல்லை என்று சொல்லுகிறது.

"பூமிமுழுதும் இளைப்பாறி அமைந்திருக்கிறது" - இதுவும் ஆயிரம் வருஷ அரசாட்சியில் நடைபெறும் சம்பவம். ஆதாமின் வீழ்ச்சியிலிருந்து இதுவரையிலும் பூமி இளைப்பாறி அமைந்திருக்கவில்லை. (ஏசா 14:7-8). இக்காலத்தில் தேவதாரு விருட்சங்களும், லீபனோனின் கேதுருக்களும் அந்திக்கிறிஸ்துவின் வீழ்ச்சியின் நிமித்தம் சந்தோஷப்படும்.

(ஈ) அந்திக்கிறிஸ்துவுக்கு நரகத்தின் ஆறு அம்ச சாபம் - (வெளி 19:20; 20:10)

ஏசா 14:9 கீழே இருக்கிற பாதாளம் உன்னிமித்தம் அதிர்ந்து; உன் வருகைக்கு எதிர்கொண்டு, பூமியில் அதிபதிகளாயிருந்து செத்த இராட்சதர் யாவரையும் உன்னிமித்தம் எழுப்பி, ஜாதிகளுடைய எல்லா ராஜாக்களையும் அவர்களுடைய சிங்காசனங்களிலிருந்து எழுந்திருக்கப்பண்ணுகிறது.

ஏசாயா – தொகுப்புரை

14 அதிகாரம்

ஏசா 14:10 அவர்களெல்லாரும் உன்னை நோக்கி: நீயும் எங்களைப்போல பலட்சயமானாயோ? எங்களுக்குச் சமானமானாயோ? என்று சொல்லுவார்கள்.

ஏசா 14:11 உன் ஆடம்பரமும், உன் வாத்தியங்களின் முழக்கமும் பாதாளத்தில் தள்ளுண்டுபோயிற்று; புழுக்களே உன் படுக்கை, பூச்சிகளே உன் போர்வை.

"கீழே இருக்கிற பாதாளம்" - இது நரகத்தைக் குறிக்கும் வாக்கியம். பாதாளம் பூமியின் கீழே இருக்கிறது. (ஏசா 14:9-16; நீதி 15:24; எசே 31:14-18; எசே 32:18-31) பாதாளம் பூமியின் தாழ்விடங்களில் இருக்கிறது. (எசே 31:14-18; எசே 32:24, சங் 63:9; சங் 68:18; எபே 4:8-10) பாதாளம் பூமியின் இருதயத்தில் இருக்கிறது. (மத் 12:40) சமுத்திரத்தின் ஆழத்திலிருக்கிறது. (யோனா 2:2-6) தோண்டமுடியாத ஆழத்தில் இருக்கிறது. (யோபு 11:8; ஆமோ 9:2).

பாதாளத்தின் ஜீவன்

பாதாளத்திலுள்ள ஆத்துமாக்கள் உயிரோடும், உணர்வோடும் இருக்கும்.

1. பாதாளத்தில் இருக்கிறவர்கள் அங்கு வருகிறவர்களின் வருகைக்காக எதிர் கொண்டு காத்திருப்பார்கள். (ஏசா 14:9).
2. பூமியில் அதிபதிகளாயிருந்து செத்த இராட்சதர் யாவரும் பூமியிலிருந்து பாதாளத்திற்கு வருகிறவர் களின்நிமித்தம் எழும்புவார்கள்.
3. ஜாதிகளுடைய ராஜாக்களும் பூமியிலிருந்து பாதாளத்திற்கு வருகிறவர்களின் நிமித்தம் எழும்புவார்கள்.
4. ராஜாக்கள் அவர்களுடைய சிங்காசனங்களிலிருந்து பூமியிலிருந்து பாதாளத்திற்கு வருகிறவர் களின்நிமித்தம் எழும்புவார்கள்.
5. பாதாளத்தில் சம்பாஷணை நடைபெறும். (ஏசா 14:10-11; லூக்கா 16:19-31).
6. பூமியில் பலமுள்ளவர்களாக இருந்தவர்கள் பாதாளத்தில் பலட்சயமாக இருப்பார்கள். (ஏசா 14:10).
7. பூமியிலிருந்த ஆடம்பரமும், வாத்தியங்களின் முழக்கமும் பாதாளத்தில் இராது. (ஏசா 14:11).
8. பாதாளத்தில் இருக்கிறவர்களுக்கு புழுக்களே படுக்கையாகவும், பூச்சிகளே போர்வையாகவும் இருக்கும். (ஏசா 14:11) புழுக்களும், பூச்சிகளும் இங்கு உருவகமாகக் கூறப்பட்டுள்ளது. மரித்தோரும் பாதாளத்தில் உணர்வுள்ளவர்களாக இருப்பார்கள். (சங் 22:6).

(உ) லூசிபருக்கு நரகத்தின் ஒன்பது அம்ச சாபம் - (வெளி 12:7-12; 20:1-10)

ஏசா 14:12 அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே, நீ வானத்திலிருந்து விழுந்தாயே! ஜாதிகளை ஈனப்படுத்தினவனே, நீ தரையிலே விழ வெட்டப்பட்டாயே!

ஏசா 14:13 நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும்,

ஏசா 14:14 நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே.

ஏசா 14:15 ஆனாலும் நீ அகாதமான பாதாளத்திலே தள்ளுண்டுபோனாய்.

"அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே, நீ வானத்திலிருந்து விழுந்தாயே" - லூசிபர் ஏற்கெனவே வானத்திலிருந்து விழுந்தவன். (ஏசா 14:12-14) அவன் மறுபடியும் வானத்திலிருந்து பாதாளத்திற்குத் தள்ளப் படுவான். (ஏசா 14:15) அப்போது தேவனுக்கு எதிரான எல்லாக் கலகங்களும் முடிவுக்கு வரும்.

14 அதிகாரம்

ஏசா 14:12-15 ஆகிய வசனங்கள் சாத்தானைப் பற்றிக் கூறுகின்றன

1. லூசிபர் என்பது சாத்தானுடைய பெயர். (ஏசா 14:12).
2. சாத்தான் மட்டுமே வானத்திலிருந்து கீழே விழுந்தவன். (ஏசா 14:12; லூக்கா 10:18) இவனும் இவனுடைய தூதரும் இனிமேல் வானத்திலிருந்து பாதாளத்திற்குத் தள்ளப்படுவார்கள். (வெளி 12:7-12).
3. வேதாகமத்தில் இயேசு கிறிஸ்துவையும் (வெளி 22:16, தூதர்களையும் யோபு 38:7 தவிர சாத்தான் மாத்திரமே விடிவெள்ளி என்று அழைக்கப்படுகிறான். (ஏசா 14:12).
4. லூசிபர் வானத்திற்கு ஏறி தன்னுடைய சிங்காசனத்தைக் கர்த்தருடைய சிங்காசனத்திற்கு மேலாக உயர்த்த நினைத்தவன். (ஏசா 14:13-14).
5. சாத்தான் வானத்திலிருந்து அகாதமான பாதாளத்திலே தள்ளுண்டுபோவான். (ஏசா 14:12-15; எசே 28:11-17; மத் 25:41; லூக்கா 10:18; எபே 6:10-18; வெளி 12:7-12).

விடிவெள்ளி (morning star) - הֵילֵל - hay-lale' - 1966

ஆண்பால் பெயர்ச்சொல் - விடிவெள்ளி (brightness; morning star)

பிரகாசி (to shine) - הָלַל - haw-lal' - 1984

வினைச்சொல் - பிரகாசி, வெளிச்சமாயிரு (to shine)

லூசிபரைப் பற்றிய செய்திகள்

1. வானத்திலிருந்து விழுந்தான். (ஏசா 14:12; லூக்கா 10:18)
2. தரையிலே விழ வெட்டப்பட்டான். (ஏசா 14:12; லூக்கா 10:18, ஏசா 9:10; ஏசா 15:2; ஏசா 22:25; ஏசா 45:2)
3. ஜாதிகளை ஈனப்படுத்தினான். (ஏசா 14:12; எசே 28:11-17)

வெட்டு (cut down) - גָּדַע - gaw-dah' - 1438

வினைச்சொல் - தறி, வெட்டு, முறி, கத்தரி, அழி (to fell a tree; destroy anything; cut down; cut off; cut asunder)

"ஜாதிகளை ஈனப்படுத்தினவனே" - ஜனங்களுடைய இருதயத்தில் கர்த்தரைப் பற்றிய நினைவைச் சாத்தான் விலக்கிவிடுவான். இதன்பின்பு கர்த்தருக்கு எதிராக அவர்களைக் கலகம் பண்ணுமாறு வழிநடத்துவான். இது சாத்தானுக்கு மிகவும் எளிதாக இருக்கும். (எசே 28:11-19)

"வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதம்" - பரலோகம் பூமியின் வடபுறத்தில் இருப்பதாக வேதபண்டிதர்கள் கூறுகிறார்கள். (யோபு 26:7; சங் 75:6). பரலோகத்திலுள்ள ஆராதனைக் கூட்டத்தார் இந்தப் பர்வதத்தில் வந்து கர்த்தரை ஆராதிக்கிறார்கள். (ஏசா 4:11; ஏசா 5:8-14; சங் 82:1; எசே 28:12-14; வெளி 7:9-16; வெளி 14:1-5; வெளி 15:2-4; வெளி 19:1-10).

"ஆனாலும் நீ அகாதமான பாதாளத்திலே தள்ளுண்டுபோனாய்" - (மத் 25:41; வெளி 14:9-11; வெளி 20:10-15; வெளி 21:8; வெளி 22:15).

(ஊ) அந்திக்கிறிஸ்துவுக்கு தேசங்களின் சாபம் - (66:24; வெளி 14:9-12)

ஏசா 14:16 உன்னைக் காண்கிறவர்கள் உன்னை உற்றுப்பார்த்து, உன்னைக் குறித்துச் சிந்தித்து: இவன்தானா பூமியைத் தத்தளிக்கவும், ராஜ்யங்களை அதிரவும் செய்து,

ஏசா 14:17 உலகத்தை வனாந்தரமாக்கி, அதின் நகரங்களை அழித்து, சிறைப் பட்டவர்களைத் தங்கள் வீடுகளுக்குப் போகவிடாமலிருந்தவன் என்பார்கள்.

14 அதிகாரம்

ஏசா 14:18 ஜாதிகளுடைய சகல ராஜாக்களும், அவரவர் தங்கள் அறையிலே மகிமையோடே கிடத்தப் பட்டிருக்கிறார்கள்.

ஏசா 14:19 நீயோ அழுகிப்போன கிளையைப்போலவும், பட்டயக்குத்தால் கொலையுண்டவர்களின் உடுப்பைப் போலவும், ஒரு குழியின் கற்களுக்குள்ளே கிடக்கிறவர் களைப்போலவும், காலால் மிதிக்கப்பட்ட பிணத்தைப்போலவும், உன் கல்லறைக்குப் புறம்பாய் எறிந்து விடப்பட்டாய்.

ஏசா 14:20 நீ அவர்களோடே அடக்கம் பண்ணப்படுவதில்லை; நீ உன் தேசத்தைக் கெடுத்து உன் ஜனத்தைக் கொன்று போட்டாய்; தீமைசெய்கிறவர்களுடைய சந்ததி ஒருபோதும் பேர்பெறுவதில்லை.

"உன்னை உற்றுப்பார்த்து" - ஏசா 14:16 ஆவது வசனத்திலிருந்து பாபிலோனின் ராஜாவைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. ஏசா 14:9-20 ஆகிய வசனங்களில் இவன் லூசிபராகவும் விவரிக்கப்பட்டிருக்கிறான். ஏசா 14:9-11,16-20 ஆகிய வசனங்களில் ஒரு மனுஷனும், ஏசா 14:12-15 ஆகிய வசனங்களில் ஒரு தேவதூதனும் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள்.

"தங்கள் அறையிலே மகிமையோடே கிடத்தப்பட்டிருக்கிறார்கள்" - பூமியின் ராஜாக்கள் நல்லடக்கம் பண்ணப் பட்டிருக்கிறார்கள். ஆனால் அந்திக்கிறிஸ்துவோ கல்லறையில் அடக்கம்பண்ணப்படுவதில்லை.

அந்திக்கிறிஸ்துவின் ஒப்புமை

1. அழுகிப்போனகிளை
2. கொலையுண்டவர்களின் உடுப்பு
3. காலால் மிதிக்கப்பட்ட பிணம் (ஏசா 14:19-20)

"நீ அவர்களோடே அடக்கம்பண்ணப் படுவதில்லை" - பூமியின் ராஜாக்களைப் போல அந்திக்கிறிஸ்து அடக்கம் பண்ணப்படமாட்டான். (ஏசா 14:18) அவனுடைய பாவங்களே இதற்குக் காரணம். இயேசு கிறிஸ்து அந்திக் கிறிஸ்துவை அழித்து அக்கினிக்கடலில் எறிந்துவிடுவார். (ஏசா 14:29-30; தானி 7:11; 2தெச 2:8; வெளி 19:19-21; வெளி 20:10).

(ஏ) பாபிலோனுடைய அழிவின் பத்து அம்சம் - (13:19)

ஏசா 14:21 அவன் புத்திரர் எழும்பித் தேசத்தைச் சுதந்தரித்துக்கொண்டு, உலகத்தைப் பட்டணங்களால் நிரப்பாத படிக்கு, அவர்கள் பிதாக்களுடைய அக்கிரமத்தினிமித்தம் அவர்களைக் கொலைசெய்ய ஆயத்தம்பண்ணுங்கள்.

ஏசா 14:22 நான் அவர்களுக்கு விரோதமாய் எழும்புவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; பாபிலோனுடைய பேரையும், அதில் மீந்திருக்கிறதையும், புத்திரனையும் பௌத்திரனையும் சங்கரிப்பேனென்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஏசா 14:23 அதை முள்ளம்பன்றிகளுக்குச் சுதந்தரமும், தண்ணீர் நிற்கும் பள்ளங்களுமாக்கி, அதைச் சங்காரம் என்னும் துடைப்பத்தினால் பெருக்கி விடுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

பாபிலோன் பட்டணத்தின் அழிவு

1. அவர்கள் பிதாக்களுடைய அக்கிரமத்தினிமித்தம் அவர்களைக் கொலைசெய்ய ஆயத்தம் பண்ணுங்கள். (ஏசா 14:21)
2. அவன் புத்திரர் எழும்பாதபடிக்கு.
3. அவர்கள் தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளாதபடிக்கு.
4. அவர்கள் உலகத்தைப் பட்டணங்களால் நிரப்பாதபடிக்கு.
5. நான் அவர்களுக்கு விரோதமாய் எழும்பி பாபிலோனுடைய பேரைச் சங்கரிப்பேன். (ஏசா 14:22).

14 அதிகாரம்

6. அதில் மீந்திருக்கிறதைச் சங்கரிப்பேன்.

7. புத்திரனைச் சங்கரிப்பேன்.

8. பௌத்திரனைச் சங்கரிப்பேன்.

9. அதை முள்ளம்பன்றிகளுக்குச் சுதந்தரமும், தண்ணீர் நிற்கும் பள்ளங்களுமாக்குவேன். (ஏசா 14:23).

10. அதைச் சங்காரம் என்னும் துடைப்பத்தினால் பெருக்கிவிடுவேன்.

"முள்ளம்பன்றி" (bittern) - (ஏசா 14:22; ஏசா 34:11; செப் 2:8).

துடைப்பம் (besom) - מַטְאֲטֵא - mat-at-ay' - 4292

ஆ.பெ.சொ. - துடைப்பம் (a broom)

(7) அந்திக்கிறிஸ்துவை அழிப்பதாக தேவனுடைய ஆறு அம்ச உறுதிமொழி

ஏசா 14:24 நான் நினைத்திருக்கிறபடியே நடக்கும்; நான் நிர்ணயித்தபடியே நிலைநிற்கும் என்று சேனைகளின் கர்த்தர் ஆணையிட்டுச் சொன்னார்.

ஏசா 14:25 அசீரியனை என் தேசத்திலே முறித்து, என் மலைகளின்மேல் அவனை மிதித்துப்போடுவேன்; அப்பொழுது அவனுடைய நுகம் அவர்கள்மேலிருந்து விலகி, அவனுடைய சுமை அவர்கள் தோளிலிருந்து நீங்கும்.

ஏசா 14:26 தேசமனைத்தின்மேலும் நிர்ணயிக்கப்பட்ட யோசனை இதுவே; சகல ஜாதிகள்மேலும் நீட்டப்பட்டிருக்கிற கையும் இதுவே என்றார்.

ஏசா 14:27 சேனைகளின் கர்த்தர் இப்படி நிர்ணயித்திருக்கிறார், யார் அதை வியர்த்தமாக்குவான்? அவருடைய கை நீட்டப்பட்டிருக்கிறது, யார் அதைத் திருப்புவான்?

அந்திக்கிறிஸ்துவை அழிப்பதற்கு கர்த்தரின் ஆணை

1. நான் நினைத்திருக்கிறபடியே நடக்கும். (ஏசா 14:24).

2. நான் நிர்ணயித்தபடியே நிலைநிற்கும்.

3. அசீரியனை என் தேசத்திலே முறித்துப் போடுவேன். (ஏசா 14:25; ஏசா 10:24; ஏசா 30:31; மீகா 5:1-8)

4. என் மலைகளின்மேல் அவனை மிதித்துப் போடுவேன் (ஏசா 14:25; ஏசா 63:1-6)

5. அப்பொழுது அவனுடைய நுகம் அவர்கள்மேலிருந்து விலகும். (ஏசா 14:25; ஏசா 10:27; எரே 30:8).

6. அவனுடைய சுமை அவர்கள் தோளிலிருந்து நீங்கும். (ஏசா 14:25; ஏசா 10:27).

அந்திக்கிறிஸ்துவைக் கர்த்தர் பூமியிலிருந்து அகற்றுவார். இதனால் ஜனங்களுடைய பாரம் குறையும். (ஏசா 14:26; தானி 11:40-45; வெளி 19:11-21). கர்த்தருடைய நோக்கத்தை ஒரு மனுஷனாலும் தடைபண்ண முடியாது. (ஏசா 14:27).

2. பெலிஸ்தியாவின் பாரம் - (எரே 47:1; எசே 25:15; ஆமோ 1:6; செப் 2:4)

ஏசா 14:28 ஆகாஸ் ராஜா மரணமடைந்த வருஷத்திலே உண்டான பாரம் என்னவென்றால்:

ஏசா 14:29 முழு பெலிஸ்தியாவே, உன்னை அடித்த கோல் முறிந்ததென்று அக்களிப்பாயிராதே; பாம்பின் வேரிலிருந்து கட்டுவிரியன் தோன்றும்; அதின் கனி பறக்கிற அக்கினி சர்ப்பமாயிருக்கும்.

ஏசா 14:30 தரித்திரன் தலைப்பிள்ளைகள் திருப்தியாய்ப் புசித்து, எளியவர்கள் சுகமாய்ப் படுத்திருப்பார்கள்; உன் வேரைப் பஞ்சத்தினாலே சாகப்பண்ணுவேன், உன்னில் மீதியானவர்களை அவன் கொன்றுபோடுவான்.

14 அதிகாரம்

ஏசா 14:31 வாசலே அலறு; நகரமே கதறு; பெலிஸ்தியாவே, நீ முழுதும் கரைந்து போகிறாய்; ஏனென்றால், வடக்கே இருந்து புகைக்காடாய் வருகிறான்; அவன் கூட்டங்களில் தனித்தவனில்லை.

ஏசா 14:32 இப்போதும் இந்த ஜாதியின் ஸ்தானாபதிகளுக்கு என்ன மாறுத்தரவு சொல்லப்படும்? கர்த்தர் சீயோனை அஸ்திபாரப்படுத்தினார்; அவருடைய ஜனத்தில் சிறுமையானவர்கள் அதிலே திடன்கொண்டு தங்குவார்கள் என்பதே.

தீர்க்கதரிசன எண் - 16

"ஆகாஸ் ராஜா மரணமடைந்த வருஷத்திலே உண்டான பாரம்..............." (ஏசா 14:28-32) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. ஒருராஜா மரித்தபோது கூறப்பட்ட இரண்டாவது தீர்க்கதரிசனம். (ஏசா 14:28; ஏசா 6:1) உசியா ராஜா மரித்து 32 வருஷங்கள் ஆயிற்று. (ஏசா 6:1) யோதாமும், ஆகாசும் ஆகிய ஒவ்வொருவரும் 16 வருஷங்கள் ஆட்சி புரிந்திருக்கிறார்கள். (2இராஜா 15:32; 2இராஜா 16:1-2). இந்தத் தீர்க்கதரிசனத்திற்கும், இதற்கு முந்திய தீர்க்கதரிசனத்திற்கும் தொடர்பில்லை. ஆகையினால் இந்தத் தீர்க்கதரிசனத்தைத் தனியாகத் தியானிக்க வேண்டும். இது பெலிஸ்தியாவோடு தொடர்புடையது. யூதர்கள் பெலிஸ்தருக்குப் பயப்பட வேண்டியதில்லை என்று உறுதிகூறும் விதமாக இந்தத் தீர்க்கதரிசனம் கூறப் பட்டிருக்கிறது. 30 வருஷங்களுக்கு முன்பாக உசியா ராஜா பெலிஸ்தரை மேற்கொண்டான். (2இராஜா 15:1-7; 2நாளா 26:1-6) அதன்பின்பு அதற்கு இடைப்பட்ட காலத்தில் யூதா தேசம் பலவீனப்பட்டது. சீரியாவும், எப்பிராயீமும் ஆகாசை முறியடித்தார்கள். (2நாளா 28:16-21).

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. முழு பெலிஸ்தியாவே, உன்னை அடித்த கோல் முறிந்ததென்று அக்களிப்பாயிராதே (ஏசா 14:29).
2. தரித்திரன் தலைப்பிள்ளைகள் திருப்தியாய்ப் புசித்து, எளியவர்கள் சுகமாய்ப் படுத்திருப்பார்கள் (ஏசா 14:30; ஏசா 18:8-12).
3. உன் வேரைப் பஞ்சத்தினாலே சாகப் பண்ணுவேன், உன்னில் மீதியானவர்களை அவன் கொன்று போடுவான். (ஏசா 14:30; 2இராஜா 18:8-12).
4. வாசலே அலறு; நகரமே கதறு; பெலிஸ்தியாவே, நீ முழுதும் கரைந்து போகிறாய் (ஏசா 14:31; 2இராஜா 18:8-12).
5. கர்த்தர் சீயோனை அஸ்திபாரப் படுத்தினார்; அவருடைய ஜனத்தில் சிறுமையானவர்கள் அதிலே திடன் கொண்டு தங்குவார்கள் (ஏசா 14:32).

"உன்னை அடித்த கோல் முறிந்ததென்று அக்களிப்பாயிராதே" - உசியா ராஜா பெலிஸ்தரை அடித்த கோலாக இருந்தான். இவன் ஆகாசின் தாத்தா. (2இராஜா 15:1-7; 2நாளா 28:16-21). இந்த 30 வருஷக்காலத்தில் பெலிஸ்தியர் யூதாவைப் பழிவாங்குவதற்குச் சரியான சமயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இப்போது ஆகாசின் ஆட்சிக்காலத்தில் அவர்கள் யூதாவை முறியடித்து விட்டார்கள். யூதாவின் ராஜாக்கள் மரித்துப்போனதற்காகப் பெலிஸ்தியர்கள் சந்தோஷப்படுகிறார்கள். பெலிஸ்தியர்கள் யூதா தேசத்தாரைப் பாம்பு என்று கூறுகிறார்கள். ஏசாயா தீர்க்கதரிசி பெலிஸ்தியரை எச்சரிக்கிறார். இந்தப் பாம்பிலிருந்து ஒரு கட்டுவிரியன் தோன்றி அது பறக்கிற அக்கினிச் சர்ப்பமாக இருக்கும் என்றும், அது பெலிஸ்தியரையும், அவர்களுடைய தேசத்தையும் அழித்துப்போடும் என்றும் எச்சரிக்கிறார். (2இராஜா 18:8-12).

"உன்னில் மீதியானவர்களை அவன் கொன்றுபோடுவான்" - இந்த வசனத்தில் "அவன்" என்பது எசேக்கியா ராஜாவைக் குறிக்கும். (2இராஜா 18:8-12).

"பெலிஸ்தியாவே" - இந்த வார்த்தை இப்போது கானான் தேசம் முழுவதையும் குறிக்கிறது. இதற்கு முன்பு இந்தப் பெயர் பெலிஸ்தியருடைய தேசத்தை மட்டுமே குறித்தது. பெலிஸ்தியா என்னும் பெயரிலிருந்தே பாலஸ்தீனம் என்னும் பெயர் வந்திருக்கிறது.

14 அதிகாரம்

பெலிஸ்தியா (Philistia) - פְּלֶשֶׁת - pel-eh'-sheth - 6429

ஓர் இடத்தின் பெயர் - பெலிஸ்தியா டட்ண்ப்ண்ள்ற்ண்ஹ (சங் 60:8; சங் 87:4; சங் 108:9) டஹப்ங்ள்ற்ண்ய்ஹ (ஏசா 14:29,31; யாத் 15:14) டஹப்ங்ள்ற்ண்ய்ங் (யோவே 3:4). இந்த வார்த்தைக்கு ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் சஞ்சரிக்கிறவர்கள், பரதேசிகள், அந்நியர்கள் என்று பொருள். ஆபிரகாமின் சந்ததியாருக்கு இந்தப்பெயர் சரியாகப் பொருந்தும். ஏனெனில் இவர்கள் அந்நிய தேசத்தில் பரதேசிகளாகச் சஞ்சரித்தவர்கள்.

15 அதிகாரம்

3. மோவாபின் பாரம் - (15:1-16:14; எரே 48:1; எசே 25:8; ஆமோ 2:1; செப் 2:8)

(1) திடீரென்று அழிவு

ஏசா 15:1 மோவாபின் பாரம். இரவிலே மோவாபிலுள்ள ஆர் என்னும் பட்டணம் பாழக்கப்பட்டது, அது சங்காரமாயிற்று; இரவிலே மோவாபிலுள்ள கீர் என்னும் பட்டணம் பாழாக்கப்பட்டது, அது சங்காரமாயிற்று.

"மோவாபிலுள்ள ஆர் என்னும் பட்டணம்" - இது மோவாபின் தலைநகரம். அர்னோன் ஆற்றுக்குத் தெற்கே 15 மைல் தூரத்திலுள்ளது. இது மோவாபின் வடக்கு எல்லையாகும். (எண் 21:15,28; உபா 2:9,18,29).

"ஆர் என்னும் பட்டணம் பாழக்கப்பட்டது, அது சங்காரமாயிற்று" - எசேக்கியாவின் நாலாம் வருஷ ஆட்சிக்காலத்தில் அசீரியர் மோவாபை ஜெயித்தார்கள். ஏசா 15:1-9; ஏசா 16:6-14 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனம் அப்போது நிறைவேறிற்று.

"மோவாபிலுள்ள கீர் என்னும் பட்டணம்" - இது மோவாபிலுள்ள மற்றொரு பெரிய பட்டணம். ஆர் பட்டணத்திற்குத் தெற்கே 6 மைல் தூரத்திலுள்ளது. (ஏசா 22:6; 2இராஜா 16:9; ஆமோ1:5; ஆமோ 9:7).

தீர்க்கதரிசன எண் - 17

"மோவாபின் பாரம்............" (ஏசா 15:1-16:12) ஏசா 15:1-9, ஏசா 16:6-12 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. ஏசா 16:1-5 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. ஆர் (மோவாபின் தலைநகரம்) என்னும் பட்டணம் பாழக்கப்பட்டது. (ஏசா 15:1).
2. இரவிலே மோவாபிலுள்ள கீர் என்னும் பட்டணம் பாழாக்கப்பட்டது.
3. மோவாபியர் அழும்படி மேடைகளாகிய பாயித்துக்கும் தீபோனுக்கும் போகிறார்கள் (ஏசா 15:2).
4. மோவாபியருடைய தலைகளெல்லாம் மொட்டை யடித்திருக்கும்; தாடிகளெல்லாம் கத்தரித்திருக்கும்.
5. அதின் வீதிகளில் இரட்டைக் கட்டிக் கொண்டு, எல்லாரும் அதின் வீடுகள் மேலும், அதின் தெருக்களிலும் அலறுகிறார்கள். (ஏசா 15:3).
6. மோவாபியர் அழுதுகொண்டிருக்கிறார்கள்.
7. எஸ்போன் ஊராரும் எலெயாலே ஊராரும் கூக்குரலிடுகிறார்கள் (ஏசா 15:4).
8. மோவாபின் ஆயுதபாணிகள் கதறுகிறார்கள்.
9. என் (ஏசாயா) இருதயம் மோவாபினிமித்தம் ஓலமிடுகிறது (ஏசா 15:5).
10. அதிலிருந்து ஓடி வருகிறவர்கள் மூன்று வயது கிடாரியைப்போல அலைகிறார்கள்.
11. நிம்ரீமின் நீர்ப்பாய்ச்சலான இடங்கள் பாழாய்ப்போம் (ஏசா 15:6).
12. மோவாபில் புல் உலர்ந்து, முளை அழிந்து, பச்சையில்லாமற்போகிறது.
13. மிகுதியாகச் சேர்த்ததையும், அவர்கள் சம்பாதித்து வைத்ததையும், அலரிகளின் ஆற்றுக்கப்பாலே எடுத்துக்கொண்டு போவார்கள். (ஏசா 15:7).
14. கூக்குரல் மோவாபின் எல்லையெங்கும் சுற்றும் (ஏசா 15:8).
15. தீமோனின் தண்ணீர்கள் இரத்தத்தால் நிறைந்திருக்கும் (ஏசா 15:9).
16. மோவாபிலே தப்பினவர்கள் மேலும், தேசத்தில் மீதியானவர்கள் மேலும் சிங்கம் வந்து அவர்களை அழிக்கும். (ஏசா 15:9).

15 அதிகாரம்

17. மோவாபின் பெருமையும், பொய்யும், கோபமும் கர்த்தர் அவர்களை அழிக்கும் நாளில் ஒன்றும் இல்லாமல் வெறுமையாகப் போகும். (ஏசா 16:6)

18. மோவாபியர் ஒருவருக்காக ஒருவர் அலறுவார்கள் (ஏசா 16:7).

19. எஸ்போன் ஊர் வயல்கள் வாடிப்போகும். (ஏசா 16:8).

20. எஸ்போனே, எலெயாலேயே, உனக்கு என் கண்ணீரைப் பாய்ச்சுவேன்; உன் வசந்தகாலத்துப் பழங்களுக்காவும், உன் திராட்சப்பழ அறுப்புக்காகவும் ஆரவாரிக்கிற சந்தோஷ சத்தம் விழுந்துபோயிற்று. (ஏசா 16:8-9).

21. பயிர்வெளியிலிருந்து சந்தோஷமும் களிப்பும் அற்றுப்போயின (ஏசா 16:10).

22. மோவாபினிமித்தம் என் (ஏசாயாவின்) குடல்களும், கிராரேசினிமித்தம் என் உள்ளமும் சுரமண்டலத்தைப் போல தொனிக்கிறது. (ஏசா 16:11).

23. மோவாப் மேடைகளின்மேல் சலித்துப் போனான் (ஏசா 16:12).

24. மோவாப் அநுகூலப்படமாட்டான்.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. மோவாபின் குமாரத்திகள் அர்னோன் நதியின் துறைகளிடத்திலிருப்பார்கள். (ஏசா 16:2)

2. உபத்திரவக்காலத்தில் அந்திக்கிறிஸ்து இஸ்ரவேலுக்கும், மோவாபுக்கும் சத்துருவாக இருப்பான். அந்திக் கிறிஸ்துவிடமிருந்து இஸ்ரவேலை மோவாப் பாதுகாக்கும். (ஏசா 16:3)

3. அந்திக்கிறிஸ்துவிடமிருந்து மோவாப் இஸ்ரவேலின் மத்தியானத்திலே நிழலை இரவைப் போலாக்கி மறைத்துக் கொள்ளும்.

4. இஸ்ரவேலர் யூதேயாவிலிருந்து பர்வதங்களுக்கு ஓடிப்போகும்போது மோவாபியர் அவர்களைக் காட்டிக் கொடுக்கமாட்டார்கள். (ஏசா 16:3; மத் 24:15-22; வெளி 12:6,14)

5. மகா உபத்திரவக்காலத்தில் இஸ்ரவேலரைத் தங்களுடைய தேசத்தில் தங்குவதற்கு மோவாப் அனுமதிக்கும். (ஏசா 16:4; எரே 30:1-9)

6. இஸ்ரவேலர் அந்திக் கிறிஸ்துவிடமிருந்து தப்பிக்கும்போது மோவாப் அவர்களுக்கு அடைக்கலமாக இருக்கும். (ஏசா 16:4; தானி 11:40-44)

7. அந்திக்கிறிஸ்துவின் காலம் வரையிலும் மோவாப் இஸ்ரவேலைப் பாதுகாக்கும். அதன் பின்பு மேசியாவின்கீழ் தாவீதின் சிங்காசனம் ஸ்தாபிக்கப்படும். (ஏசா 16:4-5)

8. தாவீதின்சிங்காசனம் மறுபடியும் கிருபையினாலே ஸ்தாபிக்கப்படும். (ஏசா 9:6-7; ஏசா 16:5; எரே 30:1-9; எசே 34:23-24; எசே 37:24-25; ஓசி 3:4-5; அப் 15:13-18)

9. தாவீதின் குமாரனாகிய மேசியா தாவீதின் சிங்காசனத்தில் நியாயாதிபதியாய் உண்மையோடே வீற்றிருப்பார். (ஏசா 16:5; ஏசா 9:6-7; லூக்கா 1:32-33; அப் 15:13-18)

மோவாப்

லோத்தின் குமாரன். (ஆதி 19:31-37) இவனுடைய சந்ததியார் யோர்தானுக்கும், சவக்கடலுக்கும் கிழக்குப் பகுதியில் குடியேறினார்கள். ஏதோமியர் மோவாபியரோடு வடக்கு பகுதியில் சேர்ந்து கொண்டார்கள். அந்தத் தேசத்திலிருந்த ராட்சதர்களை மோவாபியர் துரத்திவிட்டு அங்கு குடியேறினார்கள். (உபா 2:10). மோவாபின் வடக்குப்பகுதியைச் சீகோன் கைப்பற்றினான். இவன் எமோரியரின் ராஜா. அதன் பின்பு, அர்னோன் ஆறு மோவாபியரின் எல்லையாயிற்று. இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலிருந்து வெளியேறி வந்தபோது அவர்கள் சீகோனையும், அவனுடைய தேசத்தையும் ஜெயித்தார்கள். இதோடு இஸ்ரவேல் புத்திரர் பாஷானின் ராஜாவாகிய ஓகையும் ஜெயித்தார்கள். இந்தப் பகுதி ரூபன், காத், மனாசேயின் பாதிக்கோத்திரம் ஆகியோரின் சுதந்தரவீதமாயிற்று.

15 அதிகாரம்

யோசுவாவின் மரணத்திற்குப்பின்பு மோவாபியர் இஸ்ரவேலரை 18 வருஷங்களாக ஒடுக்கினார்கள். (நியா 3:14-21). இதன்பின்பு, இரு தேசத்திற்கும் அமைதி உண்டாயிற்று. இஸ்ரவேலில் பலர் மோவாபில் அடைக்கலம் பெற்றார்கள். (ரூத் 1:1; 1சாமு 22:3).

சவுல் (1சாமு 14:47) தாவீது (2சாமு 8:1-12), ஆகாப் (2இராஜா 1:1; 2இராஜா 3:4-5), யோசபாத் (2நாளா 20:1-30) ஆகியோர் மோவாபை ஜெயித்தார்கள்.

அசீரியர் மோவாபியரை ஜெயித்த பின்பும் மோவாபியர் ஒரு தேசமாகத் தொடர்ந்தார்கள். (ஏசா 15:1-9; ஏசா 16:6-14). கடைசி காலங்களில் நடைபெறப்போகும் சம்பவங்களைப் பற்றிய தீர்க்கதரிசனங்களில் மோவாப் இஸ்ரவேலோடு சேர்த்துக் கூறப்பட்டிருக்கிறது. (ஏசா 11:14; ஏசா 16:1-5; எரே 48:47; தானி 11:41).

(2) மோவாபின் புலம்பல்

ஏசா 15:2 அழும்படி மேடைகளாகிய பாயித்துக்கும் தீபோனுக்கும் போகிறார்கள்; நேபோவினிமித்தமும் மேதெபாவினிமித்தமும் மோவாப் அலறுகிறது; அவர்களுடைய தலைகளெல்லாம் மொட்டையடித்திருக்கும்; தாடிகளெல்லாம் கத்தரித்திருக்கும்.

ஏசா 15:3 அதின் வீதிகளில் இரட்டைக் கட்டிக்கொண்டு, எல்லாரும் அதின் வீடுகள்மேலும், அதின் தெருக்களிலும் அலறி, அழுதுகொண்டிருக்கிறார்கள்.

ஏசா 15:4 எஸ்போன் ஊராரும் எலெயாலே ஊராரும் கூக்குரலிடுகிறார்கள்; அவர்கள் சத்தம் யாகாஸ்மட்டும் கேட்கப்படுகிறது; ஆகையால் மோவாபின் ஆயுதபாணிகள் கதறுகிறார்கள்; அவனவனுடைய ஆத்துமா அவனவனில் கிலேசப்படுகிறது.

ஏசா 15:5 என் இருதயம் மோவாபினிமித்தம் ஓலமிடுகிறது; அதிலிருந்து ஓடி வருகிறவர்கள் மூன்று வயது கிடாரியைப்போல அலைகிறார்கள்; லூகித்துக்கு ஏறிப்போகிற வழியிலே அழுகையோடே ஏறுகிறார்கள்; ஒரோனாயீமின் வழியிலே நொறுங்குதலின் கூக்குரல் இடுகிறார்கள்.

ஏசா 15:6 நிம்ரீமின் நீர்ப்பாய்ச்சலான இடங்கள் பாழாய்ப்போம்; புல் உலர்ந்து, முளை அழிந்து, பச்சையில்லாமற் போகிறது.

ஏசா 15:7 ஆதலால் மிகுதியாகச் சேர்த்ததையும், அவர்கள் சம்பாதித்து வைத்ததையும், அலரிகளின் ஆற்றுக்கப்பாலே எடுத்துக்கொண்டு போவார்கள்.

ஏசா 15:8 கூக்குரல் மோவாபின் எல்லையெங்கும் சுற்றும்; எக்லாயிம் மட்டும் அதின் அலறுதலும், பெரேலீம்மட்டும் அதின் புலம்புதலும் எட்டும்.

ஏசா 15:9 தீமோனின் தண்ணீர்கள் இரத்தத்தால் நிறைந்திருக்கும்; தீமோனின் மேல் அதிக கேடுகளைக் கட்டளையிடுவேன்; மோவாபிலே தப்பினவர்கள் மேலும், தேசத்தில் மீதியானவர்கள் மேலும் சிங்கத்தை வரப்பண்ணுவேன்.

"மேடைகள்" - விக்கிரகங்களுக்கு பலிசெலுத்தும் இடம்.

"பாயித்" (Bajith) - இந்த இடம் எங்குள்ளது என்று தெரியவில்லை.

"தீபோன்" (Dibon) - சீகோன், ஓக் ஆகியவற்றின் ஒன்பது பட்டணங்களில் ஒன்று.

"போகிறார்கள்" - மோவாப் அழிந்த பின்பு மீதியானவர்கள் விக்கிரகங்களுக்குப் பலிசெலுத்தப் போகிறார்கள். (ஏசா 15:1-9)

"மேதெபா" (Medeba) - ரூபனின் கிழக்குப் பகுதியிலுள்ள பட்டணம். (எண் 21:30; யோசு 13:9,16; 1நாளா 19:7).

15 அதிகாரம்

"எஸ்போன்....எலெயாலே" - சீகோன், ஒக் ஆகியவற்றின் ஒன்பது பட்டணங்களில் இவையும் உள்ளன.

"யாகாஸ்" **(Jahaz)** - சீகோனின் பட்டணம். (எண் 21:23; உபா 2:32; நியா 11:20; எரே 48:34). மறுபெயர்கள் யாகசா **"Jahaza"** (யோசு 13:18); யாகசா **"Jahazah"** (யோசு 21:36; எரே 48:21); யாத்சா **"Jahzah"** (1நாளா 6:78).

"அதிலிருந்து ஓடி வருகிறவர்கள்" - இது சோவாருக்கு ஓடி வருகிறவர்கள் என்று இருக்க வேண்டும். சோவார் சவக்கடலின் தென் பகுதியிலுள்ள ஒரு சிறிய பட்டணம். (ஆதி 19:16).

"மூன்று வயது கிடாரியைப்போல அலைகிறார்கள்" - (எரே 48:34).

"லூகித்" **(Luhith)** - நேபோ மலையிலுள்ள சிகரம். இங்கு விக்கிரகங்களுக்குப் பலிகளைச் செலுத்தினார்கள். (எரே 48:5).

"ஒரோனாயீம்" **(Horonaim)** - மோவாபில் இது எங்குள்ளது என்று தெரியவில்லை. (எரே 48:3,5,34).

"நிம்ரீம்" **(Nimrim)** - சவக்கடலின் தென்பகுதியிலுள்ள இடம். (எரே 48:34).

மோவாபின் அழிவிற்கு ஆதாரம்

1. புல் உலர்ந்தது
2. முளை அழிந்தது
3. பச்சையில்லாமற்போகிறது

"அலரிகளின் ஆற்றுக்கப்பாலே எடுத்துக் கொண்டுபோவார்கள்" - மோவாபியரின் சம்பாத்தியங்களை அவர்களுடைய சத்துருக்கள் ஆற்றுக்கப்பால் எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள். செப்துவஜிந்த் பதிப்பில் "நான் அரபியரை ஆற்றுக்கப்பால் வரவைப்பேன். அவர்கள் அதை எடுத்துக் கொண்டு போவார்கள்" **"I will bring the Arabians upon the valley and they shall take it"** என்று எழுதப்பட்டிருக்கிறது.

"அலரிகளின் ஆறு" - இது சேரேத்தின் **(Zered)** ஆறாக இருக்கலாம். இது மோவாபிற்கும், அரபியாவிற்கும் இடையிலுள்ள எல்லைப் பகுதி. (உபா 2:13-14) ஆகையினால் அரபியர் மோவாபியரை அழித்திருக்கலாம்.

"எக்லாயிம்மட்டும் அதின் அலறுதலும், பெரேலீம்மட்டும் அதின் புலம்புதலும் எட்டும்." - எக்லாயிம் ஆர் பட்டணத்திற்குத் தெற்கே 8 மைல் தூரத்திலுள்ளது. (எசே 47:10). பெரேலீம் என்னும் பெயருக்கு பிரபுக்களின் துரவு **"well of the princes"** என்று பொருள். இது எங்குள்ளது என்று தெரியவில்லை.

"தீமோன்" **(Dimon)** - மறுபெயர்கள் திமோனா **(Dimonah)** (யோசு 15:22) தீபோன் **(Dibon)** (எண் 32:3).

"தேசத்தில் மீதியானவர்கள் மேலும் சிங்கத்தை வரப்பண்ணுவேன்" - மோவாபியரில் மீதியானவர்களை அழிப்பதற்குக் கர்த்தர் காட்டு மிருகங்களையும் பயன்படுத்தியிருக்கிறார். காட்டுமிருகங்களும் கர்த்தருடைய சத்தத்திற்குச் செவிகொடுத்து அவருடைய சித்தத்தை நிறைவேற்றக் கீழ்ப்படிகின்றன.

16 அதிகாரம்

(3) உபத்திரவக் காலத்தில் மோவாப் இஸ்ரவேலின் பாதுகாப்பவன் - (26:20; 63:1; சங் 60:6-12; எசே 20:33; தானி 11:41; ஓசி 2:14; மத் 24:16; வெளி 12)

ஏசா 16:1 தேசாதிபதிக்குச் செலுத்தும் ஆட்டுக்குட்டிகளை நீங்கள் சேலா பட்டணந் துவக்கி வனாந்தரமட்டும் சேர்த்துச் சீயோன் குமாரத்தியின் மலைக்கு அனுப்புங்கள்.

ஏசா 16:2 இல்லாவிட்டால் கூட்டைவிட்டுத் துரத்தப்பட்டு அலைகிற குருவியைப் போல மோவாபின் குமாரத்திகள் அர்னோன் நதியின் துறைகளிடத்திலிருப்பார்கள்.

ஏசா 16:3 நீ ஆலோசனைபண்ணி, நியாயஞ்செய்து, மத்தியானத்திலே உன் நிழலை இரவைப்போலாக்கி, துரத்தப் பட்டவர்களை மறைத்துக்கொள், ஓடி வருகிறவர்களைக் காட்டிக்கொடாதிரு.

ஏசா 16:4 மோவாபே, துரத்திவிடப்பட்ட என் ஜனங்கள் உன்னிடத்தில் தங்கட்டும்; சங்கரிக்கிறவனுக்குத் தப்ப அவர்களுக்கு அடைக்கலமாயிரு; ஒடுக்குகிறவன் இல்லாதேபோவான்; சங்கரிப்பு ஒழிந்துபோம்; மிதிக்கிறவர்கள் தேசத்தில் இராதபடிக்கு அழிந்து போவார்கள்.

ஏசா 16:5 கிருபையினாலே சிங்காசனம் ஸ்தாபிக்கப்படும்; நியாயம் விசாரித்துத் துரிதமாய் நீதிசெய்கிற ஒருவர் அதின்மேல் தாவீதின் கூடாரத்திலே நியாயாதிபதியாய் உண்மையோடே வீற்றிருப்பார்.

தங்களை ஆளுகை செய்கிறவர்களுக்குச் செலுத்த வேண்டிய வெகுமதிகளைச் சீயோன் மலைக்கு அனுப்புமாறு கூறுகிறார். மேசா ஏற்கெனவே இதுபோல ஆட்டுக்குட்டிகளை அனுப்பியிருக்கிறான். (2 இராஜா 3:4). கடைசி நாட்களில் மோவாபியர் யூதாவோடு சமாதானமாக இருக்க வேண்டும். அந்திக் கிறிஸ்துவிடமிருந்து யூதர்கள் ஓடி வரும்போது மோவாபியர் அவர்களுக்கு அடைக்கலம் தருவார்கள். அந்திக்கிறிஸ்து ஏழு வருஷம் உடன்படிக்கை பண்ணி பின்பு அதை முறித்துப் போடுவான். எருசலேமைத் தன்னுடைய தலைநகரமாக ஆக்குவதற்கு பாலஸ்தீன தேசத்திற்குள் பிரவேசிப்பான். அப்போது யூதர்கள் அந்திக்கிறிஸ்துவிற்குப் பயந்து மோவாபியரின் தேசத்திற்கு ஓடிப்போவார்கள். (சங் 60:6-12; மத் 24:15-24; வெளி 12:6,14)

மோவாபின் துயரம்

கூட்டைவிட்டுத் துரத்தப்பட்டு அலைகிற குருவியைப் போல மோவாபியர் துயரம் அனுபவிப்பார்கள். அந்திக்கிறிஸ்து பாலஸ்தீனத்தைச் சடிதியாகக் கைப்பற்றுவான். அங்குள்ள யூதர்கள் எல்லாரும் பாலஸ்தீனத்திலிருந்து துரத்தியடிக்கப் படுவார்கள். இதனால் மோவாபியருக்கு மிகுந்த கலக்கம் உண்டாகும். அந்திக்கிறிஸ்து தங்களுடைய தேசத்திற்கும் வந்து தங்களைத் துரத்திவிடுவானோ என்று மோவாபியர் கலங்குவார்கள். மோவாபியரில் பலர் அந்திக்கிறிஸ்துவிற்குப் பயந்து தங்களுடைய வீட்டை விட்டு ஓடி அர்னோன் நதியின் துறைகளிடத்திலிருப்பார்கள். (ஏசா 16:2).

அந்திக்கிறிஸ்து தன்னுடைய உபத்திரவத்தைத் தொடருவான். மோவாபைக் கைப்பற்றப் போவான். வடக்கிலிருந்தும், கிழக்கிலிருந்தும் யுத்தச்செய்தி வரும். இது அந்திக்கிறிஸ்துவைத் தடைபண்ணும். அதனால் மோவாப் தப்புவிக்கப்படும். (தானி 11:44).

16 அதிகாரம்

அந்திக்கிறிஸ்து மோவாபின்மேல் யுத்தம் பண்ணச்சென்று மறுபடியும் தன்னுடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்குப் பாலஸ்தீன தேசத்திற்கு வருவான். அங்கு இயேசு கிறிஸ்து அவனை ஜெயிப்பார். இந்தக் கடைசி நாட்களில் யூதர்கள் எருசலேமின்மீது தங்களுடைய ஆளுகையைத் திரும்பப் பெறுவார்கள். அந்திக்கிறிஸ்து யூதரையும், மோவாபியரையும் அழிப்பதற்கு எருசலேமிற்கு விரோதமாக வருவான். அப்பொழுது இயேசு கிறிஸ்து வானத்திலிருந்து தம்முடைய தூதரோடு இறங்கி வருவார். அச்சமயத்தில் எருசலேமின் பாதிப்பகுதியை அந்திக்கிறிஸ்து பிடித்திருப்பான். இயேசு கிறிஸ்து அந்திக்கிறிஸ்துவை அழித்து, தம்முடைய ஜனத்தை விடுவிப்பார். (சக 14:1-15; வெளி 19:11-21).

"துரத்தப்பட்டவர்கள்" (outcasts) - அந்திக் கிறிஸ்து யூதரோடு உடன்படிக்கை பண்ணிய பின்பு அதை முறித்துப்போடுவான். அப்போது யூதர்கள் யூதேயா தேசத்தை விட்டுத் துரத்தப்படுவார்கள். அவர்கள் மோவாப் தேசத்திற்குள் பிரவேசிப்பார்கள். கடைசி காலத்தில் அந்திக்கிறிஸ்து பாலஸ்தீன தேசத்திற்குள் வந்து எருசலேமைத் தன்னுடைய தலைநகரமாக்குவான். (ஏசா 16:3-4; தானி 9:27; தானி 11:40-45; மத் 24:13-14; 2தெச 2:3-4; வெளி 13). துரத்தப்பட்டவர்கள் என்னும் வார்த்தை இஸ்ரவேலருக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (ஏசா 16:3-4; ஏசா 11:12;ஏசா 27:13; ஏசா 56:8;சங் 147:2).

"ஓடி வருகிறவர்கள்" (wandering ones) - இஸ்ரவேலிலிருந்து துரத்தப்பட்டவர்களே இங்கு ஓடி வருகிறவர்களாகக் கூறப்பட்டிருக்கிறார்கள். இவர்களை மோவாபியர் ஏற்றுக் கொண்டு இவர்களுக்கு அடைக்கலமும், பாதுகாப்பும் தருவார்கள். தானி 11:40-45 ஆகிய வசனங்களின் பிரகாரம், மோவாப், ஏதோம், அம்மோன் ஆகிய தேசங்கள் அந்திக் கிறிஸ்துவிற்குத் தப்பிக்கும். ஆகையினால் இந்த 1,260 நாட்களில் (மூன்றரை வருஷத்தில்) இஸ்ரவேலர்கள் தங்களுடைய பாதுகாப்பிற்காக இந்தத் தேசங்களுக்கு ஓடிப்போவார்கள். (மத் 24:15-24; வெளி 12:6,14).

ஏசா 16:1 ஆவது வசனத்தில் மோவாபின் குமாரத்திகளும் ஓடிப்போவார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. இது சொற்ப காலமே நடைபெறும் சம்பவம். அந்திக்கிறிஸ்து பாலஸ்தீன தேசத்தைப் பிடித்துக் கொள்வதினால் அவன் தங்களையும் பிடித்துக் கொள்வானோ என்று மோவாபியர் பயந்து ஓடிவிடுவார்கள். ஆனால் அந்திக்கிறிஸ்துவோ மோவாப்மீது யுத்தம் பண்ண வரமாட்டான். வடக்கிலிருந்தும், கிழக்கிலிருந்தும் தனக்கு எதிராக யுத்தம் வரும் செய்தியை அந்திக்கிறிஸ்து கேள்விப்பட்டு மோவாபிற்கு எதிராகப் போவதை நிறுத்திக் கொள்வான். (தானி 11:44) இதைக் கேள்விப்படும் மோவாபியர்கள் தங்களுடைய பயத்திலிருந்து விடுதலை பெறுவார்கள். திரும்பவும் தங்கள் தேசத்திற்கே வந்து குடியேறுவார்கள். பாலஸ்தீன தேசத்திலிருந்து பயந்து ஓடும் யூதர்களுக்கு மோவாபியர் அடைக்கலம் கொடுப்பார்கள்.

அந்திக்கிறிஸ்துவின் பெயர்கள்

1. தேசங்களைத் துன்பப்படுத்துகிறவன். (ஏசா 14:5-6)
2. ஜனங்களை அச்சுறுத்துகிறவன் (தானி 11:39)
3. இஸ்ரவேலை ஒடுக்குகிறவன். (ஏசா 14:3-4)

"கிருபையினாலே சிங்காசனம் ஸ்தாபிக்கப் படும்" - இஸ்ரவேல் முழுவதிலும் தாவீதின் சிங்காசனம் ஸ்தாபிக்கப்படும். (ஏசா 9:6-7; ஓசி 3:4-5; லூக்கா 1:32-33; அப் 15:13-18).

"தாவீதின் கூடாரம்" - சபைக் காலத்திற்குப் பின்பு தாவீதின் கூடாரம் திரும்பவும் ஸ்தாபிக்கப்படும். (அப் 15:13-18).

"நியாயாதிபதியாய் உண்மையோடே வீற்றிருப்பார்" - மேசியா தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருப்பார். ஏசா 16:1 ஆவது வசனத்தில் ஆட்டுக்குட்டியாகக் கூறப் பட்டிருக்கிறவர் இயேசு கிறிஸ்துவே ஆவார். (லூக்கா 1:32-33; வெளி 11:15).

16 அதிகாரம்

மேசியாவின் ஊழியம்

1. நியாயம் விசாரிப்பார் - எல்லோருக்கும் நீதி செய்கிறவர்.
2. துரிதமாய் நீதிசெய்கிறவர் - தாமதமில்லாமல் தமது நியாயத்தீர்ப்பை நிறைவேற்றுவார்.

(4) மோவாபுக்காக புலம்பல் - *(15:2)*

ஏசா 16:6 மோவாபின் பெருமையையும், அவன் மேட்டிமையையும், அவன் அகங்காரத்தையும், அவன் உக்கிரத்தையும் குறித்துக் கேட்டோம்; அவன் மெத்தப் பெருமைக்காரன்; ஆனாலும் அவன் வீம்பு செல்லாது.

ஏசா 16:7 ஆகையால், மோவாபியர் ஒருவருக்காக ஒருவர் அலறுவார்கள், எல்லாரும் ஏகமாய் அலறுவார்கள்; கிராரேசேத் ஊரின் அஸ்திபாரங்கள் தகர்க்கப்பட்டதே என்று அவைகளுக்காகப் பெருமூச்சு விடுவார்கள்.

ஏசா 16:8 எஸ்போன் ஊர் வயல்கள் வாடிப்போயின; சிப்மாஊர்த் திராட்சச் செடியின் நல்ல கொடிகளை ஜாதிகளின் அதிபதிகள் நறுக்கிப் போட்டார்கள்; அவைகள் யாசேர்மட்டும் சென்று வனாந்தரத்தில் படர்ந்திருந்தது; அவைகளின் கொடிகள் நீண்டுக் கடலுக்கப்பாலே எட்டியிருந்தது.

ஏசா 16:9 ஆகையால் யாசேருக்காக அழுததுபோல, சிப்மாஊர்த் திராட்சச் செடிக்காகவும் மிகவும் அழுவேன்; எஸ்போனே, எலெயாலேயே, உனக்கு என் கண்ணீரைப் பாய்ச்சுவேன்; உன் வசந்தகாலத்துப் பழங்களுக்காவும், உன் திராட்சப்பழ அறுப்புக்காகவும் ஆரவாரிக்கிற சந்தோஷ சத்தம் விழுந்துபோயிற்று.

ஏசா 16:10 பயிர்வெளியிலிருந்து சந்தோஷமும் களிப்பும் அற்றுப்போயின; திராட்சத் தோட்டங்களில் பாடலுமில்லை ஆர்ப்பரிப்புமில்லை; ஆலையில் இரசத்தை மிதிக்கிறவனுமில்லை; சந்தோஷ ஆரவாரத்தை ஒய்யப்பண்ணினேன்.

ஏசா 16:11 ஆகையால் மோவாபினிமித்தம் என் குடல்களும், கிராரேசினிமித்தம் என் உள்ளமும் சுரமண்டலத்தைப் போல தொனிக்கிறது.

ஏசா 16:12 மோவாப் மேடைகளின்மேல் சலித்துப்போனான் என்று காணப்படும் போது, பிரார்த்தனைசெய்யத் தன் பரிசுத்த ஸ்தானத்திலே பிரவேசிப்பான்; ஆனாலும் அநுகூலப்படமாட்டான்.

"மோவாபின் பெருமையையும்......கேட்டோம்" - மோவாபின்மீது வரும் உடனடி நியாயத்தீர்ப்பு ஏசா 16:6-12 ஆகிய வசனங்களில் மறுபடியும் கூறப்பட்டிருக்கிறது. வருங்கால உபத்திரவக் காலத்தில் மோவாபியர் இஸ்ரவேலுக்கு அடைக்கலம் கொடுப்பதைப் பற்றி ஏசா 16:1-5 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. ஏசா 15:1-9 ஆகிய வசனங்களில் முன்னறிவிக்கப்பட்டிருப்பது உடனடியாக நிறைவேறப்போகும் நியாயத்தீர்ப்பாகும்.

மோவாபின்மீது நியாயத்தீர்ப்பு வருவதற்குக் காரணம்

1. பெருமை
2. மேட்டிமை
3. அகங்காரம்
4. உக்கிரம்

"கிராரேசேத்" **(Kirhareseth)** - மறுபெயர்கள் கீர் **(Kir)** (ஏசா 15:1) கிராரோஸ் **(Kir-haresh)** (ஏசா 16:11).

"எஸ்போன்" **(Heshbon)** - சீகோனின் தலைநகரம். (எண் 21:26).

"சிப்மா" **(Sibmah)** - எஸ்போனுக்கு மேற்கே 3 மைல் தூரத்திலுள்ளது. (ஏசா 16:8-9; யோசு 13:19; எரே 48:32).

16 அதிகாரம்

"திராட்சத் தோட்டங்களில் பாடலுமில்லை ஆர்ப்பரிப்புமில்லை" - ஏசா 16:8-10 ஆகிய வசனங்களில் மோவாபியரின் பயிர் வெளிகளும், திராட்சத்தோட்டங்களும் இவர்கள்மீது படையெடுத்து வருகிறவர்களினால் அழிக்கப்படும் என்று முன்னறிவிக்கப் பட்டிருக்கிறது. மூன்று வருஷக்காலத்திற்குள் அசீரியர்கள் இவர்கள்மீது யுத்தம் பண்ண வருவார்கள். (ஏசா 16:13-14). அக்காலத்தில் ஒரு தேசத்தை மாற்று தேசத்தார் யுத்தத்தில் ஜெயித்தவுடன் தோற்றுப்போன தேசத்தின் பயிர்வெளிகளையும், திராட்சத் தோட்டங்களையும் அழித்துப்போடுவது வழக்கம். திராட்சப்பழ அறுவடையின்போது ஜனங்கள் சந்தோஷமாகப் பாட்டுப்பாடி, ஆர்ப்பரிப்பார்கள். (நியா 9:27; எரே 25:30; எரே 48:33). திராட்சத்தோட்டம் அழிக்கப்பட்டு விட்டதினால் மோவாப் தேசத்தில் பாடலும் இல்லை, ஆர்ப்பரிப்பும் இல்லை.

"மோவாபினிமித்தம் என் குடல்களும்"- மோவாபின் அழிவு மிகவும் பயங்கரமாக இருக்கும். இதனால் ஏசாயாவின் குடல்களும், உள்ளமும் துடிக்கிறது. (ஏசா 15:5)

"பிரார்த்தனைசெய்யத் தன் பரிசுத்த ஸ்தானத்திலே பிரவேசிப்பான்; ஆனாலும் அநுகூலப்படமாட்டான்" - மோவாபியர் அழியும்போது தங்களுடைய விக்கிரகங்களை நோக்கிப் பார்ப்பார்கள். ஆனால் அவற்றிற்கோ இப்பொழுது ஜீவனில்லை. அந்த விக்கிரகங்கள் மோவாபியருக்கு எந்த உதவியும் செய்யாது. ஒருகாலத்தில் எல்லா ஜனங்களுக்குமே தேவனைக் குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருந்தது. ஆனால் அவர்கள் தேவனை அறிந்தும் அவரைத் தேவனென்றும் மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலும் இருந்து தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள். உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. அதன்பின்பு அவர்கள் விக்கிரகாராதனைக்குத் தங்களுடைய இருதயத்தைத் திருப்பினார்கள். (ரோமர் 1:18-32).

(5) அசீரியரினால் திடீர் அழிவு - (36:19-20; 2இராஜா 18:33)

ஏசா 16:13 மோவாபைக்குறித்து அக்காலத்திலே கர்த்தர் சொன்ன வார்த்தை இதுவே.

ஏசா 16:14 ஒரு கூலிக்காரனுடைய வருஷங்களுக்கொத்த மூன்று வருஷங்களுக்குள்ளே மோவாபின் மகிமையும் அதின் மகா ஜனக்கூட்டமும் சீரழிந்துபோம்; அதில் மீதியாயிருப்பது மிகவும் சிறுதும் அற்பமுமாயிருக்கும் என்று கர்த்தர் இப்பொழுது சொல்லுகிறார்.

தீர்க்கதரிசன எண் - 18

"மோவாபைக்குறித்து அக்காலத்திலே கர்த்தர் சொன்ன வார்த்தை இதுவே......" (ஏசா 16:13-14) இந்தத் தீர்க்கதரிசனம் அசீரியா மூலமாக நிறைவேறிற்று. (2இராஜா 17).

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. மூன்று வருஷங்களுக்குள்ளே (ஏசா 16:14).
2. மோவாபின் மகிமை சீரழிந்துபோம்.
3. மகா ஜனக்கூட்டமும் சீரழிந்துபோம்.
4. அதில் மீதியாயிருப்பது மிகவும் சிறியதும் அற்பமுமாயிருக்கும்.

"அக்காலத்திலே" - ஏசா 15:1-16:12 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்ட காலத்திலே.

"மூன்று வருஷங்களுக்குள்ளே" - தீர்க்கதரிசி தீர்க்கதரிசனம் கூறும்போது அது நிறைவேறும் காலத்தையும் தீர்மானம் பண்ணுகிறார். குறிப்பிட்ட காலத்திற்குள் அந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறதா, இல்லையா என்பதை வைத்து அவர் மெய்யான தீர்க்கதரிசியா அல்லது கள்ளத்தீர்க்கதரிசியா என்பதைத் தீர்மானம் பண்ணிக் கொள்ளலாம். ஏசாயா இந்தத் தீர்க்கதரிசனத்தைக் கூறி மூன்று வருஷங்களுக்குள் அசீரியர் இஸ்ரவேலின் பத்துக் கோத்திரத்தாரைச் சிறைப்பிடித்துச் சென்றார்கள். மோவாபியரையும், மேலும் பல தேசங்களையும் ஜெயித்தார்கள். இவ்வாறாக ஏசா 15:1-9; ஏசா 16:6-14 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறிற்று.

17 அதிகாரம்

4. தமஸ்குவின் பாரம் - (17:1-14; எரே 49:23; ஆமோ 1:3)

(1) அழிவு

ஏசா 17:1 தமஸ்குவின் பாரம். இதோ, தமஸ்குவானது நகரமாயிராமல் தள்ளப்பட்டு, பாழான மண்மேடாகும்.,

ஏசா 17:2 ஆரோவேரின் பட்டணங்கள் பாழாய் விடப்பட்டு, மந்தைகளின் வெளியாயிருக்கும்; மிரட்டுவாரில்லாமல் அவைகள் அங்கே படுத்துக்கொள்ளும்.

ஏசா 17:3 அரண் எப்பிராயீமையும், ராஜாங்கம் தமஸ்குவையும் விட்டொழியும்; இஸ்ரவேல் புத்திரருடைய மகிமைக்கு நேரிட்டதுபோல சீரியாவில் மீதியாயிருப்பவர்களுக்கும் நேரிடும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

ஏசா 17:4 அக்காலத்திலே யாக்கோபின் மகிமை குறைந்துபோம், அவனுடைய கொழுத்த தேகம் மெலிந்துபோம்.

ஏசா 17:5 ஒருவன் ஓங்கின பயிரை அரிந்து, தன் கையினால் கதிர்களை அறுத்து, ரெப்பாயீம் பள்ளத்தாக்கிலே கதிர்களைச் சேர்க்கிறதுபோலிருக்கும்.

தீர்க்கதரிசன எண் - 19

"தமஸ்குவின் பாரம்......" (ஏசா 17:1-14) ஏசா 17:1-11 ஆகிய வசனங்கள் அசீரியா மூலமாக நிறைவேறிற்று. (2இராஜா 16:9-18) ஏசா 17:12-14 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. தமஸ்குவானது நகரமாயிராமல் தள்ளப்படும். (ஏசா 17:1).
2. தமஸ்கு பாழான மண்மேடாகும்.
3. ஆரோவேரின் பட்டணங்கள் பாழாய் விடப்படும். (ஏசா 17:2).
4. அது மந்தைகளின் வெளியாயிருக்கும்.
5. மிரட்டுவாரில்லாமல் அவைகள் அங்கே படுத்துக்கொள்ளும்.
6. அரண் எப்பிராயீமை விட்டொழியும். (ஏசா 17:3).
7. ராஜாங்கம் தமஸ்குவை விட்டொழியும்.
8. சீரியாவில் மீதியாயிருப்பவர்கள் ஒழிந்துபோவார்கள்.
9. இஸ்ரவேல் புத்திரருடைய மகிமை அகன்றுபோனதுபோல இவர்களும் அகன்றுபோவார்கள்.
10. யாக்கோபின் மகிமை குறைந்துபோம் (ஏசா 17:4).
11. யாக்கோபினுடைய கொழுத்த தேகம் மெலிந்துபோம்.
12. தமஸ்குவின் ஐசுவரியங்கள் கொள்ளையிடப்படும். (ஏசா 17:5).
13. மீதியாக ஒன்றும் வைக்கப்படாது. (ஏசா 17:6).
14. தமஸ்குவில் மீதியாக இருக்கிறவர்கள் கர்த்தரை நோக்கிப் பார்ப்பார்கள். (ஏசா 17:7-8).
15. அவர்களுடைய அரணான பட்டணங்கள் பாழாய்க்கிடக்கும். (ஏசா 17:9-10).

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. பல தேசங்கள் இஸ்ரவேலுக்கு எதிராக வரும். (ஏசா 17:12-13).
2. கர்த்தர் அவர்களை அதட்டுவார் (ஏசா 17:13).
3. அவர்கள் தூரமாய் ஓடிப்போவார்கள்.
4. மலைகளிலே காற்றினால் பறக்கடிக்கிற பதரைப்போலவும், சுழல்காற்றிலே அகப்பட்ட துரும்பைப்போலவும் துரத்தப் படுவார்கள்.

17 அதிகாரம்

5. சாயங்காலத்திலே கலக்கமுண்டாகும். (ஏசா 17:14; சக 14:5-7).

6. விடியற்காலத்துக்குமுன் அவர்கள் ஒழிந்துபோவார்கள் (ஏசா 17:14; சக 14:1-7).

சீரியாவின் தோல்வி

அசீரியர் ரேத்சீனை முறியடித்தார்கள். தமஸ்குவை அழித்துப்போட்டார்கள். (ஏசா 17:1; ஏசா 7:1-25; ஏசா 8:3-4; 2இராஜா 16:5-18).

அசீரியர் மூலமாக நியாயத்தீர்ப்புக்கள்

1. சீரியரின் தலைநகரமான தமஸ்குவானது நகரமாயிராமல் தள்ளப்பட்டு, பாழான மண்மேடாயிற்று. (ஏசா 17:1).

2. ஆரோவேரின் பட்டணங்கள் பாழாக்கப் படும். (ஏசா 17:2) ஆரோவேர் என்னும் பெயரில் மூன்று பட்டணங்கள் உள்ளன. அசீரியர் மோவாபை அழித்தபோது ஆரோவேரையும் அழித்துப் போட்டார்கள். (2இராஜா 15:29-17:41).

3. அரண் எப்பிராயீமை விட்டொழியும் (ஏசா 17:3). சமாரியாவையும், இஸ்ரவேலின் பத்துக் கோத்திரத்தாரையும் அசீரியர் முறியடிப்பார்கள். இது கி.மு. 721 ஆம் வருஷத்தில் நடைபெற்றது. (2இராஜா 17). இஸ்ரவேலின் வடக்கு ராஜ்யத்தைக் குறிப்பதற்கு ஏசாயா எப்பிராயீம் என்னும் பெயரையே பயன் படுத்துகிறார். (ஏசா 17:3; ஏசா 7:2-9; ஏசா 9:9; ஏசா 11:13; ஏசா 28:1-3).

4. ராஜாங்கம் தமஸ்குவை (சீரியாவை) விட்டொழியும் (ஏசா 17:3).

5. இஸ்ரவேல் புத்திரருடைய மகிமை ஒழியும். (ஏசா 17:3-11).

6. சீரியாவில் மீதியாயிருப்பவர்கள் துரத்தப்படுவார்கள். (ஏசா 17:3).

7. யாக்கோபின் மகிமை குறைந்துபோம். (ஏசா 17:4).

யாக்கோபின் (எப்பிராயீமின்) துயரம்

1. அவனுடைய கொழுத்த தேகம் மெலி ந்து போம்.

2. அறுவடைக்குப்பின்பு ஒருசில பயிர்களே மீதியாக இருப்பது போன்று யாக்கோபில் ஒருசிலர் மட்டுமே மீதியாக இருப்பார்கள். (ஏசா 17:5-6).

(2)சீரியாவில் மீதியாக இருப்பவர்கள் இரட்சிக்கப்படுவார்கள்

ஏசா 17:6 ஆனாலும் ஒலிவமரத்தை உலுக்கும்போது நுனிக்கொம்பிலே இரண்டு மூன்று காய்களும், காய்க்கிற அதின் கிளைகளிலே நாலைந்து காய்களும் மீதியாயிருப்பதுபோல, அதிலே பின்பறிப்புக்குக் கொஞ்சம் மீதியாயிருக்குமென்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்.

“அதிலே பின்பறிப்புக்குக் கொஞ்சம் மீதியாயிருக்கும்” - அசீரியர் சீரியாவையும், எப்பிராயீமையும் அழித்துப்போடுவார்கள். அவர்களில் மீதியாக இருக்கிறவர்கள் மிகவும் கொஞ்சம் பேராக இருப்பார்கள்.

(3) விளைவு - தேவனிடத்தில் திரும்புவார்கள்

ஏசா 17:7 அக்காலத்திலே மனுஷன் தன் கைகளின் கிரியையாகிய பீடங்களை நோக்காமலும், தன் விரல்கள் உண்டு பண்ணின தோப்பு விக்கிரகங்களையும், சிலைகளையும் நோக்காமலும்,

ஏசா 17:8 தன்னை உண்டாக்கினவரையே நோக்குவான், அவன் கண்கள் இஸ்ரவேலின் பரிசுத்தரையே நோக்கிக் கொண்டிருக்கும்.

17 அதிகாரம்

"அக்காலத்திலே மனுஷன் தன் கைகளின் கிரியையாகிய பீடங்களை நோக்காமலும்" - தங்களுக்கு அழிவு வந்த பின்பு சீரியரும், எப்பிராயீமரும் இது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு என்பதைப் புரிந்து கொள்வார்கள். அதன் பின்பு அவர்கள் விக்கிரகங்களை நோக்கிப் பார்க்காமல் கர்த்தரையே நோக்கிப் பார்ப்பார்கள். *(ஏசா 17:7-8).*

மனுஷர் நோக்கிப் பார்க்காத காரியங்கள்

1. தன் கைகளின் கிரியையாகிய பீடங்கள்
2. தன் விரல்கள் உண்டுபண்ணின தோப்பு விக்கிரகங்கள்.
3. சிலைகள்

சிலைகள் (Images) - חַמָּן - kham-mawn' - 2553

ஆ.பெ.சொ. - விக்கிரகம், சிலை (sun-pillar) *(ஏசா 17:8; ஏசா 21:9; ஏசா 30:22; ஏசா 41:29;ஏசா 42:8,17)*

(4) அழிவு - பஞ்சம் - காரணங்கள்

ஏசா 17:9 அக்காலத்திலே அவர்களுடைய அரணான பட்டணங்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு மீதியாய் வைக்கப்பட்ட தழையைப்போலவும், நுனிக்கொம்பைப் போலவுமாகி, பாழாய்க் கிடக்கும்.

ஏசா 17:10 உன் பெலமாகிய கன்மலையை நீ நினையாமல், உன் இரட்சிப்பாகிய தேவனை மறந்தாய்; ஆதலால் நீ நேர்த்தியான நாற்றுகளை நட்டாமலும், அந்நிய தேசத்துக் கன்றுகளை வைத்தாலும்,

ஏசா 17:11 பகற்காலத்திலே உன் நாற்றை வளரவும், விடியற்காலத்திலே உன் விதையை முளைக்கவும் பண்ணினாலும், பலனைச் சேர்க்கும் நாளிலே துக்கமும் கடும்வேதனையுமே உங்கள் அறுப்பாயிருக்கும்.

"அக்காலத்திலே" - இது ஆயிரம் வருஷ அரசாட்சியைக் குறிக்கவில்லை. சீரியாவையும், எப்பிராயீமையும், அசீரியர் அழித்துப்போடும் காலத்தைக் குறிக்கிறது.

"அவர்களுடைய அரணான பட்டணங்கள்" - இவை சீரியர், எப்பிராயீமியர் ஆகியோருடைய பட்டணங்களாகும். இஸ்ரவேலின் பாவங்களின் நிமித்தமாக இந்தப் பட்டணங்களையெல்லாம் அழிப்பதற்குக் கர்த்தர் அசீரியருக்கு உத்தரவு கொடுத்தார்.

நியாயத்தீர்ப்பிற்குக் காரணம்

1. கன்மலையாகிய கர்த்தரை நினைக்க வில்லை.
2. இரட்சிப்பாகிய தேவனை மறந்து விட்டார்கள்.
3. உதவியும், பாதுகாப்பும் கர்த்தரிடத்திலிருந்து மாத்திரமே வரும் என்பதை நினைத்துப்பார்க்கவில்லை.

"நேர்த்தியான நாற்றுகளை நட்டாமலும்" - அவர்கள் எப்படித்தான் முயற்சி பண்ணினாலும் சத்துருக்கள் அவர்கள்மீது யுத்தம் பண்ணி அவர்களை அழித்துப் போடுவதினால் அவர்களுக்குத் துயரமே மிஞ்சுகிறது. *(ஏசா 17:10-11).*

(5) இஸ்ரவேலின் விரோதிகளுக்கு சாபம் - *(49:22; 51:21; எரே 12:14; 25:15-38; யோவே 3; மீகா 7:10,15; சக 1:14)*

ஏசா 17:12 ஐயோ! கடல்கள் கொந்தளிக்கிறதுபோல கொந்தளிக்கிற அநேக ஜனங்களின் திரளும், பலத்த தண்ணீர்கள் இரைகிறதுபோல இரைகிற ஜனக்கூட்டங்களின் அமளியும் உண்டாயிருக்கிறது.

ஏசா 17:13 ஜனக்கூட்டங்கள் திரளான தண்ணீர்கள் இரைகிறதுபோல இரைந்தாலும், அவர்களை அவர் அதட்டுவார்; அவர்கள் தூரமாய் ஓடிப் போவார்கள்; மலைகளிலே காற்றினால் பறக்கடிக்கிற பதரைப்போலவும், சுழல் காற்றிலே அகப்பட்ட துரும்பைப் போலவும் துரத்தப்படுவார்கள்.

17 அதிகாரம்

ஏசா 17:14 இதோ, சாயங்காலத்திலே கலக்கமுண்டாகும், விடியற் காலத்துக்கு முன் அவர்கள் ஒழிந்துபோவார்கள்; இதுவே நம்மைக் கொள்ளையாடுகிறவர்களின் பங்கும், நம்மைச் சூறையாடுகிறவர்களின் வீதமுமாயிருக்கும்.

வருங்காலத்தில் நிறைவேறும் தீர்க்கதரிசனம்

ஏசா 17:12-14 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனங்கள் வருங்காலத்தில் நிறைவேறும். இதற்குக் காரணங்கள்:

1. இஸ்ரவேலுக்கு எதிராக பல ராஜ்யங்கள் கூட்டிச்சேர்க்கப்படும். (ஏசா 17:12-13).
2. கர்த்தர் அவர்களை அதட்டி இஸ்ரவேலுக்காக யுத்தம் பண்ணுவார். (ஏசா 17:13, எசே 38-39; யோவே 3; சக 14; வெளி 19).
3. இஸ்ரவேலுக்கு எதிராக எழும்பும் தேசங்களின் சேனைகள் ஒழிந்து போவார்கள். (ஏசா 13:14)
4. "நம்மைக் கொள்ளையாடுகிறவர்களின் பங்கும், நம்மைச் சூறையாடுகிறவர்களின் வீதமும்" (ஏசா 17:14). எருசலேமிற்கும், யூதாவிற்கும் எதிராக இயேசு கிறிஸ்துவின் நாளில் அர்மெகதோனில் யுத்தம் நடைபெறும். அப்போது சாயங்காலத்திலே கலக்கமுண்டாகும், விடியற்காலத்துக்குமுன் அவர்கள் ஒழிந்துபோவார்கள் (சக 14:1-8).

சுழல்காற்று **(rolling thing) - גַּלְגַּל - gal-gal' - 1534**

ஆ.பெ.சொ. - சுழல், உருளை **(a wheel; a whirlwind; a rolling thing)**

18 அதிகாரம்

5. எத்தியோப்பியாவின் பாரம் - (செப் 2:12)

(1) சாபம் - காரணம்

ஏசா 18:1 எத்தியோப்பியாவின் நதிகளுக்கு அக்கரையிலே நிழலிடும் செட்டைகளுடையதும்,

ஏசா 18:2 கடல்வழியாய்த் தண்ணீர்களின் மேல் நாணல் படவுகளிலே ஸ்தானாபதிகளை அனுப்புகிறதுமான தேசத்துக்கு ஐயோ! வேகமான தூதர்களே, நெடுந்தூரமாய்ப் பரவியிருக்கிறதும், சிரைக்கப்பட்டதும், துவக்கமுதல் இதுவரைக்கும் கெடியாயிருந்தும், அளவிடப்பட்டதும், மிதிக்கப்பட்டதும், நதிகள் பாழாக்குகிறதுமான ஜாதியண்டைக்குப் போங்கள்.

தீர்க்கதரிசன எண் - 20

"எத்தியோப்பியாவின் நதிகளுக்கு அக்கரையிலே நிழலிடும் செட்டைகளுடையதும்....." (ஏசா 18:1-7) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. எத்தியோப்பியாவின் நதிகளுக்கு அக்கரையிலே நிழலிடும் செட்டைகளுடைய தேசத்திற்கு ஐயோ. (ஏசா 18:1).
2. கர்த்தர் மலைகளின்மேல் கொடியேற்றுவார். (ஏசா 18:3).
3. எக்காளம் ஊதுவார்.
4. கர்த்தர் அமர்ந்திருந்து பயிரின்மேல் காயும் காந்தியுள்ள வெயிலைப் போலவும், அறுப்புக்காலத்து உஷ்ணத்தில் உண்டாகும் பனி மேகத்தைப்போலவும், தம்முடைய வாசஸ்தலத் திலிருந்து கண்ணோக்குவார். (ஏசா 18:4-5).
5. திராட்சச்செடிகள் ஏகமாய் மலைகளின் பட்சிகளுக்கும், பூமியின் மிருகங்களுக்கும் விடப்படும் (ஏசா 18:6).
6. அக்காலத்திலே...... ஜாதியானது, சேனைகளின் கர்த்தரின் நாமம் தங்கும் ஸ்தலமாகிய சீயோன் மலையில், சேனைகளின் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவரப்படும். (ஏசா 18:7).

எத்தியோப்பியா தேசத்தைப் பற்றிய விவரம்

1. நிழலிடும் செட்டைகளுடையது. (ஏசா 18:1).
2. எத்தியோப்பியாவின் நதிகளுக்கு அக்கரையில் உள்ளது. (ஏசா 18:1, செப் 3:10).
3. கடல்வழியாய்த் தண்ணீர்களின்மேல் நாணல் படவுகளிலே ஸ்தானாபதிகளை அனுப்புகிற தேசம். (ஏசா 18:2, ஏசா 19:5, எரே 51:36, ஏசா 18:2; யாத் 2:3; எசே 30:9, யாத் 2:3).
4. நெடுந்தூரமாய்ப் பரவியிருக்கிறதும், சிரைக்கப்பட்டதுமான தேசம். (ஏசா 18:2,7, 1இராஜா 7:45; எசே 21:10-11)
5. துவக்கமுதல் இதுவரைக்கும் கெடியாயிருந்த தேசம். (ஏசா 18:2,7)
6. நதிகள் பாழாக்குகிறதுமான தேசம். (ஏசா 18:2,7)

வெட்டுக்கிளி (locust) צְלָצַל - tsel-aw-tsal' - 6767

ஆண்பால் பெயர்ச்சொல் - விட்டில்பூச்சி, வெட்டுக்கிளி "locust" (உபா 28:42); "cymbals" (2சாமு 6:5; சங் 150:5); "spears" (யோபு 41:7)

18 அதிகாரம்

செட்டைகள் (wings) - כָּנָף - kaw-nawf' - 3671

பெண்பால் பெயர்ச்சொல் - சிறகு, செட்டை, போர்வை, தொங்கல், இறகு, வஸ்திரம் (edge; extremity; wing; flap; pinnacle; overspreading)

ஐயோ (woe) - הוֹי - hoh'ee - 1945

வியப்பிடைச்சொல் - ஐயோ, ஒகோ "woe" (ஏசா 5:8,11,18,20,21,22; ஏசா 10:1; ஏசா 13:1-23:18; ஏசா 17:12; ஏசா 28:1; ஏசா 29:1,15; ஏசா 30:1; ஏசா 31:1; ஏசா 33:1; ஏசா 45:9-10, ஏசா 55:1; ரூத் 4:1; சக 2:6).

(2) நியாயத்தீர்ப்பு

ஏசா 18:3 பூச்சக்கரத்தில் வாசமாயிருக்கிறவர்களும், தேசத்துக் குடிகளுமாகிய நீங்களெல்லாரும், மலைகளின்மேல் கொடியேற்றப்படும் போது பாருங்கள், எக்காளம் ஊதப்படும்போது கேளுங்கள்.

ஏசா 18:4 நான் அமர்ந்திருந்து பயிரின்மேல் காயும் காந்தியுள்ள வெயிலைப்போலவும், அறுப்புக்காலத்து உஷ்ணத்தில் உண்டாகும் பனி மேகத்தைப் போலவும், என் வாசஸ்தலத் திலிருந்து கண்ணோக்குவேன் என்று கர்த்தர் என்னுடனே சொன்னார்.

ஏசா 18:5 திராட்சச்செடிகள் அறுப்புக்கு முன்னே பூப்பூத்து முற்றிக் காய்க்கிற காய்கள் பிஞ்சாயிருக்கும்போதே, அவர் அரிவாள்களினாலே கப்புக்கவர்களை அறுத்துக் கொடிகளை யரிந்து அகற்றிப் போடுவார்.

ஏசா 18:6 அவைகள் ஏகமாய் மலைகளின் பட்சிகளுக்கும், பூமியின் மிருகங்களுக்கும் விடப்படும்; பட்சிகள் அதின்மேல் கோடை காலத்திலும், காட்டு மிருகங்களெல்லாம் அதின்மேல் மாரிகாலத்திலும் தங்கும்.

மனுஷருக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. மலைகளின்மேல் கொடியேற்றப்படும் போது பாருங்கள். (ஏசா 11:10).

2. எக்காளம் ஊதப்படும்போது கேளுங்கள்.

"கொடியேற்றுகிறவர்" - கர்த்தரே கொடியேற்றுகிறவர். (ஏசா 11:10). கர்த்தர் கொடியேற்றும்போது அநேகர் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றமாட்டார்கள். ஏனெனில் ஜனங்கள் சிறிது காலம் அந்திக்கிறிஸ்துவினால் வஞ்சிக்கப்பட்டு அவன் பின்னே சென்று விடுவார்கள். (சக 14; வெளி 16:13-16; வெளி 19:11-21).

"எக்காளம் ஊதுகிறவர்" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது தேவன் எக்காளம் ஊதுவார். (யோவே 2:1; சக 9:14).

எத்தியோப்பியாவின் வருங்காலத் தோல்வி

கர்த்தர் எத்தியோப்பியாவை அழிப்பதற்கான காரணம் ஏசா 18:1-2,7 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. இவர்கள் தேவனுக்கும், இஸ்ரவேலுக்கும் எதிராகத் திட்டம் பண்ணுவார்கள். மற்ற தேசங்களோடு சேர்ந்து கொண்டு அர்மெகதோன் யுத்தத்தில் அந்திக் கிறிஸ்துவோடு சேர்ந்து கொள்வார்கள். (தானி 11:40-45). அர்மெகதோன் யுத்தத்தில் எத்தியோப்பியர் தோற்றுப்போவார்கள். கர்த்தர் அமர்ந்திருந்து இவர்களுடைய யோசனையை நோக்கிப் பார்ப்பார். (ஏசா 18:4) திடீரென்று எத்தியோப்பியர்மீது வந்து அவர்களை அழித்துப்போடுவார். (ஏசா 18:5). கர்த்தர் யூதாவுக்கு ஆதரவாகப் பேசுகிறார். அவர்களுக்கு விரோதமாக வருகிறவர்களைக் கர்த்தர் அழிப்பார். (ஏசா 18:4-5). யூதாவுடைய சத்துருக்களின் சரீரங்கள் அடக்கம் பண்ணப்படாமல் காட்டுமிருகங்களுக்கு இரையாக வெளியில் எறியப்படும். (ஏசா 18:6). இவையெல்லாமே கடைசிக்காலத்தில் நடைபெறும் சம்பவங்கள். ஏனெனில் வரலாற்றில் இதுவரையிலும் இந்தச் சம்பவம் நிறைவேற வில்லை. அர்மெகதோனில் புறஜாதியாரின் கைகளிலிருந்து யூதர்கள் மீட்கப்படுவார்கள்.

ஏசாயா - தொகுப்புரை

18 அதிகாரம்

எத்தியோப்பியரின் கைகளிலிருந்தும் அவர்கள் மீட்கப்படுவார்கள். அர்மெகதோன் யுத்தத்தில் செத்துப் போனவர்களின் சரீரங்கள் காட்டு மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் ஏழு மாதங்களுக்குமேல் உணவாக இருக்கும். (ஏசா 18:4-6; எசே 39:1-24; தானி 11:40-45; மத் 24:28-31; லூக்கா 17:31-37; வெளி 19:11-21).

"அவர் அரிவாள்களினாலே கப்புக்கவர்களை அறுத்துக் கொடிகளையரிந்து அகற்றிப் போடுவார்" - அந்திக்கிறிஸ்துவின் கீழ் செயல்பட்ட எத்தியோப்பியரையும், மற்ற தேசத்தாரையும் கர்த்தர் அழிப்பார்.

"அவைகள் ஏகமாய் மலைகளின் பட்சிகளுக்கும், பூமியின் மிருகங்களுக்கும் விடப்படும்" - அர்மெகதோனில் செத்துப் போனவர்களின் சரீரங்கள் மிருகங்களுக்கு இரையாக இருக்கும். (எசே 39:1-24; லூக்கா 17:31-37; வெளி 19:17,21).

(3) மறுபடியும் கூடுவார்கள்

ஏசா 18:7 அக்காலத்திலே நெடுந் தூரமாய்ப் பரவியிருக்கிறதும், சிரைக்கப் பட்டதும், துவக்கமுதல் இதுவரைக்கும் கெடியாயிருந்ததும், அளவிடப்பட்டதும், மிதிக்கப்பட்டதும், நதிகள் பாழாக்குகிறதுமான ஜாதியானது, சேனைகளின் கர்த்தரின் நாமம் தங்கும் ஸ்தலமாகிய சீயோன் மலையில், சேனைகளின் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவரப்படும்.

"அக்காலத்திலே........சேனைகளின் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவரப் படும்" - அர்மெகதோனில் அந்திக்கிறிஸ்துவின் சேனைகள் அழிக்கப்பட்ட பின்பு, ஆயிரம் வருஷ அரசாட்சி ஆரம்பமாகும். அப்போது எத்தியோப்பியர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து அவருக்குக் காணிக்கைகளைக் கொண்டு வருவார்கள். (ஏசா 9:6-7; சக 14; லூக்கா 1:32-33; வெளி 11-15; வெளி 20:1-10).

19 அதிகாரம்

6. எகிப்தின் பாரம் - (19:1-25; 20:1-6; எரே 29:1-32:32)

(1) உடனடி நியாயத்தீர்ப்பு - (19:1-15)

(அ) எட்டு அம்ச குழப்பம்

ஏசா 19:1 எகிப்தின் பாரம். இதோ, கர்த்தர் வேகமான மேகத்தின்மேல் ஏறி எகிப்துக்கு வருவார்; அப்பொழுது எகிப்தின் விக்கிரகங்கள் அவருக்கு முன்பாகக் குலுங்கும், எகிப்தின் இருதயம் தனக்குள்ளே கரைந்துபோகும்.

ஏசா 19:2 சகோதரனோடே சகோதரனும், சிநேகிதனோடே சிநேகிதனும், பட்டணத்தோடே பட்டணமும், ராஜ்யத்தோடே ராஜ்யமும் யுத்தம்பண்ணும் படியாய், எகிப்தியரை எகிப்தியரோடே போர் கலக்கப்பண்ணுவேன்.

ஏசா 19:3 அதினால் எகிப்தியருடைய ஆவி அவர்களுக்குள் சோர்ந்துபோகும்; அவர்கள் ஆலோசனையை முழுகிப்போகப் பண்ணுவேன்; அப்பொழுது விக்கிரகங் களையும், மந்திரவாதிகளையும், சன்னதக்காரர் களையும், குறிசொல்லுகிறவர் களையும் தேடுவார்கள்.

ஏசா 19:4 நான் எகிப்தியரைக் கடினமான அதிபதியின் கையில் ஒப்பிப்பேன்; கடூரமான ராஜா அவர்களை ஆளுவான் என்று சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

தீர்க்கதரிசன எண் - 21

"எகிப்தின் பாரம்......." (ஏசா 19:1-25) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. கர்த்தர் வேகமான மேகத்தின்மேல் ஏறி எகிப்துக்கு வருவார் (ஏசா 19:1).
2. எகிப்தின் விக்கிரகங்கள் அவருக்கு முன்பாகக் குலுங்கும்.
3. எகிப்தின் இருதயம் தனக்குள்ளே கரைந்துபோகும்.
4. எகிப்தில் உள்நாட்டுப் போர் மூளும். (ஏசா 19:2).
5. எகிப்தியருடைய ஆவி அவர்களுக்குள் சோர்ந்துபோகும் (ஏசா 19:3).
6. அவர்கள் ஆலோசனையைக் கர்த்தர் முழுகிப் போகப்பண்ணுவார்.
7. அவர்கள் விக்கிரகங்களையும், மந்திரவாதிகளையும், சன்னதக் காரர்களையும், குறி சொல்லுகிறவர்களையும் தேடுவார்கள்.
8. கர்த்தர் அவர்களை எகிப்தியரைக் கடினமான அதிபதியன் கையில் ஒப்பிப்பார். (ஏசா 19:4; தானி 8:20-23; தானி 11:40-45).
9. கடூரமான ராஜா அவர்களை ஆளுவான் (ஏசா 19:4; தானி 8:23-25).
10. கடலின் தண்ணீர்கள் குறைந்து, நைல் நதியும் வற்றி வறண்டுபோம். (ஏசா 19:5; ஏசா 11:15).
11. அவர்கள் ஆறுகளைத் திருப்பிவிடுவார்கள் (ஏசா 19:6).
12. எகிப்தின் அரணிப்பான அகழிகள் வெறுமையாகி வறண்டுபோம்.
13. கொறுக்கையும் நாணலும் வாடும். (ஏசா 19:6).
14. மீன்பிடிக்கிறவர்கள் பெருமூச்சு விடுவார்கள், நதியிலே தூண்டில்போடுகிற யாவரும் துக்கிப்பார்கள்; (ஏசா 19:8).

19 அதிகாரம்

15. மெல்லிய சணலைப் பக்குவப் படுத்துகிறவர்களும், சல்லாக்களை நெய்கிறவர்களும் நாணுவார்கள். (ஏசா 19:9).

16. அணைக்கட்டுகளும் உடைந்துபோம் (ஏசா 19:10).

17. மீன் வளர்க்கிற குளங்கள் உடைந்து போகும்.

18. சோவான்பட்டணத்தின் பிரபுக் களானவர்கள் மூடராவார்கள் (ஏசா 19:11,13).

19. பார்வோனுடைய ஞானமுள்ள ஆலோசனைக்காரரின் ஆலோசனை மதியீனமாகும்.

20. ஞானிகள் யாரும் காணப்படமாட்டார்கள். (ஏசா 19:12).

21. நோபுவின் பிரபுக்கள் மோசம்போவார்கள். (ஏசா 19:13).

22. பிரபுக்கள் எகிப்தையும் அதின் கோத்திரத்தலைவரையும் வழிதப்பப் பண்ணுவார்கள்.

23. கர்த்தர் எகிப்தின் நடுவில் தாறுமாறுகளின் ஆவியை வரப் பண்ணுவார் (ஏசா 19:14-15).

24. எகிப்தியர் பெண்டுகளைப்போல அஞ்சி நடுங்குவார்கள். (ஏசா 19:16)

25. யூதாவின் தேசம் எகிப்தியருக்குப் பயங்கரமாயிருக்கும் (ஏசா 19:17).

26. அக்காலத்திலே எகிப்துதேசத்திலிருக்கும் ஐந்து பட்டணங்கள் கானான் பாஷையைப் பேசி, சேனைகளின் கர்த்தரை முன்னிட்டு ஆணையிடும் (ஏசா 19:18).

27. அவைகளில் ஒன்று நிர்மூலமான பட்டணம் என்னப்படும்.

28. அக்காலத்திலே எகிப்துதேசத்தின் நடுவிலே கர்த்தருக்கு ஒரு பலி பீடமும், அதின் எல்லையருகே கர்த்தருக்கு ஒரு ஸ்தம்பமும் உண்டாயிருக்கும். (ஏசா 19:19-20).

29. ஒடுக்குகிறவர்களினிமித்தம் அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவார்கள்; அப்பொழுது கர்த்தர் அவர்களுக்கு ஒரு இரட்சகனையும், ஒரு பெலவானையும் அனுப்பி அவர்களை விடுவிப்பார். (ஏசா 19:20).

30. கர்த்தர் எகிப்தியருக்கு அறியப்படுவார் (ஏசா 19:21).

31. எகிப்தியர் கர்த்தருக்குப் பலிகளோடும், காணிக்கைகளோடும் ஆராதனை செய்வார்கள். கர்த்தருக்குப் பொருத்தனைகளைப் பண்ணி அவைகளைச் செலுத்துவார்கள்.

32. கர்த்தர் எகிப்தியரை வாதையினால் அடிப்பார்; அடித்து குணமாக்குவார் (ஏசா 19:22).

33. அவர்கள் கர்த்தரிடத்தில் மனந் திரும்புவார்கள்; அப்பொழுது கர்த்தர் அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்டு, அவர்களைக் குணமாக்குவார்.

34. எகிப்திலிருந்து அசீரியாவுக்குப் போகிற பெரும்பாதை உண்டாயிருக்கும் (ஏசா 19:23).

35. அசீரியர் எகிப்துக்கும், எகிப்தியர் அசீரியாவுக்கும் வந்து, எகிப்தியர் அசீரியரோடுங்கூட ஆராதனை செய்வார்கள். (ஏசா 19:23-24).

36. இஸ்ரவேல் எகிப்தோடும் அசீரியாவோடும் மூன்றாவதாக பூமியின் நடுவில் ஆசீர்வாத மாயிருக்கும். (ஏசா 19:24-25).

எகிப்தைப் பற்றி வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் செய்திகள்

எகிப்தின் தோற்றத்தைப் பற்றியும், அது ஸ்தாபிக்கப்பட்ட பூர்விகத்தைப் பற்றியும் அதிகமான விவரம் தெரியவில்லை. நைல்நதி எகிப்தில் பாய்வதினால் அங்கு விளைச்சல் அதிகமாக இருக்கிறது. வேதாகமத்தில் எகிப்து "பெரிய முதலையாகக்" கூறப்பட்டிருக்கிறது. (ஏசா 51:9; எசே 29:3).

19 அதிகாரம்

நேபுகாத்நேச்சார், தானியேல் ஆகியோரின் காலத்திற்கு முன்பு எகிப்து அசீரியரோடு சேர்ந்து இஸ்ரவேலை ஒடுக்கிற்று. நேபுகாத்நேச்சாரின் காலமே புறஜாதி ராஜாக்களின் காலத்தினுடைய ஆரம்பமாகும்.

யோசேப்பு மரித்தபின்பு அசீரியர் எகிப்தைக் கைப்பற்றினார்கள். அவர்கள் இஸ்ரவேலரை ஒடுக்கினார்கள். (ஏசா 52:4). "யோசேப்பை அறியாத ஒரு ராஜா" என்பது அசீரியரின் ராஜாவைக் குறிக்கும்.(யாத் 1:8).

எகிப்தின்மீது பல அந்நிய தேசத்தார் படையெடுத்து வந்து அவர்கள்மீது தங்களுடைய ஆளுகையை ஸ்தாபித்திருக்கிறார்கள். (லேவி 26)

"இதோ, கர்த்தர் வேகமான மேகத்தின்மேல் ஏறி எகிப்துக்கு வருவார்" - ஏசா 19 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் உபத்திரவக் காலத்திலும், ஆயிரம் வருஷ அரசாட்சியிலும் நிறைவேறும். இயேசுகிறிஸ்து மறுபடியும் இந்தப் பூமிக்கு வரும் வரையிலும் இந்தத் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறப் போவதில்லை. (தானி 7:12-14,22; மத் 24:29-31; மத் 25:31)

"எகிப்தின் விக்கிரகங்கள்" - எகிப்து ஒரு காலத்தில் விக்கிரகாராதனை செய்யும் தேசமாக இருந்தது. இயேசு கிறிஸ்து மறுபடியும் வரும்போது எகிப்து கர்த்தரை அறிந்து கொள்ளும். எகிப்து கர்த்தரையே ஆராதிக்கும். (ஏசா 19:18-25).

"அவருக்கு முன்பாக" - தேவனுடைய பிரசன்னம் எகிப்தியருக்குப் பிரத்தியட்சமாக இருக்கும். (ஏசா 63:1-5; தானி 7:13-14,22; சக 14:1-21; மத் 24:29-31; தீத்து 2:13; யூதா 1:14-15; வெளி 11:14; வெளி 19:11-21; வெளி 21:3-7) அப்போது எகிப்தின் இருதயம் தனக்குள்ளே கரைந்துபோகும். எகிப்தியரால் இதற்குமேல் கர்த்தரை எதிர்த்து நிற்க முடியாது. (லூக்கா 21:26).

"எகிப்தியரை எகிப்தியரோடே போர் கலக்கப்பண்ணுவேன்" - எகிப்து தேசத்திற்குள் உள்நாட்டுக்கலவரம் உண்டாகும். அர்மெகதோன் யுத்தத்தில் ஜனங்கள் குழப்பமடைந்து ஒருவர்மீது ஒருவர் யுத்தம் பண்ணுவார்கள். (சக 14:13-14). எகிப்து தேசம் பாலஸ்தீன தேசத்திற்கு அருகில் உள்ளது. ஆகையினால் அந்திக்கிறிஸ்துவின் சேனையில் அநேகர் எகிப்து தேசத்திலிருந்து சேர்க்கப் படுவார்கள். அர்மெகதோன் யுத்தம் எகிப்து தேசத்திலும் நடைபெறும்.

"எகிப்தியருடைய ஆவி அவர்களுக்குள் சோர்ந்துபோகும்" - எகிப்து தேசத்திற்குள் உள்நாட்டுக் கலகம் உண்டாவதினால் அவர்களுக்குள் சோர்வு உண்டாகும். அவர்கள் விக்கிரகங்களையும், மந்திரவாதிகளையும், சன்னதக்காரர்களையும், குறிசொல்லுகிறவர்களையும் தேடுவார்கள். (ஏசா 8:19-20).

"கடூரமான ராஜா அவர்களை ஆளுவான்" - இவன் அந்திக்கிறிஸ்து அல்ல. இவன் அக்காலத்தில் எகிப்தை ஆளுகை செய்யும் ஒரு கடூரமான ராஜா. (தானி 8:23; தானி 11:40-45).

(ஆ) பத்து அம்ச அழிவு

ஏசா 19:5 அப்பொழுது கடலின் தண்ணீர்கள் குறைந்து, நதியும் வற்றி வறண்டுபோம்.

ஏசா 19:6 ஆறுகளைத் திருப்பி விடுவார்கள்; அரணிப்பான அகழிகள் வெறுமையாகி வறண்டுபோம்; கொறுக்கையும் நாணலும் வாடும்.

ஏசா 19:7 நதியோரத்திலும் நதிமுகத்திலும் இருக்கிற மடலுள்ள செடிகளும், நதியருகே விதைக்கப்பட்ட யாவும் உலர்ந்துபோம்; அது பறக்கடிக்கப்பட்டு இல்லாதேபோம்.

ஏசா 19:8 மீன்பிடிக்கிறவர்கள் பெருமூச்சு விடுவார்கள், நதியிலே தூண்டில்போடுகிற யாவரும் துக்கிப்பார்கள்; தண்ணீர்களின் மேல் வலைகளை வீசுகிறவர்கள் சலித்துப்போவார்கள்.

19 அதிகாரம்

ஏசா 19:9 மெல்லிய சணலைப் பக்குவப் படுத்துகிறவர்களும், சல்லாக்களை நெய்கிறவர்களும் நாணுவார்கள்.

ஏசா 19:10 மீன் வளர்க்கிற குளங்களைக் கூலிக்கு அணைக்கட்டுகிற அனைவருடைய அணைக்கட்டுகளும் உடைந்துபோம்.

எகிப்தின் அழிவு

1. கடலின் தண்ணீர்கள் குறையும். (ஏசா 19:5).
2. நைல் நதி வற்றி வறண்டுபோம்.
3. அவர்கள் ஆறுகளைத் திருப்பிவிடுவார்கள் (ஏசா 19:6).
4. எகிப்தின் அரணிப்பான அகழிகள் வெறுமையாகி வறண்டுபோம்.
5. கொறுக்கையும் நாணலும் வாடும். (ஏசா 19:6).
6. நதியோரத்திலும் நதிமுகத்திலும் இருக்கிற மடலுள்ள செடிகள் யாவும் உலர்ந்துபோம். (ஏசா 19:7)
7. மீன்பிடிக்கிறவர்கள் பெருமூச்சு விடுவார்கள். நதியிலே தூண்டில்போடுகிற யாவரும் துக்கிப்பார்கள்; (ஏசா 19:8).
8. மெல்லிய சணலைப் பக்குவப் படுத்துகிறவர்கள் நாணுவார்கள். (ஏசா 19:9).
9. சல்லாக்களை நெய்கிறவர்களும் நாணுவார்கள்.
10. மீன் வளர்க்கிற குளங்கள் உடைந்து போகும். (ஏசா 19:10).

"நதியருகே விதைக்கப்பட்ட யாவும் உலர்ந்துபோம்" - இக்காலத்தில் நிலத்தின்மீது சாபம் உண்டாயிருக்கும். ஆகையினால் விதைக்கப்பட்டது எதுவும் முளைக்காது. (ஏசா 35:1-8).

"மீன்பிடிக்கிறவர்கள் பெருமூச்சு விடுவார்கள்" - எகிப்தியர்கள் நைல் நதியில் ஏராளமான மீன்கள் பிடிப்பது வழக்கம். நிலத்தின்மீது சாபம் உண்டாயிருப்பதினால் மீன்பிடிக்கும் தொழிலும் சிறப்பாக நடைபெறாது. (ஏசா 19:5-8).

"சல்லாக்களை நெய்கிறவர்களும் நாணுவார்கள்" - நெசவுவேலை, மீன்பிடித்தல், விவசாயம் ஆகிய எல்லாத் தொழில்களுமே இக்காலத்தில் நின்றுபோகும். (ஏசா 19:9-10). ஆனாலும் இது தற்காலிகமான சாபமே. இயேசு கிறிஸ்து இந்தப் பூமியில் தமது ராஜ்யத்தை ஸ்தாபிக்கும்போது நின்றுபோன தொழில்களெல்லாம் மறுபடியும் வேகமாக நடைபெறும். ஆயிரம் வருஷ அரசாட்சியிலும் நித்திய காலத்திலும் பூமியில் ஆசீர்வாதம் உண்டாகும்.

(இ) எட்டு அம்ச காரணம்

ஏசா 19:11 சோவான்பட்டணத்தின் பிரபுக்களானவர்கள் மூடர்கள்; பார்வோனுடைய ஞானமுள்ள ஆலோசனைக்காரரின் ஆலோசனை மதியீனமாயிற்று; நான் ஞானிகளின் புத்திரன், நான் பூர்வ ராஜாக்களின் குமாரன் என்று பார்வோனுடனே எப்படிச் சொல்லுகிறீர்கள்?

ஏசா 19:12 அவர்கள் எங்கே? உன் ஞானிகள் எங்கே? சேனைகளின் கர்த்தர் எகிப்தைக்குறித்துப் பண்ணின யோசனையை அவர்கள் உனக்குத் தெரிவிக்கட்டும்; அல்லது தாங்களே அறிந்து கொள்ளட்டும்.

ஏசா 19:13 சோவான் பிரபுக்கள் மூடரானார்கள்; நோப்பின் பிரபுக்கள் மோசம் போனார்கள்; எகிப்தையும் அதின் கோத்திரத்தலைவரையும் வழிதப்பப் பண்ணுகிறார்கள்.

ஏசா 19:14 கர்த்தர் அதின் நடுவில் தாறுமாறுகளின் ஆவியை வரப் பண்ணினார்; ஆனதுகொண்டு வெறியன் வாந்தி பண்ணி, தள்ளாடித் திரிகிறதுபோல, அவர்கள் எகிப்தை அதின் எல்லாச் செய்கையிலும் தள்ளாடித் திரியப்பண்ணுகிறார்கள்.

19 அதிகாரம்

ஏசா 19:15 எகிப்தில் தலையாகிலும் வாலாகிலும் கிளையாகிலும் நாணலாகிலும் செய்யும் வேலை ஒன்றுமிராது.

குழப்பத்திற்குக் காரணம்

1. சோவான்பட்டணத்தின் பிரபுக்களான வர்கள் மூடராவார்கள் (ஏசா 19:11,13).
2. பார்வோனுடைய ஞானமுள்ள ஆலோசனைக்காரரின் ஆலோசனை மதியீனமாகும்.
3. ஞானிகள் யாரும் காணப்படமாட்டார்கள். (ஏசா 19:12).
4. கர்த்தருடைய நோக்கம் நிறைவேறும்.
5. சோவான் பிரபுக்கள் மூடராவார்கள் (ஏசா 19:13).
6. பிரபுக்கள் எகிப்தையும் அதின் கோத்திரத்தலைவரையும் வழிதப்பப் பண்ணுவார்கள்.
7. கர்த்தர் எகிப்தின் நடுவில் தாறுமாறுகளின் ஆவியை வரப்பண்ணுவார் (ஏசா 19:14-15).
8. அவர்கள் எகிப்தை அதின் எல்லாச் செய்கையிலும் தள்ளாடித் திரியப் பண்ணுவார்கள்.

"சேனைகளின் கர்த்தர் எகிப்தைக் குறித்துப் பண்ணின யோசனையை அவர்கள் உனக்குத் தெரிவிக்கட்டும்" - இதுவே மெய்யான ஞானமும், அறிவுமுமாகும். கர்த்தருடைய திட்டத்தை அறிய வேண்டும். ஒவ்வொரு தேசத்தைப் பற்றியும் தீர்க்கதரிசனத்தில் கூறப்பட்டுள்ளதைத் தெரிந்து கொள்ள வேண்டும். (அப் 15:13-18; 2தீமோ 2:15; 2தீமோ 3:16-17). எகிப்து தேசத்தில் மெய்யான ஞானம் இருந்திருந்தால் அது தனக்கு வரப்போகும் அழிவிலிருந்து தப்பித்திருக்கும். எகிப்து தேசத்திற்கு மட்டுமல்ல ஒவ்வொரு தனிமனிதனுக்கும் மெய்யான ஞானம் தேவை. தனக்கு வரும் பிரச்சனைகளிலிருந்து மனுஷன் தப்பித்துக் கொள்ள வேண்டுமென்றால் அவனுக்கு மெய்யான ஞானமும், மெய்யான அறிவும் தேவைப்படுகிறது.

"சோவான்" - உலகின் பழங்கால பட்டணங்களில் இதுவும் ஒன்று. எப்ரோனுக்கு 7 வருஷங்களுக்குப் பின்பு இது கட்டப்பட்டது. (எண் 13:22). மோசே இங்கு அற்புதங்களை நடப்பித்தார். (சங் 78:12,43; சங் 30:4; எசே 30:14).

"நோப்" **(Noph)** - சோவானைப் போலவே இதுவும் எகிப்தின் பழங்கால பட்டணங்களில் ஒன்று. இங்கு பல விக்கிரகங்களுக்கு ஆலயங்கள் கட்டப்பட்டிருக்கிறது. (எரே 2:16; எரே 44:1; எரே 46:14,19; எசே 30:13,16). தற்காலத்தில் மெம்பிஸ் **(Memphis)** என்று அழைக்கப்படுவது இந்தப் பட்டணமாக இருக்கலாம். (ஓசி 9:6).

"கர்த்தர் அதின் நடுவில் தாறுமாறுகளின் ஆவியை வரப்பண்ணினார்" - இதனால் எகிப்தியரின் ஆலோசனைகள் அபத்தமாயிற்று. புத்தியீனமாகச் செயல்பட்டார்கள். துன்பங்களிலிருந்து விடுதலை பெறுவதற்குப் பதிலாக அவர்கள் மேலும் பல துன்பங்களில் சிக்கிக் கொண்டார்கள். வெறியன் வாந்தி பண்ணி, தள்ளாடித் திரிகிறதுபோல எகிப்தியர்கள் தங்கள் செயல்களில் தெளிவில்லாமல் தள்ளாடித் திரிந்தார்கள்.

"எகிப்தில்....செய்யும் வேலை ஒன்றுமிராது" - எகிப்துக்கு யாரும் ஆலோசனை கூறவும் முடியாது. யாரும் பாதுகாப்பு தரவும் முடியாது. எகிப்தின் தலையைப் பற்றியும், வாலைப் பற்றியும் ஏசா 9:14-15 ஆகிய வசனங்களில் கூறப்பட்டுள்ளது. மூப்பனும், கனம் பொருந்தினவனுமே தலை. பொய்ப் போதகம் பண்ணுகிற தீர்க்கதரிசியே வால். கிளையாகிலும், நாணலாகிலும் என்று கூறப்பட்டிருப்பது மற்றொரு உவமையாகும். கிளை என்பது உயர்ந்தவர்களையும், நாணல் என்பது தாழ்ந்தவர்களையும் குறிக்கும். (ஏசா 9:14-15).

19 அதிகாரம்

(2) கர்த்தருடைய நாளில் - (19:16-25; ஏசா 2:10)

(அ) பலவீனம்

ஏசா 19:16 அக்காலத்திலே எகிப்தியர் பெண்டுகளைப் போலிருந்து, சேனைகளின் கர்த்தர் தங்கள்மேல் அசைக்கும் கையசைவினாலே அஞ்சி நடுங்குவார்கள்.

ஏசா 19:17 சேனைகளின் கர்த்தர் அவர்களுக்கு விரோதமாக நிர்ணயித்துக் கொண்ட ஆலோசனையினிமித்தம் யூதாவின் தேசம் எகிப்தியருக்குப் பயங்கரமாயிருக்கும்; தனக்குள் அதை நினைக் கிறவனெவனும் திடுக்கிடுவான்.

"அக்காலத்திலே எகிப்தியர் பெண்டுகளைப் போலிருந்து" - வருங்கால உபத்திரவக் காலத்திலும், ஆயிரம் வருஷ அரசாட்சியிலும் எகிப்தியர்கள் மிகவும் பலவீனமாக இருப்பார்கள். கர்த்தர் தேசத்தில் பிரத்தியட்சமாக இருப்பதினால் அவர்கள் மிகவும் அஞ்சி நடுங்குவார்கள்.

"யூதாவின் தேசம் எகிப்தியருக்குப் பயங்கரமாயிருக்கும்" - கடைசி நாளில் கர்த்தர் எல்லா தேசங்களிலிருந்தும் இஸ்ரவேலரைக் கூட்டிச் சேர்ப்பார். அவர்கள் மறுபடியும் ஒரு தேசமாக ஸ்தாபிக்கப்படுவார்கள். யூதாவின் தேசத்தைப் பார்த்து எகிப்தியர் பயப்படுவார்கள். தேவனுடைய திட்டம் நிறைவேறுவதைப் பார்த்து ஒவ்வொருவனும் தனக்குள்ளே திடுக்கிடுவான்.

(ஆ) எகிப்து மாறும்

ஏசா 19:18 அக்காலத்திலே எகிப்து தேசத்திலிருக்கும் ஐந்து பட்டணங்கள் கானான் பாஷையைப் பேசி, சேனைகளின் கர்த்தரை முன்னிட்டு ஆணையிடும்; அவைகளில் ஒன்று நிர்மூலமான பட்டணம் என்னப்படும்.

"அக்காலத்திலே எகிப்துதேசத்திலிருக்கும் ஐந்து பட்டணங்கள் கானான் பாஷையைப் பேசி" - ஆயிரம் வருஷ அரசாட்சியில் இந்த ஐந்து பட்டணத்தாரும் கானான் பாஷையாகிய எபிரெயு பாஷையைப் பேசுவார்கள். ஐந்து பட்டணம் என்பது திரளான எண்ணிக்கையைக் குறிக்கும். எகிப்தியர்கள் கர்த்தரிடத்தில் திரும்பி வருவார்கள். அவர்கள் கர்த்தரை முன்னிட்டு ஆணையிடுவார்கள். அந்தப் பட்டணங்களில் ஒன்று நிர்மூலமான பட்டணம் எனப்படும். இயேசுகிறிஸ்து மறுபடியும் வரும்போது எகிப்து தேசமும், அசீரியாவும் இஸ்ரவேலைப் போலவே ஆசீர்வதிக்கப்படும். (ஏசா 19:18-25).

(இ) ஆயிர வருஷம் ஆசீர்வாதங்கள்

ஏசா 19:19 அக்காலத்திலே எகிப்து தேசத்தின் நடுவிலே கர்த்தருக்கு ஒரு பலி பீடமும், அதின் எல்லையருகே கர்த்தருக்கு ஒரு ஸ்தம்பமும் உண்டாயிருக்கும்.

ஏசா 19:20 அது எகிப்து தேசத்திலே சேனைகளின் கர்த்தருக்கு அடையாளமும் சாட்சியுமாயிருக்கும்; ஒடுக்குகிறவர்களினிமித்தம் அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவார்கள்; அப்பொழுது அவர்களுக்கு ஒரு இரட்சகனையும், ஒரு பெலவானையும் அனுப்பி அவர்களை விடுவிப்பார்.

ஏசா 19:21 அப்பொழுது கர்த்தர் எகிப்தியருக்கு அறியப்படுவார்; எகிப்தியர் கர்த்தரை அக்காலத்திலே அறிந்து, அவருக்குப் பலிகளோடும், காணிக்கைகளோடும் ஆராதனை செய்து, கர்த்தருக்குப் பொருத்தனைகளைப் பண்ணி அவைகளைச் செலுத்துவார்கள்.

ஏசா 19:22 கர்த்தர் எகிப்தியரை வாதையினால் அடிப்பார்; அடித்து குணமாக்குவார்; அவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்புவார்கள்; அப்பொழுது அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்டு, அவர்களைக் குணமாக்குவார்.

19 அதிகாரம்

"அக்காலத்திலே எகிப்துதேசத்தின் நடுவிலே கர்த்தருக்கு ஒரு பலி பீடமும்" - இதுவும் ஆயிரம் வருஷ அரசாட்சியில் நடைபெறும் சம்பவமாகும். எகிப்துதேசத்தின் நடுவிலே கர்த்தருக்கு ஒரு பலி பீடமும், அதின் எல்லையருகே கர்த்தருக்கு ஒரு ஸ்தம்பமும் உண்டாயிருக்கும். பலிபீடத்தையும், ஸ்தம்பத்தையும் எகிப்து தேசத்தில் காணப்படும் பிரமிடுகளோடு ஒருசிலர் வியாக்கியானம் பண்ணிக் கூறுகிறார்கள். ஆனால் இதற்கு வேதாகமத்தில் ஆதாரம் எதுவுமில்லை.

"கர்த்தருக்கு ஒரு பலி பீடம்" - ஆயிரம் வருஷ அரசாட்சியில் பலிகள் செலுத்தப்படும் பலிபீடம். (ஏசா 19:21)

"எல்லையருகே கர்த்தருக்கு ஒரு ஸ்தம்பம்" - கர்த்தர் எகிப்தியரை மீட்டுக் கொண்டதற்காக அதன் எல்லையில் ஒரு ஸ்தம்பம் ஸ்தாபிக்கப் படும். (ஏசா 19:20) இந்த ஸ்தம்பம் எகிப்து தேசத்திலே சேனைகளின் கர்த்தருக்கு அடையாளமும் சாட்சியுமாயிருக்கும். எகிப்தின் ஜனங்கள் ஒடுக்குகிறவர்களினிமித்தம் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டுக் கொண்டிருப்பார்கள். கர்த்தர் ஒரு இரட்சகனையும், ஒரு பெலவானையும் அனுப்பி அவர்களை விடுவிப்பார். இதற்காக எகிப்தியர் தங்கள் எல்லையருகே கர்த்தருக்கு ஒரு ஸ்தம்பத்தை உண்டாக்குவார்கள்.

"அவர்களுக்கு ஒரு இரட்சகனையும், ஒரு பெலவானையும் அனுப்பி அவர்களை விடுவிப்பார்" - ஏசா 19:20-25 ஆகிய வசனங்களில் இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. இவர் பரலோகத்தின் சேனைகளோடு பூமிக்கு வந்து அந்திக் கிறிஸ்துவை அழித்து பூமியில் தமது நித்திய ராஜ்யத்தை ஸ்தாபிப்பார். (ஏசா 63:1-8; சக 14:1-9; 2தெச 1:7-10; யூதா 1:14-15; வெளி 19:11-21).

"கர்த்தர் எகிப்தியருக்கு அறியப்படுவார்" - இந்தத் தீர்க்கதரிசனங்களெல்லாம் நிறைவேறும் போது எகிப்தியர் கர்த்தரை அறிந்து கொள்வார்கள். கர்த்தருக்குப் பலி களோடும், காணிக்கைகளோடும் ஆராதனை செய்வார்கள். கர்த்தருக்குப் பொருத்தனைகளைப் பண்ணி அவைகளைச் செலுத்துவார்கள். (ஏசா 19:21-25). இந்தச் சம்பவம் இதுவரையிலும் நடைபெறவில்லை. ஆகையினால் இது வருங்காலத்தில் ஆயிரம் வருஷ அரசாட்சியின்போது நடைபெறும்.

எகிப்தின் இரட்சிப்பு

1. கர்த்தரிடத்தில் வருவார்கள். (ஏசா 19:18-22).
2. பலிபீடம் கட்டுவார்கள். (ஏசா 19:19).
3. ஒரு ஸ்தம்பத்தை உண்டாக்குவார்கள். (ஏசா 19:19-20).
4. ஒடுக்குகிறவர்களினிமித்தம் அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவார்கள் (ஏசா 19:20).
5. அவருக்குப் பலிகளோடும், காணிக்கைகளோடும் ஆராதனை செய்வார்கள். (ஏசா 19:21).
6. கர்த்தருக்குப் பொருத்தனைகளைப் பண்ணி அவைகளைச் செலுத்துவார்கள். (ஏசா 19:18,21).
7. அவர்கள் கர்த்தரிடத்தில் மனந் திரும்புவார்கள்; அப்பொழுது அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்டு, அவர்களைக் குணமாக்குவார். (ஏசா 19:22).
8. அசீரியரோடும், இஸ்ரவேலரோடும் சேர்ந்து எகிப்தியர் கர்த்தரைச் சேவிப்பார்கள். (ஏசா 19:23-25).

எகிப்தில் கர்த்தருடைய கிரியை

1. கர்த்தர் எகிப்திக்கு வருவார்.(ஏசா 19:1).
2. எகிப்தியரை எகிப்தியரோடு போர் கலக்க பண்ணுவார். (ஏசா 19:2).
3. எகிப்தியரை அந்திக்கிறிஸ்துவிடம் ஒப்புக்கொடுப்பார். (ஏசா 19:4).
4. எகிப்து தேசத்திற்கு வாதைகளை அனுப்புவார். (ஏசா 19:5-17).

19 அதிகாரம்

5. எகிப்தின் நடுவில் தாறுமாறுகளின் ஆவியை வரப்பண்ணுவார். (ஏசா 19:14).

6. அவர்களுக்கு ஒரு இரட்சகனையும், ஒரு பெலவானையும் அனுப்பி அவர்களை விடுவிப்பார். (ஏசா 19:20).

7. கர்த்தர் எகிப்தியரை வாதையினால் அடிப்பார் (ஏசா 19:22).

8. அடித்து குணமாக்குவார்.

9. அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்பார்.

10. அசீரியர் இஸ்ரவேலரோடு எகிப்தியரையும் ஆசீர்வதிப்பார். (ஏசா 19:23-25).

(ஈ) சமாதானத்தில் பெரும்பாதை

ஏசா 19:23 அக்காலத்திலே எகிப்திலிருந்து அசீரியாவுக்குப் போகிற பெரும்பாதை உண்டாயிருக்கும்; அசீரியர் எகிப்துக்கும், எகிப்தியர் அசீரியாவுக்கும் வந்து, எகிப்தியர் அசீரியரோடுங்கூட ஆராதனை செய்வார்கள்.

"அக்காலத்திலே எகிப்திலிருந்து அசீரியாவுக்குப் போகிறபெரும்பாதை உண்டாயிருக்கும்" - ஆயிரம் வருஷ அரசாட்சியின்போது இந்தப் பெரும்பாதை உண்டாயிருக்கும். இந்தப் பாதை எகிப்திலிருந்து அசீரியாவிற்குப் பாலஸ்தீனத்தின் வழியாகப் போகும். இந்தத் தேசங்களெல்லாம் தங்களுக்குள் உடன்படிக்கை செய்து கொண்டு வியாபாரம் செய்யும். இவர்களெல்லோரும் சேர்ந்து கர்த்தரைச் சேவிப்பார்கள். (ஏசா 19:23-25).

(உ) பழைய விரோதிகளின் கூட்டணி

ஏசா 19:24 அக்காலத்திலே இஸ்ரவேல் எகிப்தோடும் அசீரியாவோடும் மூன்றாவதாக பூமியின் நடுவில் ஆசீர்வாதமாயிருக்கும்.

ஏசா 19:25 அவர்களைக் குறித்துச் சேனைகளின் கர்த்தர்: எகிப்தியராகிய என் ஜனமும், அசீரியராகிய என் கரத்தின் கிரியையும், இஸ்ரவேலராகிய என் சுதந்தரமும் ஆசீர்வதிக்கப்பட்டது என்று சொல்லி, அவர்களை ஆசீர்வதிப்பார்.

"அக்காலத்திலே இஸ்ரவேல் எகிப்தோடும்" - ஆயிரம் வருஷ அரசாட்சியில் இஸ்ரவேல் எகிப்தோடும், அசீரியாவோடும் சேர்ந்து மூன்றாவது நாடாக இருக்கும். கர்த்தர் இந்த மூன்று தேசத்தையும் ஆசீர்வதிப்பார். (ஏசா 19:24-25).

"அவர்களைக் குறித்துச் சேனைகளின் கர்த்தர்" - கர்த்தர் இந்த மூன்று தேசங்களைப் பற்றிக் கூறும் விவரம்.

1. எகிப்தியர் - என் ஜனம்
2. அசீரியர் - என் கரத்தின் கிரியை (2கொரி 5:17-18; எபே 2:10)
3. இஸ்ரவேலர் - என் சுதந்தரம்

20 அதிகாரம்

7. எகிப்து, எத்தியோப்பியா ஆகியவற்றின் பாரம்

(1) ஏசாயாவின் அடையாளம்

ஏசா 20:1 தர்த்தான், அசீரியா ராஜாவாகிய சர்கோனாலே அனுப்பப்பட்டு, அஸ்தோத்துக்கு வந்து, அஸ்தோத்தின் மேல் யுத்தம்பண்ணி, அதைப் பிடித்தவருஷத்திலே,

ஏசா 20:2 கர்த்தர் ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயாவை நோக்கி: நீ போய் உன் அரையிலிருக்கிற இரட்டை அவிழ்த்து, உன் கால்களிலிருக்கிற பாதரட்சைகளைக் கழற்று என்றார்; அவன் அப்படியே செய்து, வஸ்திரமில்லாமலும் வெறுங்காலுமாய் நடந்தான்.

"தர்த்தான், அசீரியா ராஜாவாகிய சர்கோனாலே அனுப்பப்பட்டு" - தர்த்தான் என்பவன் அசீரியாவின் படைத்தளபதிகளில் ஒருவன். (2இராஜா 17:17). சர்கோன் என்பவன் சனகெரிப்பாக இருக்கலாம். அசீரியர் இஸ்ரவேலருக்கு விரோதமாக வருகிறார்கள். தங்களுடைய பாதுகாப்பிற்காக இஸ்ரவேலர் எகிப்தையும் எத்தியோப்பியாவையும் நம்புகிறார்கள். இந்த நம்பிக்கை தவறானது என்று இஸ்ரவேலரை எச்சரிப்பதற்காகவும், அவர்கள் கர்த்தரையே நம்ப வேண்டுமென்று அவர்களுக்கு ஆலோசனை கூறுவதற்காகவும் இந்த அதிகாரம் எழுதப்பட்டிருக்கிறது. அசீரியர் ஏற்கெனவே சீரியாவையும், எப்பிராயீமையும் பிடித்துவிட்டார்கள். அதன்பின்பு அவர்கள் பெலிஸ்தியாவையும் பிடித்துக் கொண்டார்கள். இப்பொழுது அசீரியர் யூதாவுக்கு விரோதமாக வந்திருக்கிறார்கள். (2இராஜா 16:5-18:37).

தீர்க்கதரிசன எண் - 22

"கர்த்தர் ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயாவை நோக்கி....." (ஏசா 20:2-6) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. ஏசாயா வஸ்திரமில்லாமலும் வெறுங்காலுமாய் நடந்தான். மூன்று வருஷங்களாக ஏசாயா இவ்வாறு நடந்தான். அசீரியர் எகிப்தியரையும், எத்தியோப்பியரையும் இதுபோல வஸ்திரமில்லாமலும், வெறுங்காலாகவும் நடக்க வைப்பார்கள்.

2. அசீரியா ராஜா, தான் சிறைபிடிக்கப் போகிற எகிப்தியரும், தான் விலக்கப் போகிற எத்தியோப்பியருமாகிய இளைஞரையும் கிழவரையும் வஸ்திரமில்லாமலும் வெறுங்காலுமாய் எகிப்தியருக்கு வெட்கமுண்டாகும்படி, இருப்பிடம் மூடப்படாதவர்களாய்க் கொண்டுபோவான். (ஏசா 20:4).

3. இந்தக் கடற்கரைக் குடிகள் தாங்கள் நம்பியிருந்த எத்தியோப்பியாவைக் குறித்தும், தாங்கள் பெருமை பாராட்டின எகிப்தைக்குறித்தும் கலங்கி வெட்கப்படும். (ஏசா 20:5).

4. அசீரிய ராஜாவின் முகத்துக்குத் தப்பும்படிக்கு நாங்கள் நம்பி, சகாயத்துக்கென்று ஓடிவந்து அண்டினவன் இப்படியானானே என்று யூதாவின் மனுஷர் அக்காலத்திலே சொல்லுவார்கள் (ஏசா 20:6)

"உன் அரையிலிருக்கிற இரட்டை அவிழ்த்து" - ஏசாயா வஸ்திரமில்லாமலும் வெறுங்காலுமாய் நடந்தான். இவன் முழுவதும்நிர்வாணமாக நடக்கவில்லை. தன்னுடைய தீர்க்கதரிசிக்குரிய மேல்வஸ்திரத்தை ஏசாயா களைந்துபோட்டான். சாமுவேலும் ஒரு சமயம் தன்னுடைய மேல்வஸ்திரத்தை ஏசாயா களைந்து போட்டிருந்தான். (1சாமு 19:24) தாவீதும் ஏபோத்தை தவிர, வேறு வஸ்திரமில்லாதவனாக இருந்தான். (2சாமு 6:14-21). பேதுருவும் மீன் பிடிக்கப் போகையில் தன்னுடைய மேல் வஸ்திரத்தைக் கழற்றிப் போட்டான். (யோவான் 21:7) தீர்க்கதரிசிகள் ஆட்டுமயிரால் செய்யப்பட்ட மேலாடையை அணிந்திருப்பார்கள். ஏசாயா அந்த வஸ்திரத்தைக் கழற்றிப் போட்டிருக்க வேண்டும். (1இராஜா 1:8; மத் 3:4). கள்ளத்தீர்க்கதரிசிகள் நல்ல தீர்க்க தரிசிகளைப் போல இதுபோன்ற வஸ்திரங்களை அணியக் கூடாது. (சக 13:4). மூன்று வருஷங்களாக ஏசாயா இவ்வாறு மேல் வஸ்திரமில்லாமல் நடந்தான்.

20 அதிகாரம்

(2) ஏசாயாவின் கனிப்பு

ஏசா 20:3 அப்பொழுது கர்த்தர்: எகிப்தின் மேலும் எத்தியோப்பியாவின்மேலும் வரும் மூன்றுவருஷத்துக் காரியங்களுக்கு அடையாளமும் குறிப்புமாக என் ஊழியக் காரனாகிய ஏசாயா வஸ்திரமில்லாமலும் வெறுங்காலுமாய் நடக்கிறதுபோல,

ஏசா 20:4 அசீரியா ராஜா, தான் சிறைபிடிக்கப்போகிற எகிப்தியரும், தான் விலக்கப்போகிற எத்தியோப்பியருமாகிய இளைஞரையும் கிழவரையும் வஸ்திரமில்லாமலும் வெறுங்காலுமாய் எகிப்தியருக்கு வெட்கமுண்டாகும்படி, இருப்பிடம் மூடப்படாதவர் களாய்க் கொண்டுபோவான்.

ஏசா 20:5 அப்பொழுது இந்தக் கடற்கரைக் குடிகள் தாங்கள் நம்பியிருந்த எத்தியோப்பியாவைக் குறித்தும், தாங்கள் பெருமை பாராட்டின எகிப்தைக்குறித்தும் கலங்கி வெட்கி:

ஏசா 20:6 இதோ, அசீரிய ராஜாவின் முகத்துக்குத் தப்பும்படிக்கு நாங்கள் நம்பி, சகாயத்துக்கென்று ஓடிவந்து அண்டினவன் இப்படியானானே; நாங்கள் எப்படி விடுவிக்கப்படுவோம் என்று அக்காலத்திலே சொல்லுவார்கள் என்றார்.

“மூன்றுவருஷத்துக் காரியங்களுக்கு அடையாளமும் குறிப்புமாக” - மூன்று வருஷம் என்பது ஏசா 16:14 ஆவது வசனத்தில் கூறப்பட்டுள்ள கால அளவாகும். இந்த மூன்று வருஷங்களுக்குள் மோவாப், எகிப்து, எத்தியோப்பியா ஆகிய மூன்று தேசங்களும் அழிந்துபோகும்.

“கடற்கரைக் குடிகள்” - இது மத்திய தரைக்கடலிலுள்ள பாலஸ்தீன தேசத்தைக் குறிக்கும்.

“நாங்கள் எப்படி விடுவிக்கப்படுவோம்” - கர்த்தரே தங்களுக்கு விடுதலை கொடுக்கக் கூடியவர் என்பதை யூதா தேசத்தார் புரிந்து கொள்வார்கள். கர்த்தர் ஒரு தூதனை அனுப்பி 1,85,000 அசீரியரைக் கொன்று போட்டார். மற்றவர்கள் ஓடிப்போனார்கள். (ஏசா 37:36-38).

21 அதிகாரம்

8. பாபிலோனின் பாரம் - *(13:1)*

(1) பாழாக்குகிறவர்கள் - *(13:1,17; 45:1)*

ஏசா 21:1 கடல் வனாந்தரத்தின் பாரம். சுழல்காற்று தென் திசையிலிருந்து எழும்பிக் கடந்துவருகிறது போல, பயங்கரமான தேசமாகிய வனாந்தரத்திலிருந்து அது வருகிறது.

ஏசா 21:2 கொடிய தரிசனம் எனக்குத் தெரிவிக்கப்பட்டது; துரோகி துரோகம் பண்ணி, பாழாக்கிறவன் பாழாக்கிக் கொண்டே இருக்கிறான்; ஏலாமே எழும்பு; மேதியாவே முற்றிக்கை போடு; அதினாலே உண்டான தவிப்பையெல்லாம் ஒழியப்பண்ணினேன்.

"கடல் வனாந்தரம்" - இது பாபிலோனைக் குறிக்கும்.

"சுழல்காற்று தென்திசையிலிருந்து எழும்பிக் கடந்து வருகிறதுபோல" - சுழல்காற்றுகள் பொதுவாக தென்திசையிலிருந்தும், (யோபு 37:9; சக 9:14), வடதிசையிலிருந்தும் (எசே 1:4) எழும்பி வருவதாக வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிறது. சுழல்காற்றினால் பூமி அழிவதுபோல பாபிலோனும் அழியும். பாபிலோனின் சேதம் தேசமெங்கும் சிதறிக் கிடக்கும்.

"பயங்கரமான தேசமாகிய வனாந்தரத்திலிருந்து அது வருகிறது" - மேதியரும், ஏலாமியராகிய பெர்சியரும் வனாந்தரத்திலும், பர்வதத்திலும் குடியிருக்கிறார்கள். இவர்கள் பாபிலோன்மீது வந்து அவர்களை அழித்துப்போடுவார்கள். (ஏசா 21:1-2).

தீர்க்கதரிசன எண் - 23

"கடல் வனாந்தரத்தின் பாரம்........" (ஏசா 21:1-10) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. சுழல்காற்று தென்திசையிலிருந்து எழும்பிக் கடந்துவருகிறதுபோல, பாபிலோனின் அழிவு, பயங்கரமான தேசமாகிய வனாந்தரத்திலிருந்து வருகிறது. (ஏசா 21:1).

2. பாபிலோனின்மீது நியாயத்தீர்ப்பு ஏலாமிலிருந்தும், மேதியாவிலிருந்தும் வரும். (ஏசா 21:2).

3. பாபிலோனின் அழிவு மிகவும் கொடுமையாக இருக்கும். ஆகையால், தீர்க்கதரிசியின் இடுப்பு மகா வேதனையால் நிறைந்திருக்கிறது; பிள்ளைபெறுகிறவளின் வேதனைகளுக்கு ஒத்த வேதனைகள் தீர்க்கதரிசியைப் பிடித்தது (ஏசா 21:3-4).

4. பாபிலோன் பந்தியை ஆயத்தப்படுத்தும், ஜாமக்காரரை வைக்கும், புசிக்கும், குடிக்கும். அப்போது பாபிலோனின்மீது அழிவு வரும். (ஏசா 21:5). தானி 5 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளன சம்பவம் நிறைவேறும்.

5. யுத்தம் பண்ண வரப்போகிறவனால் பாபிலோன் விழும். (ஏசா 21:6-9).

6. பாபிலோனின் விக்கிரகங்களெல்லாம் அழிக்கப்படும். (ஏசா 21:9).

7. களத்தில் போரடிக்கப்படும் தானியம்போல பாபிலோன் போரடிக்கப்படும். (ஏசா 21:10).

இது பாபிலோனின் அழிவைக் குறித்துக் கூறப்பட்டிருக்கும் இரண்டாவது தீர்க்கதரிசனமாகும். முதலாவது தீர்க்கதரிசனம் ஆயிரம் வருஷ அரசாட்சியில் பாபிலோன் அழிவதைப் பற்றிக் கூறுகிறது. (ஏசா 13:1-14:27) இந்தத் தீர்க்கதரிசனத்தில் பாபிலோன் மேதிய-பெர்சிய தேசங்களினால் உடனடியாக அழியப்போவதைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. இரண்டு வசனங்களில் மட்டுமே மேதியரைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. (ஏசா 13:17-18).

21 அதிகாரம்

"ஏலாம்" **(Elam)** - இவன் சேமின் குமாரன். (ஆதி 10:22). பெர்சியர்கள் குடியிருந்த தேசத்திற்கு ஆதியிலே ஏலாமின் தேசம் என்று பெயர். இது ஐபிராத்து நதிக்கும், பெர்சிய வளைகுடாவிற்கும் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. பூர்வகாலத்தில் வல்லமை பெற்றிருந்த பேரரசுகளில் ஏலாமும் ஒன்று. (ஆதி 14:1,9). இதன் தலைநகரம் சூசான் **(Shushan)** (நெகே 1:1; எஸ் 1:2-5; எஸ் 2:3-8; எஸ் 3:15; எஸ் 4:8,16; எஸ் 8:14-15; எஸ் 9:6-18; தானி 8:2). தீர்க்கதரிசனத்தில் ஏலாமைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. (ஏசா 21:2; ஏசா 11:11; ஏசா 22:6; எரே 25:25; எரே 49:34-39; எசே 32:34; தானி 8:2).

"மேதியாவே முற்றிக்கை போடு" - மேதியா பாபிலோனை முற்றிக்கைப்போட்டது. தானி 5 ஆவது அதிகாரம் நிறைவேறிற்று.

"மேதியா" **(Media)** - மேதிய தேசம் பெர்சியாவிற்கு வடக்கிலும், ஐபிராத்து நதிக்குக் கிழக்கிலும், காஸ்பியன் கடலுக்கும், அர்மேனியாவிற்கும் தெற்கிலும் அமைந்துள்ளது. யாபேத்தின் குமாரனுடைய பெயர் மாதாய். (ஆதி 10:2). இவனுடைய பெயரால் மேதிய தேசம் பெயர் பெற்றிருக்கிறது. பல வருஷங்களாக மேதிய தேசம் அசீரியரின் ஆளுகைக்குட் பட்டிருந்தது. கி.மு. 556 ஆம் வருஷத்தில் கோரேஸ் ராஜா மேதியாவையும், பெர்சியாவையும் இணைத்து, மேதிய-பெர்சிய சாம்ராஜ்யத்தை நிறுவினான். (எஸ் 1:3,14,18; எஸ் 10:2; தானி 6:8,12,15; தானி 9:1). தீர்க்கதரிசனத்தில் மேதியாவைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. (ஏசா 21:2; ஏசா 13:17; எரே 25:25; எரே 51:11,28; தானி 5:28-31; தானி 8:20).

(2) கால்மும் விஷனவும்

ஏசா 21:3 ஆகையால், என் இடுப்பு மகா வேதனையால் நிறைந்திருக்கிறது; பிள்ளை பெறுகிறவளின் வேதனைகளுக்கு ஒத்த வேதனைகள் என்னைப் பிடித்தது; கேட்டதினால் உளைவுகொண்டு, கண்டதினால் கலங்கினேன்.

ஏசா 21:4 என் இருதயம் திகைத்தது; திகில் என்னைத் திடுக்கிடப் பண்ணிற்று; எனக்கு இன்பந்தந்த இரவு பயங்கரமாயிற்று.

ஏசா 21:5 பந்தியை ஆயத்தப்படுத்துங்கள், ஜாமக்காரரை வையுங்கள், புசியுங்கள், குடியுங்கள்; பிரபுக்களே, எழுந்து பரிசைகளுக்கு எண்ணெய் பூசுங்கள்.

தீர்க்கதரிசியின் வேதனை

பாபிலோன்மீது வரும் நியாயத்தீர்ப்பை ஏசாயா தரிசனமாகக் கண்டார். இதனால் அவருடைய உள்ளம் கலங்கிற்று. ஏசாயா மிகவும் வேதனையடைந்தார். ஏசாயா தன்னுடைய வேதனையைப் பற்றி இவ்வாறு விவரித்துக் கூறுகிறார்.

1. என் இடுப்பு மகா வேதனையால் நிறைந்திருக்கிறது (ஏசா 21:3).
2. பிள்ளை பெறுகிறவளின் வேதனைகளுக்கு ஒத்த வேதனைகள் என்னைப் பிடித்தது.
3. கேட்டதினால் உளைவுகொண்டேன்.
4. கண்டதினால் கலங்கினேன்.
5. என் இருதயம் திகைத்தது. (ஏசா 21:4).
6. திகில் என்னைத் திடுக்கிடப் பண்ணிற்று.
7. எனக்கு இன்பந்தந்த இரவு பயங்கரமாயிற்று.

"கேட்டதினால் உளைவுகொண்டு, கண்டதினால் கலங்கினேன்" - பாபிலோனின் அழிவை ஏசாயா தீர்க்கதரிசனமாகக் காண்கிறார். ஏசாயாவிற்கு இரக்கக்குணம் அதிகம். பாபிலோனின் பாடுகளினால் ஏசாயாவின் உள்ளம் கலங்குகிறது.

திகைப்பது **(panted) - תָּעָה - taw-aw' - 8582**

வினைச்சொல் - வழிதப்பு, அவாந்தர, வழிதவறு, படர்ந்திரு, திசை, அலை, சாய், தவறு, திசை தப்பு, வழுவு, விட்டுத்தப்பி, வழுவிப்போ, திரி, விரோதமாயிரு, அலையவிடு, பொல்லாப்பு, மோசப்படுத்து, வழி, மோசம், நாசமடை, நாசம் **(to reel or stray; stagger; wander)**

21 அதிகாரம்

"திகில் என்னைத் திடுக்கிடப்பண்ணிற்று" - பாபிலோனின் அழிவை ஏசாயா தீர்க்கதரிசனமாகக் காண்கிறார். பாபிலோனின் ஜனங்கள் மிகுந்த துன்பத்தை அனுபவிக்கிறார்கள். அவர்களோடு தானும் துன்பத்தை அனுபவித்தால் எப்படியிருக்குமோ அப்படிப்பட்ட அனுபவம் ஏசாயாவிற்கு உண்டாயிற்று.

"எனக்கு இன்பந்தந்த இரவு பயங்கரமாயிற்று" - பெல்ஷாத்சார் இரவு வேளையில் மதுபான விருந்து கொடுக்கிறான். (தானி 5). ராஜாவும், அவனுடைய பிரபுக்களும் சந்தோஷமாக இருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய சந்தோஷம் பயங்கரமாகவும், துக்கமாகவும் மாறிற்று. ஜாமக்காரர்கள் ஜாமம் காத்துக் கொண்டிருக்கிறார்கள். குடித்துப் புசிக்கிறார்கள். அப்போது மேதிய-பெர்சிய தேசத்தார் பாபிலோன்மீது திடீரென்று படையெடுத்து வந்துவிடுகிறார்கள். பாபிலோன் பட்டணத்திற்குள் நுழைந்து விடுகிறார்கள். சந்தோஷமாக இருந்த பெல்ஷாத்சாரும் அவனுடைய சேனைகளும் மேதிய-பெர்சியரோடு யுத்தம் பண்ணுகிறார்கள். யுத்தத்தில் பாபிலோனுக்குப் பேரழிவு உண்டாயிற்று. (ஏசா 21:3-5; தானி 5).

"பரிசைகளுக்கு எண்ணெய் பூசுங்கள்" - யுத்தத்தில் பரிசைகளைப் பயன்படுத்துவதற்கு முன்பாக அதில் எண்ணெய் பூசி தூய்மைப்படுத்த வேண்டும். பாபிலோனியர் நீண்ட காலமாக யுத்தத்தில் பரிசைகளைப் பயன்படுத்தவில்லை. ஆகையினால் அந்தப் பரிசைகளெல்லாம் துருப்பிடித்துள்ளது.

(3) வீழ்ச்சி - (எரே 51:11; தானி 5)

ஏசா 21:6 ஆண்டவர் என்னை நோக்கி: நீ போய், காண்பதைத் தெரிவிக்கும்படி ஜாமக்காரனை வை என்றார்.

ஏசா 21:7 அவன் ஒரு இரதத்தையும், ஜோடு ஜோடான குதிரைவீரரையும், ஜோடு ஜோடாகக் கழுதைகளின் மேலும் ஒட்டகங்களின்மேலும் ஏறிவருகிறவர்களையும் கண்டு, மிகுந்த கவனமாய்க் கவனித்துக் கொண்டே இருந்து:

ஏசா 21:8 ஆண்டவரே, நான் பகல்முழுவதும் என் காவலிலே நின்று, இராமுழுவதும் நான் என் காவலிடத்திலே தரித்திருக்கிறேன் என்று சிங்கத்தைப்போல் சத்தமிட்டுக் கூப்பிடுகிறான்.

ஏசா 21:9 இதோ, ஒரு ஜோடு குதிரை பூண்ட இரதத்தின்மேல் ஏறியிருக்கிற ஒரு மனுஷன் வருகிறான்; பாபிலோன் விழுந்தது, விழுந்தது; அதின் விக்கிரக தேவர்களையெல்லாம் தரையோடே மோதி உடைத்தார் என்று பிரதியுத்தரம் சொல்லுகிறான்.

ஏசா 21:10 என் போரடிப்பின் தானியமே, என் களத்தின் கோதுமையே, இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தரால் நான் கேள்விப்பட்டதை உங்களுக்கு அறிவித்தேன்.

"ஜாமக்காரனை வை" - ஏசாயா தான் இன்னும் பாபிலோனில் இருப்பதுபோலவே பேசுகிறார். பாபிலோனுக்குப் பேரழிவு வரப் போகிறது. ஆகையினால் பாபிலோனின் காவல்கோபுரங்களில் ஜாமக்காரரை வைக்க வேண்டும். ஜாமக்காரர்கள் குதிரை வீரரையும், கழுதைகள்மேலும், ஒட்டகங்கள்மேலும் வரும் வீரர்களையும் காண்பார்கள். (ஏசா 21:6-7) அப்போது "பாபிலோன் விழுந்தது, விழுந்தது" என்னும் சத்தம் கேட்கும். (ஏசா 21:8-9). பாபிலோன் விழுந்தது என்று இரண்டு முறை கூறப்பட்டிருப்பதினால் அது நிச்சயமாகவே விழுந்துவிட்டது என்பதை வலியுறுத்துகிறது. (எரே 50-51)

"அதின் விக்கிரக தேவர்கள்" - பாபிலோனில் விக்கிரகாராதனை மிகவும் அதிகம். பாபிலோனே விக்கிரகாராதனையின் ஆரம்ப ஸ்தலம். பாபிலோனின் பிரதான விக்கிரகம் "பேல்" **(Bel)** (ஏசா 46:1; எரே 50:2; எரே 51:44) என்னும் தெய்வமாகும்.

21 அதிகாரம்

அசீரியர் இதுவரையிலும் ஒவ்வொரு தேசமாகக் கைப்பற்றியிருக்கிறார்கள். அவர்கள் சீரியாவையும், எப்பிராயீமையும், பெலிஸ்தியாவையும், மோவாபையும், ஏதோமையும், யூதாவின் பெரும்பகுதியையும் இதுவரையிலும் பிடித்திருக்கிறார்கள். இப்போது அசீரியர் எருசலேமைப் பிடிக்க ஆயத்தமாக இருக்கிறார்கள். இது இராக்காலம் கடிந்துபோவதுபோல இருக்கும். அதன் பின்பு பகல்பொழுது வந்தாலும் மறுபடியும் இராக்காலம் வரும். இந்தத் தேசங்களையெல்லாம் பாபிலோன் தேசம் கைப்பற்றும் என்பதை இந்தத் தீர்க்கதரிசனம் விளக்குகிறது. இந்தத் தேசத்தார் எல்லோரும் பாபிலோனுக்குச் சிறைப்பிடித்துச் செல்லப்பட்டார்கள்.

10. அரபியாவின் பாரம்

(1) அசீரியரின் படையெடுப்பு - (36:18-21)

ஏசா 21:13 அரபியாவின் பாரம். திதானியராகிய பயணக்கூட்டங்களே, நீங்கள் அரபியாவின் காடுகளில் இராத்தங்குவீர்கள்.

ஏசா 21:14 தேமோதேசத்தின் குடிகளே, நீங்கள் தாகமாயிருக்கிறவர்களுக்குத் தண்ணீர் கொண்டுபோய், தப்பி ஒடுகிறவர்களுக்கு அப்பங்கொடுக்க எதிர்கொண்டு போங்கள்.

ஏசா 21:15 அவர்கள், பட்டயங்களுக்கும், உருவின கட்கத்துக்கும், நாணேற்றின வில்லுக்கும், யுத்தத்தின் கொடுமைக்கும் தப்பி ஓடுகிறார்கள்.

தீர்க்கதரிசன எண் - 25

"அரபியாவின் பாரம்......" (ஏசா 21:13-17) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. திதானியர் அசீரியரின் படையெடுப்பிலிருந்து சிதறி ஓடுவார்கள். இவர்களை அரபு தேசத்தார் பாதுகாத்து பராமரிப்பார்கள். (ஏசா 21:13-15).

2. ஒரு வருஷத்தில் அரபியாவின் மற்றொரு பகுதியின்மீது அசீரியர் படையெடுத்து வருவார்கள். (ஏசா 21:16-17).

"அரபியா" **(Arabia)** - சீரியாவிற்குத் தெற்கிலும், ஐபிராத்து நதிக்கு மேற்கிலும், சவக்கடலுக்கு வடக்கிலும், பாலஸ்தீனத்திற்குக் கிழக்கிலுமுள்ள பெரிய தேசம். (1இராஜா 10:15; 2நாளா 9:14; எரே 25:24; எசே 27:21; கலா 1:17; கலா 4:25).

"திதானியர்" **(Dedanim)** - ஆபிரகாமிற்கும், கெத்தூராளுக்கும் பிறந்த குமாரனின் பெயர் தேதான் **(Dedan)** திதானியர் தேதானின் சந்ததியாராவர். (ஆதி 25:3; எரே 25:23; எரே 49:8; எசே 25:13; எசே 27:15,20; எசே 38:13).

"தேமா" **(Tema)** - ஆகார், இஸ்மவேல் ஆகியோர் மூலமாக வந்த ஆபிரகாமின் சந்ததியார். (ஆதி 25:15; 1நாளா 1:30; யோபு 6:19; எரே 25:23).

(2) காலம் - விளைவு

ஏசா 21:16 ஆண்டவர் என்னை நோக்கி: ஒரு கூலிக்காரனுடைய வருஷங்களுக் கொத்த ஒரே வருஷத்திலே கேதாருடைய மகிமையெல்லாம் அற்றுப்போம்.

ஏசா 21:17 கேதார் புத்திரராகிய பராக்கிரம வில்வீரரின் தொகையில் மீதியானவர்கள் கொஞ்சப் பேராயிருப்பார்கள் என்றார்; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் இதை உரைத்தார்.

"ஒரே வருஷத்தில்" - ஏசாயா தன்னுடைய தீர்க்கதரிசனத்தைக் கூறும்போது அது நிறைவேறுவதற்கான கால அளவையும் நிர்ணயிக்கிறார்.

21 அதிகாரம்

"கேதார்" (Kedar) - ஆகார், இஸ்மவேல் ஆகியோர் மூலமாக வந்த ஆபிரகாமின் சந்ததியார். (ஏசா 21:16-17; ஏசா 42:11; ஏசா 60:7; ஆதி 25:13; 1நாளா 1:29; சங் 120:5; உன் 1:5; எரே 2:10; எரே 49:28; எசே 27:21).

22 அதிகாரம்

11. எருசலேமின் பாரம் - (22:1-25; எரே 25:1-11; ஆமோ 2:4-16)

(1) நான்கு அம்ச நியாயத்தீர்ப்பு

ஏசா 22:1 தரிசனப் பள்ளத்தாக்கின் பாரம். உன்னில் உள்ளவர்கள் எல்லாரும் வீடுகளின்மேல் ஏறுவதற்கு உனக்கு இப்பொழுது வந்தது என்ன?

ஏசா 22:2 சந்தடிகளால் நிறைந்து ஆரவாரம்பண்ணி, களிகூர்ந்திருந்த நகரமே, உன்னிடத்தில் கொலையுண்டவர்கள் பட்டயத்தால் கொலையுண்டதில்லை, யுத்தத்தில் செத்ததும் இல்லை.

ஏசா 22:3 உன் அதிபதிகள் எல்லாரும் ஏகமாய் ஓடி அலைந்தும், வில்வீரரால் கட்டப்படுகிறார்கள்; உன்னில் அகப்பட்ட யாவரும் தூரத்துக்கு ஓடியும் ஏகமாய்க் கட்டப்படுகிறார்கள்.

தீர்க்கதரிசன எண் - 26

"தரிசனப் பள்ளத்தாக்கின் பாரம்.........." (ஏசா 22:1-14) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. அசீரியர் எருசலேமின்மீது படையெடுத்து வருகிறார்கள். ஆகையினால் எருசலேமிலுள்ளவர்கள் எல்லோரும் வீடுகளின்மேல் ஏறுவார்கள். (ஏசா 22:1-2; ஏசா 36:1-37:38).
2. அவர்களுக்கு அழிவு நியமிக்கப் பட்டிருந்தாலும் சந்தடிகளால் நிறைந்து ஆரவாரம் பண்ணி, களிகூர்ந்திருப்பார்கள். (ஏசா 22:1-2).
3. எருசலேமில் கொலையுண்டவர்கள் பட்டயத்தால் கொலையுண்டதில்லை, யுத்தத்தில் செத்ததும் இல்லை. அவர்கள் தப்பி ஓடும்போது அசீரியர்கள் அவர்களைப் பிடித்துக் கொன்று போடுவார்கள். (ஏசா 22:2).
4. உன் அதிபதிகள் எல்லாரும் ஏகமாய் ஓடி அலைந்தும், வில்வீரரால் கட்டப்படுகிறார்கள் (ஏசா 22:3).
5. என் ஜனமாகிய குமாரத்தி பாழாய்ப் போனதினிமித்தம் மனங்கசந்து அழுவேன்; எனக்கு ஆறுதல் சொல்ல வராதேயுங்கள் (ஏசா 22:4).
6. தரிசனப் பள்ளத்தாக்கிலே அமளியும், மிதியுண்குதலும், கலக்கமுமுள்ள நாளாயிருக்கிறது; இது அலங்கத்தைத் தகர்த்து, பர்வதத்துக்கு நேரே ஆர்ப்பரிக்கும் நாளாயிருக்கிறது. (ஏசா 22:5).
7. மகா வடிவான உன் பள்ளத்தாக்குகள் இரதங்களால் நிரப்பப்படும்; குதிரைவீரர் வாசல்கள் மட்டும் வந்து அணிவகுத்து நிற்பார்கள். (ஏசா 22:6-7).
8. அவன் யூதாவின் மறைவை நீக்கிப் போடுவான். (ஏசா 22:8).
9. அந்நாளிலே வனமாளிகையாகிய ஆயுதசாலையை நோக்குவாய்.
10. நீங்கள் தாவீது நகரத்தின் இடிதல்கள் அநேகமாயிருப்பதைக் காண்பீர்கள். (ஏசா 22:9).
11. கீழ்க்குளத்துத் தண்ணீர்களை கட்டி வைப்பீர்கள்.
12. எருசலேமின் வீடுகளை எண்ணி, அலங்கத்தை அரணிப்பாக்கும்படி வீடுகளை இடிப்பீர்கள். (ஏசா 22:10).
13. இரண்டு மதில்களுக்கு நடுவே பழைய குளத்துத் தண்ணீர்களுக்கு ஒரு அகழை உண்டுபண்ணுவீர்கள். (ஏசா 22:11).

22 அதிகாரம்

14. ஆனாலும் அதைச் செய்தவரை நீங்கள் நோக்காமலும், அதை ஏற்படுத்தித் தூரத்திலிருந்து வரப்பண்ணினவரைக் கவனியாமலும் போகிறீர்கள்.

15. சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் அக்காலத்திலே அழவும், புலம்பவும், மொட்டையிடவும், இரட்டுடுத்தவும் கட்டளையிட்டார். (ஏசா 22:12).

16. நீங்கள் சாகுமட்டும் இந்த அக்கிரமம் உங்களுக்கு நிவிர்த்தியாவதில்லை (ஏசா 22:14).

ஏசாயா இந்தத் தீர்க்கதரிசனத்தைக் கூறும் போது இதில் அவர் பயன்படுத்தியிருக்கும் வார்த்தைகள் இந்தத் தீர்க்கதரிசனமெல்லாம் அவர் பேசும்போதே நிறைவேறியுள்ளதுபோன்றே தெரிகிறது. இந்தத் தீர்க்கதரிசனம் நிச்சயமாக நிறைவேறும் என்னும் பொருளில் ஏசாயா இறந்த காலத்தைக் குறிக்கும் வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்கிறார். (ஏசா 22:8-14)

தீர்க்கதரிசனத்தின் விவரம்

1. அசீரியர் எருசலேமின்மீது படையெடுத்து வரும்போது எருசலேமில் காணப்படும் சந்தடிகளும், ஆரவாரமும், களிகூருதலும். (ஏசா 22:1-3).

2. எருசலேமிற்கு வரும் அழிவைப் பார்த்து உண்டாகும் துக்கம். (ஏசா 22:4லி8)

3. எருசலேமைப் பாதுகாப்பதற்கு ஆயத்தம். (ஏசா 22:9-11)

4. அசீரியரின் படையெடுப்பினால் எருசலேம் ஜனத்தாருடைய நீதிநெறி வாழ்வு.

"தரிசனப்பள்ளத்தாக்கு" (valley of vision) - இது எருசலேமைக் குறிக்கிறது. (ஏசா 22:9-10)

"வீடுகளின்மேல் ஏறுவதற்கு" - எருசலேமின்மீது அசீரியர் படையெடுத்து வரும்போது நகரமே குழப்பத்தில் இருக்கும். எருசலேம் நகரத்தார் எல்லோரும் தங்கள் வீடுகளின் மேல்மாடியில் ஏறி வீதிகளிலும், சாலைகளிலும் நடைபெறும் காரியங்களைப் பார்ப்பார்கள். (ஏசா 22:1-2).

"களிகூர்ந்திருந்த நகரமே" - எருசலேமிற்கு அழிவும், மரணமும் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அந்தச் சூழ்நிலையிலும் தனக்கு வரும் ஆபத்தை உணராமல் அது களிகூருகிறது. (ஏசா 22:12-14).

"யுத்தத்தில் செத்ததும் இல்லை" - எருசலேம் பட்டணத்தில் யாரும் யுத்தம்பண்ணி சாகவில்லை. ஜனங்கள் அசீரியருக்குப் பயந்து, பட்டணத்தை விட்டு ஓடுகிறார்கள். தப்பி ஓடுகிறவர்களை அசீரியர் பிடித்துக் கொன்றுபோடுகிறார்கள். ஆனால் தப்பியோடாமல் நகரத்தில் மீதியாக இருந்தவர்களைக் கர்த்தர் பாதுகாக்கிறார். அவர்கள் அசீரியரின் சேனையை அழித்துப்போடுகிறார். (ஏசா 37:33-38)

"உன் அதிபதிகள் எல்லாரும் ஏகமாய் ஓடி அலைந்தும்" - எருசலேமிற்குள் இருக்கும் ஜனங்கள் மிகுந்த பயத்தோடு இருக்கிறார்கள். நகரத்திற்கு வெளியே அசீரியர் திரளான சேனையோடு வந்திருக்கிறார்கள். எருசலேம் பட்டணத்தாரைச் சரணடையுமாறு கூறுகிறார்கள். அசீரியரை எருசலேம் பட்டணத்தாரால் எதிர்த்து நிற்க முடியவில்லை. (ஏசா 36:1-22)

(2) எருசலேமிற்காக புலம்புதல் - (24:16; எரே 7:29; 9:17; எசே 19:1; 26:15; 27:1,28; 28:11; 32:1; யோவே 1:8,11,13; ஆமோ 5:1,16; மீகா 1:8; 2:4)

ஏசா 22:4 ஆகையால், என்னை நோக்கிப் பாராதேயுங்கள்; என் ஜனமாகிய குமாரத்தி பாழாய்ப் போனதினிமித்தம் மனங்கசந்து அழுவேன்; எனக்கு ஆறுதல் சொல்ல வராதேயுங்கள் என்கிறேன்.

22 அதிகாரம்

ஏசா 22:5 சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவராலே இது தரிசனப் பள்ளத்தாக்கிலே அமளியும், மிதியுண்குதலும், கலக்கமுமுள்ள நாளாயிருக்கிறது; இது அலங்கத்தைத் தகர்த்து, பர்வதத்துக்கு நேரே ஆர்ப்பரிக்கும் நாளாயிருக்கிறது.

"என் ஜனமாகிய குமாரத்தி பாழாய்ப் போனதினிமித்தம் மனங்கசந்து அழுவேன்" - யூதாவின்மீது வரும் உபத்திரவத்தை இந்த வாக்கியம் விளக்கிக் கூறுகிறது. (ஏசா 36-37)

"தரிசனப் பள்ளத்தாக்கு" - இரண்டாம் முறையாக எருசலேம் தரிசனப் பள்ளத்தாக்கு என்று அழைக்கப்படுகிறது. (ஏசா 22:1,5,9-10).

(3) படையெடுத்து வந்தவர்கள் - (எரே 25:1-14)

ஏசா 22:6 ஏலாமியன் அம்பறாத் தூணியை எடுத்து, இரதங்களோடும் காலாட்களோடும் குதிரைவீரரோடும் வருகிறேன்; கீர் கேடகத்தை வெளிப்படுத்தும்.

ஏசா 22:7 மகா வடிவான உன் பள்ளத்தாக்குகள் இரதங்களால் நிரப்பப்படும்; குதிரைவீரர் வாசல்கள் மட்டும் வந்து அணிவகுத்து நிற்பார்கள்.

"ஏலாமியன்" - இது பெர்சியரைக் குறிக்கும். இந்த வசனத்தில் கூறப் பட்டிருக்கும் கீர் என்பது மேதியரைக் குறிக்கும். பாலஸ்தீன தேசத்தை அசீரியர் பிடிக்க வரும்போது மேதியரும், பெர்சியரும் அவர்களோடு சேர்ந்து வருகிறார்கள். இந்தத் தீர்க்கதரிசனம் 200 வருஷங்களுக்குப் பின்பு நிறைவேறுகிறது. மேதியரும், பெர்சியரும் அசீரியாவிலிருந்தும், பாபிலோனிலிருந்தும் விடுதலை பெறுகிறார்கள். இந்தத் தீர்க்கதரிசனம் கூறப்பட்ட காலத்தில் மேதியரும், பெர்சியரும் அசீரியாவின் ஆளுகைக்குட் பட்டிருக்கிறார்கள். (ஏசா 22:6-7).

"மகா வடிவான உன் பள்ளத்தாக்குகள் இரதங்களால் நிரப்பப்படும்" - அசீரியர் திரளான சேனைகளோடு எருசலேமை நோக்கி வருகிறார்கள். கர்த்தர் மட்டுமே எருசலேமிற்கு உதவி புரிய முடியும். அவர்களுக்குக் கர்த்தரைத் தவிர வேறு உதவியில்லை. (ஏசா 37:36-38).

(4) பாதுகாக்க வீணான ஆயத்தங்கள்

ஏசா 22:8 அவன் யூதாவின் மறைவை நீக்கிப் போடுவான்; அந்நாளிலே வனமாளிகையாகிய ஆயுதசாலையை நோக்குவாய்.

ஏசா 22:9 நீங்கள் தாவீது நகரத்தின் இடிதல்கள் அநேகமாயிருப்பதைக் கண்டு, கீழ்க்குளத்துத் தண்ணீர்களை கட்டி வைத்து,

ஏசா 22:10 எருசலேமின் வீடுகளை எண்ணி, அலங்கத்தை அரணிப்பாக்கும் படி வீடுகளை இடித்து,

ஏசா 22:11 இரண்டு மதில்களுக்கு நடுவே பழைய குளத்துத் தண்ணீர்களுக்கு ஒரு அகழை உண்டுபண்ணுவீர்கள்; ஆனாலும் அதைச் செய்தவரை நீங்கள் நோக்காமலும், அதை ஏற்படுத்தித் தூரத்திலிருந்து வரப்பண்ணினவரைக் கவனியாமலும் போகிறீர்கள்.

"அவன் யூதாவின் மறைவை நீக்கிப் போடுவான்" - அசீரியர் யூதாவை எல்லா விதத்திலும் அவமானப்படுத்துவார்கள். (ஏசா 36:4-22)

22 அதிகாரம்

"அந்நாளிலே வனமாளிகையாகிய ஆயுதசாலையை நோக்குவாய்" - இது யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவைக் குறிப்பிடுகிறது. தன்னுடைய பாதுகாப்பிற்காக எசேக்கியா ஆயுதசாலையை நோக்கிப் பார்ப்பான். பட்டணத்திற்கு வரும் தண்ணீர் வாய்க்கால்களையெல்லாம் தூர்த்துப் போட்டான். பட்டணத்தின் அலங்கங்களில் காணப்பட்டிருந்த விரிசல்களையெல்லாம் அடைத்தான். எருசலேமைப் பாதுகாப்பதற்குத் தன்னால் முடிந்த எல்லாப் பாதுகாப்புகளையும் செய்தான். ஆனாலும் எசேக்கியா இன்னும் தன்னுடைய பாதுகாப்பிற்காகக் கர்த்தரை நோக்கிப் பார்க்கவில்லை. (ஏசா 22:8-11) ரப்சாக்கே எருசலேம் பட்டணத்தாரை நிந்தித்தான். அப்போது ஏசாயாவின் வார்த்தை எசேக்கியாவிற்குக் கூறப்படுகிறது. ஏசாயாவின் வார்த்தையைக் கேட்ட பின்பே எசேக்கியா கர்த்தரைத் தேடுகிறான். அதன் பின்பு தன்னுடைய பாதுகாப்பிற்கு எசேக்கியா கர்த்தரையே நம்புகிறான். (ஏசா 36:4-37:38)

(5) பாவம் - இரக்கமின்மை - (9:13-16)

ஏசா 22:12 சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் அக்காலத்திலே அழவும், புலம்பவும், மொட்டையிடவும், இரட்டுடுத்தவும் கட்டளையிட்டார்.

ஏசா 22:13 நீங்களோ, சந்தோஷித்துக் களித்து, ஆடுமாடுகளை அடித்து, இறைச்சியைச் சாப்பிட்டு, திராட்சரசத்தைக்குடித்து: புசிப்போம் குடிப்போம், நாளைக்குச் சாவோம் என்று சொல்வீர்கள்.

ஏசா 22:14 மெய்யாகவே நீங்கள் சாகுமட்டும் இந்த அக்கிரமம் உங்களுக்கு நிவிர்த்தியாவதில்லை என்று சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறாரென்பது என் செவிகேட்கும்படி சேனைகளின் கர்த்தரால் தெரிவிக்கப்பட்டது.

"அக்காலத்திலே அழவும், புலம்பவும்" - இது ஆயிரம் வருஷ அரசாட்சியின் காலத்தைக் குறிக்காது. அசீரியர் எருசலேம்மீது முற்றிக்கைப் போட்டக் காலத்தைக் குறிக்கும். (ஏசா 36-38). எருசலேம் பட்டணத்தார் மனந்திருந்த வேண்டும். உபவாசித்து ஜெபிக்க வேண்டும் என்று கர்த்தர் கட்டளையிடுகிறார். தங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் கொஞ்சக்காலத்தில் அவர்கள் புசித்து குடித்து சந்தோஷமாக இருப்பதற்குப் பதிலாக, அவர்கள் அழுது புலம்பி கர்த்தரிடத்தில் ஜெபிக்க வேண்டும். (ஏசா 22:12-14) அவர்கள் சாகுமட்டும் இந்த அக்கிரமம் அவர்களுக்கு நிவிர்த்தியாவதில்லை என்று கர்த்தர் கூறுகிறார். (ஏசா 22:14).

"புசிப்போம் குடிப்போம், நாளைக்குச் சாவோம்" - இந்த வாக்கியம் 1கொரி 15:32 ஆவது வசனத்தில் உயிர்த்தெழுதலோடு தொடர்புடுத்தி மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. அசீரியர் எருசலேமின்மீது படையெடுத்து வந்திருக்கிறார்கள். ஆகையினால் எருசலேம் பட்டணத்தார் சீக்கிரமாக அழிந்து விடுவோம் என்று நினைக்கிறார்கள். தங்களுக்கு மீதமுள்ள கொஞ்ச நாட்களில் புசித்துக் குடிப்போம் என்று நினைத்து வாழ்க்கையில் நம்பிக்கையில்லாமல் இருக்கிறார்கள். மனுஷன் தன்னால் முடிந்த வரையிலும் பாவ சந்தோஷத்தில் ஜீவித்துவிட்டு அதன் பின்பு, மரித்துப்போக வேண்டுமென்று நினைக்கிறான். (ஏசா 22:12-14)

(6) செப்னா தன் வேலையிலிருந்து நீக்கப்பட்டான்

ஏசா 22:15 சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் உரைத்ததாவது: நீ அரமனை விசாரிப்புக்காரனும் பொக்கிஷக் காரனுமாகிய செப்னா என்பவனிடத்தில் போய்ச் சொல்லவேண்டியது என்னவென்றால்,

ஏசா 22:16 உயர்ந்த ஸ்தலத்திலே தன் கல்லறையை வெட்டி, கன்மலையிலே தனக்கு வாசஸ்தலத்தைத் தோண்டுகிறவனைப் போல, நீ உனக்கு இங்கே கல்லறையை வெட்டும்படிக்கு, உனக்கு இங்கே என்ன இருக்கிறது? உனக்கு இங்கே யார் இருக்கிறார்கள்?

22 அதிகாரம்

ஏசா 22:17 இதோ, பெலவான் ஒருவனைத் துரத்துகிறவண்ணமாகக் கர்த்தர் உன்னைத்துரத்திவிட்டு, நிச்சயமாய் உன்னை மூடிப்போடுவார்.

ஏசா 22:18 அவர் உன்னை உண்டையைப் போல அகலமும் விசாலமுமான தேசத்திலே சுழற்றி எறிந்துவிடுவார்; அங்கே நீ சாவாய்; அங்கே உன் மகிமையின் இரதங்கள் உன் ஆண்டவனுடைய வீட்டுக்கு இகழ்ச்சியாக இருக்கும்.

ஏசா 22:19 உன்னை உன் நிலையை விட்டுத் துரத்திவிடுவேன்; உன் ஸ்தானத்திலிருந்து நீ பிடுங்கிப்போடப் படுவாய்.

தீர்க்கதரிசன எண் - 27

"சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் உரைத்ததாவது........" (ஏசா 22:15-25) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நீ......செப்னா என்பவனிடத்தில் போய்ச் சொல்ல வேண்டியது என்னவென்றால்,...... இதோ, பெலவான் ஒருவனைத் துரத்துகிற வண்ணமாகக் கர்த்தர் உன்னைத் துரத்திவிட்டு, நிச்சயமாய் உன்னை மூடிப்போடுவார். (ஏசா 22:15-17)
2. அவர் உன்னை உண்டையைப் போல அகலமும் விசாலமுமான தேசத்திலே சுழற்றி எறிந்துவிடுவார்; அங்கே நீ சாவாய். (ஏசா 22:18)
3. அங்கே உன் மகிமையின் இரதங்கள் உன் ஆண்டவனுடைய வீட்டுக்கு இகழ்ச்சியாக இருக்கும்.
4. உன்னை உன் நிலையை விட்டுத் துரத்தி விடுவேன்; உன் ஸ்தானத்திலிருந்து நீ பிடுங்கிப் போடப்படுவாய். (ஏசா 22:19).
5. எலியாக்கீம் என்னும் என் ஊழியக்காரனை நான் அழைத்து; உன் வஸ்திரத்தை அவனுக்குத் தரித்து, உன் கச்சையால் அவனை இடைக்கட்டி, உன் அதிகாரத்தை அவன் கையிலே கொடுப்பேன். (ஏசா 22:20-21).
6. தாவீதுடைய வீட்டின் திறவுகோலை அவன் தோளின்மேல் வைப்பேன் (ஏசா 22:22).
7. அவனை உறுதியான இடத்திலே ஆணியாகக் கடாவுவேன்; அவன் தன் தகப்பன் வீட்டுக்கு மகிமையான சிங்காசனமாக இருப்பான். (ஏசா 22:23)
8. அதின்மேல் அவன் தகப்பன் வம்சத்தாராகிய புத்திரர் பௌத்திரருடைய மகிமை அனைத்தையும், சிறிதும் பெரிதுமான சகல பானபாத்திரங்களையும் தூக்கி வைப்பார்கள். (ஏசா 22:24)
9. உறுதியான இடத்தில் கடவாப்பட்டிருந்த ஆணியாகிய செப்னா அந்நாளிலே பிடுங்கப்பட்டு, முறிந்துவிழும் (ஏசா 22:25).
10. செப்னாவின் பொறுப்பு அகற்றப்பட்டு அது எலியாக்கீமிற்குக் கொடுக்கப்படும். (ஏசா 22:25)

"செப்னா" (Shebna) - இந்தப் பெயருக்கு "வாலிபம்" "youthfulness" என்று பொருள்.

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "செப்னா"க்கள்

1. எலியாக்கீமிற்கு முன்பு பொக்கிஷதாரராக இருந்தவன். (ஏசா 22:15-25)
2. எலியாக்கீமோடு ஊழியம் செய்த சம்பிரதி. (ஏசா 36:3,11,22; ஏசா 37:2; 2இராஜா 18:18,26,37; 2இராஜா 19:2).

22 அதிகாரம்

"உயர்ந்த ஸ்தலத்திலே தன் கல்லறையை வெட்டி" - செப்னா தன்னுடைய கல்லறையை உயர்ந்த ஸ்தலத்திலே வெட்டியிருக்கிறான். ஆனால் அவன் அங்கு அடக்கம் பண்ணப்படமாட்டான். அவன் சிறையிருப்புக்குப் போவான். அந்நிய தேசத்தில் அநாதையாகச் செத்துப் போவான். (ஏசா 22:16-19)

"உன்னை மூடிப்போடுவார்" - செப்னா தன்னை உயர்த்தினான். உயர்ந்த ஸ்தலத்தில் தன் கல்லறையை வெட்டினான். சகல ஐசுவரியங்களோடும் தான் அடக்கம் பண்ணப்பட வேண்டுமென்று ஆயத்தமாக இருந்தான். ஆனால் கர்த்தரோ அவனைச் சிறையிருப்புக்கு அனுப்பிவிட்டார். செப்னாவின் ஐசுவரியமும், அகந்தையும், ஆணவமும், பெருமையும் ஒழிந்துபோயிற்று. அந்நிய தேசத்தில் மிகவும் தாழ்மையான ஸ்தானத்தில் இருந்தான். சாதாரண மனுஷனைப்போல செப்னா செத்துப் போனான். (எஸ் 7:8).

(7) எலியாக்கீம் அந்த வேலைக்கு உயர்த்தப்பட்டான்

ஏசா 22:20 அந்நாளிலே இல்க்கியாவின் குமாரனாகிய எலியாக்கீம் என்னும் என் ஊழியக்காரனை நான் அழைத்து;

ஏசா 22:21 உன் வஸ்திரத்தை அவனுக்குத் தரித்து, உன் கச்சையால் அவனை இடைக்கட்டி, உன் அதிகாரத்தை அவன் கையிலே கொடுப்பேன்; அவன் எருசலேமின் குடிகளுக்கும், யூதாவின் வம்சத்துக்கும் தகப்பனாயிருப்பான்.

ஏசா 22:22 தாவீதுடைய வீட்டின் திறவுகோலை அவன் தோளின் மேல் வைப்பேன்; ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்கு அவன் திறப்பான், ஒருவரும் திறக்கக் கூடாதபடிக்கு அவன் பூட்டுவான்.

ஏசா 22:23 அவனை உறுதியான இடத்திலே ஆணியாகக் கடாவுவேன்; அவன் தன் தகப்பன் வீட்டுக்கு மகிமையான சிங்காசனமாக இருப்பான்.

ஏசா 22:24 அதின்மேல் அவன் தகப்பன் வம்சத்தாராகிய புத்திரர் பௌத்திரருடைய மகிமை அனைத்தையும், சிறிதும் பெரிதுமான சகல பானபாத்திரங்களையும் தூக்கிவைப்பார்கள்.

எலியாக்கீமின் உயர்வு

1. நான் அவனை அழைப்பேன். (ஏசா 22:20)
2. அவனுக்கு வஸ்திரத்தைத் தரிப்பிப்பேன். (ஏசா 22:21).
3. அவன் கையில் அதிகாரத்தைக் கொடுப்பேன்.
4. கச்சையால் அவனை இடைகட்டுவேன்.
5. அவன் எருசலேமின் குடிகளுக்கும், யூதாவின் வம்சத்துக்கும் தகப்பனாயிருப்பான்.
6. தாவீதுடைய வீட்டின் திறவுகோலை அவன் தோளின்மேல் வைப்பேன் (ஏசா 22:22).
7. ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்கு அவன் திறப்பான், ஒருவரும் திறக்கக் கூடாதபடிக்கு அவன் பூட்டுவான்.
8. அவனை உறுதியான இடத்திலே ஆணியாகக் கடாவுவேன் (ஏசா 22:23).
9. அவன் தன் தகப்பன் வீட்டுக்கு மகிமையான சிங்காசனமாக இருப்பான்.
10. அவன் தகப்பன் வம்சத்தாருடைய மகிமை எலியாக்கீமிற்கு வந்து சேரும். (ஏசா 22:24)

"எலியாக்கீம்" (Eliakim) - இந்தப் பெயருக்கு "கர்த்தர் ஸ்தாபிக்கிறார்" "God Establishes" என்று பொருள்.

ஏசாயா – தொகுப்புரை

22 அதிகாரம்

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "எலியாக்கீம்"கள்

1. இல்க்கியாவின் குமாரன் (ஏசா 22:20; ஏசா 36:3,11,22; 2இராஜா 18:18,26,37; 2இராஜா 19:2)
2. யூதாவின் ராஜா (2இராஜா 23:34; 2நாளா 36:4)
3. சிறையிருப்புக்குத் திரும்பி வந்த ஆசாரியன் (நெகே 12:41)
4. இயேசு கிறிஸ்துவின் வம்சத்தில் வருகிறவன். (மத் 1:13; லூக்கா 3:30)

"உன் அதிகாரத்தை அவன் கையிலே கொடுப்பேன்" - செப்னாவின் பொக்கிஷத்தாரர் பொறுப்பு எலியாக்கீமிற்குக் கொடுக்கப்படுகிறது. (ஏசா 22:15,21).

"தாவீதுடைய வீட்டின் திறவுகோலை அவன் தோளின்மேல் வைப்பேன்" - திறவுகோல் என்பது அதிகாரம், சம்பத்து, நம்பிக்கை ஆகியவற்றின் அடையாளம். (மத் 16:19; வெளி 1:18; வெளி 3:7; வெளி 9:1; வெளி 20:1)

"அவனை உறுதியான இடத்திலே ஆணியாகக் கடாவுவேன்" - இந்த ஆணி தற்காலிகமாகக் கடாவப்படவில்லை. நிரந்தரமாக இருக்கும். நிரந்தரமாகக் கடாவப்பட்ட ஆணிகளில் மிகவும் முக்கியமான பொருட்களை மாட்டித் தொங்கவிடுவார்கள். அதுபோல எலியாக்கீமிற்கு மிகவும் முக்கியமான பொறுப்புக்கள் கொடுக்கப்படும். (ஏசா 22:23-24; எஸ்றா 9:8).

(8) செப்னாவின் பாதுகாப்பு உடைந்தது

ஏசா 22:25 உறுதியான இடத்தில் கடவாப்பட்டிருந்த ஆணி அந்நாளிலே பிடுங்கப்பட்டு, முறிந்துவிழும்; அப்பொழுது அதின்மேல் தொங்கின பாரம் அறுந்து விழும் என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார்; கர்த்தரே இதை உரைக்கிறார் என்று சொல் என்றார்.

"உறுதியான இடத்தில் கடவாப்பட்டிருந்த ஆணி அந்நாளிலே பிடுங்கப்பட்டு, முறிந்துவிழும்" - செப்னாவின் அதிகாரம் பறிக்கப்படுவதை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. (ஏசா 22:15-19) அதே சமயத்தில் செப்னாவிற்குப் பதிலாக எலியாக்கீம் அவனுடைய ஸ்தானத்திற்கு உயர்த்தப்படுகிறான். (ஏசா 22:20-24)

23 அதிகாரம்

12. தீருவின் பாரம் - (23:1-18; எரே 47:4; எசே 27:1-28:24; ஆமோ 1:9)

(1) அலறுங்கள் - மொத்த அழிவு

ஏசா 23:1 தீருவின் பாரம். தர்ஷீஸ் கப்பல்களே, அலறுங்கள்; அது வீடு இல்லாதபடிக்கும், அதில் வருவார் இல்லாத படிக்கும் பாழாக்கப்பட்டது; இந்தச் செய்தி கித்தீம் தேசத்திலிருந்து அவர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

ஏசா 23:2 தீவுக்குடிகளே, மவுனமாயிருங்கள்; சீதோனின் வர்த்தகர் சமுத்திரத்திலே யாத்திரை பண்ணி உன்னை நிரப்பினார்கள்.

ஏசா 23:3 சீகோர் நதியின் மிகுந்த நீர்ப்பாய்ச்சல்களால் விளையும் பயிர்வகைகளும், ஆற்றங்கரையின் அறுப்பும் அதின் வருமானமாயிருந்தது; அது ஜாதிகளின் சந்தையாயிருந்தது.

ஏசா 23:4 சீதோனே, வெட்கப்படு; நான் இனிக் கர்ப்ப வேதனைப்படுகிறதும் இல்லை; பெறுகிறதும் இல்லை; இளைஞரை வளர்க்கிறதும் இல்லை; கன்னிகைகளை ஆதரிக்கிறதும் இல்லை என்று சமுத்திரக் கோட்டையான கடல்துறை சொல்லுகிறது.

ஏசா 23:5 எகிப்தின் செய்தி கேட்கப் பட்டதினால் நோய் உண்டானது போல, தீருவின் செய்தி கேட்கப்படுவதினாலும் நோய் உண்டாகும்.

தீர்க்கதரிசன எண் - 28

"தீருவின் பாரம்......" (ஏசா 23:1-18) ஏசா 23:1-17 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. ஏசா 23:18 ஆவது வசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. தர்ஷீஸ் கப்பல்களே, அலறுங்கள்; அது வீடு இல்லாதபடிக்கு பாழாக்கப்பட்டது (ஏசா 23:1).
2. அதில் வருவார் இல்லாதபடிக்கு பாழாக்கப்பட்டது.
3. இந்தச் செய்தி கித்தீம் தேசத்திலிருந்து அவர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.
4. கித்தீமின் வீழ்ச்சிக்காக சீதோன் வெட்கப்பட வேண்டும். (ஏசா 23:4).
5. தீருவின் வீழ்ச்சி எகிப்தில் துக்கிக்கப்படும். (ஏசா 23:4-5).
6. நீங்கள் தர்ஷீஸ் மட்டும் புறப்பட்டுப்போய் அலறுங்கள். (ஏசா 23:6).
7. பரதேசம்போய்ச் சஞ்சரிக்கிறதற்கு அவள் கால்களே அவளைத் தூரமாய்க் கொண்டுபோம். (ஏசா 23:7).
8. தீருவினுடைய சர்வ சிங்காரத்தின் மேன்மை குலையும். (ஏசா 23:9).
9. பூமியின் கனவான்கள் கன ஈனப்படுத்தப்படுவார்கள்.
10. தீருவின் பெலமெல்லாம் ஒழிந்துபோகும். (ஏசா 23:10).
11. கானானின் அரண்களை அழிக்க அவர் அதற்கு விரோதமாய்க் கட்டளை கொடுப்பார். (ஏசா 23:11).
12. ஒடுங்குண்ட கன்னியாகிய சீதோன் குமாரத்தியே, இனிக் களிகூர்ந்து கொண்டிராய் (ஏசா 23:12).
13. தீரு ஒடுக்கப்படும்.
14. தீருவிலிருந்து ஓடி வருகிறவர்கள் கித்தீமில் இளைப்பாறுதல் அடைய மாட்டார்கள்.
15. தீருவின் நியாயத்தீர்ப்பு கல்தேயரிடமிருந்து வரும். (ஏசா 23:13).

23 அதிகாரம்

16. தீருவின் அரண் பாழாக்கப்படும். (ஏசா 23:14).

17. தீரு எழுபது வருஷம் மறைக்கப்பட்டிருக்கும் (ஏசா 23:15).

18. எழுபது வருஷங்களின் முடிவிலே தீருவுக்குச் சம்பவிப்பது வேசியின் பாடலுக்குச் சமானமாயிருக்கும். (ஏசா 23:15).

19. தீருவை அதன் மகிமையோடு நினைப்பதற்கு ஒருவரும் இருக்க மாட்டார்கள். (ஏசா 23:16).

20. எழுபது வருஷங்களின் முடிவிலே கர்த்தர் வந்து தீருவைச் சந்திப்பார் (ஏசா 23:17).

21. தீரு பூமியிலுள்ள சகல ராஜ்யங்களோடும் வேசித்தனம் பண்ணும்.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. அதின் வியாபாரமும், அதின் பணையமும் கர்த்தருக்குப் பரிசுத்தமாக்கப்படும் (ஏசா 23:18).
2. அது பொக்கிஷமாய்ச் சேர்க்கப்படுவதும் இல்லை; பூட்டி வைக்கப்படுவதும் இல்லை; கர்த்தருடைய சமுகத்தில் வாசமாயிருக்கிறவர்கள் திருப்தியாகச் சாப்பிடவும் நல்ல வஸ்திரங்களைத் தரிக்கவும் அதின் வியாபாரம் அவர்களைச் சேரும்.

"தர்ஷீஸ்" (Tarshish) - (ஏசா 2:16).

"பாழாக்கப்பட்டது" - நேபுகாத்நேச்சார் தீருவை 13 வருஷங்களுக்கு முற்றிக்கை இட்டபின்பு அதை முழுவதுமாக அழித்துப் போடுவான்.

"கித்தீம்" (Chittim) - சீப்புரு தீவு. (எண் 24:24).

"சீதோனின் வர்த்தகர்" - தீரு சீதோனின் குடியிருப்பாக இருக்கும். (ஏசா 23:2,4).

"நிரப்பினார்கள்" - ஐசுவரியங்களினாலும், வர்த்தகப் பொருட்களினாலும் நிரப்பப்படும். (எசே 27:8-23).

"சீகோர்" - நைல் நதியின் மறுபெயர். (யோசு 13:3; எரே 3:18).

"மிகுந்த நீர்ப்பாய்ச்சல்கள்" - நைல் நதியின் பெருவெள்ளம். எகிப்தில் விளையும் பொருட்கள் தீருவின் சந்தையில் விற்கப்படும்.

"சீதோனே, வெட்கப்படு" - (யோசு 11:8).

சீதோன் கூறும் வார்த்தைகள்

1. நான் இனிக் கர்ப்ப வேதனைப்படுகிறதும் இல்லை.
2. நான் இனிப் பெறுகிறதும் இல்லை.
3. நான் இனி இளைஞரை வளர்க்கிறதும் இல்லை.
4. நான் இனிக் கன்னிகைகளை ஆதரிக்கிறதும் இல்லை.

தீருவை ஸ்தாபிப்பதற்குச் சீதோன் உதவி புரிந்தது. ஆகையினால் சீதோன் தீருவின் தாயாகக் கருதப்படுகிறது. தீரு அழியும் போது சீதோன் பலவீனமாக இருக்கும். ஆகையினால் சீதோன் மறுபடியும் தன்னால் ஒரு தீருவை உண்டாக்க முடியாது என்று கூறிவிடும்.

(2) அலறுங்கள் - பாழாக்குகிறவன்

ஏசா 23:6 கரைத்துறைக் குடிகளே, நீங்கள் தர்ஷீஸ் மட்டும் புறப்பட்டுப்போய் அலறுங்கள்.

ஏசா 23:7 பூர்வநாட்கள்முதல் நிலைபெற்று களிகூர்ந்திருந்த உங்கள் பட்டணம் இதுதானா? பரதேசம்போய்ச் சஞ்சரிக்கிறதற்கு அவள் கால்களே அவளைத் தூரமாய்க் கொண்டுபோம்.

ஏசா 23:8 கிரீடம் தரிப்பிக்கும் தீருவுக்கு விரோதமாக இதை யோசித்துத் தீர்மானித்தவர் யார்? அதின் வர்த்தகர் பிரபுக்களும், அதின் வியாபாரிகள் பூமியின் கனவான்களுமாமே.

ஏசாயா - தொகுப்புரை

23 அதிகாரம்

ஏசா 23:9 சர்வ சிங்காரத்தின் மேன்மையைக் குலைக்கவும், பூமியின் கனவான்கள் யாவரையும் கனஈனப்படுத்தவும், சேனைகளின் கர்த்தரே இதை யோசித்துத் தீர்மானித்தார்.

ஏசா 23:10 தர்ஷீஸின் குமாரத்தியே, நதியைப்போல நீ உன் தேசத்தில் பாய்ந்துபோ, உனக்கு அணையில்லை.

ஏசா 23:11 கர்த்தர் தமது கையைச் சமுத்திரத்தின் மேல் நீட்டி, ராஜ்யங்களைக் குலுங்கப்பண்ணினார்; கானானின் அரண்களை அழிக்க அவர் அதற்கு விரோதமாய்க் கட்டளைகொடுத்து:

ஏசா 23:12 ஒடுங்குண்ட கன்னியாகிய சீதோன் குமாரத்தியே, இனிக் களிகூர்ந்துகொண்டிராய்; எழுந்து கித்தீமுக்குப் புறப்பட்டுப்போ, அங்கும் உனக்கு இளைப்பாறுதல் இல்லையென்றார்.

ஏசா 23:13 கல்தேயருடைய தேசத்தைப் பார்; அந்த ஜனம் முன்னிருந்ததில்லை; அசீரியன் வனாந்தரத்தாருக்காக அதை அஸ்திபாரப்படுத்தினான்; அவர்கள் அதின் கோபுரங்களை உண்டாக்கி, அதின் அரமனைகளைக் கட்டினார்கள்; அவர் அதை அழிவுக்கென்று நியமித்தார்.

"தர்ஷீஸ்மட்டும் புறப்பட்டுப்போய்" - நேபுகாத்நேச்சார் தீருவைப் பிடிக்க வந்துவிட்டான் என்னும் செய்தியைக் கேள்விப்பட்டவுடன் தீருவின் ஜனங்களில் சிலர் தர்ஷீஸ்மட்டும் புறப்பட்டுப் போய் விடுவார்கள். தங்களோடு தங்களுடைய ஐசுவரியங்களையும் எடுத்துச் சென்றுவிடுவார்கள். நேபுகாத்நேச்சார் தீருவின் பட்டணத்தைப் பிடிக்கும் போது அங்கு கொள்ளையிடுவதற்கு ஐசுவரியம் எதுவுமிராது.

"கிரீடம் தரிப்பிக்கும் தீரு" - தீரு பல குடியிருப்புக்களை ஸ்தாபித்திருக்கிறது. அவற்றின் விவரம் வருமாறு:

1. ஸ்பானியா தேசத்தில் தர்ஷீஸ்

2. சீப்புருவில் கித்தீம்

3. ஆப்பிரிக்காவில் கார்தேஜ்

"கல்தேயருடைய தேசத்தைப் பார்" - தீருவின் அழிவுக்கு ஆதாரமாகக் கல்தேயர் அல்லது பாபிலோனியர் இருந்திருக்கிறார்கள். இவர்கள் மிகவும் கொடூரமான ஜனங்கள். இதன் பின்பு பாபிலோனியர் அசீரியாவின் ஒரு பகுதியாக ஆனார்கள். அசீரியரின் ஆட்சியின்கீழ் தீரு பல வருஷங்கள் இருந்தது. அதன் பின்பு விடுதலை பெற்றது. பாபிலோனும் கல்தேயருடைய தேசமும் வேதாகமத்தில் ஒரே தேசத்தைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (ஏசா 48:14,20; எரே 50:1; எரே 51:24; எசே 12:13).

(3) அலறுங்கள் - அழிவின் காலம்

ஏசா 23:14 தர்ஷீஸ் கப்பல்களே, அலறுங்கள்; உங்கள் அரண் பாழாக்கப்பட்டது.

ஏசா 23:15 அக்காலத்திலே தீரு, ஒரு ராஜாவுடைய நாட்களின்படி, எழுபது வருஷம் மறைக்கப்பட்டிருக்கும்; எழுபது வருஷங்களின் முடிவிலே தீருவுக்குச் சம்பவிப்பது வேசியின் பாடலுக்குச் சமானமாயிருக்கும்.

ஏசா 23:16 மறக்கப்பட்ட வேசியே, நீ வீணையை எடுத்து நகரத்தைச் சுற்றித்திரி; நீ நினைக்கப்படும்படி அதை இனிதாக வாசித்துப் பல பாட்டுகளைப் பாடு.

ஏசா 23:17 எழுபது வருஷங்களின் முடிவிலே கர்த்தர் வந்து தீருவைச் சந்திப்பார்; அப்பொழுது அது தன் பணையத்துக்கு திரும்பிவந்து, பூமியிலுள்ள சகல ராஜ்யங்களோடும் வேசித்தனம் பண்ணும்.

ஏசா 23:18 அதின் வியாபாரமும், அதின் பணையமும் கர்த்தருக்குப் பரிசுத்தமாக்கப்படும்; அது பொக்கிஷமாய்ச் சேர்க்கப்படுவதும் இல்லை; பூட்டி வைக்கப்படுவதும் இல்லை; கர்த்தருடைய சமுகத்தில் வாசமாயிருக்கிறவர்கள் திருப்தியாகச் சாப்பிடவும் நல்ல வஸ்திரங்களைத் தரிக்கவும் அதின் வியாபாரம் அவர்களைச் சேரும்.

23 அதிகாரம்

"எழுபது வருஷம்" - யூதா தேசம் எழுபது வருஷம் சிறையிருப்பில் இருக்கும். (எரே 25:9-14) பாபிலோனின் ஆட்சிக் காலமும் எழுபது வருஷம் இருக்கும். (ஏசா 23:15-17; தானி 7:17; தானி 8:20; தானி 9:2) நேபுகாத்நேச்சார் தன்னுடைய ராஜ்யபாரத்தின் முதலாம் வருஷத்தில் தீருவின்மீது முற்றிக்கை போட்டான். இதிலிருந்து தரியுவும், கோரேசும் பாபிலோனைக் கைப்பற்றுவதற்கு எழுபது வருஷங்களாயிற்று. அக்காலத்தில் பாபிலோனால் சிறைப்பிடிக்கப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டார்கள். எரேமியா இந்தத் தேசங்களைப் பற்றிக் குறிப்பிடும்போது இவர்கள் பாபிலோனின் ராஜாவைச் சேவித்ததாகக் கூறுகிறார். நேபுகாத்நேச்சாரின் காலத்திலும், பெல்ஷாத்சார் ராஜாவின் காலத்திலும் பாபிலோனால் சிறைப்பிடிக்கப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டார்கள். (எரே 27:7; தானி 5).

"ஒரு ராஜா" - தானி 7:17 ஆவது வசனத்தின்படி இது ஒரு ராஜ்யத்தை அல்லது ஒரு ராஜவம்சத்தைக் குறிக்கும்.

"எழுபது வருஷங்களின் முடிவிலே தீருவுக்குச் சம்பவிப்பது" - தீரு மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படும். ஒரு வேசியைப் போல பாடலைப் பாடும். (ஏசா 23:15-17).

"எழுபது வருஷங்களின் முடிவிலே" - தீருவை எழுபது வருஷங்களுக்குப் பின்பு கர்த்தர் மறுபடியும் கூட்டிச் சேர்ப்பார். இதற்கு முன்பு தன்னிடமிருந்த ஐசுவரியங்களைத் தீரு மறுபடியும் பெற்றுக் கொள்ளும். பல இடங்களுக்கும் வணிகம் செய்வதினால் தீருவின் செல்வம் பெருகும். அழிந்துபோன பட்டணத்தை இவர்கள் திரும்பக் கட்டுவார்கள். நேபுகாத்நேச்சார் தீருவின் பட்டணத்தை முதன் முதலாக அழித்தான். அதற்கு 255 வருஷங்களுக்குப் பின்பு மகா அலெக்ஸாண்டார் புதிய தீருவை அழித்துப்போட்டான்.

"அதின் வியாபாரமும், அதின் பணையமும் கர்த்தருக்குப் பரிசுத்தமாக்கப்படும்" - ஆயிரம் வருஷ அரசாட்சியிலும், புதிய பூமியிலும் தீரு அதிகமாக ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும். தீருவின் வியாபாரம் கர்த்தருக்குப் பரிசுத்தமாக இருக்கும். கர்த்தருடைய சமுகத்தில் வாசமாயிருக்கிறவர்கள் திருப்தியாகச் சாப்பிடவும் நல்ல வஸ்திரங்களைத் தரிக்கவும் தீருவின் ஐசுவரியம் பயன்படும். அந்நாளிலே குதிரைகளின் மணிகளிலே "கர்த்தருக்குப் பரிசுத்தம்" என்னும் விலாசம் எழுதியிருக்கும். (சக 14:1-5,9,16-21).

24 அதிகாரம்

V. **உபத்திரவமும் ஆயிர வருஷ அரசாட்சியும்** - *(24:1-27:13;2:1; 4:1;65:18)*

1. உபத்திரவம் - *(24:1-22)*

(1) தேசம் - நான்கு அம்ச அழிவு

ஏசா 24:1 இதோ, கர்த்தர் தேசத்தை வெறுமையும் பாழுமாக்கி, அதைக் கவிழ்த்து, அதின் குடிகளைச் சிதறடிப்பார்.

தீர்க்கதரிசன எண் - 29

"இதோ, கர்த்தர் தேசத்தை வெறுமையும் பாழுமாக்கி......" (ஏசா 24:1-27:13) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

ஏசா 24-27 ஆகிய அதிகாரங்கள் உபத்திரவக்காலத்திலும், ஆயிரம் வருஷத்து அரசாட்சியிலும் நடைபெறப்போகும் நிகழ்ச்சிகளை முன்னறிவிக்கின்றன. இதைப் போன்ற செய்தி சக 9:1-14:21 ஆகிய வேதப்பகுதியில் மட்டுமே காணப்படுகிறது. இது பயன்படுத்தப்பட்டிருக்கும் மொழிநடையும் அடையாள ரீதியில் உள்ளது.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. கர்த்தர் தேசத்தை (வாக்குத்தத்த தேசத்தை) வெறுமையும் பாழுமாக்கி, அதைக் கவிழ்த்து, அதின் குடிகளைச் சிதறடிப்பார். (ஏசா 24:1,3).
2. எல்லா ஜனங்களும் பாடுகளை அனுபவிப்பார்கள். (ஏசா 24:2).
3. யூதா ஜனங்கள் தண்டிக்கப்படுவார்கள். (ஏசா 24:4; ஏசா 26:1).
4. தேசம் தன் குடிகளின் மூலமாய் தீட்டுப்படும். (ஏசா 24:5).
5. சாபம் தேசத்தைப் பட்சிக்கும். அதின் குடிகள் தண்டிக்கப்படும். தேசத்தார் தகிக்கப்படுவார்கள், சிலர்மாத்திரம் மீந்திருப்பார்கள். (ஏசா 24:6).
6. திராட்சரசம் துக்கங்கொண்டாடும், திராட்சச்செடி வதங்கும் (ஏசா 24:7).
7. மனக்களிப்பாயிருந்தவர்கள் எல்லாரும் பெருமூச்சுவிடுவார்கள்.
8. சந்தோஷம் ஓயும். (ஏசா 24:8).
9. பாடலோடே திராட்சரசம் குடியார்கள் (ஏசா 24:9).
10. மதுபானம் அதைக் குடிக்கிறவர்களுக்குக் கசக்கும்.
11. வெறுமையாயப்போன நகரம் தகர்ந்து, ஒருவரும் உள்ளே பிரவேசிக்கக் கூடாதபடி, வீடுகளெல்லாம் அடைபட்டுக்கிடக்கும். (ஏசா 24:10).
12. தேசத்தின் மகிழ்ச்சி அற்றுப்போம் (ஏசா 24:11).
13. நகரத்தில் மீதியாயிருப்பது அழிவே (ஏசா 24:12).
14. வாசல்கள் இடிக்கப்பட்டுப் பாழாய்க் கிடக்கும்.
15. தேசத்துக்குள்ளும் இந்த ஜனங்களின் நடுவிலும் கொஞ்சம் மீந்திருக்கும். (ஏசா 24:13).
16. கர்த்தருடைய மகத்துவத்தினிமித்தம் சமுத்திரத்தினின்று ஆர்ப்பரிப்பார்கள். (ஏசா 24:14-15).
17. திகிலின் சத்தத்திற்கு விலகி ஓடுகிறவன் படுகுழியில் விழுவான். (ஏசா 24:16-18).
18. படுகுழியிலிருந்து ஏறுகிறவன் கண்ணியில் அகப்படுவான் (ஏசா 24:17-18).
19. உயர இருக்கும் மதகுகள் திறவுண்டு, பூமியின் அஸ்திபாரங்கள் குலுங்கும். (ஏசா 24:18-20).
20. அதின் பாதகம் அதின்மேல் பாரமாயிருக்கும். (ஏசா 24:20).

24 அதிகாரம்

21. அர்மெகதோன் யுத்தத்தில் கர்த்தர் சாத்தானையும், அவன் தூதரையும் தண்டிப்பார். (ஏசா 24:21).

22. அவர்கள் கெபியில் ஏகமாய்க் கட்டுண்டவர்களாகச் சேர்ந்து, ஆயிரம் வருஷத்துக்குக் காவலில் அடைக்கப்படுவார்கள். (ஏசா 24:22; வெளி 20:1-7)

23. ஆயிரம் வருஷம் சென்றபின் விசாரிக்கப்படுவார்கள். (ஏசா 24:22; வெளி 20:7-10).

24. அப்பொழுது சேனைகளின் கர்த்தர் சீயோன் மலையிலும் எருசலேமிலும் ஆளுகைசெய்வதால், சந்திரன் கலங்கும், சூரியன் நாணமடையும்; அவருடைய மூப்பர்களுக்கு முன்பாக மகிமை உண்டாயிருக்கும். (ஏசா 24:23).

25. அர்மெகதோன் யுத்தத்திற்குப் பின்பு யூதாவின் ஜனங்கள் கர்த்தரைத் துதிப்பார்கள். புறஜாதி ஜனங்கள் கர்த்தருக்குப் பயப்படுவார்கள். (ஏசா 25:1-4).

26. அந்நியரின் மும்முரத்தைத் தணியப் பண்ணுவார். பெலவந்தரின் ஆரவாரம் தணியும். (ஏசா 25:5).

27. சேனைகளின் கர்த்தர் சீயோன் மலையிலே சகல ஜனங்களுக்கும் ஒருவிருந்தை ஆயத்தப்படுத்துவார். (ஏசா 25:6; மத் 25:34).

28. கர்த்தர் சகல ஜனங்கள்மேலுமுள்ள முக்காட்டையும், சகல ஜாதிகளையும் மூடியிருக்கிற மூடலையும், சீயோன் மலையிலே அகற்றிப்போடுவார். (ஏசா25:7; ஏசா 24:21-22; எபே 6:12; வெளி 12:7-12; வெளி 20:1-3).

29. அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார் (ஏசா 25:8).

30. எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைப்பார்.

31. தமது ஜனத்தின் நிந்தையை பூமியிலிராதபடிக்கு முற்றிலும் நீக்கிவிடுவார்.

32. இரட்சிப்பினால் களிகூர்ந்து மகிழுவோம் என்று யூதா சொல்வார்கள். (ஏசா 25:9).

33. கர்த்தருடைய கரம் சீயோன் மலையிலே தங்கும் (ஏசா 25:7,10; ஏசா 24:23).

34. மோவாப் அவர்கீழ் மிதிக்கப்பட்டுப்போம். (ஏசா 25:10).

35. அவர் தமது கைகளை அவர்கள் நடுவிலே விரித்து, அவர்கள் பெருமையையும், அவர்கள் கைகளின் சதிசர்ப்பனைகளையும் தாழ்த்திவிடுவார். (ஏசா 25:11).

36. அவர் யூதாவின் மதில்களுடைய உயர்ந்த அரணைக்கீழே தள்ளித் தாழ்த்தித் தரையிலே தூளாக அழிப்பார். (ஏசா 25:12).

37. அக்காலத்திலே யூதாதேசத்தில் கர்த்தருக்குப் பாட்டு பாடப்படும் (ஏசா 26:1-21).

38. செத்தவர்கள், ஜீவிக்கமாட்டார்கள்; மாண்ட ராட்சதர் திரும்ப எழுந்திரார்கள் (ஏசா 26:14).

39. இஸ்ரவேலர்கள் நெருக்கத்தில் உம்மைத் தேடுவார்கள் (ஏசா 26:16-18).

40. மரித்த உம்முடையவர்கள் பிரேதமான என்னுடையவர்களோடே கூட எழுந்திருப்பார்கள்; (ஏசா 26:19).

41. உபத்திரவக்காலத்தில் அந்திக் கிறிஸ்துவிடமிருந்து யூதா ஜனங்கள் தப்பித்துத் தங்களுடைய பாதுகாப்பிற்காக வனாந்தரங்களில் போய் ஒழிந்து கொள்வார்கள். (ஏசா 26:20; ஏசா 16:1-5; சங் 60:8; எசே 20:33-44; தானி 11:40-45; மத் 24:15-22; வெளி 12:6,14).

24 அதிகாரம்

42. பூமியினுடைய குடிகளின் அக்கிரமத்தினிமித்தம் அவர்களை விசாரிக்கும்படி கர்த்தர் தம்முடைய ஸ்தானத்திலிருந்து புறப்பட்டுவருவார் (ஏசா 26:21; ஏசா 63:1-8; சக 14:1-5; 2தெச 1:7-10; யூதா 1:14-15; வெளி 19:11-21).

43. அக்காலத்தில் கர்த்தர் சாத்தானை ஜெயித்து அவனை நரகத்தில் தள்ளி தண்டிப்பார். (ஏசா 27:1; ஏசா 24:21-22; ஏசா 25:7; வெளி 20:1-10).

44. அக்காலத்தில் யூதா கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் பாட்டு பாடுவார்கள். (ஏசா 27:2-6, ஏசா 5:1-7).

45. யாக்கோபு வேர்பற்றி, இஸ்ரவேல் பூத்துக்காய்த்து உலகத்தைப் பலனால் நிரப்பும் நாட்கள் வரும். (ஏசா 27:6).

46. கர்த்தர் யூதாவின் சத்துருக்களை அழித்ததுபோல யூதாவை அழிக்க மாட்டார். (ஏசா 27:7).

47. யாக்கோபின் அக்கிரமம் நிக்கிரகம் பண்ணப்படும்; (ஏசா 27:8-9).

48. அரணான நகரம் (பாபிலோன்) அவாந்தரையாகும் (ஏசா 27:10).

49. அதின் கொப்புகள் உலரும்போது ஒடிந்துபோம் (ஏசா 27:11).

50. கர்த்தர் யூதாவுக்கு இரங்கி கிருபை செய்வார்.

51. அக்காலத்திலே, கர்த்தர் ஆற்றங்கரையின் விளைவுதொடங்கி எகிப்தின் நதிமட்டும் போரடிப்பார் (ஏசா 27:12-13; ஏசா 11:15-16; ஏசா 19:5-6).

52. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை ஒவ்வொருவராகக் கூட்டிச்சேர்ப்பார். (ஏசா 27:12-13; ஏசா 11:10-14).

பூமி (earth) - אֶרֶץ - eh'-rets - 776

பொது பெயர்ச்சொல் - பூமி, லோகம், தேசம், நிலம், தரை, வெளி, நாடு, சீமை, பூலோகம், மாகாணம், மண் **earth** (ஏசா 24:1,4-6) **land** (ஏசா 24:3,11,13) இந்த வார்த்தை ஏசா 26:1 ஆவது வசனத்தில் யூதா தேசத்தை மட்டும் குறிக்கும்.

யூதாவிற்கு நடைபெறப்போகும் சம்பவங்கள்

1. கர்த்தர்தேசத்தை வெறுமையாக்குவார். (ஏசா 24:1,3; ஏசா 24:13-15; ஏசா 26:1,6,20-21; ஏசா 27:12-13, சக 13:8-9; எரே 51:2; நாகூம் 2:2, ஏசா 24:1)

2. கர்த்தர் தேசத்தைப் பாழுமாக்குவார். (ஏசா 24:1; நாகூம் 2:10; ஏசா 35:1-10; ஏசா 65:20-65).

3. கர்த்தர் தேசத்தைக் கவிழ்த்துப்போடுவார். (ஏசா 24:1; ஏசா 29:16; சங் 146:9; அப் 17:6).

4. கர்த்தர் தேசத்தின் குடிகளைச் சிதறடிப்பார். (ஏசா 24:1; வெளி 12:6,14; ஏசா 24:6,13-14).

5. தேசம் முழுதும் கொள்ளையாகும். (ஏசா 24:3).

6. தேசம் முற்றிலும் வெறுமையாகும். (ஏசா 24:3).

7. தேசம் புலம்பி வாடும். (ஏசா 24:4).

8. பூமி சத்துவமற்று உலர்ந்துபோகும் (ஏசா 24:4).

9. தேசத்து ஜனத்திலே உயர்ந்தவர்கள் தவிப்பார்கள்.

10. தேசம் தன் குடிகளின் மூலமாய் தீட்டுப்படும். (ஏசா 24:5).

11. சாபம் தேசத்தைப் பட்சிக்கும். (ஏசா 24:6).

12. குடிகள் தண்டிக்கப்பட்டார்கள்.

24 அதிகாரம்

13. நகரம் வெறுமையாய்ப்போகும். *(2பேதுரு 3:6-13; வெளி 20:7-10)*

14. ஒருசிலர் புருஷர் மட்டுமே அங்கு மீதியாயிருப்பார்கள்.

15. மனக்களிப்பாயிருந்தவர்கள் எல்லாரும் பெருமூச்சுவிடுவார்கள் *(ஏசா 24:7)*.

16. திராட்சச்செடி வதங்கும்.

17. திராட்சரசம் துக்கங்கொண்டாடும்.

18. மேளங்களின் சந்தோஷம் ஓயும் *(ஏசா 24:8)*.

19. களிகூருகிறவர்களின் சந்தடி ஒழியும்.

20. வீணையின் களிப்பு நின்றுபோம்.

21. பாடலோடே திராட்சரசம் குடியார்கள். *(ஏசா 24:9)*.

22. மதுபானம் அதைக் குடிக்கிறவர்களுக்குக் கசக்கும்.

23. எருசலேம் நகரம் தகர்க்கப்படும். *(ஏசா 24:10)*.

24. வீடுகளெல்லாம் அடைபட்டுக்கிடக்கும்.

25. திராட்சரசத்துக்காக வீதிகளிலே கூக்குரல் உண்டாகும். *(ஏசா 24:11)*.

26. எல்லாச் சந்தோஷமும் மங்கும்.

27. தேசத்தின் மகிழ்ச்சி அற்றுப்போம்.

28. எருசலேம் நகரத்தில் மீதியாயிருப்பது அழிவே; வாசல்கள் இடிக்கப்பட்டுப் பாழாய்க் கிடக்கும். *(ஏசா 24:12)*.

வெறுமையாக்குதல் **(to pour) - בָּקַק - baw-kah' - 1238**

வினைச்சொல் - பலனற்றதாயிரு, சோர்ந்துபோ, வெறுமையாயிரு **(to pour; to depopulate; to spread out)**

பாழாக்குதல் **(destroy) - בָּלַק - baw-lak' - 1110**

வினைச்சொல்-பாழாக்கு **(to make waste; destroy)**

(2) ஜனம் - நியாயத்தீர்ப்பின் பன்னிரெண்டு அம்சங்கள்

ஏசா 24:2 அப்பொழுது, ஜனத்துக்கு எப்படியோ அப்படியே ஆசாரியனுக்கும், வேலைக்காரனுக்கும் எப்படியோ அப்படியே எஜமானுக்கும், வேலைக்காரிக்கு எப்படியோ அப்படியே எஜமானிக்கும், கொண்டவனுக்கு எப்படியோ அப்படியே விற்றவனுக்கும், கடன் கொடுத்தவனுக்கு எப்படியோ அப்படியே கடன் வாங்கினவனுக்கும், வட்டி வாங்கினவனுக்கு எப்படியோ அப்படியே வட்டிகொடுத்தவனுக்கும், எல்லாருக்கும் சரியாக நடக்கும்.

நியாயந்தீர்க்கப்படுகிற ஜனங்கள்

1. ஜனம்
2. ஆசாரியன்
3. வேலைக்காரன்
4. எஜமான்
5. வேலைக்காரி
6. எஜமானி
7. கொண்டவன்
8. விற்றவன்
9. கடன் கொடுத்தவன்
10. கடன்வாங்கினவன்
11. வட்டிவாங்கினவன்
12. வட்டிகொடுத்தவன்

ஏசாயா - தொகுப்புரை

24 அதிகாரம்

(3) தேசம் - இரண்டு அம்ச நியாயத்தீர்ப்பு

ஏசா 24:3 தேசம் முழுதும் கொள்ளையாகி, முற்றிலும் வெறுமையாகும்; இது கர்த்தர் சொன்ன வார்த்தை.

(4) ஜனம் - மூன்று அம்ச நியாயத்தீர்ப்பு

ஏசா 24:4 தேசம் புலம்பி வாடும்; பூமி சத்துவமற்று உலர்ந்துபோகும்; தேசத்து ஜனத்திலே உயர்ந்தவர்கள் தவிப்பார்கள்.

(5) மூன்று அம்ச காரணம் - நியாயத் தீர்ப்பு

ஏசா 24:5 தேசம் தன் குடிகளின் மூலமாய் தீட்டுப்பட்டது; அவர்கள் நியாயப் பிரமாணங்களை மீறி, கட்டளையை மாறுபாடாக்கி, நித்திய உடன்படிக்கையை முறித்தார்கள்.

யூதாவின்மீது நியாயத்தீர்ப்பு வரக்காரணம்

1. அவர்கள் நியாயப் பிரமாணங்களை மீறினார்கள்.
2. கட்டளையை மாறுபாடாக்கினார்கள்.
3. நித்திய உடன்படிக்கையை முறித்தார்கள்.

(6) இருபது அம்ச சாபம்

ஏசா 24:6 இதினிமித்தம் சாபம் தேசத்தைப் பட்சித்தது, அதின் குடிகள் தண்டிக்கப்பட்டார்கள்; தேசத்தார் தகிக்கப்பட்டார்கள், சிலர்மாத்திரம் மீந்திருக்கிறார்கள்.

ஏசா 24:7 திராட்சரசம் துக்கங் கொண்டாடும், திராட்சச்செடி வதங்கும்; மனக்களிப்பாயிருந்தவர்கள் எல்லாரும் பெருமூச்சுவிடுவார்கள்.

ஏசா 24:8 மேளங்களின் சந்தோஷம் ஓயும், களிகூருகிறவர்களின் சந்தடி ஒழியும், வீணையின் களிப்பு நின்றுபோம்.

ஏசா 24:9 பாடலோடே திராட்சரசம் குடியார்கள்; மதுபானம் அதைக் குடிக்கிறவர்களுக்குக் கசக்கும்.

ஏசா 24:10 வெறுமையாய்ப்போன நகரம் தகர்ந்து, ஒருவரும் உள்ளே பிரவேசிக்கக்கூடாதபடி, வீடுகளெல்லாம் அடைபட்டுக்கிடக்கும்.

ஏசா 24:11 திராட்சரசத்துக்காக வீதிகளிலே கூக்குரல் உண்டு; எல்லாச் சந்தோஷமும் மங்கி, தேசத்தின் மகிழ்ச்சி அற்றுப்போம்.

ஏசா 24:12 நகரத்தில் மீதியாயிருப்பது அழிவே; வாசல்கள் இடிக்கப்பட்டுப் பாழாய்க் கிடக்கும்.

(7) மகிழ்ந்து களிகூருதல் - யூதர்களில் மீதியாக இருப்பவர்கள் - (1.9)

ஏசா 24:13 ஒலிவமரத்தை உலுக்கும் போதும், திராட்சப்பழங்களை அறுத்துத் தீரும்போதும், பின்பறிப்புக்குக் கொஞ்சம் மீந்திருப்பதுபோல, தேசத்துக்குள்ளும் இந்த ஜனங்களின் நடுவிலும் கொஞ்சம் மீந்திருக்கும்.

ஏசா 24:14 அவர்கள் சத்தமிட்டுக் கெம்பீரிப்பார்கள்; கர்த்தருடைய மகத்துவத்தினிமித்தம் சமுத்திரத்தினின்று ஆர்ப்பரிப்பார்கள்.

ஏசா 24:15 ஆகையால் கர்த்தரை, வெளுக்குந்திசையிலும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் நாமத்தைச் சமுத்திரத் தீவுகளிலும் மகிமைப்படுத்துங்கள்.

24 அதிகாரம்

"தேசத்துக்குள்ளும் இந்த ஜனங்களின் நடுவிலும் கொஞ்சம் மீந்திருக்கும்" - யூதாவுக்கு இவையெல்லாம் சம்பவிக்கும் போது அந்த ஜனங்களின் நடுவே கொஞ்சம்பேர் மீந்திருப்பார்கள். (ஏசா 24:6,14-15) அவர்களுடைய எண்ணிக்கை மிகவும் கொஞ்சமாக இருக்கும். பின்பறிப்புக்குக் கொஞ்சம் மீந்திருப்பதுபோல கொஞ்சம்பேர் மீந்திருப்பார்கள்.

"அவர்கள் சத்தமிட்டுக் கெம்பீரிப்பார்கள்" - யூதாவில் மீந்திருப்பவர்கள் கர்த்தரிடத்திற்குத் திரும்புவார்கள். அவர்கள் கர்த்தரைத் துதித்துப் பாடுவார்கள். சமுத்திரத்தில்போய் தங்களுக்கு அடைக்கலம் தேடிக் கொள்வார்கள். அங்கிருந்து கர்த்தருடைய மகத்துவத்தைக் குறித்து ஆர்ப்பரிப்பார்கள்.

"கர்த்தரை......மகிமைப்படுத்துங்கள்" - யூதாவில் மீதியாக இருக்கிறவர்களுக்குக் கர்த்தரை மகிமைப்படுத்த வேண்டும் என்னும் கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்களோடு சமுத்திரத்தீவுகளில் உள்ளவர்களும் கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்த வேண்டும்.

(8) புலம்புதல் - இஸ்ரவேலில் மீதியாக இருப்பவர்கள்

ஏசா 24:16 நீதிபரனுக்கு மகிமை என்று பாடும் கீதங்களை பூமியின் கடையாந்தரத்திலிருந்து கேட்கிறோம்; நானோ, இளைத்துப்போனேன், இளைத்துப் போனேன்; எனக்கு ஐயோ! துரோகிகள் துரோகம் பண்ணுகிறார்கள்; துரோகிகள் மிகுதியாய்த் துரோகம் பண்ணுகிறார்கள் என்கிறேன்.

ஏசா 24:17 தேசத்துக் குடிகளே, திகிலும், படுகுழியும், கண்ணியும் உங்களுக்கு நேரிடும்.

ஏசா 24:18 அப்பொழுது, திகிலின் சத்தத்திற்கு விலகி ஓடுகிறவன் படுகுழியில் விழுவான்; படு குழியிலிருந்து ஏறுகிறவன் கண்ணியில் அகப்படுவான்; உயர இருக்கும் மதகுகள் திறவுண்டு, பூமியின் அஸ்திபாரங்கள் குலுங்கும்.

"நீதிபரனுக்கு மகிமை என்று பாடும் கீதங்களை பூமியின் கடையாந்தரத்திலிருந்து கேட்கிறோம்" - இந்த அதிகாரத்தில் இந்த வசனத்தில்தான் முதன் முறையாக "பூமி" என்னும் வார்த்தை பயன்படுத்தப் பட்டிருக்கிறது. ஆகையினால் இது பாலஸ்தீன தேசத்திற்கு மட்டும் என்று வரவேற்கப்படாமல் பூமி முழுவதற்கும் பொதுவாயிற்று என்று பொருள் கூற வேண்டும். (ஏசா 24:1-15).

பாலஸ்தீன தேசத்தில் மீதியாயிருக்கிறவர்களோடு ஏசாயா தன்னையும் சேர்த்துக் கொள்கிறார். தீவுகளிலிருந்து நீதிபரனுக்குப் பாடப்படும் பாட்டுக்களை ஏசாயாவும் கேட்கிறார். அந்தப் பாடலைக் கேட்கும் போது யூதாவின் இளைத்துப்போன நிலைமையைக் குறித்தும், அவர்களுக்குத் துரோகம் பண்ணிய துரோகிகளைக் குறித்தும் ஏசாயா கதறுகிறார். (ஏசா 24:16).

ஏசா 24:1-15 ஆகிய வசனங்களில் யூதா தேசத்தைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. ஏசா 24:16 ஆவது வசனத்தில் பூமியின் கடையாந்தரம் வரையிலும் கூறப்பட்டிருக்கிறது. இதில் பூமியின் அஸ்திபாரங்கள் குலுங்குவது பற்றியும், (ஏசா 24:18), கர்த்தருடைய உன்னதமான சேனை பூமியின் ராஜாக்களை விசாரிப்பது பற்றியும் (ஏசா 24:21-22) கூறப்பட்டிருக்கிறது. ஆகையினால் ஏசா 24:16 ஆவது வசனத்தில் "பூமி" என்னும் வார்த்தைக்கு "உலகம் முழுவதும்" என்று பொருள் கூறவேண்டும்.

ஏசா 24:1-15 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் தேசம் யூதா தேசமாகும். இந்த வசனங்களில் ஆசாரியரைப் பற்றியும் (ஏசா 24:2), யூதருடைய பிரமாணங்கள், கட்டளைகள் ஆகியவை பற்றியும்(ஏசா 24:5), எருசலேம் பட்டணத்தைப் பற்றியும் (ஏசா 24:10-12), யூதாவில் மீதமுள்ளோரைப் பற்றியும் (ஏசா 24:13-15) கூறப்பட்டிருக்கிறது. ஆகையினால் ஏசாயா 24:1-15 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் தேசம் யூதா தேசமாகும்.

24 அதிகாரம்

"துரோகிகள் துரோகம்பண்ணுகிறார்கள்" - துரோகிகள் என்பது புறஜாதி தேசங்களையும், உடன்படிக்கையை மீறும் ஆட்சியாளர்களையும், யூதரோடு உடன்படிக்கை செய்து அந்த உடன்படிக்கையை மீறும் அந்திக் கிறிஸ்துவையும் குறிக்கும். அந்திக்கிறிஸ்து இக்காலத்தில் எருசலேமில் மூன்றரை வருஷம் ஆட்சி புரிவான். யூதா ஜனங்களை எருசலேமை விட்டுத் துரத்திவிடுவான். (தானி 9:27; மத் 24:15-22; 2தெச 2:1-8). இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக பூமியிலுள்ள பத்து ராஜாக்கள் துரோகிகளாக இஸ்ரவேலுக்கு விரோதமாக எழும்புவார்கள். (தானி 7:23-24; வெளி 12:6-17; வெளி 13:1-18; வெளி 17:12-17).

"தேசத்துக் குடிகளே, திகிலும்.....நேரிடும்" - யூதா தேசத்தாருக்குப் பாதுகாப்பு இராது. ஓர் ஆபத்திலிருந்து விலகியோடி வேறொரு ஆபத்தில் சிக்கிக் கொள்வார்கள். (ஏசா 24:17-18).

"உயர இருக்கும் மதகுகள் திறவுண்டு" - உபத்திரவக்காலத்தில் வானத்திலிருந்தும், மனுஷருக்குத் துயரங்கள் வரும். (வெளி 6:12-18:24; வெளி 19:1-10).

"பூமியின் அஸ்திபாரங்கள் குலுங்கும்" - பூமிக்கு ஓர் அஸ்திபாரம் உள்ளது. பூமியின் அஸ்திபாரம் என்பது அடையாள வார்த்தையல்ல. இது ஒரு மெய்யான வார்த்தை. (ஏசா 24:18; ஏசா 40:21; ஏசா 51:13-16; உபா 32:33; 2சாமு 22:16; யோபு 38:4-6; சங் 18:7,15; சங் 82:5; சங் 104:5; நீதி 8:29; எரே 31:37; மீகா 6:2). உபத்திரவக்காலத்தில் பூமி அதிர்ச்சி உண்டாகும். மலைகளும், தீவுகளும் இடம் பெயரும். பட்டணங்கள் அழியும். (வெளி 6:12-17; வெளி 11:13; வெளி 16:17-21; சக 14:4). வெளி 16:17-21; சக 14:4 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பூமியதிர்ச்சியின் விளைவுகள் ஏசா 24:19-20 ஆகிய வசனங்களில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

பூமியின்மீது நியாயத்தீர்ப்பு

1. தேசம் நொறுங்கவே நொறுங்கும். (ஏசா 24:19).
2. தேசம் முறியவே முறியும்.
3. தேசம் அசையவே அசையும்.
4. வெறித்தவனைப்போல தேசம் தள்ளாடும். (ஏசா 24:20).
5. ஒரு குடிலைப்போலப் பெயர்த்துப் போடப்படும்.
6. அதின் பாதகம் அதின்மேல் பாரமாயிருக்கும்.
7. அது விழுந்துபோம்.
8. இனி எழுந்திராது.

(9) தேசம் - எட்டு அம்ச நியாயத்தீர்ப்பு

ஏசா 24:19 தேசம் நொறுங்கவே நொறுங்கும், தேசம் முறியவே முறியும், தேசம் அசையவே அசையும்.

ஏசா 24:20 வெறித்தவனைப்போல தேசம் தள்ளாடி, ஒரு குடிலைப்போலப் பெயர்த்துப்போடப்படும்; அதின் பாதகம் அதின்மேல் பாரமாயிருக்கையால், அது விழுந்துபோம், இனி எழுந்திராது.

"அது விழுந்துபோம், இனி எழுந்திராது" - ஒலிவமலையைப் போலவும் (சக 14:4), தேசங்களின் பட்டணங்களைப் போலவும் (வெளி 17:16-21), பூமியின் பல பகுதிகள் விழுந்துபோகும். விழுந்தவை மறுபடியும் எழுந்திராது.

(10) அர்மகெதோன் - சாத்தானின் தோல்வி - (27:1; 63:1-5; யோவே 3; சக 14; 2தெச 2; எசே 38-39; வெளி 19-20)

ஏசா 24:21 அக்காலத்தில் கர்த்தர் உன்னதமான சேனையை உன்னதத்திலும், பூமியின் ராஜாக்களைப் பூமியிலும் விசாரிப்பார்.

24 அதிகாரம்

ஏசா 24:22 அவர்கள் கெபியில் ஏகமாய்க் கட்டுண்டவர்களாகச் சேர்ந்து, காவலில் அடைக்கப்பட்டு, அநேகநாள் சென்றபின் விசாரிக்கப்படுவார்கள்.

"அக்காலத்தில் கர்த்தர் உன்னதமான சேனையை உன்னதத்திலும்" - அக்காலத்தில் என்பது அர்மெகதோன் யுத்தம் நடைபெறும் காலத்தையும், ஆயிரம் வருஷ அரசாட்சியையும் குறிக்கும். சாத்தான், விழுந்த தூதர்கள், பிசாசுகள் ஆகியவை வானத்தின் அந்தகாரச் சக்திகளாக ஆளுகை செய்யும். (எபே 2:2) பூமியின் ராஜாக்கள் தோல்வியுறுவார்கள். (சக 14:1-5; 2தெச 2:8; வெளி 19:19-21; வெளி 20:1-10).

"அவர்கள் கெபியில் ஏகமாய்க் கட்டுண்டவர்களாகச் சேர்ந்து" - சாத்தான், விழுந்ததூதர்கள், பிசாசுகள் ஆகியவை ஆயிரம் வருஷங்களுக்குப் பாதாளத்தில் கட்டப்படும். (வெளி 20:1-7) அந்திக் கிறிஸ்துவும்கள்ளத்தீர்க்கதரிசியும் அக்கினிக் கடலுக்குத் தள்ளப்படுவார்கள்.(வெளி 19:20; வெளி 20:10). பூமியின் ராஜாக்கள் பாதாளத்திற்கு அனுப்பப்படுவார்கள்.

"கெபி" **(pit)** - (சங் 28:1)

"அநேகநாள் சென்றபின் விசாரிக்கப்படுவார்கள்" - ஆயிரம் வருஷங்களுக்குப் பின்பு சாத்தானும், அவனுடைய ஆவிகளும் பாதாளத்திலிருந்து விடுவிக்கப்படுவார்கள். குறைந்த காலத்திற்கு அவர்கள் தேசங்களை வஞ்சிப்பார்கள். அதன் பின்பு அவர்கள் தங்களுக்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் அக்கினிக்கடலில் தள்ளப்படுவார்கள். (மத் 25:41; வெளி 20:7-10). இந்த ஆயிரம் வருஷக் காலத்தில் மிருகமும், கள்ளத் தீர்க்கதரிசியும் அக்கினிக்கடலிலேயே இருப்பார்கள். சாத்தான் நித்திய நரகத்திற்குத் தள்ளப்படும்போதும் அவர்கள் அக்கினிக்கடலில் இருப்பார்கள். இரண்டாவது உயிர்த்தெழுதல் அப்பொழுது நடைபெறும். பாதாளம் தன்னிடத்தில் உள்ளவர்களைக் கணக்கொப்புவிக்கும். (வெளி 20:11-15).

2. ஆயிர வருஷம் - (24:23-27:13; 20:1)

(1) மேசியாவின் ஆளுகை

ஏசா 24:23 அப்பொழுது சேனைகளின் கர்த்தர் சீயோன் மலையிலும் எருசலேமிலும் ஆளுகைசெய்வதால், சந்திரன் கலங்கும், சூரியன் நாணமடையும்; அவருடைய மூப்பர்களுக்கு முன்பாக மகிமை உண்டாயிருக்கும்.

"அப்பொழுது .... சந்திரன் கலங்கும், சூரியன் நாணமடையும்" - அப்பொழுது என்பதற்கு வருங்காலத்து உபத்திரவக் காலத்திற்குப் பின்பு என்றும், அர்மெகதோன் யுத்தம், இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை ஆகியவற்றிற்குப் பின்பு என்றும் பொருள்படும். அப்போது சந்திரன், சூரியன் ஆகியவற்றின் பிரகாசம் கர்த்தருடைய மகிமைப் பிரகாசத்தை விட மிகவும் குறைவாக இருக்கும். ஆகையினால் அவை நாணமடையும். ஆயிரம் வருஷ அரசாட்சியிலும், புதிய பூமியிலும், சீயோன் மலையின்மீதும், எருசலேமின்மீதும் கர்த்தருடைய மகிமை பிரகாசமாக இருக்கும். (ஏசா 4:5-6; ஏசா 60:19-20) பூமியின் மற்ற பாகங்களில் சூரியனின் பிரகாசம் ஏழு மடங்கு அதிகரிக்கும். சந்திரன் சூரியனைப்போல ஒளி கொடுக்கும். ஆனாலும் அவை நாணமடையும். (ஏசா 30:26). தேவனுடைய மகிமை புதிய எருசலேமில் பிரகாசமாக இருக்கும். (வெளி 21:23-22:5).

"மூப்பர்கள்" **(ancients)** - ஆபேல், ஏனோக்கு, நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, மோசே, தாவீது, பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள், அப்போஸ்தலர்கள், புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் ஆகிய அனைவரையும் "மூப்பர்" என்னும் வார்த்தை குறிக்கும். இவர்கள் அனைவரும் கிறிஸ்துவோடு ராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும் ஆளுகை செய்வார்கள். (ஏசா 2:2-4; ஏசா 9:6-7; எரே 30:9; எசே 34:24; எசே 37:24-28; தானி 2:44-45; தானி 7:13-14,18,27; ஓசி 3:4-5; சக 14:9; மத் 8:11-12; லூக்கா 1:32-33; லூக்கா 22:29-30; வெளி 5:10; வெளி 11:15; வெளி 20:4-6; வெளி 22:4-5).

ஏசாயா - தொகுப்புரை

25 அதிகாரம்

(2) ஆயிர வருஷ ஆராதனையின் இருபது அம்சங்கள் - (12:1)

(அ) தேவனுடைய ஜனங்களுக்கு ஆசீர்வாதங்கள்

ஏசா 25:1 கர்த்தாவே, நீரே என் தேவன்; உம்மை உயர்த்தி, உமது நாமத்தைத் துதிப்பேன்; நீர் அதிசயமானவைகளைச் செய்தீர்; உமது பூர்வ ஆலோசனைகள் சத்தியமும் உறுதியுமானவைகள்.

ஏசாயா வாக்குப்பண்ணும் காரியங்கள்

1. உம்மை உயர்த்துவேன்.
2. உமது நாமத்தைத் துதிப்பேன்.

ஏசாயா கர்த்தரைத் துதிப்பதாக வாக்குப்பண்ணுவதற்குக் காரணம்

1. நீர் அதிசயமானவைகளைச் செய்தீர் (ஏசா 25:1).
2. உமது பூர்வ ஆலோசனைகள் சத்தியமும் உறுதியுமானவைகள்.
3. நீர் நகரத்தை மண்மேடாக்கினீர். (ஏசா 25:2).
4. அரணான பட்டணத்தைப் பாழாக்கினீர்.
5. அந்நியரின் ராஜதானியை ஊராயிராத படிக்கு ஆக்கினீர்.
6. நீர் ஏழைக்குப் பெலனானீர். (ஏசா 25:4).
7. நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனானீர்.
8. பெருவெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமானீர்.
9. வெயிலுக்கு ஒதுங்கும் நிழலானீர்.
10. பெலவந்தரின் ஆரவாரத்தைத் தணிப்பீர். (ஏசா 25:5).
11. சீயோன் மலையிலே சகல ஜனங்களுக்கும் ஒருவிருந்தை ஆயத்தப்படுத்துவீர். (ஏசா 25:6).
12. சகல ஜனங்கள்மேலுமுள்ள முக்காட்டையும், சகல ஜாதிகளையும் மூடியிருக்கிற மூடலையும், சீயோன் மலையிலே அகற்றிப்போடுவீர். (ஏசா 25:7).
13. அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார் (ஏசா 25:8).
14. எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைப்பார்.
15. தமது ஜனத்தின் நிந்தையை பூமியிலிராதபடிக்கு முற்றிலும் நீக்கிவிடுவார்.
16. இவர் நம்மை இரட்சிப்பார் (ஏசா 25:9).
17. கர்த்தருடைய கரம் இந்த மலையிலே தங்கும் (ஏசா 25:10).
18. மோவாப் அவர்கீழ் மிதிக்கப்பட்டுப்போம்.
19. அவர் தமது கைகளை அவர்கள் நடுவிலே விரித்து, அவர்கள் பெருமையையும், அவர்கள் கைகளின் சதிசர்ப்பனைகளையும் தாழ்த்திவிடுவார். (ஏசா 25:11).
20. அவர் சத்துருக்களின் உயர்ந்த அரணைக் கீழே தள்ளித் தாழ்த்தித் தரையிலே தூளாக அழிப்பார். (ஏசா 25:12)

(ஆ) விரோதிகளுக்கு நியாயத்தீர்ப்பு

ஏசா 25:2 நீர் நகரத்தை மண்மேடும், அரணான பட்டணத்தைப் பாழுமாக்கினீர்; அந்நியரின் ராஜதானியை ஊராயிராத படிக்கும், என்றைக்கும் கட்டப்படாத படிக்கும் செய்தீர்.

ஏசா 25:3 ஆகையால் பலத்த ஜனங்கள் உம்மை மகிமைப் படுத்துவார்கள்; கொடூரமான ஜாதிகளின் நகரம் உமக்குப் பயப்படும்.

25 அதிகாரம்

பாபிலோனின் அழிவு

1. நகரத்தை மண்மேடாகும்.
2. அரணான பட்டணம் பாழாகும்.
3. அந்நியரின் ராஜதானி ஊராயிராத படிக்குப் போகும்.
4. என்றைக்கும் கட்டப்படாதபடிக்கு ஆகும்.

பாபிலோன் நகரம் அழிக்கப்படும். இந்தக் காலத்தின் முடிவில் ஏழாம் எக்காளம் தொனிக்கப்படும்போது பாபிலோன் நகரம் முழுவதுமாக அழியும். பாபிலோனின் அழிவைப் பற்றி இங்கு விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. பாபிலோன் மறுபடியும் கட்டப்படமாட்டாது. கர்த்தருடைய நாளில் பாபிலோனின் அழிவு பூரணமாக இருக்கும். (ஏசா 25:2; ஏசா 13:1-16,19-22; ஏசா 14:1-27; எரே 50-51; வெளி 14:8; வெளி 16:17-21; வெளி 18:1-24). பாபிலோன் ஒரு மகத்துவமான பட்டணம். அது அழிந்துபோனதினால் மற்ற தேசத்தார் கர்த்தருக்குப் பயப்படுவார்கள். (ஏசா 25:3).

(இ) தேவனுடைய ஜனங்களுக்கு ஆசீர்வாதங்கள்

ஏசா 25:4 கொடூரமானவர்களின் சீறல் மதிலை மோதியடிக்கிற பெரு வெள்ளத்தைப்போல் இருக்கையில், நீர் ஏழைக்குப் பெலனும், நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனும், பெருவெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமும், வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர்.

கர்த்தர் மனுஷனோடு ஏற்படுத்தும் உறவு (ஏசா 25:4)

1. ஏழைக்குப் பெலனானார்.
2. நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனானார்.
3. பெருவெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமானார்.
4. வெயிலுக்கு ஒதுங்கும் நிழலானார்.

"கொடூரமானவர்களின் சீறல் மதிலை மோதியடிக்கிற பெரு வெள்ளத்தைப்போல் இருக்கையில்" - கர்த்தரை நம்புகிறவர்களுக்குக் கர்த்தர் அடைக்கலமாக இருப்பார். அவர்களுக்கு எப்படிப்பட்ட துன்பம் வந்தாலும் கர்த்தர் அவர்களுக்கு ஆதரவாய் இருப்பார். பெருவெள்ளம்போல வருவது என்பது சத்துருக்களின் படையெடுப்பைக் குறிக்கும். (ஏசா 25:4; ஏசா 37:7; 2இராஜா 19:7).

(ஈ) விரோதிகளுக்கு நியாயத்தீர்ப்பு

ஏசா 25:5 வறட்சியான இடத்தின் காங்கை மேகத்தினால் தணிவது போல், அந்நியரின் மும்முரத்தைத் தணியப்பண்ணுவீர்; மேகத்தின் நிழலினால் வெயில் தணிகிறதுபோல் பெலவந்தரின் ஆரவாரம் தணியும்.

"வறட்சியான இடத்தின் காங்கை மேகத்தினால் தணிவதுபோல்" - ஏசா 25:4 ஆவது வசனத்தின் கடைசிப் பகுதி இங்கும் தொடர்கிறது. அந்திக்கிறிஸ்து பாலஸ்தீன தேசத்தின்மீது யுத்தம் பண்ணும் சம்பவத்தை இது குறிப்பிடுகிறது. அந்நியரின் கோபம் தணியும். பெலவந்தரின் ஆரவாரம் தணியும். அந்நியருடைய ஜெயகீதங்கள் நின்றுபோகும். ஏனெனில் கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்காக யுத்தம் பண்ணுகிறார்.

ஆரவாரம் (song) - זָמִיר - zaw-meer' - **2158**

ஆண்பால் பெயர்ச்சொல் - ஆரவாரம், பாடுதல்.

(உ) தேவனுடைய ஜனங்களுக்கு ஆசீர்வாதங்கள்

ஏசா 25:6 சேனைகளின் கர்த்தர் இந்த மலையிலே சகல ஜனங்களுக்கும் ஒருவிருந்தை ஆயத்தப்படுத்துவார்; அது கொழுமையான பதார்த்தங்களும், பழமையான திராட்சரசமும், ஊனும் நிணமுமுள்ள பதார்த்தங்களும், தெளிந்த பழமையான திராட்சரசமும் நிறைந்த விருந்தாயிருக்கும்.

25 அதிகாரம்

நல்ல விருந்து

சீயோன் மலையில் கர்த்தர் எல்லா ஜனங்களுக்கும் ஒரு விருந்தை ஆயத்தம் பண்ணுவார். (ஏசா 24:23) கர்த்தர் அந்திக்கிறிஸ்துவை ஜெயித்து பூமியில் ராஜ்யபாரம் பண்ணுகிறார். சாத்தானும் அவனுடைய பிசாசுகளும் தோற்றுப்போனார்கள். (ஏசா 25:5-7; ஏசா 23:21-22; வெளி 12:7-12; வெளி 19:19-21; வெளி 20:1-3). கர்த்தர் தம்முடைய ஜெயத்தைக் கொண்டாடுவதற்காகச் சீயோன் மலையில் ஒரு விருந்தை ஆயத்தம் செய்திருக்கிறார். அர்மெகதோன் யுத்தத்திலும், தேசங்களின் நியாயத்தீர்ப்பிலும் தப்பி உள்ளவர்கள் இந்த விருந்தில் பங்கு பெறுவார்கள். (மத் 25:31-46; சக 14:16-21). இந்த விருந்தில் கர்த்தர் ஜனங்களோடு சேர்ந்து போஜனம் பண்ணுவார். (ஆதி 18; யாத் 24:11; லூக்கா 22:18,30; வெளி 19; வெளி 21:1-7)

புறஜாதியாரின் இரட்சிப்பு

மேசியாவின் இரட்சிப்பு யூதருக்கு மட்டும் என்று வரையறுக்கப்படாமல் எல்லா ஜாதியாருக்கும் பொதுவானதாக இருக்கிறது. இதற்காக ஏசாயா கர்த்தரைத் துதிக்கிறார். (ஏசா 25:6; ஏசா2:2-4; ஏசா 11:10; ஏசா 42:1,6; ஏசா 49:6,22; ஏசா 54:8; ஏசா 60:3-5,11,16; ஏசா 61:6,9; ஏசா 62:2; ஏசா 66:12,19). பவுலைப் புறஜாதியாரின் அப்போஸ்தலர் என்று கூறுவது போல ஏசாயாவைப் புறஜாதியாரின் தீர்க்கதரிசி என்று கூறலாம். ஏசாயா புறஜாதியாரின் இரட்சிப்பைக் குறித்து முன்னறிவிக்கிறார். ஏசாயாவைப்போல எரேமியாவும், மல்கியாவும் புறஜாதியாரின் இரட்சிப்பைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். (எரே 16:19; மல் 1:11).

ஏசாயாவின் தீர்க்கதரிசனங்கள் புதிய ஏற்பாட்டில் சுவிசேஷ நூல்களில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. (மத் 4:15; மத் 12:18,21; லூக்கா 2:32).

புறஜாதியார் மேசியாவின்கீழ் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதை ஏசாயா வலியுறுத்தியிருக்கிறார். (ஏசா 2:2-4; ஏசா 9:1; ஏசா 11:12; ஏசா 13:4; ஏசா 25:7; ஏசா 52:15; ஏசா 66:18-20). ஏசாயாவைப் போலவே மீகாவும், (மீகா 4:2-11) சகரியாவும் (சக 2:11; சக 8:22-23; சக 14:16) புறஜாதியாரின் ஆசீர்வாதங்களைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள்.

புறஜாதியாரின் ஆசீர்வாதத்தைப் பற்றி சங்கீதப் புஸ்தகத்திலும், (சங் 57:9; சங் 67:2-4; சங் 72:11,17; சங் 117:1) ஆதியாகமத்திலும் (ஆதி 17:4; ஆதி 18:18; ஆதி 22:18; ஆதி 26:4) கூறப்பட்டிருக்கிறது.

புறஜாதி (Gentiles) - גּוֹי - go'ee, go'-ee - 1471

ஆ.பெ.சொ. - ஜாதி, புறஜாதி, தேசம், ஜனம், மனுஷர், குடி

"பழமையான திராட்சரசமும், ஊனும் நிணமுமுள்ள பதார்த்தங்களும்" - சீயோன் மலையில் கர்த்தர் கொடுக்கும் விருந்தில் போஜனபதார்த்தங்கள் தாராளமாகவும், நேர்த்தியாகவும் இருக்கும். எதற்கும் குறைவு இராது. (சங் 36:8; சங் 63:5).

(ஊ) விரோதிகளுக்கு நியாயத்தீர்ப்பு - சாத்தான் துரத்தப்படுகிறான், சாபம் நீங்கிற்று

ஏசா 25:7 சகல ஜனங்கள்மேலுமுள்ள முக்காட்டையும், சகல ஜாதிகளையும் மூடியிருக்கிற மூடலையும், இந்த மலையிலே அகற்றிப்போடுவார்.

ஏசா 25:8 அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார்; கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைத்து, தமது ஜனத்தின் நிந்தையை பூமியிலிராதபடிக்கு முற்றிலும் நீக்கிவிடுவார்; கர்த்தரே இதைச் சொன்னார்.

"இந்த மலை" - சீயோன் மலை. (ஏசா 24:23).

25 அதிகாரம்

"சகல ஜனங்கள் மேலுமுள்ள முக்காட்டையும்" - முக்காடு போடுதல் என்பது வருத்தம், துயரம் ஆகியவற்றின் அடையாளம் ஆகும். கர்த்தர் தேசத்தின் துயரத்தையும், சாத்தானின் இருளையும் அகற்றிப் போடுவார். பாவத்தின் ஜனங்கள் மத்தியில் ஆகாயத்தின் அந்தகாரப் பிரபுவாகிய சாத்தானுடைய கிரியை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவனுடைய கிரியைகளைக் கர்த்தர் ஜனங்களுடைய இருதயங்களிலும், உள்ளங்களிலிருந்து அகற்றிப் போடுவார். சாத்தானும் அவனுடைய தூதர்களும் ஆயிரம் வருஷங்களுக்குப் பாதாளத்தில் அடைக்கப்பட்டிருப்பார்கள். (ஏசா 24:21-22; எபே 6:12; வெளி 12:7-12; வெளி 20:3).

"அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார்" - கர்த்தர் மரணத்தின்மீது வெற்றி சிறப்பார். (ஏசா 25:8) ஆயிரம் வருஷ அரசாட்சிக்கு முன்பு முதலாவது உயிர்த்தெழுதல் நடைபெறும். அப்போது ஆபேலின் காலத்திலிருந்து உபத்திரவக் காலம் வரையிலுமுள்ள பரிசுத்தவான்கள் எல்லோரும் உயிர்த்தெழுவார்கள். அவர்கள் ஏற்கெனவே மரித்தவர்களாக இருந்தபோதிலும் இப்போது மரணத்தை ஜெயித்து உயிரோடு எழும்புகிறார்கள். (1கொரி 15:23,51-57; பிலி 3:20-21; 1தெச 4:13-17; வெளி 20:4-6).

பாவிகளுக்கு மரணம் தொடர்ந்து சம்பவிக்கும். ஆயிரம் வருஷ அரசாட்சியில் பாவிகள் தொடர்ந்து மரித்துக் கொண்டிருப்பார்கள். இரண்டாவது உயிர்த்தெழுதல் நடைபெறும்போது மரித்துப் போன துன்மார்க்கர் எல்லோரும் உயிர்த்தெழுவார்கள். அப்போது மரணம் அவர்களுக்கும் அழிக்கப்படும். (1கொரி 15:24-28,35-45; வெளி 20:4-6,11-15).

இயேசு கிறிஸ்து மரணத்தை ஏற்கெனவே ஜெயித்திருக்கிறார். மரணம், பாதாளம் ஆகியவற்றின் திறவுகோல்கள் இப்போது அவரிடம் உள்ளன. (எபி 2:14-15; வெளி 1:18) மரணம் என்னும் சத்துரு ஆயிரம் வருஷ அரசாட்சியிலும் தொடர்ந்து கிரியை செய்வான். பாவிகள்மீது தன்னுடைய அதிகாரத்தைச் செலுத்துவான். (ஏசா 65:20; 1கொரி 15:24-28). எல்லோரும் உயிர்த்தெழுந்த பின்பு யாருக்கும் மரணம் இராது. (வெளி 21:3-7; வெளி 22:3).

"கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைத்து" - முதலாவது உயிர்த்தெழுதலில் உயிர்த்தெழும் பரிசுத்தவான்களின் கண்ணீரையெல்லாம் கர்த்தர் துடைப்பார். இது ஆயிரம் வருஷ அரசாட்சிக்கு முன்பு நடைபெறும் சம்பவம். (1தெச 4:13-18; வெளி 7:9-17) ஆயிரம் வருஷ அரசாட்சியில் கிறிஸ்துவின் ஆளுகைக்குட்பட்டிருக்கும் ஜனங்களுடைய கண்ணீர் ஆயிரம் வருஷ அரசாட்சியின் முடிவில் துடைக்கப்படும். (வெளி 21:1-7).

"தமது ஜனத்தின் நிந்தையை பூமியிலிராத படிக்கு முற்றிலும் நீக்கிவிடுவார்" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது அவர் தம்முடைய ஜனங்களின் நிந்தை, தோல்வி, அவமானம், வருத்தம் ஆகியவற்றை நீக்கி விடுவார். (ஏசா 25:8-9; ஏசா 2:2-4; ஏசா 35:1-8; ஏசா 65:20-25).

(எ) தேவனுடைய ஜனங்களுக்கு ஆசீர்வாதங்கள்

ஏசா 25:9 அக்காலத்திலே: இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார்; இவரே கர்த்தர், இவருக்காகக் காத்திருந்தோம்; இவருடைய இரட்சிப்பினால் களிகூர்ந்து மகிழுவோம் என்று சொல்லப்படும்.

"அக்காலத்திலே: இதோ, இவரே நம்முடைய தேவன்" - ஆயிரம் வருஷ அரசாட்சியில் இந்த வாக்கியம் கூறப்படும். (ஏசா 52:7; எசே 43:7).

(ஏ) விரோதிகளுக்கு நியாயத்தீர்ப்பு

ஏசா 25:10 கர்த்தருடைய கரம் இந்த மலையிலே தங்கும்; கூளம் எருக்களத்தில் மிதிக்கப்படுவதுபோல, மோவாப் அவர்கீழ் மிதிக்கப்பட்டுப்போம்.

ஏசாயா - தொகுப்புரை

25 அதிகாரம்

ஏசா 25:11 நீந்துகிறவன் நீந்துவதற்காகத் தன் கைகளை விரிப்பதுபோல் அவர் தமது கைகளை அவர்கள் நடுவிலே விரித்து, அவர்கள் பெருமையையும், அவர்கள் கைகளின் சதிசர்ப்பனைகளையும் தாழ்த்தி விடுவார்.

ஏசா 25:12 அவர் உன் மதில்களுடைய உயர்ந்த அரணைக்கீழே தள்ளித் தாழ்த்தித் தரையிலே தூளாக அழிப்பார்.

"அக்காலத்திலே: இதோ, இவரே நம்முடைய தேவன்" - ஆயிரம் வருஷ அரசாட்சியில் இந்த வாக்கியம் கூறப்படும். (ஏசா 52:7; எசே 43:7).

"கர்த்தருடைய கரம் இந்த மலையிலே தங்கும்" - சீயோன் மலையில் தங்கும். (ஏசா 25:6,7,10; ஏசா 24:23) கர்த்தருடைய கரம் என்பது கர்த்தருடைய வல்லமையையும், அவர் தமது ஜனத்தை மீட்பதையும், பாதுகாப்பதையும் குறிக்கும். (எஸ்றா 7:6,28; எஸ்றா 8:18,22,31; நெகே 2:8; அப் 4:30; அப் 11:21).

"மோவாப் அவர்கீழ் மிதிக்கப்பட்டுப்போம்" - ஆயிரம் வருஷ அரசாட்சியில் மோவாப் தோல்வியுறும். அது இஸ்ரவேலின்கீழ் அடிமையாக இருக்கும். (ஏசா 11:14; ஏசா 16:1-5)

"அவர் தமது கைகளை அவர்கள் நடுவிலே விரித்து" - சத்துருக்கள்மீது கர்த்தர் தமது கைகளை விரித்து அவர்களுடைய பெருமையையும், சதிசர்ப்பனைகளையும் தாழ்த்தி விடுவார். (ஏசா 25:11-12).

26 அதிகாரம்

(3) ஆயிர வருஷ பாட்டு - (12:1)

(அ) நீதிமானின் இரட்சிப்பு

ஏசா 26:1 அக்காலத்திலே யூதாதேசத்தில் பாடப்படும் பாட்டாவது: பெலனான நகரம் நமக்கு உண்டு; இரட்சிப்பையே அதற்கு மதிலும் அரணுமாக ஏற்படுத்துவார்.

ஏசா 26:2 சத்தியத்தைக் கைக்கொண்டு வருகிற நீதியுள்ள ஜாதி உள்ளே பிரவேசிப்பதற்காக வாசல்களைத் திறவுங்கள்.

ஏசா 26:3 உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையை நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர்.

ஏசா 26:4 கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள்; கர்த்தராகிய யேகோவா நித்திய கன்மலையாயிருக்கிறார்.

"அக்காலத்திலே யூதாதேசத்தில் பாடப்படும் பாட்டாவது" - ஆயிரம் வருஷ அரசாட்சியில் யூதா இந்த ஜெயகீதத்தைப் பாடும். (ஏசா 26:1-21).

"பெலனான நகரம் நமக்கு உண்டு" - எருசலேம் மறுபடியுமாகக் கட்டப்படும். கர்த்தருடைய இரட்சிப்பே இந்தப் பட்டணத்திற்கு மதிலும், அரணுமாக இருக்கும். (எசே 48)

"நீதியுள்ள ஜாதி" - இஸ்ரவேல் தேசமே நீதியுள்ள ஜாதியாக இருக்கும். (ஏசா 66:7-8; எரே 31:34; எரே 41:1,8; ரோமர் 11:25-29; எபி 8:11).

"வாசல்களைத் திறவுங்கள்" - எருசலேம் பூமியில் மறுபடியும் கட்டப்படும் போது அதன் அலங்கங்களில் 12 வாசல்கள் இருக்கும். ஒவ்வொரு திசையிலும் மூன்று வாசல்கள் இருக்கும். 12 வாசல்களும் இஸ்ரவேலின் 12 கோத்திரத்தாரைக் குறிக்கும். (ஏசா 26:2; எசே 48:30-35) இது பரலோகத்தின் நகரமாகிய புதிய எருசலேமிற்கு அடையாளமாக இருக்கும். (வெளி 21:9-27)

"நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்" - கர்த்தரை உறுதியாகப் பற்றிக் கொண்டு அவரையே நம்பியிருக்கும் ஜனங்களைக் கர்த்தர் காத்துக் கொள்வார். இந்த வாக்குத்தத்தம் எல்லா சந்ததியாருக்கும் பொருந்தும். (சங் 91). ஆனால் துன்மார்க்கருக்கோ சமாதானம் இராது. (ஏசா 57:20-21)

"கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள்" - கர்த்தரை நம்பினால் தேவசமாதானம் கிடைக்கும். (ஏசா 26:3)

யெகோவா (JEHOVAH) - יְהֹוָה, יְהוִה - yeh-ho-vaw' - 3068

ஆ.பெ.சொ.-கர்த்தர், ஆண்டவர், யெகோவா - வேதாகமத்தில் யெகோவா என்னும் பெயர் நான்கு இடங்களில் வந்திருக்கிறது. அதில் இதுவும் ஒன்று. (ஏசா 26:4; ஏசா 12:2; யாத் 6:3; சங் 83:18)

(ஆ) துன்மார்க்கனின் தண்டனை

ஏசா 26:5 அவர் உயரத்திலே வாசமாயிருக்கிறவர்களையும் கீழே தள்ளுகிறார், உயர்ந்த நகரத்தையும் தாழ்த்துகிறார்; அவர் தரைமட்டும் தாழ்த்தி அது மண்ணாகுமட்டும் இடியப் பண்ணுவார்.

ஏசா 26:6 கால் அதை மிதிக்கும், சிறுமையானவர்களின் காலும் எளிமையானவர்களின் அடிகளுமே அதை மிதிக்கும்.

ஏசாயா - தொகுப்புரை

26 அதிகாரம்

யெகோவாவின் கிரியைகள்

1. உயரத்திலே வாசமாயிருக்கிறவர்களைக் கீழே தள்ளுகிறார் (ஏசா 26:5).
2. உயர்ந்த நகரத்தை தாழ்த்துகிறார்.
3. சிறுமையானவர்களின் காலும் எளிமையானவர்களின் அடிகளுமே அதை மிதிக்கப் பண்ணுகிறார். (ஏசா 26:6).
4. நீதிமானுடைய பாதையைச் செம்மைப்படுத்துகிறார். (ஏசா 26:7).

(இ) நீதிமானின் வழி

ஏசா 26:7 நீதிமானுடைய பாதை செம்மையாயிருக்கிறது; மகா நீதிபரராகிய நீர் நீதிமானுடைய பாதையைச் செம்மைப் படுத்துகிறீர்.

ஏசா 26:8 கர்த்தாவே, உம்முடைய நியாயத்தீர்ப்புகளின் வழியிலே உமக்குக் காத்திருக்கிறோம்; உமது நாமமும், உம்மை நினைக்கும் நினைவும் எங்கள் ஆத்தும வாஞ்சையாயிருக்கிறது.

ஏசா 26:9 என் ஆத்துமா இரவிலே உம்மை வாஞ்சிக்கிறது; எனக்குள் இருக்கிற என் ஆவியால் அதிகாலையிலும் உம்மைத் தேடுகிறேன்; உம்முடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும்போது பூச்சக்கரத்துக்குடிகள் நீதியைக் கற்றுக்கொள்வார்கள்.

செம்மையான கிரியைகள்

1. கர்த்தருடைய நியாயத் தீர்ப்புகளின் வழியில் நடப்பது. (ஏசா 26:8)
2. வழிநடத்துதலுக்காகக் கர்த்தருக்குக் காத்திருப்பது.
3. கர்த்தருடைய நாமத்தில் வாஞ்சையாயிருப்பது.
4. கர்த்தரை நினைக்கும் நினைவால் நிறைந்திருப்பது.
5. முழு ஆத்துமாவோடு கர்த்தரை வாஞ்சிப்பது. (ஏசா 26:9)
6. ஆவியால் அதிகாலையில் கர்த்தரைத் தேடுவது.
7. சிட்சிப்பதினால் நீதியைக் கற்றுக் கொள்வது. (ஏசா 26:9; எபி 12:5-13)

(ஈ) துன்மார்க்கனின் வழி

ஏசா 26:10 துன்மார்க்கனுக்குத் தயை செய்தாலும் நீதியைக் கற்றுக் கொள்ளான்; நீதியுள்ள தேசத்திலும் அவன் அநியாயஞ் செய்து கர்த்தருடைய மகத்துவத்தைக் கவனியாதேபோகிறான்.

ஏசா 26:11 கர்த்தாவே, உமது கை ஓங்கியிருக்கிறது, அவர்கள் அதைக் காணாதிருக்கிறார்கள்; ஆனாலும் உமது ஜனத்துக்காக நீர் கொண்ட வைராக்கியத்தைக்கண்டு வெட்கப் படுவார்கள்; அக்கினி உம்முடைய சத்துருக்களைப் பட்சிக்கும்.

துன்மார்க்கனின் சுபாவம்

1. துன்மார்க்கனுக்குத் தயைசெய்தாலும் நீதியைக் கற்றுக்கொள்ளான்.
2. நீதியுள்ள தேசத்திலும் அவன் அநியாயஞ் செய்கிறான்.
3. கர்த்தருடைய மகத்துவத்தைக் கவனியாதேபோகிறான்.

"கர்த்தாவே, உமது கை ஓங்கியிருக்கிறது, அவர்கள் அதைக் காணாதிருக்கிறார்கள்" - துன்மார்க்கர் கர்த்தருடைய கை ஓங்கியிருப்பதைக் கண்டாலும், காணவிட்டாலும் கர்த்தருடைய வைராக்கியம் அவர்கள்மீது பற்றியெரியும். அது துன்மார்க்கரைப் பட்சிக்கும். அப்போது கர்த்தருடைய வைராக்கியத்தைக் கண்டு துன்மார்க்கர் வெட்கப்படுவார்கள்.

26 அதிகாரம்

(உ) நீதிமானின் ஜெபம்

ஏசா 26:12 கர்த்தாவே, எங்களுக்குச் சமாதானத்தைக் கட்டளையிடுவீர்; எங்கள் கிரியைகளையெல்லாம் எங்களுக்காக நடத்திவருகிறவர் நீரே.

ஏசா 26:13 எங்கள் தேவனாகிய கர்த்தாவே, உம்மையல்லாமல் வேறே ஆண்டவன்மார் எங்களை ஆண்டார்கள்; இனி உம்மைமாத்திரம் சார்ந்து உம்முடைய நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்துவோம்.

ஏசா 26:14 அவர்கள் செத்தவர்கள், ஜீவிக்கமாட்டார்கள்; மாண்ட ராட்சதர் திரும்ப எழுந்திரார்கள்; நீர் அவர்களை விசாரித்துச் சங்கரித்து, அவர்கள் பேரையும் அழியப்பண்ணினீர்.

ஏசா 26:15 இந்த ஜாதியை பெருகப் பண்ணினீர்; கர்த்தாவே, இந்த ஜாதியைப் பெருகப்பண்ணினீர்; நீர் மகிமைப்பட்டீர், தேசத்தின் எல்லை எல்லாவற்றையும் நெடுந்தூரத்தில் தள்ளி வைத்தீர்.

ஏசா 26:16 கர்த்தாவே, நெருக்கத்தில் உம்மைத் தேடினார்கள்; உம்முடைய தண்டனை அவர்கள்மேலிருக்கையில் அந்தரங்க வேண்டுதல் செய்தார்கள்.

ஏசா 26:17 கர்த்தாவே, பேறுகாலம் சமீபித்திருக்கையில் வேதனைப்பட்டு, தன் அம்பாயத்தில் கூப்பிடுகிற கர்ப்பவதியைப் போல, உமக்கு முன்பாக இருக்கிறோம்.

ஏசா 26:18 நாங்கள் கர்ப்பமாயிருந்து வேதனைப்பட்டு, காற்றைப் பெற்றவர்களைப் போல் இருக்கிறோம்; தேசத்தில் ஒரு இரட்சிப்பையும் செய்ய மாட்டாதிருக்கிறோம்; பூச்சக்கரத்துக் குடிகள் விழுகிறதுமில்லை.

"கர்த்தாவே, எங்களுக்குச் சமாதானத்தைக் கட்டளையிடுவீர்" - கர்த்தரிடத்தில் தங்களுடைய மனதை நிலைத்திருக்கச் செய்கிறவர்களுக்குக் கர்த்தர் சமாதானத்தைக் கட்டளையிடுவார். (எபி 26:3,12).

"வேறே ஆண்டவன்மார்" - கடந்த காலத்தில் இஸ்ரவேல் புத்திரரை ஒடுக்கிய ராஜாக்கள்.

"அவர்கள் செத்தவர்கள், ஜீவிக்க மாட்டார்கள்" - இஸ்ரவேல் புத்திரரை ஒடுக்கியவர்கள் (எபி 26:13) மரித்துப் போனார்கள். அவர்கள் இனிமேல் உயிரோடு எழும்பி மறுபடியும் ஒடுக்கமாட்டார்கள்.

இராட்சதரை (மாண்டவர்) பற்றிய செய்திகள்

1. இராட்சதர் தண்ணீருக்குள் இருக்கிறார்கள்.
2. அவர்கள் செத்துப்போனவர்கள். அவர்கள் இனி எழுந்து, உம்மைத் துதிக்க மாட்டார்கள். (சங் 88:10-11)
3. அவளுடைய பாதைகள் மரித்தோரிடத்திற்குச் சாய்கிறது. (நீதி 2:18)
4. மரித்தவர்கள் அவ்விடத்தில் உண்டு. (நீதி 9:18).
5. செத்தவர்களின் கூட்டம். (நீதி 21:16)
6. செத்த இராட்சதர் யாவரையும் உன்நிமித்தம் எழுப்பி. (ஏசா 14:9).
7. அவர்கள் செத்தவர்கள். (ஏசா 26:14).
8. மரித்தோரைப் பூமி புறப்படப்பண்ணும். (ஏசா 26:19)

ரெப்பாயீமர்கள் வேறே ஆண்டவன்மார்களாக இருந்தார்கள். (ஏசா 26:13) கர்த்தர் அவர்களை அழித்ததினால் இனிமேல் ஜீவிக்கமாட்டார்கள். (ஏசா 26:14). மரித்த பின்பு, மனுஷர் உயிர்த்தெழுவார்கள். ஆனால் இராட்சதர் உயிர்த்தெழமாட்டார்கள். (ஏசா 26:19)

26 அதிகாரம்

"இந்த ஜாதியைப் பெருகப்பண்ணினீர்" - யூதா தேசம் பெருகிற்று. அதன் பின்பு பூமியின் எல்லா தேசங்களுக்கும் அவர்கள் சிதறிப் போனார்கள். நேபுகாத்நேச்சார் யூதாவைச் சிதறடிப்பதற்கு 133 வருஷங்களுக்கு முன்பாகவே இந்தத் தீர்க்கதரிசனம் கூறப்பட்டிருக்கிறது. ரோமப்பேரரசாரின் காலத்தில் யூதர்கள் உலகமெங்கும் சிதறிப்போனார்கள். இந்தத் தீர்க்கதரிசனம் கூறப்பட்டு 819 வருஷங்களுக்குப் பின்பு இந்தச் சம்பவம் நிறைவேறிற்று. (லூக்கா 21:20-24).

"நெருக்கத்தில் உம்மைத் தேடினார்கள்" - பூமியின் எல்லா தேசங்களிலும் யூதர்கள் சிதறியிருப்பார்கள். பேறுகாலம் சமீபித்திருக்கையில் வேதனைப்பட்டு, தன் அம்பாயத்தில் கூப்பிடுகிற கர்ப்பவதியைப் போல அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவார்கள். (ஏசா 26:16-18; ஏசா 66:7-8; எரே 20:1-9; தானி 12:1; வெளி 12).

யூதாவின் வேதனை

1. நாங்கள் வேதனைப்படுகிறோம். (ஏசா 26:17-18).
2. எங்கள் அம்பாயத்தில் கூப்பிடுகிறோம். (ஏசா 26:17).
3. காற்றைப் பெற்றவர்களைப்போல் இருக்கிறோம். (ஏசா 26:18).
4. தேசத்தில் ஒரு இரட்சிப்பையும் செய்யமாட்டாதிருக்கிறோம்.
5. புறஜாதி ஜனங்கள் எங்களுக்குக் கீழ்ப்படியவில்லை.

"நாங்கள் கர்ப்பமாயிருந்து வேதனைப்பட்டு" - யூதர்களுக்கு உபத்திரவம் அதிகமாயிற்று. அவர்கள் காற்றைப் பெற்றவர்களைப்போல் இருக்கிறார்கள். அவர்களுடைய பிரயாசத்தினால் ஒரு பிரயோஜனமும் இல்லை. இவர்கள் மூலமாக இரட்சிப்பு நடைபெறவில்லை. இவர்கள் புறஜாதியாரைக் கர்த்தரிடத்தில் வழிநடத்தவில்லை. மேலும் இவர்கள் புறஜாதியாரைத் தங்களுக்குக் கீழ்ப்படித்தவும் இல்லை.

(ஊ) நீதிமானின் உயிர்த்தெழுதல்

ஏசா 26:19 மரித்த உம்முடையவர்கள் பிரேதமான என்னுடையவர்களோடே கூட எழுந்திருப்பார்கள்; மண்ணிலே தங்கியிருக்கிறவர்களே, விழித்துக் கெம்பீரியுங்கள்; உம்முடைய பனி பூண்டுகளின் மேல் பெய்யும் பனிபோல் இருக்கும்; மரித்தோரைப் பூமி புறப்படப்பண்ணும்.

"மரித்த உம்முடையவர்கள் பிரேதமான என்னுடையவர்களோடே கூட எழுந்திருப்பார்கள்" - ஏசாயா உயிரோடு எழுந்திருக்கும் போது மரித்துப்போன இஸ்ரவேலரும் உயிரோடு எழுந்திருப்பார்கள். மண்ணிலே தங்கியிருக்கிறவர்கள் என்பது உயிர்த்தெழாமல் பூமியிலிருக்கும் ராட்சதரைக் குறிக்கும் வாக்கியமாகும். (ஏசா 26:14,19; தானி 12:2)

(எ) நீதிமான் பாதுகாக்கப்படுதல்

ஏசா 26:20 என் ஜனமே, நீ போய் உன் அறைகளுக்குள்ளே பிரவேசித்து, உன் கதவுகளைப் பூட்டிக்கொண்டு, சினம் கடந்துபோகுமட்டும் கொஞ்சநேரம் ஒளித்துக்கொள்.

"என் ஜனமே, நீ போய் உன் அறைகளுக்குள்ளே பிரவேசித்து" - இந்த வாக்கியம் சூரியனை அணிந்திருக்கும் ஸ்திரீயைப் பற்றிக் கூறுகிறது. (வெளி 12) அந்திக் கிறிஸ்துவிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இஸ்ரவேல் புத்திரர்கள் ஏதோம், மோவாப் ஆகியவற்றின் வனாந்தரங்களுக்குள் பிரவேசிப்பார்கள்.

சினம் (indignation) - זַעַם - zah'-am - 2195

பெயர்ச்சொல்-கோபம், சினம், சலிப்பு, கோபாக்கினி. **(to froth at the mouth; be furious; angry; indignation)** (ஏசா 26:20; ஏசா 10:5,25; ஏசா 13:5; சங் 69:24; சங் 78:49; சங் 102:10; எரே 10:10; எரே 15:7; எரே 50:25; புல 2:6; எசே 21:31; எசே 22:24,31; தானி 8:19; தானி 11:36; நாகூம் 1:6; ஆப 3:12; செப் 3:8; மத் 24:15-29; வெளி 6-19).

ஏசாயா - தொகுப்புரை

26 அதிகாரம்

(ஏ) துன்மார்க்கனின் அழிவு

ஏசா 26:21 இதோ, பூமியினுடைய குடிகளின் அக்கிரமத்தினிமித்தம் அவர்களை விசாரிக்கும்படி கர்த்தர் தம்முடைய ஸ்தானத்திலிருந்து புறப்பட்டு வருவார்; பூமி தன் இரத்தப்பழிகளை வெளிப்படுத்தி, தன்னிடத்தில் கொலை செய்யப்பட்டவர்களை இனி மூடாதிருக்கும்.

"கர்த்தர் தம்முடைய ஸ்தானத்திலிருந்து புறப்பட்டுவருவார்" - ஏசா 26:20 ஆவது வசனம் வருங்காலத்து உபத்திரவத்தைக் குறிக்கும். கர்த்தர் அப்போது தம்முடைய ஸ்தானத்திலிருந்து புறப்பட்டு வருவார். இது இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது நடைபெறும் சம்பவம்.

அக்காலத்தில் அவர் தம்முடைய சத்துருக்களை அழித்து பூமியில் தமது ராஜ்யத்தை ஸ்தாபிப்பார். (ஏசா 4:1-6; ஏசா 9:6-7; ஏசா 11:3-16; ஏசா 63:1-5; எசே 38-39; தானி 2:44-45; தானி 7:14-27; சக 14; மத் 24:29-31; மத் 25:31-46; லூக்கா 1:32,33; லூக்கா 17:26-31; 2தெச 1:7-10; யூதா 1:14-15; வெளி 1:7; வெளி 11:15; வெளி 19:11-20:10). கர்த்தருடைய ஸ்தானம் என்பது பரலோகத்தைக் குறிக்கும்.

"பூமி தன் இரத்தப்பழிகளை வெளிப்படுத்தி" - ஆபேலின் இரத்தம் பூமியிலிருந்து கூப்பிட்டது. (ஆதி 4:10) கர்த்தர் வரும்போது பூமி எதையும் மறைக்காது. அது தன்னுடைய இரத்தப் பழிகளை வெளிப்படுத்தும். தன்னிடத்தில் கொலைசெய்யப் பட்டவர்களைப் பூமி மறைக்காமல் அறிவிக்கும். ஆயிரம் வருஷ அரசாட்சிக்காலத்தில் ஜனங்கள் செய்யும் எல்லாப் பாவங்களும் வெளியரங்கமாகும். உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள் இயேசு கிறிஸ்துவோடு பூமியை ஆளுகை செய்வார்கள். அவர்களுக்கு மறைவானது ஒன்றுமிராது. (1கொரி 13:12) அவர்கள் மனுஷரின் நினைவுகளையும் அறிவார்கள்.

27 அதிகாரம்

(4) அர்மகெதோன் - சாத்தானின் தோல்வி - (24:21-22; சக 14; யோவே 3; 2தெச 2; வெளி 19-20)

ஏசா 27:1 அக்காலத்திலே கர்த்தர் லிவியாதான் என்னும் நீண்ட பாம்பை, லிவியாதான் என்னும் கோணலான சர்ப்பத்தையே, கடிதும் பெரிதும் பலத்ததுமான தமது பட்டயத்தால் தண்டிப்பார்; சமுத்திரத்தில் இருக்கிற வலுசர்ப்பத்தைக் கொன்றுபோடுவார்.

"அக்காலத்திலே" - உபத்திரவக்காலத்திலும், ஆயிரம் வருஷ அரசாட்சியின் காலத்திலும். (ஏசா 2:2-4; ஏசா 4:1-6).

கடிது(**sore**) - קָשֶׁה - **kaw-sheh' - 7186**

பெயரடை - கடினமான, கொடுமையான, வணங்கா, பாரமாக்கின, வியாகுலப் படுத்தின, முரட்டாட்டமான, பலத்த, கடின, மனக்கிலேசமுள்ள, கொடிதான, கொடிய "**sore**" (ஏசா 27:1; 2சாமு 2:17); **heavy** (1இராஜா 14:6); **hard** (யாத் 1:14; யாத் 18:26; 2சாமு 3:39; சங் 60:3; ஏசா 14:3); **grievous** (1இராஜா 12:4; 2நாளா 10:4; ஏசா 21:2).

பெரிது (**great**) - גָּדוֹל - **gaw-dole', gaw-dole' - 1419**

பெயரடை - பெரிய, மகா, மகத்தான, மூத்த, மிகுந்த, வெகு, பிரதான, திரளான, மிகவும், வல்லமையான, ஏராளமான, உரத்த **great** (ஏசா 27:1,13; ஏசா 29:6; ஏசா 34:6; ஏசா 36:4,13; ஏசா 54:7); **long** (தானி 10:1); **mighty** (லேவி 19:15; உபா 4:37; உபா 7:21-23; உபா 9:29; எசே 17:17; யோனா 1:4); **proud** (சங் 12:3).

பலத்தது (**strong**) - חָזָק - **khaw-zawk' - 2389**

பெயரடை -வல்லமை, பலத்த, வல்லமையுள்ள, கடினமான, மும்முரமான, கெட்டியான, முரடான **strong** (ஏசா 27:1; ஏசா 40:10; எரே 21:5; எரே 50:34); **hottest** (2சாமு 11:15); **loud** (யாத் 19:16).

கர்த்தருடைய பட்டயம் கடிது, பெரிது, பலத்தது. இது நீதியாக நியாயம் செய்யும். சாத்தானாகிய லிவியாதானை இது அழிக்கும். (எரே 27:1; யோபு 41:1,34)

லிவியாதானைப் பற்றிய செய்திகள்

1. நீண்ட பாம்பு (ஏசா 27:1)
2. கோணலான சர்ப்பம்.
3. சமுத்திரத்தில் இருக்கிற வலுசர்ப்பம் (ஏசா 27:1; சங் 104:26).
4. அவனுக்கு ஏழு தலைகள் உள்ளன. (சங் 74:14; வெளி 12:1-17; வெளி 16:13-16).
5. பெருமையின் பிள்ளைகளுக்கு ராஜாவாகஇருக்கிறான்.(யோபு 41:1,34).

லிவியாதான் என்பதற்கான எபிரெயப் பெயர் לִוְיָתָן - **liv-yaw-thawn' - 3882** என்பதாகும். இதற்கு கடல் மிருகம் (**sea monster**) என்று பொருள்.

கடல்மிருகம் (**sea monster**) - לִוְיָתָן - **liv-yaw-thawn' - 3882**

ஆண்பால் பெயர்ச்சொல் - கடல்மிருகம் (**a wreathed animal, a large sea monster**) **"leviathan"** (ஏசா 27:1; யோபு 41:1; சங் 74:14; சங் 104:26) **mourning** (யோபு 3:8). இது சாத்தானுக்குப் பொருந்தும் வார்த்தை. (வெளி 12).

வலுசர்ப்பம் (**dragon**) - תַּנִּין - **tan-neen', tan-neem' – 8577**

ஏசாயா - தொகுப்புரை

27 அதிகாரம்

ஆ.பெ.சொ. - மலைப் பாம்பு, வலுசர்ப்பம், முதலை, ஆந்தை, மச்சம், திமிங்கலம் (யாத் 7:9)

(5) ஆயிர வருஷ பாட்டு - (12:1)

(அ) ஏழு அம்ச பராமரிப்பு - (5:1-2)

ஏசா 27:2 அக்காலத்திலே நல்ல திராட்சரசத்தைத் தரும் திராட்சத்தோட்டம் உண்டாயிருக்கும்; அதைக்குறித்துப் பாடுங்கள்.

ஏசா 27:3 கர்த்தராகிய நான் அதைக் காப்பாற்றி, அடிக்கடி அதற்குத் தண்ணீர்ப் பாய்ச்சி, ஒருவரும் அதைச் சேதப்படுத்தாத படிக்கு அதை இரவும்பகலும் காத்துக் கொள்வேன்.

ஏசா 27:4 உக்கிரம் என்னிடத்தில் இல்லை; முட்செடியையும் நெரிஞ்சிலையும் எனக்கு விரோதமாய் யுத்தத்தில் கொண்டுவருகிறவன் யார்? நான் அவைகள்மேல் வந்து, அவைகளை ஏகமாய்க் கொளுத்திவிடுவேன்;

ஏசா 27:5 இல்லாவிட்டால் அவன் என் பெலனைப் பற்றிக்கொண்டு என்னோடே ஒப்புரவாகட்டும்; அவன் என்னோடே ஒப்புரவாவான்.

ஏசா 27:6 யாக்கோபு வேர்பற்றி, இஸ்ரவேல் பூத்துக்காய்த்து உலகத்தைப் பலனால் நிரப்பும் நாட்கள் வரும்.

"அக்காலத்திலே" - ஆயிரம் வருஷ அரசாட்சியின் காலத்திலே. யூதா ஜனங்கள் கர்த்தருடைய திராட்சத் தோட்டத்தைப் பற்றி பாட்டுப் பாடுவார்கள். (ஏசா 27:2-6; ஏசா 5:1-7).

கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தின் பராமரிப்பு

1. நான் அதைக் காப்பாற்றுவேன். (ஏசா 27:3).
2. அடிக்கடி அதற்குத் தண்ணீர்ப் பாய்ச்சுவேன்.
3. ஒருவரும் அதைச் சேதப்படுத்தாதபடிக்கு அதை இரவும்பகலும் காத்துக் கொள்வேன்.
4. நான் என் திராட்சத்தோட்டத்தில் சத்துருக்கள்மேல் வருவேன். (ஏசா 27:4).
5. அவைகளை ஏகமாய்க் கொளுத்தி விடுவேன்.
6. அவனை என்னோடே ஒப்புரவாக வைப்பேன். (ஏசா 27:5).
7. யாக்கோபு வேர்பற்றி, இஸ்ரவேல் பூத்துக்காய்த்து உலகத்தைப் பலனால் நிரப்பும் நாட்களை வரவைப்பேன். (ஏசா 27:6).

"உக்கிரம் என்னிடத்தில் இல்லை" - கர்த்தருடைய திராட்சத்தோட்டம் என்பது யூதாவைக் குறிக்கும். கர்த்தர் தம்முடைய திராட்சத்தோட்டத்தின்மீது உக்கிரமாக இல்லை. (ஏசா 27:4; ஏசா 5:1-7). ஆயிரம் வருஷ அரசாட்சியில் எல்லா தேசங்களிலுமுள்ள இஸ்ரவேலர்கள் கூட்டிச் சேர்க்கப்பட்டு இஸ்ரவேல் தேசமாக ஸ்தாபிக்கப்படுகிறார்கள். மேசியாவின் ஆட்சிக் காலத்தில் அவர்கள் எல்லோரும் இரட்சிக்கப்பட்டு ஆசீர்வதிக்கப் படுவார்கள். (ஏசா 2:2-4; ஏசா 9:6-7; ஏசா 11:10-12; ஏசா 66:7-8; எரே 30:31; சக. 14; அப் 15:13-18; ரோமர் 11:25-29).

"அவன் என்னோடே ஒப்புரவாவான்" - கர்த்தருடைய சத்துருக்கள் முட்செடியையும், நெரிஞ்சிலையும் போல இருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை ஏகமாய்க் கொளுத்திவிடுவார். அவர்கள் கொளுத்தப்படக்கூடாது என்றால் கர்த்தரோடு ஒப்புரவாக வேண்டும். அவர்கள் கர்த்தருடைய பெலனைப் பற்றிக் கொள்ள வேண்டும். கர்த்தரோடு சமாதானமாக இருக்க வேண்டும். அவர்கள் கர்த்தரோடு ஒப்புரவானால் அவர்களும் இஸ்ரவேலோடு ஆசீர்வதிக்கப் படுவார்கள். (ஏசா 27:5-6).

27 அதிகாரம்

"யாக்கோபு வேர்பற்றி" - கர்த்தர் யூதாவையும், இஸ்ரவேலையும் மறுபடியும் ஒரு திராட்சத்தோட்டமாக நடுவார். அவர்கள் வேர்பற்றி பூத்துக்காய்த்து உலகத்தைப் பலனால் நிரப்புவார்கள். அவர்கள் மூலமாக எல்லா தேசங்களும் ஆசீர்வதிக்கப்படும். (ஏசா 5:1-7).

(ஆ) தேவனுடைய விசாரிப்பு - (5:3-4)

ஏசா 27:7 அவர் அவனை அடித்தவர்களை அடித்ததுபோல இவனை அடிக்கிறாரோ? அவர்கள் கொல்லப்படும் கொலையாய் இவன் கொல்லப் படுகிறானோ?

"அவர் அவனை அடித்தவர்களை அடித்தது போல இவனை அடிக்கிறாரோ?" - கர்த்தர் இஸ்ரவேலின் சத்துருக்களை அடித்து அழித்தது போல இஸ்ரவேலரை அடிக்கமாட்டார். இஸ்ரவேலின் பாவங்களினிமித்தம் அவர்களைத் தண்டிப்பார். ஆனாலும் அவர்களை இரட்சித்து மீட்டுக் கொள்வார். தம்முடைய சத்துருக்களையோ கர்த்தர் அழித்துப் போடுவார். (ஏசா 63:1-5; சக 14; மத் 25:31-46).

(இ) பதிலுரை - ஒன்பது அம்ச நியாயத்தீர்ப்பு - (5:5)

ஏசா 27:8 தேவரீர் ஜனத்தைத் துரத்தி விடுகையில் மட்டாய் அதனோடே வழக்காடுகிறீர்; கொண்டல்காற்றடிக்கிற நாளிலே அவர் தம்முடைய கடுங் காற்றினால் அதை விலக்கிவிடுகிறார்.

ஏசா 27:9 ஆகையால், அதினால் யாக்கோபின் அக்கிரமம் நிக்கிரகம் பண்ணப்படும்; தோப்பு விக்கிரகங்களும் சிலைகளும் இனி நிற்காதபடி அவர்கள் பலிபீடங்களின் கல்லுகளையெல்லாம் நொறுக்கப்பட்ட சுண்ணாம்பு கல்லுகளாக்கி விடும்போது, அவர்களுடைய பாவத்தை அவர் அகற்றுவாரென்பதே அதினால் உண்டாகும் பலன்.

ஏசா 27:10 அரணான நகரம் அவாந்தரையாகும், அந்த வாசஸ்தலம் தள்ளுண்டு வனாந்தரத்தைப்போல விட்டு விடப்பட்டதாயிருக்கும்; கன்றுக்குட்டிகள் அங்கே மேய்ந்து, அங்கே படுத்துக் கொண்டு அதின் தழைகளைத் தின்னும்.

ஏசா 27:11 அதின் கொப்புகள் உலரும் போது ஒடிந்துபோம்; ஸ்திரீகள் வந்து அவைகளைக் கொளுத்தி விடுவார்கள்; அது உணர்வுள்ள ஜனமல்ல; ஆகையால் அதை உண்டாக்கினவர் அதற்கு இரங்காமலும், அதை உருவாக்கினவர் அதற்குக் கிருபைசெய்யாமலும் இருப்பார்.

"மட்டாய்" - கர்த்தர் தம்முடைய ஜனங்களைச் சிட்சிக்கும்போது ஒரளவு மட்டுமே சிட்சிப்பார். அவர்களுக்குத் தண்டனை கொடுக்கும்போது மிகவும் மட்டாகத் தண்டனை கொடுப்பார். (ஏசா 27:8-9).

"கொண்டல்காற்றடிக்கிற நாளிலே" - ஏசா 27:7 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் நியாயத்தீர்ப்பு நிறைவேறும் நாளிலே. ஜனங்கள் திருந்துவதற்காக இந்த நியாயத்தீர்ப்பு கொடுக்கப்படுகிறது. அவர்கள் அழிந்து போவதற்காகக் கர்த்தர் அவர்களை சிட்சிக்கவில்லை. கொண்டல் காற்று மெதுவாக அடிக்கும். அதுபோல கர்த்தர் தம்முடைய ஜனங்களை மெதுவாகத் தண்டிப்பார். (யோபு 27:21).

"ஆகையால், அதினால் யாக்கோபின் அக்கிரமம் நிக்கிரகம்பண்ணப்படும்" - கர்த்தர் தம்முடைய ஜனத்தின்மீது நியாயத்தீர்ப்பை அனுப்புவார். இதனால் அவர்கள் அக்கிரமங்கள் நீங்கி சுத்திகரிக்கப்படுவார்கள். அவர்கள் சுத்திகரிக்கப்பட்டபின்பு தோப்பு விக்கிரகங்களையும், சிலைகளையும், பலிபீடங்களையும் நொறுக்கிப் போடுவார்கள்.

27 அதிகாரம்

"அரணான நகரம் அவாந்தரையாகும்" - பாபிலோன் அழிக்கப்படும். ஜனங்களுடைய குடியிருப்புப் பகுதியாக இருந்தது காட்டு மிருகங்கள் வசிக்கும் வனாந்தரமாகும். (ஏசா 13:19-22).

(ஈ) இஸ்ரவேலர் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படுகிறார்கள் - (11:10-15)

ஏசா 27:12 அக்காலத்திலே, கர்த்தர் ஆற்றங்கரையின் விளைவுதொடங்கி எகிப்தின் நதிமட்டும் போரடிப்பார்; இஸ்ரவேல் புத்திரரே, நீங்கள் ஒவ்வொருவராய்ச் சேர்க்கப்படுவீர்கள்.

ஏசா 27:13 அக்காலத்திலே பெரிய எக்காளம் ஊதப்படும்; அப்பொழுது, அசீரியா தேசத்திலே சிதறடிக்கப் பட்டவர்களும், எகிப்துதேசத்திலே துரத்திவிடப்பட்டவர்களும் வந்து, எருசலேமிலுள்ள பரிசுத்த பர்வதத்திலே கர்த்தரைப் பணிந்துகொள்வார்கள்.

பாபிலோனைப் பற்றிய செய்திகள்

1. அவர்கள் கர்த்தரைப் பற்றியும், அவருடைய திட்டத்தைப் பற்றியும், அவருடைய வழிகளைப் பற்றியும் அறிந்து கொள்ளவில்லை.

2. கர்த்தர் அவர்கள்மீது இரங்காமல் இருப்பார்.

3. கர்த்தர் அவர்கள்மீது கிருபை செய்யாமல் இருப்பார்.

"அக்காலத்திலே" - ஆயிரம் வருஷ அரசாட்சியின் காலத்திலே. தேசங்களில் சிதறியிருக்கும் யூதர்கள் ஒவ்வொருவராக வாக்குத்தத்த தேசத்திற்கு மறுபடியும் அழைத்து வரப்படுவார்கள். மேசியாவின்கீழ் அவர்கள் நித்திய தேசமாக ஸ்தாபிக்கப்படுவார்கள். (ஏசா 11:10-12; எரே 31:32; எசே 37; மத் 24:31). இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பு எல்லா யூதர்களும் பாலஸ்தீன தேசத்தில் கூட்டிச் சேர்க்கப்படுவதில்லை. அதற்குப் பின்பு அவர்கள் முழுவதுமாகக் கூட்டிச் சேர்க்கப் படுவார்கள். (மத் 24:31).

"எகிப்தின் நதிமட்டும் போரடிப்பார்" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது கர்த்தருடைய கிரியைக்கு தடையாக இருக்கும் எல்லா தடைகளும் அகற்றப்படும். ஐபிராத்து நதியும், நைல்நதியும் தண்ணீரில்லாமல் வற்றிப்போகும். (ஏசா 11:15).

"நீங்கள் ஒவ்வொருவராய்ச் சேர்க்கப் படுவீர்கள்" - இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்திலும்உள்ளவர்கள்ஒவ்வொருவராக எல்லோரும் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். (ஏசா 11:10-12; எசே 37).

"அக்காலத்திலே பெரிய எக்காளம் ஊதப்படும்" - இதுவும் ஆயிரம் வருஷ அரசாட்சியின் காலமாகும். பெரிய எக்காளம் ஊதப்படும்போது யூதர்கள் எல்லோரும் எல்லா தேசங்களிலிருந்தும் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். (ஏசா 11:10-12; எசே 37).இந்த எக்காளமும் மத் 24:31 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் எக்காளமும் ஒன்றே.

"எருசலேமிலுள்ள பரிசுத்த பர்வதத்திலே" - அக்காலத்தில் இயேசு கிறிஸ்து சீயோன் மலையிலிருந்து ஆளுகை செய்வார். (ஏசா 2:2-4; சக 14).

28 அதிகாரம்

VI. **ஏழு ஐயோக்கள் - உபத்திரவமும் ஆயிர வருஷமும்** - (28:1-35:10; 5:8)

1. எப்பிராயீமுக்கு ஐயோ

(1) **பாவங்களும் நியாயத்தீர்ப்பும்** - (2இராஜா 17; ஏசா 5:7)

ஏசா 28:1 எப்பிராயீமுடைய வெறியரின் பெருமையான கிரீடத்துக்கு ஐயோ, மதுபானத்தால் மயக்கமடைந்தவர்களின் செழிப்பான பள்ளத்தாக்குடைய கொடுமுடியின் மேலுள்ள அலங்கார ஜோடிப்பு வாடிப்போகும் புஷ்பமே!

ஏசா 28:2 இதோ, திராணியும் வல்லமையுமுடைய ஒருவன் ஆண்டவரிடத்தில் இருக்கிறான்; அவன் கல்மழையைப்போலவும், சங்காரப் புசல் போலவும், புரண்டு வருகிற பெருவெள்ளம் போலவும் வந்து, கையினாலே அதைத் தரையில் தள்ளிவிடுவான்.

ஏசா 28:3 எப்பிராயீமுடைய வெறியரின் பெருமையான கிரீடம் காலால் மிதித்துப் போடப்படும்.

ஏசா 28:4 செழிப்பான பள்ளத்தாக்குடைய கொடுமுடியின் மேலுள்ள அலங்கார ஜோடிப்பாகிய வாடிய புஷ்பம், பருவகாலத்துக்குமுன் பழுத்ததும், காண்கிறவன் பார்த்து, அது தன் கையில் இருக்கும்போதே விழுங்குகிறதுமான முதல் கனியைப்போல இருக்கும்.

ஏசா 28:1-33:1 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் "ஐயோ"க்கள்

1. எப்பிராயீமுடைய வெறியரின் பெருமையான கிரீடத்துக்கு ஐயோ (ஏசா 28:1).
2. யூதாவினுடைய மதுபானக்காரருக்கு ஐயோ. (ஏசா 28:7).
3. எருசலேமிற்கு ஐயோ. (ஏசா 29:1).
4. ஏமாற்றுக்காரருக்கும், மாய்மாலக் காரருக்கும் ஐயோ. (ஏசா 29:15).
5. முரட்டாட்டமுள்ள புத்திரருக்கு ஐயோ. (ஏசா 30:2).
6. எகிப்தை நம்பிக் கொண்டிருக்கிறவர் களுக்கு ஐயோ. (ஏசா 31:1).
7. துரோகம் பண்ணுகிறவர்களுக்கு ஐயோ. (ஏசா 33:1).

தீர்க்கதரிசன எண் - 30

"எப்பிராயீமுடைய வெறியரின் பெருமையான கிரீடத்துக்கு ஐயோ......." (ஏசா 28:1-29) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. எப்பிராயீமின்மீதும், சமாரியாவின்மீதும் நியாயத்தீர்ப்பு வரும். (ஏசா 28:1).
2. எப்பிராயீமின் மகிமை வாடிப்போன புஷ்பத்தைப் போல இருக்கும். (ஏசா 28:1).
3. எப்பிராயீமின்மீதும், சமாரியாவின்மீதும் கர்த்தர் திராணியும் வல்லமையுமுடைய ஒருவனை அனுப்புவார். (ஏசா 28:2).
4. எப்பிராயீமுடைய வெறியரின் பெருமையான கிரீடம் காலால் மிதித்துப் போடப்படும். (ஏசா 28:3).
5. எப்பிராயீமும், சமாரியாவும் முழுவதுமாக அழிந்துபோகும். (ஏசா 28:4).
6. சேனைகளின் கர்த்தர் தமது ஜனத்தில் மீதியானவர்களுக்கு மகிமையான கிரீடமாகவும், அலங்காரமான முடியாகவும் இருப்பார். (ஏசா 28:5).

ஏசாயா - தொகுப்புரை

28 அதிகாரம்

7. நியாயம்விசாரிக்கஉட்காருகிறவனுக்கு நியாயத்தின் ஆவியாகவும், யுத்தத்தை அதின் வாசல் மட்டும் திருப்புகிறவர்களின் பராக்கிரமமாகவும் இருப்பார். (ஏசா 28:6).

8. ஆசாரியனும் தீர்க்கதரிசியும் மதுபானத்தால் மதிமயங்கி, நியாயந் தீர்க்கிறதில் இடறுகிறார்கள். (ஏசா 28:7-8) ஆகையினால் கர்த்தர் சிறுபிள்ளைகளுக்கு உபதேசத்தை உணர்த்துவார். (ஏசா 28:9).

9. கர்த்தருடைய வார்த்தை அவர்களுக்குக் கற்பனையின்மேல் கற்பனையும், பிரமாணத்தின் மேல் பிரமாணமுமாக இருக்கும். (ஏசா 28:10-13).

10. இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாக இருக்கும். (ஏசா 28:11-12).

11. எப்பிராயீமின் அழிவு யூதாவுக்கும், எருசலேமிற்கும் எச்சரிப்பாக இருக்கும். (ஏசா 28:14-22).

12. அஸ்திபாரமாக ஒரு கல்லை கர்த்தர் சீயோனிலே வைப்பார். அது பரீட்சிக்கப் பட்டதும், விலையேறப் பெற்றதும், திட அஸ்தி பாரமுள்ளதுமான மூலைக் கல்லாயிருக்கும் (ஏசா 28:16).

13. யூதாவின் அடைக்கலம் அழிந்து போகும். (ஏசா 28:17-18).

14. அது புரண்டுவந்தமாத்திரத்தில் உங்களை அடித்துக்கொண்டுபோம்; அது நாள்தோறும் இரவும்பகலும் புரண்டுவரும் (ஏசா 28:19).

15. அதைப்பற்றிப் பிறக்குஞ்செய்தியைக் கேட்பதும் சஞ்சலத்தை உண்டாக்கும். (ஏசா 28:19).

16. யூதா தன்னுடைய அடைக்கலமாக நம்பும் தேசம் அதற்குப் பாதுகாப்பைத் தருவதற்குப் போதுமானதாக இராது. (ஏசா 28:20).

17. கர்த்தர் தமது கிரியையாகிய அபூர்வமான கிரியையைச் செய்வார். தமது வேலையாகிய அபூர்வமான வேலையை நிறைவேற்றுவார். (ஏசா 28:21-22).

18. தேசம் அனைத்தின்மீதும் நிர்ணயிக்கப் பட்ட சங்காரம் வரும். (ஏசா 28:22).

19. யூதாவின்மீது நீதியான நியாயத்தீர்ப்பு நிச்சயம் உண்டாகும். (ஏசா 28:23-28).

20. கர்த்தரிடமிருந்து நியாயத்தீர்ப்பு வரும். (ஏசா 28:29).

"பெருமையான கிரீடம்" - எப்பிராயீமின் தலைநகரமாகிய சமாரியா அதற்குப் பெருமையான கிரீடமாக உள்ளது.

சபிக்கப்படுபவை

1. பெருமையான கிரீடம் - சமாரியா
2. எப்பிராயீமில் மதுபானத்தினால் மயக்கம் அடைந்தவர்கள்.

"அலங்கார ஜோடிப்பு வாடிப்போகும் புஷ்பமே" - எப்பிராயீம் தேசத்தில் சமாரியா பள்ளத்தாக்கிலிருந்து தலையைப் போல வெளியே வரும். எப்பிராயீமின் குடிகாரர்கள் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணுவார்கள். சமாரியா தேசம் பர்வதத்தில் அமைந்துள்ளது. இதன் பள்ளத்தாக்கு பார்ப்பதற்கு இரம்மியமாக இருக்கும். மலர்களினால் அலங்கரிக்கப்பட்ட கிரீடம் போன்று இருக்கும். இதன் அழகு விரைவில் அழிந்துபோகும். எப்பிராயீம் அசீரியாவின் சிறையிருப்புக்குப் போகும்போது இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும். (2இராஜா 17)

"இதோ, திராணியும் வல்லமையுமுடைய ஒருவன் ஆண்டவரிடத்தில் இருக்கிறான்" - இது அசீரியாவின் ராஜாவைக் குறிக்கும் வார்த்தையாகும். இவன் சமாரியாவை அழிப்பான். இஸ்ரவேலின் பத்துக் கோத்திரத்தாரைச் சிறைப்பிடித்துச் செல்வான். (2இராஜா 17). இவன் எப்பிராயீமின்மீதும் சமாரியாவின்மீதும் கல்மழையைப் போலவும், சங்காரப் புசல்போலவும்,புரண்டு வருகிற பெருவெள்ளம் போலவும் வருவான். எப்பிராயீம் அழிக்கப்படும். (ஏசா 28:2-4).

28 அதிகாரம்

(2) மீதியாக இருப்பவர்கள் - *(ஏசா 1:9)*

ஏசா 28:5 அக்காலத்திலே சேனைகளின் கர்த்தர் தமது ஜனத்தில் மீதியானவர்களுக்கு மகிமையான கிரீடமாகவும், அலங்காரமான முடியாகவும்,

ஏசா 28:6 நியாயம் விசாரிக்க உட்காருகிறவனுக்கு நியாயத்தின் ஆவியாகவும், யுத்தத்தை அதின் வாசல்மட்டும் திருப்புகிறவர்களின் பராக்கிரமமாகவும் இருப்பார்.

"அக்காலத்திலே" - அசீரியரால் எப்பிராயீமும், சமாரியாவும் அழிக்கப்படும் காலத்திலே. இந்தத் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டு ஒருசில மாதங்களுக்குள் நிறைவேறுகிறது. எப்பிராயீம் முழுவதுமாக அழிக்கப்பட்டு சிறையிருப்புக்குப் போகும். யூதாவில் ஒருசிலர் மீதியாக வைக்கப்படுவார்கள். சிறையிருப்புக்குப் போகாமல் யூதாவில் மீதியாயிருக்கிறவர்களுக்கு கர்த்தர் மகிமையான கிரீடமாகவும், அலங்காரமான முடியாகவும் இருப்பார். (ஏசா 28:5-6). இவ்வாறாக ஏசா 28:5 ஆவது வசனத்தில் உள்ள தீர்க்கதரிசனம் யூதாவுக்கும், எருசலேமிற்கும் கூறப் பட்டிருக்கிறது. ஏசா 28:1-4 ஆகிய வசனங்களில் கூறப் பட்டிருக்கும் தீர்க்கதரிசனம் எப்பிராயீமிற்குக் கூறப்பட்டிருக்கிறது. கர்த்தர் அசீரியரிடமிருந்து யூதாவைப் பாதுகாப்பார். ஏசா 36:1-37:38 ஆகிய வசனங்களில் கூறப்பட்டுள்ளபடி இது நிறைவேறும்.

கர்த்தர் யூதாவோடு இருக்கும் விதம்

1. மகிமையின் கிரீடம் *(ஏசா 28:5)*
2. அலங்காரமான முடி
3. நியாயத்தின் ஆவி *(ஏசா 28:6)*
4. சேனைக்குப் பராக்கிரமம்

2. யூதாவுக்கு ஐயோ

(1) யூதாவின் பாவங்கள் - *(5:7)*

ஏசா 28:7 ஆனாலும் இவர்களும் திராட்சரசத்தால்மயங்கி, மது பானத்தால் வழிதப்பிப் போகிறார்கள்; ஆசாரியனும் தீர்க்கதரிசியும் மதுபானத்தால் மதிமயங்கி, திராட்சரசத்தால் விழுங்கப்பட்டு, சாராயத்தினால் வழிதப்பி, தீர்க்கதரிசனத்தில் மோசம்போய், நியாயந்தீர்க்கிறதில் இடறுகிறார்கள்.

ஏசா 28:8 போஜனபீடங்களெல்லாம் வாந்தியினாலும் அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கிறது; சுத்தமான இடமில்லை.

ஏசா 28:9 அவர் யாருக்கு அறிவைப் போதிப்பார்? யாருக்கு உபதேசத்தை உணர்த்துவார்? பால் மறந்தவர்களுக்கும், முலை மறக்கப் பண்ணப் பட்டவர்களுக்குமே.

ஏசா 28:10 கற்பனையின்மேல் கற்பனையும் கற்பனையின்மேல் கற்பனையும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாம் என்கிறார்கள்.

ஏசா 28:11 பரியாச உதடுகளினாலும் அந்நிய பாஷையினாலும் இந்த ஜனத்தோடே பேசுவார்.

ஏசா 28:12 இதுவே நீங்கள் இளைத்தவனை இளைப்பாறப் பண்ணத்தக்க இளைப்பாறுதல்; இதுவே ஆறுதல் என்று அவர்களோடே அவர் சொன்னாலும் கேட்கமாட்டோம் என்கிறார்கள்.

ஏசா 28:13 ஆதலால் அவர்கள்போய், பின்னிட்டு விழுந்து, நொறுங்கும்படிக்கும், சிக்குண்டு பிடிபடும்படிக்கும், கர்த்தருடைய வார்த்தை அவர்களுக்குக் கற்பனையின் மேல் கற்பனையும், கற்பனையின்மேல் கற்பனையும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாக இருக்கும்.

ஏசாயா - தொகுப்புரை

28 அதிகாரம்

"இவர்களும் திராட்சரசத்தால் மயங்கி" - எப்பிராயீமைப் போல (ஏசா 28:1,3) யூதாவும் இவர்களும் திராட்சரசத்தால்மயங்கி மதுபானத்தால் வழிதப்பிப்போகிறார்கள்.

மதுபான வெறியினால் யூதாவின் பாவங்கள்

1. திராட்சரசத்தால் மயங்குகிறார்கள். (ஏசா 28:7).
2. வழிதப்பிப்போகிறார்கள்.
3. மதுபானத்தால் மதிமயங்குகிறார்கள்.
4. நியாயந்தீர்க்கிறதில் இடறுகிறார்கள்.
5. அசுத்தமாக ஜீவிக்கிறார்கள். (ஏசா 28:8).
6. கர்த்தருடைய வழிகளில் இடறுகிறார்கள். (ஏசா 28:9-13).
7. தீர்க்கதரிசியின் மூலமாகக் கர்த்தர் கொடுக்கும் உபதேசத்தை ஏற்க மறுக்கிறார்கள்.

எப்பிராயீமைப் போலவே யூதாவும் பாவம் செய்வதாக ஏசாயா இங்கு கூறுகிறார். யூதா தன்னுடைய பாவத்தில் தொடர்ந்தால் அதுவும் நியாயந்தீர்க்கப்படும். யூதாவை விட எப்பிராயீம் அதிகமாகப் பாவம் செய்தது. எப்பிராயீமில் மீதியான ராஜா ஒருவனுமில்லை. கர்த்தர் யூதாவின்மீது அனுப்ப வேண்டிய நியாயத் தீர்ப்பைத் தாமதப்படுத்தினார். ஏனெனில் யூதா தேசத்தில் ஒருசில சமயங்களில் ஆவிக்குரிய எழுப்புதல் உண்டாயிற்று. யூதா தேசத்து ராஜாக்களில் பலர் கர்த்தருக்குப் பயந்து ஜீவித்தார்கள். பத்துக் கோத்திரங்களிலிருந்தும், கர்த்தருக்குப் பயந்தவர்கள் யூதா தேசத்திற்கு வந்து கொண்டிருந்தார்கள். ஆகையினால் யூதா தேசம் இஸ்ரவேலின் 13 கோத்திரங்களுக்கும் பிரதிநிதியாக விளங்கிற்று. கர்த்தர் தாவீதோடு விசேஷித்த உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். தாவீதும், அவனுடைய குடும்பத்தாரும் இஸ்ரவேலை நித்தியமாக ஆளுகை செய்வார்கள். கர்த்தர் யூதாவை ஆளுகை செய்யும் கோத்திரமாகத் தெரிந்தெடுத்திருக்கிறார். இவ்வாறாக யூதா தேசத்தில் கர்த்தருடைய கிருபையும், சிலாக்கியமும் சிறந்து விளங்கிற்று. ஆனாலும் யூதா தேசத்தார் எப்பிராயீம் தேசத்தாரைப்போல பாவம் செய்தார்கள். இதன் விளைவாக எப்பிராயீம் சிறையிருப்புக்குப் போன பின்பு, 133 வருஷங்கள் கழித்து யூதாவும் சிறையிருப்புக்குப் போயிற்று. (2இராஜா 25).

"ஆசாரியனும் தீர்க்கதரிசியும் மதுபானத்தால் மதிமயங்கி" - இவர்கள் யூதா தேசத்தில் மேன்மக்களாக இருந்தார்கள். இவர்கள் சத்தியத்தில் தவறுகிறார்கள். நியாயந் தீர்க்கிறார்கள். கர்த்தருடைய வழியில் இடறி விழுகிறார்கள். ஆகையினால் இவர்களும் எப்பிராயீமைப் போல தண்டிக்கப்படுவதற்கு நியமிக்கப் பட்டிருக்கிறார்கள்.

"சுத்தமான இடமில்லை" - யூதா தேசம் முழுவதுமே பாவத்தால் நிறைந்திருக்கிறது. ஜனங்கள் அசுத்தத்திலும், பாவத்திலும் ஜீவிக்கிறார்கள்.

"பால்மறந்தவர்கள்" - யூதா தேசத்தார் ஏசாயாவின் உபதேசத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகையினால் கர்த்தர் தம்முடைய வார்த்தையை ஆசாரியருக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் உபதேசிப்பதற்குப் பதிலாகச் சிறுபிள்ளைகளைப் போல இருக்கும் புதியவர்களுக்கு உபதேசிக்கிறார். சிறுகுழந்தைகளிடம் பரியாச உதடுகளினால் பேசுவதுபோல தம்முடைய பிரமாணத்தைப் புதிய ஜனங்களுக்கு ஆரம்ப நிலையிலிருந்து எடுத்துக் கூறுகிறார். இதுவரையிலும் தீர்க்கதரிசிகளுடைய வார்த்தை ஜனங்களுக்குப் புரியாத பாஷையைப் போல இருந்தது. கர்த்தர் புரியாததைப் புரிய வைக்கிறார்.

கற்பனை (precept) - צַו - tsav, tsawv - 6673

ஆண்பால் பெயர்ச்சொல் - பிரமாணம், கற்பனை, கூற்று, விக்கிரகம், ஒன்றுக்கும் உதவாதது (injunction; commandment; precept)

கட்டளையிடு (enjoin) - צָוָה - tsaw-vaw' – 6680

28 அதிகாரம்

வினைச்சொல் - விலக்கு, கட்டளையிடு, கற்பி, விதி, சொல்லு, உத்தரவு கொடு, அநுக்கிரகம் பண்ணு, நியமி, கட்டளைகொடு, ஆணையிடு, ஏற்படுத்து, விதித்த கட்டளை, கற்பிக்கப்படு, கட்டளையிடப்படு, ஒழுங்குபடுத்து (enjoin; appoint; charge; set in order)

அளவு (a rule) - קַו - kav, kawv - 6957

ஆண்பால் பெயர்ச்சொல் - நூல், அளவு, அதிபதி a rule; measuring cord) (ஏசா 28:10,13).

"பரியாச உதடுகளினாலும் அந்நிய பாஷையினாலும்" - யூதாவின் ஜனங்கள் குடித்து வெறித்திருக்கிறார்கள். ஏசாயாவின் மூலமாக வரும் கர்த்தருடைய செய்தி சிறுபிள்ளைகளுக்கே ஏற்றது என்று ஏளனமாகப் பேசுகிறார்கள். கர்த்தருடைய செய்தியை அவர்கள் விசுவாசிக்கவில்லை. கர்த்தருடைய செய்தி அவர்களுக்குப் பரியாச உதடுகளினால் பேசுவதுபோலவும், அந்நிய பாஷையினால் புரியாமல் பேசுவதுபோலவும் உள்ளது. கர்த்தர் அவற்றையே பயன்படுத்தி தம்முடைய பிள்ளைகளுக்குத் தமது சத்தியத்தை வெளிப்படுத்துகிறார். அந்நிய பாஷை அவிசுவாசிகளுக்கு ஓர் அடையாளமாக இருக்கிறது. (1கொரி 14:21-22). பரியாச உதடு என்று கூறப்பட்டிருப்பதினால் அது பாஷை அல்ல என்று பொருள்படாது. இது கேட்கிறவர்கள் புரிந்து கொள்ள முடியாத பாஷை என்றே பொருள்படும். (ஏசா 28:11; ஏசா 33:19).

அந்நிய பாஷையில் பேசுகிறவர் (jester) - לָעֵג - law-ayg' - 3934

பெயரடை - உளறுகிறவர், வேற்று பாஷையில் பேசுகிறவர் mockers (சங் 35:16); mock (2நாளா 30:10; நெகே 4:1; யோபு 11:3; யோபு 21:3; நீதி 1:26; நீதி 17:5; நீதி 30:17; எரே 20:7); laugh to scorn (2இராஜா 19:21; நெகே 2:19; யோபு 22:19; சங் 22:7; ஏசா 37:2); laugh (யோபு 9:23; சங் 80:6); have in derision (சங் 2:4; சங் 59:8)

பரியாசம் (mock) - לָעַג - law-ag' - 3932

வினைச்சொல் - பரிகாசம், நகை, சந்தோஷப்படு (to deride; speak unintelligibly; mock; stammer; laugh)

அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தில் மேலறையில் நடைபெற்ற சம்பவத்தைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. பெந்தெகொஸ்தே நாளில் 120 பேர் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டார்கள். ஆவியானவர் தங்களுக்குத் தந்த வார்த்தைகளின்படியே பேசினார்கள். இது ஏசாயா 28:11 ஆவது வசனத்தின் நிறைவேற்றமாகும். அவர்களை அங்கு கூடிவந்தவர்கள் பரியாசம் பண்ணினார்கள்.

பாஷைகளின் ஆசீர்வாதம்

1. இளைத்தவனுக்கு இளைப்பாறுதல்
2. இளைத்தவனுக்கு ஆறுதல்

"சொன்னாலும் கேட்கமாட்டோம் என்கிறார்கள்" - பரிசுத்த ஆவியானவரால் அந்நிய பாஷையில் பேசுவதைப் பற்றி வேதாகமத்தில் முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. (அப் 2; அப் 10; அப் 19; 1கொரி 12-14) அதே வேளையில் இந்த அனுபவத்தை மற்றவர்களிடம் சொன்னாலும் அவர்கள் கேட்கமாட்டார்கள் என்றும் முன்னறிவிக்கப் பட்டிருக்கிறது.(ஏசா28:12,16, 1கொரி 14:21-22, மத் 21:42-44; 1கொரி 3:11; அப் 4:11; எபே 2:20; 1பேதுரு 2:4-8). பரியாச உதடுகளினால் பேசுவதும், அந்நிய பாஷையினால் பேசுவதும் யூதாவின்மீது புறஜாதி தேசங்களாகிய அசீரியாவினாலும், பாபிலோனாலும்வரும் நியாயத்தீர்ப்புக்களைக் குறிக்கவில்லை. இது அவர்களுடைய ஆவிக்குரிய அனுபவத்தையே குறிப்பிடுகிறது.

28 அதிகாரம்

“பின்னிட்டு விழுந்து” - இந்தச் செய்தி யூதாவிலும், எப்பிராயீமிலும் குடித்து வெறித்திருக்கிறவர்களுக்குக் கூறப்படுகிறது. இவர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ள வில்லை. மேசியாவிடம் இடறி விழுகிறார்கள். இருளில் ஜீவித்து அழிந்து போகிறார்கள். (ரோமர் 9:32-33; லூக்கா 21:20-24).

நொறுக்குதல் (broken) - שָׁבַר - shaw-bar’ - 7665

வினைச்சொல் - முறி, முறித்துப்போடு, பிள, நொறுக்கு, உடைத்துப்போடு, உடை, முறித்துவிடு, அறு (to break off; break in pieces; be crushed) யூதாவும், எப்பிராயீமும் கிறிஸ்துவையும், அவருடைய சுவிசேஷத்தையும் விசுவாசியாததினால் நொறுங்கிப் போனார்கள். (ரோமர் 11:7-29). அவர்கள் கல்லின்மேல் விழுந்ததினால் நொறுங்கிப் போகவில்லை. கல் அவர்கள்மேல் விழுந்ததினால் நொறுங்கிப் போனார்கள். (மத் 21:42-44; லூக்கா 20:18).

“சிக்குண்டு பிடிபடும்படிக்கும்” - கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணித்ததற்காக மற்ற தேசங்கள் மத்தியில் யூதா தேசம் சிறைப்பட்டுப் போயிற்று. (மத் 23:37-39;லூக்கா 21:20-24; ரோமர் 11:25-29).

(2) யூதாவின்மீது நியாயத்தீர்ப்பு

ஏசா28:14ஆகையால் எருசலேமிலுள்ள இந்த ஜனத்தை ஆளுகிற நிந்தனைக் காரரே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்.

ஏசா 28:15 நீங்கள்: மரணத்தோடே உடன்படிக்கையும், பாதாளத்தோடே ஒப்பந்தமும் பண்ணினோம்; வாதை பெருவெள்ளமாய்ப் புரண்டுவந்தாலும் எங்களை அணுகாது; நாங்கள் பொய்யைஎங்களுக்கு அடைக்கலமாக்கி, மாயையின் மறைவிலே வந்து அடைந்தோம் என்கிறீர்களே.

ஏசா 28:16 ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது: இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்; அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப் பெற்றதும், திட அஸ்தி பாரமுள்ளதுமான மூலைக் கல்லாயிருக்கும், விசுவாசிக்கிறவன் பதறான்.

ஏசா 28:17 நான் நியாயத்தை நூலும், நீதியைத் தூக்கு நூலுமாக வைப்பேன்; பொய் என்னும் அடைக்கலத்தைக் கல்மழை அழித்துவிடும்; மறைவிடத்தை ஜலப்பிரவாகம் அடித்துக்கொண்டு போகும்.

ஏசா 28:18 நீங்கள் மரணத்தோடு செய்த உடன்படிக்கை விருதாவாகி, நீங்கள் பாதாளத்தோடு செய்த ஒப்பந்தம் நிற்காதேபோம்; வாதை புரண்டுவரும் போது அதின்கீழ் மிதிக்கப்படுவீர்கள்.

ஏசா 28:19 அது புரண்டுவந்த மாத்திரத்தில் உங்களை அடித்துக் கொண்டுபோம்; அது நாள்தோறும் இரவும்பகலும் புரண்டுவரும்; அதைப்பற்றிப் பிறக்குஞ்செய்தியைக் கேட்பதும் சஞ்சலத்தை உண்டாக்கும்.

ஏசா 28:20 கால் நீட்டப் படுக்கையின் நீளம் போதாது; மூடிக்கொள்ளப் போர்வையின் அகலமும் போதாது.

ஏசா 28:21 கர்த்தர் தமது கிரியையாகிய அபூர்வமான கிரியையைச் செய்யவும், தமது வேலையாகிய அபூர்வமான வேலையை நிறைவேற்றவும், அவர் பெராத்சீம் மலையிலே எழும்பினதுபோல எழும்பி, கிபியோனின் பள்ளத்தாக்கில் கோபங்கொண்டதுபோல கோபங் கொள்வார்.

ஏசா 28:22 இப்பொழுதும் உங்கள் கட்டுகள் பலத்துப்போகாதபடிக்குப் பரியாசம்பண்ணாதிருங்கள்; தேசம் அனைத்தின்மேலும் நிர்ணயிக்கப்பட்ட சங்காரத்தின் செய்தியைச் சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவராலேகேள்விப்பட்டிருக்கிறேன்.

ஏசாயா - தொகுப்புரை

28 அதிகாரம்

ஏசா 28:16 ஆதலால் கர்த்தராகிய

"கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்" - கர்த்தர் யூதாவின் ராஜாக்களுக்கு இன்னும் எச்சரிப்பைக் கூறுகிறார். அவர்கள் மரணத்தோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறார்கள். பாதாளத்தோடு ஒப்பந்தம் பண்ணியிருக்கிறார்கள். (ஏசா 28:14-15).

"மரணத்தோடே உடன்படிக்கையும், பாதாளத்தோடே ஒப்பந்தமும் பண்ணினோம்" - நியாயத்தீர்ப்பிலிருந்து தாங்கள் பாதுகாப்பாக இருப்பதாக யூதா நினைக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய நினைவு தவறானது.

"வாதை பெருவெள்ளமாய்ப் புரண்டு வந்தாலும் எங்களை அணுகாது" - இதுவும் அவர்களுடைய தவறான நம்பிக்கையே. யூதாவின்மீது வாதைகள் வந்தது. பாபிலோனியர் யூதாவுக்கு எதிராக வந்தார்கள். (2இராஜா 25; 2நாளா 36; எரே 25) கிபி. 70 இல் ரோமாபுரியார் யூதருக்கு விரோதமாக வந்தார்கள். (ஏசா 28:16, லூக்கா 21:20-24) இவர்கள் எருசலேமை முன்னறிவிக்கப்பட்டபடி முற்றிலுமாக அழித்துப் போட்டார்கள். (ஏசா 28:14-22).

"நாங்கள் பொய்யை எங்களுக்கு அடைக்கலமாக்கி" - யூதா இதுவரையிலும் மாயையை நம்பிற்று. கர்த்தரையும், கர்த்தருடைய வார்த்தைக்கும் அவர்கள் செவிகொடுக்க வில்லை. இதனால் அவர்களுக்கு முன்னறிவிக்கப்பட்டபடி நியாயத்தீர்ப்பு வந்தது.

"அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்" - கர்த்தர் மேசியாவை இந்தப் பூமிக்கு அனுப்பப் போகிறார் என்னும் தீர்க்கதரிசனம். (மத் 21:42-44).

மேசியாவின் அடையாளங்கள்

1. அஸ்திபாரக்கல்(ஏசா 28:16; எபே 2:20)
2. புரீட்சிக்கப்பட்ட கல். (மத் 21:42-44; அப் 4:11)
3. விலையேறப்பெற்ற ஜீவனுள்ள கல். (1பேதுரு 2:4-8)
4. அஸ்திபாரக்கல் (1கொரி 3:11)
5. ஞானக்கன்மலை (சங் 78:16; எண் 20:8-11; 1கொரி 10:4)
6. மூலைக்குத் தலைக்கல் (சங் 118:22)
7. அற்பமாய் எண்ணப்பட்ட கல் (சங் 118:22; அப் 4:11)
8. இடறுதற்கான கல் (ஏசா 8:14; ரோமர் 9:32-33)
9. ஜீவனுள்ள கல் (1பேதுரு 2:4)
10. கன்மலை (ஏசா 8:14; 1பேதுரு 2:8)

"சீயோன்" - இது எருசலேமைக் குறிக்கும். இந்த வசனத்தில் இது சபையையோ அல்லது பூமியிலுள்ள தேவனுடைய ஆவிக்குரிய ராஜ்யத்தையோ குறிக்காது. (2சாமு 5:7).

"விசுவாசிக்கிறவன் பதறான்" - கர்த்தர் ஸ்திரமான அஸ்திபாரமாக இருக்கிறார். கர்த்தரில் தன் நம்பிக்கையை வைத்திருக்கிறவன் பதறமாட்டான். (ரோமர் 9:33; 1பேதுரு 2:6).

"நான் நியாயத்தை நூலும், நீதியைத் தூக்கு நூலுமாக வைப்பேன்" - கர்த்தர் யூதாவை நியாயப்பிரமாணத்தின்படி நியாயந்தீர்ப்பார். நியாயமும், நீதியும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் ஆதாரமாக இருக்கும்.

"பொய் என்னும் அடைக்கலத்தைக் கல்மழை அழித்துவிடும்" - யூதாவின்மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு கல்மழையைப்போலவும், ஜலப்பிரவாகம் போலவும் வரும். ஆகையினால் கர்த்தரைத் தவிர அவர்கள் வேறு எதை நம்பினாலும் அது அவர்களுக்குப் பாதுகாப்பைத் தராது. அவர்களுடைய மாயையான நம்பிக்கை அகன்றுபோகும்.

28 அதிகாரம்

"அது நாள்தோறும் இரவும்பகலும் புரண்டு வரும்" - யூதாவின்மீது நியாயத்தீர்ப்பு வரும் போது அது தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றும் வரையிலும் தொடரும்.

"அதைப்பற்றிப் பிறக்குஞ்செய்தியைக் கேட்பதும் சஞ்சலத்தை உண்டாக்கும்" - யூதாவின்மீது வரும் நியாயத்தீர்ப்பை அனுபவிப்பது மட்டுமல்லாமல் அதைப் பற்றிய செய்தியைக் கேள்விப்பட்டாலே சஞ்சலம் உண்டாகும். கிபி. 70 ஆம் வருஷத்தில் கர்த்தருடைய பிள்ளைகளில் ஏராளமானோர் சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டார்கள். அவர்களைக் கொல்வதற்குக்கூட போதுமான அளவு சிலுவைகள் அவர்களுக்குக் கிடைக்க வில்லை. எருசலேமின் அலங்கங்களுக்கு வெளியே மரித்தவர்களின் உடல்கள் குவியல்களாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

"கால் நீட்டப் படுக்கையின் நீளம் போதாது" - எருசலேமின் நம்பிக்கை அற்றுப்போகும். அவர்கள் நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு மனுஷரையும் புறஜாதியாரையும் நம்புகிறார்கள். அவர்களுடைய நம்பிக்கை அவர்களுக்கு வீணாக இருக்கும்.

"அபூர்வமான கிரியை" - யூதாவின்மீது வரும் நியாயத்தீர்ப்பு "அபூர்வமான கிரியை" என்று இங்கு அழைக்கப்படுகிறது. கர்த்தர் தம்முடைய சத்துருக்களை அழிக்காமல் தம்முடைய ஜனத்தையே அழித்துப்போடுகிறார். ஆகையினால் இது அபூர்வமான கிரியையாக இருக்கிறது.

"பெராத்சீம் மலை" (mount Perazim) - (2சாமு 5:20-21; 1நாளா 14:11)

"கிபியோனின் பள்ளத்தாக்கில் கோபங் கொண்டதுபோல" - தாவீது இந்தப் பள்ளத்தாக்கில் பெலிஸ்தர்மீது வெற்றி கொண்டான். (1நாளா 14:16).

"தேசம் அனைத்தின்மேலும் நிர்ணயிக்கப் பட்ட சங்காரத்தின் செய்தி" - யூதாவின் ஜனங்கள் பரியாசம் பண்ணக்கூடாது என்று ஏசாயா எச்சரிக்கிறார். (ஏசா 28:14,22) ஏனெனில் யூதா தேசத்தின்மீது கர்த்தருடைய சங்காரம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.ஆக்கினையிலிருந்து யாரும் தப்ப முடியாது. ஆகையினால் தன்னுடைய சத்தத்திற்குச் செவிகொடுக்குமாறு ஏசாயா யூதாவின் ஜனங்களுக்குக் கூறுகிறார்.

(3) பரியாசம் பண்ணுகிறவர்கள் கடிந்துகொள்ளப்படுகிறார்கள்

ஏசா 28:23 செவிகொடுத்து என் சத்தத்தைக் கேளுங்கள்; நான் சொல்வதைக் கவனித்துக் கேளுங்கள்.

ஏசா 28:24 உழுகிறவன் விதைக்கிறதற்காக நாள்தோறும் உழுகிறதுண்டோ? தன் நிலத்தைக் கொத்தி நாள்தோறும் பரம்படிக்கிறது உண்டோ?

ஏசா 28:25 அவன் அதை மேலாக நிறுவின பின்பு, அதற்கேற்ற இடத்தில் உளுந்தைத் தெளித்து, சீரகத்தைத் தூவி, முதல்தரமான கோதுமையையும் தெரிந்துகொண்ட வாற்கோதுமையையும் கம்பையும் விதைக்கிறான் அல்லவோ?

ஏசா 28:26 அவனுடைய தேவன் அவனை நன்றாய்ப் போதித்து, அவனை உணர்த்துகிறார்.

ஏசா 28:27 உளுந்து தூலத்தாலே போரடிக்கப்படுகிறதில்லை; சீரகத்தின் மேல் வண்டிலின் உருளைச் சுற்ற விடப்படுகிறதுமில்லை; உளுந்து கோலினாலும் சீரகம் மிலாற்றினாலும் அடிக்கப்படும்.

ஏசா 28:28 அப்பத்துக்குத் தானியம் இடிக்கப்படும்; இடைவிடாமல் அவன் அதைப் போரடிக்கிறதில்லை; அவன் தன் வண்டிலின் உருளையால் அதை நசுக்குகிறதுமில்லை, தன் குதிரைகளால் அதை நொறுக்குகிறதுமில்லை.

28 அதிகாரம்

ஏசா 28:29 இதுவும் சேனைகளின் கர்த்தராலே உண்டாகிறது; அவர் ஆலோசனையில் ஆச்சரியமானவர், செயலில் மகத்துவமானவர்.

பரியாசம் பண்ணுகிறவர்களுக்குக் கட்டளைகள்

1. செவிகொடுங்கள்.
2. என் சத்தத்தைக் கேளுங்கள்.
3. நான் சொல்வதைக் கவனித்துக் கேளுங்கள்.

"உழுகிறவன் விதைக்கிறதற்காக நாள்தோறும் உழுகிறதுண்டோ?" - ஒரு விவசாயி தன்னுடைய நிலத்தில் அறுவடை செய்வதற்காக பலவிதமான வேலைகளைச் செய்ய வேண்டும். விதைப்பது, உழுவது, களையெடுப்பது, நீர்ப்பாய்ச்சுவது, அறுவடைசெய்வது என்று விவசாயி பல வேலைகளைச் செய்ய வேண்டும். விதைக்காமல் உழுது கொண்டேயிருப்பதினால் ஒரு பயனும் இல்லை. யூதா மனந்திரும்பும் என்று கர்த்தர் அவர்களுக்காகப் பல நல்ல காரியங்களைச் செய்தார். ஆனால் அவருடைய முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை. ஆகையினால் இப்போது கர்த்தர் அவர்கள்மீது நியாயத்தீர்ப்பை அனுப்பப் போகிறார். (ஏசா 28:23-29).

"உளுந்து" (fitches) - (ஏசா 28:25,27, எசே 4:9)

"சீரகம்" (cummin) - (ஏசா 28:25,27; மத் 23:23).

"அவனை உணர்த்துகிறார்" - கர்த்தர் மனுஷனுக்குப் பல காரியங்களை உணர்த்துகிறார். போதிக்கிறார். மனுஷனுக்கு விவசாயம் மட்டுமல்லாமல் மேலும் பல தொழில்களையும் போதித்திருக்கிறார். (ஆதி 6:14-16; யாத் 31:2-6).

போரடிக்கப்படும் விதம்

1. உளுந்து கோலினால் அடிக்கப்படும்.
2. சீரகம் மிலாற்றினால் அடிக்கப்படும். (ரூத் 1:17, நியா 6:11).
3. கோதுமை போரடிக்கப்பட்டு, வண்டிலின் உருளைச் சுற்ற விடப்படும். (உபா 25:4, ஏசா 28:28; ஏசா 21:15; 2சாமு 24:22; 1நாளா 21:23; நீதி 20:26).

29 அதிகாரம்

3. எருசலேமிற்கு ஐயோ

(1) யூதாவின்மீது நியாயத்தீர்ப்பு

ஏசா 29:1 தாவீது வாசம்பண்ணின நகரமாகிய அரியேலே, அரியேலே, ஐயோ! வருஷாவருஷம் பண்டிகைகளை அனுசரித்து வந்தாலும்,

ஏசா 29:2 அரியேலுக்கு இடுக்கம் உண்டாக்குவேன்; அப்பொழுது துக்கமும் சலிப்பும் உண்டாகும்; அது எனக்கு அரியேலாகத்தான் இருக்கும்.

ஏசா 29:3 உன்னை சூழப் பாளயமிறங்கி, உன்னைத் தெற்றுகளால் முற்றிக்கை போட்டு, உனக்கு விரோதமாகக் கொத்தளங்களை எடுப்பிப்பேன்.

ஏசா 29:4 அப்பொழுது நீ தாழ்த்தப்பட்டுத் தரையிலிருந்து பேசுவாய்; உன் பேச்சுப் பணிந்ததாய் மண்ணிலிருந்து புறப்பட்டு, உன் சத்தம் அஞ்சனம் பார்க்கிறவனுடைய சத்தத்தைப் போல் தரையிலிருந்து முணுமுணுத்து, உன் வாக்கு மண்ணிலிருந்து கசுகுசென்று உரைக்கும்.

ஏசா 29:5 உன்மேல் வருகிற அந்நியரின் திரள் பொடித் தூளத்தனையாகவும், பலவந்தரின் திரள் பறக்கும் பதர் களத்தனையாகவும் இருக்கும்; அது திடீரென்று சடிதியாய்ச் சம்பவிக்கும்.

ஏசா 29:6 இடிகளினாலும், பூமி அதிர்ச்சியினாலும், பெரிய இரைச்சலினாலும், பெருங் காற்றினாலும், புசலினாலும், பட்சிக்கிற அக்கினி ஜுவாலையினாலும், சேனைகளின் கர்த்தராலே விசாரிக்கப்படுவாய்.

"அரியேல்" (Ariel) - இந்தப் பெயருக்கு "தேவனுடைய சிங்கம்" "the lion of God" என்று பொருள். எருசலேமின் மறுபெயர். (ஏசா 29:1-7).

தீர்க்கதரிசன எண் - 31

"தாவீது வாசம்பண்ணின நகரமாகிய அரியேலே, அரியேலே, ஐயோ....." (ஏசா 29:1-24) ஏசா 29:9-16 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. ஏசா 29:1-8, ஏசா 29:17-24 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. யூதா மதுபானத்தினால் நிறைந்திருக்கிறவர்களைப் போல தள்ளாடும். (ஏசா 29:9).
2. கர்த்தர் யூதாவின்மேல் கனநித்திரையின் ஆவியை வஜ்ப் பண்ணுவார்கள். அவர்கள் கண்களை அடைத்து, ஞானதிருஷ்டிக் காரராகிய அவர்கள் தீர்க்கதரிசிகளுக்கும் தலைவர்களுக்கும் முக்காடு போடுவார். (ஏசா 29:10-12).
3. யூதாவின் ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது; அவர்கள் எனக்குப் பயப்படுகிற பயம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது. (ஏசா 29:13).
4. நான் அற்புதமும் ஆச்சரியமுமான பிரகாரமாக இந்த ஜனங்களுக்குள்ளே ஒரு அதிசயத்தைச் செய்வேன்; அவர்களுடைய ஞானிகளின் ஞானம் கெட்டு, அவர்களுடைய விவேகிகளின் விவேகம் மறைந்துபோகும். (ஏசா 29:14).

29 அதிகாரம்

5. தங்கள் ஆலோசனையைக் கர்த்தருக்கு மறைக்கும்படிக்கு மறைவிடங்களில் ஒளித்து, தங்கள் கிரியைகளை அந்தகாரத்தில் நடப்பிப்பார்கள். (ஏசா 29:15-16).

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. வருஷாவருஷம் பண்டிகைகளை அனுசரித்துவரும் எருசலேமிற்கு ஐயோ. (ஏசா 29:1).

2. தாவீது வாசம்பண்ணின நகரத்தில் இடுக்கம் உண்டாக்குவேன் (ஏசா 29:1-2).

3. உன்னை சூழப் பாளயமிறங்கி, உன்னைத் தெற்றுகளால் முற்றிக்கைபோட்டு, உனக்கு விரோதமாகக் கொத்தளங்களை எடுப்பிப்பேன். (ஏசா 29:3).

4. எருசலேம் தாழ்த்தப்பட்டுத் தரையிலிருந்து பேசும். (ஏசா 29:4; ஏசா 8:19-20).

5. எருசலேமின்மேல் வருகிற அந்நியரின் திரள் பொடித்தூளத்தனையாகவும், பலவந்தரின் திரள் பறக்கும் பதர்களத்தனையாகவும் இருக்கும் (ஏசா 29:5).

6. இடிகளினாலும், பூமி அதிர்ச்சியினாலும், பெரிய இரைச்சலினாலும், பெருங் காற்றினாலும், புசலினாலும், பட்சிக்கிற அக்கினி ஜுவாலையினாலும், சேனைகளின் கர்த்தராலே எருசலேம் விசாரிக்கப்படும். (ஏசா 29:6-8).

7. லீபனோன் செழிப்பான வயல்வெளியாக மாறும் (ஏசா 29:17).

8. அக்காலத்திலே செவிடர் புஸ்தகத்தின் வசனங்களைக் கேட்பார்கள்; குருடரின் கண்கள் இருளுக்கும் அந்தகாரத்துக்கும் நீங்கலாகிப் பார்வையடையும். (ஏசா 29:18-19).

9. கொடியன் அற்றுப்போவான், சக்கந்தக்காரன் இல்லாமற்போவான். (ஏசா 29:20).

10. அக்கிரமஞ்செய்ய வகைதேடுகிற யாவரும் சங்கரிக்கப்படுவார்கள். (ஏசா 29:21).

11. இனி யாக்கோபு வெட்கப்படுவதில்லை (ஏசா 29:22).

12. என்நாமத்தைப்பரிசுத்தப்படுத்துவார்கள். இஸ்ரவேலின் தேவனுக்குப் பயப் படுவார்கள். (ஏசா 29:23-24).

“அது எனக்கு அரியேலாகத்தான் இருக்கும்” - எருசலேம் கர்த்தருக்கு ஒரு சிங்கமாக இருக்கும்.

“உனக்கு விரோதமாகக் கொத்தளங்களை எடுப்பிப்பேன்” - அர்மெகதோன் யுத்தத்தில் எருசலேம் முற்றிக்கைப்போடப்படுவதை இந்த வாக்கியம்குறிப்பிடுகிறது. (ஏசா 29:2-4; சக 14). இடிகள், பூமியதிர்ச்சி, பெருங்காற்று, புசல், பட்சிக்கிற அக்கினிஜுவாலை ஆகியவை அர்மெகதோன் யுத்தத்தில் கர்த்தர் பயன்படுத்தும் ஆயுதமாகும். (ஏசா 29:5-6). இந்த ஆயுதங்கள் அசீரியாவின் முற்றிக்கையின்போதோ (ஏசா 36:1-37:38), பாபிலோனின் படையெடுப்பின் போதோ (2இராஜா 25), ரோமாபுரியார் எருசலேமை அழித்தபோதோ (லூக்கா 21:20-24) பயன்படுத்தப்படவில்லை. அர்மெகதோன் யுத்தத்தில் கர்த்தர் அந்திக்கிறிஸ்துவின் சேனைகளை அழிப்பார். அப்போது அவர் இந்த ஆயுதங்களைப் பயன்படுத்துவார் என்று எசே 38:17-23 ஆகிய வசனங்களில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. துன்மார்க்கரை எரிகிற அக்கினி அழிக்கும். (2தெச 1:7-10) அக்காலத்தில் பூமியதிர்ச்சி பலரைக் கொன்று போடும். (வெளி 16:17-21) வரலாற்றில் இதுவரையிலும் ஏசா 29:5-6 ஆகிய வசனங்கள் நிறைவேறவில்லை. இந்தத் தீர்க்கதரிசனம் அர்மெகதோன் யுத்தத்தின்போது நிறைவேறும்.

ஏசாயா - தொகுப்புரை

29 அதிகாரம்

"அப்பொழுது நீ தாழ்த்தப்பட்டுத் தரையிலிருந்து பேசுவாய்" -அர்மெகதோன் யுத்தத்தில் அந்திக்கிறிஸ்து எருசலேமைப் பிடித்துக் கொள்வான். எருசலேம் தாழ்த்தப்படும். (தானி 9:27; மத் 24:15-22; 2தெச 2:1-4; வெளி 12:13). "தரையிலிருந்து பேசுவாய்" என்னும் வாக்கியத்திற்கு முற்றிலுமாக தோற்றுப்போதல் என்று பொருள். (1சாமு 2:8; 1இராஜா 16:2; சங் 13:7). மண்ணில் ஒளித்துக் கொள்ளுதல் என்பதற்கு முழுவதுமாகத் தோற்றுப்போதல் என்று பொருள். (ஏசா 2:10; ஏசா 25:12; ஏசா 26:5; ஏசா 49:23; 2சாமு 22:41-43; 2இராஜா 13:7; யோபு 16:15; சங் 44:25; சங் 72:9; நாகூம் 3:18). எருசலேமும், யூதாவும் அந்திக்கிறிஸ்துவிடம் தோற்றுப்போகும். இஸ்ரவேலைப் போலவே மேலும் பல தேசத்தார் அந்திக்கிறிஸ்துவிடம் தோற்றுப்போவார்கள். (ஏசா 29:5) யூதா தோற்றுப் போனதினால் அதின் ஜனங்கள் அதிர்ச்சியடைந்து குழப்பமாகி விநோதமாகச் செயல்படுவார்கள். (ஏசா 8:19-20). "தூசியை உதறிவிட்டு எழுந்திரு" (ஏசா 52:2) என்னும் வாக்கியம் யூதர்கள் தங்கள் தோல்வியிலிருந்து மீண்டு ஜெயம் பெறுவார்கள் என்னும் பொருளைத் தரும்.

புறஜாதியாரின் தோல்வியைப் பற்றிய வர்ணனை

1. திரள் பொடித்தூளைப்போல
2. திரள் பறக்கும் பதர்களைப்போல (ஏசா 29:5).
3. இராக்கால தரிசனமாகிய சொப்பனத்தைப் போல (ஏசா 29:7).
4. பசியாயிருக்கிறவன் தான் புசிக்கிறதாகச் சொப்பனம் கண்டும், விழிக்கும்போது அவன் வெறுமையாயிருக்கிறது போல (ஏசா 29:8).
5. தாகமாயிருக்கிறவன், தான் குடிக்கிறதாகச் சொப்பனம் கண்டும், விழிக்கும்போது அவன் விடாய்த்து தவனத்தோடிருக்கிறது போல.

"சேனைகளின் கர்த்தராலே விசாரிக்கப் படுவாய்" - புறஜாதியாரைக் கர்த்தர் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆயுதங்களினால் தண்டிப்பார். அவையாவன:

1. இடிகள்
2. பூமி அதிர்ச்சி
3. பெரிய இரைச்சல்
3. பெருங்காற்று
4. புசல்
5. பட்சிக்கிற அக்கினி ஜூவாலை

(2) யூதாவின் விரோதிகள்மீது நியாயத் தீர்ப்பு

ஏசா 29:7 அரியேலின்மேல் யுத்தம் பண்ணுகிற திரளான சகல ஜாதிகளும், அதின்மேலும் அதின் அரண்மேலும் யுத்தம்பண்ணி, அதற்கு இடுக்கண் செய்கிற அனைவரும், இராக்காலத் தரிசனமாகிய சொப்பனத்தைக் காண்கிறவர்களுக்கு ஒப்பாயிருப்பார்கள்.

ஏசா 29:8 அது, பசியாயிருக்கிறவன் தான் புசிக்கிறதாகச் சொப்பனம் கண்டும், விழிக்கும்போது அவன் வெறுமையாயிருக்கிறது போலவும், தாகமாயிருக்கிறவன், தான் குடிக்கிறதாகச் சொப்பனம் கண்டும், விழிக்கும்போது அவன் விடாய்த்து தவனத்தோடிருக்கிறது போலவும் சீயோன் மலைக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிற திரளான சகல ஜாதிகளும் இருக்கும்.

"சீயோன் மலைக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிற திரளான சகல ஜாதிகளும் இருக்கும்." - இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது அவர் பூமியில் தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பார். அப்போது எருசலேமிற்கு விரோதமாக எழும்பியிருக்கும் எல்லா தேசங்களின் சேனைகளையும் அழிப்பார். (ஏசா 63:1-5; எசே 39:2; யோவே 3; சக 14; 2தெச 1:7-10; யூதா 1:14-15; வெளி 11:15; வெளி 19:11-21).

29 அதிகாரம்

(3) திகைப்பும் காரணமும்

ஏசா 29:9 தரித்துநின்று திகையுங்கள்; பிரமித்துக் கூப்பிடுங்கள்; வெறுத்திருக்கிறார்கள், திராட்ச ரசத்தினால் அல்ல; தள்ளாடுகிறார்கள், மதுபானத்தினால் அல்ல.

ஏசா 29:10 கர்த்தர் உங்கள்மேல் கனநித்திரையின் ஆவியை வரப்பண்ணி, உங்கள் கண்களை அடைத்து, ஞானதிருஷ்டிக்காரராகிய உங்கள் தீர்க்கதரிசிகளுக்கும் தலைவர்களுக்கும் முக்காடு போட்டார்.

ஏசா 29:11 ஆதலால் தரிசனமெல்லாம் உங்களுக்கு முத்திரிக்கப்பட்ட புஸ்தகத்தின் வசனங்களைப்போலிருக்கும்; வாசிக்க அறிந்திருக்கிற ஒருவனுக்கு அதைக் கொடுத்து: நீ இதை வாசி என்றால், அவன்: இது என்னால் கூடாது, இது முத்திரித்திருக்கிறது என்பான்.

ஏசா 29:12 அல்லது வாசிக்கத் தெரியாதவனிடத்தில் புஸ்தகத்தைக் கொடுத்து: நீ இதை வாசி என்றால், அவன்: எனக்கு வாசிக்கத் தெரியாது என்பான்.

ஏசா 29:13 இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது; அவர்கள் எனக்குப் பயப்படுகிற பயம் மனுஷராலே போதிக்கப்பட்டகற்பனையாயிருக்கிறது.

ஏசா 29:14 ஆதலால் இதோ, நான் அற்புதமும் ஆச்சரியமுமான பிரகாரமாக இந்த ஜனங்களுக்குள்ளே ஒரு அதிசயத்தைச் செய்வேன்; அவர்களுடைய ஞானிகளின் ஞானம் கெட்டு,அவர்களுடைய விவேகிகளின் விவேகம் மறைந்துபோகும் என்று ஆண்டவர் சொல்லுகிறார்.

"தரித்துநின்று திகையுங்கள்" - ஏசா 29:1-8 ஆகிய வசனங்களில் யூதா, எருசலேம் ஆகியவற்றின் அழிவு விவரிக்கப்பட்டிருக்கிறது. ஏசா 29:9-16 ஆகிய வசனங்களில் இந்த அழிவிற்குக் காரணம் கூறப்பட்டிருக்கிறது. அவர்களுடைய பாவங்களே அவர்களுடைய அழிவிற்குக் காரணம். தங்கள் அழிவின் நிமித்தமாக அவர்கள் திகைத்துப்போய் பிரமித்திருக்கிறார்கள். யூதாவின் பாவத்தின் நிமித்தமாக அவர்களுக்கு உடனடியாக நியாயத் தீர்ப்பு வந்தது. அசீரியர், (ஏசா 36:1-37:38), பாபிலோனியர் (2இராஜா 25), ரோமாபுரியார் (லூக்கா 21:20-24) ஆகியோர் யூதரை முற்றிலும் அழித்துப் போடாவிட்டாலும் அவர்கள் யூதர்களைச் சிட்சித்தார்கள்.

யூதாவின்மீது கர்த்தருடைய கிரியைகள்

1. கர்த்தர் அவர்கள்மேல் கனநித்திரையின் ஆவியை வரப்பண்ணினார்.
2. அவர்கள் கண்களை அடைத்தார்.
3. ஞானதிருஷ்டிக்காரராகிய அவர்கள் தீர்க்கதரிசிகளுக்கும் தலைவர்களுக்கும் முக்காடு போட்டார்.

யூதர்கள் ஆவிக்குரிய காரியங்களில் குருடரைப்போலானார்கள். தங்களுடைய இருதயத்தில் அவர்கள் கர்த்தரைத் தேடவில்லை. அவர்களே தங்களுடைய இருதயங்களை அடைத்துக் கொண்டார்கள். அவர்கள் கண்கள் இருந்தும் காணாமல் போகிறார்கள். காதுகள் இருந்தும் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கவில்லை. (ஏசா 6:9-12, மத் 13:13-16, ரோமர் 11:8)

கனநித்திரை (deep sleep) - תַּרְדֵּמָה - tar-day-maw' - 8639

பெ.பெ.சொ. - அயர்ந்த நித்திரை, கனநித்திரை, தூங்கிவிழுதல் "deep sleep" (ஏசா 29:10; ஆதி 2:21; ஆதி 15:12; 1சாமு 26:12; யோபு 4:13; யோபு 33:15; நீதி 19:15).

ஏசாயா - தொகுப்புரை

29 அதிகாரம்

"ஞானதிருஷ்டிக்காரராகிய உங்கள் தீர்க்கதரிசிகளுக்கும் தலைவர்களுக்கும் முக்காடு போட்டார்" - யூதா தேசத்திலுள்ள தீர்க்கதரிசிகள் ஆவிக்குரிய காரியங்களுக்குச் செவி கொடுக்க மாட்டார்கள். கர்த்தருடைய வார்த்தை அவர்களுக்கு மூடப்பட்டிருக்கும் புஸ்தகம்போல் இருக்கும். (ஏசா 29:11). அவர்கள் வாசிக்கக்கூடியவர்களாக இருந்தாலும் வாசிக்கத்தெரியாதவர்களைப் போல இருப்பார்கள். (ஏசா 29:12). அவர்களுடைய மாய்மாலமும் இருதயக்கடினமும் பாவங்களுமே யூதருடைய ஆவிக்குரிய பின்மாற்றத்திற்குக் காரணங்களாகும். (ஏசா 29:13; ஏசா 6:9-12; மத் 13:13-15; ரோமர் 11:8).

"இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்" - இந்த வாக்கியம் மத் 15:7-9; மாற்கு 7:6 ஆகிய வசனங்களில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

ஆவிக்குரிய குருட்டுத்தன்மைக்குக் காரணம்

1. இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் மாத்திரம் கர்த்தரிடத்தில் சேருகிறார்கள்.
2. தங்கள் உதடுகளினால் மாத்திரம் கர்த்தரைக் கனம்பண்ணுகிறார்கள்.
3. அவர்கள் இருதயமோ கர்த்தருக்குத் தூரமாய் விலகியிருக்கிறது.
4. அவர்கள் கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது.

"அவர்களுடைய ஞானிகளின் ஞானம் கெட்டு, அவர்களுடைய விவேகிகளின் விவேகம் மறைந்துபோகும்" - இந்த வாக்கியம் 1கொரி 1:19 ஆவது வசனத்தில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய அற்புதமான கிரியை

ஜனங்கள் தங்கள் வாயினாலும், உதடுகளினாலும் மட்டும் கர்த்தரைக் கனம் பண்ணினால் கர்த்தருடைய ஆசீர்வாதம் அவர்களுக்கு வராது. அவர்களுடைய இருதயம் கர்த்தருக்குத் தூரமாக விலகிப்போயிருக்கிறது. அவர்கள் அழிந்து போவார்கள். (ஏசா 29:14). ஜனங்கள் மத்தியில் கர்த்தர் ஓர் அற்புதமான கிரியையைச் செய்கிறார். இது புதிய ஏற்பாட்டின் உபதேசத்தையும், ஜனங்களுடைய வியாதிகள் குணமாகும் அற்புதத்தையும் குறிக்கும். இயேசு கிறிஸ்துவில் புதிய ஜீவன்கள் சிருஷ்டிக்கப் படுவார்கள். பழையவை ஒழிந்துபோய் எல்லாம் புதியவையாகும். இயேசு கிறிஸ்துவிலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் மத்தியிலும் கர்த்தருடைய அற்புதமான கிரியை வெளிப்படும். (ஏசா 29:14; ஆப 1:5; அப் 13:40-41). கர்த்தருடைய அற்புதமான கிரியையைப் பற்றி புதிய ஏற்பாட்டின் பல வேதவசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. (மத் 15:31; மாற்கு 6:51; லூக்கா 4:22; லூக்கா 8:25; லூக்கா 9:43; லூக்கா 11:14; அப் 8:13; அப் 13:40-41).

சுவிசேஷத்தின் அற்புதங்களினாலும், அடையாளங்களினாலும் மனுஷர் ஆச்சரியமடைவார்கள். அது மனுஷருக்கு ஆசீர்வாதத்தைத் தரும். அதே சமயத்தில் மனுஷரில் ஒரு பிரிவினர் சுவிசேஷத்திற்கு எதிர்த்து நின்று தங்களுடைய அழிவைத் தேடிக் கொள்வார்கள். தங்களுடைய சொந்த ஞானத்தை உபதேசங்களாகப் பிரசங்கம் பண்ணுவார்கள். தங்களுடைய இருதயங்களைக் கர்த்தருக்கு விரோதமாகக் கடினப் படுத்துவார்கள். உலகத்தின் ஆசைகளில் இவர்கள் சிக்கி இறுதியில் தங்களுடைய ஆத்துமாவை இழந்து போவார்கள். (1கொரி 1:18-31). கர்த்தரை விட்டு விலகிப் போனவர்கள் மறுபடியும் திரும்பி கர்த்தரிடத்தில் வர வேண்டும். சுவிசேஷச் செய்தியைக் கேட்டு தங்களுடைய ஜீவியத்தை அதன் சத்தியத்திற்கு ஏற்ற பிரகாரமாக அமைத்துக் கொள்ள வேண்டும். அப்போது சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்கிறவர்களுக்கு ஜீவனும், ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு மரணமும் உண்டாகும். (2கொரி 2:15-17).

ஏசாயா - தொகுப்புரை

29 அதிகாரம்

4. லீபனோனுக்கு ஐயோ

(1) நியாயத்தீர்ப்பு

ஏசா 29:15 தங்கள் ஆலோசனையைக் கர்த்தருக்கு மறைக்கும்படிக்கு மறைவிடங்களில் ஒளித்து, தங்கள் கிரியைகளை அந்தகாரத்தில் நடப்பித்து: நம்மைக் காண்கிறவர் யார்? நம்மை அறிகிறவர் யார்? என்கிறவர்களுக்கு ஐயோ!

ஏசா 29:16 ஆ, நீங்கள் எவ்வளவு மாறுபாடுள்ளவர்கள்! குயவன் களிமண்ணுக்குச் சமானமாக எண்ணப் படலாமோ? உண்டாக்கப்பட்டது தன்னை உண்டாக்கினவரைக் குறித்து: அவர் என்னை உண்டாக்கினதில்லை என்றும்; உருவாக்கப்பட்டது தன்னை உருவாக்கினவரைக் குறித்து: அவருக்குப் புத்தியில்லையென்றும் சொல்லத்தகுமோ?

"நம்மைக் காண்கிறவர் யார்? நம்மை அறிகிறவர் யார்? என்கிறவர்களுக்கு ஐயோ!" - கர்த்தருடைய சித்தத்திலிருந்தும், திட்டத்திலிருந்தும் மனுஷன் தன்னை மறைத்துக் கொள்ளக்கூடாது. அந்தகாரத்தில் தங்களுடைய பாவக்கிரியைகளைச் செய்ய முயற்சி பண்ணக் கூடாது. தங்களுடைய பாவமான செயல்கள் யாருக்கும் தெரியாது என்று இறுமாப்பாயிருக்கக் கூடாது. மாய்மாலமாக ஜீவிக்கிறவர்கள் மனுஷரை வஞ்சிக்கிறார்கள். கர்த்தர் அவர்களை ஆசீர்வதிக்கமாட்டார். (மத் 23).

"குயவன் களிமண்ணுக்குச் சமானமாக எண்ணப்படலாமோ?" - மனுஷர் மாறுபாடுள்ளவர்களாக இருக்கிறார்கள். களிமண்ணுக்கும், குயவனுக்கும் வித்தியாசம் தெரியாமல் இருக்கிறார்கள். குயவனைக் களிமண்ணைப் போலாக்குகிறார்கள். ஒரு களிமண் தன்னுடைய சொந்த ஞானத்தினால் எந்தப் பொருளையும் தானாகவே உண்டாக்கிக் கொள்ள முடியாது. குயவன் மட்டுமே களிமண்ணைத் தனக்குச் சித்தமானபடி உருவாக்க முடியும். மாறுபாடுள்ளவர்கள் தங்களுடைய சாதுரியப் பேச்சுகளினால் மனுஷரை வஞ்சிக்கிறார்கள். (எபி 4:12-13).

"உண்டாக்கப்பட்டது தன்னை உண்டாக்கினவரைக் குறித்து........ அவருக்குப் புத்தியில்லையென்றும் சொல்லத்தகுமோ?" - இந்த வாக்கியம் ரோமர் 9:20-21 ஆகிய வசனங்களில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

(2) பௌதீக மீட்பின் ஆறு அம்சம் - *(29:17-19; 30:23; 35:1-8; 51:3; 61:4; எரே 31:2; எசே 36:8-15,30-38; யோவே 2:18-27)*

ஏசா 29:17 இன்னும் கொஞ்சக் காலத்திலல்லவோ லீபனோன் செழிப்பான வயல்வெளியாக மாறும்; செழிப்பான வயல்வெளி காடாக எண்ணப்படும்.

ஏசா 29:18 அக்காலத்திலே செவிடர் புஸ்தகத்தின் வசனங்களைக் கேட்பார்கள்; குருடரின் கண்கள் இருளுக்கும் அந்தகாரத்துக்கும் நீங்கலாகிப் பார்வையடையும்.

ஏசா 29:19 சிறுமையானவர்கள் கர்த்தருக்குள் மிகவும் மகிழ்ந்து, மனுஷரில் எளிமையானவர்கள் இஸ்ரவேலின் பரிசுத்தருக்குள் களிகூருவார்கள்.

ஆயிரம் வருஷ அரசாட்சியின் ஆசீர்வாதங்கள்

1. லீபனோன் செழிப்பான வயல்வெளியாக மாறும் (ஏசா 29:17;ஏசா 35:1-2).

2. செழிப்பான வயல்வெளி காடாக எண்ணப்படும்.(ஏசா29:17;ஏசா 35:1-3).

3. செவிடர் புஸ்தகத்தின் வசனங்களைக் கேட்பார்கள் (ஏசா 29:18; ஏசா 35:5; ஏசா 29:10-12).

4. குருடரின் கண்கள் இருளுக்கும் அந்தகாரத்துக்கும் நீங்கலாகிப் பார்வையடையும். (ஏசா 29:18; ஏசா 35:5; ஏசா 42:16).

29 அதிகாரம்

5. சிறுமையானவர்கள் கர்த்தருக்குள் மிகவும் மகிழ்வார்கள். (ஏசா 29:19; சங் 37:11; மத் 5:5).

6. மனுஷரில் எளிமையானவர்கள் இஸ்ரவேலின் பரிசுத்தருக்குள் களிகூருவார்கள். (ஏசா 29:19, மீகா 4:4).

"அக்காலத்திலே செவிடர் புஸ்தகத்தின் வசனங்களைக் கேட்பார்கள்" - அக்காலத்திலே என்பது ஆயிரம் வருஷ அரசாட்சியைக் குறிக்கும். அப்போது எல்லா வியாதிகளும் குணமடையும். (ஏசா 33:24; ஏசா 35:3-6).

(3) ஆறு அம்ச காரணம்

ஏசா 29:20 கொடியன் அற்றுப்போவான், சக்கந்தக்காரன் இல்லாமற்போவான்.

ஏசா 29:21 ஒரு வார்த்தையினிமித்தம் மனுஷனைக் குற்றப்படுத்தி, நியாய வாசலில் தங்களைக் கடிந்து கொள்ளுகிறவனுக்குக் கண்ணி வைத்து, நீதிமானை நிர்நிமித்தமாய்த் துரத்தி, இப்படி அக்கிரமஞ்செய்ய வகைதேடுகிற யாவரும் சங்கரிக்கப்படுவார்கள்.

நியாயந்தீர்க்கப்படுகிறவர்கள்

1. கொடியன் (2தெச 2:8)

2. சக்கந்தக்காரன்

3. அக்கிரமஞ்செய்ய வகைதேடுகிறவன். (2தெச 1:7-10; யூதா 1:14-15).

துன்மார்க்கர் மற்றவர்களுக்குச் செய்யும் காரியங்கள்

1. ஒரு வார்த்தையினிமித்தம் மனுஷனைக் குற்றப்படுத்துவான்.

2. நியாயவாசலில் தன்னைக் கடிந்து கொள்ளுகிறவனுக்குக் கண்ணி வைப்பான்.

3. நீதிமானை நிர்நிமித்தமாய்த் துரத்துவான்.

(4) ஆவிக்குரிய மீட்பின் ஆறு அம்சம்

- (30:18; 32:15; 42:16; 44:3,22; 52:3; 59:16; 60:1; எரே 33:6; எசே 16:60; 34:23; 36:25; யோவே 2:28)

ஏசா 29:22 ஆகையால், ஆபிரகாமை மீட்டுக்கொண்ட கர்த்தர் யாக்கோபின் வம்சத்தைக் குறித்து: இனி யாக்கோபு வெட்கப்படுவதில்லை; இனி அவன் முகம் செத்துப்போவதுமில்லை.

ஏசா 29:23 அவன் என் கரங்களின் செயலாகிய தன் பிள்ளைகளை தன் நடுவிலே காணும்போது, என் நாமத்தைப் பரிசுத்தப்படுத்துவார்கள்; யாக்கோபின் பரிசுத்தரை அவர்கள் பரிசுத்தப்படுத்தி, இஸ்ரவேலின் தேவனுக்குப் பயப்படுவார்கள்.

ஏசா 29:24 வழுவிப்போகிற மனதை உடையவர்கள் புத்திமான்களாகி, முறுமுறுக்கிறவர்கள் உபதேசம் கற்றுக் கொள்ளுவார்கள்.

"ஆபிரகாமை மீட்டுக்கொண்ட கர்த்தர்" - ஆபிரகாம் விசுவாசத்தினால் மீட்டுக் கொள்ளப் பட்டான். அதுபோலவே நாம் எல்லோரும் விசுவாசத்தினால் நீதி மான்களாக்கப்படுகிறோம். (ஆதி 15:6; ரோமர் 4).

"யாக்கோபு" - இந்தத் தீர்க்கதரிசனம் ஆபிரகாமின் தேவனிடத்திலிருந்து யாக்கோபிற்குக் கடந்து வருகிறது. ஆயிரம் வருஷ அரசாட்சியில் யாக்கோபின் வம்சத்தார் பல ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வார்கள். அந்த ஆசீர்வாதங்களின் விவரம் வருமாறு:

1. யாக்கோபு வெட்கப்படுவதில்லை.

2. அவன் முகம் செத்துப்போவதில்லை.

3. யாக்கோபின் சந்ததியார் கர்த்தருடைய நாமத்தைப் பரிசுத்தப்படுத்துவார்கள். (ஏசா 29:23).

4. இஸ்ரவேலின் தேவனுக்குப் பயப்படுவார்கள்.

29 அதிகாரம்

5. புத்திமான்களாவார்கள். (ஏசா 29:24).

6. முறு முறுக்கிறவர்களாயிருந்தவர்கள் உபதேசத்தைக் கற்றுக் கொள்ளுவார்கள்.

இஸ்ரவேல் தேசத்திற்கு இந்த வாக்குத்தத்தம் இதுவரையிலும் நிறைவேறவில்லை. ஆகையினால் இது மேசியாவின் காலத்தில் நிறைவேறும்.

"இனி யாக்கோபு வெட்கப்படுவதில்லை; இனி அவன் முகம் செத்துப்போவதுமில்லை" - இந்த வாக்கியத்தில் "யாக்கோபு" என்பது யூதரின் முன்னோரைக் குறிக்கும். வரலாற்றில் யூதருடைய ஜீவியம் கர்த்தருக்குப் பிரியமானதாக இல்லை. மனுஷர் மத்தியில் அவர்கள் செழிப்படையவும் இல்லை. தங்களுடைய முற்பிதாக்களைப் பார்த்த போது, யூதர்கள் வெட்கப்பட்டார்கள். ஆனால் இனிமேல் யாக்கோபு வெட்கப்படுவதில்லை. தங்களுடைய முன்னோரை யூதர் பெருமையோடு பார்ப்பார்கள். கர்த்தருடைய மீட்பின் கிரியையை அவர்களுடைய ஜீவியத்தில் காண்பார்கள். ஆயிரம்வருஷ அரசாட்சியில் அவர்கள் கர்த்தரைப் பரிசுத்தப் படுத்துவார்கள். கர்த்தருப் பயப்படுவார்கள். ஆரோக்கியமான உபதேசங்களைக் கற்றுக் கொள்வார்கள். (ஏசா 29:22-24).

"யாக்கோபின் பரிசுத்தரை அவர்கள் பரிசுத்தப்படுத்தி" - பரிசுத்தப்படுத்துதல் என்னும் வாக்கியத்திற்கு வேறுபிரித்தல் "set apart" என்று பொருள்கூற வேண்டும். இதற்கு பாவத்திலிருந்து விடுதலை பெறுதல் அல்லது பழைய மனுஷனைக் களைந்துபோடுதல் என்று பொருள்கூற முடியாது. ஏனெனில் கர்த்தரிடத்திலும், அவருடைய நாமத்திலும் பாவம் ஒருபோதும் இருந்ததில்லை, இருப்பதில்லை, இருக்கப்போவதுமில்லை.

30 அதிகாரம்

5. எகிப்தியருக்கு ஐயோ - (ஏசா 31)

(1) மூன்று அம்ச கலகம் - (31:1)

ஏசா 30:1 பாவத்தோடே பாவத்தைக் கூட்டும்படி, என்னை அல்லாமல் ஆலோசனை பண்ணி, என் ஆவியை அல்லாமல் தங்களை மூடிக்கொள்ளப் பார்க்கிறவர்களும்,

ஏசா 30:2 என் வாக்கைக் கேளாமல் பார்வோனின் பெலத்தினாலே பெலக்கவும், எகிப்தின் நிழலிலே ஒதுங்கவும் வேண்டும் என்று எகிப்துக்குப் போகிறவர்களுமாகிய முரட்டாட்டமுள்ள புத்திரருக்கு ஐயோ! என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தீர்க்கதரிசன எண் - 32

"பாவத்தோடே பாவத்தைக் கூட்டும்படி, என்னை அல்லாமல் ஆலோசனை பண்ணி......." (ஏசா 30:1-33) ஏசா 30:1-17 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. ஏசா 30:18-33 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. முரட்டாட்டமுள்ள புத்திரராகிய யூதாவிற்கு ஐயோ (ஏசா 30:1-2).
2. பார்வோனுடைய பெலன் உங்களுக்கு வெட்கமாகவும் எகிப்தினுடைய நிழலொதுக்கு உங்களுக்கு இலச்சையாகவும் இருக்கும். (ஏசா 30:3-5).
3. எகிப்தியர் சகாயம்பண்ணுவது வியர்த்தமும் வீணுமாம் (ஏசா 30:6-7).
4. இவர்கள் கலகமுள்ள ஜனங்களும், பொய்பேசுகிற பிள்ளைகளும், கர்த்தருடைய வேதத்தைக் கேட்க மனதில்லாத புத்திரருமாயிருக்கிறார்கள். (ஏசா 30:8-11).
5. நீங்கள் இந்த வார்த்தையை வெறுத்து, இடுக்கமும் தாறுமாறும் செய்கிறதை நம்பி, அதைச் சார்ந்து கொள்ளுகிறபடியால், இந்த அக்கிரமம் உங்களுக்கு உயர்ந்த சுவரில் விழப் பிதுங்கிநிற்கிறதும், திடீரென்று சடிதியாய் இடியப் போகிறதுமான வெடிப்பைப்போல இருக்கும் (ஏசா 30:12-14).
6. நீங்கள் மனந்திரும்பி அமர்ந்திருந்தால் இரட்சிக்கப்படுவீர்கள் (ஏசா 30:15).
7. உங்களைத் துரத்துகிறவர்கள் வேகமாய்த் துரத்துவார்கள். ஒருவன் பயமுறுத்த ஆயிரம் பேரும், ஐந்துபேர் பயமுறுத்த நீங்கள் அனைவரும் ஓடிப்போவீர்கள். (ஏசா 30:16-17, ஏசா 36:1-37:38, 2இராஜா 25:1-10)

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார் (ஏசா 30:18).
2. உங்கள் மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார்.
3. சீயோனைச் சேர்ந்த ஜனங்கள் எருசலேமில் வாசமாயிருப்பார்கள் (ஏசா 30:19).
4. இனி நீ அழுதுகொண்டிராய்.
5. உன் கூப்பிடுதலின் சத்தத்துக்கு அவர் உருக்கமாய் இரங்கி, அதைக் கேட்டவுடனே உனக்கு மறுஉத்தரவு அருளுவார்.
6. ஆண்டவர் உங்களுக்குத் துன்பத்தின் அப்பத்தையும், உபத்திரவத்தின் தண்ணீரையும் கொடுத்தாலும், உன் போதகர்கள் இனி ஒருபோதும் மறைந்திருக்கமாட்டார்கள்; உன் கண்கள் உன் போதகர்களைக் காணும். (ஏசா 30:20).
7. வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும். (ஏசா 30:21).

30 அதிகாரம்

8. உன் சுரூபங்களை மூடியவெள்ளித் தகட்டையும், உன் விக்கிரகங்களின் பொன் ஆடையாபரணத்தையும் தீட்டாக எண்ணுவீர்கள். (ஏசா 30:22).

9. நீ நிலத்தில் விதைக்கும் உன் விதைக்கு அவர் மழையையும், நிலத்தின் பலனாகிய ஆகாரத்தையும் தருவார் (ஏசா 30:23-25).

மீந்திருக்குமட்டாக, ஒருவன் பயமுறுத்த ஆயிரம் பேரும், ஐந்துபேர் பயமுறுத்த நீங்கள் அனைவரும் ஓடிப்போவீர்கள்.

6. ஆயிர வருஷம் - (ஏசா 2:1)

(1) பத்து அம்ச ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள்

ஏசா 30:18 ஆனாலும் உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார், உங்கள் மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார்; கர்த்தர் நீதிசெய்கிற தேவன்; அவருக்குக் காத்திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள்.

ஏசா 30:19 சீயோனைச் சேர்ந்த ஜனங்கள் எருசலேமில் வாசமாயிருப்பார்கள்; இனி நீ அழுதுகொண்டிராய்; உன் கூப்பிடுதலின் சத்தத்துக்கு அவர் உருக்கமாய் இரங்கி, அதைக் கேட்டவுடனே உனக்கு மறுஉத்தரவு அருளுவார்.

ஏசா 30:20 ஆண்டவர் உங்களுக்குத் துன்பத்தின் அப்பத்தையும், உபத்திரவத்தின் தண்ணீரையும் கொடுத்தாலும், உன் போதகர்கள் இனி ஒருபோதும் மறைந்திருக்கமாட்டார்கள்; உன் கண்கள் உன் போதகர்களைக் காணும்.

ஏசா 30:21 நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்.

ஏசா 30:22 உன் சுரூபங்களை மூடியவெள்ளித்தகட்டையும், உன் விக்கிரகங்களின் பொன் ஆடையாபரணத்தையும் தீட்டாக எண்ணி, அவைகளைத் தீட்டுப்பட்ட வஸ்திரம்போல எறிந்து விட்டு, அதைச் சீ! போ என்பாய்.

(2) பத்து அம்ச பௌதீக ஆசீர்வாதங்கள்

ஏசா 30:23 அப்பொழுது நீ நிலத்தில் விதைக்கும் உன் விதைக்கு அவர் மழையையும், நிலத்தின் பலனாகிய ஆகாரத்தையும் தருவார்; அது கொழுமையும் புஷ்டியுமாய் இருக்கும்; அக்காலத்திலே உன் ஆடுமாடுகள் விஸ்தாரமான மேய்ச்சலுள்ள ஸ்தலத்திலே மேயும்;

ஏசா 30:24 நிலத்தை உழுகிற எருதுகளும் கழுதைமறிகளும், முறத்தினாலும் தூற்றுக் கூடையினாலும் தூற்றப்பட்ட ருசியுள்ள கப்பிகளைத் தின்னும்.

ஏசா 30:25 கோபுரங்கள் விழுகிற மகா சங்காரத்தின் நாளிலே, உயரமான சகல மலைகளின்மேலும், உயரமான சகல மேடுகளின்மேலும் ஆறுகளும் வாய்க்கால்களும் உண்டாகும்.

ஏசா 30:26 கர்த்தர் தமது ஜனத்தின் முறிவைக் கட்டி, அதின் அடிக்காயத்தைக் குணமாக்கும் நாளிலே, சந்திரனுடைய வெளிச்சம் சூரியனுடைய வெளிச்சத்தைப் போலவும், சூரியனுடைய வெளிச்சம் ஏழத்தனையாய் ஏழு பகலின் வெளிச்சத்தைப்போலவும் இருக்கும்.

30 அதிகாரம்

(3) இஸ்ரவேலின் விரோதிகள்மீது நடைபெறும் ஐந்து அம்ச நியாயத்தீர்ப்பின் முறைகள்

ஏசா 30:27 இதோ, கர்த்தருடைய நாமம் தூரத்திலிருந்து வரும்; அவருடைய கோபம் எரிகிறதும் கனன்று புகைகிறதுமாயிருக்கும்; அவருடைய உதடுகள் சினத்தால் நிறைந்து, அவருடைய நாவு பட்சிக்கிற அக்கினிபோல இருக்கும்.

ஏசா 30:28 நாசம் என்னும் சல்லடையிலே ஜாதிகளை அரிக்கும்படிக்கு அவர் ஊதும் சுவாசம் கழுத்துமட்டும் எட்டுகிற ஆற்று வெள்ளத்தைப்போலவும், ஜனங்களுடைய வாயிலே போட்டு அலைக்கழிக்கிற கடிவாளத்தைப் போலவும் இருக்கும்.

(4) இஸ்ரவேலின்மீது ஏற்படும் விளைவின் இரண்டு அம்சம்

ஏசா 30:29 பண்டிகை ஆசரிக்கப்படும் இராத்திரியிலே பாடுகிறதுபோலப் பாடுவீர்கள்; கர்த்தருடைய பர்வதமாகிய இஸ்ரவேலின் கன்மலையண்டைக்குப் போக நாகசுரத்தோடே நடந்து வருகிறபோது மகிழுகிறதுபோல மகிழுவீர்கள்.

(5) அந்திக் கிறிஸ்துவின் மீது நடைபெறும் ஏழு அம்ச நியாயத்தீர்ப்பின் முறைகள் - (எசே 38:17-21; 2தெச 2:8; வெளி 19:19-21)

ஏசா 30:30 கர்த்தர் மகத்துவமானவர்; தமது சத்தத்தைக் கேட்கப்பண்ணி, உக்கிர கோபத்தினாலும், பட்சிக்கிற அக்கினிஜுவாலையினாலும், இடி பெருவெள்ளம் கல்மழையினாலும், தமது புயத்தின் வல்லமையைக் காண்பிப்பார்.

ஏசா 30:31 அப்பொழுது தண்டாயுதத்தினால் அடித்த அசீரியன் கர்த்தருடைய சத்தத்தினாலே நொறுங்குண்டுபோவான்.

ஏசா 30:32 கர்த்தர் அவன்மேல் சுமத்தும் ஆக்கினைத்தண்டம் செல்லுமிடமெங்கும், மேளங்களும் வீணைகளும் அதினுடன் போகும்; கொடிய யுத்தங்களினால் அவனை எதிர்த்து யுத்தஞ்செய்வார்.

ஏசா 30:33 தோப்பேத் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டது; ராஜாவுக்கு அது ஆயத்தப்படுத்தப்பட்டது; அதை ஆழமும் விசாலமுமாக்கினார்; வேகும்படி அக்கினியும் மிகுந்த விறகுமுண்டு; கர்த்தரின் சுவாசம் கெந்தகத் தீயைப்போல அதைக் கொளுத்தும்.

10. சந்திரனுடைய வெளிச்சம் சூரியனுடைய வெளிச்சத்தைப் போலவும், சூரியனுடைய வெளிச்சம் ஏழத்தனையாய் ஏழு பகலின் வெளிச்சத்தைப்போலவும் இருக்கும். (ஏசா 30:26).

11. கர்த்தர் தமது ஜனத்தின் முறிவைக்கட்டி, அதின் அடிக்காயத்தைக் குணமாக்குவார்.

12. கர்த்தர் யூதாவின் சத்துருக்களை அழிக்க வருவார். (ஏசா 30:27-28).

13. பண்டிகை ஆசரிக்கப்படும் இராத்திரியிலே பாடுகிறதுபோல யூதா பாடும். (ஏசா 30:29).

14. தமது சத்தத்தைக் கேட்கப்பண்ணி, உக்கிர கோபத்தினாலும், பட்சிக்கிற அக்கினி ஜுவாலையினாலும், இடி, பெருவெள்ளம் கல்மழையினாலும், தமது புயத்தின் வல்லமையைக் காண்பிப்பார். (ஏசா 30:30; எசே 38:17-21; 2தெச 1:7-10; யூதா 1:14-15; வெளி 19:11-21).

30 அதிகாரம்

15. அசீரியன் (அந்திக்கிறிஸ்து) (ஏசா 31:8; மீகா 5:5-6) கர்த்தருடைய சத்தத்தினாலே நொறுங்குண்டுபோவான். (ஏசா 30:31; ஏசா 11:4; தானி 7:11; 2தெச 2:8; வெளி 19:11-21).

16. கர்த்தர் அவன்மேல் சுமத்தும் ஆக்கினைத் தண்டம் செல்லுமிடமெங்கும், மேளங்களும் வீணைகளும் அதினுடன் போகும்; கொடிய யுத்தங்களினால் அவனை எதிர்த்து யுத்தஞ்செய்வார். (ஏசா 30:32).

17. தோப்பேத் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டது; ராஜாவுக்கு அது ஆயத்தப்படுத்தப்பட்டது (ஏசா 30:33; மத் 25:41; வெளி 19:20; வெளி 20:10).

18. அதை ஆழமும் விசாலமுமாக்கினார்; வேகும்படி அக்கினியும் மிகுந்த விறகுமுண்டு; கர்த்தரின் சுவாசம் கெந்தகத் தீயைப்போல அதைக் கொளுத்தும். (ஏசா 30:33).

யூதாவின் பாவங்கள்

1. முரட்டாட்டமுள்ள புத்திரர்.
2. கர்த்தருடைய வாக்கைக் கேளாமல் போனவர்கள்.
3. எகிப்தின் நிழலிலே ஒதுங்க வேண்டும் என்று எகிப்துக்குப்போகிறவர்கள். மனுஷருடைய பாதுகாப்பைத் தேடுகிறவர்கள்.
4. பாவத்தோடே பாவத்தைக் கூட்டுகிறவர்கள்.
5. கர்த்தரை அல்லாமல் ஆலோசனை பண்ணி புறஜாதியாரோடே ஒப்பந்தம் பண்ணுகிறவர்கள்.
6. உதவிக்காக எகிப்தை நம்பியிருக்கிறவர்கள்.
7. எகிப்தின் வலிமையைச் சார்ந்திருக்கிறவர்கள்.

(2) நான்கு அம்ச ஏமாற்றம்

ஏசா 30:3 பார்வோனுடைய பெலன் உங்களுக்கு வெட்கமாகவும் எகிப்தினுடைய நிழலொதுக்கு உங்களுக்கு இலச்சையாகவும் இருக்கும்.

ஏசா 30:4 அவர்கள் பிரபுக்கள் சோவானிலே போய், அவர்கள் ஸ்தானாபதிகள் ஆனேஸ்மட்டும் சேருகிறார்கள்.

ஏசா 30:5 ஆனாலும் தங்கள் சகாயத்துக்கும் பிரயோஜனத்துக்கும் உதவாமல், வெட்கத்துக்கும் நிந்தைக்குமே உதவும் ஜனத்தினாலே யாவரும் வெட்கப்படுவார்கள்.

மனுஷனை நம்புவதினால் உண்டாகும் விளைவுகள்

1. வெட்கம் (ஏசா 30:3,5)
2. இலச்சை
3. பிரயோஜனத்துக்கு உதவாது.
4. நிந்தை
5. வியர்த்தம் (ஏசா 30:7)
6. வீண்

"ஆனேஸ்" (Hanes) - மறுபெயர் தகபானேஸ் (Tahapanes) (எரே 2:16) தக்பானேஸ் (Tahpanhes) (எரே 43:7-9; எரே 44:1; எரே 46:14).

"யாவரும் வெட்கப்படுவார்கள்" - யூதாவின் பிரபுக்கள் எகிப்தின் அதிபதிகளோடே உடன்படிக்கை பண்ணப் போகிறார்கள். ஆனால் எகிப்தியரால் யூதாவிற்கு உதவி புரிய முடியாது. யூதருடைய முயற்சிகள் வெட்கமாகவும், குழப்பமாகவும் நிந்தையாகவும் இருக்கும். அவர்கள் எகிப்தை நம்புவதற்குப் பதிலாகக் கர்த்தரை நம்பி அவருடைய பலத்தைச் சார்ந்திருக்க வேண்டும்.

30 அதிகாரம்

(3) யூதரின் பயனில்லாத வெகுமதிகள்

ஏசா 30:6 தெற்கேபோகிற மிருகஜீவன்களின் பாரம். துஷ்டசிங்கமும், கிழச்சிங்கமும், விரியனும், பறக்கிற கொள்ளி வாய்ச்சர்ப்பமும் வருகிறதும், நெருக்கமும் இடுக்கமும் அடைவிக்கிறதுமான தேசத்துக்கு, அவர்கள் கழுதை மறிகளுடைய முதுகின் மேல் தங்கள் ஆஸ்திகளையும், ஒட்டகங்களுடைய முதுகின்மேல் தங்கள் பொக்கிஷங்களையும், தங்களுக்கு உதவாத ஜனத்தண்டைக்கு ஏற்றிக் கொண்டு போகிறார்கள்.

ஏசா 30:7 எகிப்தியர் சகாயம் பண்ணுவது வியர்த்தமும் வீணுமாம்; ஆகையால், சும்மாயிருப்பதே அவர்களுக்குப் பெலன் என்று அதற்காகக் கூறுகிறேன்.

"தெற்கே போகிற மிருகஜீவன்களின் பாரம்" - யூதர்கள் எகிப்திற்குப் போகிறபோது தங்களுடைய மிருகஜீவன்கள்மேல் ஏராளமான வெகுமதிகளைப் பாரமாக ஏற்றிக் கொண்டு போகிறார்கள். தெற்கே என்பது எகிப்தைக் குறிக்கும். (ஏசா 30:5-7; தானி 11:40-45).

"துஷ்டசிங்கமும், கிழச்சிங்கமும்" - யூதர்கள் எகிப்தியரின் உதவியைக் கேட்கப்போகும் போது அவர்களுக்கு சிங்கங்களினால் வாதை உண்டாகும். விரியனும் கொள்ளிவாய்ச் சர்ப்பமும் அவர்களுக்குப் பிரச்சனைகளைக் கொடுக்கும். இத்தனை நிந்தைகளுக்கு மத்தியில் அவர்கள் எகிப்தையே நாடிப்போகிறார்கள். கர்த்தரை நாடிப் போவதற்கு யூதர்கள் எந்தவித முயற்சியும் மேற்கொள்ளவில்லை.

"விரியன்" **(viper)** - (ஏசா 59:5; யோபு 20:16; மத் 3:7).

"பறக்கிறகொள்ளி வாய்ச்சர்ப்பம்" **(fiery flying serpent)** - (ஏசா 14:29; எண் 21:8).

"நெருக்கமும் இடுக்கமும் அடைவிக்கிறதுமான தேசம்" - இது எகிப்தைக் குறிக்கும். நேபுகாத்நேச்சார் எகிப்தின்மீது வந்த போது அவர்கள் நெருக்கமும், இடுக்கமும் அடைந்தார்கள். அவர்களால் யூதருக்கு உதவி புரிய முடியவில்லை.(எரே 25:9-29; எரே 46:1-2).

(4) எட்டு அம்ச கலகம்

ஏசா 30:8 இப்பொழுது நீ போய், இது பிற்காலத்துக்கு என்றென்றைக்கும் இருக்கும்படி, இதை அவர்களுக்கு முன்பாக ஒரு பலகையில் எழுதி, ஒரு புஸ்தகத்தில் வரை.

ஏசா 30:9 இவர்கள் கலகமுள்ள ஜனங்களும், பொய்பேசுகிற பிள்ளைகளும், கர்த்தருடைய வேதத்தைக் கேட்க மனதில்லாத புத்திரருமாயிருக்கிறார்கள்.

ஏசா 30:10 இவர்கள் தரிசனக்காரரை நோக்கி: தரிசனங் காணவேண்டாம் என்றும், ஞானதிருஷ்டிக்காரரை நோக்கி: யதார்த்தமாய் எங்களுக்குத் தரிசனஞ் சொல்லாமல், எங்களுக்கு இதமான சொற்களை உரைத்து, மாயமானவைகளைத் திருஷ்டியுங்கள் என்றும்,

ஏசா 30:11 நீங்கள் வழியை விட்டு, பாதையினின்று விலகி, இஸ்ரவேலின் பரிசுத்தரை எங்கள் முன்பாக இராமல் ஒய்ப்பண்ணுங்கள் என்றும் சொல்லுகிறார்கள்.

"ஒரு பலகையில் எழுதி, ஒரு புஸ்தகத்தில் வரை" - யூதாவின் பாவங்களையும், கலகங்களையும் ஒரு பலகையில் நிரந்தரமாக எழுதி வைக்குமாறு கர்த்தர் ஏசாயாவிற்குக் கட்டளை கொடுக்கிறார்.

யூதாவின் பாவங்கள்

1. கலகமுள்ள ஜனங்கள்
2. பொய்பேசுகிற பிள்ளைகள்
3. கர்த்தருடைய வேதத்தைக் கேட்க மனதில்லாத புத்திரர்

30 அதிகாரம்

4. இவர்கள் தரிசனக்காரரை நோக்கி: தரிசனங் காணவேண்டாம் என்று சொல்லுகிறார்கள். (ஏசா 30:10).

5. இவர்கள் ஞானதிருஷ்டிக்காரரை நோக்கி: யதார்த்தமாய் எங்களுக்குத் தரிசனஞ் சொல்லாமல், எங்களுக்கு இதமான சொற்களை உரைத்து, மாயமானவைகளைத் திருஷ்டியுங்கள் என்று சொல்லுகிறார்கள். (ஏசா 30:10-11).

6. கர்த்தருடைய வார்த்தையை வெறுக்கிறார்கள். (ஏசா 30:12).

7. இடுக்கமும் தாறுமாறும் செய்கிறதை நம்பி, அதைச் சார்ந்து கொள்ளுகிறார்கள்.

(5) ஏழு அம்ச நியாயத்தீர்ப்பு

ஏசா 30:12 நீங்கள் இந்த வார்த்தையை வெறுத்து, இடுக்கமும் தாறுமாறும் செய்கிறதை நம்பி, அதைச் சார்ந்து கொள்ளுகிறபடியால்,

ஏசா 30:13 இந்த அக்கிரமம் உங்களுக்கு உயர்ந்த சுவரில் விழப் பிதுங்கிநிற்கிறதும், திடீரென்று சடிதியாய் இடியப் போகிறதுமான வெடிப்பைப்போல இருக்கும் என்று இஸ்ரவேலின் பரிசுத்தர் சொல்லுகிறார்.

ஏசா 30:14 அவர்களை அவர் தப்பவிடாமல் உடையும்படி குயக்கலத்தை நொறுக்குவதுபோல அவர்களை நொறுக்குவார்; அடுப்பிலே நெருப்பு எடுக்கிறதற்கும், குளத்திலே தண்ணீர் மொள்ளுகிறதற்கும் நொறுங்கின துண்டுகளில், ஒரு ஓடாகிலும் அகப்படாதேபோம்.

"நீங்கள் இந்த வார்த்தையை வெறுத்து" - ஏசா 30:8-12 ஆகிய வசனங்களில் யூதாவின் பாவம் கூறப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய வார்த்தை தீர்க்கதரிசியின் மூலமாக வருகிறது. ஆனால் அவர்கள் அந்த வார்த்தையை வெறுக்கிறார்கள். இடுக்கமும் தாறுமாறும் செய்கிறதை நம்பி, அதைச் சார்ந்து கொள்ளுகிறார்கள். இந்த அக்கிரமம் அவர்களுடைய தலைமேல்விழும். அது அவர்களை அழிக்கும். (ஏசா 30:12-14).

"ஒரு ஓடாகிலும் அகப்படாதேபோம்" - யூதாவின் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக அக்கிரமம் பண்ணுகிறார்கள். ஆகையினால் கர்த்தர் அவர்களைத் தப்பவிடாமல் உடைப்பார். குயக்கலத்தை நொறுக்குவதுபோல அவர்களை நொறுக்குவார். நொறுங்கின துண்டுகளில், ஒரு ஓடாகிலும் அகப்படாதேபோம். நொறுக்கப்பட்ட பின்பு அந்தக் கலத்தினால் தண்ணீர் மொள்ள முடியாது. அது ஒன்றுக்கும் உதவாது. யூதாவின் அழிவு இதைப்போல பூரணமாக இருக்கும். பாபிலோனும், ரோமாபுரியும் யூதாவுக்கு விரோதமாக எழும்பி வந்து அவர்களை அழித்துப் போடுவார்கள். (ஏசா 30:13-14). இங்கு கூறப்பட்டிருக்கும் அழிவு அசீரியர் மூலமாக வரவில்லை. நேபுகாத்நேச்சார் மூலமாக வருகிறது. (2இராஜா 25) கிபி. 70 ஆம் வருஷத்தில் ரோமாபுரியார் மூலமாகவும் எருசலேமிற்கு அழிவு வரும். (மத் 24:2; லூக்கா 21:20-23). அசீரியர் மூலமாக வரும் அழிவு பாபிலோனியர், ரோமாபுரியார் ஆகியோர் மூலமாக வரும் அழிவைப் போல பூரணமாக இராது. அசீரியரின் அழிவைப் பற்றி ஏசா 36:1-37:38 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

(6) பாதுகாப்பின் வாக்குத்தத்தம் - (31:4)

ஏசா 30:15 நீங்கள் மனந்திரும்பி அமர்ந்திருந்தால்இரட்சிக்கப்படுவீர்கள்; அமரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பெலனாயிருக்கும் என்று இஸ்ரவேலின் பரிசுத்தராயிருக்கிற கர்த்தராகிய தேவன் சொல்லுகிறார்; நீங்களோ அப்படிச் செய்ய மனதாயிராமல்;

30 அதிகாரம்

"நீங்கள் மனந்திரும்பி அமர்ந்திருந்தால் இரட்சிக்கப்படுவீர்கள்" - யூதர்கள் மனந்திரும்பி கர்த்தரிடத்திற்கு வந்தால் அவர்களுக்கு இரட்சிப்பு உண்டு. ஆனால் அவர்களோ கர்த்தரை விட்டு ஓடிப்போகிறார்கள். இதன் நிமித்தமாக அவர்களைத் துரத்துகிறவர்கள் அவர்களைப்பிடித்து அழித்துப்போடுவார்கள். கர்த்தரோ யூதருக்கு இரங்கும்படி காத்திருக்கிறார். ஆனால் யூதர்களோ கர்த்தரை விட்டு ஓடிப்போகிறார்கள். ஆகையினால் அழிவு அவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. (ஏசா 30:15-17). நேபுகாத்நேச்சார் மூலமாக வந்த அழிவின்போதும் (2இராஜா 25:1-10), கியி. 70 ஆம் வருஷத்தில் ரோமாபுரியார் மூலமாக வந்த அழிவின்போதும் யூதா தேசத்தார் ஓடிப்போய்அழிந்தார்கள். (லூக்கா 21:12-24).

(7) மறுப்பு - நியாயத்தீர்ப்பு

ஏசா 30:16 அப்படியல்ல, குதிரைகளின் மேல் ஏறி ஓடிப்போவோம் என்கிறீர்கள்; அப்படியே ஓடிப்போவீர்கள், வேகமான வாகனங்களின்மேல் ஏறிப்போவோம் என்கிறீர்கள்; அப்படியே உங்களைத் துரத்துகிறவர்கள் வேகமாய்த் துரத்துவார்கள்.

ஏசா 30:17 நீங்கள் மலையுச்சியின் மேல் ஒரு கம்பத்தைப்போலவும், மேட்டின்மேல் ஒரு கொடியைப் போலவும் மீந்திருக்கு மட்டாக, ஒருவன் பயமுறுத்த ஆயிரம் பேரும், ஐந்துபேர் பயமுறுத்த நீங்கள் அனைவரும் ஓடிப்போவீர்கள்.

6. ஆயிர வருஷம் - (ஏசா 2:1)

(1) பத்து அம்ச ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள்

ஏசா 30:18 ஆனாலும் உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார், உங்கள் மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார்; கர்த்தர் நீதிசெய்கிற தேவன்; அவருக்குக் காத்திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள்.

ஏசா 30:19 சீயோனைச் சேர்ந்த ஜனங்கள் எருசலேமில் வாசமாயிருப்பார்கள்; இனி நீ அழுதுகொண்டிராய்; உன் கூப்பிடுதலின் சத்தத்துக்கு அவர் உருக்கமாய் இரங்கி, அதைக் கேட்டவுடனே உனக்கு மறுஉத்தரவு அருளுவார்.

ஏசா 30:20 ஆண்டவர் உங்களுக்குத் துன்பத்தின் அப்பத்தையும், உபத்திரவத்தின் தண்ணீரையும் கொடுத்தாலும், உன் போதகர்கள் இனி ஒருபோதும் மறைந்திருக்க மாட்டார்கள்; உன் கண்கள் உன் போதகர்களைக் காணும்.

ஏசா 30:21 நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும் போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்.

ஏசா 30:22 உன் சுரூபங்களை மூடிய வெள்ளித் தகட்டையும், உன் விக்கிரகங்களின் பொன் ஆடையாபரணத்தையும் தீட்டாக எண்ணி, அவைகளைத் தீட்டுப்பட்ட வஸ்திரம் போல எறிந்து விட்டு, அதைச் சீ! போ என்பாய்.

30 அதிகாரம்

"ஆனாலும் உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார்" - ஏசா 30:18-33 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் வாக்கியம் ஆயிரம் வருஷ அரசாட்சியின்போது நிறைவேறும். கர்த்தர் எப்போதுமே தம்முடைய பிள்ளைகள் எப்போது மனந்திருந்துவார்கள் என்று காத்துக் கொண்டிருப்பார். இந்த வாக்கியத்தில் யூதா மனந்திருந்தும் என்று கர்த்தர் காத்துக் கொண்டிருக்கிறார். யூதா மனந்திருந்தும்போது கர்த்தர் அவர்களுடைய முற்பிதாக்களோடு ஏற்படுத்திய நித்திய உடன்படிக்கையை நிறைவேற்றுவார். (ஏசா 30:18-19). இஸ்ரவேல் கர்த்தருக்கு ஏற்கெனவே கீழ்ப்படிந்திருந்தால் அவர் தம்முடைய உடன்படிக்கையை இதற்கு முன்பாகவே நிறைவேற்றியிருப்பார். அவர்கள் கீழ்ப்படியாமற்போனதினால் கர்த்தர் இப்போது அவர்களுக்காகக்காத்துக் கொண்டிருக்கிறார். கிறிஸ்து மரித்து 2,000 வருஷங்களாகக் கர்த்தர் காத்துக் கொண்டிருக்கிறார். தம்முடைய இரண்டாம் வருகை வரையிலும் யூதர்களை ஆசீர்வதிப்பதற்காகக் கர்த்தர் காத்துக் கொண்டிருப்பார். (ஏசா 30:18-33; ஏசா 66:19-21; சக 12:10-14:21; மத் 23:37-39; ரோமர் 11:25-29).

"உங்கள் மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார்" - தம்மிடத்தில் வருகிறவர்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பதற்காகக் கிருபையோடும், இரக்கத்தோடும் கர்த்தர் காத்துக் கொண்டிருக்கிறார். மனுஷர் மனந்திரும்ப வேண்டும் என்பதற்காகவே கர்த்தர் காத்துக் கொண்டிருக்கிறார். அவர்களைச் சமயம் பார்த்து தண்டிக்க வேண்டுமென்று கர்த்தர் காத்துக் கொண்டிருப்பதில்லை. ஏனெனில் கர்த்தர் எப்போதுமே மனுஷர்மீது கிருபையாகவும், இரக்கமாகவும் இருக்கிறார். இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து மனந்திருந்தி, கர்த்தரிடத்தில் வருகிற அனைவருக்கும் அவருடைய ஆசீர்வாதம் உண்டு. (யோவான் 1:11-12; யோவான் 3:16-18).

"கர்த்தர் நீதிசெய்கிற தேவன்" - கர்த்தரால் தம்முடைய வார்த்தைக்கு விரோதமாகக் கிரியை செய்ய முடியாது. அவர் நீதி செய்கிறவர். தமக்குக் கீழ்ப்படியாதவர்களைக் கர்த்தரால் ஆசீர்வதிக்க முடியாது.

"சீயோனைச் சேர்ந்த ஜனங்கள் எருசலேமில் வாசமாயிருப்பார்கள்" - இந்த வாக்கியம் இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரையும் குறிக்கும். மேசியாவின் காலத்தில் இவர்கள் எல்லோரும் கூட்டிச் சேர்க்கப்பட்டு ஓர் தேசமாக ஸ்தாபிக்கப்பட்டிருப்பார்கள். இவர்கள் எருசலேமிலுள்ள சீயோனில் வாசம் பண்ணுவார்கள். ஒருசிலர் இந்த வாக்கியமானது சபையையும், இன்றைய தினத்தில் மனுஷர் மத்தியில் காணப்படும் தேவனுடைய ஆவிக்குரிய ராஜ்யத்தையும் குறிப்பதாக வியாக்கியானம் பண்ணுகிறார்கள்.

"இனி நீ அழுதுகொண்டிராய்" - ஆயிரம் வருஷ அரசாட்சியிலும், புதிய பூமியிலும் அழுகை இராது. (ஏசா 65:19; வெளி 21:3-7).

"உனக்கு மறுஉத்தரவு அருளுவார்" - தம்மிடத்தில் கண்ணீரோடு வருகிற ஜனங்களுக்குக் கர்த்தர் எப்போதுமே மறுஉத்தரவு அருளுவார். (மத் 7:7-11; 1யோவான் 1:9).

"துன்பத்தின் அப்பத்தையும், உபத்திரவத்தின் தண்ணீரையும்" - கர்த்தர் யூதாவைச் சபித்தபோதிலும், மேசியா வரும்போது அவர்களை ஆசீர்வதிப்பார். அப்போது யூதா சரியான பாதையில் நடக்கும். தங்களுடைய விக்கிரகங்களை யெல்லாம் அழிக்கும். (ஏசா 30:20-21).

(2) பத்து அம்ச பௌதீக ஆசீர்வாதங்கள்

ஏசா 30:23 அப்பொழுது நீ நிலத்தில் விதைக்கும் உன் விதைக்கு அவர் மழையையும், நிலத்தின் பலனாகிய ஆகாரத்தையும் தருவார்; அது கொழுமையும் புஷ்டியுமாய் இருக்கும்; அக்காலத்திலே உன் ஆடுமாடுகள் விஸ்தாரமான மேய்ச்சலுள்ள ஸ்தலத்திலே மேயும்;

ஏசாயா - தொகுப்புரை

30 அதிகாரம்

ஏசா 30:24 நிலத்தை உழுகிற எருதுகளும் கழுதைமறிகளும், முறத்தினாலும் தூற்றுக்கூடையினாலும் தூற்றப்பட்ட ருசியுள்ள கப்பிகளைத் தின்னும்.

ஏசா 30:25 கோபுரங்கள் விழுகிற மகா சங்காரத்தின் நாளிலே, உயரமான சகல மலைகளின்மேலும், உயரமான சகல மேடுகளின்மேலும் ஆறுகளும் வாய்க்கால்களும் உண்டாகும்.

ஏசா 30:26 கர்த்தர் தமது ஜனத்தின் முறி வைக்கட்டி, அதின் அடிக்காயத்தைக் குணமாக்கும் நாளிலே, சந்திரனுடைய வெளிச்சம் சூரியனுடைய வெளிச்சத்தைப் போலவும், சூரியனுடைய வெளிச்சம் ஏழத்தனையாய் ஏழு பகலின் வெளிச்சத்தைப் போலவும் இருக்கும்.

"அப்பொழுது" - ஆயிரம் வருஷ அரசாட்சியின்போது.

ஆயிரம் வருஷ அரசாட்சியின்போது வரும் ஆசீர்வாதங்கள்

1. மழை (ஏசா 30:23-26)
2. விதைப்பு
3. திரட்சியான ஆகாரம்
4. கொழுமையும், புஷ்டியுமான ஆகாரம்
5. நல்ல ஆடுமாடுகள்
6. விஸ்தாரமான மேய்ச்சலுள்ள ஸ்தலம்
7. கால்நடைகளுக்கு ருசியுள்ள ஆகாரம்
8. திரளான தண்ணீர்
9. சந்திரனுடைய பிரகாசமான வெளிச்சம்
10. சூரியனுடையபிரகாசமானவெளிச்சம்

"ஆறுகளும் வாய்க்கால்களும் உண்டாகும்" - எல்லா இடங்களிலும் தண்ணீர் செழிப்பாக இருக்கும். பாலைவனம் விளைச்சல் நிலமாக ஆகும். (ஏசா 35:1-10).

"கர்த்தர் தமது ஜனத்தின் முறிவைக்கட்டி" - ஆயிரம் வருஷ அரசாட்சியின்போது கர்த்தர் இஸ்ரவேலை ஆசீர்வதிப்பார். எல்லா சாபங்களிலிருந்தும் எல்லா உபத்திரவங்களிலிருந்தும் அவர்களை விடுவிப்பார். வருங்காலத்தில் அந்திக்கிறிஸ்து எல்லா யூதர்களையும் அழிக்க வகைதேடுவான். அவனுடைய உபத்திரவங்களிலிருந்து கர்த்தர் யூதர்களை விடுவிப்பார். (தானி 9:27; தானி 12:1-7; எசே 38-39; சக 12:10-14:21; மத் 24:15-31).

(3) இஸ்ரவேலின் விரோதிகள்மீது நடைபெறும் ஐந்து அம்ச நியாயத் தீர்ப்பின் முறைகள்

ஏசா 30:27 இதோ, கர்த்தருடைய நாமம் தூரத்திலிருந்து வரும்; அவருடைய கோபம் எரிகிறதும் கனன்று புகைகிறதுமாயிருக்கும்; அவருடைய உதடுகள் சினத்தால் நிறைந்து, அவருடைய நாவு பட்சிக்கிற அக்கினி போல இருக்கும்.

ஏசா 30:28 நாசம் என்னும் சல்லடையிலே ஜாதிகளை அரிக்கும்படிக்கு அவர் ஊதும் சுவாசம் கழுத்துமட்டும் எட்டுகிற ஆற்றுவெள்ளத்தைப் போலவும், ஜனங்களுடைய வாயிலே போட்டு அலைக்கழிக்கிற கடிவாளத்தைப் போலவும் இருக்கும்.

"இதோ, கர்த்தருடைய நாமம் தூரத்திலிருந்து வரும்" - இந்த வாக்கியத்தில் கர்த்தருடைய நாமம் என்பது கர்த்தரையே குறிக்கிறது. கர்த்தர் அந்திக்கிறிஸ்துவையும், பூமியிலுள்ள ராஜாக்களையும் அழிப்பதற்குப் பரலோகத்திலிருந்து வருவார். (ஏசா 63:1-5; எசே 38-39; யோவே 2-3; சக 14; மத் 25:31-46; யூதா 1:14-15; வெளி 19).

30 அதிகாரம்

சத்துருக்கள்மீது நியாயத்தீர்ப்பு வரும் விதம்

1. அவருடைய கோபம் எரியும்.
2. அவருடைய கோபம் கனன்று புகையும்.
3. அவருடைய உதடுகள் சினத்தால் நிறைந்திருக்கும்.
4. அவருடைய நாவு பட்சிக்கிற அக்கினிபோல இருக்கும்.
5. அவர் ஊதும் சுவாசம் ஆற்று வெள்ளத்தைப்போல இருக்கும்.

"நாசம் என்னும் சல்லடையிலே ஜாதிகளை அரிக்கும்படிக்கு" - தேசங்கள் நியாயந்தீர்க்கப் படும்போது அந்தத் தேசங்கள் வேறுபிரிக்கப் படுவதை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. (மத் 25:31-46).

"ஜனங்களுடைய வாயிலே போட்டு அலைக்கழிக்கிற கடிவாளம்" - அர்மெகதோன் யுத்தத்திற்கு முன்பு எருசலேமிலுள்ள பாதி ஜனங்கள் சிறைப்பிடிக்கப்படுவார்கள். (சக 14:1-5). சிறைக்கைதிகளுடைய வாய்களில் அக்காலத்தில் கடிவாளம் போடப்படுவது வழக்கம்.

(4) இஸ்ரவேலின்மீது ஏற்படும் விளைவின் இரண்டு அம்சம்

ஏசா 30:29 பண்டிகை ஆசரிக்கப்படும் இராத்திரியிலே பாடுகிறதுபோலப் பாடுவீர்கள்; கர்த்தருடைய பர்வதமாகிய இஸ்ரவேலின் கன்மலையண்டைக்குப் போக நாகசுரத்தோடே நடந்து வருகிற போது மகிழுகிறதுபோல மகிழுவீர்கள்.

"பாடுவீர்கள்" - அர்மெகதோன் யுத்தத்தில் சிறைப்பிடிக்கப்பட்டவர்களை இயேசு கிறிஸ்து விடுவிப்பார். எருசலேமில் கர்த்தர் யூதர்களை எல்லாம் கூட்டிச் சேர்ப்பார். அப்போது இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் ஆயிரம்வருஷத்து அரசாட்சியின் பாடலைப் பாடுவார்கள். அவர்கள் எருசலேமிற்குப் போகும்போது இந்தப் பாடலை மகிழ்ச்சியோடு பாடிக்கொண்டு போவார்கள். (ஏசா 2:2-4; ஏசா 35:8-10)

(5) அந்திக்கிறிஸ்துவின் மீது நடைபெறும் ஏழு அம்ச நியாயத்தீர்ப்பின் முறைகள் - (எசே 38:17-21; 2தெச 2:8; வெளி 19:19-21)

ஏசா 30:30 கர்த்தர் மகத்துவமானவர்; தமது சத்தத்தைக் கேட்கப்பண்ணி, உக்கிர கோபத்தினாலும், பட்சிக்கிற அக்கினி ஜுவாலையினாலும், இடி பெருவெள்ளம் கல்மழையினாலும், தமது புயத்தின் வல்லமையைக் காண்பிப்பார்.

ஏசா 30:31 அப்பொழுது தண்டாயுதத்தினால் அடித்த அசீரியன் கர்த்தருடைய சத்தத்தினாலே நொறுங்குண்டு போவான்.

ஏசா 30:32 கர்த்தர் அவன்மேல் சுமத்தும் ஆக்கினைத்தண்டம் செல்லுமிடமெங்கும், மேளங்களும் வீணைகளும் அதினுடன் போகும்; கொடிய யுத்தங்களினால் அவனை எதிர்த்து யுத்தஞ்செய்வார்.

ஏசா 30:33 தோப்பேத் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டது; ராஜாவுக்கு அது ஆயத்தப்படுத்தப்பட்டது; அதை ஆழமும் விசாலமுமாக்கினார்; வேகும்படி அக்கினியும் மிகுந்த விறகுமுண்டு; கர்த்தரின் சுவாசம் கெந்தகத் தீயைப்போல அதைக் கொளுத்தும்.

சத்துருக்கள்மீது நியாயத்தீர்ப்பு வரும் விதம்

1. தமது சத்தத்தைக் கேட்கப்பண்ணுவார்.
2. உக்கிர கோபத்தைக் காண்பிப்பார்.

30 அதிகாரம்

3. பட்சிக்கிற அக்கினிஜுவாலையைக் காண்பிப்பார்.

4. இடி பெருவெள்ளத்தினால் தமது புயத்தின் வல்லமையைக் காண்பிப்பார்.

5. கல்மழையினால் தமது புயத்தின் வல்லமையைக் காண்பிப்பார். (எசே 38:17-21; 2தெச 1:7-10; 2தெச 2:8; யூதா 1:14-15; வெளி 16:17-21; வெளி 19:21)

"அசீரியன்" - அந்திக்கிறிஸ்துவைக் குறிக்கும் வார்த்தை. (ஏசா 10:24; ஏசா 14:25; மீகா 5:5-6).

"மேளங்களும் வீணைகளும் அதினுடன் போகும்" - கர்த்தர் அனுமதிக்கும் இடங்களுக்கெல்லாம் அந்திக்கிறிஸ்துவினுடைய தண்டாயுதமும், கோலும் போகும். அங்கு கர்த்தர் அந்திக்கிறிஸ்துவிற்கு எதிராக யுத்தம் பண்ணுவார். அப்போது அங்கு சந்தோஷமும், களிகூருதலும், இசையும் உண்டாகும். கர்த்தர் செல்லும் இடங்களுக்கெல்லாம் மேளங்களும், வீணைகளும் போகும்.

"தோப்பேத்" **(Tophet)** - இந்த வார்த்தைக்கு ஏற்கெனவே ஆயத்தம்பண்ணப்பட்டிருப்பது என்று பொருள். அசீரியனாகிய அந்திக் கிறிஸ்துவும், அவனுடைய சேனையும் அழியும் ஸ்தலம். ஏற்கெனவே ஆயத்தமாக்கப் பட்டிருக்கிறது. (ஏசா 30:30-32) அர்மெகதோனில் அந்திக்கிறிஸ்து அழிக்கப் படுவான். அவனும், அவனுடைய சேனைகளும் அழிக்கப்படுவார்கள். தோப்பேத்தில் அவர்கள் எல்லோரும் கொளுத்திப்போடப்படுவார்கள். இதற்காகத் தோப்பேத் ஏற்கெனவே ஆயத்தமாக்கப் பட்டிருக்கிறது. (ஏசா 30:20; எசே 38:17-21; 2தெச 1:7-10). தோப்பேத்தில் அக்கினியும், மிகுந்த விறகும் உண்டு. அந்திக்கிறிஸ்துவின் சேனையில் எத்தனைபேர் இருந்தாலும் அத்தனை பேரையும் அழிக்கும் அளவிற்குத் தோப்பேத் விஸ்தாரமாக உள்ளது.

ஏற்படுத்தப்பட்டது **(arrange) - עָרַךְ - aw-rak' - 6186**

வினைச்சொல் - கிரமமாய் வை, மதி, அடுக்கு, அடுக்கிவை, வரிசையாக வை, அணிவகு, ஆயத்தம்பண்ணு, ஆயத்தப் படுத்து, எரியவை, ஒப்பாயிரு, நிகராயிரு **(set in a row; arrange; put in order)**

ஏற்கெனவே **(therefore) - אֶתְמוֹל - eth-mole' - 865**

முற்சேர்க்கை, பிற்சேர்க்கை - இதற்கு முன், அதற்கு முன்னே, நேற்று, ஏற்கெனவே **(yesterday; of late; times past)**

தோப்பேத் மகா பெரிய அழிவு உண்டாகும் இடம். நேபுகாத்நேச்சார் எருசலேமை அழித்த போது திரளான ஜனங்கள் இங்கு அடக்கம் பண்ணப்பட்டார்கள். (எரே 7:31-32; எரே 19:6-14) எருசலேமை அந்திக்கிறிஸ்துவின் சேனை முற்றிக்கைப்போடும்போது அந்திக் கிறிஸ்துவின் சேனையில் ஏராளமான ஜனங்கள் அழிந்துபோவார்கள். அவர்கள் எல்லோரும் இங்கு எரிக்கப்படுவார்கள். தோப்பேத் எருசலேமிற்கு வடகிழக்கில் உள்ள பள்ளத்தாக்காகும். இங்கு மோளேகின் விக்கிரகாராதனை அதிகமாக இருந்தது. சிறுவர்களை மோளேகின் கைகளில் கொடுத்து அக்கினிக்கு இரையாக்குவது இங்கு வழக்கமாக இருந்தது. சிறுவர்களின் அலறல் கேட்காமல் இருப்பதற்குத் தோப் அல்லது தோப்பீம் என்னும் மேளத்தைச் சத்தமாக ஒலிக்கச் செய்வார்கள். இந்த மேளத்தின் பெயரிலிருந்து இந்தப் பள்ளத்தாக்கிற்கு தோப்பேத் என்னும் பெயர் உண்டாயிற்று. இன்னோமின் குமாரருடைய பள்ளத்தாக்கு என்னும் பெயரும் இதற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (2இராஜா 16:3; 2இராஜா 21:6; 2இராஜா 23:10). நகரத்திலுள்ள கழிவுகளை எரிப்பதற்கு இங்கு எப்பொழுதும் தீ எரிந்து கொண்டிருக்கும். நரகத்தின் எரிகிற அக்கினியைப் பற்றிக் குறிப்பிடுவதற்கு யூதர்கள் இந்தப் பள்ளத்தாக்கை ஒப்பிட்டுக் கூறுவது வழக்கம். (லூக்கா 12:5).

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

ஏசாயா - தொகுப்புரை

30 அதிகாரம்

"ராஜாவுக்கு அது ஆயத்தப்படுத்தப்பட்டது" - ஏசா 30:31 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் அசீரியனாகிய அந்திக்கிறிஸ்து தோப்பேத்தில் அழிக்கப்படுவான். (சக 14:1-15; 2தெச 2:8; வெளி 19:19-21). இந்தத் தீர்க்கதரிசனத்தில் இந்த ராஜாவைப் பற்றி மட்டுமே கூறப்பட்டிருக்கிறது.

"அதை ஆழமும் விசாலமுமாக்கினார்" - இதைக் கர்த்தர் செய்தார். ஏசா 30:30-33 ஆகிய வசனங்களைக் கர்த்தரே நிறைவேற்றுகிறார். கர்த்தர் இந்தப் பள்ளத்தாக்கைச் சிருஷ்டித்த போது இதை ஆழமும், விசாலமுமாகச் சிருஷ்டித்தார். அந்திக் கிறிஸ்துவும், அவனுடைய சேனையும் அழிக்கப்படும்போது கர்த்தர் தோப்பேத்தில் எரியும் அக்கினியை அதிகரிக்கச் செய்வார்.

31 அதிகாரம்

7. எகிப்தியருக்கு ஐயோ - (ஏசா 30)

(1) ஆறு அம்ச கலகம் - (1:2)

ஏசா 31:1 சகாயமடையும்படி இஸ்ரவேலுடைய பரிசுத்தரை நோக்காமலும், கர்த்தரைத் தேடாமலும், எகிப்துக்குப் போய், குதிரைகள்மேல் நம்பிக்கை வைத்து, இரதங்கள் அநேகமாயிருப்பதினால் அவைகளை நாடி, குதிரைவீரர் மகா பெலசாலிகளாயிருப்பதினால் அவர்களை நம்பிக் கொண்டிருக்கிறவர்களுக்கு ஐயோ!

தீர்க்கதரிசன எண் - 33

"சகாயமடையும்படி இஸ்ரவேலுடைய பரிசுத்தரை நோக்காமலும், கர்த்தரைத் தேடாமலும்......" (ஏசா 31:1-9) ஏசா 31:1-3 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. ஏசா 31:3-9 ஆகிய வசனங்களில் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. எகிப்தியரை நம்பிக் கொண்டிருக்கிறவர்களுக்கு ஐயோ. (ஏசா 31:1).
2. கர்த்தர் தீங்கு வரப்பண்ணுவார். (ஏசா 31:2)
3. அவர் தம்முடைய வார்த்தைகளை மறுக்கமாட்டார்.
4. கர்த்தர் தீமை செய்கிறவர்களின் வீட்டுக்கு விரோதமாக எழும்புவார்.
5. அக்கிரமக்காரருக்குச் சகாயஞ் செய்கிறவர்களுக்கும் விரோதமாகக் கர்த்தர் எழும்புவார்.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. கர்த்தர் தமது கரத்தை நீட்டுவார், அப்பொழுது சகாயம் செய்கிறவனும் இடறி, சகாயம் பெறுகிறவனும் விழுந்து, அனைவரும் ஏகமாய் அழிந்து போவார்கள். (ஏசா 31:3).
2. சேனைகளின் கர்த்தர் சீயோன் மலைக்காகவும், அதின் மேட்டுக்காகவும் யுத்தம் பண்ண இறங்குவார். (ஏசா 31:4).
3. சேனைகளின் கர்த்தர் எருசலேமின்மேல் ஆதரவாக இருப்பார். (ஏசா 31:5).
4. வெள்ளி விக்கிரகங்களையும், பொன் விக்கிரகங்களையும், உங்களில் ஒவ்வொருவரும் அக்காலத்திலே வெறுத்துவிடுவீர்கள். (ஏசா 31:7).
5. அப்பொழுது வீரனுடைய பட்டயம் அல்லாத பட்டயத்தாலே அசீரியன் விழுவான் (ஏசா 31:8).
6. அவன் பட்டயத்துக்குத் தப்ப ஓடுவான்.
7. அவன் வாலிபர் கலைந்துபோவார்கள்.
8. அவனுடைய கன்மலை பயத்தினால் ஒழிந்துபோம் (ஏசா 31:9).
9. அவர்களுடைய பிரபுக்கள் கர்த்தருடைய கொடியைக் கண்டு கலங்குவார்கள்.
10. சீயோனில் நெருப்பும் எருசலேமில் சூளையும் இருக்கும்.

யூதாவின் கலகக்குணம்

1. அவர்கள் கர்த்தரைத் தேடாமல் தங்களுடைய உதவிக்காக எகிப்தியரைச் சார்ந்திருக்கிறார்கள்.
2. குதிரைகள் மேல் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.
3. அவர்கள் இரதங்களை நம்புகிறார்கள்.
4. இரதங்கள் அநேகமாயிருப்பதினால் அவைகளை நாடுகிறார்கள்.
5. குதிரைவீரரை நம்புகிறார்கள்.

ஏசாயா - தொகுப்புரை

31 அதிகாரம்

யூதா செய்ய மறுக்கும் காரியங்கள்

1. சகாயமடையும் படி இஸ்ரவேலுடைய பரிசுத்தரை நோக்காமல் இருக்கிறார்கள்.
2. கர்த்தரைத் தேடாமல் இருக்கிறார்கள்.

(2) தேவனைப் பற்றிய ஐந்து சத்தியங்கள்

ஏசா 31:2 அவரும் ஞானமுள்ளவர்; அவர் தம்முடைய வார்த்தைகளை மறுக்காமல், தீங்கு வரப்பண்ணி, தீமை செய்கிறவர்களின் வீட்டுக்கும், அக்கிரமக் காரருக்குச் சகாயஞ் செய்கிறவர்களுக்கும் விரோதமாக எழும்புவார்.

கர்த்தரைப் பற்றிய சத்தியங்கள்

1. அவர் ஞானமுள்ளவர் - அவரை ஏமாற்ற முடியாது.
2. அவர் தீங்கு வரப்பண்ணுவார் - மனுஷருடைய பாவத்தினால் தீங்கு வரும்.
3. அவர் பொய் பேசமாட்டார் - தம்முடைய வார்த்தைகளை மறுக்கமாட்டார்.
4. தீமை செய்கிறவர்களின் வீட்டுக்கு விரோதமாக எழும்புவார்.
5. அக்கிரமக்காரருக்குச் சகாயஞ் செய்கிறவர்களுக்கு விரோதமாக எழும்புவார்.

(3) எகிப்தை நம்புவது வீண்

ஏசா 31:3 எகிப்தியர் தெய்வம் அல்ல, மனுஷர்தானே அவர்களுடைய குதிரைகள் ஆவியல்ல, மாம்சந்தானே; கர்த்தர் தமது கரத்தை நீட்டுவார், அப்பொழுது சகாயம் செய்கிறவனும் இடறி, சகாயம் பெறுகிறவனும் விழுந்து, அனைவரும் ஏகமாய் அழிந்து போவார்கள்.

எகிப்தை நம்பியிருப்பது வீண் - காரணம்

1. எகிப்தியர் மனுஷர் - தெய்வம் அல்ல.
2. அவர்களுடைய குதிரைகள் மாம்சம் - ஆவியல்ல.

யூதாவின் வீழ்ச்சியும், எகிப்தின் வீழ்ச்சியும்

இந்த வாக்கியத்தில் "அப்பொழுது" என்னும் வார்த்தையானது இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும் காலத்தைக் குறிக்கும். அக்காலத்தில் எகிப்தும், யூதாவும் வீழ்ச்சியடையும். (ஏசா 31:3). இந்தத் தீர்க்கதரிசனம் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பு நிறைவேறும். அசீரியர் யூதாவின்மீது வந்தபோது இவ்விரண்டு தேசங்களும் ஏகமாய் அழிந்துபோகவில்லை. (ஏசா 36:1-37:38) இவர்களுக்கு எதிராகப் பாபிலோனியர் வந்தபோது இவ்விரண்டு தேசங்களும் அழிந்தன. ஆனால் அவர்கள் ஏகமாய் அழிந்துபோகவில்லை. (2 இராஜா 25; எரே 25). அந்திக் கிறிஸ்து பாலஸ்தீனத்தையும், எகிப்தையும் கைப்பற்றும்போது இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும். (தானி 11:40-44).

யூதாவும், எகிப்தும் ஏகமாய் வீழ்ச்சியடையும் என்னும் தீர்க்கதரிசனம் வருங்காலத்தில் நிறைவேறும் என்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவையாவன:

1. ஏசா 31:3 ஆவது வசனத்தில் யூதாவும், எகிப்தும் ஏகமாய் அழியும் என்று கூறப்பட்டிருக்கிறது.
2. கர்த்தர் பூமிக்கு வந்து சீயோன் மலைக்காக யுத்தம் பண்ணுவது அவருடைய இரண்டாம் வருகையின் போது நடைபெறும். (ஏசா 31:4-5; சக 14:1-15; ரோமர் 11:25-29; வெளி 19:11-21). யூதாவுக்கு விரோதமாக அசீரியர் வந்தபோது கர்த்தர் இவ்விரண்டு தேசங்களையும் ஏகமாய் அழிக்கவில்லை. (ஏசா 36:1-37:38) நேபுகாத்நேச்சாரின் காலத்தில் எருசலேம் அழிக்கப்பட்ட போதும், (2 இராஜா 25), ரோமாபுரியாரின் காலத்தில் எருசலேம் அழிக்கப்பட்ட போதும் (லூக்கா 21:20-24) யூதாவும், எகிப்தும் ஏகமாய் அழியவில்லை.

31 அதிகாரம்

3. சேனைகளின் கர்த்தர் இன்னும் பட்சிகளைப்போல பறந்து வரவில்லை. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது தேவதூதர்களும், பரிசுத்தவான்களும் கிறிஸ்துவோடு பட்சிகளைப் போல பறந்து வருவார்கள். (ஏசா 31:5; யோவே 2; சக 14:1-5; மத் 24:31; மத் 25:31; 2தெச 1:7-10; யூதா 1:14-15; வெளி 19:11-21).

4. கர்த்தர் எருசலேமிற்கு ஆதரவாக இன்னும் பூமிக்கு வரவில்லை. அவருடைய இரண்டாம் வருகையின்போது கர்த்தர் எருசலேமின்மேல் ஆதரவாக இருப்பார். (ஏசா 31:5; ஏசா 63:1-5; யோவே 2-3; சக 9:15; சக 12:8; சக 14: 1-15; மத் 24:29-31; மத் 25:31; 2தெச 1:7-10; யூதா 1:14-15; வெளி 19:11-21).

5. வருங்காலத்தில் ஒவ்வொருவரும் தங்களுடைய வெள்ளி விக்கிரகங்களையும், பொன் விக்கிரகங்களை வெறுத்து விடுவார்கள். (ஏசா 31:7; ஏசா 2:18-20; சக 13:2).

6. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரையிலும் அந்திக்கிறிஸ்துவாகிய அசீரியர் அழிக்கப்படுவதில்லை. (ஏசா 31:8; மீகா 5; சக 14; 2தெச 2:8; வெளி 19:11-21).

7. இயேசு கிறிஸ்துவே கர்த்தருடைய கொடியாக இருப்பார். அது அவருடைய இரண்டாம் வருகையின்போது நடைபெறும் சம்பவம். (ஏசா 31:9; ஏசா 11:10-12; சக 9:16).

8. சீயோனில் நெருப்பும் எருசலேமில் சூளையும் என்பது இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது நடைபெறும் சம்பவமாகும். (ஏசா 31:9; எசே 40-48, சக 6:12-13).

(4) பாதுகாப்பின் வாக்குத்தத்தம்

ஏசா 31:4 கர்த்தர் என்னுடனே சொன்னது: சிங்கமும் பாலசிங்கமும் தங்கள் இரையைப் பிடித்திருக்கும் போது கெர்ச்சித்து, தங்களுக்கு விரோதமாய்க் கூப்பிடுகிற திரளான மேய்ப்பரின் சத்தத்தினாலே கலங்காமலும், அவர்கள் அமளியினாலே பணியாமலும் இருக்கிறது போல, சேனைகளின் கர்த்தர் சீயோன் மலைக்காகவும், அதின் மேட்டுக்காகவும் யுத்தம்பண்ண இறங்குவார்.

ஏசா 31:5 பறந்து காக்கிற பட்சிகளைப் போல, சேனைகளின் கர்த்தர் எருசலேமின் மேல் ஆதரவாக இருப்பார்; அவர் அதைக் காத்துத் தப்பப்பண்ணுவார்; அவர் கடந்துவந்து அதை விடுவிப்பார்.

ஏசா 31:6 இஸ்ரவேல் புத்திரரே, நீங்கள் முற்றிலும் விட்டு விலகினவரிடத்தில் திரும்புங்கள்.

ஏசா 31:7 உங்களுக்குப் பாவமாக உங்கள் கைகள் செய்திருந்த வெள்ளி விக்கிரகங்களையும், பொன் விக்கிரகங்களையும், உங்களில் ஒவ்வொருவரும் அக்காலத்திலே வெறுத்துவிடுவீர்கள்.

ஏசா 31:8 அப்பொழுது வீரனுடைய பட்டயம் அல்லாத பட்டயத்தாலே அசீரியன் விழுவான்; நீசனுடைய பட்டயம் அல்லாத பட்டயமே அவனைப் பட்சிக்கும்; அவன் பட்டயத்துக்குத் தப்ப ஓடுவான்; அவன் வாலிபர் கலைந்துபோவார்கள்.

ஏசா 31:9 அவனுடைய கன்மலை பயத்தினால் ஒழிந்துபோம், அவர்களுடைய பிரபுக்கள் கொடியைக் கண்டு கலங்குவார்கள் என்பதை, சீயோனில் நெருப்பையும் எருசலேமில் சூளையையுமுடைய கர்த்தர் சொல்லுகிறார்.

"சிங்கமும் பாலசிங்கமும்" - கர்த்தர் எருசலேமிற்காக சிங்கத்தைப் போலவும், பாலசிங்கத்தைப் போலவும் யுத்தம் பண்ணுவார்.

31 அதிகாரம்

"சேனைகளின் கர்த்தர் சீயோன் மலைக்காகவும், அதின் மேட்டுக்காகவும் யுத்தம்பண்ண இறங்குவார்." - இந்தக் காரியத்தைச் செய்வதற்குத் தமது தூதரை அனுப்பாமல் கர்த்தர் தாமே இறங்கிவருவார். (ஏசா 63:1-5; தானி 7:13-14,22; சக 14:1-5; மத் 24:29-31; மத் 25:31-46; 2தெச 1:7-10; 2தெச 2:8; யூதா 1:14-15; வெளி 19:11-21).

"பறந்து காக்கிற பட்சிகளைப்போல" - எருசலேமைச் சுற்றிலும் முற்றிக்கையிட்டிருக்கும் சத்துருக்களை அழிப்பதற்காகக் கர்த்தரும் அவருடைய பரலோகத்தின் தூதர்களும் வானத்திலிருந்து இறங்கி வருவார்கள். (யோவேல் 2; சக 14:1-5; மத் 24:29-31; மத் 25:31; 2தெச 1:7-10; யூதா 1:14-15; வெளி 19:11-21).

"நீங்கள் முற்றிலும் விட்டு விலகினவரிடத்தில் திரும்புங்கள்" - இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணி அவரை விட்டு விலகிவிட்டார்கள். இப்போது அவரிடத்தில் திரும்ப வேண்டுமென்று அவர்களுக்குக் கட்டளை கொடுக்கப்படுகிறது. உபத்திரவக்காலத்தின் முடிவில் இஸ்ரவேல் புத்திரர் இந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிவார்கள். அக்காலத்தில் கர்த்தர் எருசலேமிலுள்ள எல்லா யூதர்கள்மீதும் தமதுகிருபையின் ஆவியையும், கீழ்ப்படிதலின் ஆவியையும் ஊற்றுவார். (ஏசா 66:6-7; சக 12:10-13:1; மத் 23:37-39; ரோமர் 11:25-29). அப்போது தங்களிடத்திலுள்ள எல்லா விக்கிரகங்களையும் இஸ்ரவேல் புத்திரர் வெறுத்து அகற்றிப்போடுவார்கள். (ஏசா 31:7).

"அப்பொழுது வீரனுடைய பட்டயம் அல்லாத பட்டயத்தாலே அசீரியன் விழுவான்" - அப்பொழுது என்பதற்கு எருசலேமைப் பாதுகாப்பதற்காக கர்த்தர் பூமிக்கு வரும்போது என்று பொருள்படும். (ஏசா 31:4-5) இஸ்ரவேல் தேசமாகக் கர்த்தரிடத்திற்குத் திரும்பும். ஒரேநாளில் மனந்திரும்பும். யூதாவிலுள்ள எல்லா விக்கிரகங்களும் அழிக்கப்படும். (ஏசா 31:6-7) அப்போது அந்திக்கிறிஸ்துவாகிய அசீரியன் அழிக்கப்படுவான். அவனுடைய வாலிபர் கலைந்துபோவார்கள். (தானி 7:11,21-22; தானி 8:23-25; மீகா 5; 2தெச 2:8; வெளி 19:19-21). இந்த வசனத்தில் அசீரியனைப் பற்றிக் கூறப்பட்டிருப்பது கடந்த காலத்தைக் குறிக்காமல் வருங்காலத்தைக் குறிக்கும். மேசியா வரும்போது அசீரியனாகிய அந்திக் கிறிஸ்து அழிக்கப் படுவான். (மீகா 5) பட்டயம் என்பது இயேசு கிறிஸ்துவைக் குறிக்கும். (வெளி 21:11-21).

கலைந்துபோதல் **(discomfited) -מַס - mas, mees - 4522**

ஆண்பால் பெயர்ச்சொல் - பகுதி, அமஞ்சி, கலைந்துபோடுதல், கப்பங் கட்டுகிறவள், பகுதி கட்டுகிறவர்கள், விசாரணை, பகுதி கட்டுதல், அடிமை **(to burden; tax; force to labor; levy; make tributary)**

"அவனுடைய கன்மலை பயத்தினால் ஒழிந்துபோம்" - அந்திக்கிறிஸ்து பயத்தினால் ஓடி ஒழிந்துகொள்வான். கர்த்தருடைய மகிமை பிரகாசமாக இருப்பதினால் அவனால் தப்பிக்க முடியாது. கர்த்தருடைய நெருப்பு அந்திக் கிறிஸ்துவைத் தேடிக் கண்டுபிடித்து அவனை அழித்துப்போடும். (ஏசா 31:8-9; தானி 7:11; 2தெச 2:8; வெளி 19:20).

"அவர்களுடைய பிரபுக்கள்" - அந்திக் கிறிஸ்துவின் பத்து ராஜ்யங்களை ஆளுகை செய்யும் பிரபுக்கள். (தானி 7:7-8,23-24; வெளி 17:8-17).

"கொடி" - கிறிஸ்துவின் கொடி. (ஏசா 11:10-12) இயேசு கிறிஸ்து அந்திக் கிறிஸ்துவோடும், அவனுடைய பத்து ராஜாக்களோடும் யுத்தம் பண்ணுவான். (தானி 7:23-26; தானி 8:25; வெளி 17:14)

"சீயோனில் நெருப்பு" - ஆயிரம் வருஷத்து அரசாட்சியின் தேவாலயத்திலுள்ள பலிபீடத்தில் நித்தியமாக எரிந்துகொண்டிருக்கும் நெருப்பு. கிறிஸ்து இந்த ஆலயத்தைக் கட்டி தமது தலைமை ஸ்தாபனமாக வைத்திருப்பார். (எசே 43:7; சக 6:12-13).

"எருசலேமில் சூளை" - இது அடுப்பைக் குறிக்கும். (யாத் 7:28; லேவி 2:4; லேவி 7:9; லேவி 11:35) ஆயிரம்வருஷத்து தேவாலயத்தில் கர்த்தருடைய சந்நிதியில் வைக்கப்படும் சமுகத்தப்பங்கள் இந்த அடுப்பில் சுடப்படும்.

32 அதிகாரம்

8. ஆயிர வருஷம் - (ஏசா 2:1)

(1) ஆட்சி புரிபவர்கள் - (தானி 7:14; வெளி 5:10; 20:4-6; சக 14:9)

ஏசா 32:1 இதோ, ஒரு ராஜா நீதியாக அரசாளுவார்; பிரபுக்களும் நியாயமாகத் துரைத்தனம் பண்ணுவார்கள்.

தீர்க்கதரிசன எண் - 34

"இதோ, ஒரு ராஜா நீதியாக அரசாளுவார்......" (ஏசா 32:1-20) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. ஒரு ராஜா நீதியாக அரசாளுவார்.
2. பிரபுக்களும் நியாயமாகத் துரைத்தனம் பண்ணுவார்கள். (ஏசா 32:1).
3. ராஜா காற்றுக்கு ஒதுக்காகவும், பெருவெள்ளத்துக்குப் புகலிடமாகவும் இருப்பார். (ஏசா 32:2).
4. ராஜா வறண்ட நிலத்துக்கு நீர்க்கால்களாகவும், விடாய்த்த பூமிக்குப் பெருங்கன்மலையின் நிழலாகவும் இருப்பார்.
5. காண்கிறவர்களின் கண்கள் மங்கலாயிராது (ஏசா 32:3).
6. கேட்கிறவர்களின் செவிகள் கவனித்தே இருக்கும்.
7. பதற்றமுள்ளவர்களின் இருதயம் அறிவை உணர்ந்து கொள்ளும் (ஏசா 32:4).
8. தெற்றுவாயருடைய நாவு தடையின்றித் தெளிவாய் பேசும்.
9. மூடன் இனி தயாளன் என்று மதிக்கப்படான் (ஏசா 32:5).
10. லோபி இனி உதாரன் என்று சொல்லப்படுவதுமில்லை.
11. மூடன், மூடத்தனத்தைப் பேசுகிறான்; அவன் இருதயம் அநியாயத்தை நடப்பிக்கும் (ஏசா 32:6-8).
12. வனாந்தரம் செழிப்பான வயல் வெளியாகும்; செழிப்பான வயல்வெளி காடாக எண்ணப்படும். (ஏசா 32:9-15).
13. வனாந்தரத்திலே நியாயம் வாசமாயிருக்கும் (ஏசா 32:16).
14. நீதியின் கிரியை சமாதானமும், நீதியின் பலன் என்றுமுள்ள அமரிக்கையும் சுகமுமாயும் இருக்கும். (ஏசா 32:17).
15. கர்த்தருடைய ஜனம் சமாதான தாபரங்களிலும், நிலையான வாசஸ்தலங்களிலும், அமைதியாய்த் தங்கும் இடங்களிலும் குடியிருக்கும். (ஏசா 32:18).
16. காடு அழிய கல்மழை பெய்யும், அந்த நகரம் மகா தாழ்வாய்த் தாழ்ந்துபோம். (ஏசா 32:19, ஏசா 32:19-20).

"ராஜா" - இது மேசியாவைக் குறிக்கும். இயேசுகிறிஸ்து தம்முடைய இரண்டாம் வருகையின்போது இஸ்ரவேல்மீதும், மற்ற தேசங்கள்மீதும் நீதியாய் ஆட்சி புரிவார். (ஏசா 2:1-4; ஏசா 9:6-7; எசே 43:7; தானி 2:44-45; தானி 7:13-14,18,27; சக 14:9; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 19: 11-20:10).

"நீதி" - (ஏசா 11:4-5; எரே 23:6; எரே 33:15-16; மல் 4:2)

"பிரபுக்கள்" - உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள். இவர்கள் நித்திய ராஜ்யத்தில் ராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும் ஆளுகை செய்வார்கள். (சங் 149:6-9; தானி 7:19,27; சக 14:5; 1கொரி 6:1-3; 2தீமோ 2:12; யூதா 1:14-15; வெளி 5:10; வெளி 12:5; வெளி 20:1-10; வெளி 22:4-5).

32 அதிகாரம்

(2) பத்து அம்ச ஆசீர்வாதம்

ஏசா 32:2 அவர் காற்றுக்கு ஒதுக்காகவும், பெருவெள்ளத்துக்குப் புகலிடமாகவும், வறண்ட நிலத்துக்கு நீர்க்கால்களாகவும், விடாய்த்த பூமிக்குப் பெருங்கன்மலையின் நிழலாகவும் இருப்பார்.

ஏசா 32:3 அப்பொழுது காண்கிறவர்களின் கண்கள் மங்கலாயிராது; கேட்கிறவர்களின் செவிகள் கவனித்தே இருக்கும்.

ஏசா 32:4 பதற்றமுள்ளவர்களின் இருதயம் அறிவை உணர்ந்து கொள்ளும், தெற்றுவாயருடைய நாவு தடையின்றித் தெளிவாய் பேசும்.

ஏசா 32:5 மூடன் இனி தயாளன் என்று மதிக்கப்படான்; லோபி இனி உதாரன் என்று சொல்லப்படுவதுமில்லை.

"அவர்" - இந்த வார்த்தை ஏசா 32:1 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் மேசியாவாகிய ராஜாவைக் குறிக்கும்.

மேசியாவின் ஆசீர்வாதங்கள்

1. அவர் காற்றுக்கு ஒதுக்காக இருப்பார். (ஏசா 32:2).
2. பெருவெள்ளத்துக்குப் புகலிடமாக இருப்பார்.
3. வறண்ட நிலத்துக்கு நீர்க்கால்களாக இருப்பார்.
4. விடாய்த்த பூமிக்குப் பெருங்கன் மலையின் நிழலாக இருப்பார்.
5. குருடர்களுக்குக் கண்களைத் திறப்பார். (ஏசா 32:3; ஏசா 35:5).
6. செவிடர்களுக்குக் காதுகேட்கச் செய்வார்.
7. பதற்றமுள்ளவர்களின் இருதயம் அறிவை உணர்ந்துகொள்ள செய்வார். (ஏசா 32:4).
8. தெற்றுவாயருடைய நாவு தடையின்றித் தெளிவாய் பேசச் செய்வார்.
9. மூடனைத் தயாளன் என்று மதிக்கப் படாமல் பார்த்துக் கொள்வார். (ஏசா 32:5).
10. லோபியை உதாரன் என்று சொல்லக்கூடாமல் பார்த்துக் கொள்வார்.

நதி (river) - פֶּלֶג - peh'-leg - 6388

ஆ.பெ.சொ. - நதி, நீர்க்கால், ஆறு, தாரை

நீர் (water) - מַיִם - mah'-yim - 4325

ஆ.பெ.சொ. - ஜலம், நீர், தண்ணீர், நதி, மிஸ்ரபோத், மாயீம், மழை, வெள்ளம், நீரூற்று (gushing fountains) (சங் 1:3).

பதற்றம் (rash) - מָהַר - maw-har' - 4116

வினைச்சொல் - பெருகு, கவிழ்க்கப்படு, பதறு, பதற்றமுள்ளவர்கள், வேகம், தீவிரம், தீவிரி, சீக்கிரம், தீ விரித்துவா, துரிதம், மகேர், உடனே, விரைந்து, ஓடு (to be hasty or impetuous)

மூடன் (vile) - נָבָל - naw-bawl' - 5036

பெயரடை - மதிகெட்ட, பயித்தியக்காரி, மதியீனனான, மூடனான (a pampered stupid fellow; wicked; foolish; impious; vile) (ஏசா 32:5-6).

தயாளன் (liberal) - נָדִיב - naw-deeb' - 5081

32 அதிகாரம்

பெயரடை - மனமுள்ள, மனப்பூர்வமுள்ள, பிரபு, இஷ்டமுள்ள, அதிபதி, உற்சாகமான, தயாளன், தயாளமான, தயாளகுணமுள்ள, மேன்மையான, ராஜா (liberal in rule; honorable; openhearted; generous; free; noble; princely)

லோபி (churl) - כִּילַי - kee-lah'ee - 3596

பெ.பெ.சொ. - லோபி (churl; miserly; stingy; avaricious)

உதாரன் (rich) - שׁוֹעַ - sho'-ah - 7771

ஆ.பெ.சொ. - ஐசுவரியவான், ஆர்ப்பரித்தல், உதாரன், சேவா (noble; wealthy; rich)

(3) மூடனைப் பற்றிய விளக்கம் - *(வசனம் 5)*

ஏசா 32:6 ஏனென்றால் மூடன், மூடத்தனத்தைப் பேசுகிறான்; அவன் இருதயம் அநியாயத்தை நடப்பிக்கும்; அவன் மாயம்பண்ணி, கர்த்தருக்கு விரோதமாய் விபரீதம் பேசி, பசியுள்ள ஆத்துமாவை வெறுமையாக வைத்து, தாகமுள்ளவனுக்குத் தாகந் தீர்க்காதிருக்கிறான்.

ஏசா 32:7 லோபியின் எத்தனங்களும் பொல்லாதவைகள்; ஏழைகள் நியாயமாய்ப் பேசும்போது, அவன் கள்ள வார்த்தைகளாலே எளியவர்களைக் கெடுக்கும்படி தீவினைகளை யோசிக்கிறான்.

ஏசா 32:8 தயாளகுணமுள்ளவன் தயாளமானவைகளை யோசிக்கிறான், தயாளமானவைகளிலே நிலைத்தும் இருக்கிறான்.

துன்மார்க்கரின் கிரியைகள்

1. மூடத்தனத்தைப் பேசுகிறான். *(ஏசா 32:6)*
2. அவன் இருதயம் அநியாயத்தை நடப்பிக்கும்.
3. அவன் மாயம்பண்ணுகிறான்.
4. கர்த்தருக்கு விரோதமாய் விபரீதம் பேசுகிறான்.
5. பசியுள்ள ஆத்துமாவை வெறுமையாக வைக்கிறான்.
6. தாகமுள்ளவனுக்குத் தாகந் தீர்க்காதிருக்கிறான்.
7. துன்மார்க்கரின் எத்தனங்கள் பொல்லாதவைகள். *(ஏசா 32:7)*
8. கள்ள வார்த்தைகளாலே எளியவர்களைக் கெடுக்கும்படி தீவினைகளை யோசிக்கிறான்.

எத்தனங்கள் (instruments) - כְּלִי - kel-ee' - 3627

ஆ.பெ.சொ. - கெல்லூ

ஆயுதம், உடைமை, நகை, வெண்கலம், கலம், பதார்த்தம், தட்டுமுட்டு, சாக்கு, பை, கருவி, பனிமுட்டு, ஆபரணம், மண்பாண்டம், பானை, பாத்திரம், குடம், உருப்படி, தளவாடம், சாமான் *(1சாமு 10:22)*

(4) யூதாவின் அழிவு

ஏசா 32:9 சுகஜீவிகளாகிய ஸ்திரீகளே, எழுந்திருந்து, என் வார்த்தைகளைக் கேளுங்கள்; நிர்விசாரமான குமாரத்திகளே, என் வசனத்துக்குச் செவிகொடுங்கள்.

ஏசா 32:10 நிர்விசாரிகளே, ஒரு வருஷமும் சில நாட்களுமாய்த் தத்தளிப்பீர்கள்; திராட்சப்பலன் அற்றுப்போம்; அறுப்புக்காலம் வராது.

32 அதிகாரம்

ஏசா 32:11 சுகஜீவிகளே, நடுங்குங்கள்; நிர்விசாரிகளே, தத்தளியுங்கள்; உடையை உரிந்து களைந்துபோட்டு, அரையில் இரட்டைக் கட்டிக்கொள்ளுங்கள்.

ஏசா 32:12 செழிப்பான வயல்களினிமித்தமும் கனிதரும் திராட்சச் செடிகளினிமித்தமும் மாரடித்துப் புலம்புவார்கள்.

ஏசா 32:13 என் ஜனத்தினுடைய நிலத்திலும், களிகூர்ந்திருந்த நகரத்திலுள்ள சந்தோஷம் நிறைந்த எல்லா வீடுகளிலும், முட்செடியும் நெரிஞ்சிலும் முளைக்கும்.

ஏசா 32:14 அரமனை பாழாக விடப்படும், ஜனம் நிறைந்த நகரம் வெறுமையாகும், மேடும் துருக்கமும் என்றைக்கும் கெபிகளாகும், அவைகள் காட்டுக் கழுதைகள் களிக்கும் இடமாயும் மந்தைகளுக்கு மேய்ச்சலிடமாகவும் இருக்கும்.

சுகஜீவிகளாகிய ஸ்திரீகளுக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. எழுந்திருங்கள். (ஏசா 32:9).
2. என் வார்த்தைகளைக் கேளுங்கள்.
3. என் வசனத்துக்குச் செவிகொடுங்கள்.
4. நடுங்குங்கள் (ஏசா 32:11).
5. தத்தளியுங்கள்.
6. உடையை உரிந்துகொள்ளுங்கள்.
7. உடையைக் களைந்துபோடுங்கள்.
8. அரையில் இரட்டைக் கட்டிக் கொள்ளுங்கள்

சுகஜீவிகளாகிய ஸ்திரீகளின் சுபாவங்கள்

1. நிர்விசாரமாக இருப்பார்கள். (ஏசா 32:9,11).
2. கவனமில்லாமல் இருப்பார்கள். (ஏசா 32:9-11).

"நிர்விசாரிகளே, ஒரு வருஷமும் சில நாட்களுமாய்த் தத்தளிப்பீர்கள்" - உன்னதத்திலிருந்து பரிசுத்த ஆவியானவர் அருளப்படும் வரையிலும் அவர்கள் நிர்விசாரமாக இருப்பார்கள். அவர்களுடைய நிலம் பாழாய்ப்போயிருக்கும். திராட்சைப் பழங்கள் அற்றுப் போயிருக்கும். அவர்களுக்கு அறுப்புக்காலமே வராது. ஆவியானவர் ஊற்றப்பட்ட பின்பு இஸ்ரவேலில் மறுபடியும் அறுப்புக்காலம் வரும். இஸ்ரவேல் தேசம் ஏற்கெனவே இருந்ததுபோல ஆசீர்வதிக்கப்படும். (ஏசா 32:9-20). இந்தத் தீர்க்கதரிசனமும் ஓசி 3:5-6 ஆகிய வசனங்களில் கூறப் பட்டிருக்கும் தீர்க்கதரிசனமும் இப்போது நிறைவேறிக் கொண்டிருக்கிறது. மேசியா வந்து இந்தத் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றும் வரையிலும் இது தொடரும்.

"அறுப்புக்காலம் வராது" - இஸ்ரவேலின் ஆசீர்வாதமும், ஐசுவரியமும் திராட்சப் பழங்களின் அறுப்புக்காலத்தினால் வருகிறது. அறுப்புக்காலம் நின்றுபோகும்போது அவர்கள் தத்தளிப்பார்கள். ஏழைகளாகிவிடுவார்கள். வறுமையில் வாடுவார்கள்.

"மாரடித்துப் புலம்புவார்கள்" - ஸ்திரீகளின் மலட்டுத்தன்மைக்காகவும், நிலம் கனிதராமல் இருப்பதற்காகவும் ஜனங்கள் புலம்புவார்கள். (ஏசா 32:12-14).

"அரமனை பாழாக விடப்படும்" - இது நித்திய கால சம்பவமல்ல. ஆனாலும் நீண்டகாலமாகத் தொடரும் சம்பவம். ஏசா 32:15 ஆவது வசனத்தில் இது நிறைவேறும். அப்போது உன்னதத்திலிருந்து பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படுவார். அதன்பின்பு வனாந்தரம் செழிப்பான வயல்வெளியாகும்; செழிப்பான வயல்வெளி காடாக எண்ணப்படும்.

(5) அருமட்டும் - மூன்று அம்ச ஆசீர்வாதம்

ஏசா 32:15 உன்னதத்திலிருந்து நம்மேல் ஆவி ஊற்றப்படுமட்டும் அப்படியே இருக்கும்; அப்பொழுது வனாந்தரம் செழிப்பான வயல்வெளியாகும்; செழிப்பான வயல்வெளி காடாக எண்ணப்படும்.

ஏசாயா - தொகுப்புரை

32 அதிகாரம்

"உன்னதத்திலிருந்து நம்மேல் ஆவி ஊற்றப்படுமட்டும் அப்படியே இருக்கும்" - இந்தத் தீர்க்கதரிசனம் பலநாட்களாக, பல வருஷங்களாகத் தொடரும். (ஏசா 32:10,14) இஸ்ரவேல் ஜனத்தின்மீதும், பாலஸ்தீன தேசத்தின்மீதும் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படுவார். ஆயிரம் வருஷ அரசாட்சியில் தேசம் கனி தரும். (ஏசா 32:15-20; ஏசா 35:1-10). உபத்திரவக்காலத்தின் முடிவில் இஸ்ரவேலின் மீது ஆவியானவர் ஊற்றப்படுவார். இது தானியேலின் எழுபதாவது வாரத்தின் முடிவாகும். (தானி 9:27; சக 12:10-13:1).

"உன்னதத்திலிருந்து" - இது பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைக் குறிக்கும். (லூக்கா 24:49; அப் 1:1-8; கலா 3:14; ஏசா 44:3; ஏசா 59:21; சக 12:10).

"வனாந்தரம் செழிப்பான வயல்வெளியாகும்" - இது ஆயிரம் வருஷ ஆட்சிக்காலத்தில் நடைபெறும் சம்பவம். (ஏசா 29:17; ஏசா 35:1-7).

(6) அப்பொழுது - எட்டு அம்ச மீட்பு

ஏசா 32:16 வனாந்தரத்திலே நியாயம் வாசமாயிருக்கும், செழிப்பான வயல்வெளியிலே நீதி தங்கித்தரிக்கும்.

ஏசா 32:17 நீதியின் கிரியை சமாதானமும், நீதியின் பலன் என்றுமுள்ள அமரிக்கையும் சுகமுமாம்.

ஏசா 32:18 என் ஜனம் சமாதான தாபரங்களிலும், நிலையான வாசஸ்தலங்களிலும், அமைதியாய்த் தங்கும் இடங்களிலும் குடியிருக்கும்.

ஏசா 32:19 ஆனாலும் காடு அழிய கல்மழை பெய்யும், அந்த நகரம் மகா தாழ்வாய்த் தாழ்ந்துபோம்.

ஏசா 32:20 மாடுகளையும், கழுதைகளையும் நடத்திக்கொண்டு போய், நீர்வளம் பொருந்திய இடங்களிலெல்லாம் விதை விதைக்கிற நீங்கள் பாக்கியவான்கள்.

மீட்பும், ஆசீர்வாதமும்

1. வனாந்தரத்திலே நியாயம் வாசமாயிருக்கும்.
2. செழிப்பான வயல்வெளியிலே நீதி தங்கித் தரிக்கும். (ஏசா 32:16).
3. நீதியின் கிரியை சமாதானம்.
4. நீதியின் பலன் என்றுமுள்ள அமரிக்கையும் சுகமும். (ஏசா 32:17).
5. என் ஜனம் சமாதான தாபரங்களில் குடியிருக்கும். (ஏசா 32:18).
6. என் ஜனம் நிலையான வாசஸ்தலங்களில் குடியிருக்கும்.
7. என் ஜனம் அமைதியாய்த் தங்கும் இடங்களில் குடியிருக்கும்.
8. என் ஜனம் பாதுகாப்பாகவும், வளமையாகவும் இருக்குமாறு ஆசீர்வதிக்கப்படுவார்கள்.(ஏசா 32:20).

"காடு அழிய கல்மழை பெய்யும்" - ஏசா 32:19-20 ஆகிய வசனங்கள் அர்மெகதோன் யுத்தத்தில் எருசலேமின் சத்துருக்கள் தோற்கடிக்கப்படுவதைப் பற்றிக் கூறுகிறது. (சக 14) இதன் பின்பு யூதர்கள் விடுவிக்கப்பட்டு பாதுகாப்பாக இருப்பார்கள்.

33 அதிகாரம்

9. அந்திக்கிறிஸ்துவுக்கு ஐயோ - *(30:31; 31:8)*

(1) சுபாவமும் நியாயத்தீர்ப்பும்

ஏசா 33:1 கொள்ளையிடப் படாதிருந்தும்,கொள்ளையிடுகிறவனும், துரோகம்பண்ணாதிருக்கிறவர்களுக்கு துரோகம் பண்ணுகிறவனுமாகிய உனக்கு ஐயோ! நீ கொள்ளையிட்டு முடிந்தபின்பு கொள்ளையிடப்படுவாய்; நீ துரோகம் பண்ணித் தீர்ந்தபின்பு உனக்குத் துரோகம்பண்ணுவார்கள்.

தீர்க்கதரிசன எண் - 35

"கொள்ளையிடப் படாதிருந்தும், கொள்ளையிடுகிறவனும்........." (ஏசா 33:1-24) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. என் ஜனத்தைக் கொள்ளையிடுகிறவர்களுக்கு ஐயோ. (ஏசா 33:1)

2. அந்திக்கிறிஸ்து யூதாவை முறியடிக்கும். (ஏசா 33:3).

4. வெட்டுக்கிளிகள் சேர்க்கிறது போல யூதாவின் கொள்ளை சேர்க்கப்படும் (ஏசா 33:4; சக. 14:1-5).

4. கர்த்தர் உயர்த்தப்படுவார். (ஏசா 33:5,10).

5. அவர் சீயோனை நியாயத்தினாலும் நீதியினாலும் நிரப்புவார். (ஏசா 33:5).

6. பூரணரட்சிப்பும் ஞானமும் அறிவும் யூதாவின் காலங்களுடைய உறுதியாயிருக்கும் (ஏசா 33:6).

7. சமாதானத்து ஸ்தானாபதிகள் மனங் கசந்து அழுவார்கள். (ஏசா 33:7).

8. யூதருக்கும், அந்திக்கிறிஸ்துவிற்கும் இடையிலுள்ள உறவு முறிந்துபோகும். (ஏசா 33:8; தானி 9:27).

9. அந்திக்கிறிஸ்து இஸ்ரவேலரை அவருடைய தேசத்திலிருந்து துரத்திவிட்டு அதைப் பாழாக்குவான். (ஏசா 33:8).

10. யூதேயாவில் வழிப்போக்கர் இருக்க மாட்டார்கள்.

11. அந்திக்கிறிஸ்து மனுஷனை எண்ணாதே போவான்.

12. பாலஸ்தீன தேசம் துக்கித்து விடாய்த்திருக்கும்.

13. லீபனோன் தோற்கடிக்கப்படும். (ஏசா 33:9)

14. சாரோன் வனாந்தரத்துக்கு ஒப்பாகும்.

15. பாசானும் கர்மேலும் பாழாக்கப்படும்.

16. கர்த்தர் எழுந்தருளி அந்திக் கிறிஸ்துவின் சேனையைத் தண்டிப்பார். (ஏசா 33:10-12).

17. கர்த்தருடைய கோபம் அதிகரிக்கும். கர்த்தருடைய சத்துருக்களை அழித்தது போன்று அது சீயோனிலுள்ள பாவிகளையும் அழிக்கும். (ஏசா 33:14).

18. யூதரில் நீதியானவர்கள் மட்டுமே தேவனுடைய கோபாக்கினைக்குத் தப்புவார்கள். கர்த்தர் அவர்களை உயர்த்துவார். (ஏசா 33:15-16).

19. அவர்கள் உயர்ந்த இடங்களில் வாசம் பண்ணுவார்கள்; கன்மலைகளின் அரணகள் அவர்களுடைய உயர்ந்த அடைக்கலமாகும் (ஏசா 33:16; ஏசா 16:1-5; ஏசா 26:20; சங் 60:8).

20. நீதிமானின் அப்பம் அவனுக்குக் கொடுக்கப்படும்; அவன் தண்ணீர் அவனுக்கு நிச்சயமாய்க் கிடைக்கும். (ஏசா 33:16).

21. அவர்கள் கண்கள் ராஜாவை மகிமை பொருந்தினவராகக் காணும், தூரத்திலுள்ள தேசத்தையும் பார்க்கும். (ஏசா 33:17)

33 அதிகாரம்

22. எருசலேமின் ஜனங்கள் பயங்கரத்தை நினைவுகூருவார்கள். (ஏசா 33:18).

23. எருசலேமின் சத்துருக்கள் சடிதியாக அழிக்கப்படுவார்கள். (ஏசா 33:18-19)

24. எருசலேம் அமரிக்கையான தாபரமாகவும், பெயர்க்கப்படாத கூடாரமாகவும் இருக்கும். (ஏசா 33:20).

25. மகிமையுள்ள கர்த்தர் அங்கே அவர்களுக்கு மகா விசாலமான நதிகளும் ஆறுகளுமுள்ள ஸ்தலம்போலிருப்பார் (ஏசா 33:21).

26. கர்த்தர் நம்முடைய நியாயாதிபதி, கர்த்தர் நம்முடைய நியாயப்பிரமாணிகர், கர்த்தர் நம்முடைய ராஜா, அவர் நம்மை இரட்சிப்பார். (ஏசா 33:22).

27. சத்துருக்கள் உதவியில்லாத கப்பல்களைப் போல திகைப்பார்கள். மற்றவர்களுக்கு அவர்கள் கொள்ளையாக இருப்பார்கள். (ஏசா 33:3-4,23; சக. 14:14).

28. வியாதிப்பட்டிருக்கிறேன் என்று எருசலேம் நகரவாசிகள் சொல்வதில்லை; அதில் வாசமாயிருக்கிற ஜனத்தின் அக்கிரமம் மன்னிக்கப்பட்டிருக்கும். (ஏசா 33:24).

இந்தத் தீர்க்கதரிசனத்தின் சில பகுதிகள் யூதா தேசத்தில் நிறைவேறியுள்ளது. இந்தத் தீர்க்கதரிசனம் கர்த்தருடைய நாளில் முழுவதுமாக நிறைவேறும். இந்தத் தீர்க்கதரிசனத்தின் பெரும்பகுதி யூதாவையும், அந்திக்கிறிஸ்துவையும் பற்றிக் கூறுகிறது.

இந்தத் தீர்க்கதரிசனம் வருங்காலத்தில் நிறைவேறும் என்பதற்குக் காரணங்கள்:

1. "இவருக்காகக் காத்திருந்தோம்" என்னும் வாக்கியம் வருங்காலத்தில் நிறைவேறப் போகிறது. (ஏசா 33:2 = ஏசா 25:9; ஏசா 26:8; ஏசா 30:18; ஏசா 42:4; ஏசா 49:23; ஏசா 51:5; ஏசா 60:9; ஏசா 64:4)

2. கர்த்தர் உயர்த்தப்படுவது. (ஏசா 33:5).

3. கர்த்தர் சீயோனை நியாயத்தினாலும், நீதியினாலும் நிரப்புவது இனிமேல் நடைபெறப்போகும் சம்பவம். (ஏசா 33:5).

4. பூரண இரட்சிப்பும், ஞானமும், அறிவும் காலங்களுடைய உறுதியாக இருப்பது, வருங்காலத்தில் நிறைவேறப்போகும் சம்பவம். (ஏசா 33:6).

5. யூதாவுக்கும், அந்திக்கிறிஸ்துவிற்கும் இடையிலுள்ள உடன்படிக்கை முறிந்து போவது வருங்காலத்தில் நிறைவேறப் போகும் சம்பவம். (ஏசா 33:8= தானி 9:27)

6. அர்மெகதோன் யுத்தத்தில் மனுஷர் அக்கினியினால் எரிக்கப்படுவார்கள். (ஏசா 26:11; ஏசா 29:6; ஏசா 30:27-33; ஏசா 33:11-12; ஏசா 47:14; ஏசா 66:15-16; எசே 38:17-21; யோவே 2:3-5; 2தெச 1:7-10) ஆயிரம் வருஷ அரசாட்சியில் இந்தச் சம்பவம் நடைபெறும். (வெளி 20:7-10).

7. உபத்திரவக்காலத்தில் இஸ்ரவேல் ஒழிந்து கொள்ளும் ஸ்தலம் பற்றி ஏசா 33:16 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஆகையினால் இது கடைசி காலத்தில் நிறைவேறும் தீர்க்கதரிசனமாகும். (ஏசா 33:16; ஏசா 16:1-5; ஏசா 26:20; சங் 60:8; வெளி 12:6,14).

8. கண்கள் ராஜாவை மகிமை பொருந்தினவராகக் காண்பதும் வருங்காலத்தில் நடைபெறப்போகும் சம்பவமாகும். (ஏசா 33:17).

9. எருசலேம் அமரிக்கையான தாபரமாக வருங்காலத்தில் இருக்கும். (ஏசா 33:20)

33 அதிகாரம்

10. ஏசா 33:21 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் நதிகளும், ஆறுகளும் பாலஸ்தீன தேசத்தில் இனிமேல் நடைபெறப் போகும் சம்பவமாகும். (எசே 47; சக 14:8)

11. ஏசா 33:22 ஆவது வசனத்தில் கூறப்பட்டுள்ளபடி கர்த்தர் இன்னும் நம்முடைய நியாயாதிபதியாகவும், நியாயப் பிரமாணிக்கராகவும் ஆகவில்லை. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது அவர் நமக்கு இவ்வாறு இருப்பார். (ஏசா 2:2-4; ஏசா 9:6-7; சக 14:9; லூக்கா 1:32-33; வெளி. 11:15; வெளி. 20:1-10).

12. எருசலேமின் வியாதி வருங்காலத்தில் பூரணமாக அகற்றப்படும். (ஏசா 33:24)

"கொள்ளையிடுகிறவன்" - இது அசீரியாவின் ராஜாவைக் குறிக்கும் என்பது பொதுவான கருத்து. யூதாவுக்கு உதவி புரிய இவன் கூலிக்கு அமர்த்தப்பட்டான். பின்பு இவன் யூதாவுக்கு விரோதமாக வந்து யூதரை அழித்துப்போட்டான். கொள்ளையிடுகிறவனுக்கு இந்த வியாக்கியானம் கூறப்பட்ட போதிலும் இவன் வருங்காலத்து அசீரியனாகிய அந்திக்கிறிஸ்துவைக் குறிப்பதாக வேறொரு வியாக்கியானமும் கூறப்படுகிறது. (ஏசா 14:25; ஏசா 30:31; ஏசா 31:8; மீகா 5:5-6) அந்திக்கிறிஸ்து யூதரோடு ஏழு வருஷத்திற்கு உடன்படிக்கை பண்ணி, அதைப் பாதியில் முறித்துப்போட்டு இஸ்ரவேலைக் கொள்ளையிடுவான். (தானி 9:27; மத் 24:15-22)

(2) யூதாவின் ஜெபம்

ஏசா 33:2 கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும், உமக்குக் காத்திருக்கிறோம்; தேவரீர் காலையில் அவர்கள் புயமும், இக்கட்டுக் காலத்தில் எங்கள் இரட்சிப்புமாயிரும்.

"கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்" - இது யூதரின் தீர்க்கதரிசன ஜெபம். உபத்திரவக் காலத்தில் அந்திக்கிறிஸ்து யூதரை வஞ்சித்து தேசத்திலிருந்து அவர்களைத் துரத்திவிடுவதற்கு முயற்சி பண்ணுவான். இந்த இக்கட்டுக் காலத்தில் தங்களுக்கு இரங்க வேண்டுமாறு யூதர்கள் ஜெபிக்கிறார்கள். (தானி 7:19-25; தானி 8:20-25; தானி 9:27; தானி 11:40-45; தானி 12:7; வெளி. 13).

"உமக்குக் காத்திருக்கிறோம்" - (ஏசா 25:9; ஏசா 26:8; ஏசா 30:18; ஏசா42:4; ஏசா 49:23; ஏசா 51:5; ஏசா 64:4)

"அவர்கள் புயம்" - இந்த வாக்கியத்திற்கு அவர்களுடைய வல்லமை என்று பொருள்.

"இக்கட்டுக்காலம்" - இது யாக்கோபின் இக்கட்டுக் காலத்தைக் குறிக்கும். (எரே 30:7) இது மகா உபத்திரவக்காலம். இதுபோன்ற உபத்திரவம் இதற்கு முன்பு ஏற்பட்டதுமில்லை. இதற்குப்பின்பு ஏற்படப்போவதுமில்லை. (தானி 12:1; மத் 24:15-22; வெளி 11:3-19:21).

(3) அந்திக்கிறிஸ்து பெறும் வெற்றி

ஏசா 33:3 அமளியின் சத்தத்தினாலே ஜனங்கள் அலைந்தோடி, நீர் எழுந்திருக்கும்போது ஜாதிகள் சிதறடிக்கப்படுவார்கள்.

ஏசா 33:4 வெட்டுக்கிளிகள் சேர்க்கிறது போல உங்கள் கொள்ளை சேர்க்கப்படும்; வெட்டுக்கிளிகள் குதித்துத் திரிகிறது போல மனுஷர் அதின்மேல் குதித்துத் திரிவார்கள்.

"நீர் எழுந்திருக்கும்போது ஜாதிகள் சிதறடிக்கப்படுவார்கள்" - (தானி 7:23-24; தானி 8:20-25; தானி 11:40-45)

"வெட்டுக்கிளிகள் சேர்க்கிறது போல உங்கள் கொள்ளை சேர்க்கப்படும்" - அந்திக்கிறிஸ்துவின் சேனைகள் அழிக்கப்படும். அவர்கள் உடைமைகள் கொள்ளையிடப்படும். (சக 14:14).

33 அதிகாரம்

(4) யூதாவின் தேவன்

ஏசா 33:5 கர்த்தர் உயர்ந்தவர், அவர் உன்னதத்தில் வாசமாயிருக்கிறார்; அவர் சீயோனை நியாயத்தினாலும் நீதியினாலும் நிரப்புகிறார்.

ஏசா 33:6 பூரணரட்சிப்பும் ஞானமும் அறிவும் உன் காலங்களுடைய உறுதியாயிருக்கும்; கர்த்தருக்குப் பயப்படுதலே அதின் பொக்கிஷம்.

"அவர் சீயோனை நியாயத்தினாலும் நீதியினாலும் நிரப்புகிறார்" - இந்தத் தீர்க்கதரிசனத்தின் மொழிநடை ஓரளவு இறந்தகாலத்தில் கூறப்பட்டுள்ளதுபோன்று இருந்தபோதிலும் இது மேசியாவின் காலத்தில் இனிமேல் நிறைவேறப்போகும் தீர்க்கதரிசனமாகும். (தானி 9:24; ரோமர் 11:25-29).

"உன் காலங்களுடைய உறுதியாயிருக்கும்" - மேசியாவின் ஆட்சிக் காலத்தில் பூரண ரட்சிப்பும் ஞானமும் அறிவும் உறுதியாக இருக்கும். அப்போது சீயோன் நியாயத்தினாலும், நீதியினாலும் நிரப்பப்பட்டிருக்கும். (ஏசா 33:5-6; ஏசா 2:2-4; ஏசா 11:9; ஏசா 59:21).

(5) அந்திக்கிறிஸ்துவின் வரம்புமீறுதல் - (10:7)

ஏசா 33:7 இதோ, அவருடைய பராக்கிரமசாலிகள் வெளியிலே அலறுகிறார்கள்; சமாதானத்து ஸ்தானாபதிகள் மனங்கசந்து அழுகிறார்கள்.

ஏசா 33:8 பாதைகள் பாழாயின; வழிப்போக்கர் இல்லை; உடன்படிக்கையை மீறுகிறான்; நகரங்களை இகழ்ச்சி பண்ணுகிறான்; மனுஷனை எண்ணாதே போகிறான்.

ஏசா 33:9 தேசம் துக்கித்து விடாய்த்திருக்கிறது; லீபனோன் வெட்கி வாடுகிறது; சாரோன் வனாந்தரத்துக்கு ஒப்பாகிறது; பாசானும் கர்மேலும் பாழாக்கப்படுகிறது.

"அவருடைய பராக்கிரமசாலிகள் வெளியிலே அலறுகிறார்கள்" - அந்திக்கிறிஸ்து இஸ்ரவேல் தேசத்தை அழிப்பதற்குத் தீர்மானம் பண்ணுவான். அவனோடு சமாதான உடன்படிக்கை பண்ணுவது பிரயோஜனமற்ற காரியம். இதனால் சமாதானத்து ஸ்தானாபதிகள் மனங்கசந்து அழுவார்கள். (தானி 7:19-25; தானி 8:20-25; தானி 9:27; தானி 12:7; மத் 24:15-22; வெளி 12-13).

"உடன்படிக்கையை மீறுகிறான்" - ஏசா 33:8-9 ஆகிய வசனங்களில் அந்திக் கிறிஸ்துவிற்கும், இஸ்ரவேலுக்கும் இடையிலுள்ள உடன்படிக்கை முறிந்துபோவதைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. அந்திக் கிறிஸ்து பாலஸ்தீன தேசத்திற்குள் பிரவேசித்து எருசலேமைத் தன்னுடைய தலைநகரமாக ஆக்குவதற்கு முயற்சி பண்ணுவான். அப்போது பாலஸ்தீன தேசத்திலுள்ளவர்கள் அந்திக் கிறிஸ்துவின் நிமித்தமாக உபத்திரவங்களை அனுபவிப்பார்கள். பாலஸ்தீன தேசம் துக்கித்து விடாய்த்திருக்கும். (தானி 7:19-25; தானி 8:20-5; தானி 9:27; தானி 12:1,7; மத் 24:13-22; 2தெச 2:3-4; வெளி 12-13).

(6) அந்திக்கிறிஸ்துமீது நியாயத்தீர்ப்பு - (10:12)

ஏசா 33:10 இப்பொழுது எழுந்தருளுவேன், இப்பொழுது உயருவேன், இப்பொழுது மேன்மைப்படுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஏசா 33:11 பதரைக் கர்ப்பந்தரித்துத் தாளடியைப் பெறுவீர்கள்; அக்கினியைப் போல் உங்கள் சுவாசமே உங்களைப் பட்சிக்கும்.

ஏசா 33:12 ஜனங்கள் சுண்ணாம்பைப் போல நீற்றப்படுவார்கள்; வெட்டப்பட்ட முட்செடிகளைப் போலத் தீயில் எரிக்கப்படுவார்கள்.

33 அதிகாரம்

கர்த்தருடைய சத்துருக்களின் ஒப்புமைகள்

1. பதரைப்போல இருக்கிறார்கள்.
2. தாளடியைப்போல இருக்கிறார்கள்.
3. அவருடைய சுவாசம் அக்கினியைப் போல் பட்சிக்கும்.
4. அவர்கள் சுண்ணாம்பைப்போல நீற்றப் பட்டிருப்பார்கள். *(ஏசா 33:12)*
5. வெட்டப்பட்ட முட்செடிகளைப் போலத் தீயில் எரிக்கப்படுவார்கள்.

10. ஆயிர வருஷம் - *(ஏசா 2:1)*

(1) மேசியா ஆளுகை செய்கிறார் - நீதிமானின் சுபாவம் - *(4:2)*

ஏசா 33:13 தூரத்திலுள்ளவர்களே, நான் செய்கிறதைக் கேளுங்கள்; சமீபத்திலிருக்கிறவர்களே, என் பராக்கிரமத்தை அறிந்து கொள்ளுங்கள் என்கிறார்.

ஏசா 33:14 சீயோனிலுள்ள பாவிகள் திகைக்கிறார்கள்; மாயக்காரரை நடுக்கம் பிடிக்கிறது; பட்சிக்கும் அக்கினிக்கு முன்பாக நம்மில் தரித்திருப்பவன் யார்? நித்தியஜுவாலைக்கு முன்பாக நம்மில் தாபரிப்பவன் யார் என்கிறார்கள்.

ஏசா 33:15 நீதியாய் நடந்து, செம்மையானவைகளைப் பேசி, இடுக்கண் செய்வதால் வரும் ஆதாயத்தை வெறுத்து, பரிதானங்களை வாங்காதபடிக்குத் தன் கைகளை உதறி, இரத்தஞ் சிந்துவதற்கான யோசனைகளைக் கேளாதபடிக்குத் தன் செவியை அடைத்து, பொல்லாப்பைக் காணாதபடிக்குத் தன் கண்களை மூடுகிறவனெவனோ,

ஏசா 33:16 அவன் உயர்ந்த இடங்களில் வாசம் பண்ணுவான்; கன்மலைகளின் அரண்கள் அவனுடைய உயர்ந்த அடைக்கலமாகும்; அவன் அப்பம் அவனுக்குக் கொடுக்கப்படும்; அவன் தண்ணீர் அவனுக்கு நிச்சயமாய்க் கிடைக்கும்.

ஏசா 33:17 உன் கண்கள் ராஜாவை மகிமை பொருந்தினவராகக் காணும், தூரத்திலுள்ள தேசத்தையும் பார்க்கும்.

தண்டிக்கப்படுகிறவர்கள்

1. சீயோனிலுள்ள திகைக்கும் பாவிகள்
2. மாயக்காரர்

தேவனுடைய கோபத்திலிருந்து தப்பிப்பதற்குச் செய்யவேண்டிய காரியங்கள்

1. நீதியாய் நடக்க வேண்டும். *(ஏசா 33:15)*.
2. செம்மையானவைகளைப் பேச வேண்டும்.
3. இடுக்கண் செய்வதால் வரும் ஆதாயத்தை வெறுக்க வேண்டும்.
4. பரிதானங்களை வாங்காதபடிக்குத் தன் கைகளை உதற வேண்டும்.
5. இரத்தஞ் சிந்துவதற்கான யோசனைகளைக் கேளாதபடிக்குத் தன் செவியை அடைக்க வேண்டும்.
6. பொல்லாப்பைக் காணாதபடிக்குத் தன் கண்களை மூட வேண்டும்.

சங் 15-இல் நீதிமானுடைய குணாதிசயங்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

நீதிமானின் குணாதிசயங்கள்

1. உத்தமனாய் நடப்பான்
2. நீதியை நடப்பிப்பான்
3. மனதார சத்தியத்தைப் பேசுவான்

33 அதிகாரம்

ஏசா 33:19 உனக்கு விளங்காத பாஷையையும், அறிதற்கரிய ஒருவிதமான பேச்சையுமுடைய அந்தக் குரூர ஜனங்களை இனி நீ காணாய்.

"உன் மனம் பயங்கரத்தை நினைவுகூரும்" - யூதேயாவிலுள்ள யூதர்கள் மேசியா வரும் போது பயங்கரமான காரியங்களைப் பற்றித் தியானிப்பார்கள். இதுவரையிலும் அவர்கள் மகா உபத்திரவத்தின் வழியாகக் கடந்து வந்திருக்கிறார்கள். அந்த உபத்திரவமான நிகழ்ச்சிகளைப் பற்றிய நினைவு அவர்கள் உள்ளத்தில் இன்னும் நினைவில் இருக்கும்.

"கணக்கன் எங்கே?" - இஸ்ரவேல் ஜனங்களின் சத்துருக்கள் சடிதியாக அழிக்கப்படுவார்கள். ஆகையினால் அவர்கள் எல்லாம் எங்கே என்று கேட்கக்கூடிய நிலைமை உண்டாகும்.

சத்துருக்களின் அதிகாரிகள்

1. கணக்கன் - அந்திக்கிறிஸ்துவின் சேனையை எண்ணுகிறவன். கொள்ளைப் பொருட்களைக் கணக்கெடுக்கிறவன்.
2. தண்டல்காரன் - அந்திக்கிறிஸ்துவின் சேனைக்குச் சம்பளம் கொடுக்கிறவன். கொள்ளையின் மதிப்பைக் கணக்கிடுகிறவன்.
3. கோபுரங்களை எண்ணுகிறவன் - அந்திக்கிறிஸ்து பட்டணங்களை முற்றிக்கையிடும் போது அந்தப் பட்டணங்களைப் பற்றிய விவரங்களைச் சேகரிக்கிறவன்.

"அந்தக் குரூர ஜனங்களை இனி நீ காணாய்" - அந்திக் கிறிஸ்துவின் சேனை அழிக்கப்பட்ட பின்பு யூதாவின்மீது அந்நிய தேசத்தார் யாரும் யுத்தம் பண்ண வரமாட்டார்கள். ஆயிரம் வருஷ அரசாட்சியிலும், புதிய பூமியிலும் மனுஷர் யுத்தம் பண்ண மாட்டார்கள். (ஏசா 2:2-4; வெளி 21:3-7).

(3) இஸ்ரவேலின் பௌதீக மீட்பு - (ஏசா 29:17)

ஏசா 33:20 நம்முடைய பண்டிகைகள் ஆசரிக்கப்படும் நகரமாகிய சீயோனை நோக்கிப்பார்; உன் கண்கள் எருசலேமை அமரிக்கையான தாபரமாகவும், பெயர்க்கப் படாத கூடாரமாகவும் காணும்; இனி அதின் முளைகள் என்றைக்கும் பிடுங்கப் படுவதுமில்லை, அதின் கயிறுகளில் ஒன்றும் அறுந்து போவதுமில்லை.

ஏசா 33:21 மகிமையுள்ள கர்த்தர் அங்கே நமக்கு மகா விசாலமான நதிகளும் ஆறுகளுமுள்ள ஸ்தலம்போலிருப்பார்; வலிக்கிற படவு அங்கே ஓடுவதும் இல்லை; பெரிய கப்பல் அங்கே கடந்துவருவதும் இல்லை.

ஏசா 33:22 கர்த்தர் நம்முடைய நியாயாதிபதி, கர்த்தர் நம்முடைய நியாயப்பிரமாணிகர், கர்த்தர் நம்முடைய ராஜா, அவர் நம்மை இரட்சிப்பார்.

ஏசா 33:23 உன் கயிறுகள் தளர்ந்துபோம்; பாய்மரத்தைக் கெட்டிப் படுத்தவும், பாயை விரிக்கவுங் கூடாமற்போம்; அப்பொழுது திரளான கொள்ளைபொருள் பங்கிடப்படும்; சப்பாணிகளும்கொள்ளையாடுவார்கள்.

ஏசா 33:24 வியாதிப்பட்டிருக்கிறேன் என்று நகரவாசிகள் சொல்வதில்லை; அதில் வாசமாயிருக்கிற ஜனத்தின் அக்கிரமம் மன்னிக்கப்பட்டிருக்கும்.

"நம்முடைய பண்டிகைகள் ஆசரிக்கப்படும் நகரமாகிய சீயோனை நோக்கிப்பார்" - மேசியாவின் காலத்தில் சீயோன் கர்த்தரை ஆராதிக்கும் ஸ்தலமாக இருக்கும். எருசலேம் அமரிக்கையான தாபரமாகவும், பெயர்க்கப்படாத கூடாரமாகவும் இருக்கும். இது மறுபடியும் அழிக்கப்படுவதில்லை. அப்படிப்பட்ட சீயோனையும், எருசலேமையும் நோக்கிப் பார்க்குமாறு கர்த்தர் யூதா தேசத்தாரை அழைக்கிறார்.

33 அதிகாரம்

"பண்டிகைகள்" (solemnities) - இஸ்ரவேலின் பண்டிகை நாட்களும், சடங்குகள் ஆசரிக்கப்படும் நாட்களும். (எசே 45:17; எசே 46:11).

"கூடாரம்" - எருசலேம் இங்கு கூடாரமாகக் கூறப்பட்டிருக்கிறது. இது பெயர்க்கப்படாத கூடாரமாக இருக்கும். எருசலேம் நித்தியமாக இருக்கும். மேசியாவினுடைய ராஜ்யத்தில் இது நித்திய தலைநகரமாக இருக்கும். (ஏசா 2:2-4; ஏசா 65:17-25; 1நாளா 23:25; சக 14).

"மகா விசாலமான நதிகளும் ஆறுகளும்" - கர்த்தர் மகா விசாலமான நதிகளையும், ஆறுகளையும் உண்டாக்குவார். அதில் யுத்தக் கப்பல்கள் எதுவும் வராது. இவை ஆயிரம் வருஷ அரசாட்சியின் வனாந்தரங்களிலிருந்து பாய்ந்து ஓடும் நதிகளாகும். (எசே 47; சக 14:8). நதியின் நீளம் 3 மைல் அகலமாக இருக்கும் என்று எசே 47 அதிகாரத்தில் கூறப் பட்டிருக்கிறது.

கர்த்தர் யூதாவோடு இருக்கப்போகும் விதம்

1. நியாயாதிபதி (ஏசா 11:4-9; ஏசா 9:6-7)
2. நியாயப்பிரமாணிகர் (ஏசா 2:2-4)
3. ராஜா (ஏசா 2:2-4; ஏசா 9:7; சக 14:9)
4. இரட்சகர் (ஏசா 43:3,11; ஏசா 45:15,21; ஏசா 49:26; ஏசா 60:16; ஏசா 63:8; ஓசி 13:4)

"உன் கயிறுகள் தளர்ந்துபோம்" - அர்மெகதோன் யுத்தத்தில் சத்துருக்கள் உதவியற்று சோர்ந்துபோயிருப்பார்கள். உதவியில்லாமல் தண்ணீரில் அமிழும் கப்பலைப் போல இருப்பார்கள். சத்துருக்களுடைய திரளான கொள்ளைபொருள் பங்கிடப்படும். (சக 14:14). அர்மெகதோனில் அவர்களுடைய கொள்ளை திரளாக இருப்பதினால் சப்பாணிகள்கூட தங்களுக்குத் தேவையானதை எடுத்துச் செல்வார்கள்.

யூதாவின்மீது வரும் ஆசீர்வாதங்கள்

1. எருசலேமில் வியாதி இராது. (ஏசா 33:24; ஏசா 35:3-6).
2. எருசலேமில் வாசமாயிருக்கிற ஜனத்தின் அக்கிரமம் மன்னிக்கப்படும். (ஏசா 33:24, ஏசா 6:9-10; மத் 9:5; மத் 13:15; யாக் 5:14-5:14-16; 1பேதுரு 2:24).

இந்த ஆசீர்வாதம் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுக்கும் வாக்குப்பண்ணப் பட்டிருக்கிறது. (யாத் 15:25; யாத் 23:25; லேவி 26:1-13; உபா 28:1-14; சங் 34:9-10; சங் 84:11; சங் 90:1-12; சங் 103:3; நீதி 3:7-8; ஏசா 53:4-5; ஏசா 58:8) புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுக்கும் இந்த ஆசீர்வாதங்களும் வாக்குப் பண்ணப்பட்டிருக்கிறது. (மத் 7:7-11; மத் 8:17; மத் 13:15; மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 10:10; யோவான் 14:12-15; யோவான் 15:7,16; யோவான் 16:23-26; ரோமர் 1:16; ரோமர் 8:11; 1கொரி 12:4-11; யாக் 5:14-16; 3யோவான் 1:2).

ஏசாயா - தொகுப்புரை

34 அதிகாரம்

11. அர்மகெதோன்

(1) தேசங்கள் கூடிவந்தன - (யோவே 3; சக 14; வெளி 19)

ஏசா 34:1 ஜாதிகளே, கேட்கிறதற்குக் கிட்டி வாருங்கள்; ஜனங்களே, கவனியுங்கள்; பூமியும் அதின் நிறைவும், பூச்சக்கரமும் அதில் உற்பத்தியான யாவும் கேட்கக் கடவது.

தீர்க்கதரிசன எண் - 36

"ஜாதிகளே, கேட்கிறதற்குக் கிட்டி வாருங்கள்'......" (ஏசா 34:1-17) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும்நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. அர்மெகதோனில் யுத்தம்பண்ண பல தேசங்கள் கூட்டிச்சேர்க்கப்படும். (ஏசா 34:1; எசே 38-39; யோவே 3; சக 14:1-5; வெளி 17: 13-16; வெளி 19:19-21).
2. கர்த்தருடைய கோபத்தினால் தேசங்களின் சேனைகள் அழிந்துபோகும். (ஏசா 34:2; எசே 38-39; யோவே 3; சக 14:1-15; 2தெச 1:7-10; யூதா 1:14-15; வெளி 19:11-21).
3. அவர்களிலே கொலை செய்யப்பட்டவர்கள் வெளியே எறியுண்டுகிடப்பார்கள் (ஏசா 34:3; எசே 39:11-16).
4. அவர்களுடைய பிரேதங்கள் நாற்றமெடுக்கும். (ஏசா 34:3; யோவே 2:20).
5. அவர்களுடைய இரத்தத்தினாலே மலைகளும் கரைந்துபோம். (ஏசா 34:3,7; ஏசா 49:26; ஏசா 63:1-5; எசே 38:22; எசே 39:17-21; வெளி 14:20).
6. வானத்தின் சர்வ சேனையும் கரையும். (ஏசா 34:4; மத் 24:29-31; அப் 2:16-21; வெளி 16:17-21).
7. அவைகளின் சர்வசேனையும் திராட்சச் செடியின் இலைகள் உதிருகிறதுபோலவும், அத்திமரத்தின் காய்கள் உதிருகிறது போலவும் உதிர்ந்து விழும். (ஏசா 34:4; மத் 24:29-31; வெளி 16:17-21).
8. கர்த்தருடைய பட்டயம் வானத்திலிருந்து போஸ்றாவின்மேலும், ஏதோமின்மேலும் வந்து இறங்கும். (ஏசா 34:5-8; எசே 39:17-21; வெளி 14:13-20; வெளி 19:11-21).
9. அது கர்த்தர் பழிவாங்கும் நாள், சீயோனுடைய வழக்கினிமித்தம் பதிலளிக்கும் வருஷம். (ஏசா 34:8; சக 14).
10. அதின் ஆறுகள் பிசினாகவும், அதின் மண் கந்தகமாகவும் மாறி, அதின் நிலம் எரிகிற கீலாய்ப்போம். (ஏசா 34:9).
11. இரவும் பகலும் அது அவியாது; அதின் புகை என்றென்றைக்கும் எழும்பும். (ஏசா 34:10).
12. சதாகாலம் சதாகாலமாக அதை ஒருவரும் கடந்துபோவதில்லை. (ஏசா 34:10).
13. காட்டுமிருகங்கள் அதில் குடியிருக்கும். (ஏசா 34:11-15,17).
14. கர்த்தர் தேசத்தைக் குழப்பத்தினாலும், வெறுமையான கற்களினாலும் நியாயந் தீர்ப்பார். (ஏசா 34:11).
15. ராஜ்யபாரம்பண்ண அங்கே பிரபுக்கள் அனைவரும் இல்லாமற்போவார்கள். (ஏசா 34:12).

34 அதிகாரம்

16. அதின் அரமனைகளில் முட்செடிகளும், அதின் கோட்டைகளில் மிருகங்களும் வாசம்பண்ணும். (ஏசா 34:13-15).

17. கர்த்தருடைய முன்னறிவிப்புக்கள் அனைத்தும் நிறைவேறும். (ஏசா 34:16).

18. எல்லா விலங்குகளுக்கும் ஜோடி இருக்கும்.

19. கர்த்தருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும். சீட்டுப்போட்டு அவைகளுக்குப் பகிர்ந்து கொடுப்பார். (ஏசா 34:16-17).

20. அவைகள் என்றைக்கும் அதைச் சுதந்தரித்துத் தலைமுறை தலைமுறையாக அதிலே சஞ்சரிக்கும். (ஏசா 34:17).

தேவனுடைய கட்டளைகள்

1. ஜாதிகளே, கேட்கிறதற்குக் கிட்டிவாருங்கள்.
2. ஜனங்களே, கவனியுங்கள்.
3. பூமியும் அதின் நிறைவும் கேட்கக்கடவது.
4. பூச்சக்கரமும் அதில் உற்பத்தியான யாவும் கேட்கக்கடவது.

(2) தேசங்கள் அழிந்தன - (எசே 39:17; யோவே 3;சக 14;2தெச 1:7; யூதா 14; வெளி 14; 14-20; 19:11-20:13)

ஏசா 34:2 சகல ஜாதிகளின்மேலும் கர்த்தருடைய கடுங்கோபமும், அவைகளுடைய சகல சேனைகளின் மேலும் அவருடைய உக்கிரமும் மூளுகிறது; அவர்களைச் சங்காரத்துக்கு நியமித்து, கொலைக்கு ஒப்புக் கொடுக்கிறார்.

ஏசா 34:3 அவர்களிலே கொலைசெய்யப்பட்டவர்கள் வெளியே எறியுண்டு கிடப்பார்கள்; அவர்களுடைய பிரேதங்கள் நாற்றமெடுக்கும்; அவர்களுடைய இரத்தத்தினாலே மலைகளும் கரைந்துபோம்.

ஏசா 34:4 வானத்தின் சர்வ சேனையும் கரைந்து, வானங்கள் புஸ்தகச்சுருளைப் போல் சுருட்டப்பட்டு, அவைகளின் சர்வசேனையும் திராட்சச்செடியின் இலைகள் உதிருகிறதுபோலவும், அத்திமரத்தின் காய்கள் உதிருகிறது போலவும் உதிர்ந்து விழும்.

ஏசா 34:5 வானங்களில் என் பட்டயம் வெறிகொண்டது; இதோ, ஏதோமின் மேலும், நான் சங்காரத்துக்கு நியமித்த ஜனத்தின்மேலும், அது நியாயஞ்செய்ய இறங்கும்.

ஏசா 34:6 போஸ்றாவிலே கர்த்தருக்கு ஒரு யாகமும், ஏதோம் தேசத்திலே மகா சங்காரமும் உண்டு; கர்த்தருடைய பட்டயம் இரத்தத்தால் திருப்தியாகி, நிணத்தினால் பூரிக்கின்றது; ஆட்டுக் குட்டிகள் கடாக்களுடைய இரத்தத்தினாலும், ஆட்டுக் கடாக்களுடைய குண்டிக்காய்களின் கொழுப்பினாலும் திருப்தியாகும்.

ஏசா 34:7 அவைகளோடே காண்டா மிருகங்களும், ரிஷபங்களோடே காளைகளும் வந்து மடியும்; அவர்கள் தேசம் இரத்த வெறிகொண்டு, அவர்கள் மண் நிணத்தினால் கொழுத்துப்போம்.

ஏசா 34:8 அது கர்த்தர் பழிவாங்கும் நாள், சீயோனுடைய வழக்கினிமித்தம் பதிலளிக்கும் வருஷம்.

“சகல ஜாதிகளின்மேலும் கர்த்தருடைய கடுங்கோபம்” - கர்த்தர் தம்முடைய சத்துருக்களை அழிப்பார். ஆகையினால் தமக்குச் செவிகொடுக்குமாறு கர்த்தர் கொடுக்கும் அழைப்பு எல்லா தேசத்திற்கும் உரியது. (ஏசா 34:1, யோவே 3; சக 14:1-5; வெளி 16:13-16;வெளி 19:11-21).

34 அதிகாரம்

"அவர்களைச் சங்காரத்துக்கு நியமித்து, கொலைக்கு ஒப்புக்கொடுக்கிறார்" - அந்திக் கிறிஸ்துவின் கீழுள்ள சேனைகளில் ஆறில் ஒரு பங்கைத் தவிர மீதமானவை அனைத்தும் ஒரே நாளில் சங்காரம் பண்ணப்படும். (எசே 39:2; யோவே 3; சக 14:1-15; வெளி 19:11-21).

"அவர்களிலே கொலைசெய்யப்பட்டவர்கள் வெளியே எறியுண்டுகிடப்பார்கள்" - மரித்தவர்களின் பிரேதங்கள் அடக்கம் பண்ணப்படாமல் இருக்கும். இவர்களை அடக்கம் பண்ணுவதற்கு இஸ்ரவேலுக்கு ஏழு மாதங்களாகும். (எசே 39:11-16).

"அவர்களுடைய இரத்தத்தினாலே மலைகளும் கரைந்துபோம்" - (எசே 38:17-21; எசே 39:17-21; வெளி 14)

"வானத்தின் சர்வ சேனையும் கரைந்து" - வானங்கள் புஸ்தகச்சுருளைப்போல சுருட்டப்படும். இலைகளும், காய்களும் உதிர்வதுபோல வானத்தின் சர்வசேனைகள் கீழே விழும். இது ஆறாம் முத்திரையின்போது நடைபெறும் சம்பவம்போல இருக்கிறது. (வெளி 6:12-17) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது வானத்திலுள்ள நட்சத்திரங்கள் கீழே விழும். (மத் 24:29-31; வெளி 16:17-21).

கரைந்துபோதல் **(dissolved)** - מָקַק - **maw-kak' - 4743**

வினைச்சொல் - அழுகு, கரைந்திரு, வாடிப்போ, கெட்டுப்போ **(to melt; flow; vanish; dissolve; pine away)**

"புஸ்தகச்சுருள்" - அக்காலத்தில் மிருகங்களின் தோல்களிலும், பாப்பைரஸ் என்னும் புல்களிலும் எழுதினார்கள். இதை ஒரு சுருளாக வைத்திருந்தார்கள். பஞ்சாகமத்தின் ஆதிக்கால புஸ்தகச்சுருள் இங்கிலாந்து தேசத்திலுள்ள ஒரு நூலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் புஸ்தகச் சுருளின் நீளம் 48 அடி. அகலம் 22 அங்குலம். இதுபோன்ற புஸ்தகங்கள் வேதாகமத்தில் புஸ்தகச்சுருள் என்றே அழைக்கப்படுகிறது. (ஏசா 34:4; வெளி 6:14, ஏசா 8:1; எஸ்றா 6:1-2; எரே 36:2-32; எசே 2:9; எசே 3:1-3; சக 5:1-2).

"அவைகளின் சர்வசேனையும்.....விழும்" - வானத்திலுள்ள நட்சத்திரங்கள் கீழே விழும். (மத் 24:29-31; மாற்கு 13:25; வெளி 6:12-17).

"ஏதோம்" **(Edom)** - (ஆதி 36:43) இதன் மறுபெயர் இதுமேயா. **(Idumea)** (ஏசா 34:5-6; எசே 36:5; மாற்கு 3:8) இது சவக்கடலுக்குத் தெற்கில் உள்ளது. போஸ்றா இதிலுள்ள முக்கியமான பட்டணம். பாபிலோனைப் போல இதுமேயாவும் தனித்து விடப்படும். (ஏசா 13:19-22) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இதுமேயாவின் மீது கர்த்தருடைய கோபாக்கினை இறங்கும். (ஏசா 34:5-8) ஏதோமின் ஒரு பகுதி இஸ்ரவேலை வஞ்சித்து உபத்திரவக்காலத்தில் அந்திக்கிறிஸ்துவிற்குத் துணைபுரியும். இஸ்ரவேலின்மீது வரும் உபத்திரவங்களைக் கண்டு ஏதோம் சந்தோஷப்படும். (எசே 35:15; எசே 36:5) அர்மெகதோன் யுத்தத்தில் அந்திக்கிறிஸ்துவின் சேனைகளெல்லாம் ஒன்றுசேரும். (ஏசா 34:6-8). போஸ்றாவின் தெற்கிலுள்ள சேலாவில் இஸ்ரவேல் அந்திக் கிறிஸ்துவிடமிருந்து பாதுகாக்கப்படும்.

"கர்த்தருடைய பட்டயம் இரத்தத்தால் திருப்தியாகி, நிணத்தினால் பூரிக்கின்றது" - இது மகா சங்காரத்தை அடையாளமாகக் குறிக்கும் வாக்கியம். பழங்காலத்தில் விலங்குகள் பலியிடப்படுவதைப் போன்று இதுமேயாவின் ஜனத்தாரும் போஸ்றாவின் ஜனத்தாரும் கொல்லப்படுவார்கள். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது கர்த்தருடைய பட்டயம் இந்தச் சங்காரத்தை நிறைவேற்றும். (ஏசா 34:6-8).

"காண்டாமிருகம்" - (எண் 24:8)

"அது கர்த்தர் பழிவாங்கும் நாள்" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையிலிருந்து கர்த்தருடைய நாள் ஆரம்பமாகிறது. (ஏசா 63:4)

34 அதிகாரம்

(3) தேசம் பாழாயிற்று

ஏசா 34:9 அதின் ஆறுகள் பிசினாகவும், அதின் மண் கந்தகமாகவும் மாறி, அதின் நிலம் எரிகிற கீலாய்ப்போம்.

ஏசா 34:10 இரவும் பகலும் அது அவியாது; அதின் புகை என்றென்றைக்கும் எழும்பும்; தலைமுறை தலைமுறையாக அது பாழாயிருக்கும்; சதாகாலம் சதாகாலமாக அதை ஒருவரும் கடந்துபோவதில்லை.

ஏசா 34:11 நாரையும் முள்ளம்பன்றியும் அதைச் சுதந்தரிக்கும், ஆந்தையும் காக்கையும் அதிலே குடியிருக்கும்; அதின்மேல் வெட்டவெளியின் நூலையும், வெறுமையின் தூக்கையும் பிடிப்பார்.

ஏசா 34:12 ராஜ்யபாரம்பண்ண அதின் மேன்மக்களை அழைத்தால், அங்கே அவர்களில் ஒருவரும் இரார்கள்; அதின் பிரபுக்கள் அனைவரும் இல்லாமற் போவார்கள்.

ஏசா 34:13 அதின் அரமனைகளில் முட்செடிகளும், அதின் கோட்டைகளில் காஞ்சொறிகளும் முட்பூண்டுகளும் முளைக்கும்; அது வலுசர்ப்பங்களின் தாபரமும், கோட்டான்களின் மாளிகையுமாயிருக்கும்.

ஏசா 34:14 அங்கே காட்டுமிருகங்களும் ஓரிகளும் ஒன்றையொன்று சந்தித்து, காட்டாட்டைக் காட்டாடு கூப்பிடும்; அங்கே சாக்குருவிகளும் தங்கி, இளைப்பாறும் இடத்தைக் கண்டடையும்.

ஏசா 34:15 அங்கே வல்லூறும் கூடுகட்டி, முட்டையிட்டு, குஞ்சுபொரித்து, அவைகளைத் தன் நிழலிலே கூட்டிக்கொள்ளும்; அங்கே கூளிகளும் ஜோடு ஜோடாகச் சேரும்.

ஏசா 34:16 கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள்; இவைகளில் ஒன்றும் குறையாது; இவைகளில் ஒன்றும் ஜோடில்லாதிராது; அவருடைய வாய் இதைச் சொல்லிற்று; அவருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும்.

ஏசா 34:17 அவரே அவைகளுக்குச் சீட்டுப்போட்டார்; அவருடைய கையே அதை அவைகளுக்கு அளவுநூலால் பகிர்ந்து கொடுத்தது; அவைகள் என்றைக்கும் அதைச் சுதந்தரித்துத் தலைமுறை தலைமுறையாக அதிலே சஞ்சரிக்கும்.

"அதின் ஆறுகள் பிசினாகவும்" - இது அடையாள மொழிநடையில் கூறப்பட்டிருக்கிறது. பாவத்தின்மீது கர்த்தருடைய கோபாக்கினை இவ்வாறு வெளிப்படும். அர்மெகதோனில் அந்திக்கிறிஸ்துவின் சேனையைக் கர்த்தர் அழிப்பார். (ஏசா 34:9-17)

ஆறுகள் (streams) - נַחַל - nakh'-al, nakh'-law, nakh-al-aw' - 5158

ஆ.பெ.சொ. - பள்ளத்தாக்கு, ஆறு, ஆற்றலரி, ஆற்றுக்கால், நீரோடை, நதி, ஆற்று, வெள்ளம், ஊற்று, காட்டாறு, பிரவாகம், தீ **(a winter torrent; a narrow valley; a mine shaft)**

"அதின் பிரபுக்கள் அனைவரும் இல்லாமற் போவார்கள்" - இதுமேயாவில் அல்லது ஏதோமில் ராஜ்யபாரம் பண்ணுவதற்கு ராஜாக்களோ அல்லது பிரபுக்களோ இருக்க மாட்டார்கள். மேசியாவின் காலத்தில் இஸ்ரவேல் வாக்குத்தத்த தேசம் முழுவதையும் சுதந்தரித்துக் கொள்ளும்

"அங்கே காட்டுமிருகங்களும் ஓரிகளும் ஒன்றையொன்று சந்தித்து" (ஏசா 34:11, 13-15, ஏசா 13:19-22) .

35 அதிகாரம்

12. ஆயிர வருஷம் - (ஏசா 2:1)

(1) தேசத்தின் மீட்பு

ஏசா 35:1 வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து, புஷ்பத்தைப் போல செழிக்கும்.

ஏசா 35:2 அது மிகுதியாய்ச் செழித்து பூரித்து ஆனந்தக்களிப்புடன் பாடும்; லீபனோனின் மகிமையும், கர்மேல் சாரோன் என்பவைகளின் அலங்காரமும் அதற்கு அளிக்கப்படும்; அவர்கள் கர்த்தருடைய மகிமையையும், நமது தேவனுடைய மகத்துவத்தையும் காண்பார்கள்.

தீர்க்கதரிசன எண் - 37

"வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து, புஷ்பத்தைப் போல செழிக்கும்......." (ஏசா 35:1-10) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழும். (ஏசா 35:1).
2. கடுவெளி களித்து, புஷ்பத்தைப்போல செழிக்கும்.
3. அது மிகுதியாய்ச் செழித்து பூரித்து ஆனந்தக்களிப்புடன் பாடும் (ஏசா 35:2).
4. லீபனோனின் மகிமை அதற்கு அளிக்கப்படும்.
5. கர்மேல், சாரோன் என்பவைகளின் அலங்காரமும் அதற்கு அளிக்கப்படும்.
6. லீபனோன், கர்மேல், சாரோன், வனாந்தரம் ஆகியவை கர்த்தருடைய மகிமையையும், தேவனுடைய மகத்துவத்தையும் காணும்.
7. தேவன் நீதியைச் சரிக்கட்ட வருவார். (ஏசா 35:4).
8. தேவன் பதிலளிக்க வருவார்.
9. தேவன் வந்து ஜனங்களை இரட்சிப்பார்.
10. அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்படும். (ஏசா 35:5).
11. செவிடரின் செவிகள் திறவுண்டுபோம்.
12. அப்பொழுது முடவன் மானைப்போல் குதிப்பான் (ஏசா 35:6).
13. ஊமையன் நாவும் கெம்பீரிக்கும்.
14. வனாந்தரத்திலே தண்ணீர்களும், கடுவெளியிலே ஆறுகளும் பாய்ந்தோடும்.
15. வெட்டாந்தரை தண்ணீர்த்தடாகமாகும். (ஏசா 35:7).
16. வறண்ட நிலம் நீரூற்றுகளுமாகும்.
17. வலுசர்ப்பங்கள் தாபரித்துக் கிடந்த இடங்களிலே புல்லும் கொறுக்கையும் நாணலும் உண்டாகும்.
18. அங்கே பெரும்பாதையான வழி இருக்கும்; அது பரிசுத்த வழி என்னப்படும். (ஏசா 35:8; ஏசா 2:24; ஏசா 11:16; ஏசா 19:23; சக. 14:16-20).
19. தீட்டுள்ளவன் அதிலே நடந்து வருவதில்லை; (ஏசா 35:8).
20. சுத்தமானவர்களும், அந்நியரும் அதில் நடந்துபோவார்கள்.
21. அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப் போவதில்லை.
22. அங்கே சிங்கம் இருப்பதில்லை. துஷ்டமிருகம் அங்கே போவதுமில்லை. (ஏசா 35:9).
23. மீட்கப்பட்டவர்களே அதில் நடப்பார்கள்.
24. கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக் களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள். (ஏசா 35:10).

35 அதிகாரம்

25. நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின் மேலிருக்கும்; சந்தோஷமும்மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்.

இந்தத் தீர்க்கதரிசனம் பிரத்தியட்சமானது - காரணம்

1. லீபனோன், கர்மேல், சாரோன், சீயோன் ஆகியவை உண்மைப் பெயர்கள். (ஏசா 35:2,10).
2. வனாந்தரம், கடுவெளி, வறண்டநிலம் ஆகியவை பூமியின் உண்மையான நிலைகளைக் குறிக்கிறது. (ஏசா 35:1,7).
3. காடுவெளியும், வனாந்தரமும், வெட்டாந்தரையும் செழிக்கும். (ஏசா 35:1-2,6-7).
4. லீபனோனின் மகிமை, கர்மேலின் அழகு, சாரோனின் செழிப்பு ஆகியவை பிரத்தியட்சப் பொருளுடையது. (ஏசா 35:2).
5. தளர்ந்த கைகளைத் திடப்படுத்தி, தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்துங்கள் என்னும் கட்டளை பிரத்தியட்சமான மனுஷருக்குக் கொடுக்கப்படுகிறது. (ஏசா 35:3-4; எபி 1:12-15).
6. கர்த்தருடைய வருகையும், கிறிஸ்துவின் வருகையும் பிரத்தியட்சமாக இருக்கும். (ஏசா 35:5, எசே 43:7; தானி 7:13-14; சக 14:1-5; மத் 24:29-31; மத் 25:31-46; 2தெச 1:7-10; தீத்து 2:13; யூதா 1:14-15; வெளி 1:7; வெளி 11:15; வெளி 19:11-21; வெளி 20:1-10; வெளி 21:3-7)
7. வியாதி சுகமாவதும், சரீர அவயவங்கள் பரிபூரணமடைவதும் பிரத்தியட்சமான காரியங்களாகும். (ஏசா 35:5-6)
8. வெட்டாந்தரை தண்ணீர்த்தடாகமாக மாறுவது பூமியில் பிரத்தியட்சமாக நடைபெறும் காரியம். (ஏசா 35:1-2,7).
9. ஏசா 35:8-10 ஆகிய வசனங்களில் கூறப் பட்டிருக்கும் பெரும்பாதை பிரத்தியட்சமானது என்பது ஏசா 11:16; ஏசா 19:23 ஆகிய வசனங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.
10. பெரும்பாதையில் நடக்கிறவர்கள், வனவிலங்குகளும், துன்மார்க்கரும் அங்கு நடக்காமல் இருப்பது ஆகியவை பிரத்தியட்சமான சம்பவமாகும். (ஏசா 35:8-10)
11. யூதர்கள் இந்தப் பெரும்பாதை வழியாகச் சீயோனுக்குத் திரும்பி வருவார்கள். (ஏசா 35:10).
12. இந்தத் தீர்க்கதரிசனம் ஆயிரம் வருஷ அரசாட்சியின்போது நிறைவேறும். (ஏசா 35:1-10)

"லீபனோனின் மகிமையும், கர்மேல் சாரோன் என்பவைகளின் அலங்காரமும் அதற்கு அளிக்கப்படும்" - லீபனோன் கேதுரு மரங்களுக்குப் பிரசித்தி பெற்றது. கர்மேல் அழகுள்ளது. சாரோன் செழிப்பான விளைச்சல் நிலம். கர்த்தருடைய மகிமையும், மகத்துவமும் வெளிப்படும்போது இவற்றின்மீது இப்போது காணப்படும் ஆசீர்வாதம் இன்னும் அதிகரிக்கும்.

(2) ஜனங்கள் குணமாக்கப்பட்டார்கள்

ஏசா 35:3 தளர்ந்த கைகளைத் திடப்படுத்தி, தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்துங்கள்.

ஏசா 35:4 மனம் பதறுகிறவர்களைப் பார்த்து: நீங்கள் பயப்படாதிருங்கள், திடன்கொள்ளுங்கள்; இதோ, உங்கள் தேவன் நீதியைச் சரிக்கட்டவும், உங்கள் தேவன் பதிலளிக்கவும் வருவார்; அவர் வந்து உங்களை இரட்சிப்பார் என்று சொல்லுங்கள்.

ஏசா 35:5 அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம்.

35 அதிகாரம்

ஏசா 35:6 அப்பொழுது முடவன் மானைப்போல் குதிப்பான்; ஊமையன் நாவும் கெம்பீரிக்கும்; வனாந்தரத்திலே தண்ணீர்களும், கடுவெளியிலே ஆறுகளும் பாய்ந்தோடும்.

"தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்துங்கள்" - கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுவதற்காக வருகிறார். அவர் வந்து தம்முடைய பிள்ளைகளை இரட்சிப்பார். (ஏசா 35:4) ஜனங்களைக் குணப்படுத்துவார். (ஏசா 35:5-6) பூமியில் மறுபடியும் ஆசீர்வாதத்தை ஸ்திரப்படுத்துவார். (ஏசா 35:1-2,6-7) ஆகையினால் சோர்வடைந்திருக்கும் யூதா தேசத்தார் தங்களுடைய தளர்ந்த கைகளைத் திடப்படுத்தி, தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்த வேண்டுமென்று அவர்களுக்கு ஆலோசனை கூறப்படுகிறது.

"உங்கள் தேவன் நீதியைச் சரிக்கட்டவும்" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது பிதாவாகிய தேவன் பூமிக்கு வருவதை இந்த வாக்கியம் வெளிப்படுத்துகிறது. (தானி 7:9,22; சக 14:5; தீத்து 2:13).

(3) தேசம் மீட்கப்பட்டது

ஏசா 35:7 வெட்டாந்தரை தண்ணீர்த் தடாகமும், வறண்ட நிலம் நீரூற்றுகளுமாகும், வலுசர்ப்பங்கள் தாபரித்துக் கிடந்த இடங்களிலே புல்லும் கொறுக்கையும் நாணலும் உண்டாகும்.

(4) பரிசுத்தத்தின் பெரும்பாதை - (2:2-4; 11:16; 19:23)

ஏசா 35:8 அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும்; அது பரிசுத்த வழி என்னப்படும்; தீட்டுள்ளவன் அதிலே நடந்துவருவதில்லை; அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப் போவதில்லை.

ஏசா 35:9 அங்கே சிங்கம் இருப்பதில்லை; துஷ்டமிருகம் அங்கே போவதுமில்லை, அங்கே காணப்படவுமாட்டாது; மீட்கப் பட்டவர்களே அதில் நடப்பார்கள்.

ஏசா 35:10 கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக்களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின் மேலிருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்.

"அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும்" - எகிப்திலிருந்து அசீரியாவிற்குப் பாலஸ்தீனத்தின் வழியாக ஒரு பெரும்பாதை அமைக்கப்படும். கர்த்தரை ஆராதிப்பதற்கும், கூடாரங்களில் பண்டிகைகளை ஆசரிப்பதற்கும் ஜனங்கள் இந்தப் பாதையின் வழியாக எருசலேமிற்குப் போவார்கள். (ஏசா 2:2-4; ஏசா 11:16; ஏசா 19:23-25; ஏசா 66:19-21; சக 14:16-21).

"பரிசுத்த வழி" (The way of holiness) - இந்தப் பாதை பரிசுத்தமானதுமல்ல. இந்தப் பாதையின் வழியாக நடப்பதினால் யாரும் பரிசுத்தமாவதுமில்லை. கர்த்தரை ஆவியோடும், உண்மையோடும் ஆராதிப்பதற்கு ஜனங்கள் இந்தப் பாதையின் வழியாக எருசலேமிற்குப் போவார்கள். ஆகையினால் இது பரிசுத்த வழி என்று அழைக்கப்படுகிறது. (ஏசா 35:8-10).

"சீயோனுக்கு வருவார்கள்" - எல்லா தேசங்களிலுமுள்ள இஸ்ரவேலர்கள் தங்களுடைய சொந்த தேசத்திற்குத்திரும்பி வருவார்கள். (ஏசா 11:10-12; ஏசா 66:19-21; எசே 37; மத் 24:31) அப்போது கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் இந்தப் பெரும்பாதையின் வழியாகச் சந்தோஷத்தோடு எருசலேமிற்கு வந்து கொண்டிருப்பார்கள். (ஏசா 2:2-4; சக 14:16-21).

36 அதிகாரம்

VII. வரலாற்று இடைக்காட்சி - *(36:1-39:8; 2இராஜா 18:13-20:19; 2நாளா 32)*

1. அசீரியப் படையெடுப்பு - *(36:1-17:38)*

(1) யூதாவின் மீது படையெடுப்பு - *(2இராஜா 18:13)*

ஏசா 36:1 எசேக்கியா ராஜா அரசாண்ட பதினாலாம் வருஷத்திலே அசீரியா ராஜாவாகிய சனகெரிப் யூதாவிலிருக்கிற அரணான சகல பட்டணங்களுக்கும் விரோதமாய் வந்து, அவைகளைப் பிடித்துக்கொண்டான்.

ஏசா 36:2 அப்பொழுது அசீரியா ராஜா லாகீசிலிருந்து ரப்சாக்கேயைப் பெரிய சேனையோடே எருசலேமுக்கு எசேக்கியா ராஜாவினிடத்தில் அனுப்பினான்; அவன் வந்து வண்ணார் துறையின் வழியிலுள்ள மேல்குளத்துச் சாலகத்தண்டையிலே நின்றான்.

ஏசா 36:3 அப்பொழுது இல்க்கியாவின் குமாரனாகிய எலியாக்கீம் என்னும் அரமனை விசாரிப்புக்காரனும், செப்னா என்னும் சம்பிரதியும், ஆசாப்பின் குமாரனாகிய யோவாக் என்னும் கணக்கனும் அவனிடத்திற்குப் புறப்பட்டுப் போனார்கள்.

"எசேக்கியா ராஜா அரசாண்ட பதினாலாம் வருஷத்திலே" - ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் இரண்டு பகுதிகள் உள்ளன. ஏசா 1-35 ஆகிய அதிகாரங்கள் முதலாவது பகுதியாகவும், ஏசா 40-66 ஆகிய அதிகாரங்கள் இரண்டாவது பகுதியாகவும் உள்ளது. ஏசா 36-39 ஆகிய நான்கு அதிகாரங்களும் இவ்விரண்டு பகுதிகளுக்கும் இடையில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்தப் பகுதியில் அக்காலத்தில் நடைபெற்ற வரலாற்றுச் சம்பவம் விவரிக்கப்பட்டிருக்கிறது. இதன் விவரம் வருமாறு:

1. அசீரியாவின் ராஜாவாகிய சனகெரிப் யூதாவின்மீது யுத்தம் பண்ண வருவது. *(ஏசா 36:1-37:35)*

2. அசீரியா ராஜாவின் தோல்வி *(ஏசா 37:36-38)*

3. எசேக்கியா ராஜாவின் வியாதியும், அவன் குணமடைவதும். *(ஏசா 38)*

4. எசேக்கியா ராஜாவின் மதியீனம். *(ஏசா 39)*.

ஏசாயா 36-39 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டுள்ள சம்பவங்கள் 2இராஜா 18:13-20:19 ஆகிய வேதப் பகுதியிலும் கூறப்பட்டுள்ளது.

பத்துக் கோத்திரத்தார் சிறையிருப்புக்குப் போய் எட்டு வருஷங்களுக்குப் பின்பு இந்தச் சம்பவம் நடைபெறுகிறது. எசேக்கியா அசீரிய ராஜாவிடம் பகுதி கட்ட சம்மதிக்கிறான். அசீரிய ராஜாவுக்கு எசேக்கியா எதிர்த்து நின்றிருந்தால், சனகெரிப் யூதா ஜனங்களையும்சிறைப்பிடித்துச்சென்றிருப்பான். எசேக்கியா கர்த்தரை விசுவாசித்தான். கர்த்தர் அவனுக்கு அசீரியர்மீது வெற்றியைத் தந்தார். ஆனாலும் 125 வருஷங்களுக்குப் பின்பு, யூதர்கள் பாபிலோன் தேசத்திற்கு அடிமைகளானார்கள். *(2இராஜா 24-25)*. பதினான்காம் வருஷத்தில் என்பது சமாரியா அழிக்கப்பட்டு எட்டு வருஷங்களுக்குப் பின்பு என்று பொருள்படும். அதாவது இஸ்ரவேலின் பத்துக் கோத்திரத்தார் அசீரியரின் சிறையிருப்புக்கு உட்பட்டு எட்டு வருஷங்களுக்குப் பின்பு. *(2இராஜா 17; 2இராஜா 18:10)*.

"எசேக்கியா ராஜா" - *(2இராஜா 18:1-20:21; 2நாளா 29:1-32:33)*

"யூதாவிலிருக்கிற அரணான சகல பட்டணங்கள்" - எருசலேம் பட்டணம் தவிர. ஏனெனில் கர்த்தர் இந்தப் பட்டணத்தை அற்புதமாக மீட்டுக் கொண்டார். *(2இராஜா 19:24, ஏசா 37:7,33-39)*.

"ரப்சாக்கே" **(Rabshakeh)** - இவன் ராஜாவின் பானபாத்திரக்காரருக்குத் தலைவன். எருசலேமிற்கு விரோதமாக அசீரியரின் சேனை யுத்தம் பண்ண வந்தபோது ரப்சாக்கே அதற்குத் தலைவனாக இருந்தான். *(ஏசா 36:2-4,11-22; ஏசா 37:4-8; 2இராஜா 18:17-37; 2இராஜா 19:4-8)*.

36 அதிகாரம்

"மேல்குளத்துச் சாலகத்தண்டையிலே நின்றான்" - இதே இடத்தில் 28 வருஷங்களுக்கு முன்பு ஏசாயா ஆகாசோடு நின்றான். (ஏசா 7:3).

(2) யூதாவின் அவமதிப்பு - (2இராஜா 18:17)

(அ) எசேக்கியாவிற்கு செய்தி

ஏசா 36:4 ரப்சாக்கே அவர்களை நோக்கி: அசீரியா ராஜாவாகிய மகாராஜாவானவர் உரைக்கிறதும், நீங்கள் எசேக்கியாவுக்குச் சொல்ல வேண்டியதும் என்னவென்றால்: நீ நம்பியிருக்கிற இந்த நம்பிக்கை என்ன?

ஏசா 36:5 யுத்தத்துக்கு மந்திராலோசனையும் வல்லமையும் உண்டென்று சொல்லுகிறாயே, அது வாய்ப்பேச்சேயன்றி வேறல்ல; நீ என்னை விரோதிக்கும்படி யார்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறாய்?

ஏசா 36:6 இதோ, நெரிந்த நாணல்கோலாகிய அந்த எகிப்தை நம்புகிறாய்; அதின் மேல் ஒருவன் சாய்ந்தால், அது அவன் உள்ளங்கையில் பட்டுருவிப்போம்; எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் தன்னை நம்புகிற யாவருக்கும் அப்படியே இருப்பான்.

ஏசா 36:7 நீ என்னிடத்தில்: நாங்கள் எங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புகிறோம் என்று சொல்வாயாகில், அவருடைய மேடைகளையும் அவருடைய பலிபீடங்களையும் அல்லவோ எசேக்கியா அகற்றி, யூதாவையும், எருசலேமையும் நோக்கி: இந்தப் பலிபீடத்தின் முன் பணியுங்கள் என்றானே.

ஏசா 36:8 நான் உனக்கு இரண்டாயிரம் குதிரைகளைக் கொடுப்பேன்; நீ அவைகள்மேல் ஏறத்தக்கவர்களைச் சம்பாதிக்கக் கூடுமானால் அசீரியா ராஜாவாகிய என் ஆண்டவனோடே சபதங்கூறு.

ஏசா 36:9 கூறாதேபோனால், நீ என் ஆண்டவனுடைய ஊழியக்காரரில் ஒரே ஒரு சிறிய தலைவனுடைய முகத்தை எப்படித் திருப்புவாய்? இரதங்களோடு குதிரைவீரரும் வருவார்கள் என்று எகிப்தையா நம்புகிறாய்?

ஏசா 36:10 இப்பொழுதும் கர்த்தருடைய கட்டளையில்லாமல் இந்தத் தேசத்தை அழிக்க வந்தேனோ? இந்தத் தேசத்துக்கு விரோதமாய்ப் போய் அதை அழித்துப் போடு என்று கர்த்தர் என்னோடே சொன்னாரே என்று சொன்னான்.

"நீ என்னை விரோதிக்கும்படி" - ஆகாசின் நாட்களில் யூதா அசீரியாவிற்கு அடிமைப்பட்டது. அசீரியாவின் ராஜா யூதாவின் ராஜாவைப் பகுதிப்பணம் கட்டுமாறு தண்டித்துவிட்டான். அதன் பின்பு ஆட்சிக்கு வந்த எசேக்கியா அசீரியாவின் ராஜாவிற்குப் பகுதிப்பணம் கட்ட மறுத்து அவனுக்கு எதிராகக் கலகம் பண்ணுகிறான். (2இராஜா 18:7). அசீரியருக்கு எதிராக யுத்தம் பண்ணுவதற்கு எகிப்தியர் தனக்கு உதவி புரிவார்கள் என்று எசேக்கியா எகிப்தியரை நம்புகிறான். ஆனால் எகிப்தியரால் எசேக்கியாவிற்கு உதவி புரிய முடியவில்லை. (ஏசா 36:6; ஏசா 30:1-5; ஏசா 31:1-3).

அசீரியர் யூதாவை அவமானப் படுத்துகிறார்கள். எகிப்தையும், கர்த்தரையும் நம்பி தங்களை எதிர்ப்பதற்காகத் தகுந்த பாடம்கற்பிப்போம்என்று அச்சுறுத்துகிறார்கள். யூதருக்கு யுத்தம் பண்ணுவதற்கு வலிமை இல்லை என்று ஏளனமாகப் பேசுகிறார்கள். அசீரியர்கள் இரண்டாயிரம் குதிரைகளை யூதருக்குக் கொடுத்தாலும் அவைகள்மேல் ஏறத் தக்கவர்களை அவர்களால் சம்பாதிக்க முடியாது என்று அவமானப்படுத்துகிறார்கள். (2இராஜா 18:23). இஸ்ரவேலின் கர்த்தரே தங்களை இங்கு அனுப்பி, எருசலேமை அழிக்கச் சொன்னார் என்றும் பெருமை பேசுகிறார்கள். (2இராஜா 18:25).

"நெரிந்த நாணல்கோலாகிய அந்த எகிப்தைநம்புகிறாய்"-எகிப்து நெரிந்த நாணல் கோலுக்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டிருக்கிறது. நெரிந்த நாணல் ஒன்றுக்கும் உதவாது. (எசே 29:6-7). நாணல்மீது யாராவது சாய்ந்தால் அது முறிந்துபோகும். எகிப்தின்மீது யூதா சார்ந்திருக்கிறது. எகிப்து நாணலைப் போல முறிந்துபோகும்.

ஏசாயா - தொகுப்புரை

36 அதிகாரம்

புறஜாதியாரின் பெருமிதம்

1. யுத்தம் பண்ணுவதற்கு உனக்கு வலிமையில்லை. (ஏசா 36:5,8).

2. நெரிந்த நாணலைப்போல இருக்கும் எகிப்தியரை நம்புகிறாய். (ஏசா 36:6).

3. யூதாவை அழித்துப்போடுமாறு கர்த்தர் என்னோடு சொன்னார். (ஏசா 36:6,7,10).

"இந்தப் பலிபீடத்தின் முன் பணியுங்கள்" - ரப்சாக்கேக்குக் கர்த்தரைப் பற்றிச் சரியாகத் தெரியவில்லை. எசேக்கியா பாகாலின் பலிபீடங்களையும், மேடைகளையும் அகற்றினான். விக்கிரகாராதனையை யூதா தேசத்தில் இராதபடிக்கு அழித்துப் போட்டான். கர்த்தரை ஆராதிக்கும் மெய்யான ஆராதனையை மறுபடியும் ஸ்தாபித்தான். (2இராஜா 18:4-7; 2நாளா 29:1-31:21) விக்கிரகங்களையும், விக்கிரகங்களின் பலிபீடங்களையும் அழித்துப்போட்டதை ரப்சாக்கே தவறுதலாகப் புரிந்துகொண்டு எசேக்கியா கர்த்தருடைய பலிபீடங்களை அகற்றிப்போட்டதாகக் கூறுகிறான்.

"அசீரியா ராஜாவாகிய என் ஆண்டவனோடே சபதங்கூறு" - எசேக்கியா ராஜா அசீரியா ராஜாவோடு சமாதானமாகி அவனுக்குக் கப்பம் கட்ட சம்மதிக்க வேண்டும். அப்போதுதான் எசேக்கியாவிற்குச் சமாதானம் உண்டாகும். இல்லையெனில் மற்ற தேசங்களை அழித்ததுபோல யூதாவையும் அழித்துப் போடுவதாக ரப்சாக்கே எசேக்கியாவிடம் கூறுகிறான். (ஏசா 36:8-12).

"இரதங்களோடு குதிரைவீரரும் வருவார்கள் என்று எகிப்தையா நம்புகிறாய்?" - அசீரியாவின் ராஜா வலிமை மிகுந்தவன். யூதா தேசத்தில் ஒரு குதிரைவீரர்கூட இல்லை. ஒன்றுமில்லாத யூதாவால் அசீரியரின் சேனையை எதிர்க்க முடியாது. இந்த வாக்கியத்தில் "ஒரு சிறிய தலைவன்" என்பது அசீரியாவின் மாகாண அதிபதியைக் (governor of a province) குறிக்கும். (1இராஜா 10:15; 2இராஜா 18:24; எஸ் 8:9; எஸ் 9:3; எரே 51:23).

"கர்த்தர் என்னோடே சொன்னாரே" - ஒருசில தேசங்களை அழித்துப்போடுமாறு கர்த்தர் அசீரியாவிற்குக் கட்டளையிட்டிருக்கிறார். இஸ்ரவேலின் பத்துக் கோத்திரத்தாரை அசீரியர் அழிக்க வேண்டும். (2இராஜா 17) அவர்கள் யூதாவைச் சிட்சிக்க வேண்டும். யூதாவை அழிக்கக்கூடாது. (ஏசா 10:32-34) யூதாவை அழிப்பதற்குக் கர்த்தர் அசீரியருக்கு அனுமதி கொடுக்க வில்லை. கர்த்தர் தங்களுக்குக் கொடுக்காத கட்டளையைத் தங்களுக்குக் கொடுத்திருப்பதாக ரப்சாக்கே கூறுகிறான். ஆகையினால் கர்த்தர் யூதாவைப் பாதுகாக்க ஆயத்தமாக வருகிறார். (ஏசா 37:6-7; 21-39).

(ஆ) யூதாவின் பதில் - (2இராஜா 18:26)

ஏசா 36:11 அப்பொழுது எலியாக்கீமும் செப்னாவும் யோவாகும், ரப்சாக்கேயைப் பார்த்து: உம்முடைய அடியாரோடே சீரியபாஷையிலே பேசும், அது எங்களுக்குத் தெரியும்; அலங்கத்திலிருக்கிற ஜனத்தின் செவிகள் கேட்க எங்களோடே யூதபாஷையிலே பேசவேண்டாம் என்றார்கள்.

"உம்முடைய அடியாரோடே சீரியபாஷையிலே பேசும்" - எருசலேம் பட்டணத்திற்குள் இருக்கும் ஜனங்கள் அசீரியருடைய பேச்சைக் கேட்டுப் பயப்படுகிறார்கள். அசீரியர் யூதபாஷையில் பேசுவதினால் எருசலேம் ஜனங்கள் அதைப் புரிந்து கொள்கிறார்கள். ஆகையினால் யூத பாஷையில் பேசாமல், எருசலேம் ஜனத்தாருக்குப் புரியாத சீரிய பாஷையிலே பேசுமாறு கூறுகிறார்கள்.

"யூதபாஷை" - யாக்கோபின் 12 குமாரர் மூலமாக வரும் கோத்திரத்தார் யூதர் என்று அழைக்கப்படுகிறார்கள். ஏசாயாவின் காலத்திற்கு முன்பு இவர்கள் யூதர்கள் என்று அழைக்கப்படவில்லை. எசேக்கியாவின் தகப்பனாகிய ஆகாசின் காலத்திலேயே இவர்கள் முதன் முறையாக யூதர் என்று அழைக்கப்பட்டார்கள். (2இராஜா 16:6). இந்த வசனத்தில் இவர்கள் இரண்டாம் முறையாக யூதர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்களுடைய பாஷை "யூதபாஷை" என்று அழைக்கப்படுகிறது. இவர்களுடைய பாஷை எபிரெய பாஷையாகும். (ஏசா 36:11; 2இராஜா 18: 26-28; 2நாளா 32:18).

ஏசாயா - தொகுப்புரை

36 அதிகாரம்

வேதாகமத்தில் யூதர் என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கும் விவரம்

1. வரலாற்றுப் புஸ்தகங்கள் - ஒரு தடவை (2இராஜா 25:25).
2. வேதாகமத்தில் முதல் பதினான்கு புஸ்தகங்கள் - 5 தடவைகள்.
3. எஸ்றா - 8 தடவைகள் (எஸ்றா 4:12,23; எஸ்றா 5:1,5; எஸ்றா 6:7-14)
4. நெகேமியா - 11 தடவைகள் (நெகே 1:2; நெகே 2:16; நெகே 4:1-2,12; நெகே 5:1,8,17; நெகே 6:6; நெகே 13:23-24)
5. எஸ்தர் - 53 தடவைகள் (எஸ் 2:5-10:3)
6. ஏசாயா - 2 தடவைகள் (ஏசா 36:11-13)
7. எரேமியா - 10 தடவைகள் (எரே 32:12; எரே 34:9; எரே 38:19; எரே 40:11-15; எரே 41:3; எரே 52:28-30)
8. தானியேல் - 3 தடவைகள் (தானி 3:8,12; தானி 5:13)
9. சகரியா - ஒரு தடவை (சக 8:23).
10. புதிய ஏற்பாடு - 202 தடவைகள்

(இ) ஜனங்களுக்கு செய்தி

ஏசா 36:12 அதற்கு ரப்சாக்கே; உங்களோடுங்கூடத் தங்கள் மலத்தைத் தின்னவும், தங்கள் நீரைக் குடிக்கவும், அலங்கத்திலே தங்கியிருக்கிற புருஷரண்டைக்கே அல்லாமல், உன் ஆண்டவனண்டைக்கும், உன்னண்டைக்குமா, என் ஆண்டவன் இந்த வார்த்தைகளைப் பேச என்னை அனுப்பினார் என்று சொல்லி;

ஏசா 36:13 ரப்சாக்கே நின்று கொண்டு, யூதபாஷையிலே உரத்த சத்தமாய்: அசீரியா ராஜாவாகிய மகாராஜாவுடைய வார்த்தைகளைக் கேளுங்கள்.

ஏசா 36:14 எசேக்கியா உங்களை வஞ்சியாதபடி பாருங்கள்; அவன் உங்களைத் தப்புவிக்கமாட்டான்.

ஏசா 36:15 கர்த்தர் நம்மை நிச்சயமாய்த் தப்புவிப்பார், இந்த நகரம் அசீரியா ராஜாவின் கையில் ஒப்புக் கொடுக்கப்படுவதில்லை என்று சொல்லி, எசேக்கியா உங்களைக் கர்த்தரை நம்பப் பண்ணுவான்; அதற்கு இடங் கொடாதிருங்கள் என்று ராஜா சொல்லுகிறார்.

ஏசா 36:16 எசேக்கியாவின் சொல்லைக் கேளாதிருங்கள். அசீரியா ராஜா சொல்லுகிறதாவது: நீங்கள் என்னோடே ராஜியாகி, காணிக்கையோடே என்னிடத்தில் வாருங்கள்.

ஏசா 36:17 நான் வந்து, உங்களைத் தானியமும் திராட்சத்தோட்டமுமுள்ள தேசமும், அப்பமும் திராட்சரசமுமுள்ள தேசமுமாகிய உங்கள் தேசத்துக்கு ஒப்பான தேசத்துக்கு அழைத்துக் கொண்டுபோகுமளவும், அவனவன் தன் தன் திராட்சச்செடியின் கனியையும், தன் தன் அத்திமரத்தின் கனியையும் புசித்து, அவனவன் தன் தன் கிணற்றின் தண்ணீரைக் குடியுங்கள்.

ஏசா 36:18 கர்த்தர் நம்மைத் தப்புவிப்பார் என்று உங்களைப் போதனைசெய்ய எசேக்கியாவுக்குச் செவிகொடாதிருங்கள்; ஜாதிகளுடைய தேவர்களில் யாராவது தங்கள் தேசத்தை அசீரியா ராஜாவின் கைக்குத் தப்புவித்ததுண்டோ?

ஏசா 36:19 ஆமாத் அர்பாத் பட்டணங்களின் தேவர்கள் எங்கே? செப்பர்வாயீமின் தேவர்கள் எங்கே? அவர்கள் சமாரியாவை என் கைக்குத் தப்புவித்ததுண்டோ?

36 அதிகாரம்

ஏசா 36:20 கர்த்தர் எருசலேமை என் கைக்குத் தப்புவிப்பார் என்பதற்கு, அந்தத் தேசங்களுடைய எல்லா தேவர்களுக்குள்ளும் தங்கள் தேசத்தை என் கைக்குத் தப்புவித்தவர் யார் என்று ராஜா சொல்லுகிறார் என்றான்.

ஏசா 36:21 அவர்களோ அவனுக்கு ஒரு வார்த்தையையும் பிரதியுத்தரமாகச் சொல்லாமல் மவுனமாயிருந்தார்கள்; அவனுக்கு மறுஉத்தரவு சொல்ல வேண்டாம் என்று ராஜா கட்டளையிட்டிருந்தான்.

"உங்களோடுங்கூடத் தங்கள் மலத்தைத் தின்னவும், தங்கள் நீரைக் குடிக்கவும்" - இந்த வசனப்பகுதியில் பயன்படுத்தப்பட்டிருக்கும் மொழிநடை சற்றுக் கடினமாக உள்ளது. இதற்கு ஏசாயா காரணமல்ல. ரப்சாக்கே சொன்ன செய்தி உள்ளபடியே எழுதப்பட்டிருக்கிறது. (2இராஜா 18:27). வேதாகமத்தில் பல இடங்களில் இதுபோன்ற மொழிநடை பயன்படுத்தப்பட்டுள்ளது. (1சாமு 25:22,34; 1இராஜா 14:10; 1இராஜா 16:11; 1இராஜா 21:21; 2இராஜா 9:8).

"நீங்கள் என்னோடே ராஜியாகி, காணிக்கையோடே என்னிடத்தில் வாருங்கள்" - அசீரியாவின் ராஜாவிற்குக் கப்பம் செலுத்தினால் எசேக்கியா ரப்சாக்கோடு ராஜியாகலாம். ஆனாலும் அடுத்த வசனத்தில் "உங்கள் தேசத்துக்கு ஒப்பான தேசத்துக்கு அழைத்துக் கொண்டுபோகுமளவும்" என்னும் வார்த்தைகளையும் ரப்சாக்கே பேசியதினால் யூதர்கள் அனைவரையும் சிறையிருப்புக்குக் கொண்டுபோகும் எண்ணம் அசீரியருக்கு இருந்தது என்பது தெரியவருகிறது. (ஏசா 36:16-17). எப்பிராயீம் தேசத்தை அசீரியர் ஏற்கெனவே சிறைப்பிடித்துச் சென்று விட்டார்கள். (2இராஜா 17) அதுபோல இப்போது யூதா தேசத்தாரையும் சிறைப்பிடித்துச் செல்ல திட்டமிடுகிறார்கள்.

"சமாரியா" - எப்பிராயீம் தேசம் என்று அழைக்கப்படும் பத்துக் கோத்திரத்தாரின் தலைநகரம். இதை அசீரியர் ஏற்கெனவே சிறைப்பிடித்துச் சென்றுவிட்டார்கள். (2இராஜா 17).

"கர்த்தர் எருசலேமை என் கைக்குத் தப்புவிப்பார்" - ரப்சாக்கே கர்த்தரை மற்ற விக்கிரகங்கள்போல நினைத்துக் கூறுகிறான். (ஏசா 36:19-20). இதற்காகக் கர்த்தர் அசீரியரைத் தண்டிக்கிறார். (ஏசா 37:6-7, 23-28).

"மவுனமாயிருந்தார்கள்" - அலங்கத்தின் மேல் இருந்த யூதர்கள் ரப்சாக்கேயின் ஆணவமான பேச்சைக் கேட்டும் பதில் வார்த்தை ஒன்றும் கூறாமல் அமைதியாக இருக்கிறார்கள். ராஜாவின் கட்டளைப்படி அவர்கள் அமைதியாக இருந்தார்கள்.

(3) எசேக்கியாவிற்கு அறிவித்தார்கள்

ஏசா 36:22 அப்பொழுது இல்க்கியாவின் குமாரனாகிய எலியாக்கீம் என்னும் அரமனை விசாரிப்புக்காரனும், செப்னா என்னும் சம்பிரதியும், ஆசாப்பின் குமாரனாகிய யோவாக் என்னும் கணக்கனும், வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு, எசேக்கியாவினிடத்தில் வந்து, ரப்சாக்கேயின் வார்த்தைகளை அவனுக்கு அறிவித்தார்கள்.

37 அதிகாரம்

(4) எசேக்கியாவிடம் காணப்பட்ட விளைவு

ஏசா 37:1 ராஜாவாகிய எசேக்கியா அதைக் கேட்டபோது, தன் வஸ்திரங்களைக் கிழித்து, இரட்டு உடுத்துக்கொண்டு, கர்த்தருடைய ஆலயத்தில் பிரவேசித்து,

ஏசா 37:2 அரமனை விசாரிப்புக் காரனாகிய எலியாக்கீமையும், சம்பிரதியாகிய செப்னாவையும், ஆசாரியர்களின் மூப்பரையும், ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா என்னும் தீர்க்கதரிசியினிடத்திற்கு இரட்டு உடுத்தவர்களாக அனுப்பினான்.

ஏசா 37:3 இவர்கள் அவனை நோக்கி: இந்த நாள் நெருக்கமும், கண்டிதமும், தூஷணமும் அநுபவிக்கிற நாள்; பிள்ளைப்பேறு நோக்கியிருக்கிறது; பெறவோ பெலன் இல்லை.

ஏசா 37:4 ஜீவனுள்ள தேவனை நிந்திக்கும்படி, அசீரியா ராஜாவாகிய தன் ஆண்டவனால் அனுப்பப்பட்ட ரப்சாக்கே சொன்ன வார்த்தைகளை உமது தேவனாகிய கர்த்தர் கேட்டிருக்கிறார்; உமது தேவனாகிய கர்த்தர் கேட்டிருக்கிற வார்த்தைகளினிமித்தம் தண்டனை செய்வார்; ஆகையால், இன்னும் மீதியாயிருக்கிறவர் களுக்காக விண்ணப்பஞ்செய்வீராக என்று எசேக்கியா சொல்லச்சொன்னார் என்றார்கள்.

“அரமனை விசாரிப்புக்காரனாகிய எலியாக்கீமையும்.......” - எசேக்கியா தன்னுடைய பிரதானிகளை சமாதானத்தின் தூதுவர்களாக அசீரியரிடம் முதலாவது அனுப்பினான். ஆனால் அவர்களோ எசேக்கியாவின் தூதர்களை அவமானப்படுத்தி திருப்பி அனுப்பிவிட்டார்கள். (ஏசா 36:3-4).

அதன் பின்பு எசேக்கியா தன்னுடைய மூப்பரை ஏசாயாவிடம் அனுப்புகிறான். எசேக்கியா இதை முதலிலேயே செய்திருக்க வேண்டும். மனுஷர் தங்களுக்குப் பிரச்சனைகள் வரும்போது முதலாவதாக மனுஷரையே தேடிப்போகிறார்கள். எல்லா முயற்சிகளும் தோல்வியுற்றபிறகு கர்த்தரிடத்தில் திரும்பி வருகிறார்கள்.

எசேக்கியாவின் மனுஷர் ஏசாயாவிடம் ஏறெடுத்த விண்ணப்பங்கள்

1. இந்த நாள் நெருக்கமான நாள்.
2. இந்த நாள் கண்டிதமான நாள்.
3. இந்த நாள் தூஷணமான நாள்.
4. பிள்ளைபேறு நோக்கியிருக்கிறது, பெறவோ பெலனில்லை.
5. ஜீவனுள்ள தேவனை நிந்திக்கும்படி அசீரியா ராஜா சொன்ன வார்த்தைகளைக் கர்த்தர் கேட்டிருக்கிறார். (2 இராஜா 19:4)
6. தேவனாகிய கர்த்தர் கேட்டிருக்கிற வார்த்தைகளினிமித்தம் தண்டனை செய்வார்.
7. இன்னும் மீதியாயிருக்கிறவர்களுக்காக விண்ணப்பஞ்செய்வீராக.

“ரப்சாக்கே சொன்ன வார்த்தைகளை உமது தேவனாகிய கர்த்தர் கேட்டிருக்கிறார்” - எசேக்கியாவின் விசுவாசம் மிகவும் பலவீனமாக இருக்கிறது. (ஏசா 37:5-6,23-28).

“இன்னும் மீதியாயிருக்கிறவர்களுக்காக விண்ணப்பஞ்செய்வீராக” - இந்தக் குறிப்பிட்ட காரியத்திற்காக ஏசாயா விண்ணப்பம் பண்ணினாரா என்று தெரியவில்லை. ஆனால் அசீரியருடைய சேனையின் அழிவை ஏசாயா முன்னறிவித்தார். (ஏசா 37:7).

(5) தேவன் வெற்றியை உறுதி பண்ணுகிறார்

ஏசா 37:5 இவ்விதமாய் எசேக்கியா ராஜாவின் ஊழியக்காரர் ஏசாயாவினிடத்தில் வந்து சொன்னார்கள்.

37 அதிகாரம்

ஏசா 37:6 அப்பொழுது ஏசாயா அவர்களை நோக்கி: அசீரியா ராஜாவின் ஊழியக்காரர் என்னைத் தூஷித்ததும் நீர் கேட்டதுமான வார்த்தைகளினாலே பயப்படாதேயும்.

ஏசா 37:7 இதோ, அவன் ஒரு செய்தியைக் கேட்டு, தன் தேசத்துக்குத் திரும்புவதற்கான ஆவியை நான் அவனுக்குள் அனுப்பி, அவனை அவன் தேசத்திலே பட்டயத்தால் விழப் பண்ணுவேன் என்று கர்த்தர் உரைக்கிறார் என்பதை உங்கள் ஆண்டவனிடத்தில் சொல்லுங்கள் என்றான்.

தீர்க்கதரிசன எண் - 38

"அசீரியா ராஜாவின் ஊழியக்காரர் என்னைத் தூஷித்ததும் நீர் கேட்டதுமான வார்த்தைகளினாலே பயப்படாதேயும்......." (ஏசா 37:6-7) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (ஏசா 37:36-38)

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. அவன் ஒரு செய்தியைக்கேட்பான். (2இராஜா 19:7, ஏசா 37:7).

2. தன் தேசத்துக்குத் திரும்புவதற்கான ஆவியை நான் அவனுக்குள் அனுப்புவேன்.

3. அவனை அவன் தேசத்திலே பட்டயத்தால் விழப்பண்ணுவேன்.

"என்னைத் தூஷித்ததும் நீர் கேட்டதுமான வார்த்தைகளினாலே பயப்படாதேயும்"- கர்த்தர் எசேக்கியாவிற்குத் தெளிவான செய்தியைக் கொடுக்கிறார். ரப்சாக்கே கர்த்தரைத் தூஷிக்கிறான். அசீரியாவின் ராஜா எருசலேமைக் கைப்பற்றமாட்டான்.தன்னுடைய தேசத்திற்குத் திரும்பிப்போவான் என்று கர்த்தர் முன்னறிவிக்கிறார். (ஏசா 37:7,36-38).

"அவனை அவன் தேசத்திலே பட்டயத்தால் விழப்பண்ணுவேன்" - ஒரே நாள் இரவில் கர்த்தருடைய தூதன் அசீரியரின் சேனையில் 185,000பேரைக் கொன்றுபோட்டார். இதனால் அசீரியாவின் ராஜா எருசலேமை முற்றிக்கையிடும் திட்டத்திலிருந்து பின்வாங்கி தன்னுடைய தேசத்திற்குத் திரும்பிப் போனான். அங்கு அவனுடைய குமாரர்களே சனகெரிப்பைக் கொன்றுபோட்டார்கள். (ஏசா 37:36-38).

"ஒரு செய்தியைக் கேட்டு" - எத்தியோப்பியாவின் ராஜா திராக்கா தன்னோடு யுத்தம் பண்ண வருகிறான் என்னும் செய்தியை அவன் கேட்டிருக்கலாம். (ஏசா 37:8-13).

(6) தேவனுக்கும் யூதாவிற்கும் மேலும் அவமதிப்பு - (2இராஜா 18:27)

ஏசா 37:8 அசீரியா ராஜா லாகீசைவிட்டுப் புறப்பட்டான் என்று கேள்விப்பட்டு, ரப்சாக்கே திரும்பிப்போய், அவன் லிப்னாவின் மேல் யுத்தம் பண்ணுகிறதைக் கண்டான்.

ஏசா 37:9 அப்பொழுது, எத்தியோப்பியாவின் ராஜாவாகிய திராக்கா உம்மோடு யுத்தம்பண்ணப் புறப்பட்டான் என்று சொல்லக் கேள்விப்பட்டான்; அதைக் கேட்ட போது அவன் எசேக்கியாவினிடத்துக்கு ஸ்தானாபதிகளை அனுப்பி:

ஏசா 37:10 நீங்கள் யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவுக்குச் சொல்ல வேண்டியது என்னவென்றால், எருசலேம் அசீரியா ராஜாவின் கையில் ஒப்புக் கொடுக்கப் படுவதில்லை என்று நீ நம்பியிருக்கிற உன் தேவன் உன்னை எத்தவொட்டாதே.

ஏசா 37:11 இதோ, அசீரியா ராஜாக்கள் சகல தேசங்களையும் சங்கரித்த செய்தியை நீ கேள்விப்பட்டிருக்கிறாய்; நீ தப்புவாயோ?

37 அதிகாரம்

ஏசா 37:12 என் பிதாக்கள் அழித்துவிட்ட கோசானையும், ஆரானையும், ரேத்சேப்பையும், தெலாசாரிலிருந்த ஏதேனின் புத்திரரையும் அவர்களுடைய தேவர்கள் தப்புவித்ததுண்டோ?

ஏசா 37:13 ஆமாத்தின் ராஜாவும், அர்பாத்தின் ராஜாவும், செப்பர்வாயீம் ஏனா ஈவா பட்டணங்களின் ராஜாவும் எங்கே என்று சொல்லுங்கள் என்றார்.

"அவன்" - இது அசீரியாவின் ராஜாவைக் குறிக்கும். ரப்சாக்கேயைக் குறிக்காது. எத்தியோப்பியாவின் ராஜாவாகிய திராக்கா தனக்கு எதிராக யுத்தம் பண்ண வருவதை அசீரியாவின் ராஜா கேள்விப்படுகிறான். உடனடியாக எசேக்கியாவினிடத்திற்கு மறுபடியும் ஸ்தானாபதிகளை அனுப்புகிறான். தன்னிடத்தில் சரணடையுமாறு அவனைப் பயமுறுத்துகிறான். (ஏசா 37:9-13).

"நீ நம்பியிருக்கிற உன் தேவன் உன்னை எத்தவொட்டாதே" - அசீரியாவின் ராஜா மறுபடியுமாகக் கர்த்தருக்கு எதிராகத் தூஷண வார்த்தைகளைப் பேசுகிறான். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை வஞ்சித்துவிடுவார் என்று ஏளனமாகப் பேசுகிறான். எருசலேம் தப்புவிக்கப்படும் என்று கர்த்தர் ஏசாயாவின் மூலமாக அறிவிக்கிறார். இந்தச் செய்தி அசீரியாவின் ராஜாவிற்கும் அறிவிக்கப்பட்டிருக்கும். (ஏசா 37:6-7,10).

(7) எசேக்கியாவின் ஜெபம் - (2 இராஜா 19:14)

ஏசா 37:14 எசேக்கியா ஸ்தானாபதிகளின் கையிலிருந்த நிருபத்தை வாங்கி வாசித்தான்; பின்பு எசேக்கியா கர்த்தருடைய ஆலயத்திற்குப்போய் அதைக் கர்த்தருக்கு முன்பாக விரித்து,

ஏசா 37:15 கர்த்தரை நோக்கி:

ஏசா 37:16 சேனைகளின் கர்த்தாவே, கேருபீன்களின் மத்தியில் வாசம் பண்ணுகிற இஸ்ரவேலின் தேவனே, நீர் ஒருவரே பூமியின் ராஜ்யங்களுக்கெல்லாம் தேவனானவர்; நீர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினீர்.

ஏசா 37:17 கர்த்தாவே, உமது செவியைச் சாய்த்துக்கேளும்; கர்த்தாவே, நீர் உமது கண்களைத் திறந்துபாரும், சனகெரிப் ஜீவனுள்ள தேவனை நிந்திக்கும் படிக்குச் சொல்லியனுப்பின வார்த்தைகளையெல்லாம் கேளும்.

ஏசா 37:18 கர்த்தாவே, அசீரியா ராஜாக்கள் அந்த ஜாதிகளையும், அவர்கள் தேசத்தையும் நாசமாக்கி,

ஏசா 37:19 அவர்களுடைய தேவர்களை நெருப்பிலே போட்டுவிட்டது மெய்தான்; அவைகள் தேவர்கள் அல்லவே, மனுஷர் கைவேலையான மரமும் கல்லுந்தானே; ஆகையால் அவைகளை நிர்த்தூளியாக்கினார்கள்.

ஏசா 37:20 இப்போதும் எங்கள் தேவனாகிய கர்த்தாவே, நீர் ஒருவரே கர்த்தர் என்று பூமியின் ராஜ்யங்களெல்லாம் அறியும்படிக்கு, எங்களை அவன் கைக்கு நீங்கலாக்கி இரட்சியும் என்று விண்ணப்பம் பண்ணினான்.

"எசேக்கியா ஸ்தானாபதிகளின் கையிலிருந்த நிருபத்தை வாங்கி வாசித்தான்" - இந்தக் கடைசி செய்தி (ஏசா 37:9-13) ஒரு நிருபத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அசீரியாவின் ராஜாவினிடத்திலிருந்து இது எசேக்கியாவிற்கு அனுப்பப்படுகிறது. எசேக்கியா அதை வாசித்து கர்த்தருக்கு முன்பாக அந்த நிருபத்தை விரித்து ஜெபிக்கிறான். (ஏசா 37: 15-35).

எசேக்கியாவின் விண்ணப்பம்

1. எசேக்கியா இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தரிடத்தில் ஜெபிக்கிறான். இவ்வாறு ஜெபிப்பது அக்காலத்து வழக்கம். (ஏசா 37:16). புதிய ஏற்பாட்டுக் காலத்தில் நாம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பிதாவினிடத்தில் ஜெபிக்க வேண்டும். (மத் 16:17-18; யோவான் 14:12-15; யோவான் 15:16; யோவான் 16:23-26).

ஏசாயா - தொகுப்புரை

37 அதிகாரம்

2. கர்த்தர் கேருபீன்களின் மத்தியில் வாசம்பண்ணுகிறவர் என்று அங்கிகரிக்கிறான். (ஏசா 37:16). கர்த்தர் மோசேயோடும், இஸ்ரவேல் புத்திரரோடும் 940 வருஷங்களுக்கு முன்பாகப் பண்ணிய உடன்படிக்கையின் பிரகாரம் இந்த ஜெபம் அமைந்திருக்கிறது. (யாத் 25:22).

3. கர்த்தர் ஒருவரே பூமியின் ராஜ்யங்களுக்கெல்லாம் தேவனானவர் என்று அங்கிகரிக்கிறான். (ஏசா 37:16).

4. கர்த்தர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினார் என்று அங்கிகரிக்கிறான். (ஏசா 37:16).

5. "கர்த்தாவே, உமது செவியைச் சாய்த்துக்கேளும்; கர்த்தாவே, நீர் உமது கண்களைத் திறந்துபாரும்" என்று கர்த்தருக்கு முன்பாக சனகெரிப்பின் நிருபத்தை விரித்து வைத்து ஜெபிக்கிறான். (ஏசா 37:17).

6. அசீரியாவின் ராஜா பல தேசங்களை அழித்துவிட்டதாகவும், இப்போது யூதாவிற்கு விரோதமாக வந்திருப்பதாகவும் எசேக்கியா உண்மை நிலைமையை எடுத்துக்கூறி ஜெபிக்கிறான். (ஏசா 37:18-19).

7. தன்னுடைய ஜெபத்தின் முடிவுரையாக "எங்கள் தேவனாகிய கர்த்தாவே, நீர் ஒருவரே கர்த்தர் என்று பூமியின் ராஜ்யங்களெல்லாம் அறியும்படிக்கு, எங்களை அவன் கைக்கு நீங்கலாக்கி இரட்சியும்" என்று கூறி விண்ணப்பம் பண்ணுகிறான். (ஏசா 37:20).

"கர்த்தருடைய ஆலயம்" - இது சாலொமோனுடைய தேவாலயமாகும்.

"கேருபீன்களின் மத்தியில் வாசம்பண்ணுகிற இஸ்ரவேலின் தேவனே" - பொன்னால் செய்யப்பட்ட இரண்டு கேருபீன்கள் உடன்படிக்கை பெட்டியைத் தங்கள் செட்டைகளால் மூடிக் கொண்டிருக்கும். கர்த்தர் இதன் நடுவில் வாசம்பண்ணுகிறார். இஸ்ரவேல் ஜனத்தாரோடு அவர் இங்கிருந்து அவர்களுடைய ஜெபத்திற்குப் பதில்கொடுப்பார். (யாத் 25:22).

"ஜீவனுள்ள தேவனை நிந்திக்கும்படிக்குச் சொல்லியனுப்பின வார்த்தைகள்" - சனகெரிப்பிற்கு இஸ்ரவேலின் தேவனைப் பற்றிச் சரியாகத் தெரியவில்லை. புறஜாதியாரின் விக்கிரகங்களைப் போல கர்த்தரும் ஒரு விக்கிரகம் என்று அவன் நினைத்துவிட்டான். தாம் ஜீவனுள்ளவர் என்பதையும், சர்வ வல்லமையுள்ளவர் என்பதையும் கர்த்தர் சனகெரிப்பிற்கும், எல்லா ஜனங்களுக்கும் வெளிப்படுத்திக் காண்பிப்பதற்குப் பலத்த கிரியைகளைச் செய்கிறார். (யோசு 2:11).

"அவர்களுடைய தேவர்களை நெருப்பிலே போட்டுவிட்டது மெய்தான்" - சனகெரிப்பின் நிருபத்தில் இதுவரையிலும் அவன் எழுதியுள்ளதெல்லாம் மெய்தான். (ஏசா 37:18-19) புறஜாதி தெய்வங்களை அசீரியாவின் ராஜா நெருப்பிலே சுட்டெரித்து விட்டான். அவன் கர்த்தரை அதுபோல சுட்டெரிக்க முடியாது. கர்த்தர் ஜீவனுள்ளவர் இதை சனகெரிப் அனுபவித்து உணர்ந்து கொள்ள வேண்டும்.

"நீர் ஒருவரே கர்த்தர் என்று பூமியின் ராஜ்யங்களெல்லாம் அறியும்படிக்கு" - நம்முடைய ஜெபம், ஊழியம் ஆகியவற்றின் இலக்கு இதுவாகத்தான் இருக்க வேண்டும். கர்த்தர் சர்வத்தையும் தமது மகிமைக்காகவே சிருஷ்டித்தார். தம்முடைய நன்மைக்காகவே திட்டமிட்டார். அவருடைய கிருபையும், இரக்கமும் எல்லாச் சிருஷ்டிகளுக்கும் கிடைக்கும். தம்முடைய சுபாவத்தை வெளிப்படுத்திக் காண்பிப்பதற்காகக் கர்த்தர் பல சமயங்களில் பலகிரியைகளைச் செய்திருக்கிறார்.

37 அதிகாரம்

(8) தேவனுடைய பதில் - (2இராஜா 19:20)

(அ) சனகெரீப்பிற்கு கடிந்துரை

ஏசா 37:21 அப்பொழுது ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா, எசேக்கியாவுக்குச்சொல்லியனுப்பினது: இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், அசீரியா ராஜாவாகிய சனகெரிபினிமித்தம் நீ என்னை நோக்கி விண்ணப்பம்பண்ணினாயே.

ஏசா 37:22 அவனைக்குறித்துக் கர்த்தர் சொல்லுகிற வசனமாவது: சீயோன் குமாரத்தியாகிய கன்னியாஸ்திரீ உன்னை இகழ்ந்து, உன்னைப் பரிகாசம் பண்ணுகிறாள்; எருசலேம் குமாரத்தி உன் பின்னாலே தலையைத் துலுக்குகிறாள்.

ஏசா 37:23 யாரை நிந்தித்துத் தூஷித்தாய்? யாருக்கு விரோதமாய் உன் சத்தத்தை உயர்த்தினாய்? நீ இஸ்ரவேலின் பரிசுத்தருக்கு விரோதமாய் அல்லவோ உன் கண்களை மேட்டிமையாய் ஏறெடுத்தாய்.

ஏசா 37:24 உன் ஊழியக்காரரைக் கொண்டு நீ ஆண்டவரை நிந்தித்து: என் இரதங்களின் திரளினாலே நான் மலைகளின் கொடுமுடிகளுக்கும் லீபனோனின் சிகரங்களுக்கும் வந்து ஏறினேன்; அதின் உயரமான கேதுரு மரங்களையும், உச்சிதமான தேவதாரு விருட்சங்களையும் நான் வெட்டி, உயர்ந்த அதின் கடைசி எல்லைமட்டும், அதின் செழுமையான வனமட்டும் வருவேன் என்றும்,

ஏசா 37:25 நான் கிணறு வெட்டித் தண்ணீர் குடித்தேன்; என் உள்ளங்காலினால் அரணிப்பான இடங்களின் அகழிகளையெல்லாம் வறளவும் பண்ணினேன் என்றும் சொன்னாய்.

ஏசா 37:26 நான் வெகுகாலத்துக்குமுன் அதை நியமித்து, பூர்வநாட்கள்முதல் அதைத் திட்டம்பண்ணினேன் என்பதை நீ கேட்டதில்லையோ? இப்பொழுது நீ அரணான பட்டணங்களைப் பாழான மண்மேடுகளாக்கும்படி நானே அதைச் சம்பவிக்கப்பண்ணினேன்.

ஏசா 37:27 அதினாலே அவைகளின் குடிகள் கையிளைத்தவர்களாகி, கலங்கி வெட்கப்பட்டு, வெளியின் பூண்டுக்கும், பச்சிலைக்கும், வீடுகளின்மேல் முளைக்கும் புல்லுக்கும், ஓங்கி வளருமுன் தீய்ந்துபோம் பயிருக்கும் சமானமானார்கள்.

ஏசா 37:28 உன் இருப்பையும், உன் போக்கையும், உன் வரவையும், நீ எனக்கு விரோதமாய்க் கொந்தளிக்கிறதையும் அறிவேன்.

தீர்க்கதரிசன எண் - 39

"அப்பொழுது ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா, எசேக்கியாவுக்குச் சொல்லியனுப்பினது......" (ஏசா 37:21-35) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (ஏசா 37:36-38).

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. நான் என் துறட்டை உன் மூக்கிலும், என் கடிவாளத்தை உன் வாயிலும் போட்டு, நீ வந்த வழியே உன்னைத் திரும்பப் பண்ணுவேன். (ஏசா 37:29)

2. இஸ்ரவேலராகிய நீங்கள் இந்த வருஷத்திலே தப்பிப் பயிராகிறதையும், இரண்டாம் வருஷத்திலே தானாய் விளைகிறதையும் சாப்பிடுவீர்கள். மூன்றாம் வருஷத்திலோ விதைத்து அறுத்து, திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனிகளைப் புசிப்பீர்கள். (ஏசா 37:30)

3. யூதா வம்சத்தாரில் தப்பி மீந்திருக்கிறவர்கள் மறுபடியும் கீழே வேர் பற்றி மேலே கனிகொடுப்பார்கள். (ஏசா 37:31)

37 அதிகாரம்

4. மீதியாயிருக்கிறவர்கள் எருசலேமிலும், தப்பினவர்கள் சீயோன் மலையிலுமிருந்து புறப்படுவார்கள் (ஏசா 37:32)

5. அசீரியாவின் ராஜா இந்த நகரத்துக்குள் பிரவேசிப்பதில்லை; இதின்மேல் அம்பு எய்வதுமில்லை; இதற்கு முன்பாகக் கேடகத்தோடே வருவதுமில்லை; இதற்கு எதிராகக் கொத்தளம் போடுவதுமில்லை. (ஏசா 37:33)

6. அசீரியாவின் ராஜா இந்த நகரத்துக்குள் பிரவேசியாமல், தான் வந்தவழியே திரும்பிப்போவான். (ஏசா 37:34)

7. என்னிமித்தமும் என் தாசனாகிய தாவீதினிமித்தமும், நான் இந்த நகரத்தை இரட்சிக்கும்படிக்கு இதற்கு ஆதரவாயிருப்பேன், (ஏசா 37:35)

"அசீரியா ராஜாவாகிய சனகெரிபினிமித்தம் நீ என்னை நோக்கி விண்ணப்பம்பண்ணினாயே" - அசீரியாவைக் குறித்து எசேக்கியா கர்த்தரிடம் விண்ணப்பம் பண்ணினான். கர்த்தர் இதை ஏசாயாவிற்கு வெளிப்படுத்துகிறார். தான் ஏற்கெனவே சொன்ன தீர்க்கதரிசனத்தை (ஏசா 37:6-7) மறுபடியும் உறுதி பண்ணுவதற்காகவும், அசீரியாவின் ராஜா எருசலேமிற்கு விரோதமாக இனிமேல் திரும்பி வரவேமாட்டான் என்னும் செய்தியை அறிவிப்பதற்காகவும் ஏசாயா எசேக்கியாவிற்கு ஸ்தானாபதிகளை அனுப்புகிறார். (ஏசா 37:29-35).

கர்த்தர் சனகெரிப்பைக் குறித்து சொல்லுகிற வசனம்

1. சீயோன் குமாரத்தியாகிய கன்னியாஸ்திரீ உன்னை இகழ்ந்து, உன்னைப் பரிகாசம் பண்ணுகிறாள்; எருசலேம் குமாரத்தி உன் பின்னாலே தலையைத் துலுக்குகிறாள். (ஏசா 37:22).

2. நீ இஸ்ரவேலின் பரிசுத்தருக்கு விரோதமாய் அல்லவோ உன் கண்களை மேட்டிமையாய் ஏறெடுத்தாய். (ஏசா 37:23).

3. உன் ஊழியக்காரரைக்கொண்டு நீ ஆண்டவரை நிந்தித்தாய். (ஏசா 37:24-25).

4. சில தேசங்களை அழிக்க வேண்டுமென்று நான் வெகுகாலத்துக்குமுன் அதை நியமித்து, பூர்வநாட்கள்முதல் அதைத் திட்டம்பண்ணினேன் (ஏசா 37:26).

5. அதினாலே அவைகளின் குடிகள் கையிளைத்தவர்களாகி, கலங்கி வெட்கப்பட்டு போனார்கள். (ஏசா 37:27).

6. உன் இருப்பையும், உன் போக்கையும், உன் வரவையும், நீ எனக்கு விரோதமாய்க் கொந்தளிக்கிறதையும் அறிவேன். (ஏசா 37:28).

7. நீ எனக்கு விரோதமாய்க் கொந்தளித்து, வீரியம்பேசினது என் செவிகளில் ஏறினபடியினாலே,........ நீ வந்த வழியே உன்னைத் திரும்பப்பண்ணுவேன். (ஏசா 37:29).

8. அவன் இந்த நகரத்துக்குள் பிரவேசிப்பதில்லை. (ஏசா 37:33).

9. அவன் இந்த நகரத்துக்குள் பிரவேசியாமல், தான் வந்தவழியே திரும்பிப்போவான். (ஏசா 37:34).

10. என்னிமித்தமும் என் தாசனாகிய தாவீதினிமித்தமும், நான் இந்த நகரத்தை இரட்சிக்கும்படிக்கு இதற்கு ஆதரவாயிருப்பேன் (ஏசா 37:35).

"நான் வெகுகாலத்துக்குமுன் அதை நியமித்து, பூர்வநாட்கள்முதல் அதைத் திட்டம்பண்ணினேன்" - ஒருசில தேசங்களைச் சிட்சிப்பதற்காகக் கர்த்தர் அசீரியாவைத் தமது கோலாகப் பயன்படுத்த வேண்டுமென்று திட்டம் பண்ணியிருந்தார். இதனால் அசீரியர் பல தேசங்கள்மீது யுத்தம் பண்ணி ஜெயித்தார்கள். (ஏசா 37:26-27).

37 அதிகாரம்

"நீ எனக்கு விரோதமாய்க் கொந்தளிக்கிறதையும் அறிவேன்" - தேசங்கள் மத்தியில் தம்முடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகக் கர்த்தர் அசீரியாவைப் பயன்படுத்தினார். ஆனால் அசீரியரோ எல்லாம் தங்களுடைய சொந்த பலத்தினாலும், பராக்கிரமத்தினாலும் நடைபெறுவதாக பெருமைப்படுகிறார்கள். அவர்களுடைய பெருமையின் நிமித்தம் கர்த்தர் அவர்களைத் தண்டிக்கச் சித்தம் கொண்டிருக்கிறார். (ஏசா 37:29-38). எருசலேமை அழிக்குமாறு கர்த்தர் அசீரியருக்குக் கட்டளை கொடுக்கவில்லை. யூதாவைச் சிட்சிக்குமாறே கர்த்தர் அவர்களுக்குக் கூறியிருந்தார். ஆனால் அவர்களோ தங்களுடைய மேட்டிமையினால் கர்த்தருக்கு விரோதமாக எழும்பி வருகிறார்கள்.

(ஆ) சனகெரிப்பிற்கு எதிரான தீர்க்கதரிசனம்

ஏசா 37:29 நீ எனக்கு விரோதமாய்க் கொந்தளித்து, வீரியம்பேசினது என் செவிகளில் ஏறினபடியினாலே, நான் என் துறட்டை உன் மூக்கிலும், என் கடிவாளத்தை உன் வாயிலும் போட்டு, நீ வந்த வழியே உன்னைத் திரும்பப் பண்ணுவேன்.

"நான் என் துறட்டை உன் மூக்கிலும் என் கடிவாளத்தை உன் வாயிலும் போட்டு" - அசீரியரும், பாபிலோனியரும் தங்களுடைய கைதிகளின் மூக்கில் துறட்டையும், வாயில் கடிவாளத்தையும் போடுவது வழக்கம். இந்தக் கடிவாளங்களை ஒரு கயிற்றில் கட்டி, கைதிகளை இழுத்துச் செல்வார்கள். அசீரியர் கீழ் உதடுகளிலும், பாபிலோனியர் மூக்கிலும் துறடுகளைப் போடுவது வழக்கம். மற்றவர்களுக்குக் கொடுத்த அதே தண்டனையைக் கர்த்தர் சனகெரிப்பிற்குக் கொடுப்பதாக வாக்குப்பண்ணுகிறார்.

ஆனால் கர்த்தர் சனகெரிப்பின் மூக்கில் துறட்டையோ, அவன் வாயில் கடிவாளத்தையோ போடவில்லை. சனகெரிப்பின்தோல்வியும், தாழ்த்தப்படுவதும் இங்கு அடையாளமாகக் கூறப்பட்டிருக்கிறது. (2இராஜா 19:28; 2இராஜா 25:7; எசே 19:4; எசே 38:4, ஏசா 37:29-38).

(இ) அடையாளம் - எசேக்கியாவிற்கு தீர்க்கதரிசனம்

ஏசா 37:30 உனக்கு அடையாளமாயிருப்பது என்னவென்றால்: இந்த வருஷத்திலே தப்பிப் பயிராகிறதையும், இரண்டாம் வருஷத்திலே தானாய் விளைகிறதையும் சாப்பிடுவீர்கள்; மூன்றாம் வருஷத்திலோ விதைத்து அறுத்து, திராட்சத் தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனிகளைப் புசிப்பீர்கள்.

ஏசா 37:31 யூதா வம்சத்தாரில் தப்பி மீந்திருக்கிறவர்கள் மறுபடியும் கீழே வேர் பற்றி மேலே கனிகொடுப்பார்கள்.

ஏசா 37:32 மீதியாயிருக்கிறவர்கள் எருசலேமிலும், தப்பினவர்கள் சீயோன் மலையிலுமிருந்து புறப்படுவார்கள்; சேனைகளுடைய கர்த்தரின் வைராக்கியம் இதைச் செய்யும்.

ஏசா 37:33 ஆகையால் கர்த்தர் அசீரியா ராஜாவைக் குறித்து: அவன் இந்த நகரத்துக்குள் பிரவேசிப்பதில்லை; இதின்மேல் அம்பு எய்வதுமில்லை; இதற்கு முன்பாகக் கேடகத்தோடே வருவதுமில்லை; இதற்கு எதிராகக் கொத்தளம் போடுவதுமில்லை.

ஏசா 37:34 அவன் இந்த நகரத்துக்குள் பிரவேசியாமல், தான் வந்தவழியே திரும்பிப்போவான்.

ஏசா 37:35 என்னிமித்தமும் என் தாசனாகிய தாவீதினிமித்தமும், நான் இந்த நகரத்தை இரட்சிக்கும்படிக்கு இதற்கு ஆதரவாயிருப்பேன் என்பதைக் கர்த்தர் உரைக்கிறார் என்று சொல்லியனுப்பினான்.

37 அதிகாரம்

"உனக்கு அடையாளமாயிருப்பது என்னவென்றால்" - இஸ்ரவேல் தேசம் அசீரியரின் பிடியிலிருந்து விடுதலையாகும் என்பதற்குக் கர்த்தர் அடையாளத்தையும் கொடுக்கிறார். வயல்வெளிகளுக்குச் சென்று தானியங்களைச் சேகரிக்கும் அளவிற்கு இஸ்ரவேல் புத்திரருக்கு விடுதலை உண்டாயிருக்கும். இரண்டு வருஷங்களுக்கு அவர்களை ஒடுக்குவார் யாரும் இருக்க மாட்டார்கள். மூன்றாம் வருஷத்திலோ அவர்களே விதைத்து, அறுத்து, திராட்சத் தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனிகளைப் புசிப்பார்கள். மீதியாயிருக்கிறவர்கள் யூதாவில் இயல்பான வாழ்க்கை வாழ்வார்கள். (2 இராஜா 19:30-31). முன்னறிவித்த பிரகாரம் இந்தச் சம்பவம் நிறைவேறுகிறது. 125 வருஷங்களுக்குப் பின்பே யூதாவின் ஜனங்கள் சிறையிருப்புக்குப் போகிறார்கள். (2 இராஜா 24-25, ஏசா 37:30-32, ஏசா 37:21-29,33-35).

எசேக்கியாவிற்கும், சனகெரிப்பிற்கும் கர்த்தருடைய முன்னறிவிப்புகள்

1. நான் என் துறட்டை உன் மூக்கிலும் என் கடிவாளத்தை உன் (சனகெரிப்) வாயிலும் போட்டு, நீ வந்தவழியே உன்னைத் திருப்பிக் கொண்டு போவேன் (2 இராஜா 19:28)
2. (இஸ்ரவேலே நீங்கள்) இந்த வருஷத்திலே தப்பிப் பயிராகிறதையும், இரண்டாம் வருஷத்திலே தானாய் விளைகிறதையும் சாப்பிடுவீர்கள் (2 இராஜா 19:29)
3. (இஸ்ரவேலே நீங்கள்) மூன்றாம் வருஷத்திலோ விதைத்து அறுத்து, திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனிகளைப்புசிப்பீர்கள்.
4. யூதா வம்சத்தாரில் தப்பி மீந்திருக்கிறவர்கள் மறுபடியும் கீழே வேர்பற்றி மேலே கனிகொடுப்பார்கள். (2 இராஜா 19:30)
5. மீதியாயிருக்கிறவர்கள் எருசலேமிலும், தப்பினவர்கள் சீயோன் மலையிலும் இருந்து புறப்படுவார்கள் (2 இராஜா 19:31)
6. அவன் (அசீரியாவின் ராஜா) இந்த நகரத்திற்குள் பிரவேசிப்பதில்லை (2 இராஜா 19:32)
7. (அசீரியாவின் ராஜா) இதின்மேல் அம்பு எய்வதுமில்லை. இதற்குமுன் கேடகத்தோடே வருவதுமில்லை.
8. இதற்கு எதிராகக் (அசீரியாவின் ராஜா) கொத்தளம் போடுவதுமில்லை.
9. அவன் (அசீரியா ராஜா) இந்த நகரத்திற்குள் பிரவேசியாமல், தான் வந்தவழியே திரும்பிப்போவான். (2 இராஜா 19:33)
10. என் நிமித்தமும் என் தாசனாகிய தாவீதின் நிமித்தமும் நான் இந்த நகரத்தை இரட்சிக்கும்படிக்கு, இதற்கு ஆதரவாயிருப்பேன். (2 இராஜா 19:34)

(9) அசீரியாவின் அழிவு

ஏசா 37:36 அப்பொழுது கர்த்தருடைய தூதன் புறப்பட்டு, அசீரியரின் பாளயத்தில் லட்சத்தெண்பத்தையாயிரம் பேரைச் சங்கரித்தான்; அதிகாலமே எழுந்திருக்கும் போது, இதோ, அவர்களெல்லாரும் செத்த பிரேதங்களாய்க் கிடந்தார்கள்.

ஏசா 37:37 அப்பொழுது அசீரியா ராஜாவாகிய சனகெரிப் பிரயாணப்பட்டுத் திரும்பிப்போய், நினிவேயில் இருந்து விட்டான்.

ஏசா 37:38 அவன் தன் தேவனாகிய நிஸ்ரோகின் கோவிலிலே பணிந்து கொள்ளுகிறபோது, அவன் குமாரராகிய அத்ரமலேக்கும் சரேத்சேரும் அவனைப் பட்டயத்தினால் வெட்டிப்போட்டு, அரராத் தேசத்துக்குத் தப்பி ஓடிப்போனார்கள்; அவன் குமாரனாகிய எசரத்தோன் அவன் பட்டத்திற்கு வந்து அரசாண்டான்.

ஏசாயா - தொகுப்புரை

37 அதிகாரம்

"அசீரியரின் பாளயத்தில் லட்சத்தெண்பத்தையாயிரம் பேரைச் சங்கரித்தான்" - கர்த்தருடைய தூதன் ஒரே நாள் இரவில் அசீரியரில் 185,000பேரைக் கொன்றுபோட்டார். (2இராஜா 19:35; 2நாளா 32:21). கர்த்தருடைய தூதன் ஒரு பட்டயத்தைப் பயன்படுத்தியிருக்க வேண்டும். ஏற்கெனவே கர்த்தருடைய தூதன் இஸ்ரவேலரில் 70,000 பேரைத் தன்னுடைய பட்டயத்தால் கொன்றுபோட்டிருக்கிறார். (2சாமு 24; 1நாளா 21:16,27). கர்த்தருடைய சேனையின் அதிபதியிடம் பட்டயம் ஒன்று உள்ளது. (யோசு 5:13-15).

"அதிகாலமே எழுந்திருக்கும்போது" - அசீரியருடைய சேனையில் கர்த்தருடைய தூதனால் கொல்லப்படாமல் ஒருசிலர் தப்பித்துக் கொண்டார்கள். அவர்கள் அதிகாலமே எழுந்திருக்கும்போது மற்றவர்கள் எல்லோரையும் செத்த பிரேதங்களாகப் பார்த்தார்கள். மரித்துப் போனவர்கள் எல்லோரும் அசீரியரின் படையிலுள்ள வீரர்கள். தன்னுடைய சேனையில் 185,000பேர் செத்துப்போனதினால் சனகெரிப் இதற்குமேல் யுத்தம் பண்ணாமல் தன்னுடைய தேசத்திற்குத் திரும்பிப் போய்விட்டான். (2நாளா 32:21).

"அவன் குமாரராகிய அத்ரமலேக்கும் சரேத்சேரும் அவனைப் பட்டயத்தினால் வெட்டிப்போட்டு" - சனகெரிப்பின் குமாரர்கள் அவனைக் கொன்றுபோட்டார்கள். இதற்கான காரணம் தெரியவில்லை. ஏசாயாவின் தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறது. (ஏசா 37:7). தங்கள் தகப்பனைக் கொன்றுபோட்டு அவர்கள் அரராத் தேசத்துக்குத் தப்பி ஓடிப்போனார்கள்.

38 அதிகாரம்

2. எசேக்கியாவின் வியாதியும் அவன் குணமாவதும் - (38:1-39:8; 2இராஜா 20)

(1) வியாதியும் தீர்ப்பும்

ஏசா 38:1 அந்நாட்களில் எசேக்கியா வியாதிப்பட்டு மரணத்துக்கு ஏதுவாயிருந்தான்; அப்பொழுது ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா என்னும் தீர்க்கதரிசி அவனிடத்தில் வந்து, அவனை நோக்கி: நீர் உமது வீட்டுக்காரியத்தை ஒழுங்குப்படுத்தும், நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப்போவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

"அந்நாட்களில் எசேக்கியா வியாதிப்பட்டு மரணத்துக்கு ஏதுவாயிருந்தான்" - எசேக்கியாவின் 14 ஆம் வருஷ ராஜ்யபாரத்தில் இந்தச் சம்பவம் நடைபெறுகிறது. சனகெரிப் எசேக்கியாவின் மீது யுத்தம் பண்ண ஆயத்தமாக இருக்கிறான். (2இராஜா 18:13) இந்த நிகழ்ச்சி 2இராஜா 19:35-37 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் மீட்புக்கு முன்பாக நடைபெறுகிறது. எசேக்கியாவிற்கு வியாதி வந்துவிடுகிறது. மரணப் படுக்கையில் இருக்கிறான். தீர்க்க தரிசியாகிய ஏசாயா எசேக்கியாவைப் பார்த்து, "நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப்போவீர்" என்று கர்த்தருடைய வார்த்தையைக் கூறுகிறான். ஆனால் எசேக்கியாவோ கர்த்தருடைய சமுகத்தில் அழுது விண்ணப்பம் பண்ணுகிறான். கர்த்தர் அவனுடைய ஜெபத்தைக் கேட்டு அவனுடைய வியாதியைக் குணமாக்கி, அவனுடைய ஜீவனுக்கு 15 வருஷத்தைக் கூட்டித் தருகிறார். இதனால் எசேக்கியா மொத்தம் 29 வருஷங்கள் ராஜ்யபாரம் பண்ணுகிறான். (2இராஜா 18:2,13; 2இராஜா 20:6). எசேக்கியாவின் வியாதி அவனுடைய மரணத்திற்கு ஏதுவாயிற்று. பெரிய கட்டியோ அல்லது வயிற்றுப்புண்ணோ அவனுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். (ஏசா 38:21). எசேக்கியாவின் பெருமையே அவனுடைய வியாதிக்குக் காரணம். (2நாளா 32:24-26).

தீர்க்கதரிசன எண் - 40

"ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா என்னும் தீர்க்கதரிசி அவனிடத்தில் வந்து" (ஏசா 38:1) இந்தத் தீர்க்கதரிசனம் 15 வருஷங்களுக்குப் பின்பு நிறைவேறிற்று. (ஏசா 38:1,4-8).

(2) ஜெபமும் மனந்திரும்புவதும்

ஏசா 38:2 அப்பொழுது எசேக்கியா தன் முகத்தைச் சுவர்ப்புறமாகத் திருப்பிக் கொண்டு, கர்த்தரை நோக்கி:

ஏசா 38:3 ஆ கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்று விண்ணப்பம்பண்ணி, எசேக்கியா மிகவும் அழுதான்.

"ஆ கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமமுமாய் நடந்து" - ஏசாயா தீர்க்கதரிசனம் கூறியவுடன் எசேக்கியா கர்த்தரிடத்தில் ஜெபம் பண்ண ஆரம்பித்து விடுகிறான். ஏசாயா பாதி முற்றத்தைக்கூட இன்னும் கடந்து செல்லவில்லை. (2இராஜா 20:4). அதற்குள் எசேக்கியாவின் ஜெபத்திற்குக் கர்த்தர் பதில் கொடுத்து விடுகிறார்.

எசேக்கியாவின் விண்ணப்பம்

1. நான் உமக்கு முன்பாக உண்மையாய் நடந்தேன்.
2. மன உத்தமமாய் நடந்தேன்.
3. உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன்.

அழுதல் (wept) - בָּכָה - baw-kaw' - **1058**

வினைச்சொல் - அழு, துக்கங் கொண்டாடு, புலம்பு **(wept a great weeping, or lamented grievously)** (ஏசா 38:3; 2இராஜா 20:3).

38 அதிகாரம்

(3) பதிலும் உறுதியும்

ஏசா 38:4 அப்பொழுது ஏசாயாவுக்கு உண்டான கர்த்தருடைய வார்த்தையாவது:

ஏசா 38:5 நீ போய் எசேக்கியாவை நோக்கி: உன் தகப்பனாகிய தாவீதின் தேவனாயிருக்கிற கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், உன் விண்ணப்பத்தைக் கேட்டேன்; உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ, உன் நாட்களோடே பதினைந்து வருஷம் கூட்டுவேன்.

ஏசா 38:6 நான் உன்னையும் இந்த நகரத்தையும் அசீரியா ராஜாவின் கைக்குத் தப்புவித்து, இந்த நகரத்துக்கு ஆதரவாயிருப்பேன்.

ஏசா 38:7 இதோ, ஆகாசுடைய சூரியகடியாரத்தில் பாகைக்குப் பாகை இறங்கின சாயையைப் பத்துப்பாகை பின்னிட்டுத் திருப்புவேன் என்றார்.

ஏசா 38:8 தாம் சொன்ன இந்த வார்த்தையின்படி கர்த்தர் செய்வார் என்பதற்கு இது கர்த்தரால் உனக்கு அடையாளமாயிருக்கும் என்று சொல் என்றார்; அப்படியே கடியாரத்தில் இறங்கியிருந்த சூரியசாயை பத்துப்பாகை திரும்பிற்று.

“அப்பொழுது” - எசேக்கியா தன்னைத் தாழ்த்தி தன்னுடைய பெருமைக்காக மனம் வருந்தி ஜெபித்தபோது. (2நாளா 32:24-26) கர்த்தர் ஏசாயாவை அனுப்பி அவனுடைய விண்ணப்பத்தைக் கேட்டதாக அறிவிக்கிறார். அவனுடைய ஜீவியம் 15 வருஷம் கூட்டப்படும் என்றும், அசீரிய ராஜாவிடமிருந்து அவனுடைய தேசம் விடுவிக்கப்படும் என்றும் கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார். (ஏசா 38:4-6).

தீர்க்கதரிசன எண் - 41

“உன் விண்ணப்பத்தைக் கேட்டேன்; உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ, உன் நாட்களோடே பதினைந்து வருஷம் கூட்டுவேன்......” (ஏசா 38:5-8) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (ஏசா 38:21-22; ஏசா 39:1)

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. உன் நாட்களோடே பதினைந்து வருஷம் கூட்டுவேன்.
2. நான் உன்னையும் இந்த நகரத்தையும் அசீரியா ராஜாவின் கைக்குத் தப்புவிப்பேன். (ஏசா 38:6).
3. இந்த நகரத்துக்கு ஆதரவாயிருப்பேன்.
4. இதற்கு அடையாளமாக ஆகாசுடைய சூரியகடியாரத்தில் பத்துப்பாகை பின்னிட்டுத் திரும்பும். (ஏசா 38:7-8).

“உன் தகப்பனாகிய தாவீதின் தேவனாயிருக்கிற கர்த்தர்” - கர்த்தர் தம்மைத் தாவீதின் தேவன் என்று அழைக்கிறார். தாவீது உன் தகப்பன் என்றும் கூறுகிறார். இதற்கான காரணங்கள்.

1. எசேக்கியாவும் தாவீதைப்போல கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான். (2இராஜா 18:3-7).
2. தாவீது தேவனுடைய விசேஷித்த ஊழியக்காரன். (2சாமு 7:5-29).
3. கர்த்தர் தாவீதோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். (2சாமு 7).

“உன் நாட்களோடே பதினைந்து வருஷம் கூட்டுவேன்” - வேதாகமத்தில் கர்த்தர் எசேக்கியாவிற்கு மட்டுமே அவன் எத்தனை வருஷம் ஜீவிப்பான் என்று வெளிப்படுத்தியிருக்கிறார். கர்த்தர் எசேக்கியாவிற்கு 15 வருஷங்களை ஏன் கூட்டிக் கொடுத்தார் என்று தெரியவில்லை. கர்த்தர் சொன்ன பிரகாரம் எசேக்கியா 15 வருஷம் கூடுதலாக ஜீவித்தான். எசேக்கியா 29 வருஷங்கள் ராஜ்யபாரம் பண்ணிய பின்பு மரித்தான். (ஏசா 18:2). எசேக்கியா ராஜ்யபாரம் பண்ணிய 14 ஆவது வருஷத்தில் அவனுடைய ஆயுசுகாலத்தைக் கர்த்தர் மேலும் 15 வருஷங்களுக்குக் கூட்டிக் கொடுக்கிறார். (ஏசா 36:1).

ஏசாயா - தொகுப்புரை

38 அதிகாரம்

எசேக்கியாவிற்குக் கொடுக்கப்பட்ட அடையாளம்

1. மூன்றாம் நாளிலே எசேக்கியா கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவான். (2இராஜா 20:5).

2. சூடியாரத்தில் இறங்கியிருந்த சூரியசாயை பத்துப்பாகை திரும்பும். (ஏசா 38:8; 2இராஜா 20:5-11).

(4) எழுத்தும் சாட்சியும்

ஏசா 38:9 யூதாவின் ராஜாவாகிய எசேக்கியா வியாதிப்பட்டு, தன் வியாதி நீங்கிச் சொஸ்தமானபோது எழுதி வைத்ததாவது:

ஏசா 38:10 நான் என் பூரண ஆயுசின் வருஷங்களுக்குச் சேராமல் பாதாளத்தின் வாசல்களுக்குட்படுவேன் என்று என் நாட்கள் அறுப்புண்கிறபோது சொன்னேன்.

ஏசா 38:11 கர்த்தரை, கர்த்தரை, நான் இனி உயிரோடிருக்கிறவர்களின் தேசத்திலே தரிசிப்பதில்லை; இனி பூலோகக் குடிகளோடே இருந்து மனுஷரை நான் காண்பதில்லை.

ஏசா 38:12 என் ஆயுசு மேய்ப்பனுடைய கூடாரத்தைப்போல என்னைவிட்டுப் பெயர்ந்துபோகிறது; நெய்கிறவன் பாவை அறுக்கிறதுபோல என் ஜீவனை அறுக்கக் கொடுக்கிறேன்; என்னைப் பாவிலிருந்து அறுத்துவிடுகிறார்; இன்று இரவுக்குள்ளே என்னை முடிவடையப்பண்ணுவீர்.

ஏசா 38:13 விடியற்காலமட்டும் நான் எண்ணமிட்டுக் கொண்டிருந்தேன்; அவர் சிங்கம்போல என் எலும்புகளையெல்லாம் நொறுக்குவார்; இன்று இரவுக்குள்ளே என்னை முடிவடையப்பண்ணுவீர் என்று சொல்லி,

ஏசா 38:14 நமுட்டைப்போலும், தகைவிலான் குருவியைப்போலும் கூவினேன், புறாவைப்போல் புலம்பினேன்; என் கண்கள் உயரப் பார்க்கிறதினால் பூத்துப்போயின; கர்த்தாவே, ஒடுங்கிப் போகிறேன்; என் காரியத்தை மேற்போட்டுக் கொள்ளும் என்றேன்.

ஏசா 38:15 நான் என்ன சொல்லுவேன்? அவர் எனக்கு வாக்கு அருளினார்; அந்தப் பிரகாரமே செய்தார்; என் ஆயுசின் வருஷங்களிலெல்லாம் என் ஆத்துமாவின் கசப்பை நினைத்து நடந்துகொள்வேன்.

ஏசா 38:16 ஆண்டவரே, இவைகளினால் மனுஷர் பிழைக்கிறார்கள்; இவைகளெல்லாம் என் உயிர்க்கு உயிராயிருக்கிறது; என்னைச் சொஸ்தப்படவும் பிழைக்கவும் பண்ணினீர்.

ஏசா 38:17 இதோ, சமாதானத்துக்குப் பதிலாக மகா கசப்பு வந்திருந்தது, தேவரீரோ என் ஆத்துமாவை நேசித்து அழிவின் குழிக்கு விலக்கினீர்; என் பாவங்களையெல்லாம் உமது முதுகுக்குப் பின்னாக எறிந்துவிட்டீர்.

ஏசா 38:18 பாதாளம் உம்மைத் துதியாது, மரணம் உம்மைப் போற்றாது; குழியில் இறங்குகிறவர்கள் உம்முடைய சத்தியத்தை தியானிப்பதில்லை.

ஏசா 38:19 நான் இன்று செய்கிறதுபோல, உயிரோடிருக்கிறவன், உயிரோடிருக்கிறவனே, உம்மைத் துதிப்பான், தகப்பன் பிள்ளைகளுக்கு உமது சத்தியத்தைத் தெரிவிப்பான்.

ஏசா 38:20 கர்த்தர் என்னை இரட்சிக்க வந்தார்; ஆகையால் எங்கள் ஜீவநாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்திலே என் கீதவாத்தியங்களை வாசித்துப் பாடுவோம் என்று எழுதிவைத்தான்.

"தன் வியாதி நீங்கிச் சொஸ்தமானபோது எழுதி வைத்ததாவது" - எசேக்கியா குணமடைந்த பின்பு, ஏசா 38:10-20 ஆகிய வசனங்களில் எழுதப்பட்டிருக்கும் சங்கீதத்தை எழுதினான்.

38 அதிகாரம்

மரணத்தை விளக்கும் வாக்கியங்கள்

1. பூமியில் பூரண ஆயுசின் வருஷங்களுக்குச் சேராமல் போவது.
2. பாதாளத்தின் வாசல்களுக்குட்படுவது.
3. ஆயுசு நாட்கள் அறுப்புண்ணப்படுவது.
4. இனி உயிரோடிருக்கிறவர்களின் தேசத்திலே தரிசிக்காமல் போவது. *(ஏசா 38:11)*
5. இனி பூலோகக் குடிகளோடே இருந்து மனுஷரை காணாமல் போவது.
6. ஆயுசு நாட்கள் மேய்ப்பனுடைய கூடாரத்தைப் போல பெயர்ந்துபோவது *(ஏசா 38:12)*
7. நெய்கிறவன் பாவை அறுக்கிறதுபோல ஜீவன் அறுக்கப்படுவது.

"நமுட்டு" **(crane)** - *(எரே 8:7)*.

"தகைவிலான் குருவி" **(swallow)** - *(சங் 84:3; நீதி 26:2; எரே 8:7)*.

"நான் என்ன சொல்லுவேன்?" - எசேக்கியா ராஜா மரணத்தின் வாசலில் இருந்தான். கர்த்தர் அவனை அற்புதமாகக் குணப்படுத்தினார். கர்த்தர் சொன்னபடியே அவனுடைய ஆயுசுநாட்களைக் கூட்டிக் கொடுக்கிறார்.

ஆகையினால் எசேக்கியா எதுவும் பேசமுடியாமல் ஆச்சரியத்தினால் மௌனமாக இருக்கிறான். தன்னுடைய ஆத்துமாவின் கசப்பை நினைத்து, தன்னுடைய ஜீவியத்தில் மீதமுள்ள நாட்களைப் பக்தியோடு ஜீவிக்கப் போவதாகக் கூறுகிறான்.

"உயிரோடிருக்கிறவனே, உம்மைத் துதிப்பான்" - மரித்துப்போனவனால் கர்த்தரைத் துதிக்க முடியாது. உயிரோடு இருக்கிறவர்களால் மட்டுமே கர்த்தரைத் துதிக்க முடியும். ஆகையினால் நாம் ஜீவனோடு இருக்கும் காலத்திற்குள் கர்த்தரை அறிந்துகொண்டு அவரைப் போற்றிப் புகழ வேண்டும்.

(5) எசேக்கியாவின் அத்திப்பழத்து அடை

ஏசா 38:21 அத்திப்பழத்து அடையைக் கொண்டுவந்து, பிளவையின்மேல் பற்றுப்போடுங்கள்; அப்பொழுது பிழைப்பார் என்று ஏசாயா சொல்லியிருந்தான்.

ஏசா 38:22 அப்பொழுது எசேக்கியா; நான் கர்த்தருடைய ஆலயத்துக்குப் போவதற்கு அடையாளம் என்னவென்று கேட்டிருந்தான்.

"அத்திப்பழத்து அடை" - அத்திப்பழ அடை எசேக்கியாவைக் குணப்படுத்தவில்லை. கர்த்தருடைய வார்த்தையே அவனைக் குணப்படுத்திற்று. *(ஏசா 38:5)*. அத்திப்பழத்து அடை அவனுடைய சரீரத்தைச் சுத்திகரிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

39 அதிகாரம்

(6) எசேக்கியாவின் மதியீனம்

ஏசா 39:1 அக்காலத்திலே பலாதானின் குமாரனாகிய மெரோதாக்பலாதான் என்னும் பாபிலோனின் ராஜா, எசேக்கியா வியாதிப்பட்டிருந்து ஆரோக்கியமானதைக் கேள்விப்பட்டு, அவனிடத்திற்கு நிருபங்களையும் வெகுமானத்தையும் அனுப்பினான்.

ஏசா 39:2 எசேக்கியா அவர்களைக் கண்டு சந்தோஷப்பட்டு, தன் பொக்கிஷ சாலையையும், வெள்ளியையும், பொன்னையும், கந்தவர்க்கங்களையும், நல்ல பரிமளதைலத்தையும், தன் ஆயுதசாலை அனைத்தையும், தன் பொக்கிஷ சாலைகளில் உள்ளதெல்லாவற்றையும் அவர்களுக்குக் காண்பித்தான்; எசேக்கியா தன் அரமனையிலும், தன் ராஜ்யத்தில் எங்கும் அவர்களுக்குக் காண்பியாத பொருள் ஒன்றும் இல்லை.

"அக்காலத்திலே" - கர்த்தர் எசேக்கியாவைக் குணப்படுத்தி இருக்கிறார். பெரோதாக்பலாதான் என்பவன் பாபிலோனின் ராஜாவாக இருக்கிறான். எசேக்கியா குணமானதற்காக இந்த ராஜா அவனுக்கு வெகுமதிகளை அனுப்புகிறான். இதனால் மகிழ்ச்சியடைந்த எசேக்கியா பெரோதாக்பலாதானின் சேவகர்களுக்குத் தன்னுடைய பொக்கிஷச் சாலையிலுள்ள எல்லாவற்றையும் ஒன்றையும் மறைக்காமல் காண்பித்தான். (2 இராஜா 20:12-13). அவர்கள் போனபின்பு, கர்த்தர் ஏசாயாவை எசேக்கியாவினிடத்திற்கு அனுப்பினார். "நீர் பெறப்போகிற உமது சந்தானமாகிய உமது குமாரர்களிலும் சிலர் பாபிலோன் ராஜாவின் அரமனையிலே அரமனை வேலைக்காரராயிருப்பார்கள்" என்னும் கர்த்தருடைய வார்த்தையை ஏசாயா எசேக்கியாவிற்கு அறிவிக்கிறான். (2 இராஜா 20:14-19, ஏசா 39:1-8).

"பெரோதாக்பலாதான்" (Berodach-baladan) - சில பதிப்புக்களில் இவனுடைய பெயர் "மெரோதாக்பலாதான்" (Merodach-baladan) என்று எழுதப்பட்டிருக்கிறது. இக்காலத்தில் பாபிலோனும், நினிவேயும் தங்களில் எது பெரிய பட்டணம் என்று காண்பிப்பதற்காகப் போட்டி போட்டுக் கொண்டிருந்தன. இந்தப் பிரச்சனையை நெபோபொலேசரும் (Nebopolassar) அவனுடைய குமாரன் நேபுகாத்நேச்சாரும் தீர்த்து வைக்கிறார்கள். நினிவேயின் அதிகாரத்தை அகற்றிவிட்டு, அசீரியப் பேரரசின்மீது ஆளுகை செய்யும் அதிகாரத்தை இவர்கள் பாபிலோனுக்குக் கொடுக்கிறார்கள்.

(7) பாபிலோனிய சிறைப்பிடிப்பு முன்னறிவிக்கப்படுகிறது - (எரே 25:1-17)

ஏசா 39:3 அப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசி எசேக்கியா ராஜாவினிடத்தில் வந்து: அந்த மனுஷர் என்னசொன்னார்கள், எங்கேயிருந்து உம்மிடத்தில் வந்தார்கள் என்று கேட்டான். அதற்கு எசேக்கியா: பாபிலோன் என்னும் தூரதேசத்திலிருந்து என்னிடத்திற்கு வந்தார்கள் என்றான்.

ஏசா 39:4 அப்பொழுது அவன்: உம்முடைய வீட்டில் என்னத்தைப் பார்த்தார்கள் என்று கேட்டான். அதற்கு எசேக்கியா: என் வீட்டிலுள்ள தெல்லாவற்றையும் பார்த்தார்கள்; என் பொக்கிஷங்களில் நான் அவர்களுக்குக் காண்பியாத பொருள் ஒன்றும் இல்லைஎன்றான்.

ஏசா 39:5 அப்பொழுது ஏசாயா எசேக்கியாவை நோக்கி: சேனைகளுடைய கர்த்தரின் வார்த்தையைக் கேளும்.

ஏசா 39:6 இதோ, நாட்கள் வரும்; அப்பொழுது உன் வீட்டில் உள்ளதிலும், உன் பிதாக்கள் இந்நாள்வரைக்கும் சேர்த்ததிலும் ஒன்றும் மீதியாய் வைக்கப்படாமல் எல்லாம் பாபிலோனுக்குக் கொண்டுபோகப்படும்.

ஏசாயா - தொகுப்புரை

39 அதிகாரம்

ஏசா 39:7 நீ பெறப்போகிற உன் சந்ததியாகிய உன் குமாரரிலும் சிலர் பாபிலோன் ராஜாவின் அரமனையிலே அரமனை வேலைக்காரராயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

ஏசா 39:8 அப்பொழுது எசேக்கியா ஏசாயாவை நோக்கி: நீர் சொன்ன கர்த்தருடைய வார்த்தை நல்லதுதான் என்று சொல்லி, என் நாட்களிலாவது சமாதானமும் உண்மையும் இருக்குமே என்றான்.

"என் பொக்கிஷங்களில் நான் அவர்களுக்குக் காண்பியாத பொருள் ஒன்றும் இல்லை" - அசீரியாவின் ராஜாவிற்கு எசேக்கியா ஏற்கெனவே வெகுமதிகளைக் கொடுத்திருக்கிறான். தன்னுடைய பொக்கிஷங்களையெல்லாம் கொடுத்து, தன் தேசத்தின்மீது யுத்தம் பண்ணாமல் இருக்குமாறு வேண்டிக் கொண்டான். (2இராஜா 18:13-16). இப்போது எசேக்கியா ராஜா காண்பித்த பொக்கிஷங்கள் எங்கிருந்து வந்தது என்று தெரியவில்லை. சனகெரிப்பிடமிருந்து கர்த்தர் எருசலேமை மீட்டுக் கொண்டார். இதனால் கர்த்தருக்கும், எசேக்கியாவிற்கும் எருசலேமைச் சுற்றிலுமிருந்த ஜனத்தார் ஏராளமான வெகுமதிகளைக் கொண்டு வந்தார்கள்.இதன் மூலமாக எசேக்கியாவின் பொக்கிஷச்சாலை நிரம்பியிருந்திருக்க வேண்டும். (2நாளா 32:22-30)

தீர்க்கதரிசன எண் - 42

"அப்பொழுது ஏசாயா எசேக்கியாவை நோக்கி:......" (ஏசா 39:5-7) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. (2இராஜா 25; 2நாளா 36; தானி 1).

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. இதோ, நாட்கள் வரும்; அப்பொழுது உன் வீட்டில் உள்ளதிலும், உன் பிதாக்கள் இந்நாள்வரைக்கும் சேர்த்ததிலும் ஒன்றும் மீதியாய் வைக்கப்படாமல் எல்லாம் பாபிலோனுக்குக் கொண்டுபோகப்படும். (ஏசா 39:5-6; 2இராஜா 25; 2நாளா 36; தானி 5:2-3)
2. நீ பெறப்போகிற உன் சந்ததியாகிய உன் குமாரரிலும் சிலர் பாபிலோன் ராஜாவின் அரமனையிலே அரமனை வேலைக் காரராயிருப்பார்கள் (ஏசா 39:7; தானி 1)

"நீ பெறப்போகிற உன் சந்ததியாகிய உன் குமாரரிலும் சிலர்" - இந்தத் தீர்க்கதரிசனம் கூறப்படும்போது எசேக்கியாவிற்கு இன்னும் குமாரர் பிறக்கவில்லை. தாவீதின் வம்சத்தைக் குறித்து கர்த்தருடைய வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்குத் தாவீதின் சந்ததியில் எசேக்கியாவின் மூலமாக இன்னும் யாரும் பிறக்கவில்லை. (2சாமு 7). மனாசே எசேக்கியாவின் குமாரன். எசேக்கியாவின் ஆயுசு காலம் 15 வருஷம் கூட்டிக் கொடுக்கப்பட்ட பின்பே இவன் பிறக்கிறான். (2சாமு 20:20-21:1) ஏசாயா மூலமாக எசேக்கியாவிற்குக் கூறப்பட்ட தீர்க்கதரிசனம் பிற்காலத்தில் நிறைவேறுகிறது. இந்தத் தீர்க்கதரிசனம் கூறப்பட்டு 125 வருஷங்களுக்குப்பின்பு பாபிலோன் ராஜாவின் அரமனையில் தானியேலும், மற்ற ராஜகுமாரரும் அரமனை வேலைக்காரராயிருக்கிறார்கள்.(தானி 1:3-21)

"நீர் சொன்ன கர்த்தருடைய வார்த்தை நல்லதுதான்" - (2இராஜா 20:19; 1சாமு 3:18; 1இராஜா 21:29)

பகுதி - II சிறையிருப்புகளுக்கு பின்பான தரிசனம்

(அதிகாரங்கள் 40-66)

40 அதிகாரம்

VIII. சிறையிருப்பிலிருந்து திரும்பி வருவதை நினைத்து ஆறுதல் - (40:1-48:22)

1. மேசியாவின் முதல் இரண்டு வருகைகள்

(1) ஆறுதல் - பாவமில்லை - (எரே 31:31-40; ரோம 11:26)

ஏசா 40:1 என் ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள்.

ஏசா 40:2 எருசலேமுடன் பட்சமாய்ப் பேசி, அதின் போர் முடிந்தது என்றும், அதின் அக்கிரமம் நிவிர்த்தியாயிற்று என்றும், அது தன் சகல பாவங்களினிமித்தமும் கர்த்தரின் கையில் இரட்டிப்பாய் அடைந்து தீர்ந்தது என்றும், அதற்குக் கூறுங்கள் என்று உங்கள் தேவன் சொல்லுகிறார்.

"என் ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள்" - ஏசா 1-39 ஆகிய அதிகாரங்களில் பல தீர்க்கதரிசனங்கள் கூறப்பட்டுள்ளன. யூதா தேசம் பாபிலோன் தேசத்தின் சிறையிருப்புக்குப் போகும் என்று இந்த அதிகாரங்களில் முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஏசா 40-66 ஆகிய அதிகாரங்களில் சிறையிருப்புக்குப் பின்பு நடைபெறப்போகும் காரியங்கள் முன்னறிவிக்கப்பட்டுள்ளன. ஏசா 1-39 ஆகிய அதிகாரங்களிலும் ஒருசில தீர்க்கதரிசனங்கள் சிறையிருப்புக்குப் பின்பு நடைபெறப்போகும் சம்பவங்களை முன்னறிவிக்கின்றன. ஏசா 40-66 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் எந்தத் தீர்க்கதரிசனமும் யூதா தேசத்தாருடைய காலத்திற்கு உரியவையல்ல. ஒருசில தீர்க்கதரிசனங்கள் பாபிலோனிலிருந்து யூதா தேசம் விடுதலையாவதைப் பற்றி முன்னறிவிக்கிறது. (ஏசா 44:26-45:4,13; ஏசா 46:1-2; ஏசா 48:14-15) இந்தத் தீர்க்கதரிசனங்களில் சில இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையைப் பற்றியவை. இவை நிறைவேறியுள்ளன. (ஏசா 40:3; ஏசா 42:1-3, 6-7; ஏசா 49:1-5; ஏசா 50:2-11; ஏசா 52:14; ஏசா 53:1-12; ஏசா 61:1-2) இந்தத் தீர்க்கதரிசனங்கள் தவிர ஏசா 40-66 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் எல்லா தீர்க்கதரிசனங்களும் இன்னும் நிறைவேறவில்லை. இவையெல்லாம் கடைசி காலத்தில், வருங்கால உபத்திரவக்காலத்தில், இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது, ஆயிரம் வருஷ அரசாட்சியிலும், புதிய பூமியிலும் நிறைவேறும்.

தீர்க்கதரிசன எண் - 43

"என் ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள்...." (ஏசா 40:1-11) ஏசா 40:3-5 ஆகிய வசனங்களில் நிறைவேறிற்று. ஏசா 40:1-2,6-11 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. கர்த்தருக்கு வழியை ஆயத்தப் படுத்துங்கள்......கர்த்தரின் வாக்கு அதை உரைத்தது என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிற சத்தம் உண்டாயிற்று - இந்தத் தீர்க்கதரிசனம் யோவான் ஸ்நானனின் ஊழியத்தில் நிறைவேறிற்று. (ஏசா 40:3-5; மத் 3:2-3; மாற்கு 1:3; லூக்கா 3:4-5; யோவான் 1:23).

2. கர்த்தரின் மகிமை வெளியரங்கமாகும் (ஏசா 40:5; யோவான் 1:14; யோவான் 2:11; யோவான் 11:4,40; யோவான் 17:22).

3. மாம்சமான யாவும் அதை ஏகமாய்க் காணும். (ஏசா 40:5; லூக்கா 1:69,77; லூக்கா 2:30; லூக்கா 3:6). இந்த முன்னறிவிப்புக்கள் ஏற்கெனவே நிறைவேறியிருந்தாலும் இவை வருங்காலத்திலும் நிறைவேறுவதற்கு வாய்ப்புள்ளது.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. என் ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள்..........அதின் அக்கிரமம் நிவிர்த்தியாயிற்று என்றும், அது தன் சகல பாவங்களினிமித்தமும் கர்த்தரின் கையில் இரட்டிப்பாய் அடைந்து தீர்ந்தது என்றும், அதற்குக் கூறுங்கள் (ஏசா 40:1-2)

40 அதிகாரம்

2. பள்ளமெல்லாம் உயர்த்தப்படும். (ஏசா 40:4; சக 14:4).

3. சகலமலையும் குன்றும் தாழ்த்தப்படும்.

4. கோணலானது செவ்வையாகும்.

5. கரடுமுரடானவை சமமாக்கப்படும்.

6. கர்த்தரின் மகிமை வெளியரங்கமாகும் (ஏசா 40:5; மத் 16:27; மத் 19:28; மத் 24:30; மத் 25:31).

7. மாம்சமான யாவும் அதை ஏகமாய்க் காணும் (ஏசா 40:5; மத் 24:29-31; மத் 25:31; 2தெச 1:7-10; வெளி 1:7).

8. தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும் (ஏசா 40:8).

9. சீயோனும், எருசலேமும் யூதா பட்டணங்களை நோக்கி: "இதோ, உங்கள் தேவன்" என்று கூறுவார்கள். (ஏசா 40:9).

10. கர்த்தராகிய ஆண்டவர் பராக்கிரமசாலியாக வருவார். (ஏசா 40:10)

11. அவர் தமது புயத்தினால் அரசாளுவார்.

12. இதோ, அவர் அளிக்கும் பலன் அவரோடேகூட வருகிறது.

13. அவர் கொடுக்கும் பிரதிபலன் அவருடைய முகத்துக்கு முன்பாகச் செல்லுகிறது.

14. மேய்ப்பனைப்போல தமது மந்தையை மேய்ப்பார் (ஏசா 40:11).

15. ஆட்டுக்குட்டிகளைத்தமது புயத்தினால் சேர்த்து, தமது மடியிலே சுமப்பார்.

16. கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார்.

தேற்றுங்கள் (comfort) - נָחַם - naw-kham' - 5162

வினைச்சொல் - மனஸ்தாபமாயிரு, மனஸ்தாபப்படு, ஆறுதல்அடை, மனம்மாறு, தேற்றப்படு, பொறு, பரிதாபங்கொள், பரிதபி,துக்கம், ஆறு, மனமடி, பிரியப்படு, தேற்று, ஆறுதல்செய், ஆறுதல் சொல்லு, தேற்றரவாயிரு, தேற்றரவுபண்ணு, ஆற்று, ஆறுதலாகஇரு, தேற்றரவு, பரிதாபப்படு (to have pity or compassion ; to be sorrowful in a good way; to console, avenge, or comfort)

ஏசா 40-66 ஆகிய அதிகாரங்களில் இஸ்ரவேலுக்கு ஆறுதல் கூறப்படுகிறது. மேசியாவின் காலத்தில் இஸ்ரவேல் ஒரு தேசமாக மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படும். இந்தத் தீர்க்கதரிசனம் ஏசா 1-39 ஆகிய அதிகாரங்களில் முன்னறிவிக்கப்படவில்லை. ஏசா 40-66 ஆகிய அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனங்களை வாசிக்கும் போது இஸ்ரவேலருடைய நிலைமை கீழே கூறப்பட்டுள்ளது போன்று உள்ளது. அதன் விவரம் வருமாறு:

1. இஸ்ரவேல் பாபிலோனிய சிறையிருப்பின் முடிவில் உள்ளது. (ஏசா 41:1-3,25; ஏசா 44:26-45:4,13)

2. எருசலேம் அழிந்துபோயிருக்கிறது. (ஏசா 44:26-28)

3. இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுடைய தேசத்திற்குத் திரும்ப அழைத்து வரப்படுகிறார்கள்.

ஏசாயாவில் "ஆற்றுதல், தேற்றுதல்" என்னும் வார்த்தைகளின் பயன்பாடு

1. என் ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள். (ஏசா 40:1).

2. எருசலேமிற்கு ஆறுதல் கூறுங்கள். (ஏசா 40:2).

3. கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு ஆறுதல் செய்தார். (ஏசா 49:13; ஏசா 52:9).

40 அதிகாரம்

4. கர்த்தர் சீயோனுக்கு ஆறுதல் செய்வார். (ஏசா 51:3).

5. கர்த்தர் சீயோனின் பாழான ஸ்தலங்களையெல்லாம் தேறுதல் அடையச் செய்வார்.

6. நான் நானே உங்களுக்கு ஆறுதல் செய்கிறவர். (ஏசா 51:12).

7. திரும்பவும் அவர்களுக்கும் அவர்களிலேதுக்கப்படுகிறவர்களுக்கும் ஆறுதல் அளிப்பேன். (ஏசா 57:18).

8. துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்வேன். (ஏசா 61:2).

9. ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன். (ஏசா 66:13).

10. நீங்கள் எருசலேமிலே தேற்றப்படுவீர்கள். (ஏசா 66:13; ஏசா 12:1).

எருசலேமிற்குக் கூற வேண்டிய காரியங்கள்

1. அதின் போர் முடிந்தது.

2. அதின் அக்கிரமம் நிவிர்த்தியாயிற்று.

3. அது தன் சகல பாவங்களினிமித்தமும் கர்த்தரின் கையில் இரட்டிப்பாய் அடைந்து தீர்ந்தது.

இந்தக் காரியங்கள் ஏற்கெனவே நிறைவேறியதுபோன்று இங்கு கூறப்பட்டிருந்தாலும், இவை இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது நிறைவேறும். (ஏசா 63:1-5; சக 12:10-14:21; மத் 23:37-39; ரோமர் 11:25-29). இவை தேசிய பிரச்சனைகளாகும். யூதாவும், எருசலேமும் தங்களுடைய பாவங்களுக்குநியாயத்தீர்ப்பைப் பெறுகிறது.

கர்த்தர் இறுதியில் தம்முடைய பிள்ளைகளை மன்னிப்பார். அவர்களை மறுபடியும் கூட்டிச் சேர்த்து ஒரு தேசமாக ஸ்தாபிப்பார். (ஏசா 40:1-2).

"இரட்டிப்பாய்" - பூரணமாய் என்று பொருள். (ஏசா 61:7; எரே 16:18).

(2) சத்தம் - முதல் இரண்டு வருகைகள்
- (மல் 3:1; மத் 3)

ஏசா 40:3 கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவாந்தர வெளியிலே நம்முடைய தேவனுக்குப் பாதையைச் செவ்வை பண்ணுங்கள் என்றும்,

ஏசா 40:4 பள்ளமெல்லாம் உயர்த்தப்பட்டு, சகலமலையும் குன்றும் தாழ்த்தப்பட்டு, கோணலானது செவ்வையாகி, கரடுமுரடானவை சமமாக்கப்படும் என்றும்,

ஏசா 40:5 கர்த்தரின் மகிமை வெளியரங்கமாகும், மாம்சமான யாவும் அதை ஏகமாய்க் காணும், கர்த்தரின் வாக்கு அதை உரைத்தது என்றும் வனாந்தரத்திலே கூப்பிடுகிற சத்தம் உண்டாயிற்று.

யோவான்ஸ்நானனைப் பற்றிய முன்னறிவிப்பு

ஏசா 40:5 ஆவது வசனத்தின் இறுதிப் பகுதியைத் தவிர, ஏசா 40:3-5 ஆகிய வசனங்கள் லூக்கா 3:4-6 ஆகிய வசனங்களில் மேற்கோளாகக் கூறப் பட்டிருக்கிறது. இது யோவான்ஸ்நானனிலும், இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையிலும் நிறைவேறிற்று. (ஏசா 40:3-5; மத் 3:3; மாற்கு 1:3; லூக்கா 3:4-6; யோவான் 1:23).

இந்தத் தீர்க்கதரிசனம் வருங்காலத்தில் பூரணமாக நிறைவேறும். ஏனோக்கும், எலியாவும் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை முன்னறிவிப்பார்கள். மேசியாவை ஏற்றுக் கொள்வதற்கு அவர்கள் ஜனங்களுடைய இருதயங்களை ஆயத்தம் பண்ணுவார்கள். (மல்4:5-6; வெளி 11:3-11; எசே 20:35-36).

ஏசாயா - தொகுப்புரை

40 அதிகாரம்

"கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்" என்னும் வாக்கியம் அடையாள மொழிநடையில் உள்ளது. மேசியாவின் வருகையை இந்த வாக்கியம் அறிவிக்கிறது. அக்காலத்தில் ஒரு ராஜாவோ அல்லது ஒரு பிரபுவோ ஓரிடத்திற்குப் போகும்போது அவருடைய ஊழியக்காரர்கள் அவருக்கு முன்பாகச் சென்று, வழியை ஆயத்தம் பண்ணுவார்கள். ராஜாவின் வருகையைக் குறித்து ஜனங்களுக்கு அறிவிப்பார்கள். ராஜா போகும் பாதையில் முள், கற்கள், மேடுபள்ளங்கள் ஆகியவை இல்லாதவாறு பார்த்துக் கொள்வார்கள். ஏசா 40:3-6 ஆகிய வசனங்களில் கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள் என்று கூறும்போது பள்ளமெல்லாம் உயர்த்தப்படுவதும், சகலமலையும் குன்றும் தாழ்த்தப்படுவதும், கோணலானது செவ்வையாக்கப்படுவதும், கரடுமுரடானவை சமமாக்கப்படுவதும் அடங்கும்.

இயேசுகிறிஸ்துவின் முதலாம் வருகையின் போது அவருடைய வருகைக்காக இந்தக் காரியங்களெல்லாம் செய்யப்படவில்லை. இந்த நிகழ்ச்சிகள் ஆயிரம் வருஷ அரசாட்சியின் போது நிறைவேறும். எகிப்திலிருந்து பாலஸ்தீனத்தின் வழியாக அசீரியாவிற்கு ஒரு பெரும்பாதை போடப்படும். இதைப் பற்றி ஏசா 11:16; ஏசா 19:23-25; ஏசா 35:8-10 ஆகிய வசனங்களில் முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது.

யோவான் ஸ்நானன் கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்தினான். இயேசு கிறிஸ்துவே இந்தக் கர்த்தர்.

"கர்த்தரின் மகிமை வெளியரங்கமாகும்" - கர்த்தரின் மகிமை இயேசு கிறிஸ்துவின் மூலமாக வெளிப்படுத்தப்படும். மாம்சமான யாவரும் அவருடைய வல்லமையைக் கண்டு தேவனை மகிமைப்படுத்துவார்கள். (லூக்கா 2:9; யோவான் 1:14; யோவான் 2:11; யோவான் 11:4,40; யோவான் 12:41).

(3) சத்தம் - தேவனுடைய வார்த்தை, மனுஷனுடைய பலவீனம்

ஏசா 40:6 பின்னும் கூப்பிட்டுச் சொல் என்று ஒரு சத்தம் உண்டாயிற்று; என்னத்தைக் கூப்பிட்டுச் சொல்வேன் என்றேன். அதற்கு: மாம்சமெல்லாம் புல்லைப்போலவும், அதின் மேன்மையெல்லாம் வெளியின் பூவைப் போலவும் இருக்கிறது.

ஏசா 40:7 கர்த்தரின் ஆவி அதின்மேல் ஊதும்போது, புல் உலர்ந்து, பூ உதிரும்; ஜனமே புல்.

ஏசா 40:8 புல் உலர்ந்து பூ உதிரும்; நமது தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும் என்பதையே சொல் என்று உரைத்தது.

"பின்னும் கூப்பிட்டுச் சொல் என்று ஒரு சத்தம் உண்டாயிற்று" - ஏசா 40:3 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருப்பது ஏசாயாவின் சத்தமல்ல. தரிசனத்தில் ஏசாயா கேட்ட சத்தத்தை இங்கு அவர் எழுதியிருக்கிறார். இது கர்த்தருடைய சத்தமாக இருக்க வேண்டும். (ஏசா 6:8-9).

"மாம்சமெல்லாம் புல்லைப்போலவும், அதின் மேன்மையெல்லாம் வெளியின் பூவைப் போலவும் இருக்கிறது" - இந்த வாக்கியம் 1பேதுரு 1:24-25 ஆகிய வசனங்களில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. ஏசாயா தான் கண்ட தரிசனத்தில் இந்தச் சத்தத்தைக் கேட்டார். இந்தச் செய்தியை அவர் ஜனங்களைக் கூப்பிட்டுச் சொல்ல வேண்டும். ஜனங்கள் எல்லோரும் புல்லைப்போல இருக்கிறார்கள். விரைவில் உலர்ந்துபோவார்கள். தேவனுடைய வசனம் என்றும் நிலைத்து நிற்கும். (ஏசா 40:6-8; சங் 119:89-91; மத் 5:18; மத் 24:35; மாற்கு 13:31; யோவான் 10:35; யோவான் 12:34; 1பேதுரு 1:25).

(4) இரண்டாவது வருகை

ஏசா 40:9 சீயோன் என்னும் சுவிசேஷகியே, நீ உயர்ந்த பர்வதத்தில் ஏறு; எருசலேம் என்னும் சுவிசேஷகியே, நீ உரத்த சத்தமிட்டுக் கூப்பிடு, பயப்படாமல், சத்தமிட்டு, யூதா பட்டணங்களை நோக்கி: இதோ, உங்கள் தேவன் என்று கூறு.

40 அதிகாரம்

ஏசா 40:10 இதோ, கர்த்தராகிய ஆண்டவர் பராக்கிரமசாலியாக வருவார்; அவர் தமது புயத்தினால் அரசாளுவார்; இதோ, அவர் அளிக்கும் பலன் அவரோடேகூட வருகிறது; அவர் கொடுக்கும் பிரதிபலன் அவருடைய முகத்துக்கு முன்பாகச் செல்லுகிறது.

ஏசா 40:11 மேய்ப்பனைப்போல தமது மந்தையை மேய்ப்பார்; ஆட்டுக் குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்த்து, தமது மடியிலே சுமந்து, கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார்.

"சீயோன் என்னும் சுவிசேஷகியே" - இயேசு கிறிஸ்து மறுபடியும் இந்தப் பூமிக்கு வரும்போது உலகம் முழுவதிலும் நடைபெறும் சுவிசேஷ வேலைகள் சீயோனிலிருந்தும், எருசலேமிலிருந்தும் புறப்பட்டுப்போகும். (ஏசா 2:2-4; ஏசா 52:7; சக 8:23). சமுத்திரத்தில் தண்ணீர் நிறைந்து இருப்பதுபோல பூமியில் கர்த்தரைப் பற்றிய அறிவு நிறைந்திருக்கும். (ஏசா 11:9). இயேசு கிறிஸ்து யூதர்கள் மத்தியில் பிரத்தியட்சமாக ஆளுகை செய்வார். இது யூதா தேசத்தாருக்கு ஒரு நற்செய்தியாகும். (ஏசா 9:6-7; ஏசா 52:7; ஏசா 63:1-5; சக 14; லூக்கா 1:32-33; யூதா 1:14-15; வெளி 1:7; வெளி 11:15; வெளி 20:1-10).

சீயோனுக்கும், எருசலேமிற்கும் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. நீ உயர்ந்த பர்வதத்தில் ஏறு.
2. நீ உரத்த சத்தமிட்டுக் கூப்பிடு.
3. பயப்படாதே
4. யூதா பட்டணங்களை நோக்கி: இதோ, உங்கள் தேவன் என்று கூறு. (ஏசா 40:9, ஏசா 52:7).

"யூதா" - இஸ்ரவேலின் கோத்திரங்களில் யூதா ஆளுகை செய்யும் கோத்திரமாக இருக்கும். மேசியா யூதா கோத்திரத்திலிருந்து வந்தார். அவர் பாலஸ்தீன தேசத்தில் இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாருக்கும் ராஜாவாக இருப்பார். (ஏசா 9:6-7; ஏசா 52:7; ஆதி 49:10; லூக்கா 1:32-33; வெளி 11:15). இஸ்ரவேலின் ராஜ்யத்திற்கு யூதா தேசம் என்று பெயரிடப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் வாக்குத்தத்த தேசத்திற்குத் திருப்பி அழைத்து வரப்பட்டு தேசமாக ஸ்தாபிக்கப்படும்போது அந்த தேசம் யூதா தேசம் என்று அழைக்கப்படும். (ஏசா 11:10-12; எரே 30-31; எசே 36-37).

"இதோ, உங்கள் தேவன்" - கர்த்தர் பிரத்தியட்சமாக ஜனங்களுக்குத் தரிசனம் தருவார். ஆகையினால் இதோ உங்கள் தேவன் என்று சுவிசேஷகர்களால் யூதா பட்டணங்களுக்குக் கூறமுடியும். (ஏசா 9:6-7; ஏசா 52:7; சக 14:9; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 20:1-10)

கர்த்தர் செய்யப்போகும் காரியங்கள்

1. பராக்கிரமசாலியாக வருவார்.
2. தமது புயத்தினால் அரசாளுவார்.
3. அவர் அளிக்கும் பலன் அவரோடேகூட வருகிறது.
4. அவர் கொடுக்கும் பிரதிபலன் அவருடைய முகத்துக்கு முன்பாகச் செல்லுகிறது.
5. மேய்ப்பனைப்போல தமது மந்தையை மேய்ப்பார். (ஏசா 40:11).
6. ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்ப்பார்.
7. அவற்றை தமது மடியிலே சுமப்பார்.
8. கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார்.

40 அதிகாரம்

"அவர் கொடுக்கும் பிரதிபலன் அவருடைய முகத்துக்கு முன்பாகச் செல்லுகிறது" - (ஏசா 11: 4-12; ஏசா 35:1-10; ஏசா 65:17-25; சக 14).

2. தேவனுடைய மகத்துவம் - (40:12-41:29)

(1) சர்வ வல்லமையின் ஐந்து அம்சம் - (மத் 19:26; ரோம 1:20; வெளி 19:6)

ஏசா 40:12 தண்ணீர்களைத் தமது கைப்பிடியால் அளந்து, வானங்களை ஜாணளவாய்ப் பிரமாணித்து, பூமியின் மண்ணை மரக்காலில் அடக்கி, பர்வதங்களைத் துலாக்கோலாலும், மலைகளைத் தராசாலும் நிறுத்தவர் யார்?

"தண்ணீர்களைத் தமது கைப்பிடியால் அளந்து" - கர்த்தரையும் ஜீவனில்லாத விக்கிரகங்களையும் ஒப்பிட முடியாது. கர்த்தர் பல மகத்துவமான காரியங்களைச் செய்கிறவர். தண்ணீர்களைத் தமது கைப்பிடியால் அளப்பது கர்த்தருடைய கிரியைகளில் ஒன்று. (ஏசா 40:12-19; யோபு 28:25; யோபு 30:4).

தேவனைப் பற்றிய சத்தியங்கள்

1. தண்ணீர்களைத் தமது கைப்பிடியால் அளந்தார். (ஏசா 40:12).
2. வானங்களை ஜாணளவாய்ப் பிரமாணித்தார்.
3. பூமியின் மண்ணை மரக்காலில் அடக்கினார்.
4. பர்வதங்களைத் துலாக்கோலாலும், மலைகளைத் தராசாலும் நிறுத்தார்.
5. அவருக்கு ஆலோசனைக்காரன் தேவையில்லை. (ஏசா 40:13).
6. அவருக்குப் போதித்தவன் ஒருவருமில்லை.
7. அவருக்கு அறிவை உணர்த்த யாரும் தேவையில்லை. (ஏசா 40:14).
8. அவரை நியாயவழியிலே உபதேசிக்க யாரும் தேவையில்லை.
9. அவருக்கு ஞானத்தைக் கற்றுக்கொடுக்க யாரும் தேவையில்லை.
10. இதோ, ஜாதிகள் ஏற்றச்சாலில் தொங்கும் துளிபோலவும், தராசிலே படியும் தூசிபோலவும் எண்ணப்படுகிறார்கள்; இதோ, தீவுகளை ஒரு அணுவைப்போல் தூக்குகிறார். (ஏசா 40:15).
11. லீபனோன் எரிக்கும் விறகுக்குப் போதாது; அதிலுள்ள மிருகஜீவன்கள் தகனபலிக்கும் போதாது. (ஏசா 40:16).
12. சகல ஜாதிகளும் அவருக்கு முன்பாக ஒன்றுமில்லை (ஏசா 40:17).
13. தேவனுக்கு ஒப்பானவர் ஒருவருமில்லை. (ஏசா 40:18).
14. ஜீவனல்லாத விக்கிரகங்களை ஜீவனுள்ள தேவனுக்கு ஒப்பிட முடியாது. (ஏசா 40:18-20,25).
15. ஆதிமுதல் உங்களுக்குத் தெரிவித்தார். (ஏசா 40:21).
16. அவர் பூமி உண்டையின்மேல் வீற்றிருக்கிறவர் (ஏசா 40:22).
17. அவர் வானங்களை மெல்லிய திரையாகப் பரப்புகிறார்.
18. அவைகளைக் குடியிருக்கிறதற்கான கூடாரமாக விரிக்கிறார்.
19. அவர் பிரபுக்களை மாயையாக்குகிறார். (ஏசா 40:23).
20. பூமியின் நியாயாதிபதிகளை அவாந்தரமாக்குகிறார்.

40 அதிகாரம்

21. மனுஷன் பூமியில் நிரந்தரமானவனல்ல என்பதை உணர்த்துகிறார். (ஏசா 40:24).

22. மனுஷனுக்கு மரணப்பிரமாணத்தை நியமிக்கிறார்.

23. கர்த்தர் சகலத்தையும் சிருஷ்டித்தார். (ஏசா 40:26).

24. அவைகளின் சேனையை இலக்கத் திட்டமாகப் புறப்படப்பண்ணினார்.

25. அவைகளையெல்லாம் பேர்பேராக அழைக்கிறார்.

26. அவர் மகா வல்லமை உடையவர்.

27. அவைகளில் ஒன்றும் குறையாமலிருக்கிறது.

28. கர்த்தருக்கு ஒன்றும் மறைவாயிருப்பதில்லை. (ஏசா 40:27).

29. பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்தவர் கர்த்தராகிய அநாதி தேவன் (ஏசா 40:28).

30. அவர் சோர்ந்துபோவதில்லை.

31. அவர் இளைப்படைவதில்லை.

32. அவருடைய புத்தி ஆராய்ந்துமுடியாதது.

33. சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுக்கிறார். (ஏசா 40:29).

34. சத்துவ மில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார்.

35. கர்த்தருக்குக் காத்திருக்கிறவர் களுக்குப் புதுபெலன் கொடுக்கிறார். (ஏசா 40:30-31).

36. ஜனங்கள் தங்கள் பெலனைப் புதிதாக்கிக் கொள்ள கர்த்தருக்கு முன்பாக மௌனமாக இருக்க வேண்டுமென்று கூறுகிறார். (ஏசா 41:1)

37. ஜனங்கள் தங்கள் பெலனைப் புதிதாக்கிக்கொண்டு, சமீபித்து வந்து, பின்பு பேசக்கடவர்கள்; நாம் ஒருமிக்க நியாயாசனத்துக்கு முன்பாகச் சேருவோம் என்று கூறுகிறார். (ஏசா 41:1)

38. கிழக்கிலிருந்து நீதிமானை எழுப்பி, தமது பாதபடியிலே வரவழைத்தார். (ஏசா 41:2-3,25).

39. தமது திட்டத்தைச் செய்து நிறைவேற்றி, ஆதிமுதற்கொண்டு தலைமுறைகளை வரவழைத்தார். (ஏசா 41:4).

40. கர்த்தர் முந்தினவரும், பிந்தினவருமாக இருக்கிறார்.

41. கர்த்தர் இஸ்ரவேலைத் தமது தாசனாகத் தெரிந்துகொண்டார். (ஏசா 41:8-9).

42. பூமியின் கடையாந்தரங்களிலிருந்து ஆபிரகாமை எடுத்தார். (ஏசா 41:9).

43. அவர் இஸ்ரவேலுக்கு வாக்குத் தத்தங்களைக் கொடுத்திருக்கிறார். (ஏசா 41:10-29).

44. உங்கள் வழக்கைக் கொண்டு வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (ஏசா 41:21).

45. கர்த்தர் யாக்கோபின் ராஜா.

46. விக்கிரகங்கள் மாயை, விருதா, ஒன்றுமில்லாதவை என்று கூறுகிறார். (ஏசா 41:22-29).

(2) சர்வ ஞானத்தின் ஏழு அம்சம் - (ரோம 8:27; 11:33)

ஏசா 40:13 கர்த்தருடைய ஆவியை அளவிட்டு, அவருக்கு ஆலோசனைக் காரனாயிருந்து, அவருக்குப் போதித்தவன் யார்?

ஏசா 40:14 தமக்கு அறிவை உணர்த்தவும், தம்மை நியாயவழியிலே உபதேசிக்கவும், தமக்கு ஞானத்தைக் கற்றுக் கொடுக்கவும், தமக்கு விவேகத்தின் வழியை அறிவிக்கவும், அவர் யாரோடே ஆலோசனை பண்ணினார்?

40 அதிகாரம்

"கர்த்தருடைய ஆவியை......அவருக்குப் போதித்தவன் யார்?" - இந்த வாக்கியம் ரோமர் 11:34 ஆவது வசனத்தில் மேற்கோளாகக் கூறப்பட்டு, 1கொரி 2:16 ஆகிய வசனத்தில் விளக்கப்பட்டுள்ளது.

(3) ஐந்து அம்ச ஒப்புமை

ஏசா 40:15 இதோ, ஜாதிகள் ஏற்றச்சாலில் தொங்கும் துளிபோலவும், தராசிலே படியும் தூசிபோலவும் எண்ணப்படுகிறார்கள்; இதோ, தீவுகளை ஒரு அணுவைப்போல் தூக்குகிறார்.

ஏசா 40:16 லீபனோன் எரிக்கும் விறகுக்குப் போதாது; அதிலுள்ள மிருகஜீவன்கள் தகனபலிக்கும் போதாது.

ஏசா 40:17 சகல ஜாதிகளும் அவருக்கு முன்பாக ஒன்றுமில்லை; அவர்கள் சூனியத்தில் சூனியமாகவும், மாயையாகவும் எண்ணப்படுகிறார்கள்.

"தீவுகளை ஒரு அணுவைப்போல் தூக்குகிறார்" - ஏசா 40:15-17 ஆகிய வசனங்கள் கர்த்தருடைய மகத்துவத்தை வெளிப்படுத்துகிறது. (ஏசா 40:12)

வெறுமை (vanity) - תֹּהוּ - to'-hoo - 8414

ஆ.பெ.சொ. - வெறுமை, வீணானது, அந்தரம், வீணர், விருதா, மாயை, வெட்டவெளி, அவாந்தர வெளி, இல்லாமை emptiness. "without form" (ஆதி 1:2; எரே 4:23)

(4) அறைகூவல் - ஒப்புமை

ஏசா 40:18 இப்படியிருக்க, தேவனை யாருக்கு ஒப்பிடுவீர்கள்? எந்தச் சாயலை அவருக்கு ஒப்பிடுவீர்கள்?

ஏசா 40:19 கன்னான் ஒரு சுரூபத்தை வார்க்கிறான், தட்டான் பொன்தகட்டால் அதை மூடி, அதற்கு வெள்ளிச் சங்கிலிகளைப் பொருந்த வைக்கிறான்.

ஏசா 40:20 அதற்குக் கொடுக்க வகையில்லாதவன் உளுத்துப்போகாத மரத்தைத் தெரிந்துகொண்டு, அசையாத ஒரு சுரூபத்தைச்செய்யும்படி நிபுணனான ஒரு தச்சனைத் தேடுகிறான்.

"தேவனை யாருக்கு ஒப்பிடுவீர்கள்?" - மனுஷனால் செய்யப்படும் ஜீவனில்லாத விக்கிரகத்தோடு கர்த்தரை ஒப்பிட முடியாது. (ஏசா 40:19-20). கர்த்தரின் மகத்துவத்தைப் பற்றி ஏசா 40:12-17 ஆகிய வசனங்களில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. மனுஷனால் செய்யப்படும் விக்கிரகங்களிடம் கர்த்தருடைய சுபாவங்களில் ஒன்றும் இராது.

சுரூபங்கள்

1. வார்க்கப்பட்ட சுரூபம்.
2. தச்சனால் செய்யப்படும் மரத்தினாலான சுரூபம். (ஏசா 40:20)

(5) அறைகூவல் - அறிவு

ஏசா 40:21 நீங்கள் அறியீர்களா? நீங்கள் கேள்விப்படவில்லையோ? ஆதி முதல் உங்களுக்குத் தெரிவிக்கப்படவில்லையோ? பூமி அஸ்திபாரப்பட்டது முதல் உணராதிருக்கிறீர்களா?

(6) ஏழு அம்ச ஒப்புமை

ஏசா 40:22 அவர் பூமி உண்டையின்மேல் வீற்றிருக்கிறவர்; அதின் குடிகள்வெட்டுக் கிளிகளைப் போல இருக்கிறார்கள்; அவர் வானங்களை மெல்லிய திரையாகப் பரப்பி,அவைகளைக்குடியிருக்கிறதற்கான கூடாரமாக விரிக்கிறார்.

ஏசா 40:23 அவர் பிரபுக்களை மாயையாக்கி, பூமியின் நியாயாதிபதிகளை அவாந்தரமாக்குகிறார்.

40 அதிகாரம்

ஏசா 40:24 அவர்கள் திரும்ப நாட்டப்படுவதுமில்லை, விதைக்கப் படுவதுமில்லை; அவர்களுடைய அடிமரம் திரும்ப பூமியிலே வேர்விடுவதுமில்லை; அவர்கள் மேல் ஊதவே பட்டுப்போவார்கள்; பெருங்காற்று அவர்களை ஒரு துரும்பைப்போல் அடித்துக் கொண்டுபோம்.

"அவர் பூமி உருண்டையின்மேல் வீற்றிருக்கிறவர்" - கர்த்தர் வானத்திலிருந்து மனுஷனைப் பார்க்கிறார். மனுஷர் பூமியில் வெட்டுக்கிளிகளைப் போல அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். மனுஷருடைய எண்ணங்களைக் கர்த்தர் வானத்திலிருந்து ஆராய்ந்து அறிகிறார்.

உருண்டை (circle) - חוּג - khoog - 2329

ஆ.பெ.சொ. - சக்கரம், உருண்டை, வட்டம் **"circle"** (ஏசா 40:22); **"circuit"** (யோபு 22:14); **"compass"** (சங் 8:27).

"மெல்லிய திரை" - சூரியனின் ஒளிக்கதிர்கள் பலவிதமான அம்சங்களைக் கொண்டவை. ஒருசில கதிர்கள் மனுஷருக்கு நன்மையானவை. மற்றவை தீமையானவை. தீமையான ஒளிக்கதிர்கள் மனுஷர்மீது நேரடியாகப் படக்கூடாது. ஆகையினால் கர்த்தர் வானத்தில் மெல்லிய திரையைப் பரப்பி விரித்திருக்கிறார். இதை விஞ்ஞானிகள் ஒசோன் படலம் **(ozone layer)** என்று கூறுகிறார்கள். இந்த ஒசோன் படலம் சூரியனின் ஒளிக்கதிர்கள் பூமிக்கு நேரடியாக வருவதைத் தடைபண்ணுகிறது.

மெல்லியத் திரை (curtain) - דֹּק - dik-law' - 1852

ஆண்பால் பெயர்ச்சொல் - மெல்லியத் திரை **(something crumbling; fine, as a thin cloth; curtain)** (ஏசா 40:22).

"அவர் பிரபுக்களை மாயையாக்கி" - தேவனுடைய திட்டத்திற்கு யாரும் எதிர்த்து நிற்க முடியாது. மனுஷருடைய அதிகாரங்களும், பணபலமும் தேவனுடைய திட்டத்தை எதிர்ப்பதற்குத் திராணியற்றவை. தம்முடைய சித்தத்திற்கு எதிராக இருக்கும் தடைகளைக் கர்த்தர் ஒன்றுமில்லாமல் செய்துவிடுவார். (யோபு 12:21; சங் 2:10; சங் 107:40).

"அவர்கள் திரும்ப நாட்டப்படுவதுமில்லை" - கர்த்தருடைய திட்டத்திற்கு எதிர்த்து நிற்கிறவர்கள் முறிக்கப்படுவார்கள். அவர்களுடைய சந்ததி ஒன்றுமில்லாமல் போகும். அவர்களுடைய பெயர்களும், குடும்பமும் பூமியில் நிலைக்காது. (நெகே 1:14).

(7) ஐந்து அம்ச சமநிலை

ஏசா 40:25 இப்படியிருக்க, என்னை யாருக்கு ஒப்பிடுவீர்கள்? எனக்கு யாரை நிகராக்குவீர்கள்? என்று பரிசுத்தர் சொல்லுகிறார்.

ஏசா 40:26 உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள்; அவைகளைச் சிருஷ்டித்தவர் யார்? அவர் அவைகளின் சேனையை இலக்கத் திட்டமாகப் புறப்படப் பண்ணி, அவைகளையெல்லாம் பேர் பேராக அழைக்கிறவராமே; அவருடைய மகா பெலத்தினாலும், அவருடைய மகா வல்லமையினாலும், அவைகளில் ஒன்றும் குறையாமலிருக்கிறது.

"உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்" - தம்மையும், தம்முடைய மகத்துவத்தையும் காண வேண்டுமானால் பரலோகத்தை நோக்கிப் பார்க்க வேண்டுமென்று கர்த்தர் கட்டளையிடுகிறார். தேவனுடைய வல்லமையும், அவருடைய மேன்மையும் வானங்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. (ஏசா 42:5; ஏசா 44:24; ஏசா 45:18; ஏசா 48:13; ஏசா 51:6-16; சங் 19:1-6; சங் 97:6; சங் 104:2; சக 12:1).

(8) அலைகூவல் - அறிவு

ஏசா 40:27 யாக்கோபே, இஸ்ரவேலே: என்வழி கர்த்தருக்கு மறைவாயிற்று என்றும், என் நியாயம் என் தேவனிடத்தில் எட்டாமல் போகிறது என்றும் நீ சொல்வானேன்?

40 அதிகாரம்

ஏசா 40:28 பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதி தேவன் சோர்ந்து போவதுமில்லை, இளைப்படைவதுமில்லை; இதை நீ அறியாயோ? இதை நீ கேட்டதில்லையோ? அவருடைய புத்தி ஆராய்ந்துமுடியாதது.

"இஸ்ரவேலே" - யாக்கோபு என்னும் பெயரும், இஸ்ரவேல் என்னும் பெயரும் யூதாவிற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (ஏசா 40:9,27; ஏசா 1:2; ஏசா 2:1).

தேவனுடைய நாமங்கள்

1. சிருஷ்டிகர் (ஏசா 43:15; பிர 12:1; ரோமர் 1:25; 1பேதுரு 4:19)
2. கர்த்தர் - יְהוָה, יְהוִה - yeh-ho-vaw' - 3068
3. அநாதி தேவன் - אֱלֹהִים - el-o-heem' - 430

மனுஷனால் செய்ய முடியாதவை

1. கர்த்தரைச் சோர்ந்துபோகச் செய்ய முடியாது.
2. கர்த்தரை இளைப்படையச் செய்ய முடியாது. (ஏசா 43:23-24; மல் 2:17)
3. கர்த்தருடைய ஞானத்தை ஆராய்ந்து அறிய முடியாது. (யோபு 11:7-9)

(9) ஆறு அம்ச சர்வ வல்லமை

ஏசா 40:29 சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார்.

ஏசா 40:30 இளைஞர் இளைப்படைந்து சோர்ந்துபோவார்கள், வாலிபரும் இடறிவிழுவார்கள்.

ஏசா 40:31 கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்.

"சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து......" - கர்த்தர் தேவைப் படுகிறவர்களுக்கு உதவி புரியும் சுபாவமுடையவர். (யாக் 1:17).

கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களுக்கு வரும் ஆசீர்வாதங்கள்

1. புதுப்பெலன் அடைவார்கள்.(ஏசா 40:31).
2. கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்.
3. அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள்.
4. நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்.

காத்திருப்பது (wait) - קָוָה - kaw-vaw' - 6960

வினைச்சொல் - காத்திரு, சேர், நம்பிக்கைவை, எதிர்பார்த்திரு **(to bind together by twisting; to expect; gather together; look patiently for) wait for or upon** (ஏசா 40:31; ஏசா 49:23; ஏசா 51:5; ஏசா 59:9; ஏசா 60:9; சங் 25:3,5,21; சங் 27:14; சங் 37:9,34; சங் 40:1; சங் 52:9; சங் 69:6; சங் 130:5; நீதி 20:22; எரே 14:22; புல 3:25; ஓசி 12:6).

புதுபெலனடைதல் (renew) - חָלַף - khaw-laf' - 2498

வினைச்சொல் - உருவக்கடாவு, கடந்துபோ, முளை, ஒழி, மாறு, விடி, மாற்று, புதிதாக்கு, செலுத்து, தழை, மாறுபாடாக்கு **(to slide by or hasten away; pass on; spring up; change; alter; go forward; grow up; renew; sprout) strike through** (ஏசா 40:31; ஏசா 41:1).

41 அதிகாரம்

(10) தீவுகளுக்கு ஐந்து அம்ச அழைப்பு

ஏசா 41:1 தீவுகளே, எனக்கு முன்பாக மவுனமாயிருங்கள்; ஜனங்கள் தங்கள் பெலனைப் புதிதாக்கிக்கொண்டு, சமீபித்து வந்து, பின்பு பேசக்கடவர்கள்; நாம் ஒருமிக்க நியாயாசனத்துக்கு முன்பாகச் சேருவோம்.

தீர்க்கதரிசன எண் - 44

"தீவுகளே, எனக்கு முன்பாக மவுனமாயிருங்கள்..............." (ஏசா 41:1-3) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. கிழக்கிலிருந்து நீதிமானை எழுப்பினார். (ஏசா 41:2).
2. தமது பாதபடியிலே அவனை வரவழைத்தார்.
3. ஜாதிகளை அவனுக்கு ஒப்புக்கொடுத்தார்.
4. அவனை ராஜாக்களுக்கு ஆண்டவனாக்கினார்.
5. அவர்களை அவன் பட்டயத்துக்கு ஒப்புக்கொடுத்தார்.
6. அவன் அவர்களைத் துரத்தவும், தன் கால்கள் நடவாதிருந்த பாதையிலே சமாதானத்தோடே நடக்கவும் பண்ணினார். (ஏசா 41:3).

இந்தத் தீர்க்கதரிசனத்தை வாசிக்கும் போது இது ஏற்கெனவே நிறைவேறியுள்ளது போன்ற மொழிநடையில் கூறப்பட்டிருக்கிறது. ஏசாயாவிற்கு இந்தத் தரிசனம் தெளிவாகத் தெரிகிறது. இது கோரேசுவின் காலத்தில் நிறைவேறிய சம்பவமாகும்.

(11) கோரேசின்மீது ஒன்பது அம்ச தீர்க்கதரிசனம் - (வசனங்கள் 25; 44:28-45:6,13; 46:11; எஸ்றா 1)

ஏசா 41:2 கிழக்கிலிருந்து நீதிமானை எழுப்பி, தமது பாதபடியிலே வரவழைத்தவர் யார்? ஜாதிகளை அவனுக்கு ஒப்புக்கொடுத்து, அவனை ராஜாக்களுக்கு ஆண்டவனாக்கி, அவர்களை அவன் பட்டயத்துக்குத் தூசியும், அவன் வில்லுக்குச் சிதறடிக்கப் பட்ட தாளடியுமாக்கி,

ஏசா 41:3 அவன் அவர்களைத் துரத்தவும், தன் கால்கள் நடவாதிருந்த பாதையிலே சமாதானத்தோடே நடக்கவும் பண்ணினவர் யார்?

"கிழக்கிலிருந்து நீதிமான்" - இந்த வார்த்தை கோரேசைக் குறிக்கும். இவன் நீதிமான் என்று அழைக்கப்படுகிறான். ஏனெனில் இவன் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறான். இஸ்ரவேலின் சத்துருக்களைத் தண்டித்து அவர்களைத் தங்களுடைய சொந்த தேசத்திற்குத் திரும்பி வருவதற்கு அனுமதி கொடுக்கிறான். கோரேசு கிழக்கிலிருந்து வந்தவன். (ஏசா 44:28-45:6, ஏசா 41:2,25; ஏசா 45:31; ஏசா 46:11; 2நாளா 36:22-23; எஸ்றா 1:1-8; எஸ்றா 3:7; எஸ்றா 4:3,5; எஸ்றா 5:13-17; எஸ்றா 6:3,14; தானி 1:21; தானி 6:28; தானி 10:1)

(12) தேவனுடைய சர்வ ஞானம்

ஏசா 41:4 அதைச் செய்து நிறைவேற்றி, ஆதிமுதற்கொண்டு தலைமுறைகளை வரவழைக்கிறவர் யார்? முந்தினவராயிருக்கிற கர்த்தராகிய நான்தானே; பிந்தினவர்களோடும் இருப்பவராகிய நான்தானே.

"ஆதிமுதற்கொண்டு" - கர்த்தரே ஆதியும், அந்தமுமாக இருக்கிறவர். முதலும், முடிவுமாக இருக்கிறவர். நித்தியமாக இருக்கிறவர். (ஏசா 44:6; ஏசா 48:12; வெளி 1:11,17; வெளி 2:8; வெளி 22:13).

41 அதிகாரம்

"நான்தானே" - இந்த வார்த்தை கர்த்தரைக் குறிக்கிறது. நான் என்று ஒருமையில் கூறப்பட்டிருந்தாலும் இந்த வார்த்தை திரித்துவ தேவனைக் குறிக்கிறது. வேதாகமத்தில் இதுபோன்ற மொழிப்பயன்பாடுகள் காணப்படுகின்றன. சபை ஒரு மனுஷனாகவும் (எபே 2:15; எபே 4:13), சுட்டுப்பெயராகவும் (2தெச 2:7, உபா 32:10; எரே 31:10; மீகா 3:8, சங் 25:22) கூறப் பட்டிருக்கிறது. இஸ்ரவேல் தேசத்தைக் குறிப்பதற்கு அவள் என்னும் வார்த்தையும் வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.(வெளி 12:1-5,14). ஒருமைப்பண்புடைய வார்த்தை இங்கு பயன்படுத்தப்பட்ட போதிலும் அது திரளான ஜனங்களைக் குறிக்கும்.

(13) கோரேசிற்கு எதிராக தீவுகள் ஒன்று சேருதல்

ஏசா 41:5 தீவுகள் அதைக் கண்டு பயப்படும், பூமியின் கடையாந்தரங்கள் நடுங்கும்; அவர்கள் சேர்ந்துவந்து,

ஏசா 41:6 ஒருவருக்கு ஒருவர் ஒத்தாசை செய்து திடன்கொள் என்று சகோதரனுக்குச் சகோதரன் சொல்லுகிறான்.

ஏசா 41:7 சித்திரவேலைக்காரன் தட்டானையும், சுத்தியாலே மெல்லிய தகடு தட்டுகிறவன் அடைகல்லின்மேல் அடிக்கிறவனையும் உற்சாகப்படுத்தி, இசைக்கிறதற்கான பக்குவமென்று சொல்லி, அது அசையாதபடிக்கு அவன் ஆணிகளால் அதை இறுக்குகிறான்.

"தீவுகள் அதைக் கண்டு பயப்படும்" - ஏசா 41:5-7 ஆகிய வசனங்களில் தீவுகளைப் பற்றியும், பூமியின் கடையாந்தரத் தேசங்களாகிய எகிப்து, பாலஸ்தீனம், சின்ன ஆசியா ஆகியவற்றைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் கோரேசிற்கு எதிராக ஒன்று சேரும். கோரேசிற்குப் பயப்பட வேண்டாமென்று இவர்கள் ஒருவருக்கொருவர் ஆலோசனை கூறிக்கொள்வார்கள். (ஏசா 41:6) தங்களுடைய கோவில்களில் புதிய தெய்வங்களை உண்டு பண்ணி அவை கோரேசிடமிருந்து தங்களைப் பாதுகாக்கும் என்று நம்புவார்கள். (ஏசா 41:7). தங்களுக்கு வரும் தண்டனையிலிருந்து தப்பிப்பதற்குப் பாவிகள் இதுபோல பக்தி வேஷம் போடுவது வழக்கம்.

பூமியின் கடையாந்தரங்கள்

வேதாகமத்தில் பூமியின் கடையாந்தரங்கள் "The ends of the earth" என்னும் வாக்கியமும் (ஏசா 41:5,9; ஏசா 26:15; ஏசா 40:28; ஏசா 43:6; ஏசா 45:22; ஏசா 52:10; உபா 33:17; 1சாமு 2:10; யோபு 28:24; யோபு 37:3; யோபு 38:13; சங் 48:10; சங் 59:13; சங் 65:5; சங் 67:7; சங் 72:8; சங் 98:3; சங் 135:7; நீதி 17:24; நீதி 30:4; எரே 10:13; எரே 16:19; எரே 25:31; எரே 51:16;மீகா 5:4; சக 9:10; அப் 13:47) "பூமியின் எல்லைகள்" "The ends of the world" (சங் 22:27; ரோமர் 10:18; 1கொரி 10:11) என்னும் வாக்கியமும் பயன்படுத்தப் பட்டுள்ளது. இதுபோலவே காலத்தின் முடிவு "the end of the age" என்னும் வாக்கியமும் வேதாகமத்தில் உள்ளது. (ஏசா 62:11; சங் 19:4, மத் 13:39-40,49; மத் 24:3; மத் 28:20)

இந்த வசனத்தில் "பூமியின் கடையாந்தரங்கள்" என்பது பூமியிலுள்ள எல்லா தேசங்களையும் குறிக்காது. கோரேசு ராஜா எந்தெந்த தேசங்களின்மீது யுத்தம் பண்ணப் போனாரோ அந்தத் தேசங்களை மட்டுமே இந்த வாக்கியம் குறிக்கும். (எபி 9:26).

(14) இஸ்ரவேலுக்கு ஏழு அம்ச அழைப்பு

ஏசா 41:8 என் தாசனாகிய இஸ்ரவேலே, நான் தெரிந்துகொண்ட யாக்கோபே, என் சிநேகிதனான ஆபிரகாமின் சந்ததியே,

41 அதிகாரம்

ஏசா 41:9 நான் பூமியின் கடையாந்தரங்களிலிருந்து, உன்னை எடுத்து, அதின் எல்லைகளிலிருந்து அழைத்துவந்து: நீ என் தாசன், நான் உன்னைத் தெரிந்து கொண்டேன்; நான் உன்னை வெறுத்து விடவில்லை என்று சொன்னேன்.

"என் தாசனாகிய இஸ்ரவேலே" - விக்கிரகங்களை நம்பும் புறஜாதியாரைக் குறித்து கர்த்தருடைய வார்த்தை ஏசாயா மூலமாக முதலாவதாக அறிவிக்கப்படுகிறது. (ஏசா 41:5-7) அதன் பின்பு கர்த்தர் இஸ்ரவேலுக்குத் தம்முடைய செய்தியைக் கூறுகிறார். அவர்களுடைய பின்னணி, அழைப்பு, கர்த்தருடைய தெரிந்தெடுப்பு, கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் ஆகியவை இந்தச் செய்தியில் இடம் பெற்றுள்ளன. (ஏசா 41:8-20).

இஸ்ரவேல் அழைக்கப்படும் விதம்

1. என் தாசனாகிய இஸ்ரவேலே (ஏசா 41:8-9).
2. நான் தெரிந்துகொண்ட யாக்கோபே (ஏசா 41:8).
3. என் சிநேகிதனான ஆபிரகாமின் சந்ததியே.
4. நான் பூமியின் கடையாந்தரங்களிலிருந்து, உன்னை எடுப்பேன்.(ஏசா 41:9)
5. அதின் எல்லைகளிலிருந்து அழைத்து வந்தேன்.
6. நீ என் தாசன், நான் உன்னைத் தெரிந்து கொண்டேன்.
7. நான் உன்னை வெறுத்து விடவில்லை.

சிநேகிதன் (friend) - אָהַב - aw-hab' - 157

வி.சொ.-நேசமாயிரு, பிரியமாயிரு, அன்பாயிரு, சிநேகமாயிரு, விருப்பமாயிரு, பட்சமாயிரு, அன்புகூர், அன்புவை, சிநேகி, வாஞ்சி,ஆசைவை, மோகங்கொள். **(to have affection for) "friend"** (ஏசா 41:8; நீதி 18:24; நீதி 27:6; சக 13:6); **"love"** (லேவி 19:18,34); **"lover"** (1இராஜா 5:1; சங் 88:18)

ஆபிரகாம் தேவனுடைய சிநேகிதன் என்று அழைக்கப்படுகிறான். (ஏசா 41:8; 2நாளா 20:7; யாக் 2:23). ஆபிரகாமின் நிமித்தமாகவும், (ஏசா 41:8; ஆதி 26:24), தாவீதின் நிமித்தமாகவும் (ஏசா 37:35; 1இராஜா 11:12-13, 32-34; 1இராஜா 15:4; 2இராஜா 8:19;2இராஜா 19:34; 2இராஜா 20:6) இஸ்ரவேல் ஆசீர்வதிக்கப்படும். கர்த்தர் தம்முடைய மற்ற சிநேகிதரின் நிமித்தமாக மேலும் பலரை ஆசீர்வதிக்கிறார். (ஆதி 39:5; யாத் 18:8; 2சாமு 5:12; மத் 24:22; 2கொரி 4:5,11; 2கொரி 12:10; எபே 4:32).

(15) நான்கு கட்டளைகள் - எட்டு வாக்குத்தத்தங்கள் - இருபது கணிப்புக்கள்

ஏசா 41:10 நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன்; என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன்.

ஏசா 41:11 இதோ, உன்மேல் எரிச்சலாயிருக்கிற யாவரும் வெட்கி இலச்சையடைவார்கள்; உன்னோடே வழக்காடுகிறவர்கள் நாசமாகி ஒன்றுமில்லாமற்போவார்கள்.

ஏசா 41:12 உன்னோடே போராடினவர்களைத் தேடியும் காணாதிருப்பாய்; உன்னோடே யுத்தம் பண்ணின மனுஷர் ஒன்றுமில்லாமல் இல்பொருளாவார்கள்.

ஏசா 41:13 உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலதுகையைப் பிடித்து: பயப்படாதே, நான் உனக்குத் துணைநிற்கிறேன் என்று சொல்லுகிறேன்.

ஏசாயா - தொகுப்புரை

41 அதிகாரம்

ஏசா 41:14 யாக்கோபு என்னும் பூச்சியே, இஸ்ரவேலின் சிறுகூட்டமே, பயப்படாதே; நான் உனக்குத் துணைநிற்கிறேன் என்று கர்த்தரும் இஸ்ரவேலின் பரிசுத்தருமாகிய உன் மீட்பர் உரைக்கிறார்.

ஏசா 41:15 இதோ, போரடிக்கிறதற்கு நான் உன்னைப் புதிதும் கூர்மையுமான பற்களுள்ள யந்தரமாக்குகிறேன்; நீ மலைகளை மிதித்து நொறுக்கி, குன்றுகளைப் பதருக்கு ஒப்பாக்கி விடுவாய்.

ஏசா 41:16 அவைகளைத் தூற்றுவாய், அப்பொழுது காற்று அவைகளைக் கொண்டுபோய், சுழல்காற்று அவைகளைப் பறக்கடிக்கும்; நீயோ கர்த்தருக்குள்ளே களிகூர்ந்து, இஸ்ரவேலின் பரிசுத்தருக்குள்ளே மேன்மைபாராட்டிக் கொண்டிருப்பாய்.

ஏசா 41:17 சிறுமையும் எளிமையுமானவர்கள் தண்ணீரைத் தேடி, அது கிடையாமல், அவர்கள் நாவு தாகத்தால் வறளும்போது, கர்த்தராகிய நான் அவர்களுக்குச் செவிகொடுத்து, இஸ்ரவேலின் தேவனாகிய நான் அவர்களைக் கைவிடாதிருப்பேன்.

ஏசா 41:18 உயர்ந்த மேடுகளில் ஆறுகளையும், பள்ளத்தாக்குகளின் நடுவே ஊற்றுகளையும் திறந்து, வனாந்தரத்தைத் தண்ணீர்த் தடாகமும், வறண்ட பூமியை நீர்க்கேணிகளுமாக்கி,

ஏசா 41:19 வனாந்தரத்திலே கேதுரு மரங்களையும், சீத்திம்மரங்களையும், மிருதுச்செடிகளையும், ஒலிவமரங்களையும் நட்டு, அவாந்தரவெளியிலே தேவதாரு விருட்சங்களையும், பாய்மர விருட்சங்களையும், புன்னைமரங் களையும் உண்டு பண்ணுவேன்.

தீர்க்கதரிசன எண் - 45

"நீ பயப்படாதே.........." (ஏசா 41:10-20) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. நான் உன்னைப் பலப்படுத்துவேன். (ஏசா 41:10).
2. நான் உனக்குச் சகாயம்பண்ணுவேன் (ஏசா 41:10,13,14).
3. என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன். (ஏசா 41:10).
4. உன்மேல் எரிச்சலாயிருக்கிற யாவரும் வெட்கி இலச்சையடைவார்கள் (ஏசா 41:11).
5. உன்னோடே வழக்காடுகிறவர்கள் நாசமாவார்கள். (ஏசா 41:11-12).
6. அவர்கள் ஒன்றுமில்லாமற்போவார்கள்.
7. உன்னோடே போராடினவர்களைத் தேடியும் காணாதிருப்பாய். (ஏசா 41:12).
8. உன்னோடே யுத்தம்பண்ணின மனுஷர் ஒன்றுமில்லாமல் இல்பொருளாவார்கள்.
9. நான் உன் வலதுகையைப் பிடிப்பேன். (ஏசா 41:13).
10. போரடிக்கிறதற்கு நான் உன்னைப் புதிதும் கூர்மையுமான பற்களுள்ள யந்தரமாக்குகிறேன். (ஏசா 41:15).
11. நீ மலைகளை மிதிப்பாய்.
12. நீ மலைகளை நொறுக்குவாய்.
13. நீ குன்றுகளைப் பதருக்கு ஒப்பாக்கிவிடுவாய்.
14. அவைகளைத் தூற்றுவாய்(ஏசா 41:16).
15. காற்று அவைகளைக் கொண்டுபோகும்.
16. சுழல்காற்று அவைகளைப் பறக்கடிக்கும்.

41 அதிகாரம்

17. நீயோ கர்த்தருக்குள்ளே களிகூருவாய்.

18. இஸ்ரவேலின் பரிசுத்தருக்குள்ளே மேன்மைபாராட்டிக்கொண்டிருப்பாய்.

19. உயர்ந்த மேடுகளில் ஆறுகளைத் திறப்பேன். (ஏசா 41:18).

20. பள்ளத்தாக்குகளின் நடுவே ஊற்றுகளையும் திறப்பேன்.

21. வனாந்தரத்தைத் தண்ணீர்த் தடாகமாக்குவேன்.

22. வறண்ட பூமியை நீர்க் கேணிகளாக்குவேன்.

23. வனாந்தரத்திலே கேதுருமரங்களையும், சீத்திம்மரங்களையும், மிருதுச் செடிகளையும், ஒலிவமரங்களையும் நட்டுவேன். (ஏசா 41:19).

24. அவாந்தரவெளியிலே தேவதாரு விருட்சங்களையும், பாய்மர விருட்சங்களையும், புன்னை மரங்களையும் உண்டு பண்ணுவேன்.

இஸ்ரவேலுக்கு வாக்குத்தத்தங்களும், கட்டளைகளும்

1. நீபயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன் (ஏசா 41:10,13,14).
2. திகையாதே, நான் உன் தேவன்.
3. நான் உன்னைப் பலப்படுத்துவேன்.
4. நான் உனக்குச் சகாயம்பண்ணுவேன்.
5. என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்.
6. நான் உன் வலதுகையைப் பிடிப்பேன். (ஏசா 41:13).
7. நான் சிறுமையும் எளிமையுமானவர்களுக்குச் செவி கொடுப்பேன். (ஏசா 41:17).
8. நான் அவர்களைக் கைவிடாதிருப்பேன்.

"யாக்கோபு என்னும் பூச்சியே, இஸ்ரவேலின் சிறுகூட்டமே" - (சங் 22:6)

மனுஷரோடு தேவனுடைய உறவு

1. அவர்களுடைய தேவன் (ஏசா 41:10,13)
2. அவர்களுடைய பெலன் (ஏசா 41:10)
3. சகாயர் (ஏசா 41:10,13-14)
4. தாங்குகிறவர் (ஏசா 41:10)
5. மீட்பர் (ஏசா 41:14)
6. பரிசுத்தர் (ஏசா 41:14-16)
7. தேவைகளைச் சந்திக்கிறவர் (ஏசா 41:17)
8. மரங்களை நட்டுகிறவர் (ஏசா 41:19)

(16) ஆசீர்வாதங்களுக்கு காரணங்கள்

ஏசா 41:20 கர்த்தருடைய கரம் அதைச் செய்தது என்றும், இஸ்ரவேலின் பரிசுத்தர் அதைப் படைத்தார் என்றும், யாவரும் கண்டு உணர்ந்து சிந்தித்து அறிவார்கள்.

ஏசா 41:10-19 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் வாக்குத்தத்தங்கள், கட்டளைகள், முன்னறிவிப்புக்கள் ஆகியவற்றிற்குக் காரணம்

1. தேவனுடைய நித்திய அன்பை இஸ்ரவேல் புத்திரர் காண வேண்டும்.
2. கர்த்தர் பராமரிக்கிறார், பாதுகாக்கிறார் என்பதை அவர்கள் உணர வேண்டும்.
3. தங்களுடைய வழிகளைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

41 அதிகாரம்

4. சர்வ சிருஷ்டிகளுக்கும் சம்பூரணமான ஆசீர்வாதம் உண்டாக வேண்டும் என்னும் தேவனுடைய சிருஷ்டிப்பின் திட்டத்தை அவர்கள் அறிய வேண்டும். (வெளி 4:11).

(17) அழைகூவல் - கணிப்பு

ஏசா 41:21 உங்கள் வழக்கைக் கொண்டு வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உங்கள் பலமான நியாயங்களை வெளிப்படுத்துங்கள் என்று யாக்கோபின் ராஜா உரைக்கிறார்.

ஏசா 41:22 அவர்கள் அவைகளைக் கொண்டு வந்து, சம்பவிக்கப் போகிறவைகளை நமக்குத் தெரிவிக்கட்டும்; அவைகளில் முந்தி சம்பவிப்பவைகள் இன்னவைகளென்று சொல்லி, நாம் நம்முடைய மனதை அவைகளின்மேல் வைக்கும்படிக்கும், பிந்தி சம்பவிப்பவைகளையும் நாம் அறியும்படிக்கு நமக்குத் தெரிவிக்கட்டும்; வருங் காரியங்களை நமக்கு அறிவிக்கட்டும்.

ஏசா 41:23 பின்வரும் காரியங்களை எங்களுக்குத் தெரிவியுங்கள்; அப்பொழுது நீங்கள் தேவர்கள் என்று அறிவோம்; அல்லது நன்மையாவது தீமையாவது செய்யுங்கள்; அப்பொழுது நாங்கள் திகைத்து ஏகமாய்க் கூடி அதைப் பார்ப்போம்.

ஏசா 41:24 இதோ, நீங்கள் சூனியத்திலும் சூனியமாயிருக் கிறீர்கள்; உங்கள் செயல் வெறுமையிலும் வெறுமையானது; உங்களைத் தெரிந்துகொள்ளுகிறவன் அருவருப்பானவன்.

தேவனுடைய அழைகூவல்

1. உங்கள் வழக்கைக் கொண்டு வாருங்கள் (ஏசா 41:21).
2. உங்கள் பலமான நியாயங்களை வெளிப்படுத்துங்கள்.
3. சம்பவிக்கப்போகிறவைகளை நமக்குத் தெரிவிக்கட்டும் (ஏசா 41:22).
4. வருங்காரியங்களை நமக்கு அறிவிக்கட்டும்.
5. பின்வரும் காரியங்களை எங்களுக்குத் தெரிவியுங்கள்; (ஏசா 41:23).
6. நன்மையாவது தீமையாவது செய்யுங்கள்.
7. நீங்கள் சூனியத்திலும் சூனியமாயிருக்கிறீர்கள். உங்கள் செயல் வெறுமையிலும் வெறுமையானது (ஏசா 41:24).

கர்த்தரால் மட்டுமே வருங்காலத்தில் நடைபெறப்போகும் காரியங்களை முன்னறிவிக்க முடியும். கோரேசு பிறப்பதற்கு 200 வருஷங்களுக்கு முன்பாகவே கர்த்தர் அவனுக்குப் பெயரிட்டார். இஸ்ரவேல் ஜனத்தார் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போவதற்கு முன்பாகவே கோரேசு அவர்களைச் சிறையிருப்பிலிருந்து விடுதலையாக்குவான் என்றும், எருசலேமையும், தேவாலயத்தையும் திரும்பக் கட்டுவதற்குக் கட்டளையிடுவான் என்றும் தீர்க்கதரிசனமாக முன்னறிவித்தார். (ஏசா 41:25; ஏசா 44:28-45:4; எஸ்றா 1).

(18) கோரேசின்மீது ஐந்து அம்ச தீர்க்கதரிசனம் - (41:1)

ஏசா 41:25 நான் வடக்கேயிருந்து ஒருவனை எழும்பப்பண்ணுவேன், அவன் வருவான்; சூரியோதய திசையிலிருந்து என் நாமத்தைத் தொழுதுகொள்ளுவான்; அவன் வந்து அதிபதிகளைச் சேற்றைப் போலவும், குயவன் களிமண்ணை மிதிப்பதுபோலவும் மிதிப்பான்.

தீர்க்கதரிசன எண் - 46

"நான் வடக்கேயிருந்து ஒருவனை எழும்பப் பண்ணுவேன்" (ஏசா 41:25) இந்தத் தீர்க்கதரிசனம் கோரேசின் மூலமாக நிறைவேறிற்று. (ஏசா 41:1)

41 அதிகாரம்

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நான் வடக்கேயிருந்து ஒருவனை எழும்பப் பண்ணுவேன்.
2. சூரியோதய திசையிலிருந்து என் நாமத்தை அவன் தொழுதுகொள்ளுவான்.
3. அவன் வந்து அதிபதிகளைச் சேற்றைப் போலவும், குயவன் களிமண்ணை மிதிப்பது போலவும் மிதிப்பான்.

"எழும்பப்பண்ணுவேன்" - தம்முடைய வார்த்தையை நிறைவேற்றுவதற்குக் கர்த்தர் கோரேசை எழும்பப் பண்ணினார். இவன் பாபிலோனைத் தண்டித்து இஸ்ரவேலரை விடுவித்தான். (ஏசா 41:1-3,25; ஏசா 44:28-45:4,13; எஸ்றா 1; எரே 25; தானி 1:21; தானி 6:28).

"வடக்கேயிருந்து" - ஏசா 41:2 ஆவது வசனத்தில் "கிழக்கிலிருந்து" என்று கூறப்பட்டிருக்கிறது. இவ்விரண்டிற்கும் முரண்பாடு எதுவுமில்லை. கோரேசு பாலஸ்தீனத்தின் கிழக்குப் பகுதியிலிருந்து வந்தான். இந்த வசனத்தில் வடக்கிலுள்ள அதிபதிகளை மிதித்து வருவான் என்று கூறப்பட்டிருக்கிறது. கோரேசு பாபிலோனை ஜெயித்து வருகிறான். கோரேசு முதலாவதாக ஆசியா மைனரை ஜெயித்து, அதன் பின்பு பாபிலோனுக்கு எதிராகத் தெற்கு திசைக்குச் சென்றான். கோரேசு பெர்சியாவில் பிறந்தவன். இது பாலஸ்தீனத்திற்குக் கிழக்கில் உள்ளது. ஆனால் இவன் வடக்கிலிருந்து பாபிலோனை ஜெயித்தான்.

"என் நாமத்தைத் தொழுதுகொள்ளுவான்" - கோரேசு கர்த்தரை மெய்யான தேவனென்று அங்கிகரிப்பான். தன்னுடைய வெற்றிக்குக் கர்த்தரே காரணமென்று அறிக்கையிடுவான். (எஸ்றா 1:2).

(18) கணிப்புக்கு அழைப்பு

ஏசா 41:26 நாம் அதை அறியும்படியாக ஆதியில் சொன்னவன் யார்? நாம் அவனை யதார்த்தவான் என்று சொல்லும் படி பூர்வகாலத்தில் அறிவித்தவன் யார்? அறிவிக்கிறவன் ஒருவனும் இல்லையே; உரைக்கிறவனும் இல்லையே; உங்கள் வார்த்தைகளைக் கேட்டிருக்கிறவனும் இல்லையே.

ஏசா 41:27 முதல் முதல், நானே, சீயோனை நோக்கி: இதோ, அவைகளைப் பார் என்று சொல்லி, எருசலேமுக்குச் சுவிசேஷகரைக் கொடுக்கிறேன்.

ஏசா 41:28 நான் பார்த்தேன், அவர்களில் அறிவிக்கிறவன் ஒருவனுமில்லை; நான் கேட்குங் காரியத்துக்குப் பிரதியுத்தரம் கொடுக்கத்தக்க ஒரு ஆலோசனைக் காரனும் அவர்களில் இல்லை.

ஏசா 41:29 இதோ, அவர்கள் எல்லாரும் மாயை, அவர்கள் கிரியைகள் விருதா; அவர்களுடைய விக்கிரகங்கள் காற்றும் வெறுமையுந்தானே.

"ஆதியில் சொன்னவன்" - கர்த்தர் நடக்கப் போகும் காரியங்களை முன்னறிவிக்கிறார். அவர் முன்னறிவித்த காரியங்கள் நிறைவேறுகின்றன. விக்கிரகங்களால் இனிமேல் நடைபெறப் போகும் காரியங்களை முன்னறிவிக்க முடியாது. (ஏசா 42:19. 41:21-24).

முன்னறிவிப்பின் நோக்கங்கள்

1. முடிவை ஆரம்பத்தில் அறிந்துகொள் தற்கு (ஏசா 42:19. 41:26; அப் 15:18; எபே 1:10; எபே 2:7; எபே 3:10-11).
2. நடைபெறப்போகும் சம்பவங்களை அதற்கு முன்பாகவே அறிந்து கொள்வதற்கு (ஏசா 41:26; ஏசா 42:8-9).
3. தேவன் நீதியானவர் என்பதை மனுஷர் அறிந்து கொள்வதற்கு. (ஏசா 41:26).
4. கர்த்தர் ஒருவரே ஜீவனுள்ள மெய்யான தேவன் என்பதை மனுஷர் அறிந்து கொள்வதற்கு.

41 அதிகாரம்

5. முன்னறிவிப்புக்கள் கர்த்தரிடமிருந்து வந்துள்ளன. அவை விக்கிரகங்களிடமிருந்தோ அல்லது கள்ளத்தீர்க்க தரிசிகளிடமிருந்தோ வரவில்லை என்பதைப் புரிந்து கொள்வதற்கு. (ஏசா 41:27).

6. விக்கிரகங்கள் வருங்காலத்தை அறிவிக்கக் கூடிய திராணியற்றவை என்பதைப் புரிந்து கொள்வதற்கு. (ஏசா 41:28).

7. விக்கிரகங்கள் மாயையானவை, அவை வெறுமையானவை என்பதை வெளிப்படுத்துவதற்கு. (ஏசா 41:29).

தீர்க்கதரிசன எண் - 47

"முதல் முதல், நானே, சீயோனை நோக்கி" (ஏசா 41:27) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. சீயோனுக்கும், எருசலேமிற்கும் கர்த்தர் இவற்றை முதலாவதாக அறிவிக்கிறார். இந்த முன்னறிவிப்புக்கள் விக்கிரகங்களிடமிருந்து வரவில்லை. தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் கர்த்தரிடமிருந்து மட்டுமே வருகிறது.

"சுவிசேஷகர்" - கர்த்தரிடமிருந்து சுவிசேஷச் செய்தியைப் பெற்று அறிவிக்கிறவர். இது பிரதானமாக ஏசாயாவைக் குறிக்கிறது. மேலும் இந்த வார்த்தை கர்த்தருடைய மற்ற தீர்க்கதரிசிகளையும் குறிக்கும். (அப் 3:21; எபி 1:1-2).

"அவர்களில் அறிவிக்கிறவன் ஒருவனுமில்லை" - விக்கிரகங்களும், அவற்றை ஆராதிக்கும் விக்கிராராதனைக்காரரும் தீர்க்கதரிசனம் கூறமாட்டார்கள். அவர்கள் கூறினாலும் அது மெய்யான தீர்க்கதரிசனமாக இராது. அது கள்ளத்தீர்க்கதரிசனமாகவே இருக்கும். (எபி 41:26)

விக்கிரகங்களைப் பற்றிய காரியங்கள்

1. அவை எல்லாம் மாயை.
2. அவற்றின் கிரியைகள் விருதா.
3. விக்கிரகங்கள் வெறும் காற்று.
4. அவை வெறுமையானவை.

42 அதிகாரம்

3. முரண்பாடு - தேவனும் இஸ்ரவேலும் - (42:1-45:25)

(1) மேசியாவின் முதலாவது வருகை - பத்து அம்ச அறிமுகம்

ஏசா 42:1 இதோ, நான் ஆதரிக்கிற என் தாசன், நான் தெரிந்துகொண்டவரும், என் ஆத்துமாவுக்குப் பிரியமானவரும் இவரே; என் ஆவியை அவர்மேல் அமரப் பண்ணினேன்; அவர் புறஜாதிகளுக்கு நியாயத்தை வெளிப்படுத்துவார்.

ஏசா 42:2 அவர் கூக்குரலிடவுமாட்டார், தம்முடைய சத்தத்தை உயர்த்தவும் அதை வீதியிலே கேட்கப்பண்ணவுமாட்டார்.

ஏசா 42:3 அவர் நெரிந்த நாணலை முறியாமலும், மங்கியெரிகிற திரியை அணையாமலும், நியாயத்தை உண்மையாக வெளிப்படுத்துவார்.

ஏசா 42:4 அவர் நியாயத்தைப் பூமியிலே நிலைப்படுத்துமட்டும் இளக்கரிப்பதுமில்லை, பற்றுவது மில்லை; அவருடைய வேதத்துக்குத் தீவுகள் காத்திருக்கும்.

தீர்க்கதரிசன எண் - 48

"இதோ, நான் ஆதரிக்கிற என் தாசன்..........." (ஏசா 42:1-7) ஏசா 42:2-3,6-7 ஆகிய வசனங்கள் இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தில் நிறைவேறிற்று. ஏசா 42:4 ஆவது வசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. என் தாசனை ஆதரிப்பேன்.(ஏசா 42:1).
2. என் தாசனில் பிரியமாயிருப்பேன்.
3. என் ஆவியை அவர்மேல் அமரப் பண்ணுவேன்.
4. அவர் புறஜாதிகளுக்கு நியாயத்தை வெளிப்படுத்துவார். (ஏசா 42:1; மத் 12:18).
5. அவர் கூக்குரலிடவுமாட்டார், தம்முடைய சத்தத்தை உயர்த்தவும் அதை வீதியிலே கேட்கப்பண்ண வுமாட்டார். (ஏசா 42:2; மத் 12:19).
6. அவர் நெரிந்த நாணலை முறியாமலும், மங்கியெரிகிற திரியை அணையாமலும், நியாயத்தை உண்மையாக வெளிப் படுத்துவார். (ஏசா 42:3; மத் 12:20).
7. அவர் மூலமாகக் குருடருடைய கண்களைத் திறப்பேன். (ஏசா 42:6; மத் 11:4-6; லூக்கா 4:18).
8. அவர் மூலமாகக் கட்டுண்டவர்களைக் காவலிலிருந்து விடுவிப்பேன். (ஏசா 42:6; லூக்கா 4:18).
9. அவர் மூலமாக இருளில் இருக்கிறவர்களைச் சிறைச்சாலையிலி ருந்து விடுவிப்பேன். (ஏசா 42:6; மத் 4:16; அப் 26:18).
10. நீதியின்படி அவரை அழைப்பேன். (ஏசா 42:7).
11. அவருடைய கையைப்பிடிப்பேன்.
12. அவரைத் தற்காத்துக் கொள்வேன்.
13. அவரை ஜனத்திற்கு உடன்படிக்கையாக வைப்பேன்.
14. அவரை ஜாதிகளுக்கு ஒளியாக வைப்பேன். (ஏசா 42:7; லூக்கா 2:32).

இவை அனைத்தும் மேசியாவின் ஊழியங்களாகும். (ஏசா 42:1-7).

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. அவர் நியாயத்தைப் பூமியிலே நிலைப் படுத்துமட்டும் இளக்கரிப்பதுமில்லை, பதறுவதுமில்லை (ஏசா 42:4; மத் 25:31-46; வெளி 11:15).
2. அவருடைய வேதத்துக்குத் தீவுகள் காத்திருக்கும். (ஏசா 42:4; ஏசா 2:2-4; ஏசா 11:9).

42 அதிகாரம்

"தாசன்" **(servant)** - கர்த்தருடைய தாசன். (ஏசா 52:13; ஏசா 53:11; ஏசா 65:8) இது மேசியாவைக் குறிக்கும். ஏசா 42:1-3 ஆகிய வசனங்களும், ஏசா 42:6 ஆவது வசனத்தின் ஒரு பகுதியும் கிறிஸ்துவைக் குறிக்கும் வசனங்களாக மத் 12:17-21; லூக்கா 2:32 ஆகிய வசனங்களில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. ஏசாயாவின் புஸ்தகத்தில் இயேசு கிறிஸ்துவைத் தவிர மேலும் சிலரும் கர்த்தருடைய தாசர்களாகக் கூறப் பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய விவரம் வருமாறு:

1. ஏசாயா (ஏசா 20:3)
2. எலியாக்கீம் (ஏசா 22:20)
3. தாவீது (ஏசா 37:35)
4. இஸ்ரவேல் தேசம். (ஏசா 41:8-9; ஏசா 42:19;ஏசா 43:10;ஏசா 44:1-2,21; ஏசா 22:1-2; ஏசா 45:4; ஏசா 49:20; ஏசா 49:3)

"ஆவி" - இந்த வார்த்தை பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கும். இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றுக் கரையேறியபோது பரிசுத்த ஆவியானவர் அவர்மீது வந்து இறங்கினார். (மத் 3:16-17; லூக்கா 3:16; யோவான் 3:34; அப் 10:38). ஏசா 42:1, ஏசா 11:1-2; ஏசா 61:1-2 ஆகிய வசனங்களில் முன்னறிவிக்கப்பட்டுள்ளவை அப்போது நிறைவேறிற்று.

ஏசா 42:1 ஆவது வசனத்தில் திரித்துவத்தின் வெளிப்பாடு

1. நான் (கர்த்தராகிய தேவன்) (ஏசா 42:1,5,7)
2. என் ஆவி (பரிசுத்த ஆவியானவர்) (ஏசா 42:1)
3. அவர்மேல் (மேசியா) (ஏசா 42:1-7

வெளிப்படுத்துதல் (bring forth) - יָצָא - yaw-tsaw' - 3318

வினைச்சொல் - புறப்பட்டு, வா, புறப்பட்டுப் போ, உதி, வா, வெளிப்படு, வெளியேவா, விடுதலையாகு, போகப் புறப்படு, நீங்கலாகு, செல், இறங்கி வா, போ, தப்பு, சரி, பிற, எடுப்பாய்பார், சோர்ந்துபோ, எழும்பு, உண்டாகு, சுர, நடந்தேறு, பரம்பு, நீங்கித்தப்பு, பிரி, வெளியே, பரம்பு, நீங்கித்தப்பு, வெளியே புறப்படு, மீட்கப்படு, பின்தொடர், காண், அகன்றுபோ, தோன்று, பின்னாலே அனுப்பப்படு, பிரசித்தமாக, இற்றுவிழு, படரு, விளங்கு, நீங்கு, ஓடு, ஏறு, பாய், கொண்டு வா, அழைத்துவா, எடு, நில், விடுதலையாக்கு, விடுவி, புறப்படப்பண்ணு, கொண்டுபோ, புறப்படச்செய், எடுத்துக் கொடு, வரவழை, கூறு, எழும்பப்பண்ணு, வெளிப்படுத்து, கக்கப்பண்ணு, புறம்பாக்கு, வெளியே வை, வெளியேகொண்டுபோ, புறப்பட்டுப் போகப்பண்ணு, பிறப்பி, அகற்றிப்போடு, தள்ளிவிடு, பரம்பச்செய், விலக்கு, போகப்பண்ணு, கொடு, அழைத்தனுப்பு, வெளியேதள்ளு, எடுத்துவா, வெளியே அழை, வெளிப்படபண்ணு, விளைவி, பிரித்தெடு, வருவி, உண்டுபண்ணு, புறப்படு, வெளியே போகப்பண்ணு, கொண்டுவா **(to go out; bring forth; go abroad; spread; utter)**

நியாயம் (judgment) - מִשְׁפָּט - mish-pawt' - 4941

ஆண்பால் பெயர்ச்சொல் - நியாயம், நீதி, வழக்கம், பிரமாணம், தீர்மானம் பண்ணுதல், நியாய விசாரிப்பு, தீர்ப்பு, நியாய விதி, நியமம், நியாய விசாரணை, முறைமை, நியாயத்தீர்ப்பு, நியாயந்தீர்த்தல், பிரகாரம், போதித்தல், காரியசித்தி, வழக்காடுகிறவர், நிறைகோல், காரியம், குற்றம், ஆக்கினைக்குப்பாத்திரன், வளர்த்தல், பாத்திரம், வழக்காடுதல், தண்டித்தல், தண்டனை உரியது, ஆக்கினை, மாதிரி, சாயல் **(rule of right or of religion; order; plan; sentence)**

"அவர் கூக்குரலிடவுமாட்டார்" - (மத் 12:18-21)

42 அதிகாரம்

"மங்கியெரிகிற திரியை அணையாமலும்" - இஸ்ரவேலின் நம்பிக்கையை மேசியா அணைத்துப்போடமாட்டார். அவர்களுக்கு ஜெயத்திற்கு ஏதுவான மேசியா தமது நியாயத்தீர்ப்பை அனுப்புவார். (மத் 12:20).

"இளக்கரிப்பதுமில்லை, பதறுவதுமில்லை" - கர்த்தருக்குத் தோல்வி என்று ஒன்றுமேயில்லை. பூமியில் தமது நீதியை நிலைநிறுத்துவார். யூதரும் புறஜாதியாரும் கர்த்தரிடத்தில் நம்பிக்கை வைப்பார்கள். (அப் 15:13-18) அவர்களுடைய திட்டத்தை ஜனங்கள் புரிந்து கொள்வார்கள். கர்த்தருடைய தாசர்கள் அவரோடு நித்தியமாக ஆளுகை செய்வார்கள். (தானி 7:18,26; வெளி 11:15; வெளி 20:1-10; வெளி 22:4-5).

"அவருடைய வேதத்துக்குத் தீவுகள் காத்திருக்கும்" - கர்த்தர் இந்தப் பூமிக்கு வந்து ராஜ்யங்களை எடுத்துக் கொள்ளும் வரையிலும் ஜனங்கள் எல்லோரும் அவருடைய வேதத்திற்காகக் காத்திருப்பார்கள். (சக 14; அப் 15:13-18; வெளி 11:15). அதன் பின்பு கர்த்தருடைய பிரமாணம் சீயோனிலிருந்தும், கர்த்தருடைய வார்த்தை எருசலேமிலிருந்தும் புறப்பட்டுப்போகும். (ஏசா 2:2-4).

(2) மேசியாவிடம் எட்டு அம்ச சம்பாஷணை

ஏசா 42:5 வானங்களைச் சிருஷ்டித்து, அவைகளை விரித்து, பூமியையும், அதிலே உற்பத்தியாகிறவைகளையும் பரப்பினவரும், அதில் இருக்கிற ஜனத்துக்குச் சுவாசத்தையும், அதில் நடமாடுகிறவர்களுக்கு ஆவியையும் கொடுக்கிறவருமான கர்த்தராகிய தேவன் சொல்லுகிறதாவது:

ஏசா 42:6 நீர் குருடருடைய கண்களைத் திறக்கவும், கட்டுண்டவர்களைக் காவலிலிருந்தும், இருளில் இருக்கிறவர்களைச் சிறைச் சாலையிலிருந்தும் விடுவிக்கவும்,

ஏசா 42:7 கர்த்தராகிய நான் நீதியின்படி உம்மை அழைத்து, உம்முடைய கையைப் பிடித்து, உம்மைத் தற்காத்து, உம்மை ஜனத்திற்கு உடன்படிக்கையாகவும், ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைக்கிறேன்.

தேவனுடைய சிருஷ்டிப்பின் கிரியைகள்

1. வானங்களைச் சிருஷ்டித்தார்.
2. அவைகளை விரித்தார்.
3. பூமியைப் பரப்பினார்.
4. பூமியிலே உற்பத்தியாகிறவைகளைப் பரப்பினார்.
5. அதில் இருக்கிற ஜனத்துக்குச் சுவாசத்தைக் கொடுக்கிறார்.
6. அதில் நடமாடுகிறவர்களுக்கு ஆவியைக் கொடுக்கிறார்.

"வானங்கள்" - (ஏசா 45:18; ஆதி 1:1; வெளி 10:6)

"அவைகளை விரித்து" - (ஏசா 45:12; ஏசா 51:13; எரே 10:12; எரே 51:15)

"பூமியையும், அதிலே உற்பத்தியாகிறவைகளையும் பரப்பினவர்" - (ஏசா 40:22; ஏசா 44:24; யோபு 9:8)

"ஜனத்துக்குச் சுவாசத்தையும்,........ ஆவியையும்கொடுக்கிறவர்" - சுவாசமும், ஆவியும் ஒன்றல்ல. (யோபு 12:10; யோபு 34:14; அப் 17:25).

"ஆவியைக் கொடுக்கிறவர்" - மனுஷன் சரீரம், ஆவி, ஆத்துமா ஆகியவற்றால் உருவாக்கப்பட்டிருக்கிறான். இவன் தன்னைப் போல தன்னுடைய இனத்தை உற்பத்தி பண்ணுவதற்குக் கர்த்தர் இவனுக்கு அதிகாரத்தைக் கொடுக்கிறார். (ஆதி 1:26-28; ஆதி 5:3).

"குருடருடைய கண்களைத் திறக்கவும்" - மேசியாவின் ஊழியத்தில் இதுவும் ஒன்று. (ஏசா 61:1-2; மத் 11:4-6; லூக்கா 4:16-21).

42 அதிகாரம்

"கட்டுண்டவர்களைக் காவலிலிருந்தும்.......... விடுவிக்கவும்" - இயேசு கிறிஸ்து பாதாளத்திற்குச் சென்று அங்கு சாத்தானால் சிறைப்பிடிக்கப்பட்டிருந்தவர்களை விடுவித்தார். அவர்களைத் தம்மோடுகூட பரலோகத்திற்கு அழைத்துச் சென்றார். (ஏசா 49:9; மத் 12:40; எபே 4:8-10; எபி 2:14-15).

"கர்த்தராகிய நான் நீதியின்படி உம்மை அழைத்து" - ஏசா 42:1-4 ஆகிய வசனங்களும், ஏசா 42:6-7 ஆகிய வசனங்களும் மேசியாவைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

"உம்மை ஜனத்திற்கு உடன்படிக்கையாகவும்" - கர்த்தர் மேசியாவைப் புதிய உடன்படிக்கைக்கு மத்தியஸ்தராக நியமித்திருக்கிறார். மோசேயின் பிரமாணத்தைவிட புதிய உடன்படிக்கை மேன்மையானது. (ஏசா 49:8; எபி 8:6; எபி 9:15).

"ஜாதிகள்" - யூதரும், புறஜாதியாரும். (ரோமர் 1:16; 1கொரி 12:13; கலா 3:8,28; எபே 3:6; கொலோ 3:11).

"ஒளி" - சத்தியம், அறிவு, ஞானம், உபதேசம் ஆகியவற்றின் அடையாளம். (மத் 4:16; லூக்கா 2:32; யோவான் 1:4,7,9; யோவான் 3:19; யோவான் 8:12; யோவான் 9:5; யோவான் 12:35,46).

(3) தேவனுடைய மகிமை

ஏசா 42:8 நான் கர்த்தர், இது என் நாமம்; என் மகிமையை வேறொருவனுக்கும், என் துதியை விக்கிரகங்களுக்கும் கொடேன்.

மகிமை (glory) - כָּבוֹד - kaw-bode' - 3519

ஆ.பெ.சொ. - செல்வம், மகிமை, மேன்மை, கனம், தற்புகழ் (weight; splendor; glory; honor) - கர்த்தர் தமக்குரிய மகிமையையும், துதியையும் தூதர்களுக்கோ, மனுஷருக்கோ, பிசாசுகளுக்கோ, விக்கிரகங்களுக்கோ கொடுக்க மாட்டார். தன்னிடத்திலுள்ள அறிவு, ஞானம், செல்வம், ஆரோக்கியம், பெலன், செழிப்பு ஆகியவை அனைத்தும் தன்னுடைய சொந்த முயற்சியினால் வந்தது என்று மனுஷன் பெருமைப் படக்கூடாது. இதற்குரிய மகிமையை மனுஷன் கர்த்தருக்குக் கொடுக்க வேண்டும்.

(4) பூர்வ காலத்துக் காரியங்கள் நிறைவேறிற்று

ஏசா 42:9 பூர்வகாலத்தில் தெரிவிக்கப்பட்டவைகள், இதோ, நிறைவேறலாயின; புதியவைகளையும் நானே அறிவிக்கிறேன்; அவைகள் தோன்றாததற்கு முன்னே, அவைகளை உங்களுக்குச் சொல்லுகிறேன்.

"பூர்வகாலத்தில் தெரிவிக்கப்பட்டவைகள், இதோ, நிறைவேறலாயின" - ஏற்கெனவே கூறப்பட்டுள்ள தீர்க்கதரிசனங்கள் நிறைவேறியுள்ளன. இனிமேல் நிறைவேறப் போகும் தீர்க்கதரிசனங்களையும் கர்த்தரே அறிவிக்கிறார்.

(5) தேவனுக்கு மகிமை செலுத்தவேண்டும்

ஏசா 42:10 சமுத்திரத்தில் யாத்திரை பண்ணுகிறவர்களே, அதிலுள்ளவைகளே, தீவுகளே, அவைகளின்குடிகளே, கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்; பூமியின் கடையாந்தரத்திலிருந்து அவருடைய துதியைப் பாடுங்கள்.

ஏசா 42:11 வனாந்தரமும், அதின் ஊர்களும், கேதாரியர் குடியிருக்கிற கிராமங்களும் உரத்த சத்தமிடக்கடவது; கன்மலைகளிலே குடியிருக்கிறவர்கள் கெம்பீரித்து, பர்வதங்களின் கொடுமுடியிலிருந்து ஆர்ப்பரிப்பார்களாக.

ஏசா 42:12 கர்த்தருக்கு மகிமையைச் செலுத்தி, அவர் துதியைத் தீவுகளில் அறிவிப்பார்களாக.

42 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 49

"சமுத்திரத்தில் யாத்திரை பண்ணுகிறவர்களே, அதிலுள்ளவைகளே, தீவுகளே, அவைகளின் குடிகளே, கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்.........." (ஏசா 42:10-17) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. எல்லா தேசங்களிலும் ஜனங்கள் சந்தோஷமாக இருந்து கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுவார்கள். (ஏசா 42:10-12).
2. கர்த்தர் பராக்கிரமசாலியைப் போல் புறப்பட்டுப் போவார். (ஏசா 42:13; ஏசா 63:1-6; யோவே 2; சக 14:1-9; மத் 25:31; 2தெச 1:7-10; யூதா 1:14-15; வெளி 11:15; வெளி 19:11-21).
3. யுத்தவீரனைப்போல் வைராக்கிய மூளுவார். (ஏசா 42:13; ஏசா 63:1-6; யோவே 2; சக 14).
4. முழங்கிக் கெர்ச்சிப்பார். (ஏசா 42:13; யோவே 2:11; மத் 24:29-31).
5. தம்முடைய சத்துருக்களை மேற்கொள்ளுவார். (ஏசா 42:13; ஏசா 63:1-6; யோவே 2-3; சக 14; மத் 25:31-46; 2தெச 1:7-10; யூதா 1:14-15; வெளி 11:15; வெளி 19:11-21; வெளி 20:1-10).
6. பிள்ளை பெறுகிறவளைப்போலச் சத்தமிடுவார்.(ஏசா 42:14; யோவே 2:11).
7. அவர்களைப் பாழாக்கி விழுங்குவார். (ஏசா 42:14; ஏசா 63:1-6; எசே 38:17-21; யோவே 2-3; சக 14:1-15; 2தெச 1:7-10; யூதா 1:14-15; வெளி 19:11-21).
8. மலைகளையும் குன்றுகளையும் பாழாக்குவார். (ஏசா 42:15; சக 14:1-5; வெளி 6:12-17; வெளி 16:17-21).
9. அவைகளிலுள்ள பூண்டுகளை யெல்லாம் வாடப்பண்ணுவார். (ஏசா 42:15; வெளி 8:7).
10. ஆறுகளைத் திட்டுகளாக்குவார். (ஏசா 42:15; ஏசா 11:15; ஏசா 19:5-6; வெளி 16:12).
11. ஏரிகளை வற்றிப்போகப்பண்ணுவார். (ஏசா 42:15).
12. குருடரை அவர்கள் அறியாத வழியிலே நடத்துவார். (ஏசா 42:16).
13. அவர்களுக்குத் தெரியாத பாதைகளில் அவர்களை அழைத்துக் கொண்டுவருவார்.
14. அவர்களுக்கு முன்பாக இருளை வெளிச்சமாக்குவார்.
15. கோணலைச் செவ்வையாக்குவார்.
16. சித்திரவேலையான விக்கிரகங்களை நம்புகிறவர்கள் வெட்கப்படுவார்கள். (ஏசா 42:17; ஏசா 1:29-31; ஏசா 2:18-21).

"பாடுங்கள்" என்று கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்.
2. பூமியின் கடையாந்தரத்திலிருந்து அவருடைய துதியைப் பாடுங்கள்.
3. வனாந்தரமும், அதின் ஊர்களும் உரத்த சத்தமிடக்கடவது (ஏசா 42:11).
4. கன்மலைகளிலே குடியிருக்கிறவர்கள் கெம்பீரிப்பார்களாக.
5. பர்வதங்களின் கொடுமுடியிலிருந்து ஆர்ப்பரிப்பார்களாக.
6. கர்த்தருக்கு மகிமையைச் செலுத்துவார்களாக. (ஏசா 42:12).

42 அதிகாரம்

7. அவர் துதியைத் தீவுகளில் அறிவிப்பார்களாக.

(6) மேசியாவின் இரண்டாம் வருகை

(அ) பன்னிரெண்டு அம்ச நியாயத்தீர்ப்பு

ஏசா 42:13 கர்த்தர் பராக்கிரமசாலியைப் போல் புறப்பட்டு, யுத்தவீரனைப்போல் வைராக்கிய மூண்டு, முழங்கிக் கெர்ச்சித்து, தம்முடைய சத்துருக்களை மேற்கொள்ளுவார்.

ஏசா 42:14 நான் வெகுகாலம் மவுனமாயிருந்தேன்; சும்மாயிருந்து எனக்குள்ளே அடக்கிக் கொண்டிருந்தேன்; இப்பொழுது பிள்ளை பெறுகிறவளைப் போலச் சத்தமிட்டு, அவர்களைப் பாழாக்கி விழுங்குவேன்.

ஏசா 42:15 நான் மலைகளையும் குன்றுகளையும் பாழாக்கி, அவைகளிலுள்ள பூண்டுகளையெல்லாம் வாடப்பண்ணி, ஆறுகளைத் திட்டுகளாக்கி, ஏரிகளை வற்றிப்போகப் பண்ணுவேன்.

(ஆ) எட்டு அம்ச மீட்பு

ஏசா 42:16 குருடரை அவர்கள் அறியாத வழியிலே நடத்தி, அவர்களுக்குத் தெரியாத பாதைகளில் அவர்களை அழைத்துக் கொண்டுவந்து, அவர்களுக்கு முன்பாக இருளை வெளிச்சமும், கோணலைச் செவ்வையுமாக்குவேன்; இந்தக் காரியங்களை நான் அவர்களுக்குச் செய்து, அவர்களைக் கைவிடாதிருப்பேன்.

ஏசா 42:17 சித்திரவேலையான விக்கிரகங்களை நம்பி, வார்ப்பிக்கப்பட்ட சுரூபங்களை நோக்கி: நீங்கள் எங்கள் தேவர்கள் என்று சொல்லுகிறவர்கள் பின்னிடைந்து மிகவும் வெட்கப் படுவார்கள்.

(7) எட்டு அம்ச அழிவும் பலவீனமும்

ஏசா 42:18 செவிடரே, கேளுங்கள்; குருடரே, நீங்கள் காணும்படி நோக்கிப் பாருங்கள்.

ஏசா 42:19 என் தாசனையல்லாமல் குருடன் யார்? நான் அனுப்பிய தூதனையல்லாமல் செவிடன் யார்? உத்தமனையல்லாமல் குருடன் யார்? கர்த்தருடைய ஊழியக்காரனையல்லாமல் அந்தகன் யார்?

ஏசா 42:20 நீ அநேக காரியங்களைக் கண்டும் கவனியாதிருக்கிறாய்; அவனுக்குச் செவிகளைத் திறந்தாலும் கேளாதே போகிறான்.

ஏசா 42:21 கர்த்தர் தமது நீதியினிமித்தம் அவன்மேல் பிரியம் வைத்திருந்தார்; அவர் வேதத்தை முக்கியப்படுத்தி அதை மகிமையுள்ளதாக்குவார்.

ஏசா 42:22 இந்த ஜனமோ கொள்ளையிடப்பட்டும், சூறையாடப் பட்டும் இருக்கிறார்கள்; அவர்கள் அனைவரும் கெபிகளிலே அகப்பட்டு, காவலறைகளிலே அடைக்கப் பட்டிருக்கிறார்கள்; தப்புவிப்பார் இல்லாமல் கொள்ளையாகி, விட்டுவிடு என்பார் இல்லாமல் சூறையாவார்கள்.

யூதாவிற்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. செவிடரே, கேளுங்கள்.
2. குருடரே, நோக்கிப் பாருங்கள்.

"என்தாசன்" - இந்த வாக்கியம் இஸ்ரவேலைக் குறிக்கும். இஸ்ரவேலைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் காரியங்கள்

1. செவிடன் - கர்த்தருடைய வார்த்தையைக் கேட்க மறுக்கிறார்கள். (ஏசா 42:18-20; மத் 13:13-16)
2. குருடன் - கர்த்தருடைய அதிசயங்களைக் காணாமல் இருக்கிறார்கள். (ஏசா 42:18-20; ஏசா 43:8; ஏசா 56:10; மத் 13:13-16; மத் 15:14; மத் 23:16-26)

ஏசாயா - தொகுப்புரை

42 அதிகாரம்

3. கொள்ளையிடப்பட்டவன் - இஸ்ரவேலின் பாவத்தின் நிமித்தம் கர்த்தர் அவர்களைப் பாதுகாக்கவில்லை. (ஏசா 42:22).

4. சூறையாடப்பட்டவன் - தங்களுடைய சத்துருக்களை எதிர்க்கத் திராணியற்றவர்கள்.

5. கெபிகளிலே அகப்பட்டவன் - சத்துருக்களின் நிமித்தம் பயத்தோடு ஜீவிக்கிறவர்கள்.

6. காவலறைகளிலே அடைக்கப் பட்டிருக்கிறவன் - சத்துருவினால் மேற்கொள்ளப்பட்டு சிறைப்பிடிக்கப் பட்டவர்கள்.

7. கொள்ளையாகி, சூறையாகி இருப்பவன் - தங்களைப் பாதுகாப்பதற்கு ஒருவரும் இல்லாமல் இருப்பவர்கள்.

இஸ்ரவேல் அழைக்கப்படும் விதம்

1. கர்த்தருடைய தாசன் (ஏசா 42:1)
2. புறஜாதியார் மத்தியில் கர்த்தருடைய செய்தியை அறிவிப்பதற்கு அனுப்பப்பட்ட தூதன். (ஆதி 12:1-3; கலா 3:8)
3. உத்தமன் (ஆதி 17:1; உபா 18:13)

தூதன் (messenger) - מַלְאָךְ - mal-awk' - 4397

ஆ.பெ.சொ.-தூதன்,தூதர்,தேவதூதன், தேவதூதர், ஸ்தானாதிபதி, சேவகர், அனுப்பப்பட்டவர், தூது, தூது ஆட்கள் (to dispatch as a deputy; a messenger; an angel; a prophet, priest or teacher; an ambassador)

'உத்தமன்" - கர்த்தருடைய தாசன் உத்தமனாக இருக்க வேண்டும். (ஆதி 17:1).

"நீ அநேக காரியங்களைக் கண்டும் கவனியாதிருக்கிறாய்" - (ஏசா 6:9-12; மத் 13:13-16)

(8) சிட்சிப்பதற்கு காரணங்கள்

ஏசா 42:23 உங்களில் இதற்குச் செவிகொடுத்துப் பின்வருகிறதைக் கவனித்துக் கேட்கிறவன் யார்?

ஏசா 42:24 யாக்கோபைச் சூறையிட்டு இஸ்ரவேலைக் கொள்ளைக்காரருக்கு ஒப்புக்கொடுக்கிறவர் யார்? அவர்கள் பாவஞ் செய்து விரோதித்த கர்த்தர் அல்லவோ? அவருடைய வழிகளில் நடக்க மனதாயிராமலும், அவருடைய வேதத்துக்குச் செவிகொடாமலும் போனார்களே.

ஏசா 42:25 இவர்கள்மேல் அவர் தமது கோபத்தின் உக்கிரத்தையும், யுத்தத்தின் வலிமையையும் வரப்பண்ணி, அவர்களைச் சூழ அக்கினி ஜுவாலைகளைக் கொளுத்தியிருந்தும் உணராதிருந் தார்கள்; அது அவர்களைத் தகித்தும், அதை மனதிலே வைக்காதே போனார்கள்.

யூதா அழிக்கப்பட்டார்கள் - காரணம்

1. கர்த்தருடைய வழிகளில் நடக்க மனதாயிராமற்போனார்கள்.
2. கர்த்தருடைய வேதத்துக்குச் செவிகொடாமல் போனார்கள்.

பாவத்தின் கொடிய விளைவுகள்

1. நியாயத்தீர்ப்பும், அழிவும்
2. கடின இருதயம்

43 அதிகாரம்

(9) பத்து அம்ச பாதுகாப்பு

ஏசா 43:1 இப்போதும் யாக்கோபே, உன்னைச் சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே, உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: பயப்படாதே; உன்னை மீட்டுக்கொண்டேன்; உன்னைப் பேர் சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன்.

ஏசா 43:2 நீ தண்ணீர்களைக் கடக்கும் போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை; நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய்; அக்கினிஜுவாலை உன்பேரில் பற்றாது.

ஏசா 43:3 நான் இஸ்ரவேலின் பரிசுத்தரும், உன் இரட்சகருமாயிருக்கிற உன் தேவனாகிய கர்த்தர்; உன்னை மீட்கும்பொருளாக எகிப்தையும், உனக்கு ஈடாக எத்தியோப்பியாவையும் சேபாவையும் கொடுத்தேன்.

ஏசா 43:4 நீ என் பார்வைக்கு அருமையானபடியினால் கனம் பெற்றாய்; நானும் உன்னைச் சிநேகித்தேன், ஆதலால் உனக்குப் பதிலாக மனுஷர்களையும், உன் ஜீவனுக்கு ஈடாக ஜனங்களையும் கொடுப்பேன்.

தீர்க்கதரிசன எண் - 50

"இப்போதும் யாக்கோபே, உன்னைச் சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே, உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது....." (ஏசா 43:1-7) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. நான் உன்னை மீட்டுக்கொள்வேன். (ஏசா 43:1).
2. நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இப்பேன் (ஏசா 43:2).
3. நீ ஆறுகளைக் கடக்கும்போது அலைகள் உன்மேல் புரளுவதில்லை.
4. நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய். அக்கினிஜுவாலை உன்பேரில் பற்றாது. (ஏசா 43:2).
5. உனக்குப் பதிலாக மனுஷர்களையும், உன் ஜீவனுக்கு ஈடாக ஜனங்களையும் கொடுப்பேன். (ஏசா 43:4).
6. உன் சந்ததியைக் கிழக்கிலிருந்து வரப் பண்ணி, உன்னை மேற்கிலும் இருந்து கூட்டிச்சேர்ப்பேன். (ஏசா 43:4-7).

கர்த்தர் இஸ்ரவேலுக்குச் செய்திருக்கும் காரியங்கள்

1. தமது மகிமைக்காக அவர்களைச் சிருஷ்டித்தார். (ஏசா 43:1,7,15).
2. தமக்காக அவர்களை உருவாக்கினார். (ஏசா 43:1,7,21).
3. அவர்களை மீட்டுக்கொண்டார். (ஏசா 43:1,14).
4. அவர்களைப் பேர்சொல்லி அழைத்தார். (ஏசா 43:1,7).
5. அவர்களுக்கு மீட்கும் பொருளைக் கொடுத்தார். (ஏசா 43:3-4).
6. அவர்களைச் சிநேகித்தார்.(ஏசா 43:4).
7. அவர்களைச் சிருஷ்டித்து உருவாக்கிப் படைத்தார். (ஏசா 43:7).
8. முந்திச் சம்பவிப்பவைகளைத் தெரிவித்தார். (ஏசா 43:9,12).
9. அவர்களை இரட்சித்தார். (ஏசா 43:12).
10. வரப்போகிறவைகளை அறிவித்தார். (ஏசா 43:9,12).
11. பின்வாங்கிப் போனவர்களை பரிசுத்தக் குலைச்சலாக்கினார். (ஏசா 43:28).
12. அவர்களைச் சாபத்திற்கும், நிந்தைக்கும் ஒப்புக்கொடுத்தார்.

43 அதிகாரம்

"யாக்கோபே......இஸ்ரவேலே" - இந்த அதிகாரத்தில் யாக்கோபும், இஸ்ரவேலும் எல்லாக் கோத்திரத்தாரையும் குறிப்பதற்குப் பயன்படுத்தப் பட்டுள்ளது. (ஏசா 43:1,3,14-15, 22,28).

கர்த்தர் இஸ்ரவேலுக்காகச் செய்யப் போகும் காரியங்கள்

1. தண்ணீர்களைக் கடக்கும்போது அவர்களோடு இருப்பார். (ஏசா 43:2).

2. அவர்கள் ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் அவர்கள்மேல் புரளாமல் பார்த்துக் கொள்வார்.

3. அவர்கள் அக்கினியில் நடக்கும்போது அவர்களை வேகாமல் பார்த்துக் கொள்வார். (சங் 66:2; சங் 69:1; சங் 73:10; சங் 124:4-5).

4. அவர்களுக்காக மற்றவர்களைத் தண்டிப்பார். (ஏசா 43:4).

5. எல்லா தேசங்களிலிருந்தும் அவர்களைக் கூட்டிச்சேர்ப்பார். (ஏசா 43:5-7).

6. அவர்களைப் பாதுகாப்பார். ஒருவரும் கர்த்தருடைய கிரியையைத் தடை பண்ணுவதில்லை. (ஏசா 43:13).

7. அவர்களுடைய சத்துருக்களைத் தண்டிப்பார். (ஏசா 43:14-17).

8. அவர்களுடைய சத்துருக்களை நித்தியமாக அழித்துப்போடுவார். (ஏசா 43:17).

9. அவாந்தரவெளிகளில் ஆறுகளை உண்டாக்குவார். (ஏசா 43:19-21).

10. வனாந்தரத்தில் வழியை உண்டாக்குவார். (ஏசா 43:19).

11. அவர்களுடைய மீறுதல்களைக் குலைத்துப் போடுவார். (ஏசா 43:25).

12. அவர்களுடைய பாவங்களை இனிமேல் நினைக்கமாட்டார்.

"உன்னை மீட்கும்பொருளாக எகிப்தையும்...... கொடுத்தேன்" - மீட்கும் பொருள் என்பது ஒரு கிரயத்தைச் செலுத்தி ஒரு பொருளை மீட்பது என்று பொருள். இங்கு இஸ்ரவேல் புத்திரர் மீட்கும் பொருள் செலுத்தாமலேயே அவர்களுடைய அடிமைத்தனத்திலிருந்து மீட்கப் படுகிறார்கள். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேல் புத்திரர் விடுவிக்கப்படுவது இங்கு மீட்பு என்று அழைக்கப்படுகிறது. (யாத் 6:5; யாத் 15:13). மீட்பு என்பதற்கு ஆபத்து, ஒடுக்கப்படுவது, சிறையிருப்பு ஆகியவற்றிலிருந்து மீட்கப் படுவதைக் குறிக்கும். கர்த்தர் இஸ்ரவேலுக்காக எகிப்தையும், எத்தியோப்பியாவையும், சேபாவையும், மீட்கும் பொருளாகக் கொடுத்தார். கர்த்தருடைய பிள்ளைகள் தங்களுடைய அழிவிலிருந்து மீட்கப்பட்டார்கள். இவர்களுக்குப் பதிலாக மற்றவர்களுடைய தேசங்கள் அழிந்தன. இஸ்ரவேலோ அல்லது மற்ற தேசங்களோ அழிய வேண்டிய சூழ்நிலையில் இருந்தபோது கர்த்தர் இஸ்ரவேலைப் பாதுகாத்து மற்ற தேசங்களை அழிப்பதற்குச் சித்தமானார். அழிந்த தேசங்கள் இஸ்ரவேலுக்காக மீட்கும் பொருளாயிற்று. வருங்காலத்தில் இஸ்ரவேல் தேசம் அந்திக்கிறிஸ்துவிடமிருந்து பாதுகாக்கப்படும். மற்ற தேசங்கள் அந்திக்கிறிஸ்துவினால் அடிமைப்படுத்தப் படும். (ஏசா 43:3-4; எசே 38:5-7; தானி 11:40-45,மத் 24:15-22;வெளி 12:6,14).

(10) மறுபடியும் கூட்டிச்சேர்ப்பதன் பத்து அம்சங்கள்

ஏசா 43:5 பயப்படாதே, நான் உன்னோடே இருக்கிறேன்; நான் உன் சந்ததியைக் கிழக்கிலிருந்து வரப்பண்ணி, உன்னை மேற்கிலும் இருந்து கூட்டிச்சேர்ப்பேன்.

ஏசா 43:6 நான் வடக்கை நோக்கி: கொடு என்றும், தெற்கை நோக்கி: வைத்திராதே என்றும் சொல்லி, தூரத்திலிருந்து என் குமாரரையும், பூமியின் கடையாந்தரத்திலிருந்து என் குமாரத்திகளையும்,

ஏசா 43:7 நான் என் மகிமைக்கென்று சிருஷ்டித்து உருவாக்கிப் படைத்து, என் நாமந்தரிக்கப்பட்ட யாவரையும் கொண்டுவா என்பேன்.

43 அதிகாரம்

"நான் உன் சந்ததியைக் கிழக்கிலிருந்து வரப்பண்ணி, உன்னை மேற்கிலும் இருந்து கூட்டிச்சேர்ப்பேன்" - ஏசா 43:1-4 ஆகிய வசனங்களில், இஸ்ரவேல் பாதுகாக்கப்படுவது பற்றியும், ஏசா 43:5-7 ஆகிய வசனங்களில் இஸ்ரவேல் கூட்டிச் சேர்க்கப்படுவது பற்றியும் கூறப்பட்டுள்ளது. இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரையும் பாதுகாத்து அவர்களைப் பாலஸ்தீன தேசத்திற்கு அழைத்து வருவேன் என்று கர்த்தர் ஆணையிட்டிருக்கிறார். (ஏசா 43:5-7; ஏசா 11:10-12; எரே 30-31; எசே 37; மத் 24:31).

"என் நாமந்தரிக்கப்பட்ட யாவரையும்" - இந்த வாக்கியம் கர்த்தருடைய பிள்ளைகள் அனைவரையும் குறிக்கும்.

(11) கணிப்புக்கு அழைப்புக்கூவல்

ஏசா 43:8 கண்களிருந்தும் குருடராயிருக்கிற ஜனத்தையும், காதுகளிருந்தும் செவிடராயிருக்கிறவர்களையும் புறப்பட்டு வரப்பண்ணுங்கள்.

ஏசா 43:9 சகல ஜாதிகளும் ஏகமாய்ச் சேர்ந்துகொண்டு, சகல ஜனங்களும் கூடிவரட்டும்; இதை அறிவித்து, முந்தி சம்பவிப்பவைகளை நமக்குத் தெரிவிக்கிறவன் யார்? கேட்டு மெய்யென்று சொல்லக்கூடும்படிக்கு, அவர்கள் தங்கள் சாட்சிகளைக் கொண்டுவந்து யதார்த்தவான்களாய் விளங்கட்டும்.

யூதருக்கும், புறஜாதியாருக்கும் கட்டளைகள்

1. கண்களிருந்தும் குருடராயிருக்கிற ஜனத்தைப் புறப்பட்டு வரப்பண்ணுங்கள் - இது இஸ்ரவேலைக் குறிக்கும். (ஏசா 43:8=ஏசா 42:18-22).
2. காதுகளிருந்தும் செவிடராயிருக்கிறவர்களைப் புறப்பட்டு வரப்பண்ணுங்கள்.
3. சகல ஜாதிகளும் ஏகமாய்ச் சேர்ந்து கொள்ளட்டும் - புறஜாதியார். (ஏசா 43:9).
4. சகல ஜனங்களும் கூடிவரட்டும்.

கர்த்தர் யூதரையும், புறஜாதியாரையும் கூடிவருமாறு கூறுகிறார். இதற்கான காரணங்கள்:

1. எல்லா ஜனங்களும் கர்த்தருடைய அறைகூவலைக் கேட்க வேண்டும்.
2. கர்த்தர் இஸ்ரவேலைத் தம்முடைய விசேஷித்த ஜனமாகத் தெரிந்தெடுத்திருக்கிறார். இவர்கள் ஜனங்கள் மத்தியில் கர்த்தருடைய சத்தியத்தைப் பரப்ப வேண்டும். இதை எல்லா ஜனங்களும் புரிந்து கொள்ள வேண்டும்.
3. கர்த்தர் மட்டுமே வரப்போகிற காரியங்களை முன்னறிவிக்கக் கூடியவர் என்பதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும். (ஏசா 43:8-12).

(12) இஸ்ரவேலின் ஊழியம்

ஏசா 43:10 நானே அவரென்று நீங்கள் உணர்ந்து, என்னை அறிந்து விசுவாசிக்கும்படிக்கு, நீங்களும் நான் தெரிந்துகொண்ட என் தாசனும் எனக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; எனக்குமுன் ஏற்பட்ட தேவன் இல்லை; எனக்குப்பின் இருப்பதும் இல்லை.

ஏசா 43:11 நான், நானே கர்த்தர்; என்னையல்லாமல் ரட்சகர் இல்லை.

ஏசா 43:12 நானே அறிவித்து, இரட்சித்து, விளங்கப்பண்ணினேன்; உங்களில் இப்படிச் செய்யத்தக்க அந்நிய தேவன் இல்லை; நானே தேவன் என்பதற்கு நீங்கள் எனக்குச் சாட்சிகள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

43 அதிகாரம்

தெரிந்துகொண்ட சாட்சிகள்

யூதர்களே கர்த்தருடைய சாட்சிகள். இவர்களே கர்த்தர் தெரிந்துகொண்ட அவருடைய தாசர்கள். (ஏசா 43:10; ஏசா 42:19). அவர்கள் தங்கள் மேசியாவை மறுதலித்த போது தேவனுடைய ஜனமாயிராதபடிக்கு அறுப்புண்டு போனார்கள். இப்போது யூதருடைய இடத்தில் புறஜாதியார் வந்திருக்கிறார்கள். (மத் 21:33-45; ரோமர் 11). இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது யூதர்கள் மறுபடியும் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள். இவர்கள் மறுபடியும் கர்த்தருடைய சாட்சிகளாக இருப்பார்கள். ஆயிரம் வருஷ அரசாட்சியில் யூதர்கள் தேசங்கள் மத்தியில் சுவிசேஷத்தை அறிவிப்பார்கள். (ஏசா 2:2-4; ஏசா 11:3-12; ஏசா 52:7; சக 8:23; ரோமர் 11:25-29).

கர்த்தர் யூதரைத் தமக்கு சாட்சிகளாகத் தெரிந்து கொண்டதற்குக் காரணம்

1. நானே அவரென்று நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். (ஏசா 43:10).
2. என்னை விசுவாசிக்க வேண்டும்.
3. நானே அவரென்று நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.
4. எனக்கு சாட்சிகளாயிருக்க வேண்டும். (ஏசா 43:12).

யூதர்கள் சாட்சி கூறவேண்டிய சத்தியங்கள்

1. நானே அவர். (ஏசா 43:10; ஏசா 41:4).
2. எனக்குமுன் ஏற்பட்ட தேவன் இல்லை.
3. எனக்குப்பின் இருப்பதும் இல்லை.
4. நானே கர்த்தர் (ஏசா 43:11).
5. என்னையல்லாமல் ரட்சகர் இல்லை.
6. நானே அறிவித்தேன். (ஏசா 43:12; ஏசா 41:21-24,26; ஏசா 42:8-9; ஏசா 43:9)
7. நானே இரட்சித்தேன். (ஏசா 43:12).
8. நானே விளங்கப்பண்ணினேன்

"அவர்" - (ஏசா 41:4)

"எனக்குமுன் ஏற்பட்ட தேவன் இல்லை; எனக்குப்பின் இருப்பதும் இல்லை." - கர்த்தர் மாத்திரமே நித்தியமான தேவன். (ஏசா 43:10-12).

(13) தேவனுடைய பதினெட்டு அறிவிப்புக்கள் - (40:12-41:29; 44:6-20)

ஏசா 43:13 நாள் உண்டாகாததற்கு முன்னும் நானே இருக்கிறேன்; என் கைக்குத் தப்புவிக்கத்தக்கவன் இல்லை; நான் செய்கிறதைத் தடுப்பவன் யார்?

ஏசா 43:14 நான் உங்களுக்காக அரண்களெல்லாம் இடிந்துவிழவும், கல்தேயர் படவுகளிலிருந்து அலறவும் செய்யத்தக்கவர்களைப் பாபிலோனுக்கு அனுப்பினேனென்று, உங்கள் மீட்பரும் இஸ்ரவேலின் பரிசுத்தருமாகிய கர்த்தர் சொல்லுகிறார்.

ஏசா 43:15 நானே உங்கள் பரிசுத்தராகிய கர்த்தரும்,இஸ்ரவேலின் சிருஷ்டிகரும், உங்கள் ராஜாவுமானவர்.

ஏசா 43:16 சமுத்திரத்திலே வழியையும் வலிய தண்ணீர்களிலே பாதையையும் உண்டாக்கி,

ஏசா 43:17 இரதங்களையும் குதிரைகளையும் இராணுவங்களையும் பராக்கிரமசாலிகளையும் புறப்படப் பண்ணி, அவைகள் எழுந்திராதபடிக்கு ஒருமித்து விழுந்து கிடக்கவும், ஒரு திரி அணைகிறதுபோல் அவைகள் அணைந்து போகவும்பண்ணுகிற கர்த்தர் சொல்லுகிறதாவது;

ஏசா 43:18 முந்தினவைகளை நினைக்க வேண்டாம்; பூர்வமானவைகளைச் சிந்திக்க வேண்டாம்.

43 அதிகாரம்

ஏசா 43:19 இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்; இப்பொழுதே அது தோன்றும்; நீங்கள் அதை அறியீர்களா? நான் வனாந்தரத்திலே வழியையும், அவாந்தரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன்.

ஏசா 43:20 நான் தெரிந்துகொண்ட என் ஜனத்தின் தாகத்துக்கு வனாந்தரத்திலே தண்ணீர்களையும் அவாந்தரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவதினால், காட்டு மிருகங்களும், வலுசர்ப்பங்களும், கோட்டான் குஞ்சுகளும் என்னைக் கனம்பண்ணும்.

ஏசா 43:21 இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்; இவர்கள் என் துதியைச் சொல்லி வருவார்கள்.

"தேவன் இருக்கிறார்" என்னும் அறிவிப்புக்கள்

1. நான் உண்டாகாததற்கு முன்னும் நானே இருக்கிறேன் (ஏசா 43:13).
2. என் கைக்குத் தப்புவிக்கத்தக்கவன் இல்லை.
3. நான் செய்கிறதைத் தடுப்பவன் இல்லை.
4. நானே உங்கள் மீட்பர். (ஏசா 43:14).
5. இஸ்ரவேலின் பரிசுத்தர்.
6. உங்கள் நிமித்தம் பாபிலோனை நியாயம் விசாரித்தேன்.
7. நானே உங்கள் பரிசுத்தராகிய கர்த்தர் (ஏசா 43:15).
8. நானே இஸ்ரவேலின் சிருஷ்டிகர்.
9. நானே உங்கள் ராஜாவுமானவர்.
10. நானே சமுத்திரத்திலே வழியையும் வலிய தண்ணீர்களிலே பாதையையும் உண்டாக்கினவர். (ஏசா 43:16).
11. நானே வலிய சேனைகளை அழித்தேன். (ஏசா 43:17).
12. நான் புதிய காரியத்தைச் செய்கிறேன் (ஏசா 43:19).
13. நான் வனாந்தரத்திலே வழியை உண்டாக்குகிறேன்.
14. நான் அவாந்தரவெளியிலே ஆறுகளை உண்டாக்குகிறேன்.
15. காட்டுமிருகங்களும், வலுசர்ப்பங்களும், கோட்டான் குஞ்சுகளும் என்னைக் கனம் பண்ண வைக்கிறேன். (ஏசா 43:20).
16. என் ஜனத்தின் தாகத்துக்கு வனாந்தரத்திலே தண்ணீர்களை உண்டாக்குகிறேன்.
17. இஸ்ரவேல் ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன் (ஏசா 43:21).
18. இவர்கள் என் துதியைச் சொல்லி வருவார்கள் என்று தீர்மானித்தேன்.

தீர்க்கதரிசன எண் - 51

"உங்கள் மீட்பரும் இஸ்ரவேலின் பரிசுத்தருமாகிய கர்த்தர் சொல்லுகிறார்......" (ஏசா 43:14-21) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. நான் பாபிலோனின் பிரபுக்களையும், கல்தேயரின் பிரபுக்களையும் தண்டிப்பேன். (ஏசா 43:14).
2. அவர்கள் நித்தியமாகத் தண்டிக்கப் படுவார்கள். (ஏசா 43:17).
3. நான் புதிய காரியத்தைச் செய்வேன். (ஏசா 43:19; ஏசா 35:1-7).
4. இந்தத் தண்ணீர்களினிமித்தம் காட்டுமிருகங்கள் என்னைக் கனம் பண்ணும். (ஏசா 43:20).

ஏசாயா - தொகுப்புரை

43 அதிகாரம்

5. என் ஜனத்தின் தாகத்துக்கு வனாந்தரத்திலே தண்ணீர்களையும் அவாந்தரவெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன். (ஏசா 43:20; ஏசா 35:1-7; எசே 47; சக 14:8).

6. யூதர்கள் என் துதியைச் சொல்லி வருவார்கள். (ஏசா 43:21).

பாபிலோனின் வருங்கால அழிவு

இந்தச் சம்பவம் ஏற்கெனவே நிகழ்ந்து விட்டதுபோன்று ஏசாயா கூறுகிறார். பாபிலோன் அழிக்கப்படும்போது இவை நிறைவேறும். (ஏசா 43:14; வெளி 16:19; வெளி 18:1-24).

இதற்கான ஆதாரங்கள்

1. கோரேசு பாபிலோனை அழித்தபோது கப்பலில் உள்ளவர்கள் அலறவில்லை. (வெளி 18:15-19)

2. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது கர்த்தர் இஸ்ரவேலின் ராஜாவாக இருப்பார். (ஏசா 43:15;ஏசா 9:6-7; தானி 2:44-45; தானி 7:13-14,27; சக 14:9; லூக்கா 1:32-33; வெளி 11:15)

3. கோரேசு பாபிலோனைப் பிடித்த போது கர்த்தர் எந்தச் சேனையையும் அழிக்க வில்லை. அர்மெகதோன் யுத்தத்தில் கர்த்தர் அந்திக்கிறிஸ்துவின் சேனையை அக்கினியினாலும் மற்ற உபாயங்களினாலும் அழித்துப் போடுவார். (ஏசா 43:17; எசே 38:17-21;2தெச 1:7-10;வெளி 19)

4. ஏசா 43:19-20 ஆகிய வசனங்கள் இயேசு கிறிஸ்து இரண்டாம் முறையாக பூமிக்கு வரும்போது ஆயிரம் வருஷ அரசாட்சியில் முதன் முறையாக நிறைவேறும். (ஏசா 35:1-7; எசே 47; சக 14:8)

5. ஏசா 43:21 ஆவது வசனத்தில் கூறப்பட்டுள்ள பிரகாரம் இஸ்ரவேலர்கள் இன்னும் கர்த்தருடைய துதியைச் சொல்லி வரவில்லை.

(14) இஸ்ரவேலின் எட்டு தோல்விகள்

ஏசா 43:22 ஆனாலும் யாக்கோபே, நீ என்னை நோக்கிக் கூப்பிடவில்லை; இஸ்ரவேலே, நீ என்னைக் குறித்து மனஞ்சலித்துப்போனாய்.

ஏசா 43:23 உன் ஆடுகளை தகனபலி களாக நீ எனக்குச் செலுத்தவில்லை; உன் பலிகளாலே நீ என்னைக் கனம் பண்ணவுமில்லை; காணிக்கைகளைச் செலுத்தும்படி நான் உன்னைச் சங்கடப் படுத்தாமலும், தூபங்காட்டும்படி உன்னை வருத்தப்படுத்தாமலும் இருந்தேன்.

ஏசா 43:24 நீ எனக்குப் பணங்களால் சுகந்த பட்டையைக் கொள்ளாமலும், உன் பலிகளின் நிணத்தினால் என்னைத் திருப்தியாக்காமலும், உன் பாவங்களினால் என்னைச் சங்கடப்படுத்தி, உன் அக்கிரமங்களினால் என்னை வருத்தப்படுத்தினாய்.

இஸ்ரவேலின் தோல்வி

1. நீ என்னை நோக்கிக் கூப்பிடவில்லை (ஏசா 43:22).

2. நீ என்னைக் குறித்து மனஞ்சலித்துப் போனாய்.

3. உன் ஆடுகளைத் தகனபலிகளாக நீ எனக்குச் செலுத்தவில்லை (ஏசா 43:23).

4. உன் பலிகளாலே நீ என்னைக் கனம்பண்ணவில்லை.

5. நீ எனக்குப் பணங்களால் சுகந்த பட்டையைக் கொள்ளவில்லை. (ஏசா 43:24; எரே 6:20).

6. உன் பலிகளின் நிணத்தினால் என்னைத் திருப்தியாக்கவில்லை.

43 அதிகாரம்

7. உன் பாவங்களினால் என்னைச் சங்கடப்படுத்தினாய்.

8. உன் அக்கிரமங்களினால் என்னை வருத்தப்படுத்தினாய்.

"யாக்கோபே.........இஸ்ரவேலே" - இந்தப் பெயர்கள் யூதா தேசத்தை மட்டும் என்று குறிக்காமல் இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரையும் குறிக்கிறது.

"ஆடுகளை தகனபலிகளாக" - (யாத் 29:38).

"சுகந்த பட்டை" (sweet cane) - (யாத் 30:23; உன் 4:14; எசே 27:19, எரே 6:20).

(15) ஒப்புரவாகுதலின் வாக்குத்தத்தம்

ஏசா 43:25 நான், நானே உன் மீறுதல்களை என் நிமித்தமாகவே குலைத்துப்போடுகிறேன்; உன் பாவங்களை நினையாமலும் இருப்பேன்.

ஏசா 43:26 நாம் ஒருவரோடொருவர் வழக்காடும்படி, எனக்கு நினைப்பூட்டு; நீ நீதிமானாக விளங்கும்படி உன் காரியத்தைச் சொல்.

"நான், நானே உன் மீறுதல்களை என் நிமித்தமாகவே குலைத்துப்போடுகிறேன்" - ஏசா 43:24 ஆவது வசனத்தில் கர்த்தர் இஸ்ரவேலரைக் குற்றப்படுத்திய பின்பு அவர்களுடைய மீறுதல்களைக் குலைத்துப் போடுவதாகவும், அவர்களுடைய பாவங்களை நினையாமல் இருப்பதாகவும் வாக்குப் பண்ணுகிறார். இவற்றைத் தம் நிமித்தமாகவே செய்வதாகக் கூறுகிறார். இவை நடைபெற வேண்டுமென்றால் இஸ்ரவேல் மனந்திருந்த வேண்டும். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போதுதான் இஸ்ரவேல் மனந் திரும்பும். (சக 12:10-13:1; ரோமர் 11:25-29).

"என் நிமித்தமாகவே" - பாவிகளுக்குத் தண்டனை நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் கர்த்தர் தம்முடைய கிருபையினாலும், இரக்கத்தினாலும் பாவிகளை இரட்சிக்கிறார். "என்னையல்லாமல் இரட்சகர் இல்லை" (ஏசா 43:11) என்று அறிவிக்கிறார். கர்த்தரின் நிமித்தமாகவே மனுஷருடைய பாவங்கள் மன்னிக்கப்படுகிறது. மனுஷன் நரகத்தின் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்கிறான். பாவங்கள் மன்னிக்கப்பட்ட மனுஷன் இனிமேல் தனக்கென்று வாழாமல் கர்த்தருடைய மகிமைக்காகவே வாழ வேண்டும். மனுஷன் தன்னைத்தானே நீதிமானாக நியாயந்தீர்த்துக் கொள்ளக் கூடாது. கர்த்தரிடத்தில் பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ளாவிட்டால் மனுஷருக்குப் பாவமன்னிப்பே இல்லை.

"நாம் ஒருவரொடோருவர் வழக்காடும்படி, எனக்கு நினைப்பூட்டு" - கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு நீண்ட காலமாகத் தொடர்பு வைத்திருக்கிறார். இஸ்ரவேலர் பக்கத்தில் ஏதாவது நியாயம் இருக்குமென்றால் அவர்கள் அவற்றைக் கர்த்தரிடம் எடுத்துக்கூறலாம். ஆனால் அவர்களோ கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தவர்கள். ஆகையினால் கர்த்தர் அவர்கள்மீது குற்றம் சுமத்துகிறார். (ஏசா 43:24,27) அவர்களுடைய பாவங்களினிமித்தம் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். (ஏசா 43:28).

(16) தற்போதுள்ள சாபத்திற்கு காரணங்கள்

ஏசா 43:27 உன் ஆதிதகப்பன் பாவஞ்செய்தான்; உனக்கு முன்னின்று பேசுகிறவர்களும் எனக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணினார்கள்.

ஏசா 43:28 ஆகையால், நான் பரிசுத்த ஸ்தலத்தின் தலைவர்களைப் பரிசுத்தக் குலைச்சலாக்கி, யாக்கோபைச் சாபத்துக்கும், இஸ்ரவேலை நிந்தனைக்கும் ஒப்புக்கொடுப்பேன்.

"உன் ஆதிதகப்பன்" - இது ஆதாமைக் குறிக்காது. ஏனெனில் ஆதாம் யூதருக்கு மட்டும் தகப்பன் என்று இராமல் முழு உலகத்தாரும் தகப்பனாக இருக்கிறான். ஆபிரகாமே யூதருடைய தகப்பனாக இருக்கிறவன். (மத் 3:9; யோவான் 8:33,39).

ஏசாயா - தொகுப்புரை

43 அதிகாரம்

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் ஆபிரகாமின் பாவங்கள்

1. பொதுவான பாவங்கள் (ரோமர் 3:23)
2. விக்கிரகாராதனை (யோசு 24:2)
3. சோதனை வேளையில் அவிசுவாசத்தினால் தேசத்தை விட்டுப் புறப்பட்டுப்போனது. (ஆதி 12:10)
4. சாராளின் நிமித்தமாக எகிப்தியர் தன்னைக் கொன்றுபோடுவார்கள் என்று அவிசுவாசத்தோடு இருந்தது. (ஆதி 12:11-13)
5. ஏமாற்றுதல் (ஆதி 12:13,18-20)
6. ஆகாரின் மூலமாகச் சந்ததியை உண்டாக்க வேண்டும் என்னும் அவிசுவாசம். (ஆதி 20:2,12)
7. மறுபடியும் ஏமாற்றுதல். (ஆதி 20:2,12)

"உனக்கு முன்னின்று பேசுகிறவர்கள்" - இவர்கள் பரிசுத்த ஸ்தலத்தின் ஆசாரியரும், லேவியரும் ஆவார்கள். (ஏசா 43:28)

44 அதிகாரம்

(17) பத்து அம்ச மீட்பு

ஏசா 44:1 இப்போதும், என் தாசனாகிய யாக்கோபே, நான் தெரிந்துகொண்ட இஸ்ரவேலே கேள்.

ஏசா 44:2 உன்னை உண்டாக்கினவரும், தாயின் கர்ப்பத்தில் உன்னை உருவாக்கினவரும், உனக்குத் துணைசெய்கிறவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: என் தாசனாகிய யாக்கோபே, நான் தெரிந்துகொண்ட யெஷூரனே, பயப்படாதே.

ஏசா 44:3 தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன்; உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்.

ஏசா 44:4 அதினால் அவர்கள் புல்லின் நடுவே நீர்க்கால்களின் ஓரத்திலுள்ள அலரிச்செடிகளைப்போல வளருவார்கள்.

ஏசா 44:5 ஒருவன், நான் கர்த்தருடையவன் என்பான்; ஒருவன், யாக்கோபின் பேரைத் தரித்துக் கொள்வான்; ஒருவன், தான் கர்த்தருடையவன் என்று கையெழுத்துப் போட்டு, இஸ்ரவேலின் நாமத்தைத் தரித்துக்கொள்வான்.

தீர்க்கதரிசன எண் - 52

"இப்போதும், என் தாசனாகிய யாக்கோபே, நான் தெரிந்துகொண்ட இஸ்ரவேலே கேள்....." (ஏசா 44:1-5) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. தாகமுள்ளவன்மேல் தண்ணீரை ஊற்றுவேன். (ஏசா 44:3).
2. வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளை ஊற்றுவேன்.
3. உன் சந்ததியின்மேல் என் ஆவியை ஊற்றுவேன்.
4. உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தை ஊற்றுவேன்.
5. அதினால் அவர்கள் புல்லின் நடுவே நீர்க்கால்களின் ஓரத்திலுள்ள அலரிச் செடிகளைப்போல வளருவார்கள். (ஏசா 44:4).
6. "நான் கர்த்தருடையவன்" என்று அனைவரும் அறிக்கையிடுவார்கள். (ஏசா 44:5).
7. யாக்கோபின் பேரைத் தரித்துக் கொள்வது அதிகமாக இருக்கும்.
8. இஸ்ரவேலின் நாமத்தையும் அநேகர் தரித்துக்கொள்வார்கள்.

"யாக்கோபு" - யாக்கோபு, இஸ்ரவேல், யூதா ஆகியோர் நடுவே ஏசாயா எந்த வித்தியாசமும் காண்பிக்கவில்லை. (ஏசா 44:1-2,5,6,21,23,26).

"தாசன்" - (ஏசா 42:1)

கர்த்தர் யூதருக்காகச் செய்திருக்கும் காரியங்கள்

1. அவர்களை உண்டாக்கினார்.
2. தாயின் கர்ப்பத்தில் அவர்களை உருவாக்கினார்.
3. அவர்களைத் தெரிந்துகொண்டார். (ஏசா 44:1-2).

"என் தாசனாகிய யாக்கோபே.....பயப்படாதே" - இஸ்ரவேலின் பாவத்தைக் குறித்து அவர்களுக்கு உணர்த்திக்கூறி அவர்களைச் சபித்த பின்பு, (ஏசா 43:23-28), கர்த்தர் இந்த வாக்கியங்களைக் கூறுகிறார். தம்முடைய கிருபையையும், இரக்கத்தையும் அவர்கள் கூட்டிச் சேர்க்கப்படப்போவதையும் குறித்து கர்த்தர் அவர்களுக்கு வாக்குப்பண்ணுகிறார். (ஏசா 44:1-5).

"யெஷூரன்" **(Jesurun)** - இந்தப் பெயருக்கு "உத்தமன், நேர்மையானவன்" **"the upright one"** என்று பொருள். மறுபெயர் **"Jeshurun"** (உபா 32:15).

44 அதிகாரம்

"தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன்" - ஏசா 44:3 ஆவது வசனத்தின் முதலாவது பகுதி ஏசா 35:1-6; ஏசா 41:17-20 ஆகிய வசனங்களில் முன்னறிவிக்கப்பட்ட பிரகாரம் வனாந்தரங்கள் திருத்தப்படுவதையும் வறண்ட நிலங்களையும் ஆறுகள் பாய்ந்து ஓடுவதையும் குறிப்பிடுகிறது. இந்த வசனத்தின் மீதமுள்ள பகுதி ஆவிக்குரிய அருள்மாரியைப் பற்றிக் குறிப்பிடுகிறது. வருங்கால உபத்திரவக் காலத்தில் பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரி தாராளமாக இருக்கும். (அப் 2:16-21; சக 12:10-13:1) ஆயிரம் வருஷ அரசாட்சியிலும் ஆவிக்குரிய அருள்மாரி இருக்கும். (ஏசா 44:3; ஏசா 32:15).

"உன் சந்ததி" - ஆயிரம் வருஷ அரசாட்சியிலும், புதிய பூமியிலும் பிள்ளைகள் பிறப்பார்கள் என்னும் சத்தியம் வேதாகமத்தில் பல வசனங்களில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. (ஏசா 9:6-7; ஏசா 59:20-21; ஏசா 65:20-26; எசே 43:7; தானி 2:44-45; தானி 7:13-14, 18,27; சக 8:1-8; சக 14:16-21; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 20:4-10)

"நீர்க்கால்களின் ஓரத்திலுள்ள அலரிச்செடி களைப்போல வளருவார்கள்" - ஆயிரம்வருஷ அரசாட்சியிலும், புதிய பூமியிலும் பிறக்கும் பிள்ளைகள் கிருபையிலும், ஆரோக்கியத்திலும் சிறந்து விளங்குவார்கள்.

"ஒருவன், நான் கர்த்தருடையவன் என்பான்" - மேசியாவின் காலத்தில் இஸ்ரவேல் தேசம் தேவனுடைய சந்ததியார் என்பதை எல்லா ஜனங்களும் அங்கிகரிப்பார்கள்.

(18) தேவனும் விக்கிரகங்களும்

(அ) தேவனுடைய பன்னிரெண்டு அறிவிப்புக்கள்-(40:12-41; 43:13-21)

ஏசா 44:6 நான் முந்தினவரும், நான் பிந்தினவருந்தானே; என்னைத் தவிர தேவன் இல்லையென்று,இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தரும், சேனைகளின் கர்த்தராகிய அவனுடைய மீட்பரும் சொல்லுகிறார்.

ஏசா 44:7 பூர்வகாலத்து ஜனங்களை நான் ஸ்தாபித்தது முதற்கொண்டு, என்னைப் போல எதையாகிலும் வரவழைத்து, இன்னின்னதென்று முன்னறிவித்து, எனக்கு முன்னே வரிசையாக நிறுத்தத்தக்கவன் யார்? நிகழ்காரியங்களையும் வருங் காரியங்களையும் தங்களுக்கு அவர்கள் அறிவிக்கட்டும்.

ஏசா 44:8 நீங்கள் கலங்காமலும் பயப்படாமலும் இருங்கள்; அக்கால முதற்கொண்டு நான் அதை உனக்கு விளங்கப் பண்ணினதும் முன்னறிவித்ததும் இல்லையோ? இதற்கு நீங்களே என் சாட்சிகள்; என்னைத் தவிர தேவனுண்டோ? வேறொரு கன்மலையும் இல்லையே; ஒருவனையும் அறியேன்.

"கர்த்தர் இருக்கிறார்" என்பதை அறிவிக்கும் வாக்கியங்கள்

1. "சேனைகளின் கர்த்தராகிய அவனுடைய மீட்பரும் சொல்லுகிறார்." (ஏசா 44:6). கர்த்தர் பேசுவதினால் அவர் ஜீவனுள்ளவர்.
2. இஸ்ரவேலின் ராஜா.
3. இஸ்ரவேலின் மீட்பர்.
4. சேனைகளின் கர்த்தர்.
5. முந்தினவரும், பிந்தினவரும்
6. என்னைத் தவிர தேவன் இல்லை.
7. வருங்கால காரியங்களைக் கட்டளையிடுகிறவர். (ஏசா 44:7)
8. நிகழ்கால காரியங்களை அறிவிக்கிறவர்.
9. ஒவ்வொரு காரியத்தையும் வரிசைப்படுத்துகிறவர்.
10. வரப்போகிற காரியங்களைக் காண்பிக்கிறவர்.

ஏசாயா - தொகுப்புரை

44 அதிகாரம்

11. இஸ்ரவேலை நியமித்த காலம் முதற்கொண்டு எல்லாக் காரியங்களையும் விளங்கப் பண்ணுகிறவர். (ஏசா 44:7-8)

12. தம்மைத்தவிர தேவனோ, வேறொரு கன்மலையோ இல்லை என்று அறிவிக்கிறவர். (ஏசா 44:8)

"இஸ்ரவேலின் ராஜா" - ஏசாயா கர்த்தரை ஒரு ராஜாவாக நான்கு வசனங்களில் கூறியிருக்கிறார். (ஏசா 44:6; ஏசா 33:22; ஏசா 41:21; ஏசா 43:15; மத் 2:2; மத் 27:11,42).

"மீட்பர்" - வேதாகமத்தில் மீட்பர் என்னும் வார்த்தை 18 தடவைகள் வந்துள்ளது. அதில் ஏசாயாவில் மாத்திரம் 13 தடவைகள் வந்துள்ளது. (ஏசா 44:6,24; ஏசா 41:14; ஏசா 43:14; ஏசா 47:4; ஏசா 48:17; ஏசா 49:20; ஏசா 60:16; ஏசா 63:16; யோபு 19:25; சங் 19:14; சங் 78:35; நீதி 23:11; எரே 50:34).

"நான் முந்தினவரும், நான் பிந்தினவருந்தானே" - இந்த வாக்கியம் வெளி 1:17 ஆவது வசனத்தில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. (ஏசா 41:4)

ஏசாயாவில் "என்னைத்தவிர" என்னும் வாக்கியத்தின் பயன்பாடு

1. என்னையல்லாமல் ரட்சகர் இல்லை. (ஏசா 43:11).
2. என்னைத் தவிர தேவன் இல்லை (ஏசா 44:6).
3. என்னைத் தவிர தேவனுண்டோ? (ஏசா 44:8).
4. என்னைத் தவிர தேவன் இல்லை (ஏசா 45:5).
5. என்னைத் தவிர ஒருவருமில்லை. (ஏசா 45:6).
6. என்னைத் தவிர வேறொருவருமில்லை. (ஏசா 45:21).
7. என்னையல்லாமல் வேறே தேவன் இல்லை. (ஏசா 45:21).

வேதாகமத்தின் மற்ற புஸ்தகங்களில் "என்னைத்தவிர" என்னும் வாக்கியத்தின் பயன்பாடு

1. கர்த்தரே தேவன். அவரையல்லாமல் வேறொருவருமில்லை. (உபா 4:35; உபா 32:39).
2. உம்மையல்லாமல் வேறொருவருமில்லை. (1சாமு 2:2).
3. தேவரீருக்கு நிகரானவர் இல்லை. உம்மைத்தவிர வேறே தேவனும் இல்லை. (2சாமு 7:22; 1நாளா 17:20).
4. என்னையன்றி இரட்சகர் ஒருவருமில்லை. (ஓசி 13:4).

"என்னைப் போல எதையாகிலும் வரவழைத்து, இன்னின்னதென்று முன்னறிவித்து, எனக்கு முன்னே வரிசையாக நிறுத்தத்தக்கவன் யார்?" - கர்த்தர் தம்முடைய வல்லமையை இங்கு வெளிப்படுத்திக் காண்பிக்கிறார். காலத்தையும், அதில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் கர்த்தரே வரிசைப்படுத்துகிறவர். (ஏசா 44:7-8).

"ஒருவனையும் அறியேன்" - கர்த்தர் சர்வ ஞானமுள்ளவர். எல்லாவற்றையும் அறிந்திருக்கிறவர். அவரைத்தவிர வேறொரு தேவன் இல்லை. கர்த்தர் வேறு யாரையும் தேவனாக அறியார்.

(ஆ) விக்கிரகாராதனைக் காரரின் மதியீனம்

ஏசா 44:9 விக்கிரகங்களை உருவாக்குகிற யாவரும் வீணர்; அவர்களால் இச்சிக்கப்பட்டவைகள் ஒன்றுக்கும் உதவாது; அவைகள் ஒன்றும் காணாமலும், ஒன்றும் அறியாமலும் இருக்கிறதென்று தங்களுக்கு வெட்கமுண்டாக அவைகளுக்குத் தாங்களே சாட்சிகளாயிருக்கிறார்கள்.

ஏசா 44:10 ஒன்றுக்கும் உதவாத தெய்வத்தை உருவாக்கி, விக்கிரகத்தை வார்ப்பிக்கிறவன் எப்படிப்பட்டவன்?

ஏசா 44:11 இதோ, அவனுடைய கூட்டாளிகளெல்லாரும் வெட்கமடைவார்கள்; தொழிலாளிகள் நரஜீவன்கள் தானே; அவர்கள் எல்லாரும் கூடிவந்து நிற்கட்டும்; அவர்கள் ஏகமாய்த் திகைத்து வெட்கப்படுவார்கள்.

44 அதிகாரம்

விக்கிரகாராதனைக்காரரின் மதியீனம்

1. விக்கிரகங்களை உருவாக்குகிற யாவரும் வீணர் (ஏசா 44:9).

2. அவர்களால் இச்சிக்கப்பட்டவைகள் ஒன்றுக்கும் உதவாது.

3. அவைகள் ஒன்றும் காணாமலும், ஒன்றும் அறியாமலும் இருக்கிறதென்று தங்களுக்கு வெட்கமுண்டாக அவைகளுக்குத் தாங்களே சாட்சிகளாயிருக்கிறார்கள்.

4. விக்கிரகாராதனைக் காரருடைய கூட்டாளி கனெல்லாரும் வெட்கமடைவார்கள் (ஏசா 44:9-11).

இச்சித்தல் **(delectable) - חָמַד - khaw-mad' - 2530**

வினைச்சொல் - விரும்பு, இச்சித்திரு, மதுரமுள்ளதாயிரு, வாஞ்சையாயிரு, நலமாயிரு, வடிவாயிரு **(delight; beauty; greatly loved; covet; desire; precious)**

"அவனுடைய கூட்டாளிகளெல்லாரும் வெட்கமடைவார்கள்" - உபத்திரவத்தின் காலத்திலும், நியாயத்தீர்ப்பின் நாளிலும் விக்கிரகாராதனைக் காரருடைய விக்கிரகங்கள் அவர்களுக்கு உதவி புரியாது. அப்போது அவர்களும், அவர்களுடைய கூட்டாளிகளும் வெட்கமடைவார்கள். (ஏசா 44:9-11).

(இ) விக்கிரகம் மாயை என்பதற்கு இருபது ஆதாரங்கள்

ஏசா 44:12 கொல்லன் இரும்பைக் குறட்டால் இடுக்கி, உலையிலே காயவைத்து, சுத்திகளால் அதை உருவாக்கி, தன் புயபலத்தினால் அதைப் பண்படுத்துகிறான்; பட்டினியாயிருந்து பெலனற்றுப் போகிறான்; தண்ணீர் குடியாமல் களைத்துப்போகிறான்.

ஏசா 44:13 தச்சன் நூல்பிடித்து, மட்டப் பலகையால் மரத்துக்குக் குறிபோட்டு, உளிகளினால் உருப்படுத்தி, கவராசத்தினால் அதை வகுத்து, மனுஷ சாயலாக மனுஷ ரூபத்தின்படி உருவமாக்குகிறான்; அதைக் கோவிலிலே நாட்டி வைக்கிறான்.

ஏசா 44:14 அவன் தனக்குக் கேதுருக்களை வெட்டுகிறான்; ஒரு மருதமரத்தையாவது ஒரு கர்வாலி மரத்தையாவது, தெரிந்துகொண்டு, காட்டுமரங்களிலே பெலத்த மரத்தைத் தன் காரியத்துக்காக வளர்க்கிறான்; அல்லது அசோக மரத்தை நடுகிறான், மழை அதை வளரச்செய்யும்.

ஏசா 44:15 மனுஷனுக்கு அவைகள் அடுப்புக்காகும்போது, அவன் அவைகளில் எடுத்துக் குளிர்காய்கிறான்; நெருப்பை மூட்டி அப்பமும் சுடுகிறான்; அதினால் ஒரு தெய்வத்தையும் உண்டுபண்ணி, அதைப் பணிந்துகொள்ளுகிறான்; ஒரு விக்கிரகத்தையும் அதினால் செய்து, அதை வணங்குகிறான்.

ஏசா 44:16 அதில் ஒரு துண்டை அடுப்பில் எரிக்கிறான்; ஒரு துண்டினால் இறைச்சியைச் சமைத்துப் புசித்து, பொரியலைப் பொரித்து திருப்தியாகி, குளிருங்காய்ந்து; ஆஆ, அனலானேன்; நெருப்பைக் கண்டேன் என்று சொல்லி;

ஏசா 44:17 அதில் மீதியான துண்டை தனக்கு விக்கிரக தெய்வமாகச் செய்து, அதற்குமுன் விழுந்து, அதை வணங்கி: நீ என் தெய்வம், என்னை இரட்சிக்க வேண்டும் என்று அதை நோக்கி மன்றாடுகிறான்.

விக்கிரகாராதனைக்காரரின் வீணான கிரியைகள்

1. கொல்லன் இரும்பைக் குறட்டால் இடுக்கி, உலையிலே காயவைக்கிறான். (ஏசா 44:12).

2. சுத்திகளால் அதை உருவாக்குகிறான்.

3. தன் புயபலத்தினால் அதைப் பண்படுத்துகிறான்.

44 அதிகாரம்

4. பட்டினியாயிருந்து பெலனற்றுப் போகிறான். தண்ணீர் குடியாமல் களைத்துப் போகிறான்.

5. தச்சன் நூல்பிடித்துப் பார்க்கிறான். (ஏசா 44:13).

6. மட்டப் பலகையால் மரத்துக்குக் குறிபோடுகிறான்.

7. உளிகளினால் உருப்படுத்தி, கவராசத்தினால் அதை வகுக்கிறான்.

8. மனுஷ சாயலாக மனுஷரூபத்தின்படி உருவமாக்குகிறான்.

9. மனுஷன் மரங்களை விறகு எரிப்பதற்கும், விக்கிரகங்களைச் செய்வதற்கும் பயன்படுத்துகிறான். (ஏசா 44:14-17)

10. ஒரு விக்கிரகத்தை மரத்தினால் செய்து, அதை வணங்குகிறான். (ஏசா 44:7-20).

(ஈ) விக்கிரகாராதனைக் காரரின் மதியீனம்

ஏசா 44:18 அறியாமலும் உணராமலும் இருக்கிறார்கள்; காணாதபடிக்கு அவர்கள் கண்களும், உணராதபடிக்கு அவர்கள் இருதயமும் அடைக்கப்பட்டிருக்கிறது.

ஏசா 44:19 அதில் பாதியை அடுப்பில் எரித்தேன்; அதின் தழலின்மேல் அப்பத்தையும் சுட்டு, இறைச்சியையும் பொரித்துப் புசித்தேன்; அதில் மீதியான துண்டை நான் அருவருப்பான விக்கிரகமாக்கலாமா? ஒரு மரக்கட்டையை வணங்கலாமா என்று சொல்ல, தன் மனதில் அவனுக்குத் தோன்றவில்லை; அம்மாத்திரம் அறிவும் சொரணையும் இல்லை.

ஏசா 44:20 அவன் சாம்பலை மேய்கிறான்; வஞ்சிக்கப்பட்ட மனம் அவனை மோசப்படுத்தினது; அவன் தன் ஆத்துமாவைத் தப்புவிக்காமலும்: என் வலது கையிலே அபத்தம் அல்லவோ இருக்கிறதென்றும் சொல்லாமலும் இருக்கிறான்.

விக்கிரகாராதனைக்காரரின் மதியீனம்

1. அறியாமலும் உணராமலும் இருக்கிறார்கள் (ஏசா 44:18).

2. காணாதபடிக்கு அவர்கள் கண்கள் அடைக்கப்பட்டிருக்கிறது. (ஏசா 44:18; மத் 13:14-15).

3. உணராதபடிக்கு அவர்கள் இருதயம் அடைக்கப்பட்டிருக்கிறது. (ஏசா 44:18; ஏசா 6:9-11; மத் 13:14-15).

4. தங்களுடைய அருவருப்பான கிரியைகள் அவர்களுடைய மனதில் தோன்றவில்லை. (ஏசா 44:19).

5. விக்கிரகத்தைச் செய்யும் மரத்தினால் அப்பத்தைச் சுட்டு இறைச்சியைப் பொரித்துப் புசிக்கிறான்.

6. விக்கிரகாராதனை அவனுடைய ஆத்துமாவைத் தப்புவிக்காது. (ஏசா 44:20).

7. அவர்களுடைய வஞ்சிக்கப்பட்ட மனம் அவர்களை மோசப்படுத்துகிறது.

8. விக்கிரகங்கள் தங்களுடைய பாவங்களைக் கழுவும் என்று பொய்யில் ஜீவிக்கிறார்கள்.

அடைக்கப்படுதல் **(shut) - טוּחַ - too'-akh - 2902**

வினைச்சொல் - பூசு, மூடு, அடை **(to spread over; daub; besmear; plaster)**

"வலது கையிலே அபத்தம் அல்லவோ இருக்கிறது" - விக்கிரகம் வெறுமையானது. அது மனுஷரை வஞ்சிக்கிறது. அது மனுஷரை இரட்சிக்காது.

(19) ஆவிக்குரிய மீட்பு - *(29:22)*

ஏசா 44:21 யாக்கோபே, இஸ்ரவேலே, இவைகளை நினை; நீ என் தாசன்; நான் உன்னை உருவாக்கினேன்; நீ என் தாசன்; இஸ்ரவேலே, நீ என்னால் மறக்கப்படுவதில்லை.

44 அதிகாரம்

ஏசா 44:22 உன் மீறுதல்கள் மேகத்தைப் போலவும், உன் பாவங்களைக் கார்மேகத்தைப் போலவும் அகற்றி விட்டேன்; என்னிடத்தில் திரும்பு; உன்னை நான் மீட்டுக்கொண்டேன்.

ஏசா 44:23 வானங்களே, களித்துப் பாடுங்கள்; கர்த்தர் இதைச் செய்தார்; பூதலத்தின் தாழ்விடங்களே, ஆர்ப்பரியுங்கள்; பர்வதங்களே, காடுகளே, காட்டிலுள்ள சகலமரங்களே, கெம்பீரமாய் முழங்குங்கள்; கர்த்தர் யாக்கோபை மீட்டு, இஸ்ரவேலிலே மகிமைப்படுகிறார்.

தீர்க்கதரிசன எண் - 53

"யாக்கோபே, இஸ்ரவேலே, இவைகளை நினை....." (ஏசா 44:21-23) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. நீ என் தாசன்; நான் உன்னை உருவாக்கினேன்; நீ என் தாசன்; இஸ்ரவேலே, நீ என்னால் மறக்கப் படுவதில்லை. (ஏசா 44:21).
2. உன் மீறுதல்களை மேகத்தைப் போலவும், உன் பாவங்களைக் கார்மேகத்தைப் போலவும் அகற்றிவிட்டேன் (ஏசா 44:22).
3. என்னிடத்தில் திரும்பு; உன்னை நான் மீட்டுக்கொண்டேன்.
4. கர்த்தர் யாக்கோபை மீட்டு, இஸ்ரவேலிலே மகிமைப்படுகிறார். (ஏசா 44:23).

இந்தச் சம்பவங்கள் ஏற்கெனவே நிறைவேறி விட்டதைப் போன்று ஏசாயா தனது மொழிநடையைப் பயன்படுத்தியிருக்கிறார். ஆனால் இவை இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது நடைபெறும். அப்போது இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் இரட்சிக்கப் படுவார்கள். (ஏசா 66:7-8; சக 12:10-13:1; ரோமர் 11:25-29).

"என்னிடத்தில் திரும்பு" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இஸ்ரவேல் தேசம் கர்த்தரிடத்தில் திரும்பும். (ஏசா 10:21-22; ஏசா 35:10; ஓசி 3:5; மீகா 5:3; சக 12:10-13:1; ரோமர் 11:25-29).

அறிக்கை பண்ணப்பட்ட பாவங்கள்

1. அகற்றப்படும். (ஏசா 44:22; அப் 3:19).
2. மன்னிக்கப்படும். (யாத் 34:7; 1யோவான் 1:9; 1யோவான் 2:12).
3. தவிர்க்கப்படும். **(remitted)** (மத் 26:28; மாற்கு 1:4).
4. உறைந்த மழையைப்போல வெண்மையாகும். (ஏசா 1:18).
5. பஞ்சைப்போல வெண்மையாகும். (ஏசா 1:18).
6. தேவனுடைய முதுகுக்குப்பின்னாக எறியப்படும். (ஏசா 38:17).
7. மறக்கப்படும். (ஏசா 43:25; எபி 8:12; எபி 10:17).
8. நிவிர்த்தியாக்கப்படும். (சங் 79:9; எபி 1:3).
9. மூடப்படும். (சங் 32:1; ரோமர் 4:7).
10. அகற்றப்படும்.(2சாமு 12:13; எபி 9:22).
11. மேற்குக்கும், கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரமாய் பாவங்கள் விலக்கப்படும். (சங் 103:12).
12. சமுத்திரத்தின் ஆழங்களில் போடப்படும். (மீகா 7:19).
13. கழுவப்படும். (வெளி 1:6).
14. சுமந்து தீர்க்கப்படும். (1யோவான் 3:5).
15. களையப்படும். (கொலோ 2:11).
16. மனுஷன் பாவங்கள் நீங்கி இரட்சிக்கப் படுவான். (மத் 1:21).
17. மனுஷன் பாவத்திலிருந்து விடுதலையாக்கப் படுவான். (ரோமர் 6:7,16-23; ரோமர் 8:2).

44 அதிகாரம்

18. மனுஷன் பாவங்கள் நீக்கப்பட்டு சுத்திகரிக்கப்படுவான். (1யோவான் 1:7,9).

19. மனுஷன் பாவங்களுக்கு மரிப்பான். (கொலோ 2:13; 1பேதுரு 2:24).

20. மனுஷன் மரணத்திலிருந்து உயிர்ப்பிக்கப் படுவான். (எபே 2:1-10; கொலோ 2:13).

அறிக்கை பண்ணப்படாத பாவங்களின் விளைவுகள்

1. மரணத்தை உண்டாக்கும். (ஆதி 2:17; எசே 33:8-13; ரோமர் 8:12-13).
2. ஜெபங்களைத் தடைபண்ணும். (சங் 66:18).
3. தேவனுடைய கோபத்தைத் தூண்டும். (1இராஜா 16:2).
4. தேவனை வருத்தப்படுத்தும். (ஏசா 43:24).
5. தேவனிடமிருந்து மனுஷனைப் பிரிக்கும். (ஏசா 59:2).
6. மனுஷனுக்கு எதிராகச் சாட்சி பகரும். (ஏசா 59:12; எரே 14:7).
7. தேவனைப் பாவங்களை நினைக்குமாறு செய்யும். (சங் 25:7).
8. குற்ற உணர்வை வெளிப்படுத்தும். (சங் 69:5).
9. தேவனைப் பிரவேசிக்கச் செய்யும். (ஓசி 8:13; ஓசி 9:9).
10. மனுஷருக்குச் சுமையாக இருக்கும். (2தீமோ 3:6).
11. சோர்ந்துபோகச் செய்யும். (எசே 33:10; லேவி 26:39).
12. மனுஷரைப் பட்சிக்கும். (ஏசா 64:7; எசே 4:17).
13. மனுஷரை அகற்றிப்போடும். (ஏசா 64:6).
14. மனுஷருக்குத் தண்டனையைத் தரும். (ஆமோ 3:2).
15. ஆத்துமாவை அழிக்கும். (2தெச 2:12; மத் 16:16).
16. சாத்தானுடைய பிள்ளைகளாக்கும். (1யோவான் 3:8).
17. இருதயத்தைக் கடினப்படுத்தும். (எபி 3:13).
18. பாவத்தின் ஊழியக்காரர்களாக்கும். (ரோமர் 6:7-23; யோவான் 8:34).
19. நிந்தையைக் கொடுக்கும். (நீதி 14:34).
20. தேசத்திற்கு நியாயத்தீர்ப்பை வரவழைக்கும். (ஆமோ 1:3,6,9,11,13; ஆமோ 2:1,4,6; ஆமோ 3:14).

களித்துப்பாட வேண்டியவை

1. வானங்கள்
2. பூதலத்தின் தாழ்விடங்கள்
3. பர்வதங்கள்
4. காடுகளும், காட்டிலுள்ள சகல மரங்களும்

(20) பௌதீக மீட்பின் பதினாறு அம்சங்கள் - (29:17)

ஏசா 44:24 உன் மீட்பரும், தாயின் கர்ப்பத்தில் உன்னை உருவாக்கினவருமான கர்த்தர் சொல்லுகிறதாவது: நானே எல்லாவற்றையும் செய்கிற கர்த்தர்; நான் ஒருவராய் வானங்களை விரித்து, நானே பூமியைப் பரப்பினவர்.

ஏசா 44:25 நான் கட்டுக்கதைக்காரரின் குறிகளை அபத்தமாக்கி, குறி சொல்லுகிறவர்களை நிர்மூடராக்கி, ஞானிகளை வெட்கப்படுத்தி, அவர்கள் அறிவைப் பைத்தியமாகப் பண்ணுகிறவர்.

44 அதிகாரம்

ஏசா 44:26 நான் என் ஊழியக்காரரின் வார்த்தையை நிலைப்படுத்தி, என் ஸ்தானாபதிகளின் ஆலோசனையை நிறைவேற்றி: குடியேறுவாய் என்று எருசலேமுக்கும், கட்டப்படுவீர்கள் என்று யூதாவின் பட்டணங்களுக்கும் சொல்லி, அவைகளின் பாழானஸ்தலங்களை எடுப்பிப்பவர்.

ஏசா 44:27 நான் ஆழத்தை நோக்கி: வற்றிப்போ என்றும், உன் நதிகளை வெட்டாந்தரையாக்குவேன் என்றும் சொல்லுகிறவர்.

தேவனுடைய நாமங்கள்

1. மீட்பர் (Redeemer) (ஏசா 44:6,24; ஏசா 41:14; ஏசா 43:14; ஏசா 47:4; ஏசா 48:17; ஏசா 49:7,26; ஏசா 54:5,8; ஏசா 59:20; ஏசா 60:16; ஏசா 63:16; யோபு 19:25; சங் 19:14; சங் 78:35; நீதி 23:11; எரே 50:34)

2. உருவாக்கினவர் (Creator) ஏசா 44:24; ஏசா 40:28; ஏசா 43:15; பிர 12:1; ரோமர் 1:25; 1பேதுரு 4:19)

3. செய்கிறவர் (Maker) (ஏசா 44:24; ஏசா 17:7; ஏசா 45:9,11; ஏசா 51:13; ஏசா 54:4; யோபு 4:17; யோபு 32:22; யோபு 35:10; யோபு 36:3; சங் 95:6; நீதி 14:31; நீதி 17:5; நீதி 22:2; எரே 33:2; ஓசி 8:14; எபி 11:10)

4. கர்த்தர் (Jehovah) (ஏசா 44:24-28; ஏசா 45:1-5)

கர்த்தரின் கடந்தகாலத்து கிரியைகள்

1. தாயின் கர்ப்பத்தில் இஸ்ரவேலை உருவாக்கினார்.

2. எல்லாவற்றையும் செய்தார்.

3. ஒருவராய் வானங்களை விரித்தார்.

4. பூமியைப் பரப்பினார்.

கர்த்தரின் தற்காலத்துக் கிரியைகள்

1. கட்டுக்கதைக்காரரின் குறிகளை அபத்தமாக்குகிறார்.

2. குறி சொல்லுகிறவர்களை நிர்மூடராக்குகிறார்.

3. ஞானிகளை வெட்கப்படுத்துகிறார்.

4. அவர்கள் அறிவைப் பைத்தியமாகப் பண்ணுகிறார்.

5. தம்முடைய ஊழியக்காரரின் வார்த்தையை நிலைப்படுத்துகிறார். (ஏசா 44:26).

6. தம்முடைய ஸ்தானாபதிகளின் ஆலோசனையை நிறைவேற்றுகிறார்.

அபத்தமாக்குதல் (frustrate) - פָּרַר - paw-rar' - 6565

வினைச்சொல் - பிள, நொறுக்கு, மீறு, செல்லாதபடிசெய், செல்லாதபடி பண்ணு, அவத்தமாக்கு, முறி, மீறிப்போடு, அவத்தமாக்கு, அற்றுப்போ, வீணாக்கு, சிந்தியாமற்போ, அற்றுப்போகப்பண்ணு, தள்ளிப்போடு, ஆறப்பண்ணு, வீணென்று விடு (to break up; violate; frustrate; break asunder; cast off; cause to cease; disannul; disappoint; dissolve; divide; make of no effect; fail; bring to nought; make void)

குறிகள் (signal) - אוֹת - oth - 226

பெயர்ச்சொல் - அடையாளம் (signal; flag; beacon; monument; omen; sign ; token; evidence; miracle) (ஏசா 44:25; யோபு 21:29; சங் 65:8; சங் 135:9).

44 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 54

"நான் என் ஊழியக்காரரின் வார்த்தையை நிலைப்படுத்தி, என் ஸ்தானாபதிகளின் ஆலோசனையை நிறைவேற்றி....." (ஏசா 44:26-45:4) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. எருசலேமில் குடியேறுவார்கள். (ஏசா 44:26).
2. யூதாவின் பட்டணங்கள் கட்டப்படும்.
3. அவைகளின் பாழானஸ்தலங்களை கர்த்தர் எடுப்பிப்பார்.
4. ஆறுகளைக் கர்த்தர் வற்றிப்போகப் பண்ணுவார். (ஏசா 44:27).
5. கோரேசு கர்த்தருடைய மேய்ப்பனாக இருப்பான். (ஏசா 44:28).
6. கோரேசு கர்த்தருக்குப் பிரியமானதை யெல்லாம் நிறைவேற்றுவான்.
7. எருசலேமை நோக்கி, நீ கட்டப்படு என்றும்; தேவாலயத்தை நோக்கி: நீ அஸ்திபாரப்படு என்றும் கோரேசு சொல்லுவான். (ஏசா 44:28; எஸ்றா 1:1-4).
8. கோரேசு கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவன். (ஏசா 45:1).
9. கர்த்தர் அவன் வலதுகையைப் பிடிப்பார்.
10. கர்த்தர் ஜாதிகளைக் கீழ்ப்படுத்துவார்.
11. கர்த்தர் ராஜாக்களின் இடைக்கட்டுகளை அவிழ்ப்பார்.
12. கர்த்தர் அவனுக்கு முன்பாக வாசல்கள் பூட்டப்படாதிருக்க, கதவுகளைத் திறந்து வைக்கும்படிக்குச் செய்வார்.
13. கர்த்தர் கோரேசுக்கு முன்னேபோய் கோணலான வைகளைச் செவ்வையாக்குவார். (ஏசா 45:2).
14. கர்த்தர் கோரேசைப் பேர்சொல்லி அழைப்பார். (ஏசா 45:3).
15. கர்த்தர் வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப்பாள்களை முறிப்பார். (ஏசா 45:4).
16. கர்த்தர் தம்முடைய தாசனாகிய யாக்கோபினிமித்தமும், அவர் தெரிந்துகொண்ட இஸ்ரவேலி னிமித்தமும், அவர் கோரேசை பெயர்சொல்லி அழைத்து, அவன் கர்த்தரை அறியாதிருந்தும், அவனுக்கு நாமம் தரித்தார். (ஏசா 45:4).

"நான் என் ஊழியக்காரரின் வார்த்தையை நிலைப்படுத்தி" - இந்தத் தீர்க்கதரிசன வார்த்தைகளையெல்லாம் ஏசாயா முன்னறிவிக்கிறார். இந்த வார்த்தைகளைக் கர்த்தர் நிலைப்படுத்துவார். (ஏசா 44:26). பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை அற்புதங்களினாலும், அடையாளங்களினாலும் உறுதிபண்ணுகிறார். தம்முடைய சீஷர்களுக்குக் கர்த்தர் அநேக வாக்குத்தத்தங்களையும், கட்டளைகளையும் கொடுத்திருக்கிறார். (மத் 28:20; லூக்கா 24:49; யோவான் 7:37-39; அப் 1:4-8; 1கொரி 12:31; 1கொரி 14:1). கர்த்தரை விசுவாசிக்கிறவர்களினால் அற்புதங்கள் நடைபெறும். (மத் 17:20; மத் 21:22,மாற்கு 11:22-24; மாற்கு 16:15-20; யோவான் 14:12-15; யோவான் 15:7,16; யோவான் 16:23-26; எபி 3:3-4).

"அவைகளின் பாழானஸ்தலங்களை எடுப்பிப்பவர்" - இந்தத் தீர்க்கதரிசனம் கூறப்பட்டு 200 வருஷங்களுக்குப் பின்பு இது நிறைவேறுகிறது. பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசு யூதர்களைத் தங்களுடைய தேசத்திற்குத் திரும்பிச் சென்று, அங்கு அவர்களுடைய பட்டணங்களைக் கட்டவும் கர்த்தருடைய தேவாலயத்தைக் கட்டவும் அனுமதி கொடுக்கிறான். (2நாளா 36:22-23). கோரேசு இந்தப் பட்டணங்களைக் கட்டவில்லை. ஆனால் அவைகள் கட்டப்படுவதற்கு ஆணையிடுகிறான்.

44 அதிகாரம்

(21) கோரேசின்மீது கூறப்பட்ட பதினாறு அம்ச தீர்க்கதரிசனம் - *(21:1)*

ஏசா 44:28 கோரேசைக் குறித்து: அவன் என் மேய்ப்பன்; அவன் எருசலேமை நோக்கி: நீ கட்டப்படு என்றும்; தேவாலயத்தை நோக்கி: நீ அஸ்திபாரப்படு என்றும் சொல்லி, எனக்குப் பிரியமானதையெல்லாம் நிறைவேற்றுவான் என்று சொல்லுகிறவர் நான்.

"கோரேசு" **(Cyrus)** - கோரேசின் பெயர் வேதாகமத்தில் இந்த வாக்கியத்தில் முதன் முறையாகக் கூறப்பட்டிருக்கிறது. அவன் பிறப்பதற்கு 150 வருஷங்களுக்கு முன்பாகவே அவனுக்குப் பெயரிடப் பட்டிருக்கிறது. எருசலேமையும், தேவாலயத்தையும் கட்டுவதற்கு அவன் ஆணையிடுவதற்கு 200 வருஷங்களுக்கு முன்பாகவே அதைப் பற்றி இங்கு எழுதப் பட்டிருக்கிறது.*(ஏசா 45:1; 2நாளா 36:22-23; எஸ்றா 1:1-8; எஸ்றா 3:7; எஸ்றா 4:3-5; எஸ்றா 5:13-17; எஸ்றா 6:3,14; தானி 1:21; தானி 6:28; தானி 10:1).*

கோரேசு தேவனுக்குச் செய்ய வேண்டிய காரியங்கள்

1. தேவனுடைய ஜனத்திற்கு மேய்ப்பனாக இருக்க வேண்டும். *(ஏசா 44:28).*
2. யூதரைவிடுவித்து கர்த்தருக்குப் பிரியமானதைச் செய்ய வேண்டும். *(ஏசா 44:28; ஏசா 45:13).*
3. எருசலேம் கட்டப்படுவதற்கு ஆணையிட வேண்டும்.
4. தேவாலயம் அஸ்திபாரப்படுத்துவதற்கு ஆணையிடவேண்டும். *(ஏசா 44:28).*
5. ஜாதிகளைக் கீழ்ப்படுத்த வேண்டும். *(ஏசா 45:1).*

"மேய்ப்பன்" - கோரேசு தேவனுடைய மேய்ப்பனாக இருக்கிறான். யூதர்கள் தங்களுடைய சொந்த தேசத்திற்குப் போய் தேசத்தையும், தேவாலயத்தையும் மறுபடியும் கட்டுவதற்குக் கோரேசு அனுமதி கொடுக்கிறான். *(ஏசா 44:28-45:1,13).*

தேவனுக்குப் பிரியமானவை

1. தம்முடைய ஜனத்திற்கு ஒரு மேய்ப்பனை எழுப்புவது. *(ஏசா 41:1-3; ஏசா 44:28; ஏசா 45:13)*
2. எருசலேமைத் திரும்பக் கட்டுவது. *(ஏசா 44:28)*
3. தேவாலயத்தைத் திரும்பக் கட்டுவது.
4. தம்முடைய ஜனங்களைச் சிறைப்பிடித்த தேசங்களைத் தண்டிப்பது. *(ஏசா 45:1; எரே 25:11-12)*
5. தாமே தேவன் என்பதை இஸ்ரவேலுக்கும், புறஜாதிக்கும் நிரூபிப்பது. *(ஏசா 45:3-6)*

45 அதிகாரம்

ஏசா 45:1 கர்த்தராகிய நான் அபிஷேகம் பண்ணின கோரேசுக்கு முன்பாக ஜாதிகளைக் கீழ்ப்படுத்தி, ராஜாக்களின் இடைக்கட்டுகளை அவிழ்க்கும்படிக்கும், அவனுக்கு முன்பாக வாசல்கள் பூட்டப் படாதிருக்க, கதவுகளைத் திறந்து வைக்கும்படிக்கும், அவனைப் பார்த்து, அவன் வலதுகையைப் பிடித்துக்கொண்டு, அவனுக்குச் சொல்லுகிறதாவது:

ஏசா 45:2 நான் உனக்கு முன்னே போய், கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன்.

ஏசா 45:3 உன்னைப் பெயர்சொல்லி அழைக்கிற இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் நானே என்று நீ அறியும்படிக்கு,

அபிஷேகம் பண்ணப்பட்டவர் (anointed) - מָשִׁיחַ - maw-shee'-akh - 4899

ஆண்பால் பெயர்ச்சொல் - மேசியா, அபிஷேகம் பெற்றவர், அபிஷேகம் பண்ணப்பட்டவர் (anointed; a consecrated person) அபிஷேகம் பண்ணப் பட்டவர் என்னும் வாக்கியம் மேசியாவிற்குப் பயன்படுத்தப் படுகிறது. அதேசமயத்தில் ராஜாக்களுக்கும், ஆசாரியர் களுக்கும், இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகளுக்கும், அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்னும் வாக்கியம் வேதாகமத்தில் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (1சாமு 2:10,35; 1சாமு 12:3-5; 1சாமு 16:6; 1சாமு 24:7,11) கோரேசைப் பொறுத்த அளவில் அபிஷேகம்பண்ணப்பட்டிருக்கிறவர் என்னும் வார்த்தை அவனுடைய பரிசுத்தத்தையோ சுபாவத்தையோ குறிப்பிடவில்லை. ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்வதற்காகக் கோரேசு நியமிக்கப்பட்டிருப்பதையே இந்த வார்த்தை குறிப்பிடுகிறது. தேவனுடைய ஜனங்களுக்கு நன்மையான காரியங்களைச் செய்வதினால் கோரேசு நீதிமான் என்று அழைக்கப் பட்டிருக்கிறான். (ஏசா 41:1-3,25; ஏசா 44:28; ஏசா 45:1-4,13).

கோரேசைப் பற்றிய செய்திகள்

1. கர்த்தர் அவனை எழுப்புவார். (ஏசா 41:2; ஏசா 45:13).
2. கர்த்தர் அவனை அழைப்பார். (ஏசா 41:2).
3. கர்த்தர் அவனை ராஜாக்கள்மீது ஆளுகை செய்யுமாறு செய்வார்.
4. கர்த்தர் அவனுடைய கைகளில் தேசங்களைக் கொடுத்து அவற்றை அழிக்குமாறு செய்வார்.
5. அவனுடைய வலதுகையைப் பிடித்துக் கொள்வார் (ஏசா 45:1).
6. அவன் தேசங்களைக் கீழ்ப்படுத்துவான்.(ஏசா 41:2;ஏசா 45:1).
7. ராஜாக்களின் இடைக்கட்டுக்களை அவிழ்ப்பான். (ஏசா 45:1).
8. வாசல்களைத் திறந்து வைப்பான்.
9. கர்த்தர் அவனுக்கு முன்னே போவார். (ஏசா 45:2).
10. கர்த்தர் கோணலானவைகளைச் செவ்வையாக்குவார்.
11. கர்த்தர் வெண்கலக் கதவுகளை உடைப்பார். (ஏசா 45:4)
12. கர்த்தர் இருப்புத் தாழ்ப்பாள்களை முறிப்பார்.
13. பாபிலோனின் ஐசுவரியங்களைக் கர்த்தர் அவனுக்குக் கொடுப்பார். (ஏசா 45:3).
14. கர்த்தர் அவன் வழிகளெல்லாம் செவ்வைப்படுத்துவார். (ஏசா 45:13).

கோரேசு ஜெயித்த தேசங்கள்

1. சிலிசியா (Cilicians)
2. சீரியா (Syrians)

45 அதிகாரம்

3. பப்லகோனியா (Paphlagonians)

4. கப்பதோக்கியா (Cappadocians)

5. பெர்கியா (Phrygians)

6. லீதியா (Lydians)

7. காரியா (Carians)

8. பொனிஷியா (Phoenicians)

9. அரபியா (Arabians)

10. பாபிலோனியா (Babylonians)

11. அசீரியா (Assyrians)

12. பக்திரியா (Bactrians)

13. சாகாயா (Sacae)

14. மரியாந்தினியா (Maryandines)

"ராஜாக்களின் இடைக்கட்டுகளை அவிழ்க்கும் படிக்கும்" - இடைக்கட்டுக்கள் கட்டப்பட்டிருப்பது என்பதற்கு ஒரு வேலையைச் செய்வதற்கு ஆயத்தமாயிருப்பது, யுத்தம் பண்ணுவதற்கு ஆயத்தமாயிருப்பது என்று பொருள். இடைக்கட்டுக்களை அவிழ்ப்பது என்பதற்கு ஓய்வெடுப்பது, அல்லது சோம்பலாயிருப்பது என்று பொருள். கோரேசிற்கு முன்பாகக் கர்த்தர் ராஜாக்களைப் பலவீனப்படுத்துவார். இதனால் கோரேசு ராஜாக்களை எளிதாக ஜெயித்துவிடுவான்.

கதவு (door) - דֶּלֶת - deh'-leth - 1817

பெண்பால் பெயர்ச்சொல் - கதவு, நிலை (swinging; door; gate; leaf; lid) - ஐபிராத்து நதியிலிருந்து எதிரிகளின் தேசத்திற்குப் போக வேண்டும். ஆனால் அந்த தேசங்களுக்குள் போக முடியாதவாறு ஐபிராத்து நதிக்கரைகளில் இரும்பு கதவுகளும், வெண்கலக் கதவுகளும் போடப் பட்டிருக்கும். இந்தக் கதவுகள் திறக்கப்பட்டால் மேதிய-பெர்சிய தேசத்தார் எந்தவிதத் தடையுமில்லாமல் தேசங்களுக்குள் சென்றுவிடுவார்கள். இந்தச் சம்பவம் நடைபெற்று 200 வருஷங்களுக்கு முன்பாகக் கர்த்தர் இதை முன்னறிவித்திருக்கிறார்.

"நான் உனக்கு முன்னே போய்" - யுத்தங்களில் ஜெயத்தையும், தோல்வியையும், கர்த்தரே கட்டளையிடுகிறவர். பூமியில் நடைபெறும் யுத்தங்களின் முடிவு பரலோகத்தில் தீர்மானம் பண்ணப்படுகிறது. (தானி 4:13; தானி 10:13). கோரேசின் வெற்றிக்குத் தடையாக இருக்கும் எல்லாத் தடைகளையும் அகற்றிப் போடுவதாகக் கர்த்தர் வாக்குப் பண்ணுகிறார்.

(22) கோரேசிற்கு உதவிபுரிவதற்கு காரணங்கள்

ஏசா 45:4 வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்து, அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும், ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் உனக்குக் கொடுப்பேன்; நான் என் தாசனாகிய யாக்கோபினிமித்தமும், நான் தெரிந்துகொண்ட இஸ்ரவேலி னிமித்தமும், நான் உன்னைப் பெயர்சொல்லி அழைத்து, நீ என்னை அறியாதிருந்தும், உனக்கு நாமம் தரித்தேன்.

ஏசா 45:5 நானே கர்த்தர், வேறொருவர் இல்லை; என்னைத் தவிர தேவன் இல்லை.

ஏசா 45:6 என்னைத்தவிர ஒருவரும் இல்லையென்று சூரியன் உதிக்கிற திசையிலும், அது அஸ்தமிக்கிற திசையிலும் அறியப்படும்படிக்கு நீ என்னை அறியாதிருந்தும், நான் உனக்கு இடைகட்டு கட்டினேன்; நானே கர்த்தர், வேறொருவர் இல்லை.

45 அதிகாரம்

"அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்கள்" - யுத்தத்தில் வெற்றி பெற்றவர்கள் அந்நிய தேசத்திலிருந்து கொள்ளையிட்டுக் கொண்டு வரும் பொக்கிஷங்களை யாருக்கும் தெரியாமல் மறைத்து வைத்திருப்பது வழக்கம். அத்தியாவசியத் தேவை ஏற்பட்டால் மட்டுமே அதைப் பயன்படுத்துவார்கள். பாலஸ்தீன தேசத்தில் இதுபோன்று ஏராளமான பொக்கிஷங்கள் அந்தகாரத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அவர்கள் எகிப்து, அசீரியா, யூதேயா போன்ற பல தேசங்களைக் கொள்ளையிட்டு, அந்தப் பொக்கிஷங்களை எல்லாம் தங்கள் தேசத்தில் மறைத்து வைத்திருந்தார்கள். (எரே 50:13).

"நீ என்னை அறியாதிருந்தும், உனக்கு நாமம் தரித்தேன்" - கோரேசு பிறப்பதற்கு முன்பாகவே கர்த்தர் அவனுக்குப் பெயரிடுகிறார். (ஏசா 45:3,4).

"நான் தெரிந்துகொண்ட இஸ்ரவேலினிமித்தமும்" - ஒருவன் இரட்சிக்கப்பட வேண்டுமென்றும், ஒருவன் இரட்சிக்கப்படக்கூடாது என்றும் கர்த்தர் யாரையும் தெரிந்தெடுப்பதில்லை. கர்த்தருடைய தெரிந்தெடுப்பின் நிமித்தமாக மாத்திரம் யாரும் இரட்சிக்கப்படுவதில்லை. கர்த்தருடைய திட்டம் எல்லோருக்கும் பொதுவானது. இரட்சிக்கப்பட வேண்டுமென்னும் அழைப்பு எல்லோருக்கும் கொடுக்கப்படுகிறது. (லூக்கா 18:7). இந்த அழைப்பை ஏற்றுக் கொள்கிறவர்கள் இரட்சிக்கப்படுகிறார்கள். அழைப்பை ஏற்றுக் கொள்ளாதவர்கள் இரட்சிக்கப்படுவதில்லை. தேவனுடைய திட்டத்தில் பட்சபாதம் எதுவுமில்லை.

ஒருவர் இரட்சிக்கப்படும்போது அவர் மறுபடியும் பிறக்கிறார். கிறிஸ்துவில் புதிய சிருஷ்டியாகிறார். (மத் 18:3; யோவான் 3:1-8,14-18; 2கொரி 5:17-18) இரட்சிக்கப்பட்ட பின்பு அவருடைய ஜீவியத்தில் மாற்றம் ஏற்படுகிறது. அவர் நீதியாகவும், நியாயமாகவும் தன்னுடைய ஜீவியத்தில் கிரியை நடப்பிக்கிறார். (கலா 5:18-21,24; தீத்து 2:11-14; 1யோவான் 1:7; 1யோவான் 2:29; 1யோவான் 3:5-10; 1யோவான் 5:1-4,18).

ஒருவர் இரட்சிக்கப்பட்ட பின்பும் பாவம் செய்தால் அவர் மறுபடியும் மனந்திரும்பி கர்த்தருடைய மன்னிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் அவருக்கும் பாவிகளுக்குரிய தண்டனையே கிடைக்கும்.(1யோவான் 1:9,1யோவான் 2:1-2). பாவத்தில் ஜீவிக்கிறவர்களும், பாவத்தில் மரிக்கிறவர்களும் இரட்சிக்கப்படுவதில்லை. (மத் 7:19-21; ரோமர் 1:29-32; ரோமர் 8:1-13; 1கொரி 6:9-11;கலா 5:19-21;கொலோ 3:5-10)

கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தைத் தெரிந்து கொண்டார். புறஜாதியார் மத்தியில் இந்தத் தேசம் கர்த்தருடைய தேசமாகக் கிரியை நடப்பிக்க வேண்டும். அதே சமயத்தில் தேவனுடைய திட்டத்தின்படி ஜீவிக்கிற யூதரும், புறஜாதியாரும் இஸ்ரவேலராகவே கருதப் படுகிறார்கள். (லூக்கா 18:7; ரோமர் 8:33; கொலோ 3:10; தீத்து 1:1; 2யோவான் 1:1,13) இரட்சிக்கப்படுவதற்குக் கர்த்தர் நியமித்திருக்கும் நிபந்தனைகளைக் கைக்கொள்கிறவர்களே "தெரிந்தெடுக்கப்பட்டவர்கள்".

கர்த்தர் தம்மிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிறவர்களையும், (ரோமர் 3:26) தம்மை விசுவாசிக்காதவர்களையும் (மத் 16:15-16; லூக்கா 13:1-5; யோவான் 3:16-18; 1தீமோ 2:4-5; 2பேதுரு 3:9; வெளி 22:17) நீதியாக நியாயந் தீர்க்கிறார்.

"நீ என்னை அறியாதிருந்தும்" - கர்த்தர் கோரேசை அழைத்த போது அவன் தேவனைப் பற்றி அறியாதவனாக இருந்தான். (ஏசா 44:28; எஸ்றா 1:1-6).

"நானே கர்த்தர், வேறொருவர் இல்லை." - (யோசு 2:11)

(23) தேவனுடைய சர்வ ஆளுகையின் பன்னிரெண்டு அம்சங்கள் - (ரோம 9:14-24)

ஏசா 45:7 ஒளியைப் படைத்து, இருளையும் உண்டாக்கினேன், சமாதானத்தைப் படைத்து தீங்கையும் உண்டாக்குகிறவர் நானே; கர்த்தராகிய நானே இவைகளையெல்லாம் செய்கிறவர்.

45 அதிகாரம்

ஏசா 45:8 வானங்களே, உயர இருந்து சொரியுங்கள்; ஆகாயமண்டலங்கள் நீதியைப் பொழியக்கடவது; பூமி திறவுண்டு, இரட்சிப்பின் கனியைத்தந்து, நீதியுங் கூட விளைவதாக; கர்த்தராகிய நான் இவைகளை உண்டாக்குகிறேன்.

ஏசா 45:9 மண்ணோடுகளுக்கொத்த ஓடாயிருந்தும், தன்னை உருவாக்கினவரோடே வஷிக்காடு கிறவனுக்கு ஐயோ! களிமண் தன்னை உருவாக்கினவனை நோக்கி: என்ன செய்கிறாயென்று சொல்லத் தகுமோ? உன் கிரியையானது: அவருக்குக் கைகள் இல்லையென்று சொல்லலாமோ?

ஏசா 45:10 தகப்பனை நோக்கி: ஏன் ஜநிப்பித்தாய் என்றும், தாயை நோக்கி: ஏன் பெற்றாய் என்றும் சொல்லுகிறவனுக்கு ஐயோ!

தேவனுடைய கிரியைகள்

1. ஒளியைப் படைத்தார். (ஆதி 1:14-18).
2. இருளை உண்டாக்கினார்.
3. சமாதானத்தைப் படைத்தார். (ஏசா 9:6-7)
4. தீங்கை உண்டாக்கினார். (கலா 6:7-8).

ஒளி (lightning) - אוֹר - ore - 216

ஆ.பெ.-வெளிச்சம், பொழுதுவிடிதல், விளக்கு,பிரகாசம், ஒளி, மின்னல், சுடர், வெயில், பட்டப்பகல், சூரியன், காலை. (illumination; luminary; lightning; day; morning; sun)

உண்டாக்குதல் (create) - בָּרָא - baw-raw' - 1254

வினைச்சொல்- சிருஷ்டி, உண்டாக்கு, படை, நேரிடச்செய், வெட்டிப்போடு, தெரிந்துகொள்,கொழுக்கப்பண்ணு (to bring about; bring into existence)

தீங்கு (evil) - רַע - rah - 7451

பெயரடை - மனதுருக்கமற்ற, வன்கண்ணான, தொல்லையான, விசனம், துர்ச்செய்கையான, கேடான, அழிந்து போன, கொடிய, தாழ்வான, கெட்டுப் போன, சஞ்சலமான, துர்க்கிரியை, சங்காரமுமான, பஞ்சமான, மனமடிவான, தீமை, அக்கிரமமான, பொல்லா, தீவினை, பொல்லாப்பு, துஷ்ட பொல்லாங்கு, துரோகம், வியாகுலமான, சஞ்சலமுள்ள, இக்கட்டு, தகாத, துக்கமான, இளப்பமான, இடுக்கம், தீயோரான, துன்பம், ஆபத்தான, உபத்திரவமான, விரோதமான, கெட்டதான, கொடிதான, பழுதான, நல்லதல்ல, அவதூறு, அநியாயம், பாவம், துர்க்கருமம், தோஷம், துன்மார்க்கமான, பொல்லாதவனான, ஆகாத, தீங்கான, கேவலமான, தீயோரான "sin," but "evil" (ஏசா 45:7;ஆதி 2:9,17;ஆதி 3:5,22); "calamity" (சங் 141:5); "adversity" (1சாமு 10:19;சங் 94:13; பிர 7:14); "grievous" (நீதி 15:10); "sorrow"(ஆதி 44:29); "trouble" (சங் 27:5; சங் 41:1; சங் 107:26); "distress" (நெகே 2:17); "bad" (ஆதி 24:50;ஆதி 31:24; லேவி 27:10-14);"affliction" (2நாளா 20:9; சக 1:15); "misery" (பிர 8:6); "sore"(உபா 6:22); "noisome" (எசே 14:15,21); "hurt" (ஆதி 26:29); "wretchedness" (எண் 11:15)

தீர்க்கதரிசன எண் - 55

"வானங்களே, உயர இருந்து சொரியுங்கள்; ஆகாயமண்டலங்கள் நீதியைப் பொழியக்கடவது" (ஏசா 45:8) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. ஆகாயமண்டலங்கள் நீதியைப் பொழியும். (சங் 85:11-12)
2. பூமி திறவுண்டு, இரட்சிப்பின் கனியைத்தரும்.

45 அதிகாரம்

3. நீதியுங்கூட விளையும்.

"ஏன் பெற்றாய் என்றும் சொல்லு கிறவனுக்கு ஐயோ!" - பெற்றோரைக் கனம் பண்ணாதவனுக்குக் கர்த்தருடைய தண்டனை வரும். (ஏசா 45:9-10).

(24) தேவனுடைய சர்வ வல்லமை

ஏசா 45:11 இஸ்ரவேலின் பரிசுத்தரும் அவனை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: வருங்காரியங்களை என்னிடத்தில் கேளுங்கள்; என் பிள்ளைகளைக் குறித்தும், என் கரங்களின் கிரியைகளைக்குறித்தும் எனக்குக் கட்டளையிடுங்கள்.

ஏசா 45:12 நான் பூமியை உண்டுபண்ணி, நானே அதின்மேல் இருக்கிற மனுஷனைச் சிருஷ்டி த்தேன்; என் கரங்கள் வானங்களை விரித்தன; அவைகளின் சர்வசேனை யையும் நான் கட்டளையிட்டேன்.

இஸ்ரவேலருக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. என் பிள்ளைகளைக் குறித்து வருங்காரியங்களை என்னிடத்தில் கேளுங்கள்.
2. என் கரங்களின் கிரியைகளைக் குறித்து எனக்குக் கட்டளையிடுங்கள். (ஏசா 45:11; மத் 17:20; மத் 21:22; மாற்கு 9:23; மாற்கு 11:22-24; யோவான் 14:12-15;யோவான் 15:7,16).

வேதாகமத்தில் கட்டளையிடப்பட்டுள்ள சம்பவங்கள்

1. கர்த்தர் மோசேயின் சொற்படி தவளைகள் செத்துப்போகும்படி செய்தார். (யாத் 8:13).
2. கர்த்தர் மோசேயின் சொற்படி வண்டு ஜாதிகள் நீங்கும்படி செய்தார். (யாத் 8:31).
3. மோசேயின் விண்ணப்பத்தினால் கர்த்தர் தமது ஜனங்களுக்கு செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்குப் பரிதாபம் கொண்டார். (யாத் 32:12-14).
4. யோசுவா சூரியனுக்குக் கட்டளையிட்டான். (யோசு 10:12).
5. எலியா பரத்திலிருந்து அக்கினி வரக் கட்டளையிட்டான். (1இராஜா 18:36-38; 2இராஜா 1:10,12).
6. இயேசு கிறிஸ்து காற்றையும், கடலையும் கீழ்ப்படியுமாறு கட்டளையிட்டார். (லூக்கா 4:35; யோவான் 2).
7. வியாதிகள் நீங்குமாறு அப்போஸ் தலர்கள் கட்டளையிட்டார்கள். (அப் 3:6; அப் 5:16; அப் 9:34,40; அப் 13:11; அப் 14:10; அப் 19:11-12).

"என் பிள்ளைகள்" - பழைய ஏற்பாட்டில் புதிய பிறப்பைக் குறிக்கும் வார்த்தை. (கலா 4:29).

தேவனுடைய கிரியைகள்

1. பூமியை உண்டுபண்ணினார். (ஏசா 45:12).
2. அதின்மேல் இருக்கிற மனுஷனைச் சிருஷ்டித்தார்.
3. அவருடைய கரங்கள் வானங்களை விரித்தன.
4. அவைகளின் சர்வசேனையையும் கட்டளையிட்டார்.
5. கர்த்தர் கோரேசை எழுப்பினார். (ஏசா 45:13).
6. வானங்களைச் சிருஷ்டித்தார்.
7. பூமியைப் படைத்தார். (ஏசா 45:18).
8. பூமியை உருவேற்படுத்தினார்.
9. பூமியை வெறுமையாயிருக்கச் சிருஷ்டிக்க வில்லை.
10. பூமியைக் குடியிருப்புக்காகச் செய்து படைத்தார்.

45 அதிகாரம்

வெறுமை (empty) - תֹּהוּ - to'-hoo - 8414

ஆ.பெ.சொ. - வெறுமை, வீணானது, அந்தரம், வீணர், விருதா, மாயை, வெட்டவெளி, அவாந்தர வெளி, இல்லாமை

(25) கோரேசின்மீது கூறப்பட்ட ஐந்து அம்ச தீர்க்கதரிசனம் - (41:1)

ஏசா 45:13 நான் நீதியின்படி அவனை எழுப்பினேன்; அவன் வழிகளையெல்லாம் செவ்வைப் படுத்துவேன்; அவன் என் நகரத்தைக் கட்டி, சிறைப்பட்டுப்போன என்னுடைய வர்களைக் கிரயமில்லாமலும் பரிதான மில்லாமலும் விடுதலையாக்குவான் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

தீர்க்கதரிசன எண் - 56

"நான் நீதியின்படி அவனை எழுப்பினேன்......" (ஏசா 45:13-17) ஏசா 45:13 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. ஏசா 45:14-17 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. நான் நீதியின்படி அவனை எழுப்பினேன். (எஸ்றா 1:1-6).
2. அவன் வழிகளையெல்லாம் செவ்வைப் படுத்துவேன் (ஏசா 45:13).
3. அவன் எருசலேமைக் கட்டுவான்.
4. சிறைப்பட்டுப்போன என்னுடைய வர்களை விடுதலையாக்குவான்.
5. அவர்களைக் கிரயமில்லாமலும் பரிதான மில்லாமலும் விடுதலையாக்குவான்.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. எகிப்தின் சம்பாத்தியம் உன்னிடத்திற்குத் தாண்டிவந்து, உன்னுடையதாகும் (ஏசா 45:14).
2. எத்தியோப்பியாவின் வர்த்தகலாபமும், நெடிய ஆட்களாகிய சபேயரின் வர்த்தகலாபமும் உன்னுடையதாகும்.
3. அவர்கள் ஒன்றுசேர்ந்து இஸ்ரவேலில் மெய்யான தேவனை ஆராதிப்பார்கள்.
4. அவர்கள் உன்னுடையவர்களாவார்கள்.
5. தேவனுடைய சத்தியத்தில் அவர்கள் உன்னைப் பற்றுவார்கள்.
6. அவர்கள் உன்னைப் பணிந்து கொள்வார்கள்.
7. அவர்கள் உன்னை நோக்கி விண்ணப்பம் பண்ணுவார்கள்.
8. உன்னுடனே மாத்திரம் தேவன் இருக்கிறார் என்றும், அவரையல்லாமல் வேறே தேவன் இல்லையென்றும் அறிக்கையிடுவார்கள்.
9. விக்கிரகங்களை உண்டுபண்ணுகிற அனைவரும் வெட்கப்படுவார்கள். (ஏசா 45:16).
10. அவர்கள் இலச்சையடைந்து, ஏகமாய்க் கலங்கிப்போவார்கள்.
11. இஸ்ரவேலோ, கர்த்தராலே நித்திய இரட்சிப்பினால் இரட்சிக்கப்படுவான் (ஏசா 45:17).
12. அவர்கள் என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் வெட்கப்படாமலும் கலங்காமலும் இருப்பார்கள்.

"அவனை" - கோரேசு (ஏசா 45:1-4,13; ஏசா 41:2-3; ஏசா 44:28; ஏசா 46:11).

"என் நகரம்" - என் நகரம் என்பது எருசலேம் பட்டணத்தையும், "சிறைப்பட்டுப்போன என்னுடையவர்கள்" என்பது பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போன யூதரையும் குறிக்கும். கோரேசு அவர்களை விடுவித்து மறுபடியும் ஒரு தேசமாக ஸ்தாபிப்பான். (எஸ்றா 1).

45 அதிகாரம்

"கிரயமில்லாமலும் பரிதானமில்லாமலும் விடுதலையாக்குவான்" - தங்கள் தேசத்திற்குத் திரும்பிப்போக மனதுள்ள வர்கள் திரும்பிப் போகலாம் என்று கோரேசு ஆணையிடுவான். (எஸ்றா 1:1-6).

(26) இஸ்ரவேலின் மீட்பு

ஏசா 45:14 எகிப்தின் சம்பாத்தியமும், எத்தியோப்பியாவின் வர்த்தகலாபமும், நெடிய ஆட்களாகிய சபேயரின் வர்த்தக லாபமும், உன்னிடத்திற்குத் தாண்டிவந்து, உன்னுடையதாகும்; அவர்கள் உன் பின்னே சென்று, விலங்கிடப்பட்டு நடந்துவந்து: உன்னுடனே மாத்திரம் தேவன் இருக்கிறார் என்றும், அவரையல்லாமல் வேறே தேவன் இல்லையென்றும் சொல்லி, உன்னைப் பணிந்துகொண்டு, உன்னை நோக்கி விண்ணப்பம்பண்ணுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஏசா 45:15 இஸ்ரவேலின் தேவனும் இரட்சகருமாகிய நீர் மெய்யாகவே உம்மை மறைத்துக்கொண்டிருக்கிற தேவனாயிருக்கிறீர்.

ஏசா 45:16 விக்கிரகங்களை உண்டு பண்ணுகிற அனைவரும் வெட்கப்பட்டு இலச்சையடைந்து, ஏகமாய்க் கலங்கிப் போவார்கள்.

ஏசா 45:17 இஸ்ரவேலோ, கர்த்தராலே நித்திய இரட்சிப்பினால் இரட்சிக்கப் படுவான்; நீங்கள் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் வெட்கப்படாமலும் கலங்காமலும் இருப்பீர்கள்.

"நெடிய ஆட்கள்" - சபேயரும், எத்தியோப்பியரும் உயரமானவர்கள்.

"உன்னிடத்திற்குத் தாண்டிவந்து, உன்னுடையதாகும்" - எகிப்தியரும், எத்தியோப்பியரும் மற்றத் தேசத்தாரும் கர்த்தரைச் சேவிப்பார்கள் என்பது பல வசனங்களில் முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. (ஏசா 2:2-4; ஏசா 19:19-22; ஏசா 66:19-21; சங் 67:4; சங் 68:31; சங் 72:10; சக 3:10; சக 8:23;சக 14:16-21).

"உன்னுடனே மாத்திரம் தேவன் இருக்கிறார்" - எத்தியோப்பியரும், சபேயரும் மட்டுமல்ல. எல்லா ஜனங்களுமே இதை அறிக்கையிடுவார்கள். (ஏசா 45:14,23; ரோமர் 14:11; பிலி 2:9-11).

"உம்மை மறைத்துக் கொண்டிருக்கிற தேவனாயிருக்கிறீர்" - கர்த்தர் தம்முடைய திட்டங்களில் பலவற்றை இன்னும் மனுஷருக்கு வெளிப்படுத்தாமல் மறைத்து வைத்திருக்கிறார். கர்த்தர் மனுஷருடைய இரட்சகராக இருக்கிறார் என்பது மறைத்து வைக்கப்படாமல் வெளிப் படுத்தப்பட்டிருக்கிற சத்தியமாகும். (உபா 29:29; அப் 15:18).

என்றென்றைக்குமுள்ள சதாகாலம் **(eternity) - עוֹלָם - o-lawm', o-lawm' - 5769**

ஆ.பெ.சொ. - என்றைக்கும், பூர்வம், நித்தியம், ஒருகாலும், எப்பொழுதும், என்றும் நீங்காத, ஒருபோதும், சதாகாலம், என்றும், எந்நாளும், அநாதி, ஆதிகாலம், வெகுகாலம், உலகம், ஏலாம், பழம், பழைய, முற்றிலும் - **(time out of mind; eternity; everlasting; always; perpetual; time without end)** **"ancient"** (ஏசா 44:7; சங் 77:5; நீதி 22:28; எரே 5:15; எரே 18:15; எசே 36:2); **"for ever"** (ஆதி 3:22; ஆதி 13:15; யாத் 3:15) **"perpetual"** (ஆதி 9:12; யாத் 29:9; யாத் 31:16; லேவி 3:17; லேவி 24:9;லேவி 25:34; சங் 78:66; எரே 18:16; எரே 23:40; எரே 25:34; எரே 49:13; எரே 50:5; எரே 51:39,57; எசே 35:5,9; எசே 46:14; ஆப 36; செப் 2:9); **"always"**(ஆதி 6:3; 1நாளா 16:16; எரே 20:17); **of old** (ஆதி 6:4; உபா 32:7; யோசு 24:2; 1சாமு 27:8; யோபு 22:15; யோபு 30:2; சங் 25:6; பிர 1:10; ஏசா 46:9; ஏசா 51:9; ஏசா 57:11; ஏசா 58:12; ஏசா 61:4; ஏசா 63:9,11; எரே 2:20; எரே 6:16; எரே 28:8,புல 3:6; எசே 25:15; எசே 26:20; ஆமோ 9:11; மீகா 7:14; மல் 3:4); **"everlasting"** (ஆதி 9:16; ஆதி 17:7-8,13,19; ஆதி 21:33; ஆதி 48:4; ஆதி 49:26; யாத் 40:15; லேவி 16:34; லேவி 24:8;எண் 25:13; உபா 24:27;2சாமு 23:5; 1நாளா 16:17; சங் 24:7,9; சங் 41:13;

45 அதிகாரம்

சங் 90:2; சங் 93:2; சங் 100:5; சங் 103:17; சங் 105:10; சங் 106:48; சங் 112:6;சங் 119:142,144;சங் 139:24; சங் 145:13; நீதி 8:23; நீதி 10:25; ஏசா 24:5; ஏசா 26:4; ஏசா 33:14; ஏசா 35:10; ஏசா 40:28; ஏசா 45:17; ஏசா 51:11; ஏசா 54:8; ஏசா 55:3,13; ஏசா 56:5;ஏசா 60:19-20;ஏசா 61:7-8; ஏசா 63:12,16; எரே 10:10; எரே 20:11; எரே 23:40; எரே 31:3; எரே 32:40; எசே 16:60; எசே 37:26; தானி 9:24; தானி 12:2; மீகா 5:2; ஆப 3:6); **"for ever and ever"** (யாத் 15:18; 1நாளா 29:10; சங் 9:5; சங் 10:16; சங் 21:4; சங் 45:17; சங் 148:6; தானி 12:3); **"at any time"** (லேவி 25:32); **"lasting"** (உபா 35:15); **"never"** (2சாமு 12:10; சங் 30:6; சங் 31:1); **"evermore"** (2சாமு 22:15; 1நாளா 17:14; சங் 18:50; சங் 37:27; சங் 86:12; சங் 89:28,52; சங் 92:8; சங் 106:31; சங் 133:3); **"alway"** (யோபு 7:16; சங் 119:112); **"ever"** (சங் 5:11); **"ever of old"** (சங் 25:6); **"the world"** (சங் 73:12; பிர 3:11); **"long"** (பிர 12:5); **and "eternal"** (ஏசா 60:15). (யாத் 12:14)

ஏசாயாவில் கூறப்பட்டிருக்கும் நித்தியமான காரியங்கள்

1. நித்திய பிதா (ஏசா 9:6)
2. நித்திய கன்மலை (ஏசா 26:4)
3. நித்திய ஜுவாலை (ஏசா 33:14)
4. நித்திய மகிழ்ச்சி (ஏசா 35:10; ஏசா 51:11; ஏசா 61:7)
5. அநாதி தேவன் (ஏசா 40:28)
6. நித்திய இரட்சிப்பு (ஏசா 45:17)
7. நித்திய கிருபை (ஏசா 54:8)
8. நித்திய அடையாளம் (ஏசா 55:13)
9. நித்திய நாமம் (ஏசா 56:5; ஏசா 63:12)
10. நித்திய வெளிச்சம் (ஏசா 60:19-20)
11. நித்திய உடன்படிக்கை (ஏசா 24:5; ஏசா 55:3; ஏசா 61:8)

(27) சிருஷ்டிகரும் இரட்சகருமாகிய தேவன்

ஏசா 45:18 வானங்களைச் சிருஷ்டித்து பூமியையும் வெறுமையாயிருக்கச் சிருஷ்டியாமல் அதைக் குடியிருப்புக்காகச் செய்து படைத்து, அதை உருவேற் படுத்தின தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: நானே கர்த்தர், வேறொருவர் இல்லை.

ஏசா 45:19 நான் அந்தரங்கத்திலும், பூமியின் அந்தகாரமான இடத்திலும் பேசினதில்லை; விருதாவாக என்னைத் தேடுங்களென்று நான் யாக்கோபின் சந்ததிக்குச் சொன்னதுமில்லை; நான் நீதியைப்பேசி, யதார்த்தமானவைகளை அறிவிக்கிற கர்த்தர்.

“பூமியையும் வெறுமையாயிருக்கச் சிருஷ்டியாமல்” - பூமியை மனுஷருடைய குடியிருப்புக்காகக் கர்த்தர் சிருஷ்டித்திருக்கிறார். பூமி ஆதியில் ஒழுங்கின்மையாகவும், வெறுமையாகவும் இருந்தது. அதன் பின்பு கர்த்தர் இந்தப் பூமியைத் தம்முடைய சிருஷ்டிகளால் நிரப்பினார்.

வெறுமை **(empty) - תֹּהוּ - to'-hoo - 8414**

ஆ.பெ.சொ. - வெறுமை, வீணானது, அந்தரம், வீணர், விருதா, மாயை, வெட்டவெளி, அவாந்தர வெளி, இல்லாமை **(empty, waste; desolation; wilderness)** (ஆதி 1:2; எரே 4:23)

ஏசாயா - தொகுப்புரை

45 அதிகாரம்

"நான் அந்தரங்கத்திலும், பூமியின் அந்தகாரமான இடத்திலும் பேசினதில்லை" - கர்த்தருடைய வெளிப்பாடு எல்லோருக்கும் உரியது. ஒரு விசேஷித்த ஜனத்திற்கு மட்டும் தம்முடைய வெளிப்பாடு உரியது என்று கர்த்தர் எதையும் இரகசியமாக வைத்திருப்பதில்லை. (உபா 29:29). புறஜாதியார் மந்திரம் ஓதுவதுபோல தம்முடைய வெளிப்பாடுகளைக் கர்த்தர் யாருக்கும் ஓதுவதுமில்லை. கர்த்தரை யாரும் விருதாவாகத் தேடவேண்டியதில்லை. கர்த்தரைத் தேடுகிறவர்கள் அவரைக் கண்டுபிடிப்பார்கள். கர்த்தருடைய வார்த்தையில் அவரைத் தேடிப்பார்க்கும்போது அவர் தம்மை வெளிப்படுத்துவார். பூமியின் அந்தகாரமான இடத்திலும், அந்தரங்கத்திலும் கர்த்தர் தம்மை வெளிப்படுத்துவதில்லை. (ஏசா 8:19-20; ஏசா 55:8-12).

விருதா (vain) - תֹּהוּ - to'-hoo - 8414

ஆ.பெ.சொ. - வெறுமை, வீணானது, அந்தரம், வீணர், விருதா, மாயை, வெட்டவெளி, அவாந்தார வெளி, இல்லாமை

(28) தேசங்கள் ஆசீர்வதிக்கப்பட்டன

ஏசா 45:20 ஜாதிகளினின்று தப்பினவர்களே, கூட்டங்கூடி வாருங்கள்; ஏகமாய்ச் சேருங்கள்; தங்கள் விக்கிரகமாகிய மரத்தைச் சுமந்து, இரட்சிக்கமாட்டாத தேவனைத் தொழுது கொள்ளுகிறவர்கள் அறிவில்லாதவர்கள்.

ஏசா 45:21 நீங்கள் தெரிவிக்கும்படி சேர்ந்து, ஏகமாய் யோசனைபண்ணுங்கள்; இதைப் பூர்வகாலமுதற்கொண்டு விளங்கப் பண்ணி, அந்நாள் துவக்கி இதை அறிவித்தவர் யார்? கர்த்தராகிய நான் அல்லவோ? நீதிபரரும் இரட்சகருமாகிய என்னையல்லாமல் வேறே தேவன் இல்லை; என்னைத்தவிர வேறொருவரும் இல்லை.

ஏசா 45:22 பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப்பாருங்கள்; அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்; நானே தேவன், வேறொருவரும் இல்லை.

புறஜாதியாருக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. கூட்டங்கூடுங்கள்.
2. வாருங்கள்.
3. ஏகமாய்ச் சேருங்கள்.
4. ஏகமாய் யோசனை பண்ணுங்கள். (ஏசா 45:21).
5. என்னை நோக்கிப்பாருங்கள். (ஏசா 45:22).
6. இரட்சிக்கப்படுவீர்கள்.

"ஜாதிகளினின்று தப்பினவர்களே" - இந்தத் தீர்க்கதரிசனம் இனி நடைபெறப்போகிற சம்பவத்தைப் பற்றிக் கூறுகிறது. வருங்கால உபத்திரவத்திலிருந்து தப்பினவர்களையும், அர்மெகதோன் யுத்தத்திலிருந்து தப்பினவர்களையும் இந்த வாக்கியம் குறிப்பிடலாம். (சக 14:16-21).

புறஜாதியாரின் அறியாமை

1. தங்கள் விக்கிரகமாகிய மரத்தைச் சுமக்கிறார்கள்.
2. இரட்சிக்கமாட்டாத தேவனைத் தொழுது கொள்ளுகிறார்கள்.

"நீங்கள் தெரிவிக்கும்படி சேர்ந்து, ஏகமாய் யோசனைபண்ணுங்கள்" - புறஜாதியாரைக் கூட்டிச்சேர்க்குமாறும், அவர்கள் விக்கிரகங்களை ஏன் ஆராதிக்கிறார்கள் என்று அவர்களை யோசனை பண்ணுமாறு கூறவும் கர்த்தர் ஏசாயா மூலமாக வெளிப்படுத்துகிறார். விக்கிரகங்களால் வருங்காலத்தை அறிவிக்க முடியாது. கர்த்தர் மட்டுமே நீதிபரரும், இரட்சகருமாக இருக்கிறார். கர்த்தரைத் தவிர வேறே தேவன் இல்லை.

45 அதிகாரம்

பூர்வகாலம் (ancient) קֶדֶם - keh'-dem, kayd'-maw - 6924

ஆண்பால் பெயர்ச்சொல் - பூர்வம், பூர்வகாலம் (antiquity; anciently; aforetime before; eternal; everlasting) of old (ஏசா 19:11; ஏசா 23:7; ஏசா 37:26; ஏசா 46:10; ஏசா 51:9; உபா 33:15; 2இராஜா 19:25). ஏசா 44:7 ஆவது வசனத்தில் - עוֹלָם - o-lawm', o-lawm' - 5769 என்னும் வார்த்தையும் இதே பொருளைத் தருகிறது.

தேவனுடைய குணம்

1. நீதி (ஏசா 45:21)
2. ஜீவன் (ஏசா 37:4,17)
3. வல்லமை (ஏசா 11:2)
4. கோபம் (ஏசா 5:25)
5. ஞானம் (ஏசா 11:2)
6. பரிசுத்தம் (ஏசா 5:16)
7. உண்மை (ஏசா 49:7)
8. மகிமை (ஏசா 33:21)
9. அறிவு (ஏசா 11:2)
10. பயம்(ஏசா 11:2)

தேவனுடைய ஊழியங்கள்

1. நியாயாதிபதி (ஏசா 33:22)
2. நியாயப்பிரமாணிகர் (ஏசா 33:22)
3. ராஜா (ஏசா 33:22)
4. சிருஷ்டிகர் (ஏசா 40:28)
5. மீட்பர் (ஏசா 49:7)
6. இரட்சகர் (ஏசா 45:21)

(29) கல்கக்காரர்கள் தாழ்மைப்படுத்தப் பட்டார்கள்

ஏசா 45:23 முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவு யாவும் என்னை முன்னிட்டு ஆணையிடும் என்று நான் என்னைக்கொண்டே ஆணையிட்டிருக்கிறேன்; இந்த நீதியான வார்த்தை என் வாயிலிருந்து புறப்பட்டது; இது மாறுவது இல்லையென்கிறார்.

ஏசா 45:24 கர்த்தரிடத்தில் மாத்திரம் நீதியும் வல்லமையுமுண்டென்று அவனவன் சொல்லி அவரிடத்தில் வந்து சேருவான்; அவருக்கு விரோதமாய் எரிச்சல்கொண்டிருக்கிற யாவரும் வெட்கப்படுவார்கள்.

ஏசா 45:25 இஸ்ரவேலின் சந்ததியாகிய யாவரும் கர்த்தருக்குள் நீதிமான்களாக்கப் பட்டு மேன்மைபாராட்டுவார்கள்.

“என்னை நோக்கிப்பாருங்கள்; அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்” - கர்த்தர் மறுபடியுமாக ஜனங்களுக்கு அறைகூவல் விடுக்கிறார். தாமே மெய்யான தேவன். தாமே ஜீவனுள்ளவர் என்பதை ஜனங்களிடம் அறிவிக்கிறார். (ஏசா 40:26) விக்கிரகங்கள் மாயையானவை. ஜீவனற்றவை. விக்கிரகங்களைவழிபடுகிறவர்களும் விருதாவானவர்கள் என்று கர்த்தர் அறிவிக்கிறார். ஏசா 40-45 ஆகிய அதிகாரங்களில் கர்த்தர் இருக்கிறார் என்பதற்கு 130 ஆதாரங்களுக்கு மேல் கூறப்பட்டுள்ளது. தம்மை நோக்கிப் பார்த்து ஜனங்கள் இரட்சிப்படைய வேண்டுமென்று கர்த்தர் அறைகூவல் விடுக்கிறார். (ஏசா 45:22). இரட்சிப்பு யூதருக்கும், புறஜாதியாருக்கும் உரியது. யூதருக்கு மட்டுமே இரட்சிப்பு உரியது என்று கூறுவதற்கு வேதாகமத்தில் ஆதாரம் எதுவுமில்லை. (அப் 10:7-11:18; கலா 2).

மாபெரும் சத்தியங்கள்

1. சுவிசேஷ ஊழியம் உலகம் முழுவதும் நடைபெற வேண்டும். (ஏசா 45:22).
2. எல்லோரையும் இரட்சிப்பதற்குக் கர்த்தர் சித்தம் கொண்டிருக்கிறார். (ஏசா 45:22; யோவான் 3:16; 1தீமோ 2:4;2பேதுரு 3:9; 1யோவான் 1:9; வெளி 22:17).

45 அதிகாரம்

3. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படுவதற்குக் கர்த்தர் வாய்ப்பு கொடுத்திருக்கிறார். (ஏசா 45:22; யோவான் 3:18; ரோமர் 1:16).

4. கர்த்தருடைய அழைப்பை ஏற்றுக் கொள்கிறவர்கள் அனைவரும் இரட்சிக்கப் படுவார்கள். (ஏசா 45:22; யோவான் 1:12; யோவான் 3:16; 1யோவான் 1:9).

தீர்க்கதரிசன எண் - 57

"முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவு யாவும் என்னை முன்னிட்டு ஆணையிடும்.........." (ஏசா 45:23-25) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. முழங்கால் யாவும் கர்த்தருக்கு முன்பாக முடங்கும்.

2. நாவு யாவும் கர்த்தரை முன்னிட்டு ஆணையிடும்.

3. கர்த்தரிடத்தில் மாத்திரம் நீதியும் வல்லமையுமுண்டென்று அவனவன் சொல்லி அவரிடத்தில் வந்து சேருவான். (ஏசா 45:24).

4. அவருக்கு விரோதமாய் எரிச்சல் கொண்டிருக்கிற யாவரும் வெட்கப்படுவார்கள்.

5. இஸ்ரவேலின் சந்ததியாகிய யாவரும் கர்த்தருக்குள் நீதிமான்களாக்கப்பட்டு மேன்மைபாராட்டுவார்கள்.(ஏசா 45:25).

"முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவு யாவும் என்னை முன்னிட்டு ஆணையிடும்" - இந்த வாக்கியம் ரோமர் 14:11; பிலி 2:10 ஆகிய வசனங்களில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. இது கர்த்தருடைய ஆணை. இது ஏற்கெனவே அவருடைய வாயிலிருந்து வெளிவந்துவிட்டது. ஆகையினால் இதை யாராலும் மாற்ற முடியாது.

"கர்த்தரிடத்தில் மாத்திரம் நீதியும் வல்லமையுமுண்டு" - விக்கிரகங்களிடத்தில் நீதியும், வல்லமையும் இல்லை.

"அவருக்கு விரோதமாய் எரிச்சல் கொண்டிருக்கிற யாவரும் வெட்கப்படுவார்கள்" - கர்த்தருடைய சத்துருக்கள் எல்லோரும் முடிவில் வெட்கப்படுவார்கள். கர்த்தருக்கு முன்பாக முழங்கால் படியிட்டு இயேசு கிறிஸ்துவே கர்த்தர் என்று அறிக்கையிடுவார்கள். (ஏசா 45:22-23; பிலி 2:9-11).

"இஸ்ரவேலின் சந்ததியாகிய யாவரும்" - இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரும் தங்களுடைய தேசத்திற்குக் கூட்டிச் சேர்க்கப்பட்டு ஒரு தேசமாக ஸ்தாபிக்கப்பட்டு இரட்சிக்கப்படுவார்கள். (ஏசா 45:20).

46 அதிகாரம்

4. தேவனும் விக்கிரகங்களும் - (46:1-13)

(1) விக்கிரகங்களிடம் வல்லமையில்லை

ஏசா 46:1 பேல் பணியும், நேபோ குனியும், அவைகளின் விக்கிரகங்கள் காட்டு மிருகங்களுக்கும் நாட்டுமிருகங்களுக்கும் சுமையாகும்; நீங்கள் சுமந்த சுமைகள் இளைத்துப்போன மிருகங்களுக்குப் பாரமாயிருக்கும்.

ஏசா 46:2 அவைகள் ஏகமாய்க் குனிந்து பணியும்; சுமைகளை அவைகள் தப்புவிக்க மாட்டாது; அவைகள் தாமே சிறைப்பட்டுப் போகும்.

தீர்க்கதரிசன எண் - 58

"பேல் பணியும், நேபோ குனியும், அவைகளின் விக்கிரகங்கள் காட்டு மிருகங்களுக்கும் நாட்டுமிருகங்களுக்கும் சுமையாகும்..........." (ஏசா 46:1-4) ஏசா 46:1-2 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. ஏசா 46:3-4 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. பேல் பணியும்.
2. நேபோ குனியும். (ஏசா 46:1).
3. பாபிலோனின் விக்கிரகங்கள் காட்டு மிருகங்களுக்கும் நாட்டுமிருகங்களுக்கும் சுமையாகும்.
4. நீங்கள் சுமந்த சுமைகள் பாரமாயிருக்கும்.
5. அவை இளைத்துப்போன மிருகங்களுக்குப் பாரமாயிருக்கும்.
6. சுமைகளை அவைகள் தப்புவிக்கமாட்டாது; அவைகள் தாமே சிறைப்பட்டுப்போகும். (ஏசா 46:2)

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. உங்கள் முதிர்வயதுவரைக்கும் நான் உங்கள் தேவனாக இருப்பேன். (ஏசா 46:4)
2. உங்கள் முதிர்வயதுவரைக்கும் நான் உங்களைத் தாங்குவேன்.
3. நான் உங்களை ஏந்துவேன்.
4. நான் உங்களைச் சுமப்பேன், தப்புவிப்பேன்.

"பேலும், நேபோவும்" - பாபிலோனின் பிரதான விக்கிரகங்களில் பேலும் ஒன்று. இதை பொனிஷியரும், கானானியரும், மோவாபியரும் பாபிலோனைச் சுற்றிலுமுள்ள மற்ற தேசத்தாரும் தங்கள் தெய்வமாக ஆராதித்தார்கள். பேல் தெய்வம் அவர்களுடைய சூரிய ஆராதனையில் பயன்படுத்தப்பட்டது. அஸ்தரோத் தெய்வம் வீனஸ் கிரகத்தை ஆராதிப்பதற்குப் பயன்படுத்தப் பட்டது. நேபோ தெய்வம் மெர்குரி கிரகத்தை ஆராதிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. நேபோ என்னும் பெயர் "தீர்க்கதரிசனம் கூறுதல்" என்னும் பொருளிலிருந்து வந்திருக்கிறது. நேபோ மற்ற தெய்வங்களிடமிருந்து செய்திகளைப் பெற்றுக் கொண்டு அதை ஜனங்களுக்கு அறிவிக்கும். பேல் தெய்வம் சொல்வதை நேபோ தெய்வம் எழுதும். இந்தத் தேசத்தார் சிறைப்பிடிக்கப்பட்ட போது இவர்களுடைய வார்ப்பு விக்கிரகங்களெல்லாம் உருக்கி எடுக்கப்பட்டு உலோகங்களாக்கப்பட்டு எதிரி தேசத்தார் எடுத்துச் சென்றார்கள். (ஏசா 46:1-2; எரே 48:7). புறஜாதி தேசத்தார் தங்களுடைய பெயர்களோடு இந்தத் தெய்வங்களின் பெயர்களையும் சேர்த்துக் கொள்வது வழக்கம். சான்றாக - நேபுகாத்நேச்சார், நெபுசாராதான், நேபோபொலேசார், பெல்ஷாத்சார், பீல்சிபெப், பாகால்பேரீத், பாகால்காத் முதலிய பெயர்களில் அவர்களுடைய விக்கிரகங்களின் பெயர்களும் சேர்ந்துள்ளன.

பேல் (Bel) - בֵּל - bale - 1078

ஆ.பெ.சொ. - பேல்

பாகால் בַּעַל - bah'-al - 1168

பெ.சொ. - பாகால் தெய்வம் (ஏசா 46:1; 1சாமு 5:2-7).

46 அதிகாரம்

நேபோ (Nebo) - נָבָא - naw-baw' - 5012

வினைச்சொல் - தீர்க்கதரிசனம் சொல்லு (to prophesy)

(2) தேவனுடைய சர்வ வல்லமை

ஏசா 46:3 யாக்கோபின் சந்ததியாரே இஸ்ரவேல் சந்ததியில் மீதியாகிய சகல ஜனங்களே, எனக்குச் செவிகொடுங்கள்; தாயின் வயிற்றில் தோன்றினது முதல் உங்களை ஏந்தி, தாயின் கர்ப்பத்தில் உற்பத்தியானதுமுதல் உங்களைத் தாங்கினேன்.

ஏசா 46:4 உங்கள் முதிர்வயதுவரைக்கும் நான் அப்படிச் செய்வேன்; நரைவயது மட்டும் நான் உங்களைத் தாங்குவேன்; நான் அப்படிச் செய்துவந்தேன்; இனிமேலும் நான் ஏந்துவேன், நான் சுமப்பேன், தப்புவிப்பேன்.

"யாக்கோபின் சந்ததியாரே இஸ்ரவேல் சந்ததியில் மீதியாகிய சகல ஜனங்களே, எனக்குச் செவிகொடுங்கள்" - பாபிலோனின் தெய்வங்கள் சிறைப்பிடிக்கப்படும் (ஏசா 46:1-2) என்று ஏசாயா முன்னறிவிக்கிறார். இஸ்ரவேலின் மீதியாக இருக்கிறவர்களுக்குக் கர்த்தர் மேலும் சில செய்திகளைக் கூறுகிறார். அவர்கள் எல்லோரும் பாதுகாக்கப்படுவார்கள். அவர்களுடைய சொந்த தேசங்களுக்கு மீட்டுக் கொண்டு போகப்படுவார்கள். (ஏசா 46:2-4) இந்த வாக்கியத்திற்கு இரண்டு விதமாகப் பொருள் கூறலாம். இஸ்ரவேல் புத்திரர் பாபிலோனின் சிறையிருப்பிலிருந்து கோரேசு ராஜாவினால் உடனடியாக விடுவிக்கப் படுவார்கள். (ஏசா 46:11; ஏசா 41:1-3,25; ஏசா 44:28; ஏசா 25:1-6,13) வருங்கால பாபிலோனின் ராஜாவாகிய அந்திக் கிறிஸ்துவிடமிருந்து யூதர்கள் இறுதியாக மீட்கப்படுவார்கள். (ஏசா 13:1-14:27; வெளி 14:8; வெளி 16:17-21; வெளி 18:1-24).

(3) ஒப்பிடுவதற்கு அழைப்பு

(அ) விக்கிரகம் மாயை என்பதற்கு பத்து சான்றுகள்

ஏசா 46:5 யாருக்கு என்னைச் சாயலும் சமமுமாக்கி, யாருக்கு நான் ஒப்பாகும்படிக்கு என்னை ஒப்பிடுவீர்கள்?

ஏசா 46:6 பையிலிருக்கிற பொன்னைக் கொட்டி, வெள்ளியைத் தராசில் நிறுத்து, தட்டானுடனே கூலி பொருத்திக் கொள்ளுகிறார்கள்; அவன் ஒரு தெய்வத்தை உண்டாக்குகிறான்; அதை வணங்கிப் பணிந்துகொள்ளுகிறார்கள்.

ஏசா 46:7 அதைத் தோளின்மேல் எடுத்து, அதைச்சுமந்து, அதை அதின் ஸ்தானத்திலே வைக்கிறார்கள்; அங்கே அது நிற்கும்; தன் இடத்தைவிட்டு அசையாது; ஒருவன் அதை நோக்கிக் கூப்பிட்டால், அது மறுஉத்தரவு கொடுக்கிறதுமில்லை, அவன் இக்கட்டை நீக்கி அவனை இரட்சிக்கிறதுமில்லை.

விக்கிரகங்களின் மாயைகள்

1. ஜனங்கள் பையிலிருக்கிற பொன்னைக் கொட்டுகிறார்கள். (ஏசா 46:6).
2. ஜனங்கள் வெள்ளியைத் தராசில் நிறுக்கிறார்கள்.
3. ஜனங்கள் தட்டானுடனே கூலி பொருத்திக்கொள்ளுகிறார்கள்.
4. தட்டான் ஒரு தெய்வத்தை உண்டாக்குகிறான்.
5. ஜனங்கள் வணங்கிப் பணிந்து கொள்ளுகிறார்கள்.
6. அதைத் தோளின்மேல் எடுத்து, அதைச்சுமந்து கொண்டு போகிறார்கள். (ஏசா 46:7).
7. அதை அதின் ஸ்தானத்திலே வைக்கிறார்கள்.
8. அங்கே அது நிற்கும்; தன் இடத்தைவிட்டு அசையாது.

46 அதிகாரம்

9. ஒருவன் அதை நோக்கிக் கூப்பிட்டால், அது மறுஉத்தரவு கொடுக்கிறதுமில்லை.

10. அவன் இக்கட்டை நீக்கி அவனை இரட்சிக்கிறதுமில்லை.

விக்கிரகாராதனை பிசாசோடு தொடர்புடையது. (லேவி 17:7; உபா 32:17; 2நாளா 11:15; சங் 106:37; 1கொரி 10:20-21). இந்தக் காலத்தின் முடிவில் பாபிலோனிலும், எருசலேமிலும் ஆவிக்குரிய எழுப்புதல் உண்டாகும். (வெளி 9:20-21; வெளி 13:11-18; வெளி 14:9-11; வெளி 16:2,13,16).

(ஆ) தேவனுடைய சர்வ வல்லமைக்கு பத்து சான்றுகள்

ஏசா 46:8 இதை நினைத்துப் புருஷராயிருங்கள்; பாதகரே, இதை மனதில் வையுங்கள்.

ஏசா 46:9 முந்திப் பூர்வகாலத்தில் நடந்தவைகளை நினையுங்கள்; நானே தேவன், வேறொருவரும் இல்லை; நானே தேவன், எனக்குச் சமானமில்லை.

ஏசா 46:10 அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற் கொண்டும், இன்னும் செய்யப் படாதவைகளைப் பூர்வகாலமுதற் கொண்டும் அறிவிக்கிறேன்; என் ஆலோசனை நிலைநிற்கும், எனக்குச் சித்தமானவைகளை யெல்லாம் செய்வேன் என்று சொல்லி,

ஏசா 46:11 உராய்ஞ்சுகிற ஒரு பட்சியைக் கிழக்கிலிருந்தும், என் ஆலோசனையை நிறைவேற்றும் மனுஷனை தூரதேசத்திலிருந்தும் வரவழைக்கிறவரா யிருக்கிறேன்; அதைச் சொன்னேன், அதை நிறைவேற்றுவேன்; அதைத் திட்டம் பண்ணினேன், அதைச் செய்து முடிப்பேன்.

யூதாவிலிருக்கும் பாவிகளுக்குக் கட்டளைகள்

1. இதை நினைத்துப் பாருங்கள்
2. புருஷராயிருங்கள்.
3. இதை மனதில் வையுங்கள்.
4. முந்திப் பூர்வகாலத்தில் நடந்தவைகளை நினையுங்கள் (ஏசா 46:9).

“புருஷராயிருங்கள்” - குழந்தைத்தனமான விக்கிரகாராதனையிலிருந்து விலகியிருங்கள். 1கொரி 16:13 ஆவது வசனத்தில் “புருஷராயிருங்கள்” என்று கூறப் பட்டிருப்பதற்கும், இதே பொருளைக் கூறலாம்.

நினைக்க வேண்டிய காரியங்கள்

1. நானே தேவன் (ஏசா 46:9).
2. வேறொருவரும் தேவன் இல்லை.
3. யாரும் எனக்குச் சமானமில்லை.
4. அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற் கொண்டு கர்த்தரைப்போல் யாரும் அறிவிப்பதில்லை. (ஏசா 46:10).
5. இன்னும் செய்யப்படாதவைகளைப் பூர்வகாலமுதற் கொண்டு கர்த்தரைப்போல் யாரும் அறிவிப்பதில்லை.
6. என் ஆலோசனை நிலைநிற்கும், எனக்குச் சித்தமானவைகளை யெல்லாம் செய்வேன்.
7. உராய்ஞ்சுகிற ஒரு பட்சியைக் கிழக்கிலிருந்து வரவழைக்கிறேன். (ஏசா 46:11).
8. என் ஆலோசனையை நிறைவேற்றும் மனுஷனை தூரதேசத்திலிருந்தும் வரவழைக்கிறவராயிருக்கிறேன்.
9. அதைச் சொன்னேன், அதை நிறைவேற்றுவேன்.
10. அதைத் திட்டம் பண்ணினேன், அதைச் செய்து முடிப்பேன்.

46 அதிகாரம்

தீர்க்கதரிசன எண் - 59

"அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற் கொண்டும், இன்னும் செய்யப்படாதவை களைப் பூர்வகாலமுதற்கொண்டும் அறிவிக்கிறேன்......." (ஏசா 46:10-13) ஏசா 46:10-11 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. ஏசா 46:12-13 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. என் ஆலோசனை நிலைநிற்கும் (ஏசா 46:10).
2. எனக்குச் சித்தமானவைகளை யெல்லாம் செய்வேன்.
3. உராய்ஞ்சுகிற ஒரு பட்சியைக் கிழக்கிலிருந்து வரவழைப்பேன். (ஏசா 46:11; ஏசா 41:1-3,25; ஏசா 44:28; ஏசா 45:1-4,13).
4. அதைத் திட்டம் பண்ணினேன், அதைச் செய்து முடிப்பேன். (ஏசா 46:11).
5. என் ஆலோசனையை நிறைவேற்றும் மனுஷனை தூரதேசத்திலிருந்து வரவழைக்கிறவராயிருக்கிறேன்.
6. என் ஆலோசனையைச் சொல்வேன்.
7. என் ஆலோசனையை நிறைவேற்றுவேன்.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. என் நீதியைச் சமீபிக்கப்பண்ணுகிறேன் (ஏசா 46:13).
2. அது தூரமாயிருப்பதில்லை.
3. என் இரட்சிப்புத் தாமதிப்பதுமில்லை.
4. நான் சீயோனில் இரட்சிப்பையும், இஸ்ரவேலுக்கு என் மகிமையையும் கட்டளையிடுவேன். (ஏசா 46:13; ரோமர் 11:25-29).

தேவனுடைய நித்திய திட்டம்

ஆரம்பத்திலிருந்து முடிவு வரையிலும் மனுஷனைக் குறித்த தேவனுடைய நித்திய திட்டம் இங்கு விளக்கப்பட்டிருக்கிறது. (ஏசா 46:10; ஏசா 40:21; ஏசா 41:4,26; ஏசா 48:3-7,16; ஏசா 64:4; அப் 15:18; எபே 2:7; எபே 3:9-11; கொலோ 1:15-18; எபி 1:1-3). வேதாகமத்தில் தேவனுடைய திட்டம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கர்த்தருடைய திட்டத்தைப் பற்றிய ஞானம் இல்லாமல் அவருடைய திட்டத்தைப் புரிந்து கொள்ள முடியாது. தேவனுடைய நோக்கத்தைத் தெரிந்து கொண்டால்தான் அவருடைய திட்டத்தையும் புரிந்து கொள்ள முடியும். தம்முடைய சித்தத்தின் பிரகாரமாகக் கர்த்தர் இதுவரையிலும் காரியங்களை நிறைவேற்றியிருக்கிறார். இனிமேல் நிறைவேற்றப் போவதாகவும் வாக்குப் பண்ணியிருக்கிறார்.

நிச்சயமான காரியங்கள்

1. தேவனுடைய திட்டம். (ஏசா 46:10).
2. தீர்க்கதரிசனம்
3. தேவனுடைய ஆலோசனை.
4. தேவனுடைய சித்தம்
5. தேவனுடைய ஆலோசனையை நிறைவேற்றும் மனுஷன். (ஏசா 46:11, ஏசா 41:2,25).
6. தேவனுடைய நிறைவேறும் வார்த்தை. (ஏசா 46:11; ஏசா 55:11).
7. தேவனுடைய நித்திய நோக்கம். (ஏசா 46:11; எபே 3:9-11).

"உராய்ஞ்சுகிற ஒரு பட்சி" - இது கோரேசைக் குறிக்கும். இவன் வேகமாக படையெடுத்துச் சென்று தேசங்களைச் சங்காரம் பண்ணக்கூடியவன். (எசே 39:4). யுத்தம் பண்ணும் ராஜாக்கள் கழுகாகவும் வர்ணிக்கப் பட்டிருக்கிறார்கள். (எரே 49:22; எசே 17:3).

"கிழக்கு" - பெர்சியா, தூரதேசம்.

"என் ஆலோசனையை நிறைவேற்றும் மனுஷன்" - தம்முடைய ஆலோசனையை நிறைவேற்றுவதற்காகக் கர்த்தர் கோரேசைத் தெரிந்தெடுத்திருக்கிறார். அவன் கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றுவான். கோரேசின் மூலமாக கர்த்தருடைய தீர்க்கதரிசனமும் நிறைவேறும். (ஏசா 41:1-3,25; ஏசா 44:28; ஏசா 45:1-4,13).

46 அதிகாரம்

(4) இஸ்ரவேலின் மீட்பு

ஏசா 46:12 முரட்டு இருதயமுள்ளவர்களே, நீதிக்குத் தூரமானவர்களே, எனக்குச் செவிகொடுங்கள்.

ஏசா 46:13 என் நீதியைச் சமீபிக்கப் பண்ணுகிறேன், அது தூரமாயிருப்பதில்லை; என் இரட்சிப்புத் தாமதிப்பதுமில்லை; நான் சீயோனில் இரட்சிப்பையும், இஸ்ரவேலுக்கு என் மகிமையையும் கட்டளையிடுவேன்.

யூதா புத்திரர் செவிகொடுக்க வேண்டிய செய்திகள்

1. கர்த்தர் தம்முடைய நீதியைச் சமீபிக்கப் பண்ணுகிறார். (ஏசா 46:13)
2. அது தூரமாயிருப்பதில்லை.
3. கர்த்தருடைய இரட்சிப்புத் தாமதிப்பதுமில்லை.
4. கர்த்தர் சீயோனில் இரட்சிப்பையும், இஸ்ரவேலுக்கு தமது மகிமையையும் கட்டளையிடுகிறார்.

47 அதிகாரம்

5. பாபிலோனின் அழிவு - (ஏசா 13:1)

(1) பதினான்கு அம்ச நியாயத்தீர்ப்பு

ஏசா 47:1 பாபிலோன் குமாரத்தியாகிய கன்னிகையே, நீ இறங்கி மண்ணிலே உட்காரு; கல்தேயரின் குமாரத்தியே, தரையிலே உட்காரு; உனக்குச் சிங்காசனமில்லை; நீ செருக்குக்காரியும் சுகசெல்வியும் என்று இனி அழைக்கப்படுவதில்லை.

ஏசா 47:2 ஏந்திரத்தை எடுத்து மாவரை; உன் முக்காட்டை நீக்கிவிடு; வெறுங்காலும் அம்மணத் தொடையுமாய் ஆறுகளைக் கடந்துபோ.

ஏசா 47:3 உன் நிர்வாணம் வெளிப்படும்; உன் இலச்சை காணப்படும்; நான் ஒருவனையும் பாராமல் நீதியைச் சரிக்கட்டுவேன்.

ஏசா 47:4 எங்கள் மீட்பருடைய நாமம் இஸ்ரவேலின் பரிசுத்தராகிய சேனைகளுடைய கர்த்தர் என்பது.

ஏசா 47:5 கல்தேயரின் குமாரத்தியே, நீ அந்தகாரத்துக்குள் பிரவேசித்து மவுனமாய் உட்காரு; இனி நீ ராஜ்யங்களின் நாயகியென்று அழைக்கப் படுவதில்லை.

"தரையிலே உட்காரு" - பாபிலோன் இங்கு செருக்குக்காரியாகவும், சுகசெல்வியாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அது திடீரென்று ஏழையாகவும், அடிமையாகவும் போகும். சிங்காசனத்தில் அமர்ந்திருக்கும் பாபிலோன் தரையில் உட்கார வைக்கப்படும். தரையில் உட்காருதல் என்பது துக்கிப்பையும், தாழ்த்தப் படுவதையும் குறிக்கும். (யோசு 8:6; யோபு 2:12; யோபு 10:9; சங் 22:15).

"பாபிலோன் குமாரத்தியாகிய கன்னிகை" - தேசங்களும், பட்டணங்களும் பெண்பால் பெயர்களால் குறிப்பிடப்படுவது வழக்கம். (ஏசா 1:8; ஏசா 37:22; எரே 31:21; எசே 16).

தீர்க்கதரிசன எண் - 60

"பாபிலோன் குமாரத்தியாகிய கன்னிகையே, நீ இறங்கி மண்ணிலே உட்காரு........" (ஏசா 47:1-15) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. பாபிலோன் குமாரத்திகள் மண்ணில் உட்காருவார்கள். இது அவர்களுடைய தோல்வியையும், அவமானத்தையும் குறிக்கிறது. (ஏசா 47:1).
2. பாபிலோனில் சிங்காசனம் இராது.
3. பாபிலோன் செருக்குக்காரியும் சுகசெல்வியும் என்று இனி அழைக்கப் படுவதில்லை.
4. அம்மணத்தொடையாய் இருப்பாய். (ஏசா 47:2-3).
5. உன் நிர்வாணம் வெளிப்படும் (ஏசா 47:3).
6. உன் இலச்சை காணப்படும்.
7. நான் ஒருவனையும் பாராமல் நீதியைச் சரிக்கட்டுவேன்.
8. நீ அந்தகாரத்துக்குள் பிரவேசித்து மவுனமாய் உட்காருவாய். (ஏசா 47:5).
9. இனி நீ ராஜ்யங்களின் நாயகியென்று அழைக்கப்படுவதில்லை.
10. நான் என் ஜனத்தின்மேல் கடுங்கோபமடைவேன். (ஏசா 47:6)
11. என் சுதந்தரத்தைப் பரிசத்தக் குலைச்சலாக்குவேன்.
12. அவர்களை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன்.
13. நீ அவர்கள்மேல் இரக்கம்வைக்கமாட்டாய்.
14. முதிர்வயதுள்ளவர்களின்மேல் உன் நுகத்தை மகா பாரமாக்குவாய்.

ஏசாயா - தொகுப்புரை

47 அதிகாரம்

15. என்றென்றைக்கும் நாயகியாயிருப்பே னென்று சொல்லுவாய். (ஏசா 47:7).

16. இந்தக்காரியங்களை இதுவரைக்கும் உன் மனதிலே வையாமல் போனாய்.

17. அதின் முடிவை நினையாமலும் போனாய்.

18. சுகசெல்வியாக இருக்கிறாய். (ஏசா 47:8).

19. விசாரமில்லாமல் வாழ்கிறாய்.

20. என்னைத்தவிர ஒருவருமில்லை; நான் விதவையாவதில்லை, நான் சந்தான சேதத்தை அறிவதில்லையென்று உன் இருதயத்திலே சொல்லுகிறாய். (ஏசா 47:8,10).

21. சந்தான சேதமும் விதவையிருப்பும் ஆகிய இவ்விரண்டும் உனக்குச் சடிதியாக ஒரே நாளில் வரும் (ஏசா 47:9).

22. உன் திரளான சூனியங்களினிமித்தமும், உன் வெகுவான ஸ்தம்பன வித்தைகளினிமித்தமும் அவைகள் பூரணமாய் உன்மேல் வரும்.

23. உன் துன்மார்க்கத்திலே நீ திடநம்பிக்கையாயிருந்து: என்னைப் பார்க்கிறவர் ஒருவரும் இல்லையென்றாய் (ஏசா 47:10).

24. உன் ஞானமும் உன் அறிவுமே உன்னைக்கெடுக்கும்.

25. தீங்கு உன்மேல்வரும் (ஏசா 47:11).

26. அது எங்கேயிருந்து உதித்ததென்று நீ அறியாய்.

27. விக்கினம் உன்மேல் வரும், நீ அதை நிவிர்த்தியாக்கமாட்டாய்.

28. நீ அறியாதபடிக்குச் சடிதியாய் உண்டாகும் பாழ்க்கடிப்பு உன்மேல் வரும்.

29. நீ உன் சிறுவயதுமுதல் பிரயாசப்பட்டுப் பழகிவருகிற உன் ஸ்தம்பன வித்தைகளையும், உன் திரளான சூனியங்களையும் நீ அநுசரித்து நில்; அவைகளால் உனக்குப் பிரயோஜனம் உண்டோ, பலன் உண்டோ, பார்ப்போம். (ஏசா 47:12).

30. உன் திரளான யோசனைகளினால் நீ இளைத்துப்போனாய்; இப்பொழுதும் ஜோசியரும், நட்சத்திரம் பார்க்கிறவர்களும், அமாவாசி கணிக்கிறவர்களும் எழும்பி, உனக்கு நேரிடுகிறவைகளுக்கு உன்னை விலக்கி இரட்சிக்கட்டும். (ஏசா 47:13).

31. அவர்கள் தாளடியைப்போல இருப்பார்கள், (ஏசா 47:14).

32. நெருப்பு அவர்களைச் சுட்டெரிக்கும்

33. அவர்கள் தங்கள் பிராணனை அக்கினிஜுவாலையினின்று விடுவிப்பதில்லை.

34. அது குளிர்காயத்தக்க தழலுமல்ல; எதிரே உட்காரத்தக்க அடுப்புமல்ல.

35. உன்னை இரட்சிப்பார் இல்லை.

36. உன் சிறுவயதுமுதல் நீ பிரயாசப்பட்டு எவர்களுடன் வியாபாரம் பண்ணினாயோ, அவர்களும் உன்னை இரட்சிக்க மாட்டார்கள். (ஏசா 47:15).

பிற்காலத்தில் நிறைவேறப் போகும் தீர்க்கதரிசனம்

1. பாபிலோன் செருக்குக்காரியும் சுகசெல்வியும் என்று இனி அழைக்கப் படுவதில்லை. பாபிலோனில் இனிமேல் ஐசுவரியமும், ஆடம்பரமும் இராது. (ஏசா 47:1). அந்திக்கிறிஸ்து பூமியில் ஆட்சி புரியும் போது பாபிலோன் செருக்குக்காரியாகவும், சுகசெல்வியாகவும் இருக்கும். (ஏசா 13:1-14:27; சக 5:6-11, வெளி 18:1-24) அதன் பின்பு இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறும்.

2. இந்தக் காலத்தின் முடிவில் ஏழாம் முத்திரையின்போது பாபிலோன் அழியும். அதுவரையிலும் ராஜ்யங்களின் நாயகி என்று அழைக்கப்பட்டது இனிமேல் அதுபோல அழைக்கப்படுவதில்லை. (ஏசா 47:5, வெளி 16:17-21; வெளி 18:1-24).

47 அதிகாரம்

3. பாபிலோன் இதுவரையிலும் சந்தானம் இல்லாமலும், விதவையாகவும் இருந்ததில்லை. (ஏசா 47:9) கோரேசு பாபிலோனைப் பிடித்த போது அதில் ஜனங்கள் தொடர்ந்து குடியிருந்து வந்தார்கள். வருங்காலத்தில் பாபிலோன் அழிக்கப்படும்போது அதிலுள்ள எல்லா ஜனங்களும் அழிந்துபோவார்கள். (வெளி 16:17-21; வெளி 18:1-24).

4. கோரேசு பாபிலோன் பட்டணத்தைக் கைப்பற்றும்போது பாபிலோன்மீது நியாயத்தீர்ப்பு பூரணமாக இராது. (ஏசா 47:9,14) ஆனால் வருங்காலத்தில் அது அழிக்கப்படும் போது பாபிலோன்மீது நியாயத்தீர்ப்பு பூரணமாக வரும். (ஏசா 13:19-22; எரே 50:39-40; வெளி 14:8; வெளி 16:17-21; வெளி 18:1-24).

5. வருங்கால பாபிலோன்மீது நியாயத்தீர்ப்பு சடிதியாகவும், பூரணமாகவும் வரும். இந்த நியாயத்தீர்ப்பு எங்கிருந்து வருகிறது என்று தெரியாமல் ஜனங்கள் திகைப்பார்கள். (ஏசா 47:11) மேதிய-பெர்சிய தேசத்தினால் தங்கள் தேசம் பிடிக்கப்பட்டது என்பது பாபிலோன் பட்டணத்தாருக்குத் தெரியும். ஆகையினால் இந்த அழிவு வருங்காலத்தில் நடைபெறப் போவதைக் குறிக்கிறது. (தானி 5:25-28).

6. கோரேசு பாபிலோன் பட்டணத்தைக் கைப்பற்றியபோது அதை அவன் சடிதியாகப் பிடிக்கவில்லை. (ஏசா 47:11). ஆனால் வருங்காலத்தில் ஏழாம் முத்திரையின்போது வருங்கால பாபிலோனின் அழிவு திடீரென்று வரும். (எரே 51:8; வெளி 18:10,17,19). ஆகையினால் இந்தத் தீர்க்கதரிசனம் வருங்காலத்து அழிவைக் குறிக்கும்.

7. பாபிலோன் அக்கினியினால் சுட்டெரிக்கப் படும். (ஏசா 47:14). கோரேசு பாபிலோனைப் பிடித்த போது அவன் அதை அக்கினியினால் சுட்டெரிக்க வில்லை. எனவே இதுவும் வருங்காலத்தில் நிறைவேறும் என்பதையே குறிப்பிடுகிறது. (எரே 50:40; வெளி 18:8).

8. வியாபாரம் பண்ணியவர்கள் கோரேசின் காலத்தில் அழிக்கப்பட்டதாகக் குறிப்பு எதுவும் இல்லை. ஆனால் அவர்கள் வருங்கால பாபிலோனிலிருந்து தப்பித்து ஓடும்போது அழிக்கப்படுவார்கள். (ஏசா 47:15; வெளி 18:15-20).

பாபிலோனுக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. இறங்கி வா. (ஏசா 47:1).
2. மண்ணிலே உட்காரு.
3. தரையிலே உட்காரு.
4. ஏந்திரத்தை எடுத்துக் கொள். (ஏசா 47:2).
5. மாவரை.
6. உன் முக்காட்டை நீக்கிவிடு.
7. வெறுங்காலாயிரு.
8. அம்மணத்தொடையாயிரு.
9. ஆறுகளைக் கடந்துபோ.
10. மவுனமாய் உட்காரு (ஏசா 47:5).
11. நான் சொல்லுகிறதைக்கேள். (ஏசா 47:8).
12. நீ அநுசரித்து நில். (ஏசா 47:12).

"ஏந்திரத்தை எடுத்து மாவரை" - பாபிலோனின் குமாரத்தி ராஜாத்தியாக இருந்தவள். (ஏசா 47:2-3) இப்போது அவள் அடிமைப்பெண்ணைப் போல மாவரைக்குமாறு கட்டளையிடப்படுகிறாள். அவமானத்தினாலும், வெட்கத்தினாலும் நிரப்பப்படுகிறாள். மாவரைப்பது அடிமைகளுக்குக் கொடுக்கப்படும் தண்டனையாகும்.

"உன் முக்காட்டை நீக்கிவிடு" - ஸ்திரீகளுக்கு தலையில் முக்காடு இல்லாமல் இருப்பது அவர்களுக்கு அவமானமாகும்.

"வெறுங்காலும் அம்மணத்தொடையுமாய் ஆறுகளைக் கடந்துபோ" - ராஜஸ்திரீகள் தங்களுடைய உள்ளங்கால் வரையிலும் நீளமாகத் தொங்கும் ராஜவஸ்திரங்களை அணிந்திருப்பார்கள். ஆனால் இப்போதோ பாபிலோனின் ஜனங்கள் அடிமைகளாகச் சிறையிருப்புக்குப் போகிறார்கள். அவர்கள் தங்களுடைய ராஜவஸ்திரங்களையெல்லாம் களைந்துபோட்டு சாதாரண அடிமைகளைப்போல போதுமான அளவு வஸ்திரமில்லாமல் ஆறுகளைக் கடக்க வேண்டும். (ஏசா 47:3).

47 அதிகாரம்

"நான் ஒருவனையும் பாராமல் நீதியைச் சரிக்கட்டுவேன்" - பாபிலோன்மீது வரும் தெய்வீகக் கோபத்தை யாராலும் தடைபண்ண முடியாது.

"எங்கள் மீட்பருடைய நாமம் இஸ்ரவேலின் பரிசுத்தராகிய சேனைகளுடைய கர்த்தர்" - பாபிலோனின் அழிவைப் பற்றி முன்னறிவிக்கும் போது ஏசாயா இஸ்ரவேலின் மெய்யான தேவனையும் அங்கிகரிக்கிறார். தங்களுக்குக் கர்த்தர் இரட்சகராயிருக்கிறார் என்றும், பாபிலோனை இரட்சிப்பதற்கோ ஒருவரும் இல்லை என்றும் ஏசாயா வெளிப்படுத்துகிறார்.

"நீ அந்தகாரத்துக்குள் பிரவேசித்து மவுனமாய் உட்காரு" - இதுவும் துக்கத்திற்கு அடையாளமாகும். ராஜ்யங்களின் நாயகியாக ஆடம்பரமாகவும், சந்தோஷமாகவும் இருக்க வேண்டியவள் இப்போது துக்கத்தின் நாயகியாக இருக்கிறாள்.

(2) நியாயத்தீர்ப்புக்கு பதினைந்து காரணங்கள்

ஏசா 47:6 நான் என் ஜனத்தின்மேல் கடுங்கோபமடைந்து, என் சுதந்தரத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்கி, அவர்களை உன் கையில் ஒப்புக்கொடுத்தேன்; நீ அவர்கள்மேல் இரக்கம்வையாமல், முதிர்வயதுள்ளவர்களின்மேல் உன் நுகத்தை மகா பாரமாக்கி,

ஏசா 47:7 என்றென்றைக்கும் நாயகியாயிருப்பேனென்று சொல்லி, இந்தக்காரியங்களை இதுவரைக்கும் உன் மனதிலே வையாமலும், அதின் முடிவை நினையாமலும் போனாய்.

ஏசா 47:8 இப்பொழுதும் சுகசெல்வியே, விசாரமில்லாமல் வாழ்கிறவளே: நான்தான், என்னைத்தவிர ஒருவருமில்லை; நான் விதவையாவதில்லை, நான் சந்தான சேதத்தை அறிவதில்லையென்று உன் இருதயத்திலே சொல்லுகிறவளே, நான் சொல்லுகிறதைக்கேள்.

ஏசா 47:9 சந்தான சேதமும் விதவையிருப்பும் ஆகிய இவ்விரண்டும் உனக்குச் சடிதியாக ஒரேநாளில் வரும்; உன் திரளான சூனியங்களினிமித்தமும், உன் வெகுவான ஸ்தம்பன வித்தைகளினிமித்தமும் அவைகள் பூரணமாய் உன்மேல் வரும்.

ஏசா 47:10 உன் துன்மார்க்கத்திலே நீ திடநம்பிக்கையாயிருந்து: என்னைப் பார்க்கிறவர் ஒருவரும் இல்லையென்றாய். உன் ஞானமும் உன் அறிவுமே உன்னைக்கெடுத்தது; நான்தான், என்னைத்தவிர ஒருவரமில்லையென்று உன் இருதயத்தில் எண்ணினாய்.

ஏசா 47:11 ஆகையால் தீங்கு உன்மேல்வரும், அது எங்கேயிருந்து உதித்ததென்று நீ அறியாய்; விக்கினம் உன்மேல் வரும், நீ அதை நிவிர்த்தியாக்க மாட்டாய்; நீ அறியாதபடிக்குச் சடிதியாய் உண்டாகும் பாழ்க்கடிப்பு உன்மேல் வரும்.

யூதாவைத் தாழ்மைப்படுத்த தேவன் செய்த காரியங்கள்

1. நான் என் ஜனத்தின்மேல் கடுங் கோபமடைந்தேன்.
2. என் சுதந்தரத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்கினேன்.
3. அவர்களைப் பாபிலோன் கையில் ஒப்புக் கொடுத்தேன்.

பாபிலோன் கண்டிக்கப்படுவதற்குக் காரணம்

1. நீ அவர்கள்மேல் இரக்கம்வையாமல் இருந்தாய். (ஏசா 47:6).
2. யூதாவின் முதிர்வயதுள்ளவர்களின்மேல் உன் நுகத்தை மகா பாரமாக்கினாய்.
3. என்றென்றைக்கும் நாயகியாயிருப்பேனென்று சொன்னாய். (ஏசா 47:7).

47 அதிகாரம்

4. இந்தக்காரியங்களை இதுவரைக்கும் உன் மனதிலே வையாமல் போனாய்.

5. அதின் முடிவை நினையாமலும் போனாய்.

6. சுகசெல்வியானாய். (ஏசா 47:8).

7. விசாரமில்லாமல் வாழ்கிறாய்.

8. நான்தான், என்னைத்தவிர ஒருவருமில்லை என்கிறாய். (ஏசா 47:8,10).

9. நான் விதவையாவதில்லை என்கிறாய். (ஏசா 47:8).

10. நான் சந்தான சேதத்தை அறிவதில்லை என்கிறாய்.

11. உன் திரளான சூனியங்களை நம்புகிறாய். உன் வெகுவான ஸ்தம்பன வித்தைகளை நம்புகிறாய். (ஏசா 47:9).

12. உன் துன்மார்க்கத்திலே நீ திடநம்பிக்கையாயிருக்கிறாய். (ஏசா 47:10).

13. என்னைப் பார்க்கிறவர் ஒருவரும் இல்லையென்றாய்.

14. உன் ஞானமும் உன் அறிவுமே உன்னைக்கெடுக்க அனுமதிக்கிறாய்.

பாபிலோனுக்கு வரும் தீங்குகள்

1. சந்தான சேதம்

2. விதவையிருப்பு

பாபிலோன் தேசம் திருமணமான ஸ்திரீயாகவும், பிள்ளைகளைப் பெற்றவளாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கிறாள். இவள் ஏசா 47:1 ஆவது வசனத்தில் கன்னிகையாகக் கூறப்பட்டிருக்கிறாள். ஆனால் இப்போதோ தன்னுடைய பிள்ளைகளையும், கணவனையும் இழந்தவளாகத் தவிக்கிறாள். (ஏசா 47:8-9).

“சடிதியாக ஒரேநாளில் வரும்” - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது கர்த்தர் பாபிலோனைச் சடிதியாக அழிப்பார். (ஏசா 47:9,11) கோரேசு ராஜா பாபிலோனைப் பிடிப்பதற்கு அவனுக்குப் பல நாட்களாயிற்று. ஆனால் இந்த வசனத்தில் பாபிலோன் சடிதியாகவும், ஒரே நாளிலும் அழியும் என்று கூறப்பட்டிருக்கிறது. ஏசா 13:19-22; எரே 50:40; எரே 51:8; வெளி 14:8; வெளி 16:17-21; வெளி 18:8,10,17 ஆகிய வசனங்களில் பாபிலோன் சடிதியாகவும், பூரணமாகவும் வருங்காலத்தில் அழியும் என்று கூறப்பட்டுள்ளது.

“பூரணமாய்” - பாபிலோனின் அழிவு பூரணமாக இருக்கும். (வெளி 14:8; வெளி 16:17-21; வெளி 18:1-24).

“உன் திரளான சூனியங்களினிமித்தம்” - கர்த்தருடைய நாளில் பாபிலோன் தேசத்தில் திரளான சூனியங்கள் இருக்கும். பாபிலோனின் அழிவிற்கு இதுவே பிரதான காரணம். (ஏசா 47:9, 12-13; வெளி 18:2,23).

தங்கள் இருதயத்தில் எண்ணிக் கொண்டவர்கள்

1. பாபிலோன் - என்னைத்தவிர ஒருவருமில்லை (ஏசா 47:10).

2. லூசிபர் - நான் வானத்திற்கு ஏறுவேன். தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்...... உன்னதமானவருக்கு ஒப்பாவேன். (ஏசா 14:12-14).

3. தேவன் - இனி நான் மனுஷன் நிமித்தம் பூமியைச் சபிப்பதில்லை.....இனி சகல ஜீவன்களையும் சங்கரிப்பதில்லை. (ஆதி 8:21).

4. ஏசா - என் சகோதரனாகிய யாக்கோபைக் கொன்றுபோடுவேன். (ஆதி 27:41).

5. சீயோன் - இவர்களை எனக்குப் பிறப்பித்தவர் யார்.....இவர்கள் எங்கே இருந்தவர்கள். (ஏசா 49:21)

6. மதியீனன் - நீ இளைப்பாறி புசித்துக் குடித்து பூரிப்பாய் இரு. (லூக்கா 12:17-19; சங் 14:1).

47 அதிகாரம்

(3) தன்னைத் தான் இரட்சித்துக் கொள்வதற்கு அழைப்பு

ஏசா 47:12 நீ உன் சிறுவயதுமுதல் பிரயாசப்பட்டுப் பழகிவருகிற உன் ஸ்தம்பன வித்தைகளையும், உன் திரளான சூனியங்களையும் நீ அநுசரித்து நில்; அவைகளால் உனக்குப் பிரயோஜனம் உண்டோ, பலன் உண்டோ, பார்ப்போம்.

ஏசா 47:13 உன் திரளான யோசனைகளினால் நீ இளைத்துப் போனாய்; இப்பொழுதும் ஜோசியரும், நட்சத்திரம் பார்க்கிறவர்களும், அமாவாசி கணிக்கிறவர்களும் எழும்பி, உனக்கு நேரிடுகிறவைகளுக்கு உன்னை விலக்கி இரட்சிக்கட்டும்.

ஏசா 47:14 இதோ, அவர்கள் தாளடியைப்போல இருப்பார்கள், நெருப்பு அவர்களைச் சுட்டெரிக்கும்; அவர்கள் தங்கள் பிராணனை அக்கினி ஜுவாலையினின்று விடுவிப்பதில்லை; அது குளிர்காயத்தக்க தழலுமல்ல; எதிரே உட்காரத்தக்க அடுப்புமல்ல.

ஏசா 47:15 உன் சிறுவயதுமுதல் நீ பிரயாசப்பட்டு எவர்களுடன் வியாபாரம் பண்ணினாயோ, அவர்களும் அப்படியே இருப்பார்கள்; அவரவர் தங்கள் போக்கிலே போய் அலைவார்கள்; உன்னை இரட்சிப்பார் இல்லை.

"அவைகளால் உனக்குப் பிரயோஜனம் உண்டோ, பலன் உண்டோ, பார்ப்போம்" - புறஜாதியாரின் துன்மார்க்கமான பட்டணங்கள் மீதும் கர்த்தர் கிருபையாக இருக்கிறார். அவர்கள் கர்த்தருடைய சத்தத்திற்குச் செவிகொடுத்து மனந்திரும்பி கர்த்தரிடத்தில் வந்தால் தங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் அழிவிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். தேவனுடைய செய்தியைக் கேட்டதினால் நினிவே தேசத்தார் அழிவிலிருந்து தப்பினார்கள். (யோனா 3).

பாபிலோனில் விக்கிரகாராதனை செய்கிறவர்கள்

1. ஜோசியர்
2. நட்சத்திரம் பார்க்கிறவர்கள்
3. அமாவாசி கணிக்கிறவர்கள்

"உனக்கு நேரிடுகிறவைகளுக்கு உன்னை விலக்கி இரட்சிக்கட்டும்." - வரப்போகிற நியாயத்தீர்ப்பிலிருந்து ஜோசியரும், மற்ற விக்கிரகாராதனைக்காரரும் பாபிலோனை இரட்சிக்கட்டும் என்று கர்த்தர் அறைகூவல் விடுக்கிறார். (ஏசா 47:12-13). நியாயத்தீர்ப்பு ஞானிகளுக்கும், வியாபாரம் செய்கிறவர்களுக்கும், எல்லோருக்கும் வருகிறது. பாபிலோன் பட்டணத்தை இவர்கள் யாராலும் இரட்சிக்க முடியாது. இவர்கள் எல்லோரும் பாபிலோனை விட்டுவிட்டு தங்கள் போக்கிலே போய் அலைவார்கள். (ஏசா 47:14-15).

48 அதிகாரம்

6. முரண்பாடு - தேவனும் இஸ்ரவேலும் - (48:1-22; ஏசா 1:2)

(1) இஸ்ரவேலின் மாயமாலம் - (1:10)

ஏசா 48:1 இஸ்ரவேலென்னும் பெயர்பெற்று, யூதாவின் நீரூற்றிலிருந்து சுரந்தவர்களும், கர்த்தருடைய நாமத்தின் மேல் ஆணையிட்டு, உண்மையும் நீதியும் இல்லாமல் இஸ்ரவேலின் தேவனை அறிக்கையிடுகிறவர்களுமான யாக்கோபின் வம்சத்தாரே, கேளுங்கள்.

ஏசா 48:2 அவர்கள் தங்களைப் பரிசுத்த நகரத்தார் என்று சொல்லி, சேனைகளின் கர்த்தர் என்னும் நாமமுள்ள இஸ்ரவேலின் தேவன்மேல் பற்றுதலாயிருக்கிறார்கள்.

"யாக்கோபின் வம்சத்தாரே, கேளுங்கள்" - இஸ்ரவேலின் மாய்மாலத்திற்காக அது கடிந்து கூறப்படுகிறது. கர்த்தர் அவர்களுக்கு எதிராகக் கூறும் குற்றச்சாட்டுக்களைக் கேட்குமாறு அவர்கள் கட்டளையிடப்படுகிறார்கள். (ஏசா 48:1-22).

இஸ்ரவேல் புத்திரரின் உண்மை நிலமை

1. யாக்கோபின் வம்சத்தார் இஸ்ரவேலென்னும் பெயர்பெற்றார்கள். (ஏசா 48:1).

2. ஏசாயாவின் நாட்களில் இஸ்ரவேல் என்பது யூதாவிலுள்ள யூதர்களைக் குறிக்கும். (ஏசா 48:1-2)

3. யூதாவும், இஸ்ரவேலின் மற்றக் கோத்திரத்தாரும் பாவம் செய்து, மாய்மாலமாகத் தேவனை அறிக்கையிடுகிறார்கள். (ஏசா 48:1).

4. யூதா தங்களுடைய மாய்மாலத்தின் மத்தியிலும் தங்களைப் பரிசுத்த நகரத்தார் என்று சொல்லிக் கொள்கிறது. (ஏசா 48:2, 2இராஜா 17).

"பரிசுத்த நகரத்தார்" - எருசலேம் பரிசுத்த நகரம் என்று அழைக்கப்படுகிறது. தேவாலயமும், உடன்படிக்கைப் பெட்டியும் மெய்யான தேவனுடைய ஆராதனையும் எருசலேமை மையமிட்டிருக்கிறது. (ஏசா 52:1; நெகே 11:1,18; தானி 9:24; மத் 4:5; மத் 27:53; வெளி 11:2). பரலோகத்திலுள்ள எருசலேம் "பரிசுத்த நகரம்" என்று அழைக்கப்படுகிறது. (வெளி 21:2; வெளி 22:19).

பற்றுதலாயிருப்பது **(stay) - סָמַךְ - saw-mak' - 5564**

வினைச்சொல் - ஆதரி, வை, வைத்திரு, தாங்கு, ஆதரிக்கப்படு, பற்றுதலாயிரு, சாய், தேற்று, இருந்து, பாளையமிறங்கு, ஆதரித்தருளு, உறுதியாய்ப் பற்றிக்கொள் **(to prop; lean upon; take hold of; bear up; lie hard upon; rest in) stand fast** (ஏசா 48:2; ஏசா 26:3; உன் 2:5). இஸ்ரவேல் தேசம் கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப் போனாலும் தங்களுடைய உபத்திரவக்காலத்தில் கர்த்தரிடத்தில் திரும்பி வரும். (நியா 2:16-19).

(2) தேவனுடைய பன்னிரெண்டு அம்ச சர்வ வல்லமை - இஸ்ரவேலின் பத்து அம்ச கலகம் - (1:2)

ஏசா 48:3 பூர்வகாலத்தில் நடந்தவைகளை ஆதிமுதல் அறிவித்தேன், அவைகள் என் வாயிலிருந்து பிறந்தன, அவைகளை வெளிப்படுத்தினேன்; அவைகளைச் சடிதியாய்ச் செய்தேன், அவைகள் நடந்தன.

ஏசா 48:4 நீ கடினமுள்ளவனென்றும், உன் பிடரி நரம்பு இரும்பென்றும், உன் நெற்றி வெண்கலமென்றும் அறிந்திருக்கிறேன்.

ஏசா 48:5 ஆகையால்: என் விக்கிரகம் அவைகளைச் செய்ததென்றும், நான் செய்த சுரூபமும், நான் வார்ப்பித்த விக்கிரகமும் அவைகளைக் கட்டளையிட்டதென்றும் நீ சொல்லாதபடிக்கு, நான் அவைகளை முன்னமே உனக்கு அறிவித்து, அவைகள் வராததற்கு முன்னே உனக்கு வெளிப்படுத்தினேன்.

ஏசாயா - தொகுப்புரை

48 அதிகாரம்

ஏசா 48:6 அவைகளைக் கேள்விப்பட்டாயே, அவைகளையெல்லாம் பார், இப்பொழுது நீங்களும் அவைகளை அறிவிக்கலாமல்லவோ? இதுமுதல் புதியவைகளானவைகளையும், நீ அறியாத மறைபொருளானவைகளையும் உனக்குத் தெரிவிக்கிறேன்.

ஏசா 48:7 அவைகள் ஆதிமுதற்கொண்டு அல்ல, இப்பொழுதே உண்டாக்கப்பட்டன; இதோ, அவைகளை அறிவேன் என்று நீ சொல்லாதபடிக்கு, இந்நாட்களுக்கு முன்னே நீ அவைகளைக் கேள்விப்படவில்லை.

ஏசா 48:8 நீ கேள்விப்படவுமில்லை, அறியவுமில்லை; ஆதிமுதல் உன் செவி திறந்திருக்கவுமில்லை; நீ துரோகம் பண்ணுவாயென்பதையும், தாயின் கர்ப்பந்தொடங்கி நீ மீறுகிறவனென்று பெயர் பெற்றதையும் அறிந்திருக்கிறேன்.

தேவனுடைய சர்வ வல்லமையும், சர்வ ஞானமும்

1. பூர்வகாலத்தில் நடந்தவைகளை ஆதிமுதல் அறிவித்தேன். (ஏசா 48:3,5).
2. அவைகள் என் வாயிலிருந்து பிறந்தன.
3. அவைகளை வெளிப்படுத்தினேன்.
4. அவைகளைச் சடிதியாய்ச் செய்தேன், அவைகள் நடந்தன.
5. நீ கடினமுள்ளவனென்று அறிந்திருக்கிறேன். (ஏசா 48:4).
6. உன் பிடரி நரம்பு இரும்பென்று அறிந்திருக்கிறேன்.
7. உன் நெற்றி வெண்கலமென்றும் அறிந்திருக்கிறேன்.
8. நான் அவைகளை முன்னமே உனக்கு அறிவித்தேன். (ஏசா 48:5).
9. அவைகள் வராததற்கு முன்னே உனக்கு வெளிப்படுத்தினேன்.
10. அவைகள் ஆதிமுதற்கொண்டு அல்ல, இப்பொழுதே உண்டாக்கப்பட்டன. (ஏசா 48:7).
11. நீ துரோகம்பண்ணுவாயென்பதை நான் அறிந்திருக்கிறேன். (ஏசா 48:8).
12. தாயின் கர்ப்பந்தொடங்கி நீ மீறுகிறவனென்று பெயர் பெற்றதையும் அறிந்திருக்கிறேன்.

யூதாவின் மீறுதல்

1. நீ கடினமுள்ளவன் (ஏசா 48:4).
2. உன் பிடரி நரம்பு இரும்பு
3. உன் நெற்றி வெண்கலம்
4. நீ விக்கிரகங்களை வழிபடுகிறவன். (ஏசா 48:5).
5. நீ விக்கிரகங்களை நம்புகிறவன். (ஏசா 48:6).
6. நீ அறியவில்லை. (ஏசா 48:6,8).
7. நீ கேள்விப்படவில்லை.
8. நீ துரோகம்பண்ணுவாய்.
9. தாயின் கர்ப்பந்தொடங்கி நீ மீறுகிறவனாய் இருக்கிறாய்.

"உன் பிடரி நரம்பு இரும்பென்றும், உன் நெற்றி வெண்கலமென்றும்" - இரும்பும், வெண்கலமும் கலகக்குணத்தையும், கடினக் குணத்தையும் வெளிப்படுத்துகிறது.

யூதருடைய சுபாவங்கள்

1. இரும்பு பிடரியும், வெண்கல நெற்றியும். (ஏசா 48:4)
2. கடினமுள்ளவர்கள். (ஏசா 48:4; உபா 2:30)
3. வணங்காக்கழுத்துள்ளவர்கள். (யாத் 32:9; யாத் 33:3-5; யாத் 34:9; உபா 9:6,13; உபா 10:16; 2நாளா 30:8; அப் 7:51)

48 அதிகாரம்

4. முரட்டாட்டமுள்ள இருதயமுள்ளவர்கள். (எசே 2:4)

5. இறுமாப்புள்ளவர்கள். (உபா 9:27; நியா 2:19; சங் 78:8)

6. கலகக்குணமுள்ளவர்கள். (ஏசா 30:9; ஏசா 65:2; எரே 5:23; எசே 2:3-8; எசே 3:9,26-27; எசே 12:2-9,25; எசே 17:12)

7. மாறுபாடானவர்கள். (உபா 32:5; பிலி 2:15)

8. விசுவாசம் இல்லாதவர்கள். (மத் 17:17; லூக்கா 9:41)

9. சீர்கெட்டுப்போனவர்கள். (சங் 14:1; சங் 73:8)

10. மதியீனர்கள். (உபா 32:6,21)

11. கடின இருதயமுள்ளவர்கள். (எசே 3:7)

12. குருடர்கள் (மத் 15:14; மத் 23:16-19,24-26)

13. சுய ஆலோசனைக்காரர்கள் (ஆதி 49:6; 2பேதுரு 2:10)

14. அகந்தைக்காரர்கள் (ஏசா 3:16; எசே 16:50)

15. கலகமுள்ள வீட்டார். (எசே 3:9; சக 7:12)

"நான் அவைகளை முன்னமே உனக்கு அறிவித்து, அவைகள் வராததற்கு முன்னே உனக்கு வெளிப்படுத்தினேன்" - தீர்க்கதரிசனம் கூறுவதும், மறைவான காரியங்களை வெளிப்படுத்துவதும் கர்த்தருக்குரியது. பல காரியங்களை அவைகள் வருவதற்கு முன்பாகவே கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். ஆகையினால் அந்த வெளிப்பாடுகள் விக்கிரகங்களிடமிருந்து வந்துள்ளதாக யூதர்கள் சாக்குக்கூற முடியாது. (ஏசா 48:5-8)

(3) தேவனுடைய பொறுமை

ஏசா 48:9 என் நாமத்தினிமித்தம் என் கோபத்தை நிறுத்திவைத்தேன்; உன்னைச் சங்கரிக்காதபடிக்கு நான் என் புகழ்ச்சியினிமித்தம் உன்மேல் பொறுமையாயிருப்பேன்.

ஏசா 48:10 இதோ, உன்னைப் புடமிட்டேன்; ஆனாலும் வெள்ளியைப் போலல்ல, உபத்திரவத்தின் குகையிலே உன்னைத் தெரிந்துகொண்டேன்.

ஏசா 48:11 என்னிமித்தம், என்னிமித்தமே, அப்படிச் செய்வேன்; என் நாமத்தின் பரிசுத்தம் எப்படிக் குலைக்கப்படலாம்? என் மகிமையை நான் வேறொருவருக்குங் கொடேன்.

"என் நாமத்தினிமித்தம் என் கோபத்தை நிறுத்திவைத்தேன்" - இஸ்ரவேலர்கள் மாய்மாலத்திலும், பாவத்திலும் ஜீவிக்கிறார்கள். ஆனாலும் தம்முடைய நாமத்தின் நிமித்தமாகவும் தம்முடைய மகிமையின் நிமித்தமாகவும் கர்த்தர் அவர்களை இன்னும் தண்டிக்கவில்லை.

"இதோ, உன்னைப் புடமிட்டேன்; ஆனாலும் வெள்ளியைப்போலல்ல" - ஏசா 48:10-11 ஆகிய வசனங்கள் வேதாகமத்தின் பல பதிப்புக்களில் பலவிதமாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. கர்த்தர் ஏற்கெனவே தமது ஜனங்களைத் தண்டித்து விட்டார் என்னும் பொருள்பட சில மொழிபெயர்ப்புக்களில் கூறப்பட்டுள்ளது. வேறு சில பதிப்புக்களில் இஸ்ரவேல் புத்திரருக்கு இனிமேல் வரப்போகும் உபத்திரவங்களை இது வெளிப்படுத்துவதாகக் கூறப்பட்டிருக்கிறது.

(4) இஸ்ரவேலுக்கு தேவனுடைய அழைப்பு

ஏசா 48:12 யாக்கோபே, நான் அழைத்திருக்கிற இஸ்ரவேலே, எனக்குச் செவிகொடு; நான் அவரே, நான் முந்தினவரும், நான் பிந்தினவருமாமே.

ஏசா 48:13 என் கரமே பூமியை அஸ்திபாரப்படுத்தி, என் வலதுகை வானங்களை அளவிட்டது; நான் அவைகளுக்குக் கட்டளையிட, அவைகள் அனைத்தும் நிற்கும்.

48 அதிகாரம்

ஏசா 48:14 நீங்களெல்லாரும் கூடிவந்து கேளுங்கள்; கர்த்தருக்குப் பிரியமானவன் அவருக்குச் சித்தமானதைப் பாபிலோனில் செய்வான்; அவன் புயம் கல்தேயரின்மேல் இருக்கும் என்பதை இவர்களில் அறிவித்தவன் யார்?

ஏசா 48:15 நான், நானே அதைச் சொன்னேன்; நான் அவனை அழைத்தேன்; நான் அவனை வரப் பண்ணினேன்; அவன் வழி வாய்க்கும்.

ஏசா 48:16 நீங்கள் என் சமீபத்தில் வந்து, நான் சொல்வதைக் கேளுங்கள்; நான் ஆதிமுதற்கொண்டு அந்தரங்கத்தில் பேசவில்லை; அது உண்டான காலந் துவக்கி அங்கே நான் இருந்தேன்; இப்பொழுதோ கர்த்தராகிய ஆண்டவரும், அவருடைய ஆவியும் என்னை அனுப்புகிறார்.

ஏசா 48:17 இஸ்ரவேலின் பரிசுத்தராயிருக்கிற உன் மீட்பரான கர்த்தர் சொல்லுகிறதாவது: பிரயோஜனமாயிருக்கிறதை உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியிலே உன்னை நடத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே.

யூதாவிற்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. யாக்கோபே எனக்குச் செவிகொடு. (ஏசா 48:1).
2. நான் அழைத்திருக்கிற இஸ்ரவேலே, எனக்குச் செவிகொடு. (ஏசா 48:12).
3. நீங்களெல்லாரும் கூடிவந்து கேளுங்கள் (ஏசா 48:14).
4. நீங்கள் என் சமீபத்தில் வாருங்கள். (ஏசா 48:16).
5. நான் சொல்வதைக் கேளுங்கள்.
6. பாபிலோனிலிருந்து புறப்படுங்கள் (ஏசா 48:20).
7. கல்தேயரைவிட்டு ஓடிவாருங்கள்.
8. கர்த்தர் தம்முடைய தாசனாகிய யாக்கோபை மீட்டுக்கொண்டாரென்று சொல்லுங்கள்
9. இதைக் கெம்பீரசத்தமாய்க் கூறிப் பிரசித்தப்படுத்துங்கள்.
10. பூமியின் கடையாந்தரமட்டும் இதை வெளிப்படுத்துங்கள்.

"யாக்கோபே..........இஸ்ரவேலே" - யூதாவும், இஸ்ரவேலும், யூதரைக் குறிப்பதுபோலவே யாக்கோபும், இஸ்ரவேலும் ஒரே ஜனத்தையே குறிக்கிறது. யாக்கோபிலிருந்து வந்திருக்கும் அனைவரையும் கர்த்தர் இஸ்ரவேல் என்று அழைக்கிறார். (ஆதி 32:28).

"நான் முந்தினவரும், நான் பிந்தினவருமாமே" - (ஏசா 41:4)

தேவனுடைய பெரிய கிரியைகள்

1. தேவனுடைய கரமே பூமியை அஸ்திபாரப் படுத்திற்று.
2. தேவனுடைய வலதுகை வானங்களை அளவிட்டது.
3. தேவன் அவைகளுக்குக் கட்டளையிட, அவைகள் அனைத்தும் நிற்கும். (எபி 1:3).

தீர்க்கதரிசன எண் - 61

"நீங்களெல்லாரும் கூடிவந்து கேளுங்கள்.........." (ஏசா 48:14-15) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. (கோரேசு) கர்த்தருக்குப் பிரியமானவனாக இருப்பான். (ஏசா 48:14; ஏசா 41:1-3,25; ஏசா 44:28; ஏசா 45:1-4,13; ஏசா 46:11)
2. அவன் அவருக்குச் சித்தமானதைப் பாபிலோனில் செய்வான் (ஏசா 48:14)
3. அவன் புயம் கல்தேயரின்மேல் இருக்கும்

48 அதிகாரம்

4. நான் அவனை அழைப்பேன். (ஏசா 48:15)

5. நான் அவனை வரப்பண்ணுவேன்.

6. அவன் வழியை வாய்க்கப்பண்ணுவேன்.

"அவன் புயம் கல்தேயரின்மேல் இருக்கும்" - இந்தத் தீர்க்கதரிசனத்தின் ஒரு பகுதி இறந்த காலத்திலும், மற்றொரு பகுதி வருங்காலத்திலும் கூறப்பட்டிருக்கிறது. ஆயினும் இந்தத் தீர்க்கதரிசனம் வருங்காலத்திற்கே உரியது. இது நிறைவேறுவதற்கு 200 வருஷங்களுக்கு முன்பாகவே இந்தத் தீர்க்கதரிசனம் கூறப்பட்டிருக்கிறது. (ஏசா 48:14-15; எஸ்றா 1:1-6). கோரேசு பாபிலோனை அழிப்பான் என்று கர்த்தர் இதற்கு முன்பாகவே பலமுறை முன்னறிவித்திருக்கிறார். ஆயினும் இந்த வசனத்தில் கர்த்தர் கோரேசை நேசிப்பதாகவும், கர்த்தரே அவனை அழைத்து வந்ததாகவும் அறிவிக்கிறார். (ஏசா 48:14-15; ஏசா 41:1-3,25; ஏசா 44:28; ஏசா 45:1-4,13; ஏசா 46:11).

"கர்த்தராகிய ஆண்டவரும், அவருடைய ஆவியும் என்னை அனுப்புகிறார்" - இந்த வாக்கியத்தில் பேசுகிறவர் வேறொருவரைப் போல தெரிகிறது. ஆனாலும் ஆரம்பத்திலிருந்தே ஒரு தெய்வீக நபர் எவ்வித மறைவும் இல்லாமல் வெளிப்படையாகக் கோரேசுவைப் பற்றிய திட்டத்தை அறிவிக்கிறார். கர்த்தரும், அவருடைய ஆவியானவரும் மேசியாவை அனுப்பியிருக்கிறார்கள். திரித்துவம் இங்கு தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. (ஏசா 48:16-17)

(5) தேவனுடைய வருத்தம் - இஸ்ரவேலின் இழப்பு

ஏசா 48:18 ஆ, என் கற்பனைகளைக் கவனித்தாயானால் நலமாயிருக்கும்; அப்பொழுது உன் சமாதானம் நதியைப்போலும், உன் நீதி சமுத்திரத்தின் அலைகளைப்போலும் இருக்கும்.

ஏசா 48:19 அப்பொழுது உன் சந்ததி மணலத்தனையாகவும், உன் கர்ப்பப்பிறப்பு அதின் அணுக்களத்தனையாகவும் இருக்கும்; அப்பொழுது அதின் பெயர் நம்மைவிட்டு அற்றுப்போகாமலும் அழிக்கப்படாமலும் இருக்கும்.

கர்த்தருடைய கற்பனையைக் கவனித்தால் இஸ்ரவேலுக்கு வரும் ஆசீர்வாதம்

1. உன் சமாதானம் நதியைப்போல் இருக்கும்.

2. உன் நீதி சமுத்திரத்தின் அலைகளைப் போல் இருக்கும்.

3. உன் சந்ததி மணலத்தனையாக இருக்கும். (ஏசா 48:19)

4. உன் கர்ப்பப்பிறப்பு அதின் அணுக்களத்தனையாக இருக்கும்.

5. அதின் பெயர் நம்மைவிட்டு அற்றுப் போகாமலும் அழிக்கப்படாமலும் இருக்கும்.

"என் கற்பனைகளைக் கவனித்தாயானால் நலமாயிருக்கும்" - கர்த்தர் மனுஷரை ஆசீர்வதிக்க வேண்டுமென்றே விரும்புகிறார். யாரையும் சபிக்க வேண்டுமென்பது கர்த்தருடைய விருப்பம் அல்ல. மனுஷர் தம்முடைய கற்பனைகளைக் கைக்கொண்டு அழிந்துபோகாமல் இரட்சிக்கப்பட வேண்டுமென்பதே கர்த்தருடைய விருப்பமாக இருக்கிறது. (உபா 22:29; சங் 81:13-16; எசே 18:23-32; மத் 23:37; லூக்கா 19:12; யோவான் 3:16-18; 1தீமோ 2:4; 2பேதுரு 3:9; வெளி 22:17).

"உன் சந்ததி மணலத்தனையாகவும்........ இருக்கும்" - (ஆதி 22:17; ஆதி 32:12).

மணல் (gravel) - מָעָה - may-aw' - 4579

பெண்பால் பெயர்ச்சொல் - மணல் - இந்த எபிரெய வார்த்தைக்கு கர்ப்பம் என்று ஒரு பொருளும் உள்ளது.

48 அதிகாரம்

"அதின் பெயர் நம்மைவிட்டு அற்றுப் போகாமலும் அழிக்கப்படாமலும் இருக்கும்." - இஸ்ரவேல் புத்திரர்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தால் அவர்களுடைய பெயர் அற்றுப்போகாமலும், அழிக்கப்படாமலும் இருக்கும். (ஏசா 48:18-19). இஸ்ரவேல் என்னும் பெயர் ஒருபோதும் அழிந்துபோவதில்லை. ஏனெனில் அவர்களில் மீதியானவர்களைக் கர்த்தர் மறுபடியும் கூட்டிச் சேர்த்து ஒரு தேசமாக ஸ்தாபிப்பார். (ஏசா 1:9)

(6) பாபிலோனிலிருந்து மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படுகிறார்கள்

ஏசா 48:20 பாபிலோனிலிருந்து புறப்படுங்கள்; கல்தேயரைவிட்டு ஓடி வாருங்கள்; கர்த்தர் தம்முடைய தாசனாகிய யாக்கோபை மீட்டுக் கொண்டாரென்று சொல்லுங்கள்; இதைக் கெம்பீரசத்தமாய்க் கூறிப் பிரசித்தப் படுத்துங்கள், பூமியின் கடையாந்தரமட்டும் வெளிப்படுத்துங்கள் என்கிறார்.

ஏசா 48:21 அவர் அவர்களை வனாந்தரங்களில் நடத்தும்போது, அவர்களுக்குத் தாகவிடாயிருந்த தில்லை; கன்மலையிலிருந்து தண்ணீரை அவர்களுக்குச் சுரக்கப்பண்ணினார், கன்மலையைப் பிளந்தார், தண்ணீர் ஓடிவந்தது.

ஏசா 48:22 துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்.

தீர்க்கதரிசன எண் - 62

"பாபிலோனிலிருந்து புறப்படுங்கள்; கல்தேயரைவிட்டு ஓடிவாருங்கள்" (ஏசா 48:20) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. பாபிலோனிலிருந்து புறப்படுங்கள் (எரே 51:6; வெளி 18:4).
2. கல்தேயரைவிட்டு ஓடிவாருங்கள். (எரே 51:6).
3. கர்த்தர் தம்முடைய தாசனாகிய யாக்கோபை மீட்டுக்கொண்டாரென்று சொல்லுங்கள்.
4. இதைக் கெம்பீரசத்தமாய்க் கூறிப் பிரசித்தப்படுத்துங்கள்.
5. பூமியின் கடையாந்தரமட்டும் வெளிப்படுத்துங்கள்.

கோரேசு பாபிலோனைக் கைப்பற்றிய போது இஸ்ரவேலர்கள் கல்தேயரை விட்டு ஓடிப்போகவில்லை. அவர்கள் பூமியின் கடையாந்தரம் மட்டும் இரட்சிப்பின் கீதத்தைக் கெம்பீர சத்தமாகப் பிரசித்திப்படுத்தவில்லை. இயேசு கிறிஸ்து தம்முடைய இரண்டாம் வருகையில் யாக்கோபை மீட்டுக் கொண்டது போல அப்போது மீட்டுக்கொள்ளவில்லை. ஆகையினால் இந்தக் கட்டளைகள் வருங்காலத்தில் இஸ்ரவேலுக்கும், பாபிலோனுக்கும் இடையில் நடைபெறப் போகும் போராட்டத்தைக் குறிக்கிறது. (ஏசா 48:20; சக 12:10-13:1,9; ரோமர் 11:25-29).

"அவர் அவர்களை வனாந்தரங்களில் நடத்தும்போது, அவர்களுக்குத் தாகவிடாயிருந்ததில்லை" - அந்திக்கிறிஸ்து கடைசிக்கால பாபிலோனின் ராஜா. வனாந்தரத்தில் இஸ்ரவேல் புத்திரர் பிரயாணம் பண்ணியபோது கர்த்தர் அவர்களுக்குத் தண்ணீர் கொடுத்து தாகத்தைத் தீர்த்தார். அந்தச் சம்பவத்தை ஏசாயா இங்கு நினைவுபடுத்துகிறார். (யாத் 17:6; எண் 20:11).

"துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லை" - ஏசாயா 40-66 ஆகிய அதிகாரங்கள் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியிலும் ஒன்பது அதிகாரங்கள் உள்ளன. முதல் இரண்டு பகுதிகளின் கடைசி வசனமும், "துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லை" என்று முடிவடைகிறது. (ஏசா 48:22; ஏசா 57:20-21). மூன்றாம் பகுதியின் கடைசி வசனப்பகுதியில் துன்மார்க்கருக்கு ஏன் சமாதானம் இல்லை என்று விளக்கப்பட்டிருக்கிறது. (ஏசா 66:22-24).

49 அதிகாரம்

IX. மேசியாவின் முதலாவது வருகையினால் ஆறுதல் - (49:1-57:21)

1. மேசியாவின் அழைப்பும் ஊழியமும் - (49:1-50:11)

(1) அவருடைய அழைப்பும் தகுதியும்

ஏசா 49:1 தீவுகளே, எனக்குச் செவிகொடுங்கள்; தூரத்திலிருக்கிற ஜனங்களே, கவனியுங்கள்; தாயின் கர்ப்பத்திலிருந்ததுமுதல் கர்த்தர் என்னை அழைத்து, நான் என் தாயின் வயிற்றில் இருக்கையில் என் நாமத்தைப் பிரஸ்தாபப் படுத்தினார்.

ஏசா 49:2 அவர் என் வாயைக் கூர்மையான பட்டயமாக்கி, தமது கரத்தின் நிழலினால் என்னை மறைத்து, என்னைத் துலக்கமான அம்பாக்கி, என்னைத் தமது அம்பறாத்தூணியிலே மூடிவைத்தார்.

ஏசா 49:3 அவர் என்னை நோக்கி: நீ என் தாசன்; இஸ்ரவேலே, நான் உன்னில் மகிமைப்படுவேன் என்றார்.

"தாயின் கர்ப்பத்திலிருந்ததுமுதல் கர்த்தர் என்னை அழைத்து, நான் என் தாயின் வயிற்றில் இருக்கையில் என் நாமத்தைப் பிரஸ் தாபப்படுத்தினார்" - மேசியாவை அழைத்ததும், மேசியாவின் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தியதும் மத் 1:18-25; லூக்கா 1:28-35; லூக்கா 2:1-19 ஆகிய வசனங்களில் நிறைவேறிற்று.

தீர்க்கதரிசன எண் - 63

"தீவுகளே, எனக்குச் செவிகொடுங்கள்; தூரத்திலிருக்கிற ஜனங்களே, கவனியுங்கள்......" (ஏசா 49:1-26) ஏசா 49:1-7 ஆகிய வசனங்களும், ஏசா 49:8-9 ஆகிய வசனங்களின் ஒரு பகுதியும் நிறைவேறிற்று. ஏசா 49:9-26 ஆகிய வசனங்களும், ஏசா 49:7-8 ஆகிய வசனங்களின் ஒரு பகுதியும் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. தாயின் கர்ப்பத்திலிருந்ததுமுதல் கர்த்தர் என்னை அழைத்தார். (ஏசா 49:1; ஏசா 7:14; ஏசா 9:6-7; மத் 1:18-25; லூக்கா 1:35; யோவான் 1:14).
2. நான் என் தாயின் வயிற்றில் இருக்கையில் என் நாமத்தைப் பிரஸ்தாபப் படுத்தினார். (ஏசா 49:1; மத் 1:21).
3. அவர் என் வாயைக் கூர்மையான பட்டயமாக்கினார். (ஏசா 49:2; வெளி 1:16; வெளி 2:12; வெளி 19:15).
4. தமது கரத்தின் நிழலினால் என்னை மறைத்தார். (ஏசா 49:2; ஏசா 51:16).
5. என்னைத் துலக்கமான அம்பாக்கினார். (ஏசா 49:2).
6. என்னைத் தமது அம்பறாத்தூணியிலே மூடிவைத்தார்.
7. அவர் என்னை நோக்கி: நீ என் தாசன் என்றார். (ஏசா 49:3; ஏசா 42:1-4,6-7; ஏசா 52:13; ஏசா 53:11; மத் 12:18).
8. அவர் என்னை நோக்கி இஸ்ரவேலே என்றார். (ஏசா 49:3; ஆதி 32:28).
9. அவர் என்னை நோக்கி: நான் உன்னில் மகிமைப்படுவேன் என்றார். (ஏசா 49:3; ஏசா 61:3; யோவான் 13:31-32; யோவான் 14:13; யோவான் 17:4).
10. என் நியாயம் கர்த்தரிடத்திலும், என் பலன் என் தேவனிடத்திலும் இருக்கிறது (ஏசா 49:4).
11. யாக்கோபைத் தம்மிடத்தில் திருப்பும்படி நான் தாயின் கர்ப்பத்திலிருந்ததுமுதல் கர்த்தர் தமக்குத் தாசனாக என்னை உருவாக்கினார் (ஏசா 49:5; ஏசா 42:1-6; ஏசா 53:1-12; சக 12:10-13:1; மத் 23:37; ரோமர் 11:25-29).
12. இஸ்ரவேலோ சேராதேபோனாலும், கர்த்தருடைய பார்வையில் கனமடைவேன் (ஏசா 49:5).

49 அதிகாரம்

13. என் தேவன் என் பெலனாயிருப்பார்.

14. நீர் பூமியின் கடைசிபரியந்தமும் என்னுடைய இரட்சிப்பாயிருக்கும்படி, உம்மை ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைப்பேன் (ஏசா 49:6,22; ஏசா 11:10; ஏசா 42:1,6; ஏசா 60:3,5; ஏசா 62:2; ஏசா 66:12,19; மத் 21:18-21; அப் 4:27; ரோமர் 1:16; ரோமர் 15:9-27; எபே 3:6).

15. கர்த்தர் மேசியாவைத் தெரிந்து கொண்டார். (ஏசா 49:7).

16. அநுக்கிரக காலத்திலே நான் (கர்த்தர்) உமக்குச் (மேசியா) செவி கொடுப்பேன். (ஏசா 49:8).

17. இரட்சணியநாளிலே உமக்கு உதவிசெய்தேன்.

18. கட்டுண்டவர்களை விடுதலையாக்குவாய். (ஏசா 49:9).

19. இருளில் இருக்கிறவர்களை வெளிச்சத்திற்கு வரவழைப்பாய்.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. ராஜாக்கள் கண்டு எழுந்திருப்பார்கள். (ஏசா 49:7).

2. பிரபுக்கள் பணிந்துகொள்வார்கள்

3. நீர் பூமியைச் சீர்ப்படுத்துவீர். (ஏசா 49:8)

4. பாழாய்க்கிடக்கிற இடங்களைச் சுதந்தரிக்கப் பண்ணுவீர். (ஏசா 49:8; ஏசா 35:1-10).

5. நான் உம்மைக் காப்பாற்றுவேன். (ஏசா 49:9).

6. உம்மை ஜனங்களுக்கு உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன்.

7. அவர்கள் வழியோரங்களிலே மேய்வார்கள் (ஏசா 49:9).

8. அவர்கள் பசியாயிருப்பதுமில்லை, தாகமாயிருப்பதுமில்லை (ஏசா 49:10).

9. உஷ்ணமாகிலும், வெயிலாகிலும் அவர்கள்மேல் படுவதுமில்லை.

10. அவர்களை நீரூற்றுகளிடத்திற்குக் கொண்டுபோய் விடுவார் (மேசியா). (ஏசா 49:10; வெளி 7:17).

11. என் (பிதாவாகிய தேவன்) மலைகளையெல்லாம் வழிகளாக்குவேன் (ஏசா 49:11).

12. என் பாதைகள் உயர்த்தப்படும். (ஏசா 49:11).

13. இஸ்ரவேல் ஜனங்களைப் பூமியின் எல்லாப் பாகங்களிலிருந்தும் கூட்டிச் சேர்ப்பேன். (ஏசா 49:12; ஏசா 11:10-12; எரே 30:31; எசே 37).

14. கர்த்தர் தம்முடைய ஜனத்துக்கு ஆறுதல் செய்தார்; சிறுமைப்பட்டிருக்கிற தம்முடையவர்கள் மேல் இரக்கமாயிருப்பார். (ஏசா 49:13).

15. நான் என் ஜனங்களை மறப்பதில்லை. (ஏசா 49:14-16).

16. உன் குமாரர் தீவிரித்து வருவார்கள் (ஏசா 49:17).

17. உன்னை நிர்மூலமாக்கினவர்களும் உன்னைப் பாழாக்கினவர்களும் உன்னை விட்டுப் புறப்பட்டுப்போவார்கள்.

18. இஸ்ரவேல் எல்லோரும் கூட்டிச் சேர்க்கப்பட்டு சீயோனுக்குத் திரும்பி வருவார்கள். (ஏசா 49:14,18).

19. ஆபரணங்களையும், வஸ்திரங்களையும் அணிவதுபோல சீயோனிடத்தில் இஸ்ரவேல் புத்திரர் வந்து சேருவார்கள். (ஏசா 49:18)

20. மணமகள் அணிந்து கொள்வதுபோல, நீ (சீயோன்) அவர்களை அணிந்து கொள்வாய்.

21. அப்பொழுது உன் வனாந்தரங்களும், உன் பாழிடங்களும், நிர்மூலமான உன் தேசமும், இனிக்குடிகளின் திரளினாலே உனக்கு நெருக்கமாயிருக்கும் (ஏசா 49:19).

49 அதிகாரம்

22. உன்னை விழுங்கினவர்கள் தூரமாவார்கள்.

23. பிள்ளைகளற்றிருந்த உனக்கு உண்டாயிருக்கப்போகிற பிள்ளைகள்: இடம் எங்களுக்கு நெருக்கமாயிருக்கிறது என்பார்கள். (ஏசா 49:20).

24. அப்பொழுது நீ: இவர்களை எனக்குப் பிறப்பித்தவர் யார்? என்பாய். (ஏசா 49:21).

25. ஜாதிகளுக்கு நேராக என் கரத்தை உயர்த்தி, ஜனங்களுக்கு நேராக என் (தேவன்) கொடியை ஏற்றுவேன் (ஏசா 49:22).

26. ராஜாக்கள் உன்னை வளர்க்கும் தந்தைகளும், அவர்களுடைய நாயகிகள் உன் கைத்தாய்களுமாயிருப்பார்கள் (ஏசா 49:23).

27. அவர்கள் தரையிலே முகங்குப்புற விழுந்து உன்னைப் பணிந்துகொள்வார்கள்.

28. நான் கர்த்தர் என்று அப்பொழுது அறிந்துகொள்வாய்.

29. எனக்குக் காத்திருக்கிறவர்கள் வெட்கப்படுவதில்லை.

30. பராக்கிரமனால் சிறைப்படுத்தப்பட்டவர்களும் விடுவிக்கப்படுவார்கள் (ஏசா 49:24-25).

31. பெலவந்தனால் கொள்ளையிடப்பட்டதும் விடுதலையாக்கப்படும்.

32. உன்னோடு வழக்காடுகிறவர்களோடே நான் வழக்காடுவேன். (ஏசா 49:25).

33. உன் பிள்ளைகளை இரட்சித்துக் கொள்ளுவேன்.

34. உன்னை ஒடுக்கினவர்களைத் தண்டிப்பேன். (ஏசா 49:26).

35. அவர்கள் விதைத்ததை அறுப்பார்கள்.

36. கர்த்தரும் யாக்கோபின் வல்லவருமாகிய நான் உன் இரட்சகரும் உன் மீட்பருமாயிருக்கிறதை மாம்சமான யாவரும் அறிந்துகொள்வார்கள்.

மேலே கூறப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனங்கள் யார் மூலமாக நிறைவேறும் என்பதில் பலவிதமான கருத்துக்கள் உள்ளன. சபையின் மூலமாகவும், இஸ்ரவேல் மூலமாகவும், ஏசாயாவின் மூலமாகவும் அல்லது மேசியாவின் மூலமாகவும் இந்தத் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறும் என்று வேதபண்டிதர்கள் பலவிதமாகக் கருத்து கூறுகிறார்கள். இவையெல்லாம் மேசியாவின் மூலமாக நிறைவேறும் என்பதே அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய பொதுவான வியாக்கியானமாகும். இதற்கான காரணங்கள்:

1. "தாயின் கர்ப்பத்திலிருந்ததுமுதல் கர்த்தர் என்னை அழைத்து, நான் என் தாயின் வயிற்றில் இருக்கையில் என் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தினார்". இது இயேசு கிறிஸ்துவைக் குறிக்கும் வாக்கியமாகும். (ஏசா 49:1; மத் 1:21; லூக்கா 1:21).

2. ஏசா 49:2-4 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் காரியங்கள் சபையையோ, இஸ்ரவேல் தேசத்தையோ, ஏசாயாவையோ குறிக்கவில்லை. இவை மேசியாவை மாத்திரமே குறிக்கின்றன.

3. கர்த்தருடைய தாசனின் ஊழியங்களைப் பற்றி ஏசா 49:5-6 ஆகிய வசனங்களில் கூறப்பட்டுள்ளது. யாக்கோபை இவர் கர்த்தரிடத்தில் திருப்புவார். இஸ்ரவேல் கோத்திரத்தாரை உயர்த்துவார். இஸ்ரவேலில் காக்கப்பட்டவர்களை மறுபடியும் தேசமாக ஸ்தாபிப்பார். இவையெல்லாமே மேசியாவின் ஊழியங்களாகும்.

4. "இஸ்ரவேலின் மீட்பரும் அதின் பரிசுத்தருமாகிய கர்த்தர், மனுஷரால் அசட்டை பண்ணப்பட்டவரும், ஜாதியாரால் அருவருக்கப்பட்டவரும்" என்னும் வாக்கியம் மேசியாவைக் குறிக்கும். (ஏசா 49:7).

49 அதிகாரம்

5. இஸ்ரவேலின் பரிசுத்தர் நிமித்தமும், ராஜாக்கள் கண்டு எழுந்திருந்தது, பிரபுக்கள் பணிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் மேசியாவைக் குறித்தே கூறியிருக்கிறார்.

6. நான் உம்மைக் காப்பாற்றி, உம்மை ஜனங்களுக்கு உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன் என்று கர்த்தர் மேசியாவைக் குறித்தே கூறியிருக்கிறார். (ஏசா 49:9)

7. கட்டுண்டவர்களை நோக்கி: புறப்பட்டுப் போங்கள் என்றும்; இருளில் இருக்கிறவர்களை நோக்கி: வெளிப்படுங்கள் என்றும் கூறும் ஊழியம் மேசியாவிற்கு மாத்திரமே கொடுக்கப் பட்டிருக்கிறது. (ஏசா 49:9-12)

8. ஏசா 49:5-6,12 ஆகிய வசனங்களில் முன்னறிவிக்கப்பட்ட பிரகாரம் மேசியாவே இஸ்ரவேல் ஜனத்தாரை மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்போகிறவர். (மத் 24:29-31).

மேலே கூறப்பட்டிருக்கும் காரியங்கள் அனைத்தையும் சபையோ, இஸ்ரவேல் தேசமோ, ஏசாயாவோ நிறைவேற்றப்போவதில்லை. மேசியா மாத்திரமே இவற்றையெல்லாம் நிறைவேற்றப் போகிறவர். ஆகையினால் ஏசா 49:1-12 ஆகிய வசனங்கள் மேசியாவைப் பற்றியே முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஜனங்களுக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. தீவுகளே, எனக்குச் செவிகொடுங்கள்.
2. தூரத்திலிருக்கிற ஜனங்களே, கவனியுங்கள். (ஏசா 49:1)
3. வானங்களே, கெம்பீரித்துப் பாடுங்கள். (ஏசா 49:13).
4. பூமியே, களிகூரு.
5. பர்வதங்களே, கெம்பீரமாய் முழங்குங்கள்.
6. உன் கண்களை ஏறெடுத்துச் சுற்றிலும் பார் (ஏசா 49:18).

"கூர்மையான பட்டயம்" - (வெளி 1:16; வெளி 2:12,16; வெளி 19:15,21)

"துலக்கமான அம்பு" - இஸ்ரவேல் தேசத்தாரைக் கர்த்தரிடத்தில் திரும்பவும் அழைத்து வருவதற்கு மேசியா துலக்கமான அம்பாகப் பயன்படுத்தப்படுகிறார். மேசியா அவர்களைப் பாதுகாப்பார். அவர்களுடைய சத்துருக்களிடமிருந்து அவர்களை மீட்பார். (ஏசா 49:2,6; மத் 1:21; சக 12:1-15; மத் 25:31-46; ரோமர் 11:25-29; வெளி 19:11-21).

"நீ என் தாசன்" - மேசியாவே கர்த்தருடைய தாசனாக இங்கு அழைக்கப்பட்டிருக்கிறார். (ஏசா 49:3,5,6,7; ஏசா 42:1; ஏசா 50:10; ஏசா 52:13; ஏசா 53:11)

"இஸ்ரவேலே" - ஏசா 49:1-12 ஆகிய வசனங்களில் முன்னறிவிக்கப்பட்டிருக்கும் காரியங்களை மேசியா நிறைவேற்றுவார். அவர் இஸ்ரவேல் என்றும் அழைக்கப்படுகிறார். யாக்கோபு தேவனோடும், மனிதனோடும் போராடி மேற்கொண்ட படியினால் கர்த்தர் அவனை இஸ்ரவேல் என்று அழைத்தார். அதுபோலவே கர்த்தர் மேசியாவை இஸ்ரவேல் என்று அழைக்கிறார். மேசியாவும் தம்முடைய சத்துருக்களையெல்லாம் மேற்கொண்டு, வெற்றி சிறப்பார். (ஆதி 32:28)

"நான் உன்னில் மகிமைப்படுவேன்" - கர்த்தர் இயேசு கிறிஸ்துவில் மகிமைப்பட்டார். இப்போதும் மகிமைப்படுகிறார். எப்போதும் மகிமைப்படுவார். (ஏசா 61:3; மத் 9:8; மத் 15:31; மாற்கு 2:12; லூக்கா 5:26; லூக்கா 7:16; லூக்கா 13:13; லூக்கா 17:15; லூக்கா 23:47; யோவான் 13:31-32; யோவான் 14:13; யோவான் 15:8; யோவான் 17:4; அப் 4:21; அப் 11:18; அப் 21:20; கலா 1:24; 1பேதுரு 4:11-14).

(2) மேசியாவின் தாழ்மை

ஏசா 49:4 அதற்கு நான்: விருதாவாய் உழைக்கிறேன், வீணும் வியர்த்தமுமாய் என் பெலனைச் செலவழிக்கிறேன்; ஆகிலும் என் நியாயம் கர்த்தரிடத்திலும், என் பலன் என் தேவனிடத்திலும் இருக்கிறது என்று சொன்னேன்.

49 அதிகாரம்

மேசியாவின் கிரியை

ஏசா 49:7 ஆவது வசனத்தில் மேசியாவைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் போது அவர் "மனுஷரால் அசட்டைபண்ணப்பட்டவரும், ஜாதியாரால் அருவருக்கப்பட்டவரும்" என்று கூறப்பட்டிருக்கிறது. (ஏசா 53:1-12; மத் 21:33-45; மத் 23:34-39; யோவான் 1:11; அப் 2:23) இதனால் மேசியாவின் ஊழியம் வெற்றி பெறவில்லை என்று முடிவு பண்ணிவிடக்கூடாது. தம்முடைய ஊழியத்தின் இறுதி முடிவைக் கர்த்தர் மேன்மைப்படுத்துவார் என்று மேசியா கர்த்தர்மீதே நம்பிக்கை வைத்திருந்தார். அவர் சோர்ந்துபோகவில்லை. தம்மைத் தேவனிடத்தில் முற்றிலுமாக அர்ப்பணித்தார். தம்முடைய நாமம், திட்டம், கிரியை எல்லாவற்றையும் மேசியா கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுத்து ஜீவித்தார். தம்முடைய நியாயமும், பெலனும் கர்த்தரிடத்தில் இருப்பதாக மேசியா அறிவிக்கிறார். (ஏசா 49:4) மேசியாவின் ஊழியத்தை இவ்வாறு விவரிக்கலாம்.

1. கர்த்தருடைய தாசனாக இருப்பது. (ஏசா 49:3,5)
2. இஸ்ரவேலைத் தேவனிடத்தில் திரும்ப அழைத்து வருவது. (ஏசா 49:5)
3. இஸ்ரவேல் கோத்திரத்தாரை எழுப்புவது. (ஏசா 49:6)
4. இஸ்ரவேலில் காக்கப்பட்டவர்களைத் திருப்புவது.
5. புறஜாதிகளுக்கு ஒளியாக இருப்பது.
6. பூமியின் கடைசி பரியந்தம் இரட்சிப்பாக இருப்பது.
7. ஜனங்களுக்கு உடன்படிக்கையாக இருப்பது. (ஏசா 49:9)
8. பூமியைச் சீர்ப்படுத்துவது.
9. பாழாய்க்கிடக்கிற இடங்களைச் சுதந்தரிக்கப் பண்ணுவது.
10. கட்டுண்டவர்களை விடுவிப்பது. (ஏசா 49:9)
11. இருளில் இருக்கிறவர்களை வெளிச்சத்திற்கு அழைத்து வருவது.
12. ஜனங்களை வழிநடத்துவது. (ஏசா 49:10)

(3) அவருடைய ஆறு அம்ச ஊழியம்

ஏசா 49:5 யாக்கோபைத் தம்மிடத்தில் திருப்பும்படி நான் தாயின் கர்ப்பத்திலிருந்ததுமுதல் கர்த்தர் தமக்குத் தாசனாக என்னை உருவாக்கினார்; இஸ்ரவேலோ சேராதேபோகிறது; ஆகிலும் கர்த்தருடைய பார்வையில் கனமடைவேன், என் தேவன் என் பெலனாயிருப்பார்.

ஏசா 49:6 யாக்கோபின் கோத்திரங்களை எழுப்பவும், இஸ்ரவேலில் காக்கப் பட்டவர்களைத் திருப்பவும், நீர் எனக்குத் தாசனாயிருப்பது அற்ப காரியமாயிருக்கிறது; நீர் பூமியின் கடைசிபரியந்தமும் என்னுடைய இரட்சிப்பாயிருக்கும்படி, உம்மை ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைப்பேன் என்கிறார்.

மேசியாவின் பிறப்பைப் பற்றிய முன்னறிவிப்பு

1. தாயின் கர்ப்பத்திலிருந்ததுமுதல் கர்த்தர் என்னை அழைத்தார். (ஏசா 49:1)
2. நான் என் தாயின் வயிற்றில் இருக்கையில் என் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தினார்.
3. நான் தாயின் கர்ப்பத்திலிருந்ததுமுதல் கர்த்தர் தமக்குத் தாசனாக என்னை உருவாக்கினார் (ஏசா 49:5)

"இஸ்ரவேலோ சேராதேபோகிறது" - இஸ்ரவேல் இன்னும் கூட்டிச் சேர்க்கப்படவில்லை. வருங்காலத்தில் அவர்களை மேசியா கூட்டிச் சேர்ப்பார். (ஏசா 11:10-12; எரே 30-31; எசே 37; மத் 24:29-31).

49 அதிகாரம்

"கர்த்தருடைய பார்வையில் கனமடைவேன்" - மேசியா யாக்கோபின் கோத்திரத்தாரைக் கூட்டிச்சேர்ப்பார். இந்த வாக்கியத்தை வாசிக்கும்போது "மேசியா யாக்கோபின் கோத்திரத்தாரைக் கூட்டிச் சேர்த்த பின்பே கனமடைவார். இல்லையென்றால் கனமடைய மாட்டார். இதற்கு முன்பு அவர் கனமடைந்திருந்ததில்லை" என்பதுபோன்று பொருள்படுகிறது. ஆனால் மேசியா எப்போதுமே கனம் உள்ளவர். இஸ்ரவேலுக்கு என்ன நேர்ந்தாலும் மேசியா கனமுள்ளவராகவே இருக்கிறார். கர்த்தர் தம்முடைய கிரியைகளினால் கனமடைவதில்லை. அவர் தேவனுடைய ஒரேபேறான குமாரனாக இருப்பதினால் கனமடைந்திருக்கிறவர். அதுபோல கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களையும் கனப்படுத்துகிறார். அவர்களுடைய ஊழியங்களின் சாமர்த்தியங்களினாலும், ஜெயங்களினாலும் கர்த்தர் அவர்களைக் கனப்படுத்துவதில்லை. கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வதற்காக அவர்கள் தங்களுடைய இருதயங்களை ஒப்புக் கொடுத்ததின் நிமித்தமாகவே கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களைக் கனப்படுத்துகிறார். இஸ்ரவேலர்கள் மேசியாவை ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணித்துவிட்டார்கள். ஆனால் கர்த்தரோ மேசியாவை ஏற்றுக் கொண்டு மகிமைப்படுத்தினார்.

"நீர் எனக்குத் தாசனாயிருப்பது அற்பகாரியமாயிருக்கிறது" - மேசியா கர்த்தருக்குத் தாசனாக இருப்பது அற்பகாரியமல்ல. அது பெரிய காரியமாகும். செப்துவஜிந்த் மொழிபெயர்ப்பில் இந்த வாக்கியம் "நீர் எனக்குத் தாசனாயிருப்பது பெரிய காரியமாயிருக்கிறது" என்று பொருள்படுமாறு எழுதப்பட்டிருக்கிறது **"It is a great thing for thee to be called My servant"**.

"நீர் பூமியின் கடைசிபரியந்தமும் என்னுடைய இரட்சிப்பாயிருக்கும்படி, உம்மை ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைப்பேன்" - இந்த வாக்கியம் லூக்கா 2:32; அப் 13:47 ஆகிய வசனங்களில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

(4) அவருடைய தாழ்மையும் உயர்வும்

ஏசா 49:7 இஸ்ரவேலின் மீட்பரும் அதின் பரிசுத்தருமாகிய கர்த்தர், மனுஷரால் அசட்டை பண்ணப்பட்டவரும், ஜாதியாரால் அருவருக்கப்பட்டவரும், அதிகாரிகளுக்கு ஊழியக்காரனுமாயிருக்கிறவரை நோக்கி, உண்மையுள்ள கர்த்தர் நிமித்தமும், உம்மைத் தெரிந்துகொண்ட இஸ்ரவேலின் பரிசுத்தர் நிமித்தமும், ராஜாக்கள் கண்டு எழுந்திருந்தது, பிரபுக்கள் பணிந்துகொள்வார்கள் என்று சொல்லுகிறார்.

"அதின் பரிசுத்தருமாகிய கர்த்தர்" - திரித்துவத்தை விளக்கும் வாக்கியம். (யோவான் 1:1-2; எபி 1:8).

"மனுஷரால் அசட்டைபண்ணப்பட்டவர்" - ஜனங்கள் மேசியாவை அசட்டை பண்ணுவார்கள் என்று ஏற்கெனவே முன்னறிவிக்கப் பட்டிருக்கிறது. (ஏசா 49:7; ஏசா 53:3; சங் 22:6)

"ஜாதியாரால் அருவருக்கப்பட்டவர்" - மேசியாவை அவருடைய சொந்த ஜாதியாரான யூதரே அருவருப்பார்கள். காரணமில்லாமல் அவர்கள் மேசியாவை வெறுப்பார்கள். (யோவான் 15:18-25).

"அதிகாரிகளுக்கு ஊழியக் காரனுமாயிருக்கிறவர்" - மேசியா தேவனாக இருந்தபோதிலும் அவர் மனுஷனாகவும் இருந்தார். மனுஷருடைய பிரமாணங்களுக்கும், பூமியின் ராஜாக்களுக்கும், தம்மை ஒப்புக்கொடுத்து ஜீவித்தார். (சங் 2:2; மத் 27:41).

(5) மேசியாவின் எட்டு அம்ச உதவி

ஏசா 49:8 பின்னும் கர்த்தர்: அநுக்கிரக காலத்திலே நான் உமக்குச் செவி கொடுத்து, இரட்சணியநாளிலே உமக்கு உதவிசெய்தேன்; நீர் பூமியைச் சீர்ப்படுத்தி, பாழாய்க்கிடக்கிற இடங்களைச் சுதந்தரிக்கப்பண்ணவும்;

49 அதிகாரம்

"அநுக்கிரக காலத்திலே நான் உமக்குச் செவி கொடுத்து, இரட்சணியநாளிலே உமக்கு உதவிசெய்தேன்" - இந்த வாக்கியம் 2கொரி 6:2 ஆவது வசனத்தில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. மேசியா ஒரு பாவமும் அறியாதவர். எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை உண்டுபண்ணுவதற்காகவே மேசியா இந்த உலகத்திற்கு வந்தார். மனுஷருடைய இரட்சிப்பைக் குறித்து மேசியா பிதாவிடத்தில் ஜெபிக்கும்போது கர்த்தர் அவருடைய ஜெபத்திற்குச் செவிகொடுத்து உதவி புரிவார்.

(6) அவருடைய பத்து அம்ச ஊழியம்

ஏசா 49:9 கட்டுண்டவர்களை நோக்கி: புறப்பட்டுப்போங்கள் என்றும்; இருளில் இருக்கிறவர்களை நோக்கி: வெளிப்படுங்கள் என்றும் சொல்லவும், நான் உம்மைக் காப்பாற்றி, உம்மை ஜனங்களுக்கு உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன்; அவர்கள் வழியோரங்களிலே மேய்வார்கள்; சகல மேடுகளிலும் அவர்களுக்கு மேய்ச்சல் உண்டாயிருக்கும்.

ஏசா 49:10 அவர்கள் பசியாயிருப்பதுமில்லை, தாகமாயிருப்பதுமில்லை; உஷ்ணமாகிலும், வெயிலாகிலும் அவர்கள்மேல் படுவதுமில்லை; அவர்களுக்கு இரங்குகிறவர் அவர்களை நடத்தி, அவர்களை நீரூற்றுகளிடத்திற்குக் கொண்டுபோய் விடுவார்.

ஏசா 49:11 என் மலைகளையெல்லாம் வழிகளாக்குவேன்; என் பாதைகள் உயர்த்தப்படும்.

ஏசா 49:12 இதோ, இவர்கள் தூரத்திலிருந்து வருவார்கள்; இதோ, அவர்கள் வடக்கிலும் மேற்கிலுமிருந்து வருவார்கள்; இவர்கள் சீனீம்தேசத்திலுமிருந்து வருவார்கள் என்கிறார்.

"இருளில் இருக்கிறவர்களை நோக்கி: வெளிப்படுங்கள் என்றும் சொல்லவும்" - கட்டுண்டவர்களையும், சிறைப்பட்டிருக்கிறவர்களையும் விடுதலை பண்ணும் ஊழியம் மேசியாவிற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்து பாதாளத்திற்குச் சென்று அங்கு சிறைப்பிடிக்கப்பட்டிருந்த நீதிமான்களின் ஆவியை விடுவித்தார். (ஏசா 42:7, ஏசா 49:9-10=வெளி 7:15-17).

"உம்மை ஜனங்களுக்கு உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன்" - மேசியா மோசேயின் பழைய உடன்படிக்கையை ஒழித்துவிட்டார். மனுஷரோடு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தியிருக்கிறார். (ஏசா 42:6-7; மத் 26:28; எபி 8:6; எபி 9:15) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது அவர் இஸ்ரவேல் ஜனங்களோடு உடன்படிக்கை பண்ணுவார். (ஏசா 61:8; எரே 31:27-39; எரே 32:37-44; எசே 37:11-28; ரோமர் 11:25-29; எபி 10:16).

"சகல மேடுகளிலும் அவர்களுக்கு மேய்ச்சல் உண்டாயிருக்கும்" - சிறைப்பட்டிருக்கிறவர்களுக்கு மேசியா மேய்ப்பராக இருப்பார். மேசியா அவர்களை மேய்க்கும் விதத்தைப் பற்றி விளக்கப்பட்டிருக்கும் சத்தியங்கள்.

1. அவர்கள் வழியோரங்களிலே மேய்வார்கள்.
2. சகல மேடுகளிலும் அவர்களுக்கு மேய்ச்சல் உண்டாயிருக்கும்.
3. அவர்கள் பசியாயிருப்பதுமில்லை, தாகமாயிருப்பதுமில்லை (ஏசா 49:10).
4. உஷ்ணமாகிலும், வெயிலாகிலும் அவர்கள்மேல் படுவதுமில்லை.
5. அவர்களை வழிநடத்துவார்.
6. அவர்களை நீரூற்றுகளிடத்திற்குக் கொண்டுபோய் விடுவார். (ஏசா 49:10; வெளி 7:15-17).

"சகல மேடுகளிலும்" - பாலஸ்தீன தேசத்திலுள்ள மேடான பகுதிகள் வனாந்தரம் போல உள்ளன. அவை மேய்ச்சல் நிலமல்ல. ஆயிரம் வருஷ அரசாட்சியில் பாழான வனாந்தரங்களெல்லாம் பசுமையான நிலங்களாக மாறும். இந்தத் தீர்க்கதரிசனம் ஆயிரம் வருஷ அரசாட்சியில் வரப்போகிற காலத்தில் நிறைவேறும். (ஏசா 35:1-10).

49 அதிகாரம்

"அவர்கள் பசியாயிருப்பதுமில்லை, தாகமாயிருப்பதுமில்லை" - இந்த வாக்கியம் வெளி 7:16 ஆவது வசனத்தில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"அவர்களுக்கு இரங்குகிறவர்" - மேசியாவே அவர்களுக்கு இரங்குகிறவர். (வெளி 7:15-17).

"என் மலைகளையெல்லாம் வழிகளாக்குவேன்" - எகிப்திலிருந்து அசீரியாவிற்குப் பாலஸ்தீன தேசத்தின் வழியாக ஒரு பெரும்பாதை உண்டாகும். இந்த தேசங்கள் ஆசீர்வதிக்கப்படும். இது ஆயிரம் வருஷ அரசாட்சியில் நடைபெறும் சம்பவம். (ஏசா 11:16; ஏசா 19:23-25).

"இதோ, இவர்கள் தூரத்திலிருந்து வருவார்கள்" - பூமியின் எல்லாப் பாகங்களிலிருந்தும் இஸ்ரவேல் ஜனத்தார் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். (ஏசா 11:10-12; ஏசா 66:19-21; எரே 30-31; எசே 37; மத் 24:31).

"சீனீம்" **(Sinim)** - இந்த இடம் எங்குள்ளது என்று தெரியவில்லை. இது கிழக்கு பகுதியிலுள்ள கடையாந்தர தேசமாக இருக்கலாம். (ஏசா 11:10-12; மத் 24:31). "சீன்" என்னும் வார்த்தை சீனாவைக் குறிக்கும் என்று ஒருசிலர் கூறுகிறார்கள். செப்துவஜிந்த் பதிப்பில் இது பெர்சியா என்று கூறப்பட்டிருக்கிறது.

(7) இஸ்ரவேலின் மீட்பு

ஏசா 49:13 வானங்களே, கெம்பீரித்துப் பாடுங்கள்; பூமியே, களிகூரு; பர்வதங்களே, கெம்பீரமாய் முழங்குங்கள்; கர்த்தர் தம்முடைய ஜனத்துக்கு ஆறுதல் செய்தார்; சிறுமைப்பட்டிருக்கிற தம்முடையவர்கள் மேல் இரக்கமாயிருப்பார்.

ஏசா 49:14 சீயோனோ: கர்த்தர் என்னைக் கைவிட்டார், ஆண்டவர் என்னை மறந்தார் என்று சொல்லுகிறாள்.

ஏசா 49:15 ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை.

ஏசா 49:16 இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்; உன் மதில்கள் எப்போதும் என்முன் இருக்கிறது.

ஏசா 49:17 உன் குமாரர் தீவிரித்து வருவார்கள்; உன்னை நிர்மூலமாக்கினவர்களும் உன்னைப் பாழாக்கினவர்களும் உன்னை விட்டுப் புறப்பட்டுப்போவார்கள்.

ஏசா 49:18 உன் கண்களை ஏறெடுத்துச் சுற்றிலும் பார்; அவர்களெல்லாரும் ஏகமாய்க்கூடி உன்னிடத்தில் வருகிறார்கள்; நீ அவர்களெல்லாரையும் ஆபரணமாகத் தரித்து, மணமகள் அணிந்து கொள்வதுபோல, நீ அவர்களை அணிந்துகொள்வாய் என்று, என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தர் உரைக்கிறார்.

ஏசா 49:19 அப்பொழுது உன் வனாந்தரங்களும், உன் பாழிடங்களும், நிர்மூலமான உன் தேசமும், இனிக்குடிகளின் திரளினாலே உனக்கு நெருக்கமாயிருக்கும்; உன்னை விழுங்கினவர்கள் தூரமாவார்கள்.

ஏசா 49:20 பிள்ளைகளற்றிருந்த உனக்கு உண்டாயிருக்கப்போகிற பிள்ளைகள்: இடம் எங்களுக்கு நெருக்கமாயிருக்கிறது; நாங்கள் குடியிருக்கும்படிக்கு விலகியிரு என்று, உன் காதுகள் கேட்கச் சொல்லுவார்கள்.

ஏசா 49:21 அப்பொழுது நீ: இவர்களை எனக்குப் பிறப்பித்தவர் யார்? நான் பிள்ளைகளற்றும், தனித்தும், சிறைப்பட்டும், நிலையற்றும் இருந்தேனே; இவர்களை எனக்கு வளர்த்தவர் யார்? இதோ, நான் ஒன்றியாய் விடப்பட்டிருந்தேனே; இவர்கள் எங்கேயிருந்தவர்கள்? என்று உன் இருதயத்தில் சொல்லுவாய்.

49 அதிகாரம்

வானமும், பூமியும் பாடும் பாடல்

கர்த்தர் தம்முடைய ஜனத்திடம் திரும்பி வந்திருக்கிறார். அவர்களைக் கூட்டிச் சேர்த்திருக்கிறார். தம்முடைய ஜனத்திற்கு ஆறுதல் செய்தார். ஆகையினால் வானங்களும், பூமியும் கெம்பீரித்துப் பாடுமாறு இங்கு கட்டளை கொடுக்கப்படுகிறது. (ஏசா 49:13). இது கடந்த காலத்தில் நடைபெற்ற சம்பவமல்ல. பாலஸ்தீன தேசம் ஆசீர்வதிக்கப்படும்போது மேசியாவின் நாளில் இந்தச் சம்பவம் நடைபெறும். (ஏசா 49:14-26) கர்த்தர் தங்களை மறந்துவிட்டதாகச் சீயோன் முறையிடுகிறது. ஆனால் கர்த்தர் சீயோனை மறக்கமாட்டார். (ஏசா 49:14-15) கர்த்தர் சீயோனைத் தம்முடைய உள்ளங்கைகளில் வரைந்திருப்பதாகக் கூறுகிறார். (ஏசா 49:16). இதைக் கூறிய பின்பு, கர்த்தர் தம்முடைய பிள்ளைகளின் நித்திய மீட்பை முன்னறிவிக்கிறார். (ஏசா 49:17-26).

"இதோ, என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன்" - கர்த்தர் சீயோனை மறக்கவில்லை. அதை எப்போதும் தமது நினைவில் வைத்திருக்கிறார் என்பதை இந்த வாக்கியம் விளக்குகிறது. அக்காலத்தில் எருசலேமிற்குப் போகிறவர்கள் அங்குள்ள புனிதமான பட்டணங்களையெல்லாம் தங்களுடைய கைகளில் வரைந்து வைத்திருப்பார்கள். அந்த இடங்களுக்கு மறக்காமல் போகவேண்டும் என்பதை நினைவுபடுத்துவதற்காக இதுபோல கைகளில் வரைவது வழக்கம். (ஏசா 49:16)

"உன் குமாரர் தீவிரித்து வருவார்கள்" - சீயோனின் பிள்ளைகள் தங்களுடைய தேசத்திற்கு விரைவாகத் திரும்பி வருவார்கள். (ஏசா 49:17-18). சிறையிருப்பிலிருந்து திரும்பி வருகிறவர்களினால் சீயோன் அலங்கரிக்கப் படும். சீயோன் அவர்களைக் கூட்டிச் சேர்த்துக் கொள்ளும். அவர்கள் எல்லோரும் சீயோனுக்கு வருவதினால் எருசலேமில் எல்லோருக்கும் போதுமான இடம் இராது. அங்கு இடம் நெருக்கடி உண்டாகும். (ஏசா 49:19-21) இஸ்ரவேலர் கூட்டிச் சேர்க்கப்படுவதற்குப் புறஜாதியாரும் உதவி புரிவார்கள். (ஏசா 49:22) அவர்கள் இஸ்ரவேலை ஆளுகை செய்யும் கர்த்தரை ஆராதிப்பார்கள். (ஏசா 49:23).

(8) இஸ்ரவேலின் விரோதிகள் அழிக்கப் படுகிறார்கள் - (ஆதி 12:3; மத் 25:31-46)

ஏசா 49:22 இதோ, ஜாதிகளுக்கு நேராக என் கரத்தை உயர்த்தி, ஜனங்களுக்கு நேராக என் கொடியை ஏற்றுவேன்; அப்பொழுது உன் குமாரரைக் கொடுங்கைகளில் ஏந்திக்கொண்டு வருவார்கள்; உன் குமாரத்திகள் தோளின் மேல் எடுத்துக்கொண்டு வரப்படுவார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

ஏசா 49:23 ராஜாக்கள் உன்னை வளர்க்கும் தந்தைகளும், அவர்களுடைய நாயகிகள் உன் கைத்தாய்களுமாயிருப்பார்கள்; தரையிலே முகங்குப்புற விழுந்து உன்னைப் பணிந்து, உன் கால்களின் தூளை நக்குவார்கள்; நான் கர்த்தர், எனக்குக் காத்திருக்கிறவர்கள் வெட்கப்படுவதில்லை என்பதை அப்பொழுது அறிந்துகொள்வாய்.

ஏசா 49:24 பராக்கிரமன் கையிலிருந்து கொள்ளைப் பொருளைப் பறிக்கக் கூடுமோ? அல்லது நீதியாய்ச் சிறைப் பட்டுப் போனவர்களை விடுவிக்கக் கூடுமோ?

ஏசா 49:25 என்றாலும் இதோ, பராக்கிரமனால் சிறைப்படுத்தப் பட்டவர்களும் விடுவிக்கப்படுவார்கள்; பெலவந்தனால் கொள்ளையிடப்பட்டதும் விடுதலையாக்கப்படும்; உன்னோடு வழக்காடுகிறவர்களோடே நான் வழக்காடி, உன் பிள்ளைகளை இரட்சித்துக் கொள்ளுவேன்.

ஏசா 49:26 உன்னை ஒடுக்கினவர்களுடைய மாம்சத்தை அவர்களுக்கே தின்னக் கொடுப்பேன்; மதுபானத்தால் வெறிகொள்வதுபோல் தங்களுடைய இரத்தத்தினால் வெறி கொள்வார்கள்; கர்த்தரும் யாக்கோபின் வல்லவருமாகிய நான் உன் இரட்சகரும் உன் மீட்பருமாயிருக்கிறதை மாம்சமான யாவரும் அறிந்துகொள்வார்களென்று கர்த்தர் சொல்லுகிறார்.

"ஜனங்களுக்கு நேராக என் கொடியை ஏற்றுவேன்" - (ஏசா 11:10)

49 அதிகாரம்

"உன் குமாரரைக் கொடுங்கைகளில் **(arms)** ஏந்திக் கொண்டு வருவார்கள்" - இஸ்ரவேலரைப் பாலஸ்தீன தேசத்திற்குக் கூட்டிச்சேர்ப்பது மேசியாவின் சித்தம். ஆயிரம்வருஷ அரசாட்சியில் இந்தச் சம்பவம் நடைபெறும். கர்த்தருடைய திட்டத்தில் புறஜாதியாரும் பங்கு பெறுவார்கள். அவர்கள் இஸ்ரவேல் புத்திரரைப் பாலஸ்தீன தேசத்திற்கு அழைத்து வருவதற்கு உதவி புரிவார்கள். *(ஏசா 49:22-23; ஏசா 11:10-12; ஏசா 60:8-12; ஏசா 66:16-21).*

பிள்ளைகளைச் சுமக்கும் முறை

1. கைகளில் சுமப்பது.
2. தோள்களில் சுமப்பது.
3. மார்பில் அணைத்துக்கொண்டு போவது. *(எண் 11:12)*

"உன் கால்களின் தூளை நக்குவார்கள்" - இது முழுமையாகக் கீழ்ப்படிவதை விளக்கும் வாக்கியமாகும். *(ஆதி 3:14; சங் 72:9; மீகா 7:17).*

"உன் பிள்ளைகளை இரட்சித்துக் கொள்ளுவேன்" - அந்திக்கிறிஸ்துவினால் சிறைப்பிடிக்கப்பட்டிருக்கும் கர்த்தருடைய பிள்ளைகளை அவர் அர்மெகதோன் யுத்தத்தின் போது விடுவிப்பார். *(சக 14:1-5)* இஸ்ரவேலின் விரோதிகளைக் கர்த்தர் அழிப்பார். *(ஏசா 49:26).* அப்போது மாம்சமான யாவரும் கர்த்தரே இஸ்ரவேலின் இரட்சகராகவும், மீட்பராகவும் இருப்பதைப் புரிந்து கொள்வார்கள். *(ஏசா 49:23, 26).* இந்த முன்னறிவிப்பு இதுவரையிலும் நிறைவேறவில்லை. இது வருங்காலத்தில் நிறைவேறும் தீர்க்கதரிசனமாகும்.

50 அதிகாரம்

(9) தேவன் இஸ்ரவேலைத் தள்ளிவைக்கிறார்

ஏசா 50:1 கர்த்தர் சொல்லுகிறார்; நான் உங்கள் தாயை அனுப்பிவிட்டபோது, அவளுக்குக் கொடுத்த தள்ளுதற்சீட்டு எங்கே? அல்லது எனக்குக் கடன்கொடுத்த எவனுக்கு உங்களை நான் விற்றுப்போட்டேன்? இதோ, உங்கள் அக்கிரமங்களினிமித்தம் நீங்கள் விற்கப்பட்டீர்கள்; உங்கள் பாதகங்களினிமித்தம் உங்கள் தாய் அனுப்பிவிடப்பட்டாள்.

தீர்க்கதரிசன எண் - 64

"கர்த்தர் சொல்லுகிறார்........" (ஏசா 50:1-11) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. யூதா தள்ளிவிடப்படும். (ஏசா 50:1).
2. கர்த்தர் யூதாவைத் தள்ளிவிடும்போது அந்நாளில் ஒருவனாலும் யூதாவுக்கு உதவி புரிய முடியாது. (ஏசா 50:2).
3. மேசியா மட்டுமே இரட்சிப்பதற்கும், மீட்பதற்கும் வல்லமையுள்ளவர். (ஏசா 50:2-3).
4. கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் (மேசியா) கல்விமானின் நாவைத்தந்தருளினார் (ஏசா 50:4).
5. காலைதோறும் என்னை எழுப்புகிறார்.
6. கர்த்தராகிய ஆண்டவர் என் செவியை திறந்தார் (ஏசா 50:5).
7. அடிக்கிறவர்களுக்கு என் முதுகை ஒப்புக் கொடுத்தேன். (ஏசா 50:6).
8. அவமானத்துக்கும் உமிழ்நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை.
9. கர்த்தராகிய ஆண்டவர் எனக்குத் துணைசெய்கிறார். (ஏசா 50:7,9).
10. நான் வெட்கப்படேன்.
11. என் முகத்தைக் கற்பாறையைப் போலாக்கினேன். (ஏசா 50:7).
12. நான் வெட்கப்பட்டுப்போவதில்லை.
13. என்னை நீதிமானாக்குகிறவர் சமீபமாயிருக்கிறார் (ஏசா 50:8)
14. என்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவர்கள் அழிந்துபோவார்கள். (ஏசா 50:9).
15. கர்த்தருடைய சொல்லைக் கேட்காமல் கர்த்தருக்குப் பயப்படாமல் ஜீவிக்கிறவன் வேதனையில் கிடப்பான். (ஏசா 50:10-11).

இந்தத் தீர்க்கதரிசனம் இறந்தகால மொழிநடையில் கூறப்பட்டுள்ளது. ஆயினும் இது பல வருஷங்களுக்குப் பின்பே நிறைவேறும். இந்தத் தீர்க்கதரிசனம் கூறப்பட்டு 133 வருஷங்களுக்குப் பின்பே கர்த்தர் யூதாவைத் தள்ளிவிடுவார். மேலும் இதில் மேசியாவைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் சம்பவங்கள் 200 வருஷங்களுக்குப் பின்பு நடைபெறும்.

"நான் உங்கள் தாயை அனுப்பிவிட்டபோது" - யூதா கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தபடியினால் கர்த்தர் அந்தத் தேசத்தைத் தள்ளிவிட்டார். பாபிலோனின் கையில் யூதாவை ஒப்புக்கொடுத்தார். பாபிலோனியர் யூதா தேசத்தாரைச் சிறைப்பிடித்துச் சென்றார்கள்.

(10) மீட்பதற்கு தேவனுடைய வல்லமை

ஏசா 50:2 நான் வந்தபோது ஒருவனும் இல்லாமற்போனதென்ன? நான் கூப்பிட்டபோது மறுஉத்தரவு கொடுக்க ஒருவனும் இல்லாமற் போனதென்ன? மீட்கக்கூடாதபடிக்கு என் கரம் குறுகிற்றோ? விடுவிக்கிறதற்கு என்னிடத்தில் பெலனில்லாமற் போயிற்றோ? இதோ, என் கண்டிதத்தினாலே கடலை வற்றப்பண்ணி, நதிகளை வெட்டாந்தரையாக்கிப் போடுகிறேன்; அவைகளிலுள்ள மீன் தண்ணீரில்லாமல் தாகத்தால் செத்து நாறுகின்றது.

50 அதிகாரம்

ஏசா 50:3 நான் வானங்களுக்குக் காரிருளை உடுத்தி, இரட்டை அவைகளின் மூடு சீலையாக்குகிறேன்.

"நான் கூப்பிட்டபோது மறுஉத்தரவு கொடுக்க ஒருவனும் இல்லாமற் போனதென்ன?" - எந்த மனுஷனாலும் யூதாவை இரட்சிக்க முடியாது. கர்த்தரால் மட்டுமே இரட்சிப்பு உண்டாகும். (ஏசா 50:2-3).

(11) அவருடைய தகுதிகள்

ஏசா 50:4 இளைப்படைந்தவனுக்கு சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்ல நான் அறியும்படிக்கு, கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் கல்விமானின் நாவைத் தந்தருளினார்; காலைதோறும் என்னை எழுப்புகிறார்; கற்றுக் கொள்ளுகிறவர்களைப் போல, நான் கேட்கும்படி என் செவியைக் கவனிக்கச் செய்கிறார்.

ஏசா 50:5 கர்த்தராகிய ஆண்டவர் என் செவியை திறந்தார்; நான் எதிர்க்கவுமில்லை, நான் பின்வாங்கவுமில்லை.

"கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் கல்விமானின் நாவைத்தந்தருளினார்" - பரிசுத்த ஆவியானவர் மூலமாகக் கர்த்தர் மேசியாவிற்குச் சிறுபிராயத்திலிருந்தே கற்றுத் தருகிறார். யோவான்ஸ்நானனைப்போலவே இயேசு கிறிஸ்துவும் தமது சிறுவயதுப் பிராயத்திலேயே பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டிருந்தார். மேசியாவிற்கு மனுஷரும் போதித்தார்கள். (சங் 119:97-104) தமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சத்தியத்தை மட்டுமே பேசுவதாக இயேசு கிறிஸ்து அறிவித்திருக்கிறார். (யோவான் 7:16; யோவான் 8:28, 46, 47; யோவான் 12:49; யோவான் 14:10, 24; யோவான் 17:8).

"கர்த்தராகிய ஆண்டவர் என் செவியை திறந்தார்" - சாமுவேலுக்கும், மற்ற தீர்க்கதரிசிகளுக்கும் கர்த்தர் தம்மை வெளிப்படுத்தியதுபோல மேசியாவிற்கும் வெளிப்படுத்தியிருக்கிறார். (ஏசா 22:14; 1சாமு 9:15; யோபு 33:16; சங் 40:6). கர்த்தர் மேசியாவிடம் தம்மைப் பற்றி வெளிப்படுத்திய போது மேசியா கர்த்தருக்கு எதிராகக் கலகம் பண்ணவில்லை. கர்த்தருடைய வார்த்தையை எதிர்க்கவில்லை. எத்தனை பாடுகள் வந்தாலும் கர்த்தருடைய சித்தத்தைச் செய்வதற்கு மேசியா தம்மை ஒப்புக்கொடுத்தார். (சங் 40:6-8; எபி 10:4-10).

(12) அவருடைய பாடும் உதவியும்

ஏசா 50:6 அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும், தாடைமயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக்கொடுத்தேன்; அவமானத்துக்கும் உமிழ்நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை.

ஏசா 50:7 கர்த்தராகிய ஆண்டவர் எனக்குத் துணைசெய்கிறார்; ஆகையால் நான் வெட்கப்படேன்; நான் வெட்கப் பட்டுப்போவதில்லையென்று அறிந்திருக்கிறேன்; ஆதலால் என் முகத்தைக் கற்பாறையைப் போலாக்கினேன்.

ஏசா 50:8 என்னை நீதிமானாக்குகிறவர் சமீபமாயிருக்கிறார்; என்னோடே வழக்காடுகிறவன் யார்? ஏகமாய் நிற்போமாக, யார் எனக்கு எதிராளி? அவன் என்னிடத்தில் வரட்டும்.

ஏசா 50:9 இதோ, கர்த்தராகிய ஆண்டவர் எனக்குத் துணைசெய்கிறார்; என்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? இதோ, அவர்கள் எல்லாரும் ஒரு வஸ்திரத்தைப்போலப் பழசாவார்கள்; பொட்டுப்பூச்சி அவர்களை அரிக்கும்.

"அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும்.......... ஒப்புக்கொடுத்தேன்" - இயேசு கிறிஸ்து கைதுபண்ணப்பட்டு, விசாரிக்கப்படும்போது அவர் அடைந்த பாடுகளை இந்த வாக்கியம் விவரிக்கிறது. (மத் 26:67; மத் 27:26-30).

50 அதிகாரம்

"என் முகத்தைக் கற்பாறையைப் போலாக்கினேன்." - மேசியாவின்மீது பலர் எரிச்சலானார்கள். கோபமடைந்தார்கள். அந்தச் சூழ்நிலையிலும் மேசியா உறுதியாக இருந்தார். (எசே 3:8). தம்முடைய ஜீவியத்தை முடிவுபரியந்தம் கர்த்தரிடத்தில் ஒப்புக் கொடுத்தார். மரணபரியந்தம் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தார். (லூக்கா 9:31,51, யோவான் 10:15-18).

"என்னோடே வழக்காடுகிறவன் யார்?" - கர்த்தரோடு யாரும் வழக்காட முடியாது. அவர்கள் எல்லாரும் ஒரு வஸ்திரத்தைப் போலப்பழசாவார்கள்; பொட்டுப்பூச்சி அவர்களை அரிக்கும். (ஏசா 50:8-9). கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களுக்கு ஆசீர்வாதம் உண்டாகும். (ஏசா 50:10) கர்த்தருக்கு எதிராகக் கலகம் பண்ணுகிறவர்கள் வேதனை அடைவார்கள். (ஏசா 50:11).

(13) அவருடைய வரவேற்பு

ஏசா 50:10 உங்களில் எவன் கர்த்தருக்குப் பயந்து, அவருடைய தாசனின் சொல்லைக்கேட்டு, தனக்கு வெளிச்சமில்லாததினால் இருட்டிலே நடக்கிறானோ, அவன் கர்த்தருடைய நாமத்தை நம்பி, தன் தேவனைச் சார்ந்துகொள்ளக்கடவன்.

ஏசா 50:11 இதோ, நெருப்பைக் கொளுத்தி, அக்கினிப்பொறிகளால் சூழப்பட்டிருக்கிற நீங்கள் அனைவரும், உங்கள் அக்கினி தீபத்திலும், நீங்கள் மூட்டின அக்கினி ஜுவாலையிலும் நடவுங்கள்; வேதனையில் கிடப்பீர்கள்; என் கரத்தினால் இது உங்களுக்கு உண்டாகும்.

51 அதிகாரம்

2. ஆறு அழைப்புகளும் ஆறுதலும் - (51:1-52:12; 5:8; 28:1)

(1) செவிகொடுங்கள் - நீதிமானாக இருக்குமாறு அழைப்பு

ஏசா 51:1 நீதியைப் பின்பற்றி, கர்த்தரைத் தேடுகிற நீங்கள் எனக்குச் செவிகொடுங்கள்; நீங்கள் வெட்டி எடுக்கப்பட்ட கன்மலையையும், நீங்கள் தோண்டி எடுக்கப்பட்ட துரவின் குழியையும் நோக்கிப்பாருங்கள்.

ஏசா 51:2 உங்கள் தகப்பனாகிய ஆபிரகாமையும், உங்களைப் பெற்ற சாராளையும் நோக்கிப்பாருங்கள்; அவன் ஒருவனாயிருக்கையில் நான் அவனை அழைத்து, அவனை ஆசீர்வதித்து, அவனைப் பெருகப்பண்ணினேன்.

நீதிமானின் சுபாவங்கள்

1. நீதியைப் பின்பற்றுவார்கள்.
2. கர்த்தரைத் தேடுவார்கள்.

"வெட்டி எடுக்கப்பட்ட கன்மலை" - ஆபிரகாமும், சாராளும் கன்மலை என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்களிலிருந்து இஸ்ரவேல் வெட்டி எடுக்கப்பட்டிருக்கிறது. (ஏசா 51:1-2).

"தோண்டி எடுக்கப்பட்ட துரவின் குழி" - தேவன் இஸ்ரவேலை மகாப்பெரிய ஜாதியாக ஆக்கியிருக்கிறார். கர்த்தர் அவர்களுக்கு ஆறுதல் செய்து அவர்களைத் திரும்பவும் மீட்டுக் கொண்டு மறுபடியும் அவர்களை மகாப் பெரிய ஜாதியாக ஆக்குவார். கர்த்தர் ஆபிரகாமிற்கும், சாராளுக்கும் அற்புதம் செய்து அவர்களுடைய சந்ததியை வர்த்திக்கப் பண்ணியது போல இஸ்ரவேலுக்கும் அற்புதம் செய்து அவர்களை மறுபடியும் பெரிய தேசமாக ஸ்தாபிப்பார். (ஏசா 51:1-2).

அழைப்புகளும், ஆறுதல்களும்

1. கேளுங்கள் - நீதியைப் பின்பற்றுகிறவர்களுக்கு அழைப்பு. ஆறுதல் - சீயோன் திரும்பவும் கூட்டிச் சேர்க்கப்படும். (ஏசா 51:1-3).
2. கேளுங்கள் - இஸ்ரவேல் ஜனங்களுக்கு அழைப்பு. ஆறுதல் - நித்திய இரட்சிப்பு. (ஏசா 51:4-6).
3. கேளுங்கள் - நீதியைப் பின்பற்றுகிறவர்களுக்கு அழைப்பு. ஆறுதல் - நித்திய நீதி (ஏசா 51:7-8).
4. எழும்பு - தேவனுக்கு அழைப்பு. ஆறுதல் - மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படுவது. (ஏசா 51:9-16).
5. எழும்பு - எருசலேமிற்கு அழைப்பு. ஆறுதல் - சத்துருக்களின் நியாயத்தீர்ப்பு. (ஏசா 51:17-23).
6. எழும்பு - சீயோனுக்கு அழைப்பு. ஆறுதல் - மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படுவது. (ஏசா 52:1-12).

தீர்க்கதரிசன எண் - 65

"நீதியைப் பின்பற்றி, கர்த்தரைத் தேடுகிற நீங்கள் எனக்குச் செவிகொடுங்கள்........" (ஏசா 51:1-52:12) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. கர்த்தர் சீயோனுக்கு ஆறுதல் செய்வார் (ஏசா 51:3).
2. அவர் அதின் பாழான ஸ்தலங்களை யெல்லாம் தேறுதலடையச் செய்வார்.
3. அதின் வனாந்தரத்தை ஏதேனைப் போலவும், அதின் அவாந்தரவெளியைக் கர்த்தரின் தோட்டத்தைப் போலவும் ஆக்குவார்.
4. சந்தோஷமும் மகிழ்ச்சியும் துதியும் கீதசத்தமும் அதில் உண்டாயிருக்கும்.

51 அதிகாரம்

5. வேதம் என்னிலிருந்து வெளிப்படும் (ஏசா 51:4).

6. என் பிரமாணத்தை ஜனங்களின் வெளிச்சமாக ஸ்தாபிப்பேன்.

7. என் நீதி சமீபமாயிருக்கிறது (ஏசா 51:5).

8. என் இரட்சிப்பு வெளிப்படும்.

9. என் புயங்கள் ஜனங்களை நியாயந்தீர்க்கும்.

10. தீவுகள் எனக்குக் காத்திருக்கும்.

11. அவர்கள் என் புயத்தின்மேல் நம்பிக்கையாயிருப்பார்கள்.

12. வானம் புகையைப்போல் ஒழிந்துபோம் (ஏசா 51:6).

13. பூமி வஸ்திரத்தைப் போல் பழசாய்ப்போம்.

14. அதின் குடிகளும் அப்படியே ஒழிந்து போவார்கள்.

15. என் இரட்சிப்போ என்றென்றைக்கும் இருக்கும்.

16. என் நீதி அற்றுப்போவதில்லை.

17. பொட்டுப்பூச்சி துன்மார்க்கரை வஸ்திரத்தைப்போல் அரித்து, புழு அவர்களை ஆட்டுமயிரைப்போல் தின்னும். (ஏசா 51:7-8).

18. கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் ஆனந்தக் களிப்புடன் பாடி சீயோனுக்குத் திரும்பிவருவார்கள் (ஏசா 51:11).

19. நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேல் இருக்கும்.

20. சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்.

21. சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்.

22. நானே உங்களுக்கு ஆறுதல் செய்கிறவர் (ஏசா 51:12)

23. இடுக்கண்செய்கிறவன் இனி இருக்க மாட்டான். (ஏசா 51:13).

24. நான் என் வார்த்தையை உன் வாயிலே அருளுவேன். (ஏசா 51:16; ஏசா 59:20-21).

25. என் கரத்தின் நிழலினால் உன்னை மறைக்கிறேன். (ஏசா 51:16).

26. தத்தளிப்பின் பாத்திரத்தை உன் கையிலிருந்து நீக்கிப்போடுகிறேன் (ஏசா 51:21-22).

27. உன்னைச் சஞ்சலப்படுத்தனவர்களின் கையில் அதைக் கொடுப்பேன் (ஏசா 51:23).

28. விருத்தசேதனமில்லாதவனும் அசுத்தனும் இனி உன்னிடத்தில் (எருசலேம்) வருவதில்லை. (ஏசா 52:1).

29. சிறைப்பட்டுப் போனவர்கள் எருசலேமிற்கும், சீயோனுக்கும் திரும்பி வருவார்கள். (ஏசா 52:2-6).

30. என் ஜனங்கள் என் நாமத்தை அறிவார்கள் (ஏசா 52:6).

31. சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தி: உன் தேவன் ராஜரிகம் பண்ணுகிறாரென்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின்மேல் அழகாயிருக்கும். (ஏசா 52:7).

32. உன் ஜாமக்காரருடைய சத்தம் கேட்கப்படும். (ஏசா 52:8).

33. எருசலேமின் பாழான ஸ்தலங்கள் முழங்கி ஏகமாய்க் கெம்பீரித்துப் பாடும். (ஏசா 52:9).

ஏசாயா - தொகுப்புரை

51 அதிகாரம்

34. எல்லா ஜாதிகளின் கண்களுக்கு முன்பாகவும் கர்த்தர் தம்முடைய பரிசுத்த புயத்தை வெளிப்படுத்துவார். (ஏசா 52:10).

35. கர்த்தர் உங்கள் முன்னே போவார்; இஸ்ரவேலின் தேவன் உங்கள் பிறகே உங்களைக் காக்கிறவராயிருப்பார். (ஏசா 52:11-12).

ஏசாயா 51:1-52:12 ஆகிய வசனங்களிலுள்ள தீர்க்கதரிசனத்தில் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. எனக்குச் செவிகொடுங்கள் (ஏசா 51:1).

2. கன்மலையை நோக்கிப் பாருங்கள்.

3. உங்கள் தகப்பனாகிய ஆபிரகாமையும், உங்களைப் பெற்ற சாராளையும் நோக்கிப்பாருங்கள் (ஏசா 51:2).

4. எனக்குச் செவிகொடுங்கள் (ஏசா 51:4).

5. என் வாக்கைக் கவனியுங்கள்.

6. உங்கள் கண்களை வானத்துக்கு ஏறெடுங்கள் (ஏசா 51:6).

7. கீழே இருக்கிற பூமியையும் நோக்கிப் பாருங்கள்.

8. எனக்குச் செவி கொடுங்கள் (ஏசா 51:7).

9. மனுஷரின் நிந்தனைக்குப் பயப்படாமல் இருங்கள்.

10. அவர்கள் தூஷணங்களால் கலங்காமல் இருங்கள்.

11. எழும்பு, எழும்பு, பெலன்கொள் (ஏசா 51:9).

12. எழும்பு, எழும்பு...எழுந்துநில் (ஏசா 51:17).

13. எழும்பு, எழும்பு, சீயோனே, உன் வல்லமையைத் தரித்துக்கொள் (ஏசா 52:1).

14. உன் அலங்கார வஸ்திரங்களை உடுத்திக்கொள்.

15. தூசியை உதறிவிட்டு எழுந்திரு (ஏசா 52:2).

16. எருசலேமே, வீற்றிரு.

17. உன் கழுத்திலுள்ள கட்டுகளை அவிழ்த்துவிடு.

18. முழங்கி ஏகமாய்க் கெம்பீரித்துப் பாடுங்கள் (ஏசா 52:9).

19. புறப்படுங்கள், புறப்படுங்கள், அவ்விட்டுப் போங்கள் (ஏசா 52:11).

20. அசுத்தமானதைத் தொடாதிருங்கள்.

21. அதின் நடுவிலிருந்து புறப்பட்டு போங்கள்.

22. உங்களைச் சுத்திகரியுங்கள்.

(2) ஆறுதல் - சீயோன் மீட்கப்பட்டது

ஏசா 51:3 கர்த்தர் சீயோனுக்கு ஆறுதல் செய்வார்; அவர் அதின் பாழான ஸ்தலங்களையெல்லாம் தேறுதலடையச் செய்து, அதின் வனாந்தரத்தை ஏதேனைப் போலவும், அதின் அவாந்தரவெளியைக் கர்த்தரின் தோட்டத்தைப் போலவும் ஆக்குவார்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் துதியும் கீதசத்தமும் அதில் உண்டாயிருக்கும்.

"அவர் அதின் பாழான ஸ்தலங்களையெல்லாம் தேறுதலடையச் செய்து" - தாவீதின் நகரமாகிய சீயோனும், எருசலேமும் தேறுதலடையும். அத்துடன் யூதா ஆளுகை செய்த பாழான ஸ்தலங்கள் எல்லாம் தேறுதலடையும். கர்த்தர் அதை ஏதேனைப் போல செழிக்கச் செய்வார். இந்த வாக்கியம் இன்னும் நிறைவேறவில்லை. இது ஆயிரம் வருஷ அரசாட்சியில் மேசியாவின்கீழ் நிறைவேறும். (ஏசா 2:2-4; ஏசா 9:6-7; ஏசா 35:1-10).

"கர்த்தரின் தோட்டம்" - (ஆதி 2:8-17; ஆதி 13:10)

51 அதிகாரம்

(3) செவிகொடுங்கள் - இஸ்ரவேலுக்கு அழைப்பு

ஏசா 51:4 என் ஜனங்களே, எனக்குச் செவிகொடுங்கள்; என் ஜாதியாரே, என் வாக்கைக் கவனியுங்கள்; வேதம் என்னிலிருந்து வெளிப்படும்; என் பிரமாணத்தை ஜனங்களின் வெளிச்சமாக ஸ்தாபிப்பேன்.

"என் ஜனங்களே..........என் ஜாதியாரே" - இந்த வாக்கியம் யூதாவையும், யூதாவிலுள்ள இஸ்ரவேலர் அனைவரையும் குறிக்கும். வடக்கு ராஜ்யத்தின் பத்துக் கோத்திரத்தார் முழுவதுமாக அழிக்கப்பட்டு இக்காலத்தில் சிறையிருப்புக்கு உட்பட்டு விட்டார்கள். (ஏசா 52:4). கர்த்தர் யூதாவுக்கு ஒரு பிரமாணத்தையும், நியாயத் தீர்ப்பையும் வாக்குப்பண்ணுகிறார். அது அவர்களுக்கு வெளிச்சமாக ஸ்தாபிக்கப்படும்.

கர்த்தருக்குரிய காரியங்கள்

1. என் ஜனங்கள் (ஏசா 51:4; ஏசா 52:4-6)
2. என் ஜாதியார் (ஏசா 51:4)
3. என் நியாயத்தீர்ப்பு
4. என் நீதி (ஏசா 51:5,6,8)
5. என் இரட்சிப்பு
6. என் புயங்கள் (ஏசா 51:5,9)
7. என் வார்த்தை (ஏசா 51:16)
8. என் கரம்
9. என் உக்கிரம் (ஏசா 51:22)
10. என் நாமம் (ஏசா 52:5-6)

"வேதம் என்னிலிருந்து வெளிப்படும்" - மோசேயின் நியாயப் பிரமாணத்திலும், மற்றப் பிரமாணங்களிலும் தேவையானவற்றைக் கர்த்தர் ஆயிரம் வருஷ அரசாட்சியில் பயன்படுத்துவார். (ஏசா 2:3; ஏசா 8:16,20; எசே 45:17)

(4) ஆறுதல் - நித்திய இரட்சிப்பு

ஏசா 51:5 என் நீதி சமீபமாயிருக்கிறது; என் இரட்சிப்பு வெளிப்படும்; என் புயங்கள் ஜனங்களை நியாயந்தீர்க்கும்; தீவுகள் எனக்குக் காத்திருந்து, என் புயத்தின்மேல் நம்பிக்கையாயிருக்கும்.

ஏசா 51:6 உங்கள் கண்களை வானத்துக்கு ஏறெடுங்கள், கீழே இருக்கிற பூமியையும் நோக்கிப் பாருங்கள்; வானம் புகையைப்போல் ஒழிந்துபோம், பூமி வஸ்திரத்தைப்போல் பழசாய்ப்போம்; அதின் குடிகளும் அப்படியே ஒழிந்து போவார்கள்; என் இரட்சிப்போ என்றென்றைக்கும் இருக்கும்; என் நீதி அற்றுப்போவதில்லை.

"தீவுகள்" - (ஏசா 51:5; ஏசா 42:4; ஏசா 60:9).

"என் புயத்தின் மேல் நம்பிக்கையாயிருக்கும்" - யூதரும், புறஜாதியாரும் முடிவாகக் கர்த்தரிடத்தில் நம்பிக்கையாயிருப்பார்கள். (மத் 12:21; அப் 15:13-18; ரோமர் 15:12).

ஏசாயா 51 ஆவது அதிகாரத்தில் "நோக்கிப் பாருங்கள்" என்று கூறப்பட்டிருக்கும் சம்பவங்கள்

1. நீங்கள் வெட்டி எடுக்கப்பட்ட கன்மலையையும், நீங்கள் தோண்டி எடுக்கப்பட்ட துரவின் குழியையும் நோக்கிப்பாருங்கள். (ஏசா 51:1).
2. உங்கள் தகப்பனாகிய ஆபிரகாமையும், உங்களைப் பெற்ற சாராளையும் நோக்கிப்பாருங்கள் (ஏசா 51:2)
3. உங்கள் கண்களை வானத்துக்கு ஏறெடுங்கள் (ஏசா51:6).
4. கீழே இருக்கிற பூமியையும் நோக்கிப் பாருங்கள்.

ஒப்புமைகள்

1. வானம் புகையைப்போல் ஒழிந்துபோம்.
2. பூமி வஸ்திரத்தைப் போல் பழசாய்ப்போம்.

51 அதிகாரம்

3. அதின் குடிகளும் அப்படியே ஒழிந்து போவார்கள். என் இரட்சிப்போ என்றென்றைக்கும் இருக்கும். என் நீதி அற்றுப்போவதில்லை.

கர்த்தருடைய இரட்சிப்பும், கர்த்தருடைய நீதியும் என்றைக்கும் நிலைத்திருக்கும். (ஏசா 51:6; எபி 1:10-12)

(5) செவிகொடுங்கள் - நீதிமானாக இருக்குமாறு அழைப்பு - (வசனம் 1-2; 51:1-2)

ஏசா 51:7 நீதியை அறிந்தவர்களே, என் வேதத்தை இருதயத்தில் பதித்திருக்கிற ஜனங்களே, எனக்குச் செவி கொடுங்கள்; மனுஷரின் நிந்தனைக்குப் பயப்படாமலும், அவர்கள் தூஷணங்களால் கலங்காமலும் இருங்கள்.

நீதிமானின் அனுபவங்கள்

1. அவர்கள் நீதியை அறிந்தவர்கள்.
2. அவர்கள் வேதத்தை இருதயத்தில் பதித்திருக்கிற ஜனங்கள்.

நீதிமான்களுக்கு எச்சரிப்புக்கள்

1. மனுஷரின் நிந்தனைக்குப் பயப்படக் கூடாது.
2. அவர்கள் தூஷணங்களால் கலங்கக் கூடாது.

(6) ஆறுதல் - நித்திய நீதி

ஏசா 51:8 பொட்டுப்பூச்சி அவர்களை வஸ்திரத்தைப்போல் அரித்து, புழு அவர்களை ஆட்டுமயிரைப்போல் தின்னும்; என்னுடைய நீதியோ என்றென்றைக்கும் நிலைக்கும், என் இரட்சிப்பு தலைமுறை தலைமுறைதோறும் இருக்கும்.

மனுஷருக்குப் பயப்படக்கூடாது - காரணம்

1. மனுஷர் அழிந்து போவார்கள்.
2. கர்த்தருடைய நீதியும், இரட்சிப்பும் தலைமுறை தலைமுறைதோறும் இருக்கும். (யோபு 4:18-20).

(7) எழும்பு - தேவனுக்கு அழைப்பு

ஏசா 51:9 எழும்பு, எழும்பு, பெலன்கொள்; கர்த்தரின் புயமே, முந்தின நாட்களிலும் பூர்வ தலைமுறைகளிலும் எழும்பினபடி எழும்பு; இராகாபைத் துண்டித்ததும் வலுசர்ப்பத்தை வதைத்ததும் நீதானல்லவோ?

ஏசா 51:10 மகா ஆழத்தின் தண்ணீர்களாகிய சமுத்திரத்தை வற்றிப் போகப்பண்ணினதும், மீட்கப்பட்டவர்கள் கடந்துபோகக் கடலின் பள்ளங்களை வழியாக்கினதும் நீதானல்லவோ?

"பெலன்கொள்" - இங்கு இஸ்ரவேல் கர்த்தரை அழைக்கிறார்கள். முந்தின நாட்களில் கர்த்தர் இஸ்ரவேலை இரட்சித்ததுபோல இப்போதும் இரட்சிக்க வேண்டுமென்று அவர்கள் தேவனிடத்தில் கூறுகிறார்கள். இஸ்ரவேலர் பரிதாபமான நிலைமையில் இருப்பதினால் அவர்கள் கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணுவதற்குப் பதிலாகக் கட்டளையிடுகிறார்கள். கர்த்தர் தம்முடைய கரங்களின் கிரியைகளைக் குறித்துத் தமக்குக் கட்டளையிடுமாறு ஏற்கெனவே கூறியிருக்கிறார். (ஏசா 45:11) எகிப்திலிருந்து கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை விடுவித்தபோது அற்புதம் செய்ததுபோல இப்போதும் அற்புதங்களைச் செய்யுமாறு அவர்கள் கர்த்தரை வேண்டிக் கொள்கிறார்கள். (ஏசா 51:9-10) சீயோனுக்குத் தங்களைத் திரும்ப அழைத்து வருமாறு இஸ்ரவேலர் கர்த்தருக்குக் கட்டளையிடுகிறார்கள். (ஏசா 51:11-16).

"கர்த்தரின் புயமே" - இது கர்த்தருடைய வல்லமையைக் குறிக்கும் வாக்கியம். (ஏசா 51:5,9; ஏசா 40:10; ஏசா 52:10; ஏசா 53:1; ஏசா 59:16; ஏசா 62:8; ஏசா 63:5,12; யாத் 6:6; யாத் 15:16).

51 அதிகாரம்

"முந்தின நாட்கள்" - (ஏசா 45:21)

"இராகாப்" (Rahab) - இது எகிப்தைச் சங்கீத நடையில் கூறும் பெயர். (ஏசா 51:9; சங் 87:4; சங் 89:10) மற்ற வசனங்களில் ராகாப் என்னும் பெயர் எரிகோவிலுள்ள வேசியையே குறிக்கும். (யோசு 2:1-3; யோசு 6:17-25; எபி 11:21; யாக் 2:25; மத் 1:5).

வலுசர்ப்பம் (dragon) - תַּנִּין - tan-neen', tan-neem' - 8577

ஆ.பெ.சொ. - மலைப் பாம்பு, வலுசர்ப்பம், முதலை, ஆந்தை, மச்சம், திமிங்கலம் crocodile (யாத் 7:9)

"மீட்கப்பட்டவர்கள் கடந்து போகக் கடலின் பள்ளங்களை வழியாக்கினதும் நீதானல்லவோ?" - (யாத் 14:16-22)

(8) ஆறுதல் - மீட்பு

ஏசா 51:11 அப்படியே கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் ஆனந்தக் களிப்புடன் பாடி சீயோனுக்குத் திரும்பிவருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேல் இருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்.

ஏசா 51:12 நான், நானே உங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்; சாகப்போகிற மனுஷனுக்கும், புல்லுக்கொப்பாகிற மனுபுத்திரனுக்கும் பயப்படுகிறதற்கும், வானங்களை விரித்து, பூமியை அஸ்திபாரப்படுத்தி, உன்னை உண்டாக்கின கர்த்தரை மறக்கிறதற்கும் நீ யார்?

ஏசா 51:13 இடுக்கண்செய்கிறவன் அழிக்க ஆயத்தமாகிறபோது, நீ அவனுடைய உக்கிரத்துக்கு நித்தம் இடைவிடாமல் பயப்படுகிறதென்ன? இடுக்கண் செய்கிறவனுடைய உக்கிரம் எங்கே?

ஏசா 51:14 சிறைப்பட்டுப் போனவன் தீவிரமாய் விடுதலையாவான்; அவன் கிடங்கிலே சாவதுமில்லை, அவனுடைய அப்பம் குறைவுபடுவதுமில்லை.

ஏசா 51:15 உன் தேவனாயிருக்கிற கர்த்தர் நானே; அலைகள் கொந்தளிக்கத் தக்கதாய் சமுத்திரத்தைக் குலுக்குகிற சேனைகளின் கர்த்தர் என்கிற நாமமுள்ளவர்.

ஏசா 51:16 நான் வானத்தை நிலைப்படுத்தி, பூமியை அஸ்திபாரப் படுத்தி, சீயோனை நோக்கி: நீ என் ஜனமென்று சொல்வதற்காக, நான் என் வார்த்தையை உன் வாயிலே அருளி, என் கரத்தின் நிழலினால் உன்னை மறைக்கிறேன்.

யூதாவின் வருங்கால ஆசீர்வாதங்கள்

1. பாழான ஸ்தலங்களும், வனாந்தரங்களும் செழிப்பாகும். (ஏசா 51:3; ஏசா 35:1-10)
2. வேதமும், நியாயத்தீர்ப்பும் (ஏசா 51:4; ஏசா 2:2-4; ஏசா 11:9)
3. நீதியும், இரட்சிப்பும். (ஏசா 51:5-8; ஏசா 61:1-3)
4. மீட்பு (ஏசா 51:11; ஏசா 66:7-8; சக 12:10-13:1; மத் 23:37-39; ரோமர் 11:25-29)
5. சீயோனுக்குத் திரும்பி வருவது. (ஏசா 51:11; ஏசா 11:10-12; எரே 30-31; எசே 37; மத் 24:31)
6. ஆனந்தக்களிப்புடன் சீயோனுக்குத் திரும்பி வருவது. (ஏசா 51:11; ஏசா 14:7; ஏசா 35:2; ஏசா 44:23; ஏசா 48:20; ஏசா 49:13; ஏசா 55:12)
7. நித்திய சந்தோஷம் (ஏசா 51:11; ஏசா 12:3; ஏசா 35:2,10; ஏசா 52:9; ஏசா 61:7; ஏசா 65:19)
8. சஞ்சலம், தவிப்பு ஆகியவற்றிலிருந்து விடுதலை (ஏசா 51:11; ஏசா 14:3; ஏசா 35:10)

51 அதிகாரம்

9. ஆறுதல் (ஏசா 51:3,12; ஏசா 61:2; ஏசா 66:13)

10. தேவனுடைய வார்த்தை (ஏசா 51:16; ஏசா 59:20-21)

11. பாதுகாப்பு (ஏசா 51:16; ஏசா 61:10)

12. முன்பு போல மறுபடியும் தேவனுடைய ஜனமாவது. (ஏசா 51:16)

13. சத்துருக்கள் மீது பழிவாங்குதல். (ஏசா 51:21-23)

14. தெய்வீக அரசாங்கம். (ஏசா 52:7)

"உன்னை உண்டாக்கின கர்த்தரை மறக்கிறதற்கும் நீ யார்?" - இந்தக் கேள்விக்குப் பதில் கூறுவது மிகவும் கடினம். மனுஷன் மற்றொரு மனுஷனை நம்புகிறான். மற்ற மனுஷனுக்குப் பயப்படுகிறான். மனுஷன் கர்த்தரை நம்பி அவருக்கே பயப்படவேண்டும். மனுஷனை நம்புவது அவனுக்குப் பலவீனம். கர்த்தரை நம்புவது அவனுக்குப் பெலன். தம்மை நம்புகிறவர்களைக் கர்த்தர் பாதுகாப்பார். (ஏசா 51:12-13).

சிறைப்பட்டுப்போனவனின் காரியங்கள்

1. தீவிரமாய் விடுதலையாவான்.

2. அவன் கிடங்கிலே சாவதில்லை.

3. அவனுடைய அப்பம் குறைவுபடுவதில்லை.

"நீ என் ஜனம்" - ஆயிரம் வருஷ அரசாட்சியில் இஸ்ரவேல் மேசியாவின் ஜனமாக இருப்பார்கள். (ஏசா 52:7; ஏசா 59:20-21; ஏசா 66:7-8; சக 12:10-13:1; மத் 23:37-39; ரோமர் 11:25-29).

"என் கரத்தின் நிழலினால் உன்னை மறைக்கிறேன்" - (ஏசா 55:10-11; ஏசா 59:20-21)

(9) எழும்பு - எருசலேமிற்கு அழைப்பு

ஏசா 51:17 எழும்பு, எழும்பு, கர்த்தருடைய உக்கிரத்தின் பாத்திரத்தை அவர்கையில் வாங்கிக் குடித்திருக்கிற எருசலேமே, எழுந்துநில், தத்தளிக்கச்செய்யும் பாத்திரத்தின் வண்டல்களை உறிஞ்சிக் குடித்தாய்.

ஏசா 51:18 அவள் பெற்ற புத்திரரெல்லாரிலும் அவளை நடத்துவார் ஒருவருமில்லை; அவள் வளர்த்த குமாரரெல்லாரிலும் அவளைக் கைகொடுத்து அழைப்பார் ஒருவருமில்லை.

ஏசா 51:19 இவ்விரண்டும் உனக்குச் சம்பவித்தது; உனக்குப் பரிதபிக்கிறவன் யார்? பாழ்க்கடிப்பும், சங்காரமும், பஞ்சமும், பட்டயமும் வந்தன; யாரைக்கொண்டு உனக்கு ஆறுதல் செய்வேன்?

ஏசா 51:20 உன் குமாரர் மூர்ச்சித்து விழுந்தார்கள்; அவர்கள், வலையிலே சிக்குண்ட கலைமானைப்போல, எல்லா வீதிகளின் முனையிலும், கர்த்தருடைய உக்கிரத்தினாலும், உன் தேவனுடைய கண்டிதத்தினாலும் நிறைந்தவர்களாய்க் கிடக்கிறார்கள்.

"அவர் கையில் வாங்கிக் குடித்திருக்கிற எருசலேமே" - இஸ்ரவேல் கர்த்தருடைய தத்தளிக்கச்செய்யும் பாத்திரத்தின் வண்டல்களை உறிஞ்சிக் குடித்திருக்கிறது. (ஏசா 51:17-20) இனிமேல் அவர்களால் இதைக் குடிக்க முடியாது. ஏனெனில் இந்தப் பாத்திரம் இஸ்ரவேலின் சத்துருக்களுக்குக் கொடுக்கப் படும். இஸ்ரவேலரைச் சஞ்சலப் படுத்தினவர்களுக்குக் கர்த்தருடைய தத்தளிக்கச்செய்யும் பாத்திரத்தின் வண்டல்கள் குடிப்பதற்குக் கொடுக்கப்படும். (ஏசா 51:21-23).

"அவள் பெற்ற புத்திரரெல்லாரிலும் அவளை நடத்துவார் ஒருவருமில்லை" - இஸ்ரவேலுக்குப் பூமியில் மனுஷரால் உதவி புரிய முடியாது. தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவே அவர்களுக்கு உதவி செய்யக்கூடியவர். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இஸ்ரவேல் ஜனத்தார் அவரைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக் கொண்டு மனந்திரும்பினால் கர்த்தர் அவர்களுக்கு உதவி புரிவார்.

51 அதிகாரம்

(ஏசா 51:18-20; ஏசா 63:1-6;ஏசா 59:29-31; சக 14; மத் 23:37-39; மத் 24:29-31; மத் 25:31-46; ரோமர் 11:25-29; 2தெச 1:7-10; வெளி 19:11-21). அப்போது இஸ்ரவேல் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்பட்டு அவருக்குக் கீழ் நித்தியமாக ஆசீர்வதிக்கப்படும். (ஏசா 9:6-7; ஏசா 11:10-12; ஏசா 66:19-21; எசே 37; சக 14; மத் 24:29-31; மத் 25:31-45).

"பாழ்க்கடிப்பும், சங்காரமும், பஞ்சமும், பட்டயமும்" - இஸ்ரவேலின்மீது நியாயத் தீர்ப்பையும், அவர்களுடைய சிறையிருப்பையும் விளக்கும் வார்த்தைகள். (எரே 11:22; எரே 14:12-18; எரே 15:2; எரே 16:4; எரே 18:21; எரே 21:7-9; எரே 24:10; எரே 27:8-13; எரே 29:17-18; எரே 32:24,36; எசே 6:11-12).

தேவனுடைய ஆறுதலின் வாக்குத்தத்தம்

கர்த்தர் யூதாவையும், எருசலேமையும் ஆறுதல் செய்வதாக வாக்குப்பண்ணுகிறார். (ஏசா 40:1; ஏசா 51:3) ஆனால் யாரைக் கொண்டு அவர்களுக்கு ஆறுதல் செய்வது என்பது இங்கு கேள்வியாகக் கேட்கப் பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் பாபிலோனிய சிறையிருப்பிற்குப் போனார்கள். இஸ்ரவேலின் குமாரரில் ஒருவனும் அவர்களை இரட்சிக்க முடியவில்லை. அவர்கள் தளர்ந்து போனார்கள். மூர்ச்சித்து விழுந்தார்கள். (ஏசா 51:18-20). கர்த்தரால் மட்டுமே அவர்களுக்கு ஆறுதல் பண்ண முடியும். அவர்களை மறுபடியும் கூட்டிச் சேர்க்க முடியும். தம்முடைய ஒரேபேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைக் கர்த்தர் அனுப்பி தம்முடைய பிள்ளைகளை மீட்டுக் கொண்டார். ஆபிரகாம், தாவீது ஆகியோருடைய சந்ததியில் இயேசு கிறிஸ்து வந்திருக்கிறார். அவர் இஸ்ரவேல் தேசத்தை மீட்டு மறுபடியும் ஸ்தாபிப்பார். (ஏசா 7:14; ஏசா 9:6,7; மீகா 5:1,2; மத் 1; யோவான் 1:14; யோவான் 3:16; ரோமர் 1:1-5,16; கலா 1:4; கலா 4:4-8; கொலோ 1:15-18).

(10) ஆறுதல் - விரோதிகள் நியாயந் தீர்க்கப்படுகிறார்கள்

ஏசா 51:21 ஆகையால் சிறுமைப்பட்டவளே,மதுபானங்குடியாமல் வெறிகொண்டவளே, நீ கேள்.

ஏசா 51:22 கர்த்தராகிய உன் ஆண்டவரும் தம்முடைய ஜனத்துக்காக வழக்காடப்போகிற உன் தேவனுமானவர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, தத்தளிப்பின் பாத்திரத்தை உன் கையிலிருந்து நீக்கிப்போடுகிறேன், இனி என் உக்கிரத்தினுடைய பாத்திரத்தின் வண்டல்களை நீ குடிப்பதில்லை.

ஏசா 51:23 உன்னை நோக்கி: நாங்கள் கடந்துபோகும் படிக்குக் குனியென்று சொல்லி, கடந்துபோகிறவர்களுக்கு நீ உன் முதுகைத் தரையும் வீதியுமாக்கும்படி, உன்னைச் சஞ்சலப்படுத்தனவர்களின் கையில் அதைக் கொடுப்பேன் என்றார்.

யூதாவின்மீது தேவனுடைய கோபம்

யூதாவும், எருசலேமும் வெறி கொண்டவர்களாக இங்கு கூறப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய உக்கிரத்தின் பாத்திரத்தில் பானம் பண்ணியிருக்கிறார்கள். (ஏசா 51:17). இந்தக் கோபத்தினால் அவர்களுக்கு அழிவும், பஞ்சமும், பட்டயமும் வந்தது. (ஏசா 51:19). அவர்கள் பலவீனப்பட்டுப் போனார்கள். அவர்களுக்கு உதவி புரிய ஒருவருமில்லை. யூதா தேசம் முழுவதிலும் தேவனுடைய கோபம் வெளிப்படுகிறது. (ஏசா 51:20; புல 4:4-5).

இப்போது கர்த்தர் தம்முடைய ஜனத்திற்காக வழக்காடப்போவதாகக் கூறுகிறார். தத்தளிப்பின் பாத்திரத்தையும், உக்கிரத்தின் பாத்திரத்தையும் இனி அவர்களுக்குக் கொடுப்பதில்லை என்றும் அறிவிக்கிறார். அதுமட்டுமல்லாமல் இந்தத் தத்தளிப்பை இஸ்ரவேல் புத்திரரின் சத்துருக்களுக்குக் கொடுப்பதாகவும் கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார். (ஏசா 51:21-23). இதே கருத்து எரே 25:15-29; எரே 49:12; எரே 51:7-10; புல 4:21; எசே 23:31-33; ஆப 2:16 ஆகிய வசனங்களிலும் காணப்படுகிறது.

ஏசாயா - தொகுப்புரை

51 அதிகாரம்

"நாங்கள் கடந்துபோகும் படிக்குக் குனியென்றுசொல்லி" - கிழக்கு தேசங்களில் யுத்தங்களில் ஜெயித்தவர்கள் தோல்வியுற்றவர்களின் தலைகள்மீதும், கழுத்துக்கள்மீதும் தங்கள் கால்களை வைத்து மிதிப்பார்கள். (யோசு 10:24; சங் 18:40). தங்களுடைய இரதங்களில் ஏறுவதற்கு இவர்களைப் படிகளைப் போல பயன் படுத்துவார்கள். சில சமயங்களில் இவர்களைத் தரைகளில் படுக்க வைத்து அவர்கள்மீது இரதங்களை ஓட்டிச் செல்வதும் வழக்கம்.

52 அதிகாரம்

(11) எழும்பு - சீயோனுக்கு அழைப்பு

ஏசா 52:1 எழும்பு, எழும்பு, சீயோனை, உன் வல்லமையைத் தரித்துக்கொள்; பரிசுத்த நகரமாகிய எருசலேமே, உன் அலங்கார வஸ்திரங்களை உடுத்திக் கொள்; விருத்தசேதனமில்லாதவனும் அசுத்தனும் இனி உன்னிடத்தில் வருவதில்லை.

ஏசா 52:2 தூசியை உதறிவிட்டு எழுந்திரு; எருசலேமே, வீற்றிரு; சிறைப்பட்டுப்போன சீயோன் குமாரத்தியே, உன் கழுத்திலுள்ள கட்டுகளை அவிழ்த்துவிடு.

"பரிசுத்த நகரமாகிய எருசலேமே, உன் அலங்கார வஸ்திரங்களை உடுத்திக்கொள்" - சீயோனும், பரிசுத்த நகரமாகிய எருசலேமும் இந்தத் தீர்க்கதரிசனத்தில் கூறப்பட்டிருக்கிறது. சமாரியாவைப் பற்றியும், அழிந்துபோன பத்துக் கோத்திரத்தாரைப் பற்றியும் இங்கு கூறப்படவில்லை. சீயோன் புத்திரர் தூசியை உதறிவிட்டு எழுந்திருக்க வேண்டும். தங்கள் கழுத்திலுள்ள கட்டுக்களை அவிழ்த்துவிட வேண்டும். அடிமைத்தனத்தின் அடையாளங்களை அகற்றிப்போட்டு கர்த்தருடைய ஆசீர்வாதத்திற்கு அடையாளமாக இருக்கும் அலங்கார வஸ்திரங்களை உடுத்திக் கொள்ள வேண்டும். (ஏசா 52:1-2).

வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் இரண்டு பரிசுத்த நகரங்கள்

1. பூமியிலுள்ள எருசலேம் (ஏசா52:1; தானி 9:24; வெளி 11:2)
2. பரலோகத்திலுள்ள எருசலேம் (எபி 12:22; வெளி 21:2; வெளி 22:19)

"பரிசுத்த நகரம்" - பூமியிலுள்ள எருசலேம் பரிசுத்த நகரம் என்று அழைக்கப்படுகிறது. தெய்வீக ஆராதனை நடைபெறும் நகரமாகக் கர்த்தர் எருசலேமைத் தெரிந்தெடுத்து வேறுபிரித்திருக்கிறார். (சக 14:16-21) மேலும் நித்திய காலமாக எருசலேம் மேசியாவின் பரிசுத்த நகரமாக இருக்கும். (ஏசா 2:2-4; ஏசா 62:7; 1நாளா 23:25; சங் 102:21; எரே 3:17; எசே 43:7; எசே 48:35).

"விருத்தசேதனமில்லாதவனும் அசுத்தனும் இனி உன்னிடத்தில் வருவதில்லை" - இது வருங்காலத்தில் நிறைவேறப்போகும் தீர்க்கதரிசனம். (ஏசா 35:8-10; சக 14:16-21).

"கழுத்திலுள்ள கட்டுகள்" - அடிமைப் பட்டவர்களின் கழுத்துக்களில் சங்கிலிகளைச் சேர்த்து கட்டி வைப்பது வழக்கம். எல்லா அடிமைகளையும் நீளமான சங்கிலிகளினால் கட்டி தங்களுடைய நாடுகளுக்கு யுத்தத்தில் ஜெயித்தவர்கள் தோற்றவர்களை இழுத்துச் செல்வார்கள்.

(12) ஆறுதல் - மீட்பு

ஏசா 52:3 விலையின்றி விற்கப்பட்டீர்கள், பணமின்றி மீட்கப்படுவீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஏசா 52:4 பூர்வத்தில் என் ஜனங்கள் தங்கும்படி எகிப்துக்குப் போனார்கள்; அசீரியனும் முகாந்தரமில்லாமல் அவர்களை ஒடுக்கினான் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

ஏசா 52:5 இப்பொழுது எனக்கு இங்கே என்ன இருக்கிறது, என் ஜனங்கள் விருதாவாய்க் கொண்டு போகப்பட்டார்கள்; அவர்களை ஆளுகிறவர்கள் அவர்களை அலறப்பண்ணுகிறார்கள்; நித்தமும் இடைவிடாமல் என் நாமம் தூஷிக்கப் படுகிறது என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஏசா 52:6 இதினிமித்தம், என் ஜனங்கள் என் நாமத்தை அறிவார்கள்; இதைச் சொல்லுகிறவர்கள் நானே என்று அக்காலத்திலே அறிவார்கள்; இதோ, இங்கே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

52 அதிகாரம்

ஏசா 52:7 சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைப் பிரசித்தப் படுத்தி: உன் தேவன் ராஜரிகம் பண்ணுகிறாரென்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன.

ஏசா 52:8 உன் ஜாமக்காரருடைய சத்தம் கேட்கப்படும்; அவர்கள் சத்தமிட்டு ஏகமாய்க் கெம்பீரிப்பார்கள்; ஏனென்றால், கர்த்தர் சீயோனைத் திரும்பிவரப் பண்ணும்போது, அதைக் கண்ணாரக் காண்பார்கள்.

ஏசா 52:9 எருசலேமின் பாழான ஸ்தலங்களே, முழங்கி ஏகமாய்க் கெம்பீரித்துப் பாடுங்கள், கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு ஆறுதல் செய்து எருசலேமை மீட்டுக் கொண்டார்.

ஏசா 52:10 எல்லா ஜாதிகளின் கண்களுக்கு முன்பாகவும் கர்த்தர் தம்முடைய பரிசுத்த புயத்தை வெளிப்படுத்துவார்; பூமியின் எல்லைகளில் உள்ளவர்களெல்லாரும் நமது தேவனுடைய இரட்சிப்பைக் காண்பார்கள்.

ஏசா 52:11 புறப்படுங்கள், புறப்படுங்கள், அவ்விடம் விட்டுப் போங்கள்; அசுத்தமானதைத் தொடாதிருங்கள்; கர்த்தருடைய பாத்திரங்களைச் சுமக்கிறவர்களே, அதின் நடுவிலிருந்து புறப்பட்டு உங்களைச் சுத்திகரியுங்கள்.

ஏசா 52:12 நீங்கள் தீவிரித்துப் புறப்படுவதில்லை; நீங்கள் ஓடிப் போகிறவர்கள் போல ஓடிப்போவதுமில்லை; கர்த்தர் உங்கள் முன்னே போவார்; இஸ்ரவேலின் தேவன் உங்கள் பிறகே உங்களைக் காக்கிறவராயிருப்பார்.

"விலையின்றி விற்கப்பட்டீர்கள், பணமின்றி மீட்கப்படுவீர்கள்" - இவர்கள் எந்தக் கிரயமும் கொடுக்கப்படாமல் அடிமைகளாக ஆக்கப் பட்டார்கள். அதுபோலவே இவர்களை மீட்பதற்கும் எந்தப் பணமும் கொடுக்கப்பட மாட்டாது. (1பேதுரு 1:18).

"பூர்வத்தில் என் ஜனங்கள் தங்கும்படி எகிப்துக்குப் போனார்கள்" - (ஆதி 46:1-34)

"அசீரியனும் முகாந்தரமில்லாமல் அவர்களை ஒடுக்கினான்" - யோசேப்பை அறியாத வேறொரு ராஜா எகிப்தின்மீது ராஜ்யபாரம் பண்ணினான். (யாத் 1:8) இந்த ராஜா ஒரு அசீரியன். இவன் எகிப்தைக் கைப்பற்றி அதை ஆளுகை செய்தான். (அப் 7:18).

"நித்தமும் இடைவிடாமல் என் நாமம் தூஷிக்கப்படுகிறது" - இந்த வாக்கியம் ரோமர் 2:24 ஆவது வசனத்தில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின் மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன." - இந்த வாக்கியத்தின் ஒரு பகுதி ரோமர் 10:15 ஆவது வசனத்தில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. இது சுவிசேஷ ஊழியர்களைக் குறிக்கும் வாக்கியமாகும். ஆயிரம் வருஷ அரசாட்சியில் இந்த வாக்கியம் பூரணமாக நிறைவேறும். எருசலேமிலிருந்து யூதர்கள் உலகமெங்கும் போய் சுவிசேஷத்தை அறிவிப்பார்கள். இயேசு கிறிஸ்து சீயோனில் ஆளுகை செய்கிறார் என்னும் நற்செய்தியைப் பரப்புவார்கள். (ஏசா 2:2-4; ஏசா 11:9; ஏசா 66:19-21; சக 8:23; சக 14:16-21).

ஆயிரம் வருஷ அரசாட்சியில் சுவிசேஷகனுடைய வேலைகள்

1. சமாதானத்தைக் கூறுதல்
2. நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்தல்.
3. இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்துதல்
4. உன் தேவன் ராஜரிகம் பண்ணுகிறாரென்று சீயோனுக்குச் சொல்லுதல்

52 அதிகாரம்

"சுவிசேஷம்" - சுவிசேஷத்தின் நற்காரியங்கள். (ரோமர் 14:15).

"சமாதானம்" - இந்த வாக்கியம் நிறைவேறும் போது உலகம்முழுவதிலும் சமாதானம் இருக்கும். (ஏசா 2:2-4).

"இரட்சிப்பு" - இயேசு கிறிஸ்துவைத் தங்களுடைய இரட்சகராக ஏற்றுக் கொள்கிற அனைவருக்கும் இரட்சிப்பு உண்டு. (ஏசா 52:7,10; ஏசா 49:6).

கர்த்தர் சீயோனில் ராஜரிகம் பண்ணுகிறார்

ரோமர் 10:15 ஆவது வசனத்தில் இந்த வசனப்பகுதி மேற்கோளாகக் கூறப்படவில்லை. சுவிசேஷ ஊழியர் யாரும் இதை இப்பொழுது அறிவிக்க முடியாது. ஏனெனில் கர்த்தர் இன்னும் சீயோனில் ராஜரிகம் பண்ணவில்லை. இயேசு கிறிஸ்து தம்முடைய இரண்டாம் வருகையின்போது தமது ராஜ்யத்தை ஸ்தாபித்து சீயோனில் ராஜ்யபாரம் பண்ணுவார். (ஏசா 2:2-3; ஏசா 9:6-7; ஏசா 24:23; ஏசா 32:1; சக 14; மத் 25:31-46; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 20:1-10). இந்த ராஜ்யபாரம் நடைபெறும்போது எல்லா மனுஷரும் எருசலேமிற்குப்போய் இயேசு கிறிஸ்துவைப் பார்ப்பதற்கு வாய்ப்பு உண்டாகும். எல்லா தேசங்களும் அங்கு கர்த்தரை ஆராதிப்பதற்காகவும், பண்டிகைகளை ஆசரிப்பதற்காகவும் தங்களுடைய பிரதிநிதிகளை அனுப்புவார்கள். (சக 14:16-21). ஆயிரம் வருஷ அரசாட்சிக்குப் பின்பு (1கொரி 15:24-28), கர்த்தர் பூமியில் மனுஷர் மத்தியில் வாசம் பண்ணுவார். (வெளி 21-22).

"அவர்கள் சத்தமிட்டு ஏகமாய்க் கெம்பீரிப்பார்கள்" - யூதாவின் அலங்கத்தில் ஜாமக்காரர்கள் காவல் காத்துக் கொண்டிருப்பார்கள். எதிரிகளுக்குப் பதிலாக இஸ்ரவேலில் மீதமுள்ளவர்கள் எருசலேமிற்குத் திரும்பி வருவதை ஜாமக்காரர்கள் கண்டு, அவர்கள் சத்தமிட்டு ஏகமாய்க் கெம்பீரிப்பார்கள். உலகமெங்கிலுமுள்ள யூதர்கள் கூட்டிச் சேர்க்கப்பட்டு, மேசியாவின்கீழ் அவர்கள் ஒரு தேசமாக ஸ்தாபிக்கப்படுவார்கள். (ஏசா 11:10-12; ஏசா 66:19-21; எரே 30-31; எசே 37; மத் 24:29-31).

"கண்ணாரக் காண்பார்கள்" - அவர்கள் கர்த்தரையும், உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களையும் பூமியிலுள்ள எல்லா மனுஷரையும் அந்நாளில் கண்ணாரக் காண்பார்கள். (ஏசா 52:8-10). எல்லோரும் பிரத்தியட்சமாக இருப்பார்கள். (ஏசா 2:2-4; சக 13:6; சக 14:9; மத் 24:29-31; மத் 25:31-46; வெளி 11:15; வெளி 20:1-10).

"எல்லா ஜாதிகளின் கண்களுக்கு முன்பாகவும் கர்த்தர் தம்முடைய பரிசுத்த புயத்தை வெளிப்படுத்துவார்" - கர்த்தர் தம்முடைய வல்லமையை எல்லா தேசங்களுக்கும் வெளிப்படுத்துவார் என்று பொருள்படும் வாக்கியம். புயத்தை வெளிப்படுத்துதல் என்பதற்கு யுத்தத்திற்கு ஆயத்தமாதல் என்று பொருள். (ஏசா 52:1; எசே 4:7).

"பூமியின் எல்லைகளில் உள்ளவர்களெல்லாரும் நமது தேவனுடைய இரட்சிப்பைக் காண்பார்கள்" - தேவனுடைய இரட்சிப்பின் மகத்துவத்தை மனுஷரில் ஒரு பகுதியினர் மட்டுமே இதுவரையிலும் கண்டிருக்கிறார்கள். இன்னும் ஏராளமானோர் சுவிசேஷச் செய்தியைக் கேள்விப்படவில்லை. ஆயிரம் வருஷ அரசாட்சியில் இந்தப் பூமியில் முதல் முறையாகத் தேவனைப் பற்றிய சத்தியம் சமுத்திரத்தின் தண்ணீரைப் போல நிறைந்திருக்கும். (ஏசா 11:9).

பூமியிலுள்ள எல்லா ஜனங்களும் தேவனுடைய இரட்சிப்பைக் காண்பார்கள். இஸ்ரவேலின் பூரண இரட்சிப்பையும், புறஜாதியாரில் திரளான ஜனங்கள் இரட்சிக்கப் படுவதையும், எல்லா ஜனங்களும் காண்பார்கள். ஜனங்கள் இரட்சிக்கப் பட்டிருப்பதன் விளைவு பிரத்தியட்சமாகத் தெரியும். எல்லா மிருகங்களும் ஏகமாய்க் கூடி வாழும். (ஏசா 11:6-9; ஏசா 65:20-25) வனாந்தரம் செழிப்பாகும். (ஏசா 35:1-10) பூரண ஆரோக்கியம் உண்டாயிருக்கும். (ஏசா 33:24; ஏசா 35:1-10) பூமியில் இதைப்போல பல மாற்றங்கள் உண்டாவதைப் பார்த்து, இது தேவனுடைய இரட்சிப்பினால் ஏற்பட்டிருக்கும் விளைவு என்பதை ஜனங்கள் புரிந்து கொள்வார்கள். (ஏசா 52:10).

52 அதிகாரம்

கடைசி நாளில் பாபிலோன்

ஏசா 52:11 ஆவது வசனம் ஜனங்கள் பாபிலோனைவிட்டுப் புறப்பட்டுப்போவதைக் குறிப்பிடுகிறது. (ஏசா 43:14; ஏசா 47:1; ஏசா 48:14,20). இந்தச் சம்பவம் எரே 51:5-8; வெளி 18:4 ஆகிய வசனங்களில் முன்னறிவிக்கப் பட்டுள்ளபடி வருங்காலத்தில் நிறைவேறும். அவர்கள் பாபிலோனை விட்டுப் புறப்பட்டுப் போகும்போது அசுத்தமானதைத் தொடக்கூடாது. (ஏசா 52:11-12). எஸ்றா, நெகேமியா ஆகியோரின் காலத்தில் ஆசாரியர்கள் தேவாலயத்தின் பணிமுட்டுக்களை எடுத்துச் சென்றார்கள். (எஸ்றா 1:1-11) இந்த வாக்கியம் எஸ்றாவின் காலத்தில் ஓரளவு நிறைவேறியிருந்தாலும், இது வருங்காலத்தில் பூரணமாக நிறைவேறும். (ஏசா 51:1-52:12)

3. மேசியாவின் பாவ நிவாரண கிரியை - (52:13-53:12)

(1) அவருடைய மூன்று அம்ச அறிமுகம்

ஏசா 52:13 இதோ, என் தாசன் ஞானமாய் நடப்பார், அவர் உயர்த்தப்பட்டு, மேன்மையும் மகா உன்னதமுமாயிருப்பார்.

தீர்க்கதரிசன எண் - 6

"இதோ, என் தாசன் ஞானமாய் நடப்பார்....." (ஏசா 52:13-53:12) ஏசா 52:14, ஏசா 53:1-12 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. ஏசா 52:13,15 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. மனுஷனைப்பார்க்கிலும் அவருடைய முகப்பார்வையும், மனுபுத்திரரைப் பார்க்கிலும் அவருடைய ரூபமும் அந்தக்கேடு அடையும். (ஏசா 52:14).
2. அவர் இவ்வளவு அந்தக்கேடு அடைந்த படியினாலே, அவரைக்கண்ட அநேகர் பிரமிப்படைந்தார்கள்.
3. அவர் இளங்கிளையைப்போலவும், வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப் போலவும் அவனுக்கு முன்பாக எழும்புகிறார் (ஏசா 53:2).
4. அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை; அவரைப் பார்க்கும் போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது.
5. அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரால், புறக்கணிக்கப்பட்டவருமாய் இருந்தார். (ஏசா 53:3).
6. துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்.
7. அவரைவிட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம்.
8. அவர் அசட்டை பண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற்போனோம்.
9. மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார் (ஏசா 53:4).
10. நம்முடைய மீறுதலிகளினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார் (ஏசா 53:5).
11. கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணினார். (ஏசா 53:6).
12. அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை. (ஏசா 53:7).
13. அடிக்கப்படும்படி கொண்டு போகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்.

ஏசாயா - தொகுப்புரை

52 அதிகாரம்

14. இடுக்கணிலும் நியாயத் தீர்ப்பிலுமிருந்து அவர் எடுக்கப்பட்டார். (ஏசா 53:8)

15. ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டுபோனார்.

16. என் ஜனத்தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார்.

17. துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள். (ஏசா 53:9).

18. அவர் மரித்த போது ஐசுவரியவானோடே இருந்தார்.

19. அவர் கொடுமை செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை.

20. கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார் (ஏசா 53:10).

21. அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவாரண பலியாக ஒப்புக்கொடுக்கும்.

22. அப்போது அவர் தமது சந்ததியைக் காண்பார்.

23. அவர் நீடித்தநாளாயிருப்பார்.

24. கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்.

25. அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார் (ஏசா 53:11).

26. என் தாசனாகிய நீதிபரர் தம்மைப்பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார். (ஏசா 53:11; 2கொரி 5:14-21).

27. அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றுவார். (ஏசா 53:12).

28. அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார்.

29. அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்தார்.

30. அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டார்.

31. அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பார். (ஏசா 53:12).

32. பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார்.

துயரம் **(wickedness) - עֹצֶר - o'-tser - 6115**

ஆ.பெ.சொ. - துயரம், மலடு **(oppression)** (சங் 107:39)

வியாதி **(sick) - חָלָה - khaw-law' - 2470**

வினைச்சொல் - பலட்சியமாகு, வியாதியாயிரு, வியாதிகாண், வியாதிப்படு, ஆயாசப்படு, காயங்களை ஆற்று **(make sick; diseased; weak; afflicted; painful).**

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. என் தாசன் ஞானமாய் நடப்பார். (ஏசா 52:13).

2. அவர் உயர்த்தப்பட்டு, மேன்மையும் மகா உன்னதமுமாயிருப்பார்.

3. அவர் அநேகம் ஜாதிகள்மேல் தெளிப்பார் (ஏசா 52:15).

4. அவர்நிமித்தம் ராஜாக்கள் தங்கள் வாயை மூடுவார்கள்.

5. தங்களுக்குத் தெரிவிக்கப் படாதிருந்ததை அவர்கள் காண்பார்கள்; கேள்விப் படாதிருந்ததை அவர்கள் அறிந்து கொள்வார்கள்.

52 அதிகாரம்

கர்த்தருடைய தாசன்

ஏசா 52:13 ஆவது வசனம் "இதோ, என் தாசன் ஞானமாய் நடப்பார்" என்று கூறுகிறது. இவர் கர்த்தருடைய தாசன். இவர் சாத்தானுடைய தாசனோ, மனுஷருடைய தாசனோ அல்லது பாவத்தின் தாசனோ அல்ல. இந்தத் தாசன் இஸ்ரவேலோ, சபையோ அல்லது ஏசாயாவோ அல்ல. மேசியாவே இங்கு முன்னறிவிக்கப் பட்டிருக்கிறார். (ஏசா 7:14; ஏசா 9:6-7; ஏசா 42:1; ஏசா 52:3; ஏசா 53:11; ஏசா 65:8) மேசியா உயர்த்தப்படுவது இங்கு அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது. இது மேசியாவிற்கு நித்திய காலமாகக் கிடைக்கப் படும் மகிமையாகும். (ஏசா 52:13,15) மேசியா உயர்த்தப்பட்டிருந்தாலும் அவர் தாழ்த்தப் பட்டிருக்கிறார். (ஏசா 52:14; ஏசா 53:1-12).

இந்த அதிகாரத்தின் முதல் வசனம் ஏசா 52:13 ஆக இருந்திருந்தால் மிகவும் சிறப்பாக அமைந்திருக்கும். மேசியா தாழ்த்தப்படுவதையும், பின்பு அவர் உயர்த்தப்படுவதையும் இந்த வசனங்கள் தெளிவாக விளக்கும். பழைய ஏற்பாட்டில் இந்த வேதவசனப்பகுதி மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இதை வேதாகமத்தின் இருதயப்பகுதி போன்றது என்றும் வேதபண்டிதர்கள் கூறுகிறார்கள். இயேசு கிறிஸ்துவின் பாடுகளுக்கும், மரணத்திற்கும் இந்த வசனங்களில் காரணம் கூறப் பட்டிருக்கிறது.

ஞானம் (prudently) - שָׂכַל - saw-kal' - 7919

வினைச்சொல் - வெற்றி பெறுதல், ஞானம், புரிந்துகொள்ளுதல் **(to be circumspect and intelligent; considerate; expert; prosperous; to deal prudently; be skillful; have good success; have wisdom) behaved wisely** (1சாமு 18:5; சங் 101:2); **prosper** (உபா 29:9; யோசு 1:7; 1இராஜா 2:3); **have good success** (யோசு 1:8); **deal prudently** (ஏசா 52:13); **understand** (தானி 9:25).

உயர்த்தப்படுதல் (exalted) - רוּם - room - 7311

வினைச்சொல் - மேட்டிமையடை, உயர்ந்திரு, உயரமாயிரு, ஓங்கியிரு, கர்வங்கொள், அடை, எழும்பு, எழுந்தருளு, மித, பிடி, உன்னதம், உயரு, உயர்த்தப்படு, உயர்த்து, பலத்த, அறுப்புண்டுபோ, நெடியவர், உரத்த, போற்று, கொந்தளி, மேன்மைப்படுத்து, தூக்கிவிடு, புகழப்பட, எடு, படை, வாங்க, கையெடு, கொடு, நீக்கு, ஏற்று, தொனிக்கப் பண்ணு, நிறுத்து, அசை, மிரட்டு, விளங்கப் பண்ணு, பலத்திரு, மேட்டிமை கொள், கொந்தளிக்கப்பண்ணு **(to rise to a high place; to be lifted up to a high position)** (மத் 23:12; லூக்கா 14:11; லூக்கா 18:14; பிலி 2:5-11; எபி 5:8-9).

மேன்மையடைதல் (extolled) - נָשָׂא - mith-nas-say' - 5375

வினைச்சொல் - பெரிய, உயர்ந்த, உச்சரி, சுட்டெரி, வாங்கு, அடித்துக்கொண்டுபோ, விவாகம்பண்ணு, விவாகஞ்செய், துக்கங்கொண்டாடு, நீக்கு, ஒப்பாரிசொல்லு, ஏந்திக்கொண்டுபோ, மன்றாடு, உரத்தசத்தமிடு, விழி, காய், தூக்கு, எடுபட்டுப்போ, பசிதாகமாயிரு, பார், எழும்பு, எடு, ஓங்கு, செலுத்து, பங்கிடு, விளைவி, ஆணையிட்டுக்கொடு, அகற்றிவிடு, எடுத்துக்கொள், பிடித்துக் கொள், சும, தாங்கு, இரட்சி, அநுக்கிரகம் பண்ணு, ஆணையிடு, கொண்டுவா, தரித்துக்கொள், எழுப்பு, எழும்புதலடை, எழு, மன்னித்துவா, சுமத்து, கர்வங் கொள்ளப் பண்ணு, கொண்டுபோகப் பண்ணு, கொள், உயர்த்து, வாங்கு, தொகையேற்று, விவாகம்பண்ணு, எடுத்துக்கொண்டுபோ, கிடை, எண், தண்டிக்கப்படு, ஒப்புக்கொடு, சகி, மதி, உயரத்தூக்கு, ஏறெடு, வழங்கு, சொல், சத்தமிடு, கொண்டுபோ, உயரஎடுத்துக் கொள், விடு, அழை, புலம்பு, ஏற்று, முகதாட்சிணியம் பண்ணு, ஏற்றப்படு, எடுத்தவா, பொறுத்திரு, செல்லு, பெறு, பிடுங்கு, மன்னி, பிரகாசிக்கப்பண்ணு, உயரு, மன்னித்தருள், பாடு, வெளிச்சங் காட்டு, கிளம்பப்பண்ணு, தயவாயிரு, போடு, வழங்கு, ஏற்றுக்கொள், எண்ணப்படு, முகதாட்சிணியம் செய்,

52 அதிகாரம்

பிரசன்னமாக்கு, தூக்கிக் கொண்டுவா, கூக்குரலிடு, முகம்பார், வரப்பண்ணு, ஆவலாயிரு, பிடித்திரு, பிடி, தாரி, கட்டு, உள்ளாகு, எண்ணிக்கை உள்ளவனாயிரு, கனவான், மன்னிக்கப்படு, கனம் பொருந்து, தூக்கிவரப்படு, மேன்மை பாராட்டு, உயர்த்தப்படு, சுமக்கப்படு, உயர்ந்தவன், ஓங்கல், உயரம், உதவிசெய், உன்னதம், கொடுக்கப்படு, உதவியாயிரு, துணைநில், சுமரப்பண்ணு, மேட்டிமையாகு, நிமிர்ந்துநில், மேன்மையடை, உயர்ந்திரு **(to lift; be honored; magnify; be respected) extolled** (ஏசா 52:13); **lofty** (ஏசா 57:15); **lifted up** (1நாளா 14:2; எரே 51:9; சக 5:7).

"மகா உன்னதம்" - எல்லா வல்லமைகளுக்கும் மேலாகக் கிறிஸ்து உயர்த்தப்பட்டிருக்கிறார். (எபே 1:20-23; பிலி 2:9-11; கொலோ 1:15-18; எபி 1:3; 1பேதுரு 3:22).

(2) அவருடைய இரண்டு அம்ச பாடு

ஏசா 52:14 மனுஷனைப்பார்க்கிலும் அவருடைய முகப்பார்வையும், மனுபுத்திரரைப்பார்க்கிலும் அவருடைய ரூபமும், இவ்வளவு அந்தக்கேடு அடைந்தபடியினாலே, அவரைக்கண்ட அநேகர் பிரமிப்படைந்தார்கள்.

பிரமிப்படைதல் (astonied) - שָׁמֵם - **shaw-mame' - 8074**

வினைச்சொல் - பிரமிப்பு **(to stun; grow numb; stupify; be shocked; amaze; be astonished; wonder) "astonied"** (ஏசா 52:14; எஸ்றா 9:3-4; யோபு 17:8; யோபு 18:20; எசே 4:17); **"astonishment"** (2நாளா 7:21); **"wondered"** (ஏசா 59:16; ஏசா 63:5); **"amazed"** (எசே 32:10); **"astonished"** (லேவி 26:32; 1இராஜா 9:8; யோபு 1:5; எரே 2:12; எரே 4:9; எரே 18:16; எரே 19:8; எரே 49:17; எரே 50:13; எசே 3:15; எசே 26:16; எசே 27:35; எசே 28:19; தானி 8:27).

முகப்பார்வை (visage) - מַרְאֶה - **mar-eh' - 4758**

ஆண்பால் பெயர்ச்சொல் - பார்வை, சௌந்தரியம், அழகு, புஷ்டி, மாதிரி, தரிசனம், முகம், லட்சணம், காட்சி பார்த்தல், தோற்றம், காணுதல், சாயல், ரூபம், ரூபவதி, காண்பித்தல். **(view; appearance; shape; visage)**

அந்தக்கேடு அடைதல் (marred) - מִשְׁחַת - **mish-khawth', mosh-khawth' - 4893**

ஆண்பால் பெயர்ச்சொல் - முகப்பார்வை, மங்குதல், கேடு **(to disfigure) "marred"** (ஏசா 52:14), **"corruption"** (லேவி 22:25).

(3) அவருடைய இரண்டு அம்ச உயர்வு

ஏசா 52:15 அப்படியே, அவர் அநேகம் ஜாதிகள்மேல் தெளிப்பார்; அவர்நிமித்தம் ராஜாக்கள் தங்கள் வாயை மூடுவார்கள்; ஏனெனில், தங்களுக்குத் தெரிவிக்கப்படாதிருந்ததை அவர்கள் காண்பார்கள்; கேள்விப்படாதிருந்ததை அவர்கள் அறிந்துகொள்வார்கள்.

ஏசாயா - தொகுப்புரை

52 அதிகாரம்

"அவர் அநேகம் ஜாதிகள்மேல் தெளிப்பார்" - விருந்துக்கு வரும்போது விருந்தினர்மீது வாசனைத் திரவியங்களைத் தெளிப்பது வழக்கம். இது தெளிப்பு ஞானஸ்நானத்தைக் குறிக்க வில்லை. இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தைத் தெளிப்பதை இது குறிக்கிறது. (யாத் 29:21; லேவி 4:6,17; லேவி 5:9; லேவி 14:7,16,27,51; லேவி 16:14-15,19) சுத்திகரிப்பின் ஜலத்தைப் பற்றி எண் 8:7 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது.

"தங்களுக்குத் தெரிவிக்கப்படாதிருந்ததை அவர்கள் காண்பார்கள்; கேள்விப்படாதிருந்ததை அவர்கள் அறிந்துகொள்வார்கள்" - இந்த வாக்கியம் ரோமர் 15:21 ஆவது வசனத்தில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

53 அதிகாரம்

(4) அவருடைய வரவேற்பு - (54:1-56:8)

ஏசா 53:1 எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது?

"எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்?" - இந்த வாக்கியம் யோவான் 12:38; ரோமர் 10:16 ஆகிய வசனங்களில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

கேள்விப்பட்டது (report) - שְׁמוּעָה - shem-oo-aw' - 8052

பெ.பெ.சொ. - செய்தி, பிரஸ்தாபம், உபதேசம், கேள்விப்பட்டது, உச்சரித்தல் (something heard; an announcement; doctrine; fame; news; report; rumor; tidings)

எல்லோரும் விசுவாசிக்க வேண்டும் - காரணம்

1. இது கர்த்தருடைய செய்தி. இந்த உலகத்தின் ஆரம்பம் முதல் கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாகத் தமது செய்திகளை வெளிப்படுத்தி வருகிறார். (அப் 3:21; எபி 1:1-3; 1பேதுரு 1:10-12). வரப்போகிற மேசியாவைப் பற்றியும், ஸ்திரீயின் வித்து சாத்தானின் தலையை நசுக்குவது பற்றியும், மனுஷனுடைய ஆளுகையை மறுபடியும் திரும்ப ஸ்தாபிப்பது பற்றியும் ஏராளமான தீர்க்கதரிசனங்கள் கூறப்பட்டுள்ளன. கர்த்தர் தாமே இவற்றின் முதலாவது தீர்க்கதரிசனத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். (ஆதி 3:15-16). ஆபிரகாம், ஈசாக்கு ஆகியோரின் சந்ததியில் மேசியா வந்திருக்கிறார். (ஆதி 12:1-3; ஆதி 15:4-6; ஆதி 17:4-8,19-21; ஆதி 21:12; ஆதி 26:4). யூதாவிலிருந்து மேசியா வரப்போவதாக யாக்கோபு முன்னறிவித்திருக்கிறார். (ஆதி 49:10). தம்மைப்போலவே மேசியாவும், ஒரு தீர்க்கதரிசியாக இருப்பார் என்று மோசே முன்னறிவித்திருக்கிறார். (உபா 18:15-19). தம்முடைய சந்ததியில் மேசியா வருவார் என்று தாவீதும் குறிப்பிட்டிருக்கிறார். (2சாமு 7). தாவீதின் வம்சத்தில் யூதாவின் கோத்திரத்தில் ஒரு கன்னிகையினிடத்தில் மேசியா பிறப்பார் என்று ஏசாயா முன்னறிவித்திருக்கிறார். (ஏசா 7:14; ஏசா 9:6-7) மேசியாவின் பாடுகளைப் பற்றியும், ஏசாயா கூறியிருக்கிறார். (ஏசா 52:13-53:12) இயேசு கிறிஸ்துவின் வருகையைப் பற்றி பல தீர்க்கதரிசனங்களில் கூறப்பட்டுள்ளது. ஆகையினால் மேசியா வரும்போது அவரைப் பற்றி தங்களுக்கு தெரியாது என்று இஸ்ரவேல் புத்திரர் சாக்குப்போக்குச் சொல்லுவதற்கு வாய்ப்பில்லை.

2. மேசியாவைப் பற்றிய செய்தியை அற்புதங்கள் உறுதிபண்ணுகின்றன. மேசியாவின் வருகையைப் பற்றிய செய்தி முன்னறிவிக்கப்பட்டது. இயேசு கிறிஸ்துவில் அது நிறைவேறிற்று. இயேசு கிறிஸ்துவே தேவனால் அனுப்பப்பட்ட மேசியா என்பதைப் பல அற்புதங்கள் உறுதி பண்ணியிருக்கின்றன. (ஏசா 11:1-2; ஏசா 42:1-6; ஏசா 61:1-2; மத் 11:1-6; லூக்கா 4:16-18; அப் 2:22; அப் 10:38). கர்த்தருடைய புயம் என்பது அவருடைய வல்லமையைக் குறிக்கும் வாக்கியம். மேசியாவைப் பற்றிய செய்தியோடு அவருடைய புயமும் வெளிப்படும். (யோவான்5:20,36;யோவான்10:25-38; யோவான்12:38-40,யோவான் 14:10-12; யோவான் 15:24).

(5) மேசியாவின் முப்பத்தியாறு அம்சபாடுகள்

ஏசா 53:2 இளங்கிளையைப்போலவும், வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப்போலவும் அவனுக்கு முன்பாக எழும்புகிறார்; அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை; அவரைப் பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது.

53 அதிகாரம்

ஏசா 53:3 அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்; அவரை விட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக் கொண்டோம்; அவர் அசட்டை பண்ணப் பட்டிருந்தார்; அவரை எண்ணாமற் போனோம்.

ஏசா 53:4 மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்.

ஏசா 53:5 நம்முடைய மீறுதலிகளினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.

ஏசா 53:6 நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழப்பண்ணினார்.

ஏசா 53:7 அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டு போகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்.

ஏசா 53:8 இடுக்கணிலும் நியாயத் தீர்ப்பிலுமிருந்து அவர் எடுக்கப்பட்டார்; அவருடைய வம்சத்தை யாரால் சொல்லி முடியும்; ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டுபோனார்; என் ஜனத்தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார்.

ஏசா 53:9 துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார்; அவர் கொடுமை செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை.

ஏசா 53:10 கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி; அவரைப் பாடுகளுக்குட் படுத்தினார்; அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவாரண பலியாக ஒப்புக் கொடுக்கும்போது, அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்த நாளாயிருப்பார், கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்.

ஏசா 53:11 அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்; என் தாசனாகிய நீதிபரர் தம்மைப்பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்து கொள்வார்.

ஏசா 53:12 அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்; பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார்.

“இளங்கிளையைப் போலவும், வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப்போலவும் அவனுக்கு முன்பாக எழும்புகிறார்” - மேசியா கர்த்தருக்கு முன்பாக ஒரு துளிர்க்கிற வேரைப்போல எழும்பி வருகிறார். இயேசு கிறிஸ்துவின் குழந்தைப் பருவத்தைத் தீர்க்கதரிசி ஏற்கெனவே முன்னறிவித்திருக்கிறார். (ஏசா 7:14; ஏசா 9:6-7; ஏசா 11:1-2). இந்தத் தீர்க்கதரிசனம் மத் 1:18-25; லூக்கா 2:1-52 ஆகிய வசனங்களில் நிறைவேறிற்று.

53 அதிகாரம்

மேசியாவின் பாடுகள்

1. மனுஷனைப்பார்க்கிலும் அவருடைய முகப்பார்வை அந்தக்கேடு அடைந்தது. (ஏசா 52:14).

2. மனுபுத்திரரைப்பார்க்கிலும் அவருடைய ரூபம் அந்தக்கேடு அடைந்தது.

3. ஜனங்களின் அவிசுவாசத்தின் நிமித்தமாக அவர் பாடுபட்டார். (ஏசா 53:1).

4. மனுஷருடைய வரையறைகள் அவருக்கு நியமிக்கப்பட்டது. (ஏசா 53:2).

5. அவருக்கு அழகுமில்லை.

6. அவருக்கு சௌந்தரியமுமில்லை.

7. அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது.

8. அவர் அசட்டை பண்ணப்பட்டார். (ஏசா 53:3)

9. மனுஷரால் புறக்கணிக்கப்பட்டார்.

10. துக்கம் நிறைந்தவரானார்.

11. பாடு அநுபவித்தவருமானார்.

12. அவரைவிட்டு, மனுஷர் தங்களுடைய முகங்களை மறைத்துக்கொண்டார்கள்.

13. அவர் அசட்டை பண்ணப்பட்டிருந்தார். மனுஷர் அவரை எண்ணாமற்போனார்கள்.

14. அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டார். (ஏசா 53:4).

15. அவர் நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்.

16. அவரைச் சிறுமைப்பட்டவர் என்று ஜனங்கள் எண்ணினார்கள்.

17. அவர் தேவனால் அடிக்கப்பட்டார்.

18. தேவனால் வாதிக்கப்பட்டார்.

19. நம்முடைய மீறுதலிகளினிமித்தம் அவர் காயப்பட்டார். (ஏசா 53:5).

20. நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்.

21. நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது.

22. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.

23. அவருடைய சிருஷ்டிகள் எல்லோரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்த படியினால் மேசியா பாடுகளை அனுபவித்தார். (ஏசா 53:6).

24. அவனவன் தன்தன் வழியிலே போனபடியினால் மேசியா பாடுகளை அனுபவித்தார்.

25. நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் தேவன் அவர்மேல் விழப்பண்ணினார். (ஏசா 53:6,10-12).

26. அவர் ஜனங்களால் நெருக்கப்பட்டார். (ஏசா 53:7).

27. அவர் ஜனங்களால் ஒடுக்கப்பட்டார்.

28. இடுக்கணிலிருந்து அவர் எடுக்கப் பட்டார். (ஏசா 53:8).

29. நியாயத்தீர்ப்பிலிருந்து அவர் எடுக்கப்பட்டார்.

30. துன்மார்க்கரோடு ஜீவித்தார்.

31. ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டுபோனார்.

32. ஜனத்தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார்.

33. கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமானார். (ஏசா 53:10).

34. ஜனங்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொண்டார். (ஏசா 53:11)

35. அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றினார். (ஏசா 53:12)

53 அதிகாரம்

36. அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப் பட்டார். (ஏசா 53:12).

அழகு (comeliness) - הָדָר - haw-dawr' - 1926

ஆண்பால் பெயர்ச்சொல் - மகிழ்ச்சி, கனம், மகிமை, மகத்துவம், அழகு, அலங்கரித்தல், அலங்காரம். **(magnificence; splendor; glory; honor; excellency; majesty)** இயேசு கிறிஸ்து பாடுகளை அனுபவித்த போது அவரிடத்தில் அழகில்லை. இப்போது பிதாவைப்போலவும், பரிசுத்த ஆவியானவரைப் போலவும் இயேசு கிறிஸ்து அழகுள்ளவராக இருக்கிறார். (எபே 1:20-23; பிலி 2:9- 11; கொலோ 1:15-18; 1பேதுரு 3:22).

"அவருக்கு அழகுமில்லை" - இயேசு கிறிஸ்து பாடுகளை அனுபவித்தபோது அவரிடத்தில் மனுஷர் அழகைக் காணவில்லை. இப்போது கிறிஸ்து மகிமையில் உயர்த்தப்பட்டிருக்கிறார். ஜனங்கள் இப்போது இயேசுவைப் பார்த்தால் அவர் அழகுள்ளவராக இருப்பார். (பிலி 2:9-11).

"அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும்" - யோவான் 1:10-11; யோவான் 8:48; யோவான் 10:20 ஆகிய வசனங்களில் நிறைவேறிற்று.

"துக்கம் நிறைந்தவர்" - இயேசு கிறிஸ்து மனுஷருடைய துக்கங்களைச் சுமந்திருப்பதினால் அவர் துக்கம் நிறைந்தவராக இருந்தார். (ஏசா 53:3-4). இயேசு கிறிஸ்துவினிடத்தில் பாவமோ, வியாதியோ, வேதனையோ, துக்கமோ இல்லை. இவையெல்லாம் மனுஷரிடத்தில் காணப்படுபவை. இவற்றையெல்லாம் சுமந்து தீர்ப்பதற்காகவே இயேசு கிறிஸ்து இந்தப் பூமியில் மனுஷனாகப் பிறந்தார். நம்முடைய பாடுகளில் இயேசு கிறிஸ்து தம்மை ஈடுபடுத்திக் கொண்டு நம்முடைய துக்கங்களையெல்லாம் சுமந்து தீர்த்தார். நம்முடைய பாவங்களிலிருந்து நாம் இரட்சிக்கப்பட வேண்டுமென்பதற்காக இயேசு கிறிஸ்து பாவியானார். அவருடைய வாழ்வில் நமது துக்கத்தின் நிமித்தமாக அவர் துக்கம் நிறைந்தவராக இருந்தார்.

துக்கம் (sorrow) - מַכְאֹב - mak-obe', mak-o-baw' - 4341

ஆ.பெ.சொ. - நோவு, வேதனை, வியாகுலம், துக்கம், நோகுதல், அனுப்பு **grief. "sorrows"** (ஏசா 53:3-4; யாத் 3:7; சங் 32:10); **"sorrow"** (பிர 1:18; எரே 30:15; எரே 45:3; புல 1:12,18); **"grief"** (2நாளா 6:29; சங் 69:26); **"pain"** (யோபு 33:19).

"பாடு அநுபவித்தவருமாயிருந்தார்" - பாடு என்பதற்கான எபிரெய வார்த்தை "கோலி" **(choliy)** என்பதாகும். இதற்கு வியாதி என்றும் பொருள்கூறலாம். இயேசு கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு வியாதியும் இல்லை. ஆயினும் அவர் கல்வாரி சிலுவையில் தொங்கியபோது அவர் மனுஷருடைய வியாதிகளையெல்லாம் சுமந்து தீர்த்தார். அவர் கல்வாரியில் மனுஷருக்குப் பதிலாகப் பலியானார்.

துக்கம் (grief) - חֳלִי - khol-ee' - 2483

ஆ.பெ.சொ. - நோய், வியாதி, துக்கம், வியாதிப்படுதல் **(malady) "grief"** (ஏசா 53:3-4); **"disease"** (2சாமு 1:2; 2சாமு 8:8-9; 2நாளா 16:12; 2நாளா 21:18; பிர 6:2); **"sick"** (ஏசா 1:5); **"sickness"** (ஏசா 38:9,12; உபா 7:15; உபா 28:59,61; 1இராஜா 17:17; 2இராஜா 13:14; 2நாளா 21:15,19; சங் 41:3; பிர 5:17, ஏசா 53:3-4).

இயேசு கிறிஸ்து நம்முடைய பாவத்தையும், வியாதியையும் சுமந்தார்

1. ஏசா 53:4-5 ஆகிய வசனங்களில் "மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்" என்று எழுதப்பட்டிருக்கிறது.

53 அதிகாரம்

2. மத் 8:16-17 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் மேற்கோளும், தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமும் பாடுகளும், துக்கங்களும், சரீரப் பிரகாரமானவை என்பதும் இவை ஆவிக்குரியவை அல்ல என்பதும் தெளிவாகிறது.

3. ஏசா 53:3-5,10 ஆகிய வசனங்கள் பல்வேறு பதிப்புக்களில் பாவத்தையும், வியாதியையுமே குறிப்பிடுகிறது.

4. எபிரெய பாஷையில் ஏசா 53:10 ஆவது வசனத்திற்கு "கர்த்தர் அவரை வியாதிகளுக் குட்படுத்தினார். அவரை வேதனையினால் நொறுக்கினார்" என்று பொருள் கூறவேண்டும். **"He (Jehovah) hath made Him sick, depressed Him with pain"** இயேசு கிறிஸ்து ஒரு பாவமும் செய்யவில்லை. அவருடைய வாயில் வஞ்சனை எதுவும் காணப்பட வில்லை. (1பேதுரு 2:21-22). ஆனாலும் "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும் படிக்குப் பாவமறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (2கொரி 5:21) இதுபோலவே இயேசு கிறிஸ்துவிடம் வியாதி எதுவுமில்லை. ஆனாலும் மனுஷருடைய வியாதிக்குப் பலியாக அவர் வியாதியானார்.

5. இயேசு கிறிஸ்துவின் மீட்பின் கிரியையினால் மாத்திரமே மனுஷருடைய பாவத்தையும், வியாதியையும், சாபத்தின் மற்ற விளைவுகளையும் நீக்குவதற்குத் தேவன் வாய்ப்பை உண்டு பண்ணியிருக்கிறார். வருங்காலத்தில் பூமி புதுப்பிக்கப்படுவதும், மனுஷருடைய ஆவியும், ஆத்துமாவும், சரீரமும் புதுப்பிக்கப்படுவதும் இயேசு கிறிஸ்துவின் மீட்பின் கிரியையினாலேயே நடைபெறும். (ரோமர் 8:18-25).

6. மனுஷனுடைய சரீரத்தைக் குணப் படுத்துவதாகவும், ஆத்துமாவை இரட்சிப்பதாகவும் தேவன் உடன் படிக்கைகளைப் பண்ணியிருக்கிறார். (யாத் 15:26; யாத் 23:25; லேவி 26; உபா 28; மத் 26:28). இதற்காக அவர் வாக்குத் தத்தங்களையும், தீர்க்க தரிசனங்களையும் கூறியிருக்கிறார். இந்தத் தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றுவதற்காகத் தேவன் இயேசு கிறிஸ்துவை அனுப்பினார். அவர் மனுஷனுடைய சரீரத்தைக் குணப்படுத்தி ஆத்துமாவை இரட்சிப்பார். (மத் 8:16-17; மத் 9:5-6; யோவான் 10:10; அப் 10:38). கிறிஸ்து இந்த ஊழியத்தைச் செய்வதற்காகத் தம்முடைய ஆதி அப்போஸ்தலர்களை அனுப்பினார். (மத் 10; மத் 28:20; மாற்கு 16:5-20; லூக்கா 10; லூக்கா 24:49; அப் 1:1-2,8; 1கொரி 12:1-11; எபி 2:3-4).

7. மனுஷனுடைய உள்ளத்தில் மனமாற்றம் ஏற்படும்போது அவனுடைய சரீரத்தின் வியாதியும் குணமாகிறது. (ஏசா6:9-13; யோபு 33:14-29; சங் 103:3; மத் 9:5-6; மத் 13:14-17; அப் 28:24-28; யாக் 5:14-16).

8. இயேசு கிறிஸ்து நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு நம்முடைய துக்கங்களைச் சுமந்தார் என்றும், அவருடைய தழும்புகளால் நாம் குணமாகிறோம் என்றும் ஏசாயா முன்னறிவித்திருப்பதைப் பேதுருவும் உறுதிபண்ணுகிறார். (1பேதுரு 2:24).

9. வேதவசனங்கள் பலவற்றில் பாவ நிவாரணமும், சரீர சுகமாதலும் சேர்ந்தே கூறப்பட்டிருக்கிறது. (லேவி 12:7-8; லேவி 14:1-57; லேவி 15:1-33).

53 அதிகாரம்

10. பாவங்கள் அறிக்கை பண்ணப்பட்டபோது, அவர்களுடைய சரீரத்தில் சுகமாதலும் உண்டானதாகப் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் கூறப்பட்டிருக்கிறது. (யாத் 32; எண் 11:1-3; எண் 12:1-16; எண் 16:46-50; எண் 21:1-9= யோவான் 3:14; 2சாமு 24; மத் 8:1-4,16-17). கொரிந்து பட்டணத்தில் இருந்த ஜனங்கள் இயேசு கிறிஸ்துவின் பிட்கப்பட்ட சரீரத்தினாலும், சிந்தப்பட்ட இரத்தத்தினாலும் வரும் சரீர சுகமாதலைச் சரியாகப் புரிந்து கொள்ளாததினால் அவர்களில் அநேகர் வியாதியில் மரித்தார்கள். (1கொரி 11:27-34). பாவநிவாரணமும், சரீரசுகமாதலும் சேர்ந்து வருவதைக் கிறிஸ்துவும் அங்கிகரித்திருக்கிறார். (மத் 8:1-4).

"அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு" - ஒருவருடைய சுமையை அவருக்குப் பதிலாக மற்றொருவர் சுமப்பது என்பது இதன் பொருளாகும். ஒரு குழந்தையைச் சுமப்பது, ஜலப்பிரவாகத்தில் நோவாவின் பேழை மிதந்தது என்பதற்கெல்லாம் "ஏற்றுக்கொள்ளுதல்" என்று பொருள்படும் எபிரெய வார்த்தையான "நாசா" **(nasa)** என்னும் வார்த்தையே பயன்படுத்தப் பட்டுள்ளது. (ஏசா 53:4; சங் 103:12; மத் 8:16-17; 1யோவான் 3:5). கிறிஸ்து நம்முடைய பாடுகளையெல்லாம் ஏற்றுக் கொண்டார். இயேசு கிறிஸ்து இந்தப் பூமியில் ஊழியம் செய்த மூன்றரை வருஷங்களில் மட்டும் அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு, இப்போது அவர் அவற்றை ஏற்றுக்கொள்ள வில்லை என்று இதற்குப் பொருள்கூறக்கூடாது. எல்லாக் காலத்திலும், எல்லா மனுஷருக்கும் பொருந்தும் விதமாக இந்தச் சத்தியம் கூறப்பட்டிருக்கிறது.

ஏற்றுக்கொள்ளுதல் (borne) - נָשָׂא - mith-nas-say' - 5375

வினைச்சொல் - பெரிய, உயர்ந்த, உச்சரி, சுட்டெரி, வாங்கு, அடித்துக்கொண்டுபோ, விவாகம்பண்ணு, விவாகஞ்செய், துக்கங்கொண்டாடு, நீக்கு, ஒப்பாரி சொல்லு, ஏந்திக்கொண்டுபோ, மன்றாடு, உரத்தசத்தமிடு, விழி, காய், தூக்கு, எடுபட்டுப்போ, பசிதாகமாயிரு, பார், எழும்பு, எடு, ஓங்கு, செலுத்து, பங்கிடு, விளைவி, ஆணையிட்டுக்கொடு, அகற்றி விடு, எடுத்துக்கொள், பிடித்துக் கொள், சும, தாங்கு, இரட்சி, அநுக்கிரகம் பண்ணு, ஆணையிடு, கொண்டுவா, தரித்துக்கொள், எழுப்பு, எழுப்புதலடை, எழு, மன்னித்துவா, சுமத்து, கர்வங் கொள்ளப் பண்ணு, கொண்டுபோகப் பண்ணு, கொள், உயர்த்து, வாங்கு, தொகையேற்று, விவாகம்பண்ணு, எடுத்துக்கொண்டுபோ, கிடை, எண், தண்டிக்கப்படு, ஒப்புக்கொடு, சகி, மதி, உயரத்தூக்கு, ஏறெடு, வழங்கு, சொல், சத்தமிடு, கொண்டுபோ, உயரஎடுத்துக் கொள், விடு, அழை, புலம்பு, ஏற்று, முகதாட்சிணியம் பண்ணு, ஏற்றப்படு, எடுத்தவா, பொறுத்திரு, செல்லு, பெறு, பிடுங்கு, மன்னி, பிரகாசிக்கப்பண்ணு, உயரு, மன்னித்தருள், பாடு, வெளிச்சங் காட்டு, கிளம்பப்பண்ணு, தயவாயிரு, போடு, வழங்கு, ஏற்றுக்கொள், எண்ணப்படு, முகதாட்சிணியம் செய், பிரசன்னமாக்கு, தூக்கிக் கொண்டுவா, கூக்குரலிடு, முகம்பார், வரப்பண்ணு, ஆவலாயிரு, பிடித்திரு, பிடி, தாரி, கட்டு, உள்ளாகு, எண்ணிக்கையுள்ளவனாயிரு, கனவான், மன்னிக்கப்படு, கனம் பொருந்து, தூக்கிவரப்படு, மேன்மை பாராட்டு, உயர்த்தப்படு, சுமக்கப்படு, உயர்ந்தவன், ஓங்கல், உயரம், உதவிசெய், உன்னதம், கொடுக்கப்படு, உதவியாயிரு, துணைநில்,சுமரப்பண்ணு, மேட்டிமையாகு, நிமிர்ந்துநில், மேன்மையடை, உயர்ந்திரு **(to lift; bear; carry away; cast away; ease; erase; take away)**

"நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்" - சுமப்பது என்பதற்கான எபிரெய வார்த்தை "காபால்" **cabal** என்பதாகும். ஒருவர் சுமக்கும் முழுச்சுமையையும் அவரிடமிருந்து வாங்கி அவருக்குப் பதிலாக வேறொருவர் சுமப்பது என்பது இதன் பொருள். கிறிஸ்து மனுஷருடைய வியாதிகளையும், வேதனைகளையும் சுமந்தார்.

53 அதிகாரம்

ஆகையினால் மனுஷர் இனிமேல் அவற்றைத் தூக்கிச் சுமக்க வேண்டிய அவசியமில்லை. (ஏசா 53:3-4,6,8,11). விசுவாசிகள் கர்த்தர்மீது வைக்கும் விசுவாசத்தினால் தங்களுடைய நோய்களையும், வியாதிகளையும் சுமக்காமல் இயேசு கிறிஸ்துவிடம் ஒப்புக்கொடுத்து விடலாம். இந்த ஆசீர்வாதம் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களுக்கு மட்டுமே பொருந்தும். (மாற்கு 1:15; மாற்கு 16:15-20; யோவான் 7:37-39; யோவான் 14:12-15; எபி 11:6; யாக் 1:5-8). ஆகையினால்தான், இயேசு கிறிஸ்து வியாதியஸ்தரிடம் "உன்னுடைய விசுவாசத்தின் படியே ஆகக்கடவது" என்று கூறுகிறார். (மத் 8:13; மத் 9:29).

சுமந்தார் (carried) - סָבַל - saw-bal' - 5445

வினைச்சொல் - சுமந்திரு, தாங்கு, சுமந்துகொள், பலத்தவைகளாயிரு, பாரமாகு **(to carry; bear) carried** (ஏசா 53:4); **bear** (ஏசா 53:11; ஆதி 49:15; 2நாளா 2:2); **burden** (பிர 12:5).

மேசியாவின் மீட்பு

மேசியா தம்முடைய பாவங்களுக்காகவே பாடுகளை அனுபவித்தார் என்று நினைத்து ஒருசிலர் அவருடைய பாவநிவாரணத்தைப் புறக்கணித்து விடுகிறார்கள். (ஏசா 53:4). இயேசு கிறிஸ்து ஒரு பாவமும் செய்யவில்லை. அவருடைய சரீரத்தில் ஒரு வியாதியும் இல்லை. ஆனாலும் மனுஷருடைய பாவங்களைப் போக்குவதற்காக அவரே பாவமானார். மனுஷருடைய வியாதிகளை நீக்குவதற்காக அவர் அந்த வியாதிகளையெல்லாம் தம்முடைய சரீரத்தில் சுமந்தார். இந்தச் சத்தியத்தை ஒருசிலர் புரிந்து கொள்ளாமல் மேசியா தேவனால் அடிக்கப்பட்டார் என்றும், தேவனால் வாதிக்கப்பட்டார் என்றும், தேவனால் சிறுமைப் படுத்தப்பட்டார் என்றும் நினைக்கிறார்கள்.

ஆனால் மேசியாவோ நம்முடைய மீறுதலிகளினிமித்தம் காயப்பட்டார். நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப் பட்டார். கர்த்தர் நம்மீது வைத்திருக்கும் அன்பினால் அவர் இயேசு கிறிஸ்துவை நமக்கு இலவச ஈவாகக் கொடுத்திருக்கிறார். நம்முடைய பாடுகளுக்காக இயேசு கிறிஸ்து பதிலீடாகக் கொடுக்கப்பட்டிருக்கிறார். நம்முடைய பாவங்களின் நிமித்தமும், நம்முடைய மீறுதல்களினிமித்தமும் நாம் அடைய வேண்டிய தண்டனைகளை இயேசு கிறிஸ்து நமக்குப் பதிலாகப் பெற்றுக் கொண்டார்.

அடிக்கப்படுதல் (stricken) - נָגַע - naw-gah' - 5060

வினைச்சொல் - தொடு, நேரிடு, ஏவு, செல்லு, எட்டு, ஏறு, சேரு, வந்தெட்டு, தட்டியெழுப்பு, அடி, கால்பரவு, அடிபடு, தண்டிக்கப்படு, முறி, வாதி, உபாதியை அடை, தெளி, வா, கிட்டு, விழப்பண்ணு, ஏறி, அணுகு, சமீபி, இடியப்பண்ணு, போ, போய்ச்சேர், தள்ளு,சரையாக்கிப்போடு. **(to touch; lay the hand upon; strike violently; bring down) smite with a plague** (ஏசா 53:4; உபா 21:4).

வாதிக்கப்படுதல் (smitten) - נָכָה - naw-kaw' - 5221

வினைச்சொல் - அடித்துப்பாழாக்கு, கண்மயக்கம் உண்டாகும் படிசெய், வெட்டுண்டு சாகு, அழிக்கப்பட்டு, முறியஅடி, வாதி, அதம் பண்ணு, அடி, எறி, வெட்டிப்போடு, சங்கரி, வெட்டு, கொல்லு, அடிப்பி, குத்து, சங்காரம் பண்ணு, மடங்கடி, கொள்ளையடி, மடிவி, அடித்துக் கொன்றுபோடு, முறிந்தசையப் பண்ணு, தகர், அழித்துவிடு, இடித்துப் போடு, தண்டி, அழி, கொட்டு, விழப் பண்ணு, முறித்துப்போடு, கொலைசெய், குத்திப்போடு, விழத்தள்ளு, வெட்டுண்டு போ, முறிந்தோடிப்போ, எண், மடங்கடி, அடித்துசங்கரி, மகாசங்காரம் பண்ணு, சேதப்படுத்து, கடிந்துகொள்ளப் படு, அடிபடு, முட்டு, ஊன்றிநில், அரித்துப் போடு, உபாதிவாதையுண்டாக்கு, மடி **(to strike; beat; kill; punish; slaughter; slay; smite; wound) stripe** (ஏசா 53:4; ஏசா 10:24; ஏசா 11:4; ஏசா 50:6; சக 12:4; மல் 4:6) மனுஷருடைய பாவங்கள் நிமித்தமாக இயேசு கிறிஸ்து வாதிக்கப்பட்டார். (ஏசா 53:8).

53 அதிகாரம்

சிறுமைப்படுதல் (afflicted) - עָנָה - aw-naw' - 6030

வினைச்சொல் - தாழ்த்து, பணி, குனி (browbeat; depress; abase self; afflict) (ஏசா 53:4,7; ஏசா 58:3,10; ஏசா 63:9).

பாவநிவாரணத்தில் சரீர அவயவங்களின் பயன்பாடு

1. காயம்
2. தழும்பு

காயப்படுதல் (wounded) - חָלָל - khaw-lawl' - 2491

பெயரடை - வெட்டுண்டவர்களான, கற்புக் குலைந்தவளாக, கொன்றுபோட்ட, கொலை செய்யப்பட்டவனான, கொலையுண்ட, வெட்டிப் போட்ட, கொல்லப்பட்ட, மடங்கடி, சங்காரம் பண்ணின, குற்றுயிரான, பிணமான, மரித்தவர்களான, காயப்படுத்தின (to wound; bore; slay) pierce (ஏசா 53:5; ஏசா 51:9; சங் 109:22).

நொறுக்கப்படுதல் (Bruise) - דָּכָא - daw-kaw' - 1792

வினைச்சொல் - நொறுக்கு, நசுக்கு, உபத்திரவப்படுத்து, முறி (to crumble; beat to pieces; break; bruise; crush; destroy) smite (ஏசா 53:5,10; ஏசா 3:15; யோபு 19:2; சங் 72:4; சங் 94:5). சவுக்கால் அடிக்கப் பட்டதினாலும், முள்முடியினால் காயம் உண்டானதினாலும் இயேசு கிறிஸ்துவின் சரீரத்தில் தழும்புகள் உண்டாயிற்று. அவருடைய பாவநிவாரண பலியில் இதுவும் ஒரு பகுதியாகும். இந்தத் தழும்புகளின் மூலமாக மனுஷருக்குச் சரீர சுகமாதல் உண்டாகிறது. (ஏசா 53:5; 1பேதுரு 2:24).

"நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது" - இயேசு கிறிஸ்து பாவம் செய்யவில்லை. நாமே பாவம் செய்தவர்கள். ஆகையினால் நமக்குச் சமாதானம் இல்லை. நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை இயேசு கிறிஸ்துவின்மேல் வந்தது. நமக்குப் பதிலாக இயேசு கிறிஸ்து ஆக்கினைக்குட்படுத்தப் பட்டார். நாம் தேவனோடு ஒப்புரவாக வேண்டும் என்னும் ஆக்கினை இயேசு கிறிஸ்துவின்மீது வந்தது. (சங் 53:5).

ஆக்கினை (chastisement) - מוּסָר - moo-sawr' - 4148

ஆ.பெ.சொ. - சிட்சை, கட்டு, போதகம், உபதேசம், புத்தி, புத்திமதி, தண்டனை, தண்டித்தல், போதித்தல்,போதனை, ஆக்கினை, எச்சரிப்பு, கடிந்து கொள்ளுதல் (correction)

தழும்புகள் (stripes) - חַבּוּרָה - khab-boo-raw' - 2250

பெண்பால் பெயர்ச்சொல் - தழும்பு, வீக்கம், புண்கள் (a black and blue mark) "stripe" (ஏசா 53:5; யாத் 21:25); "bruises" (ஏசா 1:6); "hurt" (ஆதி 4:23); "blueness" (நீதி 20:30); "wounds" (சங் 38:5); "spots" (எரே 13:23). இயேசு கிறிஸ்துவின் சரீரத்தில் சுமார் 468 தழும்புகள் இருந்திருக்க வேண்டுமென்று வேத பண்டிதர்கள் கூறுகிறார்கள். (மத் 27:26).

"அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்." - இது ஆவிக்குரிய குணமாதல் அல்ல. இது சரீரப்பிரகாரமாகக் குணமாதலாகும். எபிரெய மொழியிலும், கிரேக்க மொழியிலும் 14 வார்த்தைகள் சரீரச்சுகமாதலைப் பற்றிக் கூறுகிறது. சில சமயங்களில் இந்த வார்த்தைகள் ஆத்தும சுகத்தையும், சரீர சுகத்தையும் சேர்த்துக் குறிப்பிடலாம்.

53 அதிகாரம்

குணமாதலைக் குறிக்கும் எபிரேய, கிரேக்க வார்த்தைகள்

1. רָפָא - raw-faw', raw-faw' - 7495
2. מַרְפֵּא - mar-pay' - 4832
3. יְשׁוּעָה - yesh-oo'-aw - 3444
4. אֲרוּכָה - ar-oo-kaw' - 724
5. חָבַשׁ - khaw-bash' - 2280
6. רִפְאוּת - rif-ooth' - 7500
7. θεραπεύω - therapeuoo - 2323
8. ἴαμα - iama - 2386
9. ἰάομαι - iaomai - 2390
10. ἴασις - iasis - 2392
11. ὑγιαίνω - hygiainoo - 5198
12. ὑγιής - hygiees - 5199
13. σώζω - soozoo - 4982
14. διασώζω - diasoozoo - 1295

குணமாகுதல் (cure) - רָפָא - raw-faw', raw-faw' - 7495

வினைச்சொல் - சுகமாகுதல் "cure" (எரே 33:6); "make whole" (யோபு 5:18); "heal" (ஏசா 19:22; ஏசா 57:18-19; எண் 12:13; உபா 32:39; 2இராஜா 20:5,8; சங் 6:2; எரே 17:14; எரே 30:17; ஓசி 6:1; சக 11:16); "healed" (ஏசா 6:10; ஏசா 53:4; ஆதி 20:17; யாத் 21:19; லேவி 13:18,37; லேவி 14:3,49; உபா 28:27,35; 1சாமு 6:3; 1சாமு 8:29; 1சாமு 9:15; 2நாளா 22:6; 2நாளா 30:20; சங் 30:2; சங் 107:20; எரே 17:14; எசே 34:4; ஓசி 7:1; ஓசி 11:3); "healeth" (ஏசா 20:26; யாத் 15:26; சங் 103:3; சங் 147:3); "thoroughly healed" (யாத் 21:19); "physician" (ஆதி 50:2; 2நாளா 16:12; யோபு 13:4; எரே 8:22).

குணமாகுதல் (healing) - מַרְפֵּא - mar-pay' - 4832

ஆண்பால் பெயர்ச்சொல் - சகாயமிருத்தல், தீருதல், ஆரோக்கியம், ஔஷதம், சொஸ்தமனம், இணங்குதல் "healing" (எரே 14:19; மல் 4:2); "health" (நீதி 4:22; நீதி 12:18; நீதி 13:17; நீதி 16:24; எரே 8:15); "cure" (எரே 33:6); "remedy" (2நாளா 26:16; நீதி 6:15; நீதி 29:1); "sound in health" (நீதி 14:30); "wholesome" (நீதி 15:4).

சுகவாழ்வு (health) - יְשׁוּעָה - yesh-oo'-aw - 3444

பெ.பெ.சொ. - இரட்சிப்பு, உதவி, சுகவாழ்வு, அடைக்கலம், இரட்சணியம், இரட்சித்தல் "health" (சங் 42:11; சங் 43:5; சங் 67:2); "deliverance" (சங் 18:50; சங் 44:4); "salvation" (சங் 91:16).

சுகவாழ்வு (health) - אֲרוּכָה - ar-oo-kaw' - 724

பெண்பால் பெயர்ச்சொல் - சுகவாழ்வு, சொஸ்தம், ஆரோக்கியம், சவுக்கியம் (restoration to sound health) (ஏசா 58:8; எரே 8:22; எரே 30:17; எரே 33:6).

(healer) - חָבַשׁ - khaw-bash' - 2280

வினைச்சொல் - கட்டு, சேனம்வை, சேணங்கட்டு, ஆளு, கட்டப்படு, கட்டிப்போடு, பொதிகளைச் சும, அடை, சீர்ப்படுத்துகிறவன், கட்டியிரு, சுற்றிக்கொள். "healer" (ஏசா 3:7); "to bind up" or "heal" (ஏசா 30:26; ஏசா 61:1; யோபு 5:18; சங் 147:3; எசே 34:16; ஓசி 6:1).

53 அதிகாரம்

ஆரோக்கியம் (health) - רִפְאוּת - rif-ooth' - 7500

பெண்பால் பெயர்ச்சொல் - ஆரோக்கியம் "health" (நீதி 3:8).

குணமாக்கு (healed) - θεραπεύω - therapeuoo - 2323

வினைச்சொல் - சொஸ்தமாக்கு, குணமாக்கு, சௌக்கியமாக்கு, ஆரோக்கியமாக்கு, பணிவிடைகொள் "heal" (மத் 8:7; மத் 10:1,8; மத் 12:10; மாற்கு 3:2,15; லூக்கா4:23; லூக்கா 6:7; லூக்கா10:9; லூக்கா 14:3); "healed" (மத் 4:23-24; மத் 8:16,17; மத் 9:35; மத் 12:15,22; மத் 14:14; மத் 15:20; மத் 19:2; மத் 21:14; மாற்கு 1:34; மாற்கு 3:10; மாற்கு 6:5,13; லூக்கா 4:40; லூக்கா 5:15; லூக்கா 6:18; லூக்கா 8:43; லூக்கா 9:6-11; லூக்கா 13:14; லூக்கா 14:4; அப் 4:14; அப் 5:16; அப் 8:7; அப் 28:9); "cure" (மத் 17:16; லூக்கா 9:1); "cured" (லூக்கா 7:21; யோவான் 5:10).

குணமாக்குதல் (healed) - ἴαμα - iama - 2386

பால் வேறுபாடற்ற பெயர்ச்சொல்- குணமாக்குதல் "healing" or "repairing" (2கொரி 12:9,28,30).

ஆரோக்கியமாக்குதல் (heal) ἰάομαι - iaomai - 2390

வினைச்சொல் - சொஸ்தமாக்கு, ஆரோக்கியமாக்கு, குணமாக்கு "heal" (மத் 13:15; லூக்கா 4:18; லூக்கா 5:17; லூக்கா 9:2; யோவான்4:47; யோவான் 12:40); "healed" (மத் 8:8,13; மாற்கு 5:29; லூக்கா 6:17,19; லூக்கா 7:7; லூக்கா 8:2,47; லூக்கா 17:15; லூக்கா 22:51; யோவான் 5:13; அப் 3:11; அப் 28:8; எபி 12:13; யாக் 5:16; 1பேதுரு 2:24); "healing" (அப் 10:38); "whole" (மத் 15:28; அப் 9:24).

குணமாக்குதல் (cure) - ἴασις - iasis - 2392

பெண்பால் பெயர்ச்சொல்- சொஸ்தமாக்குதல், குணமாக்குதல் "healing" and "cure" (லூக்கா 13:32; அப் 4:22,30; அப் 28:27).

சுகமாயிருத்தல் (sound health) - ὑγιαίνω - hygiainoo - 5198

வினைச்சொல் - சுகமடைந்திரு, சுகமாயிரு "sound health" (3யோவான் 1:2).

சுகமான (healthy) - ὑγιής - hygiees - 5199

பெயரடை - சொஸ்தமான, சுகமான, ஆரோக்கியமான "healthy," "sound," and "whole" (மத் 12:13; மத் 15:31; மாற்கு 3:5; மாற்கு 5:34; லூக்கா 5:31).

சுகமடை (heal) - σώζω - soozoo - 4982

வினைச்சொல் - இரட்சி, சொஸ்தமாகு, ஆரோக்கியம் அடை, சுகமடை, தப்பிப்போ, இரட்சிக்கப்படு "to save," "deliver," "protect," "heal," "preserve," and "make whole" (மத் 9:21-22; மாற்கு 5:29,34; மாற்கு 6:56; மாற்கு 10:52; லூக்கா 8:36,48; லூக்கா 8:50; லூக்கா 17:19; அப் 4:9; அப் 14:9)

53 அதிகாரம்

குணமாக்கு (to save) - διασώζω - **diasoozoo** - 1295

விணைச்சொல் - சொஸ்தமாக்கு, குணமாக்கு, பத்திரமாய் கொண்டுபோ, காப்பாற்று, தப்புவி **"to save" and "to heal thoroughly," "make perfectly whole"** (மத் 14:36; லூக்கா 7:3).

"நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து" - மனுஷர் இதுபோல பாவஅறிக்கை பண்ண வேண்டும். நாம் இவ்வாறு பாவஅறிக்கை பண்ணுவதற்காகவே மேசியா பல பாடுகளை அனுபவித்தார். (1பேதுரு 2:25).

"ஆடுகளைப்போல" - ஆடுகள் மிகவும் எளிதாக வழிதப்பிப் போய்விடும். (லூக்கா 15:4; சங் 119:176).

"அவனவன் தன்தன் வழியிலே போனோம்" - ஆதாம் பாவம் செய்த நாளிலிருந்து மனுஷன் ஒவ்வொருவனும் தன்தன் வழியிலேயே போய்கொண்டிருக்கிறான். மனுஷன் தன்னுடைய சொந்த ஆசைகளையும், சொந்த திட்டங்களையும் நிறைவேற்றுவதற்குப் பிரயாசப்படுகிறான். இதனால் மற்றவர்களுக்கு உண்டாகும் நன்மை, தீமைகளைப் பற்றி அவன் சிந்தித்துப் பார்ப்பதில்லை. (நியா 17:6; நியா 21:25).

விழப்பண்ணுதல் (laid on) - פָּגַע - paw-gah' - 6293

விணைச்சொல் - வா, போ, செல், மன்றாடு, பரிந்துபேசு, எதிர்ப்படு, சேர், விழு, பேசு, வரப்பண்ணு, பார், சந்தி, காண், நீட்டு, கொல், தொடு, ஜெபம் பண்ணு, எதிர், வேண்டிக்கொள், விழப்பண்ணு, சகாயஞ் செய், விண்ணப்பம்பண்ணு **(to cause to fall upon, or light upon)** (ஏசா 53:6; யாத் 5:3; 1சாமு 22:17-18; 1இராஜா 2:29,31).

"தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை" - பூரணமான கீழ்ப்படிதலைக் குறிக்கும் வாக்கியம். (1பேதுரு 2:22-23). தம்முடைய வாயின் வார்த்தையினால் இயேசு கிறிஸ்துவிற்குச் சத்துருக்களைச் சங்காரம் பண்ணும் அதிகாரம் இருந்தபோதிலும் அவர் பிதாவாகிய தேவனுக்குக் கீழ்ப்படிந்து தமது வாயைத் திறவாதிருந்தார். (மத் 26:53; எரே 11:19). "அடிக்கப்படும்படி கொண்டு போகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும் ..... அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்" - இந்த வாக்கியம் அப் 8:32-33 ஆகிய வசனங்களில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"ஆட்டுக்குட்டி" - இயேசு கிறிஸ்துவே தேவஆட்டுக்குட்டியாக இங்கு கூறப்பட்டிருக்கிறார். (யோவான் 1:29).

மேசியாவிற்குச் செய்யப்பட்ட காரியங்கள்

1. அவருடைய முகப்பார்வையை அந்தக்கேடு அடையச் செய்தனர். (ஏசா 52:14; ஏசா 53:2-3).
2. அவருடைய ரூபத்தை அந்தக்கேடு அடையச் செய்தனர். (ஏசா52:14).
3. அவர்கள் மேசியாவை விசுவாசிக்கவில்லை. (ஏசா 53:1).
4. அவரை அசட்டை பண்ணினார்கள். (ஏசா 53:3).
5. அவரைப் புறக்கணித்தார்கள்.
6. தங்களுடைய முகங்களை அவருக்கு மறைத்தார்கள்.
7. அவரை எண்ணாமற்போனார்கள்.
8. அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினார்கள். (ஏசா 53:4).
9. எல்லாரும் வழிதப்பித் திரிந்தார்கள். (ஏசா 53:6).
10. அவர்கள் தன்தன் வழியிலே போனார்கள்.

53 அதிகாரம்

11. அவரை நெருக்கினார்கள். (ஏசா 53:7).

12. அவரை ஒடுக்கினார்கள்.

13. கோபத்தில் அவரைத் தண்டித்தார்கள். (ஏசா 53:7-8).

14. அவரிடத்திலிருந்து நீதியை எடுத்துக் கொண்டார்கள். (ஏசா 53:8-9).

15. துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள் (ஏசா 53:9).

16. அவரை அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணினார்கள். (ஏசா 53:12).

மேசியா தமது பாடுகளினால் மனுஷருக்குச் செய்திருக்கும் காரியங்கள்

1. எவ்வித முறுமுறுப்பில்லாமல் மேசியா தமது பாடுகளை ஏற்றுக் கொண்டார். (ஏசா 53:7-8)

2. அவர் நம்முடைய துக்கங்களைச் சுமந்தார் (ஏசா 53:4-5).

3. அவர் நமக்காக அடிக்கப்பட்டு வாதிக்கப் பட்டு, சிறுமைப் படுத்தப்பட்டார். (ஏசா 53:4).

4. நம்முடைய மீறுதலிகளினிமித்தம் அவர் காயப்பட்டார். (ஏசா 53:5).

5. நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். (ஏசா 53:5,10).

6. நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது (ஏசா 53:5).

7. அவர்களைக் குணப்படுத்துவதற்காகத் தமது சரீரத்தில் தழும்புகளை ஏற்றுக் கொண்டார்.

8. நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் தம் மேல் விழப்பண்ணினார். (ஏசா 53:6,11-12).

9. அவர்களுக்காக அநீதியான பாடுகளை ஏற்றுக் கொண்டார். (ஏசா 53:8).

10. ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டுபோனார் (ஏசா 53:8,12).

11. கர்த்தரோ அவரை நொறுக்கச்சித்தமாகி; அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார் (ஏசா 53:10).

12. அவர் தம்முடைய ஆத்துமாவை குற்றநிவாரண பலியாக ஒப்புக்கொடுத்தார்.

13. அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியானார். (ஏசா 53:11).

14. அநேகரை நீதிமான்களாக்கினார்.

15. அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார். (ஏசா 53:12).

16. அவர்களுக்காக வேண்டுதல் செய்தார். (ஏசா 53:12).

"இடுக்கணிலும் நியாயத் தீர்ப்பிலுமிருந்து அவர் எடுக்கப்பட்டார்" - இயேசு கிறிஸ்து ஒருபோதும் சிறையில் அடைக்கப்படவில்லை. அவர் நியாயமாக விசாரிக்கப்படவும் இல்லை. அவருக்கு நீதியும், நியாயமும் மறுக்கப்பட்டது. நியாயவிசாரணை நடைபெறாத அளவிற்கு அவர் துன்மார்க்கராகக் கருதப்பட்டார். இவரிடத்தில் ஒரு பாவமும் காணப்படவில்லை என்று மேசியாவைப் பார்த்தவர்கள் கூறினார்கள். (மத் 27:4) ஆனாலும், தம்முடைய சத்துருக்களிடமிருந்து இயேசு கிறிஸ்து விடுவிக்கப்படவில்லை. இயேசுவை விசாரித்த நீதிபதிகளை அவருடைய சத்துருக்கள் பலவந்தம் பண்ணினார்கள். இயேசுவின்மீது குற்றத்தைக் கண்டுபிடித்து அவரைக் கொன்றுபோடும் படிக்குத் தீர்ப்பு கூறுமாறு வலியுறுத்தினார்கள். (மத் 26-27)

53 அதிகாரம்

"துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள்" - இயேசு கிறிஸ்துவோடு இரண்டு கள்ளர்களையும் சிலுவையில் அறைந்தார்கள். அந்தத் துன்மார்க்கரோடு இயேசு கிறிஸ்துவும் அடக்கம் பண்ணப்பட்டார். ஆனாலும் இயேசு கிறிஸ்து ஒரு ஐசுவரியவானுடைய கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார். (ஏசா 53:9; மத் 27:57-60; மாற்கு 15:43-46; லூக்கா 23:50-56; யோவான் 19:38-42). யூதருடைய கல்லறைத் தோட்டங்களில் குற்றவாளிகளைத் தனியாக அடக்கம் பண்ணுவது வழக்கம். அந்தஇடத்தில் தான் இயேசு கிறிஸ்துவையும் அடக்கம் பண்ண வேண்டுமென்று யூதமார்க்கத்துத் தலைவர்கள் தீர்மானம் பண்ணியிருந்தார்கள். ஆனால் கடைசி நேரத்தில் யோசேப்பு என்னும் ஐசுவரியவான் இயேசுவின் சரீரத்தை அதிகாரிகளிடம் மன்றாடி பெற்றுக்கொண்டு, தனக்கு நியமிக்கப்பட்ட கல்லறையில் அவருடைய சரீரத்தை அடக்கம் பண்ணினான். யூதர்கள் இயேசுவைத் துன்மார்க்கரோடே அடக்கம் பண்ண வேண்டுமென்று நியமித்தார்கள். ஆனால் அவர்கள் நியமித்து வைத்திருந்த காரியத்தை யோசேப்பு என்னும் ஐசுவரியவான் கடைசி நேரத்தில் மாற்றிப்போட்டான். இயேசு கிறிஸ்துவை மரியாதை கொடுத்து அடக்கம் பண்ணாமல் அவரை அவமதிக்க வேண்டுமென்பது யூதமார்க்கத்துத் தலைவர்களின் திட்டம். ஆனால் அவர்களுடைய திட்டம் நிறைவேறவில்லை.

"அவர் கொடுமை செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை." - இந்த வாக்கியம் 1பேதுரு 2:22 ஆவது வசனத்தில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்து ஜீவனைக் கொடுப்பதற்காகவே இந்தப் பூமிக்கு வந்தார். கொடுமை செய்து யாருடைய ஜீவனையும் எடுத்துப்போடுவதற்கு அவர் வரவில்லை. (யோவான் 10:10; அப் 10:38).

"அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை" - இயேசு கிறிஸ்து ஓர் ஏமாற்றுக்காரர் என்று அவர்மீது குற்றம் சுமத்தினார்கள். ஆனால் அவர் தம்முடைய நீதியான வார்த்தைகளை உபதேசம் பண்ணுவதற்கு மாத்திரமே தம்முடைய வாயைத் திறந்திருக்கிறார். அவருடைய வாயில் வஞ்சனை எதுவும் காணப்படவில்லை. (1பேதுரு 2:22). இயேசு கிறிஸ்துவின் சத்துருக்கள்கூட இதை அங்கிகரித்து அறிவித்திருக்கிறார்கள். (மத் 22:16).

"கர்த்தரோ அவரை நொறுக்கச்சித்தமாகி" - கர்த்தர் தம்முடைய ஒரேபேறான குமாரனை நொறுக்குவதற்குச் சித்தம் கொண்டார். இயேசு கிறிஸ்துவின் பாடுகளில் கர்த்தர் பிரியப்படவில்லை. ஆனாலும் அவருடைய பாடுகள் மூலமாக மனுக்குலத்திற்கு இரட்சிப்பு உண்டாயிற்று என்பதற்காகவே கர்த்தர் அவரை நொறுக்கச் சித்தமானார். (அப் 2:22-24; 1தெச 2:16). பிதாவும், குமாரனும் மனுஷருடைய இரட்சிப்பிற்காக இந்தப் பாடுகளை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டார்கள். (யோவான் 3:16; யோவான் 10:18). இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் தம்மைப் பலியாக ஒப்புக் கொடுத்ததின் மூலமாகத் தேவனுடைய பரிபூரண நீதியும், இரக்கமும், கிருபையும் வெளிப்படுகிறது. கர்த்தருடைய பிரமாணம் ஜெயம் பெற்றது. பாவம் நியாயந்தீர்க்கப்பட்டது. மனுஷருக்கு இரட்சிப்பின் வாய்ப்பு கொடுக்கப்பட்டது.

"அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்" - பாடுகள் என்பதற்கான எபிரெய வார்த்தை "காலா" (chalah) என்பதாகும். இதற்கு வியாதி என்று பொருள். கர்த்தர் இயேசு கிறிஸ்துவை வியாதிக்காரராக்கினார். மனுஷருடைய வியாதியை இயேசு கிறிஸ்து தம்மீது சுமந்துகொண்டார். பாடுகளுக்குட்படுத்தினார் என்பதற்கு வியாதிகளுக்குட்படுத்தினார் என்றே பொருள் கூறவேண்டும். (ஏசா 53:3-5,10; மத் 8:16-17; 1பேதுரு 2:24).

பாடு (grief) - חָלָה - khaw-law' - 2470

ஏசாயா - தொகுப்புரை

53 அதிகாரம்

வினைச்சொல் - பலட்சியமாகு, வியாதியாயிரு, வியாதிகாண், வியாதிப்படு, ஆயாசப்படு, காயங்களை ஆற்று **(to be rubbed or worn; weak; sick; afflicted; to grieve; make sick; suffer a stroke; be diseased; have infirmity; put to pain; be wounded) "sick"** *(ஏசா 33:24; ஏசா 38:1,9; ஏசா 39:1; ஆதி 48:1; 1சாமு 19:14; 1சாமு 30:13; 2சாமு 13:2-6; 1இராஜா 14:1,5; 1இராஜா 17:17; 2இராஜா 1:2; 2இராஜா 8:7,29; 2இராஜா 13:14; 2இராஜா 20:1,12; 2நாளா 22:6; 2நாளா 32:24; நெகே 2:2; சங் 35:13; நீதி 13:12; நீதி 23:35; உன் 2:5; உன் 5:8; எசே 34:4,16; தானி 8:27; ஓசி 7:5; மீகா 6:13; மல் 1:8,13); **"diseased"** (1இராஜா 15:23; 2நாளா 16:12); **"infirmity"** (சங் 77:10); **"pain"** (எரே 12:13); **"wounded"** (1இராஜா 22:34; 2நாளா 18:33; 2நாளா 35:23); **"grief"** (ஏசா 53:10; ஏசா 17:11); **"grieved"** (ஆமோ 6:6); **and "grievous"** (எரே 10:19; எரே 14:17; எரே 30:12; நாகூம் 3:19).*

வேதாகமத்தில் சரீரத்தைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் காரியங்கள்

1. நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாத படிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப் பட்டதென்று அறிந்திருக்கிறோம். மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப் பட்டிருக்கிறானே. *(ரோமர் 6:6-7).*

2. கிறிஸ்து இயேசுவுக்கு உட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை. கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே. அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப் பிரமாணம் செய்யக்கூடாததை தேவனே செய்யும் படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக் குள்ளாகத் தீர்த்தார். மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும் படிக்கே அப்படிச் செய்தார். *(ரோமர் 8:1-4).*

3. கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும் ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும். *(ரோமர் 8:10).*

4. மாம்சத்தின்படி பிழைப்பதற்கு நாம் மாம்சத்துக்குக் கடனாளிகளல்ல. மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள். *(ரோமர் 8:12-13).*

5. நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப்பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். *(ரோமர் 12:1-2).*

53 அதிகாரம்

6. வயிற்றுக்குப் போஜனமும், போஜனத்துக்கு வயிறும் ஏற்கும்; ஆனாலும் தேவன் இதையும் அதையும் அழியப்பண்ணுவார். சரீரமோ வேசித்தனத்திற்கல்ல, கர்த்தருக்கு உரியது; கர்த்தரும் சரீரத்திற்கு உரியவர். (1கொரி 6:13).

7. உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்ல வென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப் பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப் படுத்துங்கள். (1கொரி 6:19-20)

8. நீங்கள் கிறிஸ்துவைப் பற்றும் விருத்தசேதனத்தினாலே மாம்சத்துக்குரிய பாவசரீரத்தைக் களைந்துவிட்டதினால், கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள். (கொலோ 2:11).

இந்த வசனங்களும், வேதாகமத்தில் மேலும் பல வசனங்களும் மனுஷனுடைய சரீரத்தைக் குறித்து தேவன் கொண்டிருக்கும் சித்தத்தை வெளிப்படுத்துகிறது. மனுஷனுடைய சரீரமும், ஆத்துமாவும் இரட்சிக்கப்பட வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். ஆகையினால்தான், கிறிஸ்து நம்முடைய பாவங்களையும், பாடுகளையும் கல்வாரி சிலுவையில் சுமந்து தீர்த்தார். கிறிஸ்துவின் பாவநிவாரண பலியானது மனுஷனுடைய ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகிய மூன்றையும் சுத்திகரிக்கிறது.

தேவன் இஸ்ரவேல் புத்திரருக்குச் சரீர சுகமாதலைக் கட்டளையிட்டார். அவர்களோடு உடன்படிக்கை பண்ணினார். (சங் 105:37; சங் 107:20, சங் 91; சங் 103:3; ஏசா 53:4-5; ஏசா 58:1-12) புதிய ஏற்பாட்டுக்காலத்தில் இயேசு கிறிஸ்து மூலமாகத் தேவன் இன்னும் மேலான உடன்படிக்கையை மனுஷரோடு செய்திருக்கிறார். (எபி 8:6). இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர். (எபி 13:8) அவருடைய வாக்குத்தத்தங்களும், அவருடைய சித்தமும் ஒருபோதும் மாறுவதில்லை. சரீர வியாதிகளை இதுவரையிலும் குணப்படுத்திய தேவன் இனிமேலும் குணப்படுத்துவார்.

தேவனால் மேசியா பட்ட பாடுகள்

1. தேவனால் அடிக்கப்பட்டார். (ஏசா 53:4,8)

2. தேவனால் வாதிக்கப்பட்டார். (ஏசா 53:4).

3. தேவனால் சிறுமைப்படுத்தப்பட்டார்.

4. தேவன் நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப் பண்ணினார். (ஏசா 53:6,11)

5. தேவன் அவரை நொறுக்கினார். (ஏசா 53:10).

6. தேவன் அவரைப் பாடுகளுக்குட் படுத்தினார்.

7. தேவன் அவரைக் குற்றநிவாரண பலியாக ஒப்புக்கொடுக்கச் செய்தார். (ஏசா 53:4-5,10).

"குற்றநிவாரண பலி" - இயேசு கிறிஸ்து தம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகிய மூன்றையுமே குற்றநிவாரண பலியாக ஒப்புக் கொடுத்தார். மனுஷருடைய பாவங்களுக்கும், வியாதிகளுக்கும் இயேசு கிறிஸ்து தம்மைப் பூரண பலியாகச் செலுத்தினார். மனுஷருக்காக இயேசு கிறிஸ்து பதிலீடானார். மனுஷனுடைய ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகிய மூன்றுமே பாவம் செய்திருக்கிறது. இவையெல்லாமே மரணத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கிறது.

53 அதிகாரம்

மனுஷன் தண்டனை பெற வேண்டிய இடத்தில் மேசியா அவனுடைய தண்டனையைத் தாமே ஏற்றுக் கொண்டார். ஆத்துமா என்னும் வாக்கியம் சில வசனங்களில் தனிநபரையும் குறிக்கிறது. (ஆதி 12:5; ஆதி 41:26) ஒரு மனுஷன் தன்னுடைய மாம்சத்தில் பாவம் செய்யும்போது அவன் தன்னுடைய ஆவியிலும், ஆத்துமாவிலும் பாவம் செய்து விடுகிறான். ஆத்துமாவையும், சரீரத்தையும் பிரிக்க முடியாது. சரீரம் அசுத்தமாகவும், ஆவியும், ஆத்துமாவும் சுத்தமாகவும் இருக்கமுடியாது. மனுஷனுடைய ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகியவற்றை நாம் இரட்சிப்பில் பிரித்துக் கூறமுடியாது. ஆகையினால் ஆத்துமா இரட்சிப்பு என்பது சரீர சுகமாதலையும் சேர்த்தே குறிப்பிடுகிறது.

குற்றநிவாரணபலி **(offering for sin)** - אָשָׁם - aw-shawm' - 817

ஆ.பெ.சொ. - பாவம், குற்றநிவாரண பலி, பாவநிவாரணபலி, அக்கிரமம்,குற்ற நிவாரண காணிக்கை, குற்றம், பாவநிவர்த்தி **(trespass offering) an offering for sin** (ஏசா 53:10; லேவி 5:19; லேவி 7:5; லேவி 12:12,21; லேவி 19:21; 1சாமு 6:3,8,17).

மேசியாவின் பாடுகளுக்காக அவருடைய வெகுமதிகள்

1. அவர் எல்லோருக்கும் மேலாக உயர்த்தப் படுவார். (ஏசா 52:13; எபே 1:20-23; பிலி 2:9-11; 1பேதுரு 3:22; வெளி 11:15; வெளி 20:4-6).
2. அவர் அநேகம் ஜாதிகளுக்கு இரட்சகராக ஆனார். (ஏசா 52:15).
3. அவர் ராஜாக்களுக்கு அற்புதமானவராக ஆனார்.
4. அவர் எல்லோருக்கும் பரிகாரியானார். (ஏசா 53:4-5; மத் 8:16-17; 1பேதுரு 2:24).
5. அவர் எல்லோருக்கும் முன் உதாரணமானார். (ஏசா 52:9; 1பேதுரு 2:2-22).
6. அவர் ஆவிக்குரிய நித்திய சந்ததியை உண்டுபண்ணுவார். (ஏசா 53:10).
7. அவர் நீடித்த நாளாயிருப்பார்.
8. தம்முடைய சிருஷ்டிகள் இரட்சிக்கப் படுவதைக் கண்டு திருப்தியடைவார்.
9. தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார். (ஏசா 53:11; 1கொரி 15:24-28).
10. அநேகரை நீதிமான்களாக்குவார். (ஏசா 53:11).
11. எல்லோருக்கும் மேலாக உயர்ந்திருப்பார். (ஏசா 53:12; எபே 1:20-23; கொலோ 1:15-18; 1பேதுரு 3:22).
12. பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக் கொள்வார். (ஏசா 53:12).

"நீடித்தநாளாயிருப்பார்" - இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு நித்திய காலமாக ஜீவிப்பார். மரணத்தால் அவரை மேற்கொள்ள முடியாது. (யோவான் 10:18; அப் 2:24-36; 1கொரி 15).

"கர்த்தருக்குச் சித்தமானது" - தம்முடைய சிருஷ்டிகள் எல்லோரும் மீட்கப்படுவது கர்த்தருக்குப் பிரியமான காரியம். (ரோமர் 8:18-25; 1கொரி 15:24-28; எபே 1:10; எபே 3:11; வெளி 11:15).

"அவர் கையினால் வாய்க்கும்." - கர்த்தருடைய ஆளுகையும், ராஜ்யமும் மறுபடியும் ஸ்தாபிக்கப்படும். கர்த்தருடைய சத்துருக்கள் தள்ளுண்டுபோவார்கள். (ஏசா 53:10; 1கொரி 15:24-28; வெளி 11:15).

"தமது ஆத்தும வருத்தத்தின் பலன்" - மனுஷருடைய மீட்பே கர்த்தருடைய ஆத்தும வருத்தத்தின் பலனாகும். (1கொரி 15:24-28).

53 அதிகாரம்

"தம்மைப்பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்" - தேவனுடைய திட்டத்தைப் பற்றிய அறிவினால் ஜனங்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். (லூக்கா 1:77; 1தீமோ 2:4; எபி 10:26; 2பேதுரு 1:2-8; 2பேதுரு 2:20; 2பேதுரு 3:18).

"என் தாசனாகிய நீதிபரர்" - மேசியாவே கர்த்தருடைய தாசன். அவரே நீதிபரர். தேவன் கட்டளையிட்டதை மாத்திரமே மேசியா செய்வார். மேசியாவின் கிரியைகள் அனைத்தும் பரிபூரணமானவையாகவும், நீதியானவையாகவும் இருக்கும். (1பேதுரு 2:21-22).

"அநேகரை நீதிமான்களாக்குவார்" - நீதிமான்களாக்குதல் என்பதற்குக் குற்றமற்றவர்களாக அறிவித்தல் என்று பொருள். விசுவாசம் தேவனுடைய வார்த்தையைப் பற்றிய அறிவினால் வருகிறது. ஜனங்கள் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியும்போது இந்த அறிவு அவர்களை நீதிமான்களாக்கும். (ரோமர் 5:1; ரோமர் 10:17).

"அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார்" - இயேசு கிறிஸ்து ஒரு பாவியல்ல. மனுஷருடைய பாவங்கள் இயேசு கிறிஸ்துவிடம் மாற்றப்படவில்லை. மனுஷனுடைய பாவம் அவனவனுக்கே உரியது. ஒருவனும் தன்னுடைய பாவத்தை மற்றவனுக்குப் பகிர்ந்து கொடுக்க முடியாது. ஆனாலும் ஒருவனுடைய பாவத்தின் விளைவை மற்றவன் அனுபவிக்க முடியும். ஒருவனுடைய பாவத்தின் பாடுகளை மற்றொருவர் சுமக்க முடியும். இயேசு கிறிஸ்து இந்தக் காரியத்தைத்தான் செய்திருக்கிறார். அவர் மனுஷருடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொண்டார். அவர் தேவனுக்கும், மனுஷருக்கும் நடுவில் நின்று மனுஷருக்குக் கொடுக்கப்படும் தண்டனையைத் தாமே ஏற்றுக் கொண்டார். ஒரு பாவி இதை விசுவாசித்து ஏற்றுக் கொள்ள வேண்டும். தன்னுடைய பாவத்திற்கான தண்டனையை இயேசு கிறிஸ்து தாமே ஏற்றுக் கொண்டதற்காக அவன் அவரிடத்தில் நன்றியோடு வரவேண்டும். இயேசு கிறிஸ்து நமக்காகப் பாடுகளை அனுபவித்ததினால் நம்மீது வரவேண்டிய தண்டனைகள் எல்லாம் இயேசு கிறிஸ்துவின்மீது வருகிறது.

"அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி" - இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் தம்முடைய திருஇரத்தத்தை ஊற்றினார். (லேவி 17:11; மத் 26:28).

"அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு" - இந்த வாக்கியம் மாற்கு 15:28; லூக்கா 22:37 ஆகிய வசனங்களில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டதினிமித்தம்" - (லூக்கா 23:34; எபி 9:24; 1யோவான் 2:1)

"அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்; பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார்." - இயேசு கிறிஸ்து சாத்தான்மீதும், கர்த்தருக்குக் கிரியை செய்யும் எல்லா அந்தகாரச் சக்திகள் மீதும் ஜெயம் பெற்றிருக்கிறார். ஆகையினால் பலவான்களை இயேசு கிறிஸ்து தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக் கொள்வார். தம்முடைய வெற்றியின் ஆசீர்வாதங்களைத் தம்முடைய பிள்ளைகளுக்குப் பங்கிட்டுக் கொடுப்பார். இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் அவரோடு உடன் சுதந்தரராக இருப்பார்கள். (ரோமர் 8:17-18).

வேதாகம உபதேசங்கள்

1. மேசியாவின் நித்திய ஆளுகை (ஏசா 52:13; ஏசா 2:1-4; ஏசா 9:6-7; தானி 2:44-45; தானி 7:13-14,18,27; சக 14; மத் 25:31-46; லூக்கா 1:32-33; 1கொரி 15:24-28; எபே 1:10; எபே 2:7; எபே 3:11; வெளி 11:15; வெளி 20:1-10; வெளி 22:4-5)

2. பாடுகளுக்குப் பின்பு மகிமை. (ஏசா 52:13-14)

3. மனுஷரை மீட்பதற்குப் பாடுகளை அனுபவிப்பது அவசியமாக இருக்கிறது. (ஏசா 52:14; ஏசா 53:2-10,12)

4. எல்லா தேசத்தாருக்கும் இரட்சிப்பு. (ஏசா 52:15; ஏசா 53:11-12)

5. பூமியின் ராஜாக்கள் மேசியாவிற்குக் கீழ்ப்படிவார்கள். (ஏசா 52:15; ஏசா 53:12)

53 அதிகாரம்

6. விசுவாசம் முக்கியமானது. தேவையானது. (ஏசா 52:1; யோவான் 3:16)

7. தேவனுடைய புயம் (வல்லமை) வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. (ஏசா 52:1)

8. மேசியாவின் மானிடத்தன்மை. (ஏசா 53:2-12)

9. மேசியாவின் பாடுகள். (ஏசா 52:14; ஏசா 53:2-10)

10. மனுஷர் மேசியாவைப் புறக்கணித்தது. (ஏசா 53:3)

11. மேசியா நமது பாடுகளைச் சுமந்து கொண்டார். (ஏசா 53:4-5,10)

12. கிறிஸ்து நமது சரீர வியாதிகளைக் குணப்படுத்துகிறார்.

13. பாவநிவாரணத்தினாலும் மேசியாவின் தழும்புகளினாலும், சரீர சுகமாதல் உண்டாகிறது. ஏசா 53:4-5,10; மத் 8:16-17; 1பேதுரு 2:24)

14. மனுஷனுக்காக தேவன் மேசியாவைப் பலியாக ஒப்புக்கொடுத்தார். (ஏசா 53:4-8,10)

15. பதிலீடு. (ஏசா 53:4-5,8,11-12)

16. பாவநிவாரணம் (ஏசா 53: 4-6,8,11)

17. பாவநிவாரணத்திற்கு மேசியாவின் மரணம் தேவையானது. (ஏசா 53:4-6,8,10-12)

18. கீழ்ப்படியாமைக்குச் சிட்சை. (ஏசா 53:4)

19. சிட்சையின் மூலமாகச் சமாதானம்.

20. மனுஷனுடைய வீழ்ச்சி. (ஏசா 53:6; ரோமர் 5:12-21)

21. மேசியா பாவத்தைச் சுமக்கிறவர். பாவத்திற்குப் பலியாகச் செலுத்தப் பட்டிருக்கிறவர். (ஏசா 53:5-6,8,10-12)

22. பாடுகளில் பொறுமையும், தாழ்மையும். (ஏசா 53:7)

23. பாவத்தின் சம்பளம் மரணம். (ஏசா 53:5,8,10)

24. மேசியா அநீதியாகப் பாடுகளை அனுபவித்திருக்கிறார். (ஏசா 53:8)

25. மனுஷனுடைய துன்மார்க்கம்.

26. மேசியா அடக்கம் பண்ணப்படுவது. (ஏசா 53:9)

27. மேசியாவினிடத்தில் பாவமில்லை. (ஏசா 53:9,11)

28. மேசியாவின் மூலமாகத் தேவனுடைய திட்டம் நிறைவேறுகிறது. (ஏசா 53:10)

29. மனுஷருக்காக மேசியா பாவமானார். வியாதிகளைச் சுமந்தார். (ஏசா 53:4-5,10)

30. மேசியாவின் ஆவிக்குரிய சந்ததியார்.

31. மேசியாவின் உயிர்த்தெழுதல்.

32. ஆத்தும வருத்தம். (ஏசா 53:11; ரோமர் 8:26)

33. விசுவாசத்தினாலும், தேவனுடைய குமாரனைப் பற்றிய அறிவினாலும் நீதிமானாக்கப்படுவது. (ஏசா 53:11; ரோமர் 5:1-11)

34. சாத்தானின் வல்லமைகள்மீது ஜெயம். (ஏசா 53:12)

35. பரிந்துபேசும் ஊழியம்.

54 அதிகாரம்

4. ஏழு புத்திமதிகளும் காரணங்களும்

(1) பாடு - காரணங்கள்

ஏசா 54:1 பிள்ளைபெறாத மலடியே, மகிழ்ந்துபாடு; கர்ப்பவேதனைப் படாதவளே, கெம்பீரமாய்ப் பாடி ஆனந்த சத்தமிடு; வாழ்க்கைப் பட்டவளுடைய பிள்ளைகளைப் பார்க்கிலும், அநாத ஸ்திரீயினுடைய பிள்ளைகள் அதிகம் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"பிள்ளைபெறாத மலடியே, மகிழ்ந்து பாடு....அநாத ஸ்திரீயினுடைய பிள்ளைகள் அதிகம்" - இந்த வாக்கியம் கலா 4:27 ஆவது வசனத்தில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"வாழ்க்கைப் பட்டவளுடைய பிள்ளைகளைப் பார்க்கிலும், அநாத ஸ்திரீயினுடைய பிள்ளைகள் அதிகம்" - இஸ்ரவேல் தள்ளப்பட்டுப்போகும். அவர்கள் தேசமெங்கும் சிதறிப்போவார்கள். அப்போது புறஜாதியார் இரட்சிக்கப்படுவார்கள். பழைய உடன்படிக்கையைவிட புதிய உடன்படிக்கையில் ஏராளமானோர் இரட்சிக்கப்படுவார்கள். (கலா 4:27).

தீர்க்கதரிசன எண் - 67

"பிள்ளைபெறாத மலடியே, மகிழ்ந்துபாடு; கர்ப்பவேதனைப்படாதவளே, கெம்பீரமாய்ப் பாடி ஆனந்தசத்தமிடு..........." (ஏசா 54:1-17) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. யூதா தள்ளப்பட்டு பிள்ளைபெறாத மலடியாக இருக்கும்போது புறஜாதியார்கள் இரட்சிக்கப் படுவார்கள். (ஏசா 54:1).
2. உன் சந்ததியார் புறஜாதிகளைச் சுதந்தரித்துக் கொண்டு, பாழாய்க்கிடந்த பட்டணங்களைக் குடியேற்றுவிப்பார்கள். (ஏசா 54:2-3).
3. கர்த்தர் இஸ்ரவேலைத் தமது மனைவியாக மறுபடியும் சேர்த்துக் கொள்வார். அவளுடைய வெட்கமும், இலச்சையும், விதவையிருப்பின் நிந்தையும் இனி நினைக்கப் படாதிருக்கும்.(ஏசா 54:4-6).
4. இஸ்ரவேல் கூட்டிச்சேர்க்கப்படும். (ஏசா 54:7; ஏசா 11:10-12)
5. கர்த்தர் இஸ்ரவேல்மீது நித்திய கிருபையோடு இரங்குவார். (ஏசா 54:8).
6. கர்த்தர் இஸ்ரவேலின் மேல் இனிமேல் கோபங்கொள்ளமாட்டார். (ஏசா 54:9).
7. மலைகள் விலகும். பர்வதங்கள் நிலைபெயரும். (ஏசா 54:10).
8. கர்த்தருடைய கிருபை இஸ்ரவேலை விட்டு விலகாது.
9. தேவனுடைய சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமல் இருக்கும்
10. இஸ்ரவேலும், எருசலேமும் மறுபடியும் கட்டப்பட்டு பழைய மகிமைக்குத் திரும்பும். (ஏசா 54:11-12).
11. இஸ்ரவேலின் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள். இஸ்ரவேலின் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும். (ஏசா 54:13).
12. இஸ்ரவேல் நீதியினால் ஸ்திரப்பட்டிருக்கும். கொடுமைக்குத் தூரமாகும். (ஏசா 54:14).
13. எவர்கள் இஸ்ரவேலுக்கு விரோதமாய்க் கூடுகிறார்களோ, அவர்கள் இஸ்ரவேலின் பட்சத்தில் வருவார்கள். (ஏசா 54:15).
14. இஸ்ரவேலுக்கு விரோதமாகக் கூடுகிறவர்கள் அழிந்துபோவார்கள்.
15. இஸ்ரவேலுக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம் (ஏசா 54:17).
16. இஸ்ரவேலுக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் அவர்கள் குற்றப்படுத்துவார்கள். (ஏசா 54:17).

ஏசாயா - தொகுப்புரை

54 அதிகாரம்

(2) விசாலமாக்கு - காரணம்

ஏசா 54:2 உன் கூடாரத்தின் இடத்தை விசாலமாக்கு; உன் வாசஸ்தலங்களின் திரைகள் விரிவாகட்டும்; தடைசெய்யாதே; உன் கயிறுகளை நீளமாக்கி, உன் முளைகளை உறுதிப்படுத்து.

ஏசா 54:3 நீ வலதுபுறத்திலும் இடது புறத்திலும் இடங்கொண்டு பெருகுவாய்; உன் சந்ததியார் ஜாதிகளைச் சுதந்தரித்துக்கொண்டு, பாழாய்க்கிடந்த பட்டணங்களைக் குடியேற்றுவிப்பார்கள்.

"உன் கூடாரத்தின் இடத்தை விசாலமாக்கு" - இஸ்ரவேல் எண்ணிக்கையில் அதிகரிக்கும். பாலஸ்தீன தேசத்தில் இஸ்ரவேலர்கள் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். இஸ்ரவேலின் பாழான பட்டணங்களில் ஜனங்கள் மறுபடியும் கொடியேற்றுவார்கள். புறஜாதியாரையும், அவர்கள் சுதந்தரித்துக் கொள்வார்கள். பூமியில் இஸ்ரவேலர்கள் ஆசீர்வாதமாக இருப்பார்கள். (ஏசா 54:2-3). இஸ்ரவேலின் வெட்கம், இலச்சை, விதவையிருப்பின் நிந்தை ஆகியவை ஒழிந்துபோகும். (ஏசா 54:4). கர்த்தர் இஸ்ரவேலை மறுபடியும் கூட்டிச் சேர்த்து விவாகம் பண்ணிக் கொள்வார். இஸ்ரவேலைத் தேவன் ஏற்கெனவே தள்ளிவிட்டார். இனிமேல் அவளைச் சேர்த்துக் கொள்வார். (ஏசா 54:5-10). கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தையும், எருசலேம் பட்டணத்தையும் மறுபடியும் ஸ்தாபித்து அதை நித்தியமாக ஆசீர்வதிப்பார். (ஏசா 54:10-14). புறஜாதியார் இஸ்ரவேலை அழிக்க முயற்சி செய்வார்கள். தங்கள் முயற்சியில் அவர்களே அழிந்து போவார்கள். (ஏசா 54:15-17).

(3) பயப்படாதே - காரணம்

ஏசா 54:4 பயப்படாதே, நீ வெட்கப்படுவதில்லை; நாணாதே, நீ இலச்சையடைவதில்லை; உன் வாலிபத்தின் வெட்கத்தை நீ மறந்து, உன் விதவையிருப்பின் நிந்தையை இனி நினையாதிருப்பாய்.

ஏசா 54:5 உன் சிருஷ்டிகரே உன் நாயகர்; சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம், இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் மீட்பர், அவர் சர்வபூமியின் தேவன் என்னப்படுவார்.

ஏசா 54:6 கைவிடப்பட்டு மனம் நொந்தவளான ஸ்திரீயைப்போலவும், இளம்பிராயத்தில் விவாகஞ்செய்து தள்ளப்பட்ட மனைவியைப்போலவும் இருக்கிற உன்னைக் கர்த்தர் அழைத்தார் என்று உன் தேவன் சொல்லுகிறார்.

ஏசா 54:7 இமைப்பொழுது உன்னைக் கைவிட்டேன்; ஆனாலும் உருக்கமான இரக்கங்களால் உன்னைச் சேர்த்துக் கொள்வேன்.

ஏசா 54:8 அற்பகாலம் மூண்ட கோபத்தினால் என் முகத்தை இமைப்பொழுது உனக்கு மறைத்தேன்; ஆனாலும் நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன் என்று கர்த்தராகிய உன் மீட்பர் சொல்லுகிறார்.

ஏசா 54:9 இது எனக்கு நோவாவின் காலத்திலுண்டான வெள்ளம் போலிருக்கும்; நோவாவின் காலத்திலுண்டான வெள்ளம் இனி பூமியின்மேல் புரண்டு வருவதில்லை என்று நான் ஆணையிட்டதுபோல, உன்மேல் நான் கோபங் கொள்வதில்லையென்றும், உன்னை நான் கடிந்து கொள்வதில்லை என்றும் ஆணையிட்டேன்.

ஏசா 54:10 மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று, உன்மேல் மனதுருகுகிற கர்த்தர் சொல்லுகிறார்.

54 அதிகாரம்

"உன் சிருஷ்டிகரே உன் நாயகர்" - இஸ்ரவேல் ஒரு ஸ்திரீயாகவும், கர்த்தருடைய நாயகியாகவும் பொதுவாகக் கூறப்படுகிறது. (ஏசா 54:4-6). யெகோவாவின் இந்த ஸ்தீரி வெளி 12 ஆவது அதிகாரத்தில் கூறப் பட்டிருக்கும் ஸ்திரீயாகும். அவளுடைய பாவங்களின் நிமித்தமாகக் கர்த்தர் அவளைத் தள்ளிவைத்தார். ஆனாலும் கர்த்தர் அவளை மறுபடியும் தம்மிடமாகச் சேர்த்துக் கொள்வார். அதன் பின்பு, அவள் நித்தியமாகக் கர்த்தரோடு இருப்பாள். (ஏசா 54:4-10). ஓசியா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் இந்தச் சத்தியம் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

"சேர்த்துக்கொள்வேன்" - (ஏசா 11:10-12; எரே 31-32; எசே 37)

சிறிய காரியங்கள்

1. அற்பகாலம் மூண்ட கோபம். மனுஷனுக்கு இது நீண்ட காலம்போலத் தெரிந்தாலும் கர்த்தருக்கு இது அற்பகாலமாகவே இருக்கிறது. கர்த்தர் ஏற்கெனவே 2,500 வருஷங்களாக கோபத்தில் இருக்கிறார். ஆயினும் கர்த்தருடைய நித்திய காலத்தைப் பார்க்கும் போது இது அற்பகாலமே. (ஏசா 57:15) கர்த்தருக்கு ஆயிரம் வருஷம் என்பது ஒரு நாள்போல இருக்கும். (2பேதுரு 3:8) இதன் பிரகாரம் இந்த 2,500 வருஷம் என்பது 2 அல்லது 3 நாட்களைப் போலவே இருக்கும்.

2. என் முகத்தை இமைப்பொழுது உனக்கு மறைத்தேன். கர்த்தருடைய சிறிய கோபத்தினால் இலட்சணக்கான ஜனங்கள் அழிந்து போனார்கள். கர்த்தர் இமைப்பொழுது தமது முகத்தை மறைத்ததினால் அவரால் தெரிந்தெடுக்கப் பட்ட இஸ்ரவேலின் ஜாதி பூமியின் எல்லா எல்லைகளிலும் சிதறிப் போயிற்று. (ஏசா 54:8). வரப்போகிற உபத்திரவக் காலத்தையும், நரகத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது கர்த்தருடைய இந்தக் கோபம் மிகவும் சிறியது.

"நோவாவின் காலத்திலுண்டான வெள்ளம் இனி பூமியின்மேல் புரண்டு வருவதில்லை என்று நான் ஆணையிட்டதுபோல" - (ஆதி 8:20-22) வருங்காலத்தில் இஸ்ரவேல் பாலஸ்தீன தேசமாக மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்பட்ட பின்பு கர்த்தர் அந்தத் தேசத்தின்மீது இனிமேல் கோபப்பட மாட்டார்.

கர்த்தர் இஸ்ரவேலுக்கு ஆணையிட்ட காரியங்கள்

1. உன்மேல் நான் கோபங்கொள்வதில்லை.

2. உன்னை நான் கடிந்துகொள்வதில்லை.

"மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும்" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது மலைகள் விலகும். பர்வதங்கள் நிலைபெயரும். (ஏசா 54:10; எசே 47; சக 14:1-5). இவை நடைபெறும் போது கர்த்தருடைய சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமல் இருக்கும்.

(4) ஆறுதலடை - காரணம்

ஏசா 54:11 சிறுமைப்பட்டவளே, பெருங்காற்றில் அடிப்பட்டவளே, தேற்றரவற்றவளே, இதோ, நான் உன் கல்லுகளைப் பிரகாசிக்கும்படி வைத்து, நீலரத்தினங்களை உன் அஸ்திபாரமாக்கி,

ஏசா 54:12 உன் பலகணிகளைப் பளிங்கும், உன் வாசல்களை மாணிக்கக் கற்களும், உன் மதில்களையெல்லாம் உச்சிதமான கற்களுமாக்குவேன்.

ஏசா 54:13 உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்; உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்.

ஏசா 54:14 நீதியினால் ஸ்திரப்பட்டிருப்பாய்; கொடுமைக்குத் தூரமாவாய்; பயமில்லாதிருப்பாய்; திகிலுக்குத் தூரமாவாய், அது உன்னை அணுகுவதில்லை.

54 அதிகாரம்

ஏசா 54:15 இதோ, உனக்கு விரோதமாய்க் கூட்டங்கூடினால், அது என்னாலே கூடுகிற கூட்டமல்ல; எவர்கள் உனக்கு விரோதமாய்க் கூடுகிறார்களோ, அவர்கள் உன் பட்சத்தில் வருவார்கள்.

ஏசா 54:16 இதோ, கரிநெருப்பை ஊதி, தன் கிரியைக்கான ஆயுதத்தை உண்டுபண்ணுகிற கொல்லனையும் நான் சிருஷ்டித்தேன்; கெடுத்து நிக்கிரகமாக்குகிறவனையும் நான் சிருஷ்டித்தேன்.

ஏசா 54:17 உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்; உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய்; இது கர்த்தருடைய ஊழியக்காரரின் சுதந்தரமும், என்னாலுண்டான அவர்களுடைய நீதியுமாயிருக்கிறது என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"நான் உன் கல்லுகளைப் பிரகாசிக்கும்படி வைத்து, நீலரத்தினங்களை உன் அஸ்திபாரமாக்கி" - ஆயிரம் வருஷ அரசாட்சியில் கர்த்தர் பூமியில் இஸ்ரவேலை மறுபடியும் கட்டுவார். எசே 48:30-35 ஆகிய வசனங்களின் பிரகாரம் இந்த நகரம் பத்தரை மைல் சதுர அளவுடன் இருக்கும். அதன் அலங்கத்தின் ஒவ்வொரு பகுதியிலும் மூன்று வாயில்கள் இருக்கும். இது பரலோக நகரமாகிய புதிய எருசலேமின் பிரதிபலிப்பாக இருக்கும். புதிய எருசலேம் 1,500 சதுரமைல் பரப்பளவு உள்ளது. (வெளி 21:9-21). பூமியிலுள்ள எருசலேம் நித்திய நகரமாக இருக்கும். பூமி முழுவதற்கும் அது நித்திய தலைநகரமாகவும் இருக்கும். மேசியாவும், அவருடைய பரிசுத்தவான்களும் எருசலேமிலிருந்து உலகை ஆளுகை செய்வார்கள். எருசலேமில் பயன்படுத்தப்பட்டிருக்கும் பொருட்களின் விவரம் வருமாறு:

1. பிரகாசமான கற்கள் (ஏசா 54:11)
2. நீலரத்தினங்களாலான அஸ்திபாரம்.
3. பளிங்கினாலான பலகணிகள். (ஏசா 54:12)
4. மாணிக்கக் கற்களாலான வாசல்கள்.
5. உச்சிதமான கற்களாலான மதில்கள்.

பிரகாசித்தல் (colours) - פּוּךְ - pook - 6320

ஆ.பெ.சொ. - மையிடுதல், பிரகாசித்தல் (to paint; dye)

"நீலரத்தினங்கள்" (sapphires) - வைரத்திற்கு அடுத்தபடியாக உறுதியானது.

பலகணிகள் (windows) - שֶׁמֶשׁ - sheh'-mesh - 8121

பொதுப்பெயர்ச்சொல் - சூரியன், பொழுது, சூரிய உதயம், சூரிய அஸ்தம், வாசல், கிழக்கு (to be brilliant; the sun; a notched battlement)

"வாசல்கள்" - பட்டணத்தின் ஒவ்வொரு பகுதியிலும் மூன்று வாசல்கள் இருக்கும். (எசே 48:29-35).

"மாணிக்கக் கற்கள்" (carbuncles) - எபிரெய பாஷையில் இரண்டு வார்த்தைகள் மாணிக்கக் கற்களைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

மாணிக்கக் கற்கள் (carbuncles) - אֶקְדָּח - ek-dawkh' - 688

பெ.பெ.சொ. - மாணிக்கக்கல்

மாணிக்கம் (carbuncle) - בָּרֶקֶת - baw-reh'-keth - 1304

பெ.பெ.சொ. - மாணிக்கம் (யாத் 28:17; யாத் 39:10; எசே 28:13)

ஏசாயா - தொகுப்புரை

54 அதிகாரம்

"உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்" - இது ஆயிரம் வருஷ அரசாட்சியில் நடைபெறும் சம்பவம். இதுவரையிலும் நிறைவேறவில்லை. மேசியாவின் ஆளுகையில் எல்லோரும் கர்த்தரை அறிந்திருப்பார்கள். (ஏசா 11:9; எரே 6:13; எரே 8:10; எரே 31:34; எரே 42:1,8; எபி 8:11).

"நீதியினால் ஸ்திரப்பட்டிருப்பாய்" - இஸ்ரவேலர்கள் அனைவரும் நீதியினால் ஸ்திரப்பட்டிருப்பார்கள். புறஜாதியாரின் கொடுமைக்குத் தூரமாயிருப்பார்கள். பயமில்லாதிருப்பார்கள். திகிலுக்குத் தூரமாயிருப்பார்கள். இந்தச் சம்பவம் அர்மெகதோன் யுத்தத்திற்குப் பின்பு நடைபெறும். அடுத்த வசனத்தில் புறஜாதியார் இஸ்ரவேலுக்கு விரோதமாக வருவதைப் பற்றி முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் அது கர்த்தரால் கூடுகிற கூட்டமல்ல. (ஏசா 54:15).

"நான் சிருஷ்டித்தேன்" - கர்த்தர் கொல்லனையும் சிருஷ்டித்திருக்கிறார். கெடுத்து நிக்கிரகமாக்குகிறவனையும் சிருஷ்டித்திருக்கிறார். கர்த்தர் இஸ்ரவேலை மேசியாவின்கீழ் கூட்டிச் சேர்க்கும்போது அவர்களுக்கு விரோதமாக உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம். ஆயுதங்கள் மட்டுமல்லாமல் அவர்களுக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் அவர்கள் குற்றப்படுத்துவார்கள். (ஏசா 54:16-17).

"இது கர்த்தருடைய ஊழியக்காரரின் சுதந்தரம்" - இஸ்ரவேல் நீதியாகவும், கர்த்தருடைய ஊழியக்காரர்களாகவும் இருப்பார்கள் என்பதை இந்த வாக்கியம் முன்னறிவிக்கிறது.

55 அதிகாரம்

(5) வா - காரணம்

ஏசா 55:1 ஓ, தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்; பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து, வாங்கிச் சாப்பிடுங்கள்; நீங்கள் வந்து, பணமுமின்றி விலையுமின்றித் திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள்.

ஏசா 55:2 நீங்கள் அப்பமல்லாததற்காகப் பணத்தையும், திருப்திசெய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன்? நீங்கள் எனக்குக் கவனமாய்ச் செவிகொடுத்து, நலமானதைச் சாப்பிடுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும்.

ஏசா 55:3 உங்கள் செவியைச் சாய்த்து, என்னிடத்தில் வாருங்கள்; கேளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும்; தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன்.

ஏசா 55:4 இதோ, அவரை ஜனக்கூட்டங்களுக்குச் சாட்சியாகவும், ஜனங்களுக்குத் தலைவராகவும், அதிபதியாகவும் ஏற்படுத்தினேன்.

ஏசா 55:5 இதோ, நீ அறியாதிருந்த ஜாதியை வரவழைப்பாய்; உன்னை அறியாதிருந்த ஜாதி உன் தேவனாகிய கர்த்தரின் நிமித்தமும், இஸ்ரவேலுடைய பரிசுத்தரின் நிமித்தமும் உன்னிடத்திற்கு ஓடிவரும்; அவர் உன்னை மேன்மைப் படுத்தியிருக்கிறார்.

கர்த்தரால் அழைக்கப்படுகிறவர்கள்

1. தாகமாயிருக்கிறவர்கள்.
2. பணமில்லாதவர்கள்.

தாகமாயிருக்கிறவர்களும், பணமில்லாதவர்களுக்கும் அழைப்பு

1. தண்ணீர்களண்டைக்கு வாருங்கள் (ஏசா 54:1).
2. நீங்கள் வந்து, வாங்கிச் சாப்பிடுங்கள்
3. நீங்கள் வந்து, பணமுமின்றி விலையுமின்றித் திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள்.
4. என்னிடத்தில் வாருங்கள் (ஏசா 54:3).

கர்த்தர் கொடுக்கும் காரியங்கள்

1. தண்ணீர்கள்
2. திராட்சரசம். (ஏசா 55:1, மத் 26:26-29; 1கொரி 10:16-21; 1கொரி 11:25-27)
3. பால் (ஏசா 55:10, 1கொரி 3:2; எபி 5:12-13; 1பேதுரு 2:2)
4. அப்பம் (ஏசா 55:2)
5. திருப்தி செய்யும் பொருட்கள். (ஏசா 55:2)
6. நலமானவை. (ஏசா 55:2)
7. கொழுப்பானவை. (ஏசா 55:2)
8. ஆவிக்குரிய ஜீவன். (ஏசா 55:3)

தண்ணீர்கள், திராட்சரசம், பால், அப்பம் மற்றும் பல பயனுள்ள பொருட்கள் ஆகியவற்றை ஆவிக்குரிய ரீதியாகப் பொருள்கூற வேண்டும். கர்த்தரே இந்த அழைப்பைக் கொடுக்கிறவர். அவர் பொருட்களை விற்கும் வியாபாரி அல்ல. கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்குத் திரளான ஆசீர்வாதங்களை வைத்திருக்கிறார். அவற்றை நாம் இலவசமாக அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

55 அதிகாரம்

"திருப்திசெய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன்" - மனுஷன் அநுதினமும் தன்னைத் திருப்தி செய்யாத பொருட்களுக்காகத் தன்னுடைய நேரத்தையும், பணத்தையும் செலவு செய்கிறான். மனுஷனுடைய ஆத்துமாவைக் கர்த்தரால் மட்டுமே திருப்தி செய்ய முடியும். அதைப் பணத்தாலோ, உலகப் பொருட்களாலோ விலைக்கு வாங்க முடியாது. மனுஷனுக்கு உலகப் பிரகாரமான பொருட்கள் எவ்வளவுதான் இருந்தாலும் அவை அவனைத் திருப்தி செய்வதில்லை.

ஏசாயா 55 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. நீங்கள் எனக்குக் கவனமாய்ச் செவிகொடுங்கள். (ஏசா 55:2).
2. நலமானதைச் சாப்பிடுங்கள்.
3. உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாயிருக்கட்டும்.
4. உங்கள் செவியைச் சாய்த்து, என்னிடத்தில் வாருங்கள் (ஏசா 55:3).
5. கேளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும்.
6. கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள் (ஏசா 55:6).
7. அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்.
8. துன்மார்க்கன் தன் வழியை விட்டு விடட்டும். (ஏசா 55:7).
9. அக்கிரமக்காரன் தன் நினைவுகளை விட்டுவிடட்டும்.
10. அவன் கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன்.

தீர்க்கதரிசன எண் - 68

"உங்கள் செவியைச் சாய்த்து, என்னிடத்தில் வாருங்கள்; கேளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும்......" (ஏசா 55:3-5) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன். (ஏசா 55:3; ஏசா 42:6; ஏசா 49:8; மத் 26:28; எபி 8:6).
2. அவரை (மேசியா) ஜனக்கூட்டங்களுக்குச் சாட்சியாக ஏற்படுத்தினேன். (ஏசா 55:4; யோவான் 5:31-37; யோவான் 8:18; எபி 8:6, வெளி 1:5).
3. அவரை ஜனங்களுக்குத் தலைவராகவும், அதிபதியாகவும் ஏற்படுத்தினேன். (ஏசா 55:4).
4. நீ அறியாதிருந்த ஜாதியை வரவழைப்பாய் (ஏசா 55:5).
5. உன்னை அறியாதிருந்த ஜாதி உன் தேவனாகிய கர்த்தரின் நிமித்தம் உன்னிடத்திற்கு ஓடிவரும்.

"உங்கள் ஆத்துமா பிழைக்கும்" - ஏசா 55:1 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் அழைப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏசா 55:2-7 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அப்போது நம்முடைய ஆத்துமா பிழைக்கும். இல்லையென்றால் நம்முடைய ஆத்துமாவை இழந்துபோவோம். நமக்கு நித்திய மரணம் உண்டாகும். (ஏசா 55:2)

"உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன்" - கர்த்தர் யூதரோடு உடன்படிக்கை பண்ணுவதைப் பல இடங்களில் உறுதிபண்ணியிருக்கிறார். (ஏசா 42:6; ஏசா 49:8; எரே 31:31) இந்த உடன்படிக்கை அவர் ஏற்கெனவே இஸ்ரவேலரோடு பண்ணியிருக்கும் மோசேயின் உடன்படிக்கையோ அல்லது மற்ற உடன்படிக்கைகளோ அல்ல. இது புதிய உடன்படிக்கை. மேசியா வரும்போது ஏற்படுத்தப்படும் உடன்படிக்கை. (ஏசா 42:6; ஏசா 49:8; மத் 26:28; மத் 8:6).

55 அதிகாரம்

"தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகள்" - (ஏசா 55:3; 2நாளா 6:42) தாவீதின் உடன்படிக்கையில் கர்த்தர் கூறியிருக்கும் கிருபையான வாக்குத் தத்தங்களும், அன்பும் அடங்கியுள்ளன. (2சாமு 7) கர்த்தர் இந்த உடன்படிக்கையைத் தாவீதோடு ஆணையிட்டு உறுதி பண்ணியிருக்கிறார். (சங் 89:3-4,27,37; சங் 132:11-18) இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் இந்தத் தீர்க்கதரிசனம் ஓரளவு நிறைவேறியுள்ளது. (அப் 13:34).

"தாவீது" - இந்தப் பெயர் மேசியாவைக் குறிக்காது. இது இஸ்ரவேலின் ராஜாவாகிய தாவீதையே குறிக்கும். (எரே 30:9; எசே 34:23-24; எசே 37:24-25; ஓசி 3:5).

மேசியா இஸ்ரவேலுக்கு ஏற்படுத்தப் பட்டிருக்கும் விதம்

1. உடன்படிக்கை பண்ணுகிறவர். (ஏசா 55:3; ஏசா 42:6; ஏசா 49:8; மத் 26:28; மத் 8:6)
2. சாட்சி(ஏசா 55:4; யோவான் 5:31-37; யோவான் 8:18; வெளி 1:5)
3. தலைவர் (ஏசா 55:4)
4. அதிபதி (ஏசா 55:4)

தலைவர் (Leader) - נָגִיד - naw-gheed', naw-gheed' - 5057

ஆண்பால் பெயர்ச்சொல் - அதிபதி, தலைவன், ராஜாபத்தியம், பெரியோர், பிரபு, பிரதானம், பிரதானி, தளகர்த்தன், விசாரணைக் கர்த்தன், விசாரணைக் காரன், தலைவர், விசாரணைக் கர்த்தா. **(commander; one who occupies the front; a civil, military, and religious leader; captain; chief; governor; noble; prince; chief ruler)**

அதிபதி (Commander) - צָוָה - tsaw-vaw' - 6680

வினைச்சொல் - விலக்கு, கட்டளையிடு, கற்பி, விதி, சொல்லு, உத்தரவு கொடு, அநுக்கிரகம் பண்ணு, நியமி, கட்டளைகொடு, ஆணையிடு, ஏற்படுத்து, விதித்த கட்டளை, கற்பிக்கப்படு, கட்டளையிடப்படு, ஒழுங்குபடுத்து **(to constitute; enjoin; appoint; bid; give charge; command; set in order; send a messenger)**

"இதோ, நீ அறியாதிருந்த ஜாதியை வரவழைப்பாய்" - இந்த வாக்கியத்தில் நீ என்பது மேசியாவைக் குறிக்கும். மேசியா இஸ்ரவேலை அறிந்திருக்கிறார். அவர் மற்ற ஜாதிகளை அறியவில்லை. மேசியா தேவனாகவும், மகிமையுள்ளவராகவும் இருப்பதினால் மற்ற ஜாதிகள் அவரிடத்திற்கு ஓடிவருவார்கள். இந்த வாக்கியம் புறஜாதியாரின் அழைப்பையும், அவர்களுடைய இரட்சிப்பையும் குறிக்கிறது. (ஏசா 55:5; மத் 21:33-45; யோவான் 10:16)

"உன் தேவனாகிய கர்த்தர்" - இந்த வாக்கியத்திற்கு மேசியாவின் தேவனாகிய கர்த்தர் என்று பொருள். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் திரித்துவ தேவனாக இருக்கிறார்கள். இவர்கள் மூவருமே தனித்தனி ஆள்தத்துவப் பண்புடையவர்கள். ஒருசில வசனங்களில் மேசியாவே கர்த்தர் என்று அழைக்கப்படுகிறார். (ஆதி 19:24; சங் 110:1,5) இயேசு கர்த்தரை என் தேவன் என்று அழைத்திருக்கிறார். (யோவான் 20:17) வேதாகமத்தில் திரித்துவ தேவனுடைய சுபாவங்கள் இதுபோல பல வசனங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

(6) தேடு - காரணம்

ஏசா 55:6 கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்; அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்.

55 அதிகாரம்

ஏசா 55:7 துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக் கடவன்; அவர் அவன்மேல் மனதுருகுவார்; நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன்; அவர் மன்னிக்கிறதற்குத்தயை பெருத்திருக்கிறார்.

ஏசா 55:8 என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஏசா 55:9 பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது.

ஏசா 55:10 மாரியும் உறைந்த மழையும் வானத்திலிருந்து இறங்கி, அவ்விடத்துக்குத் திரும்பாமல் பூமியை நனைத்து, அதில் முளை கிளம்பி விளையும்படிச் செய்து, விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது எப்படியோ,

ஏசா 55:11 அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்.

ஏசா 55:12 நீங்கள் மகிழ்ச்சியாய்ப் புறப்பட்டு, சமாதானமாய்க் கொண்டு போகப்படுவீர்கள்; பர்வதங்களும் மலைகளும் உங்களுக்கு முன்பாகக் கெம்பீரமாய் முழங்கி, வெளியின் மரங்களெல்லாம் கைகொட்டும்.

ஏசா 55:13 முட்செடிக்குப் பதிலாகத் தேவதாரு விருட்சம் முளைக்கும்; காஞ்சொறிக்குப் பதிலாக மிருதுச்செடி எழும்பும்; அது கர்த்தருக்குக் கீர்த்தியாகவும், நிர்மூலமாகாத நித்திய அடையாளமாகவும் இருக்கும்.

"கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்" - கர்த்தரைத் தேட வேண்டும். மனந்திருந்த வேண்டும். கர்த்தரிடத்தில் ஜெபிக்க வேண்டும். நம்முடைய பாவங்களை அறிக்கையிடவேண்டும். அப்போதுதான் கர்த்தருடைய கிருபை நமக்கு வெளிப்படும். கர்த்தரைக் கண்டடைவதற்காக நாம் செய்ய வேண்டிய காரியங்கள்.

1. தேடுதல் (ஏசா 55:6; உபா 4:29; 1நாளா 16:11; 1நாளா 28:9; 2நாளா 7:14; 2நாளா 15:2; ஆமோ 5:6; மத் 6:33; அப் 15:17; அப் 17:27; எபி 11:6).
2. மனந்திரும்புதல் (மத் 3:2; மத் 4:17; மாற்கு 1:15; மாற்கு 6:12; லூக்கா 13:1-5; அப் 2:38; அப் 3:19; அப் 17:30; அப் 26:20; 2கொரி 7:8; வெளி 2:5,16).
3. கர்த்தரை நோக்கிக் கூப்பிடுதல் (ஏசா 55:6; யோவே 2:32; செப் 3:9; அப் 2:21; ரோமர் 10:9-14).
4. பாவங்களை அறிக்கையிடுதல் (நீதி 28:13; மத் 3:6; மாற்கு 1:5; ரோமர் 10:9-10; 1யோவான்1:9).
5. ஜெபம்பண்ணுதல். (2நாளா 7:14; லூக்கா 18:10-14; அப் 8:22)
6. நம்மைத் தாழ்த்துதல் (2நாளா 7:14; மத் 18:3-4; மத் 23:12; லூக்கா 14:14; யாக் 4:10).
7. கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டல். (மத் 10:14; மத் 11:15; மத் 13:13-15; யோவான் 12:47; ரோமர் 10:9-14).
8. கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிதல் (ரோமர் 2:4-8; கலா 3:1; கலா 5:7; 2தெச 1:8; எபி 5:9; 1பேதுரு 4:17).

55 அதிகாரம்

கர்த்தரை விசுவாசிக்கிறவர்கள் இந்தக் காரியங்களையெல்லாம் செய்து, கர்த்தரைக் கண்டுகொள்வார்கள். (ரோமர் 10:9-10).

கர்த்தரைக் கண்டடைய முடியாத சமயங்கள்

1. மனுஷன் தன்னுடைய இருதயத்தைக் கர்த்தரை விட்டுத் தூரவிலக்கும் போது. (உபா 30:17-18; 1சாமு 28:6; 1நாளா 10:13-14; 1நாளா 95:7-11; எரே 11:10-12; மத் 13:13-15).
2. கர்த்தரைப் பரியாசம்பண்ணும்போது. (நீதி 1:23-31).
3. கர்த்தருக்கு முன்பாக மனுஷன் தன்னைத் தாழ்த்தாமல் பெருமையுடன் இருக்கும்போது. (நீதி 16).
4. கர்த்தருக்கு விரோதமாகச் செய்த பாவங்களை அறிக்கையிடாமல் இருக்கும்போது. (அப் 5:1-11).
5. பாவத்தில் மரிக்கும்போது. (எபி 9:27).
6. பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாகத் தூஷண வார்த்தைகளைப் பேசும் போது. (மத் 12:31-32).

துன்மார்க்கருக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. துன்மார்க்கன் தன் வழியைவிட்டு விடவேண்டும். (ஏசா 55:7).
2. அக்கிரமக்காரன் தன் நினைவுகளைவிட்டு விடவேண்டும்.
3. அவன் கர்த்தரிடத்தில் திரும்ப வேண்டும்.

இவையெல்லாம் மெய்யான மனமாற்றத்தில் இடம் பெறும் காரியங்களாகும். (2கொரி 7:9-10). ஒருவன் தன்னுடைய துன்மார்க்கமான வழியிலும், அக்கிரமமான சிந்தையிலும் நிலைத்திருக்கும்போது அவன் கர்த்தருக்கு எதிராகக் கலகம்பண்ணுகிறான். அவனுடைய இருதயம் கர்த்தரைவிட்டுத் தூரமாக விலகியிருக்கிறது. அவனுடைய பாவத்திற்கு மரணமே சம்பளமாகக் கொடுக்கப்படும். (மாற்கு 6: 19-21; ரோமர் 1:18-32; 1கொரி 6:9-11; கலா 5:19-21).

"கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன்" - எல்லோரும் பாவம்செய்து ஏகமாய்க் கெட்டுப்போயிருக்கிறார்கள். கர்த்தரைவிட்டுத் தூரமாகவே விலகியிருக்கிறார்கள். ஆகையினால் ஜனங்கள் கர்த்தரிடத்தில் திரும்பி வரவேண்டும். இந்த வாக்கியத்தில் திரும்புதல் என்பதற்கான எபிரெய வார்த்தை "சூப்" **(shuwb)** என்பதாகும். இதற்கு ஆரம்பித்த இடத்திற்குத் திரும்பி வருதல் என்று பொருள். மனுஷன் மண்ணிலிருந்து வந்தவன். ஆகையினால் அவன் மண்ணுக்குத் திரும்புவான். (ஆதி 3:19) இங்கு மனுஷன் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறான். ஆகையினால் அவன் தேவனோடு ஒப்புரவாகி, மறுபடியும் அவ்விடத்திற்குத் திரும்ப வேண்டும். (ஆதி 16:9; ஆதி 31:3,13; உபா 30:2-3,8).

திரும்புதல் (return) - שׁוּב - shoob - 7725

வினைச்சொல் - திரும்பு, திரும்பப்போ, திரும்பவா, பின்வாங்கு, திருப்பு வா, அளி, மனந்திரும்பு, சாய், மாற்று, ஆறு, மாறு, நீங்கு, வற்றிக்கொள், வற்றிப்போ, தணி, புரள், விலகு, தீர், திரி, மறுபடியும்போ, வடி, திரும்பிச்சேர், அழைத்துக்கொள், திரும்பயனுப்பிவிடு, வை, செல், திரும்பக்கிடை, சீர்ப்படு, திரும்ப சீர்ப்படு, திரும்ப முன் போலிரு, பின்செல், விலகிப்போ, வந்திரு, கொண்டுவா, தள்ளப்படு, சரிக்கட்டு, பின்னிட்டுப்போ, திரும்பிவிடு, தவறு, கிடை, திரும்பவிழு, பின்னிடை, யாகூப், திருப்பப்படு, மாற்றாட்டம் பண்ணு, இன்னமும், திரும்புகிறவர், வரவு, கெடு, நடு, அலையவிடு, பிடுங்கு, தேற்று, திருத்துகிறவன், திரும்பவும் தா, திரும்பப் போடும்படிசெய், அனுப்பிவிடு, திரும்ப அனுப்பு, திரும்பப்பண்ணு,

ஏசாயா - தொகுப்புரை

55 அதிகாரம்

திருப்பிக்கொள், திருப்பிக் கொண்டுவந்தவன், திரும்பவை, செலுத்து, திரும்பச் சேர்த்துக் கொள், பலனளி, நீக்கிவிடு, முடக்கிக்கொள், விலக்கு, கொண்டு போ, பாவநிவர்த்தி செய், கொடுத்துவிடு, சேர், திரும்ப அழைத்துவா, எவ்விதத்திலும், முடக்கு, மறுமொழிசொல், திரும்பத் தன் வசமாக்கிக் கொள், திரும்பஅழை, மறுஉத்தரவுகொடு, திரும்பச்சொல்லு, மறுமொழியாகச் சொல்லு, மறு, திரும்ப எடு, காப்பாற்று, திரும்ப எழுப்பு, திரும்ப போடு, திரும்ப அழைத்துக்கொண்டுவா, தப்புவி, கிடைக்கும்படிசெய், திருப்பிக் கொண்டு வா, கொடு, மறி, திரும்பஒப்புவி, மறுபடியும் அழைத்துப்போ, மறுபடியும் வை, கொண்டு வந்திரு, சரிக்குச் சரிக்கட்டு, தெரிவி, எடுத்துக்கொள், திரும்பப்போகப் பண்ணு, வாங்கு, திரும்ப நிறுத்து, எடு, திரும்பப் பிடி, மறுமொழி, அனுப்பு, தடைபண்ணு, எழுப்பு, மறுஉத்தரவு, கொடுக்க ஏவு, ஒப்புக்கொடு, மறுஉத்தரவு சொல்லு, பிரதியுத்தரம்சொல், மழுக்கிப் போடு, திரும்பச் சீர்ப்படுத்து, மறுபடியும் அழைப்பி, உருட்டு, குளிரப்பண்ணு, தடு, திரும்பக் கட்டளையிடு, திரும்ப நடத்திக் கொண்டுபோ, உத்தரவு சொல், திரும்ப உள்ளேவாங்கிக் கொள், திரும்ப அழைத்துப்போ, ஆறுதல் செய், ஆகப்பண்ணு, திரும்பக்கொண்டு வா, திரும்பப்படு

மனந்திரும்புகிறவர்களுக்குக் கூறப்பட்டிருக்கும் வாக்குத்தத்தங்கள்

1. அவர் அவன்மேல் மனதுருகுவார்.

2. அவர் அவனை மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார்.

பெருத்திருக்கிறார் (abundantly) - רָבָה - raw-baw' - 7235

வினைச்சொல் - திரளாய் வர்த்தி, பெருகு, அதிகமாயிரு, பெருகியிரு, அநேகராயிரு, அநேகமாகு, பெரியவனாக்கு, சகல, திரளான, வல்லவனாகு, மிகுதி, மேட்டிமை, கூட்டு, ஏராளம், முற்றிலும், அதிகம், எரிச்சலடை, விலையேறு, பெரிது, நானாவிதம், சேர்த்துக்கொள், பல, விருத்தியடை, வெகு, தூரமாயிரு, சிறந்ததாயிரு, வளர்ந்திரு, வில்வித்தைக் காரனாகு, லாபமாகு, எட்டச் செய், அதிகரித்துக்போ **(increase; be in abundance; excel; be full of; heap; multiply) have plenty** (ஏசா 55:7; 2சாமு 12:30; 2நாளா 31:5). கர்த்தர் எல்லா மீறுதல்களையுமே மன்னிப்பார். (மத் 12:31).

ஒப்புமைகள்

1. பூமியைப் பார்க்கிலும் வானங்கள் உயர்ந்திருக்கிறது. அதுபோல மனுஷருடைய வழிகளைப்பார்க்கிலும் தேவனுடைய வழிகளும், மனுஷருடைய நினைவுகளைப் பார்க்கிலும் தேவனுடைய நினைவுகளும் உயர்ந்திருக்கிறது.

2. மாரியும் உறைந்த மழையும் வானத்திலிருந்து இறங்கி, அவ்விடத்துக்குத் திரும்பாமல் பூமியை நனைத்து, அதில் முளை கிளம்பி விளையும்படிச் செய்து, விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது. அப்படியே தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் தேவனிடத்திற்குத் திரும்பாமல், அது அவர் விரும்புகிறதைச்செய்து, அவர் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும். (ஏசா 55:10-11)

கர்த்தருடைய வழிகளும், நினைவுகளும்

1. கர்த்தர் பாவிகளை மன்னிக்க விரும்புகிறார். (யோவான் 3:16; ரோமர் 5:8).

2. கர்த்தர் மனுஷனுடைய ஏராளமான பாவங்களை மன்னிக்கிறார். (மத் 12:31; மத் 18:21-22; 1யோவான் 1:9).

55 அதிகாரம்

3. கர்த்தர் ஏராளமான பாவிகளை மன்னிக்கிறார். (யோவான் 3:16; 1தீமோ 2:4; 2பேதுரு 3:9; வெளி 22:17).

4. கர்த்தர் எல்லாப் பாவங்களையும் மன்னிக்கிறார். (மத் 12:31-32).

5. கர்த்தர் எவ்வளவு பெரிய பாவமாக இருந்தாலும் மன்னிக்கிறார். (ஏசா 53; யோவான் 3:16)

6. கர்த்தர் மனுஷனுடைய பாவங்களை மன்னிப்பதற்காகத் தம்மையே ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தார்.

தீர்க்கதரிசன எண் - 69

"மாரியும் உறைந்த மழையும் வானத்திலிருந்து இறங்கி, அவ்விடத்துக்குத் திரும்பாமல் பூமியை நனைத்து,............" (ஏசா 55:10-13) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும். (ஏசா 55:11).

2. நீங்கள் மகிழ்ச்சியாய்ப் புறப்பட்டுப் போவீர்கள். (ஏசா 55:12).

3. நீங்கள் சமாதானமாய்க் கொண்டு போகப்படுவீர்கள்.

4. பர்வதங்களும் மலைகளும் உங்களுக்கு முன்பாகக் கெம்பீரமாய் முழங்கும்.

5. வெளியின் மரங்களெல்லாம் கைகொட்டும்.

6. முட்செடிக்குப் பதிலாகத் தேவதாரு விருட்சம் முளைக்கும் (ஏசா 55:13).

7. காஞ்சொறிக்குப் பதிலாக மிருதுச்செடி எழும்பும்.

8. அது கர்த்தருக்குக் கீர்த்தியாகவும், நிர்மூலமாகாத நித்திய அடையாளமாகவும் இருக்கும்.

"அவ்விடத்துக்குத் திரும்பாமல் பூமியை நனைத்து" - (சங் 135:7; எரே 10:13; எரே 51:16).

"அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்" - தேவனுடைய வார்த்தை மழையைப்போன்றது. மழை பூமியில் பெய்து, விதையை முளைக்கச் செய்து, அதைப் புசிக்கிறவனுக்கு ஆகாரத்தைக் கொடுக்கிறது. அதுபோல கர்த்தருடைய வசனம் மனுஷருடைய இருதயங்களில் விதைக்கப்பட்டு, ஆவிக்குரிய கனிகளைக் கொடுக்கிறது. (ஏசா 55:11; உபா 32:2) மழை பல்வேறு விதமான நிலங்களில் விழும். அதுபோலவே கர்த்தருடைய வார்த்தையும் பல்வேறு விதமான இருதயங்களில் விதைக்கப் படுகிறது. (மத் 13:3-8,20-23). மேசியாவின் ஆளுகையின்போது பூமியில் கர்த்தரைப் பற்றிய அறிவு நிரம்பியிருக்கும். (ஏசா 11:9).

"நீங்கள் மகிழ்ச்சியாய்ப் புறப்பட்டு, சமாதானமாய்க் கொண்டு போகப்படுவீர்கள்" - இஸ்ரவேல் புத்திரர் இப்போது அந்நிய தேசங்களில் அலைந்து கொண்டிருக்கிறார்கள். அந்தத் தேசங்களிலிருந்து அவர்கள் சந்தோஷமாகவும், சமாதானமாகவும் தங்களுடைய சொந்த தேசமாகிய பாலஸ்தீன தேசத்திற்குக் கொண்டுபோகப்படுவார்கள். (ஏசா 11:10-12) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இந்தச் சம்பவம் நடைபெறும். அவர்கள் திரும்பி வரும்போது பாலஸ்தீன தேசத்திலுள்ள விருட்சங்களும், பர்வதங்களும், மலைகளும், சந்தோஷமடையும். சாபம் பூமியிலிருந்து ஒழிந்துபோகும். ஆதாமின் வீழ்ச்சிக்கு முன்பாகப் பூமியில் இருந்த ஆசீர்வாதத்தைப்போல மேசியாவின் ஆளுகையிலும் ஆசீர்வாதம் இருக்கும். (ஏசா 55:13; ஏசா 35:1-10; சங் 98:8).

56 அதிகாரம்

(7) நீதியைச் செய் - காரணம்

ஏசா 56:1 கர்த்தர் சொல்லுகிறார்: நீங்கள் நியாயத்தைக் கைக்கொண்டு, நீதியைச் செய்யுங்கள்; என் இரட்சிப்பு வரவும், என் நீதி வெளிப்படவும் சமீபமாயிருக்கிறது.

ஏசா 56:2 இப்படிச் செய்கிற மனுஷனும், இதைப் பற்றிக் கொண்டிருந்து, ஓய்வு நாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்காதபடி ஆசரித்து, ஒரு பொல்லாப்பையும் செய்யாதபடி தன் கையைக் காத்துக் கொண்டிருக்கிற மனுபுத்திரனும் பாக்கியவான்.

ஏசா 56:3 கர்த்தரைச் சேர்ந்த அந்நியபுத்திரன்: கர்த்தர் என்னைத் தம்முடைய ஜனத்தைவிட்டு முற்றிலும் பிரித்துப் போடுவாரென்று சொல்லானாக; அண்ணகனும்: இதோ, நான் பட்டமரமென்று சொல்லானாக.

ஏசா 56:4 என் ஓய்வுநாட்களை ஆசரித்து, எனக்கு இஷ்டமானவைகளைத் தெரிந்து கொண்டு, என் உடன்படிக்கையைப் பற்றிக் கொள்ளுகிற அண்ணகர்களைக் குறித்துக் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்:

ஏசா 56:5 நான் அவர்களுக்கு என் ஆலயத்திலும், என் மதில்களுக்குள்ளும் குமாரருக்கும் குமாரத்திகளுக்குமுரிய இடத்தையும் கீர்த்தியையும் பார்க்கிலும், உத்தம இடத்தையும் கீர்த்தியையும் கொடுப்பேன், என்றும் அழியாத நித்திய நாமத்தை அவர்களுக்கு அருளுவேன்.

ஏசா 56:6 கர்த்தரைச் சேவிக்கவும், கர்த்தருடைய நாமத்தை நேசிக்கவும், அவருக்கு ஊழியக் காரராயிருக்கவும், அவரைச் சேர்ந்து, ஓய்வுநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்காதபடி ஆசரித்து, என் உடன்படிக்கையைப் பற்றிக்கொண்டிருக்கிற அந்நியபுத்திரர் அனைவரையும்,

ஏசா 56:7 நான் என் பரிசுத்த பர்வதத்துக்குக் கொண்டுவந்து: என் ஜெபவீட்டிலே அவர்களை மகிழ்ப் பண்ணுவேன்; அவர்களுடைய சர்வாங்கத் தகனங்களும், அவர்களுடைய பலிகளும், என் பலி பீடத்தின்மேல் அங்கிகரிக்கப் பட்டிருக்கும்; என்னுடைய வீடு சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும்.

ஏசா 56:8 இஸ்ரவேலில் தள்ளுண்டவர்களைச் சேர்க்கிற கர்த்தராகிய ஆண்டவர்: அவனிடத்தில் சேர்க்கப்பட்டவர் களையல்லாமல் இன்னும் அவனிடத்தில் சேர்ப்பேன் என்கிறார்.

ஏசா 56:9 வெளியில் சஞ்சரிக்கிற சகல மிருகங்களே, காட்டிலுள்ள சகல மிருகங்களே, பட்சிக்க வாருங்கள்.

தீர்க்கதரிசன எண் - 70

"கர்த்தர் சொல்லுகிறார்: நீங்கள் நியாயத்தைக் கைக்கொண்டு, நீதியைச் செய்யுங்கள்........" (ஏசா 56:1-8) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. என் இரட்சிப்பு வர சமீபமாயிருக்கிறது. (ஏசா 56:1).

2. என்நீதி வெளிப்பட சமீபமாயிருக்கிறது.

3. நான் அவர்களுக்கு என் ஆலயத்திலும், என் மதில்களுக்குள்ளும் குமாரருக்கும் குமாரத்திகளுக்குமுரிய இடத்தையும் கீர்த்தியையும் பார்க்கிலும், உத்தம இடத்தையும் கீர்த்தியையும் கொடுப்பேன் (ஏசா 56:5).

4. நான் அழியாத நித்திய நாமத்தை அவர்களுக்கு அருளுவேன்.

5. என் உடன்படிக்கையைப் பற்றிக் கொண்டிருக்கிற அந்நியபுத்திரர் அனைவரையும், நான் என் பரிசுத்த பர்வதத்துக்குக் கொண்டுவந்து: என் ஜெபவீட்டிலே அவர்களை மகிழ்ப் பண்ணுவேன் (ஏசா 56:6-7).

ஏசாயா - தொகுப்புரை

56 அதிகாரம்

6. அவர்களுடைய பலிகளும், என் பலிபீடத்தின் மேல் அங்கிகரிக்கப்பட்டிருக்கும் (ஏசா 56:7).

7. என்னுடைய வீடு சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும்.

8. இஸ்ரவேலில் தள்ளுண்டவர்களை நான் சேர்ப்பேன். (ஏசா 56:8).

இஸ்ரவேலுக்கும், மற்றவர்களுக்கும் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. நியாயத்தைக் கைக்கொள்ளுங்கள். (ஏசா 56:1).

2. நீதியைச் செய்யுங்கள்.

3. ஒய்வு நாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்காத படி ஆசரியுங்கள். (ஏசா 56:2).

4. ஒரு பொல்லாப்பையும் செய்யாதபடி கையைக் காத்துக்கொள்ளுங்கள்.

5. கர்த்தரைச் சேர்ந்த அந்நியபுத்திரன்: கர்த்தர் என்னைத் தம்முடைய ஜனத்தை விட்டு முற்றிலும் பிரித்துப் போடுவாரென்று சொல்லானாக (ஏசா 56:3).

6. அண்ணகனும்: இதோ, நான் பட்டமரமென்று சொல்லானாக.

"என் இரட்சிப்பு வரவும், என் நீதி வெளிப்படவும் சமீபமாயிருக்கிறது." - தேவனுடைய இரட்சிப்பும், நீதியும் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இஸ்ரவேல் தேசத்திற்கு வெளிப்படுத்தப்படும். (ஏசா 66:7-8; சக 12:10-13:1; மத்23:37-39; ரோமர் 11:25-29).

"இப்படிச் செய்கிற மனுஷனும்...... பாக்கியவான்" - (ஏசா 56:1)

"ஒய்வு நாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்காத படி ஆசரித்து" - யூதமார்க்கத்தில் ஒய்வுநாளை ஆசரிப்பது ஒரு முக்கியமான பிரமாணமாகும். எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேல் புத்திரர் விடுவிக்கப்பட்டதை நினைவுகூரும் விதமாக ஒய்வுநாள் ஆசரிக்கப் படுகிறது. (உபா 5:15).

"கர்த்தரைச் சேர்ந்த அந்நியபுத்திரன்" - வரலாற்றுக் காலங்களில் புறஜாதியார் யூதமார்க்கத்தைத் தழுவியிருக்கிறார்கள். யெகோவாவின் ஆசீர்வாதங்களிலிருந்து தான் விலக்கி வைக்கப்பட்டிருப்பதாக யாரும் நினைக்கக்கூடாது. தேவனுடைய ஜனங்களுக்கு அருளப்பட்டிருக்கும் உரிமைகளும், சிலாக்கியங்களும் கர்த்தரைத் தெய்வமாக ஏற்றுக் கொள்ளும் எல்லோருக்கும் உரியது. சபையிலிருந்து அக்காலத்தில் விலக்கி வைக்கப்பட்டிருந்த புறஜாதியாருக்கும், அண்ணகருக்கும் கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் இப்போது வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறது. (உபா 23:1-3) ஆயிரம் வருஷ அரசாட்சியின் போது மோசேயின் பிரமாணத்தில் கூறப் பட்டிருக்கும் இந்த வரையறைகள் எல்லாம் அகற்றப்படும். கர்த்தருடைய பிள்ளைகள் எல்லோரும் ஏகமாகத் தேவனுடைய ஆசீர்வாதங்களை அனுபவிப்பார்கள். (கலா 3:28; கொலோ 3:11)

"பட்ட மரம்" - ஆயிரம் வருஷ அரசாட்சியிலும், தேவனுடைய நித்திய ராஜ்யத்திலும் பட்ட மரங்களெல்லாம் குணமாக்கப்பட்டு மற்ற மரங்களைப்போல கனி தரும். அதுபோலவே மனுஷருடைய வியாதிகளெல்லாம் அப்போது குணமாகும். (ஏசா 33:24; ஏசா 35:5-6)

நீதியான கிரியைகள்

1. ஒய்வுநாளை ஆசரிப்பது. (ஏசா 56:4-6)

2. கர்த்தருக்கு இஷ்டமானதைத் தெரிந்து கொள்வது.

3. கர்த்தருடைய உடன்படிக்கையைப் பற்றிக் கொள்வது.

4. கர்த்தரைச் சேர்ந்து கொள்வது. (ஏசா 56:6)

56 அதிகாரம்

5. கர்த்தரைச் சேவிப்பது.

6. கர்த்தருடைய நாமத்தை நேசிப்பது.

7. கர்த்தருக்கு ஊழியக்காரராயிருப்பது.

"என் உடன்படிக்கையைப் பற்றிக் கொள்ளுகிற" - கர்த்தருடைய உடன்படிக்கைக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று பொருத்தனை பண்ணிக்கொள்வது. (ஏசா 56:4,6).

கீழ்ப்படிதலுக்கு வெகுமதிகள்

1. இரட்சிப்பு (ஏசா 56:1)

2. நீதி

3. சந்தோஷம் (ஏசா 56:2)

4. தேவனுடைய ஜனங்களோடு ஐக்கியம். (ஏசா 56:3)

5. சுகமாதல் (ஏசா 56:3)

6. தேவனுடைய ஆலயத்திற்கு வருவது. (ஏசா 56:5)

7. தேவனுடைய நகரத்தில் இடம்பெறுவது.

8. பிள்ளைகளின் கீர்த்தியைவிட மேன்மையான கீர்த்தி.

9. நித்திய நாமம்

10. தேவனுடைய பரிசுத்த பர்வதத்திற்கு வருவது. (ஏசா 56:7)

11. தேவனுடைய ஜெபவீட்டில் மகிழுவது.

12. கர்த்தருக்குச் செலுத்தப்படும் பலிகள் அங்கிகரிக்கப்படுவது.

"என் ஆலயம்" - நித்திய தேவாலயம். (ஏசா 56:5,7; எசே 43:7; சக 6:12-13; மத் 21:13)

"மதில்கள்" - எருசலேமின் மதில்கள்.

"நித்திய நாமம்" - ஒவ்வொரு நபருக்கும் பூமியில் கொடுக்கப்பட்டிருக்கும் பெயரோடு சேர்ந்து நித்திய நாமமும் கொடுக்கப்படும். (வெளி 2:17; வெளி 3:12; வெளி 14:1).

"என் ஜெபவீட்டிலே அவர்களை மகிழப் பண்ணுவேன்" - இரட்சிக்கப்பட்டவர்கள் எல்லோரும் எருசலேமிற்கு வந்து பாலஸ்தீன தேசத்தில் ஜீவிப்பார்கள் என்பது இதன் பொருளல்ல. இதற்கு இவ்வாறு பொருள் கூறினால் வாக்குத்தத்த தேசத்தின் மற்ற இடங்களில் யாரும் வசிக்கமாட்டார்கள். ஜனங்கள் எருசலேமிற்குச் சென்று ஆராதிப்பதற்குத் தேவன் அனுமதி கொடுப்பார் என்பதே இந்த வாக்கியத்தின் பொருளாகும். (ஏசா 2:2-4; சக 14:16-21).

"அவர்களுடைய சர்வாங்கத்தகனங்களும், அவர்களுடைய பலிகளும்" - இவை கர்த்தருடைய பலிபீடத்தின்மேல் அங்கிகரிக்கப் பட்டிருக்கும். ஆயிரம்வருஷ அரசாட்சியிலும், நித்திய பூமியிலும் மிருகங்களைப் பலியிடுவது நித்தியமாக நடைபெறும் என்பது தெரியவருகிறது. (எசே 40-48)

"என் பலிபீடம்" - (மத் 21:13)

"அவனிடத்தில் சேர்க்கப் பட்டவர்களையல்லாமல் இன்னும் அவனிடத்தில் சேர்ப்பேன்" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இஸ்ரவேல் புத்திரர்கள் மறுபடியும் கூட்டிச்சேர்க்கப்படுவார்கள். இதற்கு முன்பாகவே ஒருசிலர் கூட்டிச் சேர்க்கப் பட்டிருப்பார்கள். (ஏசா 11:10-12)

"புசிக்க வாருங்கள்" - ஏசா 56:9 ஆவது வசனத்திலிருந்து புதிய செய்திப்பகுதி ஆரம்பமாகிறது. (ஏசா 56:9-57:21).

5. வேறுபட்ட பிரிவுகள் - (56:10-57:21)

(1) துன்மார்க்கரின் பன்னிரெண்டு அம்ச விளக்கம்

ஏசா 56:10 அவனுடைய காவற்காரர் எல்லாரும் ஒன்றும் அறியாத குருடர்; அவர்களெல்லாரும் குலைக்கமாட்டாத ஊமையான நாய்கள்; தூக்கமயக்கமாய்ப் புலம்புகிறவர்கள், படுத்துக் கொள்ளுகிறவர்கள், நித்திரைப் பிரியர்;

56 அதிகாரம்

ஏசா 56:11 திருப்தியடையாமலிருக்கும் பெருவயிற்று நாய்கள்; பகுத்தறிவில்லாத மேய்ப்பர்; அவர்களில் ஒவ்வொருவனும் தன் தன் வழியையும், அவனவன் தன் தன் மூலையிலிருந்து தன் தன் பொழிவையும் நோக்கிக் கொண்டிருக்கிறான்.

ஏசா 56:12 வாருங்கள், திராட்சரசத்தைக் கொண்டுவருவேன், மதுவைக் குடிப்போம்; நாளையத்தினம் இன்றையத்தினம் போலவும், இதற்கு அதிகமாகவும் இருக்கும் என்பார்கள்.

துன்மார்க்கமான ஜாமக்காரர்கள்

1. ஒன்றும் அறியாதவர்கள் (ஏசா 56:10)
2. குருடர்கள்.
3. குலைக்கமாட்டாதவைகள்.
4. ஊமையான நாய்கள்
5. நித்திரைப் பிரியர்
6. சோம்பேறிகள்
7. திருப்தியடையாமலிருக்கும் பெரு வயிற்று நாய்கள் (ஏசா 56:11).
8. பேராசைக்காரர்கள்.
9. பகுத்தறிவில்லாத மேய்ப்பர்.
10. சுயநலக்காரர்கள்.
11. தன் தன் பொழிவை நோக்கிக் கொண்டிருக்கிறவர்கள்.
12. குடிகாரர்கள். (ஏசா 56:12).

57 அதிகாரம்

(2) நீதிமான் - நான்கு ஆசீர்வாதங்கள்

ஏசா 57:1 நீதிமான் மடிந்துபோகிறான், ஒருவரும் அதை மனதில் வைக்கிறதில்லை; புத்திமான்கள் எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள், ஆனாலும் தீங்குவராததற்குமுன்னே நீதிமான் எடுத்துக் கொள்ளப்படுகிறான் என்பதைச் சிந்திப்பார் இல்லை.

ஏசா 57:2 நேர்மையாய் நடந்தவர்கள் சமாதானத்துக்குள் பிரவேசித்து, தங்கள் படுக்கைகளில் இளைப்பாறுகிறார்கள்.

"நீதிமான் மடிந்துபோகிறான், ஒருவரும் அதை மனதில் வைக்கிறதில்லை" - நீதிமானுடைய ஆசீர்வாதமான முடிவை துன்மார்க்கர் நினைத்துப் பார்ப்பதில்லை. (ஏசா 57:1-2)

நீதிமானுடைய மரணத்தில் ஆசீர்வாதங்கள்

1. தீங்குவராததற்குமுன்னே நீதிமான் எடுத்துக் கொள்ளப்படுகிறான் (ஏசா 57:1).
2. நேர்மையாய் நடந்தவர்கள் சமாதானத்துக்குள் பிரவேசிப்பார்கள். (ஏசா 57:2).
3. தங்கள் படுக்கைகளில் இளைப்பாறுகிறார்கள்.

(3) துன்மார்க்கன் - இருபது பாவங்கள்

ஏசா 57:3 நாள்பார்க்கிறவளின் பிள்ளைகளே, விபசாரனுக்கும் வேசிக்கும் பிறந்த சந்ததியாரே, நீங்கள் இங்கே கிட்டிவாருங்கள்.

ஏசா 57:4 நீங்கள் யாரைப் பரியாசம் பண்ணுகிறீர்கள்? யாருக்கு விரோதமாய் வாயைத் திறந்து, நாக்கை நீட்டுகிறீர்கள்? நீங்கள் துரோகம்பண்ணுகிற பிள்ளைகளும், கள்ளச் சந்ததியாருமல்லவோ?

ஏசா 57:5 நீங்கள் பச்சையான சகல மரத்தின்கீழும், விக்கிரக தேவர்களோடே மோகாக்கினியில் வெந்து, பள்ளத்தாக்குகளிலே கன்மலை வெடிப்புகளின் கீழ்ப் பிள்ளைகளைக் கொன்று போடுகிறவர்கள்.

ஏசா 57:6 பள்ளத்தாக்குகளிலுள்ள வழவழப்பான சிலைகளிடத்தில் உன் பங்கு இருக்கிறது; அவைகள், அவைகளே உன் வீதம்; அவைகளுக்கு நீ பானபலியை வார்த்து, போஜனபலியையும் செலுத்துகிறாய்; இவைகளின்மேல் பிரியப்படுவேனோ?

ஏசா 57:7 நீ உயரமும் உன்னதமுமான மலைகளின்மேல் உன் மஞ்சத்தை வைக்கிறாய்; அங்கேயும் பலியிடும்படி ஏறுகிறாய்.

ஏசா 57:8 கதவுகளுக்கும் நிலைகளுக்கும் பின்னாக உன் ஞாபகக்குறியை வைக்கிறாய்; நீ என்னைவிட்டுப்போய் மற்றவர்களுக்கு உன்னை வெளிப்படுத்தினாய்; ஏறிப்போய் உன் மஞ்சத்தை அகலமாக்கி, அவர்களோடே உடன்படிக்கை பண்ணினாய்; அவர்களுடைய மஞ்சத்தைக் காண்கிற எல்லா இடத்திலும் அதை நேசிக்கிறாய்.

ஏசா 57:9 நீ தைலத்தைப் பூசிக்கொண்டு ராஜாவினிடத்தில் போகிறாய்; உன் பரிமளங்களை மிகுதியாக்கி, உன் ஸ்தானாபதிகளைத் தூரத்துக்கு அனுப்பி, உன்னைப் பாதாளமட்டும் தாழ்த்துகிறாய்.

57 அதிகாரம்

ஏசா 57:10 வழிதூரமானதால் உழன்று போகிறாய்; அது விருதாவென்று நீ சொல்லுகிறதில்லை; உன் கைபெலத்தைக் கண்டு பிடித்தாய்; ஆகையால் நீ ஆயாசப்படவில்லை.

ஏசா 57:11 நீ யாருக்கு அஞ்சிப் பயப்படுகிறாய், நீ பொய் சொல்லுகிறாயே; நீ என்னை நினையாமலும், உன் மனதிலே வைக்காமலும் போகிறாய்; நான் வெகுகாலம் மவுனமாயிருந்தேன் அல்லவா? ஆகையால் எனக்குப் பயப்படாதிருக்கிறாய்.

ஏசா 57:12 உன் நீதியையும் உன் கிரியைகளையும் நான் வெளிப்படுத்துவேன், அவைகள் உனக்கு உதவாது.

"விபசாரனுக்கும் வேசிக்கும் பிறந்த சந்ததியாரே" - யூதா தேசத்தில் விபசாரமும், வேசித்தனமும் அதிகமாகக் காணப்பட்டது. ஆகையினால் அவர்களுடைய பிள்ளைகள் துரோகம் பண்ணுகிறவர்களாகவும், அவர்களுடைய சந்ததியார் கள்ளச் சந்ததியாராகவும் கூறப்பட்டிருக்கிறார்கள். (ஏசா 57:3-4).

"இங்கே கிட்டிவாருங்கள்" - யூதா தேசத்தில் துன்மார்க்கமாக ஜீவிக்கிறவர்கள் கர்த்தருடைய எச்சரிப்பின் சத்தத்தைக் கேட்பதற்கு அவரிடத்தில் கிட்டி வரவேண்டும். (ஏசா 57:3-12).

துன்மார்க்கரின் பாவங்கள்

1. நாள்பார்க்கிறவர்கள். (ஏசா 57:3)
2. விபசாரனுக்கும் வேசிக்கும் பிறந்தவர்கள்.
3. பரியாசம்பண்ணுகிறவர்கள்.(ஏசா 57:4)
4. மற்றவர்களைக் குற்றப்படுத்துவதற்கு தங்கள் நாக்கை நீட்டுகிறவர்கள். (ஏசா 57:சங் 22:7,13)
5. துரோகம்பண்ணுகிறவர்கள்.(ஏசா 57:4)
6. கள்ளச் சந்ததியார்கள்.
7. மோகாக்கினியில் வெந்துபோனவர்கள். (ஏசா 57:5)
8. விக்கிரகாராதனைக்காரர்கள்
9. பிள்ளைகளைக் கொன்று போடுகிறவர்கள். (ஏசா 57:5; லேவி 20:2-5; 2நாளா 28:3; 2நாளா 33:6; எரே 7:31)
10. பள்ளத்தாக்குகளிலுள்ள வழவழப்பான சிலைகளை ஆராதிக்கிறவர்கள். (ஏசா 57:6)
11. உயரமும் உன்னதமுமான மலைகளின் மேல் வேசித்தனம் பண்ணுகிறவர்கள். (ஏசா 57:7)
12. வீடுகளில் விக்கிரகங்களை வைத்து அதை ஆராதிக்கிறவர்கள். (ஏசா 57:8)
13. கர்த்தரைத் தவிர வேறு விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள்.
14. விக்கிரகாராதனைக் காரரோடு வேசித்தனம் பண்ணுகிறார்கள்.
15. விக்கிரகங்களோடு உடன்படிக்கை பண்ணுகிறார்கள்.
16. விக்கிரகாராதனை செய்வதற்குத் தங்களுடைய இடங்களைத் தருகிறார்கள்.
17. விக்கிரகாராதனை செய்யும் தேசங்களோடு உடன்படிக்கை பண்ணிக் கொள்கிறார்கள். (ஏசா 57:9-10)
18. வேசித்தனத்திற்கு ஏதுவாகத் தைலங்களைப் பூசிக்கொள்கிறார்கள். (ஏசா 57:9)
19. பாவத்தில் விழுந்து பாதாளம்மட்டும் தங்களைத் தாழ்த்துகிறார்கள்.
20. கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணி அஞ்சிப் பயப்படுகிறார்கள். (ஏசா 57:11)

57 அதிகாரம்

"விக்கிரக தேவர்களோடே மோகாக்கினியில் வெந்து" - விக்கிரகாராதனை செய்வதற்கு ஏராளமான பக்தர்களை வரவழைப்பதற்காக அக்காலத்தில் வேசிகளைப் பயன்படுத்தினார்கள். மோளேகிற்கும், மற்ற தெய்வங்களுக்கும் சிறு பிள்ளைகளைப் பலியிட்டார்கள். இவர்கள் விக்கிரக தேவர்களோடே மோகாக்கினியில் வெந்துபோயிருக்கிறார்கள். (ஏசா 57:5-11)

விக்கிரகாராதனை நடைபெறும் இடங்கள்

1. பச்சையான சகல மரத்தின்கீழ்.
2. பள்ளத்தாக்குகளில்.
3. கன்மலை வெடிப்புகளின் கீழ் (ஏசா 57:5)
4. உயரமும் உன்னதமுமான மலைகளின்மேல் (ஏசா 57:7)

"பள்ளத்தாக்குகளிலுள்ள வழவழப்பான சிலைகளிடத்தில் உன் பங்கு இருக்கிறது" - ஆற்றோரங்களில் காணப்படும் வழவழப்பான கற்களை அக்காலத்தில் ஞாபகச் சின்னங்களாகப் பயன்படுத்தினார்கள். அதை அபிஷேகம்பண்ணி அதற்குப் பலிகளைச் செலுத்தினார்கள். (ஆதி 28:18; உபா 7:5; உபா 12:3; உபா 32:31,37; அப் 19:35).

"நீ உயரமும் உன்னதமுமான மலைகளின் மேல் உன் மஞ்சத்தை வைக்கிறாய்" - விக்கிரகாராதனையில் வேசித்தனமும் கலந்திருக்கிறது. இவ்விரண்டையும் வேறுபிரிக்க முடியவில்லை. வேசித்தனம் வீடுகளிலும், பொது இடங்களிலும் நடைபெறுகிறது. இதற்கு ஏற்ற பிரகாரமாக அவர்கள் தங்களுடைய மஞ்சங்களையும் அமைத்துக் கொள்கிறார்கள். (ஏசா 57:8).

"நீ தைலத்தைப் பூசிக்கொண்டு ராஜாவினிடத்தில் போகிறாய்" - விக்கிரகாராதனை செய்யும் தேசங்களோடு யூதா தேசத்தார் உடன்படிக்கை பண்ணிக் கொள்கிறார்கள். அவர்களுடைய விக்கிரகாராதனையின் பழக்கவழக்கங்களையும், வேசித்தனங்களையும் இவர்களும் பின்பற்றுகிறார்கள். இதனால் இவர்கள் தங்களை நரகத்திற்கு நேராக வழிநடத்துகிறார்கள்.

"நீ யாருக்கு அஞ்சிப் பயப்படுகிறாய்" - இஸ்ரவேல் புத்திரர் ஒவ்வொரு தேசமாகத் தேடிச் சென்று உடன்படிக்கை பண்ணுகிறார்கள். பணத்தினாலும், சுயபெருமையினாலும் சந்தோஷமாக இருக்க முயற்சி பண்ணினார்கள். கர்த்தரை நினைக்காமல் மறந்துவிட்டார்கள். இதனால் அவர்களுடைய வாழ்வில் மெய்யான சந்தோஷம் உண்டாகவில்லை. அவர்களுக்கு நம்பிக்கையில்லை. அவர்கள் மனுஷரிடத்தில் பொய்கூறி மனுஷருக்குப் பயந்து ஜீவிக்கிறார்கள். அவர்களுடைய பிரயாசமெல்லாம் பிரயோஜனமற்றவை. (ஏசா 57:10-12).

"நான் வெகுகாலம் மவுனமாயிருந்தேன் அல்லவா? ஆகையால் எனக்குப் பயப்படாதிருக்கிறாய்." - இஸ்ரவேல் புத்திரர் பாவம் செய்தபோது கர்த்தர் அவர்களை உடனடியாகத் தண்டியாமல் மௌனமாக இருந்தார். ஆகையினால் அவர்கள் தங்களுடைய பாவங்களுக்குக் கர்த்தர் தங்களைத் தண்டிக்கமாட்டார் என்று இறுமாப்பாக இருக்கிறார்கள். கர்த்தருக்குப் பயப்படாமல் ஜீவிக்கிறார்கள். ஆனால் கர்த்தரோ அவர்களுடைய நீதியையும், கிரியைகளையும் இப்போது வெளிப்படுத்துவதாகக் கூறுகிறார். அவர்களுடைய முயற்சிகளும், அவர்களுடைய செல்வங்களும் அவர்களுக்குப் பிரயோஜனமற்றவை. (ஏசா 57:12,13)

(4) நீதிமான் - பத்து ஆசீர்வாதங்கள்

ஏசா 57:13 நீ கூப்பிடும்போது, உன் கணங்கள் உன்னைத் தப்புவிக்கட்டும்; காற்று அவைகளையெல்லாம் பறக்கடித்து, மாயை அவைகளைக் கொண்டுபோம்; என்னை நம்பியிருக்கிறவனோ தேசத்தைச் சுதந்தரித்து, என் பரிசுத்த பர்வதத்திலே காணியாட்சிக் காரனாயிருப்பான்.

57 அதிகாரம்

ஏசா 57:14 வழியை உயர்த்தி உயர்த்தி, அதைச் செம்மைப்படுத்தி, இடறல்களை என் ஜனத்தின் வழியிலிருந்து எடுத்துப் போடுங்கள் என்னப்படும்.

ஏசா 57:15 நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார்: உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம் பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன்.

ஏசா 57:16 நான் எப்போதும் வழக்காடமாட்டேன்; நான் என்றைக்கும்கோபமாயிருப்பதுமில்லை; ஏனென்றால், ஆவியும், நான் உண்டுபண்ணின ஆத்துமாக்களும், என் முகத்துக்கு முன்பாகச் சோர்ந்துபோகுமே.

ஏசா 57:17 நான் அவர்கள் பொருளாசையென்னும் அக்கிரமத்தினிமித்தம் கடுங்கோபமாகி, அவர்களை அடித்தேன்; நான் மறைந்து, கடுங்கோபமாயிருந்தேன்; தங்கள் மனம்போனபோக்கிலே மாறுபாடாய் நடந்தார்களே.

ஏசா 57:18 அவர்கள் வழிகளை நான் பார்த்து, அவர்களைக் குணமாக்குவேன்; அவர்களை நடத்தி, திரும்பவும் அவர்களுக்கும் அவர்களிலே துக்கப் படுகிறவர்களுக்கும் ஆறுதல் அளிப்பேன்.

ஏசா 57:19 தூரமாயிருக்கிறவர்களுக்கும் சமீபமாயிருக்கிறவர்களுக்கும் சமாதானம் சமாதானம் என்று கூறும் உதடுகளின் பலனைச் சிருஷ்டிக்கிறேன்; அவர்களைக் குணமாக்குவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தீர்க்கதரிசன எண் - 71

"நீ கூப்பிடும்போது, உன் கணங்கள் உன்னைத் தப்புவிக்கட்டும்......" (ஏசா 57:13-19) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. நீ கூப்பிடும்போது, உன் கணங்கள் உன்னைத் தப்புவிக்காது. காற்று அவைகளையெல்லாம் பறக்கடித்து, மாயை அவைகளைக் கொண்டுபோம் (ஏசா 57:13)
2. என்னை நம்பியிருக்கிறவனோ தேசத்தைச் சுதந்தரித்து, என் பரிசுத்த பர்வதத்திலே காணியாட்சிக் காரனாயிருப்பான்.
3. தேவனுடைய ஜனத்திற்கு எதிராக இருக்கும் இடறல்கள் எடுத்துப்போடப்படும். (ஏசா 57:14)
4. நான் எப்போதும் என் ஜனங்களோடே வழக்காடமாட்டேன்; நான் என்றைக்கும் என் ஜனங்கள்மீது கோபமாயிருப்பதுமில்லை (ஏசா 57:16)
5. நான் நீதிமான்களைக் குணமாக்குவேன். ஆறுதல் அளிப்பேன். (ஏசா 57:18-19)

கர்த்தரைப் பற்றிய சத்தியம்

1. கர்த்தர் கலகக்காரர்மீது நீடிய பொறுமையோடு இருக்கிறார். (ஏசா 57:11).
2. கலகம் செய்கிறவர்களுக்கு வரும் தீமையான விளைவுகளை முன்னறிவிக்கிறார். (ஏசா 57:12).

57 அதிகாரம்

3. தம்மை நம்புகிறவர்களுக்கு வரும் ஆசீர்வாதங்களை முன்னறிவிக்கிறார். (ஏசா 57:13-19).
4. நித்திய வாசி. (ஏசா 57:15).
5. பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவர்.
6. மகத்துவமும் உன்னதமுமானவர்
7. உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிறவர்.
8. பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறவர்.
9. நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறவர்.
10. அவர் எப்போதும் வழக்காடமாட்டார். (ஏசா 57:16).
11. அவர் என்றைக்கும் கோபமாயிருப்பதுமில்லை
12. அவர் ஆத்துமாக்களை உண்டு பண்ணுகிறார்.
13. ஆத்துமாக்களைச் சோர்ந்துபோக விடமாட்டார்.
14. நீதிமான்களைக் குணப்படுத்தி புதுப்பிக்கிறார். துன்மார்க்கரைத் தண்டிக்கிறார். (ஏசா 57:18-21).

"உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான்" - (2பேதுரு 3).

கர்த்தர் வாசம்பண்ணுகிற ஸ்தலங்கள்

1. பரலோகம் (ஏசா 57:15; 1இராஜா 8:30,39,43,49; மத் 6:9; யோவான் 17:1)
2. புதிய பூமியில் தம்முடைய பரிசுத்த நகரம். (வெளி 21:3)
3. இஸ்ரவேலர் நடுவே ஆசரிப்புக்கூடாரம் (யாத் 15:17; யாத் 25:8; யாத் 29:45-46)
4. காரிருள். (1இராஜா 8:12; 2நாளா 6:1)
5. ஒளி (1தீமோ 6:16)
6. எருசலேம் (சங் 135:21)
7. சீயோன் (யோவே 3:17)
8. கிறிஸ்து (யோவான் 14:10)
9. ஜனங்கள் (2கொரி 6:16)
10. விசுவாசிகள் (ஏசா 57:15; யோவான் 14:23)

"பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும்" - கர்த்தர் பரலோகத்தில் வாசம் பண்ணுகிறார். அதேசமயத்தில் அவர் நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறார். (லூக்கா 22:3) புதிய பூமியில் கர்த்தர் ஜனங்கள் மத்தியில் பிரத்தியட்சமாக வாசம் பண்ணுவார். (வெளி 21:3).

கர்த்தர் மனுஷரோடு வாசம் பண்ணுவதற்குக் காரணம்

1. பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கு
2. நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கு

"நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்கள்" - (சங் 34:18)

"நான் எப்போதும் வழக்காடமாட்டேன்" - (சங் 78:38-39; சங் 103:9-14)

"ஆவியும், நான் உண்டுபண்ணின ஆத்துமாக்களும், என் முகத்துக்கு முன்பாகச் சோர்ந்துபோகுமே" - கர்த்தருடைய கோபத்தை மனுஷரால் தாங்கிக் கொள்ள முடியாது. ஆகையினால் கர்த்தர் தம்முடைய கோபத்தை மட்டாக வெளிப்படுத்துகிறார். கர்த்தர் காயப்படுத்தினாலும், அவர் காயம்கட்டி குணப்படுத்துவார். (ஏசா 57:17,18)

57 அதிகாரம்

"உதடுகளின்பலன்" - கர்த்தரைத் துதிக்கும் வார்த்தைகளே உதடுகளின் பலனாகும். (எபி 13:15).

"சமாதானம் சமாதானம்" - கர்த்தர் புறஜாதியாருக்குச் சமாதானத்தைக் கூறுகிறார். இவர்கள் இதுவரையிலும் கர்த்தருக்குத் தூரமானவர்களாக இருந்தார்கள். யூதர்கள் மட்டுமே கர்த்தருக்கு நெருக்கமாக இருந்தார்கள். இப்போது புறஜாதியாருக்கும், கர்த்தருடைய சமாதானம் கூறப்படுகிறது. (அப் 2:39; எபே 2:17).

"அவர்களைக் குணமாக்குவேன்" - கர்த்தர் நீதிமான்களைக் குணமாக்குவார். இந்த வாக்கியத்தை இரண்டாம்முறையாகக் கூறுகிறார். நீதிமான்கள் யூதர்களாக இருந்தாலும் புறஜாதியாராக இருந்தாலும் கர்த்தர் அவர்களைக் குணப்படுத்துவார். (ஏசா 57:18-19) ஆனால் துன்மார்க்கருக்கோ சமாதானமும் இல்லை. குணமாதலும் இல்லை. (ஏசா 57:20-21) இந்த வாக்கியத்தில் குணமாக்குதல் என்பது சரீரப் பிரகாரமான குணமாதலைக் குறிக்கும். இது ஆவிக்குரிய குணமாதல் அல்ல. (ஏசா 6:10 =மத் 13:13-15; ஏசா 19:22; ஏசா30:26; ஏசா 53:6=மத் 8:16-17) கர்த்தர் ஆத்துமாவையும் குணப்படுத்துகிறார். (சங் 41:4) சரீரத்தையும் குணப்படுத்துகிறார்.

(5) துன்மார்க்கன் - சமாதானமில்லை

ஏசா 57:20 துன்மார்க்கரோ கொந்தளிக்கும் கடலைப்போலிருக்கிறார்கள்; அது அமர்ந்திருக்கக் கூடாமல், அதின் ஜலங்கள் சேற்றையும் அழுக்கையும் கரையில் ஒதுக்குகிறது.

ஏசா 57:21 துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லையென்று என் தேவன் சொல்லுகிறார்.

"துன்மார்க்கரோ கொந்தளிக்கும் கடலைப் போலிருக்கிறார்கள்" - துன்மார்க்கர் எப்போதும் கொந்தளித்துக் கொண்டிருப்பார்கள். எந்தப் பாவத்தைச் செய்வது, எந்தத் தீங்கைச் செய்வது என்று எப்போதும் சிந்தித்துக் கொண்டிருப்பார்கள். அவர்களுடைய ஆத்துமா ஒருபோதும் சமாதானமாக இராது. (ஏசா 57:20-21) தங்களுடைய ஐசுவரியத்திலும், வசதிகளிலும் அவர்கள் திருப்தியாக இருக்கமாட்டார்கள். எப்போதும் பேராசையுடன் இருப்பார்கள். மற்றவர்களைப் பார்த்து பொறாமைப்படுவார்கள். கர்த்தருக்கு எதிராகக் கலகம் பண்ணுவார்கள். அவர்களுடைய கடந்தகால ஜீவியத்தில் குற்ற உணர்வு அவர்களை வருத்தும். மரண பயம் அவர்களுக்குள் உண்டாயிருக்கும். ஆகையினால் அவர்கள் அமைதியில்லாமல் கொந்தளிக்கும் கடலைப்போலிருக்கிறார்கள்.

58 அதிகாரம்

X. மேசியாவின் இரண்டாவது வருகையினால் ஆறுதல் - (58:1-66:24)

1. இஸ்ரவேலின் தேவதூஷணம் - (58:1-59:15)

(1) நான்கு அம்ச சுயநீதி

ஏசா 58:1 சத்தமிட்டுக் கூப்பிடு; அடக்கிக் கொள்ளாதே; எக்காளத்தைப் போல் உன் சத்தத்தை உயர்த்தி, என் ஜனத்துக்கு அவர்கள் மீறுதலையும், யாக்கோபின் வம்சத்தாருக்கு அவர்கள் பாவங்களையும் தெரிவி.

ஏசா 58:2 தங்கள் தேவனுடைய நியாயத்தை விட்டு விலகாமல் நீதியைச் செய்துவருகிற ஜாதியாரைப்போல் அவர்கள் நாடோறும் என்னைத் தேடி, என் வழிகளை அறிய விரும்புகிறார்கள்; நீதி நியாயங்களை என்னிடத்தில் விசாரித்து, தேவனிடத்தில் சேர விரும்புகிறார்கள்.

ஏசாயாவிற்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. சத்தமிட்டுக் கூப்பிடு.
2. அடக்கிக் கொள்ளாதே.
3. எக்காளத்தைப் போல் உன் சத்தத்தை உயர்த்து.
4. அவர்கள் பாவங்களைத் தெரிவி. (மீகா 3:8)

மாய்மாலக்காரரின் பாவங்கள்

1. அவர்கள் நாடோறும் தேவனைத் தேடுகிறார்கள். (ஏசா 58:2) தாங்கள் பக்தியோடு கர்த்தரைத் தேடுவதாக நடித்து மற்றவர்களை ஏமாற்றுகிறார்கள்.
2. தேவனுடைய வழிகளை அறிய விரும்புகிறார்கள். (ஏசா 58:2) இதுவும் அவர்களுடைய நடிப்பு தான். அவர்களுடைய இருதயம் கர்த்தரைவிட்டு தூரவிலகியிருக்கிறது. (ஏசா 29:13)
3. நீதியைத் தேவனிடத்தில் விசாரிக்கிறார்கள். (ஏசா 58:2) இவர்கள் தேவனுடைய பிரமாணத்தைத் தொடர்ந்து மீறுகிறார்கள். ஆனாலும் தேவனிடத்தில் விசாரிக்கிறார்கள். (ஏசா 1:4-15) இயேசு கிறிஸ்துவின் நாட்களில் மேசியாவைக் கொலைசெய்யும் வரையிலும் நாங்கள் புசிப்பதில்லை என்று மாய்மாலக் காரர்கள் ஆணையிட்டார்கள். (யோவான் 18:28)
4. நியாயத்தைத் தேவனிடத்தில் விசாரிப்பதுபோல நடிக்கிறார்கள். (ஏசா 58:2, ஏசா 1:4-15).
5. தேவனுடைய நியாயத்தை விட்டு விலகாமல் இருக்கிறவர்கள்போல தங்களைக் காண்பித்துக் கொள்கிறார்கள். (ஏசா 58:2, ஏசா 1:4-15; ஏசா 5:8-23; ஏசா 6:10; மத் 23).
6. நீதியைச் செய்துவருகிற ஜாதியாரைப்போல் தங்களைக் காண்பித்துக் கொள்கிறார்கள். (ஏசா 58:2, ஏசா 1:4-15; மத் 23).
7. தங்கள் உபவாசத்தைக் கர்த்தர் நோக்கவில்லை என்று முறையிடுகிறார்கள். (ஏசா 58:3)
8. தங்கள் ஆத்துமா ஒடுக்கப்படுவதைக் கர்த்தர் அறியவில்லை என்று முறையிடுகிறார்கள். (ஏசா 58:3)
9. உபவாசிக்கும் நாளிலே தங்கள் இச்சைகளின்படி நடந்து கொள்கிறார்கள். (ஏசா 58:3).
10. தங்கள் வேலைகளையெல்லாம் கட்டாயமாய்ச் செய்கிறார்கள். (ஏசா 58:3)

58 அதிகாரம்

11. வழக்குக்கும் வாதுக்கும் துஷ்டத்தனத்தையுடைய கையினால் குத்துகிறதற்கும் உபவாசிக்கிறார்கள். (ஏசா 58:4).

12. தங்கள் கூக்குரலை உயரத்திலே கேட்கப்பண்ணும் படியாய் உபவாசிக்கிறார்கள். (ஏசா 58:4).

13. மனுஷன் தன் ஆத்துமாவை ஒடுக்குகிறது போலவும், தலைவணங்கி நாணலைப் போல் இரட்டிலும் சாம்பலிலும் படுத்துக் கொள்ளுகிறது போலவும் மாய்மாலமாக உபவாசம் பண்ணுகிறார்கள். (ஏசா 58:5)

14. மனுஷர் காணும்படியாக உபவாசம் பண்ணுகிறார்கள். (ஏசா 58:5).

(2) பத்து அம்ச மாய்மாலம் - (1:10)

ஏசா 58:3 நாங்கள் உபவாசம் பண்ணும் போது நீர் நோக்காமலிருக்கிறதென்ன? நாங்கள் எங்கள் ஆத்துமாக்களை ஒடுக்கும்போது நீர் அதை அறியாமலிருக்கிறதென்ன என்கிறார்கள்; இதோ, நீங்கள் உபவாசிக்கும் நாளிலே உங்கள் இச்சையின்படி நடந்து, உங்கள் வேலைகளையெல்லாம் கட்டாயமாய்ச் செய்கிறீர்கள்.

ஏசா 58:4 இதோ, வழக்குக்கும் வாதுக்கும் துஷ்டத்தனத்தையுடைய கையினால் குத்துகிறதற்கும் உபவாசிக்கிறீர்கள்; நீங்கள் உங்கள் கூக்குரலை உயரத்திலே கேட்கப்பண்ணும் படியாய், இந்நாளில் உபவாசிக்கிறது போல் உபவாசியாதிருங்கள்.

ஏசா 58:5 மனுஷன் தன் ஆத்துமாவை ஒடுக்குகிறதும், தலைவணங்கி நாணலைப்போல் இரட்டிலும் சாம்பலிலும் படுத்துக்கொள்ளுகிறதும், எனக்கு பிரியமான உபவாச நாளாயிருக்குமோ? இதையா உபவாசமென்றும் கர்த்தருக்குப் பிரியமான நாளென்றும் சொல்லுவாய்?

உபவாசிக்கும்போது செய்யக்கூடாத காரியங்கள்

1. கர்த்தருக்கு எதிராக முறையிடக்கூடாது. (ஏசா 58:3)

2. கர்த்தருடைய கவனத்தை ஈர்ப்பதற்காக ஆத்துமாக்களை ஒடுக்கக்கூடாது. (ஏசா 58:3-5)

3. தங்கள் இச்சையின்படி நடக்கக்கூடாது. (ஏசா 58:3)

4. வேலைகள் செய்யக்கூடாது.

5. வழக்கும், வாதும் இருக்கக்கூடாது. (ஏசா 58:4)

6. துஷ்டத்தனத்தையுடைய கையினால் குத்தக்கூடாது.

7. கூக்குரலை உயரத்திலே கேட்கப்பண்ணக் கூடாது.

8. நாணலைப்போல தலைவணங்கி நடிக்கக் கூடாது. (ஏசா 58:5)

9. இரட்டிலும் சாம்பலிலும் படுத்துக் கொண்டு மற்றவர்கள் பார்வைக்கு உபவாசம் பண்ணக்கூடாது.

10. முகவாடலாக இருக்கக்கூடாது. (மத் 6:16-18)

(3) உபவாசத்தின் இருபத்திமூன்று அம்சம் - இருபது வெகுமதிகள் - (மத் 6:16-18)

ஏசா 58:6 அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும், நெருக்கப்பட்டிருக் கிறவர்களை விடுதலையாக்கி விடுகிறதும், சகல நுகத்தடிகளையும் உடைத்துப் போடுகிறதும்,

58 அதிகாரம்

ஏசா 58:7 பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்துகொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக்கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங் கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம்.

ஏசா 58:8 அப்பொழுது விடியற்கால வெளுப்பைப்போல உன் வெளிச்சம் எழும்பி, உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து, உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும்; கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும்.

ஏசா 58:9 அப்பொழுது நீ கூப்பிடுவாய்; கர்த்தர் மறுஉத்தரவு கொடுப்பார்; நீ சத்தமிடுவாய்: இதோ, நான் இருக்கிறேன் என்று சொல்லுவார். நுகத்தடியையும், விரல் நீட்டுதலையும், நிபச் சொல்லையும், நீ உன் நடுவிலிருந்து அகற்றி,

ஏசா 58:10 பசியுள்ளவனிடத்தில் உன் ஆத்துமாவைச் சாய்த்து, சிறுமைப்பட்ட ஆத்துமாவைத் திருப்தியாக்கினால், அப்பொழுது இருளில் உன் வெளிச்சம் உதித்து, உன் அந்தகாரம் மத்தியானத்தைப் போலாகும்.

ஏசா 58:11 கர்த்தர்நித்தமும் உன்னை நடத்தி மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்; நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும், வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய்.

ஏசா 58:12 உன்னிடத்திலிருந்து தோன்றினவர்கள் பூர்வமுதல் பாழாய்க்கிடந்த ஸ்தலங்களைக் கட்டுவார்கள்; தலைமுறை தலைமுறையாக இருக்கும் அஸ்திபாரங்கள்மேல் நீ கட்டுவாய்; திறப்பானதை அடைக்கிறவன் என்றும், குடியிருக்கும்படி பாதைகளைத் திருத்துகிறவன் என்றும் நீ பெயர் பெறுவாய்.

ஏசா 58:13 என் பரிசுத்தநாளாகிய ஓய்வுநாளிலே உனக்கு இஷ்டமானதைச் செய்யாதபடி, உன் காலை விலக்கி, உன் வழிகளின்படி நடவாமலும், உனக்கு இஷ்டமானதைச் செய்யாமலும், உன் சொந்தப்பேச்சைப் பேசாமலிருந்து, ஓய்வுநாளை மனமகிழ்ச்சியின் நாளென்றும், கர்த்தருடைய பரிசுத்த நாளை மகிமையுள்ள நாளென்றும் சொல்லி, அதை மகிமையாக எண்ணுவாயானால்,

ஏசா 58:14 அப்பொழுது கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருப்பாய்; பூமியின் உயர்ந்த இடங்களில் உன்னை ஏறியிருக்கும்படி பண்ணி, உன் தகப்பனாகிய யாக்கோபுடைய சுதந்தரத்தால் உன்னைப் போஷிப்பேன்; கர்த்தருடைய வாய் இதைச் சொல்லிற்று.

மெய்யான உபவாசத்தின் அம்சங்கள்

1. அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்ப்பது. (ஏசா 58:6)
2. நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்ப்பது.
3. நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கிவிடுவது.
4. சகல நுகத்தடிகளையும் உடைத்துப் போடுவது. (ஏசா 58:6,9)
5. பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்துகொடுப்பது. (ஏசா 58:7).
6. துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக்கொள்வது.
7. வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங் கொடுப்பது.
8. மாம்சமானவனுக்கு தன்னை ஒளிக்காமலிருப்பது.

ஏசாயா - தொகுப்புரை

58 அதிகாரம்

9. கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவது. (ஏசா 58:9).

10. மற்றவர்கள்மீது குற்றம் சுமத்தாமல் இருப்பது.

11. வெறுமையான பேச்சுக்களைப் பேசாமல் இருப்பது.

12. பசியுள்ளவனிடத்தில் ஆத்துமாவைச் சாய்ப்பது. (ஏசா 58:10).

13. சிறுமைப்பட்ட ஆத்துமாவைத் திருப்தியாக்குவது.

14. ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிப்பது. (ஏசா 58:13).

15. ஓய்வுநாளில் தனக்கு இஷ்டமானதைச் செய்யாமல் இருப்பது.

16. ஓய்வுநாளை மனமகிழ்ச்சியின் நாளென்று சொல்வது.

17. கர்த்தருடைய பரிசுத்த நாளை மகிமையுள்ள நாளென்று சொல்வது.

18. ஓய்வுநாளை மகிமையாக எண்ணுவது.

19. எல்லாக் காரியங்களிலும் கர்த்தரைக் கனம்பண்ணுவது.

20. சுயநலமில்லாமல் ஜீவிப்பது.

21. தன்னுடைய சொந்த சந்தோஷத்திற்காக ஜீவிக்காமல் தேவனுக்காக ஜீவிப்பது.

22. தனது சொந்த வார்த்தையைப் பேசாமல் தேவனுடைய வார்த்தையைப் பேசுவது.

23. போஜனத்தைத் தவிர்ப்பது.

"உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும்" - இதற்கு இரண்டு விதமாகப் பொருள்கூற வேண்டும். அவையாவன:

1. நம்முடைய குற்றங்களையும், குறைகளையும் மற்றவர்களுக்குத் தெரியாமல் மூடி மறைக்கக்கூடாது.

2. மற்றவர்களுக்குத் தேவைகள் இருக்கும் போது அவர்களுக்கு உதவிபுரியாமல் இருந்து விடக்கூடாது.

மெய்யான உபவாசத்தினால் வரும் ஆசீர்வாதங்கள்

1. விடியற்கால வெளுப்பைப்போல உன் வெளிச்சம் எழும்பும். (ஏசா 58:8).

2. உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்க்கும்.

3. உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும்.

4. கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும்.

5. நீ கூப்பிடுவாய்; கர்த்தர் மறுஉத்தரவு கொடுப்பார் (ஏசா 58:9).

6. நீ சத்தமிடுவாய்: இதோ, நான் இருக்கிறேன் என்று சொல்லுவார்.

7. இருளில் உன் வெளிச்சம் உதிக்கும். (ஏசா 58:10).

8. உன் அந்தகாரம் மத்தியானத்தைப் போலாகும்.

9. கர்த்தர் நித்தமும் உன்னை நடத்துவார். (ஏசா 58:11).

10. மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்குவார்.

11. உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்.

12. நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போல இருப்பாய்.

13. வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய்.

14. உன்னுடைய பாழாய்க்கிடந்த ஸ்தலங்கள் கட்டப்படும். (ஏசா 58:12).

ஏசாயா - தொகுப்புரை

58 அதிகாரம்

15. தலைமுறை தலைமுறையாக இருக்கும் அஸ்திபாரங்கள்மேல் நீ கட்டுவாய்.

16. திறப்பானதை அடைக்கிறவன் என்று நீ பெயர் பெறுவாய்.

17. குடியிருக்கும்படி பாதைகளைத் திருத்துகிறவன் என்று நீ பெயர் பெறுவாய்.

18. கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருப்பாய் (ஏசா 58:14).

19. பூமியின் உயர்ந்த இடங்களில் உன்னை ஏறியிருக்கும்படி பண்ணுவார்.

20. உன் தகப்பனாகிய யாக்கோபுடைய சுதந்தரத்தால் உன்னைப் போஷிப்பார்.

"என் பரிசுத்தநாள்" - யூதருடைய ஓய்வுநாள் தேவனுடைய பரிசுத்தநாளாகும். மோசேயின் பிரமாணம் ஒழிக்கப்பட்டதுபோன்று ஓய்வுநாள் பிரமாணமும் ஒழிந்துபோயிற்று. (ஏசா 1:13; ஓசி 2:11)

"உன் தகப்பனாகிய யாக்கோபு" - கர்த்தர் இந்த வசனங்களைப் புறஜாதியாருக்கோ அல்லது சபைக்கோ கூறவில்லை. யூதருக்குக் கூறுகிறார். (ஏசா 58:1; ஏசா 1:1; ஏசா 2:1)

59 அதிகாரம்

(4) இருபத்லைதந்து பாவங்கள் - (ஏசா 1:4)

ஏசா 59:1 இதோ, இரட்சிக்கக் கூடாத படிக்குக் கர்த்தருடைய கை குறுகிப் போகவுமில்லை; கேட்கக்கூடாத படிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை.

ஏசா 59:2 உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப்பிரிவினைஉண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே, அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது.

ஏசா 59:3 ஏனென்றால், உங்கள் கைகள் இரத்தத்தாலும், உங்கள் விரல்கள் அக்கிரமத்தாலும், கறைப்பட்டிருக்கிறது; உங்கள் உதடுகள் பொய்யைப் பேசி, உங்கள் நாவு நியாயக்கேட்டை வசனிக்கிறது.

ஏசா 59:4 நீதியைத் தேடுகிறவனுமில்லை, சத்தியத்தின்படி வழக்காடுகிறவனுமில்லை; மாயையை நம்பி, அபத்தமானதைப் பேசுகிறார்கள்; தீமையைக் கர்ப்பந்தரித்து, அக்கிரமத்தைப் பெறுகிறார்கள்.

ஏசா 59:5 கட்டுவிரியனின் முட்டைகளை அடைகாத்து, சிலந்தியின் நெசவுகளை நெய்கிறார்கள்; அவைகளின் முட்டைகளைச் சாப்பிடுகிறவன் சாவான்; அவைகள் நெருக்கப்பட்டதேயானால் விரியன் புறப்படும்.

ஏசா 59:6 அவைகளின் நெசவுகள் வஸ்திரங்களுக்கேற்றவைகள் அல்ல; தங்கள் கிரியைகளாலே தங்களை மூடிக்கொள்ளமாட்டார்கள்; அவர்கள் கிரியைகள் அக்கிரமக்கிரியைகள்; கொடுமையான செய்கை அவர்கள் கைகளிலிருக்கிறது.

ஏசா 59:7 அவர்கள் கால்கள் பொல்லாப்புச் செய்ய ஓடி, குற்றமில்லாத இரத்தத்தைச் சிந்தத் தீவிரிக்கிறது; அவர்கள் நினைவுகள் அக்கிரமநினைவுகள்; பாழ்க்கடிப்பும் அழிவும் அவர்கள் வழிகளிலிருக்கிறது.

ஏசா 59:8 சமாதான வழியை அறியார்கள்; அவர்கள் நடைகளில் நியாயமில்லை; தங்கள் பாதைகளைத் தாங்களே கோணலாக்கிக் கொண்டார்கள்; அவைகளில் நடக்கிற ஒருவனும் சமாதானத்தை அறியான்.

"இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை" - இந்த வாக்கியம் வேதாகமத்தில் இந்த வசனத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய கை என்பது அவருடைய வல்லமையைக் குறிக்கும். குறுகிப்போதல் என்பது அவருடைய வல்லமை குறைந்துபோவதைக் குறிக்கும். ஆனால் கர்த்தருடைய கை குறுகிப்போகவில்லை. அவருடைய வல்லமை ஒருபோதும் குறைவடைவதில்லை. அர்தசஷ்டா ராஜாவின் கை மிகவும் நீளமாக இருக்குமாம். இவனுடைய சரீரத்தில் காணப்பட்ட இந்த விசேஷித்த தன்மையினால் இவன் மிகப்பெரிய பலசாலியாக இருந்தான் என்று சரித்திரம் கூறுகிறது. எகிப்தியர்கள் சூரியனைச் சித்திரமாக வரையும்போது அதற்குப் பல கைகள் இருப்பதாக வரைவார்கள். இவையெல்லாம் சூரியனின் வல்லமையைக் குறிக்கும். (ஏசா 50:2; எண் 11:23)

மனுஷனுடைய பாவத்தின் நிமித்தமாகக் கர்த்தர் செய்யக்கூடாத காரியங்கள்

1. மனுஷருடைய அக்கிரமங்களே அவர்களுக்கும், தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது

59 அதிகாரம்

2. மனுஷருடைய பாவங்களே, தேவன் அவர்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை மனுஷருக்கு மறைக்கிறது. (சங் 66:18, மத் 17:20; மத் 21:22; மாற்கு 11:22-24)

"உங்கள் அக்கிரமங்களே" - மனுஷருடைய அக்கிரமங்கள் தேவனுக்கும், மனுஷருக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது. மனுஷருடைய அக்கிரமங்களைப் பார்த்து தேவன் தமது முகத்தைத் திருப்பிக் கொள்கிறார். மனுஷன் தேவனைவிட்டு பிரிந்திருக்கும்போது அவனுக்கு ஆவிக்குரிய மரணம் உண்டாகும். (எபே 2:1-15) மனுஷனிடத்தில் பாவம் காணப்படும்போது அது தேவனுக்கும், மனுஷனுக்கும் நடுவே ஒரு சுவரைப்போல தடையாக இருக்கும். இருவருக்கும் இடையில் சம்பாஷணை நடைபெறுவதற்கு வாய்ப்பில்லாமல் போகும்.

"அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு" - (ஏசா 45:15; ஏசா 54:8; ஏசா 57:17)

இஸ்ரவேலின் பாவங்கள்

1. கைகள் இரத்தத்தால் கறைப்பட்டிருக்கிறது. (ஏசா 59:3)
2. விரல்கள் அக்கிரமத்தால் கறைப்பட்டிருக்கிறது.
3. உதடுகள் பொய்யைப் பேசுகிறது.
4. நாவு நியாயக்கேட்டை வசனிக்கிறது.
5. நீதியை ஒருவனும் தேடவில்லை. (ஏசா 59:4)
6. சத்தியத்தின்படி ஒருவனும் வழக்காடவில்லை.
7. மாயையை நம்புகிறார்கள்.
8. அபத்தமானதைப் பேசுகிறார்கள்.
9. தீமையைக் கர்ப்பந்தரிக்கிறார்கள்.
10. அக்கிரமத்தைப் பெறுகிறார்கள்.
11. கட்டுவிரியனின் முட்டைகளை அடைகாக்கிறார்கள். (ஏசா 59:5)
12. சிலந்தியின் நெசவுகளை நெய்கிறார்கள்.
13. அவைகளின் முட்டைகளைச் சாப்பிட்டுச் செத்துப்போகிறார்கள்.
14. விரியன்பாம்பைப்போல பாவத்தைப் பரப்புகிறார்கள்.
15. தங்கள் சுயகிரியைகளிலும், சுயநீதியிலும் நம்பிக்கை வைக்கிறார்கள். (ஏசா 59:6)
16. தங்கள் பாவங்களைத் தங்கள் கிரியைகளினால் மூடிக்கொள்ள முயற்சி பண்ணுகிறார்கள்.
17. அவர்கள் கிரியைகள் அக்கிரமக் கிரியைகள்.
18. கொடுமையான செய்கை அவர்கள் கைகளிலிருக்கிறது.
19. அவர்கள் கால்கள் பொல்லாப்புச் செய்ய ஓடுகிறது. (ஏசா 59:7)
20. குற்றமில்லாத இரத்தத்தைச் சிந்தத் தீவிரிக்கிறார்கள்.
21. அவர்கள் நினைவுகள் அக்கிரம நினைவுகள்.
22. பாழ்க்கடிப்பும் அழிவும் அவர்கள் வழிகளிலிருக்கிறது.
23. அவர்கள் நடைகளில் நியாயமில்லை. (ஏசா 59:8)
24. தங்கள் பாதைகளைத் தாங்களே கோணலாக்கிக்கொண்டார்கள்.

59 அதிகாரம்

"அவர்கள் கால்கள் பொல்லாப்புச் செய்ய ஓடி..........பாழ்க்கடிப்பும் அழிவும் அவர்கள் வழிகளிலிருக்கிறது" - இந்த வாக்கியம் ரோமர் 3:15-16 ஆகிய வசனங்களில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

(5) முப்பது அம்ச நிலைமையும் காரணமும்

ஏசா 59:9 ஆதலால், நியாயம் எங்களுக்குத் தூரமாயிருக்கிறது; நீதி எங்களைத் தொடர்ந்து பிடிக்காது; வெளிச்சத்துக்குக் காத்திருந்தோம், இதோ, இருள்; பிரகாசத்துக்குக் காத்திருந்தோம், ஆனாலும் அந்தகாரத்திலே நடக்கிறோம்.

ஏசா 59:10 நாங்கள் குருடரைப்போல் சுவரைப் பிடித்து, கண்ணில்லாதவர்களைப் போல் தடவுகிறோம்; இரவில் இடறுகிறதுபோலப் பட்டப்பகலிலும் இடறுகிறோம்; செத்தவர்களைப்போல் பாழிடங்களில் இருக்கிறோம்.

ஏசா 59:11 நாங்கள் அனைவரும் கரடிகளைப் போல உறுமி, புறாக்களைப் போலக் கூவிக் கொண்டிருக்கிறோம், நியாயத்துக்குக் காத்திருந்தோம், அதைக் காணோம்; இரட்சிப்புக்குக் காத்திருந்தோம், அது எங்களுக்குத் தூரமாயிற்று.

ஏசா 59:12 எங்கள் மீறுதல்கள் உமக்கு முன்பாக மிகுதியாயிருந்து, எங்கள் பாவங்கள் எங்களுக்கு விரோதமாய்ச் சாட்சி சொல்லுகிறது; எங்கள் மீறுதல்கள் எங்களோடே இருக்கிறது; எங்கள் அக்கிரமங்களை அறிந்திருக்கிறோம்.

ஏசா 59:13 கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணி, பொய்பேசி, எங்கள் தேவனைவிட்டுப் பின்வாங்கினோம்; கொடுமையாகவும் கலகமாகவும் பேசினோம்; கள்ளவார்த்தைகளைக் கர்ப்பந்தரித்து, இருதயத்திலிருந்து பிறப்பிக்கப்பண்ணினோம்.

ஏசா 59:14 நியாயம் பின்னிட்டு அகன்றது; நீதி தூரமாய் நின்றது; சத்தியம் வீதியிலே இடறி, யதார்த்தம் வந்து சேரமாட்டாமற்போகிறது.

ஏசா 59:15 சத்தியம் தள்ளுபடியாயிற்று; பொல்லாப்பை விட்டு விலகுகிறவன் கொள்ளையாகிறான்; இதைக் கர்த்தர் பார்த்து நியாயமில்லையென்று விசனமுள்ளவரானார்.

"ஆதலால்" - இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் ஏராளமான பாவங்கள் உள்ளன. ஆகையினால் சத்துருக்கள் அவர்களை ஒடுக்குகிறார்கள். தேவனும் இஸ்ரவேல் புத்திரரை அவர்களுடைய சத்துருக்களின் கைகளிலிருந்து விடுவிக்காமல் இருக்கிறார். (ஏசா 59:9-15).

இஸ்ரவேலின் நிலைமை

1. நியாயம் தூரமாயிருக்கிறது.
2. நீதி தொடர்ந்து பிடிக்காது.
3. வெளிச்சத்துக்குக் காத்திருந்தோம் இதோ, இருள்.
4. பிரகாசத்துக்குக் காத்திருந்தோம், ஆனாலும் அந்தகாரத்திலே நடக்கிறோம்.
5. நாங்கள் குருடரைப்போல் சுவரைப் பிடித்து நடக்கிறோம். (ஏசா 59:10).
6. கண்ணில்லாதவர்களைப் போல் தடவுகிறோம்.
7. இரவில் இடறுகிறதுபோலப் பட்டப்பகலிலும் இடறுகிறோம்.
8. செத்தவர்களைப்போல் பாழிடங்களில் இருக்கிறோம்.

59 அதிகாரம்

9. நாங்கள் அனைவரும் கரடிகளைப் போல உறுமுகிறோம். (ஏசா 59:11).

10. புறாக்களைப்போலக் கூவிக் கொண்டிருக்கிறோம்.

11. நியாயத்துக்குக் காத்திருந்தோம், அதைக் காணோம்.

12. இரட்சிப்புக்குக் காத்திருந்தோம், அது எங்களுக்குத் தூரமாயிற்று.

13. எங்கள் மீறுதல்கள் உமக்கு முன்பாக மிகுதியாயிருக்கிறது. (ஏசா 59:12).

14. எங்கள் பாவங்கள் எங்களுக்கு விரோதமாய்ச் சாட்சி சொல்லுகிறது.

15. எங்கள் மீறுதல்கள் எங்களோடே இருக்கிறது.

16. எங்கள் அக்கிரமங்களை அறிந்திருக்கிறோம்.

17. கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணி, பொய்பேசினோம். (ஏசா 59:13).

18. எங்கள் தேவனைவிட்டுப் பின்வாங்கினோம்.

19. கொடுமையாகவும் கலகமாகவும் பேசினோம்.

20. கள்ளவார்த்தைகளைக் கர்ப்பந்தரித்து, இருதயத்திலிருந்து பிறப்பிக்கப் பண்ணினோம்.

21. நியாயம் பின்னிட்டு அகன்றது (ஏசா 59:14).

22. நீதி தூரமாய் நின்றது.

23. சத்தியம் வீதியிலே இடறிற்று.

24. யதார்த்தம் வந்து சேரமாட்டாமற் போகிறது.

25. சத்தியம் தள்ளுபடியாயிற்று (ஏசா 59:15).

26. பொல்லாப்பை விட்டு விலகுகிறவன் கொள்ளையாகிறான்

நியாயத்தீர்ப்பிற்குக் காரணம்

1. மிகுதியான மீறுதல்கள் (ஏசா 59:12)

2. ஏராளமான பாவங்கள்

3. அக்கிரமங்களை அறிந்திருந்தும் அவற்றிலிருந்து விடுபடாமல் இருப்பது.

4. மீறுதல்களை அறிந்திருந்தும் அவற்றிலிருந்து விடுபடாமல் இருப்பது.

5. கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணுவதும், பொய்பேசுவதும் (ஏசா 59:13)

6. தேவனைவிட்டுப் பின்வாங்குவது.

7. கொடுமையாக பேசுவது.

8. கலகமாக பேசுவது.

9. கள்ளவார்த்தைகளைக் கர்ப்பந்தரிப்பது.

10. இருதயத்திலிருந்து தீமையைப் பிறபிக்கப்பண்ணுவது.

2. இஸ்ரவேலின் மீட்பு - (59:16-66:24)

(1) மேசியாவின் கிரியை

ஏசா 59:16 ஒருவரும் இல்லையென்று கண்டு, விண்ணப்பம் பண்ணுகிறவன் இல்லையென்று ஆச்சரியப்பட்டார்; ஆதலால் அவருடைய புயமே அவருக்கு இரட்சிப்பாகி, அவருடைய நீதியே அவரைத் தாங்குகிறது.

ஏசா 59:17 அவர் நீதியை மார்க்கவசமாக அணிந்து, இரட்சிப்பென்னும் சீராவைத் தமது சிரசில் தரித்து, நீதி சரிக்கட்டுதலென்னும் வஸ்திரங்களை உடுப்பாக உடுத்து, வைராக்கியத்தைச் சால்வையாகப் போர்த்துக்கொண்டார்.

ஏசாயா - தொகுப்புரை

59 அதிகாரம்

ஏசா 59:18 கிரியைகளுக்குத்தக்க பலனை அளிப்பார்; தம்முடைய சத்துருக்களிடத்தில் உக்கிரத்தைச் சரிக்கட்டி, தம்முடைய பகைஞருக்குத்தக்க பலனையும், தீவுகளுக்குத்தக்க பலனையும் சரிக்கட்டுவார்.

ஏசா 59:19 அப்பொழுது சூரியன் அஸ்தமிக்குந்திசை தொடங்கி கர்த்தரின் நாமத்துக்கும், சூரியன் உதிக்குந்திசை தொடங்கி அவருடைய மகிமைக்கும் பயப்படுவார்கள்; வெள்ளம்போல் சத்துரு வரும்போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய்க் கொடியேற்றுவார்.

தீர்க்கதரிசன எண் - 72

"ஒருவரும் இல்லையென்று கண்டு, விண்ணப்பம் பண்ணுகிறவன் இல்லையென்று ஆச்சரியப்பட்டார்........." (ஏசா 59:16-21) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. அவருடைய புயமே அவருக்கு இரட்சிப்பாகிறது. (ஏசா 59:16).
2. அவருடைய நீதியே அவரைத் தாங்குகிறது.
3. அவர் நீதியை மார்க்கவசமாக அணிந்து கொள்கிறார். (ஏசா 59:17).
4. இரட்சிப்பென்னும் சீராவைத் தமது சிரசில் தரித்துக் கொள்கிறார்.
5. நீதி சரிக்கட்டுதலென்னும் வஸ்திரங்களை உடுப்பாக உடுத்திக் கொள்கிறார்.
6. வைராக்கியத்தைச் சால்வையாகப் போர்த்துக்கொள்கிறார்.
7. தம்முடைய சத்துருக்களுக்குக் கிரியைகளுக்குத்தக்க பலனை அளிப்பார் (ஏசா 59:18).
8. தம்முடைய சத்துருக்களிடத்தில் உக்கிரத்தைச் சரிக்கட்டுவார்.
9. தம்முடைய பகைஞருக்குத்தக்க பலனைச் சரிக்கட்டுவார்.
10. தீவுகளுக்குத்தக்க பலனைச் சரிக்கட்டுவார்.
11. சூரியன் அஸ்தமிக்குந்திசைதொடங்கி கர்த்தரின் நாமத்துக்கும், சூரியன் உதிக்குந்திசை தொடங்கி அவருடைய மகிமைக்கும் பயப்படுவார்கள் (ஏசா 59:19).
12. வெள்ளம்போல் சத்துரு வரும்போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய்க் கொடியேற்றுவார்.
13. மீட்பர் சீயோனுக்கும், யாக்கோபிலே மீறுதலை விட்டுத் திரும்புகிறவர்களுக்கும் வருவார். (ஏசா 59:20).
14. உன்மேலிருக்கிற என் ஆவியும், நான் உன் வாயில் அருளிய என் வார்த்தைகளும், இதுமுதல் என்றென்றைக்கும் உன் வாயிலிருந்தும், உன் சந்ததியின் வாயிலிருந்தும், உன் சந்ததியினுடைய சந்ததியின் வாயிலிருந்தும் நீங்குவதில்லை (ஏசா 59:21).

கர்த்தர் கண்ட காரியங்கள்

1. இஸ்ரவேலை இரட்சிக்க ஒருவனுமில்லை.
2. விண்ணப்பம் பண்ணுகிறவன் ஒருவனுமில்லை.

தேவனுடைய கிரியைகள்

1. ஒருவருமில்லையென்று கண்டார். (ஏசா 59:16).
2. விண்ணப்பம் பண்ணுகிறவன் இல்லையென்று ஆச்சரியப்பட்டார்.

ஏசாயா - தொகுப்புரை

59 அதிகாரம்

3. இரட்சிப்பை உண்டுபண்ணினார்.

4. தம்மையே தாங்கிக் கொண்டார்.

5. அவர் நீதியை மார்க்கவசமாக அணிந்து கொள்கிறார். (ஏசா 59:17).

6. இரட்சிப்பென்னும் சீராவைத் தமது சிரசில் தரித்துக் கொள்கிறார்.

7. நீதி சரிக்கட்டுதலென்னும் வஸ்திரங்களை உடுப்பாக உடுத்திக் கொள்கிறார்.

8. வைராக்கியத்தைச் சால்வையாகப் போர்த்துக்கொள்கிறார்.

தேவனுடைய ஆளுநர்

இஸ்ரவேல் தேசத்தை இரட்சிப்பதற்கோ அவர்களை ஆளுகை செய்வதற்கோ தகுதியுள்ள நபர் ஒருவருமில்லை. கர்த்தரிடத்தில் ஒருவரும் விண்ணப்பம் பண்ணவுமில்லை. ஆகையினால் கர்த்தர் தாமாகவே முன்வந்து தேசத்தை இரட்சிக்கிறார். தம்முடைய கிரியையை நிறைவேற்றுவதற்காக நீதி என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பென்னும் சீராவையும், நீதிசரிக்கட்டுதல் என்னும் வஸ்திரங்களையும், வைராக்கியம் என்னும் சால்வையையும் கர்த்தர் அணிந்துகொள்கிறார். (ஏசா 59:17) கர்த்தர் தேசத்தை இரட்சிக்கும் போது நியாயத்தீர்ப்பிற்குப் பாத்திரமானவர்களை நியாயந்தீர்ப்பார். இரட்சிப்பிற்குப் பாத்திரமானவர்களை இரட்சிப்பார். அதே சமயத்தில் இஸ்ரவேலின் சத்துருக்களை அவர்களுடைய கிரியைகளுக்கு ஏற்ற பிரகாரமாகத் தண்டிப்பார். (ஏசா 59:18) இதனால் கர்த்தருடைய மகிமைக்கு எல்லோரும் பயப்படுவார்கள். (ஏசா 59:19) இந்தச் சம்பவம் இதுவரையிலும் நடைபெறவில்லை. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இது நிறைவேறும். (ஏசா 59:20-21).

தேவனுடைய ஆயுதம்

1. நீதி - மார்க்கவசம்

2. இரட்சிப்பு - சீரா

3. நீதி சரிக்கட்டுதல் - வஸ்திரங்கள்

4. வைராக்கியம் - சால்வை

எபே 6:10-18 ஆவது வசனத்தில் விசுவாசிகள் அணிந்துகொள்ள வேண்டிய இரட்சிப்பின் வஸ்திரத்தைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

"சூரியன் அஸ்தமிக்குந்திசைதொடங்கி" - இந்த வசனப்பகுதியில் பூமியிலுள்ள தேசங்கள் மேற்கு தேசம், கிழக்கு தேசம் என்று இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

"வெள்ளம்போல் சத்துரு வரும்போது" - விசுவாசிகளுக்குச் சாத்தானுடைய சோதனை வரும்போது இந்த வாக்கியம் சாதாரணமாகப் பயன்படுத்தப்படுகிறது. அந்திக்கிறிஸ்துவின் காலத்தில் இந்த வாக்கியம் பிரத்தியட்சமாக நிறைவேறும். யூதர்களை அழிப்பதற்காகவும், இயேசு கிறிஸ்து எருசலேமில் தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பதைத் தடை பண்ணுவதற்காகவும் சத்துருக்கள் வெள்ளம் போல பாலஸ்தீன தேசத்திற்குள் வருவார்கள். இது அர்மெகதோன் யுத்தத்தின்போது நடைபெறும். (ஏசா 59:19-21; ஏசா 63:1-6; யோவே 2-3; சக 14; வெளி 19:11-21).

சத்துருக்கள் வெள்ளம்போல வந்து எருசலேமின் பாதிப்பகுதியைப் பிடித்துக் கொள்வார்கள். அப்போது இயேசு கிறிஸ்து அந்திக்கிறிஸ்துவின்மீது யுத்தம் பண்ணுவதற்காக வானத்திலிருந்து திடீரென்று வருவார். அந்திக்கிறிஸ்துவிற்கு விரோதமாகக் கொடியேற்றுவார். (சக 14:1-5, 14-15) இது இஸ்ரவேலைப் பாதுகாக்கும் மகா பெரிய வெற்றியாக இருக்கும். வெளி 12:13-17 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் வெள்ளத்திலிருந்து இஸ்ரவேல் பாதுகாக்கப்படும்.

ஏசாயா - தொகுப்புரை

59 அதிகாரம்

"கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய்க் கொடியேற்றுவார்." - கர்த்தருடைய கொடி என்பது இயேசு கிறிஸ்துவைக் குறிக்கும். அந்நாளில் இயேசு கிறிஸ்துவே ஜனங்களை இரட்சிப்பார். (ஏசா 11:10-12) இஸ்ரவேலின் மீட்பராக கிறிஸ்து வானத்திலிருந்து வருவார். (ஏசா 59:20-21; ரோமர் 11:25-27).

(2) மேசியாவின் இரண்டாம் வருகை - புதிய உடன்படிக்கை - (எரே 31:31-40; 32:40; 33:19-26; எசே 36:22-30; 37:15-28; மத் 26:28; 2கொரி 3; எபி 8:1-10:38,39)

ஏசா 59:20 மீட்பர் சீயோனுக்கும், யாக்கோபிலே மீறுதலைவிட்டுத் திரும்புகிறவர்களுக்கும், வருவார் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஏசா 59:21 உன்மேலிருக்கிற என் ஆவியும், நான் உன் வாயில் அருளிய என் வார்த்தைகளும், இதுமுதல் என்றென்றைக்கும் உன் வாயிலிருந்தும், உன் சந்ததியின் வாயிலிருந்தும், உன் சந்ததியினுடைய சந்ததியின் வாயிலிருந்தும் நீங்குவதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்; இது எனக்கு அவர்களோடிருக்கும் என் உடன்படிக்கையென்று கர்த்தர் சொல்லுகிறார்.

கிறிஸ்து தமது இரண்டாம் வருகையின் போது செய்யும் காரியங்கள்

1. மீட்பர் சீயோனுக்கு வருவார். (ஏசா 59:20; சக 14:4)
2. யாக்கோபிலே மீறுதலைவிட்டுத் திரும்புகிறவர்களுக்கு வருவார். (ஏசா 59:20; சக 12:10-13:1; சக 14:1-5,14; ரோமர் 11:25-29).
3. அந்நாளில் அவர்களோடு புதிய உடன்படிக்கை பண்ணுவார். (ஏசா 59:21; ஏசா 42:6; ஏசா 49:8; ஏசா 55:3; ஏசா 57:8; ஏசா 61:8; எரே 31:31; எபி 10:16).
4. அவர்கள்மீது பரிசுத்த ஆவியானவரை ஊற்றுவார். (ஏசா 59:21; ஏசா 32:15; ஏசா 34:16; ஏசா 44:3; யோவே 2:28-32; சக 12:10-13:1).
5. அவர்களுடைய வாயிலும், அவர்களுடைய சந்ததியாருடைய வாயிலும் தமது வார்த்தையை வைப்பார். (ஏசா 59:21)

இஸ்ரவேலின் இரட்சிப்பு

அந்நாளில் யாக்கோபிலே மீறுதலை விட்டுத் திரும்புகிறவர்கள் தேசத்தில் மூன்றிலொரு பகுதியாக இருப்பார்கள். இவர்கள் உபத்திரவக் காலத்தில் தப்பிப் பிழைத்தவர்கள். மூன்றில் இரண்டு பகுதி ஜனங்கள் மரித்துப் போவார்கள். (சக 13:9) இவர்கள் "கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப் பட்டவர்" (மத் 23:39) என்று சொல்வார்கள். இவர்கள் ஒரேநாளில் இரட்சிக்கப்படுவார்கள். ஆயிரம் வருஷ அரசாட்சியில் உலகம் முழுவதிலுமிருந்து கூட்டிச் சேர்க்கப்பட்டிருக்கும் இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரும் இதில் இடம் பெற்றிருப்பார்கள். (ஏசா 11:10-12) இவர்களே சக 14:14 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் யூதாவும், ரோமர் 11:25-29 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் "இஸ்ரவேலரெல்லாரும்" ஆவார்கள்.

"யாக்கோபிலே மீறுதலைவிட்டுத் திரும்புகிறவர்கள்" - இஸ்ரவேலராக இருந்தாலும், புறஜாதியாராக இருந்தாலும் அவர்கள் தம்முடைய பாவத்திலிருந்து திரும்பி வரவில்லையென்றால் அவர்களுக்கு இரட்சிப்பில்லை. இஸ்ரவேல் தேசத்தார் உலகம் முழுவதும் சிதறிப்போயிருக்கிறார்கள். ஆகையினால், அவர்களோடு கர்த்தர் செய்துகொண்ட உடன்படிக்கையை இன்னும் நிறைவேற்றாமல் இருக்கிறார். அவர்கள் பாவத்திலிருந்து விடுபட்டு, கர்த்தரிடத்திற்குத் திரும்பி வந்து பரிசுத்தமாக ஜீவிக்கும்போது இரட்சிக்கப்படுவார்கள். (மத் 18:3; யோவான் 3: 3-5)

"நான்" - இந்த வாக்கியத்தைக் கர்த்தர் பேசுகிறார். ஏசாயா தீர்க்கதரிசி பேசவில்லை. (ஏசா 59:20-21).

59 அதிகாரம்

தேவனுடைய காரியங்கள்

1. என் ஆவி
2. என் வார்த்தைகள்
3. என் உடன்படிக்கை

"இதுமுதல் என்றென்றைக்கும்" - வேதாகமத்தில் இந்த வாக்கியம் நான்கு முறை கூறப்பட்டிருக்கிறது. இது நித்தியத்தைக் குறிக்கும். (ஏசா 59:21; ஏசா 9:7; சங் 125:2; சங் 131:3).

60 அதிகாரம்

(3) மீட்பின் அறுபத்திநான்கு அம்சம் - (60:1-22)

(அ) புறஜாதியார் கிட்டிச்சேருகிறார்கள்

ஏசா 60:1 எழும்பிப் பிரகாசி; உன் ஒளிவந்தது, கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது.

ஏசா 60:2 இதோ, இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும்; ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிப்பார்; அவருடைய மகிமை உன்மேல் காணப்படும்.

ஏசா 60:3 உன் வெளிச்சத்தினிடத்துக்கு ஜாதிகளும், உதிக்கிற உன் ஒளியினிடத்துக்கு ராஜாக்களும் நடந்துவருவார்கள்.

ஏசா 60:4 சுற்றிலும் உன் கண்களை ஏறெடுத்துப்பார்; அவர்கள் எல்லாரும் ஏகமாய்க்கூடி உன்னிடத்திற்கு வருகிறார்கள்; உன் குமாரர் தூரத்திலிருந்து வந்து, உன் குமாரத்திகள் உன் பக்கத்திலே வளர்க்கப்படுவார்கள்.

ஏசா 60:5 அப்பொழுது நீ அதைக் கண்டு ஓடிவருவாய்; உன் இருதயம் அதிசயப்பட்டுப் பூரிக்கும்; கடற்கரையின் திரளான கூட்டம் உன் வசமாகத்திரும்பும், ஜாதிகளின் பலத்த சேனை உன்னிடத்துக்கு வரும்.

ஏசா 60:6 ஒட்டகங்களின் ஏராளமும், மீதியானா ஏப்பாத் தேசங்களின் வேகமான ஒட்டகங்களும் உன்னை மூடும்; சேபாவிலுள்ளவர்கள் யாவரும் பொன்னையும் தூபவர்க்கத்தையும் கொண்டுவந்து கர்த்தரின் துதிகளைப் பிரசித்தப்படுத்துவார்கள்.

ஏசா 60:7 கேதாரின் ஆடுகளெல்லாம் உன்னிடத்தில் சேர்க்கப்படும்; நெபாயோத்தின் கடாக்கள் உன்னைச் சேவித்து, அங்கிகரிக்கப்பட்டதாய் என் பலிபீடத்தின்மேல் ஏறும்; என் மகிமையின் ஆலயத்தை மகிமைப்படுத்துவேன்.

"உன் ஒளி" - ஆயிரம் வருஷ அரசாட்சியிலும், புதிய பூமியிலும் இஸ்ரவேலின் ஒளி என்பது தேவனுடைய மகிமையைக் குறிக்கும். (ஏசா 60:1-3,19-20) புதிய எருசலேமில் குடியிருக்கும் ஜனங்களுடைய ஒளியும் தேவனுடைய மகிமையைக் குறிக்கும். (வெளி 21:23).

"கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது இது நிறைவேறும். (ஏசா 60:1; ஏசா 2:2-4; ஏசா 4:5-6; மத் 25:30).

தீர்க்கதரிசன எண் - 73

"எழும்பிப் பிரகாசி; உன் ஒளிவந்தது......." (ஏசா 60:1-22) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. உன் ஒளிவந்தது. (ஏசா 60:1).
2. கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது.
3. இருள் பூமியை மூடும். (ஏசா 60:2).
4. காரிருள் ஜனங்களை மூடும்.
5. உன்மேல் கர்த்தர் உதிப்பார்.
6. அவருடைய மகிமை உன்மேல் காணப்படும்.
7. உன் வெளிச்சத்தினிடத்துக்கு ஜாதிகள் வருவார்கள். (ஏசா 60:3)
8. உதிக்கிற உன் ஒளியினிடத்துக்கு ராஜாக்கள் நடந்துவருவார்கள். (ஏசா 60:3).

ஏசாயா - தொகுப்புரை

60 அதிகாரம்

9. சிதறிப்போன இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாரும் ஏகமாய் கூடுவார்கள். (ஏசா 60:4).

10. அவர்கள் உன்னிடத்திற்கு (யூதா) வருகிறார்கள்

11. உன் குமாரர் தூரத்திலிருந்து வருவார்கள்.

12. உன் குமாரத்திகள் உன் பக்கத்திலே வளர்க்கப்படுவார்கள்.

13. நீ அதைக் கண்டு ஓடிவருவாய் (ஏசா 60:5).

14. உன் இருதயம் அதிசயப்பட்டுப் பூரிக்கும்.

15. கடற்கரையின் திரளான கூட்டம் உன் வசமாகத்திரும்பும்.

16. ஜாதிகளின் பலத்த சேனை உன்னிடத்துக்கு வரும்.

17. ஒட்டகங்களின் ஏராளம் உன்னிடத்திற்கு வரும். (ஏசா 60:6).

18. பொன்னையும் தூபவர்க்கத்தையும் கொண்டுவருவார்கள்.

19. அவர்கள் கர்த்தரின் துதிகளைப் பிரசித்தப்படுத்துவார்கள்.

20. கேதாரின் ஆடுகளெல்லாம் உன்னிடத்தில் சேர்க்கப்படும் (ஏசா 60:7)

21. நெபாயோத்தின் கடாக்கள் உன்னைச் சேவிக்கும்.

22. என் பலிபீடத்தின்மேல் அவர்கள் அங்கிகரிக்கப்பட்டிருப்பார்கள்.

23. என் மகிமையின் ஆலயத்தை மகிமைப்படுத்துவேன்.

24. தீவுகள் எனக்குக் காத்திருக்கும் (ஏசா 60:9)

25. தர்ஷீசின் கப்பல்களும் ஏற்கனவே எனக்குக் காத்திருக்கும்.(ஏசா 60:8-9).

26. அவர்கள் பொன்னையும், வெள்ளியையும் தங்களோடு கொண்டு வருவார்கள்.

27. கர்த்தர் உன்னை மகிமைப்படுத்துவார். (ஏசா 60:9).

28. அந்நியரின் புத்திரர் உன் மதில்களைக் கட்டுவார்கள். (ஏசா 60:10).

29. அவர்களுடைய ராஜாக்கள் உன்னைச் சேவிப்பார்கள்.

30. கிருபையினால் உனக்கு இரங்குவேன்.

31. உன் வாசல்கள் இரவும்பகலும் பூட்டப் படாமல் எப்பொழுதும் திறந்திருக்கும். (ஏசா 60:11).

32. உன்னிடத்துக்கு ஜாதிகளின் ஐசுவரியங்களைக் கொண்டுவருவார்கள்.

33. உன்னிடத்துக்கு ராஜாக்களின் ஐசுவரியங்களைக் கொண்டு வருவார்கள்.

34. உன்னைச் சேவிக்காத ஜாதியும் ராஜ்யமும் அழியும்; அந்த ஜாதிகள் நிச்சயமாய்ப் பாழாகும். (ஏசா 60:12).

35. என் பரிசுத்த ஸ்தானத்தைச் சிங்காரிக்கும்படிக்கு, லீபனோனின் மகிமையும், தேவதாரு விருட்சங்களும், பாய்மர விருட்சங்களும், புன்னை மரங்களுங்கூட உன்னிடத்திற்குக் கொண்டு வரப்படும் (ஏசா 60:13).

36. என் பாதஸ்தானத்தை மகிமைப் படுத்துவேன். (ஏசா 60:13; எசே 43:7).

37. உன்னை ஒடுக்கினவர்களின் பிள்ளைகளும் குனிந்து உன்னிடத்தில் வருவார்கள். (ஏசா 60:14).

38. உன்னை அசட்டைபண்ணின யாவரும் உன் காலடியில் பணிவார்கள்.

39. உன்னைக் கர்த்தருடைய நகரம் என்றும், இஸ்ரவேலுடைய பரிசுத்தரின் சீயோன் என்றும்சொல்வார்கள். (ஏசா 60:14; ஏசா 1:26).

ஏசாயா - தொகுப்புரை

60 அதிகாரம்

40. உன்னை நித்திய மாட்சிமையாக வைப்பேன். (ஏசா 60:15).

41. உன்னை தலைமுறை தலைமுறையாயிருக்கும் மகிழ்ச்சியாகவும் வைப்பேன்.

42. நீ புறஜாதிகளின் பாலைக் குடிப்பாய். (ஏசா 60:16).

43. நீ ராஜாக்களின் முலைப்பாலை உண்பாய்.

44. கர்த்தராகிய நான் இரட்சகரென்றும், யாக்கோபின் வல்லவர் உன் மீட்பரென்றும் அறிந்துகொள்வாய்.

45. நான் வெண்கலத்துக்குப் பதிலாகப் பொன்னையும், இரும்புக்குப் பதிலாக வெள்ளியையும், மரங்களுக்குப் பதிலாக வெண்கலத்தையும், கற்களுக்குப் பதிலாக இரும்பையும் வரப்பண்ணுவேன். (ஏசா 60:17).

46. உன் கண்காணிகளைச் சமாதானமுள்ளவர்களாக்குவேன்.

47. உன் தண்டற்காரரை நீதியுள்ளவர்களாக்குவேன்.

48. இனிக் கொடுமை உன் தேசத்தில் இராது. (ஏசா 60:18).

49. அழிவும் நாசமும் உன் எல்லைகளில் கேட்கப்படமாட்டாது.

50. உன் மதில்களை இரட்சிப்பென்று சொல்லுவாய்.

51. உன் வாசல்களைத் துதியென்று சொல்லுவாய்.

52. இனிச் சூரியன் உனக்குப் பகலிலே வெளிச்சமாயிராது. (ஏசா 60:19).

53. சந்திரன் தன் வெளிச்சத்தால் உனக்குப் பிரகாசமாயிராது.

54. கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமாய் இருப்பார்.

55. உன் தேவனே உனக்கு மகிமையுமாயிருப்பார்.

56. உன் சூரியன் (தேவனுடைய மகிமை) இனி அஸ்தமிப்பதில்லை (ஏசா 60:20).

57. உன் சந்திரன் (தேவனுடைய மகிமை) மறைவதில்லை.

58. கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமாயிருப்பார்.

59. உன் துக்கநாட்கள் முடிந்துபோம்.

60. உன் ஜனங்கள் யாவரும் நீதிமான்களாயிருப்பார்கள். (ஏசா 60:21).

61. அவர்கள் என்றைக்கும் பூமியைச் சுதந்தரிக்குங் குடிகளாயிருப்பார்கள்.

62. அவர்கள் நான் நட்ட கிளைகளும், நான் மகிமைப்படும்படி என் கரங்களின் கிரியை களுமாயிருப்பார்கள்.

63. சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான் (ஏசா 60:22).

64. கர்த்தராகிய நான் ஏற்றகாலத்தில் இதைத் தீவிரமாய் நடப்பிப்பேன்.

“இதோ, இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும்” - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது தேவனுடைய மகிமை வெளிப்படுவதற்கு முன்பாக இருள் பூமியை மூடும். அந்த இருளில் தேவனுடைய மகிமை மிகவும் பிரகாசமாக இருக்கும். (ஏசா 13:10; யோவே 3:15; மத் 24:29; அப் 2:20).

“அவருடைய மகிமை உன்மேல் காணப்படும்.” - இது ஏசா 60:1 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் ஒளியைக் குறிக்கும்.

“உன் வெளிச்சத்தினிடத்துக்கு ஜாதிகளும்” - இஸ்ரவேலில் தேவனுடைய மகிமை காணப்படும். அதைப் பார்த்து புறஜாதிகளும், அவர்களுடைய ராஜாக்களும் இஸ்ரவேல் புத்திரரைத் தேடி வருவார்கள்.

ஏசாயா - தொகுப்புரை

60 அதிகாரம்

ஏசா 60:1-4 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. எழும்பிப் பிரகாசி (ஏசா 60:1)
2. சுற்றிலும் உன் கண்களை ஏறெடுத்துப்பார் (ஏசா 60:4)

"அவர்கள் எல்லாரும் ஏகமாய்க்கூடி உன்னிடத்திற்கு வருகிறார்கள்" - தேசங்களில் இன்னும் சிதறியிருக்கும் இஸ்ரவேல் புத்திரரை இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது அவர்கள் கூட்டிச் சேர்க்கப்பட்டு யூதேயா தேசத்திற்கு அழைத்து வரப்படுவார்கள். (ஏசா 60:4-9; ஏசா 11:10-12; மத் 24:29-31).

கிறிஸ்துவின்இரண்டாம்வருகையின்போது உண்டாகும் ஆசீர்வாதம்

1. அப்பொழுது அவர்கள் காண்பார்கள். (ஏசா 60:5).
2. அவர்கள் ஓடி வருவார்கள். (ஏசா 60:2; எசே 37:16-24).
3. அவர்கள் இருதயம் அதிசயப்பட்டுப் பூரிக்கும் (ஏசா 60:5).
4. அவர்கள் பூமியின் ஐசுவரியங்களினால் ஆசீர்வதிக்கப் படுவார்கள். (ஏசா 60:5-7).

"கடற்கரையின் திரளான கூட்டம் உன் வசமாகத்திரும்பும்" - மேசியா இந்தப் பூமியை நித்தியமாக ஆளுகை செய்யும்போது சமுத்திரத்திலுள்ள ஐசுவரியங்களெல்லாம் இஸ்ரவேல் புத்திரரைக் கூட்டிச் சேர்ப்பதற்கும், பாலஸ்தீன தேசத்தை மறுபடியும் ஸ்தாபிப்பதற்கும், உலகம் முழுவதிலும் சுவிசேஷ ஊழியம் நடைபெறுவதற்கும் செலவு பண்ணப்படும். (ஏசா 60:5-7; ஏசா 2:2-4; ஏசா 52:7; ஏசா 66:19-21) கர்த்தருக்கு எல்லோரும் தங்களுடைய காணிக்கைகளைக் கொண்டு வருவார்கள். (ஏசா 60:6-7).

"ஒட்டகங்கள்" - (ஏசா 60:6; ஏசா 31:7;30:6; ஆதி 12:16; ஆதி 24: 1-68; ஆதி 30:43; ஆதி 31:17; ஆதி 32:7,15; ஆதி 37:25; யாத் 9:3; லேவி 11:4; உபா 14:7; நியா 6:5; நியா 7:12; 1சாமு 15:3; 1சாமு 27:9; 1சாமு 30:17; 1இராஜா 10:2; 1நாளா 5:21; 1நாளா 12:40; 1நாளா 27:30; 2நாளா 9:1; 2நாளா 14:15; எஸ்றா 2:67; நெகே 7:69; எஸ் 8:10,14; யோபு 1:3,17; யோபு 42:12; எரே 49:29,32; எசே 25:5; சக 14:15; மத் 3:4; மத் 19:24; மத் 23:24).

"கர்த்தரின் துதிகளைப் பிரசித்தப் படுத்துவார்கள்." - இந்தப் பூமியை மேசியா ஆளுகை செய்யும்போது எல்லா தேசங்களும் இஸ்ரவேலிலுள்ள கர்த்தரைத் துதிப்பதற்கு வருவார்கள். (ஏசா 2:2-4; சக 14:16-21; மல் 1:11).

"நெபாயோத்தின் கடாக்கள் உன்னைச் சேவித்து" - பழைய ஏற்பாட்டுக்காலத்தில் கர்த்தருக்கு விலங்குகளைப் பலியிட்டார்கள். கல்வாரி சிலுவையில் கிறிஸ்து தம்மையே பலியாகஒப்புக்கொடுத்ததற்கு அடையாளமாக வருங்காலத்தில் விலங்குகள் பலியிடப்படும். (எசே 40:1-46:26; சக 14:16-21).

"என் மகிமையின் ஆலயம்" - இது தேவனுடைய நித்திய ஆலயத்தைக் குறிக்கும். (எசே 43:7; சக 6:12-13).

(ஆ) புறஜாதியாரின் ஊழியம்

ஏசா 60:8 மேகத்தைப்போலவும், தங்கள் பலகணித்துவாரங்களுக்குத் தீவிரிக்கிற புறாக்களைப்போலவும் பறந்துவருகிற இவர்கள் யார்?

ஏசா 60:9 தீவுகள் எனக்குக் காத்திருக்கும்; அவர் உன்னை மகிமைப்படுத்தினார் என்று உன் பிள்ளைகளையும், அவர்களோடேகூட அவர்கள் பொன்னையும், அவர்கள் வெள்ளியையும் உன் தேவனாகிய கர்த்தரின் நாமத்துக்கென்றும், இஸ்ரவேலின் பரிசுத்தருக்கென்றும், தூரத்திலிருந்து கொண்டுவர, தர்ஷீசின் கப்பல்களும் ஏற்கனவே எனக்குக் காத்திருக்கும்.

ஏசாயா - தொகுப்புரை

60 அதிகாரம்

ஏசா 60:10 அந்நியரின் புத்திரர் உன் மதில்களைக் கட்டி, அவர்களுடைய ராஜாக்கள் உன்னைச் சேவிப்பார்கள்; என் கடுங்கோபத்தினால் உன்னை அடித்தேன்; ஆனாலும் என் கிருபையினால் உனக்கு இரங்கினேன்.

ஏசா 60:11 உன்னிடத்துக்கு ஜாதிகளின் பலத்த சேனையைக் கொண்டுவரும் படிக்கும், அவர்களுடைய ராஜாக்களை அழைத்து வரும்படிக்கும், உன் வாசல்கள் இரவும்பகலும் பூட்டப்படாமல் எப்பொழுதும் திறந்திருக்கும்.

"உன் வாசல்கள் இரவும்பகலும் பூட்டப்படாமல் எப்பொழுதும் திறந்திருக்கும்." - எருசலேம் மறுபடியும் திரும்பக் கட்டப்படும். அதனுடைய அலங்கத்தில் 12 வாசல்கள் இருக்கும். ஒவ்வொரு திசையிலும் மூன்று வாசல்கள் இருக்கும். (எசே 48:30-35)

பூமியிலுள்ள எருசலேமின் வாசல்கள் எப்பொழுதும் திறந்திருக்கும். ஆயிரம் வருஷ அரசாட்சிக்குப் பின்பு பரலோகத்திலுள்ள எருசலேம் பூமிக்கு இறங்கி வரும். (வெளி 21:25). பரலோக எருசலேமின் வாசல்கள் எப்போதும் திறந்திருப்பதுபோன்று பூமியிலுள்ள எருசலேமின் வாசல்களும் எப்போதும் திறந்திருக்கும்.

(இ) புறஜாதியாரின் கீழ்ப்படிதல்

ஏசா 60:12 உன்னைச் சேவிக்காத ஜாதியும் ராஜ்யமும் அழியும்; அந்த ஜாதிகள் நிச்சயமாய்ப் பாழாகும்.

ஏசா 60:13 என் பரிசுத்த ஸ்தானத்தைச் சிங்காரிக்கும்படிக்கு, லீபனோனின் மகிமையும், தேவதாரு விருட்சங்களும், பாய்மர விருட்சங்களும், புன்னை மரங்களுங்கூட உன்னிடத்திற்குக் கொண்டு வரப்படும்; என் பாதஸ்தானத்தை மகிமைப் படுத்துவேன்.

"உன்னைச் சேவிக்காத ஜாதியும் ராஜ்யமும் அழியும்" - இயேசு கிறிஸ்து மறுபடியும் வரும் போது எல்லா தேசத்தாரும் இஸ்ரவேலின் மகத்துவத்தை அங்கிகரிப்பார்கள். இஸ்ரவேலைச் சேவிக்காத அந்நிய ஜாதியார் அழிக்கப் படுவார்கள். (ஏசா 60:12-13; சக 14:16-21).

"என் பரிசுத்த ஸ்தானம்" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது கட்டப்படும் ஆயிரம் வருஷத்து அரசாட்சியின் ஆலயம். (சக 16:12-13) இந்த ஆலயம் மேசியாவின் நித்திய தலைநகரமாக இருக்கும். (எசே 43:7)

"என் பாதஸ்தானத்தை மகிமைப் படுத்துவேன்" - இந்தப் பரிசுத்த ஸ்தலத்தில் இயேசு கிறிஸ்து தமது பாதங்களினால் பூமியின்மீது நடப்பார். (எசே 43:7; சக 14:4).

(ஈ) புறஜாதியாரின் புகழுரை

ஏசா 60:14 உன்னை ஒடுக்கினவர்களின் பிள்ளைகளும் குனிந்து உன்னிடத்தில் வந்து, உன்னை அசட்டைபண்ணின யாவரும் உன் காலடியில் பணிந்து, உன்னைக் கர்த்தருடைய நகரம் என்றும், இஸ்ரவேலுடைய பரிசுத்தரின் சீயோன் என்றும்சொல்வார்கள்.

ஏசா 60:15 நீ நெகிழப்பட்டதும், கைவிடப்பட்டதும், ஒருவரும் கடந்து நடவாததுமாயிருந்தாய்; ஆனாலும் உன்னை நித்திய மாட்சிமையாகவும், தலைமுறை தலைமுறையாயிருக்கும் மகிழ்ச்சியாகவும் வைப்பேன்.

ஏசா 60:16 நீ ஜாதிகளின் பாலைக் குடித்து, ராஜாக்களின் முலைப் பாலையும் உண்டு, கர்த்தராகிய நான் இரட்சகரென்றும், யாக்கோபின் வல்லவர் உன் மீட்பரென்றும் அறிந்துகொள்வாய்.

"உன்னை அசட்டைபண்ணின யாவரும் உன் காலடியில் பணிந்து" - ஆயிரம் வருஷ அரசாட்சியில் இஸ்ரவேலின் சத்துருக்கள் அவரிடம் வந்து பணிவார்கள். எருசலேமைப் பூமியின் தலைநகரமாக மகிமைப்படுத்துவார்கள். (ஏசா 2:2-4).

60 அதிகாரம்

"நீ ஜாதிகளின் பாலைக் குடித்து" - இஸ்ரவேல் புறஜாதியாரின் ஐசுவரியங்களைப் பெற்றுக் கொள்ளும். எருசலேமைத் திரும்பக் கட்டுவதற்கும், பாலஸ்தீன தேசத்தை மறுபடியும் ஸ்தாபிப்பதற்கும், ஆயிரம் வருஷ அரசாட்சியில் சுவிசேஷ ஊழியம் செய்வதற்கும் புறஜாதியாரின் ஐசுவரியம் யூதருக்குக் கொடுக்கப்படும்.(ஏசா 60:5-7,16; ஏசா 2:2-4; ஏசா 52:7; சக 8:12).

இஸ்ரவேல் அறிந்து கொள்ளும் காரியங்கள்

1. கர்த்தராகிய நான் இரட்சகர்.

2. யாக்கோபின் வல்லவர் உன் மீட்பர்.

(உ) தேவனுடைய ஆசீர்வாதங்கள்

ஏசா 60:17 நான் வெண்கலத்துக்குப் பதிலாகப் பொன்னையும், இரும்புக்குப் பதிலாக வெள்ளியையும், மரங்களுக்குப் பதிலாக வெண்கலத்தையும், கற்களுக்குப் பதிலாக இரும்பையும் வரப்பண்ணி, உன் கண்காணிகளைச் சமாதானமுள்ளவர்களும், உன் தண்டற்காரரை நீதியுள்ளவர்களுமாக்குவேன்.

ஏசா 60:18 இனிக் கொடுமை உன் தேசத்திலும், அழிவும் நாசமும் உன் எல்லைகளிலும் கேட்கப்படமாட்டாது; உன் மதில்களை இரட்சிப்பென்றும், உன் வாசல்களைத் துதியென்றும் சொல்லுவாய்.

ஏசா 60:19 இனிச் சூரியன் உனக்குப் பகலிலே வெளிச்சமாயிராமலும், சந்திரன் தன் வெளிச்சத்தால் உனக்குப் பிரகாசியாமலும், கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமும், உன் தேவனே உனக்கு மகிமையுமாயிருப்பார்.

ஏசா 60:20 உன் சூரியன் இனி அஸ்தமிப்பதுமில்லை; உன் சந்திரன் மறைவதுமில்லை; கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமாயிருப்பார்; உன் துக்கநாட்கள் முடிந்துபோம்.

ஏசா 60:21 உன் ஜனங்கள் யாவரும் நீதிமான்களும், என்றைக்கும் பூமியைச் சுதந்தரிக்குங் குடிகளும், நான் நட்ட கிளைகளும், நான் மகிமைப்படும்படி என் கரங்களின் கிரியைகளுமாயிருப்பார்கள்.

ஏசா 60:22 சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான்; கர்த்தராகிய நான் ஏற்றகாலத்தில் இதைத் தீவிரமாய் நடப்பிப்பேன்.

"நான் வெண்கலத்துக்குப் பதிலாகப் பொன்னையும்" - ஆயிரம் வருஷ அரசாட்சியில் பொன் தாராளமாகக் கிடைக்கும். வெண்கலத்திற்குப் பதிலாகப் பொன்னைப் பயன்படுத்தும் அளவிற்குப் பொன் அங்கு மிகுதியாக இருக்கும். அப்போது இரும்புக்குப் பதிலாக வெள்ளியையும், மரங்களுக்குப் பதிலாக வெண்கலத்தையும், கற்களுக்குப் பதிலாக இரும்பையும் பயன்படுத்துவார்கள்.

"இனிக் கொடுமை உன் தேசத்திலும்" - ஆயிரம் வருஷ அரசாட்சியில் இஸ்ரவேல் தேசத்தில் கொடுமை இராது. அங்கு அழிவும், நாசமும் இராது. உலகம் முழுவதிலும் செழிப்பும், சமாதானமும் இருக்கும். மதில்கள் இரட்சிப்பென்று அழைக்கப்படும்.

"இனிச் சூரியன் உனக்குப் பகலிலே வெளிச்சமாயிராமலும்" - ஏசா 60:19-20 ஆகிய வசனங்களில் தேவனுடைய மகிமையைப் பற்றி விளக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய மகிமை சூரியன், சந்திரன் ஆகியவற்றின் வெளிச்சத்தை விட பிரகாசமாக இருக்கும். (ஏசா 30:26)

இப்போது பூமிக்குச் சந்திரனும், சூரியனுமே வெளிச்சத்திற்கு ஆதாரமாக உள்ளன.(ஏசா 60:19-20; ஏசா 4:5-6) புதிய எருசலேமில் சந்திரனும், சூரியனும் வெளிச்சத்திற்கு ஆதாரமாக இருப்பதற்குப் பதிலாகக் கர்த்தருடைய மகிமையே மகா பிரகாசமாக இருக்கும். (ஏசா 30:26) தேவனுடைய மகிமையே வெளிச்சமாக இருப்பதினால் (வெளி 21:23) புதிய எருசலேமில் உள்ள ஜனங்களுக்கு சந்திரனும், சூரியனும் தேவைப்படாது.

60 அதிகாரம்

"உன் சூரியன் இனி அஸ்தமிப்பதுமில்லை" - கர்த்தருடைய மகிமை பிரகாசமாக இருப்பதினால் சூரியன் உதிப்பதையும், அஸ்தமிப்பதையும் யாரும் கண்டுகொள்ள மாட்டார்கள். (ஏசா 4:5-6).

"நித்திய வெளிச்சம்" - எருசலேமிற்கு கர்த்தர் ஆயிரம் வருஷத்திற்கு வெளிச்சமாக இருப்பதற்குப் பதிலாக நித்திய வெளிச்சமாக இருப்பார். (ஏசா 4:5-6).

"உன் துக்கநாட்கள் முடிந்துபோம்." - புதிய எருசலேமில் வியாதி, துன்பம், துக்கம், யுத்தம், சாபம் ஆகியவை எதுவும் இராது. இவையெல்லாம் கடந்த கால சம்பவங்கள். இயேசு கிறிஸ்து இந்தப் பூமியை ஆளுகை செய்யும்போது அங்கு சமாதானமும், சந்தோஷமும் நிரம்பியிருக்கும். ஆயிரம் வருஷ அரசாட்சியில் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்திற்குத் திரும்பி இரட்சிக்கப் படுவார்கள். (ஏசா 60:21) ஆகையினால், அவர்களுடைய துக்கநாட்கள் அப்போது முடிந்துபோகும். ஆனால் புறஜாதியாரோ இரட்சிக்கப்படாமல் இருப்பதினால் துக்கத்தில் இருப்பார்கள். (ஏசா 65:20) புதிய பூமியில் எல்லா ஜனங்களுக்குமே துக்கம் இராது. (வெளி 21:3-7; வெளி 22:3).

"உன் ஜனங்கள் யாவரும் நீதிமான்களும்" - ஆயிரம் வருஷ அரசாட்சியில் யூதர் மத்தியில் துக்கமில்லாமல் இருப்பதற்கு இதுவே காரணம். (ஏசா 60:20-21).

தேவனுடைய திட்டம் நித்தியமானது

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஆரம்பத்தில் வாக்குப்பண்ணின வாக்குத்தத்த தேசத்தை ஆயிரம் வருஷ அரசாட்சியில் அவர்கள் முதன் முறையாகச் சுதந்தரித்துக் கொள்வார்கள். (ஏசா 60:21; ஆதி 17:8) மனுஷனைக் குறித்து தேவன் வைத்திருக்கும் திட்டம் தற்காலிகமானதல்ல. அது நித்தியமானது. ஆதாம் பாவம் செய்ததினால் தேவனுடைய திட்டம் நிறைவேறாமற்போகவில்லை. அது நிறைவேறுவதில் காலதாமதமாயிற்று. மனுஷன் பாவம் செய்வதற்கு முன்பு, பூமியில் எப்படிப்பட்ட ஆசீர்வாதம் இருக்க வேண்டுமென்று கர்த்தர் ஆதியில் திட்டமிட்டிருந்தாரோ அந்தத் திட்டம் வருங்காலத்தில் நிறைவேறும். (1கொரி 15:24-28; எபே 1:10; எபே 2:7; எபே 3:11; வெளி 21-22).

"சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான்" - ஆயிரம்வருஷ அரசாட்சியில் கர்த்தருக்கு விரோதமாக கலகம் செய்கிறவர்களும், சாத்தானோடு சேர்ந்து கொண்டு கர்த்தருக்கு விரோதமாக யுத்தம் பண்ணுகிறவர்களும் மரித்துப்போவார்கள். மற்றப்படி வியாதியினால் யாரும் மரிப்பதில்லை. ஆகையினால் குடும்பங்களிலுள்ள அங்கத்தினர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கும். சின்னவன் ஆயிரம் பேராகவும், சிறியவன் பலத்த ஜாதியாகவும் இருப்பான். (ஏசா 65:20; வெளி 20:7-10) புதிய பூமியில் மரணமே இராது. (1கொரி 15:4-28; வெளி 21:3-7).

61 அதிகாரம்

(4) மேசியாவின் முதலாம் வருகை - ஐந்து அம்ச ஊழியம்

ஏசா 61:1 கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங் கட்டுதலையும், சிறைப்பட்டவர் களுக்கு விடுதலையையும், கட்டுண் டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும்,

ஏசா 61:2 கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தையும், நம்முடைய தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளையும் கூறவும், துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும்,

"என்மேல்" - பரிசுத்த ஆவியானவர் வானத்திலிருந்து இயேசு கிறிஸ்துவின்மீது வந்து இறங்கினார். (மத் 3:16) அவர் அளவில்லாமல் பரிபூரணமாகக் கிறிஸ்துவை அபிஷேகம் பண்ணினார். (யோவான் 3:34).

"கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்" - (1சாமு 2:10; 1சாமு 12:5)

தீர்க்கதரிசன எண் - 74

"கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்......" (ஏசா 61:1-11) ஏசா 61:1-2 ஆகிய வசனங்கள் நிறைவேறிற்று. ஏசா 61:2-11 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை. இந்த வாக்கியம் லூக்கா 4:18-19 ஆகிய வசனங்களில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் (மேசியா) இருக்கிறார். (ஏசா 61:1; லூக்கா 4:16-19).
2. சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார். (ஏசா 61:1).
3. இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலைக்கூற அவர் என்னை அனுப்பினார்.
4. சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையைக் கூற அவர் என்னை அனுப்பினார்.
5. கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலைக் கூற அவர் என்னை அனுப்பினார்.
6. கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைக் கூற அவர் என்னை அனுப்பினார். (ஏசா 61:2).
7. கர்த்தருக்குள் பூரிப்பாய் மகிழுகிறேன் (ஏசா 61:10).
8. என் தேவனுக்குள் என் ஆத்துமா களிகூர்ந்திருக்கிறது.
9. அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தியிருக்கிறார்.
10. நீதியின் சால்வையை எனக்குத் தரித்தார்.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. நம்முடைய தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளைக் கூற அவர் என்னை அனுப்பினார். (ஏசா 61:2).
2. துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்ய அவர் என்னை அனுப்பினார்.
3. சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்த அவர் என்னை அனுப்பினார். (ஏசா 61:3).
4. சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தைக் கொடுக்க அவர் என்னை அனுப்பினார்.
5. துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தைக் கொடுக்க அவர் என்னை அனுப்பினார்.
6. ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையைக் கொடுக்க அவர் என்னை அனுப்பினார்.

61 அதிகாரம்

7. கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களென்று மனுஷர் அழைக்கப்படுவார்கள்.

8. அவர்கள் நெடுங்காலம் பாழாய்க் கிடந்தவைகளைக் கட்டுவார்கள். (ஏசா 61:4).

9. பூர்வத்தில் நிர்மூலமானவைகளை எடுப்பித்துக் கட்டுவார்கள். (ஏசா 61:4).

10. தலைமுறை தலைமுறையாய் இடிந்து கிடந்த பட்டணங்களைக் கட்டு வார்கள்.

11. பாழான பட்டணங்களைப் புதிதாய்க் கட்டுவார்கள்.

12. மறுஜாதியார் நின்றுகொண்டு உங்கள் மந்தைகளை மேய்ப்பார்கள். (ஏசா 61:5).

13. அந்நிய புத்திரர் உங்கள் பண்ணை யாட்களும்,உங்கள் திராட்சத் தோட்டக் காரருமாயிருப்பார்கள்.

14. நீங்களோ கர்த்தரின் ஆசாரியரென்று சொல்லப்படுவீர்கள். (ஏசா 61:6).

15. ஜனங்கள் உங்களை நமது தேவனுடைய பணிவிடைக்காரரென் பார்கள்.

16. நீங்கள் புறஜாதிகளின் செல்வத்தை அநுபவிப்பீர்கள்.

17. அவர்கள் மகிமையைக் கொண்டு மேன்மை பாராட்டுவீர்கள்.

18. உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக இரண்டத்தனையாய்ப் பலன் வரும் (ஏசா 61:7).

19. இலச்சைக்குப் பதிலாகப் புறஜாதி யாரின் பாகத்தில் நீங்கள் சந்தோஷப் படுவீர்கள்.

20. தங்கள் தேசத்தில் இரட்டிப்பான சுதந்தரம் அடைவீர்கள்.

21. நித்திய மகிழ்ச்சி உங்களுக்கு உண்டாகும்.

22. கர்த்தர் உங்கள் கிரியையை உண்மையாக்குவார். (ஏசா 61:8).

23. கர்த்தர் அவர்களோடே நித்திய உடன்படிக்கை பண்ணுவார். (ஏசா 61:8; ஏசா 42:6; ஏசா 49:8; ஏசா 55:3; ஏசா 57:8; ஏசா 59:21; எரே 31:31; எபி 10:16).

24. அவர்கள் சந்ததியானது புறஜாதி களின் நடுவில் இருக்கும். (ஏசா 61:9).

25. அவர்களைப் பார்க்கிற யாவரும் அவர்கள் கர்த்தரால் ஆசீர்வாதம் பெற்ற சந்ததியென்று அறிந்து கொள்வார்கள்.

26. கர்த்தராகிய ஆண்டவர் எல்லா ஜாதிகளுக்கும் முன்பாக நீதியையும் துதியையும் முளைக்கப்பண்ணுவார். (ஏசா 61:11).

மேசியா அபிஷேகம் பண்ணப் பட்டிருப்பதற்குக் காரணம்

1. சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க.

2. இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்ட.

3. சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையை அறிவிக்க.

4. கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்க்க.

5. கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைக் கூற. (ஏசா 61:1)

6. தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளைக் கூற.

7. துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்ய.

8. சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்த, அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தைக் கொடுக்க. (ஏசா 61:3)

ஏசாயா - தொகுப்புரை

61 அதிகாரம்

9. துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தைக் கொடுக்க.

10. ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையைக் கொடுக்க.

சிறுமைப்பட்டவர்களுக்கு ஆசீர்வாதங்கள்

1. சாந்த குணமுள்ளவர்கள் புசித்து திருப்தியடைவார்கள். (சங் 22:26).

2. சாந்த குணமுள்ளவர்களைக் கர்த்தர் நியாயத்திலே நடத்தி அவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார். (சங் 25:9).

3. சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரிப்பார்கள். (சங் 37:11).

4. கர்த்தர் சிறுமைப்பட்டவர்கள் யாவரையும்இரட்சிக்கிறார். (சங் 76:8).

5. கர்த்தர் சாந்தகுணமுள்ளவர்களை உயர்த்துகிறார். (சங் 147:6).

6. கர்த்தர் சாந்தகுணமுள்ளவர்களை இரட்சிப்பினால் அலங்கரிப்பார். (சங் 149:4).

7. சிறுமையானவர்கள் கர்த்தருக்குள் மிகவும் மகிழ்ந்து களிகூருவார்கள். மனுஷரில் எளிமையானவர்கள் இஸ்ரவேலின் பரிசுத்தருக்குள் களி கூருவார்கள். (ஏசா 29:19).

8. சிறுமைப்பட்டவர்கள் சுவிசேஷத்தைக் கேட்பார்கள். (ஏசா 61:1).

சாந்தகுணம்

1. இதை நாட வேண்டும் (செப் 2:3).

2. இது ஊழியக்காரரின் சுபாவமாக இருக்க வேண்டும். (1கொரி 4:21; 2கொரி 10:1; கலா 6:1; எபே 4:2; 2தீமோ 2:25; தீத்து 3:2; யாக் 3:13).

3. இது ஆவியின் கனியாக இருக்கிறது. (கலா 5:23).

4. இதைத் தரித்துக் கொள்ள வேண்டும். (கொலோ 3:12).

5. இதைப் பின்பற்ற வேண்டும். (1தீமோ 6:11).

6. மற்றவர்கள் நம்மை எதிர்க்கும்போது நாம் சாந்தகுணமுள்ளவர்களாக இருக்க வேண்டும். (2தீமோ 2:25).

7. நமது சாந்தகுணத்தை வெளிப்படுத்த வேண்டும். (தீத்து 3:2; யாக் 3:13; 1பேதுரு 3:15).

8. சத்தியத்தைப் பெற்றுக் கொள்ள சாந்தகுணத்தைப் பயன்படுத்த வேண்டும். (யாக் 1:21).

சாந்தகுணமுள்ளவர்களுக்கு எடுத்துக் காட்டானவர்கள்

1. மோசே (எண் 12:3)

2. கிறிஸ்து (மத் 11:29; மத் 21:5)

3. பவுல் (2கொரி 10:1)

"இருதயம் நொறுங்குண்டவர்கள்" - ஏதாவது ஒரு பிரச்சனையினால் அதிக வருத்தம் அடைந்து இருதயம் நொறுங்கிப் போயிருக்கிறவர்கள். (சங் 147:3; லூக்கா 4:18).

"விடுதலை" - சுவிசேஷத்தின் மையப்பகுதியே விடுதலை தான். மனுஷரை அடிமைத்தனத்திற்குள்ளாக்குவதற்கு கர்த்தர் பிரமாணங்களைக் கொடுக்கவில்லை. மனுஷருடைய ஜீவியத்தை ஒழுங்குபடுத்தும் வழிமுறைகளைக் கர்த்தர் கொடுத்திருக் கிறார். எல்லோருக்கும் எல்லா தேசத்திலும் விடுதலை உண்டாக வேண்டுமென்பதே கர்த்தரின் விருப்பம். (லேவி 25; எரே 34:8-17 எசே 46:17; யாத் 21:1-11; லேவி 22:10; உபா 15: 17-18; உபா 24:14)

கிறிஸ்தவ மார்க்கம் அடிமைத்தனத்தை அங்கிகரிக்கவில்லை. யாரும், யாரையும் அடிமைப்படுத்தக்கூடாது. எஜமான்கள் வேலையாட்களை அன்போடு நடத்த வேண்டும். வேலையாட்களும் எஜமானுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

61 அதிகாரம்

லூக்கா 4:18 ஆவது வசனத்தில் "சிறைப் பட்டவர்களுக்கு விடுதலையையும்" என்று கூறப்பட்டிருப்பது அடிமைத்தனத்தில் இருக்கிறவர்களுக்கு என்று பொருள்படாது. இவர்கள் தங்களுடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தில் நொறுங்கிப்போய் துயரம் அனுப விக்கிறவர்கள். இவர்கள் சாத்தானுக்கும், வியாதிக்கும், தோல்விக்கும், சாபத்திற்கும், பலவீனத்திற்கும், தீய பழக்கவழக்கங் களுக்கும் அடிமைகளாக இருக்கிறவர்கள். இந்த அடிமைத்தனம் இவர்களுடைய ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகியவற்றை அழித்துப் போடுகிறது. இந்த வார்த்தை பரதீசிலுள்ள சிறைப் பட்டவர்களையும் குறிக்கலாம். (மத் 12:40; லூக்கா 23:43; எபே 4:8-10; எபி 2:14-15)

"கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும்" - பாதாளத்திலுள்ள நீதிமான் களுடைய ஆவிகளை அவர்களுடைய விருப்பத்திற்கு மாறாக சாத்தான் காவலில் வைத்திருக்கிறான். (எபி 2:14-15). இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்து பரமேறியபோது அவர் பாதாளத்தில் கட்டுண்ட ஆவிகளை விடுவித்து தம்மோடு பரலோகத்திற்கு அழைத்துச் சென்றார். (மத் 12:40; எபே 4:8-10; ஏசா 49:9).

(5) மேசியாவின் இரண்டாம் வருகை - ஆறு அம்ச ஊழியம்

ஏசா 61:3 சீயோனிலே துயரப் பட்டவர் களைச் சீர்ப்படுத்தவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும்,ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை அனுப்பினார்; அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களென்னப்படுவார்கள்.

சிங்காரம் (beauty) - פְּאֵר - peh-ayr' - 6287

ஆ.பெ.சொ. - அலங்காரம், சிரபூஷணம், சிங்காரம், ஆபரணம், குல்லா, பாகை (**embellishment; a fancy headdress; beautiful diadem; tiara; turban; bonnet; ornament) beauty** (ஏசா 61:3); **ornaments** (ஏசா 61:10); **bonnets** (ஏசா 3:20; எசே 44:18); **goodly bonnets** (யாத் 39:28); **tire of thine head** (எசே 24:17,23).

"துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலம்" - ஆனந்த தைலம் என்பது சந்தோஷத் தையும், மகிழ்ச்சியையும் வெளிப்படுத்துகிறது. பண்டிகை நாட்களிலும், சந்தோஷமாக இருக்கும் பொழுதும் தைலத்தைப் பயன் படுத்துகிறார்கள். (சங் 45:7) துக்கநாட்களில் தைலத்தைப் பயன் படுத்துவதில்லை.

"ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடை" - ஒடுங்கின ஆவி என்பது நொறுங்குண்ட ஆவியையும், பாரமான ஆவியையும் குறிக்கும். உடை என்பது துதியையும், ஸ்தோத்திரத்தையும் குறிக்கும். மங்கியெரிகிற திரி (ஏசா 42:3), கண்கள் இருளடைந்திருப்பது (1சாமு 3:2) ஆகிய வாக்கியங்கள் ஒடுங்கின ஆவிக்கு அடையாளமாகும்.

"நீதியின் விருட்சங்கள்" - நதிகளின் ஓரத்தில் வளரும் கேதுரு மரங்கள். (சங் 1:3; சங் 92:12-14; எரே 17:8).

(6) மீட்பின் ஐம்பத்தி நான்கு அம்சம் - (61:4-62:12)

(அ) கட்டிடம் கட்டுதல்

ஏசா 61:4 அவர்கள் நெடுங்காலம் பாழாய்க் கிடந்தவைகளைக் கட்டி, பூர்வத்தில் நிர்மூலமானவைகளை எடுப்பித்து, தலைமுறை தலைமுறை யாய் இடிந்துகிடந்த பாழான பட்டணங் களைப் புதிதாய்க் கட்டுவார்கள்.

கட்டுமானப் பணிகள்

1. அவர்கள் நெடுங்காலம் பாழாய்க் கிடந்தவைகளைக் கட்டுவார்கள்.
2. அவர்கள் பூர்வத்தில் நிர்மூலமான வைகளை எடுப்பித்துக் கட்டுவார்கள்.
3. அவர்கள் தலைமுறை தலைமுறையாய் இடிந்துகிடந்ததைக் கட்டுவார்கள்.
4. அவர்கள் பாழான பட்டணங்களைப் புதிதாய்க் கட்டுவார்கள்.

61 அதிகாரம்

(ஆ) மறுஜாதி வேலையாட்கள்

ஏசா 61:5 மறுஜாதியார் நின்று கொண்டு உங்கள் மந்தைகளை மேய்த்து, அந்நிய புத்திரர் உங்கள் பண்ணையாட்களும்,உங்கள் திராட்சத் தோட்டக் காரருமாயிருப் பார்கள்.

மறுஜாதியாரின் வேலைகள்

1. அவர்கள் நின்றுகொண்டு உங்கள் மந்தைகளை மேய்ப்பார்கள்.
2. அவர்கள் உங்கள் பண்ணை யாட்களாக இருப்பார்கள்.
3. அவர்கள் உங்கள் திராட்சத் தோட்டக் காரராயிருப்பார்கள்.

(இ) மார்க்கத்தலைவர்கள்

ஏசா 61:6 நீங்களோ கர்த்தரின் ஆசாரியரென்று சொல்லப்படுவீர்கள்; உங்களை நமது தேவனுடைய பணிவிடைக்காரரென்பார்கள்; நீங்கள் ஜாதிகளின் செல்வத்தை அநுபவித்து, அவர்கள் மகிமையைக் கொண்டு மேன்மை பாராட்டுவீர்கள்.

மார்க்கத்தலைவரின் பெயர்கள்

1. கர்த்தரின் ஆசாரியர்
2. தேவனுடைய பணிவிடைக்காரார்

(ஈ) உயர்வும் சந்தோஷமும்

ஏசா 61:7 உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக இரண்டத்தனையாய்ப் பலன் வரும்; இலச்சைக்குப் பதிலாகத் தங்கள் பாகத்தில் சந்தோஷப்படுவார்கள்; அதினிமித்தம் தங்கள் தேசத்தில் இரட்டிப்பான சுதந்தரம் அடைவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்களுக்கு உண்டாகும்.

ஏசா 61:8 கர்த்தராகிய நான் நியாயத்தை விரும்பி, கொள்ளைப் பொருளினால் இடப்பட்ட தகனபலியை வெறுக்கிறேன்; நான் அவர்கள் கிரியையை உண்மையாக்கி, அவர்க ளோடே நித்திய உடன்படிக்கை பண்ணுவேன்.

ஏசா 61:9 அவர்கள் சந்ததியானது ஜாதிகளின் நடுவிலும், அவர்கள் சந்தானமானது ஜனங்களின் நடுவிலும் அறியப்பட்டிருக்கும்; அவர்க ளைப் பார்க்கிற யாவரும் அவர்கள் கர்த்தரால் ஆசீர்வாதம் பெற்ற சந்ததி யென்று அறிந்து கொள்வார்கள்.

ஏசா 61:10 கர்த்தருக்குள் பூரிப்பாய் மகிழுகிறேன்; என் தேவனுக்குள் என் ஆத்துமா களிகூர்ந்திருக்கிறது; மணவாளன் ஆபரணங்களினால் தன்னை அலங்கரித்துக் கொள்ளுகிற தற்கும், மணவாட்டி நகைகளினால் தன்னைச் சிங்காரித்துக் கொள்ளுகிற தற்கும் ஒப்பாக, அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை எனக்குத் தரித்தார்.

ஏசா 61:11 பூமி தன் பூண்டுகளை விளைவிப்பது போலவும், தோட்டம் தன்னில் விதைக்கப்பட்டவைகளை முளைவிப்பதுபோலவும், கர்த்தராகிய ஆண்டவர் எல்லா ஜாதிகளுக்கும் முன்பாக நீதியையும் துதியையும் முளைக்கப்பண்ணுவார்.

கர்த்தருடைய வாக்கு

1. கர்த்தராகிய நான் நியாயத்தை விரும்புகிறேன்.
2. நான் கொள்ளைப்பொருளினால் இடப் பட்ட தகனபலியை வெறுக்கிறேன்.
3. நான் அவர்கள் கிரியையை உண்மை யாக்குகிறேன்.
4. நான் அவர்களோடே நித்திய உடன்படிக்கை பண்ணுவேன். (ஏசா 42:6; ஏசா 49:8; ஏசா 55:3; ஏசா 57:8; ஏசா 59:21; எரே 31:31; எபி 10:16).

ஏசாயா - தொகுப்புரை

61 அதிகாரம்

"கர்த்தருக்குள் பூரிப்பாய் மகிழுகிறேன்" - இந்த வாக்கியமும், ஏசா 61:1-2 ஆகிய வசனங்களும், 2000 வருஷங்களுக்கு முன்பு இயேசு கிறிஸ்துவில் நிறைவேறிற்று. இந்த வாக்கியம்இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது. இதில்அவர் தம்மைத்தாமே குறிப்பிடுகிறார். (ஏசா 61:1=லூக்கா 4:16-18) பிதாவும், தம்மைத்தாமே குறிப்பிட்டிருக்கிறார். (ஏசா 61:8). இந்த வாக்கியம் ஏசாயா தீர்க்க தரிசியைக் குறிக்கவில்லை. இரட்சிப்பின் வஸ்திரம் என்னும் வாக்கியம் இங்கு பயன்படுத்தப்பட்டிருப்பதினால் இது மேசியாவைக் குறிப்பிடாது என்று கூற முடியாது. ஏனெனில் இரட்சிப்பு என்பது மீட்பைக் குறிக்கும். இயேசு கிறிஸ்து மரணத்திலிருந்தும், பாதாளத்திலிருந்தும், கல்லறையிலிருந்தும் மீட்கப்பட்டார்.

ஆபரணங்கள் (ornaments) - פְּאֵר - peh-ayr' - 6287

ஆ.பெ.சொ. - அலங்காரம், சிரபூஷணம், சிங்காரம், ஆபரணம், குல்லா, பாகை (ஏசா 61:3, வெளி 21:2).

"கர்த்தராகிய ஆண்டவர் எல்லா ஜாதிகளுக்கும் முன்பாக நீதியையும் துதியையும் முளைக்கப்பண்ணுவார்" - புறஜாதியார் மத்தியில் நீதியும், துதியும் நிரம்பியிருக்கும். (ஏசா 11:4-5; ஏசா 16:5; ஏசா 32:1,16-17; ஏசா 45:8; ஏசா 48:18; ஏசா 51:5-8; ஏசா 54:14; ஏசா 56:1; ஏசா 58:8; ஏசா 59:17; ஏசா 62:1-2).

62 அதிகாரம்

(உ) ஜெபம்

ஏசா 62:1 சீயோனினிமித்தமும் எருசலேமினிமித்தமும் நான் மவுனமாயிராமலும், அதின் நீதி பிரகாசத்தைப் போலவும், அதின் இரட்சிப்பு எரிகிற தீவட்டியைப்போலவும் வெளிப்படுமட்டும் அமராமலும் இருப்பேன்.

ஏசா 62:2 ஜாதிகள் உன் நீதியையும், சகல ராஜாக்களும் உன் மகிமையையும் காண்பார்கள்; கர்த்தருடைய வாய் சொல்லும் புது நாமத்தால் நீ அழைக்கப்படுவாய்.

ஏசா 62:3 நீ கர்த்தருடைய கையில் அலங்காரமுமான கிரீடமும், உன் தேவனுடைய கரத்தில் ராஜமுடியுமாயிருப்பாய்.

ஏசா 62:4 நீ இனிக் கைவிடப்பட்டவள் என்னப்படாமலும், உன் தேசம் இனிப் பாழான தேசமென்னப்படாமலும், நீ எப்சிபா என்றும், உன் தேசம் பியூலா என்றும் சொல்லப்படும்; கர்த்தர் உன்மேல் பிரியமாயிருக்கிறார்; உன் தேசம் வாழ்க்கைப்படும்.

ஏசா 62:5 வாலிபன் கன்னிகையை விவாகம் பண்ணுவதுபோல, உன் மக்கள் உன்னை விவாகம் பண்ணுவார்கள்; மணவாளன் மணவாட்டியின் மேல் மகிழ்ச்சியாயிருப்பதுபோல, உன் தேவன் உன்மேல் மகிழ்ச்சியாயிருப்பார்.

ஏசா 62:6 எருசலேமே, உன் மதில்களின் மேல் பகல்முழுதும் இராமுழுவதும் ஒருக்காலும் மவுனமாயிராத ஜாமக்காரரைக் கட்டளையிடுகிறேன். கர்த்தரைப் பிரஸ்தாபம் பண்ணுகிறவர்களே, நீங்கள் அமரிக்கையாயிருக்கலாகாது.

ஏசா 62:7 அவர் எருசலேமை ஸ்திரப்படுத்தி, பூமியிலே அதைப் புகழ்ச்சியாக்கும்வரைக்கும் அவரை அமர்ந்திருக்கவிடாதிருங்கள்.

தீர்க்கதரிசன எண் - 75

"சீயோனினிமித்தமும் எருசலேமினிமித்தமும் நான் மவுனமாயிராமலும்......" (ஏசா 62:1-12) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. சீயோனினிமித்தமும் எருசலேமினிமித்தமும் நான் மவுனமாயிராமலும், அதின் நீதி பிரகாசத்தைப்போலவும், அதின் இரட்சிப்பு எரிகிற தீவட்டியைப் போலவும் வெளிப்படு மட்டும் அமராமலும் இருப்பேன். (ஏசா 62:1).
2. ஜாதிகள் உன் நீதியைக் காண்பார்கள். (ஏசா 61:2).
3. சகல ராஜாக்களும் உன் மகிமையைக் காண்பார்கள் (ஏசா 61:2).
4. கர்த்தருடைய வாய் சொல்லும் புது நாமத்தால் நீ அழைக்கப்படுவாய்.
5. நீ கர்த்தருடைய கையில் அலங்காரமான கிரீடமாக இருப்பாய். (ஏசா 62:3).
6. நீ உன் தேவனுடைய கரத்தில் ராஜமுடியாயிருப்பாய். (ஏசா 62:3).
7. நீ இனிக் கைவிடப்பட்டவள் என்னப்படாமல் இருப்பாய். (ஏசா 62:4).
8. உன் தேசம் இனிப் பாழான தேசமென்னப்படாமல் இருக்கும். (ஏசா 62:4).
9. நீ எப்சிபா என்று சொல்லப்படுவாய்.
10. உன் தேசம் பியூலா என்று சொல்லப்படும்.
11. உன் மக்கள் உன்னை விவாகம் பண்ணுவார்கள். (உன்னோடு சேர்ந்து கொள்வார்கள்) (ஏசா 62:5).
12. உன் தேவன் உன்மேல் மகிழ்ச்சியாயிருப்பார்.
13. எருசலேமே, உன் மதில்களின் மேல் பகல்முழுதும் இராமுழுவதும் ஒருக்காலும் மவுனமாயிராத ஜாமக்காரரைக் கட்டளையிடுகிறேன் (ஏசா 62:6).

62 அதிகாரம்

14. இனி நான் உன் தானியத்தை உன் சத்துருக்களுக்கு ஆகாரமாகக் கொடேன் *(ஏசா 62:8).*

15. உன் பிரயாசத்தினாலாகிய உன் திராட்சரசத்தை அந்நிய புத்திரர் குடிப்பதில்லை.

16. அதைச் சேர்ந்தவர்களே அதைப் புசித்துக் கர்த்தரைத் துதிப்பார்கள். *(ஏசா 62:9).*

17. அதைக் கூட்டிவைத்தவர்களே என் பரிசுத்த ஸ்தலத்தின் பிராகாரங்களில் அதைக் குடிப்பார்கள்.

18. கர்த்தரை ஆராதிப்பதற்காக ஜனங்கள் எருசலேமிற்குப் போவதற்கு ஒரு பெரும்பாதை உண்டாக்கப்படும். *(ஏசா 62:10; ஏசா 11:16; ஏசா 19:23; ஏசா 35:8).*

19. ஜனங்களுக்காகக் கொடி ஏற்றப்படும். *(ஏசா 62:10).*

20. சீயோனின் இரட்சிப்பு வருகிறது. அவர் அருளும் பலன் அவரோடும், அவர் செய்யும் பிரதிபலன் அவர் முன்பாகவும் வருகிறது. *(ஏசா 62:11).*

21. ஜனங்கள் இஸ்ரவேலரைப் பரிசுத்த ஜனமென்றும், கர்த்தரால் மீட்கப் பட்டவர்களென்று சொல்லுவார்கள். *(ஏசா 62:12).*

22. இஸ்ரவேல் தேடிக்கொள்ளப்பட்ட தென்றும், கைவிடப் படாத நகரமென்றும் பெயர்பெறும். *(ஏசா 62:12).*

"அமராமலும் இருப்பேன்" - சீயோன், எருசலேம், யூதா ஆகியவை இரட்சிக்கப் பட்டு, மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படும் வரையிலும் கர்த்தர் அமர மாட்டார். இந்தக் காரியத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கர்த்தர் தீர்மானம் பண்ணியிருக்கிறார். சீயோனின் நீதி பிரகாசமாக எல்லோருக்கும் தெரியும். புறஜாதியார் எல்லோரும் அந்த நீதியைக் காண்பார்கள். தேவனுடைய மகிமை இஸ்ரவேலில் வெளிப்படுவதை ராஜாக்கள் காண்பார்கள். *(ஏசா 62:2).*

"கர்த்தருடைய வாய் சொல்லும் புது நாமத்தால் நீ அழைக்கப்படுவாய்" - கர்த்தர் இஸ்ரவேலுக்கு "எப்சிபா" **(Hephzibah)** என்னும் புதிய பெயரைக் கொடுத்திருக்கிறார். இதற்குப் பிரியம் **"delight"** என்று பொருள். அவர்களுடைய தேசம் "பியூலா" **(Beulah)** என்று அழைக்கப்படும். இதற்கு "வாழ்க்கைப் படும்" **"married"** என்று பொருள். *(ஏசா 62:2,4; ஏசா 62:11).*

யூதா இருக்கப்போகும் விதம்

1. நீதி *(ஏசா 62:1)*
2. இரட்சிப்பு
3. மகிமை *(ஏசா 62:2)*
4. புதிய நாமத்தால் அழைக்கப்படுவது.
5. கர்த்தருடைய கையில் அலங்காரமான கிரீடம். *(ஏசா 62:3)*
6. தேவனுடைய கரத்தில் ராஜமுடி.
7. எப்சிபா என்று சொல்லப்படுவது *(ஏசா 62:4)*
8. பியூலா என்று சொல்லப்படுவது.
9. பூமியில் புகழ்ச்சி *(ஏசா 62:7)*
10. பரிசுத்த ஜனமென்றும், கர்த்தரால் மீட்கப்பட்டவர்களென்றும் சொல்லப் படுவது. *(ஏசா 62:12)*

"எப்சிபா" **(Hephzibah)** - இந்தப் பெயருக்கு "பிரியம்" **"delight"** அல்லது "இவரில் நான் பிரியமாயிருக்கிறேன்" **"in whom is My delight"** என்று பொருள். எசேக்கியாவினுடைய மனைவியின் பெயர் எப்சிபா. *(2இராஜா 21:1)* இது எருசலேமின் அடையாளப் பெயராகும்.

"பியூலா" **(Beulah)** - இந்தப் பெயருக்கு "வாழ்க்கைப்படும்" **"married"** என்று பொருள். இது பாலஸ்தீன தேசத்தின் அடையாளப் பெயராகும்.

62 அதிகாரம்

யூதா, எருசலேம் ஆகியவற்றின் ஒப்புமைகள்

1. வாலிபன் கன்னிகையை விவாகம் பண்ணுவது போல, உன் மக்கள் உன்னை விவாகம் பண்ணுவார்கள். (ஏசா 62:5) இஸ்ரவேலின் மக்கள் இஸ்ரவேலுக்குத் திரும்பி வருவார்கள். அவர்கள் இஸ்ரவேலில் மீதமுள்ளோரோடும், பாலஸ்தீன தேசத்தாரோடும் சேர்க்கப் படுவார்கள்.

2. மணவாளன் மணவாட்டியின்மேல் மகிழ்ச்சியாயிருப்பதுபோல, உன் தேவன் உன்மேல் மகிழ்ச்சியாயிருப்பார். இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுடைய வாக்குத்தத்த தேசத்தை நித்தியமாகச் சுதந்தரித்து அங்கு குடியிருக்கும் போது கர்த்தர் மிகுந்த மகிழ்ச்சியடைவார்.

"ஜாமக்காரர்" - ஒவ்வொரு பட்டணத்திற்கும் பாதுகாப்பாக அலங்கத்தைக் கட்டி அதன்மீது ஜாமக்காரரை வைப்பது வழக்கம். தேவனுடைய தீர்க்கதரிசிகளும், ஊழியக்காரர்களும் ஜாமக்காரரைப் போன்றவர்கள். அவர்கள் மௌனமாக இருக்கமாட்டார்கள். இஸ்ரவேல் புத்திரர் பாலஸ்தீன தேசத்தில் மறுபடியும் கூட்டிச்சேர்க்கப்படும் வரையிலும் அவர்கள் அமரிக்கையாயிராமல் கர்த்தரைப் பிரஸ்தாபம் பண்ணிக்கொண்டிருப்பார்கள். (ஏசா 21:11-12; எசே 3:17; எசே 33:7)

தேவனுடைய ஜாமக்காரருக்குக் கூறப்பட்டிருக்கும் கட்டளைகள்

1. நீங்கள் அமரிக்கையாயிருக்கலாகாது. (ஏசா 62:6)

2. கர்த்தர் எருசலேமை ஸ்திரப்படுத்தி, பூமியிலே அதைப் புகழ்ச்சியாக்கும் வரைக்கும் அவரை அமர்ந்திருக்க விடாதிருங்கள். (ஏசா 62:7).

3. வாசல்கள் வழியாய்ப் பிரவேசியுங்கள் (ஏசா 62:10).

4. ஜனத்துக்கு வழியைச் செவ்வைப் படுத்துங்கள்.

5. பாதையை உயர்த்துங்கள், உயர்த்துங்கள்.

6. அதிலுள்ள கற்களைப் பொறுக்கிப் போடுங்கள்.

7. ஜனங்களுக்காகக் கொடியை ஏற்றுங்கள்.

8. நீங்கள் சீயோன் குமாரத்தியை நோக்கி: இதோ, உன் இரட்சிப்பு வருகிறது; இதோ, அவர் அருளும் பலன் அவரோடும், அவர் செய்யும் பிரதிபலன் அவர் முன்பாகவும் வருகிறது என்று சொல்லுங்கள் (ஏசா 62:11).

(ஊ) மீட்பின் வாக்குத்தத்தம்

ஏசா 62:8 இனி நான் உன் தானியத்தை உன் சத்துருக்களுக்கு ஆகாரமாகக் கொடேன்; உன் பிரயாசத்தினாலாகிய உன் திராட்சரசத்தை அந்நிய புத்திரர் குடிப்பதுமில்லையென்று கர்த்தர் தமது வலதுகரத்தின்மேலும் தமது வல்லமையுள்ள புயத்தின்மேலும் ஆணையிட்டார்.

ஏசா 62:9 அதைச் சேர்ந்தவர்களே அதைப் புசித்துக் கர்த்தரைத் துதிப்பார்கள்; அதைக் கூட்டி வைத்தவர்களே என் பரிசுத்த ஸ்தலத்தின் பிராகாரங்களில் அதைக் குடிப்பார்கள்.

ஏசா 62:10 வாசல்கள் வழியாய்ப் பிரவேசியுங்கள், பிரவேசியுங்கள்; ஜனத்துக்கு வழியைச் செவ்வைப் படுத்துங்கள்;பாதையை உயர்த்துங்கள், உயர்த்துங்கள்; அதிலுள்ள கற்களைப் பொறுக்கிப் போடுங்கள்; ஜனங்களுக்காகக் கொடியை ஏற்றுங்கள்.

ஏசா 62:11 நீங்கள் சீயோன் குமாரத்தியை நோக்கி: இதோ, உன் இரட்சிப்பு வருகிறது; இதோ, அவர் அருளும் பலன் அவரோடும், அவர் செய்யும் பிரதிபலன் அவர் முன்பாகவும் வருகிறது என்று சொல்லுங்கள் என்று, கர்த்தர் பூமியின் கடையாந்தரம் வரைக்கும் கூறுகிறார்.

ஏசாயா - தொகுப்புரை

62 அதிகாரம்

ஏசா 62:12 அவர்களைப் பரிசுத்த ஜனமென்றும், கர்த்தரால் மீட்கப் பட்டவர்களென்றும் சொல்லுவார்கள்; நீ தேடிக்கொள்ளப்பட்டதென்றும், கைவிடப்படாத நகரமென்றும் பெயர் பெறுவாய்.

"ஜனத்துக்கு வழியைச் செவ்வைப் படுத்துங்கள்" - ஏசா 40:3 ஆவது வசனத்தில் மேசியாவிற்குப் பாதைகளைச் செவ்வைப் படுத்துமாறு கூறப்பட்டிருக்கிறது. இங்கு அவருடைய ஜனங்களுக்கு வழியைச் செவ்வைப்படுத்துமாறு கூறப்பட்டிருக்கிறது.

"பாதை" - இந்தப் பாதையைப் பற்றி வேதாகமத்தில் ஏற்கெனவே கூறப் பட்டிருக்கிறது. (ஏசா 11:16; ஏசா 19:23; ஏசா 35:8).

"ஜனங்களுக்காகக்கொடியை ஏற்றுங்கள்" - (ஏசா 11:10)

"உன் இரட்சிப்பு வருகிறது" - மேசியாவே சீயோனின் இரட்சிப்பாக இருக்கிறார். (சக 9:9; லூக்கா 1:69; லூக்கா 2:30; லூக்கா 3:6).

"அவர் அருளும் பலன்" - (ஏசா 40:10; மத் 16:27; வெளி 22:12)

63 அதிகாரம்

(7) மேசியாவின் இரண்டாம் வருகை

ஏசா 63:1 ஏதோமிலும் அதிலுள்ள போஸ்றா பட்டணத்திலுமிருந்து, சாயந்தீர்ந்த வஸ்திரங்களுடைய வராகவும், மகத்துவமாய் உடுத்திருக்கி றவராகவும், தமது மகத்தான வல்லமையிலே எழுந்தருளினவராகவும் வருகிற இவர் யார்? நீதியைப் பேசி இரட்சிக்க வல்லவராகிய நான்தானே.

ஏசா 63:2 உம்முடைய உடுப்புச் சிவப்பாகவும்,உம்முடைய வஸ்திரங்கள் ஆலையைமிதிக்கிறவன் வஸ்திரங்கள் போலவும் இருக்கிறதென்ன?

ஏசா 63:3 நான் ஒருவனாய் ஆலையை மிதித்தேன்; ஜனங்களில் ஒருவனும் என்னோடிருந்ததில்லை; நான் என் கோபத்திலே அவர்களை மிதித்து, என் உக்கிரத்திலே அவர்களை நசுக்கிப் போட்டேன்; அதினால் அவர்கள் இரத்தம் என் வஸ்திரங்களின்மேல் தெறித்தது, என் உடுப்பையெல்லாம் கறைப்படுத்திக் கொண்டேன்.

ஏசா 63:4 நீதியைச் சரிக்கட்டும் நாள் என் மனதிலிருந்தது; என்னுடையவர் களை மீட்கும் வருஷம் வந்தது.

ஏசா 63:5 நான் பார்த்தேன், துணை செய்வார் ஒருவருமில்லை; தாங்குவார் ஒருவருமில்லை என்று ஆச்சரியப்பட்டேன்; அப்பொழுது என் புயமே எனக்கு இரட்சிப்பாகி, என் உக்கிரமே என்னைத் தாங்கிற்று.

ஏசா 63:6 நான் என் கோபத்திலே ஜனங்களை மிதித்து, என் உக்கிரத்திலே அவர்களை வெறியாக்கி, அவர்கள் சாரத்தைத் தரையிலே இறங்கப் பண்ணினேன்.

தீர்க்கதரிசன எண் - 76

"ஏதோமிலும் அதிலுள்ள போஸ்றா பட்டணத்திலுமிருந்து......" (ஏசா 63:1-64:12) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேற வில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. ஏதோமிலும் அதிலுள்ள போஸ்றா பட்டணத்திலுமிருந்து, சாயந்தீர்ந்த வஸ்திரங்களுடையவராக நான் வருவேன். (ஏசா 63:1).
2. மகத்துவமாய் உடுத்திருக்கிறவராகவும், தமது மகத்தான வல்லமையிலே எழுந்தருளினவராகவும் வருவேன்.
3. என்னுடைய உடுப்புச் சிவப்பாக இருக்கும். (ஏசா 63:2).
4. என்னுடைய வஸ்திரங்கள் ஆலையை மிதிக்கிறவன் வஸ்திரங்கள் போலவும் இருக்கும்.
5. நான் ஒருவனாய் ஆலையை மிதிப்பேன். (ஏசா 63:3).
6. அவர்கள் இரத்தம் என் வஸ்திரங்களின் மேல் தெறிக்கும்.
7. என் உடுப்பையெல்லாம் கறைப் படுத்திக் கொள்வேன்.
8. நீதியைச் சரிக்கட்டும் நாள் என் மனதிலிருக்கிறது. (ஏசா 63:4).
9. என்னுடையவர்களை மீட்கும் வருஷம் வந்தது.
10. என் புயமே எனக்கு இரட்சிப்பாகும். (ஏசா 63:5).
11. என் உக்கிரமே என்னைத் தாங்கும்.
12. நான் என் கோபத்திலே ஜனங்களை மிதித்து, என் உக்கிரத்திலே அவர்களை வெறியாக்குவேன். (ஏசா 63:6)
13. அவர்கள் சாரத்தைத் தரையிலே இறங்கப்பண்ணுவேன். (ஏசா 63:6).
14. இஸ்ரவேல் வம்சத்துக்குச் செய்த மகா நன்மைக்குத்தக்கதாகவும் கர்த்தருடைய கிரியைகளையும், கர்த்தருடைய துதிகளையும் பிரஸ்தாபம்பண்ணுவேன். (ஏசா 63:7-14).

63 அதிகாரம்

15. இஸ்ரவேலில் மீதியாயிருக்கிறவர்கள் கர்த்தரிடத்தில் ஜெபிப்பார்கள். உபத்திரவக் காலத்தின் முடிவில் மேசியா திரும்பி வரவேண்டுமென்று விண்ணப்பம் பண்ணுவார்கள். (ஏசா 63:15-64:12).

16. கர்த்தர் கடைசி நாட்களில் பூர்வ நாட்களையும், மோசேயையும், தம்முடைய ஜனத்தையும் நினைவு கூருவார் (ஏசா 63:11; லேவி 26:33-43; உபா 30:1-10).

17. உமது பரிசுத்த பட்டணங்கள் வனாந்தரமாகும். (ஏசா 64:10).

18. சீயோன் வனாந்தரமாகும்.

19. எருசலேம் பாழாய்க்கிடக்கும்.

20. ஆலயம் அக்கினிக்கு இரையாகும். (ஏசா 64:11).

21. இன்பமான ஸ்தானங்களெல்லாம் பாழாகும்.

இந்த ஜெபத்தின் பின்பகுதியை இஸ்ரவேல் புத்திரர் கடைசி நாட்களில் ஏறெடுப்பார்கள். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இந்த ஜெபங்கள் ஏறெடுக்கப்படும். (ஏசா 64:10-11)

"ஏதோம்" - ஏதோம், மோவாப், அம்மோன் ஆகிய மூன்றும் அந்திக்கிறிஸ்துவிடமிருந்து தப்பித்துக் கொள்ளும். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை மூன்றரை வருஷ உபத்திரவக் காலத்தில் இங்கு பாதுகாப்பாக வைத்திருப்பார். (ஏசா 63:1; ஏசா 16:1-5; தானி 11:40-45; மத் 4:15-22; வெளி 12:6,14)

இயேசு கிறிஸ்து தம்முடைய இரண்டாம் வருகையின்போது வானத்திலிருந்து ஏதோமிற்கு இறங்கி வருவார். இங்கு அந்திக் கிறிஸ்துவின் உபத்திரவத்திலிருந்து யூதர்கள் பாதுகாக்கப் பட்டிருப்பார்கள். எருசலேமிற்குக் கிழக்கே ஒலிவ மலையில் கிறிஸ்துவின் பாதம் படும் வரையிலும் மேசியா இறங்கி வருவார்.

இங்கு அந்திக்கிறிஸ்துவிற்கும், இயேசு கிறிஸ்துவிற்கும் இடையே அர்மெகதோன் யுத்தம் நடைபெறும். (ஏசா 63:1-6, யோவே 2-3; சக 14; வெளி 19:11-21) இயேசு கிறிஸ்து வானத்திலிருந்து எருசலேமிற்கு இறங்கி வருவதை இஸ்ரவேல் புத்திரர் பார்த்து, "கர்த்தரின் நாமத்தில் வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்" என்று ஆர்ப்பரிப்பார்கள். (மத் 23:35-39) அதன் பின்பு அவர்கள் ஏசா 63:15-64:12 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் ஜெபத்தை ஏறெடுப்பார்கள். பரிசுத்த ஆவியானவர் அவர்கள்மீது தங்கியிருப்பார். (சக 12:10-13:1) இஸ்ரவேல் புத்திரர் அந்நாளில் மனந்திரும்புவார்கள். (ஏசா 66:7-8; ரோமர் 11:25-29).

"சாயந்தீர்ந்த வஸ்திரங்கள்" - அர்மெகதோன் யுத்தத்தில் மனுஷனுடைய இரத்தத்தினால் வஸ்திரங்களின் நிறம் இஜ்த்தமாக மாறும். (ஏசா 63:2-3) தேவனுடைய கோபாக்கினையின் திராட்ச ரசத்து ஆலையோடு இது ஒப்பிட்டுக் கூறப்படுகிறது. (ஏசா 63:2-3; யோவே 3:13; வெளி 14:14-20; வெளி 19:15-21).

"போஸ்றா" **(Bozrah)** - ஏதோம், மோவாப் ஆகியவற்றின் மிகப்பெரிய பட்டணங்களில் போஸ்றாவும் ஒன்று.

"நீதியைப் பேசி இரட்சிக்க வல்லவராகிய நான்தானே." - இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் கேள்விக்கு இது பதிலாக அமைந்திருக்கிறது. இந்த வசனப்பகுதியை நிறைவேற்றுவதற்கு மேசியா தமது மகத்துவ வல்லமையில் எழுந்தருளி வருவார். (ஏசா 63:1-6; யோவே 2-3; சக 14; வெளி 19:11-21).

"நான் ஒருவனாய் ஆலையை மிதித்தேன்" - (யோவே 3:13; வெளி 14:14-20; வெளி 19:15)

"ஜனங்களில் ஒருவனும் என்னோடிருந்ததில்லை"-இயேசு கிறிஸ்து பரலோகத்திலிருந்து பூமிக்கு இறங்கி வரும்போது அவரோடு உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களும்,தேவதூதர்களும் மட்டுமே வருவார்கள். இவர்களைத் தவிர பூமியிலுள்ள ஜனங்களில் யாரும் அவரோடு கூட இருக்கமாட்டார்கள். (சக 14:5; மத் 25:31; 2தெச 1:7-10; யூதா 1:14-15; வெளி 19:11-21).

63 அதிகாரம்

"நீதியைச் சரிக்கட்டும் நாள் என் மனதிலிருந்தது" - இந்த நாளைப் பற்றி ஏசா 34:8; ஏசா 35:4; ஏசா 59:17; ஏசா 61:2; எரே 51:6; 2தெச 1:8 ஆகிய வசனங்களில் கூறப் பட்டிருக்கிறது. இது பூமியில் மகாப்பெரிய அழிவு உண்டாகும் நாளாகும். அர்மெகதோனில் ஒரேநாளில் திரளான ஜனங்கள் சங்காரமாவார்கள். (ஏசா 63:1-6; எசே 38:39; யோவே 2-3; சக 14; 2தெச 1:7-10; யூதா 1:14-15; வெளி 19:11-21). அப்போது கர்த்தர் தம்முடைய வர்கள் அனைவரையும் மீட்டுக்கொள்வார். (ரோமர் 11:25-29).

"நான் பார்த்தேன், துணைசெய்வார் ஒருவருமில்லை" - யூதாவுக்கு இயேசு கிறிஸ்துவைத் தவிர வேறு யாராலும் இரட்சிப்பைத் தரமுடியாது. (ஏசா 63:5-6).

(8) கடந்த கால ஆசீர்வாதங்களுக்காக துதி செலுத்துதல்

ஏசா 63:7 கர்த்தர் எங்களுக்குச் செய்தருளின எல்லாவற்றிலும் தக்கதாகவும், அவர் தம்முடைய இரக்கங்களின்படியும் தம்முடைய திரளான தயவுகளின் படியும், இஸ்ரவேல் வம்சத்துக்குச் செய்த மகா நன்மைக்குத் தக்கதாகவும் கர்த்தருடைய கிரியைகளையும், கர்த்தருடையதுதிகளையும் பிரஸ்தாபம் பண்ணுவேன்.

ஏசா 63:8 அவர்கள் என் ஜனத்தா னென்றும், அவர்கள் வஞ்சனை செய்யாதிருக்கும் பிள்ளை களென்றும் சொல்லி, அவர்களுக்கு இரட்சக ரானார்.

ஏசா 63:9 அவர்களுடைய எல்லா நெருக்கத்திலும் அவர் நெருக்கப் பட்டார்; அவருடைய சமுகத்தின் தூதனானவர் அவர்களை இரட்சித்தார்; அவர் தமது அன்பினி மித்தமும், தமது பரிதாபத்தினி மித்தமும் அவர்களை மீட்டு, பூர்வ நாட்களிலெல்லாம் அவர்களைத் தூக்கிச் சுமந்துவந்தார்.

ஏசா 63:10 அவர்களோ கலகம் பண்ணி, அவருடைய பரிசுத்த ஆவியை விசனப்படுத்தினார்கள்; அதினால் அவர் அவர்களுக்குச் சத்துருவாய் மாறி, அவரே அவர்களுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணினார்.

ஏசா 63:11 ஆகிலும் அவர் பூர்வ நாட் களையும், மோசேயையும், தம்முடைய ஜனத்தையும் நினைவுகூர்ந்தார்; ஆனாலும் அவர்களையும், தமது மந்தையின் மேய்ப்பனையும் சமுத்திரத் திலிருந்துஏறப்பண்ணினவர் இப்பொழுது எங்கே?

ஏசா 63:12 அவர்கள் நடுவிலே தம்முடைய பரிசுத்த ஆவியை இருக்கக் கட்டளையிட்டு, மோசேயின் வலதுகையைக் கொண்டு அவர் களைத் தமது மகிமையின் புயத்தி னாலே நடத்தி, தமக்கு நித்திய கீர்த்தியை உண்டாக்க அவர்களுக்கு முன்பாகத் தண்ணீரைப் பிளந்து,

ஏசா 63:13 ஒரு குதிரை வனாந்தர வெளியிலே நடக்கிறதுபோல, அவர்கள் இடறாதபடிக்கு அவர்களை ஆழங்களில் நடக்கப்பண்ணினவர் எங்கே?

ஏசா 63:14 கர்த்தருடைய ஆவியானவர் அவர்களைப் பள்ளத் தாக்கிலே போய் இறங்குகிற மிருக ஜீவன்களைப்போல இளைப் பாறப்பண்ணினார்; இப்படியே தேவரீர், உமக்கு மகிமையுள்ள கீர்த்தியை உண்டாக்கும்படி உம்முடைய ஜனத்தை நடத்தினீர்.

ஏசாயா - தொகுப்புரை

63 அதிகாரம்

"கர்த்தருடைய கிரியைகளையும், கர்த்தருடைய துதிகளையும் பிரஸ்தாபம் பண்ணுவேன்." - ஏசா 63:7-14 ஆகிய வசனங்களில் மேசியாவைப் பற்றி முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய இரக்கங்களை மேசியா இஸ்ரவேல் புத்திரருக்கு வெளிப்படுத்துவார். ஏசா 63:8-14 ஆகிய வசனங்களில் இஸ்ரவேல் ஜனங்களோடு கர்த்தர் நடப்பித்த கிரியைகள் சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆபிரகாமைக் கர்த்தர் அழைத்தார். (ஏசா 63:8; ஆதி 18:19) இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தில் அடிமைகளாக இருந்தபோது கர்த்தர் அவர்களுக்கு உதவி புரிந்தார். (ஏசா 63:9; யாத் 14:19; யாத் 23:20-21; யாத் 33:14) ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தருக்கு விரோதமாகக்கலகம் பண்ணினார்கள். கர்த்தருடைய பரிசுத்த ஆவியை அவர்கள் விசனப்படுத்தினார்கள். இதனால் கர்த்தரே அவர்களுக்குச் சத்துருவாய்மாறினார். கர்த்தரே அவர்களுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணினார். (ஏசா 63:10) இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் கர்த்தர் பூர்வ நாட்களையும், மோசேயையும், தம்முடைய ஜனத்தையும் நினைவுகூர்ந்தார் (ஏசா 63:11-14).

"பூர்வநாட்களிலெல்லாம் அவர்களைத் தூக்கிச் சுமந்துவந்தார்" - (யாத் 19:4; உபா 1:31; உபா 32:11)

"அவர்களோ கலகம்பண்ணி" - இஸ்ரவேலின் வரலாற்றில் அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகத் தொடர்ந்து கலகம் பண்ணி வந்திருக்கிறார்கள். எகிப்து தேசத்திலிருந்து வெளியேறிய காலத்திலிருந்து கி.மு. 70 ஆம் வருஷத்தில் அவர்கள் தேசமெங்கும் சிதறடிக்கப்பட்ட காலம் வரையிலும் அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணினார்கள்.

"பரிசுத்த ஆவி" - பரிசுத்த ஆவியானவர் எல்லாக் காலங்களிலும் பூமியில் இருக்கிறார். சிருஷ்டிப்பிலும், மீட்பிலும் ஆவியானவர் தம்முடைய கிரியைகளை நிறைவேற்றுகிறார். பெந்தெகொஸ்தே நாளில்தான் பரிசுத்த ஆவியானவர் முதன் முதலாகப் பூமிக்கு வந்தார் என்று கூறுவது தவறான வியாக்கியானமாகும். அவர் எப்போதும் இருந்தார். எப்போதும்இருக்கிறார். எப்போதும் இருப்பார். பரிசுத்த ஆவியானவர் நித்தியமானவர்.

"அவரே அவர்களுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணினார்" - இஸ்ரவேல் ஜனங்கள் பல யுத்தங்களில் தோல்விகளைச் சந்தித்தார்கள். கர்த்தர் அவர்களுக்காக யுத்தம் பண்ணவில்லையென்றால் இஸ்ரவேல் புத்திரருக்குத் தோல்வி நிச்சயம்.

"ஆகிலும் அவர் பூர்வநாட்களையும், மோசேயையும், தம்முடைய ஜனத்தையும் நினைவுகூர்ந்தார்" - கடைசி நாட்களில் இஸ்ரவேல் புத்திரர் உலகமெங்கும் சிதறிப் போயிருப்பார்கள். அப்போது கர்த்தர் தம்முடைய உடன்படிக்கைகளை நினைவுகூர்ந்து, சிதறிப்போயிருக்கும் அவர்களைக் கூட்டிச் சேர்ப்பார். (லேவி26:33-43; உபா 30:1-10).

"அவர்கள் நடுவிலே தம்முடைய பரிசுத்த ஆவியை இருக்கக் கட்டளையிட்டு" - பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பாகவே கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஆவியானவரை ஜனங்கள் நடுவே இருப்பதற்குக் கட்டளையிட்டிருக்கிறார். (எண் 11:17; அப் 3:21; 2பேதுரு 1:21).

தேவனுடைய கிரியைகள்

1. கர்த்தர் சொன்னார். (ஏசா 63:8).
2. அவர்களுடையஎல்லா நெருக்கத்திலும் அவர் நெருக்கப்பட்டார் (ஏசா 63:9).
3. அவர்களை இரட்சித்தார்.
4. அவர்களை நேசித்தார்.
5. அவர்களுக்காகப் பரிதாபப்பட்டார்.
6. அவர்களைத் தூக்கிச் சுமந்துவந்தார்.
7. அவர்களுக்குச் சத்துருவாய் மாறினார். (ஏசா 63:10).
8. அவர்களுக்கு விரோதமாய் யுத்தம் பண்ணினார்.
9. நினைவுகூர்ந்தார் (ஏசா 63:11).
10. சமுத்திரத்திலிருந்து ஏறப்பண்ணினார்.
11. மோசேயினிடத்தில் பரிசுத்த ஆவியை இருக்கக் கட்டளையிட்டார். (ஏசா 63:12).
12. தமது மகிமையின் புயத்தினாலே நடத்தினார்.

63 அதிகாரம்

13. தண்ணீரைப் பிளந்தார்.

14. அவர்களைச் செங்கடல் வழியாக நடக்கப் பண்ணினார். (ஏசா 63:13).

15. அவர்களை இளைப்பாறப்பண்ணினார். (ஏசா 63:14).

இஸ்ரவேலைப் பற்றிய ஒப்புமை

1. ஒரு குதிரை வனாந்தரவெளியிலே நடக்கிறதுபோல, அவர்கள் இடறாத படிக்கு அவர்களை ஆழங்களில் கர்த்தர் நடக்கப் பண்ணினார். (ஏசா 63:13).

2. கர்த்தருடைய ஆவியானவர் அவர்களைப் பள்ளத்தாக்கிலே போய் இறங்குகிற மிருகஜீவன்களைப் போல இளைப்பாறப் பண்ணினார் (ஏசா 63:14).

(9) மீட்புக்காக ஐம்பது அம்ச ஜெபம் - (63:15-64:12; சக 12:10)

ஏசா 63:15 தேவரீர் பரலோகத்திலிருந்து கண்ணோக்கி, பரிசுத்தமும் மகிமையுமுள்ள உம்முடைய வாசஸ்தலத்திலிருந்து பாரும், உம்முடைய வைராக்கியமும், உம்முடைய வல்லமையும் எங்கே? உம்முடைய உள்ளத்தின் கொதிப்பையும், உம்முடைய மன உருக்கத்தையும் எனக்கு முன்பாக அடக்கிக்கொள்ளுகிறீரோ?

ஏசா 63:16 தேவரீர் எங்கள் பிதாவாயிருக்கிறீர்; ஆபிரகாம் எங்களை அறியான், இஸ்ரவேலுக்கு நாங்கள் அறியப்பட்டவர்களுமல்ல; கர்த்தாவே, நீர் எங்கள் பிதாவும், எங்கள் மீட்பருமாயிருக்கிறீர்; இது பூர்வகாலமுதல் உம்முடைய நாமம்.

ஏசா 63:17 கர்த்தாவே, நீர் எங்களை உம்முடைய வழிகளைவிட்டுத் தப்பிப் போகப் பண்ணி, எங்கள் இருதயத்தை உமக்குப் பயப்படாதபடிக்குக் கடினப் படுத்துவானேன்? உம்முடைய ஊழியக்காரரினிமித்தமும், உம்முடைய சுதந்தரமான கோத்திரங்களினிமித்தமும் திரும்பியருளும்.

ஏசா 63:18 பரிசுத்தமுள்ள உமது ஜனங்கள் கொஞ்சக் காலமாத்திரம் அதைச் சுதந்தரித்தார்கள்; எங்கள் சத்துருக்கள் உம்முடைய பரிசுத்த ஸ்தலத்தை மிதித்துப்போட்டார்கள்.

ஏசா 63:19 நாங்களே உம்முடையவர்கள், அவர்களை ஒருபொழுதும் நீர் ஆண்டதில்லை; அவர்களுக்கு உமது நாமம் தரிக்கப்பட்டதுமில்லை.

இஸ்ரவேலின் விண்ணப்பம்

1. தேவரீர் பரலோகத்திலிருந்து கண்ணோக்கி, பரிசுத்தமும் மகிமையுமுள்ள உம்முடைய வாசஸ்தலத்திலிருந்து பாரும் (ஏசா 63:15).

2. உம்முடைய ஊழியக்காரரினிமித்தம் திரும்பியருளும். (ஏசா 63:17).

3. தேவரீர் வானங்களைக் கிழித்து இறங்கி வாரும். (ஏசா 64:2).

4. கர்த்தாவே அதிகமாய் கடுங்கோபம் கொள்ளாமலிரும். (ஏசா 64:9).

5. என்றைக்கும் அக்கிரமத்தை நினைத்துக் கொள்ளாமலிரும்.

6. இதோ பாரும், நாங்கள் அனைவரும் உம்முடைய ஜனங்கள்.

"பரிசுத்தமுள்ள உமது ஜனங்கள் கொஞ்சக் காலமாத்திரம் அதைச் சுதந்தரித்தார்கள்" - கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு வாக்குப் பண்ணிய தேசத்தை அவர்களைவிட அந்நிய ஜாதியாரே அதிகக்காலமாகச் சுதந்தரிக்கிறார்கள்.

ஏசாயா - தொகுப்புரை

63 அதிகாரம்

இஸ்ரவேலின் கோரிக்கைகள்

1. தேவனுடைய மனஉருக்கம் இன்னும் வெளிப்படவில்லை. (ஏசா 63:15).
2. தேவரீர் எங்கள் பிதாவாகவும், மீட்பராகவும் இருக்கிறீர். (ஏசா 63:16).
3. கர்த்தாவே, நீர் எங்களை உம்முடைய வழிகளைவிட்டுத் தப்பிப்போகப் பண்ணினீர். (ஏசா 63:17).
4. எங்கள் இருதயத்தை உமக்குப் பயப்படாதபடிக்குக் கடினப்படுத்தினீர்.
5. பரிசுத்தமுள்ள உமது ஜனங்கள் கொஞ்சக் காலமாத்திரம் அதைச் சுதந்தரித்தார்கள்; (ஏசா 63:18).
6. எங்கள் சத்துருக்கள் உம்முடைய பரிசுத்த ஸ்தலத்தை மிதித்துப் போட்டார்கள்.
7. நாங்கள் உம்முடையவர்கள். (ஏசா 63:19).
8. அவர்களை ஒருபொழுதும் நீர் ஆண்டதில்லை.
9. அவர்களுக்கு உமது நாமம் தரிக்கப் பட்டதுமில்லை.

64 அதிகாரம்

ஏசா 64:1 ஆ, உமது நாமத்தைச் சத்துருக்களுக்குத் தெரியப் பண்ணுவதற்கும், ஜாதிகள் உம்முடைய சந்நிதிக்கு முன் தத்தளிப்பதற்கும்,

ஏசா 64:2 தேவரீர் வானங்களைக் கிழித்திறங்கி, உருக்கும் அக்கினி எரியுமாப்போலவும், அக்கினி தண்ணீரைப் பொங்கப்பண்ணுமாப் போலவும், பர்வதங்கள் உமக்கு முன்பாக உருகும்படி செய்யும்.

ஏசா 64:3 நாங்கள் எதிர்பார்த்திராத பயங்கரமான காரியங்களை நீர் செய்தபோது, நீர் இறங்கினீர், உமது சந்நிதியில் பர்வதங்கள் உருகிப்போயின.

ஏசா 64:4 தேவனே, உமக்குக் காத்திருக்கிறவர்களுக்கு நீர் செய்பவைகளை, நீரேயல்லாமல் உலகத்தோற்றம் முதற்கொண்டு ஒருவரும் கேட்டதுமில்லை; செவியால் உணர்ந்ததுமில்லை, அவைகளைக் கண்டதுமில்லை.

ஏசா 64:5 மகிழ்ச்சியாய் நீதியைச் செய்கிறவர்களையும், உம்முடைய வழிகளில் உம்மை நினைக் கிறவர்களையும் சந்திக்கிறீர்; நாங்களோ, அவைகளுக்கு விரோதமாக எப்பொழுதும் பாவஞ் செய்த படியினாலே, தேவரீர் கடுங்கோபங் கொண்டீர்; இன்னமும் தப்பியிருக்கிறோம்.

ஏசா 64:6 நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்போல இருக்கிறோம்; எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது, நாங்கள் அனைவரும் இலைகளைப்போல் உதிருகிறோம்; எங்கள் அக்கிரமங்கள் காற்றைப் போல் எங்களை அடித்துக் கொண்டு போகிறது.

ஏசா 64:7 உமது நாமத்தை நோக்கிக் கூப்பிடுகிறவனும், உம்மைப் பற்றிக் கொள்ளும்படிக்கு விழித்துக் கொள்ளுகிறவனும் இல்லை; தேவரீர் உம்முடைய முகத்தை எங்களை விட்டு மறைத்து, எங்கள் அக்கிரமங்களினிமித்தம் எங்களைக் கரையப்பண்ணுகிறீர்.

ஏசா 64:8 இப்பொழுதும் கர்த்தாவே, நீர் எங்களுடைய பிதா, நாங்கள் களிமண்; நீர் எங்களை உருவாக்குகிறவர், நாங்கள் அனைவரும் உமது கரத்தின் கிரியை.

ஏசா 64:9 கர்த்தாவே, அதிகமாய்க் கடுங்கோபங் கொள்ளாமலும், என்றைக்கும் அக்கிரமத்தை நினைத்துக் கொள்ளாமலும் இருப்பீராக; இதோ, பாரும், நாங்கள் அனைவரும் உம்முடைய ஜனங்களே.

ஏசா 64:10 உமது பரிசுத்த பட்டணங்கள் வனாந்தரமாயின; சீயோன் வனாந்தரமாயிற்று; எருசலேம் பாழாய்க் கிடக்கிறது.

ஏசா 64:11 எங்கள் பிதாக்கள் உம்மைத் துதித்த பரிசுத்தமும் மகிமையுமான எங்களுடைய ஆலயம் அக்கினிக்கு இரையாகி, இன்பமான எங்களுடைய ஸ்தானங்களெல்லாம் பாழாயின.

ஏசா 64:12 கர்த்தாவே, இவைகள் இப்படியிருந்தும் அடக்கிக் கொண்டிருப்பீரோ? மவுனமாயிருந்து, அதிகமாய் எங்களைச் சிறுமைப்படுத்துவீரோ?

"தேவரீர் வானங்களைக் கிழித்திறங்கி" - இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்தில் ஜெபிக்கிறார்கள். கர்த்தர் அற்புதமாக வானத்திலிருந்து இறங்கி தங்களுடைய சத்துருக்களை அழிக்க வேண்டுமென்று விண்ணப்பம் பண்ணுகிறார்கள். எகிப்திலிருந்து இஸ்ரவேல் புத்திரரை விடுவித்ததுபோலவும், சீனாய் மலையை நடுங்கச் செய்ததுபோலவும் பலத்த காரியங்களைச் செய்யுமாறு கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறார்கள். (ஏசா 64:1-3;யாத் 19:18).

64 அதிகாரம்

"பர்வதங்கள் உமக்கு முன்பாக உருகும்படி செய்யும்" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது பர்வதங்கள் இடம்பெயரும்.(சக 14:4; வெளி 16:16-20) .

" உலகத்தோற்றம் முதற்கொண்டு ஒருவரும் கேட்டதுமில்லை; செவியால் உணர்ந்ததுமில்லை, அவைகளைக் கண்டதுமில்லை" - இந்த வாக்கியம் 1கொரி 2:9 ஆவது வசனத்தில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேலரின் விசுவாச அறிக்கை

1. மகிழ்ச்சியாய் நீதியைச் செய்கிறவர்களையும், உம்முடைய வழிகளில் உம்மை நினைக்கிறவர்களையும் சந்திக்கிறீர் (ஏசா 64:5).

2. தேவரீர் கடுங்கோபங்கொண்டீர்; இன்னமும் தப்பியிருக்கிறோம்.

3. நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள் போல இருக்கிறோம் (ஏசா 64:6).

4. எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது. (ஏசா 64:6).

5. நாங்கள் அனைவரும் இலைகளைப்போல் உதிருகிறோம்; எங்கள் அக்கிரமங்கள் காற்றைப் போல் எங்களை அடித்துக் கொண்டு போகிறது.

6. உமது நாமத்தை நோக்கிக் கூப்பிடுகிறவனும், உம்மைப் பற்றிக் கொள்ளும்படிக்கு விழித்துக் கொள்ளுகிறவனும் இல்லை (ஏசா 64:7).

7. தேவரீர் உம்முடைய முகத்தை எங்களை விட்டு மறைத்து, எங்கள் அக்கிரமங்களினிமித்தம் எங்களைக் கரையப்பண்ணுகிறீர்.

8. நீர் எங்களை உருவாக்குகிறவர், நாங்கள் அனைவரும் உமது கரத்தின் கிரியை. (ஏசா 64:8).

"இன்னமும் தப்பியிருக்கிறோம்." - நாம் கர்த்தருடைய வழியில் நிலைத்திருந்திருந்தால் இரட்சிக்கப் படுவோம். (ஏசா 64:5). நாம் தொடர்ந்து பாவம் செய்தால் இரட்சிக்கப் படுவோம் என்பது இதன் பொருளல்ல. இவ்வாறு பொருள்கூறுவது நியாயப்பிரமாணத்திற்கும், சுவிசேஷத்திற்கும் முரணானது. (ரோமர் 8:12-13; கலா 5:19-21).

தீட்டு (unclean) - טָמֵא - taw-may' - 2931

பெயரடை - அசுத்தமான, தீட்டான, சுத்தமல்லாத, அவ **(foul in a religious sense; defiled; infamous; polluted; unclean in a ceremonial and moral sense)** - மோசேயின் பிரமாணத்தின்படி அசுத்தமானதும், தீட்டானதும் இங்கு கூறப்பட்டிருக்கிறது. (ஏசா 6:5; ஏசா 35:8; லேவி 5:2; லேவி 7:19,21; லேவி 11:4-8,26,28-31,35,47; லேவி 13:15,45-55; லேவி 14:40-45; உபா 14:7-19).

பாவிகளின் நிலைமை

1. நாங்கள் பாவம் செய்தோம். (ஏசா 64:5).

2. நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள் போல இருக்கிறோம் (ஏசா 64:6).

3. எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது.

4. நாங்கள் அனைவரும் இலைகளைப் போல் உதிருகிறோம்.

5. எங்கள் அக்கிரமங்கள் காற்றைப் போல் எங்களை அடித்துக்கொண்டு போகிறது.

6. உமது நாமத்தை நோக்கிக் கூப்பிடுகிறவன் ஒருவனுமில்லை. (ஏசா 64:7).

7. உம்மைப் பற்றிக்கொள்ளும்படிக்கு விழித்துக்கொள்ளுகிறவனும் இல்லை.

8. தேவரீர் உம்முடைய முகத்தை எங்களை விட்டு மறைத்தீர்.

64 அதிகாரம்

9. எங்கள் அக்கிரமங்களினிமித்தம் எங்களைக் கரையப்பண்ணுகிறீர்.

10. எங்கள்மேல் கடுங்கோபமாயிருக்கிறீர். (ஏசா 64:5,9).

விழித்துக்கொள் (to awake) - עוּר - oor - 5782

வினைச்சொல் - விழி, விழித்துக் கொள், எழும்பு, விழித்திரு, எழுந்தருளு, ஓங்கு, எழும்பப்பண்ணு, நேரிடு, இடு, ஏவு, எழுப்பு, கலைத்திரு, புறப்படு, உத்தரவு, கொடுக்கிறவனாயிரு **(to open the eyes; to awake)** - ஜெபஜீவியத்தில் விழித்துக் கொள்வது முக்கியமான அம்சமாகும். ஜெபத்தில் விழித்தி ருக்கிறவனைக் கர்த்தர் ஆசீர்வ திக்கிறார். (ஏசா 64:7). ஜெபத்தில் ஒருவன் விழித்திராவிட்டால் அவன் பாவத்தில்மூழ்கிப்போவான். அவனுக்கு ஆவிக்குரிய மரணம் உண்டாகும்.

பற்றிக் கொள்ளுதல் (sieze) - חָזַק - khaw-zak' - 2388

வி.சொ.-கொடிதாயிரு, மேலிடு, பலத்திரு, நிர்ணயம் பண்ணிக்கொள், கடினமாயிரு, பெலன் அடை, எச்சரிக்கையாயிரு, பலங்கொள், தைரியமாய் ஸ்திரப்படு, திடன்கொள், திடமனதாய் இரு, மேற்கொள், துரிதப்படுத்து, உறுதியாயிரு, கெட்டி யாக்கு, தைரியமாயிரு, பலவந்தமாய் பிடி, மாட்டிக்கொள், உற்சாகமாய்க் கைக்கொள்ளு **(to fasten upon; sieze; be strong; courageous; obstinate; to bind; restrain; conquer; catch; cleave to; be constant; continue; force; lay hold on; maintain; play the man; wax mighty; prevail; retain; be urgent; wax strong)**

"நீர் எங்களுடைய பிதா, நாங்கள் களிமண்" - இந்த வாக்கியம் இரண்டாம் முறையாகக் கூறப்பட்டிருக்கிறது. (ஏசா 64:8; ஏசா 63:13). நம்மை நாமே உருவாக்கிக் கொள்ள முடியாது. கர்த்தரே நம்மை உருவாக்க வேண்டும். நாம் எல்லோருமே கர்த்தருடைய கரத்தின் கிரியை என்பதை நினைவுகூர வேண்டும்.

"என்றைக்கும் அக்கிரமத்தை நினைத்துக் கொள்ளாமலும் இருப்பீராக" - மண்பாத்திரத்தை உருவாக்கும் குயவன் ஒரு மண்பாத்திரத்தைச் செய்யும்போது அது சரியாக வரவில்லையென்றால், அவன் மறுபடியுமாகத் தன்னுடைய வேலையை ஆரம்பத்திலிருந்து செய்ய ஆரம்பிப்பான். அதுபோல கர்த்தர் தம்முடைய கிரியையை மறுபடியும் செய்ய வேண்டுமென்று இஸ்ரவேல் புத்திரர் ஜெபிக்கிறார்கள். (ஏசா 64:8-9).

இஸ்ரவேலின் தீர்க்கதரிசன ஜெபம்

ஏசா 64:10-11 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் ஜெபத்தில் தீர்க்கதரிசனப் பகுதி அடங்கியுள்ளது. உபத்திரவக்காலத்தின் முடிவில் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது யூதர்கள் இந்த ஜெபத்தை ஏறெடுப்பார்கள். இஸ்ரவேலின் பல பட்டணங்கள் அழிந்துபோகும். எருசலேம் பாழாய்ப் போயிருக்கும். (சக 14:1-5) தேவாலயம் அழிக்கப்பட்டிருக்கும். இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகையின்போது ஆயிரம் வருஷ ஆலயத்தையும் நித்திய தேவாலயத்தையும் கட்டுவார். உபத்திரவக் காலத்தில் அந்திக் கிறிஸ்து ஆளுகை செய்த ஆலயம் அழிக்கப் படும். இயேசு கிறிஸ்து கட்டும் ஆலயம் நித்தியமாக இருக்கும். (ஏசா 64:11; தானி 7:27; மத் 24:15; வெளி 11:1-2).

65 அதிகாரம்

(10) தேவனுடைய தீர்க்கதரிசன பதிலுரை - (65:1-66:24)

(அ) இஸ்ரவேலின் இருபது அம்ச ஆய்வு

ஏசா 65:1 என்னைக்குறித்து விசாரித்துக் கேளாதிருந்தவர்களாலே தேடப்பட்டேன்; என்னைத் தேடாதிருந்தவர்களாலே கண்டறியப்பட்டேன்; என்னுடைய நாமம் விளங்காதிருந்த ஜாதியை நோக்கி: இதோ, இங்கே இருக்கிறேன் என்றேன்.

ஏசா 65:2 நலமல்லாத வழியிலே தங்கள் நினைவுகளின்படி நடக்கிற முரட்டாட்டமான ஜனத்தண்டைக்கு நாள் முழுவதும் என் கைகளை நீட்டினேன்.

ஏசா 65:3 அந்த ஜனங்கள் என் சந்நிதியிலே நித்தம் எனக்குக் கோபமுண்டாக்கி, தோட்டங்களிலே பலியிட்டு, செங்கற்களின்மேல் தூபங்காட்டி,

ஏசா 65:4 பிரேதக்குழிகளண்டையில் உட்கார்ந்து, பாழான ஸ்தலங்களில் இராத்தங்கி, பன்றியிறைச்சியைத் தின்று, தங்கள் பாத்திரங்களில் அருவருப்பானவைகளின் ஆணத்தை வைத்திருந்து:

ஏசா 65:5 நீ உன் மட்டிலிரு, என் சமீபத்தில் வராதே, உன்னைப் பார்க்கிலும் நான் பரிசுத்தன் என்று சொல்லுகிறார்கள்; இவர்கள் என் கோபத்தாலாகிய புகையும், நாள் முழுதும் எரிகிற அக்கினியுமாயிருப்பார்கள்.

ஏசா 65:6 இதோ, அது எனக்கு முன்பாக எழுதியிருக்கிறது; நான் மவுனமாயிராமல் சரிக்குச் சரிக்கட்டுவேன்.

ஏசா 65:7 உங்கள் அக்கிரமங்களுக்கும் மலைகளில் தூபங்காட்டி, மேடைகளின் மேல் என்னை நிந்தித்த உங்கள் பிதாக்களுடைய அக்கிரமங்களுக்கும் தக்கதாக மடியிலே சரிக்கட்டுவேன்; நான் அவர்கள் முந்தின செய்கையின் பலனை அவர்கள் மடியிலே அளப்பேனென்று கர்த்தர் சொல்லுகிறார்.

"என்னைக்குறித்து விசாரித்துக் கேளாதிருந்தவர்களாலே தேடப்பட்டேன்; என்னைத் தேடாதிருந்தவர்களாலே கண்டறியப் பட்டேன்" - இந்த வாக்கியம் ரோமர் 10:20-21 ஆகிய வசனங்களில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

"என்னைக்குறித்து விசாரித்துக் கேளாதிருந்தவர்கள்" - இவர்கள் புறஜாதியார்கள். இக்காலத்தில் இஸ்ரவேல் தேசம் கர்த்தரால் புறக்கணிக்கப் பட்டிருக்கிறது. புறஜாதியார் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்கிறார்கள். (மத் 21:33-43; மத் 23:37-39; ரோமர் 10:20-21)

தீர்க்கதரிசன எண் - 77

"என்னைக்குறித்து விசாரித்துக் கேளாதிருந்தவர்களாலே தேடப்பட்டேன்........" (ஏசா 65:1-66:24) ஏசா 65:1 ஆவது வசனம் நிறைவேறிற்று. ஏசா 65:6-66:24 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை. ஏசா 63:15-64:12 ஆகிய வசனங்களில் இஸ்ரவேல் புத்திரர் ஏறெடுத்த ஜெபத்தைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்க்கதரிசனத்தில் கர்த்தர் அவர்களை மறந்துவிடவில்லையென்றும், அவர்கள் கூட்டிச் சேர்க்கப்பட்டு மேசியாவின்கீழ் நித்திய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வார்கள் என்றும் வாக்குப்பண்ணுகிறார்.

நிறைவேறிய முன்னறிவிப்புக்கள்

1. என்னைக்குறித்து விசாரித்துக் கேளாதிருந்தவர்களாலே தேடப்பட்டேன் (ஏசா 65:1).
2. என்னைத் தேடாதிருந்தவர்களாலே கண்டறியப்பட்டேன்.
3. என்னுடைய நாமம் விளங்காதிருந்த ஜாதியை நோக்கி: இதோ, இங்கே இருக்கிறேன் என்றேன்.

ஏசாயா - தொகுப்புரை

65 அதிகாரம்

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புக்கள்

1. நான் மவுனமாயிராமல் சரிக்குச் சரிக்கட்டுவேன். (ஏசா 65:6).

2. என்னை நிந்தித்த உங்கள் பிதாக்களுடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக மடியிலே சரிக்கட்டுவேன் (ஏசா 65:7).

3. நான் என் ஊழியக்காரரினிமித்தம் அனைத்தையும் அழிக்காதபடி செய்வேன். (ஏசா 65:8).

4. யாக்கோபிலிருந்து ஒரு வித்தை எழும்பப்பண்ணுவேன் (ஏசா 65:9)

5. யூதாவிலிருந்து என் மலைகளைச் சுதந்தரிப்பவரை எழும்பப்பண்ணுவேன்.

6. நான் தெரிந்துகொண்டவர்கள் அதைச் சுதந்தரிப்பார்கள்.

7. என் ஊழியக்காரர் அங்கே வாசம் பண்ணுவார்கள்.

8. சாரோன் ஆட்டுத்தொழுவமாக இருக்கும். (ஏசா 65:10)

9. ஆகோரின் பள்ளத்தாக்கு மாட்டுக்கிடையாக இருக்கும்.

10. உங்களை நான் பட்டயத்துக்கு எண்ணிக்கொடுப்பேன் (ஏசா 65:12).

11. என் ஊழியக்காரர் புசிப்பார்கள், நீங்களோ பசியாயிருப்பீர்கள் (ஏசா 65:13).

12. என் ஊழியக்காரர் குடிப்பார்கள், நீங்களோ தாகமாயிருப்பீர்கள்.

13. என் ஊழியக்காரர் சந்தோஷப் படுவார்கள், நீங்களோ வெட்கப் படுவீர்கள்.

14. என் ஊழியக்காரர் மன மகிழ்ச்சியினாலே கெம்பீரிப்பார்கள், நீங்களோ மனநோவினாலே அலறி, ஆவியின் முறிவினாலே புலம்புவீர்கள். (ஏசா 65:14).

15. நான் தெரிந்துகொண்டவர்களுக்கு நீங்கள் உங்கள் நாமத்தைச் சாப வார்த்தையாகப் பின்வைத்துப் போவீர்கள் (ஏசா 65:15).

16. பூமியிலே தன்னை ஆசிர்வதிக்கிறவன் சத்திய தேவனுக்குள் தன்னை ஆசீர்வதிப்பான் (ஏசா 65:16).

17. பூமியிலே ஆணையிடுகிறவன் சத்திய தேவன் பேரில் ஆணையிடுவான்.

18. முந்தின இடுக்கண்கள் மறக்கப்பட்டு, அவைகள் என் கண்களுக்கு மறைந்து போகும்.

19. நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் சிருஷ்டிக்கிறேன் (ஏசா 65:17).

20. முந்தினவைகள் இனி நினைக்கப் படுவதுமில்லை, மனதிலே தோன்றுவதுமில்லை.

21. எருசலேமைக் களிகூருதலாகவும், அதின் ஜனத்தை மகிழ்ச்சியாகவும் சிருஷ்டிக்கிறேன். (ஏசா 65:18).

22. நான் எருசலேமின்மேல் களிகூர்ந்து, என் ஜனத்தின்மேல் மகிழ்ச்சியா யிருப்பேன் (ஏசா 65:19).

23. அழுகையின் சத்தமும், கூக்குரலின் சத்தமும் எருசலேமில் இனிக் கேட்கப் படுவதில்லை.

24. அங்கே இனி அற்ப ஆயுசுள்ள பாலகனும், தன் நாட்கள் பூரண மாகாத கிழவனும் உண்டாயிரார்கள் (ஏசா 65:20).

25. நூறுவயதுசென்று மரிக்கிறவனும் வாலிபனென்று எண்ணப்படுவான்.

26. நூறு வயதுள்ளவனாகிய பாவியோ சபிக்கப்படுவான்.

27. வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருப்பார்கள் (ஏசா 65:21).

28. திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனியை புசிப்பார்கள்.

29. அவர்கள் கட்டுகிறதும், வேறொருவர் குடியிருக்கிறதும் இருப்பதில்லை. (ஏசா 65:22).

ஏசாயா - தொகுப்புரை

65 அதிகாரம்

30. அவர்கள் நாட்டுகிறதும், வேறொருவர் கனிபுசிக்கிறது மாயிருப்பதில்லை.

31. விருட்சத்தின் நாட்களைப்போல என் ஜனத்தின் நாட்களிருக்கும்.

32. நான் தெரிந்துகொண்டவர்கள் தங்கள் கைகளின் கிரியைகளை நெடுநாளாய் அநுபவிப்பார்கள்.

33. அவர்கள் விருதாவாக உழைப் பதில்லை (ஏசா 65:23).

34. அவர்கள் துன்பமுண்டாகப் பிள்ளை களைப் பெறுவதுமில்லை.

35. அவர்களும், அவர்களோடேகூட அவர்கள் சந்தானமும் கர்த்தராலே ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததியாயிருப்பார்கள்.

36. அவர்கள் கூப்பிடுகிறதற்குமுன்னே நான் மறுஉத்தரவு கொடுப்பேன் (ஏசா 65:24).

37. அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன்.

38. ஓனாயும் ஆட்டுக்குட்டியும் ஒருமித்து மேயும் (ஏசா 65:25).

39. சிங்கம் மாட்டைப் போல வைக்கோலைத் தின்னும்.

40. புழுதி சர்ப்பத்துக்கு இரையாகும்.

41. என் பரிசுத்தபர்வதமெங்கும் அவைகள் தீங்குசெய்வதுமில்லை (ஏசா 65:25).

42. சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங் குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகி றவனையோ நோக்கிப்பார்ப்பேன். (ஏசா 66:2)

43. கர்த்தர் தமது சத்துருக்களுக்குச் சரிக்குச் சரிக்கட்டுவார். (ஏசா 66:6).

44. பிரசவவேதனைப்படுமுன் பெறுவாள். (ஏசா 66:7).

45. சீயோனோவெனில், ஒருமிக்க வேதனைப்பட்டும், தன் குமாரரைப் பெற்றும் இருக்கிறது. (ஏசா 66:8).

46. எருசலேம் திரும்பக் கட்டப்படும்.

47. நான் சமாதானத்தை ஒரு நதியைப் போல பாயும்படி செய்வேன். (ஏசா 66:12).

48. ஜாதிகளின் மகிமையைப் புரண்டு ஓடுகிற ஆற்றைப்போல அவளிடமாகப் பாயும்படி செய்வேன்.

49. இஸ்ரவேல் செழித்திருக்கும்.

50. இஸ்ரவேல் தேற்றப்படும். (ஏசா 66:13).

51. நீங்கள் அதைக் காணும்போது, உங்கள் இருதயம் மகிழும். (ஏசா 66:14).

52. கர்த்தருடைய ஊழியக்காரரிடத்தில் அவருடைய கரம் அறியப்படும்.

53. அவருடைய சத்துருக்களிடத்தில் அவருடைய சினம் அறியப்படும்.

54. கர்த்தர் அக்கினியோடு வருவார். (ஏசா 66:15).

55. கர்த்தர் பெருங்காற்றைப்போன்ற தம்முடைய இரதங்களோடும் வருவார்.

56. கர்த்தர் தம்முடைய கோபத்தை உக்கிரமாகவும், தம்முடைய கடிந்து கொள்ளுதலை அக்கினிஜுவாலையாகவும் செலுத்துவார்.

57. கர்த்தர் அக்கினியாலும், தமது பட்டயத்தாலும், மாம்சமான எல்லாரோடும் வழக்காடுவார் (ஏசா 66:16)

58. கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணியவர்கள் அனைவரும் ஏகமாய்ச் சங்கரிக்கப்படுவார்கள் (ஏசா 66:17; சக 13:9).

59. அவர்கள் வந்து என் மகிமையைக் காண்பார்கள். (ஏசா 66:18).

60. நான் அவர்களில் ஒரு அடையாளத்தைக் கட்டளையிடுவேன் (ஏசா 66:19).

65 அதிகாரம்

61. சகல ஜாதிகளிடத்திலுமிருந்து எருசலேமிலுள்ள கர்த்தருக்குக் காணிக்கையாக என் பரிசுத்த பர்வதத்துக்குக் கொண்டு வருவார்கள் (ஏசா 66:20).

62. அவர்களிலும் சிலரை ஆசாரியராகவும் லேவியராகவும் தெரிந்துகொள்வேன் (ஏசா 66:21).

63. நான் படைக்கப்போகிற புதிய வானமும் புதிய பூமியும் எனக்கு முன்பாக நிற்கும். (ஏசா 66:22).

64. உங்கள் சந்ததியும், உங்கள் நாமமும் நிற்கும்.

65. மாதந்தோறும், ஓய்வுநாள்தோறும், மாம்சமான யாவரும் எனக்கு முன்பாகத் தொழுதுகொள்வார்கள். (ஏசா 66:23).

66. அவர்கள் வெளியே போய் எனக்கு விரோதமாய்ப் பாதகஞ்செய்த மனுஷருடைய பிரேதங்களைப் பார்ப்பார்கள் (ஏசா 66:24).

67. அவர்களுடைய பூச்சி சாகாமல் இருக்கும்.

68. அவர்களுடைய அக்கினி அவியாமல் இருக்கும்.

69. அவர்கள் மாம்சமான யாவருக்கும் அரோசிகமாயிருப்பார்கள்.

இஸ்ரவேலின் பாவங்கள்

1. முரட்டாட்டமான ஜனங்கள். (ஏசா 65:2)

2. நலமல்லாத வழிகளில் நடக்கிறார்கள்.

3. தங்கள் நினைவுகளின்படி நடக்கிறார்கள்.

4. என் சந்நிதியிலே நித்தம் எனக்குக் கோபமுண்டாக்குகிறார்கள். (ஏசா 65:3)

5. தோட்டங்களிலே பலியிடுகிறார்கள்.

6. செங்கற்களின்மேல் தூபங் காட்டுகிறார்கள்.

7. பிரேதக்குழிகளண்டையில் உட்கார்ந்திருக்கிறார்கள். (ஏசா 65:3,7)

8. பாழான ஸ்தலங்களில் இராத் தங்குகிறார்கள். (ஏசா 65:4)

9. பன்றியிறைச்சியைத் தின்கிறார்கள்.

10. தங்கள் பாத்திரங்களில் அருவருப்பானவைகளின் ஆணத்தை வைத்திருக்கிறார்கள்.

11. நான் பரிசுத்தன் என்று சொல்லுகிறார்கள் (ஏசா 65:5)

12. மேடைகளின் மேல் கர்த்தரை நிந்தித்தார்கள். (ஏசா 65:7)

13. கர்த்தரை விட்டுவிட்டார்கள். (ஏசா 65:11)

14. கர்த்தருடைய பரிசுத்த பர்வதத்தை மறந்தார்கள்.

15. விக்கிரகங்களுக்குப் பந்தியை ஆயத்தம்பண்ணுகிறார்கள்.

16. விக்கிரகங்களுக்குப் பானபலியை நிறையவார்க்கிறார்கள்.

17. கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதை செய்கிறார்கள். (ஏசா 65:12)

18. கர்த்தருக்குப் பிரியமில்லாததைத் தெரிந்துகொண்டார்கள்.

"தோட்டங்களிலே பலியிட்டு" - கர்த்தர் கட்டளையிட்டுள்ள ஸ்தலங்களில் தங்களுடைய பலிகளைக் கொண்டுவந்து பலியிடாமல் தங்களுக்குப் பிரியமான இடங்களில் பலியிடுகிறார்கள். (ஏசா 1:29; ஏசா 57:5; எரே 2:20; லேவி 17:5).

"செங்கற்களின்மேல் தூபங்காட்டி" - பொற்பலிபீடத்தின்மீது தூபங்காட்டுவதற்குப் பதிலாகச் செங்கற்களின்மேல் தூபங் காட்டுகிறார்கள். (யாத் 30:1-10).

பிரேதக்குழி (grave) - קֶבֶר - keh'-ber, kib-raw' - 6913

ஆண்பால் பெயர்ச்சொல் - கல்லறை, குகை, பிரேதக்குழி, புதைக்கிற ஸ்தானம் **tomb, grave, sepulchre, or burying place** (மத் 8:28; மாற்கு 5:3).

65 அதிகாரம்

தங்குதல் (lodge) - לִין - loon, leen - 3885

வினைச்சொல் - தங்கு. (to lodge or stop overnight) (ஏசா 65:4; ஆதி 24:23-25; எண் 22:8; யோசு 4:3; நியா 19:9-20; நியா 20:4).

பாழான ஸ்தலங்கள் (monuments) - נְצוּרִים - nesuriym - 5341

ஆண்பால் பெயர்ச்சொல் - இரகசிய இடங்கள் (hidden recesses; dark and obscure retreats)

"பன்றியிறைச்சியைத் தின்று" - நியாயப் பிரமாணத்தில் பன்றியிறைச்சியைப் புசிப்பது தடைபண்ணப்பட்டிருக்கிறது. (லேவி 11:7) யூதருக்கு இன்றும் இது அருவருப்பானது.

"அருவருப்பானவைகளின் ஆணம்" - புறஜாதியார் தங்களுடைய விக்கிரகாராதனையில் அருவருப்பான மிருகங்களைச் சமைத்து, அவற்றின் ஆணத்தை ஒரு பாத்திரத்தில் வைத்து, அதை விக்கிரகாராதனையில் பயன்படுத்துவார்கள்.

"இவர்கள் என் கோபத்தாலாகிய புகையும், நாள்முழுதும் எரிகிற அக்கினியுமாயிருப்பார்கள்" - விக்கிரகாராதனைக்காரரும், மாய்மாலக் காரரும் இவ்வாறுதான் இருப்பார்கள். இதற்காகவே கர்த்தர் விக்கிரகாராதனைக் காரரைத் தண்டிக்கிறார். (ஏசா 65:6-7; உபா 32:22; சங் 18:8).

"இதோ, அது எனக்கு முன்பாக எழுதியிருக்கிறது" - மனுஷருடைய எல்லாக் கிரியைகளும் கர்த்தருக்கு முன்பாக மறைக்கப்படாமல் எழுதப்பட்டிருக்கிறது. மனுஷன் தன்னுடைய கிரியைகளுக்குத் தகுந்த பிரகாரம் நியாயத்தீர்ப்பைப் பெற்றுக் கொள்வான். (ஏசா 65:6-7; வெளி 20:11-15).

(ஆ) வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஒரு வித்து

ஏசா 65:8 கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: ஒரு திராட்சக் குலையில் இரசம் காணப்படும்போது: அதை அழிக்காதே, அதிலே ஆசீர்வாதம் உண்டென்று சொல்லுகிறபடி, நான் என் ஊழியக்காரினிமித்தம் அனைத்தையும் அழிக்காதபடி செய்வேன்.

ஏசா 65:9 யாக்கோபிலிருந்து ஒரு வித்தையும், யூதாவிலிருந்து என் மலைகளைச் சுதந்தரிப்பவரையும் எழும்பப்பண்ணுவேன்; நான் தெரிந்துகொண்டவர்கள் அதைச் சுதந்தரித்துக் கொண்டு, என் ஊழியக்காரர் அங்கே வாசம்பண்ணுவார்கள்.

ஏசா 65:10 என்னைத் தேடுகிற என் ஜனத்துக்குச் சாரோன் ஆட்டுத் தொழுவமாகவும், ஆகோரின் பள்ளத் தாக்குமாட்டுக்கிடையாகவும் இருக்கும்.

"ஒரு திராட்சக்குலையில் இரசம் காணப்படும் போது: அதை அழிக்காதே" - திராட்சக் குலையில் காணப்படும் இரசத்தை வீணாக்காமல் பாதுகாக்க வேண்டும். அதுபோலவே இஸ்ரவேலில் மீதமாக இருக்கிறவர்களைக் கர்த்தர் பாதுகாப்பார். மேசியாவின் ஆளுகையின்போது அவர்களை ஆசீர்வதிப்பார். (ஏசா 65:8-9).

"யாக்கோபிலிருந்து ஒரு வித்து" - இயேசு கிறிஸ்து தமது இரண்டாம் வருகையின்போது தமக்கு எதிராகக் கலகம் பண்ணியவர்களை அழித்துப்போடுவார். இதற்குப் பின்பு மீதமாக இருக்கும் இஸ்ரவேல் புத்திரர் யாக்கோபிலிருந்து உண்டாயிருக்கும் வித்து எண்ணப்படுகிறார்கள். (ஏசா 65:9-10).

"மலைகளைச்சுதந்தரிப்பவர்" - மேசியாவே கர்த்தருடைய மலைகளைச் சுதந்தரிக்கிறார். அதே வேளையில் இஸ்ரவேலின் வித்தையும் நித்தியமாக ஆசீர்வதிக்கிறார். (ஏசா 65:9; ஏசா 2:2-4; ஏசா 9:6-7; சக 14; லூக்கா 1:32-33; ரோமர் 11:25-29).

"சாரோன் ஆட்டுத்தொழுவம்" - சாரோன் கர்மேல் பர்வதத்திற்குத் தெற்கில் உள்ளது. மத்திய தரைக்கடல் பகுதியில் யோப்பாவிலிருந்து சிசெரா வரையிலும் பரவியுள்ளது. வேதாகமத்தில் சாரோனைப் பற்றிக் கூறப்படும் போது அதன் அழகும், வளமும் சிறப்பாகக் கூறப்படும். (ஏசா 33:9; ஏசா 35:2; 1நாளா 5:16; 1நாளா 27:29; உன் 2:1).

65 அதிகாரம்

"ஆகோரின் பள்ளத்தாக்கு" - இது எரிகோவிற்கு அருகிலுள்ளது. இங்கு ஆகான் கொல்லப்பட்டான். (யோசு 7:24; யோசு 15:7; ஓசி 2:15).

(இ) இஸ்ரவேலிலிருந்து கலகக்காரர்கள் ஒழிக்கப்படுகிறார்கள்

ஏசா 65:11 ஆனாலும் கர்த்தரை விட்டு, என் பரிசுத்த பர்வதத்தை மறந்து, காத் என்னும் தெய்வத்துக்குப் பந்தியை ஆயத்தம்பண்ணி, மேனி என்னும் தெய்வத்துக்குப் பானபலியை நிறையவார்க்கிறவர்களே,

ஏசா 65:12 உங்களை நான் பட்டயத்துக்கு எண்ணிக்கொடுப்பேன்; நீங்கள் அனைவரும் கொலை செய்யப்படக் குனிவீர்கள்; நான் கூப்பிட்டும் நீங்கள் மறுஉத்தரவு கொடுக்கவில்லை; நான் பேசியும் நீங்கள் கேட்கவில்லை; என் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, எனக்குப் பிரியமில்லாததைத் தெரிந்துகொண்டீர்கள்.

ஏசா 65:13 ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். இதோ, என் ஊழியக்காரர் புசிப்பார்கள், நீங்களோ பசியாயிருப்பீர்கள்; இதோ என் ஊழியக்காரர் குடிப்பார்கள், நீங்களோ தாகமாயிருப்பீர்கள்; இதோ, என்ஊழியக்காரர் சந்தோஷப் படுவார்கள், நீங்களோ வெட்கப் படுவீர்கள்.

ஏசா 65:14 இதோ, என் ஊழியக்காரர் மன மகிழ்ச்சியினாலே கெம்பீரிப்பார்கள், நீங்களோ மனநோவினாலே அலறி, ஆவியின் முறிவினாலே புலம்புவீர்கள்.

ஏசா 65:15 நான் தெரிந்துகொண்டவர்களுக்கு நீங்கள் உங்கள் நாமத்தைச் சாபவார்த்தையாகப் பின்வைத்துப் போவீர்கள்; கர்த்தராகிய ஆண்டவர் உன்னைக் கொன்றுபோட்டு, தம்முடைய ஊழியக்காரருக்கு வேறே நாமத்தைத் தரிப்பார்.

ஏசா 65:16 அதினாலே பூமியிலே தன்னை ஆசீர்வதிக்கிறவன் சத்திய தேவனுக்குள்தன்னை ஆசீர்வதிப்பான்; பூமியிலே ஆணையி டுகிறவன் சத்திய தேவன் பேரில் ஆணை யிடுவான்; முந்தின இடுக்கண்கள் மறக்கப்பட்டு, அவைகள் என் கண் களுக்கு மறைந்துபோயின.

"கர்த்தரை விட்டு, என் பரிசுத்த பர்வதத்தை மறந்து" - ஏசா 65:11-16 ஆகிய வசனங்களில் கர்த்தர் இஸ்ரவேலிலுள்ள கலகக்காரரைப் பற்றியும், விக்கிரகாராதனைக்காரரைப் பற்றியும் குறிப்பிடுகிறார். (ஏசா 65:11=ஏசா 65:4-7). இவர்கள் அழிக்கப்பட வேண்டும். (ஏசா 65:12) இவர்களுக்குச்சாபம் வரும். (ஏசா 65:13-16).

"என் பார்வைக்குப் பொல்லாப்பானதைத் தெரிந்துகொண்டீர்கள்." - இதுபோன்ற வேதப்பகுதி நீதி 1:24 ஆவது வசனத்தில் காணப்படுகிறது.

"வேறே நாமம்" - பழைய நாமம் மாற்றப்படும். புதிய நாமம் என்னவென்று இங்கு கூறப்படவில்லை. பழைய நாமத்தோடு தொடர்புடைய அவமானம் நீங்கும். அதற்குப் பதிலாக நல்மதிப்பைக் கொடுக்கும் புதிய நாமம் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கப்படும். (சக 8:23).

"பூமியிலே தன்னை ஆசிர்வதிக்கிறவன் சத்திய தேவனுக்குள் தன்னை ஆசீர்வதிப்பான்" - இவன் விக்கிரகங்களின் பேரில் ஆணையிடாமல் தேவன்பேரில் ஆணையிடுகிறான்.

(ஈ) புதிய வானமும் புதிய பூமியும் - (66:22-24; 2பேது 3:13; வெளி 21:22)

ஏசா 65:17 இதோ, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் சிருஷ்டிக்கிறேன்; முந்தினவைகள் இனி நினைக்கப்படுவதுமில்லை, மனதிலே தோன்றுவதுமில்லை.

"நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் சிருஷ்டிக்கிறேன்" - வானமும், பூமியும் புதுப்பிக்கப்படும். இந்த வாக்கியம் வேதாகமத்தில் நான்கு இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஏசாயா இதை இரண்டு முறையும், (ஏசா 65:17; ஏசா 66:22-24) பேதுரு ஒரு தடவையும் (2பேதுரு 3:10-13), யோவான் ஒரு தடவையும் (வெளி 21:1-22:5) பயன்படுத்தியிருக்கிறார்கள். புதிய வானமும், புதிய பூமியும் ஆயிரம் வருஷ அரசாட்சியின் முடிவில் ஸ்தாபிக்கப்படும். (ரோமர் 8:18-25; 1கொரி 15:24-28; எபே 1:10; 2பேதுரு 3:10-13; வெளி 21-22).

65 அதிகாரம்

ஆயிரம் வருஷத்து அரசாட்சியிலும், நித்திய ஆட்சியிலும் ஏற்படும் மாற்றங்கள்

1. புதிய வானமும், புதிய பூமியும் சிருஷ்டிக்கப்படும். (ஏசா 65:18; ஏசா 2:2-4; எசே 48:30-35; யோவே 3:16-20)

2. நித்திய இஸ்ரவேல் (ஏசா 65:18)

3. எருசலேம் களிகூருதலாகவும், அதின் ஜனம் மகிழ்ச்சியாகவும் சிருஷ்டிக்கப் படும்.

4. கர்த்தர் எருசலேமின்மேல் நித்திய மாகக் களிகூருவார். (ஏசா 65:19)

5. கர்த்தர் ஜனத்தின்மேல் மகிழ்ச்சியா யிருப்பார்.

6. அழுகையின் சத்தமும், கூக்குரலின் சத்தமும் நித்தியமாக அகற்றப்படும்.

7. ஆயுசு நாட்களில் மாற்றம் உண்டாகும். (ஏசா 65:20-22, மத் 25:46)

8. நீதிமானுடைய மரணத்தில் மாற்றம் உண்டாகும். (ஏசா 65:20; மத் 25:46)

9. பொருளாதா மாற்றம் உண்டாகும். (ஏசா 65:21-22)

10. விருதாவாக உழைப்பது அகற்றப்படும். (ஏசா 65:23)

11. எல்லாக் காரியங்களும் நன்மைக் கேதுவாக உண்டாக்கப்படும். (ஏசா 65:23; ஏசா 2:2-4; மீகா 4)

12. எல்லோரும் கர்த்தராலே ஆசீர்வதிக் கப்பட்ட சந்ததியா யிருப்பார்கள். (ஏசா 65:23)

13. ஜெபம் பண்ணுவதற்கு முன்பாகவே கர்த்தர் பதில்கொடுப்பார். (ஏசா 65:24)

14. விலங்குகளின் சுபாவங்களில் மாற்றம் உண்டாகும். (ஏசா 65:25; ஏசா 11:6-9)

15. கர்த்தருடைய ராஜ்யத்தில் ஒருவரும் தீங்கு செய்யமாட்டார்கள். கேடுண் டாக்க மாட்டார்கள். (ஏசா 65:25)

(உ) ஆயிர வருஷம்

ஏசா 65:18 நான் சிருஷ்டிக்கிற தினாலே நீங்கள் என்றென்றைக்கும் மகிழ்ந்து களிகூர்ந்திருங்கள்; இதோ, எருசலேமைக் களிகூருதலாகவும், அதின் ஜனத்தை மகிழ்ச்சியாகவும் சிருஷ்டிக்கிறேன்.

ஏசா 65:19 நான் எருசலேமின்மேல் களிகூர்ந்து, என் ஜனத்தின்மேல் மகிழ்ச்சியாயிருப்பேன்; அழுகையின் சத்தமும், கூக்குரலின் சத்தமும் அதில் இனிக் கேட்கப்படுவதில்லை.

ஏசா 65:20 அங்கே இனி அற்ப ஆயுசுள்ள பாலகனும், தன் நாட்கள் பூரணமாகாத கிழவனும் உண்டாயி ரார்கள்; நூறுவயதுசென்று மரிக்கிற வனும் வாலிபனென்று எண்ணப்படு வான், நூறு வயதுள்ளவனாகிய பாவியோ சபிக்கப்படுவான்.

ஏசா 65:21 வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருப்பார்கள்; திராட்சத் தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனியை புசிப்பார்கள்.

ஏசா 65:22 அவர்கள் கட்டுகிறதும், வேறொருவர் குடியிருக்கிறதும், அவர்கள் நாட்டுகிறதும், வேறொருவர் கனி புசிக்கிறதுமாயிருப்பதில்லை; ஏனெனில் விருட்சத்தின் நாட்களைப் போலஎன் ஜனத்தின் நாட்களிருக்கும்; நான் தெரிந்துகொண்டவர்கள் தங்கள் கைகளின் கிரியைகளை நெடுநாளாய் அநுபவிப்பார்கள்.

ஏசா 65:23 அவர்கள் விருதாவாக உழைப்பதில்லை; அவர்கள் துன்ப முண்டாகப் பிள்ளைகளைப் பெறுவது மில்லை; அவர்களும், அவர்களோடே கூட அவர்கள் சந்தானமும் கர்த்த ராலே ஆசீர்வதிக்கப்பட்ட சந்ததியா யிருப் பார்கள்.

ஏசா 65:24 அப்பொழுது அவர்கள் கூப்பிடுகிறதற்குமுன்னே நான் மறுஉத்தரவு கொடுப்பேன்; அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன்.

65 அதிகாரம்

ஏசா 65:25 ஓனாயும் ஆட்டுக்குட்டியும் ஒருமித்து மேயும்; சிங்கம் மாட்டைப் போல வைக்கோலைத் தின்னும்; புழுதி சர்ப்பத்துக்கு இரையாகும்; என் பரிசுத்தபர்வதமெங்கும் அவைகள் தீங்குசெய்வதுமில்லை, கேடுண்டாக்கு வதுமில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்.

"அங்கே இனி அற்ப ஆயுசுள்ள பாலகனும், தன் நாட்கள் பூரணமாகாத கிழவனும் உண்டாயிரார்கள்" - மனுஷ ருடைய ஆயுசு நாள் அதிகமாக இருக்கும். அவர்கள் மரங்களைப் போல அதிக வருஷங் களுக்கு ஜீவிப்பார்கள். (ஏசா 65:22) ஜனங்கள் பாவம் செய்யாமல் இருந்தால் அவர்கள் ஆயிரம் வருஷங்களும் ஜீவிப் பார்கள். (ஏசா 65:20; ஏசா 11:2-5). ஆயிரம் வருஷ ஆட்சிக்குப் பின்பும் அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணா விட்டால் புதிய பூமியில் அவர்கள் நித்திய காலமாக ஜீவிப்பார்கள். (மத் 25:46; 1கொரி 15:24-28; எபே 1:10; எபே 2:7; எபே 3:11; வெளி 20:7-10; வெளி 22:2)

"நூறுவயதுசென்று மரிக்கிறவனும் வாலிபனென்று எண்ணப்படுவான்" - இயேசு கிறிஸ்து இந்தப் பூமியில் ஆயிரம் வருஷம் ஆளுகை செய்யும்போது மனுஷருக்கு மரணம் உண்டாகும். மனுஷர் தங்கள் பாவத்தினால் மரித்துப்போவார்கள். கர்த்தருடைய பிரமாணம் சீயோனிலிருந்தும், கர்த்தருடைய வார்த்தை எருசலேமிலிருந்தும் இக்காலத்தில் புறப்பட்டுப்போகும். (ஏசா 2:2-4; ஏசா 11:3-5; மீகா 4). உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்கள் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது அவரோடு பூமிக்கு வருவார்கள். (சக 14:5; யூதா 1:14-15; வெளி 19:4) அவர்கள் ராஜாக்களாகவும், ஆசாரியர் களாகவும், நியாயாதிபதிகளாகவும் இருந்து பூமியை நியாயம் விசாரிப்பார்கள். எல்லோ ருக்கும் நீதி பட்சபாதமில்லாமல் வக்ஷங்கப் படும். (சங் 149:6-9; 1கொரி 6:2; வெளி 5:10; வெளி 20:4-6) பரிகரிக்கப்பட வேண்டிய கடைசி சத்துரு மரணம். (1கொரி 15:24-28) ஆயிரம் வருஷ அரசாட்சியின் முடிவில் சாத்தானோடு சேர்ந்துகொண்டு தங்களுடைய உள்ளத்தில் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணியவர்கள் பரலோகத்திலிருந்து வந்த தேவனுடைய அக்கினியினால் அழிக்கப் படுவார்கள். (வெளி 20:7-10). ஆயிரம் வருஷ அரசாட்சியில் கர்த்தரைச் சேவித்த பரிசுத்தவான்கள் நித்தியமாக ஜீவிப்பார்கள். (மத் 25:46; வெளி 21:3-6, 24-27; வெளி 22:2-5).

"வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருப்பார்கள்" - ஆயிரம் வருஷ அரசாட் சியில் குடும்ப வாழ்வும், வாழ்க்கைத் தரமும் இப்போது போலவே தொடரும். (ஏசா 65:21-25).

"அவர்கள் நாட்டுகிறதும், வேறொருவர் கனிபுசிக்கிறதுமாயிருப்பதில்லை" - எல்லோரும் செழித்திருப்பார்கள். குடியிருப்பதற்கு எல்லோருக்கும் வீடுகள் இருக்கும். கடன் பிரச்சனைகள் யாருக்கும் இராது. (ஏசா 65:22-24; மீகா 4:4; சக 3:10).

"விருட்சத்தின் நாட்களைப்போல என் ஜனத்தின் நாட்களிருக்கும்" - விருட்சங்கள் பல நூறு வருஷங்கள் பட்டுப்போகாமல் இருப்பதைப் போல ஆயிரம் வருஷ அரசாட்சியில் ஜனங்களுடைய ஆயுசு காலம் நீடித்திருக்கும். அவர்கள் பாவம் செய்யாதிருந்தால் ஆயிரம் வருஷமும் உயிரோடு இருப்பார்கள். அதன் பின்பு கூட அவர்கள் சாத்தானோடு சேர்ந்து கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணாமல் இருந்தால் நித்திய காலமாக ஜீவிப்பார்கள். (மத் 25:46; வெளி 20:7-10).

"அவர்கள் கூப்பிடுகிறதற்கு முன்னே நான் மறுஉத்தரவு கொடுப்பேன்" - ஆயிரம் வருஷ அரசாட்சியிலும், புதிய பூமியிலும் கர்த்தரிடத்தில் ஜெபிக்கும் வழக்கம் இருக்கும். (ஏசா 56:7).

"ஓனாயும் ஆட்டுக்குட்டியும் ஒருமித்து மேயும்" - (ஏசா 11:6-8)

"புழுதி சர்ப்பத்துக்கு இரையாகும்" - சர்ப்பத்தின்மீது விதிக்கப்பட்ட சாபம் தொடரும். (ஆதி 3:14). பாம்புகளின் விஷத்தன்மை அற்றுப்போகும். (ஏசா 11:8).

"என் பரிசுத்தபர்வதமெங்கும் அவைகள் தீங்குசெய்வதுமில்லை" - (ஏசா 2:4; ஏசா 11:9; மீகா 4:3; எபே 1:10) இந்த வாக்கியத்தில் பர்வதம் என்று கூறப் பட்டிருப்பது பூமியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் தேவனுடைய ராஜ்யத்தின் தலைநகரமாகும். (ஏசா 2:2-4).

66 அதிகாரம்

ஊ) நீதிமான் மதிக்கப்படுவான்

ஏசா 66:1 கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: வானம் எனக்குச் சிங்காசனம், பூமி எனக்குப் பாதபடி, நீங்கள்எனக்குக் கட்டும் ஆலயம் எப்படிப்பட்டது? நான் தங்கியிருக்கும் ஸ்தலம் எப்படிப்பட்டது?

ஏசா 66:2 என்னுடைய கரம் இவைகளையெல்லாம் சிருஷ்டித் ததினால்இவைகளெல்லாம் உண்டா யின என்று கர்த்தர் சொல்லுகிறார்; ஆனாலும் சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையோ நோக்கிப்பார்ப்பேன்.

"வானம் எனக்குச் சிங்காசனம், பூமி எனக்குப் பாதபடி" - இந்த வாக்கியம் அப் 7:49 ஆவது வசனத்தில் மேற் கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. (1இராஜா 8:27; 2நாளா 6:18).

கர்த்தர் நோக்கிப் பார்க்கும் நபர்கள்

1. சிறுமைப்பட்டவர்கள்
2. ஆவியில் நொறுங்குண்டவர்கள்.
3. கர்த்தருடைய வசனத்துக்கு நடுங்கு கிறவர்கள்.

(எ) கலகக்காரர்கள் இஸ்ரவேலிலிருந்து ஒழிக்கப்படுவார்கள் -

(எசே 20:38; சக 13:8-9)

ஏசா 66:3 மாட்டை வெட்டுகிறவன் மனுஷனைக் கொல்லுகிறவனாகவும், ஆட்டைப் பலியிடுகிறவன் நாயைக் கழுத்தறுக்கிறவனாகவும், காணிக் கையைப் படைக்கிறவன் பன்றி இரத்தத்தைப் படைக்கிறவனாகவும், தூபங்காட்டுகிறவன் விக்கிரகத்தை ஸ்தோத்திரிக்கிறவனாகவும் இருக்கி றான்; இவர்கள் தங்கள் வழிகளையே தெரிந்து கொள்ளுகிறார்கள்; இவர்க ளுடைய ஆத்துமா தங்கள் அருவருப் புகளின்மேல் விருப்பமாயிருக்கிறது.

ஏசா 66:4 நான் கூப்பிட்டும் மறுஉத்தரவு கொடுக்கிறவனில்லா மலும், நான் பேசியும் அவர்கள் கேளாமலும், அவர்கள் என் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, நான் விரும்பாததைத் தெரிந்து கொண்டதினிமித்தம், நானும் அவர்களுடைய ஆபத்தைத் தெரிந்து கொண்டு அவர்களுடைய திகில்களை அவர்கள்மேல் வரப்பண்ணுவேன்.

ஏசா 66:5 கர்த்தருடைய வசனத்துக்கு நடுங்குகிறவர்களே, அவருடைய வார்த்தையைக் கேளுங்கள்; என் நாமத்தினிமித்தம் உங்களைப் பகைத்து, உங்களை அப்புறப்படுத்துகிற உங்கள் சகோதரர், கர்த்தர் மகிமைப் படுவாராக என்கிறார்களே; அவர் உங்களுக்குச் சந்தோஷம் உண்டாகும் படி காணப் படுவார்; அவர்களோ வெட்கப்படுவார்கள்.

ஏசா 66:6 நகரத்திலிருந்து அமளியின் இரைச்சலும் தேவாலயத்திலிருந்து சத்தமும் கேட்கப்படும்; அது தமது சத்துருக்களுக்குச் சரிக்குச் சரிக் கட்டுகிற கர்த்தருடைய சத்தந்தானே.

துன்மார்க்கரின் மாய்மாலங்கள்

1. மாட்டை வெட்டுகிறவன் மனுஷனைக் கொல்லுகிறவனாகவும் இருக்கிறான்.
2. ஆட்டைப் பலியிடுகிறவன் நாயைக் கழுத்தறுக்கிறவனாகவும் இருக்கிறான்.
3. காணிக்கையைப் படைக்கிறவன் பன்றி இரத்தத்தைப் படைக்கிறவனாகவும் இருக்கிறான்.
4. தூபங்காட்டுகிறவன் விக்கிரகத்தை ஸ்தோத்திரிக்கிறவனாகவும் இருக்கிறான்.

துன்மார்க்கரின் பாவங்கள்

1. மாய்மாலமாக ஜீவிக்கிறான்.
2. தங்கள் வழிகளைத் தெரிந்து கொள்ளுகிறார்கள்.
3. இவர்களுடைய ஆத்துமா தங்கள் அருவருப்புகளின்மேல் விருப்பமாயிருக்கிறது.
4. கர்த்தர் கூப்பிட்டும் மறுஉத்தரவு கொடுக்கிறதில்லை. (ஏசா 66:4)

66 அதிகாரம்

5. கர்த்தர் பேசியும் அவர்கள் கேளாமல் இருக்கிறார்கள்.

6. அவர்கள் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்கிறார்கள்.

7. கர்த்தர் விரும்பாததைத் தெரிந்து கொள்கிறார்கள்.

(ஏ) வித்து கொடுக்கப்படுகிறது - (65:8-10)

ஏசா 66:7 பிரசவவேதனைப்படுமுன் பெற்றாள், கர்ப்பவேதனை வருமுன் ஆண்பிள்ளையைப் பெற்றாள்.

ஏசா 66:8 இப்படிப்பட்டவைகளைக் கேள்விப்பட்டது யார்? இப்படிப் பட்டவைகளைக் கண்டது யார்? ஒரு தேசத்துக்கு ஒரே நாளில் பிள்ளைப் பேறு வருமோ? ஒரு ஜாதி ஒருமிக்கப் பிறக்குமோ? சீயோனோவெனில், ஒருமிக்க வேதனைப்பட்டும், தன் குமாரரைப் பெற்றும் இருக்கிறது.

ஏசா 66:9 பெறப்பண்ணுகிறவராகிய நான் பெறச்செய்யாமல் இருப்பேனோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; பிரசவிக்கப் பண்ணுகிறவராகிய நான் பிரசவத்தைத் தடுப்பேனோ என்று உன் தேவன் சொல்லுகிறார்.

ஏசா 66:10 எருசலேமை நேசிக்கிற நீங்களெல்லாரும் அவளோடேகூடச் சந்தோஷப்பட்டு, அவளைக்குறித்துக் களிகூருங்கள்; அவள் நிமித்தம் துக்கித்திருந்த நீங்களெல்லாரும் அவளோடே கூட மிகவும் மகிழுங்கள்.

ஏசா 66:11 நீங்கள் அவளுடைய ஆறுதல்களின் முலைப்பாலை உண்டு திருப்தியாகி, நீங்கள் சூப்பிக்குடித்து, அவளுடைய மகிமையின் பிரகாசத் தினால் மனமகிழ்ச்சியாகுங்கள்;

ஏசா 66:12 கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் சமாதானத்தைஒரு நதியைப்போலவும், ஜாதிகளின் மகிமையைப் புரண்டு ஓடுகிற ஆற்றைப்போலவும் அவளிட மாகப்பாயும்படி செய்கிறேன்; அப்பொழுது நீங்கள் முலைப்பால் குடிப்பீர்கள்; இடுப்பில் வைத்துச் சுமக்கப்படுவீர்கள்; முழங்காலில் வைத்துத் தாலாட்டப் படுவீர்கள்.

ஏசா 66:13 ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன்; நீங்கள் எருசலேமிலே தேற்றப்படுவீர்கள்.

ஏசா 66:14 நீங்கள் அதைக் காணும் போது, உங்கள் இருதயம் மகிழ்ந்து, உங்கள் எலும்புகள் பசும்புல்லைப் போலச் செழிக்கும்; அப்பொழுது கர்த்தருடைய ஊழியக்காரரிடத்தில் அவருடைய கரமும், அவருடைய சத்துருக்களிடத்தில் அவருடைய சினமும் அறியப்படும்.

"பிரசவவேதனைப்படுமுன் பெற்றாள்" - ஏசா 66:7-9 ஆகிய வசனங்கள் கடைசி நாட்களில் அந்திக்கிறிஸ்துவின் கீழ் இஸ்ரவேலர்கள் அடையும் வேதனைகளை முன்னறிவிக்கிறது.

"ஆண்பிள்ளை" - வெளி 12:5 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் ஆண் பிள்ளையே இங்கும் கூறப்பட்டிருக்கிறது. தானியேலின் எழுபதாவது வாரத்தின் முதல் மூன்றரை வருஷங்களில் இரட்சிக்கப்பட்ட 1,44,000 யூதர்களை "ஆண்பிள்ளை" என்னும் வார்த்தை குறிப்பிடுகிறது.

இஸ்ரவேலின் வருங்கால வேதனைகள்

1. இஸ்ரவேலின் முதலாவது வேதனை அவள் ஆண்பிள்ளையைப் பெறும்போது உண்டாகும். இந்த ஆண்பிள்ளை 1,44,000 யூதர்களாகும். (வெளி 7:1-8; வெளி. 12:5-6,14; வெளி 14:1-5; தானி 12:1)

66 அதிகாரம்

2. இஸ்ரவேலின் இரண்டாவது வேதனை அந்திக்கிறிஸ்துவிடமிருந்தும், வருங்கால உபத்திரவக்காலத்தின் முடிவில் தேசங்களின் சேனைகளிடமிருந்தும் இஸ்ரவேல் விடுதலை பெறும்போது உண்டாகும். (ஏசா 66:7-9; சக14; வெளி 19:11-21) அந்த அனுபவத்திற்கு முன்பாக இஸ்ரவேல் பிரசவ வேதனைப்பட்டு ஆண்பிள்ளையைப் பெற்றெடுப்பாள். (ஏசா 66:7; தானி 12:1; வெளி 12:5-6,14; வெளி 14:1-5) அதன் பின்பு மூன்றரை வருஷங்களுக்குப் பின்பு இஸ்ரவேல் தனக்காகப் பிரசவ வேதனைப்பட்டு, ஒரே நாளில் தன்னையே பெற்றெடுப்பாள். (ஏசா 66:8; சக 12:10-13:1,9; சக 14:1-15; வெளி 19:11-21).

"ஒரு தேசத்துக்கு ஒரே நாளில் பிள்ளைப்பேறு வருமோ? ஒரு ஜாதி ஒருமிக்கப் பிறக்குமோ?" - இஸ்ரவேலில் மீதமாக இருக்கிறவர்கள் ஒரே நாளில் மனந்திரும்புவார்கள். இவர்கள் உபத்திரவக் காலத்திற்குப் பின்பு பாலஸ்தீன தேசத்தில் இருக்கிறவர்கள். (சக 12:10-13:1; மத் 24:15-22). இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இஸ்ரவேலில் மூன்றில் இரண்டு பகுதியினர் அழிக்கப்பட்டிருப்பார்கள். (சக13:19; ரோமர் 11:25-29).

"சீயோனோவெனில், ஒருமிக்க வேதனைப்பட்டும், தன் குமாரரைப் பெற்றும் இருக்கிறது." - இஸ்ரவேல் தேசம் பிறப்பதை இந்த வசனமும், மேலும் சில வசனங்களும் குறிப்பிடுகிறது. (தானி 12:1; சக 12:10-13:1; மத் 24:8,15-22; வெளி 12:1-6,14)

"எருசலேமை நேசிக்கிற நீங்களெல்லாரும்" - எருசலேம் அந்திக்கிறிஸ்துவிடமிருந்து மீட்கப்பட்டிருக்கிறது. மேசியாவின்கீழ் மறுபடியும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் எருசலேமை நேசிக்கிறவர்கள் அனைவரும் அவரோடேகூட சந்தோஷப்படுமாறும், களிகூருமாறும் இங்கு கூறப்பட்டிருக்கிறது. (ஏசா 66:10-17; ஏசா63:1-5; யோவே 2-3; சக 14; வெளி 19:11-21).

"சூப்பிக்குடித்து" - (ஏசா 60:16)

ஆயிரம் வருஷத்து ஐசுவரியங்கள்

மேசியாவின்கீழ் எருசலேம் ஐசுவரியமாக இருக்கும். கர்த்தரை மகிமைப்படுத்துவதற்காக எல்லா தேசத்தாரும் எருசலேமிற்கு வெகுமதிகளைக் கொண்டுவருவார்கள். இது தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாகும். சமாதானம் ஒரு நதியைப் போல ஓடும். புறஜாதியாரின் மகிமை புரண்டு ஓடுகிற ஆற்றைப்போல எருசலேமிடம் வந்து சேரும். (ஏசா 66:12). ஒரு தாய்தன் குழந்தையை ஆற்றுவது போல எருசலேம் ஆற்றித் தேற்றப்படும். (ஏசா 66:12-14).

"கர்த்தருடைய ஊழியக்காரரிடத்தில் அவருடைய கரமும், அவருடைய சத்துருக்களிடத்தில் அவருடைய சினமும் அறியப்படும்" - இது அர்மெகதோன் யுத்தத்தைக் குறிப்பிடுகிறது. கர்த்தர் எருசலேமைப் பாதுகாத்து, இஸ்ரவேலின் சத்துருக்களை அழித்து, எருசலேமை மீட்டுக் கொள்வார். (ஏசா 63:1-5; யோவே 2-3; சக 14; வெளி 19:11-21) இந்தச் சம்பவம் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது நடைபெறும். அப்போது கர்த்தர் அக்கினியோடும், தம்முடைய இரதங்களோடும் வருவார். அவர் அக்கினியாலும், தமது பட்டயத்தாலும் எல்லோரோடும் வழக்காடுவார். அந்த யுத்தத்தில் கர்த்தரால் கொலையுண்டவர்கள் அநேகராயிருப்பார்கள். (வெளி 66:15-16; வெளி 63:1-5; யோவே 2-3; எசே 38:17-21; சக 14; 2தெச 1:7-10; யூதா 1:14-15; வெளி 19:11-21).

(ஐ) கலகக்காரர்கள் இஸ்ரவேலிலிருந்து ஒழிக்கப்படுவார்கள் - (எசே 20:38; சக 13:8-9)

ஏசா 66:15 இதோ, தம்முடைய கோபத்தை உக்கிரமாகவும், தம்முடைய கடிந்துகொள்ளுதலை அக்கினி ஜுவாலையாகவும் செலுத்தக் கர்த்தர் அக்கினியோடும் வருவார், பெருங்காற்றைப்போன்ற தம்முடைய இரதங்களோடும் வருவார்.

ஏசா 66:16 கர்த்தர் அக்கினியாலும், தமது பட்டயத்தாலும், மாம்சமான எல்லாரோடும் வழக்காடுவார்; கர்த்தரால் கொலையுண்டவர்கள் அநேகராயிருப்பார்கள்.

66 அதிகாரம்

ஏசா 66:17 தங்களைத்தாங்களே பரிசுத்தப்படுத்திக்கொள்ளுகிறவர்களும், தோப்புகளின் நடுவிலே தங்களைத் தாங்களே ஒருவர்பின் ஒருவராய்ச் சுத்திகரித்துக் கொள்ளுகிறவர்களும், பன்றியிறைச்சியையும், அருவருப்பான தையும், எலியையும் சாப்பிடுகிறவர்கள் ஏகமாய்ச் சங்கரிக்கப்படுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"அக்கினியோடும்" - அக்கினி ஜுவாலையாகவும் (எசே 38:1-21; எசே 24:29-31; எசே 25:31; 2தெச 1:7-10).

"பெருங்காற்றைப்போன்ற தம்முடைய இரதங்களோடும் வருவார்" - இந்த இரதம் எலியாவை எடுத்துக் கொண்டபோது வந்த இரதம் போன்றிருக்கும். (2இராஜா 2:11) எலிசாவைப் பாதுகாத்ததுபோல இருக்கும். (2இராஜா 6:17). இயேசு கிறிஸ்துவோடு தேவதூதர்களும் வருவார்கள். வானத்தின் சேனைகளில் சிலர் குதிரைகளில் ஏறி வருவார்கள். (வெளி 19:14) மற்றவர்கள் இரதங்களில் ஏறிவருவார்கள். (எசே 1; சக 6:1-8; மத் 24:31; 2தெச 1:7-10)

"கர்த்தர் அக்கினியாலும், தமது பட்டயத்தாலும், மாம்சமான எல்லாரோடும் வழக்காடுவார்" - அர்மெகதோன் யுத்தத்தில் தம்முடைய சத்துருக்களை அழிப்பதற்குக் கர்த்தர் தம்முடைய அக்கினியையும், பட்டயத்தையும் பயன்படுத்துவார். (யோவே 3:13; வெளி 19:11-21).

"கர்த்தரால் கொலையுண்டவர்கள் அநேகராயிருப்பார்கள்" - அர்மெகதோன் யுத்தத்தில் அந்திக்கிறிஸ்துவின் சேனையிலுள்ளவர்களில் ஆறில் ஒரு பகுதியினரைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் அழிக்கப்படுவார்கள். (எசே 39:2). இவர்கள் இந்த வசனத்தில் அநேகர் என்றும், யோவே 3:14 ஆவது வசனத்தில் "திரள்திரளாய் இருக்கிற ஜனங்கள்" என்றும் கூறப்பட்டிருக்கிறார்கள்.

"தங்களைத்தாங்களே பரிசுத்தப் படுத்திக் கொள்ளுகிறவர்கள்" - இஸ்ரவேலின் பாவத்தை ஏசாயா இங்கு மறுபடியும் குறிப்பிடுகிறார். அவர்கள் தோப்புகளின் நடுவிலே தங்களைத் தாங்களே ஒருவர் பின் ஒருவராய்ச் சுத்திகரித்துக் கொள்ளுகிறார்கள். பன்றியிறைச்சியையும், அருவருப்பானதையும், எலியையும் சாப்பிடுகிறார்கள். இவர்கள் எல்லாரும் ஏகமாய்ச் சங்கரிக்கப்படுவார்கள். (லேவி 11:7,41-42).

(ஒ) ஆயிர வருஷம் - (2:1)

ஏசா 66:18 நான் அவர்கள் கிரியைகளையும், அவர்கள் நினைவுகளையும் அறிந்திருக்கிறேன்; நான் சகல ஜாதியரையும் பாஷைக்காரரையுங் கூட்டிச்சேர்க்குங் காலம் வரும்; அவர்கள் வந்து என் மகிமையைக் காண்பார்கள்.

ஏசா 66:19 நான் அவர்களில் ஒரு அடையாளத்தைக் கட்டளையிடுவேன்; அவர்களில் தப்பினவர்களை, என் கீர்த்தியைக் கேளாமலும், என் மகிமையைக் காணாமலுமிருக்கிற ஜாதிகளின் தேசங்களாகிய தர்ஷீசுக்கும், வில்வீரர் இருக்கிற பூலுக்கும், லூதுக்கும், தூபாலுக்கும், யாவானுக்கும், தூரத்திலுள்ள தீவுகளுக்கும் அனுப்புவேன்; அவர்கள் என் மகிமையை ஜாதிகளுக்குள்ளே அறிவிப்பார்கள்.

ஏசா 66:20 இஸ்ரவேல் புத்திரர் சுத்தமான பாத்திரத்தில் காணிக்கையைக் கர்த்தருடைய ஆலயத்துக்குக் கொண்டுவருகிறதுபோல, உங்கள் சகோதரரெல்லாரையும் அவர்கள் குதிரைகளின்மேலும், இரதங்களின் மேலும், குலாரிவண்டில்களின்மேலும், கோவேறுகழுதைகளின் மேலும், வேகமான ஒட்டகங்களின் மேலும், சகல ஜாதிகளிடத்திலுமிருந்து எருசலேமிலுள்ள கர்த்தருக்குக் காணிக்கையாக என் பரிசுத்த பர்வதத்துக்குக் கொண்டு வருவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஏசா 66:21 அவர்களிலும் சிலரை ஆசாரியராகவும் லேவியராகவும் தெரிந்துகொள்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

66 அதிகாரம்

"நான் சகல ஜாதியரையும் பாஷைக்காரரையுங் கூட்டிச்சேர்க்குங் காலம் வரும்" - ஏசாயா புஸ்தகத்தின் கடைசிப் பகுதியில் ஆயிரம் வருஷ அரசாட்சியைப் பற்றியும் (ஏசா 66:18-21) புதிய வானங்களையும், புதிய பூமியையும் பற்றியும் (ஏசா 66:22-24) கூறப்பட்டிருக்கிறது. முதலாவதாகக் கர்த்தர் தம்முடைய மகிமையைக் காண்பதற்காக எல்லா தேசங்களையும் கூட்டிச் சேர்ப்பார். (ஏசா 66:18) அவர்கள் நடுவில் ஓர் அடையாளத்தைக் கட்டளையிடுவார். (ஏசா 66:19) புறஜாதியார் எல்லோரும் தங்கள் மத்தியிலிருக்கும் இஸ்ரவேல் புத்திரர்களை எருசலேமிற்குக் கொண்டு வருவார்கள். (ஏசா 66:20) இவர்களில்சிலர் ஆயிரம் வருஷத்து தேவாலயத்தில் ஆசாரியர்களாகவும், லேவியராகவும் ஊழியம் செய்வார்கள். (ஏசா 66:21).

ஏசாயா இந்தச் சம்பவத்தைக் கூறி முடித்த பின்பு, புதிய வானத்தையும், புதிய பூமியைப் பற்றியும் குறிப்பிடுகிறார். இவை நித்தியமானவை.(ஏசா 66:22) இஸ்ரவேலின் நித்திய சந்ததியார் புதிய பூமியைச் சுதந்தரிப்பார்கள். புறஜாதியாரும், யூதரும் கர்த்தருக்கு முன்பாகத் தொழுது கொள்வார்கள். (ஏசா 66:23)

"அவர்கள் வந்து என் மகிமையைக் காண்பார்கள்" - எல்லா தேசத்தாரும் ஒவ்வொரு வருஷமும் இஸ்ரவேலுக்குக் கூடிவருவார்கள். கர்த்தரை ஆராதிப்பார்கள். கூடாரங்களின் பண்டிகையை அனுசரிப்பார்கள். (ஏசா66:18; சக 14:16-21). எருசலேமிற்கு எத்தனைதடவை வருவார்கள் என்று தெரியவில்லை. ஆனாலும் மாதந்தோறும்,ஓய்வுநாள்தோறும், மாம்சமான யாவரும் கர்த்தருக்கு முன்பாகத் தொழுது கொள்வார்கள் என்று கூறப்பட்டுள்ளது. (ஏசா 66:22-24).

"அடையாளம்" - (ஏசா 11:10)

"அவர்களில்" - இஸ்ரவேலில் கட்டளையிடப்படும் அடையாளம் புறஜாதியாருக்கும், யூதருக்கும் நியமிக்கப்பட்டிருக்கிறது. (ஏசா 11:10).

"என் கீர்த்தியைக் கேளாமலும், என் மகிமையைக் காணாமலுமிருக்கிற ஜாதிகள்" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது அவர் இந்தப் பூமிக்கு வருவதைப் பிரத்தியட்சமாகக் காணாத ஜனங்களும் இருப்பார்கள். அவர் எருசலேமிற்கு வருவார். பூமியின் மற்றப் பகுதிகளில் உள்ளவர்களுக்கு அவருடைய வருகை பிரத்தியட்சமாகத் தெரியாது. இவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும். ஏனெனில் இவர்கள் மேசியாவின் கீர்த்தியைக் கேளாமலும், அவருடைய மகிமையைக் காணாமலும் இருக்கிறார்கள். (வெளி 1:7)

"ஜாதிகளுக்குள்ளே" - மகா உபத்திரவக் காலத்தில் தப்பித்துக் கொண்ட யூதர்கள் ஆயிரம் வருஷ அரசாட்சியில் ஜனங்கள் மத்தியில் கர்த்தருடைய மகிமையை அறிவிப்பார்கள். அவர்கள் எல்லா தேசங்களுக்கும் போய் எல்லா ஜாதிகளுக்கும் சுவிசேஷத்தை அறிவிப்பார்கள். (ஏசா 11:9; ஏசா 52:7; சக 13:9).

"சகல ஜாதிகளிடத்திலுமிருந்து எருசலேமிலுள்ள கர்த்தருக்குக் காணிக்கையாக என் பரிசுத்த பர்வதத்துக்குக் கொண்டு வருவார்கள்" - இஸ்ரவேல் புத்திரரைப் பாலஸ்தீன தேசத்திற்கு அழைத்து வருவதற்குப் புறஜாதியாரும் உதவி புரிவார்கள். மேசியாவின் ஆளுகையில் இஸ்ரவேல் ஜனங்கள் நித்திய தேசமாக இருப்பார்கள். (ஏசா 49:22; ஏசா 60:8-12).

(ஓ) புதிய வானமும் புதிய பூமியும் - (65:17; 2பேது 3:13; வெளி 21-22)

ஏசா 66:22 நான் படைக்கப்போகிற புதிய வானமும் புதிய பூமியும் எனக்கு முன்பாக நிற்பதுபோல, உங்கள் சந்ததியும், உங்கள் நாமமும் நிற்குமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஏசா 66:23 அப்பொழுது: மாதந்தோறும், ஓய்வுநாள்தோறும், மாம்சமான யாவரும் எனக்கு முன்பாகத் தொழுது கொள்வார்களென்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஏசா 66:24 அவர்கள் வெளியே போய் எனக்கு விரோதமாய்ப் பாதகஞ்செய்த மனுஷருடைய பிரேதங்களைப் பார்ப்பார்கள்; அவர்களுடைய பூச்சி சாகாமலும், அவர்களுடைய அக்கினி அவியாமலும் இருக்கும்; அவர்கள் மாம்சமான யாவருக்கும் அரோசிகமாயிருப்பார்கள்.

66 அதிகாரம்

"புதிய வானமும் புதிய பூமியும்" - (ஏசா 65:17)

நித்திய காரியங்கள்

1. புதிய வானம் (ஏசா 66:22)
2. புதிய பூமி
3. இஸ்ரவேலின் சந்ததி
4. இஸ்ரவேலின் நாம்
5. மாதங்கள் (ஏசா 66:23)
6. ஓய்வுநாட்கள்
7. மாம்சமான யாவரும்
8. நித்திய நரகமும், தண்டனையும் (ஏசா 66:24)
9. ஜனங்கள் வெளியே போய் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாதகஞ் செய்த மனுஷருடைய பிரேதங்களைப் பார்ப்பார்கள்.

"மாம்சமான யாவரும் எனக்கு முன்பாகத் தொழுதுகொள்வார்கள்" - புதிய பூமியிலும், எல்லா தேசங்களும் தொடர்ந்து இருக்கும். அவர்கள் தங்களுடைய இயற்கையான சரீரங்களில் இருப்பார்கள். ஆதியிலே கர்த்தர் மனுஷரைப் பலுகிப் பெருகுங்கள் என்று சொன்ன பிரகாரம் இப்போதும் பலுகிப் பெருகி, பூமியை நிரப்புவார்கள்.

நித்திய மனுஷரில் பிரிவுகள்

1. இயற்கையான ஜனங்கள் - நித்திய ராஜ்யத்தில் ஆளப்படுகிறவர்கள்
2. உயிர்த்தெழுந்த ஜனங்கள் - நித்திய ராஜ்யத்தில் ஆளுகை செய்கிறவர்கள்.

இயற்கையான ஜனங்கள் என்பது உபத்திரவக்காலத்திலும், ஆயிரம் வருஷ அரசாட்சியிலும், அதன் பின்பு புதிய பூமியிலும் ஜீவிக்கும் ஜனங்களையும், அவர்களுடைய சந்ததியையும் குறிக்கும். இவர்கள் வெளி 20:7-10 ஆகிய வசனங்களில் கூறப் பட்டிருக்கும் பரிசுத்த வான்கள் ஆவார்கள். உயிர்த்தெழுந்த ஜனங்கள் என்பது ஆதாமிலிருந்து ஆயிரம் வருஷ அரசாட்சி வரையிலும் கர்த்தருக்குள் மரித்து உயிர்த்தெழுந்தவர்கள். இவர்கள் முதலாவது உயிர்த்தெழுதலில் பங்கு பெறுவார்கள். நித்திய ராஜ்யத்தில் இவர்கள் ராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும் இருப் பார்கள். (தானி 8:18,22,27; 1கொரி 6:2; வெளி 1:5; வெளி 5:10; வெளி 12:5; வெளி 20:4-6; வெளி 22:4-5) உயிர்த்தெழுந்த ஜனங்கள் இயற்கையான ஜனங்களைப் போல பலுகிப் பெருகுவதில்லை. இவர்கள் தேவதூதர்களைப் போல இருப்பார்கள். தங்களுடைய இனத்தைக் காத்துக் கொள்வதற்கு இவர்களுக்கு விவாகம் பண்ண வேண்டிய அவசியமிராது. (மத் 22:30) இவர்கள் புதிய எருசலேமில் நித்தியமாக ஜீவிப்பார்கள். (யோவான் 14:1-3; எபி 11:10-16; எபி 12:22-23; எபி 13:14; வெளி 21:9-10). இயற்கையான ஜனங்கள் புதிய பூமியில் வாசம் பண்ணும்போது அவர்கள் இந்தப் பெரிய நகரத்திற்குப் புறம்பே ஜீவிப்பார்கள். ஆனாலும் இந்த நகரத்திற்குள் போக்கும் வரத்துமாக இருப்பார்கள். (வெளி 21:24).

"எனக்கு விரோதமாய்ப் பாதகஞ்செய்த மனுஷர்" - பூமியிலுள்ள இயற்கையான ஜனங்கள் நரகத்தைப் பார்ப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

"பிரேதங்கள்" - நரகத்திலுள்ள மனுஷருடைய பிரேதங்கள்.

"அவர்கள் மாம்சமான யாவருக்கும் அரோசிகமாயிருப்பார்கள்" - எல்லாக் காலங்களிலும் பாவத்தில் மரித்துப் போனவர்கள் நித்திய நரகத்திற்குத் தள்ளப் படுவார்கள். அங்கே அவர்கள் புழு சாவாமலும், அக்கினி அவியாமலும் இருக்கும். (மாற்கு 9:43-49) புதிய பூமியில் வாழும் மாம்சமான யாவருக்கும் இந்தப் பிரேதங்கள் அரோசிகமாக இருக்கும். பாவத்தின் பயங்கரத்தையும், அதன் விளைவையும் புதிய பூமியில் வாழும் ஜனங்கள் காணவேண்டும் என்பதற்காக நரகத்தைப் பற்றிய காரியம் அவர்களுக்கு வெளிப்படுத்தப்படுகிறது. இது அவர்களுக்கு எச்சரிப்பாக இருக்கும். புதிய பூமியிலுள்ள மனுஷர்கள் மட்டுமல்லாமல் தேவதூதர்களும் இந்த அரோசிகமான காட்சியைக் காண்பார்கள். (வெளி 14:9-11)